இங்கிலாந்தின் அரசியல் வரலாறு

ந. சுதர்சன பாபு,

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—393

இங்கிலாந்தின் அரசியல் வரலாறு

ஆசிரியர்

ந. சுதர்சன பாபு,

பேராசிரியர், வரலாற்றுத்துறை,
உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி,
பொன்னேரி.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1972

T.N.T.B.S. (C.P.) No. 393

© Tamil Nadu Text Book Society

POLITICAL HISTORY OF ENGLAND

N. SUDARSANA BABU

Price Rs. **12-00**

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi'.

Printed by
VENSAN PRESS,
48, Vythianatha Mudali St., Madras - 1.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி - உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்விமொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்களின் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'இங்கிலாந்தின் அரசியல் வரலாறு'** என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **393**ஆவது வெளியீடாகும். இதுவரை **428** நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம்; தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	பண்டைக்கால பிரிட்டன் ...	1
(அ)	நிலவியல் கூறுகள் ...	1
(ஆ)	ரோமானிய பிரிட்டன் ...	7
(இ)	ஆங்கிலோ சாக்சானிய பிரிட்டன் (கி.பி. 410–825) ...	13
(ஈ)	மகா ஆல்ஃபிரட் (கி.பி. 871–899) ...	23
2.	அந்நியர் படையெடுப்பு ...	28
(அ)	டேனியர்களின் படையெடுப்பு ...	28
(ஆ)	நார்மானியர்களின் (Normans) படையெடுப்பு ...	34
3.	பிளான்டாஜெனட் ஆட்சி (Plantagenets) ...	49
(அ)	இரண்டாம் ஹென்றி ...	49
(ஆ)	அரசர் ஜான் மகாசாசனம் (Magna Carta, கி.பி. 1215) ...	55
(இ)	மூன்றும் ஹென்றி சைமன்-டி-மான்ட் ஃபோர்டு (Simon-De-Mont Fort, 1264–1265) ...	63
(ஈ)	முதலாம் எட்வர்டு (1272–1307) ...	66
4.	பிளான்டாஜெனட்டுகள் (தொடர்ச்சி) ...	75
(அ)	நூற்றாண்டுப் போர் (Hundred Year's War, 1338–1453) ...	75
(ஆ)	லாலார்டுகள் (The Lollards) ...	93
(இ)	கருங்கொள்ளை நோய், குடியானவர் கலகம் ...	109
5.	லங்காஸ்டிரியர்கள்-யார்க்குகள் ...	114
6.	இங்கிலாந்தும் மறுமலர்ச்சியும் ...	129

பக்கம்

7. டியூடர்களின் ஆட்சி ... 136

(அ) ஏழாம் ஹென்றி (1485–1509) ... 136

(ஆ) இங்கிலாந்தில் சமயப்புரட்சி (The Reformation) ... 147

8. ஸ்டுவர்டுகள் (The Stuarts) காலம் ... 179

(அ) முதலாம் ஜேம்ஸ் (1603–1625) ... 180

(ஆ) முதலாம் சார்லஸ் (1625–1649) ... 192

(இ) உள்நாட்டுப் போர் (1642–1649) ... 200

9. ஆலிவர் கிராம்வெலும் (1599–1658) பியூரிட்டானிய இங்கிலாந்தும் ... 214

10. ஸ்டுவர்டுகள் காலம் (தொடர்ச்சி) (1660–1685) ... 237

(அ) இரண்டாம் சார்லஸ் - முன்னிலை மீட்சி ... 237

(ஆ) இரண்டாம் ஜேம்ஸ் - மாண்புறு புரட்சி (1688) (Glorious Revolution) ... 260

11. புரட்சிக்குப்பின் இங்கிலாந்து ... 270

(அ) மூன்றும் வில்லியம் (1689–1702) ... 270

(ஆ) ஆன் அரசி (Queen Anne, 1702–1714) ... 287

12. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து ... 299

(அ) முதலாம் ஜார்ஜ் - சர் ராபர்ட் வால்போல் (1721–1742) ... 299

(ஆ) இரண்டாம் ஜார்ஜ் - மூத்த பிட் (Pitt, the Elder) ... 306

(இ) ஜேகோபியர்களின் கலகம் (1715) ... 315

(ஈ) மெத்தடிஸ்ட் இயக்கம் ... 322

13. மூன்றும் ஜார்ஜ் - அமெரிக்க சுதந்தரப் போர் (1775–1783) ... 327

பக்கம்

14. இரட்டைப் புரட்சிகள் (Twin Revolution) ... 341

(அ) தொழிற் புரட்சி (Industrial Revolution)... 341

(ஆ) விவசாயப் புரட்சி (Agricultural Revolution) ... 350

15. இங்கிலாந்தும் புரட்சியினல் பாதிக்கப்பட்ட ஃபிரான்சும் ... 357

(அ) இங்கிலாந்தும் ஃபிரெஞ்சுப் புரட்சியும் ... 357

(ஆ) ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்கள் ... 362

(இ) இளைய பிட் (Pitt, The Younger, 1759–1806) ... 378

16. பத்தொன்பதாம் நூற்ருண்டில் இங்கிலாந்து 386

(அ) 1814-க்குப்பின் இங்கிலாந்தின் வெளி நாட்டுக் கொள்கை ... 386

(ஆ) 19ஆம் நூற்ருண்டு இங்கிலாந்தின் சீர்திருத்தச் சட்டங்கள் ... 393

17. கி.பி. 1800ஆம் ஆண்டுக்கு முந்திய அயர்லாந்து ... 406

18. விக்டோரியா காலத்து இங்கிலாந்து-I ... 417

(அ) சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel, 1788–1850) ... 417

(ஆ) பேரமைச்சர் பாமர்ஸ்டன் (Palmerston, 1784–1865) ... 426

(இ) பேரமைச்சர் டிஸ்ரேலி (Disraeli, 1804–1881) ... 439

(ஈ) பேரமைச்சர் கிளாட்ஸ்டன் (William Ewart Gladstone, 1809–1898) ... 448

19. விக்டோரியா காலத்து இங்கிலாந்து-II ... 464

(அ) விக்டோரியா காலப் பேரரசு ... 464

(ஆ) விக்டோரியா இங்கிலாந்து (1837–1901) (மதிப்பீடு) ... 480

(இ) இங்கிலாந்தும் கீழைச் சிக்கலும் (19ஆம் நூற்ருண்டு) ... 488

பக்கம்

20. முதலாம் உலகப்போருக்கு முந்திய இங்கிலாந்து ... 497

(அ) உள்நாட்டு விவகாரங்கள் ... 497

(ஆ) முதலாம் உலகப்போர் வரையிலான இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை 504

21. இங்கிலாந்தும் முதல் உலகப்போரும் (1914-1918) ... 517

(அ) முதல் உலகப்போரில் இங்கிலாந்து ... 517

(ஆ) டேவிட் லாயிட் ஜார்ஜ் (David Lloyd George) ... 528

22. முதல் உலகப் போருக்குப்பிந்திய இங்கிலாந்து ... 543

(அ) இரு பெரும் போர்களுக்கு இடைப்பட்ட கால இங்கிலாந்து (1918 – 1939) ... 543

(ஆ) இங்கிலாந்தும் இரண்டாம் உலகப் போரும் (1939 – 1945) ... 565

23. வின்ஸ்டன் சர்ச்சில் (1874 – 1965) ... 583

24. அயர்லாந்து (1800 – 1949) ... 600

25. பிரிட்டிஷ் காமன்வெல்த் ... 615

அரசர், அரசியர்களின் பட்டியல் ... 627

அமைச்சரவைகளின் பட்டியல் ... 630

முக்கிய கால விவரப் பட்டியல் ... 635

நகட்டுப்படங்கள் ... 639

Bibliography ... 654

கலைச்சொற்கள் ... 655

1. பண்டைக்கால பிரிட்டன்

(அ) நிலவியல் கூறுகள்

அட்லான்டிக் பெருங்கடலின் வடகிழக்குப் பகுதியின் வட கடல் பிரதேசத்தில் அமைந்திருக்கும் பிரிட்டிஷ் தீவுகள், உலக வரலாற்றின் போக்கினைக் கடந்த சில நூற்றாண்டுகளில் சிறப் பித்த பெருமையைப் பெற்றிருக்கின்றன.

இத் தீவுக் கூட்டத்தின் மேற்குப் பகுதி வேல்ஸ் (Wales); கிழக்கு, தெற்கு, தென்மேற்குப் பகுதி இங்கிலாந்து; இரண் டும் கூடிய நிலப்பரப்பு பிரிட்டன் என்று அழைக்கப்பட்டது. தீவின் வடபகுதி ஸ்காட்லாந்து; இத் தீவின் மேற்கில் அமைந் திருக்கும் மற்றொரு தீவு அயர்லாந்து. பிரிட்டனும், ஸ்காட் லாந்தும், அயர்லாந்தும் கூடியது மகா பிரிட்டன் (Great Britain) எனப் பெயர் பெறுகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட முன்னொரு காலத்தில், இன்று தீவாகக் காணும் மகா பிரிட்டன் எனும் நிலப்பரப்பு, கடலிலே மூழ்கிப் போனதாக நம்பப்படும், 'அட்லான்டீஸ்' (Atlantis) பெரும் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கக்கூடும். வரலாற் றுக்கும் முற்பட்ட அக்காலத்தில் பூகம்பங்களும் எரிமலைக் குமுறல் களும் பனியாற்றுப் பெருக்கும் உண்டாக்கிய இயற்கைக் குழப் பத்தில் தோன்றிய நில வடிவமே இன்று நாம் காணும் பிரிட்டிஷ் தீவுகளின் உருவ அமைப்பு எனக் கருதப்படுகிறது. ஆரம்ப காலத்திலிருந்தே இத் தீவிற்கும், ஐரோப்பியக் கண்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கவேண்டும். இத் தீவின் நிலப் படத்தைக் காணுங்கால் அதன் கிழக்கு, தெற்குப் பகுதிகள் ஐரோப்பியக் கண்டத்தைத் தொடுவதுபோல் சரிந்து காணப் படுகின்றன.

காலவரைக் குட்படுத்த முடியாத பழங்காலத்தில் தற்போது நாம் காணக்கூடிய பிரிட்டிஷ் தீவுகள் ஐரோப்பாவோடு இணைந்த நிலப்பரப்பாக இருந்திருக்க வேண்டும். பிரிட்டிஷ் தீவுகளை ஐரோப்பாக் கண்டத்திலிருந்து தற்போது பிரிக்கும் கடல் பகுதியின் மட்டத்தில் சுமார் 200 அடி நீர் குறையுமானால், இரு பகுதிகளும் இணைந்த ஒரே நிலப் பரப்பாகவே இருக்கும். நிலப்பரப்பில் உறைந்திருந்த பனி உருகி, நீராக மாறி, இன்றைய வடகடல், ஆங்கிலக் கால்வாய் நீர்ப் பரப்புகள் தோன்றின. அந்தக் காலவரையில், இன்றைக்குக் காணப்படும் ஆறுகளும், படுகைகளும், மலைகளும், சமவெளிகளும் பிரிட்டனில் தோன்றியிருக்கலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இத் தீவில் எங்கு, யார், எப்படி வாழ்ந்தனர் என்பதை நிச்சயமாகக் கூற இயலாது. ஆயினும், ஆரம்ப காலத்திலிருந்தே மேற்கு, வடக்கு, ஐரோப்பியப் பகுதிகளிலிருந்து மக்கள் கூட்டம் இத் தீவின் கிழக்கு, தெற்குப் பகுதிகளை அடைந்திருக்க வேண்டும்.

உறைபனிக் காலத்தின் இறுதியில், பனி உருக ஆரம்பித்த போது, பிரிட்டன் எனப் பிற்காலத்தில் அழைக்கப்படப்போகும் இத்தீவில் பல இயற்கைத் தோற்றங்கள், மாற்றங்கள் ஏற்பட்டன. நெருக்கமான மரம், செடி, கொடிகளைக் கொண்ட காடுகள் தோன்றின. ஆதி காலத்தில் இங்கு வாழ்ந்த மனிதர்களுக்கு அக் காடுகளில் வாழ்ந்த மிருகங்களும் பிராணிகளும், உணவு உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கலாம். அப் பழங்காலத்தில் வாழ்ந்த அம் மனிதர்கள் இன்றைய வடகடல், ஆங்கிலக் கால்வாய் ஆகிய நீர்ப்பரப்புகள் தோன்றுவதற்கு முன்னரே, ஐரோப்பாப் பெருங் கண்டத்திலிருந்து பிரிட்டனுக்கு வந்திருக்கலாம். காடுகளை ஒட்டிய பகுதிகளில் அம் மனிதர்கள் ஆரம்ப காலத்தில் தங்களின் குடியிருப்பை அமைத்திருக்கலாம். காடுகளை வெட்டித் தங்களின் குடியிருப்பு இடவசதியை விருத்தி செய்ய அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், ஆரம்ப காலத்தில் பலனளித்திருக்கமாட்டா. ஏனெனில், உறுதியான மரங்களை வெட்டிச் சாய்ப்பதற்கு வேண்டிய கூர்மையான ஆயுதங்களைச் செய்யும் வழிமுறைகள் அம் மனிதர்களுக்கு அப்போது தெரிந்திருக்கமுடியாது. அந் நிலையில், ஆற்றுப் படுகையை ஒட்டிய சமவெளிகளிலேயே (plains) அம் மனிதர்களின் முக்கிய குடியிருப்புகள் அமைக்கப்பட்டன.

டர்ஹாமிலிருந்து (Durham) எக்ஸிடர்வரை (Exeter) ஒரு கோடு வரையப்படின் அது வடமேற்கு மலைப் பகுதிகளுக்கும், தென்கிழக்குச் சமவெளிகளுக்கு மிடையே அமையும் எல்லைக்

கோடாகக் காணப்படும். பிரிட்டனின் வடமேற்குப் பிரதேசத்தில் காணப்படும் ஸ்காட் (Scot), பென்னினீஸ் (Pennines), வேல்ஸ் (Wales) மலைகளும் ஆரம்பகாலத்தில் ஆதி மனிதர்களின் ஊடுருவலுக்கு இடையூருக அமைந்தன. ஆகவே, தென்கிழக்குப் பகுதியிலேயே அம் மனிதர்களின் ஆரம்பக் குடியிருப்புகள் அமைந்திருக்கலாம், [தேம்ஸ் நதியைச் சுற்றிய பகுதி (around Thames), மேற்கு வெஸ் கிழக்கு ஆங்கிலியா (Anglia)].

பிரிட்டனின் தென்கிழக்குப் பகுதி தட்டையான சமவெளியாக அமைந்திருப்ப தோடன்றி, ஐரோப்பாக் கண்டத்தை நோக்கிச் சரிந்து காணப்படுகிறது. அதன் நீண்ட கிழக்குக் கரை ஐரோப்பாவின் நெதர்லாந்து, ஜெர்மனி, ஸ்காண்டிநேவியா (Scandinavia) ஆகிய பிரதேசங்களை எதிர்நோக்கி அமைந்துள்ளது. பிரிட்டனின் தென்கிழக்குக் கரை, ஃபிரான்ஸ் (France) நாட்டை நோக்கி அமைந்துள்ளது. பிரிட்டனின் கிழக்கு, தென்கிழக்குக் கரைகளுக்கும், மேற்கு ஐரோப்பியக் கடற்கரைக்கும் இடையே உள்ள வடகடல் (North Sea), ஆங்கிலக் கால்வாய் (Channel) ஆகிய நீர்ப் பரப்புகள் எளிதில் கடக்கக்கூடிய வைகளாக இருந்ததால், ரோமானியர் காலத்திலிருந்து நார்மானியர்கள் (Normans) வரை பல இனத்தினர் பிரிட்டனுக்கு வர முடிந்தது. ஐரோப்பாவில் கிழக்கிலிருந்து மேற்கில் பாயும் ரைன் (Rhine), சோம் (Somme), சேன் (Scine) போன்ற ஆறுகளும், பிரிட்டனில் மேற்கிலிருந்து கிழக்கே பாயும் அம்பர் (Humber), வாஷ் (Wash), தேம்ஸ் (Thames) ஆகிய ஆறுகளும் கலக்குமிடமாக வடகடல் அமைந்துள்ளது. ஐரோப்பாவின் வடபகுதிகளிலிருந்து வந்த பல இனத்தினர், மேற்கே பாயும் ஐரோப்பிய ஆறுகளின் வாயிலாக வடகடலை அடைந்து, அதைப் படகுகள்மூலம் கடந்து, பிரிட்டனின் கிழக்கு, தென்கிழக்குக் கரைகளை அடைந்து, ஆற்றுக் கழிமுகங்கள் மூலமாக நாட்டினுள் சமவெளிகளில் நுழைந்தனர்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்திய நிலையில் மத்திய தரைக் கடல் (Mediterranean) பகுதியிலிருந்து பிரிட்டனை நோக்கி வந்த ஆதி மக்கள் தென்மேற்கில் உள்ள கார்ன்வால் (Cornwall) பகுதியை அடைந்தனர் என்றும், பிரிட்டனின் மேற்குக் கரையோரமாகப் பயணத்தைத் தொடர்ந்து அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய பகுதிகளை அடைந்திருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

ஆயின், வடக்கு, வடமேற்கு, மேற்குப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும், தென்கிழக்கு, கிழக்குப்பகுதிகளில் அப்போதைக்கப்போது புதிதாக வந்துகொண்டிருந்த படையெடுப்பாளர்களுக்கும்

வெகுகாலம்வரையில் நெருங்கிய உறவு ஏற்பட முடியாதபடி, மத்தியக் காடுகளும் மலைத்தொடர்களும் தடுத்தன.

பிரிட்டனையும், ஐரோப்பாவையும் பிரிக்கும் வடகடல் (North Sea), இங்கிலீஷ் கால்வாய் ஆகிய நீர்நிலைகளை ஆதி மக்கள் கடந்து வந்தது வியப்பிற்குரியதே. நல்ல குடிநீரும் விளைநிலங்களும் மிகுந்த சமவெளிகளைக் கொண்ட பிரிட்டனின் கிழக்கு, தெற்குப் பகுதிகள் ஆதிகாலத்து ஐரோப்பிய மக்களைக் கவர்ந்திருக்க வேண்டும்.

கற்காலம் (Stone Age)

கி.மு. 3000 - கி.மு. 2000 இடைப்பட்ட காலமே இத்தீவின் புதுக் கற்காலமென்று கருதப்படுகிறது. டெர்பிஷையர் (Derbyshire) போன்ற இடங்களில் காணும் குகைகளில் தெரியும் முற்றுப்பெறுத ஓவியங்கள் அக்கால மனிதனைப்பற்றி ஓரளவு விவரம் தருகின்றன. புதிய கற்கால மனிதர்கள் கரிய நிறமும், நீண்ட தலையும் கொண்ட மத்தியதரை வகையைச் (Mediterranean type) சார்ந்தவர்களாய் இருந்திருக்கக்கூடும். கால் நடைகள், பன்றிகள், குதிரைகள், நாய்கள் முதலியவற்றை அவர்கள் பழக்கினர்கள்; மட்பாண்டங்களைக் கைகளால் செய்தார்கள்; கோதுமையைச் சிறிதளவு பயிரிட்டனர்; மரக்குச்சிகளால் தாங்கள் வாழ்ந்த கிராமங்களைச் சுற்றி வேலி இட்டுக் கொண்டனர். இப் புதிய கற்கால மனிதர்கள் பிரிட்டனின் மனித வரலாற்றின் முன்னுரையாக அமைகிறார்கள். இப் புதிய கற்கால மக்கள் பால்டிக், கால் (Gaul) போன்ற ஐரோப்பியப் பகுதிகளிலிருந்து பிரிட்டனுக்கு வந்திருக்கக்கூடும். பிரிட்டிஷ் தீவுகளின் சில குறிப்பிட்ட பகுதிகளில்மட்டுமே புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்திருக்கக் கூடுமென்று புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாக நமக்குத் தெரிகிறது.

வெண்கலக் காலம் (Bronze Age)

கி.மு. 1900 - கி.மு. 1000-க்கும் இடைப்பட்ட காலத்தில், பீக்கர் - ஃபோக் (Beaker - Folk) என்றழைக்கப்பட்ட மத்தியத் தரைப் பகுதியில் இருந்து அகலமான தலைகளும், வளர்ந்த உடற்கட்டும் கொண்ட புதிய இனத்தினர் பிரிட்டனில் ஊடுருவ ஆரம்பித்தனர். ஜெர்மானியப் பகுதியான ரைன் லாந்திலிருந்தும் (Rhine land), ஃபிரான்ஸிலுள்ள பிரிட்டானியா (Brittania) பகுதியிலிருந்தும் குடிபெயர்ந்து வந்த இவ் வினத்தினர் பிரிட்டனில் யார்க் - ஷையரிலிருந்து (Yorkshire) தேம்ஸ் நதியின் கழிமுகம்வரையிலுள்ள கிழக்குப் பகுதியில் தங்கினர்.

இவர்கள் காலத்தை பிரிட்டனின் வெண்கலக் காலம் (Bronze Age) என்றழைக்கலாம். தங்களுக்கு முன்னர் வாழ்ந்த மக்களைக் காட்டிலும் இவ் வினத்தினர் ஓரளவு நாகரிக முன்னேற்றம் அடைந்திருந்தனர். பெரிய நீல நிறக் கற்களைச் சேலிஸ்பரி (Salisbury) சமவெளிக்குக் கொண்டுவந்ததும், 50 அடி ஆழ முள்ள குழிகளை வெட்டியதும், செங்குத்தாக நிறுத்தப்பட்ட பெரும் பாறைகள்மீது குறுக்குக் கற்களை அமைத்ததும் இவர் களுடைய முன்னேற்ற வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஸ்டோன் ஹெஞ் (Stone henge) என்னுமிடத்திலுள்ள கற்கோப்பு களும், ஆவ்பரியிலுள்ள (Avebury) கல் வட்டங்களும் மற்றச் சான்றுகள்.

வரலாற்றுக் காலம் (Historic Age)

கி.மு. 1000–800 கால அளவில் ஐபீரியன்கள் (Iberians) என்றழைக்கப்பட்ட இனத்தினர் ஆல்பைன் (Alpine) பிரதேசத்தி லிருந்தும், மேற்கு ஸ்பானியப் பகுதியிலிருந்தும் பிரிட்டனை வந்த டைந்தனர். இக் குடியினர் கிழக்கு, தெற்குப் பகுதிகளில் வாழ்ந்த பழைய மக்களுடன் நாளாவட்டத்தில் கலந்து இணைந்தனர். மேற்கு, வடக்கு மலைகளைக் கடந்து கார்ன்வால் (Cornwall), வேல்ஸ் (Wales), ஸ்காட்லாந்து பகுதிகளிலும், கடல் கடந்து அயர்லாந்திலும் இம் மக்கள் ஊடுருவ ஆரம்பித்தனர். இத் தீவின் நாகரிக வரலாற்றில் ஐபீரியன்களின் (Iberians) காலம், முதல் அத்தியாயத்தைத் தொடக்குகிறதெனில் அது மிகை யாகாது. உலோகத் தொழிலிலும், விவசாய முறையிலும் ஆடை நெய்தலிலும் அவர்கள் திறமை பெற்றிருந்தனர். அவர்கள் காலத்தில் பசுமையான சமவெளிகளிலும், ஆற்றுப் படுகைகளிலும் குடியிருப்பு அதிகமாகக் காணப்பட்டது. புது வகையான உலோகக் கலப்பினால் செய்யப்பட்ட ஆயுதங்களும், சக்கர வண்டிகளும், விவசாயக் கலப்பைகளும் அவர்களின் நாக ரிகத்திற்கு எடுத்துக்காட்டு ஆகும். டோர்செஸ்டருக்கு (Dorchester) அருகில் கட்டப்பட்டிருந்த மெய்டன் அரண் (Maiden Castle) இவர்களின் மண் வேலைப்பாட்டிற்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

இவ்வாறு பிரிட்டனில் நாகரிகம் பரவத் தொடங்கியது. கி.மு. 8ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. முதலாம் நூற்றாண்டு வரை கூட்டம் கூட்டமாக பிரிட்டிஷ் தீவுகளை ஒரு புதிய இனத்தினர் வந்தடைந்தனர். இவர்களைக் கெல்ட்டுகள் (Celts) என்றழைக்கிறார்கள். ஸ்விட்சர்லாந்து, வட ஃபிரான்ஸ், கீழ் ரைன் பிரதேசத்திலிருந்தும் புற்றீசல்கள்போல் இத் தீவின்

கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளைக் கெல்ட்டுகள் வந்தடைந்தனர். பல பிரிவுகள் கொண்ட கெல்ட்டுகளில் ஒரு பிரிவினர் பிரிட்டான் (Britons) என அழைக்கப்பட்டனர். காலப்போக்கில் அவர்களின் பெயரே இத் தீவிற்குச் சூட்டப்பட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஐரோப்பாவில் இருந்து இடம் பெயர்ந்து வந்த கெல்ட்டுகள் பிரிட்டிஷ் தீவுகளை ஏன் வந்தடைந்தனர் என்பதை நிச்சயமாக நிர்ணயிக்க இயலாது. மீன் பிடிப்பதற்கு ஏற்ற கரையோரங்களும் வேட்டையாடுவதற்கு ஏற்ற காடுகளும் வாணிகத்திற்கு ஏற்ற தகரம் (tin) முதலிய உலோகங்களும் பிரிட்டனில் இருந்தமை, ஒரு காரணமாக இருக்கலாம். கெல்ட்டுகளின் காலத்தில் பிரிட்டன் நாகரிகப் பாதையில் முன்னேறத் தொடங்கியது. இரும்பு இவர்களின் காலத்தில்தான் புழக்கத்திற்குக் கொணரப்பட்டதாகத் தெரிகிறது. கோதுமையுடன் ஓட்ஸ் (oats) தானியமும், பயிர் செய்யப்பட்டது. நீண்ட வேல்களையும், இரும்புச் சக்கரங்கள் இணைந்த தேர்களையும், குதிரைக் கவையங்களையும் செய்யும் திறனை இம் மக்கள் கற்றிருந்தனர். கண்ணாடி மணிகளும், வேலைப்பாடமைந்த மரச்சாமான்களும் இவர்களால் ஆக்கப்பட்டன,

பற்பல பிரிவுகளாக பிரிட்டனை வந்தடைந்த கெல்ட்டுகள் பற்பல பெயர்களிலே தங்களை அழைத்துக்கொண்டு பற்பல இடங்களிலே தங்களின் ஆதிக்கத்தை நிறுத்திக் கொண்டனர். அப் பிரிவுகளில் கேயல்ஸ் (Gaels), சிமரி (Cymri), பெல்ஜி (Belgae) எனப்படுவோர் குறிப்பிடத்தக்கவர்கள். கெல்ட்டுகள் தங்களுக்குள் ஆதிக்கப் போராட்டமும் நடத்திக்கொண்டு இருந்தனர். கி.மு. முதலாம் நூற்றாண்டுவரை கெல்ட்டுகளின் அப் போராட்டம் தொடர்ந்து வந்தது. தேம்ஸ் நதி தீரத்தில் கென்ட் பகுதியில் கோல்செஸ்டரைத் (Colchester) தலைநகராகக் கொண்டு பெல்ஜே பிரிவினரின் கிளைப் பிரிவினரான கட்டவளானி (Catuvellauni) என்போர் ஆதிக்கம் பெற்றிருந்தனர். ரோமாபுரி மாவீரன் ஜூலியஸ் சீசர் பிரிட்டனைத் தாக்குவதற்கு இவர்கள் ஒரு காரணமாயினர். கி.மு. 55-ல் சீசரின் பிரிட்டானியப் படையெடுப்பு ஏற்பட, அந் நிகழ்ச்சி பிரிட்டனின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைத் தந்தது.

புதிதாக நுழைந்த படையெடுப்பாளர்கள் தமக்கு முன்னே நிலைத்திருந்த மக்களைத் துரத்தியும், வெற்றி கண்டும், அவர்கள் மீது தங்களுடைய புதிய பழக்கவழக்கங்களைத் திணித்தனர். கெல்டுகள் (Celts), ரோமானியர்கள், சாக்சானியர்கள், டேனியர்கள், நார்மானியர்கள் போன்ற பல இன மக்களின் குருதிக் கலப்பினை உடையவர்களே இன்றைய ஆங்கிலேயர்கள் என்பது

குறிப்பிடத்தக்கது. நார்மானியப் படையெடுப்புக்குப் பின்னும் (கி. பி. 1066), பிரிட்டனை நோக்கி எந்தப் புதிய இனத்தினரும் படையெடுத்து வரவில்லை. இருப்பினும், மிகச் சிறிய அளவில் அப்போதைக்கப்போது இனக் கலப்பு உண்டாகி வந்தது. உதாரணமாக ஃபிளமிங்குகள் (Flemings), யூகோநாட்டுகள் (Huguenots) போன்ற அயல்நாட்டுத் தொழில் வல்லமை பெற்ற மக்கள், அமைதியாக பிரிட்டனில் நுழைந்து, உள்நாட்டு மக்களோடு காலப் போக்கில் இரண்டறக் கலந்தனர். ஐரோப்பாவிலிருந்து பிரிட்டனைப் பிரிக்கும் நீர்ப்பரப்பு கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில், பல வேறு இனத்தினர் அங்குப் படையெடுத்துக் குடிபுக ஏதுவாக அமைந்த தெனினும், பிற்காலத்தில் அக் கடல்கள் பிரிட்டனைப் பல படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றின என்பதையும் நாம் அறிய வேண்டும். ஸ்பானிய அரசர் பிலிப் II, ஃபிரான்ஸ் மன்னர் லூயி XIV, மாவீரன் நெப்போலியன், ஜெர்மன் அதிபர் வில்லியம் கெய்சர் II, சர்வாதிகாரி ஹிட்லர் போன்றோர்களின் படையெடுப்பு அபாயத்திலிருந்து, பிரிட்டன் சுதந்திரம், தனிநிலை காப்பாற்றப்பட்ட தென்றால், அதற்கு உறுதுணையாக அக் கடல்களே அமைந்தன.

(ஆ) ரோமானிய பிரிட்டன்

பிரிட்டன்மீது நடத்தப்பட்ட ரோமானியர்களின் தாக்குதலே, நம் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பதிவாகும் முதல் நிகழ்ச்சி.

கி.மு. 355-ல் பித்தியஸ் (Pytheas) என்ற கிரேக்க மாலுமி பிரிட்டனின் கடற்கரையோரப் பகுதிகளைக் கண்டறிந்த காலத்திலிருந்தே அதன் நிலவளம், ஐரோப்பாவின் கவனத்தை ஈர்த்து வந்த தெனலாம்.

ஜூலியஸ் சீசர் (Julius Caesar)

கி. மு. முதலாம் நூற்றாண்டில் ரோமாபுரியின் ஆட்சி வெகுவாகப் பரவி வந்தது. கார்த்தேஜ் (Carthage), கிரீஸ், ஆசியா மைனர் (Greece, Asia Minor) பகுதிகளைத் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொண்ட ரோமாபுரி, கால் (Gaul) பகுதியில் தன்னுடைக் கத்தை நிலைநிறுத்த மாவீரன் ஜூலியஸ் சீசரை ஏவியது. கி.மு. 58-லிருந்து மும்முறை படையெடுத்து சீசர் காலை வெற்றி கொண்டார். சீசர் காலில் பகைவர்களுடன் சண்டையிட்டு வந்தபோது பிரிட்டனிலிருந்த பெல்ஜியோக்கள் தங்கள் இனத்தினரான கால் மக்களுக்குப் படையுதவி அனுப்பி வைத்தனர். ஏற்கெனவே பிரிட்டனின் நில, கனிவளங்களைப்

பற்றிக் கேள்வியுற்றிருந்த சீசருக்குப் பெல்ஜியோக்களின் செயல் பிரிட்டனைத் தாக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. இச் சமயத்தில் கோல்செஸ்டரைத் தலைநகராகக் கொண்டு நாடு பிடிக்கும் போரில் ஈடுபட்டிருந்த கட்டவளானியரை எதிர்க்க பிரிட்டனில் இருந்த இசேனியரும் (Isanions), ட்டிரோமோவேன் டீஸ்களும் (Trinovantes) சீசரின் உதவியைக் கோரினர். பிரிட்டனைத் தாக்கக் காத்திருந்த சீசருக்கு இஃது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்தது. சீசருக்கு பிரிட்டனில் வாழ்ந்த கெல்ட்டுகளின் ஒற்றுமையின்மைபற்றி நன்கு தெரியும். ஆங்கிலக் கால்வாயைக் கடப்பது அரிதன்று என்பதும் சீசருக்குத் தெரிந்திருந்தது.

கி.மு. 55, ஆகஸ்டு 26 ஆம் நாள் தம் 8,000 ரோமானிய வீரர்களோடு சீசர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து கென்ட்டுக்கு (Kent) அருகில் இறங்கித் தம்மை இரதங்களுடன் எதிர்த்த கெல்ட்டுகளை முரியடித்தார். இத் தாக்குதலைத் தொடர்ந்து பிரிட்டனின் கரையோரமுள்ள சில பகுதிகளை ஆய்வு செய்துவிட்டு சீசர் காலுக்குத் திரும்பினர். அவரது இரண்டாம் தாக்குதலே வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. கி.மு. 54-ல் 20,000 வீரர்களுடன் கென்ட்விச் என்னும் இடத்திற்கருகில் கரை இறங்கினர். எதிர்த்தவர்களை முரியடித்துக் கட்டவளானியரின் முக்கிய நகரமான வெல்த் ஆம்டர்டை நோக்கி முன்னேறினர். கேசிவிலானஸ் என்ற கெல்ட்டுகளின் தலைவன் பெரும்படையுடன் தேம்ஸ் நதிக்கு வடக்கே காத்திருக்க, சீசர் ப்பிரன்ட் போர்டுக் கருகே நதியைக் கடந்து கெல்ட்டுகளை வெற்றிகொண்டு பணிய வைத்தார். பெல்ஜிக்கள் உட்பட வேறு சில கெல்ட்டுப் பிரிவினர்களும் சீசருக்குப் பணிந்து ரோமாபுரிக்குக் கப்பம் செலுத்த ஒப்புக்கொண்டனர். இங்ஙனம் சீசரின் படையெடுப்பு, பிரிட்டனை முழுக்க முழுக்க ரோமானிய ஐரோப்பாவிற்கு அறிமுகம் செய்து வைத்தது. பிரிட்டானியர் (கெல்ட்டுகள்) ரோமானியரின் படைக்குமுன் ஒடுக்கப்பட்டனரே தவிர, தங்களின் சுதந்திர உணர்வை இழந்துவிடவில்லை என்பதை அடுத்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டும். இரண்டாண்டுக் காலத்திற்குள் கட்டவளானிக் குழுவினர் சீசரால் ஆதரிக்கப்பட்ட மற்றக் கெல்ட்டுகளை ஒடுக்க முற்பட்டனர். ரோமுக்குச் செலுத்தப்படவேண்டிய கப்பத் தொகையும் நிறுத்தப்பட்டது. நாடு திரும்பிய சீசரும் பிரிட்டன்மீது கவனம் செலுத்தவில்லை. ஓரளவு வாணிகப் போக்குவரத்து இருந்து வந்ததைத் தவிர, பிரிட்டனுக்கும், ரோமாபுரிக்கும் வேறு எந்த உறவும் இருந்ததாகத் தெரியவில்லை. சீசரின் படை

யெடுப்புக்குப் பிறகு ஏறத்தாழத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு ரோமானியர்களுக்கு பிரிட்டனைப்பற்றிய நினைவே இல்லை.

ஆனால், ரோம் வரலாற்றில் ஏற்பட்ட தொடர்நிகழ்ச்சிகள் பிரிட்டனை ஓரளவு பாதித்தது. ரோமாபுரியின் தலைவராக அதிகாரம் பெற்ற சீசர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மூண்ட உள்நாட்டுப் போரின் இறுதியில் அகஸ்டஸ் (Augustus) என்பவர் ரோமானியப் பேரரசை உருவாக்கியிருந்தார். பிரிட்டனைப்பற்றி அரசியல் கவனம் செலுத்தப்படாத அக்காலத்தில் கட்டவளானியர் பிரிட்டனில் ஆதிக்கம் பெற்றனர். அவர்களின் தலைவனை சிம்பாலின் (Cymbeline) என்பவர் கோல் செஸ்டரில் தலைநகரை நிறுவி, கென்ட், சஸ்ஸெக்ஸ் (Sussex) பகுதிகளை வென்று, தேம்ஸ் நதிக்கரை நெடுகிலும் தமது ஆதிக்கத்தை நிறுவியதால், ரோமானியரின் ஆதிக்கம் மங்கத் தொடங்கியது. ஆனால், ரோமானியரின் பழக்க வழக்கங்கள், நாகரிகம், மொழி, மதம் போன்றவைகள் பிரிட்டனின் கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் அடிகோல ஆரம்பித்துவிட்டன. கி.பி. முதலாம் நூற்றாண்டில் பிரிட்டனிலிருந்து தானியங்களும், தாதுப்பொருள்களும் ரோமானிய ஐரோப்பாவுக்கு அனுப்பப் பட்டன. மதுவகைகள் (ஒயின்), கண்ணாடி முதலிய பொருள்கள் பிரிட்டனில் இறக்குமதியாயின. இந்த நெருக்கமான வியாபாரத்தைத் தொடர்ந்துதான் வருங்காலத்தில் ரோமானியரின் படையெடுப்புத் தொடங்கப்போகிறது.

பேரரசர் கிளாடியஸ் (Emperor Claudius)

கிழக்கே யூப்ரெடீஸ் நதிக்கரையிலிருந்து மேற்கே அட்லான்டிக் கரைவரை பரவியிருந்த ரோமாபுரிப் பேரரசின் கவனம் கி.பி. 43-ல் பிரிட்டன்மீது மீண்டும் திரும்பியது. சிம்பாலின் (Cymbeline) மரணத்தைத் தொடர்ந்து பிரிட்டனில் ஆதிக்கப் போர் ஏற்பட, அது ரோமானியப் படையெடுப்புக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. வல்லரசின் எல்லையைப் பெருக்க வேண்டுமென்ற காரணத்தால் ரோமானியப் பேரரசர் கிளாடியஸ் கி.பி. 43-ல் தம் 16,000 வீரர்களோடு பிரிட்டனைத் தாக்கினர். சுமார் 360 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பிரிட்டனில் இருந்த ரோமானியர் ஆதிக்கம் இவரின் படையெடுப்புக் காலத்திலிருந்தே தொடங்குகிறது என்பதை நாம் அறிய வேண்டும். கிளாடியஸின் மேற்பார்வையில் தேம்ஸ் நதி கடக்கப்பட்டு, கெல்ட்டுகளின் தலைநகரான கோல்செஸ்டர் (Colchester) கைப்பற்றப்பட்டது. பேரரசர் ரோமுக்குத் திரும்பிவிட்டபோதிலும் அவரது ஆணையின்கீழ் ரோமானியப் படைத் தளபதிகள்

பிரிட்டனில் மேற்கொண்டு ஊடுருவி, அதன் தாழ்ந்த நிலப்பகுதி களான லிங்கன், எக்ஸ்டர், கிளவுசெஸ்டர், (Gloucester) ஒரேக்ஸ்டர் (Wraxeter) ஆகிய இடங்களைக் கைப்பற்றி, கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் ரோமானியரின் ஆதிக்கத்தைப் பலப் படுத்தினர். இன்னமும் பிரிட்டனில் ரோமானிய ஆதிக்கத்திற்கு மத்திய, மேற்குப் பகுதிகளில் எதிர்ப்பு இருந்து வந்ததென்பதை நாம் அறிய வேண்டும்.

பேரரசர் வெஸ்பேசியன் (Emperor Vespasian)

கி.பி. 77-ல் வெஸ்பேசியன் என்ற ரோமானியப் பேரரசர் திறமை மிக்க ஜூலியஸ் அக்ரிகோலா (Agricola) என்பவனைப் பிரிட்டனுக்கு ஆளுநராக அனுப்பிவைத்தார். அடுத்த ஏழு ஆண்டுக் காலத்தில் மேற்குப் பகுதியான வேல்ஸ், வட பிரிட் டன், தென் ஸ்காட்லாந்து பகுதிகளைத் தாக்கி, தமது ஆளுகையின்கீழ் அவர் கொண்டு வந்தார்; வெற்றி கொண்ட பகுதிகளில் பரவ லாகக் கோட்டைகளைக் கட்டினர். ஸ்கிப்டன், ஆம்பல்சைடு போவஸ், காட்ரின் போன்ற இடங்களில் அக் கோட்டைகள் இருந்திருக்க வேண்டும். இராணுவச் சாலைகளை அமைத்து பிரிட்டனின் சில முக்கியப் பகுதிகளை இணைத்தார். மான்செஸ்டரில் இருந்து கார்லில்வரையும், யார்க்கிலிருந்து டைன் ஆற்றங்கரைவரையிலும் செல்லும் சாலைகளும் இரு உதாரணங் களாகும். பற்பல இடங்களுக்குத் தங்கள் படைகள் தடை யின்றிச் செல்வதற்கு இச் சாலைகள் ரோமானியருக்குப் பெரிதும் உதவின. நேர்மையான அரசியலை விரும்பிய அக்ரிகோலா (Agricola) ரோமானிய நாகரிகத்தின் அடிப்படையில் நீதி நிர்வாகம், மதம், கல்வி போன்றவற்றில் சீர்திருத்தம் செய்தது போற்றத் தக்கது. அயர்லாந்தையும் தாக்கிக் கைப்பற்ற வேண்டுமென நினைத்திருந்த அக்ரிகோலா ரோமாபுரிக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். இவர் ஆளுநராக இருந்த காலத்தில் பிரிட்டனின் வடக்கு, மேற்குப் புறங்களிலே ரோமானியர் உறுதி யான எல்லைகளை அமைத்துக்கொண்டனர்.

பேரரசர் ஹாட்ரியன் (Emperor Hadrian)

கி.பி. 122-ல் ரோமாபுரிப் பேரரசர் ஹாட்ரியன் பிரிட்ட னுக்கு வருகை தந்தது ஒரு முக்கிய நிகழ்ச்சி. அவரது முயற்சி யால், வட ஸ்காட்லாந்திலிருந்து தொடர்ந்து ஏற்பட்டு வந்த தாக்குதலைச் சமாளிக்க 20 அடி உயரமுள்ள 75 மைல் நீளமான பாதுகாப்பு மதில் கட்டப்பட்டது. ரோமாபுரியின் அழியாச் சிறப்புச் சின்னமாக இன்றும் காட்சியளிக்கும், ஹாட்ரியன்

சுவர்' (The Hadrian Wall) சோல்வே, டைன் என்ற இடங்களுக்கு இடையே கோட்டைகள், படை வீடுகள் சைகைச் சின்னங்களுடன் ஒரு சிறந்த பாதுகாப்பு அரணாக விளங்கியது.

அன்டோனியஸ் பயஸ் (Antonius Pius)

கி.பி. 140-ல் ரோமாபுரிப் பேரரசர் அன்டோனியஸ் பயஸ் காலத்தில், ஹாட்ரியன் சுவருக்கு வடக்கே ஃபோர்த்திலிருந்து (Forth) கிளோடுவரை (Clyde) 37 மைல் நீளம் கொண்ட மதில் எழுப்பப்பட்டது. இதை 'அன்டோனியஸ் சுவர்' என அழைக்கிறார்கள். இதிலிருந்து, இந்தப் பேரரசர் காலத்தில் வட ஸ்காட்லாந்தியப் பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியில் ரோமானியர்கள் ஈடுபட்டிருந்தார்களெனத் தெரிகிறது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் மத்தியில் ரோமாபுரியின் ஆதிக்கம் வட ஸ்காட்லாந்து நீங்கலாக பிரிட்டனின் மற்றப் பகுதிகளில் பரவியிருந்ததெனக் கொள்ளலாம். இருப்பினும் கிழக்கு, தெற்கு பிரிட்டனிலேயே ரோமானியரின் செல்வாக்கு வேரூன்றி இருந்தது. வேல்ஸ், வட இங்கிலாந்துப் பகுதிகளில் வாழ்ந்த முரட்டுக் கெல்ட்டுகள் அடக்கப்பட்டிருந்தபோதிலும் ரோமானியரின் நாகரிகம் அங்கு அதிகமாகப் பதியவில்லை.

விளைவுகள்

பொதுவாக பிரிட்டனில் ரோமானியரின் நாகரிகம் ஓரளவு ஊன்ற ஆரம்பித்தது. யார்க் (York), செஸ்டர் (Chester), கார்லியன் (Caerleon) போன்ற கேந்திர நகரங்களிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 50,000 வீரர்களே ரோமானிய நாகரிகத்தின் காவலர்களாக விளங்கினர்கள். ரோமானிய பிரிட்டனின் எல்லைகளாக இம் மூன்று கேந்திரங்களும் விளங்கின. அந்த வட்டத்தினுள் இருந்த இலண்டன், சில்செஸ்டர் (Silchester), லிங்கன் (Lincoln) போன்றவை ரோமாபுரி நாகரிகத்தின் உயிர் நாடிகளாக விளங்கின. ரோமானியரின் நாகரிகம் மிக அதிகமாகப் பரவிய இடம் இலண்டன்தான். இலண்டன் உள்படப் பல நகரங்கள் முக்கிய சந்தைப் பட்டணங்களாக விளங்கின. இங்கு வாழ்ந்த மக்கள் இனவழியிலே கெல்ட்டுகளாக இருந்தும் மொழி, மதம், பழக்க வழக்கங்களிலே ரோமானியர்களாகவே விளங்கினர். ரோமானிய பிரிட்டானியர்கள் என இவர்கள் அழைக்கப்பட்டனர். நகரில் ரோமானியர்களின் கோயில்கள், வாணிகத் துறைகள், வசதிகள் கொண்ட பெரிய வீடுகள், நுண்கலைகள் அதிகமாகக் காணப்பட்டன.

நாட்டுப்புறங்களில் வாழ்ந்த பிரிட்டானியர்களுக்கும் ரோமானிய நாகரிகத்தின்மீது மோகம் இருந்தது. ரோம நாகரிகப்

பாணியிலே 'வில்லாஸ்' (villas) என்றழைக்கப்பட்ட பெரிய, அகன்ற வீடுகள் நாட்டுப்புறங்களிலே கட்டப்பட்டன. வேலைப் பாடு அமைந்த கற்களால் அழகுபடுத்தப்பட்ட தரையுடன் கூடிய, வில்லாக்கள் (villas) என அழைக்கப்பட்ட மாளிகைகள் தோட்டத்தின் நடு மையத்தில் கட்டப்பட்டிருந்ததும் ரோமாபுரி நாகரிகத்தின் சாயலே.

ரோமானியர்களால் ஆப்பிள், செர்ரி போன்ற பழவகைகளும் பட்டாணி போன்ற பயிர் வகைகளும் பிரிட்டனில் விவசாயத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

ரோமானிய பிரிட்டனில் நம் கவனத்தை அதிகமாகக் கவருவன அவர்களால் அமைக்கப்பெற்ற மாபெரும் சாலைகளே. பிரிட்டனின் முக்கிய நகரங்களே அவை இணைத்தன என்பதை நாம் மறக்கக்கூடாது. லிங்கன் — செஸ்டர் நகரங்களுக்கு இடையே அமைக்கப்பட்ட சாலை குறிப்பிடத்தக்கது. இன்று நவீன முறையில் அமைக்கப்பட்டிருக்கும் பல சாலைகள் ஆதியில் ரோமானியர்களால் அமைக்கப்பட்ட சாலைகளே ஒட்டியனவே.

ரோமானியர்களின் இராணுவ ஆட்சிக்கு பிரிட்டன் உட்பட்டிருந்த போதிலும், ஒருமைப்படுத்தப்பட்ட மத்திய ஆட்சியை அவர்களால் அங்கு நிறுவ முடியவில்லை யென்பதைத் தல சுய ஆட்சி பெற்றிருந்த கிளவுஸ்செஸ்டர் (Gloucester), யார்க் (York) போன்ற நகரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பிற்காலத்தில் கிறித்துவ சமயமும் ரோமானியர்களால் பிரிட்டனில் புகுத்தப்பட்ட தென்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

உள்நாட்டுப் போர்களாலும் முரட்டு மக்களின் அந்நியப் படையெடுப்புகளாலும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் ரோமப் பேரரசு, தான் கிதைவதற்கான அறிகுறிகளைக் காண்பித்தது. கேரோசியஸ், (Carausius), அலெக்டஸ் (Allectus) என்ற இரு பிரிட்டானியத் தளபதிகள் ரோமானியர்களை பிரிட்டனிலிருந்து விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும், கி.பி. 296-ல் கான்ஸ்டானியஸ் என்ற ரோமப் பேரரசர் பிரிட்டனில் மூண்ட சுதந்தரப் போரை நசுக்கி, ரோமாபுரியின் ஆதிக்கத்தைக் காப்பாற்றினர்.

கி.பி. 4 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்காட்லாந்திலிருந்து பிக்ட்டுகள் (Picts) என்ற முரட்டு இனத்தினர் ஹாட்ரியின் மதிலை ஊடுருவி ரோமானிய பிரிட்டனைத் தாக்க ஆரம்பித்தனர். பிரிட்டனில் இருந்த ரோமத் தளபதிகள் நாட்டின் பாதுகாப்பைப்பற்றி அதிக அக்கறை காட்டாமல் ரோமாபுரியிலே அப்போதைக்கப்போது நடந்துவந்த வாரிசுப் போர்களிலே

கவனம் செலுத்தினர். பிரிட்டனிலிருந்து தம் வீரர்களுடன் வெளியேறி ரோமாபுரி உள்நாட்டுச் சண்டையில் கலந்து கொண்ட (கி.பி. 383) தளபதி மாக்ஸிமஸ் (Maximus) இதற்கு ஓர் உதாரணம். பிற்காலத் தளபதிகளும் இவரின் வழியையே பின்பற்றத் தொடங்கினர். ரோமாபுரி இதற்கிடையே முரட்டு இன மக்களால் தாக்கப்பட, கி.பி. 407-ல் ரோமானியரின் கடைசிப் படைகள் பிரிட்டனிலிருந்து அழைக்கப்பட்டுவிட்டன. கி.பி. 410 ல் அலாரிக் (Alaric) என்ற காத் இனத் தலைவனால் ரோமாபுரியே தாக்கப்பட்டபோது, செயலற்றுப்போன பேரரசர் ஹோனரியஸ் (Honorius) பிக்ட்டுகள், சாக்சானியர் களின் (Saxons) தாக்குதல்களிலிருந்து தங்களைத் தாங்களே பாது காத்துக் கொள்ளும்படி, பிரிட்டானியர்களுக்கு வேண்டுகோள் விடுக்க, அதுவே பிரிட்டனில் ரோமானியர் ஆட்சியின் இறுதிக் கட்டமாக அமைந்தது.

ரோம் பேரரசு முரட்டு இன மிலேச்சர்களால் தாக்கப்பட்டுக் கொண்டிருக்க, ஆங்கில - சாக்சானியர்கள் என்ற இனத்தினர் பிரிட்டனின் கிழக்குக் கரையைத் தாக்க ஆரம்பித்தனர். இவர் களின் படையெடுப்பு பிரிட்டனின் வரலாற்றை எங்ஙனம் பெரிதும் பாதித்த தென்பதை அடுத்துக் காணுவோம்.

(இ) ஆங்கிலோ சாக்சானிய பிரிட்டன் (கி. பி. 410 - 825)

படையெடுப்பிற்கான காரணங்கள்

கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் இடையில் பிரிட்டன்மீது ஆங்கிலோ சாக்சானியர்கள் என்ற இனத்தினர் படையெடுத் தனர். டியுடானிக் (Teutonic) இனத்தைச் சேர்ந்த இக் குடி யினர் தென் டென்மார்க், வடசெர்மனி, ஹாலந்து போன்ற பகுதிகளில் இருந்து கூட்டம் கூட்டமாகச் சிறு சிறு படகுகளில் வடகடலைக் கடந்து பிரிட்டனின் கிழக்குக்கரைப் பகுதியிலே இறங்கினர்கள். இவர்கள் ஏன் பிரிட்டன்மீது படையெடுத் தார்கள் என்பதற்கு நிச்சயமான காரணங்கள் எதுவும் இருப்ப தாகத் தெரியவில்லை. ஐரோப்பாவில் அடிக்கடி ஏற்பட்ட இனப் பெயர்ச்சியின் எதிரொலியாக இவர்களின் படையெடுப்பு அமைந் திருக்கலாம். வார்டிஜன் (Vortigern) என்ற பிரிட்டானியத் தலைவன் தன் எல்லையைத் தாக்கிய ஸ்காட்லாந்திய பிக்ட்டுகளை (Picts) ஒடுக்குவதற்காகச் சாக்சானியர்களின் உதவியைக் கோரியதாகவும் அதை ஏற்று ஹெங்கிஸ்ட் (Hengist), ஹோர்சா (Horsa) என்றழைக்கப்பட்ட சாக்சானியப் பிரிவினர் பிரிட்டனை

வந்தடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதுவே சாக்சானியப் படையெடுப்பின் ஆரம்பம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

படையெடுத்து வந்த ஆங்கில சாக்சானியர்களுக்கும் பிரிட்டானியர்களுக்கும் (கெல்ட்டுகள்) தொடர்ந்து ஆதிக்கப் போர் நடைபெற்றது. அப் போரின் ஒரு நிகழ்ச்சியாக கி.பி. 500-ல் புகழ்பெற்ற ஆர்தர் அரசன் (King Arthur) சாக்சானியர்களை வென்றதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஆதிக்க வளர்ச்சி

ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகட்கு (கி.பி. 449 - 613) பிரிட்டனில் ஆங்கிலோ சாக்சானியர்கள் போர்கள் பல நடத்தித் தங்களின் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டதாகத் தெரிகிறது. இவர்கள் கெல்ட்டுகளோடு மட்டுமல்லாமல் தங்களுக்குள்ளாகவே போரிட்டுக் கொண்டனர். தொடக்க காலத்தில் ஆங்கிலேயருக்கும் சாக்சானியருக்கும் இடையே இருந்த வேறுபாடுகள் சிலவாக இருந்தும் அது அவர்களைத் தங்களுக்குள் சண்டையிடாமல் தடுத்து வைக்கவில்லை. தங்களுக்குள் போர்கள் நடத்திக் கொண்டபோதிலும், ஆங்கில - சாக்சானியர்கள் அனைவரும் இணைந்தே தனித்தனிப் பகுதிகளில் கெல்ட்டுகளை வென்றனர்.

கென்ட் பகுதிகளில் முதலாவது குடியிருப்பையும் ஹாம்ஷையருக்குத் (Hamshire) தெற்கே இரண்டாவது குடியிருப்பையும் சாக்சானியர்கள் அமைத்தனர். சஸ்ஸெக்ஸ் (Sussex) பகுதிகளில் தென் சாக்சானியர்களும் மிடில்ஸெக்ஸ் (Middlesex) சுர்ரே (Surrey) பகுதிகளில் மத்திய சாக்சானியரும், எஸ்ஸெக்ஸ் (Essex) பகுதியில் கிழக்கு சாக்சானியர்களும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர். நார்த்ஆம்டன், லிஸ்டர், போர்ட்போர்டு, நார்ஃபோக் (Norfolk), ஸஃபோக் (Suffolk) பகுதிகளிலும் ஆங்கிலர் (Angles) குடிபுகுந்தனர். சுருக்கமாக-பிரிட்டனில் தென்கரை ஓரமாகவும் அதன் ஆற்றங்கரைப் பகுதிகளிலும் சாக்சானியர்கள் தங்கள் ஆதிக்கத்தையும், கிழக்குக் கரையோரமாகவும் அதன் ஆற்றங்கரைப் பகுதிகளிலும் ஆங்கிலர்கள் (Angles) என்ற கிளைப் பிரிவினர் தங்களின் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொண்டனர். அவர்களால் விரட்டப்பட்ட கெல்ட்டுகள் கார்ன்வால், வேல்ஸ் போன்ற வடமேற்குப் பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

சாக்சானிய அரசுகள்

ஆரம்பத்தில் ஆங்கில சாக்சானியர்களால் பத்து அரசுகள் தோன்றியபோதும் நார்த்தம்பிரியா (Northumbria), மெர்சியா,

(Mercia), வெஸ்ஸெக்ஸ் (Wessex), கென்ட் (Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex), கிழக்கு ஆங்கிலியா (East Anglia), எஸ்ஸெக்ஸ் (Essex) என்ற ஏழு அரசுகளே நிலைத்து நின்றன. ஒவ்வொரு வமிசத்த வரும் தம்மையே இங்கிலாந்தின் அரசியல் தலைவராகக் கூறி வந்தனரேயன்றி நாடு முழுவதையும் வென்று ஆளும் திறனைப் பெற்றிருக்கவில்லை. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குமேல் நார்த்தம்பிரியா, மெரிசியா, வெஸ்ஸெக்ஸ் என்ற மூன்று அரசுகளே இறுதியில் நின்றன. இப் பெரிய அரசுகளும் ஆரம் பத்தில் மற்றச் சிற்றரசுகளை அடக்கப் போதுமான பலம் பெற் றிருக்கவில்லை. ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டிற்கு இந்த மூன்று அரசுகள் தம்முள் இடையறாது செய்த போர்களே அக் காலத்திய பிரிட்டன் வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளாக அமைகின்றன. அவர்களின் ஆதிக்கப் போரின் மேற்போக்கான வரலாற்றை அடுத்துக் காண்போம்.

மெரிசியாவின் ஆதிக்கத்திற்கு அடிகோலியவர் பெண்டா (Penda - கி.பி. 632 — 654) என்பவர். அவர் வெஸ்ஸெக்ஸி லிருந்து ஸெவர்ன் (Severn) பள்ளத்தாக்குப் பகுதியைப் பறித்துக் கொண்டார். ஆனால், நார்த்தம்பிரியாவின் அரசனை ஆஸ்வி (Asway) என்பவனால் கொல்லப்பட்டார். ஆஸ்வியால் ஏவப்பட்ட அதிகாரிகள் மெரிசியாவில் ஆட்சியை மேற்கொண்டு, சில காலம் கழித்து நார்த்தம்பிரியாவுக்குச் சொந்தமான லிண்டுசேயைத் (Lindsay) தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். தமக்கு ஏற் பட்ட நஷ்டத்திற்கு ஈடாக ஆஸ்வி (Aswey) ஸ்காட்லாந்தின் பெரும்பகுதியை வென்று நார்த்தம்பிரியாவின் ஆட்சிக்கு உட் படுத்தினார் (கி.பி. 670).

தொடக்கத்திலிருந்தே ஏனைய அரசுகளால் தாக்கப்பட்டு வந்த வெஸ்ஸெக்ஸ் கி.பி. 688-ல் ஐன் (Ine) என்ற அரசன் காலத் தில் மற்ற அரசுகளுக்கு நிகரான ஆதிக்கம் பெற்றிருந்தது. இலண்டன் நகரம் வெஸ்ஸெக்ஸ் அரசுக்கு அடங்கியிருந்தது. கி.பி. 726-ல் ஐன் காலமானதைத் தொடர்ந்து வெஸ்ஸெக்ஸின் ஆதிக்கம் மறைய ஆரம்பித்தது. வெஸ்ஸெக்ஸின் குழப்ப நிலையைப் பயன்படுத்திக்கொண்டு எதல்பால்டு (Ethelbald), ஆஃபா (Offa) (கி.பி. 716 - 796) என்ற இரு அரசர்கள் காலத்தில், மெரிசியா மீண்டும் ஆதிக்கம் பெற்றது. ஆஃபா இறந்தபின் வேல்ஸ் பகுதியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குத லினாலும் ஏனைய அரசுகளின் போர்களினாலும் மெரிசியா சீர் குலைய ஆரம்பித்தது. அச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எக்பர்ட் (Eqbert) என்ற வெஸ்ஸெக்ஸ் அரசர் மெரிசியாவை முறியடித்துப் பெரும் வெற்றியைக் கண்டார். தம் ஆதிக்

கத்திற்கு உட்பட மறுத்த நார்த்தம்பிரியாவுடன் போரிட்டே தம் காலத்தை எக்பர்ட் கழித்தார். இருப்பினும் கி.பி. 839-ல் அவர் இறந்தபோது வெஸ்ஸெக்ஸின் ஆதிக்கம் ஓங்கி வளர்ந்திருந்தது. ஓங்கி வளர ஆரம்பித்த ஆதிக்கத்தை மையமாக வைத்துச் சில ஆண்டுகளுக்குள்ளாக வெஸ்ஸெக்ஸ் மேலும் பலம் பெற்று டானியர்களின் படையெடுப்புக்கு ஈடு கொடுக்கக் கூடிய தகுதியைப் பெற்றது.

சாக்சானியர் காலத்தில் ஆங்கிலேயரின் பண்பாடு

இங்கிலாந்தின் பண்பாட்டு வளர்ச்சி ஒரு முதிர்ந்த நிலையை எய்துவதற்குச் சுமார் 400 ஆண்டுகள் பிடித்தன. அவர்கள் இயற்கையோடு போராடி, காட்டையும், சதுப்பு நிலங்களையும் அழித்துச் சீராக்கி விளைநிலங்களாக மாற்றினர்.

இங்கிலாந்து ஒரு விவசாய நாடாக மாற்றப்பட்டது. மக்கள் கிராமிய வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினர்; இங்கிலாந்தில் இருந்த ரோமானிய நகரங்களைத் தூர்த்துவிட்டதன்மூலம் தங்களுக்கு நகர வாழ்க்கையின் மேலிருந்த வெறுப்பைக் காட்டினர்.

இங்கிலாந்து பல நல்ல கிராமங்களைக் கொண்டு விளங்குவதாயிற்று. இக் கிராம மக்கள் தங்கள் இடத்திற்கு அப்பாற்பட்ட விவரங்களை அறிந்துகொள்ளச் சிறிதும் முயலவில்லை. ஒவ்வொரு கிராமமும் விளைநிலம், புல்நிலம், விளையாநிலம் அல்லது காடுகள் நிரம்பியதாய் இருந்தது. எல்லாருடைய ஒத்துழைப்பும் கிராமங்கள் முன்னேறுவதற்குக் காரணமாயிருந்தது. கிராமங்களில் உரிமை, கடமை, பூசல்களைத் தீர்த்துவைக்கப் பல நீதி மன்றங்களும் இருந்தன.

சிற்சில கிராமங்கள் பிரபுக்களையும், உரிமைகொண்டு வாழ்வோரையும் கொண்டு விளங்கியது. ஒவ்வொருவர்க்கும் பல ஏக்கர் நிலபுலன்கள் சொந்தமாகியிருந்தன. அவர்கள் அதில் உழுது பயிரிட்டு வாழ்ந்தனர்.

சட்ட முறைகளும் அக் காலத்தே நன்முறையில் வளர்ந்து ஃபோக்மூட், ஷையர்மூட் என்பப்படும் சபைகள், குறுநிலங்களிலும் சிறு அரசுகளிலும் சட்டத்துறையைக் கண்காணித்தன. இதில், மதகுருமார், இளையோர் ஆகியோர் பங்கேற்றனர். சில சமயங்களில் அரசனும், மற்றைய நேரங்களில் சிறு நிலப்பகுதியின் பிரபுக்களும், நீதிமன்றங்களினின்றும் பெற்ற பொருளைத் தங்களுக்கென்று கொண்டனர்.

இக் காலத்தே நீதிமுறையும் பழங்காலத்தை ஒட்டியிருந்தது. பொதுச்சட்டமே எங்கும் நிலவியது. ஜூரி முறை (jury system) வழக்கத்தில் இல்லை. குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டுத் தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்தன. குற்றம் இழையாதவன் நியாயமான முறையில் விசாரிக்கப்பட்டான். சத்தியம் செய்த பின்பே குற்றத்தில் ஈடுபட்டவர்கள் விசாரிக்கப்பட்டனர். இச் சட்ட முறைகள் நாளுக்கு நாள் வளர்ந்தன.

அரசனே எல்லாருக்கும் தலைவனுயிருந்தான். 'தேனஸ்', (Thegns) எனப்பட்ட பெருங்குடியானவர்கள் அவனுக்குக் கீழ்ப் பட்டு, எல்டார்மன் (Ealdarman), ஷெரிப் போன்றோர் அவனுக்கு அடங்கி யிருந்தனர். 'வைடன்' (Witan) எனப்பட்ட சபை தென் தலைவர்களையும், வலிமை மிக்கோரையும், மற்ற பிரபுக்களையும் கொண்டதாய் அரசனுக்குக் கீழ்ப்படிந்திருந்தது. அச் சபை அரசனுக்கு அறிவுரை கூறியதோடு, சட்டங்களையும் வகைப் படுத்தியது. அரசனுக்குப்பின் அரசுப்பட்டம் அடைவோரையும் அது நிர்ணயித்தது. அரசன் தன் சொந்த நிலங்களிலிருந்து கிடைத்த வருவாயில் காலந் தள்ளினன். அரசு என்ற அளவுக்கு ஒரு சிறந்த முறையும் நிலைப்படையும் இக் காலத்தில் இல்லை. மேலெழுந்தவாரியாகத் தற்காலத்தில் பாராளுமன்ற முறைகள் ஓரளவு இக் காலத்தே தோன்ற ஆரம்பித்தன. இங்கிலாந்து என்று இந் நாடும் அழைக்கப்பட்ட இணைப்பு இயக்கமும் உள்ளூரப் பரவ ஆரம்பித்தது.

ஆங்கிலேயர்கள், சிறந்த முறையில் அரசு நிறுவவில்லை என்பதோடு, அவர்கள் சிறந்த முறையில் கற்கவுமில்லை. இப் பணியைப் பல பாதிரிமார்கள் மேற்கொண்டனர். மாதா கோவில்களை ஆங்காங்கு நிறுவி மக்களிடையே கல்வியைப் பரப்பும் நற்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர். இப் பாதிரிமார்கள் செய்த அரும்பணிகள் இங்கிலாந்தில் கல்வியைப் பெருமளவு உயர்த்திய தோடல்லாமல் அத் தீவை நாகரிக உலகுக்கும் நன்கு அறிமுகப் படுத்தின.

இங்கிலாந்தில் கிருத்துவ மதம் பரவுதல்

ரோமப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் கிருத்துவமதம் இங்கிலாந்தில் மெதுவாகப் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்தில் ஆல்போன் போன்றோர் கிருத்துவ மதத்திற்காக உயிர்விட்டமையிலிருந்து கிருத்துவ மதத்தின்பால் மக்கள் கொண்ட ஈடுபாட்டை நம்மால் ஓரளவு அறியமுடிகிறது. மேலும் கி. பி. 315-ல் இங்கிலாந்தினின்றும் மூன்று பிஷப்புகள் ஆஸ்லீஸ் சபைக்

கூட்டத்திற்குச் (Council of Asles) சென்றமையும் இக் கூற்றை உறுதிப்படுத்தும். இங்கிலாந்தின் பல்வேறு பாகங்களில் கிருத்துவப் பெரியார்கள் தங்கள் பணியைத் தொடர்ந்து நடத்தினர். தெற்கு வேல்ஸில் (South Wales) டேவிட் கிருத்துவ மதத்தின் கொள்கைகளை விவரித்தார். செயின்ட் பேட்ரிக் (St. Patrick) அயர்லாந்தினைக் கிருத்துவப் பகுதியாக்கிக் கொண்டிருந்தார். செயின்ட் நைனியன் (St. Nainian), கேலோவே (Galloway) பகுதியில் கிருத்துவின் போதனைகளைப் பரப்பிக் கொண்டிருந்தார். அயோனு பகுதியில் (Iona) செயின்ட் கொலம்பா (St. Columba) ஒரு பெரும் புனித மடத்தைக் கட்டினார். இத் திருமடம் பற்பல பாதிரிமார்களைப் புனிதத் திருப்பணிக்கு மிகப் பெருமளவு பயன் படுத்தியது. செயின்ட் கொலம்பனும், செயின்ட் காலும் (Gall) இங்கிலாந்து முழுவதையுமே கிருத்துவ நாடாக்கப் பெருமளவு பாடுபட்டனர்.

கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குப் பின்னரே இங்கிலாந்தில் கிருத்துவமதம் பெருமளவில் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்தில் கென்ட் பகுதியின் மன்னன் இதெல்பெர்ட் (Ethelbert), கிருத்துவ மதத்தைச் சேர்ந்த ஃபிரெஞ்சு நாட்டு இளவரசி பெர்த்தாவை (Bertha) மணந்தான். இதனை ஆதாரமாகக் கொண்டு போப் பாண்டவர் முதலாம் கிரிகோரி (Gregory I) கிருத்துவ மதத்தை அந் நாட்டில் பரப்ப முனைந்தார். இவர் அனுப்பிய அகஸ்டின் (Augustine) என்ற பாதிரியாரும் அவரது நாற்பது சீடர்களும் கி. பி. 597-ல் இங்கிலாந்தின் எப்ஸ் ஃளீட் (Ebbs Fleet) என்ற பகுதியை அடைந்தனர். தங்கள் சமயப் பணியை அவர்கள் தொடங்கினர்.

அகஸ்டினும் அவர்தம் சீடர்களும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட நர்ஸியா (Nursia) நாட்டு செயின்ட் பெனிடிக்ட் (St. Benedict) என்பவரது பிரிவைச் சேர்ந்தவராவர். செயின்ட் பெனிடிக்ட் கூறியவாறு தியானமும், பிரார்த்தனையும் மக்களை நல்வழிப்படுத்தும் என்ற கொள்கையை இவர்கள் யாவர்க்கும் அறிவுறுத்தினர். இதெல்பெர்ட் மன்னன் இவர்களை எச்சரிக்கையோடு வரவேற்றான்; இவர்களின் போதனைகளையும் ஓரளவு பாராட்டவும் செய்தான். பின்னர்க் கிருத்துவ மதத்தைப் பரப்பி வரவும் இவர்களை அனுமதித்தான். இப் பாதிரிமார்களின் உண்மையான முயற்சிகளும் பண்பட்ட போதனைகளும் பெருமளவு மக்களைக் கிருத்துவர்களாக்கின. நாளடைவில் இதெல்பெர்ட்டும், இத்தகைய போதனைகளால் பெரிதும் கவரப்பட்டவனைக் கிருத்துவ மதத்தைத் தழுவினான். அகஸ்டின் கான்டர்பரியின்

(Canterbury) திருச்சபையைப் புதுப்பித்து அதை வருங்காலத்துப் பெரும் திருச்சபையாக விளங்குமாறு சிறப்பாக அமைத்தான்.

இவ்வாறே திருமறை உடன்பாட்டின்மூலம் கிருத்துவ மதம் வடக்கிலும் பரவியது. கிருத்துவ மதத்தைச் சார்ந்த இதெல் பெர்ட்டின் மகள் இதெல்பர்கா (Ethelburgh), நார்த்தம்பிரியாவின் பெருமன்னன் எட்வீன (Edwin) மணந்தாள். இதெல் பர்காவுடன் சென்ற பாலினஸ் (Palinus) என்ற பாதிரியார் நார்த்தம்பிரியாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கிருத்துவ மதத்தைப் பரப்பப் பெரிதும் முனைந்தார். எஸெக்ஸ் (Essex), கிழக்கு ஆங்கிலேயா (East Anglia) போன்ற பகுதிகளிலும் கிருத்துவமதம் மெதுவாகவே பரவ ஆரம்பித்தது. போப்பினது பரிசுகளாலும், மனைவியின் வேண்டுதலாலும், பாலினஸின் போதனைகளாலும், சுற்றுப்புறச் சூழலின் உந்தலாலும் மனம் நெகிழ்ந்த எட்வினும் சின்னாளில் கிருத்துவ மதத்தைத் தழுவினான். அவனோடு மக்கள் பலரும் கிருத்துவ மதத்தைத் தழுவினர்.

ஆனால், இவ்வாறு விரைவாக, ஒரு சமயத்தை விட்டு இன்னொரு சமயத்தைத் தழுவும் நிகழ்ச்சி விரும்பத்தக்க தொன்றாயினும், இந் நிகழ்ச்சி காலப்போக்கில் நீலத்து நிற்பதில்லை. இதற்கு நார்த்தம்பிரியாவே சான்றாக நிற்கிறது. மெர்ஸியா (Mercia) நாட்டரசன் பெண்டா (Penda)வுடன் போரிட்ட எட்வின், ஹீத் ஃபீல்ட் (Heath field) என்ற இடத்தில் கொல்லப்பட்டான். இதெல்பர்காவும், பாலினஸும் நாட்டை விட்டே தப்பியோடிவிட்டனர். கிருத்துவ மதமல்லாது வேறொரு புறம்பான சமயத்தைத் தழுவியிருந்த பெண்டா, நார்த்தம்பிரியாவைத் தம் வசத்திற்குக் கொண்டு வரவே, அந் நாட்டைச் சேர்ந்த பல கிருத்துவர்கள் உடனேயே கிருத்துவ மதத்தின் மேலிருந்த நம்பிக்கையை உதறிவிட்டனர்.

எட்வின் மன்னரால் வெளியேற்றப்பட்டு ஸ்காட்லாந்தில் புகலிடமடைந்த ஆஸ்வால்டு (Oswald), ஆஸ்வி (Oswy) என்ற இரு சகோதரர்கள் மீண்டும் நார்த்தம்பிரியாவை வந்தடைந்தனர். அயோனுவில் கொலம்பாவைப்பற்றியும், அவரது மற்றைய பாதிரிமார்களைப்பற்றியும் அவர்கள் நிரம்பக் கேள்வியுற்றிருந்தனர். ஐடன் (Aiden) போன்ற பாதிரியாரது அரும் முயற்சிகளால் நார்த்தம்பிரியா மீண்டும் கிருத்துவ மதத்தை ஏற்றுக்கொண்டது. அதனால் பெண்டா மன்னனின் அதிகாரம் அங்குக் கோலோச்சியவரை கிருத்துவமதம் அங்குச் சரியாக வளரவில்லை. எட்வீனப்போன்றே ஆஸ்வால்டும், பெண்டாவுடன்

போரிட்டு அழிந்தான். கி.பி. 655-ல் லீட்ஸுக்கு (Leeds) அருகில் பெண்டா போரில் மறைந்த பின்னரே கிருத்துவமதம் நார்த்தம்பிரியாவிலும் மற்றைய பகுதிகளிலும் வேரூன்ற ஆரம்பித்தது. சஸெக்ஸ் (Sussex) பகுதி இறுதியாகக் கிருத்துவ மதத்தை ஏற்றுக்கொண்டது.

இவ்வாறு ரோமானியப் பாதிரிமார்களாலும், செல்டிக் (Celtic) இனத்தாராலும் பெரும்பாலோர் கிருத்துவர்களாக மாற்றப்பட்டனர். வடக்கு இத்தாலியிலிருந்து வந்த பிரினஸ் (Birinus) என்பவர் வெஸெக்ஸ் (Wessex) பகுதியைக் கிருத்துவ மயமாக்கினர். மேலும், கிழக்கு ஆங்கிலியா பர்கண்டியப் பாதிரியார் ஒருவராலும், நார்த்தம்பிரியாவும், மெர்ஸியாவும் அயர்லாந்துப் பாதிரிமார்களாலும், எலெக்ஸும் சஸெக்ஸும், செட் (Cedd), வில்ஃபிரெட் என்போராலும் கிருத்துவ மதத்தைத் தழுவின. இவ்வாறு கிருத்துவமதம் எங்கும் பரவியது. அதோடு இன்னோர் அபாயமும் எங்கும் வளர்ந்தது. கிருத்துவ மதத்தை எங்கும் பரப்பிய பெரியார்களுக்குள் நாளடைவில் கருத்து வேற்றுமை வளரத் தொடங்கியது.

போப்பாண்டவர் அகஸ்டின் இதனைத் தடுப்பதன்பொருட்டு, பிரிட்டானிய பிஷப்புகளைச் சந்தித்து, ரோமானிய முறைகளைப் பின்பற்றுமாறு வேண்டினர். ஆனால், அவர்கள் மறுத்தனர். ஆனால், அகஸ்டின் காலத்தில் இவை அவ்வளவு பெரும் விவகாரங்களாகத் தெரியவில்லை. ஆனால், காலப்போக்கில் சாக்ஸானியர்களுக்குள் இவ் விவகாரம் பெரிதும் முற்ற ஆரம்பிக்கவே அபாயம் மேலும் வளர ஆரம்பித்தது. எனவே, சமயப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்கும்பொருட்டு கி.பி. 664-ல் விட்பி (Whitby) என்னும் இடத்தில் ஒரு சமயக்கூட்டம் (Synod) கூடியது.

செல்டிக் அல்லது பிரிட்டானிய முறையைப் பெருமளவு பரப்பிச் சிறந்த தொண்டாற்றியவர், அயோனு (Iona) விலிருந்து வந்த கால்மன் (Colman) பெரியார்; ரோமானிய முறைகளை மேற்கொண்டு தொண்டாற்றியவர். வில்ஃபிரெட் (Wilfred) என்பவர் ரிப்பன் என்னும் பகுதியைச் சேர்ந்த சமயத் தலைவராவார். வில்ஃபிரெட் பிரிட்டானிய முறைகளைப் பின்பற்றிய ஐடனின் புனித மடத்தில் பயிற்சி பெற்றவராயினும் ரோமுக்குப் புனித யாத்திரை சென்று திரும்பிய பின்னர் ரோமத் திருச்சபைமேலும் ரோமானிய முறைகளின்மேலும் தீராப் பற்றுக் கொண்டார். கால்மனும், வில்ஃபிரெட்டும் சமயக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த நார்த்தம்பிரியாவின் மன்னன் ஆஸ்வியின்முன் தத்தம் முறைகளைப்பற்றி வாதம் செய்தனர். இவ் விரு முறைகளுக்கும்

அதிக வேறுபாடுகள் இல்லை. எனினும் ஈஸ்டர் (Easter) கொண்டாடுதல், தலைமயிர் மழித்தல் ஆகியவை போன்ற சில பழக்கங்களில் இருவர் முறைகளிலும் பல மாறுதல்கள் இருந்தன. தம் மூதாதையர்கள் பின்பற்றிய முறைகளை மாற்றலாகாதென கால்மன் வாதித்தார். அம் முறைகளைப் பின்பற்றுவதன்மூலம் பிரிட்டானியர்கள் ரோமைப் பின்பற்றும் மற்றைய ஐரோப்பிய நாடுகளினின்றும் தனித்து நிற்கின்றனர் என்று வில்ஃபிரெட் வாதித்தார். இறுதியில் வில்ஃபிரெட்டின் வாதம் திருப்தியளிக்கவே ஆஸ்வி மன்னன் ரோமானிய முறைகளையே பின்பற்றுவதெனத் தீர்மானித்தான். இத் தீர்மானத்தினால் இங்கிலாந்து சாக்ஸானியப் படையெடுப்பிற்குப் பின்னர் அடைந்திருந்த நிலையினின்றும் பிரிந்து ஐரோப்பிய கிருத்துவ அரசுகளில் ஒன்றாக மாறியது.

இவ்வாறு ரோமானிய முறைகளைப் பின்பற்றுவதெனத் தீர்மானித்ததன் விளைவாக பிரிட்டன், ரோம் போன்ற பல பெரும் பண்பாட்டு வளர்ச்சி பெற்ற நாடுகளோடு சிறந்த தொடர்பைப் பெற்றது. ஆஸ்வி அரசனின் தீர்மானங்கள் பல வகையிலும் செயல்பட ஆரம்பித்தன. காண்டர்பரியின் ஆர்ச் பிஷப் பதவிக்காகச் செயல்பட ஆரம்பித்தன. காண்டர்பரியின் ஆர்ச் பிஷப் பதவிக்காக ஓர் ஆங்கிலக் குடிமகன் தேர்ந்தெடுக்கப் பட்டு, பயிற்சிக்காக ரோமுக்கு அனுப்பப்பட்டான். ஆனால், இக் குடிமகன் திடீரென்று இறந்துபோகவே போப்பாண்டவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த டார்ஸஸ் (Tarsus) பகுதியைச் சேர்ந்த, தியோடார் (Theodore) என்பவரைப் பாதிரிமார்களுக்குரிய சகல முறைகளிலும் பயிற்றுவித்துத் தேர்ச்சியும் பெறச் செய்து இங்கிலாந்துக்கு அனுப்பினர்.

தியோடார் இங்கிலாந்துத் திருச்சபைகளில் பல அருஞ்சாதனைகளை நிகழ்த்தினர். ஒவ்வொரு திருச்சபையையும் ஒவ்வொரு பிஷப்பின் பொறுப்பில் வைத்தார். பாதிரிமார்களின் மடாலயங்கள் பல மாறுதல்களின் நிலைக்களனாய் விளங்கின. ஆபட் (Abbot) எனப்பட்ட மதத் தலைவர்கள் பல அதிகாரங்களைப் பெற்று விளங்கினர். எனினும், இம் மதத் தலைவர்களுக்குள் இருந்த காழ்ப்புணர்ச்சி திருச்சபைகள் ஒன்றாக இணைந்து செயல்படுவதைப் பெரிதும் தடுத்து நிறுத்தியது. இத்தகு பூசல்கள் பல நல்ல செயல்கள் நடக்க ஒண்ணாமல் தடை செய்தன. ஆனால், தியோடார் ரோமானிய முறையை இங்கிலாந்தில் பெரிதும் பயன்படுத்தினர். சிறு திருச்சபைகளில் பாதிரிமார்களை நியமித்தும் பெரும் திருச்சபைகளில் பிஷப்புகளை அமர்த்தியும் மாநிலத் திருச்சபைகளின் பொறுப்பை ஆர்ச் பிஷப்புகளிடம்

ஒப்படைத்தும் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். பாதிரி மார்கள் பிஷப்புகளின் பொறுப்பிலும், பிஷப்புகள் ஆர்ச் பிஷப்புகளின் பொறுப்பிலும், இவர்கள் அனைவரும் போப்பின் ஆளுகைக்குக் கீழும் தியோடாரால் அமைக்கப்பெற்றனர். எனவே, இவர்கள் சிஞட் திருச்சபைக் கூட்டத்தில் கூடிய பொழுது தாங்கள், நார்த்தம்பிரியாவைச் சேர்ந்தவர்களென்றே, கென்டைச் சேர்ந்தவர்களென்றே, வெஸெக்ஸைச் சேர்ந்தவர்க ளென்றே கருதவில்லை. தாங்கள் ஓர் ஐக்கியப்பட்ட திருச் சபைக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்ற ஓர் எண்ணம் மட்டுமே இவர்களுக் கிருந்தது.

இவ்வாறு மதத்தில் ஒன்றுபட்ட இங்கிலாந்து, அரசியலிலும் ஒன்றுபட ஆரம்பித்தது. இவ்வாறு இங்கிலாந்திலுள்ள எல்லாப் பகுதிகளும் படிப்படியாக வெஸெக்ஸ் பகுதியின் தலைமையின் கீழ் வந்தன. இந்த மத ஒற்றுமை சமாதானத்தையும் நாட்டிலே தோற்றுவித்தது. நாளடைவில் அரசியலிலும் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. சட்டங்கள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டன. நீதித் துறையிலும் பல சிறந்த அமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டன. குற்றம் செய்தோர் கடுமையான முறைகளில் தண்டிக்கப்பட்டனர். ஆனால், இத்தகைய நீதி விசாரணைகளில் தனிப்பட்டோரது பொருமையும், வஞ்சகச் செயல்களும் பெரிதும் மேலோங்கி நீதிமுறைப் பரிபாலனத்தை ஓரளவு குறைபாடுள்ள தாக்கியது. திருச்சபைகளும் குற்ற இயல் துறைகளில் பெரும் பங்கு ஆற்றியது. விரும்பத்தகாத, தீய பழக்கங்களைக் கொண்ட வர்களையும், குற்றம் புரிந்தோரையும் திருச்சபைகள் 'பாவிகள்' என்று கண்டனம் செய்ததோடு நில்லாமல் அவர்களுக்குத் தண் டனையும் அளித்தது. கடமையை ஒழுங்காகச் செய்து தூய வாழ்க்கையைச் செவ்வனே நடத்திவந்த பாதிரிமார்களின் வாழ்க்கை எல்லாரையும் பெரிதும் கவர்ந்தது.

கல்வித் துறையிலும் திருச்சபைகள் பெரும் பணியாற்றின. கேய்ட்மன் (Caedman) என்ற பாதிரியார் ஆங்கிலக் கவிதை யுலகில் முதல் மனிதராய்த் திகழ்ந்தார். இறைவன் பெருமையில் தினைத்துப் பாடிய இவரது கவிதை மிகச் சிறந்த தொன்றாகும். 'மதிக்கத்தக்க பெருமை கொண்ட பீட்' (Venerable Bede) என்னும் பாதிரியார் மிகச் சிறந்த அறிவாளியாவார். கற்றறிதலி லும் போதிப்பதிலும் இவர் சிறந்து விளங்கினர். இவரது ஜாரோ (Jarrow) பள்ளியில் அறுநூறு பாதிரிமார்கள் இவரிடம் சிறந்த முறையில் கல்வி கற்றனர். இங்கிலாந்தின் முதல் வரலாற்றாசிரியரும் இவரே யாவர். புனித ஜானின் அருள் மொழிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்த பெருமையும்

இவரையே சாரும். டன்ஸ்டன் (Dunstan) என்ற இன்னொரு பாதிரியார் பெருங்கல்விமான் மட்டுமின்றிச் சிறந்த ஆட்சியியல் துறை நிபுணருமாவார். அரசர்களுக்கு ஆலோசனைகள் பல கூறி நிர்வாகத்தை மேம்படவும் செய்தவர் இவர். சில சமயங்களில் இவர் டேனியர்களுக்கு எதிராகப் படை திரட்டிச் சென்ற அரசருக்கு உடன் சென்று பல வகை உதவியும் செய்தவர். காண்டர்பரியின் ஆர்ச் பிஷப்பாகப் பணியாற்றிய இவர், இங்கிலாந்தின் அரசியலில் மிகுந்த அதிகாரம் பெற்றவராக விளங்கினார். நிர்வாகத்துறையில் சிறந்த பல மாறுதல்கள் நிகழ இவர் காரணராயிருந்தார். பேராசை, பொறுமை, குடும்ப பந்தபாசம் இவைகளேதுமின்றிப் பணியாற்றிய இத்தகைய பாதிரிமார்கள் பெரும் போர்வீரர்களைவிட நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்றினர். பிற்காலத்தில் 'மகா சாஸனம்' (Magna Carta) போன்ற பெரும் சாஸனம் எழக் காரணராயிருந்தவர், ஸ்டீபன் லாங்டன் (Stephen Langton) என்ற ஒரு பாதிரியாராவார்.

இவ்வாறு கிருத்துவமதம் திருச்சபைகள்மூலம் தேசிய ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் வளர்த்தது. நாட்டிலே ஒற்றுமையை வளர்த்ததோடு சட்டம் போன்ற துறைகளிலும் பல சிறந்த மாறுதல்களை ஏற்படுத்தியது. மேலும் பல அறிவாளிகளையும் சிறந்த ஆட்சித்துறையின் நிபுணர்களையும் தோற்றுவித்து இங்கிலாந்தை முன்னேற்றப்பாதையில் செலுத்தியது.

(ஈ) மகா ஆல்ஃபிரட் (கி. பி. 871-899)

இங்கிலாந்தின் அரியணையைப் பல அரசர்கள் அலங்கரித்து வந்திருந்தபோதிலும், ஆல்ஃபிரடு ஒருவரே மகா ஆல்ஃபிரடு என்ற புகழ்ப் பெயருக்கு உரியவராகின்றார்.

இவருடைய வரலாறு டேனியர் படையெடுப்புகளின் பின்னணியிலே தொடங்குகின்ற தாகையால் வைக்கிங்குகள் (Vikings) என்றழைக்கப்பட்ட டேனியர்களைப்பற்றி அறிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

டேனியர்களின் தாக்குதல்

கி.பி. 787-ல் 'வைக்கிங்குகள் என அழைக்கப்பட்ட டேனிஸ் கடலோடிகள் ஸ்காண்டிநேவியப் பகுதிகளில் இருந்து செல்வம் நிரம்பிய கிருத்துவ மடங்களைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் இங்கிலாந்தின்மீது படையெடுத்தனர். ஆரம்பத்தில் கொலை, கொள்ளைகள் நடத்தி நாடு திரும்பிக்கொண்டிருந்த டேனியர்கள்

கி. பி. 851-ல் இங்கிலாந்தின் பகுதிகளைத் தாக்கிக் கைப்பற்றுவதில் முனைந்தனர். மெர்சியா, நார்த்தம்பிரியா அரசுகளும் இவர்களால் ஒடுக்கப்பட்டுவிட்டன. தனித்து நின்று போராட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் வெஸ்ஸெக்ஸ் இருந்துவர, கி.பி. 871-ல் ஆல்ஃபிரட் பட்டத்திற்கு வந்தார்.

ஆல்ஃபிரட்

எதல்வுல்ஃப் (Etholwolfe) என்ற வெஸ்ஸெக்ஸ் அரசனின் இளைய புதல்வரே ஆல்ஃபிரட். டேனியர்களின் தாக்குதலால் ஏற்பட்ட கைகலப்பில் தம் சகோதரர்கள் கொல்லப்படவே ஆல்ஃபிரட் பட்டத்திற்கு வந்தார். டேனியர்களின் தாக்குதல்களிலிருந்து நாட்டைக் காக்க வேண்டுமென்பதே ஆல்ஃபிரட்டின் முக்கிய நோக்கமாக இருந்துவந்தது.

ஆல்ஃபிரடின் தேசியப் போராட்டம்

கி. பி. 871-ல் வெஸ்ஸெக்ஸ் டேனியர்களின் படையெடுப்புக்குள்ளானது. அவ் வாண்டு மே மாதத்திற்குள் ஒன்பது கடும் சண்டைகள் நடந்தன. ஆஷ்டவுன் (Ashdown) என்ற இடத்தில் ஆங்கிலப்படைகள் (வெஸ்ஸெக்ஸ்) வெற்றி கொண்டபோதும் மொத்தத்தில் டேனியர்களின் கையே ஓங்கியது. கடல் ஆதிக்கம் பெற்றிருந்த டேனியர்கள் தேம்ஸ் ஆற்றின் வழியாக வீரர்களையும் போர்ச்சாதனங்களையும் கொணர்ந்து கடும்போர் செய்ய ஆங்கிலேயர்கள் ஹாம்ஷயர், ஸாலிஸ்பரி வெளிகளுக்குப் பின்வாங்கினர். நிலைமை மேலும் சீர்குலையாமல் இருக்க டேனியர்களுக்குப் பெருஞ் செல்வம் கொடுத்து ஆல்ஃபிரட் கி. பி. 876-ல் உடன்படிக்கை செய்துகொண்டார். விலை கொடுத்து வாங்கிய சமாதானம் எத்தனைக் காலம் நிலைத்திருக்கும்? எந்த ஒப்பந்தத்திற்கும் கட்டுப்பட மறுத்த டேனியர்கள் மீண்டும் வெஸ்ஸெக்ஸின் உட்புகுந்து தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர். எதிர்த்து நிற்க இயலாத ஆல்ஃபிரட் ஒரு சில வீரர்களோடு சாமர்ஸெட் சதுப்பு நிலங்களை நோக்கிப் பின்வாங்கினர். அதெல்னி (Athelney) என்ற ஓர் ஒதுக்குப்புறமான கிராமத்திலிருந்து தமது நாட்டை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டார். மூன்று மாத கடுமையான முயற்சிக்குப் பின்னர் டேனியர்களை ஏத்தன்டூன் (Ethandune) என்ற இடத்தில் முரியடித்தார். தோற்கடிக்கப்பட்ட கத்ரம் (Guthram) என்ற டேனியத் தலைவன் கி. பி. 878-ல் வெட்மோர் உடன்படிக்கைக்கு (Treaty of Wedmore) ஒப்புக்கொண்டான். இச் சமாதானத்தின் கீழ், டேனியர்கள் வடகிழக்குப் பகுதிகளைமட்டும் வைத்துக்கொண்டு வெஸ்ஸெக்ஸை விட்டு வெளியேற ஒப்புக்

கொண்டனர். இலண்டனுக்கும் செஸ்டருக்கும் இடையே இருந்த சாலை ஆல்ஃபிரட் பகுதிக்கும் டேனிஷ் பகுதிக்கும் எல்லையாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த உடன்பாடும் நிரந்தர அமைதியை ஏற்படுத்தியது எனச் சொல்லமுடியாது. கிருத்துவனுக மாறியும் குத்ரம் தன் வைக்கிங்குப் பண்புகளை மறக்கவில்லை. வெஸ்ஸெக்ஸை மீண்டும் தாக்கச் சதிசெய்து கொண்டே வந்ததால் கி.பி. 886-ல் மீண்டும் போர் மூண்டது. இதிலும் வெற்றி கண்ட ஆல்ஃபிரட் அடுத்துச் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் கீழ், டேனியர்களின் ஆட்சி எல்லையை வெட்லிங் சாலைக்கு விரட்டினார். இவர் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்தே டேனியர்களோடு போராடுவதிலேயே தம் காலத்தைக் கழிக்க வேண்டியிருந்தது. டேனியர்களின் போர்வெறியை நன்கு அறிந்திருந்த ஆங்கிலர்கள் மீண்டும் வெஸ்ஸெக்ஸ் (Wessex) மீது தாக்குதல் ஏற்பட்டால் சமாளிக்கும்பொருட்டு முன்னெச்சரிக்கையுடன் சில காரியங்களைச் செய்து முடித்தார்; தம் இராணுவத்தைச் சீர்படுத்திப் போருக்கு ஆயத்தமாக்கினார்; தாக்குதல் எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலே மண் கோட்டைகளைக் கட்டி வீரர்களை நிறுத்தினர். அவ் வீரர்களுக்கு அருகிலிருந்த பகுதிகளிலே நிலங்களை வழங்கிப் பிரதி பலனுகப் போர்ச் சேவை செய்ய ஊக்கினர். டேனியர்களால் கடல் மார்க்கமாக ஏற்படும் தாக்குதல்களை எதிர்க்க, கப்பற்படையின் அவசியத்தை உணர்ந்த ஆல்ஃபிரட் 'டேன்கெல்டு' (Danegeld) என்ற தனிப்பட்ட வரியை வசூலித்து நீளமும் வேகமும் கொண்ட கப்பல்களைக் கட்டுவித்தார். கி. பி. 896-ல் டேனியர்களின், தரை, கடல் தாக்குதல்களை முரியடித்து ஆல்ஃபிரட் வெற்றி கண்டது அவருடைய முன்னெச்சரிக்கைக்குக் கிடைத்த பரிசு.

ஆல்ஃபிரடின் தொண்டு

டேனியர்கள் இங்கிலாந்து முழுவதையும் கைப்பற்றவிடாமல் தடுத்து, ஆங்கில சாக்சானியர்கள் நாகரிகத்தைக் கைப்பற்றிய வெற்றி வீரராக மட்டுமில்லாமல், ஆல்ஃபிரட் சிறந்த அரசியல் மேதையாகவும் விளங்கினர். 'கடவுளை வழிபடுவதற்கும் பகைவர்களை ஒடுக்கவும் நாட்டின் ஆக்கத் தொழில்களைச் செய்யவும் மக்கள் வேண்டும்' எனக் கூறிய ஆல்ஃபிரட் தம் குடிமக்களுக்குத் தந்தையாகவே விளங்கினர்; விதவைகளுக்கும் அனுதைகளுக்கும் ஆல்ஃபிரட் காப்பாளராக இருந்தார்; மக்களின் குறைகளைப் போக்குவதில் நேரடியான ஆர்வம் காட்டினர். தாமே வழக்குகளை விசாரித்து நல்ல நீதி வழங்கினர். விதிகளை

மீறியவர்களையும் சதித்திட்டங்களில் பங்கு கொண்டவர்களையும் கடுமையாகத் தண்டித்தார்.

தம் ஏழாவது வயதிலேயே ரோம் நகருக்குத் தம் தந்தையுடன் சென்று திரும்பியிருந்த ஆல்ஃபிரட் இங்கிலாந்தின் பின் தங்கிய வாழ்க்கை முறையைக் கவனிக்கத் தவறவில்லை. கான்டர்பரி உள்படப் புதிய கல்விக் கூடங்களை நிறுவினார். 'இங்கிலாந்தில் வாழ்ந்த ஒவ்வொரு சுதந்தர இளைஞனும் கல்வி பயில வேண்டும்' என்ற ஆல்ஃபிரடின் நினைவுக்கேற்பத் தம் அரச அவையிலேயே சாக்சானியப் பிரபுக்களின் பிள்ளைகட்கும் கல்வி புகட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. இவரது தூண்டுதலின் பேரில் மடாலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. விஞ்செஸ்டரில் புதிய தொரு திருச்சபையை நிறுவினார்; குருமார்கள் இலத்தீன் மொழியைக் கற்கவேண்டுமென வலியுறுத்தினார்; இலத்தீன் மொழியிலிருந்த சில நூல்களைத் தாய்மொழியில் மொழிபெயர்க்கச் செய்தார். ஓரோசியஸ் எழுதிய 'உலக வரலாறு' என்ற நூலும் போப்பாண்டவர் 'கிரிகோரியால்' எழுதப்பட்ட 'மக்கள் காப்பு' என்ற நூலும் பொதியலியால் எழுதப்பட்ட 'தத்துவ சரித்திரத்தின் ஆறுதல்கள்' என்ற நூலும் மொழிபெயர்க்கப் பட்டவைகளிலே சில. தம் காலத்து வரையிலான நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'ஆங்கிலோ - சாக்சானியக் கால அட்டவணையைத்' (Anglo-Saxon Chronicle) தயாரிக்கச் செய்தார். இக் குறிப்பு இங்கிலாந்து வரலாற்றுக்கு மூலமாக அமைந்திருப்பதுமட்டுமல்லாமல், ஆங்கில உரைநடையின் அடிப்படையாகவும் அமைந்துவிட்டது. ஆங்கில மொழியைத் தம் மக்கள் கற்றறிய வேண்டுமென ஆல்ஃபிரட் விருப்பப்பட்டார். போரிலேயே தம் கவனம் முழுவதையும் செலுத்தாமல் வேறு துறைகளிலும் உழைத்த பெருமை பெறும் ஆல்ஃபிரட் கென்ட், மெரிசியா வெஸ்ஸெக்ஸ் ஆகிய பகுதிகளிலிருந்த சட்டங்களைத் தொகுத்தமைத்தார்.

சிறப்பு

தம் இருபத்தெட்டு ஆண்டு ஆட்சிக் காலத்தில், பதினைறு ஆண்டுகள் போர்த் தொழிலில் ஈடுபட்டு வெஸ்ஸெக்ஸை டேனியர்களிடமிருந்து காத்து ஆங்கில அரசை மீண்டும் நிறுவிய ஆல்ஃபிரட் ஆங்கிலேயர்களிடம் தாங்கள் ஓர் இனம், தங்களுக்கு ஒரு மொழி என்னும் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டார்.

ஆல்ஃபிரட் பட்டத்திற்கு வந்தபோது தாம் பெற்ற அரசைக் காட்டிலும் நன்கு பலப்படுத்தப்பட்ட ஒரு வல்லரசை ஏற்படுத்தி

விட்டு மறைந்தாராகையால், அவரை இங்கிலாந்தின் ஐக்கியத் திற்குத் தந்தை எனவும் அழைக்கலாம். திருமண உறவினால் வெஸ்ஸெக்ஸையும் மெர்சியாவையும் இணைத்தது மட்டுமின்றி வேல்ஸ் பகுதியையும் தம் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்.

சிறிய உருவத்தில் வலுவான இதயத்தைப் பெற்றிருந்த ஆல்ஃபிரட் தம் நாற்பதாவது வயதில் கி. பி. 899ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் நாள் தம் தலைநகரான இலண்டனிலேயே காலமானார்.

'மேலைச் சாக்சானியரின் அசைக்கொணாக் கற்றூண்' என்ற புகழ்ப் பெயர் பெற்ற ஆல்ஃபிரட் இங்கிலாந்தின் வரலாற்றிலே மறையா இடம் பெறுகிறார்.

2. அந்நியர் படையெடுப்பு

(அ) டேனியர்களின் படையெடுப்பு

போக்கு

டேனியர்களின் படையெடுப்பு இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியேயாயினும், அது அந்நாட்டின் ஒற்றுமைக்கு மறைமுகமாக அமையும் காரணத்தால் முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

கி. பி. 787-ல் முதலாவது டேனியத் தாக்குதல் இங்கிலாந்தின்மீது நடைபெற்றதென்பதையும், கி.பி. 851-ல் மொர்சியா, நார்த்தம்பிரியா போன்ற அரசுகளை அவர்கள் கைப்பற்றினார்கள் என்பதையும், மகா ஆல்ஃபிரட் காலத்தில் அவர்களின் கொட்டம் ஓரளவு அடக்கப்பட்டதையும் நாம் அறிவோம்.

மகா ஆல்ஃபிரட்டின் மகனான மூத்த எட்வர்டு (கி.பி. 900–924) காலத்தில் இங்கிலாந்திலிருந்த டேனியர்களின் பகுதிகள் கைப்பற்றப்பட்டன என்பதை நாம் நினைவுகூரவேண்டும். கொலை, கொள்ளை போன்ற வழக்கங்களை விட்டுவிட்டு விவசாயம், வியாபாரம் போன்றவைகளில் டேனியர்கள் ஈடுபட ஆரம்பித்தது குறிப்பிடத் தக்கது.

வெஸ்ஸெக்ஸின் அரசனான ஏத்தல்ஸ்டன் (Athelstan : கி.பி. 925 – 940) காலத்தில் ஸ்காட்லாந்து, அயர்லாந்து பகுதிகளிலிருந்த டேனியர்களும் ஒடுக்கப்பட்டனர். கி.பி. 955 எட்ரெட் (Edred) காலத்தில் இங்கிலாந்து முழுவதுமே வெஸ்ஸெக்ஸின் ஆட்சியின்கீழ் வந்தது. மகா ஆல்ஃபிரட்டின் முன்னோர்கள் வெஸ்ஸெக்சுக்கு (Wessex) மட்டுமே அரசர்களாக இருந்து வந்தனர்; அவருடைய வழித்தோன்றல்களோ இங்கிலாந்து முழுவதற்கும் அரசர்களாயினர். வெஸ்ஸெக்ஸ் தலைமையில் இங்கிலாந்து ஒருமைப்பாடு அடைந்தது எனச் சொன்னால் அது மிகையாகாது.

இங்கிலாந்தில் சாக்சானியர்களின் எதிர்ப்பு ஆதிக்கம் அதிக காலம் நீடிக்கவில்லை. கி.பி. 978-ல் ஏதல்ரெடு (Ethelred) என்பவர் மன்னரானார். ஒன்றிற்கும் உதவாத இம் மன்னரின் காலத்தில் மறுபடியும் டேனியர் படையெடுப்புத் தோன்றியது. வைக்கிங்குகள் என்றழைக்கப்பட்ட டேனியர்களின் படையெடுப்புகள் மூன்று நிலையில் நடைபெற்றன. கொள்ளையடிக்க வேண்டுமென்ற எண்ணமே முதலாவது படையெடுப்புக்குக் காரணமானது. ஆங்கிலேயர்களை ஒடுக்கவேண்டும் என்பது இரண்டாவது படையெடுப்புக்கும், இங்கிலாந்தைக் கைப்பற்றி ஆளவேண்டு மென்ற ஆசை மூன்றுவது படையெடுப்புக்கும் காரணங்களாயின.

கரையோரப் பகுதிகளைத் தாக்கி ஆக்ரமித்து நதிகள் மூலமாக டேனியர்கள் உள்நாட்டில் நுழைய ஆரம்பித்தனர். ஆக்ஸ்ஃபோர்டுவரை டேனியர்களின் நீளமான படகுகளை ஊடுருவி விட்டனர். கோர்டர்பரி, எக்ஸ்டர் போன்ற இடங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. முரட்டுத்தனமான டேனியர்களின் கடுமையான தாக்குதல்களைச் சமாளிக்க முடியாதவராக அரசர் ஏதல்ரெடு (Ethelred) இருந்தார். டேனியர்களின் தாக்குதல்களிலிருந்து தம் நாட்டைக் காத்தே தீரவேண்டுமென அவசியம் நேர்ந்தபோது, தம் மக்கள்மீது டேன் வரியை (danegeld) விதித்து அதனால் வசூலான கணிசமான தொகையை டேனியர்களுக்குக் கொடுத்து நாடு திரும்பச் செய்துவந்தார். இவர் காலத்தில் டேன்வரி ஆறுமுறை விதிக்கப்பட்டு அதனால் வசூலிக்கப்பட்ட 15,800 வெள்ளி பாண்டுகள் டேனியர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்றால் வைக்கிங்குகளின் தீவிரத்தையும் ஆங்கிலேயர்களின் பலவீனத்தையும் நாம் அறியலாம். இலஞ்சம் கொடுத்து வாங்கப்படும் சமாதானம் என்றைக்கும் நிலைக்குமா? பொருளாசை கொண்டிருந்த டேனியர்கள் மேலும் மேலும் தாக்கிக் கொண்டே இருந்தனர். இலண்டன் போன்ற நகரங்கள் டேனிஷ் தாக்குதலை எதிர்த்து நின்றபோதிலும், இங்கிலாந்து முழுவதும் பீதி பரவ ஆரம்பித்தது. தொடர்ந்து நடந்து வந்த டேனியர்களின் தாக்குதலினால் ஆத்திரமுற்ற ஏதல்ரெடு கி. பி. 1012-ல் வெஸ்ஸெக்ஸில் குடியிருந்த டேனியர்களைக் கொலை செய்யும்படி ஆணை பிறப்பித்தார். கொலையுண்ட டேனியர்களில் டென்மார்க்கு அரசனான சுவையின் ஃபோர்க் பேர்டின் (Sweyn Fork-Beard) சகோதரியும் ஒருவர். கொதிப்படைந்த டேனியர்களின் அரசன் கி.பி. 1013-ல் தன் மகன் கான்யூட்டுடன் (Canute) பெரும்படை கொண்டு இங்கிலாந்தின்மீது படையெடுத்தான். அரசர் ஏதல்ரெடு எதிர்க்கத் திறனில்லாமல் நார்மாண்டிக்கு

(Normandy) ஓடிவிட்டார். வடக்கு இங்கிலாந்து முழுவதும் டேனியர்களுக்குப் பணிந்தது.

சுவையின் (Sweyn) கி.பி. 1014-ல் இறக்க, டேனியர்களோடு பலப்பரிட்சை நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் நாடு திரும்பிய ஏதெல்ரெடு அம் முயற்சியில் வெற்றி பெறுதவராக 1016-ல் காலமானார். இழந்த ஆதிக்கத்தை ஆங்கிலேயர்கள் பெறவிடாமல் தடுப்பது சுவையினின் மகனான கான்யூட்டுக்குக் கடமையாகியது. வைக்கிங்குகளிற் சிறந்த வீரர்களைத் திரட்டிப் பலமுள்ள படையை நிறுவியிருந்த கான்யூட், எஞ்சியிருந்த பகுதிகளை வெல்ல ஆரம்பித்தார். ஏதெல்ரெடின் மகனான எட்மண்டு (அய்ரன் சைடு) (Edmund Ironside) வீரத்துடன் போரைத் தொடர்ந்து நடத்தியும், டேனியர்களை விரட்ட முடியவில்லை. இருப்பினும், எட்மண்டின் திறமையை உணர்ந்த கான்யூட் ஓர் உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டார். அதன்படி, எட்மண்டு வெஸ்ஸெக்சையும், மெர்சியாவில் ஒரு பகுதியையும் தாம் வைத்துக் கொள்ளவும் கான்யூட் டேன்யாவையும் வட இங்கிலாந்தையும் தம் ஆளுகைக்குள் வைத்துக்கொள்ளும்படியாகவும் ஓர் உடன்படிக்கை ஏற்பாடாகியது. துரதிர்ஷ்டவசமாகக் கி.பி. 1016-ல் எட்மண்ட் கொலையுண்டார். அதன் பின்னர், சாக்சானியர்களின் உவிட்டன்-சபை (Witan) வேறு வழியின்றிக் கான்யூட்டை இங்கிலாந்து முழுமைக்கும் மன்னராகத் தேர்ந்தெடுத்தது. இங்ஙனம் இங்கிலாந்தில் உருவான டேனியர் ஆட்சியில் மூவர் ஆண்டனர்.

கான்யூட் (Canute) 1016 – 1035

ஹாரல்டு (Harold) 1035 – 1040

ஹார்டி கான்யூட் (Hardi Canute) 1040 – 1042

கான்யூட்

இங்கிலாந்தின் மன்னராக ஏற்றுக்கொள்ளப்பட்ட கான்யூட் என்ற டேனிய மன்னர் ஆல்ஃபிரடுக்கு அடுத்த சிறப்பைப் பெறுகிறார். தொடக்கத்தில் கொலைகளுக்கும் போர்களுக்கும் காரணராயிருந்த அரசர் கான்யூட் வெல்லப்பட்ட (காலம் சென்ற) ஏதல்ரெடின் மனைவியான எம்மாவை (Emma) இரண்டாம் தாரமாக மணந்துகொண்டு இங்கிலாந்தில் தம் பிடிப்பைப் பலப்படுத்திக்கொண்டார். தாம் டேனியர்களின் குடியைச் சார்ந்தவராக இருந்தும், சாக்சானியர்களின் சட்டங்களையும், அரசு முறைகளையும் பழக்க வழக்கங்களையும் கான்யூட் பின்பற்றியது போற்றத் தக்கது.

டேனிஷ் வீரர்களையும் சாக்சானிய வீரர்களையும் இணைத்துத் தமக்கு அவுஸ்கார்ல்ஸ் (house carls) என அழைக்கப்பட்ட மெய்க் காப்பாளர் படையை ஏற்படுத்திக்கொண்டது கான்யூட்டின் அரச தந்திரத்திற்கு இன்னோர் எடுத்துக்காட்டு.

கான்யூட்டை 'இலண்டனின் தலைவர்' என டேனியர்கள் அழைத்தபோதிலும் அவர் தம்முடைய கவனத்தைத் தம் சொந்தப் பகுதிகளான டென்மார்க், நார்வேயின்மீதே வைத் திருந்தார். தமது நிலையை அங்குச் சீர்படுத்திக்கொள்ள ஆங்கில வீரர்களைப் பயன்படுத்தி அடிக்கடி போர் செய்யவேண்டிய நிலைமையிருந்ததால் இங்கிலாந்தை நான்கு எர்ல் ஜமீன்களாகப் பிரித்து நம்பிக்கை வாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். நான்கில் ஒன்றை வெஸ்ஸெக்சுக்கு காட்வின் (Godwin) என்ற ஆங்கிலப் பிரபுவை எர்ல்லாக ஆக்கியிருந்தது கான்யூட்டின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

கான்யூட் ஓர் எதேச்சாதிகாரம் பெற்ற மன்னராகவே ஆண்டாரென்றால் அதில் வியப்படைய ஒன்றுமில்லை. ஆங்கில மக்களுடைய கருத்துகளைக் கண்டறிய கான்யூட் விரும்பியிருத் திருப்பினும், தமக்கு மகுடத்தை அளித்த சாக்சானியர்களின் எச்சமாக இருந்துவந்த உவிட்டன் என்ற ஆலோசனை சபையை அவர் கூட்டவே இல்லை. சாக்சானியர்களின் நீதி மன்றங்களாக இருந்த 'ஹண்ட்ரடு' (Hundred) மன்றங்களின் அதிகாரங்கள் தம்மைக் கட்டுப்படுத்தாத வகையில் உரிமைகளை அனுபவித்தார். பாதுகாப்புக்கு எதிரான நடவடிக்கைகள், கொள்ளை, வீடுகளை அத்துமீறித் தாக்குதல், படைகளிலிருந்து ஓடிவிடுதல் போன்ற குற்றங்களைத் தாமே விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் தனி அதிகாரங் களையும் அனுபவித்தார். சர்வாதிகாரியாக விளங்கிய கான்யூட் 'மக்களது நன்மைக்காக உழைப்பதைத் தாம் எப்பொழுதும் கைவிடுவதில்லை' எனச் சொல்லிக்கொண்டார். பல நல்ல சட்டங்களையும் அரசியல் வசதிகளையும் ஏற்படுத்திய கான்யூட் தம் சொல்லுக்கேற்ப நடந்துகொண்டார்.

வைக்கிங்குகளின் குணாதிசயங்களை மறக்காத கான்யூட் கிருத்துவ மதத்தை மேற்கொண்டிருந்தார். தமது ஆட்சி இங்கிலாந்தில் வெற்றிபெற வேண்டுமாயின் திருச்சபையின் ஆதரவு தமக்கு எப்போதும் தேவை என்பதை உணர்ந்த கான்யூட் மடாலயங்களைப் புதுப்பித்தார். ஆஷிங்டனில் (Ashington) கோயில் கட்டுவித்தார். செயின்ட் எட்மண்டு கோயிலை மீண்டும் நிறுவினார். அருமையான ஆங்கிலக் கையெழுத்துப் பிரதிகள் அவருடைய ஊக்கத்தால் அயல்நாட்டுத் திருக்கோயில்களுக்கு

அனுப்பப்பட்டன. திருச்சபை அதிகாரிகளைத் தம்முடைய ஆட்சியில் வேலையில் அமர்த்தினர். திருச்சபையின் குருமார்களும் பிஷப்புகளும் நீதிமன்றங்களிலே பணியாற்ற அமர்த்தப்பட்டனர். ரோம் உள்பட புனிதத் தலங்களுக்குக் கான்யூட் சென்றுவந்து, தாம் உண்மையான கிருத்துவர் என மற்றவர்கள் மதிக்கும்படி நடந்துகொண்டார்.

இவரது காலத்தில் ஆங்கிலேயர்கள் வடகடல்-பால்டிக்கடல் மார்க்கமாக ஐரோப்பாவுடன் வாணிகத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதிலிருந்து, அரசன் கான்யூட்டின் செல்வாக்கு அப் பகுதிகளில் பரவி யிருந்ததை அறிய முடிகிறது. இங்கிலாந்து ஏற்றுமதி செய்த பொருள்களுக்குப் பிற நாடுகளில் குறைந்த காப்பு வரி விதிக்க ஏற்பாடு செய்ததிலிருந்து, கான்யூட்டுக்கு ஆங்கிலேயர்களின் வியாபார விருத்தியிலே இருந்த அக்கறை புலனாகிறது.

கான்யூட்டின் சிறப்பு

கான்யூட் ஒரு விந்தையான மனிதர். டேனியர்களை எதிர்க்க ஆல்ஃபிரட் காலத்தில் வசூலிக்கப்பட்ட டேன்கெல்டு வரியை டேனியரான இவரும் வசூலித்தது விந்தையன்றே? மகா கவி ஷேக்ஸ்பியர் (Shakespeare) உள்படப் பலர் இவரைப்பற்றிக் கதைகளை உருவாக்கியுள்ளனர். நாட்டு மக்களின் நன்மையைக் குறித்து அக்கறை காட்டிய கான்யூட் தம் படை பலத்தையே முக்கியமாக நம்பி இருந்தார். தம்மைச் சுற்றி எப்போதும் ஆயுதந் தாங்கிய வீரர்களைப் பாதுகாப்புக்காக அமர்த்திக் கொண்டிருந்தபோதும், அவர்களால் கான்யூட்டைக் காலதேவனிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை. கி.பி. 1035-ல் நவம்பர் மாதத்தில் காலமான கான்யூட்டின் சடலம் மற்ற ஆங்கில அரசர்களின் (ஆல்ஃபிரட் உள்பட) சடலங்களுடன் வின்செஸ்டரில் அடக்கம் செய்யப் பெற்றது. டேனியக் குடியில் பிறந்த கான்யூட் ஆங்கில மண்ணில் அடக்கமானார்.

கான்யூட்டின் வழித்தோன்றல்கள்

கான்யூட் காலமானதைத் தொடர்ந்து அவருடைய இரண்டாவது மகனை ஹாரல்டு எர்ஃபூட் (Harold Harefoot) இங்கிலாந்துக்கு அரசனாகவும், அவன் தமையன் ஹார்டி கான்யூட் டென்மார்க்குக்கு அரசனாகவும் பட்டமேறினார்கள். பெரிய நிகழ்ச்சிகள் எதுவுமின்றி ஹாரல்டின் ஆட்சிக்காலம் ஊர்ந்து சென்றது. கி.பி. 1040-ல் ஹார்த்தா கான்யூட் இங்கிலாந்து மீது படையெடுக்கத் திட்டமிட்டார். அதற்குள் ஹாரல்டு இறந்துவிடவே ஹார்டி கான்யூட் (Hardi Canute) கொடுங்

குணங்களுக்கு இருப்பிடமாக இருந்தார். எதிர்ப்பும் குழப்பங்களும், தகராறுகளும் இவரின் காலத்தில் அடுத்தடுத்து ஏற்பட்டன.

எந்த ஓர் ஆற்றிலே, அதாவது தேம்ஸ் நதியிலே, தம் சகோதரன் ஹாரல்டின் சடலத்தை வீசி எறிந்தாரோ அதே ஆற்றங்கரையில் லேம்பத் (Lambeth) என்னுமிடத்தில், கி.பி. 1042-ல் திருமண விருந்தொன்றில் குடித்துக்கொண்டிருந்தபோது ஹார்டி கான்யூட் காலமானார்.

இவ்வாறு இங்கிலாந்தில் டேனியர்களின் ஆட்சி சிறப்புகளற்று முடிவுற்றது. ஆனால், இங்கிலாந்தின் தொல்லைகள் முடியவில்லை. தொடர்ந்து நேர்ந்த நிகழ்ச்சிகளும், பூசல்களும் இங்கிலாந்துக்கு இன்னொரு படையெடுப்பைத் தேடிக் கொடுத்தது. அதை அடுத்துக் காண்போம்.

டேனியர்களின் ஆதிக்கத்தால் எங்ஙனம் இங்கிலாந்து பாதிக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொண்ட நாம் அதனால் ஏற்பட்ட விளைவுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

விளைவுகள்

டேனியர்களின் படையெடுப்பு இங்கிலாந்தின் ஒருமைப்பாட்டிற்கு உதவியதாக உள்ளது. நார்த்தம்பரியா, மெர்சியா போன்ற பகுதிகள் இவர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன. மூத்த எட்வர்டு (கி.பி. 900 - 924) என்ற வெஸ்ஸெக்ஸ் (Wessex) அரசன் காலத்தில் டேனின் பகுதிகள் கைப்பற்றப்பட, இங்கிலாந்து முழுவதும் ஓர் ஆட்சியின் கீழ்வந்துவிட்டது.

பின்னர்க் குறிப்பாகக் கான்யூட் காலத்தில் பால்டிக் நாடுகளுடன் ஆங்கிலேயர்கள் வியாபாரம் செய்வதற்கேற்பச் சூழ்நிலைகளை இங்கிலாந்து பெற்றதும் இரண்டாவது முக்கிய விளைவாகும். டேனியர்களின் ஆதிக்கம் இங்கிலாந்தில் அஸ்தமித்ததென்றாலும், அதன் சாயல் ஆங்கிலேயரின் வரலாற்றிலும், மொழியிலும் இனத்திலும் கலந்துவிட்டது. இன்றும் இங்கிலாந்தின் கிழக்குப் பகுதிகளிலே டேனிஷ் பெயர்கள் நிலைத்து நிற்கின்றன. லேக் மாவட்டத்தில் மலையும், ஏரியும் டேனிஷ் பெயர்களிலேயே அழைக்கப்படுகின்றன.

இறுதியாக டேனியர்களின் 'வேபென்டேக்ஸ்' என்ற நில நிர்வாக முறை இங்கிலாந்தில் வழக்கத்திற்கு வந்தது. இங்ஙனம் ஒரு சில விளைவுகள் டேனியர்களின் படையெடுப்பினால் ஏற்பட்

டிருப்பினும் சாக்சானியரின் நாகரிகம் பாதிக்கப்படவில்லை. மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட ஆங்கில - சாக்சானியர் படையெடுப்பு ரோமானியரின் நாகரிகத்தை அறவே மறைத்ததுபோல் டேனியர்களின் படையெடுப்பால் சாக்சானியர்களின் நாகரிகத்தை அழிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து வரப்போகும் நார்மானியப் படை யெடுப்பாலேயே அது முடிந்தது.

(ஆ) நார்மானியர்களின் (Normans) படையெடுப்பு

கான்யூட்டின் பிள்ளைகளின் காலத்திற்குப் பிறகு இங்கிலாந் தில் டேனியர்களின் ஆட்சி முடிவுற்றது என்பதை நாம் சென்ற அத்தியாயத்தில் கண்டோம்.

படையெடுப்பிற்கான காரணங்கள்

கி.பி. 1042-ல் ஏதல்ரெடின் கடைசி மகனை எட்வர்ட் (கன்பெசர்) உவிட்டன் சபையால் இங்கிலாந்தின் அரசராக அறி விக்கப்பட்டார். இவ் வரசர் ஃபிரான்சு நாட்டிலிருந்த நார்மண்டி யில் அதிக காலம் தங்கியிருந்ததால், இங்கிலாந்தின் அரசியல் முறை அவருக்குப் பிடிக்காமலிருந்தது. மதத்தில் அதிகப் பற்றுக் கொண்டிருந்த இவ் வரசரால் ஆட்சியில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. ஆட்சிப் பொறுப்புகளை நம்பிக்கைக்குப் பாத்திர மான பிரபுக்களிடம் ஒப்புவித்திருந்தார். அவர்களில் காட்வின் என்பவரும் ஒருவர். அரசரின் ஆட்சிக்குப் பேருதவியாக இருந்த காட்வினுக்கு (Godwin), ஹாரல்டு (Harold) என்ற மகன் இருந் தான். தந்தையும், மகனும் நாட்டின் பெரும் பகுதி நிலங்களுக்கு உரியவர்களாக இருந்தது மட்டுமன்றி ஆட்சிக்கும் பொறுப் பாளிகளாக இருந்தார்கள்.

கி.பி. 1050-ல் அரசருடன் ஏற்பட்ட மனவேறுபாடுகள் காரணமாக இருவருமே நாடு கடத்தப்பட்டனர். அத் தரு ணத்தில் நார்மண்டியில் இருந்த எட்வர்டின் உறவினரான டியுக் வில்லியம் இங்கிலாந்துக்கு வந்து அரசர் எட்வர்டைச் சந்தித்தார். வில்லியத்தை இங்கிலாந்தின் அரசுரிமைக்கு வாரிசாக ஆக்க எட்வர்டு வாக்களித்தார். இதுவே கி.பி. 1066-ல் நார்மானியர் களின் படையெடுப்புக்குக் காரணமாகப் போகிறது. கி.பி. 1052-ல் காட்வினும், ஹாரல்டும் இங்கிலாந்து திரும்பினர். தந்தைக்கும், மகனுக்கும் அதிகாரங்கள் திருப்பிக் கொடுக்கப்

பட்டன. காட்வின் காலமானதும் ஹாரல்டு மன்னருடைய ஆதரவைப் பெற்று அவருடைய அறிவுரையாளராக அமர்ந்தார். தொடர்ந்து, வெஸ்ஸெக்சுக்கு 'ஏர்ல்' (Earl) ஆகவும், ஆக்கப் பட்டார். ஸீசர் எட்வர்டுக்கு வயது அதிகமாக, ஆட்சிப் பொறுப்புகள் அத்தனையும் ஹாரல்டுக்குக் கிடைத்தது. கி.பி. 1065-ல் அரசன் எட்வர்டு (அதிபக்தர்) காலமானதும், உவிட்டன் சபை ஹாரல்டை (Harold) இங்கிலாந்துக்கு அரசராக்கியது. அடுத்த ஓர் ஆண்டுக் காலத்திற்குள் (கி. பி. 1066-ல்) இங்கிலாந்தின்மீது நார்மானியப் படையெடுப்பு நேர்ந்தது.

நார்மானியர்கள் யார்? டியூக் வில்லியத்தின் தலைமையில் ஏன் அவர்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்தார்களென்ற விவரங்களை அடுத்துக் காண்போம்.

இங்கிலாந்தின்மீது டேனியர்களின் படையெடுப்புகள் நேர்ந்த அக் காலத்தில் (கி.பி. 8ஆம் நூற்றாண்டு) அவ் வினத்தினரின் மற்றொரு பிரிவினர் ஃபிரான்சு நாட்டின் கரையோரப் பகுதிகளைத் தாக்கி, கைப்பற்றி, நிரந்தரக் குடியை அமைத்தார்கள். அப் பகுதியே நார்மண்டி எனப்பட்டது. நாளாவட்டத்தில் தங் களின் பூர்வ குணாதிசயங்களை மறந்து, சிறந்த நாகரிகமடைந்த மக்களாக மாறினர். அவர்களே நார்மானியர்களெனப் பின்னர் அழைக்கப்பட்டனர். சிறந்த வீரர்களாகவும், அரசியல் நுணுக் கம் தெரிந்தவர்களாகவும், கலைகளிலே தேர்ச்சி பெற்றவர்க ளாகவும் விளங்கிய நார்மானியர்கள் ஃபிரான்சை ஆண்ட அரசர் களோடு உடன்பாடு செய்துகொண்டு, நார்மண்டியிலே சுய அதிகாரம் பெற்றிருந்தனர்.

கோட்டைகளை எழுப்பும் முறையிலும், குதிரைமீதமர்ந்து சண்டைசெய்யும் வழக்கத்திலும், நிலமானியத் திட்டத்தை அமுலாக்கியதிலும் புதுமை புகுத்தியவர்களாக இருந்த நார்மா னியர்களுக்குக் கி.பி. 1064-ல் டியூக் வில்லியம் (Duke William) தலைவராக இருந்தார். அப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த எட்வர்டு (அதிபக்தர்)க்கு டியூக் வில்லியம் உறவினர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். (வில்லியத்தின் பாட்டனாரின் இரண்டாம் ரிச்சர்டின் சகோதரி எம்மா, இங்கிலாந்தின் அப் போதைய அரசரான எட்வர்டுக்கு அன்னை) எட்வர்டு காலமான தும் இங்கிலாந்தின் அரியணையைக் கைப்பற்றவேண்டுமென்ற அவா வில்லியத்திற்கு இருந்துவந்தது. ஏற்கெனவே வில்லியத் தைத் தமது அடுத்த வாரிசாக எட்வர்டு ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதைச் சற்று முன்னர்க் கண்டோம். எட்வர்டு காலமானதைத்

தொடர்ந்து உவிட்டன் சபையால் இங்கிலாந்தின் அரசனாக அறிவிக்கப்பட்ட ஹாரல்டு, ஒரு சமயம் (கி.பி. 1064-ல்) ஆங்கிலக் கால்வாயிலே வீசிய சுழல் காற்றினால் திசை தவறி, நார்மண்டியில் கரை ஏற, கைது செய்யப்பட்டு அக் காலத்திய வழக்கத்தின்படி மீட்புப் பணம் இங்கிலாந்திலிருந்து வரும்வரை காவலில் வைக்கப்பட்டிருந்தான். அப்போது, டியூக் வில்லியத்தை இங்கிலாந்தின் அரசராக்கத் தான் உதவுவதாக ஹாரல்டு அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தான்.

ஆயின், அரசர் எட்வர்டு இறந்த மறுநாளே ஹாரல்டு இங்கிலாந்தின் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இது வில்லியத்துக்குக் கோபத்தையும், ஏமாற்றத்தையும் உண்டாக்கியது.

அதனுடைய விளைவாக நார்மானியப் படையெடுப்பு டியூக் வில்லியத்தின் தலைமையில் தொடங்கியது.

வில்லியம் I (1066 - 1087)

கி.பி. 1066-ல் நேர்ந்த நார்மானியப் படையெடுப்பு ஆங்கிலேய வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சி எனலாம்.

தேவையான ஆயத்தங்களுடன் கி.பி. 1066-ல் போப் பாண்டவரின் ஆசிபெற்று டியூக் வில்லியம் இங்கிலாந்துமீது படையெடுத்தார். அதே ஆண்டில் அக்டோபர் 14ஆம் நாளில் ஹேஸ்டிங்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற சண்டையில் நார்மானியக் குதிரை வீரர்களும், வில்லாளர்களும் ஆங்கிலப்படைகளைத் தோற்கடித்தனர். அம்பினால் தாக்கப்பட்டு ஹாரல்டு கொல்லப்பட்டதும், சாக்சானியர்களின் எதிர்ப்பு முறிவுற்றது, வெற்றி வீரன் வில்லியம்:தேம்ஸ் நதியைக் கடந்து இலண்டனை அடைய, உவிட்டன் அவருக்கு முடியை வழங்கியது - இங்ஙனம் இங்கிலாந்தில் நார்மானியர்களின் ஆட்சி தொடங்கப்பட்டது.

முதல் நார்மானிய அரசராக வில்லியம் முடிசூட்டிக் கொண்டார். இருந்தபோதிலும், ஆரம்பக் காலத்தில் இங்கிலாந்து அவரை அரசராக ஏற்க மறுத்தது. மெர்சியா, நார்த்தம்பிரியா, அகஸ்டர், யார்க், ஸ்காட்லாந்து போன்ற பகுதிகளில் சாக்சானியர்களின் எதிர்ப்பு நீடித்தது. இருப்பினும், அடுத்த 6 ஆண்டுக் காலத்திற்குள் தம் படை வலிமையால் இங்கிலாந்து முழுவதையும் தம் ஆதிக்கத்தின்கீழ் வில்லியம் கொண்டுவரச் செய்தார். வெற்றி கொண்ட இங்கிலாந்தில் தம் ஆட்சி நிலைத்துநிற்க வேண்டுமென்றால் சில காரியங்களை உடனடியாகச் செய்ய

வேண்டிய அவசியத்தை வில்லியம் உணர்ந்திருந்தார். அவை களிலே படைமானியத் திட்டமும் ஒன்றாகும்.

இடைக் காலத்தில், நிலத்தை மையமாக வைத்துத் தோற்று விக்கப்பட்ட முறையே நிலமானிய முறை என்பதாகும். அம் முறையின்கீழ் மன்னர் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதியைப் பல பிரிவுகளாக அல்லது மானியங்களாகப் (fief) பிரித்து அங்ஙனம் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியையும் பிரபுக்களுக்குக் கொடுத் தார். தனக்குக் கொடுக்கப்பட்ட அப் பகுதியினை நிலப்பரப்பு பற் பல சிறு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு சிறு பகுதியையும் உட் குடிகளுக்குக் (villeins) கொடுத்தான். அரசர், பிரபு, உட்குடி ஆகியோருக்கு இடையே இருக்கவேண்டிய உறவு, நிலமானியப் படை முறையினால் நன்கு வரையறுக்கப்பட்டிருந்தது. பிரபுவிட மிருந்து பெற்ற நிலங்களைப் பயிரிடும் பொறுப்பை உள்குடி எங்ஙனம் பெற்றிருந்தானோ, அதே போன்று, அரசரிடமிருந்து நிலங்களைப் பெற்றிருந்த பிரபுவும் ஆபத்துக் காலத்தில் மன்ன ருக்குப் படையுதவி கொடுக்க வேண்டிய கடமையைக் கொண்டிருந்தான்.

இத் திட்டத்தினால் சில நன்மைகள் இருந்துவந்தபோதிலும், ஒரு சில தீங்குகளும் விளைந்தன என்பதை வில்லியம் உணர்ந் திருந்தார். இத் திட்டத்தின் பிணைப்பு ஒப்பந்தம்மூலம் அரச ருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய நிலமானியப் பிரபுக்கள், அரசன் பலமற்றவனாக இருக்குங்கால் அதிக சலுகைகளையும், அதிகாரங்களையும் பெற்று அரசுக்கு எதிராகவும், கலகம் செய்தும் நாட்டை அலங்கோலப்படுத்துவார்க ளென்பதைத் தம் அனு பவத்தில் வில்லியம் தெரிந்து வைத்திருந்தார். அந்த அவல நிலை இங்கிலாந்தில் ஏற்படாத வண்ணம் பல தடுப்பு நடவடிக்கைகளை வில்லியம் மேற்கொண்டதன் சுருக்கத்தைத் தொடர்ந்து காண் போம்.

'வலுவான அரசமைக்க வற்றுத வளம் தேவை' என்ற குறிக் கோளில் தமது வருவாயைப் பெருக்கிக்கொள்ள வில்லியம் முனைந் தார். முதல் நடவடிக்கையாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட வளமுள்ள பண்ணைகளைத் தமக்கென்று வைத்துக்கொண்டு பெய்லிப்புகள் மூலமாக நிர்வகிக்கச் செய்து நிலமானியத்தைத் தவறுமல் வசூல் செய்தார். மற்றப் பிரபுக்களுக்கு இங்கிலாந்தின் பல பகுதிகளில் பண்ணைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. உதா ரணமாக இராபர்ட் என்ற பிரபுவுக்குக் கொடுக்கப்பட்டிருந்த 790 பண்ணைகள் இங்கிலாந்தின் கவுண்டிகளிலே சிதறியிருந்தன.

எந்த ஒரு பிரபுவும் குறுகிய காலத்தில் அதிக பலம் பெற்றுத் தம்மை எதிர்த்துத் நிமிர்த் தாக்குதலைச் செய்யவிடாமல் தடுக்கவே இந்த ஏற்பாடு. ஆனால், தம் நம்பிக்கைக் குகந்த நண்பர்களுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும் ஒரே கவுண்டியில் பண்ணைகள் தரப்பட்டது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தின் பல பகுதிகளில் அரண்களை அமைத்துத் தம் ஆணைக்கு உட்பட்ட வீரர்களைக் கொண்டு காவல் காக்கச் செய்தார்; ஆனால், அரண்களைப் பிரபுக்கள் கட்டிக்கொள்வதைத் தடுத்தார். மேற்கொண்டு வில்லியம் புதிய தொரு செயலுக்கு ஆணையிட்டார். நாட்டில் உள்ள நிலமானியப் பிரபுக்களில் தமது ஆதிக்கத்தை எதிர்க்கக் கூடிய வன்மையுடையவர்கள் எத்தனை பேர், அவர்கள் யார் யார், என்னும் விவரங்களைத் தெரிந்துகொள்ளத் தம் அலுவலாளர்களை நாடெங்கிலும் அனுப்பி, பிரபுக்களைப்பற்றியும், அவர்களின் உடைமையின் மதிப்பைப்பற்றியுமான செய்திகளைச் சேகரிக்கச் செய்தார். அவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்கள் அடங்கிய பெரும் குறிப்புக்கே 'டோம்ஸ்டே புத்தகம்' (Domesday Book) எனப் பெயர். நிலமானியப் பிரபுக்களின் கொட்டத்தை ஒடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த வில்லியம் இன்னொரு காரியத்தையும் செய்தார். மானியத் திட்டத்தின்கீழ்ச் சிறிய, பெரிய நிலக்குத்தகைக்காரர்கள், பிரபுவுக்கு 'விசுவாசத் தொண்டு' செய்யக் கட்டுப்பட்டிருந்தனர்.

கி.பி. 1086-ல் சேலிஸ்பரி என்ற இடத்தில் குத்தகைக் காரர்களை எல்லாம் கூட்டி, தம்மிடம் விசுவாசம் காட்டும்படியான வாக்குறுதியைப் பெற்றார். அது 'சேலிஸ்பரியின் வாக்குறுதி' (Oath of Salisbury) என அழைக்கப்படுகிறது. இறுதியாக, பிரபுக்களின் அதிகாரங்களை மேலும் கட்டுப்படுத்தும் வகையில், சிரீப்புகளுக்குப் புதிய பொறுப்புகள் தரப்பட்டன. இதுவரை பிரபுக்களால் அனுபவிக்கப்பட்டு வந்த சில அதிகாரங்கள் சிரீப்புகளுக்குத் தரப்பட்டுவிட்டன. வழக்கு விசாரணை, இராணுவ சேவைக்கு ஆள் சேர்ப்பது, அரசுக்கு வரியை வசூல் செய்வது போன்ற பணிகள் சிரீப்புகளுக்குக் கொடுக்கப்பட்டன. அரசனின் கரங்களாகவும், காதுகளாகவும் அவர்கள் செயல்பட ஆரம்பித்தனர். கொட்டமடிக்கப் பிரபுக்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது.

இங்ஙனம், பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, பிரபுக்கள் நிலைகெட்டுப்போகவிடாமல் தடுத்து, நார்மானிய ஆட்சியை வில்லியம் பலப்படுத்தினார்.

சமயத்தில் பற்றுக்கொண்டிருந்த வில்லியம் போப்பாண்டவரின் ஆசியுடன் இங்கிலாந்துமீது படையெடுத்திருந்தாரென்பதை நாம் அறிவோம். நாட்டில் அமைதியைக் காக்க எத்தனை அக்கறை காட்டினாரோ அதேபோன்று திருச்சபையில் சில திருத்தங்களைக் கொண்டுவரச் செய்தலிலும் வில்லியம் ஆர்வத்தைக் காட்டினார். லேன்ஃபிரேங் (Lanfranc) என்பவரைக் கான்டர்பரிக்கு ஆர்ச் பிஷப்பாக (Alchibishap of Canterbury) அமர்த்தி, அவரின் மூலமாக மடாலயங்களையும், பிஷப்பாதீனங்களையும் திருத்தி யமைத்தார். சமயப் பள்ளிகளும் மத சம்பந்தப்பட்ட வழக்குகளைத் தீர்த்துவைக்கத் திருச்சபை நீதிமன்றங்களும் (church courts) நிறுவப்பட்டன. கிருத்துவக் குருமார்களைப் பிரமசரியம் உள்படத் தூய வாழ்க்கையை மேற்கொள்ளும்படி, கட்டாயப்படுத்தினார். கான்டர்பரியிலும் பிற இடங்களிலும் இவரால் கட்டுவிக்கப்பட்ட மடாலயங்கள் இன்னும் இவரது பெருமையைப் பறைசாற்றுகின்றன. சமயத்தில் அக்கறை கொண்டும் போப்பாண்டவரின் நட்பைப் பெற்றிருந்த வில்லியம் தமது அரசியல் நிர்வாகத்தில் திருச்சபையின் குறுக்கீடு இல்லாமல் கவனித்துக் கொண்டாரென்பது போற்றத்தக்கது.

இங்கிலாந்தின் நிகழ்ச்சிகள் நிரம்பிய வரலாற்றுக்குக் காரணமாயிருந்த வெற்றி வீரர் முதலாம் வில்லியம் 1087ஆம் ஆண்டில் நார்மான்டியில் விபத்திற்குள்ளாகிக் காலமானார்.

பிறர் போற்றும்படியான சீரிய பண்புகளைக் கொண்டிருந்த வில்லியத்திற்கு ஆங்கிலோ – சாக்சானியக் கால அட்டவணை (Anglo-Saxon Chronicle) புகழ் மாலை சூட்டுகிறது.

வில்லியத்தின் வழித்தோன்றல்கள்

வில்லியம் I (1066 - 1087)



வில்லியம் II (1087-1100)

ரூஃபஸ் (Rufus) என்றழைக்கப்பட்ட வில்லியம் தம் தந்தைக்குப் பின்னர் இங்கிலாந்தின் அரசராக ஏற்றுக்கொள்ளப் பட்டார். தந்நலம் கொண்டிருந்த இவரை எதிர்த்து நார் மானியப் பிரபுக்கள் கலகம் செய்தனர். அந் நிலையில், தம் தந்தையால் வெல்லப்பட்ட சாக்சானியர்களின் உதவியை நாடி, அவர்களின் ஆதரவில் வில்லியம் II கலகக்காரர்களை ஒடுக்கினர். இங்ஙனம், தம் தந்தையால் தோற்றுவிக்கப்பட்ட அரசைப் பாதுகாத்தது மட்டுமன்றி, மேலும் அதை விரிவுபடுத்தவேண்டு மென்ற எண்ணத்தில் வேல்ஸ் பகுதியையும், ஸ்காட்லாந்தின் கம்பர்லாந்தையும் தாக்கினர்.

இருப்பினும், மேற்சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் இவருக்குப் பெருமையைக் கொடுத்தனவாக இல்லை யென்பதை ஆங்கிலோ-சாக்சானியக் குறிப்புமூலம் அறிய முடிகிறது. ஏனெனில், இவர் ஒரு கொடுங்கோலராக இருந்தார். 'மக்களால் வெறுக்கப்பட்டுக் கடவுளால் ஒறுக்கப்பட்ட வில்லியம் II தாம் செய்த குற்றங் களுக்குப் பரிகாரம் தேடும் தகுதிகூட இல்லாமல் கொல்லப் பட்டார்' என்பது ஆங்கிலோ-சாக்சானியக் குறிப்பின் கூற்று.

ஹென்றி I (1100-1135)

தம் அண்ணன் காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்த போது கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பிரபுக்களின் உதவி யால் முதலாம் ஹென்றி மன்னராக முடிசூட்டிக்கொண்டார். தம் சகோதரனின் ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட தவறான ஆட்சி முறைகளைக் கைவிட முன்வந்த ஹென்றி, மக்களுக்குச் 'சுதந்தர சாசனம்' ஒன்று வழங்கினர். அதன்படி, சில சட்டங் களை மாற்றியும், திருச்சபையின் விவகாரங்களில் தலையிடாக் கொள்கையை மேற்கொண்டும் மக்களை மகிழவைத்தார். ஆங்கிலோ-சாக்சானியக் குடியைச் சேர்ந்த ஸ்காட்லாந்தின் இளவரசியை மணந்துகொண்டு நார்மானிய-சாக்சானிய உறவுக் கலப்புக்கு வழி கோலியது, இவருடைய போற்றத்தக்க செயலா லாகும். இரத்த உறவினால் இங்கிலாந்து - ஸ்காட்லாந்தின் உறவும் வலுப்பட்டது.

கலகம் செய்த பிரபுக்களை ஒடுக்கி நார்மண்டியைத் தமது நேரடி நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவந்ததும் இவருடைய மற்றொரு சாதனை.

ஹென்றி I தம் தந்தையாரையும் அண்ணனையும்விட இங்கிலாந்தில் மிகுந்த ஆதிக்கம் செலுத்தினர் என்றால் அது மிகையாகாது. இங்கிலாந்தின் வரலாற்றிலே போற்றத்தக்க அரசர்களிலே ஒருவராகக் கருதப்படும் ஹென்றி I அரசவையிலே இரு மன்றங்களை உருவாக்கினர். பிரபுக்கள் மன்றங்களிலிருந்தும், உயர்நீதி மன்றங்களிலிருந்தும் மேல்முறையீடாக வந்த வழக்குகளை விசாரிக்க மன்னர் மன்றம் (King's Court) ஏற்படுத்தப் பட்டது. இவ் வரசரின் நீதி மனப்பான்மையைக் கண்ட மக்கள் அவரை 'நெறிதவறாத சீயம்' என அழைத்ததில் தவறில்லை. மக்களிடமிருந்து வரி வசூல் செய்யக் 'கருவூலம்' (Exchequer) என்ற இன்னொரு மன்றமும் உருவாக்கப்பட்டது. அதிகமான வரி விதிப்புக்கு மக்கள் ஆளாகியிருந்தும், ஹென்றியின் ஆட்சியை ஆங்கிலேயர்கள் விரும்பினரென்றால், அதற்கு அவர்கள் பெற்ற நல்லாட்சியே காரணம்.

இங்ஙனம், நார்மானிய ஆட்சியை வலுப்படுத்திய ஹென்றி I கி. பி. 1135-ல் காலமானார்.

ஸ்டீபன் (1135 – 1154)

முதலாம் ஹென்றிக்கு வில்லியம் என்ற மகனும், மாடில்டா (Matilda) என்ற மகளும் இருந்தனர். கி.பி. 1120-ல் கப்பல் விபத்தில் சிக்கி மகன் பரிதாப மரணம் அடைந்தான். ஆகவே, ஹென்றி காலமானதும் அங்கிருந்த பிரபுக்களும், பிஷப்புகளும் பெண் பட்டத்திற்கு வருவதை விரும்பாமல், காலஞ்சென்ற ஹென்றியின் சகோதரி அடிலாவின் (Atila) மகனை ஸ்டீபனை அரசனாக்கினர். இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் உள்நாட்டுப் போரும், குழப்பமும் உண்டாயின.

ஃபிரான்சிலுள்ள அஞ்சு (Anjou) என்ற சிறு பகுதியின் தலைவனை டியூக் ஜெஃப்ரியைமணந்து கொண்டிருந்த மாடில்டா, இங்கிலாந்தின் அரசுரிமையைக் கோரி உரிமைக்குரல் எழுப்பினர். ஸ்டீபனிடத்தில் மனக்கசப்பும் வெறுப்பும் கொண்டிருந்த சில பிரபுக்கள் மாடில்டாவை இங்கிலாந்துக்கு வரவழைத்தனர். ஸ்டீபனுக்காகவும் மாடில்டாவுக்காகவும் பிரபுக்கள் தங்களுக்குள் போரை ஆரம்பித்தனர். இந்த உள்நாட்டுப் போரினால் அராஜகம் தலைவிரித்தாடியது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, ஒவ்வொரு பிரபுவும் தமது பலத்தையும், அதிகாரத்தையும் பெருக்கிக்கொண்டனர். தம் அரசைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென ஸ்டீபனும் தம் மகனுக்காவது ஆங்கில வாரிசு

உரிமை கிட்டவேண்டுமென மாடில்டாவும் தங்களின் ஆதர வாளர்களுடன் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். கி.பி. 1152-ல் மாடில்டாவின் மகனான ஹென்றி தன் படைகளுடன் அஞ்ஜூவிலிருந்து வந்து ஸ்டீபனை வற்புறுத்தி வாலிங்போர்டு என்னும் இடத்தில் ஓர் உடன் பாட்டைச் செய்துகொண்டான். அதன்படி, எஞ்சியிருந்த காலம் வரை ஸ்டீபனும், அவருக்குப் பின்னர் ஹென்றியும் ஆளவேண்டு மென ஏற்பாடாகியது.

இங்ஙனம் குழப்பம் மிகுந்த ஓர் இடைக்காலத்திற்கு அரசராக இருந்த ஸ்டீபன் கி.பி. 1154-ல் இறந்துபோனார். இதற்குப் பின்னர் வாலிங்ஃபோர்டு (Treaty of Wallingford) உடன்பாட்டை யொட்டி ஹென்றி இங்கிலாந்தின் மன்னரானார்.

(இ) நார்மானிய அரசர்கள் - திருச்சபை உறவு

பெருவீரர் வில்லியம் கி.பி. 1066ஆம் ஆண்டில் படை யெடுத்தபோது, அப்போதைய போப்பாண்டவர் அலெக்சாந் தரின் II (Alexander II) ஆசிபெற்றே. ஹேஸ்டிங்ஸ் போர்க் களத்தை அடைந்தார். அதில், அவர் பெற்ற வெற்றி எங்ஙனம் நார்மானியர்களின் ஆட்சியை இங்கிலாந்தில் வேரூன்றச் செய்தது என்பதை நாம் முன்னரே கண்டோம்.

முதலாம் வில்லியம்

வெற்றிவீரர் வில்லியம் மதப்பற்றுக் கொண்டவராதலால், திருச்சபையில் சில முக்கியச் சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தார். முதற்கண், கல்வியறிவும், திறம்படச் செயல்படும் தகுதியையும் கொண்டிருந்த லான் பிராங்கு என்பவரைக் காண்டர்பரி திருச் சபையின் தலைமைக் குருவாக அமர்த்தினர்.

மடமையில் மூழ்கியிருந்த சாக்சானியக் குருமார்களை நீக்கி, கல்வி யறிவுபெற்ற நார்மானியர்களை நாட்டிலிருந்த திருக்கோயில் களுக்குப் பிஷப்புக (Bishops) ளாக்கினர். தங்களின் அகமும் புறமும் பரிசுத்தமாக இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, ஆண்டவனின் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் பாதிரிமார்கள் திருமணம் செய்துகொள்வதை வில்லியம் தடைசெய்தார். சமயப் பிரசாரத்தின் கேந்திரங்களாக இருந்த மடாலயங்களைச் (Monastries) சீர்திருத்தி உண்மை, அறநெறி, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளின் உறைவிடமாக அவற்றை வில்லியம் திகழச் செய்தார்.

வில்லியத்தின் மாபெரும் திருச்சபைச் சீர்திருத்தம், அவர் நீதிமன்றங்களைத் திருச்சபை முறை மன்றம் (Church Courts) எனவும், சமயச் சார்பற்ற முறை மன்றம் எனவும் (Lay Courts) பிரித்ததே. இதுவரை (ஷையர்) கோட்டமுறை மன்றங்களில் (Shire Courts) பாதிரியாரும், ஷெரீஃப்பும் (Sheriffs) சேர்ந்தே தலைமை தாங்கி நடத்திவந்தனர். அம் மன்றத்தில், உலகியல், ஆன்மீகத் தொடர்பான எல்லா வழக்குகளும் விசாரிக்கப் பட்டன. ஆயின், கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தினால் திருச்சபைகளிலும் மடங்களிலும் (felony) திருமண வழக்குகள் (celibacy) இறுதி விருப்பப் பத்திரம் (testament) அவதூறு (slander) முதலிய வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் திருச்சபை முறை மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டன. மேலும், செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாகத் தவம் செய்ய வற்புறுத்தும் அதிகாரமும், சமயத்திற்கு எதிராகப் பேசுதல், சமய வேறுபாட்டுணர்வு ஆகியவற்றிற்காகத் தண்டிக்கும் சிறப்பு அதிகாரங்களும் அம் மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டன. உலகியலைச் சார்ந்த மற்றக் குற்றங்களை விசாரிக்கும் அதிகாரம் சமயச் சார்பற்ற முறை மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டன. அங்ஙனம், சமயத் தொடர்பான நீதிமன்றங்களுக்கும், பொது மன்றங்களுக்கும் உள்ள அதிகாரத்தையும் கடமைகளையும் பாகுபடுத்தித் திருச்சபை சட்டதிட்டங்களை வில்லியம் உரிமையோடு உறுதிப்படுத்தினார்.

மேலும், இன்னொரு சீர்திருத்தமாக வில்லியம் புதிய ஏற்பாடொன்றையும் கொண்டுவந்தார். அதன்படி, பாதிரிமார்கள் திருக்கூட்டத்தில் (synod) ஒன்று சேர்ந்து, கலந்தாலோசித்துச் சமயத் தொடர்பான விதிமுறைகளை (ecclesiastical) கொண்டு வர அனுமதிக்கப்பட்டனர்.

திருச்சபை விவகாரங்களில் வில்லியம் மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வந்தாரெனினும், அரசருக்குரிய சிறப்பதிகாரங்களைத் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவருக்கு விட்டுக் கொடுக்க, அவர் இசையவில்லை. கி. பி. 1073-ல் பதவி பெற்றிருந்த போப்பாண்டவர் கிரிகோரி VII (Gregory) தமது மேலாண்மையை (homage) ஏற்கும்படி வில்லியத்தை வற்புறுத்தினார். தனிப்பட்ட முறையில் போப்பாண்டவரின் ஆசியைப் பெறுவதில் வில்லியம் மகிழ்ச்சி பெற்றவராக இருந்தும், திருச்சபைத் தலைவருக்குக் கீழடங்கிப் போக வில்லியம் விரும்பவில்லை. தமக்கு முன் இங்கிலாந்தை ஆண்ட எந்த மன்னரும் போப்பாண்டவர்களின் மேலாண்மையை ஏற்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, வில்லியம் மறுப்பளித்தார். அரசு விவகாரங்களில் பிரபுக்களின்

தலையீட்டை எங்ஙனம் வில்லியம் எதிர்த்துச் செயல்பட்டாரோ, அதேபோன்று தமக்கு உரித்தான சமய அதிகாரங்களில் போப் பாண்டவரின் தலையீட்டையும் வில்லியம் அதிகரிக்க முடிவு கொண்டார். அம் முடிவுக்கு ஏற்ப அரசுமேல் ஆதிக்கத் திருச் சபைச் சட்டத்தை (The Canons of Royal Supremacy) வில்லியம் கொண்டுவந்தார். அதன்படி போப்பாண்டவரின் அதிகாரத்தை இங்கிலாந்தில் வரம்புக்குட்பட்டதாகச் செய்தார். அரசரின் ஒப்புதலின்பேரிலேயே இங்கிலாந்தின் திருச்சபைகள் போப் பாண்டவருக்குக் கட்டுப்பட்டனவாக இருக்கவேண்டுமென்றும், அரசரின் அனுமதியின்றித் திருக்கூட்டம் (synods) நடத்தப்படக் கூடாதென்றும், போப்பின் ஆணைகள் (Papal Bulls) ஏற்கப் படக்கூடாதென்றும், பிரதான மானியதார்கள் (tenants - in chief) மதப் பிரஷ்டம் செய்யக்கூடாதெனவும் வில்லியம், திருச் சபை விவகாரத்தில் தம் செல்வாக்கை நிலைப்படுத்தினர்.

வெற்றிவீரர் வில்லியம் தமது இறுதிக்காலம்வரை தாராள மாக மானியங்கள் வழங்கித் திருச்சபையின் பணியை மேம்பாடு அடையச் செய்தார்.

இரண்டாம் வில்லியம்

வெற்றிவீரரின் மரணத்தை ஒட்டிப் பட்டமெய்திய வில்லியம் ரூஃபஸ், பணப்பித்துடன் முரட்டுச் சுபாவம் கொண்டவராகவும் இருந்தார்; தம்முடைய அரசாங்க வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் காண்டர்பரியின் தலைமைக்குருவான (ஆர்ச்பிஷப்) லான் பிராங்குடன் தகராறு செய்துவந்தார். கி.பி. 1089ஆம் ஆண்டு லான்பிராங்கு காலமானார். மரபின்படி, தகுந்த நபரைக் குருவாக அமர்த்தும்வரையில் அக் குறிப்பிட்ட திருக்கோயிலின் விவகாரங்களை அரசரே கண்காணிக்கலா மென்ற ஒரு வழக்கம் இருந்தது. முடிந்தவரை, காண்டர் பரி திருச்சபையின் வருவாயைப் பெற்று இன்புற நினைத்த அரசர் இரண்டாம் வில்லியம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு (கி.பி. 1089 - 1093) புதியதொரு ஆர்ச்பிஷப்பை அமர்த்தவே இல்லை. கி.பி. 1093-ல் அவ் வரசர் கடுமையான நோயொன்றினால் தாக்கப் பட்டபோது, அவருக்கு இறைப்பற்று ஏற்பட்டது. காண்டர் பரிக்குத் தலைமைக்குருவை நியமிக்கத் தவறியதன் தண்டனை யாகவே தமக்குக் கடும்நோய் கண்டிருக்கிறதென நினைத்து, அதற்குப் பிராயச்சித்தமாக ஆன்சலம் (Anselm) என்பவரைத் தலைமைக் குருவாக அரசர் அமர்த்தினர்.

கல்வி யறிவும், ஒழுக்க சீலமும் கொண்டிருந்த ஆன்சலம் வேண்டா வெறுப்புடனேயே தமக்குக் கொடுக்கப்பட்ட அப் பதவியை ஏற்றிருந்தார். அதற்கிடையே, நோயிலிருந்து மீண்ட இரண்டாம் வில்லியம் தம்மால் பதவியில் அமர்த்தப்பட்ட ஆன்சலமைத் தமது கைப்பொம்மையாக ஆட்டிவைக்க எண்ணம் கொண்டார். உறுதியான உள்ளம் கொண்டிருந்த ஆன்சலம் அரசரின் எடுபிடி ஆளாக இருக்க விரும்பவில்லை. மேலும், தமக் கிருந்த பிரத்தியேக அதிகாரத்தைக் கொண்டு, அரசர் காலி இடங்களுக்குப் (vacant) பிஷப்புகளை அமர்த்தாமல் அத் திருக் கோயில்களின் நீதியைக் கையாண்டு வருவதை, ஆன்சலம் சுட்டிக் காட்ட முற்பட்டதால், அரசருக்கும், கான்டர்பரியின் தலைமைக் குருவுக்கும் தகராறு ஏற்பட்டது. பிறவகைகளிலும் அவர்களுக் கிடையே பிளவு முற்றியது. கான்டர்பரியின் நிலங்கள் அரசரி டம் இருந்தன. ஆன்சலம் அந் நிலங்கள் திருச்சபைக்கு உரியவை எனக் கேட்டுக்கொண்டும் மன்னர் மதிக்கவில்லை. ஒழுக்கங் கெட்ட அரசரின் அவையினரால் கொண்டுவரப்பட்டிருந்த ஒழுக்கச் சீர்திருத்தங்களை ஆன்சலம் ஏற்க மறுத்தார்.

அச் சமயத்தில் இரண்டாம் அர்பன் (Urban II) என்பவர் போப்பாண்டவராக இருந்தார். போப்பாண்டவரின் இருப் பிடமான ரோம் நகருக்குச் சென்று தமது பதவிக்கான சமயச் சின்னங்களைப் (pallium) பெற நினைத்த ஆன்சலம், அதற்கான அனுமதியை அரசரிடம் கேட்டார். அப்போது ரோமாபுரி திருச் சபை விவகாரத்தில் சிக்கல் நிரம்பியிருந்தது. அர்பன் II-க்கு போட்டியாகக் கிளமென்ட் (Clement) என்பவரைப் புனித ரோமப் பேரரசர் போப்பாண்டவராக நியமித்திருந்ததால், அவர்களிரு வரில் எவர் உண்மையான அதிகாரம் கொண்ட போப்பாண்டவர் என்ற பிரச்சினை எழுந்திருந்தது. இரண்டாம் வில்லியத்திற்கு அப் புதிர் வரப்பிரசாதமாக அமைந்தது. ரோமாபுரியின் அச் சிக்கல் தீரும் வரையில் தாம் அந்த இரு நபர்களில் எவரையும் போப்பாண்டவராக ஏற்றுக்கொள்ளமுடியாதெனக் கூறி, ரோமுக்குச் செல்ல ஆன்சலமுக்கு அனுமதி கொடுக்க வில்லியம் II மறுத்தார். அதற்குப் பதிலடி கொடுப்பதுபோல், தம் பதவிக்கு வேண்டிய சமயச் சின்னங்களை அரசரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாதென ஆன்சலம் ஆணித்தரமாகக் கூறிக்கொண்டதுடன் இங்கிலாந்தில் உள்ள மற்ற மதகுருமார்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சமயச் சின்னங்களைக் கான்டர்பரியின் ஆர்ச் பிஷப்பான தாமே கொடுக்கவேண்டுமெனவும் விடாப்பிடியாக இருந்தார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் அனுமதியில் பதவி பெற்றிருந்த போப்பாண்டவரான இரண்டாம் அர்பனுக்கு விசுவாசம் காட்டுவதா, மன்னர் இரண்டாம் வில்லியத்திற்கு விசுவாசம் காட்டுவதா என்ற சிக்கல் ஆன்சலத்தைப் பொறுத்தவரையில் இல்லை. ஏனெனில், கான்டர்பரி மடாலயம் ரோமாபுரியிலுள்ள இரண்டாம் அர்பனுக்கே விசுவாசம் தெரிவிக்க ஏற்கெனவே முடிவு செய்திருந்தது. இருப்பினும், அரசருக்கும், கான்டர்பரித் தலைமைக் குருவுக்கும் ஏற்பட்டிருந்த தகராறுகளைத் தீர்க்கக் கி.பி. 1095-ல் ராக்கிங்ஹாம் (Rockingham) என்னுமிடத்தில் ஒரு குழு (council) கூட்டப்பட்டது. ஆயினும், எதிர்பார்த்த அளவுக்கு அக் குழு எதையும் சாதித்துவிடவில்லை.

அதற்கிடையே அதிகார பூர்வமான போப்பாண்டவர் யாரென்ற நிலைமையில் தெளிவு ஏற்பட்டிருக்க, இரண்டாம் அர்பனை அரசர் வில்லியம் II போப்பாண்டவராக ஒப்புக் கொண்டு, அவரால் இங்கிலாந்திற்குக் கொடுத்தனுப்பப்பட்ட பதவிச் சின்னங்களை ஆன்சலம் பெற்றுக்கொள்ள, அனுமதியளித்தார்.

அங்ஙனமாகப் பதவிச் சின்ன வாதம் (investiture contest) அப்போதைக்குச் சுமுகமாக முடிந்திருந்தபோதிலும், சிலகாலம் கழித்து, மீண்டும் அரசருக்கும், ஆன்சலமுக்கும் தகராறு ஏற்பட்டது. வில்லியம் II வேல்ஸ் பகுதியைத் தாக்கிப் போர்செய்த போது திருச்சபை பணம் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ள, அவ் வேண்டுகோளை ஆன்சலம் நிராகரித்தார். அதனால் கொதிப்படைந்த அரசர் வழக்குத் தொடர்ந்து ஆன்சலத்தை விசாரிக்க முன்வந்தபோது, அவ் விவகாரத்தில் தீர்ப்பளிக்கும் உரிமை போப்பாண்டவருக்கே உண்டு எனக் கான்டர்பரியின் தலைமைக் குரு எதிர்வாதம் செய்தார். கொந்தளிப்பான ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றதென்பதை உணர்ந்த ஆன்சலம், அரசரின் கோபத்திற்கு மேலும் ஆளாக விரும்பாமல் 1097-ல் தாமாகவே நாட்டைவிட்டு வெளியேறினார்.

முதலாம் ஹென்றி (1100 - 1135)

அடுத்து வாரிசுரிமையைப் பெற்றிருந்த ஹென்றி I, பிடிவாத குணம் கொண்டிருந்த தம்முடைய சகோதரர் இரண்டாம் வில்லியத்தைக்காட்டிலும் மாறுபட்டவராக இருந்தார். இருப்பினும், இவரது ஆட்சிக் காலத்திலும் அரசருக்கும், திருச்சபைக்குமிடையே மோதல் உண்டாயிற்று.

நாடு கடந்து சென்றிருந்த ஆன்சலமைத் திரும்பவும் அரசர் இங்கிலாந்திற்கு அழைத்துக்கொண்டார். ஆனால், வந்ததும் வராததுமாக ஆன்சலம் திருச்சபையின் புதிய உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினர்.

தலைமைக் குருமார்கள் அரசரால் அமர்த்தப்படுவதா? அல்லது போப்பாண்டவரால் அமர்த்தப்படுவதா? திருச்சபைப் பதவிச் சின்னங்களை அரசர் வழங்குவதா? அல்லது போப் பாண்டவர் வழங்குவதா? குருமார்கள் மன்னருக்கு விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டியது அவசியம்தானா? போன்ற பிரச்சினைகளை ஆன்சலம் கிளப்பிவிட்டார். ஆன்சலம் உதவாத ஒரு கொள்கைக்காக வாதாடவில்லை; திருச்சபையின் சமயச் சுதந்தரத்திற்காகவே அவர் உரிமைக் குரலெழுப்பினர்.

அரசரிடமிருந்து பெற்றிருக்கும் மானியத்திற்காக (fief) குருமார்கள் தமக்கு இறைவணக்கம் (homage) செலுத்தவேண்டு மென்றும், குருமார்கள் தங்களின் பதவிச்சின்னங்களை அரசரிட மிருந்தே பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் முதலாம் ஹென்றி வாதாடினர். ஆன்சலமின் உரிமைப் போராட்டத்திற்கு உடன் படுவதானால், தம் அரச அதிகாரங்களுக்கு அதனால் பங்கம் ஏற்படக்கூடுமென முதலாம் ஹென்றி நினைத்ததில் வியப்பில்லை. திருச்சபையின் சுதந்தரத்தை ஏற்றுக்கொள்வதானால், இங்கி லாந்தில் வாழும் லௌகீகர்கள் (laymen) தமக்கு விசுவாசம் செலுத்த, திருச்சபையினர் தங்களின் விசுவாசத்தைப் போப் பாண்டவருக்கும், தலைமைக் குருவுக்கும் (Archi Bishop) செலுத்தக் கடமைப்பட்டவர்களாவார். அந்த ஏற்பாட்டினால் இங்கி லாந்தின் ஒற்றுமை குலையக் கூடுமென முதலாம் ஹென்றி திடமாக நம்பியதால், ஆன்சலமின் குரலை உதாசீனப்படுத்தினர். அதனால் மனமுடைந்த ஆன்சலம் கி.பி. 1103-ல் மீண்டும் நாட்டை விட்டகன்றார்.

ஐரோப்பாவிலும், போப்பாண்டவர்க்கும் புனித ரோமப் பேரரசருக்குமிடையே பதவிச் சின்ன வாதம் (investiture contest) அத் தருணத்தில் நடந்து வந்தது. அவர்களுக்கிடையே கி.பி. 1106-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, அடுத்த ஆண்டில், ஆன்சலமை மீண்டும் இங்கிலாந்துக்கு வரவழைத்து, முதலாம் ஹென்றி திருச்சபை அரசு விவகாரத்திற்குத் தீர்வு கண்டார்.

அவ் வுடன்பாட்டின்படி, பதவிச் சின்னங்களாக மோதிரம், ஆன்மீகச் செங்கோல் ஆகியவைகளைச் சமய குருமார்கள் போப்

பாண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆயின், அக் குருமார்கள் நிலப்பிரபுக்கள் என்ற முறையில் அரச ராகிய தம்மிடத்தே நிலமானியப்படை முறைப்படி பற்றுறுதி யுடையவர்களாக இருக்கவேண்டுமென்ற உரிமையை முதலாம் ஹென்றி பெற்றுக்கொண்டார். அதாவது, லௌகீக உடைமை களைப் பொறுத்தவரையில் திருச்சபையினரும் அரசருக்கு விசுவாச வாக்குறுதி அளிக்கவேண்டு மென்று ஏற்பாடாயிற்று. மேலும், பிஷப்புகளையும் (Bishops) மடாதிபதிகளையும் (Abbots) தேர்ந்தெடுக்கும் உரிமை அந்தந்தக் கோயிற் குருமார்களுக்கும், மடத்துறவிகளுக்கும் (Monks) முறையே கொடுக்கப்பட்ட தெனினும், அவர்கள் தேர்ந்தெடுக்கவேண்டிய குருமார்களின் பெயர்களைக் குறிப்பிடும் அதிகாரத்தை அரசர் ஏற்றார்.

மேற்கண்ட ஏற்பாட்டினால், நார்மானியர் காலத்தில் அரசுக்கும், திருச்சபைக்கும் இடையே இருந்துவந்த தகராறு முடிவுற்றது.

3. பிளான்டா ஜெனட் ஆட்சி (Plantagenets)



(அ) இரண்டாம் ஹென்றி

கி.பி. 1154-ல் இங்கிலாந்தின் அரச உரிமையைப் பெற்ற ஹென்றியை வரலாற்றில் இரண்டாம் ஹென்றி என்று அழைக்கின்றோம். இவர் தாய்முதலாம் ஹென்றியின் மகளான மாடில்டா ஆவார். ஃபிரான்சின் வடமேற்கே இருந்த அன்ஜு (Anjou), மெயின் (Maine) பகுதிகளின் கோமகனான ஜியாஃப்ரே (Geofrey) என்பவரே இவரின் தந்தை. ஜியாஃப்ரே தம் முடியில் 'பிளான்டா ஜெனட்' என்ற நீண்ட கோரையை அடையாளமாக அணிந்திருந்ததால் அவருக்கு அதுவே குலப்பெயராகவும் அமைந்

திருந்தது. அவரின் மகனை இங்கிலாந்தின் புதிய அரசரும் ஹென்றி பிளான்டாஜெனட் என அழைக்கப்பட்டார். இவர் தந்தை ஜியாஃப்ரே அன்ஜூவின் கோமகனைதால் ஹென்றியையும் அவர் வழித்தோன்றல்களையும் அன்ஜூ வம்சத்தினர் எனவும் அழைக்கின்றோம்.

தம் தந்தை காலமானதும் நார்மாண்டி, அன்ஜூ, மெயின், கவுண்டிகளுக்குத் தலைவராக இருந்த ஹென்றி வாலிங்ஃபோர்டு (Wallingford) உடன்பாட்டின்படி கி.பி. 1154-ல் இங்கிலாந்துக்கு அரசனாக ஏற்றுக்கொள்ளப்பட்டான். அக்விட்டேன் (Aquitaine) நாட்டுத் தலைவரின் மகளான எலினரை மணம் செய்து கொண்டதன் விளைவாக பாயிட்டோ, அக்விட்டேன், காஸ்கனி போன்ற பகுதிகளும் இவருக்குக் கிடைத்தன. ஆக, ஹென்றிக்கு உடைமையான பிரதேசங்கள் நிறைய இருந்தன. இங்ஙனம், ஓர் பேரரசுக்குத் தலைவராக இருந்த ஹென்றி II இங்கிலாந்தின் தலைசிறந்த மன்னர்களில் ஒருவராக மதிக்கப்படுகின்றார்.

இரண்டாம் ஹென்றி (கி.பி. 1154 - 1189)

தம் ஆட்சியை நிலைப்படுத்தவேண்டுமென்றால் ஸ்டீபன் காலத்தில் விளைந்திருந்த குழப்பங்களைக் களையவேண்டுமென ஹென்றி நினைத்தார்; மன்னரின் அனுமதி யில்லாமல் கட்டப்பட்டிருக்கும் கோட்டைகளைத் தகர்க்கும்படி பிரபுக்களுக்கு ஆணையிட்டார். தங்களின் சுய அதிகாரத்தில் பிரபுக்கள் நாணயங்கள் வெளியிடுவதைத் தடுத்தார்; பிரபுக்கள் வைத்திருந்த கூலிப் பட்டாளத்தைக் கலைக்கச் செய்தார்; ஆணைகளுக்கு அடங்க மறுத்த பிரபுக்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். இவ்வாறுகப் பிரபுக்களின் தலையீடில்லாத நல்லாட்சி நாட்டிலே மலர இரண்டாம் ஹென்றி வழிகோலினார்.

பிரபுக்களின் கொட்டத்தை ஒடுக்கியிருந்த இரண்டாம் ஹென்றி, ஒரு சிறந்த தீர்க்கதரிசி. பிற்காலத்தில் அவர்களால் தமது அரசுக்கு எந்த ஒரு ஆபத்தும் வாராமல் தடுக்கப் பலமான படை தமக்கு இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்திருந்தார். அப்போது வழக்கத்தில் இருந்து வந்த படை மானிய முறையின் கீழ் அரசர் பிரபுக்களின் உதவியையே போர்க்காலங்களில் நாடவேண்டி இருந்தது. அங்ஙனம் பிரபுக்களிடமிருந்து பெற்ற படை 45 நாள்களுக்குமேல் அரசனுக்குச் சேவை செய்யாது. அது படை மானிய விதி. அரசன் ஏமாளியாக இருந்தால் பிரபுக்கள் படை கொடுத்து உதவவும் மறுப்பர். இக் குறைகளை உணர்ந்திருந்த இரண்டாம் ஹென்றி தமக்கென்று ஒரு நிரந்தரப்

படையை அமைத்துக்கொள்ள நினைத்தார். ஆகவே, தம் பிரதம மானியதாரர்களிடமிருந்து கேடயவரி (scutage) என்ற முற்காலத்தில் இருந்தே பழக்கத்திலிருந்துவந்த படைத்தொழில் பிரதிப் பணத்தை வசூலித்து, அதனால் பெற்ற வருவாயில் எப்போதும் போர்ச் சேவைக்குத் தயாராக இருக்கக்கூடிய ஒரு நிலையான படையைத் திரட்டிவைத்தார்.

தம் பாட்டனாரான முதலாம் ஹென்றியால் புகுத்தப்பட்ட ஆட்சி முறைச் சீர்திருத்தங்களை மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டுவர இரண்டாம் ஹென்றி விரும்பிச் செயல்பட்டார்; மன்னர் மன்றத்தையும் கருவூல மன்றத்தையும் கூட்டி மீண்டும் இயங்கச் செய்தார்; நேர்மையற்ற ஷெரிப்புகளை அகற்றிவிட்டு மன்னர் மன்றத்தில் பயிற்சிபெற்ற திறமையானவர்களை ஷயர் களுக்கு அதிகாரிகளாக அமர்த்தினார்.

சட்டமியற்றி நிர்வாகத்தைச் சீர்திருத்த எண்ணிய ஹென்றி கி.பி. 1166-ல் 'கிளாரண்டன் சட்டத்தை' (Assize of Clarendon) வெளியிட்டார். அச் சட்டப்படி புதுமையான நீதி நிர்வாக முறை அமுலாக்கப்பட்டது. மன்னருடைய நீதிபதிகள் நாடு முழுவதும் சுற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதற்குச் 'சுற்றி வரும் நீதி மன்றங்கள்' (Circuit Courts) எனப் பெயர் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் அவர்கள் சென்று ஆங்காங்கு அவர்கள் முன்னிலையில் கொண்டுவரப்பட்ட வழக்குகளை விசாரித்தனர். அவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கவுண்டிக்கு வரும்போது அக் கவுண்டியைச் சார்ந்த 10 தனக் காரர்கள், சந்தேகிக்கப்படும் குற்றவாளிகளைச் சுற்றி வரும் நீதிபதிகள் முன்னர்க் கொண்டுவந்தனர். அவர்கள் 'ஆஜர் ஜூரி' (jury of presentment) என அழைக்கப்பட்டு வந்தனர். உண்மையையே கூறுவதாக வாக்குறுதி கொடுத்த ஜூரர்களின் அபிப்பிராயத்தின்மீதே கிரிமினல் குற்றங்களுக்குச் சுற்றி வரும் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். கடும் சோதனை முறையில் (Trial by ordeal) தீர்ப்பு வழங்கிய பழைய முறை மாற்றப்பட்டு ஜூரி முறையால் தீர்ப்பு வழங்கப்படும் புதிய முறை புகுத்தப் பட்டது.

நீதித்துறையில் புதுமைகளைக் காண விழைந்த இரண்டாம் ஹென்றி 1176-ல் நார்த்தாம்டன் சட்டத்தைக் (The Assize of Northampton) கொண்டுவந்தார். அதன்படி நாட்டின் சட்டத்தை மீறியவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக் கப்பட்டது, ஹென்றி இயற்றிய இன்னொரு சட்டமான

மாபெரும் அஸ்ஸைஸ் (Grand Assizes) அவரின் நியாய மனப் பான்மையை மேலும் எடுத்துக் காட்டியது. இச் சட்டத்தின்படி ஜூரிகளின் சாட்சியின் முன்பு சிவில் வழக்குகளும் மேற்கொள்ளப் பட்டன.

மேலும், ஸ்டீபன் காலத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்த நூற்றுவர், ஷயர் நீதி மன்றங்களும் இவரது காலத்தில் புத்துயிர் பெற்றன என்பதையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். நீதித்துறையில் இரண்டாம் ஹென்றி புகுத்திய சீர்திருத்தங்கள் நாட்டுமக்களைச் சட்டங்களுக்குக் கட்டுப்படுத்தி வைத்தன. இக் காலத்தில் எழுதப்பட்ட தீர்ப்புகள் வருங்காலத்தில் பொதுச் சட்டத் தொகுப்புகளுக்கு வழிகாட்டியாக இருந்தனவென நாம் சொல்லலாம்.

நிதித்துறையில் ஹென்றி கண்டிப்புக் காட்டித் தம் வளத்தைப் பெருக்கிக்கொண்டார். 'வளமில்லாத அரசு வலுவில்லாத அரசு' என்பதை அவர் நினைவுகூர்ந்து இருக்கவேண்டும். நீதி மன்றங்களில் இருந்து வசூலான அபராதத்தையும், காட்டு நிலங் களில் அக்கிரமம் செய்த பிரபுக்கள் கட்டிய அபராதத்தையும் பெற்றுக்கொண்டார். யூதர்களிடமிருந்து வசூலான காப்பு வரி யையும் உரிமைச் சாசனங்களைப் பெற்ற நகரங்கள் செலுத்திய திறைப்பணத்தையும் ஹென்றி பெற்றுத் தமக்கு நிறைய வரு மானத்தைத் தேடிக்கொண்டார்.

தமது நாட்டுப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்திருந்த ஹென்றி 1181-ல் படைக்கலச் சட்டம் (Assize of Arms) என்பதை இயற்றினார். இது பழங்கால சாக்சானிய முறையைப் புதுப் பித்தது. இதன்படி பழைய தேசியப் படையான ஃபிர்டு (Fyrd) என்பது பெரியதாக்கப்பட்டது. போர்க்காலங்களில் ஒவ்வொரு சுதந்தர மனிதனும் தனது நிலைமைக்கு ஏற்பப் படைக்கலம் தாங்கி, அரசனுக்கு உதவ வேண்டுமென்பது இதனால் அறிவிக்கப் பட்டது. ஆபத்துக் காலங்களில் ஒரு பெரும் தேசியப் படையைத் திரட்டக்கூடிய அனுகூலத்தை இச் சட்டத்தினால் இரண்டாம் ஹென்றி பெற்றுக்கொண்டார்.

மிகுந்த சுறுசுறுப்புடன் ஆட்சி முறையில் பற்பல புதுமை களைப் புகுத்த எண்ணிய ஹென்றி II திருச்சபையிலும் சில சீர்திருத்தங்களைச் செய்ய எண்ணினார். அதன் விளைவாகவே ஹென்றி II தாமஸ் பெக்கட் (Thomas Becket) தகராறு தோன்றி யது. ஹென்றியின் ஆட்சிக் காலத்தின் மிக முக்கிய நிகழ்ச்சி

யாகக் கருதப்படும் இத் தகராற்றின் விளைவுகளை அடுத்துக் கவனிப் போம்.

திருச்சபையின் அதிகாரத்தைக் குறைத்துத் தம் அதிகாரத்தை அதிகப்படுத்திக்கொள்ளவும், திருச்சபையில் தாம் விரும்பிய சீர்திருத்தங்களைச் செய்யவும் விரும்பிய ஹென்றி தம் நெருங்கிய நண்பரும் சான்சலராகப் பணியாற்றி வந்தவருமான தாமஸ் பெக்கட்டைக் கான்டர்பரியின் ஆர்ச் பிஷப்பாக நியமித் திருந்தார். தமது ஆணைக்குட்பட்ட ஒருவர் ஆர்ச் பிஷப்பாக இருந்தால் தமது அதிகாரம் திருச்சபையிலும் செல்லுபடியாகும் என்று இரண்டாம் ஹென்றி நினைத்ததில் ஆச்சரியமில்லை. புதிய பதவியைப் பெற்றுக்கொண்ட பெக்கட் தம் விருப்பத்திற்கு மாறுக சான்சலர் பதவியை விட்டகன்றதே ஹென்றிக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. கான்டர்பரியின் ஆர்ச் பிஷப் என்ற முறையில் திருச்சபையின் அதிகாரங்களில் தலையிட அரசனுக்கு உரிமையில்லை என்று தாமஸ் கூறியபோது ஹென்றி மேலும் அதிர்ச்சி அடைந்தார். இந் நிலையில் இரு பழைய நண்பர்களுக்கும் சச்சரவு மூடு பிடிக்கும்படியாக இன்னொன்றும் காரணமாக அமைந்துவிட்டது. அதுவே, 'குற்றக் குருமார் களுக்கு அளிக்கப்பட்ட திருச்சபைச் சலுகை' (Benefit of Clergy) அல்லது குருமார் உரிமை எனப்படுவது.

திருச்சபையினர் தனிப்பட்ட நீதி மன்றங்களை நிறுவிக் கொண்டு தங்களுள் குற்றம் செய்தவர்களை விசாரிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். சமய நீதி மன்றங்கள் அவர் களுக்கு இலேசான தண்டனைகளைக் கொடுத்து வந்தன. உதாரணமாக, ஒரு குடிமகன் கொலைக் குற்றத்திற்குக் காரணமாக இருந்திருப்பின் அவனுக்கு நாட்டின் நீதி மன்றங்கள் மரண தண்டனை கொடுத்தன. அதே குற்றத்தை ஒரு சமயகுரு செய்து இருப்பின் சமய நீதி மன்றம் அவனைத் திருச்சபையிலிருந்து விலக்கும். நீதியின் முன்னிலையில் எக் குற்றவாளியும் ஒன்றே என்றும் தமது நாட்டில் தம் சட்டங்களை மீறிய எவரையும் விசாரித்துத் தண்டிக்கும் உரிமை தம் நீதி மன்றங்களுக்கு இருத்தல் வேண்டுமெனவும் ஹென்றி விரும்பினர். அதனால் குற்றம் புரிந்த குருமார்களை நாட்டின் பொதுச்சட்டத்திற்கு உட்படவைத்து அரச நீதி மன்றங்களில் தீர்ப்பு வழங்கச் செய்ய வேண்டுமென ஹென்றி நினைத்தார். ஆகவே, 1164-ல் கிளாரண்டன் சட்டங்கள் (Constitution of Clarendon) என்ற தொகுப்பை வெளியிட்டார். குற்றம் சாட்டப்பட்ட குருமார் களின் வழக்குகளைச் சமய நீதிமன்றங்கள் தம் விசாரணைக்குப்

பிறகு அரசு நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டுமென்றும், சாதாரணக் குடிமகனுக்கும் குருமாருக்கும் இடையே ஏற்படும் தகராற்றை எந்த நீதி மன்றத்தில் விசாரணை செய்யவேண்டுமென நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மன்னனின் குழுவுக்கே உரியது என்றும், அரசரின் அனுமதியின்றிச் சமய நீதி மன்றங்கள் எந்த வழக்கையும் போப்பாண்டவரின் மேல்தீர்ப்புக்கு அனுப்பக் கூடாது என்றும், அரசரின் ஒப்புதல் இல்லாமல் குருமார்கள் வெளிநாடுகளுக்குப் போகக் கூடாதென்றும் கிளாரண்டன் சட்டங்கள் வலியுறுத்தின.

கிளாரண்டன் சட்டங்களை முதலில் ஏற்றுக்கொண்ட தாமஸ் பெக்கட் சில நாள்களுக்குப் பின்னர் அவற்றை மதித்து நடக்க மறுத்தார்; ஹென்றி தாமஸை வெறுத்து அவரை வருத்தத் தொடங்கினார். துரோகி என்ற குற்றச் சாட்டுக்கு ஆளான தாமஸ் நாட்டைவிட்டே வெளியேறினார். ஆயினும், தகராறு இத்துடன் முடிந்துவிடவில்லை.

தமது காலத்திலேயே தம் மூத்த மகனுக்குப் பட்டம் கட்டி வைக்க விரும்பினார் ஹென்றி. அதற்கு ஏற்ப யார்க் ஆர்ச் பிஷப் ரோஜரின் (Roger) முன்னிலையில் முடிசூட்டு விழாவை நடத்தி முடித்தார். கான்டர்பரி ஆர்ச் பிஷப்புக்கே முடிசூட்டும் பெருமையும் பொறுப்பும் இருந்து வந்தன. அதனால் கொதிப் படைந்திருந்த தாமஸ் பெக்கட் 1170-ல் நாடு திரும்பியதும் முடி சூட்டு விழாவில் கலந்துகொண்ட ரோஜரையும் மற்ற பிஷப்புக் களையும் மதத்தினின்று விலக்கி ஆணைபிறப்பித்தார். கட்டுக் கடங்காத கோபம் கொண்ட ஹென்றி தம் வீரர்கள் சிலரிடத்தில் 'என் உணவை உண்டு வாழும் உங்களில் இந்த அடங்காப் பூசாரியை ஒழிக்க ஒருவர்கூட இல்லையா?' என்று இரைந்தார். அந்த வார்த்தைகளைக் கேட்ட நான்கு வீரர்கள் குதிரையின்மீது விரைந்து சென்று கான்டர்பரியை (Canterbury) அடைந்தார்கள். கி.பி. 1170-ல் டிசம்பர் 27-ல் கான்டர்பரி ஆர்ச் பிஷப்பான தாமஸ் பெக்கட் திருக்கோயிலில் பூசை செய்துகொண்டிருக்க, அவ் வீரர்கள் அவரை வெட்டிக் கொன்றனர். திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் துணிவுடன் சாவை ஏற்றுக்கொண்ட பெக்கட்டை 'மகா தியாகி' என மக்கள் போற்ற ஆரம்பித்து விட்டனர். தாமஸின் கொலைக்குக் காரணமான ஹென்றி அதற்குத் தாமே பொறுப்பேற்று அவரின் சமாதியிலே தம்மைத் தடிகொண்டு அடிக்கச் சொல்லிப் புனிதப் படுத்திக் கொண்டதும் ஹென்றியின் நீதி மனப்பான்மையைக் காட்டுகிறது. 'குருமார்களின் உரிமை' என்ற சலுகையை

விட்டுக்கொடுத்துவிட்ட ஹென்றி தமது கவனத்தை அரசியலிலே திருப்பினர்.

இங்கிலாந்தின் பகுதிகளைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த ஹென்றி II தென்வேல்ஸ் பகுதியிலும் அயர்லாந்திலும் போர் செய்து தம்மை வெற்றி வீரனாகவும் அறிவித்துக் கொண்டார். அவரது பெருமையையும் திறமையையும் கண்டு பொறுமை கொண்ட ஃபிரெஞ்சு மன்னரும் ஸ்காட்லாந்து அரசரும் சேர்ந்து தாக்கியபோது அவர்களை இரண்டாம் ஹென்றி எளிதில் வெற்றிகொண்டார் என்பது மிகவும் போற்றத்தக்க ஒன்றாகும்.

ஆட்சித் திறனும் போர்த் திறனும் பெற்றிருந்த ஹென்றியின் இறுதிக் காலம் குடும்பச் சச்சரவுகளாலும் தம் பிள்ளைகளின் கலகத்தாலும் பாதிக்கப்பட்டுத் துன்ப மயமாக இருந்தது. 1188-ல் தம் இரண்டாவது மகனை ரிச்சர்ட் தம்மை எதிர்த்து ஃபிரெஞ்சுப் பகுதிகளில் கலகம் செய்ய அதற்குப் ஃபிரான்சின் அரசரான ஃபிலிப் அகஸ்டஸ் உதவி செய்ய அது ஹென்றிக்குச் சோதனையாக இருந்தது. தம் பிரியா இளைய மகனை ஜானும் அக் கலகத்தில் சேர, வேதனையடைந்த இரண்டாம் ஹென்றி மனமுடைந்து கி.பி. 1189-ல் ஜூலை மாதம் 7ஆம் தேதி காலமானார்.

(ஆ) அரசர் ஜான் - மகாசாசனம்
(Magna Carta, கி.பி. 1215)

ஹென்றி II காலமானதும் அவருடைய இரண்டாம் மகனை முதலாம் ரிச்சர்டு (1188 - 1199) பட்டத்திற்கு வந்தார். சிலுவைப் போரிலும் (Crusades), ஃபிரெஞ்சுப் போர்களிலும் தமது கவனத்தைக் செலுத்திய இவ் வரசர் ஃபிரான்சு நாட்டிலுள்ள சாலுஸ் (Chaluz) கோட்டைக்கு வெளியே முற்றுகையின் போது கொல்லப்பட்டார். தொடர்ந்து ஹென்றி II கடைசி மகனை ஜான் (John, 1199-1216) இங்கிலாந்தின் மன்னராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

அவரது காலம் இங்கிலாந்து வரலாற்றிலே ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றது, அவரின் நல்லாட்சியைக் குறிப்பதாக நாம் நினைத்துவிடக் கூடாது. பின் ஏன் அந்தச் சிறப்பு? இங்கிலாந்து வரலாற்றில் தனிமக்கள் சுதந்தரத்திற்கு அடிக்கல் இட்டதும் இங்கிலாந்தின் அமைப்பில் எழுதப்பட்ட முதல் பத்திரமாகவும் கருதப்படும் மகாசாசனத்தில் ஜான் தம் அரச முத்திரை இட்டதாலேயே அந்தச் சிறப்பு.

அரசரின் வரம்பற்ற அதிகாரங்களைக் குறைத்த மகா சாசனத்தை அரசர் ஜான் சுய விருப்பத்தில் சம்மதித்தாரா? இல்லை; கட்டாயப்படுத்தப்பட்டார்? எப்படி?

மகா சாசனம் ஆக்கப்பட்டதற்குக் காரணங்கள்

தந்தைக்கும், தமயனுக்கும் எதிராக அவர்களின் ஆட்சிக் காலங்களில் கலகங்கள் செய்த ஜான், தந்நலம் கொண்ட ஒரு நயவஞ்சகர்; கொடியவர்; பொய்யர். அவரிடத்தில் நம்பிக்கை கொள்ள எவருக்குமே துணிவில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தீய இயல்பைப் பெற்றிருந்த ஜான் எந்த நெறிக்கும் கட்டுப்படாதவராக இருந்தார். தொடக்கத்திலிருந்தே மக்களின் அதிருப்திக்கும் பிரபுக்களின் ஆத்திரத்திற்கும் ஆளாகிவிட்ட அரசர் ஜான், கி.பி. 1215-ல் மகாசாசனத்தில் கையெழுத்திட மூன்று முக்கிய காரணங்களிருந்தன.

வெற்றி வீரன் வில்லியத்தின் காலத்திலிருந்தே, இங்கிலாந்து அரசர்களின் தனியுடைமையாக இருந்துவந்த நார்மண்டியை ஜான் இழந்துவிட்டதே முதல் காரணமாக அமைகின்றது.

ஃபிரான்சின் அரசரான ஃபிலிப் அகஸ்டஸ் (Philip Augustus) நார்மண்டியை விடுவித்துத் தமது அரசுடன் இணைத்துக்கொள்ள விரும்பினர். சாதகமான சந்தர்ப்பமும் கிடைத்தது. கி.பி. 1185-ல் காலமடைந்துவிட்ட ஹென்றி II-ன் மூன்றும் மகனான ஜெஃப்ரிக்கு ஒரு மகனிருந்தார். அவரே ஆர்தர் என்பவர். கி.பி. 1202-ல் நார்மண்டி, ஆன்ஜூ, மெயின் போன்ற ஆங்கில அரசுக்குச் சொந்தமான ஃபிரெஞ்சுப் பகுதிகளுக்கு ஆர்தர் உரிமை கோரினர். ஆர்தருக்கும் அவரின் சிற்றப்பரான அரசர் ஜானுக்கும் ஏற்பட விருந்த சண்டையில் கலந்துகொண்டு தாம் நினைத்ததைச் சாதிக்க ஃபிலிப் அகஸ்டஸ் காத்திருந்தார். இதற்கிடையில் ஜான் ஒரு பெருந்தவற்றினைச் செய்தார். ஃபிரெஞ்சுப் பிரபுவான ஹூயூம் (லாமார் ஷின்கவுன்ட்) மணக்க இருந்த பெண்ணை (இசபெல்லா ஆக்சலீம்) கடத்திச் சென்று கட்டாய மணம் செய்து கொண்டார். ஃபிரெஞ்சுப் பிரபுவின் முறையீட்டுக்குச் செவிசாய்த்து ஜானைத் தண்டிக்க ஃபிலிப் போர்க் கோலம் பூண்டு ஆர்தரையும் தூண்டி விட்டுத் தாமே, ஜானின் ஃபிரெஞ்சுப் பகுதிகளைத் தாக்கினர். அதனால் வெகுண்ட ஜான் ஃபிரெஞ்சுப் பகுதிகளுக்குப் படை கொண்டுவந்து, மிரபோ என்னும் கோட்டையை முற்றுகையிட்டுவந்த ஆர்தரைச் சிறைப் பிடித்துக் கொலை செய்துவிட்டார். இதுவரை ஜானை ஆதரித்து ஃபிரஞ்சுப் பகுதிகளிலே வாழ்ந்து வந்த நார்மானியப் பிரபுக்கள் இக் கொடூரக் கொலைக்குப் பின்னர்த் தங்களின் எதிர்ப்பைக்

காட்டத் தொடங்கினர். அந்த எதிர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தம் படைகளுடன் பலமாகத் தாக்கி ஃபிலிப் அகஸ்டஸ் ஆங்கில அரசரின் ஃபிரெஞ்சு நிலங்களான நார்மண்டி, ஆன்ஜு, மெயின் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டார். இதுகாறும் அங்குக் குடியிருந்த நார்மானியப் பிரபுக்கள் இங்கிலாந்துக்குச் செல்ல ஆரம்பித்தனர். அதுவரை இங்கிலாந்தின் அரசியலிலே அக்கறை காட்டாது இருந்த அப் பிரபுக்கள் கொடுங்கோலர் ஜானின் கொட்டத்தை அடக்கக் காத்திருந்தனர்.

நாடிழந்த ஜான் 1204-ல் இங்கிலாந்து திரும்பினர். ஃபிரெஞ்சுப் பகுதிகளின் இழப்பு ஜானின் பலவீனத்தை எடுத்துக் காட்டியது. அதனால், மகிழ்ச்சி பெற்ற மானியப் பிரபுக்கள், அரசரின் வரம்பற்ற அதிகாரங்களுக்கு முடிவு கட்டத் துணிவு கொண்டனர்.

அரசர் ஜானுக்கும், போப்பாண்டவர் மூன்றும் இன்னசென்டுக்கும் (Innocent III) ஏற்பட்ட சச்சரவு அடுத்த காரணமாக அமைந்தது.

கி.பி. 1205-ல் கான்டர்பரியின் ஆர்ச்பிஷப்பாக இருந்த ஹியூபர்ட் வாஸ்டர் (Hubert Waster) இறந்துபோனார். அவருக்குப் பிறகு கான்டர்பரி ஆர்ச்பிஷப்பாக, யாரை நியமிப்பது என்பதுபற்றிப் பெரியதொரு சச்சரவு தோன்றியது. அப்போதைய வழக்கத்தின்படி, எவரொருவர் அரசரால் நியமிக்கப்படுகிறாரோ அவரையே கான்டர்பரியின் குருமார்கள் ஆர்ச்பிஷப்பாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அரசரின் விருப்பத்திற்கு இணங்கி நடக்க மறுத்த கான்டர்பரியின் குருமார்கள் இரகசியமாகத் தங்களில் ஒருவரான ரெகினால்டு (Reginold) என்பவரைத் தேர்ந்தெடுத்து, போப்பாண்டவரின் ஆசிபெற ரோமுக்கு அனுப்பிவைத்தனர். இந்த ஏற்பாட்டினால் ஜான் கோபங்கொண்டாரென்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. தமக்குப் பிடித்தமான ஜான் டி கிரே (John De Grey) என்பவரை ஆர்ச்பிஷப்பாக நியமனம் செய்து போப்பாண்டவரின் ஆசி பெற அவரை அரசரும் ரோமுக்கு அனுப்பிவைத்தார்.

அப்போது போப்பாண்டவராக இன்னசென்ட் III என்பவர் இருந்தார். அவர் அறிவாளி; திறமைசாலி; மன்னர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட மறுத்தவர். தம்மிடம் வந்திருந்த இருநபர்களின் தேர்தலையும், நியமனத்தையும் ஏற்க மறுத்துவிட்டார். சமய சாத்திரத்தில் தேர்ச்சி பெற்றவராக ரோமபுரியிலே அப்போது கார்டினலாக இருந்த ஸ்டீஃபன் லாங்டன் (Stephen Langton) என்னும் ஆங்கிலேயரை ஆர்ச்பிஷப்பாக நியமனம்

செய்தார். காண்டர்பரியின் குருமார்கள் அவரைத் தேர்ந்து எடுக்குமாறு உத்தரவிட்டு, ஆர்ச்பிஷப் பதவிக்கான அடையாளப் போர்வையைக் கொடுத்து இங்கிலாந்திற்கு அனுப்பினர்.

சமய நம்பிக்கை அதிகமாகப் பரவி இருந்த அக் காலத்தில் ஜான் போப்பாண்டவரையே பகைத்துக் கொள்ள முற்பட்டார். ஸ்டீஃபன் லாங்டனை ஆர்ச்பிஷப்பாக ஏற்க மறுத்தார். இதனால் கோபமுற்ற போப்பாண்டவர் தடை ஆணை (interdict) உத்தரவைப் பிறப்பித்து இங்கிலாந்தின் திருச்சபைகளை மூடச் செய்தார். ஞானஸ்நானம், திருமணம், சாவுக் காலப் பிரார்த்தனை ஆகிய ஒன்றையும் செய்ய ஒருவராலும் இயலாது. சமய நம்பிக்கை மிகுந்திருந்த அக் காலத்தில் 'இன்டர்டிக்ட்' கொடிய தண்டனையாகக் கருதப்பட்டது. மக்கள் அவதிப்பட்டனர். சமயத்திலே பற்றில்லாத ஜானின் பிடிவாதம் சாண்கூட இறங்கவில்லை. கி.பி. 1209-ல் ஜானைப் போப்பாண்டவர் மதவிலக்குச் செய்தார். 'இஃது ஒரு தண்டனையா?' என்று ஏளனமாகச் சிரித்த ஜான் திருச்சபைக்குச் சொந்தமாக இங்கிலாந்தில் இருந்த சொத்துகளைச் சூறையாடினர். பொறுமை இழந்த போப்பாண்டவர் ஜானைத் தண்டித்துக் கிருத்துவ சமயத்தைக் காக்க இங்கிலாந்தின்மீது படையெடுக்கும்படி ஃபிரெஞ்சு அரசன் ஃபிலிப்பை ஏவினர். கடவுளுக்கும் போப்பாண்டவருக்கும் அடங்க மறுத்த ஜானின் செய்கையால் நாட்டிலே அதிருப்தி மிகுந்திருந்தது. கொள்ளையடித்த திருச்சபையின் சொத்துகளும் கரைந்துவிட்டன. தம் கூலிப் பட்டாளத்திற்கு அரசரால் பணம் பட்டுவாடா செய்யவும் முடியவில்லை. அந் நிலையில் ஃபிலிப்பை எதிர்க்க முடியாதென்று உணர்ந்த ஜான் இறுதியில் போப்பாண்டவருக்குப் பணிந்து 1213-ல் கடுமையான நிபந்தனைகளை ஒப்புக்கொண்டார். ஆண்டு ஒன்றுக்கு 1000 மார்க்குகள் கப்பமாகக் கட்டுவதற்கும் இங்கிலாந்தையே போப்பினிடம் மானிய நிலமாக வைத்து அவரின் பெயரால் ஆள்வதற்கும் அந்த ஒப்பந்தப்படி ஜான் ஒப்புக் கொண்டதைத் தேசிய அவமானமாக ஆங்கிலேயர்கள் கருதினர்கள்.

ஸ்டீஃபன் லாங்டனை காண்டர்பரியின் புதிய ஆர்ச்பிஷப்பாக ஜான் ஒப்புக்கொண்டாரென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 8 ஆண்டுகளுக்கு முன்பே இதை ஜான் செய்திருப்பாரேயானால் சச்சரவுக்கும், சரணுகதிக்கும் அவசியமே ஏற்பட்டிராது. ரோமானியப் போப்புக்குத் தம் தாய்நாட்டை விற்றுத், தம் பதவியைக் காத்துக்கொள்ள முனைந்த ஜான்மீது மக்களுக்கும், பிரபுக்களுக்கும் வெறுப்பு ஏற்பட்டது. ஜானின் வரம்பற்ற

அதிகாரங்களுக்கு ஒரு தடையிடப்பட வில்லையென்றால் நாட்டிற்கு மேலும் கேடுகள் விளையும் என எண்ணிய பிரபுக்கள் அரசனின் கொடுங்கோலாட்சியை ஒடுக்க, காலம் பார்த்திருந்தனர்.

தம்முடைய கொடுங்கோலாட்சி இங்கிலாந்திலிருந்த மானியப் பிரபுக்களின் ஆத்திரத்தையும், பகைமையையும் தூண்டி விட்டிருக்கிறதென ஜான் தெரிந்துகொண்டார். தம் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனில் ஒரு வெற்றிகரமான வெளிநாட்டுப் போரைத் தொடங்க வேண்டுமென எண்ணினார். இதுவே மூன்றாவது காரணமாக அமைந்தது.

கி.பி. 1204-ல் இழந்துவிட்ட ஃபிரெஞ்சுப் பகுதிகளை ஜான் மீட்க எண்ணி, ஜெர்மானிய மன்னரான ஆட்டோவுடனும் (Otto) ஃபிளாண்டர்ஸ் கவுண்டனுடனும் (Count of Flanders) கூட்டு சேர்ந்து ஃபிரான்சைத் தாக்கினார். ஜான் வெற்றிகள் ஏதுமின்றி வீணாக ஃபிரான்சில் போர் செய்துகொண்டிருந்தபோது இங்கிலாந்தில் அவரது முக்கிய பிரபுக்கள் மகா சாசனத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். கி.பி. 1210-ல் பூவைன்ஸ் (Bouvines) சண்டையில் ஜான் படுதோல்வியடைந்தது பிரபுக்களுக்குப் புதுத்தெம்பு ஊட்டியது. போரிலே ஜான் வெற்றி பெற்றிருப்பாரானால் அந்தக் களிப்பில் மமதை கொண்டு தம் நாட்டு மக்களின் எதிர்ப்பை அலட்சியப்படுத்தி யிருப்பார். ஆனால், கவலையுடன் ஏமாற்றத்தைச் சுமந்து தோல்வி கண்ட மனிதராக ஜான் இங்கிலாந்து திரும்பினார். அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவருடைய பிரபுக்கள் ஸ்டீஃபன் லாங்டனின் தலைமையில் ஒன்று சேர்ந்து மன்னரை எதிர்க்கத் துணிந்தனர். தேம்ஸ் நதிக்கரையில் ரன்னிமேடு (Runnymede) என்னுமிடத்தில் ஜூன் 15ஆம் நாள் (கி.பி. 1215) பிரபுக்கள் யாவரும் ஸ்டீஃபன் லாங்டன் தலைமையில் மன்னரைக் கண்டு தாங்கள் தயாரித்திருந்த சாசனத்தில் ஜானின் ஒப்புதலைப் பெற்றனர். கையெழுத்திடத் தெரியாத ஜான் தம் முத்திரையை அச் சாசனத்தில் இட்டார். அதுவே மகா சர்சனம் எனப்பட்டது.

மகா சாசனத்தின் முக்கியத்துவம்

அதன் சிறப்பு, அதில் என்ன எழுதப்பட்டிருந்தது, அது எங்ஙனம் செயல்படுத்தப்பட்டிருந்தது என்பதிலில்லை. பின் என்ன? அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்றும், அது எங்ஙனம் செயல்படுத்தப்பட்டது என்றும் பிற்காலத்திய சந்ததியார் நினைத்தனர் என்பதே. பிற்காலத்திய ஸ்டூவர்டுகளின்

(Stuarts) காலத்தில் அரசனுக்கும், பாராளுமன்றத்திற்கும் ஏற்பட்ட தகராற்றில் அச் சாசனத்தின் அம்சங்கள் பாராளுமன்றத் தலைவர்களால் அவ்வப்பொழுது எடுத்துச் சொல்லப்பட்டதிலிருந்து, அதன் முக்கியத்துவம் நமக்குத் தெரியவருகிறது.

63 அம்சங்கள் அடங்கிய மகா சாசனத்தைப் படை மாணியப் பத்திரம் (Feudal Charter) என்று அழைக்கிறார்கள். ஏனெனில், அது சமீப காலத்தில் பறிக்கப்பட்டுவிட்ட உரிமைகளைப் பிரபுகளுக்கு மீட்டுக்கொடுத்தது.

மகா சாசனத்தில் 63 உட்பிரிவுகள் (clauses) இருந்தன. அந்த உட்பிரிவுகளில் கேட்கப்பெற்றிருந்த உரிமைகளில் பெரும் பாலானவை பிரபுக்களைப் பற்றியனவாகவும், படைமாணியத் திட்டத்தைச் செயற்படுத்தவேண்டிய முறையைப்பற்றியன வாகவுமே இருந்தன. உதாரணமாக, அரசர் கொடுக்கும் உதவிகளுக்குப் (relief) பிரபுக்கள் கொடுக்கவேண்டிய தொகை பற்றியவை; வயது நிரம்பாத குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களின் நில உரிமைகளைக் கண்காணிப்பது; யூதர்களுக்குக் (jews) கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுக்கத் தவறிப் போனவர்களின் பிள்ளைகளை நாசத்திலிருந்து காப்பாற்றுவது; விதவையானவர்களின் சீதனத்தைப் பற்றியவை; மேலும் சில உட்பிரிவுகள், பிரபுக்களின் நீதி மன்றங்களிலிருந்து (Baronial Courts) வழக்குகளை அரச நீதி மன்றத்திற்கு மாற்றக்கூடிய அரச ஆணைகளைத் தடுக்கவேண்டுமெனக் கேட்டன. மகா சாசன உட்பிரிவுகளில், அங்ஙனமாக, பிரபுக்களின் அதிகாரம்பற்றியே அதிகமாகக் கேட்கப் பெற்றிருப்பினும், அச் சாசனம் ஆங்கில உரிமைகளின் அடிப்படையாகவும் அமைந்தது. நாடு முழுவதும் ஒரே மாதிரியான எடைகளும் அளவுகளும் (weights & measures) இருக்கவேண்டு மென்றும் சில உட்பிரிவுகள் கோரின. படைமாணிய நீதி முறைகளை எல்லாச் சுதந்தர நிலச் சொந்தக்காரர்களும் பெறவேண்டு மென்றும் அச் சாசனத்தின் விதி ஒன்று கோரியது.

திருச்சபை தேர்தல் விவகாரத்தில் அரசர் முழுவதும் குறுக்கிடக் கூடாதெனவும் அச் சாசனம் வலியுறுத்தியது. பொது வழக்குகளை அரசருடைய நீதி மன்றம் செல்லுமிடங்களுக் கெல்லாம் கொண்டுபோகாமல், வெஸ்ட்மின்ஸ்டரில் (Westminstor) உள்ள நீதி மன்றத்திற்கே கொண்டு செல்லவேண்டு மென்றும் மகா சாசனம் குறிப்பிட்டது. சிறு சிறு குற்றங்களுக்கான வழக்கு விசாரணைகள் அந்தந்த ஷயரிலேயே (shire) நடைபெறவேண்டு மென்றும், குறிப்பிட்ட காலவரையில் அவ் வழக்கு விசாரணை மன்றங்களில் நடைபெற வேண்டுமென்றும், அரசரால்

விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகளை ஷெரிப்புகள் (sheriffs) விசாரிக்கக் கூடாதென்றும் மகா சாசனம் தெளிவாக்கியது.

அரசர் ஜான் காலத்தில் புதியனவாகக் கொண்டுவரப்பட்டிருந்த கானகச் சட்டங்கள் (forest laws) அனைத்தையும் திருத்தி, அக் கானக நிலங்களைச் சாதாரண நிலங்கள்போல் கருதும்படியும், முறையின்றி ஏதாகிலும் அசம்பாவிதம் ஏற்படுமாஞல், அவற்றை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க ஜூரர்கள் (juries) அமர்த்தப்பட வேண்டுமென்றும் மகா சாசனம் கூறியது. சொந்தக்காரர்கள் நிலத்தை இழக்கச் செய்த அபராதங்களையும் கால்நடை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களின் அபராதங்களையும் ஜூரர்கள் மூலமாகவே தீர்மானிக்கவேண்டுமென்றும் அச் சாசனம் எடுத்துக் காட்டியது.

இருப்பினும், இதன் முக்கியமான 4 அம்சங்கள் குறிப்பிடத் தக்கவை. 12வது ஷரத்தின்படி அரசன் பெரும்பரோனியக் கவுன்சிலின் (Great Baronial Council) அனுமதியின்றிப் புதிய வரியை வசூலிக்கக்கூடாது. 39-வது ஷரத்தின்படி சுதந்தரக் குடிமக்கள் எவரையும் விசாரணையின்றியோ அல்லது அவருக்குச் சமமான அந்தஸ்தைப் பெற்ற பிற குடிமக்களின் வாக்கு மூலத்தைக் கேளாமல் கைது செய்யவோ, சிறையில் அடைக்கவோ கூடாது எனவும், 40-வது ஷரத்தின்படி 'சட்டத்தின் முன் எல்லாரும் சமம்' எனவும் உணர்த்தியது. (நீதியை விற்கவோ, மறுக்கவோ தாமதிக்கவோ கூடாது) மேற்சொல்லப்பட்ட அம்சங்களை ஹேலம் (Hallam) என்ற வரலாற்று ஆசிரியர், 'இன்றியமையாத ஷரத்துகள்' (essential clauses) என்றழைக்கிறார். மகா சாசனத்தில் 63-வது ஷரத்தும் குறிப்பிடத்தக்கதே. அதன்படி 25 பேரன்கள் (Barons) அடங்கிய கவுன்சில் நிறுவப்பட்டது. அரசர் மகா சாசனத்தில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்ட அம்சங்களை மறுப்பாரேயாஞல் அவரை எதிர்த்து மக்கள் சார்பிலே கலகம் செய்யக்கூடிய உரிமையைப் பிரபுக்கள் பெற்றனர்.

'ஆங்கிலேயர்களின் உரிமைக்கே அடிக்கல்லாக' மகா சாசனம் புகழப்படுகிறது. பிரிட்டானிய அரசியல் அமைப்பின் பைபில் (Bible) என்றும் இது போற்றப்படுகிறது. பொதுவாக மகா சாசனம் ஒரு நிலமானியப் பத்திரமாகக் கருதப்பட்டாலும், அது அரசனுடைய எதேச்சாதிகாரங்களைக் குறைத்து, மக்களின் உரிமைகளைக் காத்தது என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. பிற்காலத்திய அரசர்கள் நாட்டின் சட்ட திட்டங்களுக்குட்பட்டுத்தான் ஆளவேண்டுமே தவிர, தங்களின்

சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு இலக்காகி ஆட்சி செய்ய முடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தது இந்தச் சாசனம்.

மகா சாசனத்தை, இங்கிலாந்தில் ஏற்பட்ட தேசிய எழுச்சியின் விளைவு என்றும் அழைப்பார்கள். வகுப்பு வேறுபாடுகளை மறந்து குடிமக்களும், குருமார்களும், பிரபுக்களும் சேர்ந்து செயல்பட்டார்கள்.

மன்னராட்சியிலிருந்து, 'மக்களாட்சியில் மன்னராட்சி' என்ற பிற்காலத்திய அரசியல் மாறுதலுக்கு வழிகாட்டியாக மகாசாசனம் அமைந்தது. இதன் அம்சங்களிலே புரட்சிகரமான ஷரத்துகள் எதுவும் இல்லை யெனினும் ஆங்கில மக்கள் எல்லாருக்கும் இச் சாசனம் உரிமைகளை வழங்கவில்லை என்றாலும்கூட ஏன் இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்படுகிறது என்ற கேள்வி எழலாம். நாட்டின் பழக்க வழக்கங்கள், சமதர்ம நீதி போன்றவற்றில் அரசனைக் கட்டுப்படுத்தி, மக்களின் எண்ணம் போல் அரசன் ஆட்சி செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளிலே மகா சானம் முதல் முயற்சி என்பதே பொருத்தமான பதிலாகும்.

கட்டாயப்படுத்தப்பட்ட சூழ்நிலையிலே மகா சாசனத்தில் கையொப்பமிட்டு விட்ட ஜான் 1216-ல் அதன் அம்சங்களை மீற முயன்றபோது அதன் 63-வது அம்சத்தின்படி பிரபுக்கள், மக்களின் ஆதரவுடன் போர்க்கோலம் பூண்டு அரசனை எதிர்க்க முற்பட்டனர். இதற்கிடையே காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஜான் காலமானார். சுயநலம், வரட்டுப் பிடிவாதம், மனப் பேதலிப்பு போன்றவற்றையே தனிக்குணங்களாகப் பெற்றிருந்த ஜானின் மரணம் மகா சாசனத்திற்கு நிரந்தரத் தகுதி அளித்தது.

இவ் வகையான அடிப்படை உரிமைகளைப் பரம்பரை பரம்பரையாக எல்லாச் சுதந்தர மக்களுக்கும் சாசனப்படுத்திய தாலேயே, அப் பத்திரம், 'மகா சாசனம்' (The Great Charter) எனப் பிற்காலத்தில் அழைக்கப்பட்டது.

குற்றம் புரிந்தவர்கள் ஜூரர்களாலோ பாராளுமன்றத் தாலோ விசாரிக்கப்படாமல் சிறைப்படுத்தப்பட்டபோதும், அரசர் எதேச்சதிகாரமாக வரி விதிக்க முற்பட்டபோதும் 1215-ல் கையெழுத்தான மகா சாசனத்தைச் சுட்டிக் காட்டி ஆங்கில மக்கள் காலப்போக்கில் தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள விழைந்தனர்.

(இ) மூன்றும் ஹென்றி — சைமன் - டி - மான்ட் ஃபோர்டு [(Simon - De - Mont Fort 1264 - 1265.)]

அரசன் ஜான் காலமடைய, அடுத்து வாரிசாகப் பட்டத் திற்கு வந்தவர், அவருடைய மகனான மூன்றும் ஹென்றி (1216 - 1264). தந்தை எவ்வழியோ தனயன் அவ்வழி. அவசிய மற்ற சண்டைகளுக்கும் ஊதாரித் தனமான செலவுகளுக்கும் ஹென்றி III காரணமாக இருந்தார். வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப் பட்ட அந்நியர்களுக்கு, அரசர் அதிகாரங்களை வாரிக் கொடுத் தார். இவற்றின் காரணமாகப் பிரபுக்களுக்கு அரசரின்மேல் அதிருப்தி ஏற்பட்டது. அரசரை ஒழுங்குபடுத்த 1258-ல் ஆக்ஸ்ஃபோர்டு நகரில் ஒரு பிரபுக்கள் குழு (The Council of Oxford) கூடியது. மூன்றும் ஹென்றியின் ஆட்சியிலேயே இது ஒரு திருப்புமுனை. ஆக்ஸ்ஃபோர்டு சபையில் (Oxford Council) முக்கியப் பங்கெடுத்துக் கொண்டவரே சைமன் - டி - மான்ட் ஃபோர்டு.

சைமன் ஆதிக்கம் பெறுதல்

ஃபிரான்சில், பிரபுக்கள் குடியில் பிறந்த சைமன், மூன்றும் ஹென்றியினால் இங்கிலாந்திற்கு வரவழைக்கப்பட்ட அந்நியர் களிலே ஒருவராவார். அறிவும் ஆற்றலும் பெற்றிருந்த சைமன் அரசரின் சகோதரியை மணந்து லீசெஸ்டருக்கு எர்ல்லாக (earl) அமர்த்தப்பட்டார். பின்னர், காஸ்கனியின் (Gascony) அதிபராகவும் ஆக்கப்பட்டார். இருப்பினும் 1253-ல் அரச ருக்கும், சைமனுக்கும் மனத்தாங்கல் ஏற்பட அதன் விளைவாக ஹென்றியை எதிர்த்த பிரபுக்களோடு சைமன் சேர்ந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை உண்டானது.

1258-ல் கூடிய ஆக்ஸ்ஃபோர்ட் சபை (Council of Oxford) அரசருடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்த 27 பிரபுக்க ளடங்கிய ஒரு குழுவை ஏற்படுத்தியது. அந்தப் பிரபுக்களின் குழுவில் சைமன் பிரதான அங்கம் வகித்தார். ஆரம்பத்தில் பிரபுக்களின் குழுவுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி நடத்துவதாக ஒப்புக்கொண்ட மூன்றும் ஹென்றி 1264-ல் தம் வாக்கை மீறி ஆக்ஸ்ஃபோர்டு குழுவின் தீர்மானம் தம்மைக் கட்டுப்படுத்தாது எனக் கூறினார். இதனால் வெகுண்ட பிரபுக்கள் சைமன் தலைமையிலேயே போர்க்கோலம் பூண்டனர். இதன் விளைவாக இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது.

சசக்ஸ் பகுதியில் லீவீஸ் (Lewes) என்ற இடத்தில் அரசருடைய படைகள் காத்திருந்தன. அருகில் ஒரு குன்றின்

மீது சைமன் தம் விருதுக்கொடியை (banner) நட்டு வைத்திருந்தார். சைமன் தம் படைகளுடன் அங்குக் காத்திருக்கிறார் என்று தவறாக நினைத்து மூன்றாம் ஹென்றியின் மகனான இளவரசர் எட்வர்டு (Edward) தம் படையுடன் தந்தையை விட்டகன்றார். அரசரின் படையில் பாதி லீவீசை விட்டு விலகிப் போகவே வேறு திசையில் இருந்து திடீரென்று சைமன் தாக்கினார். தொடர்ந்து நடந்த சண்டையிலே 1264 மே 14-ல் மூன்றாம் ஹென்றி தோற்கடிக்கப்பட்டுச் சிறை பிடிக்கப்பட்டார். 'அம்மியே பறந்தபோது இலவம் பஞ்சு எம்மாத்திரம்' இளவரசர் எட்வர்டும் பிறகு சிறை பிடிக்கப்பட்டார்.

சைமனுடைய குணாதிசயம் ஓர் வரலாற்றுப் புதிராக இருக்கிறது. அவர் அதிகார வெறி பிடித்த போர் வீரரா? மக்கள் உரிமையிலே நாட்டம் கொண்ட நல்லாட்சியாளரா? என்பது பற்றிக் கருத்து வேற்றுமைகள் உள்ளன. பிரபுக்களின் கட்சிக்குத் தலைவரா? பாமர மக்களுக்குத் தலைவரா? என்பதும் சர்ச்சைக்குரிய விஷயமே.

சைமனின் பாராளுமன்றம்

இவரோ ஃபிரான்சு நாட்டில் பிறந்து வளர்ந்த அந்நியர். ஓர் அந்நியரை எத்தனை காலம் ஆங்கில மக்கள் அரசராக ஒப்புக்கொள்வார்கள், இவரோ ஓர் சாதாரண பிரபுக்குடியைச் சார்ந்தவர். ஆண்டுவந்த அரசரும், அடுத்து ஆளவேண்டிய அரசரும் சிறையிலே இருக்க, சைமனுக்கு உள்ளூரத் திகில் இருக்கத்தான் செய்தது. தம் ஆட்சி நீடிக்க வேண்டுமென்றால்-தம் அதிகாரம் நிலைத்து நிற்க வேண்டுமென்றால் அதற்கு மற்ற முக்கியப் பிரபுக்களின் உதவி தேவை என்பதைச் சைமன் உணர்ந்திருந்தார். மக்கள் தம் ஆட்சியை மதிக்கவேண்டுமென்றால், மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபையைக் கூட்டி அதன் ஆலோசனையின்பேரிலே ஆட்சி செய்ய நினைத்தார். அதன் விளைவாகவே இங்கிலாந்து அரசியல் அமைப்பிலே ஒரு சோதனை செய்யப்பட்டது. அதுவே 1265-ல் கூட்டப்பட்ட பாராளுமன்றம். இக் கூட்டத்திற்கு 23 பிரபுக்களும் 120 குருமார்களும் அழைக்கப்பட்டனர். இந்த இரண்டு வகுப்பினர் கூடிவிட்டால் போதுமா? மக்களின் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமே? ஆகவே, தமக்கு நட்பாக இருந்த ஷையர்களிலிருந்து (shire) இரண்டு நைட்டுகளையும் (knights), பரோக்களிலிருந்து (boroughs) இரண்டு நகரவாசிகளையும் கூட்டத்திற்கு வரவழைத்தார். பிரபுக்கள், குருமார்கள், மக்களின் பிரதிநிதிகள் ஒருங்கே வரவழைக்கப்பட்டு ஒருங்கே செயல்பட வாய்ப்பளிக்கப்

பட்டதால் சைமனைப் 'பாராளுமன்றத்தின் தந்தை' என அழைக்கிறார்கள். சைமனின் இம் முயற்சியில் சுயநலம் அதிகமிருந்ததா? பொதுநலம் அதிகமிருந்ததா? என்பதும் சர்ச்சையே. இங்கிலாந்தில் இருந்த எல்லா ஷையர்களிலிருந்தோ அல்லது பரோக்களிலிருந்தோ பிரதிநிதிகள் வரவழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சைமனின் பாராளுமன்றம் ஓர் ஆலோசனை அமைப்பாகவே இருந்தது. அப் பாராளுமன்றம் என்ன சாதித்தது என்பதைவிட, யார் யாரை அங்கத்தினர்களாகக் கொண்டிருந்தது என்பது நினைவில் கொள்ளவேண்டிய தொன்று. 'பாராளுமன்றத்தின் அமைப்பு இப்படித்தான் இருக்கவேண்டுமென்று பிற்காலத் தவர்களுக்குச் சைமன் பார்லிமென்டு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. சாதாரணக் குடிமக்களுக்கும் ஆட்சிப் பொறுப்பில் பங்கு உண்டு என்னும் வழக்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

சைமனின் வீழ்ச்சி

சைமன் ஆட்சி பெற்று இருந்தது ஓர் ஆண்டுக் காலமே; பொறுமையின் காரணமாகப் பல பிரபுக்கள் அவரை எதிர்க்க முற்பட்டனர். சைமன், பிரபுக்களுக்குச் சொந்தமான கோட்டைகளை இடித்து நிலங்களை அழித்து ஆடுமாடுகளைக் கடத்திச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. இச் செய்கை அவருடைய முரட்டுத்தனத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இவரொரு அந்நியரானதால் நாள் ஆக, ஆகப் பிரபுக்களுக்குச் சைமன்மீது கசப்புணர்ச்சி உண்டானது. அதிருப்தி அடைந்த பிரபுக்களிலே கிளவுசெஸ்டர் எர்ல் என்பவரும் ஒருவர். இதற்கிடையே சிறையில் வைக்கப்பட்டிருந்த இளவரசர் எட்வர்ட் தந்திரமாகத் தப்பி சைமனை எதிர்க்க அதிருப்தி கொண்டிருந்த பிரபுக்களுடன் சேர்ந்துகொண்டார். கிளவுசெஸ்டர் எர்லின் உதவியால் படைபெற்ற இளவரசர் எட்வர்டு ஈவ் ஷேம் (Eve Sham) என்ற இடத்தில் (4, ஆகஸ்ட், 1265) சைமனை எதிர்த்துப் போரிட்டார். சைமன் போர்க்களத்திலேயே உயிர் துறந்தார்.

அவர் கொல்லப்பட்டபோதிலும் அவரை நாட்டுமக்கள் தொடர்ந்து புகழ்ந்தார்களென்றால் அது அவர் வீர மரணம் அடைந்தார் என்பதற்கு மட்டுமன்று; மூன்றாம் ஹென்றியின் வலுவற்ற, அடக்கமற்ற ஆட்சியை அடக்கிப் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு அவர் வழிகோலினார் என்பதற்கே. சைமன் எவரொருவரால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டாரோ,

அவரே முதலாம் எட்வர்டு ஆக இங்கிலாந்து அரியணையில் அமர்ந்து, (1272) சைமன் வழியைக் கடைப்பிடித்து மாதிரிப் பாராளுமன்றத்தைக் (Model Parliament) கூட்டினரென்பதி லிருந்து சைமனின் பெருமையை நாம் மேலும் அறியமுடிகிறது.

(ஈ) முதலாம் எட்வர்டு (1272—1307)

ஈவ் ஷேம் (Evesham) களத்தில் சைமன் கொல்லப்பட்டதை நாம் அறிவோம். அதைத் தொடர்ந்து இளவரசர் எட்வர்டு தம் தந்தையான மூன்றும் ஹென்றியைச் சிறையிலிருந்து விடுவித்து அரியாசனத்தில் அமர்த்தி வைத்துவிட்டுச் சிலுவைப் போரில் கலந்து கொள்ளப் புண்ணிய பூமிக்குச் (Holyland) சென்றுவிட் டார். கி.பி. 1272-ல் தம் தந்தை இறந்தபோது நாடு திரும்பி, முதலாம் எட்வர்டு என்ற பட்டப்பெயர் சூட்டிக்கொண்டு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தார்.

சுறைதிசயங்கள்

வசீகரம், அறிவுத் துணிவு, நேர்மை ஆகிய நற்பண்புகளுக்கு உறைவிடமாக இருந்த எட்வர்டு அப்போது முப்பத்து மூன்று ஆண்டுகள் நிரம்பப் பெற்றவராக இருந்தார். தாம் பிறந்ததும் வளர்ந்ததும் இங்கிலாந்தின் மண்ணிலே ஆனதால் எட்வர்டின் எண்ணமும் விருப்பமும் இங்கிலாந்தைப் பற்றியனவாகவே இருந் தன. உருவத்திலும், குணத்திலும், நடத்தையிலும் அரசராகக் காணப்பட்ட எட்வர்டு ஆங்கிலேய அரசர்களில் மிக முக்கியமான வர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

தம் பாட்டன் ஜான், தகப்பன் மூன்றும் ஹென்றி போன் றோரின் ஆட்சிகளில் நேர்ந்த அவலங்களுக்கு ஆளாகாமலிருக்க எட்வர்டு பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுல்தான் தமது ஆதிக்கமும் மிகுதியாக வளரும் என்பதை உணர்ந்திருந்த முதலாம் எட்வர்டு அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்து குடிகளின் குறைகளை அறிந்து அவற்றைப் போக்க விழைந்தார்.

ஆட்சிச் சிறப்பு

முதலாம் எட்வர்டு காலத்தின் சிறப்பு அம்சமாக விளங்குவன அவரால் கொண்டுவரப்பட்ட சட்டங்களாகும்.

கி.பி. 1278-ல் 'கிளஸ்டர் சட்டம்' (Statute of Gloucester) இயற்றப்பட்டது. மானியப் பிரபுக்கள் தலைமை வகித்து நடத்திய நீதி மன்றங்களின் அதிகாரத்தையும் ஆதிக்கத்

தையும் மிகுதியாகக் குறைத்து, இச் சட்டம் நாட்டிலே சீரான நீதி நிலவ உதவியது.

நிலமானியப் பிரபுக்களால் நாட்டிலே செயல்படுத்தப்பட்டு வந்த தனியார் நீதிமன்றங்கள் 'எந்த உரிமையின்' அடிப்படையில் இயங்கி வந்தன என்று கண்டறிய, முதலாம் எட்வர்டு 'குவா வாரன்டோ' (Qua - Warranto) என்ற ஆணையைப் பிறப்பித்தார். குவா வாரன்டோ என்ற அச் சொற்றொடருக்கு 'எந்த உரிமையின் பேரில்' என்பது பொருளாகும். அச் சட்டம் 'எந்த உரிமையின் பேரில்' என்னும் சொற்களில் தொடங்கியமையால், அச் சட்டத்திற்கே 'குவா வாரன்டோ' என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

நிலமானியப் பிரபுக்களால் நடத்தப்பட்டு வந்த நீதி மன்றங்கள் மன்னரால் கொடுக்கப்பட்ட சாசனம் (charter) அல்லது நீண்ட கால அநுபவ உரிமையின் (long usage) அடிப்படையிலேயே, செயல்படவேண்டுமென்ற நியதி இருந்தது. அந்தத் தகுதியின்பேரில் நாட்டிலுள்ள பிரபுக்களின் நீதி மன்றங்கள் செயல்படுகின்றனவா என்று விசாரிக்க அரசர் எட்வர்டு தம் அரசாங்க அதிகாரிகளைப் பணித்தார். அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் தகுதியில்லாத பல தனியார் நீதி மன்றங்களைக் கலைக்கும்படி அரசர் உத்தரவிட்டார். மன்னர்களால் அப்போதைக்கப்போது அளிக்கப்பட்டுவந்த பிரபுக்களின் நீதி மன்றங்கள் 'தகுதியுடையவைகளாக' இருந்திருப்பினும், அவற்றின் எண்ணிக்கையையும் அரசர் குறைக்க விரும்பினர். அதன்படி, அரசர் முதலாம் ரிச்சர்டு காலத்திற்குப் பின்னால், சாசனங்களின் அடிப்படையிலே அமைக்கப்பட்டிருந்த அத்தனை தனியார் நீதிமன்றங்களையும் கலைத்துவிடும்படி முதலாம் எட்வர்டு உத்தரவிட்டார். இங்ஙனமாக, மேற் கூறிய சட்டத்தினால் பிரபுக்களின் நீதி நிர்வாக அதிகாரத்தைக் குலைத்ததோடல்லாமல், எல்லா நீதி மன்றங்களையும் மன்னருடைய நேரடியான ஆட்சிக்குட்படுத்த முதலாம் எட்வர்டு முனைந்தார்.

கி.பி. 1279-ல் 'மார்ட் மெயின் சட்டம்' (Statute of Martmain) இயற்றப்பட்டது. திருச்சபைக்கு மேலும் மேலும் சொத்துகள் சேர்ந்து வந்ததால் அதன் அதிகாரம் வரம்பில்லாமல் வளருவதை எட்வர்டு உணர்ந்தார். அதைக் கட்டுப்படுத்த இச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அரசருடைய அநுமதியில்லாமல் புது நிலங்களைத் திருச்சபைக்கு மக்கள் எழுதி வைக்க இயலாதபடி செய்யப்பட்டது.

1283-ல் 'ஆக்டன் பர்னல்' (Acton Burnell) என்ற சட்டமும் இயற்றப்பட்டது. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கத் தவறியவர்களைத் தண்டிக்கவே இச் சட்டம் கொண்டு வரப்பட்டது. கடனாளிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப் படலாமென்றும், அவர்கள் சிறையிலே அடைக்கப்படலா மென்றும் இக் சட்டம் வலியுறுத்தியது. கடன் கொடுத்துவிட்டுத் திரும்பப்பெற முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்த வியாபாரி களுக்கு இச் சட்டம் சாதகமாக இருந்தது.

சொத்து மரபுரிமையைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசர் எட்வர்டு கி.பி. 1285ஆம் ஆண்டில் கட்டுப்பாட்டிற்குட்பட்டுச் சொத்து மாற்றம் (De Domis Conditionalibus) என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார். இதை முதலாம் வெஸ்ட் மின்ஸ்டர் சட்டமெனவும் அழைப்பார்கள். அதன்படி, நிலக் கிழார் ஒருவர் இறந்து போனாராயின் அவரின் மொத்தச் சொத்துகளும் மூத்த பிள்ளைக்கே சேரவேண்டுமென்று வலி யுறுத்தப்பட்டது. அதனால் தங்களுக்குப் பங்கில்லையென உணர்ந்த மற்ற இளைய பிள்ளைகள் அவர்களின் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள இராணுவம், வியாபாரம் போன்ற துறை களிலே ஈடுபட்டு முன்னேற முடிந்தது; இல்லாதுபோயின் 'பிரபுக்களின் குடும்பம்' என்ற போலிக் கௌரவத்தில் அவர்கள் சோம்பித் திரிந்திருப்பார்கள்.

இரண்டாம் வெல்ஸ்ட் மின்ஸ்டர் (Statute of Westminster II) என்ற சட்டத்தின்படி குற்றவாளிகளை மறைத்து வைக்கக்கூடா தென்றும், அப்படிச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும், தமது அதிகார எல்லைக்குள் நடக்கும் குற்றங்களுக்கு நூற்றுவர் மன்றம் (Hundred Court) கூட்டுப் பொறுப்பாளியாக (collective responsibility) இருக்கவேண்டுமென்றும் அதற்காக அவை தேவையான படைக் கலம் கொண்டு இருக்கவேண்டுமென்றும், கட்டுப்பாடுகள் செய்யப்பெற்றன. இச் சட்டம் நாட்டிலே குற்றங்கள் அதிகமாக ஏற்படாமல் தடுத்தது.

கி.பி. 1290ஆம் ஆண்டில் நிலமானியப்படை முறையில் காலத்திற்கேற்ப மாற்றங்களைச் செய்து, தம் அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொள்ள 'குவா எம்ப்டோரஸ்' (Qua Emptores) என்ற சட்டத்தை அரசர் எட்வர்டு கொண்டுவந்தார். அச் சட்டம் எத்தகைய கட்டுப்பாடும் இன்றி நிலத்தை விற்பதற்கு உரிமை அளித்ததெனினும், நிலத்தை வாங்குபவர் அரசரின் கீழாளாகவோ, பிரபுவின் கீழாளாகவோ இருக்கவேண்டுமே யன்றி நிலத்தினை விற்பவரின் கீழாளாக இருக்கக் கூடாதென்று

வற்புறுத்தியது. இச் சட்டத்தினால் நிலமானியப்படை முறைக் கட்டணங்களை (feudel dues) அரசரும், தலைமைக் குத்தகைக்காரர் களும் பெற ஏற்பாடு செய்யப்பட்டதோடன்றி, தங்களுக்குக் கீழே சிறிய பிரிவுகள் எதுவும் ஏற்படாமலும் தடுக்கப்பட்டது.

முதலாம் எட்வர்டு (1272–1307) 'ஆங்கிலேய ஜஸ்டினியன்' என்று புகழப்படுகின்றார். ஜஸ்டினியன் (Justinian) என்ற அந்த அரசர் ரோமாபுரியின் பழைய சட்டங்களையெல்லாம் ஒருங்கு திரட்டி, அவற்றை முறைப்படுத்தி, சட்டத் தொகுப்பாகச் செய்ததுபோல், அரசர் எட்வர்டும், பழைய ஆங்கிலச் சட்டத் தின் அடிப்படையில் புதிய இயல்புகளைச் சேர்த்து, தம் சட்ட உணர்வை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு பல சட்டங்களை இயற்றி முதலாம் எட்வர்டு தமது ஆட்சியைக் குறைபாடின்றிக் காத்துக்கொண்டார்: மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்ய விரும்பாத முதலாம் எட்வர்டு 1290-ல் யூதர்களை நாட்டைவிட்டு ஓட்டிய தும் இவரின் காலத்திய இன்னொரு முக்கியச் சம்பவமாகும்.

நார்மானியப் படையெடுப்புக் காலத்திலே யூதர்கள் இங்கி லாந்துக்கு வந்திருந்தனர்; வட்டிக்குப் பணம் கொடுக்கும் லேவா தேவித் தொழிலில் ஈடுபட்டிருந்த யூதர்களின்மீது, ஆங்கிலேய ருக்கு அதிருப்தி இருந்து வந்தது. யூதர்களின் சமய வழக்கங் களும், இனத் திமிரும் கசப்புணர்ச்சியை இன்னும் அதிகரித்தது: யூதர்களை, கிருத்துவரல்லாதார் என்றும் வெளிநாட்டார் என்றும் ஆங்கிலேயர்கள் வெறுத்தனர். அவ்வப்போது அவர் களுக்கு எதிராகக் கலகங்கள் தோன்றியவண்ண மிருந்தன: மக்களின் மனநிலையைப் புரிந்துகொண்ட முதலாம் எட்வர்டு யூதர்களின் கொடுக்கல் வாங்கல் தொழிலுக்குத் தடை விதித் தார். யூதர்கள் நிலங்களைக் குத்தகைக்கும் வைத்திருக்க முடியாத உத்தரவு இடப்பட்டது. இங்கிலாந்தில் வசதிகளோடு யூதர்கள் வாழ முடியாதபடி எட்வர்டு தடை உத்தரவுகளை விதித்தும், யூதர்கள் நாட்டிலேயே இருந்து வந்தனர்; எதிர்ப்பும் அதிகமாகிக் கொண்டு வந்தது. நிலைமை சீர்கெட்டுப் போவதற்கு முன்னரே யூதர்களை வெளியேற்ற நினைத்த அரசர் 1290-ல் அதற்கான ஆணையைப் பிறப்பித்தார். யூதர்கள் வெளியேறியதால் நாட்டிலே பொருளாதார மந்தம் ஏற்பட்டு விடக்கூடாதென எண்ணிய அரசர் இத்தாலியத் தனவந்தர்களையும் வியாபாரிகளை யும் இங்கிலாந்துக்கு வரவழைத்தார்.

எட்வர்டின் ஆட்சி அவரின் சட்டதிட்ட முறைகளால் மட்டும் புகழ் பெறவில்லை. கி.பி. 1295-ல் தேசிய ஆட்சி

முறைக்கு அடிப்படையாக அமைந்த பாராளுமன்றத்தைக் கூட்டியதனாலும் அவர் கீர்த்தி பெற்றார். ஆங்கிலேயரின் அரசியல் வரலாற்றில் சிறப்புப் பெற்ற 'மாதிரிப் பாராளுமன்றம்' (Model Parliament) என்ற மன்றம் இவர் காலத்திலேயே கூட்டப்பட்டது.

சைமன் காலத்தில் பாராளுமன்ற முறையில் வளர்ச்சி யிருந்ததைக் கண்டிருந்தோம். கி.பி. 1295-ல் கூட்டிய மன்றத்திற்கு எர்ல்கள் (Earls), பிரபுக்கள் (Barons) பிஷப்புகள் (Bishops) ஆகியோரன்றி ஒவ்வொரு ஷயரிலிருந்தும் இரண்டு நைட்டுகளும் (Knights) ஒவ்வொரு பரோ, நகரம் ஆகியவற்றிலிருந்து இரண்டு பர்கேயர்களையும், நகரத்தார்களையும் எட்வர்டு வரவழைத்தார். முதல் முறையாகச் சமய குருமார்களின் கீழ்ப்பிரிவினரின் பிரதிநிதிகளும் (lower clergy) வரவழைக்கப்பட்டனர். இங்ஙனம் பிரபுக்கள், சாமானியர்கள், திருச்சபையினர் என்னும் மூவகை சமூகப் பிரிவுகளும் அம் மன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. ஆகவே, இதனை 'மாதிரிப் பாராளுமன்றம்' (Model Parliament) எனப் பிற்காலத்தவர் அழைத்தனர். பிற்காலப் பாராளுமன்றங்கள் யாவும் இம் மன்றத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டன என்பதை நாம் நினைவு கொள்ளவேண்டும்.

'மக்கள் எல்லாரையும் பாதிக்கக்கூடிய விஷயங்களைப் பற்றிய முடிவுகள் மக்கள் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்' ('What touches all, must be approved by all') என்ற குறிப்புடன் பிரதிநிதிகளைத் தம் மன்றத்திற்கு எட்வர்டு அமைத்திருந்ததை ஒட்டியே பாராளுமன்றத்தைக் கலந்து ஆலோசியாமல் நாட்டின் பொது விவகாரங்களைப்பற்றிய முடிவுகளை மன்னர் செய்யக்கூடாதென்ற மரபு தோன்றியது. அதுவே பிரதிநித்துவ ஆட்சிக்கு வித்திட்டது.

இவ்வாறு பல நல்ல சட்டங்களை இயற்றிய மக்களின் மன நிலையைப் புரிந்துகொண்டு தேசிய ஆட்சி முறைக்கு அடிகோலிய முதலாம் எட்வர்டின் வெளிநாட்டுக் கொள்கையை அடுத்ததாகப் பார்ப்போம்.

படையெடுப்புகள்

இவரது அயல்நாட்டுக் கொள்கையின் முதல் அம்சமாக அமைவது எட்வர்டின் வேல்ஸ் படையெடுப்பு.

முதலாம் எட்வர்டின் காலத்திலேயே இங்கிலாந்தின் மேற்குப் பகுதியான வேல்ஸ் கைப்பற்றப்பட்டு பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

கடந்த எட்டு நூற்றாண்டுகளில் வேல்ஸ் பகுதியைக் கைப்பற்றி பிரிட்டிஷ் பகுதிகளோடு இணைக்கத் தொடர்ந்து நடந்துவந்த போராட்டத்தின் இறுதிக் கட்டத்தை இங்கு நாம் காணவேண்டியிருக்கிறது. இனத்தாலும், மொழியாலும் வேறு பட்டிருந்த இப் பகுதியில் பல சிறிய தலைவர்கள் ஆதிக்கம் பெற் றிருந்தனர். முதலாம் எட்வர்டு காலத்தில் இரண்டாம் லெவில் லின் (Llewelyn II) என்பவர் வேல்ஸில் பேராதிக்கம் பெற்றி ருந்தார்.

சாக்சானியர்களையும் விரட்டிவிட்டு வேல்ஸைத் தனி அரசாக்க வேண்டுமென்று லெவில்லின் விரும்பினார்; எட்வர்டுக்கு விசுவாச வாக்குறுதி அளிக்க மறுத்தார். எட்வர்டின் பழைய எதிரியான சைமனின் மகளைத் திருமணம் செய்துகொள்ள வேல்ஸ் தலைவர் திட்டமிட்டிருந்தார். இக் காரணங்களால் கி.பி. 1276-ல் பெரும்படைகொண்டு எட்வர்டு மன்னர் வேல்ஸைத் தாக்கினார். அதுவரை லெவில்லினின் அதிகாரத்திற்கு உட்பட் டிருந்த சிறு தலைவர்கள் எட்வர்டுக்குப் பணிந்தனர். செஸ்டர் (Chester), கேன்டர்டு (Cantred), டீகன்வி (Deganwy) போன்ற வடவேல்ஸ் பகுதிகளை வென்று வெற்றிவாகை சூடிய எட்வர்டு ஸ்னேடன் (Snowdon) கோட்டையில் லெவில்லினை அடைக்கச் செய்து முற்றுகையிட்டார். எதிர்த்துச் சண்டையிடமுடியாத வேல்ஸ் பெருந்தலைவர் கான்வே (Conway) என்னுமிடத்தில் எட்வர்டுடன் உடன்பாடு செய்துகொண்டார்.

கைப்பற்றப்பட்ட வேல்ஸ் பகுதிகள் எட்வர்டின் ஆதிக் கத்தின்கீழ் வரவே, லெவில்லின் ஒரு சிறு மானியக் கீழ்ப் பிரபுவாக வடவேல்ஸில் இருக்கவேண்டிய இழிநிலையைப் பெற்றார்.

ஆயுத பலத்தினால் வேல்ஸ் அடக்கப்பட்டிருந்ததால் அம் மக்களுக்கு ஆங்கிலேய ஆதிக்கத்தின்மீது வெறுப்பு ஏற்பட்டது. தம்மோடு போர் தொடுத்திருந்த அம் மக்களை எட்வர்டும், கடுமை யாக நடத்தத் தொடங்கினார். விளைவாக, கி.பி. 1282-ல் தென் வேல்ஸில் ஓர் எதிர்ப்புத் தோன்றியது. அதற்கு லெவில்லின் சகோதரரான டேவிட் தலைமை தாங்கினார். அடுத்தாற்போல் வடவேல்ஸிலும் லெலில்லின் தூண்டுதலால் கலகம் ஏற்பட்டது. 1283-ல் எட்வர்டு மீண்டும் வேல்ஸின்மீது படையெடுத்தார். ஓரனின் பாலத்தில் (Orewyn Bridge) நடந்த சண்டையில் லெவில்லின் தோற்று வீரமரணம் எய்தினார். அடுத்து ராபர்ட்டும் கைது செய்யப்பட்டு ஷ்ரூஸ்பரியில் (Shrewsbury) தூக்கிலிடப் பட்டார். இங்ஙனம் வேல்ஸ் அடக்கப்பட்டது.

கி.பி. 1284-ல் இயற்றப்பட்ட 'வேல்ஸ் சட்டத்தின்படி' எட்வர்டின் நேரடியான ஆட்சியின்கீழ் வேல்ஸ் கொண்டுவரப் பட்டது.

ஆங்கில்சி (Angleecy), கார்னர்வன் (Carnarvan), மெரி யோனத் (Merioneth), கார்டிகன் (Cardigan), கார்மார்தன் (Carmarthan) என ஐந்து பிரிவுகளாக ஆக்கப்பட்ட வேல்ஸ் பகுதி களில் தல ஆட்சி முறையும், புதுச் சட்டங்களும் புகுத்தப் பட்டன. பழைய கோட்டைகளைப் புதுப்பித்து ஆங்கிலப் படை களை அதில் அடக்கிவைத்தார். வேல்ஸ் பகுதிகளில் ஆங்கி லேயர்கள் குடியேறுவதற்கும் எட்வர்டு வாய்ப்பளித்தார். தம் மகன் அடுத்த வாரிசான இரண்டாம் எட்வர்டு வேல்ஸ் பகுதியான கார்னர்வனில் பிறந்ததால் கி.பி. 1301-ல் அவருக்கு 'வேல்ஸ் இள வரசு' (Prime of Wales) என்று பட்டம் சூட்டினர். இங்கிலாந்து மன்னரின் மூத்த மகனுக்கு அங்ஙனம் பட்டமிடுவது இன்றைக்கும் உள்ள மரபாகும்.

வேல்ஸ் பகுதிகளை வென்ற எட்வர்டின் கவனம் அடுத்து ஸ்காட்லாந்துமீது திரும்பியது. ஸ்காட்லாந்தை ஆண்டுவந்த மூன்றும் அலெக்சாந்தர் கி.பி. 1286-ல் இறந்துபோகவே கேன் மோர் அரச மரபின் ஆட்சி முடிவுற்றது. அரசன் இறந்ததை ஒட்டி ஸ்காட்லாந்தில் நாளுக்கு நாள் குழப்பங்கள் மிகலாயின. தமது ஆட்சியை ஸ்காட்லாந்தில் ஏற்படுத்த அதுவே தக்க தருண மென எட்வர்டு எண்ணினர். அதற்கேற்பத் தம் மகனை எட்வர்டு கார்னர்வனுக்கும், அலெக்சாந்தரின் மகளுக்கும் திருமணம் முடித்து, இரு நாடுகளையும் ஐக்கியப்படுத்த நினைத்தார். ஆயின் 1290-ல் அப் பெண் காலமாகிவிடவே அத் திட்டம் நிறைவேறுமல் போயிற்று. பட்டத்திற்கு உரிமையுள்ளவர்கள் வேறு எவரும் இல்லாமல் போக, ஸ்காட்டிய மக்கள் எட்வர்டின் உதவியை நாடி, தங்கள் அரசுக்கு நல்ல ஏற்பாடு செய்யவேண்டுமென முறையிட்டனர்.

அச் சமயத்தில் ஜான் பாலியல் (John Balliol), மூத்த ராபர்ட் புரூஸ் (Robart Bruce) என்ற இரு நார்மானியப் பிரபுக்கள் தங்களின் உறவின் பெயரால் ஸ்காட்லாந்தின் அரச உரிமைக்குப் போட்டியிட்டனர். 1291-ல் அவர்களின் உரிமைகளை விசாரிக்க எட்வர்டு நோர்ஹாம் கோட்டைக்குச் (Norham Castle) சென்று ஒரு விசாரணை மன்றத்தைக் கூட்டினர். விசாரணைக்குப் பிறகு ஜான் பாலியலே ஸ்காட்லாந்திய அரசுக்கு உரிமையுள்ளவர் என அம் மன்றம் தீர்ப்பளித்தது. எட்வர்டுக்கு விசுவாச வாக்குறுதி அளிக்கவும் ஒப்புக்கொண்ட ஜான் பாலியல் ஸ்காட் லாந்தின் அரசரானார்.

இதற்குப் பின், ஸ்காட்லாந்தின்மீது தம் ஆதிக்கத்தைச் சிறுகச் சிறுகத் திணிக்க முதலாம் எட்வர்டு முயன்றதாலேயே கி.பி. 1296–ல் சண்டை மூண்டது.

ஸ்காட்லாந்திய நீதி மன்றங்களில் தீர்ப்பான வழக்குகளின் மேல்முறையீட்டை (appeal) விசாரிக்கும் உரிமை தமக்கு உண்டென்று எட்வர்டு ஆணையிட்டார். ஸ்காட்லாந்திய அரசரான ஜான் பாலியலை ஆங்கிலப் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் எட்வர்டு வற்புறுத்தினார். இதனால் அதிருப்தி அடைந்திருந்த ஸ்காட்லாந்தியர்களுக்கு எட்வர்டின் அடுத்த ஆணை ஆத்திரத்தைக் கொடுத்தது. கி.பி. 1295-ல் காஸ்கனியில் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் சண்டை மூள, ஸ்காட்லாந்தில் படைகளைத் தம் உதவிக்கு அனுப்ப வேண்டுமென எட்வர்டு ஆணை பிறப்பித்தார். பணிந்து போகவும் மனமில்லாமல் பகைத்துக்கொள்ளவும் துணிவில்லாத பாலியல் சிலகாலம் தயங்கினார். இறுதியில் தம் நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்ப பாலியல் ஃபிரான்சுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். தம் எதிரி நாடான ஃபிரான்சுடன் பாலியல் செய்துகொண்ட உடன்படிக்கை எட்வர்டுக்கு எரிச்சலைக் கொடுத்தது. படை கொண்டு, எல்லையைக் கடந்து ஸ்காட்லாந்தை எட்வர்டு தாக்கத் தொடங்கினார். முன்னேறிய எட்வர்டின் படைகள் ஸ்காட்லாந்தின் முக்கியத் துறைமுகமான பெர்விக் (Berwick) நகரைக் கைப்பற்றி, எதிர்த்த அதன் மக்களைப் படுகொலை செய்தது. படைகொண்டு வந்த பாலியல் கி.பி. 1296-ல் டன்பார் (Dunbar) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். பாலியலின் படைகள் முடிபறிக்கப்பட்டு, ஸ்காட்லாந்து இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது. ஸ்காட்லாந்திய மன்னர்களின் புனிதமான கல்லாசனமும் முக்கிய பத்திரங்களும் இங்கிலாந்துக்கு அகற்றப்பட்டன. நாடு அடிமையாக்கப்பட்டதே ஒழிய நாட்டு மக்களின் சுதந்தர உணர்ச்சியை எட்வர்டால் அழிக்க முடியவில்லை என்பதை அடுத்து நேர்ந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின.

கி.பி. 1297-ல் எட்வர்டின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற எண்ணிய ஸ்காட் மக்கள் வில்லியம் வாலஸ் (Wallace) என்பவரின் தலைமையில் கொதித்தெழுந்தனர். ஸ்காட்லாந்திலிருந்த ஆங்கில கவர்னரான எர்ல் வாரன் (Earl Warren) என்பவரை ஸ்டிர்லிங் பாலத்திற்கருகே (Stirling Bridge) நடந்த சண்டையில் வாலஸ் படுதோல்வியடையச் செய்தார். ஆகவே, இரண்டாவது முறையாகக் கி.பி. 1298-ல் எட்வர்டு ஸ்காட்லாந்தின்மீது படையெடுத்தார். தம் ஆதிக்கம் ஸ்காட்லாந்தில் நிலைக்கவேண்டு

மென்ரூல் வாலஸ் ஒடுக்கப்படவேண்டு மென்பதை உணர்ந்த எட்வர்டு அவரை விரட்டி ஃபால்கிர்க் (Faikirk) என்னுமிடத்தில் கடும்போர் நடத்தித் தோற்கடித்தார். வாலஸ் ஃபிரான்சுக்கு ஓடிவிடவே மறுபடியும் ஸ்காட்லாந்து எட்வர்டின் ஆட்சியில் அடங்கியது. அடக்கப்பட்ட ஸ்காட்லாந்தை ஆள்வதற்கு எட்வர்டு ஒரு ரீஜண்ட் சபையை அமைத்தார். இறுதியில் ஸ்காட்லாந்தை அடக்கிவிட்டதாக எட்வர்டு இறுமாந்திருந்தார். கி.பி. 1305-ல் சிறைபிடிக்கப்பட்டு இங்கிலாந்துக்குக் கொண்டு வரப்பட்ட வாலஸ் தம் கட்டளையினால் கொல்லப்பட்டது ஸ்காட்லாந்திய மக்களின் எதிர்ப்பே கொல்லப்பட்டு விட்டதாக எட்வர்டு நினைத்தார்.

தேசியப் பற்றுக் கொண்டிருந்த ஸ்காட் மக்களுக்கு ஆங்கிலேயரின் ஆட்சியில் அளவிறந்த வெறுப்பு இருந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு இளைய ராபர்ட் புரூஸ் (Robert Bruce, the younger) என்பவர் ஸ்காட்லாந்தின் விடுதலை இயக்கத்திற்குத் தம்மைத் தலைவராக அறிவித்துக்கொண்டார். மக்களின் பேராதரவும் அவருக்குக் கிடைத்ததால் கி.பி. 1306-ல் ஸ்கோன் (Scone) நகரில் தம்மைத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைவராகவும் ஸ்காட்லாந்தின் அரசராகவும் அறிவித்துக் கொண்டார். ஸ்காட்லாந்து மீண்டும் தம் பிடியிலிருந்து நழுவுவதைக் கண்ட எட்வர்டு மூன்றும் முறையர்கப் படையெடுத்தார். ஆயினும், தம் எண்ணம் நிறைவேறுதவராகச் செல்லும் வழியில், பர்க் ஆன் ஸாண்ட்ஸ் (Burge-on-Sands) என்னுமிடத்தில் கி.பி. 1307 ஜூலை 7ஆம் நாளில் காலமானார்.

ஸ்காட்லாந்து வெற்றியின் முடிவுக் கட்டத்தைக் காணுதவராக அவர் இறந்துவிட்டாரெனினும் தம் காலத்தில் இங்கிலாந்தின் வலுவை ஐரோப்பிய நாடுகளுக்கு எட்வர்டு உணரச் செய்திருந்தார். குறிப்பாக ஃபிரான்சின் ஆதிக்க ஆசையைப் பொறுமையுடன் எட்வர்டு எதிர்த்திருந்தார். ஸ்காட்லாந்தியப் படையெடுப்புகளிடையே எட்வர்டு ஃபிரெஞ்சுப் போரை நடத்தினரென்பதும் குறிப்பிடத்தக்கது. ஃபிரான்சில் இருந்த ஆங்கிலேயர்களின் பகுதியான காஸ்கனியை எட்வர்டு மீண்டும் பெற்றது அவரின் மன திடத்தையும், இராச தந்திரத்தையும் பறை சாற்றியது.

அரசியல் நிபுணராகவும் வெற்றி வீரருமாக ஆண்ட முதலாம் எட்வர்டு இங்கிலாந்து வரலாற்றிலே மறக்க முடியாதவர்களிலே ஒருவர்.

4. பிளான்டாஜெனட்டுகள் (தொடர்ச்சி)

(அ) நூற்றாண்டுப் போர்

(Hundred Year's War 1338—1453)

ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு நடைபெற்ற அந்த ஆங்கில-ஃபிரெஞ்சுப்போர் கி.பி. 1338-ல் மூன்றாம் எட்வர்டு காலத்தில் தொடங்கியது. நூறாண்டுகளுக்குத் தொடர்ந்து அப் போர் நடைபெறவில்லையெனினும், அவ்வப்போது முக்கிய சண்டைகள் நிகழ்ந்து கொண்டேயிருந்தன. ஆகவே, இதனை நூற்றாண்டுப் போர் என வழங்கினர்.

நூற்றாண்டுப் போரில் ஈடுபட்ட மன்னர்கள்

இங்கிலாந்து

↓

மூன்றாம் எட்வர்டு (1327 – 1377)

↓

கருங்கவச இளவரசர்	ஜான் (கான்ட்) (லங்காஸ்டர் டியூக்)
↓	
இரண்டாம் ரிச்சர்டு (1377 – 1399)	இரண்டாம் ஹென்றி (1399 – 1413)
	↓
	ஐந்தாம் ஹென்றி (1413 – 22)
	↓
	ஆறாம் ஹென்றி (1422 – 61)

ஃபிரான்ஸ்

ஆறாம் ஃபிலிப் (1328 – 50)

↓

இரண்டாம் ஜான் (1350 – 64)

↓

ஐந்தாம் சார்லஸ் (1364 – 80)

↓

ஆறாம் சார்லஸ் (1380 – 1422)

↓

ஏழாம் சார்லஸ் (1422 – 1461)

மூன்றும் எட்வர்டு காலத்தில் தொடங்கிய அப் போர் அடுத்து வந்த இரண்டாம் ரிச்சர்டு, நான்காம் ஹென்றி, ஐந்தாம் ஹென்றி என்ற ஆங்கில மன்னர்களின் காலங்களில் தொடர்ந்து, ஆறும் ஹென்றியின் காலத்தில் இறுதியாக முடிந்தது.

போருக்கான காரணங்கள்

வெற்றியிலே ஆரம்பித்து இறுதியில் ஆங்கிலேயர்களுக்குத் தோல்வியில் முடிந்த நூற்றாண்டுப் போருக்கான காரணங்களை அறிவோம்.

ஸ்காட்லாந்தியப் பிரச்சினையே முதல் காரணமாக அமைந்தது.

ஸ்காட்லாந்திய அரசன் இராபர்ட் புரூஸ் என்பவரின் தலைமையில் அந்நாட்டு மக்கள் போர்க்கோலம் கொண்ட போது, அவர்களை அடக்கப் படையுடன் சென்ற முதலாம் எட்வர்டு போகும் வழியிலேயே காலமானார் என்பதை நாம் அறிவோம். இரண்டாம் எட்வர்டு (1307-27) காலத்தில் இங்கிலாந்தில் நிலவி வந்த குழப்ப நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ராபர்ட் புரூஸ் தென் புற ஆங்கிலேயர்களுக்குத் தோல்வி கொடுத்தது மட்டுமன்றி, ஃபிரான்சு நாட்டு உதவி பெற்றுக் கி.பி. 1314-ல் ஆங்கிலேயர்களைப் பனக்பர்ன் (Bannockburn) சண்டையில் தோற்கடித்து நார்த்தாம்டன் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் விளைவாக ஸ்காட்லாந்து தன் சுதந்தரத்தை அறிவித்துக்கொண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. கி.பி. 1327-ல் பட்டத்திற்கு வந்த மூன்றும் எட்வர்டு இங்கிலாந்தின் ஆதிக்கத்தை மீண்டும் ஸ்காட்லாந்தின்மீது திணிக்க நினைத்தார். அதிருஷ்டவசமாக ஸ்காட்லாந்தின் அரசரான புரூஸ் அடுத்த ஆண்டிலே காலமானார். ஸ்காட்லாந்திய விவகாரத்தில் தலையிட்டுத் தம் ஆதிக்கத்தைத் திணிக்க அதுவே சரியான சந்தர்ப்பமாக மூன்றும் எட்வர்டு எண்ணினார். புரூஸால் விரட்டப்பட்டு இங்கிலாந்தில் அடைக்கலம் பெற்றிருந்த எட்வர்டு பேலியல் (Edward Balliol) என்ற பிரபுவுக்கு மன்னர் எட்வர்டு உதவிப் படை கொடுத்து ஸ்காட்லாந்தின்மீது படையெடுக்கச் செய்தார். எதிர்த்த ஸ்காட்டியர்கள் டப்ளின் மூன் (Dublin Moon) சண்டையில் முரியடிக்கப்பட்டார்கள். ஸ்காட்லாந்தின் அரசராக முடிசூட்டிக் கொண்ட பேலியல் (Balliol) இங்கிலாந்தின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார். பேலியலை அரசராக ஒப்புக்கொள்ள மறுத்த ஸ்காட்டியர்கள், கி.பி. 1333-ல் கலகம் செய்தபோது மூன்றும் எட்வர்டு தம் படைகளை அனுப்பி ஹாலிடன் ஹில் (Halidon Hill) சண்டையில் தோற்

கடித்தார். பெயரளவிற்கு எட்வர்டும் அவர் கையாட்களும் ஸ்காட்லாந்தை ஆண்டபோதிலும் ஸ்காட் மக்களின் சுதந்தர வேட்கை தணியவில்லை. காலம் சென்ற ஸ்காட் அரசன் ராபர்ட் புரூஸின் மகனைப் ஃபிரான்சு நாட்டுக்கு அனுப்பி ஸ்காட்டுகள் உதவி கோரினர்கள். அப்போது ஃபிரான்சை ஆண்டு வந்த நான்காம் ஃபிலிப் அதற்கு இசைய, அதுவே இங்கிலாந்து - ஃபிரான்சு உறவு முரிய முதல் காரணமானது.

தம் பகைவர்களான ஸ்காட்டுகளுக்கு நான்காம் ஃபிலிப் உதவி செய்ய முன்வந்தது எட்வர்டுக்குக் கோபத்தைத் தந்தது. இதற்கிடையே ஃபிரான்சு நாட்டின் ஆக்கிரமிப்புக் கொள்கை அந்த ஆத்திரத்தை இன்னும் அதிகரித்தது.

அரசன் ஜான் காலத்திலேயே ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான பல ஃபிரான்சுப் பகுதிகள் இழக்கப்பட்டன. கயினி, காஸ்கனி என்ற இரு பகுதிகளே ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்த் தொடர்ந்து இருந்து வந்தன. எப்படியும் அவற்றைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டுமென நினைத்த ஆரும் ஃபிலிப் கி.பி. 1333-ல் காஸ்கனியைத் தாக்கினர். அப் பகுதிகளைக் காக்கக் கடமைப்பட்டிருந்த எட்வர்டுக்குப் ஃபிரான்சுடன் போர் செய்வதைத் தவிர வேறு வழி புலப்படவில்லை. ஆக ஃபிரான்சின் அரசரான ஆரும் ஃபிலிப்பின் ஆதிக்க வெறியும் இப் போருக்கு இரண்டாவது காரணமானது.

தேசிய உணர்ச்சி எழுச்சி பெற்று வந்த காலமாக 14 ஆம் நூற்றாண்டு கருதப்பட்டது. கயினி, காஸ்கனிப் பகுதிகளை இழந்துவிட்டால் அது தங்கள் நாட்டின் பெருமைக்குப் பாதகம் விளைவிக்கும் என ஆங்கிலேயர்களும், அவற்றை எப்படியும் மீட்டு ஃபிரெஞ்சு நாட்டை ஐக்கியப்படுத்தவேண்டுமெனப் ஃபிரெஞ்சுக் காரர்களும் விரும்ப, அது போரில் முடிந்தது. ஆங்கில ஃபிரெஞ்சு மக்களின் அந்த எண்ணத்திற்குக் காரணமாக இருந்த தேசிய உணர்ச்சி இப் போருக்கு மூன்றாவது காரணமாக அமைந்தது.

மேற்சொல்லப்பட்ட அரசியல் காரணங்கள் அல்லாமல் சில பொருளாதாரச் சிக்கல்களும் அப் போருக்குக் காரணமாயின.

இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்த நாடு காஸ்கனியோடு (Gascony) செய்துவந்த ஓயின் வர்த்தகமும் ஒரு காரணமாக இருந்தது. காஸ்கனியின்மீது ஆரும் ஃபிலிப் தாக்குதல் நடத்த, அதனால் இங்கிலாந்திலும் காஸ்கனியிலும் இருந்த ஓயின் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். காஸ்கனி கைப்பற்றப்பட்டுவிட்டால் தங்களது இலாபகரமான வியாபாரம்

அழிந்து விடுமென்ற பயத்தில் ஆங்கில வியாபாரிகள் ஃபிரெஞ்சுத் தாகத்தலே முரியடிக்கும்படி, எட்வர்டைத் தூண்டிவிட்டனர். தம் வெற்றிப் பட்டியலே வளர்த்துப் பெரும் புகழ் அடைய விரும்பிய மன்னர் எட்வர்டுக்கு அத் தூண்டுதல் தெம்பினைக் கொடுத்தது.

அடுத்ததாக ஃபிரான்சின் வடமேற்குப் பகுதியில் அமைந் திருந்த ஃபிளாண்டர்ஸ் (Flanders) என்னும் பகுதியில் ஆங்கிலேயர் களுக்கும் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே கடுமையான வியாபாரப்போட்டி இருந்தது. ஃபிளாண்டர்ஸ் ஃபிரெஞ்சு மன்னரின் மானிய உடைமையாயினும், அம் மக்கள் இங்கிலாந் துடன் நெருங்கிய வியாபார உறவைக் கொண்டிருந்தனர். கம்பள நெசவுத் தொழிலே முக்கியக் கைத்தொழிலாகக் கொண்டு முன்னேறியிருந்த ஃபிளாண்டர்ஸ் நெசவாளிகள் இங்கிலாந்தின் கம்பளிநூலே அதிகமாகத் தங்களின் தொழிலுக்கு நம்பியிருந் தனர். மூலப்பொருளான கம்பளிநூலே அனுப்பிய ஆங்கிலேய வியாபாரிகளுக்கும், கம்பளித் தொழிலில் ஈடுபட்டிருந்த ஃபிளாண்டர்ஸ் நெசவாளிகட்கும் அதிக இலாபம் கிடைத்து வந்தது. இங்கிலாந்தின் பொருளாதார ஆதிக்கத்தை ஒடுக்க நினைத்த ஆரும் ஃபிலிப் தம் ஆளுநர் மூலமாக ஆணை பிறப்பித்து ஃபிளாண்டர்ஸில் கம்பளி நூல் இறக்குமதியைத் தடைசெய்தார். அதனல் கென்ட் (Ghent) புருஜெஸ் (Bruges) யப்ரிஸ் (Ypres) போன்ற ஃபிளாண்டர்ஸ் பட்டணங்களில் கம்பளித் தயாரிப்புத் தொழில் மந்த மடைந்தது. அதனல் அதிருப்தியடைந்த ஃபிளாண்டர்ஸ் பட்டணங்கள் தங்கள் தலைவரான ஃபிளாண் டர்ஸ் ஆளுநரை எதிர்த்துக் கலகம் செய்தன. அத்துடன் நிற்காமல் மூன்றும் எட்வர்டின் உதவியையும் கோரினர்கள். தம் நாட்டு வியாபாரிகளின் குறைகளைப் போக்கக் கடமைப் பட்டிருந்த எட்வர்டுக்கு ஃபிளாண்டர்ஸுக்கு உதவி செய்வது அவசியமாகப் பட்டது. தமக்கு எதிராகக் கலகம் செய்த ஸ்காட்டுகளுக்கு ஆரும் ஃபிலிப் உதவி கொடுக்க முன் வந்ததை மறக்கமுடியாத மூன்றும் எட்வர்டு ஃபிளாண்டர்ஸுக்கு உதவ முன்வந்தார். ஆக, இங்கிலாந்தும் ஃபிரான்சும் மோதிக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு வியாபாரப் போட்டியும் காரணமாக அமைந்தது.

மேற்கூறிய காரணங்கள் அல்லாது ஃபிரான்சு நாட்டின் அரச பதவிக்கு மூன்றும் எட்வர்டு உரிமைக்குரல் எழுப்பியதும் அப் போர் மூள்வதற்கு ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. ஃபிரான்சு நாட்டுடன் சண்டை தவிர்க்க முடியாதது என்பதை

யுணர்ந்த மூன்றும் எட்வர்டு ஃபிரெஞ்சு அரசுரிமையை ஏன் கேட்டார் என்பதைக் காண்போம்.

கயினி (Guianne), காஸ்கனிப் (Gascony) பகுதிகளை ஆங்கில மன்னர்கள் ஃபிரெஞ்சு அரசரின் மானியப் பிரபுக்களாகவே பரி பாவித்து வந்தனர். மூன்றும் எட்வர்டு அதற்கு விதிவிலக்கல்லர். மேற்சொல்லப்பட்ட காரணங்களால் எட்வர்டுக்கும் ஃபிலிப்புக் கும் இடையே போர் மூள்வதற்கான சூழ்நிலை இருந்துவர அங்ங னம் போர் மூண்டால், அது தம் எசமானனை எதிர்த்து மானியப் பிரபு செய்யும் கலகமாகவே கருதப்படுமென எட்வர்டு நினைத் தார். அதே போன்று நில மானியத் திட்டத்தின் அடிப்படையில் ஆரும் ஃபிலிப்பைத் தங்களின் எசமானராக ஏற்று உறுதி மொழி கொடுத்திருந்த ஃபிளாண்டர்ஸ் பிரபுக்களும் தம் உதவிக்கு வர மாட்டார்கள் என்று எட்வர்டு நினைத்தார். அவர்களின் உதவி யில்லாமல் ஃபிரான்சில் வெற்றி காரணமாகப் போரைத் தாம் நடத்த முடியாதெனவும் எட்வர்டுக்குத் தெரியும். ஃபிளாண்டர்ஸ் பிரபுக்கள் தம்மை ஃபிரான்சின் அரசராக ஏற்றுக் கொண்டால், அவர்களின் முழு ஒத்துழைப்பும் தமக்குக் கிடைக்கும்; தம் முடைய எதிர்ப்பும் கலகமாக இல்லாமல் உரிமைப் போராகத் தென்படும் என்ற எண்ணங் கொண்டே, மூன்றும் எட்வர்டு ஃபிரான்சு வாரிசில் உரிமை கொண்டாடினார். இங்கிலாந்திற்கு அரசரான தாம் ஏன் ஃபிரான்சின் நிலப்பிரபுவாக இருக்கவேண்டு மெனவும் மூன்றும் எட்வர்டு நினைத்திருக்கலாம்.

அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அரச பட்டியலைக் கண்டால், எந்த முறையில் மூன்றும் எட்வர்டு வாரிசுரிமை கோரினார் என்பது தெரியவரும்.

ஃபிரான்சின் அரசரான நான்காம் சார்லஸ் 1328-ல் கால மானதும், அவரின் சிறிய தந்தையின் மகனை ஆரும் ஃபிலிப் பட்டத்திற்கு வந்திருந்தார். சார்லஸின் தங்கை இசபெல்லா மூன்றும் எட்வர்டின் தாய். அந்த உறவின் வழியிலேயே மூன்றும் எட்வர்டு தமக்கு வாரிசுரிமையைக் கேட்டார். அக் காலத்திய வழக்கத்தின்படி, பெண் வழியில் வாரிசு கேட்க இயலாதென எட்வர்டுக்குத் தெரிந்திருந்தும், ஃபிரெஞ்சு அரியணைக்கு உரிமைக் குரல் எழுப்பினார். 14ஆம் நூற்றாண்டில் வாள்பலம் மதிக்கப் பட்டதே தவிரச் சட்ட நுணுக்கம் அன்று என்பதும் எட்வர்டுக்குத் தெரியும். ஆகவே, தம்மை ஃபிரான்சு நாட்டின் அரசராக எட்வர்டு அறிவித்துக் கொண்டதுமன்றி ஆரும் ஃபிலிப்புடன் போருக்கும் புறப்பட்டார். அந்நியர் ஆக்கிரமிப்புகளிலிருந்து தம் நாட்டைக் காக்க ஆரும் ஃபிலிப் தற்காப்புப் போருக்கு ஆயத்த

மூன்றாம் ஃபிலிப் (ஃபிரான்சு மன்னர்)

நான்காம் ஃபிலிப் (1285 – 1314)

நான்காம் லூயிஸ் (1314 – 16)

ஐந்தாம் ஃபிலிப் (1316 – 22)

நான்காம் சார்ல்ஸ் (1322 – 28)

சார்ல்ஸ்

ஆறாம் ஃபிலிப் (1328 – 50)

இசபெல்லா = இரண்டாம் எட்வர்டு (இங்கிலாந்து மன்னர்)

மூன்றாம் எட்வர்டு

மானுர். அங்ஙனம் தொடங்கப்பட்டதே நூற்றாண்டுப் போர் என்பதாகும்.

ஃபிரான்சுக்கெதிராக ரைன் பகுதி ஜெர்மானிய இளவரசர்களுடன் உடன்பாடு செய்துகொண்ட மூன்றும் எட்வர்டுக்கு ஜேம்ஸ் வான் ஆர்டிவில்ட் (James Van Artevelde) என்பவரின் தலைமையிலிருந்த ஃபிளாண்டர்ஸ் பட்டணங்களின் உதவியும் கிடைத்தது. காஸ்கனியைப் பாதுகாப்பதென்றும், பிராண்டர்ஸுடன் வியாபாரத்தைத் தொடருவதென்றும், ஸ்காட்டுகளின் எதிர்ப்பை முரியடிக்க வேண்டுமென்றும் ஆக மூன்று அம்சங்களின் அடிப்படையில் மூன்றும் எட்வர்டு போரில் இறங்கினர். வீரச் செயல்களுக்காக ஏங்கிக் கிடந்த ஆங்கிலப் பிரபுக்களும், வெற்றிப் போரின் இறுதியிலே வர்த்தகம் தழைக்குமென்று ஏங்கிக் கிடந்த ஆங்கில வியாபாரிகளும் 'நாட்டின் பெருமை நமக்கும் பெருமை' என்று நம்பிக் கிடந்த மக்களும் போரில் ஈடுபட மன்னரைப் பெரிதும் ஊக்குவித்தார்கள்.

போரின் போக்கு (மூன்றும் எட்வர்டின் காலம்)

போரின் முக்கிய நிகழ்ச்சிகளை அடுத்துக் கவனிப்போம்.

1340ஆம் ஆண்டில் ஸ்லூயிஸ் (Sluys) என்னுமிடத்தில் நடந்த கடற்போரில் ஃபிரெஞ்சுக் கப்பல் படை அழிக்கப் பட்டதைத் தொடர்ந்து, இங்கிலீஷ் கால்வாயில் (English Channal) ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் பெற்றனர். பிரிட்டானிப் (Brittony) பகுதிகளைத் தாக்கியத்தைத் தவிர அக் கடல் வெற்றியைத் தொடர்ந்து மூன்றும் எட்வர்டு செயலற்றே கிடந்தார். 1349-ல் ஆரும் ஃபிலிப் காஸ்கனியைக் கடுமையாகத் தாக்கியபோது, போர் சூடு பிடித்தது. நார்மண்டியிலே தம் படைகளுடஸ் இறங்கிய மூன்றும் எட்வர்டு சேன் ஆற்றின் தென்கரைவழியே சென்று தலைநகரான பாரிஸை நெருங்கினர். கிரெஸி (Crecy) என்னுமிடத்தில் பெரும்படையுடன் ஆரும் ஃபிலிப் ஆங்கிலப் படையைச் சந்தித்தார். எண்ணிக்கையில் மிகுந்திருந்த ஃபிரெஞ்சுப் படையினர்மீது போர்த் தந்திரங்களையும் புதிய போர்க் கருவிகளையும் திறமையாகப் பயன்படுத்திய ஆங்கிலேயர்கள், பெரு வெற்றியடைந்தனர். 1346-ல் ஆகஸ்டு 26ஆம் நாளில் நடந்த அச் சண்டையில் ஆங்கிலேயர்களின் விற்படையும், குதிரைப் படையும் காட்டிய போர்த் திறமை ஐரோப்பா முழுவதும் பெருமையாகப் பேசப்பட்டது. அரசன் எட்வர்டின் மூத்த மகனுன 'கருங்கவச இளவரசர்' (Black Prince) என்பவரே இவ் வெற்றியின் மூல புருஷராகப் போற்றப்பட்டார். புகழ்ந்து

பேசப்படும் இவ் வெற்றியைத் தொடர்ந்தும், இங்கிலாந்துக்குப் பெரிய பயன் ஒன்றும் கிட்டவில்லை. தொடர்ந்து ஃபிரான்ஸின் பகுதிகளைக் கைப்பற்ற முடியாமல் இங்கிலாந்துக்குத் திரும்பும் வழியில் கலே (Calais) என்னும் ஃபிரெஞ்சுக் கடற்கரை நகரத்தைக் கி.பி. 1347-ல் எட்வர்டு கைப்பற்றினார். ஃபிளாண்டர்ஸ், கென்ட், புரூ ஜஸ், யப்ரீஸ் போன்ற பட்டணங்களுக்குத் தேவையான கம்பளியை இறக்குமதி செய்யும் ஃபிரான்சை நினைத்த போது தாக்க அடித்தளமாகவும் கலே (Calais) ஆங்கிலேயர்களுக்குத் தேவைப்பட்டது.

தோல்விகளினால் உற்சாகம் இழந்து ஆரும் ஃபிலிப் காலமாக, கி.பி. 1350-ல் இரண்டாம் ஜான் ஃபிரான்சுக்கு அரசரானார். ஐரோப்பாவில் அப்போது கடுங்கொள்ளை நோய் (Black Death) பரவியதால் போரில் மந்தம் ஏற்பட்டது.

தம் மூத்த மகனும் 'கிரெஸி' வெற்றி வீரருமான கருங்சவச இளவரசரை எட்வர்டு காஸ்கனிக்கு ஆளுநராக அமர்த்தியிருக்க அவர் அடிக்கடி ஃபிரெஞ்சுப் பகுதிகளைத் தாக்கிக் கொள்ளையடித்து வந்தார். 1356-ல் கொள்ளையடித்த பொருள்களோடு பார்டியக்னீக்குத் திரும்பிக் கொண்டிருந்த இளவரசரையும் அவர் படைகளையும் ஃபிரெஞ்சு அரசன் ஜான் பாயிட்டியர்ஸ் (Poticrs) என்னுமிடத்தில் வழிமறித்துப் போர் செய்தனர். சண்டையிடுவதைத் தவிர வேறு வழியில்லாத ஆங்கிலப் படைகள் கடுமையாகப் போர் செய்து ஃபிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தன. அரசன் ஜான் உள்படப் பல ஃபிரெஞ்சுப் பிரபுக்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள். அச் சண்டை கருங்கவச இளவரசரின் பெருமையை உயர்த்தியது. இருப்பினும் ஃபிரான்ஸ் முழுவதையும் தாங்கள் எவ்வளவு முயன்றாலும் கைப்பற்ற முடியாதென ஆங்கிலேயருக்குத் தெரியும். சிறைப்படுத்தப்பட்ட அரசர் ஜானை வற்புறுத்தி பிரெடிக்னி உடன்படிக்கையை (Treaty of Bretigni) 1360-ல் மூன்றாம் எட்வர்டு செய்து கொண்டார். சிறைப்படுத்தப்பட்டிருந்த ஜான் அரசரை விடுவிக்க மீட்சிப் பணமாக 5,00,000 பவுன்களை ஃபிரான்ஸ் கொடுக்கவேண்டும் என்றும், ஸ்காட்லாந்துடன் செய்துகொண்டிருந்த உடன் படிக்கையை ஃபிரான்ஸ் ரத்து செய்துவிட வேண்டும் என்றும் உடன்படிக்கை கோரியது.

அதன்படி கலே (Calais), பான்தியு, (Ponthieu) அக்விட்டேன், (Aquitaine) பாயிட்டோ (Poitieu), லிமோசின் முதலிய ஃபிரெஞ்சுப் பகுதிகளைப் பெற்றுக்கொண்டு, நார்மண்டி, மெயின் ஆன்ஜூ போன்ற பகுதிகளிலிருந்த பெயரளவு உரிமையை விட்டுக்

கொடுக்க மூன்றும் எட்வர்டு சம்மதித்தார்; ஃபிரெஞ்சு அரச உரிமையையும் விட்டுக்கொடுக்க உடன்பட்டார். இங்ஙனம் கி.பி. 1360-ல் வெற்றிக்களிப்புப் பெற அவ்வுடன்படிக்கை காரணமாயிற்று. ஃபிரான்சு நாட்டில் பாதிக்குமேல் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து விட்ட எட்வர்டின் புகழ் உச்சக்கட்டத்திலிருந்தது.

கி.பி 1364-ல் ஜான் மரணமடைந்ததை ஒட்டி, அவரின் மகனான ஐந்தாம் சார்லஸ் ஃபிரான்சின் அரசராகப் பட்டமேற்றார்; தம் தந்தையை வற்புறுத்திச் செய்துகொண்ட பிரெடிக்னி (Bretigni) உடன்படிக்கையை ஐந்தாம் சார்லஸ் ஏற்றுக் கொள்ளத் தயங்கினார். ஆங்கிலேய ஆதிக்கத்தை அகற்றித் தம் தாய் நாட்டுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க சார்லஸ் துடித்துக் கொண்டிருந்தார். தம் திறமையுள்ள பெர்ட்ரன்ட்டு குயிஸ்லின் என்ற தளகர்த்தன் தலைமையில் படைமுறையைச் சீர்படுத்தி விடுதலைப் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

இச் சமயத்தில் காஸ்டைல் (Castile) என்ற ஸ்பானியப் பகுதியில் வாரிசுப் போர் மூண்டது. அதன் அரசரான கொடூர பெட்ரோ (Pedro, the cruel) என்பவர் அவருடைய சகோதரன் ஹென்றி டிராஸ்டமாரா (Trastamara) என்பவரால் நாட்டை விட்டு விரட்டப்பட்டார். தம் புதிய நிலை நீடிக்க வேண்டுமென்றால் அந்நியர் உதவி தேவை என்று உணர்ந்த ஹென்றி ஃபிரெஞ்சு அரசரின் உதவியைக் கோரினார். நாட்டிலிருந்து விரட்டப்பட்ட பெட்ரோ, அக்விட்டேனில் (Acquitaine) இளவரசராக ஆட்சி செய்து கொண்டிருந்த கருங்கவச வீரரின் (The Black Prince) தயவை நாடினார். பெட்ரோவுக்கு உதவ வேண்டி 'கருங்கவச இளவரசர்' 1367-ல் காஸ்டில்மேல் படையெடுத்து, எதிர்த்த ஹென்றியையும் உதவிக்கிருந்த ஃபிரெஞ்சுப் படைகளையும் தோற்கடித்துப் பெட்ரோவை மீண்டும் அரசராக்கினார். ஆனால், சில நாள்கள் கழித்து ஹென்றி, பெட்ரோவைக் கொலை செய்து விட்டு காஸ்டில் மன்னராக அறிவித்துக்கொண்டார்.

காஸ்ட்டில் விவகாரத்தில் தலையிட்டதால் கருங்கவச இளவரசருக்குப் பணவிரயம் ஆகியிருக்க, அதைச் சரிக்கட்ட அன்குபட்டன் மக்கள்மீது புது வரிகளை விதித்தார். அதை விரும்பாத அம் மக்கள் சார்லஸிடம் முறையிட்டு உதவி கேட்க, மீண்டும் கி.பி. 1370-ல் போர் மூண்டது.

ஐந்தாம் சார்லஸின் தலைமையில் நூற்றாண்டுப் போர் ஒரு தேசியப் போராக மாறியது. போர் முறைகளை மாற்றியும் புதிய போர்த் தந்திரங்களைக் கையாண்டும் ஃபிரெஞ்சுப் படைகள்

பட்டணங்களிலும் கோட்டைகளிலும் பதுங்கிக்கொண்டு ஆங்கிலேயர்களை முற்றுகையிடச் செய்து களைப்புறச் செய்தார்கள். புது வெற்றியால் ஏதையும் பெறமுடியாத ஆங்கில இளவரசர் லிமோஜிஸ் நகரத்தைக் கைப்பற்றி அதன் 3,000 மக்களைக் கொன்று குவித்த செய்கை, ஆங்கிலேயர்களின்மேல் இருந்த வெறுப்பை இன்னும் அதிகரித்தது. உடல் நலம் பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய இளவரசர் அகால மரணம் அடைந்ததை ஒட்டி, அவருடைய தம்பியான ஜான் கான்ட் (John of Gaunt) படைத் தலைமை கொண்டு ஃபிரான்சுக்குத் திரும்பினர். எதிர்பார்த்த வெற்றிகளை ஜான் கான்டும் பெற முடியவில்லை. ஃபிரெஞ்சுப் படைகள் ஆங்கிலேயர்களை நெருங்கிப் பல பகுதிகளை மீட்டது. கிரெஸி, பாயிட்டியர்ஸ் வெற்றிகள் பயனில்லாமல் போயின. கலே, ஷெர் போர்க் முதலிய நகரங்களைத் தவிர மற்ற ஃபிரெஞ்சுப் பகுதிகளை ஆங்கிலேயர்கள் இழந்தனர். இங்ஙனம் மூன்றும் எட்வர்டு தம் கடைசிக் காலத்தில் தோல்வியைச் சுமக்க வேண்டியிருந்தது. தேசிய உணர்ச்சியின் கொந்தளிப்பின்முன் படை பலத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஆதிக்கம் நிற்காது என உணர்ந்த மூன்றும் எட்வர்டு கி.பி. 1377-ல் காலமானார்.

நூற்றாண்டுப் போர் மூள்வதற்கு முக்கிய காரணகர்த்தரான மூன்றும் எட்வர்டின் காலம் முடிந்த போதிலும், அப் போர் முடியவில்லையென்பது அடுத்துவரும் நிகழ்ச்சிகளில் காணலாம். நூற்றாண்டுப் போரின் இரண்டாவது கட்டம் இரண்டாம் ரிச்சர்டு காலத்தில் தொடங்கியது. அவருக்கு அடுத்து வந்த மூன்று அரசர்கள் காலங்களில் இப் போர் எங்ஙனம் தொடர்ந்து நடந்ததென்ற விவரத்தைச் சுருக்கமாகக் காண்போம்.

இரண்டாம் ரிச்சர்டின் காலம் (1377 - 1399)

மூன்றும் எட்வர்டின் பேரனான இரண்டாம் ரிச்சர்டு இங்கிலாந்தின் அரசனாக அமர்ந்தபோது ஆங்கிலேயர்கள் உள்நாட்டுப் பூசல்களால் பாதிக்கப்பட்டு, பலவீனமான நிலையில் இருந்தனர். அதைப் பயன்படுத்திக் கொண்ட ஃபிரெஞ்சுக்காரர்கள் இங்கிலாந்தின் கரைகளைத் தாக்கத் தொடங்கியது மட்டுமல்லாமல் ஸசக்ஸ் பகுதிவரை ஊடுருவி, ரை, ஹேஸ்டிங்ஸ் என்ற நகரங்களைத் தீக்கிரையாக்கி, தேம்ஸ் முகத்துவாரத்தை அடைந்து எதிர்ப்பில்லாமல் திரும்பினர். ஒயிட் தீவும் (Isle of White) தாக்கப்பட்டது. குடியானவர் கலகத்தாலும், கருங்கொள்ளை நோயினாலும் பாதிக்கப்பட்டிருந்த இங்கிலாந்தால் போரில் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. 1396-ல் ஃபிரான்சுடன் சமாதானம் செய்துகொள்ள அரசர் ரிச்சர்டு முன்வந்தார். 1380-ல்

இறந்துபோன ஐந்தாம் சார்லஸைத் தொடர்ந்து ஃபிரான்ஸின் அரசராக முடிசூட்டிக் கொண்டிருந்த அவருடைய மகனை ஆரும் சார்லஸின் எட்டு வயது நிரம்பிய மகளையும் ரிச்சர்டு திருமணம் செய்துகொண்டு போரிலிருந்து இங்கிலாந்தை விடுவித்து இருந்தார். ஆயின், அது தற்கால சமாதானமாகவே இருந்தது.

காலப்போக்கிலே இரண்டாம் ரிச்சர்டு சர்வாதிகாரியாக நடக்க முற்பட்டதால் கி.பி. 1399-ல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக முடிதுறந்தார். அப் புரட்சிக்குத் தலைவரான ஹென்றி லங்காஸ்டர் தம்மை நான்காம் ஹென்றி ஆக முடிசூட்டிக் கொண்டார்.

இரண்டாம் ரிச்சர்டு முடி துறந்ததை ஒட்டி பிளான்டாஜெனட்டுகளின் ஆட்சிக் காலம் முடிவுற்றது.

நான்காம் ஹென்றியின் காலம் (1939 - 1413)

லங்காஸ்டர் பிரபுவான நான்காம் ஹென்றி (1399 - 1413) பட்டம் பெற்றுப் புதிய அரச மரபைத் தோற்றுவித்திருந்த போதிலும், நூற்றாண்டுப் போர் முடிவுறவில்லை. இங்கிலாந்து ஃபிரான்சு நாடுகளிடையே பகைமை நீடித்துக் கொண்டிருந்தது. ஃபிரான்ஸைத் தாக்கி வெற்றிபெற வாய்ப்புகள் தமக்கிருந்த போதிலும் உள்நாட்டுக் குழப்பத்திலும் பாராளுமன்ற எதிர்ப்பிலும் தம் கவனத்தைச் செலுத்தியிருந்த ஹென்றியால் செயல்பட முடியாமல் போய்விட்டது. ஆனால், சமீப காலத்தில் நிலவியிருந்த அமைதி கெட்டு மீண்டும் போர் மூளக் காரணமாக அமைந்தவர் அடுத்துப் பட்டத்திற்கு வந்த ஐந்தாம் ஹென்றி என்ற ஆங்கில அரசரே.

ஐந்தாம் ஹென்றியின் காலம்

கி.பி. 1413-ல் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்த ஐந்தாம் ஹென்றி ஒரு பெருவீரர். தமது வீரச் செயல்களை நாட்டு மக்கள்தெரிந்து கொள்வதற்கு நூற்றாண்டுப் போரை ஓர் அரிய வாய்ப்பாகப் பயன்படுத்த ஐந்தாம் ஹென்றி விரும்பினர். தம் தந்தையாரின் காலத்தில் தகராறு செய்துவந்த பாராளுமன்றத்தின் கவனத்தைத் திசை திருப்பவும் ஹென்றிக்கு அப் போர் ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. புரட்சியினால் மகுடம் பெற்றுத் தம் தந்தையால் நிறுவப்பட்ட லங்காஸ்டர் அரச மரபு தமக்குப் பின்னும் நீடிக்க வேண்டுமெனில் நூற்றாண்டுப் போரின் போக்கை மாற்றி வெற்றிகளைப் பெறவேண்டுமென்ற அவசியமும் ஹென்றிக்கு இருந்தது.

ஹென்றியின் எண்ணத்திற்குச் சாதகமாகப் ஃபிரான்சு நாட்டில் குழப்பம் மிகுந்திருந்தது. மன்னர் ஆரும் சார்லஸ் உடல் நலம் குன்றிப் புத்தி ஸ்வாதீனமற்ற நிலையிலிருந்தார். செல்வாக்குப் பெற்ற ஃபிரெஞ்சு மானியப் பிரபுக்களான பர்கண்டி டியூக்கும் ஆர்லியன்ஸ் டியூக்கும் தங்களுக்குள் பூசலை உண்டாக்கிக் கொண்டதால், ஃபிரான்ஸ் இரண்டுபட்டு விடும்போலிருந்தது.

ஒரு வெற்றிப் போரை அவசியமாகக் கருதித் தொடங்க நினைத்த ஹென்றிக்குப் ஃபிரான்சின் பலவீனமான நிலை தெம்பூட்டியது. போரைத் தொடங்கத் தகுந்த காரணத்துக்காகக் காத்திருந்த ஹென்றிக்கு, தமக்கு முன் மூன்றுவது எட்வர்டு ஃபிரெஞ்சு அரசுரிமையைக் கொண்டாடியதைத் தாமும் செய்வதே பொருத்தமானது எனத் தோன்றியது.

பாராளுமன்றத்தினால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட ஐந்தாம் ஹென்றி, தம் 20,000 வீரர்களோடு கி.பி. 1415-ல் ஃபிரான்ஸின் மீது படையெடுக்க, போர் மீண்டும் தொடர்ந்தது. நார்மண்டியில் கரை இறங்கிய ஆங்கிலப் படை, ஸேன் (Seine) ஆற்றங் கரை ஓரமாக முன்னேறி ஐந்து வார முற்றுகைக்குப் பின்னர் ஹார்பிளோர் (Harfleur) என்ற கோட்டை நகரத்தைக் கைப்பற்றியது. வெற்றி முகத்துடன் ஐந்தாம் ஹென்றி தம் படைகளுடன் கலேயை நோக்கி முன்னேறினர். தங்கள் தாய் நாட்டிற்கு ஏற்படவிருக்கும் அந்நிய ஆபத்தை உணர்ந்த ஃபிரெஞ்சுப் பிரபுக்கள் ஒன்று திரண்டு, ஆஜன் கோர்ட் (Agion court) என்ற இடத்தில் ஹென்றியை வழிமறித்தனர். 1415-ல் அக்டோபர் 25ஆம் நாளில் நடந்த அக் கடும் சண்டையில் ஹென்றியின் போர்த்திறமையால் ஆங்கிலேயர்கள் பெருவெற்றி பெற்றனர். 8000 ஃபிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டனர். 1500 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். ஆஜன் கோர்ட் வெற்றி ஹென்றியின் புகழை அதிகரித்தது. எவ்விதத் தடங்கலுமின்றிக் கலேயை அடைந்து, அடுத்த வாரமே ஹென்றி இலண்டனுக்குத் திரும்பிவிட்டார். இங்ஙனம் மூன்றும் எட்வர்டின் இறுதிக் காலத்திலும், இரண்டாம் ரிச்சர்டின் காலத்திலும் ஆங்கிலேயர்கள் அடைந்த அவமானத் தோல்விகளைத் தம் ஒரு வெற்றியின் மூலம் ஐந்தாம் ஹென்றி மக்களின் நினைவிலிருந்து அகற்றினர்.

ஆஜன் கோர்ட் வெற்றியைத் தொடர்ந்து 1417வரை போர்ச் சூழ்நிலையிலே அமைதி நிலவியது. ஹார்பிளோர், கலே என்ற இரு நகரங்களே ஃபிரான்சில் ஆங்கிலேயர்வசம் இருந்தன. மேற்கொண்டு சில ஃபிரெஞ்சுப் பகுதிகளை வெல்ல நினைத்த

ஹென்றி நார்மண்டியின்மீது படையெடுத்தார். பல நகரங்கள் கைப்பற்றப்பட்டன. ரூவன் (Rouen) நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றியதும் ஹென்றியின் பெரும் வெற்றி. அடுத்து போன் டோயிஸ் என்ற நார்மண்டிய நகரையும் வென்று 1419-ல் பாரிசை நோக்கி முன்னேறத் திட்டமிட்டிருந்தார்.

அத் தருணத்தில் ஃபிரான்சு நாட்டில் உள்நாட்டுப் பூசல் உச்ச நிலையை அடைய ஆரம்பித்தது.

நார்மண்டி முழுவதையும் வென்று ஃபிரான்ஸின் தலைநகரான பாரிசுக்கு ஹென்றி குறிவைத்திருக்க, ஒற்றுமையின் அவசியத்தைப் புரிந்துகொண்டு அதுவரை பூசலிட்டுக்கொண்டு இருந்த பர்கண்டியர்களும் (Burgundians), ஆர்லியன்சுகளும் (Orleanists) அரசன் ஆரும் சார்லஸின் மகனை இளவரசன் சார்லஸ் முன்னிலையில் மான்டிரோ நகரத்தில் கூடிப் பேசினர். பேச்சு வார்த்தைகளின் இடையிலே பர்கண்டிப் பிரபுவான டியூக் ஜான் ஆர்லியனைச் சேர்ந்த வெறியன் ஒருவனால் கொல்லப் பட்டான். சமரச முயற்சி முடிந்தது. கொல்லப்பட்ட டியூக் ஜானின் மகனை ஃபிலிப் உடனே ஹென்றியுடன் 1420ல்-டிராயிஸ் (Troyes) என்னுமிடத்தில் உடன்பாடு செய்து கொண்டான். பல வெற்றிகளாலும் கிடைத்திராத இலாபம் இவ் வுடன்படிக்கையால் ஹென்றிக்குக் கிடைத்தது. அதன்படி ஃபிரெஞ்சு மன்னராக ஆரும் சார்லசின் மகள் காதரீனை ஹென்றி மணம் செய்துகொள்ள வேண்டும்; ஆரும் சார்லஸ் காலமான தும் ஃபிரான்சின் அரச வாரிசுக்கு ஹென்றி அல்லது அவரின் சந்ததியார்களே உரியவர்களாவர் என்ற ஷரத்துகள் அறிவிக்கப் பட்டன.

வெற்றித் திருமகனாக நாடு திரும்ப நினைத்த ஹென்றி காதரீனை மணந்து மருமகனாக 1420-ல் பாரிசை அடைந்தார். ஹென்றியின் வாழ்க்கையில் மறக்கமுடியாத நாளாக அத் திருநாள் இருந்திருக்கவேண்டும்.

உடனே இங்கிலாந்துக்குத் தம் மனைவியுடன் திரும்ப வேண்டிய அவசியமேற்படத் தம் சகோதரன் டியூக் தாமஸ் என்பவரிடத்தில் படைத் தலைமையை ஒப்படைத்துவிட்டு, ஹென்றி ஃபிரான்சைவிட்டு அகன்றார். டிராயிஸ் உடன்படிக் கையை ஒப்புக்கொள்ளாத இளவரசர் சார்லஸ் (ஆரும் சார்லஸின் மகன்) தாம் சேகரித்த வீரர்களுடன் கி.பி. 1421-ல் பீக் (Beague) என்னுமிடத்தில் ஆங்கிலேயர்களைத் தாக்கி வெற்றி கொண்டான். டியூக் தாமஸ் உள்படப் பல ஆங்கிலேய வீரர்கள் சண்டையில் கொல்லப்பட்டனர். செய்திகேட்டு உடனே

ஃபிரான்ஸ் திரும்பிய ஹென்றி அடுத்த ஓர் ஆண்டில் கடுமையாகப் போர் செய்து இழந்துவிட்ட ஆதிக்கத்தைப் பெறப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனால், மியக்ஸ் என்ற இடத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த ஹென்றி நோயினால் பாதிக்கப் பட்டு 1422-ல் காலமாகிவிட்டார்.

ஆரும் ஹென்றியின் காலம்

இரண்டு மாதங்கள் கழித்து அவரின் மாமனாரும் ஃபிரான்சின் அரசருமான ஆரும் சார்லசும் மரணமடைந்தார். ஐந்தாம் ஹென்றி சிலகாலம் உயிர் வாழ்ந்திருப்பாரேயானால், தாம் உரிமை கோரிய அரசுக்கு டிராயிஸ் (Troyes) உடன்படிக்கையின் படி, மன்னராகியிருக்கலாம்; வரலாற்றின் பாதையும் திரும்பி யிருக்கும். ஆனால், அவரின் காலம் முடிந்தது. அத்துடன் இங்கிலாந்தின் வெற்றிப் பட்டியலும் முடிந்தது. காலம் சென்ற மன்னரின் ஒரே மகனரான ஆரும் ஹென்றி இங்கிலாந்தின் அரசராகப் பட்டம் சூடினார். டிராயிஸ் உடன்பாட்டின்படி ஃபிரான்சு நாட்டின் லூவார் ஆற்றுக்கு வட பகுதியில் பர்கண்டியர்களோடு சேர்ந்து கூட்டு ஆட்சி அமைத்திருந்தனர். ஹென்றி யின் சிறிய தந்தையாகிய பெட்ஃபோர்டு டியூக் (Duke of Bedford) ஃபிரான்சில் அரசரின் பிரதிநிதியாக இருந்தார். வீரமும் அறிவும் பெற்றிருந்த பெட்ஃபோர்டு பர்கண்டியர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் ஆதிக்கத் திற்கு ஃபிரான்சின் அப் பகுதிகளில் எதிர்ப்பே இல்லை.

இறந்துவிட்ட ஃபிரான்ஸ் அரசரின் மகனரான ஏழாம் சார்லஸ் ஆர்லியன்சுகளின் உதவியுடன் லூவார் (Louvar) ஆற்றுக் குத் தென்பகுதியில் மட்டுமே தமது ஆதிக்கத்தைப் பெற்றி ருந்தார். சார்லஸ் திறமையற்றவராக இருந்ததால் ஆங்கிலே யர்களை விரட்டி, தம் நாட்டை மீட்டு ஐக்கியப்படுத்த வேண்டு மென்ற எண்ணமும் அவருக்கு மற்றவர்கள் சொல்லியே தெரிய வந்தது.

கி.பி. 1423 - 1424 ஆண்டுகளில் ஆங்கிலேயர்களின் உதவியுடன் பர்கண்டியர்கள் தம் பகைவர்களான அர்மானியாக் கியர்களைத் (ஆர்லியன்சுகள்) தோற்கடித்து, ஃபிரெஞ்சுக்காரர் களின் எதிர்ப்பை முரியடித்திருந்தனர். ஆங்கிலேயர்களின் ஆட்சி அஸ்தமிக்காது என்ற ஒரு நிலை அப்போதிருந்தது. பெட்ஃபோர்டும் அவரது கூட்டாளிகளுமான பர்கண்டியர்களும் லூவார் ஆற்றுத் தென்பகுதியிலும் தங்களின் ஆட்சியைப் பரப்ப நினைத்தனர். அதற்கேற்பக் கி.பி.1428-ல் ஆர்லியன்ஸ் நகரத்தை முற்றுகையிட ஆரம்பித்தனர். மத்திய, தென் ஃபிரான்சின்

பகுதிகளை எளிதில் கைப்பற்றுவதற்கேற்ப ஆர்லியன்ஸ் நகரம் நுழை வாசலாக இருந்தது. அரசன் ஏழாம் சார்லஸ் செயலற்றுக் கிடந்தான். அவன் ஆண்ட பகுதிகளில் நிலைமை மிகவும் சீர்கெட்டிருந்தது. எந்த நேரத்தில் ஆங்கிலேயர்களின் படைகள் அவரைச் சூழ்ந்துகொண்டுவிடுமோ என்ற பயம் பரவியிருந்தது. சீர்கெட்ட நிலையிலிருந்து ஃபிரான்சு நாட்டைக் காக்க ஏழாம் சார்லஸ் சக்தியற்றவராக இருக்க, அவரைத் தேடி அவைக்கு ஒரு பெண் வந்தாள். வரலாற்றில் ஓர் அரிய நிகழ்ச்சியைச் செய்து காட்டிய அந்த அதிசயப் பெண்ணின் பெயர் ஜூன் - டி – ஆர்க் (ஜோன் ஆர்க்) என்பது.

ஃபிரான்சின் வட கிழக்குப் பகுதியான ஷாம்பென் மாவட்டத்தைச் சேர்ந்த தோம்ரெமி (Domremy) என்னும் சிற்றூரைச் சேர்ந்தவள். தன் ஆடுகளைக் கிராமத்தில் மேய்த்துக் கொண்டிருந்தபோது, தேவதைகளான செயின்ட் காதரீன், செயின்ட் மைக்கல் போன்ற கடவுளின் தூதுவர்கள் தன் முன் தோன்றி, ஆணையிட்டதைக் கேட்டாள். நாட்டின் தொல்லைகளை நீக்கி, எதிரிகளை விரட்டி ஃபிரான்சை ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்ற உத்தரவை ஜோன் தன் அகச்செவியில் கேட்டாள். கடவுள் ஆணையை ஏற்று, பகைவர்களைக் கடந்து, சார்லஸின் சபைக்கு இறுதியாக வந்து சேர்ந்தாள்.

'ஆங்கிலேயர்களை விரட்டி உம்மை ரீம்ஸ் நகரில் முடி சூட்டும்படியான தேவனின் கட்டளையோடு வந்துள்ளேன்'' என்று வீர முழக்கமிட்டாள். ஆரம்பத்தில் நம்ப மறுத்த சார்லசுக்கு ஜோனின் உதவியை உதறக் கூடாதென்ற எண்ணம் தோன்றியதும், சில படையைக் கொடுத்து அவளை ஆர்லியன்ஸ் நகரைக் காப்பாற்ற அனுப்பினார். கவசம் தரித்து ஆண் உடையில் குதிரைமீதமர்ந்து தான் பெற்ற படையுடன் கி. பி. 1429-ல் ஆர்லியன்ஸ் நகரை அடைந்தாள். நகரைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டு வந்த ஆங்கில—பர்கண்டியர்கள் விரட்டப்பட்டனர். புகழ்பெற்ற தளபதிகளும் செய்ய முன்வராத காரியத்தைப் பதினெட்டு வயது நிரம்பிய ஓர் ஆடு மேய்த்த பெண் சாதித்தது அதிசயமாக இருந்தது. அவளின் வீரத்தால் ஊக்குவிக்கப்பட்ட ஃபிரெஞ்சுப் படையினர் ஆவேசம் கொண்டு எதிரிகளை விரட்டிச் சென்றனர். ஆர்லியன்ஸ் நகரை மீட்டு, சார்லசின் ஆட்சிக்கு வரவிருந்த ஆபத்தை நீக்கிய ஜோனும் அவளின் வீரர்களும் படாய் என்னுமிடத்தில் இன்னொரு சண்டை செய்து, முழு வெற்றி அடைந்தனர். தனக்கிட்ட கட்டளையின் படி சார்லசை ரீம்ஸ் நகரத்திற்கு அழைத்துச் சென்று ஃபிரான்சின் மன்னராக ஜோன் முடி சூட்டுவித்தாள். கடவுள் நம்பிக்கை

கொண்ட அத்தனை ஃபிரெஞ்சுக் காரர்களும் சார்லசைத் தங்களின் மன்னராக ஏற்க கொள்ள முன்வந்தனர். அதுவரை ஆங்கில பார்கண்டி கூட்டாட்சிக்கு உடந்தையாக இருந்தவர்களும் சார்லசைத் தங்களின் தலைவராகஒப்புக் கொண்டனர்.

ஆங்கிலேயர்களை ஃபிரான்சைவிட்டு வெளியேறிவிடும்படி ஜோன் வேண்டுகோள் விடுத்தாள். அவளைச் சைத்தானின் கையாள் என நினைத்த ஆங்கிலேயர்கள் அதற்கு மறுக்க ஜோன் மீண்டும் படைத் தலைமை கொண்டு காம்பேன் என்ற இடத்தை முற்றுகையிட்டாள். ஆனால், கி.பி. 1430-ல் மே 23-ல் தற் செயலாக எதிரிகளின் வசம் சிக்கிக்கொண்டாள். சில நாள்கள் கழித்து 'சூனியக்காரி' என்ற பழியை அவள்மீது சுமத்தி ரூவன் நகரில் எரித்துக் கொன்றனர். கோழைத்தனமும் துரோக உணர்வும் கொண்டிருந்த ஃபிரெஞ்சுப் பிரபுக்களுக்கு ஜோனின் புனிதமான தியாக மரணம் புத்துணர்வு கொடுத்தது. ஜோனை எரித்த தீ, நாடு முழுவதும் வீர உணர்ச்சியாகக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அந்நியர் ஆதிக்கத்திற் கெதிராகப் புது உணர்ச்சி ஃபிரான்சில் பரவி வரும்போது அதுவரை நிலைத்திருந்த ஆங்கில பார்கண்டி உறவும் சீர்கெட ஆரம்பித்தது.

பார்கண்டியர்களின் ஒத்துழைப்பின் காரணமாகவே ஃபிரெஞ்சுப் பகுதிகளில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் நீடித்துவந்தது. ஆங்கில –பார்கண்டி உறவை நிலைப்படுத்தவே ஃபிரான்சில் ஆங்கில மன்னரின் பிரதிநிதியாக இருந்த பெட்ஃபோர்டு டியூக் பர்கண்டி பிரபுவின் சகோதரியான ஆன் என்பவளை ஏற்கெனவே மணம் செய்துகொண்டு இருந்தார். 1432-ல் ஆன் இறந்துவிடவே பெட்ஃபோர்டு மறுமணம் செய்துகொண்டார். அச் செய்கையைப் பர்கண்டியர்கள் விரும்பவில்லை. பெட்போர்டின் சகோதரரான ஹம்பரி என்பவர் பர்கண்டி பிரபு காதலித்த பெண்ணை மணம் செய்துகொள்ள, ஆங்கில - பர்கண்டி பிளவு இன்னும் அதிகரித்தது. நாட்டிலே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சியைக் கண்ட பர்கண்டியர்களுக்கு ஆங்கிலேயரின் உறவை முரித்துக் கொள்ள மேற்சொன்னவை காரணங்களாக அமைந்தன.

ஆங்கிலேயர்களுடன் உறவாடுவதைத் தேசத்துரோகமாகக் கருதிய பர்கண்டியர்கள் கி.பி. 1435-ல் ஆரஸ் என்னுமிடத்தில் ஃபிரெஞ்சு அரசன் ஏழாம் சார்லசைச் சந்தித்து உடன்பாடு செய்து கொண்டனர். இதற்கிடையே ஃபிரான்சில் ஆங்கில ஆதிக்கத்தைக் காத்துவந்த பெட்ஃபோர்டும் காலமானார். பர்கண்டியர்களின் நட்பை அங்ஙனம் இழந்த ஆங்கிலேயர்களுக்கு இனி அப் போரில் தோல்விகளே காத்திருந்தன.

கி.பி. 1435 - 1453 காலத்தில் நடந்த சண்டைகளே நூற்றாண்டுப் போரின் இறுதிக் கட்டமாக அமைந்தது. நார்மண்டி., காஸ்கனிப் பகுதிகளை வென்ற ஃபிரெஞ்சுக்காரர்கள் பாரிஸ் நகரையும் 1436-ல் மீட்டனர். ஒருவர்பின் ஒருவராக ஃபிரான்சுக்குப் படைகொண்டு வந்த வார்விக் (Warwick) யார்க் (York) சோமர் செட் (Somerset) பிரபுக்கள் தோற்கடிக்கப்பட்டனர். கி. பி. 1442-லிருந்து இங்கிலாந்தில் சுய ஆட்சி புரியத் தொடங்கிய ஆரும் ஹென்றி வில்லியம் டிலாபோல் என்ற ஆலோசகரின் யோசனைப்படி சார்லஸின் உறவினளான மார்க்ரெட் என்பவளை மணந்துகொண்டு கி.பி. 1445-ல் போர் நிறுத்தம் செய்துகொண்டார். அதன்படி மெயின் பகுதி சார்லசுக்குக் கொடுக்கப்பட்டது.

கி.பி. 1449-ல் மீண்டும் போர் மூண்டது. பார்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்து நார்மண்டி முழுவதையும் ஃபிரெஞ்சுக்காரர்கள் மீட்டனர். காஸ்கனிப் (Cascony) பகுதியை எப்படியும் காக்கவேண்டுமென ஆங்கிலேயர்கள் டால்போட் என்பவரை அனுப்பியிருந்தனர். ஆனால், 1453 ஜூலை 17-ல் கால்டலன் என்னுமிடத்தில் நடந்த கடும் போரில் ஆங்கிலப் படைகள் அழிக்கப்பட்டன. ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஃபிரான்சில் தொடர்ந்திருக்கும் என்ற நினைவு கனவாயிற்று. கலே நகரம் தவிர மற்ற எல்லா ஃபிரெஞ்சுப் பகுதிகளையும் ஆங்கிலேயர்கள் இழந்தனர். இங்ஙனம் மூன்றும் எட்வர்டு காலத்தில் கி. பி. 1339-ல் வெற்றியாகத் தொடங்கிய அப் போர் ஆங்கிலேயர்களுக்குப் படுதோல்வியாகக் கி.பி. 1453-ல் ஆரும் ஹென்றி காலத்தில் முடிந்தது.

பிரிட்டனின் இறுதித் தோல்விக்குக் காரணங்கள்

ஆரம்ப வெற்றிகளைப் பெற்ற ஆங்கிலேயர் இறுதியில் ஏன் அப் போரில் தோல்வியுற்றனர் என்பதைக் காணும்போது கீழ்க் காணும் சில காரணங்கள் தெரியவரும்.

உள் நாட்டுப் பூசல்களால் பலவீனப்பட்டிருந்த ஃபிரான்சு நாட்டை மூன்றும் எட்வர்டு, ஐந்தாம் ஹென்றி என்ற ஆங்கில அரசர்கள் புதிய போர்த் தந்திரங்களைக் கையாண்டும் புதிய ஆயுதங்களைச் (வெடிமருந்து) சண்டையில் உபயோகித்தும் வெற்றிகளைக் கண்டனர். திறமைமிக்க தளபதிகளான கருங்கவச இளவரசரும் பெர்ட்ராண்ட்டு குயிஸ்லின் போன்றவர்களும் ஆங்கிலேயரின் வெற்றிக்குக் காரணமாக இருந்தனர். ஐந்தாம் ஹென்றியின் காலத்தில் இங்கிலாந்து முழுமனதுடன் போரில்

ஈடுபட்டிருந்ததாலும் ஆங்கிலேயர்களுக்குப் பர்கண்டிகளின் உதவி கிடைத்திருந்ததாலும் வெற்றிகள் தொடர்ந்தன.

ஆயின் போரின் இறுதிக் கட்டத்தில் குறிப்பாக வீரப் பெண் ஜோனின் காலத்திலிருந்து ஃபிரான்சில் புதிய தேசிய உணர்ச்சி தோன்றியிருந்தது. ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு உறுதுணையாக இருந்த பர்கண்டிகளின் நட்பும் முரிந்துவிட்டது. திறமைமிக்க பெட்ஃபோர்டு டியூக்கின் மரணமும் ஆங்கிலேயர்களைப் பலவீனப்படுத்தியது. உள்நாட்டுக் குழப்பங்களால் பாதிக்கப்பட்டிருந்த இங்கிலாந்தினால் போரில் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை.

ஆகவே, போரின் இறுதிக் கட்டத்தில் ஆங்கிலேயர்கள் படுதோல்வி அடைந்தனர்.

நூற்றாண்டுப் போரினால் இங்கிலாந்தில் ஏற்பட்ட சில முக்கிய விளைவுகளை அடுத்துக் காண்போம்.

போரின் விளைவுகள்

போர்ச் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் மூன்றாம் எட்வர்டு, ஐந்தாம் ஹென்றி என்ற அரசர்கள் அடிக்கடி பாராளுமன்றக் கூட்டங்களைக் கூட்டி, அதிக மானியத் தொகைகள் கேட்டனர். அச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்ட பாராளுமன்றம் தனக்கிருந்த அதிகாரத்தையும், இல்லாத உரிமைகளையும் பெற்றன. இங்ஙனமாக, இங்கிலாந்தில் பாராளுமன்ற வளர்ச்சிக்கு அப் போர் உதவியாக இருந்தது.

கெரயிசி, பாய்ட்டார்ஸ், ஆஜன் கோர்ட் சண்டைகளில் ஆங்கிலப் படைகள் பெற்ற வெற்றிகள் இங்கிலாந்து மக்களைப் பெருமைப்படச் செய்தது. அந்தப் பெருமிதத்திலே தேசியப் பற்று மக்களிடையே உருவானது. ஆங்கில சமுதாயத்திலிருந்த பலதரப்பட்ட மக்களிடையே 'எல்லாரும் ஒரு நாட்டின் மக்கள்' என்ற உணர்வு பிறந்தது. அதுவரை ஃபிரெஞ்சு மொழியையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்றி வந்த ஆங்கில மேட்டுக் குடியினரும் அவைகளை அந்நிய வழக்கமென உதறித் தங்கள் நாட்டின் மொழியையும், பழக்கங்களையும் பின்பற்ற ஆரம்பித்தனர்.

நூற்றாண்டுப் போரில் கலந்துகொண்ட பல நிலமானியப் பிரபுக்கள் கொல்லப்பட்டிருந்ததால், நாட்டிலே அவர்களால் ஏற்பட்டுவந்த குழப்பங்கள் குறைந்தன. நிலமானிய முறை அழிய ஆரம்பித்தது எனவும் கூறலாம்.

நூற்றாண்டுப் போர் இறுதியாக முடிந்தபோது நாடு திரும்பிய போர்வீரர்கள் யார்க்குகளுக்கும் லங்காஸ்டருக்கும் இடையே நடைபெற்ற ரோசாப்பூப் போரில் கலந்துகொண்டு நாட்டின் அமைதியைக் கெடுத்தனர். சண்டையிடுவதையே தொழிலாகக் கொண்டிருந்த அவ் வீரர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத நேரத்தில் ரோசாப்பூப் போர் அரிய வாய்ப்பாக இருந்தது. தீவிரமாக நடைபெற்ற ரோசாச் சின்னப் போரும் ஒரு முக்கிய விளைவாகவே கருதப்படுகிறது.

(ஆ) லாலார்டுகள் (The Lollards)

பதினான்காம் நூற்றாண்டின் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இங்கிலாந்தில் தோன்றிய லாலார்டுகள் இயக்கம் போற்றப்படுகிறது. அதைத் தோற்றுவித்த பெரியார் ஜான் விக்லிஃப் (John Wycliffe) என்பவர்.

பிறப்பும் வளர்ப்பும்:

சமயச் சீர்திருத்தக் கருத்துகளைத் துணிவுடன் எடுத்துச் சொன்ன அப் பெரியார் கி.பி. 1320ஆம் ஆண்டில் யார்க்ஷையரில் இருந்த வசதியான குடும்பத்தில் பிறந்தார். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் லௌகீக குருமார்களுக்கான படிப்பைப் பயின்று பாலியல் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர்ச் சிலகாலம் கான்டர்பரி கல்லூரியின் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். மடாலயத் துறவிகளுக்கு என்று சிறப்பாக இருந்த அக் கல்லூரியில் லௌகீக குருமார்களும் கற்கும் திட்டத்தை விக்லிஃப் புகுத்தினார். சமய நூல்களைப் படித்து நன்கு தேர்ச்சி பெற்றிருந்த விக்லிஃப் எதையும் பகுத்தறிவுக் கண் கொண்டு நோக்கினார். இதனால் அவருக்கும் மற்றவர்களுக்கும் சமயத் தத்துவத்தில் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவருடைய சிந்தனைகள் வேத நூலை ஒட்டியே இருந்தன. வேத நூலில் குறிப்பிடாத எதையும் கொள்கையளவில் எதிர்த்தார்.

நாளுக்கு நாள் விக்லிஃப்பின் சமயப் பிரசாரம் தீவிரம் அடைந்தது. திருச்சபையிலே மலிந்திருந்த குறைகளுக்கெல்லாம் அதனிடம் குவிந்திருந்த சொத்துகளே காரணம் என விக்லிஃப் சுட்டிக் காட்டினார். எளிமை கலந்த வாழ்க்கையில் சேவை உணர்ச்சி பிறக்குமென நம்பிய விக்லிஃப் பாதிரிகளையும் குருமார்களையும் ஆடம்பர வாழ்வை ஒதுக்கிவைத்து ஏழை எளியவர் கட்குச் சேவை செய்யும்படி வற்புறுத்தினார்.

அவரின் கொள்கை

திருச்சபையிலே மலிந்திருந்த இலஞ்ச ஊழல், தகுதியற்றவர் கட்குப் பதவியளித்தல், உறவினர்களுக்குச் சலுகை காட்டுதல் போன்ற தீய பழக்கங்களையும் விக்லிஃப் கண்டித்தார்.

அரசுப் பணிகளில் அமர்ந்திருந்த குருமார்களை அதை விடுத்து மதத்துக்காகவும் மக்களுக்காகவும் தொண்டு செய்யும் படி தூண்டினார். அரசுகளின் விவகாரங்களிலே தலையிட்டுத் தங்களின் சமயச் செல்வாக்கினைக் குறைத்துக்கொண்ட போப் பாண்டவர்களின் பழக்கத்தை எள்ளி நகையாடினார். ஜான் விக்லிஃப் இங்ஙனம் தம் சமயச் சீர்திருத்தக் கருத்துகளை வெளிப் படையாகச் சொல்லி அரசர் மூன்றும் எட்வர்டு உள்படப் பலரின் மனதைக் கவர்ந்திருந்தார். கி.பி 1374-ல் அரசர் எட்வர்டு லூட்டர்வர்த் என்ற திருச்சபையின் கோயில் வருமானத்தை விக் லிஃப்பிற்கு உரிமையாக்கினார். அப்போது முதன் முதலாக வரு மானப் பிரச்சினையில் விக்லிஃப் போப்பாண்டவருடன் சச்சர விட்டுக் கொண்டார். விக்லிஃப்பின் துணிச்சலை அரசர் எட்வர்டு உள்ளூரப் போற்றினார். அச் சமயத்தில் பார்ஜஸ் என்ற இடத்தில் சமய வரிகளைப்பற்றிய தகராற்றைப் போப்பாண்டவருடன் பேசிச் சமரசம் காண அனுப்பப்பட்ட ஆங்கிலக் குழுவினரில் விக்லிஃப்பும் எட்வர்டால் ஓர் உறுப்பினராக அனுப்பப்பட்டார். பார்ஜஸ் சென்று திரும்பி வந்ததிலிருந்து விக்லிஃப் தீவிரவாதியாக மாறினார். போப்பாண்டவருக்கு எதிராகக் கருத்துகளை எடுத் துரைத்தார். பிரபஞ்சம் கடவுளுக்கே சொந்தமானதென்றும் கடவுளே தலைவரென்றும் திருச்சபையினர் (போப் உள்பட) நேர் மையான வழியில் செல்லவேண்டும் என்றும் வலியுறுத்தினர். 'குருமார் உரிமை' அல்லது குற்றம் செய்த குருமார்களுக்கு அளிக் கப்பட்ட திருச்சபையின் சலுகை முறையற்றது என்றும், திருச் சபையின் கோட்பாடுகள், உரிமைகள் அத்தனையும் நியாயமான ஒழுக்க நியதிகளைச் சார்ந்து இருக்கவேண்டுமென்றும், அதற்கு மாறுக அவைகள் ஒழுக்க நெறிக்குப் புறம்பாக இருந்தால் அரசு குறுக்கிட்டு அதன் மானியங்களைப் பறித்துக் கொள்ளவேண்டு மென்றும் விக்லிஃப் எடுத்துரைத்தார்.

மேற்கூறிய கொள்கைகளைப் பறைசாற்றி வந்ததால் குரு மார்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் விக்லிஃப் பெறவேண்டி யிருந்தது.

விக்லிஃப்பிற்கு எதிர்ப்பு

1377-ல் செயின்ட் பால் கோயிலில் கோர்ட்டினே என்ற இலண்டன் பிஷப் தலைமையில் விக்லிஃப்பை விசாரணை செய்வ

தெனக் குருமார்கள் முடிவெடுத்து அதற்கான தாக்கீதை அனுப்பினர்கள். போப்பாண்டவருக்குச் செலுத்த வேண்டிய மதவரியிலிருந்து இங்கிலாந்துக்கு விலக்குப் பெற்றுத் தர வேண்டுமென நினைத்திருந்த காப்பாளரான ஜான் கான்ட் தம் முழு ஆதரவை விக்லிஃப்புக்குக் கொடுக்க முன்வந்தார். நாட்டின் காப்பாளரே தமக்குக் காவலாக வர விக்லிஃப் விசாரணைக் கூடத்திற்குள் நுழைந்தார். அதற்குள் கோயில் கட்டிடத்திற்கு வெளியே கூடியிருந்த மக்கள் விக்லிஃப்பை எதிர்த்தும் ஆதரித்தும் கலவரம் செய்யச் சில நிமிடங்களிலே கூட்டம் முடிந்தது. விசாரணையும் தள்ளி வைக்கப்பட்டது.

விக்லிஃப்புக்குத் தம் நாட்டில் ஆதரவு பெருகுவதைக் கண்டு வெகுண்ட போப்பாண்டவர் விக்லிஃப்பின் போதனைகள் தவறுனவை என்று மறுப்பு வெளியிட்டு அவரைக் கைது செய்யும்படியான ஆணைகளை வெளியிட்டார். ஆணைகள் அரசரின் கைகளுக்கு எட்டவில்லை. அதற்குள் மன்னர் மூன்றும் எட்வர்டு காலமாகி விட்டார்.

விக்லிஃப்பின் பிரசார வேகம் இன்னும் தீவிரமடைந்தது. போப்பாண்டவரின் ஆதிக்கத் தலையீட்டையும், ஊழல் நிரம்பிய சமய நிர்வாகத்தையும் விக்லிஃப் சாடினர். மேலும் கொதிப்படைந்த போப்பாண்டவர் 1378-ல் இன்னோர் ஆணையைப் பிறப்பித்தார். லேம்பத் (Lambeth) என்ற இடத்தில் விக்லிஃப்பை விசாரிக்க ஏற்பாடாகியது. குற்றச் சாட்டுகளுக்குப் பதில் சொல்ல வரும்படி விக்லிஃப்பிற்குப் போப்பின் ஆணையின்படி குருமார்கள் தாக்கீது அனுப்பி இருந்தார்கள். ஆக்ஸ்ஃபோர்டிலே தங்கியிருந்த விக்லிஃப் சில நாள்களுக்குத் தாக்கீதின் கட்டளையை ஏற்க மறுத்தார். ஆக்ஸ்ஃபோர்டின் சான்சலரும் அவரைக் கைது செய்ய மறுத்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இறுதியில் விசாரணைக்கு வர விக்லிஃப் இசைந்தபோது அவருக்கு அரசர் இரண்டாம் ரிச்சர்டின் தாயார் பாதுகாப்புக் கொடுத்தார். விக்லிஃப்பைத் தண்டிக்கக் கூடாதெனப் பிஷப்புகளுக்குத் தம் வற்புறுத்தலைத் தெரிவித்து இருந்தார். விசாரணை தொடங்கியது. வெளியே குழுமியிருந்த விக்லிஃப்பின் ஆதரவாளர்கள் கலகம் செய்து மீண்டும் கூட்டத்தைக் கலைத்தனர். விசாரணை முற்றுப் பெறவில்லை.

விக்லிஃப்பின் தீவிரம்

தமது மானசீக வெற்றியைத் தொடர்ந்து அடுத்த இரண்டாண்டுகளில் விக்லிஃப்பின் மதக் கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது. திருச்சபையின் ஊழல்களையும், குருமார்களின் ஆடம்பரத்தையும் போப்பாண்டவரின் அரசியல் தலையீட்டையும் அது

வரை கண்டித்து வந்த விக்லிஃப் மேற்கொண்டு கத்தோலிக்க மதக்கோட்பாடுகளைத் தாக்க முற்பட்டார்.

புனிதப் பொருள் மாற்றம் (Transubstantiation) என்ற கோட்பாட்டின்படி திருக்கோயிலில் கிருத்துவர்கள் உண்ணும் ரொட்டியும் அருந்தும் ஒயினும் (மது) கர்த்தரின் (ஏசு) உடலாகவும் செந்நீராகவும் மாறுகின்றன என்ற கொள்கை அக் காலத்தில் நம்பப்பட்டு வந்தது. அந்த அடிப்படைக் கொள்கையை விக்லிஃப் தாக்க ஆரம்பித்தார். போப்பாண்டவர் அல்லது திருச்சபை அதிகாரிகளின் விளக்கங்களைப் பின்பற்றுமல் வேத நூலில் சொல்லப் பட்டிருந்ததையே கிருத்துவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் விக்லிஃப் வாதாடினார்.

'பொருள் மாற்றம்' போன்ற கோட்பாடுகளில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அக் கால மக்களுக்கு விக்லிஃப்பின் சமயச் சீர்திருத்தப் பிரசாரம் வெறுப்பைக் கொடுத்தது. அது வரை அவரை ஆதரித்து வந்த ஜான் (கான்ட்) கூட விக்லிஃப்பைக் கைவிடத் தொடங்கினர்.

எதிர்ப்புக்கு அஞ்சாத விக்லிஃப்புக்குத் தாம் சரியென நினைத்ததை எடுத்துச் சொல்லும் துணிவு இருந்தது. தம் கருத்துகளை வாதங்களால் எடுத்துரைத்து மற்றவர்களை ஒப்புக்கொள்ளச் செய்யக் கூடிய திறமையும் அவருக்கு இருந்தது. இதுவரை அவருக்கு உதவிய நண்பர்களும் கருத்து வேறுபாட்டினால் தம்மை விட்டு விலக நேரிட்ட போதும், தம் பிரசாரத்தை நிறுத்திக் கொள்ள நினைக்காத மன உறுதியும் இருந்தது.

பணக்காரர்களாலும் பதவியிலிருப்பவர்களாலும் கைவிடப் பட்டதை உணர்ந்த விக்லிஃப் தம் கொள்கைகளை ஏழை எளியவர்களிடையே பரப்பத் தொடங்கினர். ஆக்ஸ்ஃபோர்டில் இருந்த தம் நண்பர்களும் சகாக்களும் விக்லிஃப்பின் கருத்துகளை ஏற்றுக் கொண்ட சீடர்களாயினர். பழுப்பு நிற நீளமான அங்கிகளை அணிந்துகொண்டு லாலார்டுகள் என அழைக்கப்பட்ட அச் சீடர்கள் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று, விக்லிஃப்பின் கருத்துகளை எடுத்துரைத்தனர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டு சேவை உணர்ச்சியுடன் அந்த எளிய குருமார்கள் (Poor Preachers) விக்லிஃப்பின் கோட்பாடுகளுக்கு உகந்த உதாரண புருஷர்களாக விளங்கினர்கள்.

அவரின் தொண்டு

நாள்கள் செல்லச் செல்ல விக்லிஃப்பின் பிரசாரத்தில் சூடு பிடித்தது. 'ஆதிக்க நிலையைக் கடவுள் தன்மையில்தான் எய்த

முடியும்; போப்பாண்டவருக்கும் திருச்சபைக்கும் கிருத்துவர்கள் அடங்கத் தேவையில்லை, என்றும் அவர் கூறினர். கற்றவர் களுக் கென்றே இதுவரை இலத்தீன் மொழியில் பேசியும் எழு தியும் வந்த விக்லிஃப் தம் பிரசாரத்தைப் பாமர மக்களும் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் ஆரம்பித்தார். கிருத்துவர்களின் சமயத்தின் அடிப்படையே பைபிள் என்பதை யுணர்ந்த விக்லிஃப் அதை இலத்தீன் மொழியி லிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இலத்தீன் மொழி தெரியாத பாமர மக்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்ட பைபிளைப் படித்துணர முடிந்தது.

சமயச் சீர்திருத்தப் பிரசாரம் செய்துவந்த விக்லிஃப் ஆங் கிலத்தை ஆதரித்து அம் மொழிக்கு இலக்கியச் சிறப்பைத் தேடிக் கொடுத்தா ரென்பதை நாம் மறக்கக்கூடாது. அதன் பின்னரே விக்லிஃப்பின் பிரசாரங்களும் போதனைகளும் பலரால் புரிந்து கொள்ளப்பட்டன. அநேகர் அவரைப் பின்பற்றலாயினர். பைபிளை ஆதாரமாகக் காட்டி இனித் தங்களின் எண்ணங்களுக் கேற்ப எவரையும் ஏய்க்க முடியாதென உணர்ந்த கிருத்துவக் குருமார்களுக்குக் கோபம் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

கி.பி. 1382-ல் ஆங்கிலப் பிஷப்புக்களின் சபையொன்று விக்லிஃப்பைச் சமயத் துரோகி எனக் கண்டித்தது. அதைத் தொடர்ந்து விக்லிஃப்பையும் லாலார்டுகளையும் ஆக்ஸ்ஃபோர்டி லிருந்து விரட்டும்படி அதன் சான்சலருக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டது. விக்லிஃப்பும் அவர் நண்பர்களும் ஆக்ஸ்ஃபோர்டி லிருந்து வெளியேற்றப்பட்டார்கள். லாலார்டுகளின் இயக்கத் திற்கு அதுவரை தலைமை யிடமாக இருந்த ஆக்ஸ்ஃபோர்டு அவர் களை விரட்டி விட்டதால் அவர்களின் தொண்டு முடிந்துவிட வில்லை. தொடர்ந்து தங்களின் சமயச் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

ஒரு சில லாலார்டுகள் சமய விசாரணையின்முன் கொண்டு வரப்பட்டுத் தங்களின் எண்ணங்களை மாற்றிக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தப்பட்டபோதும் லாலார்டுகளின் பிரசார வேகம் குறையவில்லை. மன்னர் இரண்டாம் ரிச்சர்டின் மனைவி யான ஆன் (Anne) அரசியின் ஆதரவைப் பெற்றிருந்த விக்லிஃப் பைத் தண்டிக்க எவருக்குமே துணிவில்லை. தாம் பரப்பிவந்த கொள்கைகளுக்குத் தகுந்த காரணம் கூறத் தெரிந்திருந்த விக்லிஃப்பைத் தண்டிக்கவும் திருச்சபையினர்களுக்குத் தைரி யில்லை.

தம் கடைசிக் காலத்தை அமைதியாகக் கழித்த ஜான் விக்லிஃப் லீஸிங்டர்ஷையருக்கு அருகேயுள்ள லுட்டர்வொர்த் (Lutterworth) என்னும் இடத்தில் 1384–ல் இயற்கை எய்தினார்.

இங்கிலாந்தின் இடைக்கால வரலாற்றில் ஒரு முக்கிய மனிதராகக் கருதப்படும் விக்லிஃப் அறிவு முதிர்ச்சி பெற்றிருந்த பெரியவர் ஆவார். திருச்சபையில் மலிந்திருந்த குறைகளைக் களைவதற்காக அவரால் தோற்றுவிக்கப்பட்ட லாலார்டுகள் இயக்கம் விக்லிஃப் மறைந்த பின்னரும் தொடர்ந்த தென்றால் அது அவரின் பிரசாரத்திலிருந்த நியாயங்களை எடுத்துக் காட்டுகிறது. ஆழ்ந்த கல்வியறிவு கொண்டிருந்த விக்லிஃப்பின் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைத் திருச்சபையினர்கள் மேற்கொண்டிருப்பார்களானால், ஒன்றரை நூற்றாண்டுகள் கழித்து ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயப் புரட்சியைத் தவிர்த்திருக்கலாம். ஆகவே, 'சமயப் புரட்சியின் விடிவெள்ளி' எனவும் ஜான் விக்லிஃப்புக்குப் புகழ்மாலை சூட்டப்படுகிறது.

லாலார்டுகள்

விக்லிஃப் காலமாகிவிட்டபோதிலும் அவரால் தொடங்கி வைக்கப்பட்ட இயக்கம் இங்கிலாந்தில் இரண்டாம் ரிச்சர்டு ஆட்சிக் காலத்தில் தொடர்ந்தது. மக்களுக்கும் லாலார்டுகளின் போதனைகளில் நம்பிக்கை பிறக்கத் தொடங்கியது. மக்களின் ஆதரவு பெருகுவதைக் கண்டு கிருத்துவக் குருமார்கள் வெகுண்டார்கள். லாலார்டுகளை மதத் துரோகிகளாக அரசர் ரிச்சர்டு தண்டிக்க வேண்டுமெனவும் கூக்குரலிட்டனர். குடியானவர் கலகத்தை ஒடுக்குவதிலும், பிரபுக்களின் சூழ்ச்சிகளைக் களைவதிலும் தம் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்த அரசர் லாலார்டுகளைத் தண்டித்து இன்னொரு குழப்பத்தை உண்டாக்கத் தயங்கினர். லாலார்டுகளைத் தண்டிக்காமல் அவர்களின் இயக்கத்தை மறைமுகமாக ஆதரித்தாரென ரிச்சர்டுமீது குருமார்கள் பழியும் சுமத்தினர்கள். இதற்கிடையே கி.பி. 1399-ல் தோன்றிய புரட்சியின் விளைவாக இரண்டாம் ரிச்சர்டு பட்டம் துறந்தார்.

அடுத்து ஆட்சியில் அமர்ந்த நான்காம் ஹென்றி அவருடைய நண்பரும் உதவியாளருமான அருண்டேல் என்பவரைக் கான்டர்பரியின் ஆர்ச்பிஷப்பாக நியமித்தார்.

தம் ஆட்சி நிலைக்க வேண்டுமெனில் குருமார்களின் ஒத்துழைப்பும் வேண்டுமென எண்ணிய நான்காம் ஹென்றி கி.பி 1401-ல் சமய விரோதிகளை எரித்தலிப்பற்றிய சட்டம் ஒன்றை இயற்றுவித்தார். கான்டர்பரியின் ஆர்ச்பிஷப்பான அருண்

டேல் (Arundel) அச் சட்டத்தைப் பயன்படுத்தித் திருச்சபை யையும் அதன் பழைய கோட்பாடுகளையும் எதிர்த்த லாலார்டு களைத் தண்டிக்க எண்ணினர்.

வில்லியம் ஸாட்டர் (Sawtre) என்ற லாலார்டு ஸ்மித் பீல்ட் (Smithfield) என்ற இடத்தில் எரிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து வேறு சில லாலார்டுகளும் அச் சட்டத்தின்படி எரிக்கப்பட்டனர். தண்டனைக்குப் பயந்து சில லாலார்டுகள் தங்களின் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைக் கைவிடவும் முன் வந்தனர். இருப்பினும் லாலார்டுகளின் இயக்கம் எதிர்ப்புகளுக் கிடையே தொடர்ந்தது.

அவ் வியக்கம் அடுத்து வந்த அரசர் ஐந்தாம் ஹென்றியின் காலத்திலேயே ஏறத்தாழ நசிய ஆரம்பித்தது. கி.பி. 1413-ல் ஆட்சிக்கு வந்த ஐந்தாம் ஹென்றி லாலார்டுகளின் இயக்கத்தை நசுக்க அதிக தீவிரம் காட்டினர். பல லாலார்டுகள், 'சமயத் துரோகிகள்' என்ற பழி சுமத்தப்பட்டு எரிக்கப்பட்டார்கள்,

லாலார்டுகளின் தலைவராகச் சர் ஜான் ஓல்டு காஸில் (Sir John old castle) என்ற பிரமுகர் இருந்துவர ஹென்றியின் கவனம் அந்த அறிவுச் செம்மலின்மீது திரும்பியது. அவரின் மீதும் சமயத் துரோகி என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி ஹென்றி தம் ஆர்ச்பிஷப்பின் முன்னிலையில் விசாரணை தொடங்கினர். கோழைகளைப்போலத் தம் சமயச் சீர்திருத்தக் கருத்துகளை மாற்றிக்கொள்ள மறுத்ததோடல்லாமல் ஓல்டு காசில் அரசரை யும் அங்குக் குழுமியிருந்த குருமார்களையும் கடும் சொற் களால் சாடினர்: 'போப்பாண்டவரே கிருத்துவ மதத்திற்கு எதிரி; நீரும் உம்மைச் சேர்ந்தவர்களும் போப்புக்கு வால் பிடிப் பவர்கள்' என ஓல்டு காசில் ஹென்றிக்கு முன்பாக எதிர்வாதம் செய்தார். பொறுமையிழந்த ஹென்றி அவருக்கு மரண தண் டனை விதித்துச் சிறையில் அடைத்து வைக்க, தண்டனை பெறும் நாள் வருவதற்குமுன் சிறையிலிருந்து ஓல்டு காசில் தப்பி ஓடி விட்டார். சில நாள்கள் பதுங்கியிருந்த ஓல்டு காசில் தமக்கு ஆதரவாக ஆயுதபலத்தைத் தேடிப் பெற்றார். கி.பி. 1413-ல் கிருத்துமஸ் பண்டிகையின்போது எல்தாம் அரண்மனையில் தங்கி யிருந்த அரசர் ஹென்றியைக் கைப்பற்ற வேண்டுமென்ற திட்டத் துடன் தம் லாலார்டு நண்பர்களின் உதவியுடன் இத் திட்டத்தை நிறைவேற்ற ஓல்டு காசில் காத்திருந்தார்,

அச் சதியைத் தெரிந்துகொண்ட அரசர், லாலார்டுகள் இரக சியமாகக் குழுமியிருந்த இலண்டனில் சேரிங் கிராசுக்கருகே உள்ள

செயின்ட் கைல்ஸ் ஃபீல்ட்ஸ் (St. Giles Fields) என்ற இடத்தைத் தாக்கிப் பல லாலார்டுகளைக் கொன்றார். ஆனால், ஓல்டு காசில் தப்பிவிட்டார். சிறைபிடிக்கப்பட்ட மற்ற முப்பத்தேழு லாலார்டுகள் 1414-ல் (ஜனவரி முதல் வாரம்) தூக்கிலிடப்பட்டார்கள். நான்கு ஆண்டுகள் மறைந்து வாழ்ந்த ஓல்டு காசில் இறுதியில் வேல்ஸ் பகுதியில் கைது செய்யப்பட்டு இலண்டனுக்குக் கொண்டு வரப்பட்டார். சமயத் துரோகக் குற்றத்துடன் இராசத் துரோகமும் இணைக்கப்பட்டு, ஓல்டு காசில் விசாரணை செய்யப்பட்டார். மரண தண்டனை பெற்ற ஓல்டு காசில் டிசம்பர் 1417-ல் ஸ்மித்பீல்டு என்ற இடத்தில் எரிக்கப்பட்டார்.

அத்துடன் லாலார்டுகளின் இயக்கம் நசிந்துவிட்டது. ஆயின், அவர்களால் பரப்பப்பட்ட சமயச் சீர்திருத்தக் கருத்துகள் மக்களின் மனதில் பதிந்திருக்க அவையே அடுத்த தலைமுறைகளில் சமயப் புரட்சியாக வெளிப்பட்டன.

(இ) கருங்கொள்ளை நோய், குடியானவர் கலகம்

ஆங்கிலேயர்களின் கவனம் அப்போது ஐரோப்பாவில் நடந்து வந்த நூற்றாண்டுப் போரிலும், இங்கிலாந்தில் மும்முரமடைந்து வந்த லாலார்டுகளின் இயக்கத்திலும் ஈடுபட்டிருந்தபோது, ஆங்கில சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் அளவுக்கு இரு சம்பவங்கள் தோன்றின. கருங்கொள்ளை நோய் (Black death), குடியானவர் கலகம் (Peasant's Revolt) என்ற அவ்விரு சம்பவங்களும் தொடக்கத்தில் ஆங்கில சமூகத்தைப் பாதித்ததோடன்றி அதன் விளைவாக ஆங்கிலேயர்களின் பொருளாதார நிலையிலும் சில பிரச்சினைகளைக் கிளப்பிவிட்டது.

கருங்கொள்ளை நோய்

ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகள் ஆசியாக் கண்டத்தை வாட்டி வதக்கிய கருங்கொள்ளை நோய் எனப்பட்ட பிளேக் (plague) நோய், ஐரோப்பாவில் பரவி, அங்கிருந்து கி.பி. 1348 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இங்கிலாந்தின் மேற்குப்பகுதியை அடைந்தது. இங்கிலாந்தின் மேல்கரையிலிருந்த பிரிஸ்டல் (Bristol) என்ற நகரம் அந்த நோயின் கொடுமையால் தொடக்கத்திலே பாதிக்கப்பட்டது. அந்த நோய் எங்ஙனம் இங்கிலாந்தின் மற்றப் பகுதிகளுக்குப் பரவியது என்பதைச் சுட்டிக்காட்டப் போதிய குறிப்புகள் இல்லாது போயினும் 1348 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அத் தொற்று நோய் இலண்டன் மாநகரையும்

தாக்கியது. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அந்த நோய் கிழக்கு ஆங்கிலியாவையும் தாக்கி, அங்கிருந்து வடபாகம்வரை பரவிச் சென்றது. கி.பி. 1349ஆம் ஆண்டு முடிவதற்குள், இங்கிலாந்தின் எல்லாப் பாகங்களிலும் அப் பெருங்கொள்ளை நோய் பரவிவிட்டது.

ஆங்கில மக்களில் மூன்றிலொரு பங்கினரைச் சாகடித்த இக் கொடிய கொள்ளை நோய் கால்தேவனின் ஏவுகணையாக அமைந்தது. அந்த நோயினால் தாக்கப்பட்டவர்களின் உடலில் கருங்கொப்புளங்கள், கட்டிகள் தோன்றின; தொடர்ந்து காய்ச்சலும், உடம்பெங்கும் வெடிப்பும் தோன்றின; நீளமான ஓட்டுப் பாளங்கள் போன்ற அவ் வெடிப்புகளிலிருந்து குருதி கொட்டியது. இங்ஙனமாகத் தன் உக்கிரத்தைக் காட்டிய அந் நோய் மூன்றும் நாளில் மனிதனின் உயிரைப் போக்கிவிடும்; சில சமயம் அந் நோய் கண்டவர்கள் இருபத்து நான்கு மணிக்குள் ளாகவே இறந்தனர்.

கருங்கொள்ளை நோயினால் ஏற்பட்ட அழிவைத் திட்டவட்ட மாகச் சுட்டிக்காட்டும் புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. லீசெஸ்டர் (Leicester) நகரில் மட்டும் ஆயிரத்து நானூறு மாந்தர் களை அந் நோய் தின்று தீர்த்ததாக, ஒரு பாதிரியார் குறிப்பு எழுதிவைத்தார். நார்விச் (Norwich) திருச்சபை மாவட்டத்தில் எண்ணூறு குருமார்களும், வெஸ்ட்மின்ஸ்டர் மடாலயத்தில் வசித்துவந்த துறவிகளில் பாதிக்குமேலானோரும் அந் நோயின் கொடுமையால் மாண்டுவிட்டதாக அக் காலத்திய திருச்சபைக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

முதல்முறை தாக்கிப் பல ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறித்ததோடல்லாமல் கி.பி. 1362 ஆம் ஆண்டிலும், மீண்டும் கி.பி. 1369ஆம் ஆண்டிலும் அப் பெருங் கொள்ளைநோய் இங்கிலாந்தைத் தாக்கியது. அந் நோய் இங்கிலாந்தில் புரிந்த கோரதாண்டவத்தினால் ஆங்கிலேயக் குடிமக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துபோயிற்று. அந் நோயினால் சுமார் இருபத் தைந்து இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதாகக் கருதப்படு கிறது. முடிமன்னரின் மகள்முதல் உலகப் பற்றற்ற துறவியான ரிச்சர்ட் ரோல் (Richard Rolle) என்பவர்வரை எவரையும் அந் நோய் விட்டுவைக்கவில்லை.

கருங்கொள்ளை நோயினால் ஏற்பட்ட விளைவுகள்

தங்களின் பிரபுக்களின் கட்டளைப்படி அவர்களின் நிலங்களை உழுதுவந்த உட்குடிகள் (villeins) ஏராளமான எண்ணிக்

கையில் அந் நோயினால் தாக்கப்பட்டு இறந்துபோயிருக்க, பல நிலங்கள் உழுவாரற்று வெறுமனே விடப்பட்டன. அந் நிலை யைப் பயன்படுத்திக்கொண்டு, அதிகக் கூலியைக் கேட்டும், முழு உரிமைகளைக் கோரியும் ஒரு புதிய விவசாய வகுப்புத் தோன்றியது. இதற்குமுன் உட்குடி ஒருவன் பெற்றுவந்த கூலியைவிட மூன்று மடங்கு அதிகக் கூலியையும், தாங்கள் விரும்பிய இடத்தில் தொழில் செய்யும் உரிமையையும் அத் தொழி லாளர்கள் கோரினர். இந் நிலையில், பல கட்டுப்பாடுகளுக்கு இசைந்து, அதுவரை வேலை செய்துவந்த இதர உட்குடியினரும், உயர்ந்த கூலியையும், உரிமையையும் பெறுதற்கு முயன்றனர்.

நிலமானிய முறையில் கட்டுப்பட்டு அதுவரை வேலை செய்து வந்த எஞ்சியிருந்த உட்குடிகளும், தங்களுக்கு உயர்ந்த கூலியுடன் உரிமையுடனும் கூடிய விடுதலை கேட்க, சில நிலப்பிரபுக்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களானார்கள். நிலத்தைத் தரிசாக விட்டுவைக்க மனமில்லாத, வசதிபடைத்த நிலக் கிழார்கள் அதிகக் கூலியைக் கொடுத்தும், சில உரிமைகளை வழங்கியும் நிலங்களைச் சாகுபடி செய்யச் செய்தனர். ஆயின், வேறு சில நிலப்பிரபுக்கள், அப் புதிய நிலைமையை ஏற்றுக்கொள்ள விரும்பாது தங்கள் விளைச்சல் நிலங்களை, ஆட்டுப் பண்ணைகளுக் குரிய மேய்ச்சல் நிலங்களாக மாற்றி, பயன்படுத்தத் தொடங் கினர். மேலும் சில நிலக்கிழார்கள் தங்களின் பண்ணைகளை வருடாந்திரக் குத்தகைக்கு விட்டனர். அதன் விளைவாகக் குத்தகை விவசாய முறை (Tenant farming) ஏற்பட்டது. இவை மட்டுமன்றி, அந் நோயினால் எண்ணற்ற மக்கள் இறந்தபோது, மக்களுக்குச் சன்மார்க்க நெறிகளின் மீதிருந்த பற்றும் குறைய ஆரம்பித்தது. சன்மார்க்க நெறிகளைப் போதித்துவந்த திருச் சபையினர்மீதும் மக்களுக்கு வெறுப்புணர்ச்சி மேலிட்டது.

இடுக்கண் வருங்கால் ஆண்டவனை நினைப்பது பக்திமான் களின் பழக்கமாக இருக்கலாம். ஆனால், பாமரமக்களுக்குத் தெய்வ நெறியில் அவநம்பிக்கை ஏற்பட்டது.

அப் பெரும் துன்ப காலத்தில் நிலக்கிழார்களால் கட்டுப்படுத் தப்பட்டு வந்த பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் கூலிகளைக் (wages) குறைத்துக் கருங்கொள்ளை நோயினால் ஏற்பட்டிருந்த சமூக, பொருளாதார மந்தங்களைத் தடுக்க முயன்றது. கொள்ளை நோய் ஏற்படுவதற்கு முன்பு, வேலையாட்கள் பெற்றுவந்த கூலியை மீண்டும் தணிக்கும் வகையில் மூன்றாம் எட்வர்டின் பாராளுமன்றம் 1351 ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் சட்ட மொன்றை (Statute of Labourers) நிறைவேற்றியது. அச்

சட்டத்தின்படி உயர்ந்த கூலிகளைக் கொடுக்கவோ, பெறவோ கூடாதென நிலச்சுவான்தார்களும், வேலையாட்களும் தடுக்கப் பட்டனர்; தொழிலாளிகளின் கூலிகள் வரையறுக்கப்பட்டன. ஆயின், அச் சட்டத்தை நடைமுறையில் கொண்டுவரச் சிரம மிருந்தது. சட்டத்தினுல் வரையறுக்கப்பட்ட கூலிகளைப் பெற்று வேலை செய்வதற்குத் தொழிலாளிகள் மறுக்க, தங்களின் நிலங்களை முற்றிலும் தரிசாக வைத்திருக்க மனமில்லாத, சில நிலக்கிழார்கள் அதிகமான கூலிகளையே கொடுக்க வேண்டி யிருந்தது. ஒரு சில நிலப்பிரபுக்கள் தொழிலாளர்களின் சட்டத் தின்படி கெடுபிடி செய்ய முற்பட்டபோது, பழைய கூலிகளையும் ஏற்கத் தொழிலாளர்கள் மறுத்து, கிளர்ச்சி செய்ய, இதுவே பின்னர்க் குடியானவர் கலகமாக (Peasant's Revolt) உரு வெடுத்தது.

பெருங்கொள்ளை நோயினுல் நாட்டிலே ஏற்பட்டிருந்த சமூக, பொருளாதாரச் சிக்கல்களைக் கலைப்பதற்கு, மூன்றும் எட்வர்டு கம்பளித் தொழிலை (wool industry) விருத்தி செய்ய முனைந்தார்.

ஃபிளாண்டர்சில் (Flanders) உள்ள கம்பளித் தறிகளுக்கு இங்கிலாந்திலிருந்தே பதப்படுத்தப்படாத கம்பளி (wool) ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. லிங்கன் (Lincoln), பிரிஸ்டல் (Bristol), யார்க் (York), வின்செஸ்டர் (Winchestor) ஆகிய பட்டணங்களிலிருந்தே கம்பளி நூல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இங்கிலாந்தின் எதிர்க்கரையிலிருந்த கலே நகரம் (Calais) ஆங்கிலேயர்களால் நூற்றாண்டுப் போரில் பிடிபட்டதும், ஏற்று மதி செய்யவேண்டிய கம்பளி நூல்களை, ஆங்கிலக் கப்பல்களிலே கலே நகரச் சந்தைக்கு அனுப்பவேண்டு மென்று மூன்றும் எட்வர்டு ஆணை பிறப்பித்தார். ஃபிளாண்டர்ஸ் உட்பட மற்ற ஐரோப்பிய நாடுகளின் நெசவாளிகள் கலே நகரத்திலிருந்தே தங்களுக்கு வேண்டிய கம்பளி நூல்களைப் பெறவேண்டுமென்று அதனுல் ஏற்பாடாகியது. மேற்கூறிய ஆணையினுல், இங்கிலாந்தில் கடல்வழிப் பிரயாணம் செய்வதில் ஊக்கமும், கப்பற்கட்டும் தொழிலில் சுறுசுறுப்பும் ஏற்பட, முணுமுணுத்து வந்த தொழிலா ளர்களுக்கு, கடல் கடந்துபோகவும், மாற்றுத் தொழிலில் ஈடுபடவும் அச் சட்டம் வாய்ப்பளித்தது.

விடுதலை பெற்ற உட்குடிகளுக்கும், பண்ணைகளை விட்டு ஓடிய உட்குடிகளுக்கும் இங்கிலாந்திலேயே மாற்றுவேலை (alternative work) கொடுக்கும் திட்டமாக, மூன்றும் எட்வர்ட் ஃபிளாண்டர் சிலிருந்து ஃபிளமிய (Flemings) நெசவாளிகளை இங்கிலாந்திற்கு

வரவழைத்து, ஆங்கில மக்களுக்குக் கம்பளி நூற்பு, நெசவுத் தொழில்களின் நுணுக்கங்களைக் கற்றுத்தரச் செய்தார். அந்த ஏற்பாடு உட்குடிகளுக்கு அப்போதைக்கு மாற்றுத் தொழிலைக் கொடுத்ததோடன்றி, விரைவில் கம்பளித் தொழில் இங்கிலாந்தின் தேசியத் தொழிலாக வளரவும் உதவியது.

கருங்கொள்ளை நோயினால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்க, நிலக்கிழார்களும், பாராளுமன்றமும், மன்னரும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அத்தனையும், தொழிலாளர்களிடையே எழுந்திருந்த மனக்கசப்பையும் எழுச்சியையும் அழித்தொழிக்க வில்லை யென்பதை, தொடர்ந்து ஏற்பட்ட குடியானவர் கலகம் எடுத்துக் காட்டியது,

குடியானவர் கலகம் (Peasant's Revolt-1381)

மூன்றாம் எட்வர்டின் பேரரான இரண்டாம் ரிச்சர்டு என்ற அரசரின் காலத்தில் சமூகத்தின் கடைநிலையிலிருந்து மக்கள் கொந்தளிப்பின் எதிரொலியாக அக் கலகம் அமைந்தது. அதுவே குடியானவர் கலகமாகும். 1381ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இங்கிலாந்தின் பல பாகங்களில் ஏற்பட்ட அக் கிளர்ச்சியில் விவசாயிகளும், தொழிலாளர்களும் மும்முரமாக ஈடுபட்டனர். ஆங்கில சமூகத்தின் மேலெழுச்சியாக (upheaval) அமைந்த அக் குடியானவர் கலகம் பற்பல இடங்களில் பற்பல காரணங்களால் எழுந்தபோதும், ஒரே சமயத்தில் நாடெங்கிலும் அது பரவலாக நடைபெற்றது.

காரணங்கள்

அக் கலகம் மும்முரமாகத் தோன்றிய எஸ்ஸெக்ஸ் (Essex) பகுதியில் அது உட்குடிகளின் மானியம் (villeinage) என அழைக்கப்பட்ட ஏற்பாட்டுக்கு எதிர்ப்பாக எழுந்தது. நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்த அப் பழைய ஏற்பாட்டின்படி, நிலக்கிழார்களின் நிலங்களில் வேலைபார்த்து வந்த உட்குடிகளுக்குக் குறைந்த கூலியும், வேண்டிய உரிமையும் மறுக்கப்பட்டு வந்தன. கருங்கொள்ளை நோய்க்குப் பிறகு உட்குடிகளின் நிலையில் ஏற்பட்ட மாறுதல்களை நாம் முன்னரே கண்டோம். சமுதாயத்திலும், பொருளாதார நிலைகளிலும் அதனால் தோன்றியிருந்த மாறுதல்களைப் புறக்கணித்தும் உட்குடிகளின் மானியத்தைச் சுட்டிக்காட்டியும், சில நிலக்கிழார்கள் கூலி உயர்வு கொடுக்க மறுத்தும், போதிய நில உரிமைகளை வழங்க மறுத்தும் அடக்கப்பட்டுவந்த உட்குடிகளுக்கு விடுதலையளிக்க மறுத்த

போதும் எஸ்ஸெக்ஸ் பகுதியில் வாழ்ந்த குடியானவர்கள் கொதித்தெழுந்தனர்.

எஸ்ஸெக்ஸ் பகுதியில் உட்குடிகளின் மானிய ஏற்பாட்டைக் கலைத்தெறிவதற்காக எழுந்த அக் குடியானவர் கலகம், கென்ட் (Kent) பகுதியில் தலைவரிக்கு எதிர்ப்பு இயக்கமாக அமைந்தது. பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆங்கில மக்கள் ஒவ்வொருவரும் தலா 1 ஷில்லிங் (Shilling) ஆண்டொன்றுக்கு இருமுறை கட்டி வந்ததே தலைவரி ஆகும். நூற்றாண்டுப் போரினால் அரசுக்கு ஏற்பட்ட செலவைச் சரிக்கட்டவே அந்த வரி விதிக்கப்பட்டது. அதுவரை நேரடியான வரி எதுவும் (direct tax) கட்டவேண்டிய அவசிய மில்லாதிருந்த குடியானவர்களுக்குத் தலைவரி வெறுப்பை யளித்தது. தொழிலாளர்களுக்குப் பழைய கூலியையே கொடுக்க வேண்டு மென்று வற்புறுத்திய தொழிலாளர்களின் சட்டத்திற்கு எதிராகவும் சில இடங்களில் அக் கலகம் தோன்றியது. சமய நெறியில் நிலைகுலைந்து வந்த குருமார்கள் வாழ்ந்த திருச்சபை களுக்கெதிராகவும், கெடுபிடிக்கொள்கையினால் குடியானவர் களையும் தொழிலாளர்களையும் துன்புறுத்திவந்த சில பிரபுக்களுக் கெதிராகவும், வேறு சில இடங்களில் அக் கலகம் தோன்றியது.

அக் கலகத்தில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட குடியான வர்கள், தொழிலாளர்கள்மட்டும் அன்றி, சமுதாயத்தின் வேறு சில வகுப்பினருக்கும் சில காரணங்களால் அரசாங்கத்தின் மீது அதிருப்தி யிருந்துவந்தது. முதலாம் எட்வர்டு காலத்தில் பணம் கொடுக்கல் – வாங்கல் (லேவாதேவி) தொழிலில் ஈடுபட் டிருந்த யூதர்கள் வெளியேற்றப்பட்டிருந்ததை யொட்டி, லம்பார் டியர்கள் (Lombards) போன்ற வேறு சில அந்நியக் குடியினர் இங்கிலாந்துக்கு வந்து, வட்டித் தொழிலில் ஈடுபட்டிருந்ததை ஆங்கில வர்த்தக சமூகத்தில் சிலர் எதிர்த்தனர். நாளடைவில், அந்நியர் பணமூட்டைகளை நாட்டுக்குள் வரவழைத்த அரசின்மீது ஆங்கில வர்த்தகர்கள் வெறுப்படைந்தனர். மூன்றும் எட்வர்டு காலத்தில் ஆங்கில மக்களுக்குக் கம்பளித் தொழிலின் நுணுக்கங் களைக் கற்றுத்தர ஃபிளாண்டர்சிலிருந்து இங்கிலாந்துக்குப் ஃபிளமியர்கள் (Flemings) வரவழைக்கப்பட்டதை நாம் முன்னரே படித்திருந்தோம். ஃபிளமியர்கள் வருகையை முன்னிட்டு, அது வரை அத் தொழில் நுணுக்கங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவந்த ஒரு சில ஆங்கிலத் தேர்ச்சியாளர்களுக்கு வேலை வாய்ப்பும், வருவாயில் இலாபமும் குறைய ஆரம்பிக்க, அவர் களுக்கும் அரசினர்மீது வெறுப்பு ஏற்பட்டது.

அரசாங்கத்தின் கலகத்தைத் தங்களின் பக்கம் ஈர்த்து, அடிப்படைக் குறைகளைப் போக்கிக்கொள்ளக் குடியானவர்களும்

தொழிலாளர்களும் கலகம் செய்தபோது, வேறுசில காரணங்களால் அதிருப்தியும், வெறுப்பும் அடைந்திருந்த சமூகத்தின் மற்றப் பிரிவினரும் அதில் கலந்துகொண்டனர். ஏழைக் குடியானவர்களின் மன நிலையையும் வாழ்க்கை முறையையும் வில்லியம் லாங்லாந்து (William Longland) என்ற புரட்சிக் கவிஞர் தம் 'பியர்சு பிளவுமென்' (Piers Plowman) என்ற கவிதையில் உணர்ச்சிகரமாக விவரித்திருக்க, சமூகத்தின் அடிமட்டத்திலிருந்தவர்களோ அது தட்டியெழுப்பியது.

மால்வெர்ன் (Malvern) என்ற இடத்திற்கு அருகே பிறந்து இலண்டன் மாநகரில் பல ஆண்டுகள் வாழ்ந்த வில்லியம் லாங்லாந்து ஏழைகளின் பங்காளனாக விளங்கினார். 1377 ஆம் ஆண்டு எழுதப்பட்ட அந்த நூலில் ஏழை விவசாயிகளின் பரிதாப நிலையைப் பச்சாதாபத்துடன் வர்ணித்தார். தங்கி வாழ்வதற்கு நிலமில்லாமலும், இரவில் சாப்பிட உணவில்லாமலும், கிழிந்த மேல் சட்டையுடனும், பொத்தல்கள் கொண்ட காலுறைகளுடனும் அவதிப்பட்ட ஒரு நலிந்த விவசாயியை மையமாக வைத்து எழுதப்பட்ட அந்த நூல், ஏழைமக்கள் துன்பப்படுமாறு சட்டமியற்றிய அரசையும், அவருடைய ஆலோசனைச் சபையினரையும் பழித்துரைப்பதுபோன்று இருந்தது. நான்கு ஆண்டுகள் கழித்துக் குமுறப்போகும் குடியானவர்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புவது போலும் அந்த நூல் அமைந்தது. ஆக, 'பியர்சு பிளவுமென்' என்ற அந்தப் புரட்சிகரமான நூலும் அக் குடியானவர் கலகத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது.

கிழ்க்குடி வகுப்பினருக்கு வழிகாட்டியாகத் தம்மை நினைத்துச் சேவை புரிந்த ஜான் பால் (John Ball) என்ற ஒரு புரட்சிகரமான பாதிரியாரின் பிரசாரமும் குடியானவர் கலகத்திற்கு இன்னொரு முக்கியக் காரணமாக அமைந்தது.

கென்ட் பகுதியைச் சார்ந்த ஜான் பால் ஒரு சமதர்ம வாதி (Socialist). ஆதாம் (Adam), ஏவாள் (Eve) வழித்தோன்றல்களான மனித இனத்தில் உணவிலும், உடையிலும், இட வசதியிலும் ஏன் பாகுபாடு இருக்கவேண்டும்? ஏன் சமத்துவம் இருக்கக் கூடாது? என ஜான் பால் பிரசாரம் செய்தார். அவரின் பிரசார வேகத்திலிருந்த வெப்பத்தை மக்கள் மனதார ஏற்றுக்கொள்ளவில்லை யென்றாலும், இங்கிலாந்தில் சோஷலிச சமுதாயத்தை உண்டாக்க அம் மக்கள் விழையவில்லை யென்றாலும், தங்களை வருத்திவந்த 'உட்குடிகளின் மானிய முறை' (Villeinage) 'தலைவரி' (Poll tax) போன்ற சில உடனடிக் குறைகளைப் போக்கிக்கொள்ள ஏழைக் குடியானவர்களை ஜான் பாலின்

பிரசாரம் மேலும் தூண்டிவிட்டது. அவ்வகையில் அவரின் தீவிர பேச்சுகளும் அக் கலகத்திற்குக் காரணமாக அமைந்தன.

கலகத்தின் போக்கு

பல காரணங்களை முன்னிட்டுச் சமூகத்தின் கடைநிலையிலிருந்த மக்களிடையே நிலவியிருந்த வெறுப்பு கலந்த அதிருப்தி வில்லியம் லாங்லாந்து, ஜான் பால் ஆகியோரின் கருத்துகளின் வலியுறுத்தலால் சுவாலிவிட்டு எரிந்துகொண்டிருந்த வேளையில் வரப் போகும் பயங்கரத்தை எதிர்நோக்கும் திறனில்லாதும், வந்தால் அதைச் சமாளிக்கும் தகுதியில்லாதும் சைமன் சட்பரி (Simon Sudbury) என்ற சான்சலரும், சர் ராபர்ட் ஹேல்ஸ் (Sri Robert Hales) என்ற நிதியமைச்சரும் வாளாவிருந்தனர்.

கி.பி. 1381ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நாட்டின் நிதி நிலை மையைச் சீராக்க, சான்சலரின் யோசனையின்பேரில் ராபர்ட் ஹேல்ஸ் தலைவரியை விதித்தார். நாட்டின் பல பகுதிகளில் மக்கள் வரி ஏய்ப்புச் செய்தனர். சஃபோக் (Suffolk) பகுதியில் மட்டும் 13,000 மக்கள் வரி கட்டாமல் ஏமாற்றினர். அதுபற்றி விசாரித்துத் தகுந்த ஆள்கணக்கெடுப்பை நடத்தி, வரிப் பணத்தை வசூலிக்கும்படி நாடெங்கிலும் ஆணையாளர்கள் (Commissioners) அனுப்பப்பட்டனர். 1381ஆம் ஆண்டு மே மாத இறுதியில் எஸ்ஸெக்ஸ் பகுதியிலிருந்த பிரென்ட்வுட் (Brentwood) என்னுமிடத்திற்கு ஆணையாளர்கள் வந்தபோது, ஏழை மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர். அதுவே குடியானவர் கலகத்திற்குத் தொடக்க நிலையாக அமைந்தது. பிரென்ட்வுட் என்ற இடத்தில் தொடங்கிய அக் கலகம் எஸ்ஸெக்ஸ் முழுவதும் விரைவில் பரவிவிட்டது. வீறு கொண்டெழுந்துவிட்ட குடி யானவர்கள் எஸ்ஸெக்ஸின் மற்றப் பாகங்களுக்குச் செய்திகள் அனுப்ப, அதனால் கலகக் கூட்டத்தினரின் எண்ணிக்கை பெருகி விட்டது.

ஜூன் மாத முதல் வாரத்தில் எஸ்ஸெக்ஸ் பகுதியில் குடியா னவர் கலகம் மும்முரமான கட்டத்தை யடைந்தது. பண்ணை வீடுகள் சூறையாடப்பட்டன. உட்குடிகளின் மானிய ஏற்பாட் டைக் காட்டிய பெயர்ப்பட்டியல்களும், மற்றப் பதிப்பேடுகளும் கைப்பற்றப்பட்டு, கொளுத்தப்பட்டன. அரசரின் ஆலோசனைச் சபையினர் அக் கலகத்தை மூளையிலேயே கிள்ளியெறிய எந் தத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அதற்கிடையே, வாட் டெய்லர் (Wat Tyler) என்பவரின் தலைமையில் கென்ட் (Kent) பகுதியில் குடியானவர் கலகம் மிகப்

பயங்கரமாகத் தலைதூக்கியது. பல்லாயிரக் கணக்கான கலகக் காரர்களைக் கொண்ட அக் குடியானவர் படை ரோசெஸ்டர் (Rochester), மேயட்ஸ்டோன் (Maidstone), கான்டர்பரி (Canterbury) போன்ற இடங்களை அடைந்து, வன்முறைச் செயல்களில் இறங்கினர்கள். மேயட்ஸ்டோன் என்ற இடத்தில் கலகப் பிரசாரம் செய்ததற்காகக் கடந்த சில மாதங்களாகச் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஜான் பாலையும் (John Ball) அக் குடியானவர் படை விடுவித்தது. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த ஜான் பால் இங்கிலாந்தின் பிற பகுதிகளில் வாழ்ந்த கலகக்காரர் களுக்கு ஊக்கமூட்டும்படியான செய்தியை அனுப்பி வைத்தார். அதைத் தொடர்ந்து ஹெர்ட்ஃபோர்டு ஷையர் (Hertford shire) என்னுமிடத்தில் கலகம் பயங்கரமாக மாறியது.

எஸ்ஸெக்ஸிலிருந்து (Essex) இலண்டனை நோக்கிக் கலகக் காரர்கள் விரைந்தனர். வாட் டெய்லரின் தலைமையில் கென்ட் கலகக்காரர்களும் இலண்டனை நோக்கிப் புறப்பட்டனர். ஹெர்ட் போர்டு ஷையரிலிருந்து ஒரு குடியானவர் படை இலண்டனை நோக்கிக் கிளம்பியது. தங்களின் குறைகளை அரசுக்கு அறிவித்து அதற்குப் பரிகாரம் தேடுவதே அக் கலகக்காரர்களின் முக்கிய நோக்கமாயிருந்தும், புலாத்காரச் செயல்களுக்கும் அவர்கள் தயாராகவே இருந்தனர்.

எஸ்ஸெக்ஸிலிருந்து புறப்பட்டு வந்த கலகக்காரர்கள் இலண்டன் நகருக்குக் கிழக்கேயுள்ள மைல் எண்டு (Mile End) என்னுமிடத்தில் முகாமிட்டனர். கென்டிலிருந்து வந்து சேர்ந்த கலகக் காரர்கள் பிளேக் ஹீத் (Black Heath) என்னுமிடத்தில் தங்கலாயினர். அப்போதுதான் அந்த இடத்தில் 'உட்குடிகளின் மானிய முறையை'த் தாக்கும் வகையில் ஜான் பால்,

'எப்போது ஆதாம் (Adam) நிலத்தினைத் தோண்டினான்? எப்போது ஏவாள் (Eve) நிலத்தினை அளந்தாள்? அப்போது அங்கிருந்த பண்பாளர் (gentleman) யார்?' என்ற வாசகத்துடன் ஓர் உணர்ச்சி மிக்க பிரசங்கத்தைச் செய்து, அக் குடியானவர் படையை மேலும் கொதிப்படையச் செய்தார். ஜான் பாலின் பிரசித்தி பெற்ற அந்த வாசகங்கள் மற்றக் கலகக்காரர்களுக்குக் கொள்கைக் கோஷமாக (slogan) அமைந்துவிட்டன.

ஜூன் மாதம் 13ஆம் தேதி, கென்ட் கலகக்காரர்கள் இலண்டனுக்குள் நுழைந்துவிட்டனர். அவர்களுடன் நகரிலிருந்த சில அனுதாபிகளும், மற்றப் போக்கிரிகளும் சேர்ந்துகொள்ள, இலண்டனில் அராஜகம் தலைவிரித்தாடியது. சிறைச்சாலைகள் உடைக்கப்

பட்டன. கொலை, கொள்ளை போன்ற அக்கிரமங்களோடு தொடர்ந்துஇரண்டுநாள்கள் இலண்டன் அல்லோலகலப்பட்டது. நகரில் வாழ்ந்து வந்த ஃபிளமிங்குகள் (Flemings) மிகவும் அல்லல் பட்டனர். இங்கிலாந்திலேயே மிகப் பெரும் நிலச்சுவான்தார ரான ஜான் கான்டின் (John of Ghant) புகழ் பெற்ற 'சாவாய்' (Savoy) மாளிகை தீக்கிரையாக்கப்பட்டது. ஸ்காட்லாந்தில் அப் பிரபு அப்போது தங்கி யிருந்ததால் அவர் உயிர் பிழைத் தார். இல்லாதுபோயின், அவரின் வேலையாட்கள் கண்ட இடத் தில் அடித்துக் கொல்லப்பட்டதுபோல், ஜானும் கொலையுண்டி ருப்பார். வழக்கறிஞர்களின் தலைமைப் பீடமான டெம்பள் (Temple) என்ற இடமும், அங்கிருந்த நூலகமும் எரிக்கப் பட்டன.

இலண்டன் நகரில் அங்ஙனம் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்க அரசரின் ஆலோசனையாளர்கள் 14ஆம் தேதி (ஜூன், 1381) ஒன்று கூடிப் பேசி, கலகக்காரர்களோடு கலந்துபேச அரசர் இரண்டாம் ரிச்சர்டை (Richard II) மைல் எண்டு என்னுமிடத்திற்கு அனுப்ப முடிவு செய்தனர். அரசர் அங் ஙனம் கலகக்காரர்களோடு கலந்து பேசிக்கொண்டிருக்க, கலகக் காரர்களின் கோபத்திற்கு ஆளாகி யிருந்த முதலமைச்சர் சட் பரியும் (Sudbury) நிதி அமைச்சர் சர் ராபர்ட் ஹேல்சும் (Robert Hales) இரகசியமாக இலண்டனிலிருந்து தப்பிவிட வேண்டு மென்று திட்டம் போடப்பட்டது.

மைல் எண்டை அடைந்த இரண்டாம் ரிச்சர்டு குடியானவர் களுக்கு உட்குடி நிலையிலிருந்து விடுதலை கொடுப்பதாகவும், அவர்கள் அதுவரை செய்த குற்றங்களை மன்னிப்பதாகவும் வாக் குறுதி கொடுத்துக்கொண்டிருக்க இலண்டனில் நிலைமை மேலும் மோசமாகியது. இலண்டன் தெருக்களில் வெறிபிடித்து அலைந்துவந்த கலகக்காரர்கள் கோட்டையைத் தாக்கி, சட் பரியையும், ராபர்ட் ஹேல்சையும் கொலை செய்துவிட்டனர்.

மைல் எண்டில் கூடியிருந்த கலகக்காரர்கள் பெரும்பாலோர் அரசரால் கொடுக்கப்பட்ட விடுதலை மன்னிப்புச் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு தங்களுடைய கிராமங்களில் உள்ள வீடுகளை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். அக் கலகக்காரர்களை ஒரு வாருகச் சமாளித்த நிம்மதியில் பதினைந்தே வயது நிரம்பி யிருந்த இரண்டாம் ரிச்சர்டு அதற்குப் பின் இலண்டனுக்குத் திரும்பினார். முதலமைச்சரையும், நிதியமைச்சரையும் கொலை செய்துவிட்ட வெற்றிக் களிப்பில் இலண்டனிலிருந்த கலகக்காரர்கள் ஆரவாரம் செய்துகொண்டு, மேலும் மூர்க்கத்தனமான செயல்களில்

ஈடுபட்டுக்கொண்டிருக்க, ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்ட ஜூன் 15ஆம் தேதி ஸ்மித்ஃபீல்ட் (Smithfield) என்ற இடத்தில் வாட் டெய்லரின் கலகக்காரர்களைச் சந்திக்க, ஒரு சிறு படையுடனும் இலண்டன் மாநகர்த் தந்தையான (Mayor) வால்ஓர்த் (Walworth) என்பவருடனும் அரசர் ரிச்சர்டு போய்ச் சேர்ந்தார்.

ஸ்மித்ஃபீல்டில் இருந்த சந்தைச் சதுக்கத்தில் அரசரும், அவரின் கட்சியினரும், வாட்டெய்லரின் தலைமையில் கலகக்காரர் களும் கூடிப்பேச ஏற்பாடாகியது. வாட் டெய்லர், தம் தலை மையை ஏற்றுக்கொண்டிருந்த கலகக்காரர்களின் சார்பில் நீண்ட சொற்பொழிவுவொன்றை ஆற்றினர். அவர்தம் பேச்சை முடித் திருந்த சமயத்தில், கென்ட் பகுதியைச் சேர்ந்தவனும் அரசரின் மெய்க்காப்பாளர்களில் ஒருவனுக அப்போதைக்கு அங்கு வந்திருந்தவனுமான ஒரு வீரன் வாட் டெய்லரை 'கொள்ளைக் காரன்' என அழைத்தான். அதனுல் சீற்றமடைந்த டெய்லர் தம் குதிரை மீதமர்ந்து கத்தியைச் சுழற்றியவாறு அவ் வீரனை நோக்கிச் செல்ல, இலண்டன் மாநகரின் தந்தையான வால்ஓர்த்தால் தடுத்து நிறுத்தப்பட்டார். அப்போது அவ் விருவரிடையே ஏற்பட்ட கத்திச் சண்டையில், வாட் டெய்லர் படுகாயமடைந்து உயிர் நீத்தார்.

இத்தனை சம்பவங்களும் அரசர் முன்னிலையிலேயே நடந்தன. தங்களின் தலைவர் கொல்லப்பட்டதைக் கண்ட அக் கலகக் காரர்கள் ஆரவாரக் கூச்சலிட்டுக்கொண்டு, அரசரையும், அவரின் சகாக்களையும் மற்ற மெய்க்காப்பாளர்களையும் கொன்று குவிக் கும் எண்ணத்தில், தங்களின் அம்புகளை விற்களில் பொருத்தி அரசக் கட்சியினரை நோக்கிக் குறிபார்க்கத் தொடங்கினர். எந்த நேரத்திலும் சரமாரியான அம்புகள் அரசக் கட்சியினர்மீது ஏவப்படக்கூடும்; அரசரும், அவருக்குத் துணை வந்தவர்களும் கொல்லப்படலாமென்ற பயங்கர நிலைமை வாட் டெய்லர் கொல் லப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் ஏற்பட்டுவிட்டது. அடுத்து என்ன நேருமோ என்று அரசரின் கட்சியினர் பேதலித்து நின்ற போது, இரண்டாம் ரிச்சர்டு சமயோசித புத்தி கொண்டவராகக் கலகக்காரர்களின் முன்னே நின்று, தாம் அவர்களின் அரசரென் றும் தமக்கு எந்தவித ஆபத்தையும் அவர்கள் உண்டாக்கக் கூடா தென்றும், அவர்களின் குறை என்னவென்று சொன்னுல் அதைத் தீர்க்கத் தாம் முன்வருவதாகவும் துணிச்சலுடன் பேசியதைத் தொடர்ந்து, அதுவரை குழுறி வந்த கலகக்காரர்களிடையே தெளிவு பிறந்தது. அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட அரசர் அக் கலகக்காரர்களைக் க்ளர்கன் வெல் (Clerken well)

என்ற இடத்திலிருந்த மைதானத்திற்கு அழைத்துச் சென்று, அவசர அவசரமாக எழுதப்பட்ட விடுதலைப் பத்திரங்களைக் கலகக் காரர்களுக்கு வழங்கி வந்தார். கலகக்காரர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டிருந்த அரசருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாதென்ற அச்சத்தில், வால்ஓர்த் இலண்டன் மாநகருக்கு விரைந்து சென்று, உதவிப் படைகளுடனும் விசுவாசக் குடிகளுடனும் க்ளர்கன் வெல்லை அடைந்து, அரசரை மீட்டு விட்டார்.

அரசரால் கொடுக்கப்பட்டிருந்த மன்னிப்பு, விடுதலைப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியில் வாட் டெய்லரைப் பின்பற்றி வந்த கலகக்காரர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து கென்ட் பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இலண்டனில் சுற்றித் திரிந்து வந்த ஒரு சில கலகக்காரர் களுக்கும் அரசர் மன்னிப்பு, விடுதலைப் பத்திரங்களை வழங்கித் தங்களின் கிராமங்களுக்குப் போகும்படி பணித்தார்.

இலண்டனில் ஏற்பட்டிருந்த கலகம் அங்ஙனமாக இரண்டாம் ரிச்சர்டின் துணிச்சலாலும், சமயோசிதப் புத்தியாலும் ஒருவாறு ஓய்ந்தது.

எஸ்ஸெக்ஸ், கென்ட் பகுதிகளைத் தொடர்ந்து கிழக்கு ஆங்கிலியாவிலும் அக் கலகம் மும்முரமாகியது. பியூரி (Bury) என்ற சிற்றூரில் இருந்த மடாலயத்தின் துறவி ஒருவரையும், அதே ஊருக்கு அப்போது வருகை தந்திருந்த இங்கிலாந்தின் பிரதம நீதிபதியையும் (Lord Chief justice of England) அக் கலகக் காரர்கள் சிரச் சேதம் செய்து, அவ் வூரின் செயின்ட் எட்மண்டு (St. Edmund) மடாலயத்தினரை மிரட்டி, வற்புறுத்தி, கலகம் செய்துவந்த குடியானவர்கள் தங்களின் விடுதலைப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டனர். செயின்ட் ஆல்பன்ஸ் (St. Albans) என்ற இன்னோர் இடத்தில் அவ் வூரின் பிரபு, மடாதிபதி ஆகியோர்களை மிரட்டியும் தங்களுக்கு உரிமை வழங்காவிடில் அவ் வூரின் மடத்தையே கொளுத்தப் போவதாக அச்சுறுத்தியும், சில குடியானவர்கள் விடுதலைப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

நார்ஃபோக் (Norfolk) பகுதியிலும் அக் கலகம் பரவியது. ஜியோஃபிரே லிஸ்டர் (Geoffrey Lister) என்பவரின் தலைமையில் அக் கலகக்காரர்கள் பல அட்டூழியங்களைச் செய்ய முற்பட்டனர். அதிகார வர்க்கம் எதுவும் செய்ய முடியாமல் தவித்த நிலையில், நார்விச் பிஷப்பும் (Bishop of Norwich) ஹென்றி எனப் பெயர் கொண்டவருமான ஒரு வீரர் தம் சில ஆதரவாளர்களுடன்

கலகக்காரர்களை வடக்கு வால்ஷாம் (Walsham) என்ற இடத்தில் ஒடுக்கினர்; ஜியோஃபிரே லிஸ்டர் பிடிபட்டு, பின்னர்த் தூக்கில் மாண்டார். அத்துடன் அப் பகுதியில் கலகம் ஓய்ந்தது.

மைல் எண்டிலும், க்ளர்கன் வெல்லிலும், இலண்டனிலும் அரசரால் கலகக்காரர்களுக்கு விடுதலை, மன்னிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததை நாம் மேலே கண்டிருந்தோம். அவ்வரிமைச் சாசனங்களைப் பெற்றிருந்த மகிழ்ச்சியில், அக் கலகக்காரர்களும் மகிழ்ச்சியுடனும், தெம்புடனும் கிராமப் புறங்களுக்குத் திரும்பியிருந்தனர். இலண்டன் மாநகருக்குக் கலகக்காரர்களால் ஏற்பட விருந்த அபாய நிலைமை நிற்க ஆரம்பித்ததும், அரசரின் ஆலோசனைக் குழு செயல்பட ஆரம்பித்தது. அரசரால் அளிக்கப்பட்டிருந்த உரிமைச் சாசனங்களை ஆலோசனைக் குழு ஏற்க மறுத்தது. நிலக்கிழார்களால் ஆட்டி வைக்கப்பட்ட பாராளுமன்றமும், அப் பத்திரங்களை ரத்து செய்யும்படி கோரியது. இரண்டாம் ரிச்சர்டு உள் மனதில் என்ன நினைத்திருப்பாரோ? ஆனால், அவரும் தாம் அளித்த சாசனங்கள் செல்லா என அறிவித்துவிட்டார்.

முதலமைச்சர் சட்பரி, நிதி அமைச்சர் ராபர்ட் ஹேல்ஸ் போன்றோர்களைக் கலகக்காரர்கள் இரக்கமின்றிக் கொலை செய்ததை அரசரின் ஆலோசனைக் குழு மறந்துவிடவில்லை. கலகக்காரர்களை மன்னிப்பதாக முன்பு வாக்களித்திருந்த அரசரும் வாளாவிருந்தார். இங்கிலாந்தின் புதிய பிரதம நீதிபதியான ட்ரிசில்லியன் (Tresillian) என்பவர் பழி வாங்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் எந்தெந்தப் பகுதிகளில் கலகங்கள் தோன்றினவோ அங்கெல்லாம் சென்று அஸைஸ் (Assises) நீதி மன்றங்களைக் கூட்டிக் கலகத் தலைவர்களையும் அதில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர்களையும் தூக்கிலிட்டு நிம்மதி கொண்டார். ரிச்சர்டும், பிரதம நீதிபதி சென்ற இடங்களுக்கெல்லாம் சென்றார். வால்த்தாம் (Waltham) என்ற இடத்தில் அரசரைக் குடியானவர்கள் சந்தித்து, அவர், முன்பு கொடுத்திருந்த வாக்குறுதியை நினைவூட்டியபோது, மிகவும் நிதானமாக இரண்டாம் ரிச்சர்டு பாராளுமன்றத்திற்கும், பிரபுக்களுக்கும் எதிராகத் தாம் செயல்பட முடியாதென அறிவித்துவிட்டார்.

கொடுத்திருந்த வாக்குறுதியை மறந்துவிட்ட அரசர் ஒரு புறம். இரத்த வெறி பிடித்து அலைந்த ட்ரிசில்லியன் இன்னொரு புறம். இடையிலே தங்களை அந்த நிலையிலே திறம்பட நடத்திப் போகக்கூடிய தலைவர்கள் இல்லாத அச் சந்தர்ப்பத்தில், குடியானவர்கள் பணிந்துபோக வேண்டியிருந்தது.

செயின்ட் எட்மண்டு, செயின்ட் எல்பன் போன்ற இடங்கள் உள்பட இங்கிலாந்தின் பிற பகுதிகளில் குடியானவர்கள் பெற்றிருந்த விடுதலைப் பத்திரங்கள் ரத்தாயின. கலகக்காரர்கள் சமீபத்தில் பெற்றிருந்த உரிமைகளுடன், அவர்களின் உயிர்களும் பறிக்கப்பட்டுவிட்டன.

குடியானவர் கலகம் அங்ஙனமாக இறுதியில் அடக்கப்பட்டுவிட்டதெனினும் அதன் விளைவு ஓரளவு இங்கிலாந்தைப் பாதிக்கச் செய்தது. நிலச் சார்பான அடிமை முறை (Serfdom) முற்றிலும், அப்போதைக்கு ஒழிக்கப்படலில்லை யென்றாலும், அம் முறை மாற்றப்படவேண்டிய அவசியத்தை அக் குடியானவர் கலகம் ஏற்படுத்தி வைத்தது. அடுத்த 50 ஆண்டுகளுக்குள்ளாக 'அடிமைக் குடிகள்' என்ற நிலை மாறி, 'கூலி பெறும் வேலையாள்' என்ற புதிய நிலையைக் குடியானவர்கள் பெற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

நிலச் சார்பான அந்த அடிமை முறை 18ஆம் நூற்றாண்டின் இறுதிவரை ஃபிரான்ஸ் நாட்டிலும், 19ஆம் நூற்றாண்டின் இடைவரை ரஷ்யாவிலும் நீடித்திருந்தது என்பதை நாம் அறியும் போது, 15ஆம் நூற்றாண்டிலேயே அம் முறை இங்கிலாந்தில் மறைந்துவிட்டதென்றால், அதற்குக் காரணம் குடியானவர் கலகம் ஆங்கில சமூகத்தில் ஏற்படுத்திவைத்த சலசலப்பின் விளைவேயாகும்.

5. லங்காஸ்டிரியர்கள் - யார்க்குகள்

லங்காஸ்டிரியர்கள் (Lancastrians)

மூன்றும் எட்வர்டுக்குப் பின்னர்ப் பட்டத்துக்கு வந்த அவருடைய பேரரான இரண்டாம் ரிச்சர்டு (Richard II) தம் கடைசிக் காலத்தில் எதேச்சாதிகார ஆட்சியை நடத்த முற்பட்டார்; தம்மால் சந்தேகிக்கப்பட்ட உறவினர்களையும் மற்றப் பிரபுக்களையும் கொன்றும் நாடு கடத்தியும் அவப்பெயர் தேடிக் கொண்டார். பாராளுமன்றத்தைக் கலந்து ஆலோசிப்பதில்லை என்ற குறையும் நாட்டிலே எதிரொலித்தது. லாலார்டுகளைக் கடுமையாகத் தண்டிக்கவில்லை என்ற கண்டனக் குரலைக் குருமார்கள் எழுப்பிவந்தனர். குடியானவர் கலகத்தால் சமுதாயமும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆக, நாட்டிலே அரசருக்கு எதிராக வேற்றுமைகளும் மனக்கசப்பும் ஒன்றுகத் திரண்டிருந்தன.

தமக்கு எதிர்ப்பு வளர்ந்துவந்த வேளையில் அரசரின் சிறிய தகப்பனாரான ஜான் கான்ட் (John Gaunt) கி.பி. 1399-ல் பிப்ரவரி மாதம் காலமானார். லங்காஸ்டர் டியூக்கான கானுக்கு நிறையச் சொத்துகள் இருந்தன. முறைப்படி அச் சொத்துகளை அவரின் மகனாரான ஹென்றி லங்காஸ்டருக்கு ஒப்படைக்காமல் அத்தனையும் தாமே பறிமுதல் செய்து கொண்டார். அச் செய்கை பிரபுக்களிடையே அதிருப்தியையும் வெறுப்பையும் உண்டாக்கியது. அரசரால் ஏற்கெனவே நாடு கடத்தப்பட்டிருந்த ஹென்றிக்கு அரசரின் செய்கை ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்திருந்தது.

பிரபுக்களின் வெறுப்பும் ஹென்றி லங்காஸ்டரின் ஆத்திரமும் பயனில்லாமால் போகுமா ?

அயர்லாந்தில் தமக் கெதிராக எழுந்த கலகத்தை அடக்க இரண்டாம் ரிச்சர்டு நாடுவிட்டு அகன்றிருக்க, அச் சந்தர்ப்


மூன்றும் எட்வர்டு (1327—77)
கருங்கவச இளவசர்
எட்மண்டு
கேதரின் = ஜான் = பிளேன்கி
(3)
(1)
(லங்காஸ்டர் கோமகன்)
இரண்டாம் ரிச்சர்டு
(1377 – 99)
(யார்க் கோமகன்)
ரிச்சர்டு
(கேம்பிரிட்ஜ் எர்ல்)
ஜான்
(சோமர்செட் எர்ல்)
நான்காம் ஹென்றி
(1399 - 1413)
ஐந்தாம் ஹென்றி
(1413 – 22)
ரிச்சர்டு
(யார்க் கோமகன்)
ஜான் பியுபோர்ட்
ஆறும் ஹென்றி
(1422 - 61)
நான்காம் எட்வர்டு
(1461 - 83)
மூன்றும் ரிச்சர்டு
(1483 - 85)
எட்மண்டு = மார்க்ரெட்
டியூடர் | பியுபோர்ட்
ஐந்தாம் எட்வர்டு
(1483)
எலிஸபத் = ஏழாம் ஹென்றி
(டியூடர்)
(1485 - 1509)

பத்தைப் பயன்படுத்திக்கொண்ட ஹென்றி யார்க்ஷையருக்கு அருகே உள்ள ரேவன்ஸ்பூர் என்ற இடத்திற்குத் தம் ஆதரவாளர்களுடன் வந்து இறங்கினர். வட இங்கிலாந்தின் முக்கியப் பிரமுகரான நார்த்தம்பர்லாந்தின் பிரபு உள்படப் பல பிரபுக்கள் தங்கள் வீரர்களுடன் ஹென்றிக்குப் படை பலத்துடன் ஆதரவு கொடுத்தனர். செய்திகேட்டு நாடு திரும்பிய இரண்டாம் ரிச்சர்டு படைகளைச் சேகரித்து எதிர்க்கலானார். ஆயின், நாட்டிலே தமக்கு ஆதரவில்லை என்றுணர்ந்து கோன்லே கோட்டையருகே ரிச்சர்டு சரணடைந்தார். ஏற்கெனவே, அவருடைய கொடுங்கோலாட்சியால் அதிருப்தி யடைந்திருந்த பாராளுமன்றம் ரிச்சர்டை முடி துறக்கும்படி வற்புறுத்தியது. அவரும் முடி துறந்தார். அடுத்த ஆண்டில் ரிச்சர்டு சிறையிலே கொலை செய்யப்பட்டார். ஹென்றி லங்காஸ்டருக்குப் பட்டம் தரப்பட்டது. உடைமைகளைப் பெறும் நோக்கத்தோடு இங்கிலாந்திற்குத் திரும்பிய ஹென்றி கி.பி. 1399-ல் நாட்டுக்கே அரசரானார்.

இடைக் காலத்தில் இங்கிலாந்தில் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட அந் நிகழ்ச்சியைப் புரட்சி எனவும் அழைக்கிறார்கள்.

நான்காம் ஹென்றி (1399 - 1413)

லங்காஸ்டர் அரச மரபில் வந்த மூன்று அரசர்களில் முதலாமவரே நான்காம் ஹென்றி (1399 - 1413).

தோற்றத்திலே வசீகரம் குன்றியிருந்தாலும் தமக்குக் கிடைத்த அரச பீடத்தைக் காத்துக்கொள்ளக்கூடிய வசிய சக்தி ஹென்றிக்கு இருந்தது. பாராளுமன்றத்தின் ஒப்புதலினால் அவர் அரசராக ஆக்கப்பட்டிருந்ததால் அதனுடன் ஒத்துப் போகவேண்டிய அவசியம் ஹென்றிக்கு இருந்தது.

ஹென்றி அம் மன்றத்திற்குப் பல உரிமைகளை வழங்கினார். மன்னர் தம்மிடம் கடமைப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்ட பாராளுமன்றத்தினரும் அரசரிடமிருந்து சில அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டனர். இவரின் காலத்தில் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் வளர்ச்சியுற ஆரம்பித்தன.

இவரது ஆட்சியின் முதல் பகுதியில் பிரபுக்களால் தூண்டப்பட்ட நான்கு கலகங்கள் தோன்றின. அவற்றிலே வேல்ஸ் பகுதியில் கலகம் செய்த பெரு நிலக்கிழாரான ஓவன் கிளெண்டோவர் (Owen Glendower) என்பவரால் நடத்தப்பட்ட சுதந்தரப்போர் முக்கியமானது. தற்காலிகமாக வேல்ஸில்

ஆங்கிலேயரின் ஆட்சியை இக் கலகம் அஸ்தமிக்கச் செய்தது. இருப்பினும், தம் கடைசிக் காலத்தில் வேல்ஸ் பகுதியின் பல பகுதிகளை ஹென்றி மீட்டிருந்தார். வேல்ஸ் கூட்டத்தினரோடு சேர்ந்து கலகம் செய்த பெர்ஸி குடும்பத்தினரை ஸ்ருஷ்பரி (Shrewsbury) போரில் வென்றார். ரிச்சர்டுக்கு எதிராகத் தமக்கு உதவி செய்த நார்த்தம்பர்லாந்தின் பிரபு பொறுமை காரணமாகக் கலகம் செய்ய, ஹென்றி அவரின் கூட்டத்தினரை ஷிப்டன் மூர் (Shipton Moor), பிராம்ஹம்பூர் என்ற இடங்களில் தோற்கடித்துச் சிதறடித்தார். ஓவன், நார்த்தம்பர்லாந்து, பெர்ஸி ஆகிய மூவரும் தம்மை நீக்கி இங்கிலாந்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து உடைத்தெறிந்தார்; தம் அரசுக்கு ஏற்பட்ட ஆபத்துகளைத் தவிர்த்துத் தம் அரச உரிமையை நிலைக்கச் செய்தார்.

தம் நாற்பத்தாறும் வயதில் கி.பி. 1413-ல் காலமான ஹென்றி இங்கிலாந்தின் அரியணையைத் தமது குடும்பச் சொத்தாகப் பாதுகாத்ததுமட்டுமன்றித் தமக்குப் பின் தம் மகன் எதிர்ப்பில்லாமல் பட்டத்திற்கு வரக்கூடிய வாய்ப்பையும் உருவாக்கிச் சென்றார். நான்காம் ஹென்றியின் கடைசிக் காலம் துன்பமயமாக இருந்தது. கடுமையான நோயினால் பாதிக்கப் பட்டிருந்த அரசருக்குத் தம் மூத்த மகனின் கெட்ட நடத்தையும் தகாத நட்பும் அளவிலாத் துயரத்தைக் கொடுத்தன. இளவரசர் ஹென்றியும் கான்டர்பரி ஆர்ச் பிஷப்பான அருண்டேலும் தம் அவையிலே கட்சிகளை உண்டாக்கிச் சச்சரவிட்டுக் கொண்டதும், அரசரின் மன நிம்மதியைக் கெடுத்தது. தாங்கொணாத துக்கத்திலிருந்து விடுபட நினைத்த ஹென்றி கி.பி. 1413-ல் நீங்காத் துயிலுற்றார்.

ஐந்தாம் ஹென்றி (1413 - 1422)

காலமடைந்த அரசரின் மூத்த மகன் ஐந்தாம் ஹென்றி (1413 - 1422) அடுத்துப் பட்டமெய்தினார். போர்த்திறமையும் ஆளும் திறனும் பெற்றிருந்த அவ் வரசர் லங்காஸ்டர் அரச மரபில் முக்கிய அரசராவார்.

தம் தந்தையின் காலத்தில் முடிக்கப்படாததை ஐந்தாம் ஹென்றி செய்து முடிக்க நினைத்தார்.

வேல்ஸ் பகுதியில் தோன்றியிருந்த கலகத்தை ஒடுக்கி அதன் தலைவரான ஓவனைத் தோற்கடித்துக் காடுகளிலும் மலைகளிலும் துரத்தினார்.

சர் ஜான் ஓல்டு காசிலைத் தண்டித்து லாலார்டுகளின் இயக்கத்தை அவர் அழித்ததைச் சென்ற அத்தியாயத்தில் கண்டோம்.

ஐந்தாம் ஹென்றி ஒரு சிறந்த போர்வீரர். தம் தந்தை புரட்சியினால் பெற்ற மகுடத்தைத் தரித்திருந்த ஹென்றி அது தமக்கும் தம் தலைமுறைக்கும் நிலைத்து நிற்கவேண்டுமெனில் ஒரு வெற்றிப் போரில் நுழைய வேண்டுமென நினைத்தார். ஹென்றிக்கு நூற்றாண்டுப் போர் நல்ல வாய்ப்பை அளித்தது. அப் போரின் போக்கை மாற்றித் தமக்கும் தம் நாட்டுக்கும் புகழைத் தேட விரும்பிய ஹென்றிக்குச் சந்தர்ப்பங்களும் சாதகமாக இருந்தன.

ஃபிரான்சு நாட்டில் நிலவியிருந்த குழப்பங்களைப் பயன் படுத்திக்கொண்டு ஹென்றி நூற்றாண்டுப் போரைத் தம் காலத்தில் மீண்டும் தொடங்கினர்.

தம் பாட்டனார் மூன்றாம் எட்வர்டைப்போல் ஃபிரெஞ்சு அரசுக்கு வாரிசுரிமை கேட்டு, அந் நாட்டின்மீது படையெடுத்ததையும் 1415 அக்டோபர் 25ஆம் நாளில் அஜின் கோர்ட் (Agin court) சண்டையில் ஃபிரெஞ்சுப் படைகளைப் படுதோல்வியடையச் செய்ததையும் நாம் முன்னரே கண்டோம். நார்மண்டிப் பகுதியை மீட்டு, ஆங்கிலேயர்களுக்குப் ஃபிரான்சில் புது ஆதிக்கத்தைப் பெற்றுக்கொடுத்த பெருமையை ஹென்றி பெற்றார். பர்கண்டியர்களோடு கி.பி. 1420-ல் டிராய்ஸ் உடன் பாடு செய்துகொண்டது, அவரது அரச தந்திரத்திற்கு வெற்றி. ஃபிரான்சைப் பிளவுபடுத்தித் தம் நாட்டின் ஆதிக்கத்தை நிலைப் படுத்திக்கொள்ள ஹென்றி எடுத்துக்கொண்ட முயற்சி அவர் காலத்தைப் பொறுத்தவரை பெரும்பலனைக் கொடுத்திருந்தது. ஃபிரான்சின் அரசர் ஆறாம் சார்லஸ் காலமானதும் அந் நாட்டை ஆள்வதற்கான உரிமையை டிராய்ஸ் உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றிருந்தபோதிலும் 1422-ல் தம் மரணம் குறுக்கிட்டதால் அந்த ஆசை ஹென்றிக்கு நிறைவேறாமல் போய்விட்டது என்ற விவரங்களை ஏற்கெனவே படித்தோம்.

சிறந்த வீரராகவும் போர்ப் படைத் தலைவராகவும் திகழ்ந்த ஹென்றியின் வாழ்க்கையே ஒரு வெற்றி வரலாறாக இருந்தது. துணிவும் ஆற்றலும் பெற்றிருந்த அவ் வரசர், தம் கவனத்தை இங்கிலாந்தின் அரசியலிலும் திருப்பி யிருப்பாரெனில் அரசியலறிஞராகவும், சீர்திருத்தச் செம்மலாகவும் விளங்கியிருப்பார்;

இங்கிலாந்தின் செல்வத்தையும் பலத்தையும் நூற்றாண்டுப் போரில் செலவழித்தார் என்ற பொதுக் குற்றச் சாட்டுக்கு

ஆளாகும் ஐந்தாம் ஹென்றி ஆங்கில மன்னர்களுள், தம் வீரத்தால் பெரும் புகழ்பெற்ற மன்னரென்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஐந்தாம் ஹென்றியின் வரலாறு செந்நீரால் எழுதப்பட வேண்டியதென்றால், அவரின் மகனும் அடுத்த வாரிசுமான ஆரும் ஹென்றியின் வரலாறு (1422 - 1461) கண்ணீரால் எழுதப்பட வேண்டியதாகும்.

ஆரும் ஹென்றி (1422 - 1461)

டிராய்ஸ் உடன்படிக்கையின்படி ஐந்தாம் ஹென்றி, ஃபிரான்சின் அரசரான ஆரும் சார்லசின் மகள் காத்தரின் என்பவளை மணந்திருக்க அவர்களுக்குப் பிறந்த ஆரும் ஹென்றி (1422 - 1461) இங்கிலாந்தின் அடுத்த மன்னராஞர். லங்காஸ்டர் குடியைச் சேர்ந்த கடைசி மன்னரும் இவரே.

ஓர் ஆண்டு நிரம்பியிராத குழந்தைப் பருவத்தில், தம் தந்தையான ஐந்தாம் ஹென்றி காலமாகிவிட்டதால் இங்கிலாந்தின் அடுத்த வாரிசாக அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார். சில நாள்களுக்குள்ளாக அவரின் தாய்வழிப் பாட்டனாரான ஆரும் சார்லசும் மரணமடைய டிராயிஸ் உடன்படிக்கையின்படி, ஃபிரான்சுக்கும் அரசராக ஒப்புக் கொள்ளப்பட்டார். குழந்தைப் பருவத்திலேயே இரு நாடுகளுக்கும் அரசராகும் வாய்ப்பைப் பெற்ற ஆரும் ஹென்றி தம் காலத்தில் இரண்டையும் எங்ஙனம் இழந்தாரென்பதை நோக்குவோம்.

ஆரும் ஹென்றியின் சிறிய தந்தையாரான ஹம்பரி (கிளஸ்ட்டர் டியூக்) இங்கிலாந்துக்குக் காப்பாளராகவும், மற்றொரு சிறிய தந்தையாரான ஜான் (பெட்ஃபோர்டு டியூக்) ஃபிரான்சின் காப்பாளராகவும், பாலக மன்னரின் பெயரில் ஆட்சி செய்ய அமர்த்தப்பட்டனர்.

டியூக் ஹம்பரி (கிளஸ்ட்டர் பிரபு) அரசியல் அறிவு இல்லாதவராக இருந்ததால் மன்னரின் பேரவையில் (King's Council) சச்சரவு இருந்துகொண்டே இருந்தது. காப்பாளர் என்ற முறையில் மன்னர் சபைக்குத் தலைமை வகித்து, நிர்வாகத்தை நடத்தவேண்டிய பொறுப்பைக் கொண்டிருந்த ஹம்பரி, தமது திறமையின்மையால் நாட்டு அரசியலை அலங்கோலப் படுத்திவந்தார்; ஹம்பரிக்கும் விஞ்செஸ்ட்டரின் பிஷப்பும் அவைக்களத் தலைவருமான ஹென்றி ஃபோர்ட்டுக்கும், மன்னர் பேரவையிலே தகராறுகள் முற்றி வந்ததால் நாட்டின் ஆட்சியே குலைந்ததெனலாம்.

ஜான் (பெட்ஃபோர்டு டியூக்) வீரமும் அறிவும் கொண்டவர். ஃபிரான்சின் பர்கண்டியர்களுடன் நல்லுறவு கொண்டு ஃபிரான்சின் லுவார் ஆற்றுக்குத் தெற்குப் பகுதியி லிருந்த மாகாணங்களில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைக் காப்பாற்றி வந்தார்.

இருப்பினும் வீரப்பெண் ஜோன் ஆர்க்கின் வெற்றிகளையும் அவளின் தியாக மரணத்தையும் தொடர்ந்து ஃபிரான்சில் புதிய தேசிய உணர்ச்சி பிறந்திருந்தது. ஆங்கிலேயர்களைத் தங்கள் நாட்டிலிருந்து விரட்டவேண்டுமென்ற வீர எழுச்சி ஃபிரெஞ்சு மக்களுக்குத் தோன்றியிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் பர்கண்டிப் பிரபுவின் உறவினளான தம் மனைவி காலமானதும் பர்கண்டியர்களின் எதிரிக் குடும்பத்திலிருந்து பெண் கொடுத்து பெட்ஃபோர்டு மறுமணம் செய்துகொண்டார். இவரின் சகோதரரும் இங்கிலாந்தின் காப்பாளருமான ஹம்பரி, பர்கண்டிப் பிரபு காதலித்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவ் விரு நிகழ்ச்சிகள் ஆங்கில - பர்கண்டி உறவினைப் பாதித்தது. இதுவரை ஆங்கிலேயர்களுக்கு நேசக் கரம் நீட்டிவந்த பர்கண்டியர்கள் ஃபிரான்சின் அரசரான ஏழாம் சார்லசுடன் கி. பி. 1435-ல் ஆராஸ் என்ற இடத்தில் சமரசம் செய்துகொண்டார்கள். அம் மாநாட்டில் நார்மண்டிப் பகுதி முழுவதையும் ஆங்கிலேயர்களுக்கே விட்டுக் கொடுப்பதென்றும் அதற்கு ஈடாக ஆரும் ஹென்றி ஃபிரான்சின் வாரிசுரிமையைக் கைவிடவேண்டும் என்றும் முடிவாகியது. பேராசை பிடித்த ஆங்கிலேயர்கள் அதற்கு ஒப்ப மறுத்தனர்.

நூற்றாண்டுப் போரில் ஆங்கிலேயர்கள் அடைந்த தோல்விகளுக்கு ஆராஸ் உடன்படிக்கை ஆரம்பக் கட்டமாக அமைந்தது. பர்கண்டி - ஏழாம் சார்லசின் உடன்பாட்டால் பலனடைந்த ஃபிரான்சு வீறு கொண்டெழுந்து ஆங்கிலேயர்களைத் தாக்கியது. நாடு திரும்பிய பெட்ஃபோர்டும் காலமாகிவிட்டதால் ஆங்கிலேயரின் வெற்றி வாய்ப்புகள் குறைந்தன. ஏழாம் சார்லஸ் பாரிஸ் நகரை மீட்டார். நார்மண்டியும் வெல்லப்பட்டது. காஸ்கனி தாக்கப்பட்டது. கட்சிப் பூசல்களால் பிளவுபட்டிருந்த மன்னரின் பேரவை செயலற்றுக் கிடந்தது. அந் நிலையில் கி. பி. 1442-ல் ஆரும் ஹென்றி தம் சுய ஆட்சியைத் தொடங்கினர்.

தொடர்ந்து வெற்றிகளைக் கண்டு வந்த ஃபிரான்சுடன் கி. பி. 1445-ல் ஹென்றி போர் நிறுத்தம் செய்துகொண்டார். ஃபிரான்சு அரசரின் உறவினளான மார்க்ரெட் என்பவளை மணம் செய்துகொள்ள வேண்டியவரானார். இவரின் கடைசிக் காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட ரோசாப்பூச் சண்டைக்கு அவளே

காரணமாகப் போகிறுளென்பது அரசருக்கு அப்போது தெரிந் திருக்க முடியாது.

நூற்றுண்டுப் போரில் ஆங்கிலேயர்கள் அடைந்த தோல்வி களின் எதிரொலி இங்கிலாந்தில் கேட்க ஆரம்பித்தது.

தோல்வியினுல் நாடே வாட்ட முற்றிருந்தது. போர் அமைச்சராகப் பணியாற்றிவந்த சஃபோக் எர்லின் (Earl of Suffolk) திறமையின்மையே ஆங்கிலேயர்களின் தோல்விக்குக் காரணமென முடிவெடுத்த பாராளுமன்றம் அவரைத் தண்டிக்கத் தீர்மானித்தது. தண்டனைக்குத் தப்பிக் கலே நகரத்திற்குக் கப்பலில் சென்று கொண்டிருந்த சஃபோக் ஏவி விடப்பட்ட ஒரு கப்பற்படை வீரனுல் வெட்டி வீழ்த்தப்பட்டார். கொலையாளி யைத் தண்டிக்கவோ அவனை ஏவி விடப்பட்டவர்களை விசாரிக் கவோ பலமில்லாமல், அரசர் ஹென்றி பரிதாப நிலையில் இருந்தார். அந்த அளவிற்கு ஆட்சி வலுவற்றிருந்தது. அந் நிலையில் ஆங்காங்குக் குழப்பங்கள் தோன்றின. ஜேக்கேடு என்ற அயர்லாந்தினர் தம் ஆதரவாளர்களுடன் கி. பி. 1450-ல் இலண்டனைத் தாக்கி மன்னரையும் விரட்டி விட்டனர். பின்னர் அக் கலகம் நசுக்கப்பட்ட தென்றாலும், 1450 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசின் நலிந்த நிலையை அது எடுத்துக் காட்டியது.

இதற்கிடையே போர் நிறுத்த உடன்பாட்டை மீறி, ஃபிரெஞ் சுக்காரர்களால் ஆங்கிலப் படைகளை 1453-ல் காஸ்டிலன் என்ற இடத்தில் வென்றதைத் தொடர்ந்து பார்டியக்ஸ் என்ற இடத்தி லிருந்த ஆங்கிலப் படைகளும் சரணடைந்தன. இதன் விளைவாக 300 ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்த காஸ்கனி என்ற ஃபிரெஞ்சுப் பகுதியை இங்கிலாந்து இழந்தது. கலே நகரம் தவிர மற்ற எல்லாப் ஃபிரெஞ்சுப் பகுதிகளையும் ஆரும் ஹென்றி இழந்தார். ஃபிரான்சில் படைத் தலைமை கொண் டிருந்த சோமர் செட் பிரபு நாடு திரும்பினர்.

உள்நாட்டுக் குழப்பங்களாலும் போரில் ஆங்கிலேயர்கள் அடைந்த தோல்விகளாலும் அதிர்ச்சியுற்றிருந்த ஆரும் ஹென்- றிக்கு உடல் நலம் குன்ற ஆரம்பித்தது. தம் மனைவியான மார்க் ரெட்டின் வற்புறுத்தலின்பேரில் அரசர், ஃபிரான்சிலிருந்து திரும்பியிருந்த சோமர்செட் பிரபுவை முக்கிய அமைச்சராக்கினர். இங்கிலாந்தின் தோல்விக்கே காரணமானவராக மக்களால் கண்டிக்கப்பட்ட சோமர்செட்டுக்கு மந்திரி பதவி கொடுக்கப்பட்ட போது மன்னரின் பேரவையிலே எதிர்ப்புக் குரல் கேட்டது. அக் குரலுக்கு உரியவரே ரிச்சர்டு என்ற யார்க் கோமகன். ரிச்சர்டு தம் தந்தைவழியில் மூன்றும் எட்வர்டுக்குப் பேரர் ஆவார்.

அரசி மார்க்ரெட்டின் ஆதரவைப் பெற்றிருந்த சோமர்செட் பிரபுவைப் பேரவையிலிருந்து, வெறும் கண்டனத்தால் அகற்ற முடியாதென எண்ணிய யார்க் கோமகன் (ரிச்சர்டு) படைபலம் கொண்டு மன்னரை வற்புறுத்தி, தாம் நினைத்ததைச் சாதிக்க முயன்றார். உள்நாட்டுப் போரைத் தவிர்க்க எண்ணிய அரசரும் அதற்கு உடன்படுவதாக வாக்களித்தார். அதை நம்பி ரிச்சர்டு தம் படைகளைக் கலைத்துவிட்டார். ஆனால், அரசியின் பிடிவாத குணத்தினால் அரசராலேயே சோமர்செட்டை நீக்க முடியவில்லை. ரிச்சர்டின் கோபத்திற்கும் மார்க்ரெட்டின் பிடிவாதத்திற்கு மிடையே சிக்கித் தத்தளித்த அரசருக்குப் புத்தி ஸ்வாதீனம் இல்லாமல் போயிற்று.

மன்னரின் மன நிலை கெட்டிருந்தமையால் அவர் பெயரில் ஆட்சி நடத்த ஒரு காப்பாளரை நியமிக்கவேண்டும் என்று பாராளுமன்றம் வற்புறுத்தியது, அதற்கேற்ப ரிச்சர்டு யார்க் கோமகன் காப்பாளராக அமர்த்தப்பட்டார்.

அவ் வாண்டிலேயே (கி. பி. 1453) அரசருக்கு மார்க்ரெட்டிடம் ஒரு மகன் பிறந்தான். ஆரும் ஹென்றிக்குப் பிறகு தம் உறவின் வழியில் இங்கிலாந்தின் ஆட்சியைக் கைப்பற்றலாம் என நினைத்திருந்த ரிச்சர்டுக்கு அச் செய்தி ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அவ் வாண்டு இறுதிக்குள் மன்னரின் மனநிலை சீரடைந்தது. ரிச்சர்டு காப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அன்றியும் அவருடைய எதிரியான சோமர்செட் மீண்டும் மந்திரியாக்கப் பட்டார். இந் நிகழ்ச்சிகளால் மனம் நொந்திருந்த ரிச்சர்டை, அரசி மார்க்ரெட் பொய்க் குற்றம் சாட்டிக் கைது செய்ய முயற்சி செய்ய, இவி வாளா விருந்தால் தம் உயிருக்கே ஆபத்து வரும் என்று உணர்ந்த யார்க் கோமகனரான ரிச்சர்டு படை கொண்டு போருக்குத் தயாரானார்.

அதுவே 'ரோசாச் சின்னப் போர்' (War of the Roses) என்ற உள்நாட்டுப் போரின் தொடக்க நிலையாகும்.

லங்காஸ்டர் குடும்பத்தின் பிரதிநிதியான ஆரும் ஹென்றிக்கும் யார்க் குடும்பத்தின் பிரதிநிதியான ரிச்சர்டு கோமகனுக்கும் கி. பி. 1455-ல் ஏற்பட்ட அக் கைகலப்பு ஆங்கில வரலாற்றின் ஒரு முக்கிய நிகழ்ச்சி.

ரோசாச் சின்னப் போரின் தன்மை

லங்காஸ்டிரியர்கள் தங்களின் சின்னமாகச் செந்நிற ரோசாவையும் யார்க்கியர்கள் தங்களின் சின்னமாக வெள்ளை ரோசா

வையும் அணிந்துகொண்டு ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பொருத இப் போரில் பொதுமக்களோ, பாராளுமன்றமோ ஈடுபடவில்லை. இரு குடிகளுக்கும் இடையே ஏற்பட்ட இவ் வாரிசுப் போரில் பிரபுக்களே அதிகமாகக் கலந்துகொண்டார்கள்.

காரணங்கள்

அரசக் குடும்பத்தைச் சார்ந்த இரு கிளையினரான லங்காஸ்டிரியர்களுக்கும் யார்க்கியர்களுக்கும் ஏற்பட்ட ஆட்சிப்போட்டி மட்டும் இந்த உள்நாட்டுப் போருக்குக் காரணமாக இல்லை. வேறு சில காரணங்களும் இருந்தன. நூற்றாண்டுப் போர்க்களத்தில் ஃபிரான்சில் சண்டையிட்டு, கொள்ளைப் பொருள்களைச் சேகரித்து வந்த பிரபுக்களுக்கு அப் போர் முடிந்த பின்னரும் அப் பழக்கமும் மனப்பான்மையும் மாறவில்லை. போர் முடிந்து விட்டிருந்தபடியால் நாடு திரும்பிய வீரர்களும் நாட்டிலே குழுமியிருந்தார்கள். இரும்பு பிடித்த கைகள் வாளாவிருக்குமா? தங்களின் ஜீவனத்திற்கு ஏதாவது ஒரு தொழிலைச் செய்யத்தானே வேண்டும்? பொருதலைத் தவிர வேறு எத் தொழிலும் தெரிந்திராத அவ் வீரர்களைப் போர் வெறி கொண்டு அலைந்த ஆங்கிலப் பிரபுக்கள் தங்களின் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டனர். அரசர் ஹென்றியின் ஆட்சியும் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தது. பலவீனமான ஆட்சி தொடர்ந்திருக்குமானால் தங்களின் செல்வாக்கிற்குக் குந்தகம் விளையாதெனப் பிரபுக்களில் பெரும்பாலோர் ஆரும் ஹென்றியின் பலவீனமான ஆட்சியை விரும்பினர். அவரின் ஆட்சியை எதிர்த்து ரிச்சர்டு படை திரட்டியபோது, அப் பிரபுக்களும் அவருக்கு ஆதரவாக அணிவகுத்து நின்றதில் ஆச்சரியமில்லை. நாட்டிலே நிறமைசான்ற ஆட்சி நிறுவப்பட வேண்டுமெனவும் சில பிரபுக்கள் விரும்பினர்கள். அவர்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருந்தபோதிலும் கட்டுப்பாடாக ஆட்சியை விரும்பியார்க் கோமகனை ரிச்சர்டை ஆதரித்தனர். எத்தன்மையான ஆட்சி இங்கிலாந்தில் நடைபெற வேண்டுமென ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் பிரபுக்கள் இரு கட்சிகளாகப் பிரிந்திருந்ததும் அப் போருக்குக் காரணமாக அமைந்தது.

அப் போரின் போக்கு

ரோசாச் சின்னப்போரின் முதல் கைகலப்பு கி. பி. 1455-ல் செயின்ட் ஆல்பன் தெருவில் (St. Alban street) நடந்தது. முப்பது நிமிடங்கள் நடைபெற்ற அச் சண்டையில் யார்க் கோமகன் வெற்றி பெற்றார். அவரின் எதிரியான சோமர்செட்

கொல்லப்பட்டார். அரசர் ஆரும் ஹென்றி அவ் வதிர்ச்சியைத் தாங்க முடியாதவராக மீண்டும் புத்தி ஸ்வாதீனத்தை இழந்தார். யார்க் கோமகனை ரிச்சர்டு மீண்டும் காப்பாளராக நியமிக்கப் பட்டார். சில மாதங்களே இந்த நிலைமை நீடித்தது. பழி வாங்கும் உணர்வோடு காத்திருந்த அரசி மார்க்ரெட், அரசரின் புத்தி தெளிவடைய ஆரம்பித்ததும், யார்க் கோமகனைப் பதவியி லிருந்து அகற்றினர்.

மூன்று ஆண்டுகள் கழித்து ரிச்சர்டும் அவர்களின் உதவி யாளர்களான சாலிஸ்பரி பிரபு, வார்விக் பிரபு போன்ற மற்ற யார்க் தலைவர்களும் மீண்டும் ஆயுதப் பரீட்சைக்குத் தயாரா யினர். ஆனால், லங்காஸ்டிரியர்களின் பலம் அதிகம் என்பதை உணர்ந்து நாட்டை விட்டு ஓடிவிட்டார்கள். ரிச்சர்டும் சார்லிஸ் பரியும் அயர்லாந்துக்கும் வார்விக் கலே நகருக்கும் தப்பி விட்டார்கள்.

1459-ல் காவென்ட்ரியில் கூடிய பாராளுமன்றம் லங்காஸ் டிரியர்களின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டது; யார்க் தலைவர்களை இராசத் துரோகிகளாக அறிவித்தது. நாடு விட்டு ஓடிப்போன அத் தலைவர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கலே நகரத்திற்குத் தப்பிவிட்ட வார்விக் பிரபு கி.பி. 1460-ல் கென்ட் வந்தடைந்தார். நார்த்தாம்டன் (Northamp ton) என்ற இடத்தில் லங்காஸ்டிரியர்களின் படையைத் தோற் கடித்து, வார்விக் பிரபு அரசரைச் சிறைபிடித்தார். வீர முழக்கத்துடன் சிறைபிடிக்கப்பட்ட அரசருடன் வார்விக் இலண்டன் நகருக்குள் நுழைந்தார். இதற்கிடையே யார்க்ஷையர் பகுதியை வந்தடைந்த ரிச்சர்டையும், சார்லிஸ்பரியையும் அரசி மார்க்ரெட் தம் படை கொண்டு தாக்கி வேக்ஃபீல்டு (Wakefield) என்ற இடத்தில் தோற்கடித்தார். அவ் விரு யார்க் தலைவர்களும் சண்டையில் கொல்லப்பட்டனர். இலண்டனுக்குத் திரும்பிய வெற்றி கொண்ட லங்காஸ்டர் படைகள் 1461-ல் செயின்ட் ஆல்பன் (St. Alban) சண்டையில், வார்விக்கைத் தோற்கடித்து அரசரை மீட்டது.

அரசர் ஆரும் ஹென்றி வார்விக்கிடமிருந்து அரசி மார்க்ரெட் கையில் சிக்கினார்.

இதற்கிடையில், வேக்ஃபீல்டு சண்டையில் கொல்லப்பட்ட ரிச்சர்டின் மகனை எட்வர்டு, வேல்ஸ் பகுதியிலிருந்து தம் ஆதர வாளர்களை ஒன்று திரட்டி கி.பி. 1461-ல் லங்காஸ்டிரியர்களை மார்ட்டிமர் கிராஸ் (Mortimer cross) என்னும் இடத்தில் தோற்

கடித்து இலண்டனை நோக்கி விரைந்தார். செயின்ட் ஆல்பன் சண்டையில் தோற்றிருந்த வார்விக் பிரபுவும் தம் படைகளோடு எட்வர்டுடன் சேர்ந்துகொண்டார்.

யார்க்கியர் (Yorkists)

இலண்டனை அடைந்த யார்க் படைகளை எதிர்க்க லங்காஸ்டிரியருக்குப் பலம் இல்லாமல் போய்விட்டது. 1461 மார்ச் 4ஆம் தேதியில் எட்வர்டு பாராளுமன்றத்தைக் கூட்டினார். யார்க் கோமகனரின் மகனை எட்வர்டு அம் மன்றத்தின் சம்மதத்தின் பேரில் நான்காம் எட்வர்டு என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டு அரியணை ஏறினார்.

நான்காம் எட்வர்டு (1461 - 1483)

நான்காம் எட்வர்டு (1461 - 1483) யார்க் குடியைச் சேர்ந்த முதல் மன்னராவார். எட்வர்டு மன்னராகிவிட்ட போதிலும் ஆரும் ஹென்றி இன்னும் உயிருடன் இருந்தார். ஒரு குற்றமும் செய்தறியாத ஹென்றி தம் மனைவியான மார்க்ரெட்டின் பேராசையால் எல்லையில்லாத துன்பங்களை அனுபவித்ததால் குடிமக்களின் அனுதாபத்திற்கு உரியவராக இருந்தார். குறிப்பாக இங்கிலாந்தின் வடபகுதியில் ஹென்றிக்கு மிகுந்த ஆதரவு இருந்து வந்தது. மார்க்ரெட் தம் கணவரை அழைத்துக்கொண்டு, வட இங்கிலாந்திற்குச் சென்று அங்கிருந்த லங்காஸ்டிரியர்களைத் திரட்டி மறுபடியும் போருக்கு ஆயத்த மானார். லங்காஸ்டிரியர்களை ஒழித்துக்கட்ட நினைத்த எட்வர்டு தம் எதிரிகளை டௌட்டன் சண்டையில் தோற்கடித்து ஹென்றி யையும் மார்க்ரெட்டையும் ஸ்காட்லாந்துக்கு விரட்டினார்.

யார்க்குகளின் செல்வாக்கிற்குப் பணிந்திருந்த பாராளு மன்றம் லங்காஸ்டிரியர்கள்மீது துரோகக் குற்றங்களைச் சாட்டியது. விடாமுயற்சி கொண்டிருந்த மார்க்ரெட் ஸ்காட்டி யர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரின் உதவியைக் கொண்டு, தம் கணவருக்கு ஆட்சியை மீட்டுத்தர எண்ணினர். ஆதலால், வட இங்கிலாந்தில் அவருக்கு ஆதரவாகச் சில கலகங்கள் தோன்றின.

கி. பி. 1464-ல் ஹெட்ஜ்லி மூர், ஹெக்ஸ்ஹாம் என்ற இடங்களில் லங்காஸ்டிரியர்கள் கலகங்கள் செய்ய, எட்வர்டு அவற்றை அடக்கினர். எட்வர்டின் பகையை விரும்பாத ஸ்காட்டிரியர்கள் ஆரும் ஹென்றியைக் கைவிடத் துணிந்தார்கள். வட இங்கிலாந்தில் ஒதுக்கிடங்களில் மறைந்து வாழ்ந்து வந்த

ஹென்றியைக் கிளிதரோ என்னும் இடத்தில் எட்வர்டின் ஆட்கள் கைப்பற்றி இலண்டனுக்குக் கொண்டுவந்தனர். சிறையிலடைக்கப்பட்ட ஹென்றிக்கு மூன்றும் முறையாக மதிகெட்டது. அளவில்லாத துன்பங்களை இடைவிடாமல் அனுபவித்த ஹென்றியைச் சிறையில் அடைத்துவிட்டதும் அரசர் எட்வர்டின் கவலைகள் தீர்ந்துவிடவில்லை.

அதுவரை எட்வர்டுக்கு உறுதுணையாக இருந்த வார்விக் பிரபுவுக்கும் அரசருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. தமக்கு எதிராகக் கி.பி. 1469-ல் ஏற்பட்ட கலகத்திற்கு வார்விக் காரணமென எட்வர்டு நினைத்துக் கொடுந்தண்டனை விதிக்க முற்பட்டபோது அவர் ஃபிரான்சுக்குத் தப்பி ஓடிவிட்டார். எட்வர்டின் வெற்றிகளைக் கண்டு பொறுமை கொண்டிருந்த ஃபிரெஞ்சு மன்னரான பதினோராம் லூயி வார்விக் பிரபுவை வரவேற்று, அவரை மையமாக வைத்து எட்வர்டின் ஆட்சியை ஒழிக்கத் திட்டமிட்டார். லங்காஸ்டிரியர்களையும் யார்க்கியர்களையும் ஒற்றுமைப்படுத்தி அதன்மூலம் எட்வர்டின் ஆட்சியைக் கவிழ்ப்பதே அத் திட்டமாகும். அதற்கேற்ப யார்க் தலைவர்களில் ஒருவரான வார்விக் பிரபுவுக்கும் லங்காஸ்டிரியர் ஹென்றியின் மனைவியான மார்க்ரெட்டுக்கும் பதினோராம் லூயி சமரசம் செய்து வைத்தார். மார்க்ரெட்டின் மகனை எட்வர்டு (வேல்ஸ் இளவரசர்) வார்விக்கின் மகளான ஆன்நெவில் (Anne Neville) என்பவளை மணந்துகொண்டார்.

லூயியின் உதவியைப் பெற்று வார்விக் இங்கிலாந்தின்மீது கி.பி. 1470-ல் படையெடுத்தார். அப்போது அரசர் எட்வர்டு தலைநகரில் இல்லாததால், வார்விக் பிரபு இலண்டனை எளிதாகக் கைப்பற்றிச் சிறையிலிருந்த ஆறாம் ஹென்றியை விடுதலை செய்தார். எட்வர்டு இங்கிலாந்தை விட்டு பர்கண்டிக்கு ஓடி விட்டார். ஹென்றி செயிண்ட் பால் திருச்சபையில் மீண்டும் முடி சூட்டப்பட்டார். ஹென்றி அரசுரிமையைத் திரும்பவும் பெற்ற போதிலும், அவருடைய புத்தி கெட்டிருந்ததால் நேரடியான ஆட்சியை மேற்கொள்ள முடியவில்லை. தாம் பெற்ற அரசை அதிக நாள்கள் ஹென்றியால் அனுபவிக்க முடியவில்லை.

கி.பி. 1471 மார்ச் மாதத்தில் நாடு திரும்பிய நான்காம் எட்வர்டு தம் எதிரிகளைப் பார்னெட் (Barnet) சண்டையில் தோற்கடித்தார். வார்விக் பிரபு கொல்லப்பட்டார். பார்னெட் சண்டை நடந்து கொண்டிருக்க மார்க்ரெட் தம் மகனோடு (வேல்ஸ் இளவரசர்) ஃபிரான்சிலிருந்து இங்கிலாந்து வந்து சேர்ந்தார். பார்னெட் தோல்வியை ஈடுகட்டப் பெரும்படை

திரட்டி எட்வர்டுடன் போரைத் தொடங்கினர். ஆயின், மார்க்ரெட் தலைமை தாங்கிய லங்காஸ்டிரியர் கட்சி, டியூக்ஸ்பரி என்னும் இடத்தில் நடந்த சண்டையில் படுதோல்வி அடைந்தது.

ஆனால், ஆரும் ஹென்றியின் மகனை வேல்ஸ் இளவரசர் கொல்லப்பட்டார். ஆரும் ஹென்றியின் மனைவியான மார்க்ரெட் சிறையிலடைக்கப்பட்டார். ரோசாச் சின்னப் போருக்கே முக்கியக் காரணமாக இருந்த அவளை அரசர் எட்வர்டு நான்கு ஆண்டுகள் சிறையிலடைத்து வைத்துப் பின்னர் ஃபிரான்சுக்கு விரட்டிவிட்டார். பைத்திய ஹென்றியும் எட்வர்டின் ஆணைப்படி கொலை செய்யப்பட்டார்.

எதிர்ப்புகளைச் சமாளித்துத் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்ற நான்காம் எட்வர்டை மீண்டும், இங்கிலாந்து அரசராக ஏற்றுக்கொண்டது. லங்காஸ்டிரியர்களின் குலத்தையே வேரோடு அறுக்கும் எண்ணம் கொண்டுவிட்ட நான்காம் எட்வர்டு எஞ்சியிருந்த அக் குடியினரைக் கொன்றும் அவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்தும் வஞ்சம் தீர்த்துக்கொண்டார்.

கி.பி. 1471-1483 வரை எவ்வித இடையூறும் இல்லாமல் நான்காம் எட்வர்டு ஆட்சி புரிந்தார். அக் காலத்தில் அவர் ஒரு சர்வாதிகாரியாகவே நடந்துகொண்டார். பாராளுமன்றத்தைக் கூட்டாமலே காலம் கடத்தியதுமட்டும் அல்லாமல் அதன் அனுமதி இல்லாமல் மக்களிடமிருந்து வரி, கடன் போன்ற வைகளை வசூலித்தார். நேரிடை ஆட்சியிலே நாட்டம் கொண்டிருந்த நான்காம் எட்வர்டு தம் அவைக்கள ஆலோசனையாளர்களுக்குக்கூட முக்கியத்துவம் தரவில்லை.

நான்காம் எட்வர்டு சிறந்த வீரராக விளங்கியதோடு மட்டுமல்லாமல், அரசியல் தந்திரம் தெரிந்தவராகவும் இருந்தார். ஃபிரெஞ்சு மன்னர் பதினோராம் லூயியுடன் உடன்பாடு செய்துகொள்ள அவர் காட்டிய சிரத்தையே அதற்கு எடுத்துக்காட்டு. நான்காம் எட்வர்டு இடைக்காலத்தில் இங்கிலாந்தை ஆண்ட மன்னர்களிலே திறமைசாலியாகக் கருதப்படுகிறார்.

வாள் ஏந்தி இரத்தம் சிந்தி நான்காம் எட்வர்டால் யார்க் குடியினருக்குக் கிடைத்திருந்த வாரிசு உரிமை கி.பி.1485-ல் முற்றுப்பெறப் போகின்றது என்பதற்கான அறிகுறிகள் 1483-ல் காணப்படவில்லையானாலும், அதற்கேற்ப ஒரு சூழ்நிலை எட்வர்டின் மரணத்தை ஒட்டிக் காணப்பட்டது.

ஐந்தாம் எட்வர்டு (1483)

காலம் சென்ற நான்காம் எட்வர்டின் மூத்த மகன் அடுத்த வாரிசாகப் பட்டம் எய்தினர். பன்னிரண்டு ஆண்டுகளே நிரம்பி யிருந்த ஐந்தாம் எட்வர்டின் சார்பில், அவரின் சிறிய தகப்ப னரான ரிச்சர்டு நாட்டின் காப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். தானே நாட்டை ஆளவேண்டும் எனப் பேராசை கொண்டிருந்த ரிச்சர்டு நயவஞ்சகமாக அரசர் ஐந்தாம் எட்வர்டையும் அவரின் தம்பியையும் சிறைபிடித்துப் பின் இலண்டன் கோட்டையில் கொலை செய்துவிட்டார்.

மூன்றும் ரிச்சர்டு (1483-1485)

நாட்டிலிருந்த குழப்ப நிலையைச் சமாளிக்கத் திறமையும் கண்டிப்பும் கொண்ட ஒரு வல்லவனே அரசனாக இருக்கவேண்டும் என நினைத்து வந்த இலண்டன் மக்கள் தமக்குப் பொதுவான சம்மதத்தைத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் கி.பி. 1483-ல் காப்பாளர் தம்மை அரசர் மூன்றும் ரிச்சர்டு என அழைத்துக் கொண்டார்.

யார்க் அரச மரபின் மூன்றாவதும் கடைசியும் ஆன மன்னராகப் பட்டம் பெற்ற ரிச்சர்டு வீரத்திற்கும் திறமைக்கும் புகலிடமாக இருந்தார். இவர் காலத்தில் கூட்டப்பட்ட பாராளுமன்றத்திற்கு ரிச்சர்டு வரி வசூலிக்கும் உரிமையை விட்டுக் கொடுத்தார். சட்ட அமைப்புக்கு உட்பட்ட முறையில் ஆட்சி புரிய மூன்றும் ரிச்சர்டு விரும்பினர். இருப்பினும் அவருடைய ஆட்சி அதிக நாள்கள் நீடிக்கவில்லை.

கி.பி. 1485-ல் லங்காஸ்டிரியர்கள் ஹென்றி டியூடர் தலைமையில் ரிச்சர்டை எதிர்த்தனர். இங்கிலாந்தில் இருந்த சில முக்கிய பிரபுக்கள் ஹென்றி டியூடரை ஆதரித்தனர். நண்பர்கள் என நினைத்து நம்பியவர்கள்கூட எதிரியின் பக்கம் சேர, ரிச்சர்டு துணிவை இழக்காமல் பாஸ்வர்த் (Bosworth) என்னும் இடத்தில் ஹென்றி டியூடரை எதிர்த்தார். வீரத்துடனும், கடுமையாகவும் போர் புரிந்தும் மூன்றும் ரிச்சர்டு வெற்றியடையாமல் போர்க் களத்திலேயே கொல்லப்பட்டார்.

பாஸ்வர்த் சண்டையே ரோசாச் சின்னப் போருக்குக் கடைசிக் கட்டமாக அமைந்தது.

ரிச்சர்டின் வீர மரணம் இங்கிலாந்தில் ஒரு புதிய அரச மரபு ஏற்பட வழிகோலியது. பாஸ்வர்த் சண்டையில் வெற்றி கொண்ட ஹென்றி டியூடர் போர்க்களத்திலேயே ஏழாம் ஹென்றி யாகப் பட்டம் சூட்டிக்கொண்டார்.

6. இங்கிலாந்தும் மறுமலர்ச்சியும்

14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் (Renaissance) இடைக்காலத்திற்கு முடிவு கொடுத்து நவீன காலத்தைத் தொடங்கிவைத்தது. சமுதாயத்தை மையப் பொருளாகக் கொண்டு புதிய இயக்கங்களும், கலைகளும் தோன்றின. அதன் விளைவாக, அதுவரை சமயக் கண்ணோட்டத்தைமட்டுமே கொண்டிருந்த மனித சமுதாயம் தன் கவனத்தை வேறு திசைகளில் திருப்பியது. அத் திருப்பம் பல அடிப்படையான மாறுதல்களுக்குக் காரணமாயிற்று. புதிய சிந்தனைகள், கருத்துகள், கலை வடிவங்கள் தோன்றின. மக்களின் கண்ணோட்டமும் அறிவும் விருத்தியடைந்தன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின் பகுத்தறிவுக் காலம் தொடங்கியது.

ஆக்ஸ்ஃபோர்டு சீர்திருத்தக்காரர்கள்

மறுமலர்ச்சியின் தாயகம் இத்தாலி என்றாலும் அவ் வியக்கம் இங்கிலாந்து உட்படப் பல்வேறு நாடுகளுக்கும் பரவியது. 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சி அதற்கோர் எடுத்துக்காட்டு. மறுமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருந்த புதுக்கல்வி (New Learning) நான்காம் எட்வர்டு காலத்திலேயே இங்கிலாந்தைச் சிறப்புறச் செய்ய ஆரம்பித்திருந்தும் ஏழாம் ஹென்றி, எட்டாம் ஹென்றி என்ற டியூடர் அரசர்கள் காலத்தில் புதுக் கல்வி இயக்கம் வேகமாகப் பரவியது. ஆக்ஸ்டுஃபோர்டு சீர்திருத்தக்காரர் களென அழைக்கப்பட்ட அறிவு சார்ந்த எழுத்தாளர்களே அப் புதுக்கல்வி இயக்கத்திற்குக் காரண கர்த்தர்களாக இருந்தனர்.

செல்லிங்

காண்டர்பரியில் கிருத்துவப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிவந்த வில்லியம் செல்லிங் (William Selling) என்ற ஆக்ஸ்

ஃபோர்டு பட்டதாரி முதன் முதலாகக் கிரேக்க எழுத்துப் பிரதிகளை இங்கிலாந்துக்குக் கொண்டுவர, அம் மொழிமீது ஆங்கிலேயர்களுக்கு மோகம் வளர ஆரம்பித்தது.

லினகர்

செல்லிங்கின் மாணாக்கர்களிலே ஒருவரான தாமஸ் லினகர் (Thomas Linacre) கிரேக்க மொழியைக் கற்கவேண்டுமென்ற ஆர்வத்தில், இத்தாலியிலுள்ள ஃபிளாரன்ஸ் (Florence) நகருக்குச் சென்று மெடிசி குடும்ப இளவரசர்களோடு பழகி, அவர்களுக்குப் போதிக்கப்பட்ட கிரேக்க அறிவைக் கற்றார். வாடிகன் நூலகத்தில் கிரேக்க மொழி நூல்களைப் பயின்று தம் நாடு திரும்பிய லினகர் அப் பழைய மொழியின் இலக்கியச் சிறப்புகளை மற்றவர்களுக்கும் தெரியவைத்தார். வில்லியம் குரோசைன் (William Grocyn) என்ற மற்றோர் ஆக்ஸ்ஃபோர்டு ஆசிரியரும் கிரேக்க மொழியை ஆர்வத்துடன் பயின்று, பின் தம் கல்லூரியில் கிரேக்க இலக்கியங்களைப் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர்.

கோலெட்

அவருடைய மாணவர்களிலே ஒருவரான ஜான் கோலெட் (John Colet) என்பவரும் கி. பி. 1496-ல் இத்தாலி சென்று, கிரேக்க மொழியைக் கற்றார். பின்னர், நாடு திரும்பிய கோலெட் கிரேக்க மொழியில் சமயத்தைப்பற்றி ஆக்ஸ்ஃபோர்டில் சொற்பொழிவு ஆற்றினர். அங்ஙனமாக, கிரேக்க மொழி, கிரேக்க இலக்கியங்கள்மீது 15 ஆம் நூற்றாண்டின் ஆங்கிலேயர்களுக்கு ஒரு தனி மோகம் பிறந்திருந்தது. அதுவே புதுக்கல்வி இயக்கத்தின் தொடக்கமாகும்.

இலக்கிய மறுமலர்ச்சியின் அடிப்படையில் எங்ஙனம் புதிய கருத்துகளைப் பரப்பிய புதுக்கல்வி முறை அமைந்ததோ, அதே போன்று, புதுக்கல்வியை அடிப்படையாகக் கொண்டு சில கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

இலண்டனில் நிறுவப்பட்ட செயின்ட் பால் (St. Paul) பள்ளியும், கேம்பிரிட்ஜின் கிருத்து, செயின்ட் ஜான் கல்லூரிகளும் அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். இலத்தீன் மொழி பிடிதளர்ந்து, தேசிய மொழியிலே புதிய அறிவு அக் கல்விக் கூடங்களால் போதிக்கப்பட்டது.

எராஸ்மஸ்

நாட்டிலே பரவிவந்த அப் புதிய அறிவுக்கு உரம் இடுவது போல் இரு ஆக்ஸ்ஃபோர்டு சீர்திருத்தக்காரர்களின் இலக்கியச்

சேவை இங்கிலாந்துக்குக் கிடைத்தது. அவர்களிலே ஒருவர் டச்சு நாட்டில் பிறந்து இங்கிலாந்தில் வாழ்ந்துவந்த எராஸ்மஸ் (Erasmus) என்ற அறிவு உலகமேதை. அவர் எழுதிய 'அறிவீனத்தின் புகழ்ச்சி' (Praise of folly) என்ற நூலில் திருச்சபையால் போதிக்கப்பட்டு வந்த பழங்காலப் போதனை முறைகளைக் கிண்டல் செய்தார்.

சர் தாமஸ் மூர்

1516-ல் கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்த (மூல) விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை (New Testament) முழுமையாகத் தொகுத்தார். அத்துடன் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை ஒப்பிட்டு, தமக்குத் தவறுகளாகத் தெரிந்தவைகளை யெல்லாம் இலத்தீனில் (Testament) திருத்தினர். ஆக்ஸ்ஃபோர்டு அறிஞர்களின் வரிசையிலே மிகவும் முக்கியமானவராக சர் தாமஸ் மூர் (Sir Thomas Moore) என்ற இலக்கிய மேதை கருதப்படுகிறார். 'உதோபியா' (Utopia) என்ற அவரின் உன்னத எழுத்துப் படைப்பிலே அப்போதைய அரசியல் சமூக, சமய முறைகளைக் கண்டித்திருந்தார். அரசியலிலும், திருச்சபையிலும் செய்ய வேண்டிய மாற்றங்களை வலியுறுத்தினர். எக் குறைகளுமில்லாத எல்லாத் தேவைகளும் நிறைந்த ஒரு கற்பனைச் சமுதாயத்தைத் தக்க நூலில் உருவாக்கினர். சுருக்கமாக, அந்த நூல் நிகழ் காலத்தின் கண்டனமாகவும், வருங்காலத்தின் இன்பக் கனவாகவும் இயற்றப்பட்டது.

எழுத்திலும், பிரசாரத்திலும் 'புதுக்கல்வியின்' சாராம்சத்தைப் போதித்த அந்த ஆக்ஸ்ஃபோர்டு இலக்கிய மேதைகள் வருங்காலத்தில் நிகழப்போகும் பல மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் மக்களின் மனதைப் பக்குவப்படுத்தினர்கள். இப் புதுக்கல்வி அல்லது இலக்கிய மறுமலர்ச்சியினால் அதிகமாகக் கவரப்பட்ட இளைஞர்களே அடுத்தடுத்து நிகழ்ந்த கடல்வழிப் பிரயாணங்களுக்கும் புது உலகக் கண்டுபிடிப்புக்கும் இறுதியில் சமயப்புரட்சிக்கும் காரண கர்த்தாக்களாயினர்.

கடல்வழிப் பிரயாணங்களும் காரணங்களும்

மறுமலர்ச்சி இயக்கத்தையொட்டிப் புதிய நாடுகளையும் கடல் வழிகளையும் கண்டுபிடிப்பதற்கான ஆர்வமும், ஆசையும் ஐரோப்பிய நாடுகளிடையே தோன்றலாயின. இந்தியா, சீனா, கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து ஐரோப்பியர்களுக்கு வேண்டிய ஆடம்பரப் பொருள்களும், தங்களின் குளிர்கால உணவுக்கு

அத்தியாவசியமான பொருள்களும் (spices) கான்ஸ்டான்டி நோபிள் வழியாகவே ஐரோப்பாவுக்குக் கிடைத்துவந்தது. கி. பி. 1453-ல் அந்த நகரம் ஆட்டோமன் துருக்கியர்களால் கைப்பற்றப்பட, நிலவழியில் நடைபெற்றுவந்த வியாபாரம் தடைப்பட்டது. கீழை நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொள்ளுவதற்கு வேறு வழிகளைக் காணவேண்டிய அவசியம் ஏற்பட, கடல்வழியாகப் புதிய மார்க்கங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அம் முயற்சியில் ஸ்பெயின், போர்ச்சுகல் போன்றநாடுகளே முன்னணியி லிருந்தன. புதிய உலகத்தின் பகுதியான மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்ட கொலம்பஸும், நன்னம்பிக்கை முனைவழியாக இந்தியாவுக்குக் கடல் வழிகள் கண்டுபிடித்த வாஸ்கோடா காமாவும் (1498) தங்களின் நாடுகளுக்கு முக்கியத்துவத்தைத் தேடிக் கொடுத்த அக் காலத்தில் இங்கிலாந்திலும் பரபரப்புக் காணப்பட்டது.

இடைக்காலத்தில் போதிக்கப்பட்டு வந்த மூட நம்பிக்கைகளை ஒழித்து எதையும் துருவிப் பார்க்கவேண்டுமென்ற மறுமலர்ச்சியின் கருத்து இங்கிலாந்தில் பரவிவந்த அக் காலத்தில் ஸ்பெயின், போர்ச்சுகல் போன்ற நாடுகளின் புதிய கண்டுபிடிப்புகள் ஆங்கிலேயரையும் தூண்டியதில் வியப்பேதும் இல்லை.

வாஸ்கோட காமா (Vasco-Da-Gama) தம் ஆய்வுக் கப்பலில் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி (Cape of Good Hope) இந்தியாவுக்குக் கடல்வழியே போய்க்கொண்டிருந்த அந் நேரத்தில் கொலம்பஸ் மேற்கிந்தியத் தீவுகளை நெருங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் இங்கிலாந்து தன் அரசியல் சிக்கலைத் தீர்த்துக் கொண்டிருந்தது. புதுஉலகக் கண்டு பிடிப்பாளரெனப் புகழப் படும் கிறிஸ்டோபர் கொலம்பஸ் (Christopher Columbus) தம் சகோதரன் பார்த்தலோமியோ கொலம்பஸ் (Bartholomew Columbus) என்பவரின் வாயிலாகத் தம் கடல்வழி ஆய்வுப் பிரயாணத்திற்கு இங்கிலாந்தின் அரசரான ஏழாம் ஹென்றியின் உதவியைத்தான் முதலில் கோரினர். தம் நாட்டு அரசியலில் அதிகக் கவனத்தைச் செலுத்தவேண்டி இருந்த ஹென்றி, கோரிய உதவியைக் கொடுக்கத் தயங்கியபோது கொலம்பஸ் ஸ்பெயினின் உதவியை நாடிப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து பெற்றிருக்கவேண்டிய பெருமையை ஸ்பெயின் நாடு அடைந்துவிட்டது. கொலம்பஸின் சேவை இங்கிலாந்துக்குக் கிடைக்காமல் போய்விட்டதெனினும், இன்னொரு கடல் ஆய்வாளரால் அந் நாடும் புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்கும் போட்டியில் இறங்கியது. அவரின் பெயர் ஜான் காபாட் (John Cabot) ஆகும்.

நடப்பு

ஜெனோவா என்ற இத்தாலிய நகரைச் சார்ந்த ஜான் காபாட் (Cabot) இங்கிலாந்தைத் தம்மகமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். மத்திய ஆசியா, இந்தியா போன்ற நாடுகளுக்கு நில மார்க்கமாக வியாபாரத்தின்நிமித்தம் ஏற்கெனவே சென்று திரும்பியிருந்த காபாட்டுக்குக் கீழை நாடுகளுக்குப் புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது. தென்மேற்காகக் கடல் பிரயாணம் செய்து கொலம்பஸால் கண்டுபிடிக்க முடியாத 'கேதே' (Cathay - China) யைத் தம்மால் வடமேற்கு மார்க்கத்தில் கடல் பிரயாணம் செய்து கண்டுபிடிக்க முடியுமெனக் காபாட் திடமாக நம்பினார். அரசன் ஏழாம் ஹென்றியிடம் அதற்கான அனுமதி பெற்று, கி.பி. 1497-ல் பதினேழு உதவியாளர்கள் கொண்ட சிறு கப்பலில் பிரிஸ்டல் (Bristol) துறைமுகத்திலிருந்து கிளம்பினார். வடமேற்காக அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து, கீழை நாடுகளை அடைந்துவிடலாமெனக் காபாட் நினைத்திருந்தார். பாறைகள் நிறைந்து பனி மூடிக்கிடந்த ஒரு பெருந்தீவைக் (Newfoundland) (நியூஃபவுண்ட்லாந்து) காபாட் அடைந்தார். தீவைச் சுற்றிலும் மலிந்திருந்த மீன் கூட்டங்களைத்தவிரக் காபாட் எதையும் காணவில்லை. ஆனால், தாம் கண்டது ஒரு தீவு என்பதுமட்டும் அவருக்குத் தெரியும். அதே ஆண்டில் இங்கிலாந்து திரும்பிய காபாட், தாம் சீனாவுக்கருகே யிருந்த ஒரு தீவைக் கண்டுபிடித்துவிட்டதாக நம்பினதோடு அல்லாமல், தம் நாட்டு மக்களையும் நம்பச் செய்தார்; கொலம்பஸால் சாதிக்க முடியாததைத் தாம் முடித்துவிட்ட மனநிறைவு, காபாட்டுக்கு இருக்க, அச் செய்தி இங்கிலாந்து முழுவதும் பரபரப்பை (ஆனந்தத்தை) உண்டாக்கியது. தலைநகரான இலண்டனில் மக்கள் காபாட்டை வானுயரப் போற்றினார்கள். நாட்டு மக்களிடையே அவரின் திறமையினிடத்து அதிக நம்பிக்கை பிறந்தது. மக்களின் உற்சாகத்தால் ஊக்குவிக்கப்பட்ட ஜான் காபாட் தம்முடைய இரண்டாவது கடல் ஆய்வுப் பிரயாணத்தைக் கி.பி. 1498-ல் தொடங்கினார்.

சீனத்துப் பட்டுத் துணியைக் கொண்டுவரும் நோக்கத்தோடு, தம் ஐந்து கப்பல்களில் இங்கிலாந்துத் துணிகளை எடுத்துக் கொண்டு தாம் முதலில் சென்ற வழியிலே கடற் பிரயாணம் மேற்கொண்ட காபாட் நியூஃபவுண்ட்லாந்து தீவை மீண்டும் அடைந்தார். மேற்கொண்டு துருவிப் பார்க்க வேண்டிப் பல மைல்கள் கடற்பிரயாணம் செய்தும், அவருக்குச் சீன நாட்டுப் படகுகளோ, அரண்மனைகளோ தென்படவில்லை. மனித நடமாட்ட மில்லாத நெருக்கமான மரங்க ளடங்கிய பெரும் நிலப்பரப்பையே கண்டார்;

சீனுவையும் இந்தியாவையும் அடைந்துவிடலாமென்று ஆங்கில வியாபாரிகளின் உதவியையும், வாழ்த்துகளையும் பெற்று வந்த ஜான் காபாட் அப்போது வட அமெரிக்கக் கண்டத்தின் கிழக்குக் கரையையே கண்டார். மனம் தளர்ந்து நாடு திரும்பிய காபாட் சில நாள்களுக்குள்ளாகக் காலமடைந்தார்.

அவருடைய் மகனுன செபஸ்டியன் காபாட் (Sebestian Cabot) என்பவரும் வடமேற்குத் திசையில் அட்லாண்டிக்கிய ஆய்வுப் பிரயாணத்தை மேற்கொண்டால், கீழை நாடுகளை அடைந்துவிட முடியுமென நம்பினுர். கி.பி. 1509-ல் தம் கடல் பிரயாணத்தைத் தொடங்கிய செபஸ்டீன் நியூஃபவுண்ட்லாந்துக்கு வடக்கே இருந்த லாப்ரடார் (Labrador) பகுதியைத்தான் கண்டுபிடித்தார். அவருடைய முயற்சியும் தோல்வியிலேயே முடிந்தது.

கீழ் நாடுகளுக்குப் புதிய கடல்வழி கண்டுபிடிக்க முடியாமல் போனதில் ஆங்கிலேயர்களுக்கு ஏமாற்றம் இருந்தபோதிலும், காபாட்டுகளால் இங்கிலாந்திற்கு இன்னெரு வகையில் நன்மையே கிடைத்தது. நியூஃபவுண்ட்லாந்து, லாப்ரடார் கரையோரப் பகுதிகளில் மிகுதியாகக் காணப்பட்ட காட்மீன்கள் இங்கிலாந்தின் மீன் வியாபாரத்திற்கு நல்ல இலாபம் கொடுத்தன.

இதற்கிடையே, சூரூவளிக் காற்றினுல் அலேக்கழிக்கப்பட்ட கப்ரல் (Cabral) என்ற போர்ச்சுகீசியர் தற்செயலாகக் கி.பி. 1500-ல் தென்அமெரிக்காவின் கீழக்கரையை அடைந்து, பிரேசிலேக் (Brazil) கண்டுபிடித்திருந்தார். 1501-ல் அமெரிகோ வெஸ்புகி (Amerigo Vespucci) என்ற இத்தாலியர் இன்னும் தெற்கே சென்று பெரு நிலப்பரப்பைக் கண்டுபிடித்திருந்தார். கி. பி. 1513-ல் பால்போ (Balboa) என்பவர் பனமா பூசந்தியை அடைந்து, புதிய கடலேக் (பசிபிக்) கண்டுபிடித்திருந்தார். கி.பி. 1519-ல் பெர்டினண்ட் மெகல்லன் (Ferdinand Magellan) என்ற ஸ்பானிஷ் ஆய்வாளர் தென் அமெரிக்காக் கீழ் முனையைக் கடந்து, பசிபிக் கடலேக் கடந்து தென் கிழக்கு ஆசியாவில் புதிய தீவுகளைக் கண்டுபிடித்தார்.

இங்ஙனம், ஸ்பெயினும் போர்ச்சுகலும் போட்டியிட்டுப் பற்பல புதிய பகுதிகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்க, ஆங்கிலேயர்களுக்கு மீண்டும் சபலம் தட்டத் தொடங்கியது. கடல் ஆய்வுப் பிரயாணத்தைப்பற்றி ராபர்ட் தார்ன் (Robert Thorn) என்பவர் 'கீழை நாடுகளேப்பற்றிய அறிவிப்பு' (Declaration of the Indies) என்ற நூலே எழுதி, மன்னர் எட்டாம் ஹென்றிக்குக் கி.பி. 1527-ல் அனுப்பிவைத்தார். நன்னம்பிக்கை முனை

வழியாகவும், மெகல்லன் ஜலசந்தி வழியாகவும், ஆசியாவை அடையும் முயற்சியைவிட, வடமேற்கு மார்க்கமாக ஆர்டிக் பகுதியை ஊடுருவி ஆசியாவை அடைய முயன்றால் உசிதமாக இருக்குமென அந்த நூலில் அவருக்குத் தெரிந்த ஆதாரங்களுடனும், வரைபடங்களுடனும் விளக்கி யிருந்தார். கீழ் நாடுகளுக்குத் தாங்களும் புதுக் கடல்வழியைக் காண வேண்டுமென ஆர்வம் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு அந்த நூல் வரப்பிரசாதமாக அமைந்தது. ஆக, அதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன.

கி. பி. 1527-ல் ஜான் ரட் (John Rut) என்ற ஆங்கிலக் கப்பற்படை வீரரின் தலைமையில் வடக்கு நோக்கி, ஓர் ஆய்வுக் கப்பல் புறப்பட்டது. ஆர்டிக் பனிப்பிரதேசத்தின் மிகக்கடுமை யான குளிரைப் பொறுக்கமுடியாத ஜான் ரட் தெற்கே திரும்பி னார். அமெரிக்கக் கண்டங்களின் கிழக்குக் கரையோரமாக மேற் கிந்தியத் தீவுகளை, ரட் அடைந்தபோது, அப் பகுதியில் ஏற் கெனவே ஆதிக்கத்தை நிலைநாட்டி யிருந்த ஸ்பானியர்கள் ஆங்கிலக் கப்பலைப் பீரங்கிகளால் தாக்கினர். அதனால் மேற் கொண்டு கடற்பிரயாணத்தைத் தொடர முடியாத நிலை ஏற்ப டவே, ரட் நாடு திரும்பவேண்டியதாயிற்று. புதிய உலகத்தைக் கண்டுபிடித்ததிலும் பழைய உலகுக்குப் புதிய கடல் மார்க்க வழிகளைக் கண்டு பிடித்ததிலும், ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகள் பெரு வெற்றிகளைக் கொண்டபோதிலும், பிற்காலத்தில் ஆங்கிலம் பேசும் மக்கள் நிரம்பிய பகுதியாக வட அமெரிக்காவும், பிரிட்டிஷ் பேரரசின் பகுதியாக இந்தியாவும் விளங்கியதைக் காணும்போது ஆங்கிலேயர்கள் 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் பெற்ற சிறு வெற்றிகள் பெரும் விளைவுகளுக்குக் காரணமாகவே இருந்தன. அடுத்த நூற்றாண்டுகளில் ஃபிரான்சு, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் இங்கிலாந்து செய்யவேண்டியிருந்த ஆதிக்கப் போர்களுக்கும், இப் புது நாடு கண்டுபிடிப்புகள் காரணமாக அமைந்தன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

7. டியூடர்களின் ஆட்சி

(அ) ஏழாம் ஹென்றி (1485 - 1509)

ரோசாச் சின்னப்போரின் இறுதிக் கட்டமாக அமைந்திருந்த பாஸ்வர்த் போர்க்களத்தில் லங்காஸ்டிரியர்களின் ஆதரவுடன் ஹென்றி ரிச்மாண்டு (Henry Richmand) சண்டையிட்டு யார்க் குடியின் கடைசி மன்னரான மூன்றும் ரிச்சர்டைக் கொன்று வெற்றி கண்டதிலிருந்து, இங்கிலாந்தில் ஒரு புதிய அரச மரபும், புதிய முடியாட்சியும் தோன்றலாயின.

ஏழாம் ஹென்றியினால் தோற்றுவிக்கப்பட்ட டியூடர்களின் (Tudors) காலம் இங்கிலாந்தின் அரசியல் வரலாற்றிலே முக்கிய இடம் பெறுகின்றது. எலிசபத் பேரரசியாரின் காலத்தில்தான் அதன் புகழ் ஓங்கியிருந்த தென்றாலும், அவருடைய பாட்டனாரான ஏழாம் ஹென்றியின் காலம் அதற்கு வித்திடுவதாக இருந்தது.

ஹென்றி டியூடர், பாஸ்வர்த் போர்க்களத்தில் வெற்றி கொண்டதாலேயே இங்கிலாந்தின் மகுடத்தைப் பெற முடிந்தது என்பதைத் தவிர, அவருக்கும் இங்கிலாந்தின் அரச மரபினருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாதிருந்தது என நாம் நினைத்து விடக் கூடாது.

ஐந்தாம் ஹென்றியின் விதவையான காதரின் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்த பெருவீரன் ஓவன் டியூடர் (Owen Tudor) என்பவரை மறுமணம் செய்துகொண்டார். அவர்களின் பிள்ளையான எட்மண்டு (Edmund) என்பவர் அரசர் ஆறும் ஹென்றியால் ரிச்மாண்டின் எர்லாக (Earl of Richmand) ஆக்கப்பட்டார். சோமர்செட் பிரபுவின் மகளான மார்க்ரட் என்பவளை

எட்மண்டு மணம் செய்து கொண்டிருக்க, அவர்களுக்குப் பிறந்தவரே ஹென்றி (ரிச்மாண்டு) டியூடராகும்.

லங்காஸ்டிரியர்களுக்கும், யார்க்கியர்களுக்கும் நடந்துவந்த ஆதிக்கப்போரில் (ரோசாச் சின்னப் போர்) முன்னவர்களுக்குத் தலைமை தாங்கக் குடும்ப ரீதியாக ஹென்றிக்குத் தகுதியிருந்தது; சண்டையில் வெற்றி பெறக்கூடிய திறமையும் இருந்தது. போர்க்களத்தில் மூன்றும் ரிச்சர்டு கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அவரின் அரச மகுடம், அதாவது சற்று முன்புவரை ரிச்சர்டின் தலையை அலங்கரித்துவந்த இங்கிலாந்தின் மணி மகுடம், போர்க்களத்தில் ஒரு புதரில் கேட்பாரற்று விழுந்து கிடக்க, அதை ஹென்றி அங்கேயே அணிந்துகொண்டு, இங்கிலாந்தின் அரசரென அறிவித்துக்கொண்டார்.

1485ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஹென்றிக்கு முறைப்படி பட்டம் சூட்டப்பட, இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியது. ரோசாச் சின்னப் போரினால் அலைக்கழிக்கப்பட்டிருந்த நாட்டு மக்களுக்கு மிகவும் தேவைப்பட்ட சட்டத்தின் மேற்பார்வையில் ஒழுங்குடன் கூடிய அமைதியை முதற்கண் ஏழாம் ஹென்றி நிலைநிறுத்தியதுமட்டு மன்றி மன்னரின் வலிய ஆட்சியை இங்கிலாந்தின் எல்லாப் பகுதிகளும் உணரச் செய்தார்.

ரோசாச் சின்னப் போரின் காலத்தில் போரிட்டுக் கொண்ட லங்காஸ்டிரியர், யார்க்குகளின் மனக் கசப்பைப் போக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் நான்காம் எட்வர்டின் மகளும், யார்க் குடும்பத்தைச் சேர்ந்தவளுமான எலிஸபத்தை அரசர் மணம் புரிந்துகொண்டார். பரம்பரைப் பகைமையை பாராட்டாது, யார்க் குடும்பத்தினரோடு ஹென்றி மண உறவு கொண்டு, இங்கிலாந்தின் அரசுக் கட்டிலுக்குத் தமக்குரிய உரிமையை மேலும் பலப்படுத்திக் கொண்டது அவரின் இராச தந்திரத்தைக் காட்டியது. எவ்வித வாரிசுரிமைச் சச்சரவுகளுக்கும் மேற்கொண்டு இடம் தரக்கூடாதென்ற எண்ணத்தில் ஹென்றி அத் திருமணத்தைச் செய்துகொண்டிருந்தும், முற்றிலும் அவர் வெற்றி காணவில்லை யென்பது (1487–1499)ஆம் ஆண்டுக்கால அளவில் அவர் ஆட்சிக் கெதிராக ஏற்பட்ட கலகங்கள் எடுத்துக் காட்டின. ஆயின், அக் கலகங்கள் எவ்விதச் சிரமமுமில்லாமல் அடக்கப்பட்டன.

பாஸ்வர்த் சண்டையைத் தொடர்ந்து பர்கண்டிக்குத் தப்பி ஓடிவிட்டிருந்த சில யார்க்கியர்கள் தங்கள் சார்பில் வார்விக் எர்லான (Warwick Earl) லேம்பர்ட் சிம்னெல் (Lambert Simnel

என்பவனை அரசராக்க வேண்டுமென்ற முயற்சியை மேற் கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பினர். இங்கிலாந்திலேயே தங்கியிருந்த சில யார்க்கியர்கள் ஜான் டி லாபோல் (John de la Pole) என்ற பிரபுவின் தலைமையில் சேர்ந்துகொண்டு, 1487ஆம் ஆண்டு ஸ்டோக் (Stoke) என்னுமிடத்தில் ஹென்றியின் படைகளை எதிர்த்துத் தோற்றனர். அச் சண்டையே ரோசாச் சின்னப் போரின் கடைசி மோதலாகக் கொள்ளலாம். அச் சண்டையில் ஜான் கொல்லப்பட்டிருந்தும், சிம்னெல் சிறை பிடிக்கப்பட்டிருந்தும்கூட, யார்க்கியர்கள் தங்கள் இறுதித் தோல்வியை ஒப்புக் கொள்வதாக இல்லை. ஐந்தாம் எட்வர்டின் சகோதரரெனச் சொல்லிக்கொண்ட பெர்கின் வார் பெக் (Perkin Warbeck) என்பவரின் தலைமையில் மீண்டும் அரசரை எதிர்க்க யார்க்கியர்கள் முடிவு செய்தனர். பெர்கினுக்கு அயர்லாந்திலும், ஸ்காட்லாந்திலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. 1497ஆம் ஆண்டு கலகக்காரர்களை ஒன்று திரட்ட பெர்கின் இங்கிலாந்திற்கு வந்த போது, கைது செய்யப்பட்டு, பின் கொலைத் தண்டனையை அடைந்தார். அத்துடன் யார்க்கியர்களின் எதிர்ப்பு ஓய்ந்தது.

தம் ஆட்சிப் பீடத்திற்கு யார்க்கியர்களால் இனிப் போட்டியிராது என்ற தெளிவான நிலைமையில், இங்கிலாந்தில் அரசரின் அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் ஏழாம் ஹென்றி முழு மூச்சுடன் செயல்பட ஆரம்பித்தார். அதற்குச் சந்தர்ப்பங்களும் சாதகமாகவே இருந்தன.

ரோசாச் சின்னப் போரில் முழு மூச்சுடன் இரு கட்சியினருடனும் சேர்ந்து போரிட்ட பிரபுக்களின் பலம் மிகவும் நொடித்திருந்தது. பிரபுக்கள் அநுபவித்துவந்த சலுகைகளும் அதிகாரங்களுமே அவர்களை அடிக்கடி அரசியலில் அத்துமீறிப் பிரவேசிக்கத் தூண்டி அலங்கோலப்படுத்திய தென்பதையும் உணர்ந்திருந்த ஏழாம் ஹென்றி, அவர்களை உதாசீனப்படுத்த முற்பட்டார். அதிர்ஷ்டவசமாக, அரசரின் அம் முயற்சியை எதிர்க்கும் அளவுக்குப் பிரபுக்களுக்கு அப்போது பலமில்லை. ஏற்கெனவே ரோசாச் சின்னப் போரில் பல பிரபுக்கள் கொல்லப்பட்டிருக்க, சிலர் மரணதண்டனையை அடைந்து இறந்துபட்டிருக்க, அவர்களின் பலம் மிகவும் குறைந்திருந்தது. எஞ்சியிருந்த பிரபுக்களும் போர்ச் செலவுக்காகத் தங்கள்மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளைக் கட்டவேண்டிய நிர்ப்பந்தத்திலும், நிலங்களை விற்றிருக்க, போதிய பண பலம் இல்லாதவர்களாக இருந்தனர்.

தேசிய விவகாரங்களில் பிரபுக்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கக் கூடாதென்ற எண்ணத்தில், தம் ஆலோ

சனைச் சபையில் ஆக்ஸ்ஃபோர்டு பிரபு, சஸ்ஸெக்ஸ் பிரபு ஆகிய இருவரைத் தவிர மற்றப் பிரபுக்களை அனுமதிக்கவே இல்லை. திருச்சபையைச் சேர்ந்த ஆர்ச் பிஷப் மார்டன் (Morton) மேலும் நடுத்தரக் குடியைச் சேர்ந்த வழக்கறிஞர்களையுமே அரசர் தம் அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார்.

சாதாரணமாக அரசர்களுடைய தனி அதிகாரத்திற்கு முட்டுக்கட்டை இடவல்ல ஆங்கிலத் திருச்சபையும் லங்காஸ்டிரியர்களின் காலத்திலிருந்தே மதிப்பற்றுக் கிடந்தது. அரசியலில் தீவிரமாகப் பங்குகொள்ளும் அளவுக்குப் பாராளுமன்றமும் பக்குவத்தைப் பெற்றிருக்கவில்லை. அந் நிலையில் சர்வ வல்லமை பொருந்திய முடியாட்சியை ஏற்படுத்துவதற்கு ஏழாம் ஹென்றிக்குச் சிரமமெதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

அரசர் செய்யும் காரியங்களுக்கு உறுதுணையாக விசுவாச வகுப்பு அப்போது இங்கிலாந்தில் தோன்றியது. இலாபகரமான அயல்நாட்டு வியாபாரத்தில் பெரும் பொருளீட்டிச் சமுதாயத்தில் செல்வாக்கைப் பெற்றிருந்த நடுத்தர வகுப்பினர் (middle class), தங்களின் வர்த்தகம் மேலும் செழித்து, ஒரே நிலையில் இருக்கவேண்டுமென்றால், நாட்டில் நல்ல சீரான நிர்வாகம் இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதை ஏற்படுத்த வல்ல அரசரின் கைகளைப் பயன்படுத்த முன்வந்தனர். பல நூற்றாண்டுகளாகப் பதவியும், செல்வாக்கும் பெற்றுத் தங்களின் சுய நலத்தால் அரசியலில் அடிக்கடி பல சிக்கல்களை உண்டாக்கி வந்த பிரபுத்துவத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றால் தமக்கும் ஒரு புதிய விசுவாசக் குடியின் ஆதரவு தேவையென அரசரும் உணர்ந்திருந்தார்.

ஹென்றியும் நீதி நிர்வாகமும்

நாட்டிலே, பிரபுக்களாலும் மற்றத் தீயவர்களாலும் அராஜகம் ஏற்பட வொட்டாமல் தடுக்க ஏழாம் ஹென்றி 'விண் மீன் மன்றம்' (Star Chamber) என்ற ஒரு புதிய நீதி மன்றத்தினை அமைத்தார். அம் மன்றம் கூடிய இடத்தில் அதன் அடையாளச் சின்னமாக விண் மீன் பொறிக்கப்பட்டிருந்ததால் அதற்கு அப் பெயர் கிடைத்தது. அம் மன்றத்தில் அரசரின் ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த சிலரும் இடம் பெற்றனர். ஏழை எளியோர்களை வலியோரின் கொடுமையினின்று காத்து அம் மன்றம் நாட்டிலே சட்டத்தை வலியுறுத்தி அமைதியைக் காத்தது. அது மட்டுமன்றி, நாட்டின் மற்றப் பொது நீதி மன்றங்கள் (Common law courts) அச்சமற்ற சூழ் நிலையில் சிறப்பாகச் செயல்படவும்

அம் மன்றம் பாதுகாப்பளித்தது. மேலும், ஆற்றலும், செல்வாக்கும் பெற்றவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கச் சாதாரணமாகத் தயங்கும் தீர்ப்புச் சான்றோர் குழுவினரும் (Jury) வழக்கினை உண்மைக்கு மாறுக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கினால், விண்மீன் மன்றத்திற்கு முன்னர் அதற்குக் காரணம் கூற வேண்டுமே என்ற பயத்தில் நியாயமான தீர்ப்பையே வழங்கினர்.

சட்ட ஒழுங்கினத்தால் அடிக்கடி நிர்வாகக் குலைவு ஏற்பட்டு வந்த வட இங்கிலாந்திலும், வேல்ஸ் பகுதியிலும் சட்டங்களை நிறைவேற்றும் நீதி நிர்வாக அமைப்பை அமூலாக்க மற்ற இரு சிறப்புரிமை மன்றங்களை (Prerogative Courts) ஹென்றி அமைத்தார். வட இங்கிலாந்தில் அமைக்கப்பட்டதை வட நீதி மன்றமென்றும் (Council of North) வேல்ஸில் அமைக்கப்பட்டதை வேல்ஸ் நீதி மன்றமென்றும் (Council of Wales) அழைக்கலாயினர்.

அரசரின் ஊழியர்களுக்குப் பேராதரவு கொடுக்க, வேண்டுகோள் மன்றம் (Court of request), கடற்படை மன்றம், திருச்சபை மன்றம் (Ecclesiastical court of High commission) ஆகிய வைகளையும் அரசர் ஏற்படுத்தினர்.

ஏழாம் ஹென்றியும் வர்த்தகமும்

நாடு பலமுள்ளதாக அமைய வேண்டுமெனில், அதனுடைய வளமும், வர்த்தகமும் பெருகவேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்திருந்த ஏழாம் ஹென்றி, வியாபாரிகளின் நலன்களைப் பாதுகாத்து, வர்த்தகத்தைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டார்.

அதுவரை கம்பளி, மற்றத் துணி வகைகளே இங்கிலாந்திலிருந்து பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த முக்கிய வியாபாரப் பொருள்களாக இருந்தன. அப் பொருள்கள் அயல்நாட்டு வியாபாரிகளால் அயல்நாட்டுக் கப்பல்களிலேயே இங்கிலாந்திலிருந்து ஏற்றி அனுப்பப்பட்டன. ஆக ஏற்றுமதிக்குப் பிரதானத் தொழிலாக இருந்த ஆடைத் தொழிலையும், அவற்றை அயல் நாட்டுச் சந்தைகளுக்கு ஆங்கிலக் கப்பல்களில் ஏற்றி அனுப்ப வேண்டி, அதற்காகக் கப்பல் கட்டும் தொழிலையும் ஏழாம் எட்வர்டு ஊக்குவித்தார்.

இங்கிலாந்தின் வர்த்தக நாவாய்களை ஊக்கமளிக்கக் கடமைப்பட்டிருந்த அரசர் கி. பி. 1485 ஆம் ஆண்டில் ஒரு நாவாய்ச் சட்டத்தை (Navigation Act) இயற்றினர். அதன்படி ஃபிரான்சிலிருந்து வரும், மது (ஒயின்) ஆங்கில வியாபாரக் கப்பல்களிலேயே ஏற்றி அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

வடகடல், பால்டிக் கடற்கரையோரத் துறைமுகங்களுடன் ஆங்கிலக் கப்பல்களுக்கு நேரடியான தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்க, டென்மார்க் போன்ற நாடுகளோடு ஏழாம் ஹென்றி வியாபார ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டார். அதனால் அப் பகுதிகளில் வியாபார ஏகபோக உரிமை கொண்டிருந்த ஜெர்மானியப் பட்டணங்களின் அன்சா வியாபாரச் சங்கத்தின் (Hansa League) செல்வாக்குப் பாதிக்கப்பட்டது.

வெனிஸ் (Venice), ஜெனோவா (Genoa) ஆகிய இத்தாலியப் பட்டணங்களின் நாவாய்களே மத்திய தரைக்கடல் நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு வியாபாரப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்தன. அந் நிலையை மாற்ற ஹென்றி இத்தாலிய நண்பர்களோடு உடன்பாடு செய்துகொண்டு அதன் துறைமுகங்களுக்கு ஆங்கிலக் கப்பல்களை அனுப்பிவைத்தார்.

தாங்கள் நினைத்த இடத்திற்குப் பொருள்களை ஏற்றிச்செல்ல ஆங்கில வியாபாரக் கப்பல்களுக்கு உரிமையும், வாய்ப்பும் கிடைத்திருக்க, அது இங்கிலாந்து வியாபாரத்திற்கு அதுவரை கிடைக்காத பெருமையாக இருந்தது. அதற்குமுன் எக் காலத்திலும் இங்கிலாந்தில் கட்டப்பட்டிராத வலுவான, நீளமான நாவாய்களை, ஏழாம் ஹென்றி தம் சொந்தச் செலவிலேயே நீண்ட தூரக் கடல்வழிப் பிரயாணங்களுக்கு ஏற்றவாறு கட்டவைத்தார். அவர் தொடங்கிய அப் பெரும்பணி, பிற்காலத்தில் இங்கிலாந்து சிறந்த கப்பற் படையொன்றைப் பெறுதற்கு வித்திடுவதாக அமைந்தது.

ஐரோப்பிய நாடுகளில் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டு வந்த கம்பளிக்கு நல்ல கிராக்கி இருந்தது. அங்ஙனம், இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதப்படுத்தாத கம்பளி ஆங்கிலேயர்களுக்கு நல்ல வாணிக வளத்தினை அளித்துவந்ததால் அத் தொழிலுக்கு உள்நாட்டுச் சிக்கல்களாலும், அயல்நாட்டுத் தடைகளாலும் எவ்விதத் தொல்லையும் நேராத வண்ணமும் ஏழாம் எட்வர்டு சிரமமெடுத்துக் கொண்டார். 1496 ஆம் ஆண்டில் ஃபிரான்சுடன் செய்துகொண்ட ஒரு வர்த்தக உடன்பாட்டின்மூலம் இங்கிலாந்திலிருந்து துணிகள் ஃபிளான்டர்சில் எவ்வித அனுமதிச் சீட்டும் இன்றி, இறக்குமதி செய்வதற்காகத் தனிச் சலுகையை ஏழாம் ஹென்றி பெற்றுக் கொடுத்தார்.

துணித் தயாரிப்பிலும், கப்பல் கட்டுவதிலும் இங்கிலாந்தை ஏழாம் ஹென்றி தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றியது மட்டுமேயன்றி, உள்நாட்டுத் தொழிலுக்கு எவ்விதப் போட்டியும்

இல்லாதிருக்க அயல் நாட்டிலிருந்து வரும் இறக்குமதியைக் குறைத்தும், தம் நாட்டின் வியாபரம் செழிக்க வேண்டுமென உள்நாட்டு ஏற்றுமதியை அதிகரித்தும், பிற்காலத்தில் மெர்கண்டைல் முறை (Mercantile System) என்று அழைக்கப்பட்ட ஓர் வியாபார வழியை அவர் உட்புகுத்தினர்.

அயல்நாட்டுக் கொள்கை

உள்நாட்டுக் குழப்பங்களால், அமைதியின்றி இருந்த அயர்லாந்தை ஏழாம் ஹென்றி தம் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் அதிகாரத்தின்கீழ் முழுவதுமாகக் கொண்டுவந்திருந்தார். ஆங்கிலேயரின் ஆட்சியும், ஆதிக்கமும் அங்கு நன்கு வேரூன்ற வேண்டுமென நினைத்துத் தம் பிரிவி கவுன்சிலின் அங்கத்தினர்களில் ஒருவரான சர் எட்வர்டு பாய்னிங்ஸ் (Sir Edward Poynings) என்பவரை அயர்லாந்துக்கு அனுப்பிவைத்து, அவர் வாயிலாகச் சில சட்டங்களை நிறைவேற்றினார். அச் சட்டங்களின் தொகுப்பே 'பாய்னிங்ஸ் சட்டம்' என அழைக்கப்பட்டது (1494).

அரசின் அநுமதியின்றி ஐரிஷ் பாராளுமன்றம் கட்டப்படுவதையும், அரசருடன் ஆலோசிக்காமல் அம் மன்றம் எந்த வொரு மசோதாவையும் கொண்டுவருவதையும் அச் சட்டம் தடுத்தது; மேலும், ஐரிஷ் பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்படும் எந்தச் சட்டத்தையும் தள்ளி வைக்கும் உரிமையை அச் சட்டம் ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு வழங்கியது.

அடுத்துவரும் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்கள் தங்களின் கெடுபிடி ஆட்சியை நடத்துவதற்கும், ஆங்கிலோ - ஐரிஷ் உறவில் சிக்கல்கள் ஏற்படுவதற்கும் 'பாய்னிங்ஸ் சட்டம்' இடம் அளித்ததெனினும், ஏழாம் ஹென்றியின் காலத்தில் அயர்லாந்தில் இங்கிலாந்தின் பிடி இறுகியது.

ஃபிரான்சுக்கு மேற்கே சுதந்தரக் கோமகன் ஆட்சியின்கீழ் இருந்துவந்த பிரிட்டானி (Brittany) என்ற பகுதியை ஃபிரெஞ்சு அரசர் எட்டாம் சார்லஸ் (Charles VIII) தாக்கி, கைப்பற்ற முயற்சி செய்துகொண்டிருந்தபோது. பிரிட்டானியின் சுதந்தரத்தைக் காக்கும் வகையில், பாராளுமன்றம் தமக்குப் போருக்காகக் கொடுத்திருந்த பெரும் பணத்தில் படையைத் திரட்டிக்கொண்டு, ஏழாம் ஹென்றி ஃபிரான்சை அடைந்தார். பூலோன (Boulogne) என்னும் ஃபிரெஞ்சு நகரை ஏழாம் ஹென்றி முற்றுகையிட்டு வந்தபோது, ஃபிரெஞ்சு அரசர் எட்டாம் சார்லஸ் பெரும் பணத்தொகை யொன்றை ஆங்கில அரசருக்கு அளித்து இங்கிலாந்துக்குத் திரும்பச் செய்துவிட்டார் (1492).

அந்த ஒரு நிகழ்ச்சியைத் தவிர இவர் காலத்தில் எப் போரிலும் இங்கிலாந்து கலந்துகொள்ளவில்லை. அப்போது இத்தாலியில் (Italy) ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும், ஸ்பானியர்களுக்கும் நடந்து வந்த ஆதிக்கப் போட்டிப் போரில், ஏழாம் ஹென்றி, கலந்து கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தார்.

இங்கிலாந்துக்கு அடிக்கடி தொல்லைகளைக் கொடுத்துவந்த அண்டை நாடான ஸ்காட்லாந்துடன் அமைதியான உறவை ஏற்படுத்திக்கொள்ளவேண்டி, தம் மூத்த மகளான மார்கரெட் (Margaret) என்பவளை ஸ்காட்டிய அரசர் நான்காம் ஜேம்சுக்கு (James IV) ஏழாம் ஹென்றி மணமுடித்துக் கொடுத்தார் (1502). கன்னியரசி காலமானதைத் தொடர்ந்து, ஸ்காட்டிய அரசர் ஆறும் ஜேம்ஸ் (James VI) இங்கிலாந்தின் மகுடத்தைப் பெற்று, ஸ்டுவர்டுகளின் (Stuarts) ஆட்சிக்காலத்தைத் தொடங்கி வைத்ததற்கு, இந்த அரசியல் திருமணமே காரணமானது (1603).

ஐரோப்பாவில், வல்லரசு என்ற நிலையைப் பெற்றுவந்த நாடுகளில் ஸ்பெயின் (Spain) குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அந்த நாட்டுடனும், நெருங்கிய அரசியல் உறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டி, தம் மூத்தமகன் ஆர்தரை (Prince Arthur) ஸ்பானிய இளவரசி காதரினுக்கு (Catherine) ஏழாம் ஹென்றி மணமுடித்து வைத்தார் (1501). இங்கிலாந்தில் அடுத்த வாரிசான எட்டாம் ஹென்றியின் காலத்தில் இத் திருமணமும் சமயப் புரட்சிக்கு (Reformation) முக்கியக் காரணமாக அமைந்தது. இங்ஙனமாகப் பல சிறப்புகளுக்குக் காரணகர்த்தராக இருந்த ஏழாம் ஹென்றி கி.பி. 1509ஆம் ஆண்டில் காலமானார்.

எட்டாம் ஹென்றி (1509 - 1547)

தம் மூத்த சகோதரர் ஆர்தர் 1501ஆம் ஆண்டிலேயே காலமாகிவிட்டதால், தம் தந்தைக்குப் பிறகு பதினெட்டு வயது நிரம்பியிருந்த எட்டாம் ஹென்றி அரச கட்டிலில் ஏறும் தகுதியினைப் பெற்றார்.

விட்டுக் கொடுக்காத மனப்பான்மையினையும் மூர்க்கத்தனத்தையும் கொண்டிருந்த எட்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் டியூடர்களின் வல்லாட்சி மேலும் பலப்படுத்தப்பட்டது. தமக்கெதிராகச் சதி செய்பவர்களின் கதி என்னவாக இருக்குமென மற்றவர்களுக்கு உணர்த்தும் வகையில், தாம் பட்டம் சூட்டிக் கொண்ட அதே நாளில் தம் நம்பிக்கைக்கு உகந்தவர்களாக இல்லாதிருந்த எம்ப்சன் (Empson), டட்லி (Dudley) என்ற இரு அமைச்சர்களைக் கொலைக்களத்திற்கு அனுப்பினார். பிற்காலத்தில்

அவரால் மரணதண்டனை விதிக்கப்பட்ட நபர்களின் நீண்ட பட்டியலுக்கு அக் கொலைகள் முத்தாய்ப்பு வைத்தன.

அரசியல் காரணங்களுக்காகவும், ஸ்பானிய அரசரால் கொடுக்கப்படுவதாக இருந்த சீனத் தொகையை இழக்க மனமில்லாதவராகவும் தம் மூத்தமகன் ஆர்தர் இறந்துபோனதைத் தொடர்ந்து, விதவையாகிவிட்ட ஸ்பானிய இளவரசி காதரீனைத் தம் இளைய மகனுக்கு மணமுடிக்க, கி.பி. 1503ஆம் ஆண்டில் ஏழாம் ஹென்றி ஏற்பாடொன்றைச் செய்துமுடித்தார். அதை மீற மனமில்லாமல் எட்டாம் ஹென்றி தாம் பட்டத்திற்கு வந்த சில மாதங்களுக்குள்ளாகவே காதரீனை மணந்து கொண்டார். இத் திருமணம் எங்ஙனம் சில ஆண்டுகள் கழித்து, இங்கிலாந்தில் சமயப் புரட்சி தோன்றுவதற்கான காரணத்தைக் கொடுத்தது என்பதை அடுத்த பிரிவில் பார்ப்போம்.

ஹென்றியின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் சமயப் புரட்சி முக்கியத்துவம் பெறுகின்றதெனின், முற்பகுதியில் (1509 - 29) அவரின் வெளிநாட்டுக் கொள்கை நம் கவனத்தைக் கவருகின்றது.

ஹென்றியின் வெளிநாட்டுக் கொள்கைக்கு உறுதுணையாகத் தாமஸ் உல்சி (Thomas Wolsey) என்பவர் இருந்தார். ஆக்ஸ்ஃபோர்டு பட்டதாரியான உல்சி 1515ஆம் ஆண்டு அரசரால் சான்சலர் பதவியில் அமர்த்தப்பட்டார். யார்க் ஆர்ச்பிஷப் (Archibishop of York) ஏற்கெனவே திருச்சபை விவகாரங்களில் அநுபவம் பெற்றிருந்தாலும், அரசரின் அந்தரங்க அமைச்சராக இருந்து வந்தாலும், ஹென்றியின் நட்பைப் பெறவிரும்பிய போப்பாண்டவர் பத்தாம் லியோ (Leo X) உல்சியை கார்டினலாகவும் (Cardinal) அறிவித்திருந்தார். பதவியாசை கொண்டிருந்த கார்டினல் உல்சிக்குத் தாம் எப்படியும் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற அடங்காத ஆசை யிருந்தது. ஆகவே, கார்டினல் என்ற முறையில் அடிக்கடி இங்கிலாந்தின் சார்பில் ஐரோப்பிய விவகாரங்களில் தலையிட்டுத் தம் செல்வாக்கையும், பெருமையையும் உல்சி வளர்த்துக்கொள்ள விரும்பினார். உல்சியின் திறமையில் அபார நம்பிக்கை வைத்திருந்த எட்டாம் ஹென்றியும் தம் சான்சலரின் விருப்பத்திற்கேற்ப வெளிநாட்டுக் கொள்கையை அமைத்தார்.

ஹென்றியின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியத்தன்மை என்னவென்றால், எந்த ஐரோப்பிய அரசும் அமோக பலம் பெறக் கூடாதென்பதே. அஃதாவது, ஃபிரான்சு, ஸ்பெயின், ஆஸ்திரியா போன்ற ஐரோப்பிய அரசுகளுக்கிடையே சக்தி சமநிலை (Balance

of Power) காக்கப்படவேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் ஃபிரான்சுக்கும், ஸ்பெயினுக்கும் இத்தாலியில் அப்போது நடந்துவந்த போரை நீடிக்கச் செய்து அந் நாடுகளின் கவனம் போரில் இருக்க, ஐரோப்பாவில் இங்கிலாந்துக்குப் பகுதிகளைத் தேடிக் கொள்வதே ஹென்றியின் எண்ணமாகும். ஐம்பத்திரண்டு வயது நிரம்பியிருந்த ஃபிரெஞ்சு அரசர் லூயிக்குத் தம் பதினெட்டு வயதுத் தங்கை மேரியை மணமுடித்துவைத்து (1515) எட்டாம் ஹென்றி தம் ஐரோப்பிய அரசியல் சூதாட்டத்தைத் தொடங்கினர். ஆயின், சில நாள்களுக்குள்ளாகவே ஃபிரெஞ்சு அரசர் காலமானது மட்டுமன்றித் தம் மாமனரும் ஸ்பானிய அரசருமான ஃபெர்டினண்டும் (Ferdinand) காலமாகிவிடவே, அவ் விரு நாடுகளில் முறையே முதலாம் ஃபிரான்சிஸ் (Francis I) ஐந்தாம் சார்லஸ் (Charles V) ஆட்சிப் பதவிகளைப் பெற்றனர். எட்டாம் ஹென்றியும், உல்சியும் அவ் விரு அரசர்களுடனேயே தங்களின் ராஜ தந்திரக் கைவரிசையைக் காட்ட வேண்டியிருந்தது.

கி.பி. 1520ஆம் ஆண்டில் உல்சி தம் எசமானர் எட்டாம் ஹென்றிக்கும் ஃபிரெஞ்சு மன்னர் முதலாம் ஃபிரான்சிசுக்குமிடையே ஒரு சந்திப்பை குஸ்னி (Guisne) என்ற இடத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார். ஆயின், எட்டாம் ஹென்றிக்குப் ஃபிரான்சின் நட்பைவிட ஐந்தாம் சார்லசின் நட்பே தேவையாக இருந்தது. ஸ்பெயின், ஸ்பானிய், அமெரிக்கா, இத்தாலியப் பகுதிகள், நெதர்லாந்து, பர்கண்டி, ஆஸ்திரியா, ஜெர்மனி போன்ற பகுதிகளுக்குப் பேரரசாக வல்லமை பெற்றிருந்த ஐந்தாம் சார்லசின் நட்பே தமக்கு நன்மை பயக்கத்தக்கது என்று உணர்ந்து, எட்டாம் ஹென்றி அவ் வரசருடன் இரகசிய உடன்பாட்டைச் செய்துகொண்டு ஃபிரான்சுக் கெதிராகப் போரில் குதித்தார்.

இத்தாலியில் ஃபிரான்சுக்கும் ஐந்தாம் சார்லசுக்கும் போர் நடந்து கொண்டிருக்க, உல்சியின் யோசனையின்பேரில் தம் படைகளை எட்டாம் ஹென்றி ஃபிரான்சைத் தாக்க அனுப்பினர். நூற்றாண்டுப் போரின் இறுதியில் இங்கிலாந்து இழந்து விட்ட ஃபிரான்சுப் பகுதிகளை மீண்டும் பெற்றுவிடலாமென எட்டாம் ஹென்றி நினைத்திருக்கலாம். ஆயின், அப் படையெடுப்பு எதிர்பார்த்த பலனைக் கொடுக்காததால், அரசரை நேரிடையாகத் தாக்கத் துணிவில்லாத பாராளுமன்றம் உல்சியைக் கண்டித்து கி.பி. 1525ஆம் ஆண்டு பேவியா (Pavia) சண்டையில் ஃபிரான்சிஸ் தோற்கடிக்கப்பட்டு ஐந்தாம் சார்லசால் சிறை பிடிக்கப்பட்டபோது அச் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக்

கொண்டு மீண்டும் ஃபிரான்சிஸ்மீது போர் தொடுக்க எட்டாம் ஹென்றியும் அவரின் சான்சலரான உல்சியும் திட்டமிட்டனர். ஆயின், போர்ச் செலவுக்கான பணத்தைப் பாராளுமன்றம் கொடுக்கத் தயங்கிய அந்த நிலையில் அத் திட்டம் கைவிடப்பட்டது. அதற்கிடையே ஃபிரான்சிஸ் நிபந்தனையுடன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். இங்கிலாந்துடன் நட்புறவை வைத்துக் கொண்டாலொழிய, சார்லசின் பலத்தை ஒடுக்க முடியாதென நினைத்த ஃபிரான்சிஸ் நிறையப் பணம் கொடுத்து, எட்டாம் ஹென்றியுடன் சமரசம் செய்து கொண்டார். எட்டாம் ஹென்றிக்கும், உல்சிக்கும் ஃபிரான்சிஸ் உறவு எப்போதும் வரவேற்கத் தக்கதாகவே இருந்தது.

இத்தாலியப் போரில் சார்லஸ் இறுதியாகப் பெரு வெற்றி பெற்றிருந்ததால் ஐரோப்பிய சக்தி - சமநிலை பாதிக்கப்பட்டிருந்தது. ஸ்பானிய அரசு மேற்கொண்டு பெரு வெற்றிகளைப் பெறுமானால், அது இங்கிலாந்தின் நலன்களைப் பாதிக்கக் கூடியதாக இருக்குமென்ற அச்சத்தில் எட்டாம் ஹென்றி சார்லசைக் கைவிட முடிவு செய்தார்.

போப்பாண்டவர் பதவிக்கு கிளமென்டு (Clement) என்ற மெடிசி கார்டினலுக்குத் தம் ஆதரவைக் கொடுத்து ஐந்தாம் சார்லஸ் அவரையே தேர்ந்தெடுக்கச் செய்திருந்தார். போப் பாண்டவர் பதவியில் நாட்டம் கொண்டிருந்த உல்சிக்கு அது ஏமாற்றமாக இருந்தது. ஆகவே, அவரும் அரசர் ஹென்றி ஃபிரான்சிசிடம் கொண்ட நட்பை வரவேற்றார்.

எட்டாம் ஹென்றி ஃபிரான்சிசுடன் சமாதானம் செய்து கொண்டதால் ஐந்தாம் சார்லசின் வெற்றிக்கு எவ்வித முட்டுக் கட்டையும் ஏற்படவில்லை. நிலையற்ற வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி, அவசியமற்ற போர்களில் கலந்து கொண்டதால் இங்கிலாந்துக்குப் பண விரயமானதே விளைவாக இருந்தது. எட்டாம் ஹென்றி தம் வெளிநாட்டுக் கொள்கையில் சிறப்பு எதுவும் பெறவில்லை யென்றாலும், எதிர்காலத்தில் இங்கிலாந்து கப்பற்படைப் பலம் பெற்ற நாடாக விளங்கப் போவதற்கேற்பப் போர்க் கப்பல்களைக் கட்டுவதில் ஆர்வம் காட்டினார். 1,500 டன் எடை உள்ள மகா ஏர்ரி (Great Harry) உட்பட இவர் காலத்தில் ஐம்பத்தைந்து (55) போர்க் கப்பல்கள் கட்டப் பட்டன.

1545ஆம் ஆண்டு இங்கிலாந்துமீது ஏவி விடப்பட்ட ஃபிரெஞ்சுக் கப்பற்படையை நொறுக்கிய பெருமை ஆங்கிலக்

கப்பற்படை பெற்றதென்றுல் அதற்கு எட்டாம் ஹென்றியின் முன்யோசனையே காரணம் ஆகும்.

இத்தாலியில் ஃபிரான்சின் ஊடுருவலைத் தடுக்கப் போப்பாண்டவர் இரண்டாம் ஜூலியஸ் (Julius II) கி.பி. 1511-ல் ஸ்பெயினுடன் சேர்ந்து புனிதக் கூட்டை (Holy League) அமைத்தபோது, ஹென்றியும் அதில் கலந்துகொண்டார்.

முதல் முறை நடந்த படையெடுப்பில் (1511) காஸ்கனிப் பகுதியை மீண்டும் பெறலாமென்ற முயற்சி தோல்வியில் முடிந்தது. இரண்டாண்டுகள் கழித்து, அரசரே தலைமை தாங்கி, கலே (Calais) நகரில் தம் படைகளுடன் இறங்கினர். அதிகம் குறிப்பிடத்தக்க பலன் எதுவும் கிடைக்கவில்லை. அரசர் ஹென்றி இங்கிலாந்தில் இல்லாதிருந்த சமயத்தில் ஸ்காட்டிய மன்னர் நான்காம் ஜேம்ஸ் படையெடுத்து வந்து ஃபிளோடன் (Flodden - 1513) சண்டையில் தோல்வியுற்று மாண்டார். இவைகளே, எட்டாம் ஹென்றியின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாகும்.

எலிஸபத் காலத்தில் இங்கிலாந்து கடல் வலிமை பெற்ற நாடாக இருந்ததென்றுல் அப் பெருமைக்கு வித்திட்டவராக எட்டாம் ஹென்றி அமைகிறார்.

(ஆ) இங்கிலாந்தில் சமயப் புரட்சி
(The Reformation)

கத்தோலிக்கத் திருச்சபையில் காணப்பட்ட ஊழல்களையும் குறைபாடுகளையும் களைந்தெறிய, 14ஆம் நூற்றுண்டில் ஜான் விக்லிஃப்பும், அவருடைய லாலார்டுகளும் முயன்றபோது, திருச்சபை தன் சீர்கேடுகளைக் களைந்துகொள்ள மறுத்தது. இருப்பினும் லாலார்டுகளின் சேவை வீண்போகவில்லை. 16ஆம் நூற்றுண்டில் அவர்களின் குரல்கள் சமயப் புரட்சியாக எதிரொலித்தன.

மறுமலர்ச்சியின் விளைவாக அறிவு விரிவு பெற்றிருந்த ஐரோப்பா, தானுகத் திருந்திக்கொள்ள மறுத்த கத்தோலிக்கச் திருச்சபையினைத் திருத்திக்கொள்ளக் கட்டாயப்படுத்தியது. அந்த முயற்சியின் முதல் கட்டமாக அமைந்ததே சமயப் புரட்சியாகும்.

சமயச் சீர்திருத்தக் கருத்துகளில் மனம் ஒன்றியிருந்த மார்டின் லூதர் (Martin Luther) என்ற ஜெர்மனியர் (1484 – 1546)

விட்டன்பர்க் ஆலயக் கதவுகளில் திருச்சபையின் கோட்பாடுகளுக் கெதிராக 95 கூற்றுகளை எழுதி ஒட்டிய நேரத்திலிருந்து (கி.பி. 1517) தாம் சொன்னது, செய்தது அத்தனையும் சரி என்று ஓர்ம்ஸ் (Diet of Worms) மகாநாட்டில் (1521) வாதம் செய்த வரையி லான நிகழ்ச்சிகள், சமயப் புரட்சிக்கான நடப்பாக ஜெர்மனியில் அமைந்தன. ஆக்ஸ்பர்க் மாநாட்டுக்கு (1530)ப் பின்னர், கத் தோலிக்க சமயத்தை எதிர்த்த லூதரின் சீடர்களுக்கும் அவ ரைப் பின்பற்றியவர்களுக்கும் பிராடஸ்டென்ட் (எதிர்ப்பாளர் கள்) என்பது பெயராயிற்று. லூதரின் வழியை உல்ரிக் சுவிங்கிலி (Ulrich Zwingli) என்பவரும், ஃபிரெஞ்சுக்காரரான ஜான் கால் வின் (John Calvin) என்பவரும் பின்பற்றிச் சமயச் சீர்திருத்தப் பணியைத் தொடர்ந்து வந்தார்கள். மார்டின் லூதரால் மூட்டப் பட்ட சமயச் சீர்த்திருத்தத் தீ கிருத்துவ சமயத்தை இரண்டாகப் பிளந்து கொண்டிருந்த நேரத்தில், எட்டாம் ஹென்றி (1509 - 1547) என்ற டியூடர் அரசரால் இங்கிலாந்து ஆளப்பட்டு வந்தது.

லூதரின் கொள்கைகளையோ, மற்ற எதிர்ப்புக் கொள்கை களையோ, மன்னர் எட்டாம் ஹென்றி ஏற்றுக் கொள்ளவில்லை. லூதரின் சமயக் கொள்கைகளை எதிர்த்து நூலெழுதிப் போப்பாண் டவருக்குச் சமர்ப்பித்து, அதற்காக அவரிடமிருந்து 'சமயத்தின் காவலர்' என்ற பட்டப் பெயரையும் ஹென்றி கி.பி. 1542-ல் பெற்றிருந்தார். இருப்பினும், இவ் வரசர் காலத்திலேயே இங் கிலாந்தில் சமயப் புரட்சி தோன்றியது. 1521-ல் சமயப் பாரகர் (Defender of the Faith) எனப் பட்டம் பெற்றிருந்த எட்டாம் ஹென்றி கி.பி. 1534-ல் சமயப் பாதகர் என்று திருச்சபையின் நிந்தனைக்கு ஆளானார். அதற்கு முக்கியக் காரணமாக அரசரின் விவாக ரத்துப் பிரச்சினையே அமைந்தது.

இங்கிலாந்தில் சமயப் புரட்சி தோன்றியதற்கு அரசரின் விவாக ரத்துமட்டுமின்றி வேறு சில துணைக் காரணங்களும் இருந்தன.

எட்டாம் ஹென்றியின் காலம்

தேசிய உணர்வு வளர்ந்துகொண்டு வந்த 16ஆம் நூற்றாண் டில், மதத்தின் பெயரால் தங்கள் நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டுவந்த போப்பாண்டவர்களின் ஆதிக்கத்தை மக்கள் உள்ளூர வெறுத்து வந்தனர். தங்கள் நாட்டின் ஆக்க வேலை களுக்குப் பயன்படவேண்டிய வரிப்பணத்தைச் சமயத்தின் பெய ரால் அன்னேட்ஸ் பணமாகவும் (Annates - கிருத்துவமதத் தலைவ ரின் முதலாண்டு வரும்படி) குருமார்களின் பங்குப் பணமாகவும்,

ரோம் அபகரித்துச் சென்றதையும் மக்கள் மனத்திற்குள் எண்ணிப் புழுங்கினர்.

திருச்சபையில் மலிந்திருந்த ஊழல்களும் மதக் கோட்பாடுகளை மறந்திருந்த போப்பாண்டவர்களின் வாழ்க்கையும் குருமார்களின் ஒழுங்கீனச் செயல்களும் மடாலயங்களின் சீர் கெட்டிருந்த நிலையும், மன்னிப்புச் சீட்டுச்சலுகை காட்டல் போன்ற (அறிவுக்குப் பேதைமையான, புறம்பான) போதனைகளும், குருமார்களின் உரிமை (Benefit of the clergy) என்ற அநீதியும், கத்தோலிக்கத் திருச்சபையின்மீது மக்களுக்கு வெறுப்பைக் கொடுத்து வந்தது. மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாகத் தோன்றிய துருவிப் பார்க்கும் அறிவு வேதப் புத்தகத்தில் இல்லாததையும் சொல்லாததையும் ஏற்க மறுக்கும்படி மக்களைத் தூண்டியது. இதற்கிடையே, ஜெர்மனியில் மார்டின் லூதரால் தொடங்கப்பட்ட சமயப் புரட்சி, ஆங்கில மக்களின் கவனத்தை ஈர்த்தது.

மன்னர் எட்டாம் ஹென்றி ஆரம்பத்தில் சமயப் புரட்சியை ஆதரிக்கவில்லை யெனினும் இங்கிலாந்தில் ஒரு சில அறிஞர்களால் அது வரவேற்கப்பட்டது. லாடிமார் (Latimer), கவர்டேல் (Coverdale) போன்ற கேம்பிரிட்ஜ் மேதைகள் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை அகற்றவேண்டுமெனக் குரல் எழுப்பினர். டைன்டேல் என்ற எழுத்தாளர் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் வெளியிட்டு, சமயப் புரட்சிக்கான கருத்துகளைப் பரப்பினர்.

இங்ஙனம் சமயப் புரட்சிக்கான சூழ்நிலைகள் இங்கிலாந்தில் இலை மறை காய்போல் இருந்துவந்த அச் சமயத்திலேயே அரசரின் விவாகரத்துப் பிரச்சினை எழுந்தது.

எட்டாம் ஹென்றி தம் சகோதரரின் விதவையான காதரின் (Catherine) என்ற ஸ்பானிய இளவரசியை மணந்திருந்தார். பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்த அம் மண வாழ்க்கையின் பயனாக ஹென்றிக்கு ஏழு குழந்தைகள் பிறந்திருந்தும் மேரி என்னும் ஒரு பெண்ணைத்தவிர மற்றவர்கள் இளம்பிராயத்திலேயே இறந்து விட்டனர். அப்போதிருந்த அரசியல் சூழ்நிலையில் தமக்குப்பின் ஒரு பெண்ணரசி பட்டத்திற்கு வருவதை ஹென்றி விரும்பவில்லை. ஆண் மகப்பேறு வேண்டும் என்ற அவா, நாளுக்கு நாள் அரசருக்கு அதிகமாயிற்று. தமக்குக் காதரினிடம் மகப்பேறு இனி உண்டாகாது என்ற எண்ணமும் அரசருக்கு எழுந்தது. தாம் தம் சகோதரரின் விதவையை மணந்து கொண்டதாலேயே,

ஆண் மகவு கிட்டாத சாபக்கேடு இருந்ததாகவும் அவர் நம் பினர். உண்மையான காரணம் என்னவா யிருப்பினும் தாம் அரண்மனையில் சந்தித்த ஆன் பொலீன் (Anne Boleyn) என்ற அழகியை அரசர் காதலித்ததுமட்டுமன்றி, மணம் செய்து கொள்ளவும் விரும்பினர். ஆன் பொலீனை மணம் செய்து கொள்ளவேண்டுமெனில், காதரின் அரசியை விவாக ரத்து செய்யவேண்டும். ஆனால், கத்தோலிக்க சமயத்தின்படி போப் பாண்டவரின் உத்தரவும் அநுமதியுமில்லாமல் விவாக ரத்தைப் பெற முடியாது. தாம் காதரினை விவாக ரத்து செய்வதற்கான அநுமதியைக் கோரிப் போப்பாண்டவருக்கு எட்டாம் ஹென்றி விண்ணப்பம் செய்துகொண்டார்.

அதையும் முடிவு செய்ய முடியாத சிக்கலான சூழ் நிலையில் ஏழாம் கிளமென்ட் (Clement VII) என்ற போப்பாண்டவர் அப் போதிருந்தார். அரசி காதரின் அப்போது ஸ்பெயினுக்குப் பேரரச ராக இருந்த ஐந்தாம் சார்லசுக்கு அத்தை முறையினள் ஆவாள். விவாக ரத்தை அநுமதித்து அப் பேரரசின் கோபத்துக்கு கிள மென்ட் ஆளாக விரும்பவில்லை. இருப்பினும், ஹென்றியின் தொந்தரவைப் பொறுக்கமுடியாமல், விவாக ரத்து விவகா ரத்தை விசாரிக்க, ஆங்கிலேய கார்டினலான உல்ஸி (Wolsey), இத்தாலிய கார்டினலான காம்பெஜ்ஜியோ என்ற இருவர் கொண்ட குழுவைப் போப்பாண்டவர் அமைத்தார். ஆனால், அக் குழுவினர் முன்னிலையில் தம் வாதங்களை எடுத் துரைக்க அரசி காதரின் மறுத்ததோடல்லாமல், தாமும் போப் பாண்டவருக்கு விண்ணப்பம் செய்துகொண்டார். அதன் பிறகு இலண்டனில் கூடிய குழுவினர் விசாரணையை நிறுத்தவேண்டும் என்றும், ஹென்றியையும், காதரினையும் நேரில் வந்து விவகாரங் களை விளக்கும்படியும் போப்பாண்டவர் உத்தரவு பிறப்பித் தார்.

தமது நம்பிக்கைக்குப் பாத்திரமான உல்ஸி விசாரணைக் குழுவி லிருந்தமையால் வழக்கு தமக்குச் சாதகமாக இருக்கு மென ஹென்றி நினைத்தார். ஆனால், அவ் வழக்குத் தமக்குச் சாதகமாக இல்லாததால் பெருத்த ஏமாற்றமடைந்த அரசர் அந் நிலைக்கு உல்ஸியே காரணமென நினைத்து அவரைச் சான்சலர் பதவியிலிருந்து நீக்கியது மட்டுமல்லாமல், இராசத் துரோகக் குற்றத்தையும் சாட்டினர். தம் காலமெல்லாம் விசுவாசத்துடன் உழைத்த உல்ஸி, தண்டனை பெறுவதற்கு முன்னரே காலமாகிவிட்டார். சாதகமான தீர்ப்பைக் கொடுக்கா மல், வழக்கை இழுக்கடித்து வந்த போப்பாண்டவரையும் பகைத்

துக்கொள்ள எட்டாம் ஹென்றி முடிவு எடுக்க, அதுவே இங்கிலாந்தில் தோன்றிய சமயப் புரட்சிக்கு இறுதியான காரணமாக இருந்தது.

ஹென்றியால் கூட்டப்பட்ட சமயப் புரட்சி பாராளுமன்றமே (The Reformation Parliament) (1529-1536) சமயப் புரட்சியின் முதல் கட்டமாக அமைந்தது. தம் விருப்பத்திற்கு அம்மன்றத்தை இணங்க வைத்துப் பல சட்டங்களை இயற்றிப் போப் பாண்டவரிடத்தில் ஹென்றி தமக்கிருந்த கோபத்தைக் காட்டிக் கொண்டார். குருமார்கள் அதுவரை அநுபவித்து வந்த உயில் நிரூபணக் கட்டணம், சாவுன் கட்டணம் போன்ற வருவாய் நிறுத்தப்பட்டது. அரசரின் அனுமதியில்லாமல், மானியம் அவர்களால் பெறுவதும் தடுக்கப்பட்டது. அரசின் சம்மதமில்லாமல் திருச்சபையின் சட்டங்கள் மாற்றப்படுவதும் நிறுத்தப்பட்டது. அதுவரை ரோமுக்கு அனுப்பப்பட்டு வந்த முதல் ஆண்டு வரும் படியும் (Annates) தடை செய்யப்பட்டது. போப்பாண்டவரின் பிரிதிநிதிகளுக் கடங்கி ஆங்கிலத் திருச்சபை இயங்கக் கூடாதென வும் சட்டம் கொண்டுவரப்பட்டது. பிஷப்புக்களை நியமிக்கும் அதிகாரமும் மன்னருக்குக் கிடைத்தது.

போப்பாண்டவரின் அதிகாரம் இங்கிலாந்தில் செல்லாத வகையில் இயற்றப்பட்ட அச் சட்டங்கள் திருச்சபையின் அதிகாரங்களைப் பறித்து மன்னருக்குக் கொடுத்தன. அச் சட்டங்கள் இயற்றித் தம் ஆத்திரத்தை வெளிப்படுத்திக்கொண்ட ஹென்றி, போப்பாண்டவரின் அனுமதியின்றியே ஆன் பொலீனை மணந்து கொள்ளவும் முடிவு செய்தார். தம் ஆலோசகரான தாமஸ் கிரான்மர் (Thomas Cranmer) என்பவரின் யோசனைப்படி, ஐரோப்பிய பல்கலைக் கழக அறிஞர்களின் கருத்துகளைச் சேகரித்து, கி.பி. 1533-ல் ஆன் பொலீனை மணந்துகொண்டு, அவளை இங்கிலாந்தின் அரசியாக அறிவித்தார். தம் நண்பரும் கான்டர்பரியின் ஆர்ச் பிஷப்புமான கிரான்மர் மூலமாகக் காதரினிடமிருந்து விவாகரத்தையும் பெற்றுக்கொண்டார்.

இதனால் வெகுண்ட போப்பாண்டவர் ஹென்றியை மதப் பிரஷ்டம் செய்ய முடிவெடுத்தார். அதற்குப் பதிலடி கொடுப்பதுபோல, கி.பி. 1533-ல் இங்கிலாந்திலிருந்து சமயத் தொடர்புள்ள வழக்குகள் எதுவும் போப்பாண்டவருக்கு அப்பீலாகக் கொண்டு செல்லலாகாது என்ற சட்டத்தைப் பாராளுமன்றம் மூலமாக ஹென்றி நிறைவேற்றினர். கி.பி. 1534-ல் இங்கிலாந்து திருச்சபையின்மீது போப்பாண்டவரின் ஆதிக்கம் செல்லுபடியாகாதென்ற சட்டமும் இயற்றப்பட்டது. அடுத்து எட்டாம்

ஹென்றியை ஆங்கிலத் திருச்சபையின் 'மாபெருந் தலைவர்' என்று அறிவித்த 'ஆதிக்கச் சட்டம்' (Act of Supremacy) கொண்டுவரப்பட்டது. அதை ஏற்க மறுத்தவர்களெல்லாம் அரசத் துரோகிகளாக அறிவிக்கப்பட்டனர். இறுதியாக ஹென்றி காதரீன விவாக ரத்து செய்ததையும் ஆன் பொலீன மணந்ததையும் சட்டப்படி பாராளுமன்றம் செல்லுபடியாக்கியது மட்டுமல்லாமல், மன்னருக்குப் பிறகு இங்கிலாந்தின் அரசுரிமை காதரின் மகளான மேரிக்கு ஆகாமல் அரசி ஆன் பொலீனின் மகளாகிய எலிஸபத்துக்கே ஆக வேண்டுமென 'வாரிசுரிமைச் சட்டம்' (Act of Succession) ஒன்றும் கி.பி. 1536-ல் கொண்டுவரப்பட்டது.

திருச்சபைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட சட்டங்களை எதிர்த்தவர்களும், ஆனின் திருமணத்தை ஒப்புக் கொள்ளாதவர்களும், மன்னரின் சமயத் தலைமையை மறுத்தவர்களும் கொடுமையாகக் கொல்லப்பட்டனர். அவர்களிலே ஜான் அக்டன் (Houghton), மோர் (More), ஃபிஷர் (Fisher), ஜான் ஹேல் (John Hale) போன்றவர்கள் சிலராவர்.

இங்கிலாந்து திருச்சபையைத் தம் விருப்பத்திற்கு அடிமைப்படுத்திக்கொண்ட ஹென்றியின் கவனம் அடுத்து அந்நாட்டிலிருந்த புனித மடாலயங்கள்மீது திரும்பியது.

பாராளுமன்றத்திலும் ஏற்கெனவே இயற்றப்பட்ட சட்டங்களை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளத் தயங்கிய மடாலயங்களின் அபரிமிதமான சொத்துகளை எப்படியும் அபகரித்துக்கொள்ள வேண்டுமென்னும் அவா, பண ஆசைபிடித்த ஹென்றிக்கு எழுந்தது. அதற்கேற்ப, அறம் செய்யும் நிலையங்களாகவும் கல்விக் கூடங்களாகவும் இருக்கவேண்டிய மடாலயங்கள் சேவையுணர்ச்சி இல்லாதவர்களின் மடங்களாக இருந்து வந்தன. தாம் நினைத்ததைச் செய்து முடிக்கத் துடித்த ஹென்றிக்கு மடாலயங்களின் சீர்கெட்ட நிலை நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. நாட்டிலுள்ள மடாலயங்கள் நல்ல முறையில் இயங்குகின்றனவா என ஆராயத் தாமஸ் கிராம்வெல் (Thomas Cromwell) என்ற விக்கர் ஜெனரலின்கீழ் ஒரு குழுவை நியமித்தார். அம் மடாலயங்கள் சீர்கெட்டு இருக்கின்றன என அக் குழு தன் அறிக்கையைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தது.

கி.பி. 1536-ல் அவ் வறிக்கையை ஏற்றுக்கொண்ட பாராளுமன்றம் கீழ்நிலை மடாலயங்களைக் கைப்பற்றியது. ஓர் ஆண்டுக்கு இருநூறு பவுனுக்கு மேற்படாமல் வருவாயுள்ள

மடாலயங்கள் ஒழிக்கப்பட்டன. இச் சட்டத்தால் அபகரிக்கப் பட்ட 376 மடாலயங்களின் மொத்தச் சொத்து மன்னருக்குச் சொந்தமானது.

மன்னரின் மடாலய அபகரிப்பை எதிர்த்து லிங்கன்ஷையரில் எழுந்த கலகம் அடக்கப்பட்டது. தொடர்ந்து 'அருள் யாத்திரை' (Pilgrimage of Grace) என அழைக்கப்பட்ட பயங்கரக் கலகம் யார்க்ஷையரில் தோன்றியது. இராபர்ட் ஆங்க் தலைமையில் நடந்த அக் கலகம் சில மடாலயங்களை விடுவித்து மடாதிபதி களிடம் ஒப்படைத்தது. அதனால், நார்போக் பிரபுவின் தலைமை யில் படையனுப்பி அக் கலகத்தை ஒடுக்கவேண்டிய அவசியம் அவருக்கு எழுந்தது. அக் கலகத்தின் தலைவர்களும், பன்னிரண்டு மடாதிபதிகளும் தண்டிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர்.

திருச்சபையின் அதிகாரங்களை அரசரின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற இறுதிவரை போராடி 1170-ல் கொல்லப்பட்ட தாமஸ் பெக்கட்டின் சமாதியும் ஹென்றியால் சேதமாக்கப் பட்டது எனின், அது அரசருக்குப் போப்பாண்டவர்மீதிருந்த வெறுப்பு இன்னும் குறையவில்லை என்பதைக் காட்டியது. கீழ் நிலை மடாலயங்களை (lesser monasteries) ஒழித்து அவைகளின் சொத்துகளைச் சூறையாடிய ஹென்றியின் கவனம் கி.பி. 1539-ல் மேல்நிலை மடாலயங்கள் (larger monasteries) மீது திரும்பியது. ஓராண்டிற்கு 1,60,000 பவுனுக்கு மேலாக வருவாயளித்த 600 மடாலயங்கள் அபகரிக்கப்பட்டன.

கவரப்பட்ட கீழ்நிலை, மேல்நிலை மடாலயங்களின் பல நிலச் சொத்துகள் செல்வர்களுக்கு விற்கப்பட்டன. அவ்விதம் சொத்துகளைப் பெற்ற அப் புதுப் பிரபுக்களின் (New Lords) இனம் அரசுக்கும் சமயப் புரட்சிக்கும் ஆதரவாக இருந்ததில் ஆச்சரியமில்லை. தமக்குப் பக்க பலமாகத் தம் நாட்டில் ஒரு புதிய வகுப்பை உருவாக்கிக்கொண்ட எட்டாம் ஹென்றியின் எதிர்ப்பு வெறி இன்னும் அதிகரிக்க ஆரம்பித்தது.

மைல்ஸ் கவர்டேல் (Miles Coverdales) என்பவரால் ஆங்கி லத்தில் வெளியிடப்பட்ட விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை ஒவ்வொரு திருக்கோயிலும் யாவரும் காணும்படியாக வைக்க வேண்டுமெனக் கி.பி. 1539-ல் சட்டம் கொண்டு வந்திருந்த ஹென்றி, இறுதியில் கத்தோலிக்க சமய நம்பிக்கைகளை ஆதரிக்கும் சட்டத்தையும் கி.பி. 1539-ல் கொண்டுவந்தது அவர் காலத்தில் சமயப் புரட்சியின் தன்மையை எடுத்துக் காட்டு கிறது. 'பொருள் மாற்றம்' (Transubstantiation) உள்படக்

கத்தோலிக்கர்கள் நம்பும் ஆறு கொள்கைகளை நம்பாதவர்கள் சுட்டெரிக்கப்பட்டுத் தண்டனையடைவர் என்ற பொருள்பட ஓர் ஆறுவிதிச் சட்டத்தைக் கி.பி. 1539-ல் ஹென்றியின் பாராளுமன்றம் இயற்றியது. ஆக, திருச்சபையின் ஆதிக்கத்திலிருந்து, குறிப்பாகப் போப்பாண்டவரின் அதிகாரங்களிலிருந்து தம்மையும் தம் நாட்டையும் விடுவித்துக் கொள்ளவேண்டுமென்ற அரசியல் அவசியமே எட்டாம் ஹென்றியின் காலத்தில் சமயப் புரட்சியாக இருந்ததே யொழிய, கத்தோலிக்க சமயக் கருத்துகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அப்போது இல்லை. கி.பி. 1544-ல் பிராடஸ்டென்டுகளின் கருத்துகளுக்கேற்ப விவிலியத்தின் வழிபாட்டுப் பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும், அம் மொழிபெயர்ப்பினைத் திருக்கோயில்களில் பின்பற்றவும் அரசர் அனுமதித்திருந்தாரென்பதிலிருந்து தம் கடைசிக் காலத்தில் ஹென்றி கத்தோலிக்கக் கொள்கைகளைச் சிறிது மாற்றிக்கொள்ள முற்பட்டாரென்பது தெரிகிறது.

ஆரும் எட்வர்டின் காலம்

இருப்பினும், அவரின் மகனும் அடுத்த வாரிசுமான ஆரும் எட்வர்டின் காலத்திலேயே சமயப் புரட்சி இங்கிலாந்தில் சமயத்தில் புரட்சியாக அமைந்தது. எட்டாம் ஹென்றியின் மூன்றும் மனைவியான ஜேன்லெய் மோருக்குப் பிறந்த அவருடைய ஒரே மகனான ஆரும் எட்வர்டு (1547 - 1553) இங்கிலாந்தின் சமயப் புரட்சியைக் கருத்துப் புரட்சியாக மாற்றிய பெருமையைப் பெறுகிறார். பிராடஸ்டென்ட் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவருடைய காப்பாளரான ஸோமர்செட் (Somerset) தம் பதவிக்காலத்தில் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைக் கொள்கையளவில் புகுத்தினார். எனினும், அதற்கு அரசரின் முழுமனச் சம்மதம் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. ரோமானிய கத்தோலிக்க சமயக் கொள்கைகளை வற்புறுத்திய 'ஆறு விதிச் சட்டம்' நீக்கப்பட்டது. சமய நிலையங்களிலிருந்து சிலைகளையும் சின்னங்களையும் அகற்ற உத்தரவு தரப்பட்டது. பாதிரிகள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். கத்தோலிக்க இறைவணக்கப் பாடல்களை நீக்கிவிட்டு, பிராடஸ்டென்டு பாடல்கள் பிரார்த்தனைக்கு ஓதப்பட்டன. அப் பாடல்கள் முழுமையாக அமைந்த 'பொது வழிபாட்டு நூல்' (Common Prayer Book) என்ற புத்தகத்தையே எல்லாக் கோயில்களிலும் 1 - 1 - 1549லிருந்து பின்பற்ற வேண்டுமென 'வழிபாட்டு ஒருமைச்சட்டம்' (Act of informity) கொண்டுவரப்பட்டது.

கி.பி. 1547-1549-ல் சோமர்செட்டால் கொண்டுவரப்பட்ட அச் சட்டங்கள் டெவான், கார்ன்வால், நார்ஃபோக் என்ற இடங்களில் ஏற்பட்ட கலகங்களுக்குக் காரணமாயின; சோமர் செட்டால் அவைகளை அடக்க முடியாமல் போக அது இன்னொரு காப்பாளரின் ஆட்சிக்கு வித்திட்டது. 1549-1553 ஆண்டுகளில் காப்பாளர் பதவி வகித்த நார்த்தம்பர்லாந்து பிரபு அக் கலகங் களை அடக்கினது மட்டுமல்லாமல் சோமர்செட்டையும் விஞ்சும் படியான சமயச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்தார். இவரின் பதவிக்காலத்திலேயே சமயச் சீர்திருத்தம் இங்கிலாந்தில் வேகமாகப் பரவியது. கத்தோலிக்கக் கோயில்களிலிருந்த பிரார்த்தனைப் பீடங்கள் இடிக்கப்பட்டன. பல ரோமானிய கத்தோலிக்க பிஷப்புகள் பதவிகளிலிருந்து விரட்டப்பட்டனர். பிராடஸ்டென்டு கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்த ஜான் ஹூப்பர் (John Hooper) என்பவர் கிளஸ்ட்டருக்கும், மைல்ஸ் கவர்டேல் (Miles Coverdale) என்பவர் எக்ஸிடருக்கும், நிக்கோலஸ் ரிட்லி (Nicholas Ridley) என்பவர் இலண்டனுக்கும், ஹியு லாட்டிமர் (Huqu Latimer) என்பவர் வொர்ஸ்டருக்கும் பிஷப்புகளாக அமர்த்தப்பட்டனர். புதிய சமயக் கொள்கைகள் எடுத்தோதப்பட்டு மக்களின் மத மாற்றத்திற்கு அடிகோலப் பட்டது. சமய சாத்திரங்களைக் கோயில்களில் போதிக்கவேண்டு மென்றும் சமய அறங்களைக் குருமார்கள் வழிபடுவோர்க்கு எடுத்துரைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. பிராடஸ் டென்டு சமயக் கருத்துகளைக் கொண்ட புதிய பிரார்த்தனைப் புத்தகம் 1549-ல் வெளியிடப்பட்டது; அந் நூலையே எல்லாக் கோயில்களிலும் பின்பற்றவேண்டுமென்ற ஒரேவிதமான வழி பாட்டு முறையை வற்புறுத்தும் சட்டம் கொண்டுவரப்பட்டது. பிராடஸ்டென்டு கோட்பாடுகளின் சாராம்சமாக 'சமயத்தின் நாற்பத்திரண்டு விதிகள்' (Forty two Articles) கிரான்மரால் தொகுக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கி.பி. 1552-ல் இரண்டாம் பொதுவழிபாட்டு நூல் இயற்றப்பட்டு வழிபாட்டு முறையில் புகுத்தப்பட்டது.

இவ்வாறு, ஆரும் எட்வர்டு காலத்தில் சமயப்புரட்சி, கொள் கையில் புரட்சியாக மாறியது. அதைச் சாதித்த அவ் வரசர் கி.பி. 1553-ல் காலமானர்.

மேரி டியூடரின் காலம்

கி.பி. 1544-ல் எட்டாம் ஹென்றியின் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட அரசுரிமைச் சட்டத்தின்படி, அவரின் முதல் மனைவியான காதரினுக்குப் பிறந்திருந்த மேரி டியூடர் (1553-58)

என்ற பெண்ணரசி அடுத்த பட்டமெய்தினர். இவர் காலத்தில் கத்தோலிக்க சமயம் இழந்த செல்வாக்கை மீண்டும் இங்கிலாந்தில் பெற முயன்றது. முடிசூட்டிக் கொண்டதும் சிறையில் அடைபட்டுக்கிடந்த ரோமானிய கத்தோலிக்கர்களை விடுதலை செய்வதையே முதற் காரியமாக மேரி செய்து முடித்தார். கத்தோலிக்க அரசி காதரினுக்கு மகளாகப் பிறந்து, கத்தோலிக்க அரசன் ஸ்பெயினின் இரண்டாம் ஃபிலிப்புக்கு மனைவியாக இருந்த மேரிக்குக் கத்தோலிக்க சமயத்தில் பற்றும் நம்பிக்கையும் மிகுதியாக இருந்தன. தம் சகோதரன் ஆரும் எட்வர்டு காலத்திலும், தம் தந்தை எட்டாம் ஹென்றியின் காலத்திலும் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டங்களைத் தடைசெய்ய நினைத்த மேரி, இங்கிலாந்தில் கி.பி. 1529-க்கு முன்பு இருந்த நிலைக்குக் கத்தோலிக்க சமயத்தை நிறுவ முயன்றார். சீர்திருத்தக் கருத்துகளின் கருவூலமாக இருந்த கிரான்மர் என்பவரை நீக்கித் தம் தந்தையால் சிறையிலடைக்கப்பட்டிருந்த கத்தோலிக்கரான கார்டினல் போல் (Cardinal Pole) என்பவரை விடுதலை செய்து அவரையே காண்டர்பரியின் ஆர்ச்பிஷப்பாக மேரி அமர்த்தியதிலிருந்து, இங்கிலாந்தில் கத்தோலிக்க எதிர்ப்பு இயக்கம் தொடங்கியது.

தம் ஆட்சிக்கு முன்பாக இயற்றப்பெற்ற சமயத் தொடர்புடைய சட்டங்கள் அத்தனையும் பாராளுமன்றத்தின் மூலமாகவே மேரி மாற்றினர். மடலாயங்களைத் திருப்பி ஒப்படைக்கமட்டும் பாராளுமன்றம் மறுத்தது. கத்தோலிக்க சமயத்தில் இவருக்கு இருந்த ஈடுபாடு பல படுகொலைகளுக்கும் காரணமானது. கத்தோலிக்க வழிபாட்டை ஒப்புக்கொள்ள மறுத்தவர்களைச் 'சமயப் பகைவர்கள்' எனக் குற்றம் சாட்டி, அவரை அரசாங்கம் தண்டித்தது. அதற்கான சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. ஹூப்பர், ரிட்லி, லாட்டிமர் போன்ற பிராடஸ்டென்டுகள் சிறையிருத்தப்பட்டுப் பலர் சுட்டெரிக்கப்பட்டனர். இவரின் ஆட்சிக்காலத்தில் இருநூற்றெண்பது பேர் சுட்டெரிக்கப்பட்டனர். பலர் உயிரோடு எரிக்கப்பட்ட மயானக் காடாக ஸ்மித்பீல்டு காட்சியளித்தது. அவர்களில் ஜான் ரோஜர்ஸ் (John Rogers) என்பவர் முக்கியமானவர். 1556-ல் ஆக்ஸ்ஃபோர்டில் எரிக்கப்பட்ட தாமஸ் கிரான்மர் (Tohmas Cranmer) என்பவர் கத்தோலிக்கத்தை மறுபடியும் இங்கிலாந்தில் முக்கியச் சமயமாகச் செய்த முயற்சியில் இங்ஙனம் அவ் வரசி பலரைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்ததால் அவரை 'இரத்தவெறி பிடித்த மேரி' எனப் பிராடஸ்டென்டுகள் தூற்றினர்கள். படுகொலையிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பல பிராடஸ்டென்டுகள்

நாட்டை விட்டு வெளியேறினர்கள். அவர்களிலே 'தியாகிகள் வரலாறு' என்னும் நூலை எழுதிய பாக்ஸ் என்பவரும் ஒருவராவார்.

அங்ஙனமாக, பாராளுமன்றத்தைத் தம் கருவியாக ஆக்கிக் கொண்டு சமயச் சீர்திருத்தச் சட்டங்களை ரத்து செய்து கத்தோலிக்கக் கோட்பாடுகளை ஏற்க மறுத்தவர்களையெல்லாம் சமயத் துரோகிகளாகத் தண்டித்தும் இங்கிலாந்தைக் கத்தோலிக்க நாடாக மீண்டும் மாற்றும் முயற்சியில் கடுமையாக முனைந்திருந்த மேரி டியூடர் கி.பி. 1558, நவம்பர் 17-ல் இறந்தார். அவர் காலத்தில் பிராடஸ்டென்டுகள் சிந்திய இரத்தம் அவ் வியக்கம் வருங்காலத்தில் வளர்வதற்கான உரமாகவே அமைந்ததென்பதைப் பிற்கால வரலாற்றில் நாம் காணுவோம்.

எலிஸபத்தின் காலம்

எட்டாம் ஹென்றியின் இரண்டாம் மனைவியான ஆன் பொலீனுக்குப் பிறந்திருந்த எலிஸபத் இங்கிலாந்தின் அரசியாகக் கி.பி. 1558-ல் பாராளுமன்றத்தாலும், மன்னர் அவையினாலும் அறிவிக்கப்பட்டார். இவரின் காலத்திலேயே (1551-1603) சமயப் புரட்சியின் நான்காவது கட்டத்தைக் காண முடிகிறது. போப்பாண்டவரின் ஆதிக்கத்திற் கெதிராக எட்டாம் ஹென்றியின் காலத்தில் தோன்றிய சமயப்புரட்சி, ஆரும் எட்வர்டு காலத்தில் மதசீர்திருத்த இயக்கமாக மாறி, எலிஸபத் அரசியாரின் காலத்தில் இறுதிக்கட்டத்தை அடைந்த சுருக்கத்தையே நாம் இங்குக் காணப்போகிறோம்.

எலிஸபத் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது இங்கிலாந்தில் கத்தோலிக்கரென்றும் பிராடஸ்டென்டுகளென்றும் இருசமயப் பிரிவுகள் ஒன்றுக்கொன்று எதிராக இயங்கிவந்தன. இங்கிலாந்தின் தெற்கு, கிழக்குப் பகுதிகளில் பிராடஸ்டென்டுகளும், வடக்கு, மேற்குப் பகுதிகளில் கத்தோலிக்கர்களும் செல்வாக்கைப் பெற்றிருந்தனர். நாட்டின் ஒற்றுமையைக் காக்கக் கடமைப் பட்டிருந்த எலிஸபத், அவ் விரு சமயப் பிரிவினர்களின் சார்பில் சேராமல் நடுவழிக் கொள்கையையே பின்பற்றினர். இங்கிலாந்திலிருந்த மக்கள் கத்தோலிக்கரென்று வேறுபட்டு நிற்காமல் ஒற்றுமையுடன் ஆங்கிலேயர்களாகச் சேர்ந்து செயல்பட வேண்டுமென விரும்பிய அரசிக்கு எந்தச் சமயப் பிரிவினிலும் ஆழ்ந்த பற்று இல்லை. அவருக்குச் சமயத்தில் ஓரளவு பற்று இருந்ததாகத் தெரிந்ததென்றால், அது மக்களைக் கவர்வதற்காக அவரால் கையாளப்பட்ட தந்திரமே ஆகும்.

மேரி டியூடர் காலத்தில் மறுக்கப்பட்ட சமயத் தொடர் புடைய சட்டங்களை மீண்டும் இயற்றும்படி பாராளுமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டது. எட்டாம் ஹென்றி காலத்தில் போப்பை எதிர்த்த அதே பாராளுமன்றம் ஆரும் எட்வர்டு காலத்தில் பிராடஸ்டென்டியத்தையும், மேரி டியூடர் காலத்தில் கத்தோலிக்கத்தையும் ஆதரித்த அதே பாராளுமன்றம் எலிஸபத் அரசி வேண்டியதை நிறைவேற்றும் கருவியாக விளங்கியது. 1559-ல் புதியதோர் 'ஆதிக்கச் சட்டம்' இயற்றப்பட்டது. அதன்படி போப்பாண்டவருக்கு இங்கிலாந்தில் யாதொரு சமய ஆதிக்கமும் இல்லை எனத் திருச்சபையோர்களும் லௌகீகர்களும் உறுதிமொழி தரவேண்டுமென வற்புறுத்தப்பட்டது. சமயத் தொடர்புள்ள விவகாரங்களில் முழு அதிகாரம் செலுத்தக்கூடிய உரிமையையும் அதனை எதிர்ப்பவர்களைத் தண்டிக்கும் உரிமை யையும் அச் சட்டம் அவ் வரசிக்கு அளித்தது. கத்தோலிக்கர் களை ஒடுக்கும் நோக்கத்தில் அச் சட்டத்தை எலிஸபத் இயற்றி யிருந்தும் அவர்களின் ஆதரவைப் பெறவும் முயன்றார் என்பது, தம் தந்தை எட்டாம் ஹென்றியினால் ஆங்கில அரசர்களுக்கு உரித்தாக்கப்பட்ட 'ஆங்கிலத் திருச்சபையின் மாபெருந் தலைவர்' என்ற பட்டத்தை உதறிச் 'சமய விவகாரங்களின் மாபெரும் பிரதிநிதி' என்ற பட்டத்தைத் தாம் சூட்டிக் கொண் டதிலிருந்து தெரிய வருகிறது. அரசின் கீழ் பணியாற்றும் யாவரும் தமக்கு விசுவாசப் பிரமாணம் செய்துதர வேண்டு மெனவும் வற்புறுத்திய அம் மகாராணி, கி.பி. 1552-ல் இயற்றப் பெற்ற வழிபாட்டு நூலை (பிரார்த்தனை நூல்) எல்லாச் சமய நிலையங்களிலும் பின்பற்ற வேண்டும் என அறிவித்த ஒருமைச் சட்டத்தையும் இயற்றினர்.

ஆதிக்கச் சட்டத்துக்கும் ஒருமைப்பாட்டிற்கும் உடன்பட மறுத்தவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். அப் பதவிகளுக்கு பிராடஸ்டென்டுகள் நியமனம் செய்யப் பெற்றனர். ஆதிக்கச் சட்டம், ஒருமைச் சட்டம் என்ற இரண் டையும் நிறைவேற்றித் தம் காலத்தில் திருச்சபை எங்ஙனம் செயல்படவேண்டுமென எலிஸபத் நிர்ணயித்தார்? உயர்ஆணை நீதிமன்றம் (Court of High Commission) மூலமாக, அதை எதிர்த்தவர்களெல்லாம் ஒடுக்கப்பட்டனர்.

கி.பி. 1551-ல் ஆரும் எட்வர்டு காலத்தில் புகுத்தப்பட்ட 'நாற்பத்திரண்டு விதி'களைச் சிறிது மாற்றியும் சிறிது நீக்கியும் 'முப்பத்தொன்பது விதிகளாக' (Thirtynine Articles) கி.பி. 1563-ல் எலிஸபத் வெளியிட்டார். அச் சமய விதிகளே

'ஆங்கிலிகன் சமயத்தின் அடிப்படைகளாக' விளங்கின. எலிஸபத் காலத்தின் சமய ஏற்பாடு இரு சமயத்தினருக்கும் இடைப்பட்ட ஓர் உடன்பாடாக இருந்தது. அந்த உடன்பாட்டின்கீழ் அமைக்கப்பட்டதே ஆங்கிலிகன் திருச்சபை (Anglican's Church) ஆகும். ஆங்கிலிகன் திருச்சபை அரசியையே தலைமைப் பிரதிநிதியாகக் கொண்டதே யொழிய, போப்பாண்டவரை யன்று; பிரார்த்தனையும் போதனைகளும் ஆங்கிலத்திலேயே செய்யப்பட்டதே யொழிய லத்தீன் மொழியில் அல்ல. ஆயின், சமயப் புரட்சிக்கு முன்பாக எங்ஙனம் பிஷப்புகளாலும் பாதிரிமார்களாலும் திருச்சபை பரிபாலிக்கப்பட்டு வந்ததோ, அந்த முறையில் எம் மாற்றங்களும் செய்யப்படவில்லை யென்பது குறிப்பிடத் தக்கது. எலிஸபத்தின் சமய ஏற்பாட்டினால் இங்கிலாந்தில் அமைதியும், ஒற்றுமையும் ஏற்பட்டதல்லாமல், தேசியத் திருச்சபையும் தோன்றியது.

தம் சமய ஏற்பாட்டைக் கி.பி. 1570க்கு மேல் எதிர்க்கத் துணிந்த கத்தோலிக்கர்களையும் பிரிட்டானியர்களையும் எலிஸபத் ஒடுக்கினரென்றால், அது அவரின் சமய ஏற்பாட்டின் நடுநிலையைக் காட்டுகிறது.

இங்ஙனம், எட்டாம் ஹென்றியின் காலத்தில் விவாகப் பிரச்சினையில் தோன்றிய சமயப் புரட்சி, அவரின் இளைய மகள் எலிஸபத் அரசியாரின் காலத்தில் தேசியத் திருச்சபையை உருவாக்கிய பெருமையோடு முற்றுப் பெற்றது.

(இ) கன்னிப் பேரரசி முதலாம் எலிஸபத் (1558—1603)

கி.பி. 1559 ஜனவரி 15 ஆம் நாளில் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டப்பெற்ற கன்னிப் பேரரசியின் காலம் அந்நாட்டின் வரலாற்றில் பொற்காலமாகப் போற்றப்படுகிறது.

குணச்சிறப்பு

இங்கிலாந்து வரலாற்றில் ஒரு தனிச்சிறப்பைப் பெற்ற அம்மகாராணி அரசியல் கலையிலே தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அக் கலைக்குத் தேவையான மன உரமும் ஏமாற்றுக் கலையும் அவருக்கு இருந்ததோடல்லாமல், ஆதிக்க ஆசையும் அதை நிறைவேற்றத் தக்க உறுதியான குறிக்கோளும் எலிஸபத்துக்கு இருந்தது. தந்தை எட்டாம் ஹென்றியின் கொடிய உள்ளத்தையும், தாய் ஆன் பொலீனின் சாகசப் பண்புகளையும் ஒருங்கே

பெற்றிருந்த எலிஸபத் தமது நாட்டிற்கு இரு வழிகளிலே பெருமை தேடித்தந்தார். டிரேக், வால்ட்டர், ராலி, ஹாக்கின்ஸ் போன்ற கடல்வீரர்களை ஊக்குவித்து ஆங்கிலக் கடலாதிக்கத்தை நிறுவியதும், எட்மண்டு ஸ்பென்சர், கிரிஸ்தோபர் மார்லோ, மாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் போன்ற கவிஞர்களைக் கவிதாசிரியர்களை ஊக்கி ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புறச் செய்ததுமே அவ் விரண்டு பெருமைகளாகும். அவை இரண்டுமேயன்றி வேறுபல சிறப்புமிக்க நிகழ்ச்சிகளும் அவரது காலத்தில் இடம் பெற்றிருந்தன. அவற்றில் அரசியின் திருமண விவகாரமும் ஒன்றாகும்.

(எலிஸபத்தின் பட்ட உரிமை)



இராச தந்திரம்

ஐரோப்பிய அரசர்களில் பலர் இவரை மணந்துகொள்ள விரும்பினர். அவர்களில் ஆஸ்திரிய ஆர்ச் டியூக் சார்லஸ், ஸ்வீடிஷ் மன்னர், ஸ்பானிய மன்னரான இரண்டாம் ஃபிலிப் முக்கியமானவர் ஆவர். குறிப்பாக இரண்டாம் ஃபிலிப் இவரை மணக்கத் துடித்தார். செல்வத்திலும் சிறப்பிலும் செழித்திருந்த ஆங்கில அரசியை மணக்கப் பலர் துணிந்தனரே தவிர, அழகும் அறிவும் கொண்ட மங்கையை மணக்க அன்று என்பது எலிஸபத்துக்குப் புலப்பட்டிருந்திருக்கவேண்டும். பல அரசர்கள் தம்மை மணக்க விரும்பியதை உணர்ந்த எலிஸபத் தாம் எவரை மணந்தாலும் மற்றவர்கள் வெகுளுவர் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஒருவரையுமே தாம் மணக்கப் போவதில்லை என்றும், தாம் கன்னிப் பேரரசியாகக் காலங்கழிக்க விரும்புவதாகவும் இறுதியிலே அறிவித்த எலிஸபத், தம்மை மணக்க விருப்பம் தெரிவித்த ஒவ்வொருவர் மனதிலும் தம்மையே மணந்துகொள்வார் என்ற நப்பாசையை வெகுகாலம் வளர

விட்டுப் போட்டி, பொருமைப் போர்களைத் தவிர்த்தார். அது அவரின் அரசியல் தந்திரத்தைக் காட்டியது.

உள்நாட்டுக் கொள்கை

தம் சமய ஏற்பாட்டினுல் பிராடஸ்டென்டு மதத்திற்குப் புத்துயிர் ஊட்டி, அதே நேரத்தில் கத்தோலிக்கர்களின் மனமும் அதிகமாகப் புண்படாத வகையில், ஒரு நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றி ஆங்கிலத் திருச்சபையைத் தேசியத் திருச்சபையாக மாற்றிய அவரின் ஆற்றல் அவரின் தந்திரக்கலையை உறுதிப்படுத்தியது.

வில்லியம் செஸில் (William Cecil) போன்ற அறிஞர்களைப் பொறுப்புள்ள அரசாங்க அலுவல்களுக்குப் பணித்து, திறம்பட நிர்வகித்துத் தம் ஆட்சியின் முற்பகுதியில் எலிஸபத் பல ஆக்கப் பணிகளைச் செய்து முடித்தார். மக்களின் பொது நலனையும், நாட்டின் தற்காப்பையும் மனதில் கொண்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிற்காலத்தில் வர்த்தகப் பேரரசாக இங்கிலாந்து விளங்கியதெனின், அதற்கான முதல் ஏற்பாடு இவரின் காலத்திலேயே தொடங்கப்பட்டது. கடல் கடந்து வியாபாரம் செய்யத் துணிந்த வர்த்தகர்கட்கு எவ்வித அரசத் தலையீடின்றி உற்சாகத்துடன் செயல்படும்படியான நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இங்ஙனமாக நடைபெற்ற வியாபாரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதுமட்டுமல்லாது அவர்களின் தன்னம்பிக்கையையும் வளர்த்தது.

உள்நாட்டுச் செலாவணி முறையும் சீர்திருத்தப்பட்டது. நாணயத்தின் மதிப்பும், அதிலுள்ள உலோகத்தின் மதிப்பும் சமமாயிருக்கும் வண்ணமாகப் புதுவெள்ளி நாணயங்கள் அச்சிடப்பட்டன. மரக்கலம் கட்டும் தொழில் உள்படச் சில தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. புத்தம்புதுவகைப் போர்ச்சாதனங்களான பீரங்கிகளும், குறிப்பாகப் பித்தளைப் பீரங்கிகளும் வெடி மருந்து செய்யும் சாலைகளும் தோற்றுவிக்கப்பட்டன. கடற்படைக்கான மரக்கலங்களின் தகுதியும் அளவும் விருத்திசெய்யப்பட்டன. கடல் வலிமை பெற்ற வல்லரசு என இங்கிலாந்து பெற்ற பெருமைக்கு முன்னோடியான காலமாக, எலிஸபத்தின் ஆட்சி அமைந்தது என்றல் அது மிகையாகாது. நாடு முழுவதும் புதிய கோட்டைகள் கட்டப்பட்டன. கடற்கரையோரமாகப் புதிய கொட்டில்கள் கட்டப்பட்டு, படைக்கலங்கள் சேகரித்து வைக்கப்பட்டன. எலிஸபத் மேற்கொண்ட அம் முயற்சிகளால், 16ஆம்

நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து வளமுள்ள நாடாக மட்டுமன்றிப் பலமுள்ள நாடாகவும் விளங்கியது.

இவ் வரசியாரின் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் தோன்றிய சில சமயக் கட்சிகளையும் இங்கு நாம் குறிப்பிட்டே ஆதல் வேண்டும். அவைகளிலே 'பியூரிட்டன்' (Puritan) என்பது முக்கியமானது. மேரி டியூடரின் காலத்தில் கத்தோலிக்கர் பிடியினின்று தப்பி வடஜெர்மனிக்கு ஓடிப்போன பிராடஸ்டென்-டுகள், சில புதிய தூய்மையான கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, இவரின் காலத்திலே இங்கிலாந்துக்குத் திரும்பியிருந்தனர். திருக்கோயில்களில் படிம வழிபாடு செய்வதையும், ஓவியம் தீட்டப்பெற்ற வண்ணச் சாளரங்களை அமைத்தலையும் தீவிரமாக எதிர்த்த பியூரிட்டன்கள், தனிமனிதனின் சுதந்தரத்தைப் போற்றியவர்கள், எலிஸபத்தால் கொண்டுவரப்பட்ட ஒருமைச் சட்டத்தை ஏற்காத அவர்கட்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தும், பியூரிட்டன்களின் இயக்கம் வளர்ந்தே வந்தது. அந்த அளவுக்குக் கொள்கையில் தீவிரம் கொண்டிருந்த அப் பியூரிட்டன்கள் அடுத்த தலைமுறையில் நாடாளுமன்றத்தின் உரிமைகள் பறிபோகாதவண்ணம் 'ஆட்சி அறத்தின் காவலர்' களாக விளங்கினர். அங்ஙனம் 17ஆம் நூற்றாண்டில் ஆங்கில அரசர்களின் வரம்பிலா ஆட்சியை எதிர்த்து உரிமைக்குரல் எழுப்பிய வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அப் பியூரிட்டன்கள், எலிஸபத் காலத்தில்தான் தோன்றலாயினர்.

அரசியாரும் பாராளுமன்றமும்

ஸ்டூவர்டு அரசர்கள் காலத்தில் உரிமைக்காகப் போராடிய பாராளுமன்றம் எலிஸபத் காலத்தில் தலையாட்டும் மன்றமாக இருந்துவந்த தென்பதையும் நாம் நினைவில் நிறுத்தவேண்டும்.

மேரி டியூடர் காலத்தில் மறுக்கப்பட்ட சமயச் சட்டங்களைத் தம் ஆட்சியின் ஆரம்பத்திலேயே பாராளுமன்றத்தின் வாயிலாக எலிஸபத் இயற்றியிருந்தது ஆங்கிலப் பாராளுமன்றம் அரசி வேண்டியதைச் செய்யும் கருவியாகவே இருந்த தென்பதை எடுத்துக்காட்டுகிறது. ஆட்சிப்பொறுப்பில் பாராளுமன்றம் அடிக்கடி கலந்தாலோசிக்கப் பட்டதென்றும் சொல்ல முடியாது. தம் முடைய நாற்பத்தைந்து கால அரசாட்சியில் எலிஸபத் பதின்மூன்று முறையே பாராளுமன்றத்தைக் கூட்டியிருந்தார். அதாவது சராசரியில் மூன்றரை வருடங்கட்கு ஒருமுறை பாராளுமன்றக் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவ முறையினையும் தம் பிரத்யேக

அதிகாரங்களையும் பயன்படுத்தி எலிஸபத் தமக்குச் சாதகமாக அம் மன்றத்தைப் பயன்படுத்திக்கொண்டார். அறுபத்துமூன்று புதிய பரோக்கள் (boroughs) உண்டாக்கி, காமன்ஸ் சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்து எடுக்கச் செய்தனர் என்பதினின்று அரசியின் அதிகார வரம்பைத் தெரிந்துகொள்ளலாம். தம் அதிகாரத்திற்குக் குறுக்கீடாகவிருந்த நாடாளுமன்ற உறுப் பினர்களை அரசி தண்டித்தார். தேசியப் பிரச்சினைகளை விவாதிப்ப தற்கு மன்றத்தில் பேச்சுரிமை கேட்ட பீட்டர் வென்ட் வொர்த் (Peter Wentworth) என்ற அங்கத்தினர் சிறைக்கு அனுப் பப்பட்டது அரசியின் வரம்பற்ற ஆட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கி.பி. 1598-ல் தம்மிடம் மன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 91 மசோதாக்களில் 48-ஐ எலிஸபத் மறுப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்து செய்தார் என்பதினின்று அவர் மன்றத் துக்கு உடன்பட்டு ஆளவில்லை என்பது புலனாகும். இருப்பினும், கி.பி. 1601-ல் கூட்டப்பட்ட கடைசிப் பாராளுமன்றம் இரு மனுக்களை இயற்றி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படியாக அரசியைக் கட்டாயப்படுத்தியது. அவற்றிலே, நாட்டிலிருந்த இரவலர்களை மேற்பார்த்து அவர்கட்கு உண்டி கொடுத்து உயிர் பிழைக்கவைக்கும் பொறுப்பு தல நிர்வாகிகளான பாரிஷ் (Parish) மேற்பார்வையாளர்கட்குக் கொடுக்கப்பட்டது. அதுவே இரவலர் சட்டம் (Poor Law) என்பதாகும். உப்பு, எண்ணெய், இரும்பு, தோல் முதலிய பொருள்களை விற்பனை செய்யச் சிலருக்கு முற்றுரிமை (monopoly) அளிப்பதற்கான அதிகாரம் அரசிக்கு இருந்துவந்தது. வியாபாரிகள் தங்கட்கு வேண்டிய உயர்விலை வைத்து அப் பண்டங்களை விற்க, மக்கள் அதனால் வருந்தியபோது மன்றம் அதைச் சுட்டிக்காட்டியது. அரசியின் முற்றுரிமை அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது. ஆக, கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும் என்ற வகையில் எலிஸபத்துக்கும், பாராளுமன்றத் திற்கும் தொடர்பு இருந்தது. எலிஸபத் அரசியார் காலத்தில் இங்கிலாந்து கடலாதிக்கத்தைப் பெற்றது மட்டுமல்லாமல், அயல்நாட்டு வர்த்தகத்திலும், குடியேற்றத்திலும் முன்னேறி யிருந்தது.

அரசியும் கடலோடிகளும்

போர்ச்சுகீசியர் இந்தியாவிலும் ஸ்பானியர்கள் தென் அமெரிக்காவிலும் வியாபாரத் தலங்களைப் பெற்றுப் பேரரசுகளை உருவாக்கி வந்த காலம் அது. அவர்கட்கு ஈடாகத் தாங்களும் வியாபாரத் தலங்களைப் பெறவேண்டுமென ஆங்கிலேயர்கள்

விரும்பியதில் வியப்பேதுமில்லை. அத் தலங்களைப் பெறுவதற்கு முன்னர், ஆங்கிலேயர்கள் தங்களின் பலத்தைக் கடலில் நிலை நிறுத்தவேண்டும். அம் முயற்சியில் அவர்கட்குப் பேருதவியாக இருந்தவர்கள் ஜான் ஹாக்கின்ஸ் (Hawkins), ஃபிரான்ஸிஸ் டிரேக் (Drake) என்ற புகழ்பெற்ற இரு கடலோடிகளாவர்.

கி.பி. 1564-ல் ஹாக்கின்ஸ் (Hawkins) என்பவர் கடலோரப் பகுதிகளில் இறங்கி நீக்ரோக்களைக் கைப்பற்றி, தென் அமெரிக்காவில் இருந்த ஸ்பானியக் குடியேற்ற நாடுகட்கு அவர்களை அடிமைகளாக விற்று, 'கள்ள வியாபாரம்' செய்து வந்தார். கி.பி. 1567-ல் மீண்டும் அம் முயற்சியில் ஈடுபட்டிருந்தகாலை, மெக்ஸிகன் கரைக்கருகில், ஸ்பானியக் கப்பல்களால் தாக்கப்பட்டார். பெருத்த சோகத்துடன் ஹாக்கின்ஸ் இங்கிலாந்துக்குத் தப்பி வந்தது ஆங்கிலேயர்கட்கு ஒரு படிப்பினையைக் கற்றுத் தந்தது. அதன்படி, ஸ்பானிய, தென் அமெரிக்கக் குடியேற்றங்களோடு வாணிகம் செய்வதைவிட, அவர்களோடு போர் தொடுக்க வேண்டும் என்ற எண்ணம் நிலவியது. குடியேற்றங்களோடு தொடுக்கப்படும் போர், ஸ்பானிய அரசுக் கெதிராக நடத்தப்படும் போராக மாறக்கூடும்; அதை மகாராணியார் ஆதரிக்கமாட்டார் என்பதையும், அதே சமயத்தில் ஸ்பானியர் குடியேற்றங்கள் தனிப்பட்ட ஆங்கிலேயக் கடலோடிகளால் தாக்கப்பட்டால் கண்டிக்கமாட்டாரென்பதையும் சில துணிச்சல்காரர்கள் நம்பினர். அவர்களில் ஃபிரான்சிஸ் டிரேக் (Francis Drake) என்பவரும் ஒருவர். கொள்ளையடிக்கவேண்டு மென்ற நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்டிருந்த டிரேக் கி.பி. 1572-ல் தம் இரு கலங்களுடன் பிளிமத் துறைமுகத்தினின்றும் புறப்பட்டுப் பனமா வளைகுடாவை அடைந்தார். பெரு (Peru) பகுதியிலிருந்து ஸ்பெயினுக்கு அனுப்பப்படுவதற்காகப் பனமா பூசந்தியை அடைந்த வெள்ளிக் கனிப் பொருள்களைக் கொள்ளையடித்துத் தம் கப்பல்களில் ஏற்றி இங்கிலாந்து திரும்பினர். அதை அடுத்தே ஆங்கில ஸ்பானிய கடலாதிக்கப் போட்டி ஏற்பட்டது. கி.பி. 1577-ல் மீண்டும் கிளம்பிய டிரேக் தென் அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள மெகல்லன் ஜலசந்தியைத் (Megellan Straits) தாண்டி, பசிபிக் கடலை அடைந்தார். போகும் வழியில் லீமா, வால்பெராயிசோ போன்ற முக்கிய ஸ்பானியக் குடியேற்றங்களின் துறைமுகங்களைக் கொள்ளையடித்துத் தங்கம், வெள்ளி போன்ற விலைமதிப்புள்ள பொருள்களைக் கைப்பற்றினர். தம் கப்பலைப் பசிபிக் கடலைக் கடக்கச் செய்து கிழக்கிந்தியத் தீவுகளை அடைந்தார். பின் அங்கிருந்து புறப்பட்டு, இந்துமகாசமுத்திரம் வழியாக நன்னம்பிக்கை முனையைக் கடந்து கி.பி. 1580

செப்டம்பர் 26ஆம் நாளில் தாம் கொள்ளையின்மூலம் கவரப் பெற்ற பெரும்பொருள்களுடன் இங்கிலாந்தை வந்துற்றார். கடலில் உலகம் சுற்றிய முதல் ஆங்கிலேயர் என்ற நிலையான பெருமையைக் கொண்டதுமன்றி, ஆங்கிலேயர்கட்குக் கடலாதிக்கம் கிட்டிவிட்டது என்பதையும் மற்ற நாடுகட்குக்-குறிப்பாக ஸ்பெயினுக்குத்-தம் வீரச் செய்கையின் வாயிலாக உணர்த்தினர். அவருக்கு எலிஸபத் அரசியார் 'நைட்' (Knight) பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தி டிரேக்கின் செய்கையில் தமக்கும் பங்குண்டு எனக் காட்டிக்கொண்டார்.

கடலோடிகளின் கொள்ளைகளை உள்ளுக்குள் வெறுத்த அமைச்சர் செஸில், இங்கிலாந்தின் அயல் வியாபாரத்தைப் பெருக்கும் வழியில் இறங்கினர். ஆர்வம் கொண்ட ஆங்கில வியாபாரிகளை ஊக்கி, பால்டிக், ஜெர்மனி, மத்தியதரைப் பகுதிகளில் தம் நாட்டு வர்த்தகத்தைத் தழைக்கச் செய்தார். 1581-ல் வில்லியம் ஹார்போர்ன் (William Harborne) என்பாரைக் கான்ஸ்டான்டிநோபிளுக்கு அனுப்பி, துருக்கிய சுல்தானின் இசைவைப் பெற்று லெவன்ட் (Levant) வியாபாரச் சங்கத்தை ஏற்படுத்தினர். 1582-ல் எட்வர்ட் மென்டன் (Edward Menton) தலைமையில் கிழக்கிந்தியத் தீவுகளுடன் வணிக ஏற்பாடு செய்ய முயற்சி செய்யப்பட்டும், ஸ்பானியர்களின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. 1497-ல் ஜான் கபெட்டால் அது கைவிடப் பட்டது. நீவினை, கில்பர்ட் (Gilbert) என்பவர் அரசியின் அனுமதி பெற்று 1583-ல் கைப்பற்றி அதற்கு நியூஃபவுண்டுலாந்து (New Foundland) எனப் பெயரிட்டார். இன்னொரு கடலோடியான வால்டர் ராலே (Walter Raleigh) என்பவர் 1585-ல் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் ஓர் ஆங்கிலக் குடியேற்றத்தை நிறுவி, தம் அரசியின் நினைவாக 'வர்ஜினியா' எனப் பெயரிட்டார். இந்தியாவில் பிற்காலத்தில் ஒரு பேரரசையே நிறுவிய கிழக்கிந்தியக் கம்பெனியும் அரசியாரின் அனுமதியின்கீழ்க் கி.பி. 1600-ல் தொடங்கப்பட்டது.

எலிஸபத்தும் ஸ்காட் மேரியும்

இங்ஙனம், இவர் காலத்தில் அயல்நாட்டு வியாபாரத்திற்கும் குடியேற்ற அமைப்புகட்கும் ஊக்கம் அளிக்கப்பட்டது. இவ்வாறு பற்பல முக்கிய நிகழ்ச்சிகட்கும் காரணமாக இருந்த எலிஸபத்தின் காலம் சில சச்சரவுகளையும், போர்களையும் கண்டிருந்தது. அவைகளிலே, அவ் வரசிக்கும் ஸ்காட்டிய அரசி மேரிக்கும் இடையே நிகழ்ந்த ஆதிக்கப்போர் முக்கியமானது. எலிஸபத் ஆண்ட முதல்

9 ஆண்டுகளில் ஸ்காட்லாந்து அரசியாகவும், அடுத்த 19 ஆண்டு களில் அவரின் சிறைக் கைதியாகவும் இருந்த மேரி, கன்னியரசிக்கு உறவினர்.



ஸ்காட்லாந்தின் அரசியான மேரி ஃபிரெஞ்சு மன்னரான இரண்டாம் ஃபிரான்ஸிஸை மணந்திருந்தார். இங்கிலாந்தை ஆண்ட ஏழாம் ஹென்றியின் மகள் வழியில் பிறந்த மேரியே ஆங்கிலேய அரசுக்கு வாரிசு எனக் கூறிக்கொண்டு இரண்டாம் ஃபிரான்ஸிஸ் தம்மை இங்கிலாந்தின் மன்னரென அழைத்துக் கொண்டார். இரண்டாம் ஃபிரான்சிஸ் இங்கிலாந்து அரசுரி மைக்கு உரிமை கொண்டாடியதால், ஸ்காட்லாந்தில் மேரியின் ஆதிக்கத்தைத் தகர்க்க எலிஸபத் எண்ணம் கொண்டிருந்ததில் ஆச்சரிய மெதுவுமில்லை.

அத் தருணத்தில் ஜான் நாக்ஸ் (John Knox) என்னும் பிராடஸ் டென்டியர் தலைமையில் ஸ்காட்லாந்தில் கத்தோலிக்க எதிர்ப்பு இயக்கம் கடுமையாக நடந்து வந்தது. ஸ்காட்டிய கத்தோலியர் களுக்கும் ஃபிரெஞ்சுப் படைகள் உதவிக்கு இருந்தன. பிராடஸ் டென்டுகளுக்கு உதவும் நோக்கத்திலும், ஸ்காட்லாந்தில் தம் செல்வாக்கைப் பரப்பும் நோக்கத்திலும் கி.பி. 1560-ல் எலிஸபத் தம் படைகளை அனுப்பி, ஃபிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்து, ஸ்காட்லாந்தின் பிராடஸ்டென்டிய மதத்தைக் காப்பாற்றினார். அதே ஆண்டு ஃபிரான்சிஸ் காலமாக, அவரின் விதவை ஸ்காட் லாந்துக்கு அரசியாகத் திரும்பிவிட்டார். கணவனை யிழந்த மேரிக்குத் தம் செல்வாக்குக்கு உட்பட்ட லீஸ்ட்டர் எர்ல் (Earl of Leicester) மறுமணம் செய்வித்து ஸ்காட்லாந்தில் மேலும் தம் செல்வாக்கைப் பலப்படுத்த எலிஸபத் நினைத்தார். ஆனால், ஆங்கில அரசியின் விருப்பத்திற்கு மாறுகக் கத்தோலிக்கரான டார்ன்லி (Darnley) பிரபுவை மேரி 1565-ல் மறுமணம் செய்து

கொண்டார். ஸ்காட்டியப் பிராடஸ்டென்டியர்களுக்கு அத் திருமணம் எரிச்சலைக் கொடுத்தது.

இங்ஙனமிருக்க மேரிக்கும் பிராடஸ்டென்டு மதத்தைச் சார்ந்த டேவிட் ரிஜியோ (David Rizzio) என்ற இத்தாலிய இசைப் புலவனுக்கும் இருந்த உறவினால் பொறுமை கொண்டு கி.பி. 1566-ல் அரசியின் கணவரான டார்ன்லி பிரபு அப் புலவரைக் கொலை செய்துவிட்டார். கொலை செய்யப்பட்ட அப் புலவர் பிராடஸ்டென்டி. ஆகையால், அம் மதத்தினர் பொறுமை இழந்தவர்களாகக் காணப்பட்டனர்.

சில நாள்கள் கழித்து டார்ன்லி பிரபுவும் ஒரு வெடிமருந்து சதியில் கொலையுண்டார். அக் கொலைக்குக் காரணமானவராகக் கருதப்பட்ட பாத்வெல் எர்ல் (Bothwell Earl) என்ற கத்தோலிக் கரை மேரி மணந்து கொண்டார். அதுவரை பொருமிக்கொண்டு வந்த ஸ்காட்டிய பிராடெஸ்டன்டுகள் மேரி ஒரு கத்தோலிக்கரை மணம் செய்துகொண்டதை எதிர்த்துக் கலகம் செய்ய, அது உள்நாட்டுப் போராகத் தொடங்கியது. சார்பெர்ரி குன்றுக் கருகே நடந்த சண்டையில் மேரி தோற்கடிக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். டார்ன்லி கொலை யாவதற்கு முன்னர் அரசிக்குப் பிறந்திருந்த ஜேம்ஸை ஸ்காட்டியர்கள் அரசராக்கினர். சிறையிலிருந்து தப்பிய மேரி மறுபடியும் லாங்ஸைடு (Longside) சண்டையில் பிராடஸ்டென்டுகளால் தோற்கடிக்கப்பட, ஸ்காட் லாந்து எல்லையைக் கடந்து இங்கிலாந்துக்குள் புகுந்தார்.

ஒரு வயதே நிரம்பியிருந்த மேரியின் மகனே ஆரும் ஜேம்ஸாக ஸ்காட்டியர்கள் மன்னராக ஏற்றுக் கொண்டிருந்தனர். பிராடஸ் டென்டு தலைவரான மோரே எர்ல் காப்பாளராக அமர்த்தப் பட்டிருந்தார்.

ஸ்காட்டியர்களின் மாஜி அரசி மேரி தம் நாட்டு எல்லைக்குள் வந்ததும் எலிஸபத் தம் பிடியை இறுக்கலானார். என்றைக்கிருந் தாலும் கத்தோலிக்கர்கள் ஒன்று சேர்ந்து மேரியை மீண்டும் ஸ்காட்லாந்துக்கு அரசியாக்க முயலுவார்கள் என்று நினைத்த எலிஸபத் தமது பிடியிலிருந்து மேரியைத் தளர்த்துவதில்லை எனவும் உறுதி கொண்டார்.

தம் இரண்டாவது கணவரான டார்ன்லியின் கொலைக்கு மேரியைப் பொறுப்பாக்கி, அவ் வழக்கினை விசாரிக்கத் தேவை யான சாட்சியங்களை மோரே எர்ல் அனுப்பும்படி எலிஸபத் பணித்தார். அதன்படி, பெயருக்கு நடத்தப்பட்ட அவ் விசாரணை யின் முடிவில், மேரியைச் சிறையில் வைத்தார். ஸ்காட்லாந்தின்

அரசுரிமையை விட்டுக் கொடுத்து விடுவதாக அறிவித்தால் விடுதலை செய்வதாக எலிஸபத் கூறியபோது, அதை மேரி ஏற்க வில்லை. கி.பி. 1570-ல் மோரே எர்ல் என்ற ஸ்காட்டியக் காப்பாளர் கொல்லப்பட்டபோது, மேரியை விடுதலை செய்து ஸ்காட்லாந்துக்கு அரசியாக அனுப்பவேண்டுமென அந்நாட்டுக் கத்தோலிக்கர்கள் கோரியபோது, எலிஸபத் மறுத்தார். தம் அண்டைய நாடான ஸ்காட்லாந்தில் கத்தோலிக்க அரசு இருக்கக் கூடாதெனவும், ஆங்கில அரசுக்கு வாரிசுரிமைகளைக் கேட்க மேரியும் சுதந்தரமாக இருக்கக் கூடாதெனவும் எலிஸபத் நினைத்தார்.

மேரி கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவராதலால், அவரின் சார்பில் ஸ்பெயினும், ஃபிரான்சும் எலிஸபத்தை எதிர்க்க ஏற்பாடுகள் செய்துவந்தன. குறிப்பாக அப்போது ஸ்பெயினை ஆண்டுவந்த இரண்டாம் ஃபிலிப்பின் உதவியை மேரி இரகசியமாகக் கோரினார். தமக்குப் படையுதவி கொடுத்தால் மூன்றே மாதங்களில் தாம் இங்கிலாந்தின் அரசியாக முடியுமென்றும், அங்குக் கத்தோலிக்க சமயத்தைப் புகுத்த முடியுமென்றும், மேரி சொல்லியிருந்தும் ஃபிலிப் வெளிப்படையாக உதவி கொடுக்கத் தயாராக இல்லை. ஆனால், மறைமுகமாக எலிஸபத்துக்குத் தொல்லை கொடுக்க நினைத்தார். அவரின் தூண்டுதலால் 1569-ல் இங்கிலாந்தின் வடபகுதியில், நார்த்தம்பர்லாந்து, வெஸ்ட்மோர்லாந்து எர்ல்களின் தலைமையில் கத்தோலிக்கர்கள் கலகம் செய்தனர். ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்த வேத புத்தகத்தையும், பிரார்த்தனை நூலையும் எரித்தனர். யார்க்ஷையரியிலுள்ள டெட்காஸ்டர் என்ற இடம்வரை முன்னேறிவந்த கலகப் படை எலிஸபத்தால் கடுமையாக நசுக்கப்பட்டது.

கத்தோலிக்கக் கலகக்காரர்கள் இரக்கமில்லாமல் அடக்கப் பட்டதைத் தொடர்ந்து அப்போதைய போப்பாண்டவரான ஐந்தாம் பயஸ் (Pius V) எலிஸபத்தைக் கி.பி. 1570-ல் பட்டநீக்கம் செய்தார். அதன்படி ஆங்கிலக் கத்தோலிக்கர்கள் எலிஸபத்தை அரசியாக ஏற்றுக்கொள்ளக் கூடாதென ஆணை கொடுக்கப்பட்டிருந்தது. இதற்கிடையே, சிறைவாசம் பெற்று வரும் மேரி தம் கையாளான ரிடால்ஃபி (Ridolfi) என்பவனை ஃபிலிப்பிடம் அனுப்பி மீண்டும் தமக்கு உதவியைக் கோரினார். அதன்படி எலிஸபத் கொலை செய்யப்பட வேண்டுமென்றும், அதைத் தொடர்ந்து ஸ்பானியர்கள் ஆல்வா டியூக் (Duke of Alva) தலைமையில் இங்கிலாந்தின்மீது படையெடுக்க வேண்டுமெனவும் ரிடால்ஃபி ஸ்பானிய மன்னரின் கவுன்சிலுக்கு யோசனைகள் தெரிவித்தார். அத் திட்டம் எலிஸபத்தின் காதுகளுக்கு எட்டி

விட்டது. இதற்கிடையே பதின்மூன்றும் போப் கிரகெரி (Pope Gregary XIII) இரு கத்தோலிக்கப் பாதிரிமார்களைச் சமயப் பிரசாரத்திற்காக இங்கிலாந்துக்கு அனுப்பலானார். தண்டித்த எலிஸபத் நிலைமை மேலும் சீர்கெடாமல் இருக்க, கி.பி. 1571-ல் தம் பாராளுமன்றம் மூலமாகப் பல கடுமையான சட்டங்களை இயற்றினர். பிராடஸ்டென்டுகளைக் கத்தோலிக்கர்களாக மாற்ற முயலுவது அரசாங்கத் துரோகமாகும். நாற்பது நாள்களுக் குள்ளாக எல்லா ரோமானியக் கத்தோலிக்கர்களும் வெளியேறி விடவேண்டும், பிராடஸ்டென்டு சமயத்தை மேற்கொள்ள மறுப்பவர்களின் உயிரும், உடைமையும் பறிக்கப்படும் என்னும் சட்டங்களை எலிஸபத் நிறைவேற்றியதற்கும் மேரி மறைமுகக் காரணரானார்.

கத்தோலிக்கத்தின் செல்வாக்கை எப்படியும் நிலைநிறுத்த வேண்டுமென ஃபிலிப் நினைத்ததைப்போல் எலிஸபத், ஸ்பெயினின் ஆதிக்கத்தைக் குலைக்கவேண்டுமென விரும்பினர். நெதர்லாந்தை ஸ்பானியப் பிடியிலிருந்து விடுவிக்க எலிஸபத் இங்கிலாந்து ஃபிரான்சு நாட்டுடன் கி.பி. 1572-ல் செய்து கொண்ட உடன்பாடு அதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

எலிஸபத்தின் கத்தோலிக்க எதிர்ப்புக் கொள்கை இங்கி லாந்தை நேரிடையாக நெதர்லாந்துப் போரில் சிக்கவைத்தது; ஸ்பானியருக்குச் சொந்தமான நெதர்லாந்தில் சுதந்தரப் போர் நடந்து வந்த காலம் அது. டச்சுக்காரர்களின் தலைவரான ஆரஞ்சு வில்லியம் இரண்டாம் ஃபிலிப்பின் கையாளால் கொலை செய்யப்பட்டுவிட்டார். நெதர்லாந்திலிருந்த பிராடஸ்டென் டுகள் எலிஸபத்தை நெதர்லாந்துக்கு அரசியாக இருக்க வேண் டினர். அதற்கிணங்காத அரசி அக் கலகக்காரர்களுக்கு லீஸ்ட்டர் எர்லின் தலைமையில் படையுதவி கொடுக்க முற்பட்டது எலிஸ பத்தின் ஆதிக்கத் தலையீட்டைக் காட்டுகிறது.

அச் சமயத்தில் கி.பி. 1586-ல் அந்தோனி பாபிங்டன் (Antony Babington) என்ற கத்தோலிக்கர் தலைமையில் எலிஸ பத்தைக் கொல்ல ஒரு சதி உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தில் கொலை, கொள்ளை, குழப்பங்களைக் கிளப்பிவிட்டு, பின் ஸ்பானி யரின் உதவியைப் பெறுவதே அச் சதிக் கும்பலின் திட்டம். ஆனால், அச் சதி முன்கூட்டியே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதால், பாபிங்டனும் அவரின் உதவியாளர்களான மற்றப் பதின்மூன்று பேர்களும் பிடித்துக் கொல்லப்பட்டனர்.

மேரிக்கும் பாபிங்டன் சதிக்கும் தொடர்புண்டு என்று கருதிய எலிஸபத் ஸ்காட்டிய அரசியைக் குற்றவாளி என நிரூபிக்க ஒரு

தனி விசாரணை நடத்த உத்தரவிட்டார். அந்த விசாரணை ஒரு கண்துடைப்பாகவே இருந்தது. தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களை ஓரளவாவது ஒப்புக் கொண்டுவிட்டால் தமக்குத் தண்டனை கிடைக்காது என்று நம்பி அப்பேதை மேரி, தமக்கும் அச் சதியில் பங்கு உண்டென அரைமனதுடன் ஒப்புக்கொண்டார். மேரியை எப்படியும் தீர்த்து விடுவதென எண்ணியிருந்த எலிஸபத், அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார். மேரிக்கு 1586-ல் மரணதண்டனை விதிக்கப்பட்டது. இரண்டுமாத காலம் அதற்கான உத்தரவில் எலிஸபத் கையொப்பமிடாமல் தயங்கிவந்தார். இறுதியில் தம் காரியதரிசி டேவிசன் மூலமாகப் பிரிவி கவுன்சிலுக்கு உத்தரவை அனுப்பித் தாம் எண்ணியதைச் சாதித்து விட்டார். மேரியின் தலை கொய்யப்பட்டது. மேரியைக் கொன்றதில் தமக்கு விருப்பமில்லையென்று பிறர் நம்பும்படியாக எலிஸபத் பாவனை செய்த போதிலும் அவரின் மரணத்திற்கு இவரே காரணம் என்பது வரலாற்றின் முடிவு.

எலிஸபத்தும் ஃபிலிப் அரசரும் (வெளிநாட்டுக் கொள்கை)

எவரொருவர் தமக்கு எதிரியாகவும், போட்டியாகவும் இருப்பாரென்று எலிஸபத் கருதினாரோ அவர் மரண தண்டனைக்குப் பலியானார். அடுத்து எவரொருவர் பிராடஸ்டென்டுகளுக்கும், இங்கிலாந்துக்கும் முதல் எதிரியாக அறிவித்துக் கொண்டு, படையெடுப்பு ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாரோ, அந்த ஸ்பானிய அரசர் இரண்டாம் ஃபிலிப்பை எதிர்க்கக் கன்னி அரசி தயாரானார்.

மேரியின் கொலைக்கு எலிஸபத் காரணமென்பதை ஸ்பானிய மன்னரான இரண்டாம் ஃபிலிப் அறிந்திருப்பினும் தம் கண்டனத்தை வார்த்தையில் காட்டவில்லை, செய்கையில் காட்ட எண்ணினார். எலிஸபத்தின் தமக்கையும் முன்னாள் அரசியுமான மேரி டியூடரின் கணவர் என்ற முறையில் ஆங்கில அரசுக்கு உரிமை கொண்டாட ஃபிலிப் எண்ணங் கொண்டார். ஆங்கில அரசுக்கு ஏகமானர் ஆகவேண்டுமென்ற அந்த ஆசையினாலேயே தாம் எலிஸபத்தை மணக்கச் சம்மதம் தெரிவித்திருந்தார். கன்னி யரசியாகக் காலத்தைக் கடத்திய எலிஸபத் ஃபிலிப்பின் விருப்பத்தை நிராசையாக ஆக்கியிருந்தார் என்பதை முன்னரே கண்டிருந்தோம். மணத்தால் சாதிக்க முடியாததைப் படைபலத்தால் சாதிக்க ஃபிலிப் எண்ணியிருப்பார் போலும்! இது தவிர வேறு சில காரணங்களும் ஆங்கில-ஸ்பானிய சச்சரவுக்கு இருக்கத் தான் செய்தன. டிரேக் போன்ற கடலோடிகள் செய்து வந்த

கடற் கொள்ளைக்கு எலிஸபத்தின் ஆதரவு இருந்த தென்பதும் ஃபிலிப்புக்குத் தெரிந்திருந்தது. ஸ்பானியக் கப்பல்களைக் கொள்ளையடித்தும் அவர்களின் துறைமுகங்களைத் தாக்கியும், ஸ்பானிய மாலுமிகளைச் சிறைபிடித்தும் கடலோடிகள் செய்துவந்த அக்கிரமச் செயல் ஃபிலிப்பின் வெறியைத் தூண்டியிருந்தது.

ஸ்பானியர்களுக்கு உரித்தாயிருந்த நெதர்லாந்தில் ஏற்பட்டிருந்த டச்சு சுதந்தரப் போரை எலிஸபத் ஊக்குவித்ததும் ஃபிலிப்புக்குக் கோபத்தை உண்டாக்கியது. அது போதாதென்று எலிஸபத்தின் பாராளுமன்றம் புதுச் சட்டங்களை இயற்றி இங்கிலாந்திலிருந்த கத்தோலிக்கர்களைச் சிறையிருத்தியதும், அவர்களின் சொத்துகளை அபகரித்து வந்ததும் ஃபிலிப்பின் ஆத்திரத்திற்குக் காரணமாயின. புதிதாகப் பதவி பெற்ற ஐந்தாம் ஸிக்ஸ்டஸ் என்ற போப்பாண்டவர் கத்தோலிக்க எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்துவந்த எலிஸபத்தைப் பட்டத்திலிருந்து நீக்கும்படி ஃபிலிப்புக்கு ஆணையிட்டார். கத்தோலிக்க சமயத்தின் காவலராகத் தம்மைக் கருதிக்கொண்ட ஃபிலிப்புக்கு அக் கட்டளை வரப்பிரசாதமாக இருந்தது.

மேற்கிந்தியப் பகுதிகளிலிருந்த ஸ்பானியக் குடியேற்றங்களைத் தாக்கிவந்த கடலோடிகளுக்கும், ஸ்பானிய ஆதிக்க எதிர்ப்புக்கும், கத்தோலிக்க எதிர்ப்பாளர்களுக்கும் தலைமை தாங்கிவந்த கன்னியரசியின் ஆட்சியைக் கவிழ்ப்பதே தம் தலையாய கடமை என்று ஃபிலிப் நினைத்தார்.

இங்கிலாந்துக்கும், ஸ்பெயினுக்கும் இடையே இனிப் போர் தப்பாது என்ற நிலை கி.பி. 1587-ல் இருந்தது. அந் நிலையில் ஸ்பானியக் கப்பற் படையை ஃபிலிப் இங்கிலாந்தின்மீது ஏவுவதற்கு முன்னரே, தம் கடலோடிகளை ஸ்பெயின்மீது ஏவிவிட எலிஸபத் துணிந்தார். டிரேக் என்பவரின் தலைமையில் 24 கப்பல்கள் கொண்ட கப்பற்படை ஸ்பெயினுக்கு அனுப்பப்பட்டது. ஸ்பானியக் கப்பற்படையின் தலைமையிடமான காடிஸ் (Cadiz) என்னும் துறைமுகம் தாக்கப்பட்டது. அங்கிருந்த நூற்றுக்கு மேற்பட்ட ஸ்பானியக் கப்பல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. தாம் ஃபிலிப்பின் தாடியைப் பொசுக்கிவிட்டு வந்ததாகப் பெருமை பேசி இங்கிலாந்துக்குத் திரும்பிய டிரேக், அரசியாரால் பாராட்டப் பெற்றார். இங்கிலாந்துக்கும், ஸ்பெயினுக்கும் இடையே தொடங்க விருந்த போருக்கு அதுவே இறுதியான காரணமாக இருந்தது.

டிரேக்கின் துணிச்சலான காரியம் ஆங்கில மக்களின் தன்னம்பிக்கையை அதிகரித்தது. அன்றைய உலகப் பேரரசான ஸ்பெயினை

எதிர்த்து நின்ற இங்கிலாந்துக்கு உதவி செய்ய நட்பு நாடுகள் இல்லை. இருப்பினும், சுயபலத்தை நம்பிப் போருக்குத் தோள் தட்டி ஆங்கிலேயர்கள் தயாராக இருந்தனர்.

இங்கிலாந்தைத் தாக்கும் திட்டத்தை ஃபிலிப் துரிதப்படுத்தினர். அவரின் திட்டம், 2600 பீரங்கிகள், 20,000 வீரர்கள் கொண்ட 130 போர்க் கப்பல்கள் ஆங்கிலக் கால்வாயில் ரோந்து சுற்றிவரும் ஆங்கிலக் கப்பல்களை விரட்டிப் புகழ்பெற்ற ஸ்பானியத்தளபதி டியூக் பார்மா (Duke of Parma) தலைமையில் 40,000 வீரர்கள் இங்கிலாந்தை அடைய உதவி செய்ய வேண்டுமென்பதே. ஃபிலிப் கூட்டிய அப் பெரிய நாவாய்ப்படை 'தோல்வி பெறுத கப்பற்படை' (The Invincible Armada) என்று அவரால் அழைக்கப்பட்டது.

அப் பெரிய ஸ்பானியக் கப்பற்படைக்கு எதிராக 800 சிறு பீரங்கிகளையும், 7000 வீரர்களையும் கொண்ட 34 கப்பல்களும், 150 சிறு படகுகளும் இங்கிலாந்தால் ஏவப்பட்டன. அப் படைக்குத் தலைவராக ஹோவர்டு (Howard) பிரபுவும், உதவியாளர்களாக ஹாக்கின்ஸ் (Hawkins), டிரேக், வால்ட்டர் ராலே போன்ற புகழ்பெற்ற கடலோடிகளும் அமர்த்தப்பட்டார்கள். கடற்போரிலே பயிற்சியும், அநுபவமும் பெற்றிருந்த மாலுமிகளும், வீரர்களும், தளபதிகளும் அப் படையில் குவிந்திருந்தால், எண்ணிக்கையில் ஆங்கிலக் கப்பற்படை சிறியதாக இருப்பினும் பெரும் குறையாகப் படவில்லை. ஸ்பானியர் கப்பற்படை கடுமையான கடற்போருக்குப் பொருத்தமில்லாததாக இருந்தது.

ஃபிலிப்பினுல் சமீபத்தில் கைப்பற்றப்பட்டு ஸ்பெயின் அரசுடன் இணைக்கப்பட்டிருந்த போர்ச்சுகலின் துறைமுகமான லிஸ்பனி (Lisbon) லிருந்து போப்பாண்டவரின் ஆசி பெற்று ஸ்பானிய ஆர்மடா (கப்பற்படை) மே, 1588-ல் புறப்பட்டது. தொடக்கத்திலிருந்தே கடற் காற்று நீலை ஸ்பானியர்களுக்கு பாதகமாக இருந்தது. தொடக்கத்தில் ஏற்பட்ட இயற்கை இடர்ப்பாடுகளைச் சமாளித்துக் கொண்டு, ஜூலை மாதம் ஆர்மடா ஆங்கிலக் கால்வாயை அடைந்திருக்க அப்போது, பிளிமத் (Plymouth) துறைமுகத்திலிருந்து புறப்பட்ட ஆங்கிலக் கப்பற்படை எதிர்ப்பட்டது. ஆர்மடாவைக் கடந்து சென்ற ஒவ்வோர் ஆங்கிலப் போர்க்கப்பலும் எட்டியிருந்தபடி ஸ்பெயினின் கப்பல்களைப் பீரங்கிகளால் தாக்கிச் சேதப்படுத்தின.

ஸ்பானியக் கப்பல்களின் எதிர்த்தாக்குதல் பலன் அளிக்கவில்லை. மிக உயரமாயிருந்த அக் கப்பல்களின் தளத்திலிருந்து

சுட்ட குண்டுகள் குறி தவறியே வீழ்ந்தன. மேலும், ஆங்கிலேயக் கப்பல்கள் சிறியவைகளானதால் வேகமாகச் செல்லக்கூடியவை, ஆர்மடாவைச் சுற்றிச் சுற்றி வந்து மேலும் சேதப்படுத்தின. பலமான சேதங்களுடன் மெல்ல ஊர்ந்து டோர்செட் (Dorset) பகுதியை அடைந்த ஆர்மடா மறுபடியும் ஆங்கிலக் கப்பல்களால் தாக்கப்பட்டது. அங்கிருந்து விரட்டப்பட்ட ஆர்மடா கலே (Calais) கரையை அடுத்து நங்கூரம் பாய்ச்சி நின்றது. இங்கிலாந்தின் கரையை அங்கிருந்து சுலபமாக அடைந்துவிடலாம். ஆனால், ஆங்கிலக் கப்பற்படை மீண்டும் குறுக்கிட்டது. டிரேக் நெருப்பு வைக்கப்பட்ட சில ஆங்கிலப் படகுகளை ஸ்பானிய ஆர்மடாவிற்கு இடையே செலுத்தினர். நெருக்கமாக நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்த பல ஸ்பானியக் கப்பல்கள் தீக்கிரையாயின. எஞ்சியவை ஸ்பெயினுக்குத் திரும்பமுடியாமல் திண்டாடி வடக்கு நோக்கி விரைந்தன. கிரேவ் லீன்ஸ் என்ற இடத்தருகே நடந்த மற்றொரு கடற்சண்டையிலும், ஸ்பானியக் கப்பல்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆங்கிலக் கால்வாயில் ஆதிக்கம் பெற வேண்டி அனுப்பப்பட்ட ஸ்பானிய ஆர்மடா அங்கிருந்து துரத்தப்பட்டது.

இங்கிலாந்தின் கரையில் தம் படைகளை இறக்குவதற்காகக் காத்திருந்த பார்மா பிரபுவுக்கு (Duke of Parma) நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. ஸ்பானிய ஆர்மடாவுக்குத் தலைமை தாங்கிய மெடினா ஸிடோனியாவுக்கும் தோல்வி மனப்பான்மை ஏற்பட்டது. கடலில் இருந்த மெடினாவுக்கும், ஐரோப்பியக் கரையில் காத்திருந்த பார்மா பிரபுவுக்கும் தொடர்பு ஏற்படவும் வழியில்லை. ஆகவே, வடக்கு நோக்கிச் செல்லவேண்டி யிருந்த ஆர்மடா ஸ்காட்லாந்தின் கிழக்குக் கடலைக் கடந்து ஆர்க்னித் தீவுகளை (Orkney) வலம் வந்து அயர்லாந்தைச் சுற்றிக்கொண்டு, இறுதியாக ஸ்பெயினை அடைந்தது. 130 போர்க் கப்பல்களோடு புறப்பட்ட ஆர்மடா, 50 கப்பல்களுடன் ஸ்பெயினை அடைந்ததிலிருந்து ஃபிலிப்பின் முயற்சி படுதோல்வியாக முடிந்ததெனச் சொல்லலாம்.

ஒரு கடற்போரில் வெற்றிபெற்ற இங்கிலாந்து 1589-ல் மற்றொரு போரில் இறங்கத் தீர்மானித்தது. வால்ஷிங்காம் (Walsingham), டிரேக் போன்ற போர்விரும்பிகளின் தூண்டுதலால், ஸ்பெயின் விவகாரத்தில் தலையிட எலிஸபத் எண்ணினார். அத் தருணத்தில் ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுபட போர்ச்சுகலில் டாம் அன்டோனியோ என்பவரின் தலைமையில் கலகம் ஏற்பட்டது. ஸ்பானிய ஆர்மடாவைவிடப் பெரிதான ஓர் ஆங்கிலக் கப்பற்படை டிரேக்கின் தலைமையில் போர்ச்சு

கலுக்கு அனுப்பப்பட்டது. கொருஞ என்ற இடத்தில் கரை இறங்கிய ஆங்கிலப் படைகள், அந்த நகரை நாசமாக்கிவிட்டு லிஸ்பனை நோக்கி விரைந்தன. ஆயின் எதிர்பார்த்தபடி ஸ்பெயினின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்ச்சுகலில் கலகங்கள் ஏதும் ஏற்படாது போனதால் உற்சாகமிழந்த ஆங்கிலப்படைகள் லிஸ்பனைக் கைப்பற்ற முடியாமல், நாடு திரும்பின. ஸ்பெயினின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போர்ச்சுகலில் தங்கள் படைகளை இறக்கி, சில பட்டணங்களைத் தாக்க முடியுமென ஆங்கிலேயர்கள் நிரூபித்தனரே தவிர ஆங்கில ஆர்மடாவும் தன் குறிக்கோளில் தோல்வியடைந்தது என்றே சொல்லலாம்.

ஸ்பெயினைத் தாக்கும் முயற்சியில் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியாததால், அவர்களின் தென் அமெரிக்கப் பகுதிகளைத் தாக்க எலிஸபத் திட்டமிட்டார். அதன்படி கி.பி. 1591-ல் அட்மிரல் தாமஸ் ஹோவர்டு, சர் ரிச்சர்டு கிரான்வெல் (Sir Richard Granwell) தலைமையில் அஜோரிஸ் (Azoris) பகுதியைத் தாக்க, ஒரு கப்பற்படை அனுப்பப்பட்டது. ஸ்பானியர்களின் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல், தம் கப்பல் களுடன் அட்மிரல் ஹோவர்டு திரும்பிவிட்டார். இருப்பினும் தம் கப்பலில் இருந்துகொண்டே ஒருநாள் முழுவதும் ஸ்பானியக் கடற்படையை எதிர்த்துக் கிரான்வெல் வீரப்போர் செய்தும் பயன் இல்லை. அன்றிரவு வீசிய கடுமையான புயல், ஆங்கிலக் கப்பல்களையும், மற்ற ஸ்பானியக் கப்பல்களையும் கடலிலே மூழ்கடித்தது.

மற்றோர் ஆர்மடா முயற்சியில் இரண்டாம் ஃபிலிப் ஈடுபட்டிருந்ததாகக் கேள்வியுற்ற எலிஸபத் கோபங்கொண்டு, ஹாக்கின்ஸ், டிரேக் என்ற புகழ்பெற்ற கடலோடிகளின் தலைமையில் கி.பி. 1595-ல் ஸ்பானிய மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்க ஆங்கிலக் கப்பற்படையை ஏவி விட்டார். ஆயின், போகும் வழியில் கடல் நோயினால் பாதிக்கப்பட்டு அவ் விருவரும் இறந்து போக, மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்கும் முயற்சி கைவிடப் பட்டது

கி.பி. 1596-ல் சர் வால்டர் ராலே தலைமையில் அனுப்பப் பட்ட ஆங்கிலக் கப்பற்படை காடிஸ் (Cadiz)என்ற ஸ்பானியத் துறைமுகத்தைக் கைப்பற்றி எரித்தது. ஆத்திரமடைந்த இரண்டாம் ஃபிலிப் அதனால் தம் தளபதிகளின் யோசனைகளையும் புறக்கணித்து, இரண்டாம் ஆர்மடாவை இங்கிலாந்தின்மீது ஏவினார். ஆயின், அந்த ஸ்பானியக் கப்பற்படை கடுமையான புயலில் சிக்கி நாசமாகியது.

கி.பி. 1597-ல் சர் வால்டர் ராலே என்ற கடலோடியின் கீழ் ஒரு கப்பற்படை ஆஜோரஸ் தீவுக்கு ஏவப்பட்டது. ஸ்பானிய பொக்கிஷக் கப்பல்களைத் தாக்கி, அதன் பொருள்களைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு சென்ற ஆங்கிலக் கப்பற் படைக்கு ஏமாற்றமே காத்திருந்தது. இருப்பினும் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் அவை நாடு திரும்பின. வெறுப்படைந் திருந்த ஃபிலிப் தம் மூன்றும் ஆர்மடாவையும் ஏவினார், அதுவும் புயலால் அழிக்கப்பட்டது.

இவ்விதம் எலிஸபத்தின் இங்கிலாந்து இரண்டாம் ஃபிலிப்பின் படையெடுப்பு முயற்சியை முறியடித்தது மல்லாமல் ஸ்பெயினி லிருந்து ஸ்பானிய அமெரிக்காவரை பரந்து கிடந்த கடலில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியது. அதற்கிடையே தம் எண்ணம் நிறைவேறுதவரான ஸ்பானிய மன்னரான இரண்டாம் ஃபிலிப் 1598-ல் காலமாகிவிட்டார்.

இலக்கிய மலர்ச்சி

எலிஸபத்தின் ஆட்சிக்காலம் (இங்கிலாந்து) வரலாற்றில் ஒரு பொற்காலமாகப் போற்றப்படுகிறது. தம் 45 ஆண்டுக்கால அரசாட்சியில் இங்கிலாந்தை வளமுள்ள நாடாக ஆக்கியது மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கிடையே அந்த நாட்டைக் குடி யேற்றங்களிலும், வியாபாரத்திலும் முன்னேறிய முக்கிய நாடாக அறிமுகப்படுத்தினர். உள்நாட்டுக் குழப்பங்களை அடக்க வெளி நாட்டுப் படையெடுப்பைத் தவிர்த்து இங்கிலாந்தின் சுதந் தரத்தைக் காத்தார். அது மட்டுமல்லாமல் ஆங்கில இலக்கியத் தில் எழுந்த மலர்ச்சியும் இவரின் காலத்திய இன்னொரு விசேட மாகும்.

'இசைபாடும் இங்கிலாந்து' எனப் பெருமையுடன் அழைக்கப் படும் எலிஸபத்தின் இங்கிலாந்தில் பல கவிஞர்கள், இலக்கியக் கர்த்தாக்கள், நாடக ஆசிரியர்கள் போன்றவர்கள் பெரும் புகழுடன் வாழ்ந்தனர்.

சமயப் பாடல்களை இனிமையாகப் பாடக்கூடிய திறமை கொண்டிருந்த பல இன்னிசைக்குரல் மன்னர்களும், அதனை இயற்றிய பாடலாசிரியர்களும் (எலிஸபத்தின்) இங்கிலாந்துக்குப் புகழ்தேடிக் கொடுத்தனர். அவர்களிலே டேலிஸ் (Dalis), பைரடு, (Byrd), ஆர்லாண்டோ (Orlando), கிப்பன்ஸ் (Gibbons) என் பவர்கள் முக்கியமானவர்கள். எழுத்துலகத்தில் ஷேக்ஸ்பியர் (Shakespeare) பெற்ற பெருமைக்கு ஈடாக இசை யுலகில் பைரடு

(Byrd) புகழ் பெற்றிருந்தாரென்றால் அது மிகையாகாது. ஐரோப்பா முழுவதும் அவர்களின் கீர்த்தி பரவியிருந்தது.

இசைச் செய்யுளிலும் (Lyric) பிரமாதமான முன்னேற்றமிருந்தது. அத் துறையில் வேறு எந்த மொழியிலும் இல்லாத ஆசிரியர்கள் இருந்தது (எலிஸபத்) இங்கிலாந்தின் தனிச் சிறப்பாகிறது. மகாகவி ஷேக்ஸ்பியரால் புகழப்பட்ட பெருமைக்குப் பாத்திரமான பென் ஜான்ஸன் (Ben Johnson), தாமஸ் ஃபோர்டு (Thomas Ford) என்ற இசைச் செய்யுள் கர்த்தாக்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

கவிதைகள் (Poetry) பலவும் இக் காலத்தில் எழுதப்பட்டன. சர் ஃபிலிப் சிட்னி, எட்மண்டு ஸ்பென்சர் போன்றவர்கள் அதில் புகழ் பெற்றிருந்தனர். குறிப்பாக, சரித்திரப் பின்னணியில் ஸ்பென்சரால் அமைக்கப்பட்ட பல கவிதைகள் நீங்காப் புகழ் பெற்றன. அவருடைய நீளமான கவிதையாக 'தேவதை இராணி' (Fairy Queen), அமைந்தது. 'சர் கயான்' (Sir Guyon) 'டெம்பரன்ஸ்' (Temperance) 'செஞ்சிலுவை வீரர்' (Red Cross Knight) போன்ற மற்றக் கவிதைகளும் புகழ்க் காவியங்களாக அமைந்தன. நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாகக் கவிதைகளில் வடித்துக்காட்டிய ஸ்பென்சர் அத் துறையில் அக் காலத்திய முடிசூடா மன்னராகவே விளங்கினார்.

நாடகக்கலையிலே எலிஸபத் இங்கிலாந்து உச்ச நிலையை அடைந்தது எனச் சொல்லலாம். பீல் (Peele), கிரீன் (Greene), நேஷ் (Nash) போன்ற நாடகாசிரியர்கள் சமயத் தொடர்பு அற்ற நாடகங்களை எழுதிப் புகழ்பெற்றனர். அவ் வரிசையில் வந்தவரே கிரிஸ்டோபர் மார்லோவ் (Christopher Marlowe) என்ற புகழ்பெற்ற நாடக ஆசிரியர். ஷேக்ஸ்பியரின் முன்னோடியாகக் கருதப்படும் மார்லோவின் எழுத்துகளே அம் மகாகவியின் நாடக ஆக்கத்துக்கு உற்சாகம் கொடுத்தனவாம். மார்லோவ் எழுதிய 'யூதன்' என்ற நாடகப்பாத்திரமே ஷேக்ஸ்பியர் வடித்த 'ஷைலாக்' என்ற பாத்திரமாக அமைந்தது. மார்லோவ் எழுதிய 'இரண்டாம் எட்வர்டு', ஷேக்ஸ்பியரின் 'இரண்டாம் ரிச்சர்டு' என்ற நாடகத்திற்கு முன்னோடியாக அமைந்தது.

நாடக ஆசிரியர்களிலே உலகப் புகழ் பெற்றுவிட்ட மகாகவி ஷேக்ஸ்பியர் (Shakespeare) தம் இலக்கியத்தொண்டைத் தொடங்கியது இக் காலத்திலேயே.

ஸ்டேரட்-ஆன்-ஆவன் (Strat-on-Avon) என்னுமிடத்தில் ஒரு வியாபாரியின் மகனாகக் கி.பி. 1564-ல் பிறந்த வில்லியம் ஷேக்ஸ்பியர், இலக்கணப் பள்ளியிலேயே தம் கல்வியை முடித்துக் கொண்டார். 1588-ல் இலண்டனுக்கு வந்த ஷேக்ஸ்பியர் நாடக நடிகர்களுக்கு வசனம் எழுதித்தரும் பணியில் அமர்ந்தார். அந்த அனுபவத்தில் தேர்ச்சி பெற்று, பல புகழ்பெற்ற பாடகர்களுக்கு ஆசிரியர் என்ற புகழைப் பிற்காலத்தில் பெற்றவரானார்.

அக் காலத்திய மன்றத்தின் குறைகள் நிரம்பிய பேச்சை நையாண்டி செய்து எழுதிய 'Love's Labour's Lost' என்ற நாடகமே அவரின் முதல் படைப்பு. உலக காதல் நாடகங்களிலே அமரத்துவம் பெற்றிருக்கும் 'ரோமியோ அண்டு ஜூலியட்' (Romeo and Juliet) என்ற புகழ்பெற்ற நாடகமும், ஆரும் ஹென்றி, இரண்டாம் ரிச்சர்டு, மூன்றும் ரிச்சர்டு, அரசர் ஜான் போன்ற நாடகங்களும் ஆரம்பகாலத்தில் எழுதப்பட்டனவாகும்.

அவரின் இடைக்காலத்தில் 'தி மெர்ச்சன்ட் ஆஃப் வெனிஸ்' (The Merchant of Venice), மிட் சம்மர் நைட் டிரீம் (Mid-summer Night Dream), டுவல்த் நைட் (Twelfth Night), ஆஸ் யு லைக் இட் (As you like it), போன்ற இன்ப இயல் (Comedy) நாடகங்கள் எழுதப்பட்டன.

கி.பி. 1599 - 1609-ல் ஜூலியஸ் சீசர் (Julius Caesar), ஹாம்லட் (Hamlet), ஒத்தல்லோ (Othello), மாக்பெத் (Macbeth), அரசர் லியர் (King Lear), அன்டோனி கிளியோபட்ரா (Antony and Cleopatra) போன்ற அற்புதமான சோக நாடகங்களையும் எழுதினர். அவரின் கடைசிக் காலத்தில் ஸிம்பலென் (Cymbeline), வின்டர்ஸ் டேல் (Winters Tale), டெம்பஸ்ட் (Tempest) போன்ற நாடகங்களையும் அம் மகாகவி உருவாக்கினர்.

டியூடர்களின் காலத்திய அரசியல் சிக்கல்களையோ, கத்தோலிக்க-பிராடஸ்டென்டு சமயப் பிரச்சினையையோ, ஷேக்ஸ்பியர் தாம் எழுத்தில் வடித்த நாடகங்களில் புகுத்தவில்லை. அரசியல் முக்கியத்துவம் கொடுக்காமலேயே, இரண்டாம் ஜான் ரிச்சர்டு, மூன்றும் ரிச்சர்டு, நான்காம் ஹென்றி, ஐந்தாம் ஹென்றி, ஜூலியஸ் சீசர், அந்தோனி கிளியோபட்ரா போன்ற வரலாற்றுப் பாத்திரங்களை ஷேக்ஸ்பியர் படைத்தார். ஆயின் அவருடைய நாடகங்களிலே நாட்டுப்பற்று மிகுந்திருந்தது. ஷேக்ஸ்பியரின் நாடகங்களும், அவரால் படைக்கப்பட்ட கதாபாத்திரங்களும் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவனாக எழுதப்பட்டபோதிலும், அவர் வாழ்ந்த (எலிஸபத்) இங்கிலாந்தின் பிரதிபலிப்பாக

அந் நாடகங்கள் அமைந்திருந்தன. ஷேக்ஸ்பியர் தம் அமர எழுத்துகளால் தமக்கும், தம் நாட்டுக்கும், தம் அரசிக்கும் அழியாப் புகழைத் தேடிக் கொடுத்தார்.

இங்ஙனம் பற்பல நிகழ்ச்சிகள் நிரம்பிய இங்கிலாந்தின் வரலாற்றுத் தலைவியாக ஆட்சி செய்த எலிஸபத் தம் எழுப தாவது வயதில் (1603) காலமானார். கன்னியரசியாகவே அவரின் காலம் முடிந்ததால் அவருடன் டியூடர் அரச மரபும் முடிந்தது.

எட்டாம் ஹென்றிக்கு வேறு வாரிசு இல்லாததாலும், மேரி டியூடருக்கு மகப் பேறே இல்லாததாலும் எலிஸபத் கன்னி யாகவே காலமானதாலும், ஸ்காட் மேரியின் மகனை ஆரும் ஜேம்ஸ் (James VI) என்ற ஸ்காட்லாந்து மன்னர் தம் தாய் வழியி லேயே ஏழாம் ஹென்றிக்கு உதவியாளரானதால் கி.பி. 1603-ல் எலிஸபத்தின் வாரிசாகவும், இங்கிலாந்தின் மன்னராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவரால், முதலாம் ஜேம்சுடன் தொடங்கியதே ஸ்டுவர்டுகளின் காலமாகும்.

8. ஸ்டுவர்டுகள் (The Stuarts) காலம்



(அ) முதலாம் ஜேம்ஸ் (1603 - 1625)

ஸ்டுவர்டுகளின் காலம் இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு திருப்பத்தைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது. அவர்களின் காலத்தில் ஏற்பட்ட பல முக்கிய நிகழ்ச்சிகளில் சில வருங்கால வரலாற்றை மாற்றும் தன்மையைக் கொண்டிருந்தன. அவற்றிலேயே வரம்புக்கு உட்பட்ட முடியரசு என்ற அரசியல் முறையும் ஒன்றாகும். நாட்டின் சட்ட வரம்பிற்கு உட்பட்டே மன்னர் ஆளவேண்டும் என்ற அரசியல் தத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டி அரசர்மீது பாராளுமன்றம் தொடங்கிய போராட்டத்தின் ஆரம்ப கட்டமாக ஜேம்ஸ் ஸ்டூவர்டின் (1603—1625) காலம் அமைந்தது.

ஜேம்ஸ், தம்மை ஆசிரியரென்று அழைத்துக்கொள்ளப் பெருமை கொண்டவராகவும், அதற்கேற்ப நூற்கல்வியில் புலமை பெற்றவராகவும் இருந்தபோதிலும், தாம் ஆளவந்த நாட்டின் சட்டங்களைப்பற்றியும் மக்களின் மனநிலையைப் பற்றியும் சரிவர உணரும் திறமை இல்லாதவராக இருந்தார்; ஸ்காட்லாந்தின் அரசியல் சிக்கலைத் தீர்க்கத் தெரிந்த முதலாம் ஜேம்ஸுக்கு இங்கிலாந்தின் அரசியல் சிக்கலாகவே இருந்தது. அதைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றலோ, தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமோ அவருக்கு இல்லாமலிருந்தது. தாம் ஆளவேண்டியிருக்கும் புது நாடான இங்கிலாந்தைப் புரிந்துகொள்ள முடியாத அறியாமையின் காரணமாக ஜேம்ஸ் காலத்தில் பாராளுமன்றத்தின் உரிமைப் போராட்டம் தொடங்கியது.

ஜேம்ஸின் தெய்வீக உரிமைக் கொள்கை

தெய்வீக உரிமைக் கொள்கையைப் (Divine Right Theory) பற்றிய கட்டுரைக்கு ஆசிரியரான ஜேம்ஸ் அக் கொள்கையைப் பேச்சில் போதித்தார்; செயலில் காட்டவும் முயன்றார். அரசருக்கும் அவர் காலத்திய பாராளுமன்றத்துக்கும் ஏற்பட்ட மோதலுக்கு அரசரின் அக் கொள்கையே முதல் காரணமாக இருந்தது. தெய்வீக உரிமைக் கொள்கையின்படி, அரசர் ஆண்டவனின் பிரதிநிதியாவார்; அவரின் பிரதிநிதியாக ஆளும் தகுதி பெற்றவர்; அவராலேயே ஆண்டவன் என அழைக்கப்படுபவர். ஆண்டவனைப் போலவே அரசரும் தம் அடிப்படை அதிகாரங்களில் சிலவற்றை மக்களுக்கு அளிக்கிறார். ஆகவே, அரசரின் செயலை எவ்வித மறுப்புமின்றி ஒப்புக்கொள்ள வேண்டும்;

கடவுளின் செயல்களை எதிர்ப்பது தெய்வீக நிந்தனையாதலைப் போன்ற, அரசர் செய்யும் முடிவை எதிர்ப்பது அரசப் பகைமையாகும். அக் கொள்கையின்படி, அரசர் தாம் செய்யும் காரியங்களுக்கு ஆண்டவனிடமே பதில்சொல்ல வேண்டியவரே தவிர மக்களிடம் அன்று என்பதாகும். அக் கொள்கையை ஒட்டிச் சட்டத்திற்கு உட்படாத வரம்பற்ற ஆட்சியை நிறுவவே அரசர் முதலாம் ஜேம்ஸ் விரும்பினார்.

இங்கிலாந்தைத் தம் மனைவி யெனவும் தாமே அதன் கணவர் எனவும் பெருமை பேசித் திரிந்த ஜேம்ஸுக்கும், நாட்டின் அடிப்படைச் சட்டங்களுக்கு உட்பட்டே அரசர் ஆளவேண்டுமெனக் குரல் கொடுத்த பாராளுமன்றத்திற்கும், அவ் வரசர் காலத்தில் சச்சரவு மூண்டதில் ஆச்சரியமில்லை.

ஜேம்ஸ் காலத்திய பாராளுமன்றத்தில் பியூரிட்டானியர்கள் (The Puritans) பெரும்பான்மை பெற்றிருந்தனர். தனி மனிதரின் உரிமைக்காக முழக்கமிட்டவர்களே பியூரிட்டானியர்கள். முக்கிய அரசியல் சிக்கல்களை அரசர் தம் பாராளுமன்றத்தோடு கலந்தாலோசித்தே முடிவு செய்யவேண்டுமென பியூரிட்டானியர்கள் கோரினர். தமக்கு ஆலோசனை சொல்லக்கூடிய தகுதியோ, உரிமையோ அப் பாராளுமன்றத்திற்குக் கிடையாது என்பது ஜேம்ஸின் வாதம். ஆங்கிலப் பாராளுமன்றத்தின் உயர்ந்த நிலையையும், பியூரிட்டானியர்களின் கொள்கைத் தீவிரத்தையும் புரிந்துகொள்ள முடியாதபடி, அவரின் தெய்வீக உரிமைக் கொள்கை ஜேம்ஸின் அரசியல் அறிவை மங்கச் செய்திருந்தது.

மக்கள் மன்றத்தைப் பதிவு மன்றமாக மாற்ற நினைத்த ஜேம்ஸுக்கும் வரம்பற்ற ஆட்சியை மாற்றி வரம்பிற்குட்பட்ட அரசை நிறுவ நினைத்த பாராளுமன்றத்திற்கும் நான்கு முக்கியக் கொள்கைகளில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

மதப்பிரச்சினை

மதப்பிரச்சினையே முதலாவதாக நின்றது. எலிஸபத்தால் செய்யப்பட்டிருந்த சமய ஏற்பாடு அவ் வரசியின் ஆட்சிக்காலம் முழுவதும் நீடித்திருந்தது. அச் சமய ஏற்பாட்டினால் நிறுவப்பட்டிருந்த ஆங்கிலிகன் திருச்சபைக்குக் கட்டுப்பட்டிருந்த பியூரிட்டானியர்கள் ஒரு சில மாற்றங்களை விரும்பினர்கள். ஸ்காட்டிய பிராடஸ்டென்டு சமயத்தின் கட்டுப்பாடுகளில் அதுவரை வாழ்ந்துவந்த ஜேம்ஸ் தங்களுக்கு எலிஸபத் காலத்தில் மறுக்கப்பட்ட சமய உரிமைகளைக் கொடுப்பாரென பியூரிட்டானியர்கள் எதிர்பார்த்தனர். கி.பி. 1603-ல் ஆயிரம் பியூரிட்டானியர்கள்

கையொப்பமிட்டதாகக் கருதப்படும் ஒரு விண்ணப்பம் ஜேம்ஸுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அக் குறைப் பத்திரத்திற்கு 'ஆயிரவர் விண்ணப்பம்' (Millenary Petition) எனப் பெயர் கொடுக்கப் பட்டது. குருமார்கள் வெண்ணிற நீள அங்கியை விருப்பம்போல் அணிவதற்கு அனுமதியும், பதவி சார்ந்த பிரமாணம் எடுக்க வேண்டும் என்பதை நீக்குதல் போன்ற ஒரு சில மாற்றங்களேயுமே, அவ் விண்ணப்பத்தில் பியூரிட்டானியர்கள் கோரியிருந்தனர். அவர்களின் கோரிக்கையை அமைப்புக்கு உட்பட்ட வகையில் சட்ட முறையாக்க ஆம்டன் கோர்ட்டில் (Hampton Court-1604) ஜேம்ஸ் மாநாடு கூட்டினார். அங்குக் குழுமியிருந்த பியூரிட்டானியர்களின் பிரதிநிதிகள் சில யோசனைகளைக் கூறினர். அவற்றிலே, பாதிரிமார்கள் பிரஸ்பிடீரியருடன் கூட்டம் நடத்தி அவர்களது யோசனைகளைக் கேட்கவேண்டு மென்பது ஒன்றாகும். அந்த யோசனைகளை ஏற்றுக்கொண்டால் அது பியூரிட்டானியர் களின் செல்வாக்கை அதிகரித்து, நாட்டிலே குடியாட்சிக் கருத்து களைத் தோற்றுவிக்குமென ஜேம்ஸ் எண்ணினர். ஆகவே, 'பிரஸ்பிடீரியர்களுக்கும் குடியாட்சிக்கும் உள்ள உறவு, இறை வனுக்கும் பேய்க்கும் இருக்கக்கூடிய உறவை ஒத்தது. அப்படி யானால் கண்டவரெல்லாம் தங்களின் விருப்பப்படி, என்னையும் என் மன்றத்தையும் கண்டனம் செய்வார்கள். பாதிரிமார்கள் இல்லையேல் மன்னரும் இல்லை' என்று ஜேம்ஸ் அமைதியாகவே விளக்கினர். அத்துடன் நிறுத்தியிருந்தால் கசப்புணர்ச்சியைத் தவிர்த்திருக்கலாம். கூடியிருந்த பியூரிட்டானியர்களைப் பார்த்து, 'உங்கள் எல்லாரையும் ஆங்கிலிகத் திருச்சபையை ஒப்புக்கொள்ளச் செய்வேன். ஒப்புக்கொள்ளாதவரை நாட்டை விட்டே விரட்டி அடிப்பேன்,' என்று கோபத்தில் ஜேம்ஸ் கொட்டிய வார்த்தைகள் பியூரிட்டானியர்களின் விரோதத்தை யும் தேடிக்கொடுத்தது. ஜேம்ஸ் சாடிய சுடு சொற்கள் ஆம்டன் கோர்ட் மாநாட்டை முடித்தது; ஆயின், பியூரிட்டானியர்களின் எதிர்ப்பை ஆரம்பித்து வைத்தது. மாநாட்டின் முறிவைத் தொடர்ந்து 300 ஆங்கில பியூரிட்டன் குருமார்கள் தங்களின் வாழ்க்கை வழியை இழந்தனர். சமய உரிமையைத் தேடிச் சில பியூரிட்டன்கள் ஹாலந்து நாட்டில் புகலிடம் தேடினர். உள்ளத்தில் உறுதி பூண்ட மற்ற பியூரிட்டானியர்கள் பாராளு மன்றத்தின் உள்ளும் வெளியும் அரசருடன் சச்சரவைத் தொடங்கத் தயாராயினர்.

எலிஸபத்தின் ஆட்சியின் கடைக்காலத்தில் கத்தோலிக் கருக்கு எதிராகச் சில தடைச்சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தன. கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்திருந்த மேரி (ஸ்காட்) யின்

மகனை முதலாம் ஜேம்ஸ் காலத்தில் அவை நீக்கப்படுமென ஆங்கிலக் கத்தோலிக்கர்கள் எதிர்நோக்கினர். ஜேம்ஸும் தமது கத்தோலிக்கக் குடிமக்களிடையே அமைதியை நிலைநாட்டவே விரும்பினர். தண்டனைச் சட்டங்களைத் தளர்த்தி மறைவில் வாழ்ந்துவந்த கத்தோலிக்கர்களின் பாதிரிமார்க்குப் பிரசாரச் சுதந்தரம் அளித்தார். அதனை ஒட்டி அதுவரை இரகசியமாக இருந்து வந்த கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை பிராடஸ்டெண்டுகள் அச்சப்படும் அளவுக்கு வளர்ந்தது. பிராடஸ்டெண்டுகள் எழுப்பிய கண்டனக் குரலுக்குப் பணிந்து ஜேம்ஸ் அச்சலுகையை ரத்து செய்தார். தாம் முன்பு கொடுத்த வாக்குறுதியை மீறி ஆலயம் தொழாமைக் குற்றத்திற்கு அபராதங்களை விதிக்கச் செய்தார். அதனால் கொதிப்படைந்த கத்தோலிக்கர்கள் வெடி மருந்துச் சதியை (Gun Powder Plot) உருவாக்கினர். அதன்படி, அரசரையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மன்றம் கூடியிருக்கும்போது வெடிவைத்துத் தகர்க்கவேண்டுமென இரகசியத்திட்டம் தீட்டப்பட்டது. அத்திட்டம் ஈடேறவில்லை யெனினும், அது கத்தோலிக்க எதிர்ப்பு உணர்ச்சியை நாடெங்கிலும் பரப்பியது. அந்த எதிர்ப்பின் எதிரொலியாகக் கத்தோலிக்கர்கள்மீது கடுமையான சட்டங்களை அரசர் கொண்டுவரவேண்டுமென பியூரிட்டானியர்கள் கூப்பாடு போட ஆரம்பித்தனர்; கத்தோலிக்க உறவே கூடாதெனவும் கூக்குரலிட்டனர். அதனை மீறி, அரசர் தம் வெளி நாட்டுக் கொள்கையில் செயல்பட்டபோது, பியூரிட்டானியர்களின் கோபத்திற்கும், விரோதத்திற்கும் ஆளானார்.

வெளிநாட்டுக் கொள்கை

ஜேம்ஸுக்கும் அவரின் பியூரிட்டானியப் பாராளுமன்றத்திற்கும் அடுத்த பிரச்சினையாக அரசரின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்தது.

போரையும் பூசலையும் விரும்பாத ஜேம்ஸ் தம்மை 'அமைதிப் பிரியர்' என அழைத்துக்கொண்டார். எலிஸபத் அரசியின் காலத்தில் தொடர்ந்து வந்த ஸ்பானிய எதிர்ப்புக் கொள்கையைக் கைவிட்டார்; ஸ்பானியத் தூதுவரான கோண்டோமார் (Gondomer) ஆங்கில அரசரின் அபிமானம் பெற்றவராக இருந்திருக்கிறார் என்பதிலிருந்து ஜேம்ஸ் ஸ்பெயினுக்கு நேசக் கரம் நீட்டியிருந்தார் என்றே புலப்படுகிறது. ஸ்பானியத் தூதுவரின் நல்லெண்ணத்தைப் பெறவே இளவரசர் கி.பி. 1618-ல் சர். வால்டர் ராலே என்ற கடலோடிக்கு மரண தண்டனை விதித்தார்.

ஸ்பானியக் கப்பல்களையும் காலனிகளையும் எலிஸபத் காலத்தில் தாக்கிக் கொள்ளை அடித்துவந்த கடலோடிகளில் ராலேயும் குறிப்பிடத் தக்கவர். ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்ததும் தமக்கு எதிராகச் சதிசெய்த குற்றத்திற்காக ராலேயைக் கைது செய்து சிறையில் அடைத்தார். தமக்கு விடுதலை யளித்தால் கயானாவிலிருந்து நிறையத் தங்கம் கொண்டுவந்து தருவதாக ராலே கூறியதின்பேரில் 1617-ல் அவருக்கு விடுதலை கிடைத்தது; ஆனால், ஸ்பானியர்களோடு சண்டையிடக் கூடாதென்ற நிபந்தனைக்குக் கட்டுப்படுத்தப்பட்டார். அதற்கு ஒப்புக்கொண்ட ராலே கயானாப் பகுதிக்குப் பயணத்தை மேற்கொண்டார். எதிர் பார்த்ததுபோல் அங்குத் தங்கம் கிடைக்கவில்லை. ஆனால், ஸ்பானிய வீரர்களோடு கைகலக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட, ஒரு சில ஸ்பானியர்கள் கொல்லப்பட்டனர். இங்கிலாந்திலிருந்த ஸ்பானியத் தூதுவரான கோண்டோமார் ராலேயைத் தண்டிக்க அரசரிடம் கோரினார். தங்கம் எதுவும் கொணராமல் நாடு திரும்பிய ராலே அரசரால் மரண தண்டனை விதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். எலிஸபத் காலத்தில் கடலோடியான டிரேக் தண்டிக்கப்பட வேண்டுமென ஸ்பானிய அரசு கேட்ட போது அவ் வரசியார் அதை நிராகரித்ததை இங்கு நாம் நினைவு படுத்திக்கொள்ளவேண்டும்.

அதே சமயத்தில்தான் ஜெர்மனியில் முப்பதாண்டுப் போர் (Thirty Years War) தொடங்கிற்று. கத்தோலிக்க ஆஸ்திரியப் பேரரசுக்கு எதிராகக் கலகம் செய்த பிராடஸ்டென்டு பொஹீமியர்கள் தங்களின் நாட்டின் அரசுரிமையை ஜேம்ஸின் மருமகனும் பாலடினேட் சிற்றரசருமான ஃபிரடரிக்குக்கு (Frederick) வழங்கினர். அதற்கு ஒப்புக்கொண்ட ஃபிரடரிக் பின்னர் ஆஸ்திரியர்களால் விரட்டப்பட்டார். தம் மகளின் கணவரான ஃபிரடரிக்கின் நலனையும் பிராடஸ்டென்டுகளின் நலனையும் எவ்விதம் பாதுகாக்கப்போகிறார் எனக் கேள்விக்குறி எழுந்தது. பாமர மக்களின் சமய வெறியுணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவராகத் தம்மைக் கருதிக்கொண்ட ஜேம்ஸ், மற்றவர்கள் எதிர்பார்த்தது போல் பிராடஸ்டென்டுகளின் சார்பில் போரில் இறங்கவில்லை. தாம் நட்புக் கொண்டிருந்த ஸ்பானிய அரசு ஆஸ்திரியரை அமைதியான முறையில் வற்புறுத்தித் தம் மருமகனின் நலனைப் பாதுகாக்கும் என ஜேம்ஸ் எண்ணிய நேரத்தில், ஸ்பானியப் படைகள் பாலடினேட்டையும் கைப்பற்றின. ஃபிரடரிக்கும் அவரின் மனைவியும் ஜேம்ஸின் மகளுமான எலிஸபத்தும் நாடு கடத்தப் பட்டனர். ஆனால், ஜேம்ஸ் போரில் குதிக்க நினைக்கவில்லை.

பியூரிட்டானியப் பாராளுமன்றத்தில், அரசர் பிராடஸ்டென்டுகளுக்கு உதவும் வகையில் முப்பதாண்டுப் போரில் இறங்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டபோதும் ஜேம்ஸ் வாளாவிருந்தார். எலிஸபத் காலத்திய ஸ்பானிய எதிர்ப்புச் சூழ்நிலையில் வாழ்ந்த ஆங்கிலப் பிராடஸ்டென்டுகள் நிரம்பியிருந்த இங்கிலாந்தில் அரசருடைய போக்கு ஒரு புதிராக இருந்தது. இருப்பினும் ஜேம்ஸின் எண்ணம் ஒரு திட்டத்தில் பதிந்திருந்தது. சமய வெறியும் உறவு வெறியும் போர் வெறியாக மாறுவது அறிவீனம் என நினைத்த ஜேம்ஸ் அமைதியான வழியிலே அப்பிரச்சினையைத் தீர்க்க நினைத்தார். தம் இரண்டாவது மகனான சார்லசுக்கும், ஸ்பானிய இளவரசிக்கும் திருமண உறவை ஏற்படுத்தி, பின் ஸ்பானியச் செல்வாக்கின் உதவிபெற்று, இழந்த பகுதிகளைத் திரும்பப் பெறுவதற்கான வழியைத் தேடலாம் என ஜேம்ஸ் மனப்பால் குடித்தார். அதனால் பாராளுமன்றத்தின் எதிர்ப்பையோ, மக்களின் முணுமுணுப்பையோ பொருட்படுத்தாதவராக ஜேம்ஸ் நடந்துகொண்டார். ஸ்பானிய மண உறவு ஏற்பட்டால், ஆங்கில அரியணையில் ஸ்பானிய வழி மரபினர்களும் கத்தோலிக்க அரசர்களுமே அமர்ந்து ஆங்கில நாட்டு அரசியல் சமயக் கொள்கைகளைப் புறக்கணிப்பார்களெனப் பாராளுமன்றம் நினைத்தது. ஏற்கெனவே கோண்டாமரின் வற்புறுத்தலுக்கிணங்கி ஆங்கிலக் கத்தோலிக்கர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த தடைச் சட்டங்களை ஓரளவு ஜேம்ஸ் தளர்த்தியிருந்ததால், மனக்கொதிப்படைந்திருந்த பியூரிட்டானியர்கள் தங்களின் வருங்கால அரசி கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவளாக இருப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டாதவர்களாக இருந்தனர். அரசரின் ஸ்பானியத் திருமண உறவுத் திட்டத்தைக் கண்டித்தும், கத்தோலிக்கச் சார்பான சமய உள்நாட்டுக் கொள்கையைக் கண்டித்தும் பாராளுமன்றம் எதிர்ப்புக் குரல் எழுப்பியது. உடனடியாகக் கத்தோலிக்க ஸ்பெயினுக்கெதிராக அரசர் போர் தொடுத்து, முப்பதாண்டுப் போரில் பிராடஸ்டென்டுகளுக்கு உதவ வேண்டுமெனவும் பாராளுமன்றம் வாதாடியது. தம் மகனின் திருமண விவகாரத்திலும், சமய வெளிநாட்டுக் கொள்கையிலும் தலையிட அம் மன்றத்திற்கு உரிமை எதுவும் இல்லையென ஜேம்ஸ் எக்காளம் செய்தது பாராளுமன்றத்தின் மனக்கசப்பை இன்னும் அதிகரித்தது.

சமயப் பூசல்களால் ஐரோப்பா பிளவுபட்டிருந்த அக் காலத்தில் தம்மை அதற்கு அப்பாற்பட்டவராக நினைத்திருந்ததனாலேயே, ஜேம்ஸ் தம் மகளை ஏற்கெனவே பிராடஸ்டென்டு இளவரசரான ஃபிரடரிக்குக்கு மணமுடித்து வைத்திருந்தார். தமக்குப் பின்

ஆளவேண்டிய மகன் சார்லசுக்குக் கத்தோலிக்க இளவரசியை மணமுடிக்கவும் ஏற்பாடு செய்தார். பிள்ளைகளின் திருமண விவகாரமும், வெளிநாட்டுக்கொள்கையும் அரசரின் தனி அதிகாரங்களே யாயினும், நாட்டின் பொது நலனைக் கருதிப் பாராளுமன்றம் அவற்றினைக் கண்டிக்க முன்வந்தபோது, அதைப் புரிந்து கொள்ளவோ, மன்றத்தில் பியூரிட்டானியர்களின் பலத்தை அறிந்துகொள்ளவோ முடியாதபடி, தெய்வீக உரிமைக் கொள்கை ஜேம்சுக்கு மமதையைக் கொடுத்தது.

முப்பதாண்டுப் போர் ஜேம்ஸின் அமைதியான வெளிநாட்டுக் கொள்கைக்கு ஒரு சவாலாக அமைந்ததெனின், அதில் அவ் வரசர் தோற்றாரென்றே சொல்லமுடியும். தம் மகனின் திருமணத்திற்கு ஸ்பானியர்கள் விதித்த நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத சந்தர்ப்பத்தில் அத் திருமணத் திட்டமே ஈடேறவில்லை. ஸ்பெயினின் நல்ல எண்ணத்தின்மூலம் தம் மருமகனுக்கு இழந்த பதவியை மீட்டுக்கொடுக்கலாம் என்ற எண்ணமும் ஈடேறவில்லை.

தம் ஆட்சிக்காலத்தின் இறுதியில் ஸ்பெயினுடன் போர் செய்ய ஜேம்ஸ் சம்மதித்தாரென்றாலும், அதனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இங்கிலாந்தின் தேசியப் படைக்கலமாகிய கப்பற்படை வளர்ச்சியில் ஜேம்ஸ் கவனம் செலுத்தாமல் இருந்ததால், அவருடைய மிரட்டலுக்குப் பணிய ஸ்பெயின் மறுத்தது. மொலுக்கா (Molucca) கடலிலிருந்த வாசனைத் தீவுகளில் வர்த்தகம் செய்து வந்த ஆங்கில வியாபாரிகளை 1623-ல் டச்சுக்காரர்கள் அம்பாய்னா (Amboyna) என்ற இடத்தில் படுகொலை செய்தபோதும் ஜேம்ஸ் செயலற்றே இருந்ததிலிருந்து, அவருக்குத் தம் பலத்திலேயே நம்பிக்கையில்லாம விருப்பது தெரிய வருகிறது. அரசரின் விருப்பப்படி கையாளப்பட்ட வெளிநாட்டுக் கொள்கை இங்கிலாந்துக்குப் பெருமையையோ, பலனையோ கொடுக்கவில்லை என்பது பியூரிட்டானியப் பாராளுமன்றத்திற்குப் புலப்பட்டதால் அதற்கான அதிகாரங்களைப் பறிக்கும் முயற்சியில் அவர்கள் இறங்கினர்கள்.

நீதி பரிபாலனம்

ஜேம்ஸுக்கும் அவரின் பாராளுமன்றத்திற்கும் இடையே எழுந்த அடுத்த பிரச்சினை நீதி பரிபாலனத்தைப் பற்றியதாக இருந்தது.

பொது நீதிமன்றங்கள் (The Common Law Courts) தனிச் சிறப்புரிமை நீதி மன்றங்கள் (Prerogative Courts) என்ற இருவகை

யான நீதி மன்றங்கள் நாட்டிலே இருந்தன. விண்மீன் நீதி மன்றம் (Star Chambar Court), உயர் நீதி ஆணை மன்றம் (High Commisson) போன்ற தனிச் சிறப்புரிமை நீதி மன்றங்கள் அரசரின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தன. வேறுபட்ட சட்டத்தையும் நடவடிக்கை முறைகளையும் கொண்டிருந்த தனியுரிமை நீதி மன்றங்கள் 'மன்னரே சட்டத்தின் மூலப்பொருள்' என வாதாடின. மன்னருடைய அதிகாரம் வரம்பற்ற தென்றும், நாட்டிலுள்ள நீதி மன்றங்கள் அத்தனையும் அரசரின் ஆணைக்குக் கட்டுப்பட்டனவாக இருக்கவேண்டு மெனவும், தனியுரிமை நீதி மன்றங்களின் வழக்கறிஞர்கள் வாதாடி வந்தனர். நீதி மன்றங்களை வரம்பிற்குள் வைத்திருக்கும் உரிமையையும், சட்டத்தின் எவ் வழியைப் பயன்படுத்துவதென்ற உரிமையையும் நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு தம்முடையதே என ஜேம்ஸ் கூறினர். அக் கூற்றைப் பொது நீதி அமுலிலிருந்த நீதி மன்றங்களின் வழக்கறிஞர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். நாட்டின் அடிப்படைச் சட்டங்களுக்கு அரசரும் கட்டுப்பட்டே ஆளவேண்டும் என்பது அவர்களின் கட்சி. பொது நீதி மன்றங்களின் வாதத்தின்படி அரச நீதியைவிடச் சட்ட நீதியே உயர்ந்ததென்பதாகும். பொதுச்சட்ட நீதிபதிகளே சட்டத்தை மாற்றியமைக்க உரிமை பெற்றவர்களென்றும், பாராளு மன்றச் சட்டங்களை விளக்கிப் பொருள் கூறும் தகுதி அவர்களுடையதே, என்றும் அக் கருத்தை ஆணித்தரமாக அடிக்கடி எடுத்துச் சொல்லிவந்த சர் எட்வர்டு கோக் (Sir Edward Coke) என்ற தலைமை நீதிபதியை ஜேம்ஸ் பதவியிலிருந்து விலக்கினர். அரசரின் தனி அதிகாரங்களைக் குறைக்கச் செய்து பாராளு மன்றத்தின் உரிமைகளைத் திரும்பிப்பெறத் துடித்துக்கொண்டிருந்த பியூரிட்டானிய மன்ற அங்கத்தினர்களுக்கு, ஜேம்ஸின் நீதிபரிபாலனக் கொள்கை மேலும் கசப்புணர்ச்சியைக் கொடுத்தது.

இவ்வாறு சட்டத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமைக்காக மன்னருக்கும் பாராளுமன்றத்திற்கும் தகராறுகள் தோன்றின.

நிதி (Finance)

ஸ்டூவர்டுகளின் காலத்தில் முக்கியப் பிரச்சினை நிதியைப் பற்றியதாகவே இருந்தது. அத் தகராறு ஜேம்ஸின் காலத்திலேயே தொடங்கியது.

தம் நிலங்களிலிருந்தும், மானிய வரிகளிலிருந்தும் டன்வரி (Tonnage) பவுண்டுவரி (Poundage) போன்றவைகளிலிருந்தும் சாதாரணமாக அரசருக்கு வருவாய் கிடைத்துவந்தது. மகாசாசனத்தின் காலத்திலிருந்து வரிவிதிக்கும் உரிமை அரசரின்

கைகளை விட்டு நழுவிவந்தது. தற்காலிகமாக டியூடர்கள் காலத்தில் இழந்த அவ் வுரிமையைப் பாராளுமன்றம் ஜேம்ஸ் காலத்தில் பெற விரும்பியது.

ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தபோது 4,00,000 பவுன்களாக இருந்த நாட்டுக்கடன் 1608-ல் 10,00,000 பவுன்களாக ஏறியது. அணிகலன்களிலும், அரண்மனை விருந்துகளிலும் மற்ற ஆடம்பரச் செலவுகளிலும் பணம் ஜேம்ஸால் விரயமாக்கப்பட்டது. தமக்குக் கிடைத்துவந்த வருவாயினுல் அதிகச் செலவுகளைச் சமாளிக்கமுடியாத ஒரு சூழ்நிலை அதனுல் ஜேம்ஸுக்கு ஏற்பட்டது. வருவாய்க்கு ஏற்ற செலவுகளைச் செய்யத் தெரியாத ஜேம்ஸ் செலவுக்கு ஏற்றபடி வருவாயைப் பெருக்க வழிதேடினர். ஆகவே, உயர்ந்த முந்திரிப்பழத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வை வரியை ஜேம்ஸ் அதிகரித்தார். பேட்ஸ் (Bates) என்ற ஓர் இலண்டன் வியாபாரி 1606-ல் புதிய தீர்வையைக் கட்டமறுத்தார். அவர்மீது தொடரப்பட்ட வழக்கை விசாரித்த எக்ஸ்செக்கர் (Exchequer) நீதி மன்றம் அத் தீர்வையைச் சட்டமுறையானது என்று அறிவித்தது. வெளிநாட்டு வாணிகம் அரசருடைய தனிச் சிறப்புரிமைகளில் ஒன்றுகவே கருதப்பட்டதால் உயர்த்தப்பட்ட தீர்வை அரசரின் அதிகார எல்லைக்கு உட்பட்டதாகவே அமைந்த தென வாதிக்கப்பட்டது.

கி.பி. 1609-ல் பேட்ஸ் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் பலத்தைக் கொண்டு சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) என்ற அரசரின் கருவூலத்தலைவர் (Lord Treasurer) பல வியாபாரப் பொருள்களின்மீது புதிய வரிகளை விதித்து, வரிவிகிதப் புத்தகத்தை (Book of rates) வெளியிட்டார். புதிதாக விதிக்கப்பட்ட டன்னேஜ், பவுண்டேஜ் வரிகளைத் தம் சம்மதம் இல்லாமல் அரசர் விதித்தது முறையற்ற செயலெனப் பாராளுமன்றம் எதிர்ப்பைத் தெரிவித்தது.

அந்த இடுவரிகளைப் (imposition) பாராளுமன்றம் எதிர்த்ததில் இன்னெரு காரணமும் இருந்தது. வெளிநாட்டு வர்த்தகம் வேகமாக வளர்ந்துவந்த அந் நாளில், அரசர் புது விகிதத்தின்படி அதிக வருமானம் பெற வாய்ப்பிருந்தது. அங்ஙனம் அவர் பெறுவாரேயானுல், நாட்டு வரி விதிக்கும் உரிமையைப் பெற்றிருக்கத் தம் பிடியிலிருந்து மன்னர் சுதந்தரமடைந்து தம் கட்சியை நிறுவுவாரெனப் பாராளுமன்றம் அச்சம் கொண்டது. அது பற்றிய சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்கும்போது 1610-ல் தம் வருமானத்தில் நிரந்தர உயர்வு அளிக்கும்படி அரசர் பாராளு

மன்றத்தைக் கேட்டார். சாலிஸ்பரி பிரபுவின் யோசனைப்படி பெரும் ஒப்பந்தம் (Grand Contract) தயார் செய்யப்பட்டது. அதில், நிர்மானிய வரிகளை வசூலிக்கும் உரிமையை விட்டுக் கொடுப்பதாகவும், அதற்கு மாறுகப் பாராளு மன்றம் ஆண்டுக்கு 2,00,000 பவுன்கள் மானியத்தை அதிகமாக வழங்க வேண்டு மெனவும் அவ்வொப்பந்தம் அறிவித்தது. அவ் வுரிமைகள் பெறும் வாய்ப்பினைப் பாராளுமன்றம் பயன்படுத்திக்கொள்ள முன்வந்தது. தனிச்சிறப்புரிமைகளைப் பற்றி விவாதிக்கும் உரிமை தங்களுக்கு உண்டென்றும், தங்களின் அனுமதியின்றி அரசர் வரிவிதிக்கக் கூடாதென்றும், நாட்டின் பொதுச் சட்டத் திற்குப் புறம்பாக அரசர் தனி ஆணைப் பேரறிவிப்புகள் (Prerogative Proclamation) இடக் கூடாதென்றும் பாராளுமன்றம் கோரியது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரி விதிப்பதில்லை என்பதை ஒப்புக்கொண்ட ஜேம்ஸ், மற்றக் கோரிக்கைகளுக்குச் சம்மதம் தர மறுத்தார். ஆகவே, பெரும் ஒப்பந்தம் செயல்பட வில்லை.

ஜேம்ஸும் அவரின் பாராளுமன்றங்களும்

இறைமை (Sovereignty) அரசரிடம் இல்லையென்றும், பாராளு மன்றத்தின் ஆலோசனையில் ஆட்சி புரியும் அரசருக்கே அவ் வுரிமை உண்டென்ற போக்கில் வாதம் செய்த முதல் பாராளுமன்றத்தை ஜேம்ஸ் கி.பி. 1611-ல் கலைத்தார்.

அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் பொருளாதாரத் துறையில் உரிமைப் பிரச்சினையில் கி.பி. 1614-ல் மீண்டும் போராட்டம் தொடங்கியது. தங்களின் குறைகளைத் தீர்த்து உரிமைகள் வழங்கப்படாதவரையில், அரசருக்கு மானியத் தொகை அளிக்கப் பயனற்ற பாராளுமன்றம் (Addled Parliament) மறுக்க, ஜேம்ஸ் அதை உடனே கலைத்தார்.

கி.பி. 1621-ல் கூட்டப்பட்ட மூன்றாவது பாராளுமன்றம் அரசரின் ஏக உரிமையைக் (monopoly) கண்டித்துச் சட்டம் கொண்டு வந்தது, அப் பொருளாதார உரிமைப் போராட்டத் தின் ஓர் அம்சமாக விளங்குகிறது.

ஒரு குறிப்பிட்ட பொருளைத் தயாரிக்கவும் விற்கவும் ஏக உரிமையை அரசர் பணத்திற்கு எவருக்கும் விற்கக்கூடிய உரிமை யைப் பெற்றிருந்தார். தமக்கு அதிகமாகப் பணம் கொடுத்தவர் களுக்கே ஏக உரிமைகளை ஜேம்ஸ் பல பொருள்களுக்கு வழங்கி வந்தார். ஏக உரிமையைக் கொண்டிருந்த அரசர் பொருளா தாரச் சுதந்தரம் பெற்றுவிட்டால், மானியத்திற்காகப் பாராளு

மன்றத்தின் தயவை எதிர்நோக்காமல் இருந்துவிடுவார் என்ற அச்சத்தில், தனிப்பட்ட எந்த நபருக்கும் ஏக உரிமையைக் கொடுக்கக் கூடாதென, பாராளுமன்றம் சட்டத்தை இயற்றியது. கண்டுபிடிப்பாளர்மட்டும் (inventor) மட்டும் அச் சட்டத் திற்கு விதி விலக்காக இருந்தனர்.

சமய வெளிநாட்டுக் கொள்கையில் தலையிட முற்பட்ட போது, இம் மன்றமும் கி.பி. 1622-ல் ஜேம்ஸால் கலைக்கப் பட்டது.

இளவரசர் சார்லசுக்கும் ஸ்பானிய இளவரசி இன்ஃபேன்டா (Infanta) வுக்கும் தாம் செய்யவிருந்த திருமண ஏற்பாடு முரிந்த தும், அமைதிக் கொள்கையில் நாட்டம் கொண்டவராக அல்லாமல், ஸ்பெயின்மீது போர்தொடுக்க, ஜேம்ஸ் முடிவு செய்தார். போர்ச் செலவுகளை ஏற்கமுடியாத அரசர், கி.பி. 1624-ல் அதிக மானியம் கோரித் தம் நான்காவது பாராளு மன்றத்தையும் கூட்டினார். பாலட்டினே மீட்க அனுப்பப்படும் படைக்கான செலவுகளை ஏற்க ஒப்புக்கொண்ட பாராளுமன்றம் சில நிபந்தனைகளையும் எடுத்து வைத்தது. எக் காரணத்திற்காக அரசருக்கு மானியம் அளிக்கப்படுகிறதோ, அக் காரணத்திற்காக அம் மானியம் செலவிடப்படுகிறதா எனக் கண்காணிக்க அதிகாரிகளை அமர்த்தும் உரிமையைப் பாராளுமன்றம் பெற்றது. அதற்குள்ளாக முதலாம் ஜேம்ஸ் காலமடைய அப் பாராளு மன்றத்தின் கூட்டம் முடிந்தது.

அங்ஙனமாக, அரசாங்கத்தின் இரு அங்கங்களாக இருந்த பாராளுமன்றத்திற்கும், அரசருக்குமிடையே நான்கு துறை களிலே அதிகார உரிமைகள்பற்றிய போராட்டம், ஜேம்ஸின் காலத்தில் தொடங்கியது.

பிரிட்டனின் சாலமன் அரசராகத் தம்மை யாவரும் போற்ற வேண்டுமென விரும்பிய ஜேம்ஸ் 'அறிவுள்ள முட்டாள்' என்ற பட்டத்தையே பெற்றார். தம் அறியாமையை உணராதது மட்டுமன்று; தெய்வீக உரிமையை நம்பினது மட்டுமன்று; இங்கிலாந்தையும், அவர் வாழ்ந்த காலத்தையும் அவர் அறிந்து கொள்ளவில்லை. அவர் காலத்தில் புரட்சி எதுவும் ஏற்படவில்லை என்றாலும், அவரின் வாரிசான சார்லஸ் காலத்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே நேர்ந்த உள் நாட்டுப் போர்க்கான சூழ்நிலையை ஜேம்ஸ் உருவாக்கிச் சென்றார்.

முதலாம் ஜேம்ஸின் வழித்தோன்றல்கள்



(ஆ) முதலாம் சார்லஸ் (1625 - 1649)

தம் தந்தையார் முதலாம் ஜேம்ஸ் காலத்தில் அரசருக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே தொடங்கிய சச்சரவு அவரின் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுப் போராக மாறி, ஆங்கில வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பத்தைக் கொடுத்தது. அக் கடும் போராட்டத்தின் இறுதியில் கொய்யப்பட்ட சார்லஸ் தலையுடன் வரம்பற்ற ஆட்சி முடியும் தரையில் உருண்டது.

1625-ல் முதலாம் ஜேம்ஸ் இறந்தார். அவரின் பிள்ளையும் தெய்வீக உரிமைக் கொள்கையில் பற்றுடையவருமான முதலாம் சார்லஸ் பட்டத்திற்கு வந்தபோது பக்கிங்காம் (Buckingham) பிரபு பிரதம ஆலோசகராக இருந்தார். அவரின் யோசனைப்படி, வருங்காலத்தில் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட பல சிக்கல்களுக்குக் காரணமாயிருந்த ஒரு மண உறவு நிறைவேற்றப்பட்டது; ஃபிரான்சின் அரசரான பதின்மூன்றும் லூயியின் சகோதரியும் கத்தோலிக்க இளவரசியுமான ஹென்றியாட்டா மேரியாவைச் (Henrietta Maria) சார்லஸ் திருமணம் செய்துகொண்டார். 1625-ல் இங்கிலாந்துக்கு வந்த கத்தோலிக்க அரசியிடம் பியூரிட்டானியர்களுக்கு நல்லெண்ணம் பிறக்கவில்லை. அவள் கத்தோலிக்கராதலால் தன் பிள்ளைகளை, வருங்கால அரச பரம்பரையை, அச் சமயத்தைச் சார்ந்தவர்களாகவே வளர்ப்பாள் என பியூரிட்டானியர்கள் நினைத்ததில் நியாயம் இருந்தது. எளிமையையும், புனிதத் தன்மையையும் விரும்பிய பியூரிட்டானியர்களுக்கு அரசியின் ஆடம்பரமும், கேளிக்கையில் இருந்த விருப்பமும் கசப் புணர்ச்சியை வளர்த்தன. அரசியின் தூண்டுதலினால் சார்லஸ் கத்தோலிக்கர்களுக்குச் சில சலுகைகளைக் காட்ட முன்வந்த போது, பாராளுமன்றத்தில் ஜேம்ஸ் காலத்திலேயே எதிர்ப்பு அணியாக இருந்துவந்த பியூரிட்டானியர்களுக்குச் சார்லஸின் மீதும் அரசியின்மீதும், அத் திருமணத்திற்குக் காரணமாயிருந்த பக்கிங்காம்மீதும் வெறுப்பு வளர ஆரம்பித்தது.

முதல் பாராளுமன்றம் (1625)

ஸ்பானிய மணமுறிவினால் ஏற்பட்ட குழப்பத்தைத்தொடர்ந்து முதலாம் ஜேம்ஸ் தம் கடைசிக் காலத்தில் அந் நாட்டுடன் போர் செய்ய முடிவெடுத்திருந்தார். அதற்குள்ளாக அவர் இறந்துவிட்டதால் அப் பொறுப்பு சார்லஸை வந்தடைந்தது. தொடர்ந்து நடந்துவந்த முப்பதாண்டுப் போரில் பிராடஸ்டென்டுகளுக்குத் தலைமை தாங்கிவந்த டென்மார்க்கின் அரசரான கிறிஸ்டியனுக்கு (Christian) உதவி செய்ய சார்லஸ் ஒப்பந்தப்படி

நிர்ப்பந்தப்படுத்தப்பட்டார். படைக்கலங்களின் செலவுக்கும், உதவிப் பணத்திற்கும் சார்லஸ் பாராளுமன்றத்தின் மானியத்தை எதிர்நோக்கிக் கி.பி. 1625-ல் அதைக் கூட்டினார்.

சார்லஸின் தெய்வீக உரிமையை வெறுத்த பியூரிட்டானியர்களும், பியூரிட்டானியர்களின் சமய, அரசியல் கொள்கைகளை வெறுத்த சார்லஸும் பாராளுமன்றத்தில் (காமன்ஸ் சபையில்) சந்தித்தனர்.

அரசர் கேட்டிருந்த மொத்தத் தொகையில் பத்தில் ஒரு பங்கையே (1,40,000 பவுன்களையே) காமன்ஸ் சபை (மக்கள் மன்றம்) தரச் சம்மதித்ததும், வழக்கப்படி ஆயுள்முழுவதுக்கும் கொடுக்கப்படவேண்டிய டன்னேஜ், பவுண்டேஜ் வரிகளை வசூல் செய்யும் உரிமையை ஓர் ஆண்டுக்குமட்டுமே அச் சபை தர முடிவு செய்ததும், அரசரை அவமதிப்பிற்கு உள்ளாக்கின. அரசருடைய பணப் பற்றுக்குறையிலேயே பாராளுமன்றத்தின் எதிர்காலம் இருப்பதை உணர்ந்த பியூரிட்டானியர்கள், சார்லஸுக்குப் பொருளாதாரத்தில் தன்னிறைவு கொடுக்க மறுத்தனர். மேலும், அரசரின் சமய, வெளிநாட்டுக் கொள்கைகளில் தங்களின் அபிப்பிராயங்களும் கேட்கப்படவேண்டு மென்றும், அரசக் காரியங்களை நம்பிக்கையானவர்களிடத்தில் ஒப்படைக்க வேண்டு மென்றும் காமன்ஸ் சபை கேட்க, அதற்கு ஒப்புக் கொள்ளாத சார்லஸ் தம் முதல் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

இரண்டாவது பாராளுமன்றம் (1626)

வெளி உலகிற்குத் தம்மை பிராடஸ்டென்டு வீரராகக் காட்டிக்கொள்ள நினைத்த சார்லஸ் ஸ்பெயினுக்கு எதிராகப் படையெடுப்புகளில் கவனம் செலுத்தினர். தேவையான படைக்கலங்கள் இல்லாததாலும், போர்த்திறமை அற்ற பக்கிங்காம் பிரபுவிற்குத் தலைமை கொடுக்கப்பட்டிருந்ததாலும், படையெடுப்பு பலன் எதுவும் தரவில்லை. அந் நிலையில் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகச் சார்லஸ் தம் இரண்டாவது பாராளுமன்றத்தைக் கி.பி. 1626-ல் கூட்டினர்.

காமன்ஸ் சபையில் தலைவர்களாக இருந்த சர் ஜான் எலியட் (Sir John Elliot), சர் தாமஸ் வென்ட்வொர்த் (Sir Thomas Wentworth), சர் ஜான் பிம் (Sir John Pym) போன்றோர்கள் அரசருடைய போர் நடப்பு முறையைச் சாடினர். நாட்டின் புகழ் பக்கிங்காமின் திறமையற்ற போர்த்தலைமையினாலேயே பாதிக்கப்பட்டதெனவும், ஆகவே அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் எனவும் காமன்ஸ் சபை குமுறியது. தம் அதிகாரத்திற்கு

உட்பட்டு அழைத்த நேரத்தில் கூடி, அனுமதித்த நேரத்தில் பணியாற்றி, ஆணையிட்ட நேரத்தில் கலையவேண்டிய பாராளுமன்றம் தம் நம்பிக்கைக்குகந்த அதிகாரிகளைக் கண்டிப்பது முறையற்றதாகும் எனச் சொல்லி, அதே ஆண்டில் தம் இரண்டாவது பாராளுமன்றத்தைச் சார்லஸ் கலைத்தார்.

மூன்றுவது பாராளுமன்றம் (1628 - 1629)

பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பு தமக்குக் கிடைக்காத அந் நேரத்தில் போரை நடத்தவேண்டிய சூழ்நிலையில் சார்லஸ் இருந்ததால், சில முறையற்ற வழிகளில் தம் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடிவெடுத்தார்.

கட்டாய இராணுவ சேவையையும், கட்டாயக் கடனையும் அமுலுக்குக் கொண்டுவந்தார். பாராளுமன்ற அனுமதி இல்லாத கட்டாயக் கடனைச்செலுத்த டார்னல் (Darnell) உள்பட ஐந்து நைட்டுகள் மறுத்தனர். தம் சொந்த விருப்பப்படி, குடிமக்களின் உடைமைகளையும் உடல்களையும் என்ன வேண்டுமானலும் செய்து கொள்ளலாம் என்பதன்படி எக் காரணத்தையும் காட்டாமல், முறையான விசாரணையின்றி டார்னல் உள்பட ஐந்து நைட்டுகளைச் சார்லஸ் தண்டித்தார். படைவீரர் பொறுப்பைத் தனி நபர்மீது சுமத்தியும் சிவிலியன்கள்மீது இராணுவச் சட்டத்தைத் திணித்தும், சார்லஸ் 1626 – 1628-ல் ஆட்சி நடத்தினர்.

கட்டாயக் கடனை வசூலித்தும், கட்டாய இராணுவ சேவையை வற்புறுத்தியிருந்தும் சார்லஸுக்குத் தம் போரின் தேவைகளைச் சமாளிக்க முடியவில்லை. ஆகவே, 1628-ல் தம் மூன்றுவது பாராளுமன்றத்தைக் கூட்டினர். சார்லஸுக்குத் தேவையான மானியத்தை அங்கீகரித்த அப் பாராளுமன்றம் சார்லஸை உரிமை விண்ணப்பத்தில் (Petition of Right) கையெழுத்திட வற்புறுத்தியது. ஆங்கில அரசியல் பத்திரங்களில் மிக முக்கியமானதில் ஒன்றாகக் கருதப்படும் அவ்வுரிமை விண்ணப்பத்தின் பாராளுமன்ற அனுமதி இல்லாத வரிகளை அரசர் வசூலிக்கக் கூடாதெனவும், விசாரணையற்ற சிறைத் தண்டனைகளைக் கொடுக்கக் கூடாதென்றும் படைவீரர்களின் செலவுகளைத் தனி நபரின்மீது திணிக்கக் கூடாதென்றும், அமைதிக் காலத்தில் இராணுவச் சட்டத்தை அமுலாக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதற்குச் சார்லஸ் ஒப்புதல் அளித்தபோதிலும், பின் அதை மீறிச் செயல்பட முயன்றபோது பாராளுமன்றம் அதைச் சுட்டிக்

காட்டியது. அம் மன்றத்தின் முணுமுணுப்பைச் சகிக்கமுடியாத சார்லஸ் கி.பி. 1629-ல் தம் மூன்றாவது பாராளுமன்றத்தையும் கலைத்தார். ஆனால், அம் மன்றம் கலைவதற்கு முன்னர் எலியட்டின் தூண்டுதலினால் மூன்று முக்கியத் தீர்மானங்களை (Elliot's Three Resolutions) நிறைவேற்றி யிருந்தது.

'சமயத்திலே மாற்றங்களைப் புகுத்துபவர்களும் மன்றத்தின் அனுமதியில்லாத வரிகளை வசூலிக்கும்படி அரசருக்கு யோசனை கொடுப்பவர்களும், அத்தகைய வரிகளைச் செலுத்துபவர்களும் நாட்டுத் துரோகிகளாவர்' என்ற அந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, சார்லஸ் எலியட்டைச் சிறையிலடைத்தார். பாராளுமன்றத்தின் கட்டுப்பாடுகளிலிருந்து, மன்னர் எதேச்சாதிகார வழியில் ஆள முற்படுகிறார் என்ற கசப்பான உண்மையை அச் செய்கை முன்கூட்டியே எடுத்துக் காட்டியது.

தன்னாட்சி (Personal Government - 1629 - 1640)

தாம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து சார்லஸ் கூட்டியிருந்த மூன்று பாராளுமன்றங்கள் அவருடன் சச்சரவுபட்டதை, அரசர் மறக்கவில்லை. அதனால், பாராளுமன்றத்தைக் கூட்டாமல் தன்னாட்சி (Personal Government) நடத்த சார்லஸ் முற்பட்டார்.

சார்லஸின் தன்னாட்சிக் காலத்தில் அரசருக்கு இரு பெரும் அமைவர்களாக லாடும் (Laud) வென்ட்வொர்த்தும் (Wentworth) விளங்கினர்.

பாராளுமன்றம் கூடியிராத அக் காலத்தில், தம் வருவாயைப் பெருக்கிக்கொள்ளப் பல வழிகளில் பணம் தேட சார்லஸ் முற்பட்டார். பிரத்தியேக ஆணைகளை வெளியிட்டு, மக்களைச் சட்டங்களுக்கு உட்படச் செய்தார். தனிச் சிறப்புரிமை நீதி மன்றங்களின் வாயிலாகத் தம் ஆணைக்கு உடன்பட மறுத்தோரைச் சார்லஸ் வெறுத்தார்.

மன்றத்தின் அனுமதியில்லாமல் சில எதேச்சாதிகார வரிகளைச் சார்லஸ் விதித்தார். டன், பவுண்டு வரிகள் வசூலிக்கப்பட்டன. 40 பவுன் வருமானமுள்ள நிலங்களை வைத்திருப்போர் நைட் (knight) பட்டத்தைப் பணம் செலுத்திப் பெற வேண்டுமென்றும், பெறுதிருந்தாலும் ஒரு தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அரசர்கட்குச் சொந்தமான காடுகளில் அத்து மீறிப் பிரவேசித்து உரிமை கொண்டிருந்த பிரபுக்களின் சந்ததியார்களுக்கு அபராதம்

விதிக்கப்பட்டது. பொருள்களுக்கான ஏக உரிமை வியாபாரச் சங்கங்களுக்கு விற்கப்பட்டது. நாடு முழுவதும் வசூலிக்கப் பெறும் 'கப்பற் பணம்' (Ship Money) வரிச்சுமையாக விதிக்கப் பட்டது.

போர்க் காலங்களில் கடற்கரையோரப் பட்டினங்களிலிருந்து வசூலிக்கப்படவேண்டிய கப்பற் பணத்தைச் செலுத்த ஜான் ஹாம்ப்டன் (John Hampden) என்ற வணிகர் மறுத்ததால் அவர் மீது கருவூல நீதி மன்றத்தில் (The Exchequer Court) வழக்குத் தொடரப்பட்டது. அவரின் சார்பிலே வாதாடிய வழக்கறிஞர் கள் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் அமைதிக் காலத்தில், நாட்டின் உள்பகுதியி லிருந்தும் வசூலிக்கப்பட்ட கப் பற்பணம் சட்டத்திற்கு முரணானது என எடுத்துரைத்தார்கள். சார்லஸின் வற்புறுத்தலுக் கிணங்க, அவர் வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஹாம்டனுக்கு எதிராகவே தீர்ப்பளித்தனர். மன்ன ரின் சிறப்புரிமைகளைத் தட்டிக் கேட்க நாட்டில் எவருக்கும் உரி மையில்லை என்பதுபோல் அத் தீர்ப்பு அமைந்தது. இங்ஙனமாக உரிமை விண்ணப்பத்தின் முதல் அம்சத்தைக் சார்லஸ் காற்றில் பறக்கவிட்டு மன்றத்தின் அனுமதியின்றி வரிகளை வசூல் செய்தது நாட்டிலே எதிர்ப்பைக் கிளப்பிவந்தது.

சார்லஸுக்கு உறுதுணையாக இருந்த லாட் (Laud) அரசர் மக்களில் முதன்மையானவர் என்றும், அவரே நாட்டின் உயர் தனிச்சட்டம் (Supremalex) என்றும் வாதாடிவந்தார். முடி யாட்சியைப்பற்றி அங்ஙனம் மிக உயர்ந்த நோக்கம் கொண் டிருந்த ஆர்ச்பிஷப் லாட் இங்கிலாந்து மதச்சபையில் சில மாற் றங்களைச் செய்ய முனைந்தபோது, சார்லஸின் தன்னுட்சிக்கு எதிர்ப்பு இன்னும் அதிகரித்தது.

ஆர்ச்பிஷப் லாட் இங்கிலாந்து மதச் சபையில் மேலோர் கட்சியை (High Church Party) நிறுவினர். கோயில் வழிபாட்டின் சடங்கு முறைகள் அதனால் அதிகரிக்கப்பட்டன. மதச்சபையில் நற்செய்தி பரப்பும் நடைமுறைகளும், போதனைகளும், உரை யாற்றல்களும் கடுமையாகத் தடை செய்யப்பட்டன. திருச்சபைச் சடங்குகளில் புகுத்தப்பட்ட மாற்றங்கள் பியூரிட்டானியர்களின் சமயக் கொள்கைக்கு விரோதமா யிருந்தன. பாதிரியாட்சி (Episcopacy) என்ற அம் முறையை எதிர்த்துப் பேசியவர்கள், எழுதியவர்கள் இரக்கமின்றித் தண்டிக்கப்பட்டனர். லாடின் மத குருக்கள் தெய்வீக உரிமைக் கொள்கையையும் அரசரின் தனியுரிமை அதிகாரக் கோட்பாடுகளையும்பற்றி நாடெங்கும் விளம்பரம் செய்தது பியூரிட்டானியர்களின் ஆத்திரத்தை மேலும் கிளறியது.

லாடின் புதிய மதக் கோட்பாடுகளால் பியூரிட்டானியர்கள் தம் தாய் நாட்டில் இறைவனை உரிமையோடு வழிபட முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களின் நம்பிக்கைக்குப் புறம்பாக இருந்த சில கோட்பாடுகளை அவர்கள் கண்டித்தபோது விண்மீன் மண்டப நீதிமன்றத்தையும், உயர் ஆணை நீதிமன்றத்தையும், சமய ஆணை நீதிமன்றத்தையும் கூட்டி லாட் பியூரிட்டானியர் களைத் துன்புறுத்தினர். நாடகங்களைக் கண்டித்த பிரின் (Prynne) மதகுருமார்கள் அதிகாரத்தையும், மதச்சடங்குகளையும் கண் டித்த பர்டன் (Burton), லில்பர்ன் (Lilburne), பேட்ஸ்விக் (Batswich) போன்றோர்கள் லாடின் தண்டனைக்கு உள்ளானவர் களில் ஒரு சிலர் ஆவர்.

சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாதிரிமார்களை அரசரின் தனி அதிகாரக் காவலர்களாக மாற்றியிருந்த லாடின் புதிய மதக் கொள்கையை எதிர்த்த பியூரிட்டானியர்கள் தனி யுரிமை நீதி மன்றங்களால் தண்டிக்கப்பட்டு வந்த வேளையில், தம் ஃபிரெஞ்சு மனைவியின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டுச் சார்லஸ் ரோமன் கத்தோலிக்கர்களுக்குச் சில உரிமைகளை வழங்க ஆரம் பித்தார். சமயச் சுதந்தரம் தேடி அமெரிக்காபோன்ற பிற இடங் களுக்கு பியூரிட்டானியர்கள் வெளியேறிக்கொண்டிருக்க, சார் லஸின் கத்தோலிக்கச் சார்பான கொள்கையினால் அம் மதத்தினர் சிறுகச் சிறுக இங்கிலாந்தில் செல்வாக்குப் பெற்றுவர, இங்கி லாந்து மீண்டும் போப்பாண்டவரின் கூட்டத்தில் சேர்ந்து விடுமோ என்ற ஒரு நிலை ஏற்பட்டது.

அதற்கிடையே தம் புதுமதக் கோட்பாட்டின்படி வழிபாட்டு நூலையும் (Prayer Book) திருத்தி, இங்கிலாந்தில் திணித்ததால் பியூரிட்டானியர்களின் கோபம் எல்லை மீறியது. எலியட்டின் தீர் மானங்களுக்கு எதிராகச் சார்லஸ் இங்கிலாந்தில் தன்னாட்சி நடத் திக்கொண்டிருக்கும்போது, எதிர்ப்பு வளர்ந்து வந்ததே தவிர அது கலகமாக இன்னும் மாறவில்லை. அவரின் தன்னாட்சிக்கு எதிராக ஆயுத எதிர்ப்பு ஸ்காட்லாந்தில்தான் முதலில் தோன்றி யது.

இங்கிலாந்தில் தாம் புகுத்திய புதுச் சமயக் கோட்பாடு களையும், வழிபாட்டு நூலையும் ஆர்ச்பிஷப் லாடு, அரசரின் ஒத்து ழைப்புடன் ஸகாட்லாந்தில் திணிக்க முற்பட்டபோது, 1638-ல் ஸ்காட்டியர்கள் தேசிய ஒப்பந்த சங்கத்தை (National Covenant and League) நிறுவி, லாடின் மதக் கொள்கையை எதிர்த்தனர். எதிர்ப்பை அடக்கப் படைகொண்டுவந்த சார்லஸ் முதலாம் பிஷப் சண்டையில் (First Bishop War) தோற்கடிக்கப்பட்டு, பெர்விக்

(Berwick) உடன்படிக்கைக்கு 1639-ல் உட்பட்டார். ஸ்காட்டிய விவகாரத்தில் தலையிடுவ தில்லையெனச் சார்லஸ் ஒப்புக்கொண் டார்.

இங்கிலாந்தில் பியூரிட்டானியர்களின் எதிர்ப்பு அதிகமாகிக் கொண்டு வந்தது. தம் ஸ்காட்டியப் போர் தோல்வியிலே முடிந்தது. அந்த இக்கட்டான வேளையில், அரசரின் உறுதுணை யாளரான வென்ட்வொர்த் அயர்லாந்திலிருந்து இங்கிலாந்துக்கு வரவழைக்கப்பட்டார். பியூரிட்டன்களை யெல்லாம் எதிரி களாகக் கருதிய வென்ட்வொர்த், அரசரை உடனுக்குடன் பாராளுமன்றதைக் கூட்டும்படி யோசனை கூறினர். அதற் கேற்ப, 1640 ஏப்பிரலில் மன்றம் கூட்டப்பட்டது. மானியத் தொகையைக் கேட்டார் சார்லஸ்; மன்றத்தின் குறைகளை முதலில் தீர்க்க வேண்டுமென சார்லஸ் கேட்டுக்கொள்ளப் பாராளு மன்றத்தை மே மாதத்தில் கலைத்தார். அப் பாராளுமன்றமே குறுகிய பார்லிமென்ட் (Short Parliament) என அழைக்கப் படுகிறது.

வென்ட்வொர்த்தின் உதவியால் தம் ஆட்சியை நீடிக்கச் சார்லஸ் நினைத்தபோது, ஸ்காட்லாந்தில் மீண்டும் கலகம் ஏற்பட்டது, தம் படைபலம் கொண்டு புதுமதக் கோட்பாடுகளைச் சார்லஸ் மீண்டும் திணிக்கலாமெனச் சந்தேகித்தபோது, இரண்டாம் பிஷப் சண்டையைத் (Second War of Bishop, 1640) ஸ்காட்டியர்கள் தொடங்கினர். அத் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்கமுடியாத சார்லஸ் ரிப்பன் உடன்படிக்கைக்கு (Treaty of Rippon) உடன்பட்டார். அதன்படி ஸ்காட்டியர்களுக்கு ஏராளமான தொகை போர் நஷ்ட ஈடாகக் கொடுக்க சார்லஸ் ஒப்புக்கொண்டார். சார்லஸுக்குப் பணமுடை அதிகரித்தது. வெறும் எதேச்சாதிகார வரிகளால்மட்டும் அதைச் சரிக்கட்ட முடியாது என அவருக்குத் தோன்றியது. பாராளுமன்றத்தில் மானியம் கேட்டுப் பெற்றாலொழிய நிலை சீர்படாது என்று சார்லஸ் நினைக்க 1640 நவம்பர் 3ஆம் தேதியில் பாராளுமன்றம் கூட்டப்பட்டது.

கசப்புணர்ச்சியும் எதிர்ப்புணர்ச்சியும் தமக்கு எதிராக வளர் வதற்குக் காரணமா யிருந்த சார்லஸின் தன்னாட்சி அத்துடன் முடிந்தது.

நீண்ட பாராளுமன்றம் (1640)

வரலாற்றின் பக்கங்களிலே நீண்ட பாராளுமன்றம் (The Long Parliament) எனப் புகழ்ப்பெயர் கொண்டிருக்கும் அம் மன்றம்

தான் கூட்டப்பட்டதும் அரசரின் எதேச்சாதிகாரங்களைத் தடை செய்யவும், தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும் பல சட்டங்கள் கொண்டுவந்தது.

ஏதேச்சையாக விதிக்கப்பட்டதும் வசூலிக்கப்பட்டதுமான கப்பற்பணம் உட்படப் பல வரிகள் சட்டத்திற்குப் புறம்பானவைகளென்றும் அரசரின் தனி அதிகாரம் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த சிறப்புரிமை நீதி மன்றங்கள் கலைக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டன. தம் அனுமதியில்லாமல் பாராளுமன்றத்தைத் தள்ளிவைப்பதோ, கலைப்பதோ கூடாதெனவும், மூன்றாண்டுகளுக் கொருமுறை அம் மன்றத்தைக் கூட்ட வேண்டுமெனவும் (மூவாண்டுச் சட்டம்-Trinial Act) சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

தம் அதிகாரங்களைக் குறைத்துக் கொள்ளச் சார்லசுக்கு எண்ணம் எதுவுமில்லையெனினும், பாராளுமன்றத்துடன் ஒத்துப் போகவேண்டிய அவசியம் அவருக்குச் சந்தர்ப்ப வசத்தால் இருந்ததை, மன்றத்தலைவர்கள் மேலும் பயன்படுத்திக்கொள்ள விரும்பினர். மன்னரின் தன்னாட்சிக் காலத்தில் அவரின் தனி அதிகாரத்திற்குத் தூண்களாக இருந்தவர்களைத் தண்டிக்கப் பாராளுமன்றம் முடிவெடுத்தது. அவர்களிலே, ஸ்ட்ராஃபோர்டும் (வெண்ட்வொர்த்) ஆர்ச்பிஷப் லாடும் முக்கிய நபர்கள்.

தம் ஊக்கத்தாலும், அறிவுத்திறனாலும் அரசரின் அதிகாரங்களை மீட்கக்கூடிய வல்லமை பெற்றிருந்த ஸ்ட்ராஃபோர்டு இறந்தாலொழிய, தங்களின் பணி நீட்டித்திருக்காது எனப் பாராளுமன்றம் நினைத்தது. அரசரும் பாராளுமன்றத்தைக் கலைக்கவும், ஸ்ட்ராஃபோர்டைக் காப்பாற்றவும் படைச்சதியில் ஈடுபட்டிருந்ததை மன்றத்தின் தலைவர்கள் அறிவர். பாராளுமன்றக் கூட்டம் முடிந்ததும் சார்லஸ் அவற்றிற்கு மீண்டும் பதவியளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, ஸ்ட்ராஃபோர்டு உயிர்வாழும்வரை பாராளுமன்றத்தின் பணிகள் நிலைத்து நிற்காது எனத் திடமாக நம்பிய அதன் தலைவர்கள் அவரை ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டி நின்றனர். சிறந்த ஊழியராகத் தன்னாட்சிக் காலத்தில் சார்லசுக்குப் பணிபுரிந்த ஸ்ட்ராஃபோர்டை இராசத்துரோகக் குற்றம் சாட்டித் தண்டிக்க முடியாததை யுணர்ந்த பாராளுமன்றம் பதவி நீக்க உரிமை மசோதாவைக் (Bill of Attainder) கொண்டுவந்தது. அதன்படி பதவி நீக்கமடைந்த ஸ்ட்ராஃபோர்டுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. அவசியமின்றி அவரிடம் பாராளுமன்றம் அத்தனை கடுமையாக நடந்துகொண்டதாக ஒரு சில பாராளுமன்ற

அங்கத்தினர்கள் குறைப்பட்டபோதும் மாசோதா அரசரின் ஒப்பந்தத்துக்கு அனுப்பப்பட்டது.

தம் உண்மை ஊழியரைத் தண்டிப்பதற்கான அம் மசோதாவில் கையெழுத்திட சார்லஸ் தயங்கினர். கொலை வெறி கொண்ட மக்கள் கூட்டம் ஒயிட் ஹால் (White Hall) அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு கலவரம் செய்தபோது, ஒப்புதல் தர மறுத்தால் அக் கூட்டம் உட்புகுந்து அரசியையும் தம் பிள்ளைகளையும் தாக்கிவிடுமோ என்ற பயத்தில் கண்ணில் நீர்வழிய, கைகளிலே நடுக்கத்துடன் அம் மசோதாவில் கையொப்பமிட்டுச் சட்டமாக்கினர். மூன்று நாள்கள் கழித்து 2,00,000 மக்கள் முன்னிலையில் 1641 மே மாதத்தில் ஸ்ட்ராஃபோர்டின் தலை கொய்யப்பட்டது. லாடும் மற்றத் துணைவர்களும் சிறையிலடைக்கப்பட்டுப் பின்னர்க் கொல்லப்பட்டனர்.

ஸ்ட்ராஃபோர்டின் கொலைத்தண்டனை பாராளுமன்றத்திற்குப் பெரும் வெற்றி என்றாலும் அரசருக்கும் அவரை ஆதரித்தவர்களுக்கும் அது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. தாம் விட்டுக் கொடுக்கும் பட்சத்தில் பாராளுமன்றம் மேற்கொண்டு நிபந்தனைகளை விதித்துக்கொண்டே இருக்கும் எனச் சார்லஸ் உறுதியாக நம்பினார். அரசருக்கு அந்த எண்ணம் உதித்ததற்கும் அதுவரை ஒற்றுமையாகப் பணியாற்றி வந்த பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கும் இடையே பிளவு ஏற்பட்டதற்கும் காலப் பொருத்தம் இருக்க அதுவே பெரும் உள்நாட்டுப் போராகத் தொடங்கியது.

(இ) உள்நாட்டுப் போர் (1642 - 1649)

ஐரோப்பாவில் எதேச்சாதிகார ஆட்சிகளுக்கான அடிக்கல் நடப்பட்டுவந்த பதினேழாம் (17) நூற்றாண்டின் இடையில் இங்கிலாந்தில் வரம்பற்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சி தொடங்கப்பெற்றது. அதன் முதல் கட்டமாக அமைந்ததே அந் நாட்டில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே நடந்த பெரும் உள்நாட்டுப் போர். ஆங்கிலேயர்கள் வெறுப்போடுதான் அப் போரில் இறங்கினர் என்றாலும், அது தவிர்க்க முடியாததாகவே இருந்தது. அதற்கான காரணங்களைக் காண்போம்.

போருக்கான காரணங்கள்

தெய்வீக உரிமைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்த முதலாம் சார்லஸ் காலத்தின் நிலைமையைப் புரிந்துகொள்ளாமல்

பாராளுமன்றத்திடம் அரசர் சச்சரவு பட்டு வந்ததை நாம் முன்னரே அறிந்தோம். பாராளுமன்றத்தின் உரிமைகளைப் பறிக்க நினைத்ததுமட்டுமன்றித் தம் சிறப்பு அதிகாரங்களையும் பலப் படுத்திக்கொள்ள சார்லஸ் நினைத்தார். தம் தந்தையாரின் ஆட்சிக் காலத்திலேயே வெறுப்படைந்திருந்த பியூரிட்டானி யர்களின் பாராளுமன்றத்தைத் தாம் கத்தோலிக்க சமயப் பற்றினால் இன்னும் கொதிப்படையச் செய்திருந்தார்.

கத்தோலிக்க இளவரசியான ஹென்றியாட்டா மேரியாவைத் (Henriatta Maria) திருமணம் செய்துகொண்டபோது பிராடஸ் டெண்டுகள் பெரும்பான்மை பெற்றிருந்த இங்கிலாந்தின் அவ் வுறவு வரவேற்கப்படுமா என்று சார்லஸ் நினைத்தும் பார்க்க வில்லை. ஆங்கிலப் பிராடஸ்டென்டுகள் பயந்ததுபோல் அரசியின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டு சார்லஸ் தடைச்சட்டங்களை நீக்கிக் கத்தோலிக்கர்களுக்குச் சலுகைகள் காட்ட முன்வந்தபோது நாட்டில் எழுந்த எதிர்ப்பையும் அரசர் பொருட்படுத்தவில்லை.

உரிமை விண்ணப்பத்தின் சரத்துகளை அவ் வேளை ஒப்புக் கொண்டு பின் அதைக் காற்றில் பறக்கவிட்டதையும் பாராளு மன்றம் மன்னிக்கவில்லை. பாராளுமன்றத்தைக் கூட்டாமல் 11 ஆண்டுகள் தன்னாட்சி நடத்தி, சார்லஸ் எதேச்சாதிகார வரிகளை விதித்ததையும் சமய மாற்றங்களைச் செய்ததையும் மன்றத்தலைவர்கள் இன்னும் மறக்கவில்லை. தனிச்சிறப்பு நீதி மன்றங்களைக் கருவிகளாகப் பயன்படுத்தி சர் ஜான் எலியட் (Sir John Elliot) போன்ற பாராளுமன்றத் தலைவர்களைத் தண்டித்ததையும் அம் மன்றம் மறக்கவில்லை.

அரசருடைய எதேச்சாதிகாரத்திற்குச் சாவுமணி அடித்தே தீரவேண்டுமென்ற உறுதியுடன் 1640-ல் சில சட்டங்களைப் பாராளுமன்றம் கொண்டுவந்திருந்த தென்பதையும் நாம் அறிவோம். சந்தர்ப்ப சூழ்நிலையால் உந்தப்பட்டுச் சார்லஸ் அச் சட்டங்களுக்குத் தம் ஒப்புதலைக் கொடுத்திருந்தும் பின்னர்த் தம் படையின் வலிமையால் அவற்றை மீறலாம் என்றே நினைத்து இருந்தார். அரசரின் சதி எண்ணத்தைத் தெரிந்து கொண் டிருந்த பாராளுமன்றம் சார்லஸின் அந்த எண்ணம் நிறைவேறக் கூடாதென அந்தத் திட்டத்திற்கு உடந்தையாக இருக்கத் தகுதியும் திறமையும் பெற்றிருந்த ஸ்ட்ராஃபோர்டு பிரபுவைக் கொலை செய்திருந்ததை நாம் ஏற்கெனவே கண்டோம். கட்டா யத்தின்பேரில் அவரின் மரண தண்டனையில் கையெழுத்திட்ட சார்லஸ் பாராளுமன்றத்தின் கொட்டத்தை ஒடுக்கவேண்டு மென மனதிலேயே கறுவிக்கொண்டார். ஸ்ட்ராஃபோர்டின்

மரண தண்டனை அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடை வெளியை அதிகரித்தது என்றும் சொல்லலாம்.

ஸ்டராஃபோர்டுக்கு மரணதண்டனை பெற்றுக்கொடுத்த களிப்பில் நீண்ட பாராளுமன்றம் மேற்கொண்டு சில புரட்சிகர மான திட்டங்களைக் கொண்டுவர, அரசருக்கும் மன்றத்திற்கும் இருந்த பிளவு இன்னும் அதிகரித்தது. அது பெரும் உள்நாட்டுப் போரில்தான் முடியும் என்று அத் தருணத்தில் எவரும் நினைத் திருக்க முடியாதெனினும் அடுத்தடுத்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் அப் போரைத் தவிர்க்க முடியாததாக ஆக்கிவிட்டன.

1641-ல் பாதிரிமார்களின் ஆட்சியைச் சமயத்தில் ஒழிக்க வேர்-கிளை அறுக்கும் மசோதா (Root and Branch Bill) கொண்டு வரப்பட்டது. பியூரிட்டானிய தீவிரவாதிகளால் ஆதரிக்கப் பட்ட அம் மசோதா ஆங்கிலிகன் திருச்சபைக்குக் கட்டுப்பட் டிருந்த ஃபாக்லாந்து (Falkland), எட்வர்டு ஹைடு (Edward Hyde) போன்ற மிதவாதிகளால் எதிர்க்கப்பட்டது. ஒற்றுமையாகச் செயல்பட்டு வந்த பரராளுமன்றத்தில் பிளவு ஏற்பட, அதைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளலாம் எனச் சார்லஸ் நினைத்தார். பாராமன்ற அங்கத்தினர்களிடையே தமக்கு ஆதரவு கிடைக்கும் என்ற எண்ணத்தில் வேறு பலரின் கோபத்திற்கு ஆளாகும்படி சார்லஸ் நடந்துகொண்டது கவலைப்படத்தக்கது.

சார்லஸ் அதற்கிடையே ஸ்காட்லாந்திற்குச் சென்று தங்கி யிருந்தார். பிரஸ்பிடீரிய மத குருமார்களைக் கொல்ல ஒரு சதியும் அப்போது உருவாகியது. அரசரின் தூண்டுதலினாலேயே அச் சதி செய்யப்பட்டதென ஆங்கில பியூரிட்டானியர்கள் நம்பினர். அதை அடுத்து அயர்லாந்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. ஐரிஷ் கத்தோலிக்கர்கள் அங்குக் குடியேறியிருந்த பிராடஸ் டென்டுகளைக் கொன்று குவித்தனர். அதற்கும் சார்லஸ் உடந்தை யாக இருந்திருப்பாரோ என ஒரு சந்தேகமும் எழுந்தது.

அவ் விரு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பாராளுமன்றம் பெருங் கண்டனத்தை (The Grand Remonstrance) நிறைவேற்றியது. அரசரின் ஆலோசகர்கள் பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்கு உகந்தவர்களாக இருக்கவேண்டுமென்றும் மதச்சபை சீர்திருத்தும் அதிகாரம் சமய சினடுக்குத் (Synod of Divines) தரவேண்டுமென் றும் தீவிரவாதிகள் அக் கண்டனத்தில் வற்புறுத்தியிருந்தனர். அரசருடைய அதிகாரத்தையும் பாதிரிமார்கள் செல்வாக்கையும் குறைப்பதற்காகவே கொண்டுவரப்பட்ட அப் பெரும் கண்ட னத்தை மிதவாதிகள் எதிர்த்தனர். பதினெரு வாக்குகள் அதிக மாகப் பெற்றுத் தீவிரவாதிகள் அக் கண்டனத்தை நிறைவேற்

றினர். பாராளுமன்றத்தில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதி களுக்கும் இடையே இருந்த பிளவை இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டியிருக்க, மிதவாதிகளின் ஆதரவிலேயே சார்லஸ் நம்பிக்கை வைக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இதற்கிடையே நாட்டில் மதப்பிரச்சினைக்கு ஒரு காரணமாக விளங்கிய அரசி ஹென்றியாட்டா மேரியாமீது காமன்ஸ் சபையில் கண்டனத் தீர்மானம் கொண்டுவர பிம், ஆம்டன் (Pym, Hampden) போன்ற தீவிரவாதிகள் திட்டமிட்டனர். அதைக் கேள்வியுற்ற சார்லஸ் 1642 ஜனவரி 4-ஆம் நாளில் தம் 400 வீரர்களுடன் பாராளுமன்றத்தில் நுழைந்து பிம், ஆம்டன், ஹோல்லிஸ் (Holles), ஹேசல்ரிக் (Haselrig), ஸ்டோருடு (Strodo) ஆகிய ஐந்து அங்கத்தினர்களைக் கைது செய்ய முயன்றனர். செய்தி கேட்டு அவ் வைந்து உறுப்பினர்கள் தப்பிவிட்டிருந்த போதும் சார்லஸின் அச் செய்கை மற்ற அங்கத்தினர்களின் மனதில் ஒரு வெறுப்புக் கலந்த சந்தேகத்தை உண்டாக்கியது. தம் படை கொண்டு சார்லஸ் எதையும் செய்யத் துணிவார் என்ற எண்ணத்திற்கு அச் செய்கை இடம் அளித்தது. அவ் வுறுப் பினர்கள் தப்பியிராவிட்டால் அன்று கொலை செய்யப்பட்டிருப் பார்களென்ற பயங்கரக் கற்பனை மற்றவர் மனதில் எழுந்தது. தங்களின் உயிருக்கும் பிற்காலத்தில் ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறதென நினைத்த மற்றத் தீவிரவாதிகள், படைத் தலைமையை அரசரிடமிருந்து பறிக்க முடிவு செய்தனர்.

அதற்கேற்ப 1642 மார்ச் மாதத்தில் அப் பாராளுமன்றம் படை மசோதாவைக் (Militia Bill) கொண்டுவந்தது. இரா ணுவம், கப்பற்படை, கோட்டைகள்மீது வைத்திருந்த பூரண அதிகாரத்தை அரசர் விட்டுக்கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அம் மசோதாவை அரசர் தள்ளுபடி செய்ததால் தீவிரவாதிகளின் சந்தேகம் இன்னும் வலுப்பட்டது. படைபலம் கொண்டு பாராளுமன்றத்தை நசுக்க அரசர் முயலுவா ரென்ற பயமும் அவர்களிடையே பரவ ஆரம்பித்தது. அதனால் அவசியம் ஏற்பட்டால் எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் பாராளுமன்றம் கவனம் செலுத்தியது.

படை மசோதாவை அங்கீகரிக்க சார்லஸ் மறுத்ததும், சில தளகர்த்தர்களைப் பாராளுமன்றம் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தது. அவர்களிலே ஒருவராக ஹல் (Hull) கோட்டைத் தலைவரான சர் ஜான் ஹோதம் (Sir John Hotham) என்பவர் இருந்தார். 1642, ஏப்ரல்-23ஆம் நாளில் அரசர் சார்லஸ் அக் கோட்டைக்குச் சென்றபோது அவருக்கு நுழைவு

மறுக்கப்பட்டது. மன்னருக்கு நேர்ந்த அவமானம் அவர் மனதிலே ஆழமாகப் பதிந்தது. பாராளுமன்றம் தம்மை எதிர்க்கப் படைகளை வசப்படுத்துகிறது என்ற உண்மையை சார்ல்ஸ் தெரிந்துகொண்டதால் அதற்கான எதிர் முயற்சியில் அவரும் ஈடுபட்டார்.

நிலைமை அங்ஙனம் மோசமாகிவர, காமன்ஸ் சபையில் பத்தொன்பது முன்மொழிக் கூற்றுகள் (Ninteen Propositions) தாக்கல் செய்யப்பட்டன. அமைச்சர்களையும் நீதிபதிகளையும் தேர்ந்தெடுக்கும் அதிகாரமும், அரச பிள்ளைகளின் கல்வி, கோட்டைகள், படை, கப்பல்கள், பிரபுக்கள் சபை, திருச்சபை ஏற்பாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் வேண்டுமென அங்கத்தினர்கள் கேட்டதை அரசர் மறுத்தார்.

இங்ஙனம், பாராளுமன்றம் கேட்டதை அரசர் தர மறுக்க, அரசர் ஒப்புக்கொள்ள மறுத்ததைப் பாராளுமன்றம் கேட்க அது இறுதியில் உள்நாட்டுப் போராக முடிந்தது.

போரின் போக்கு

யாருக்கு யார் பகைவர் எனத் திட்டமாகத் தெரியாத நிலையில் வால்லர் (Waller) போன்ற பலர் வெறுப்புடன் இப் போரில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. எந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளித்துத் தாங்கள் போர்க்கோலம் பூண்டார் என்பதும் பல ஆங்கிலேயர்களுக்குத் தெளிவாகப் புரியவில்லை. இரு கட்சியினரையும் ஆதரித்த சிறுபான்மையினரைத் தவிர வேதனையுடன் அவசியத்தின்பேரில் அப் போரில் கலந்து கொண்டவர்களே பெரும்பான்மையினராக இருந்தனர். எக் கட்சி வென்றாலும் அது நாட்டிற்கு நல்லதன்று என நம்பிய சர் எட்மண்டு வெர்சி (Sir Edmund Versy) போன்ற நடுநிலைமையாளர்களும் அங்கிருந்தனர். உள்நாட்டுப் போர் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே நிகழ்ந்த பெரும் போராகக் கருதப்படினும், காமன்ஸ் சபையின் மூன்றில் ஒரு பங்கினரும், பிரபுக்கள் சபையின் மூன்றில் இரு பங்கினரும் சார்லஸை ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எஸ்ஸெக்ஸ் (Lord Essex), மான்செஸ்டர் (Lord Manchester) போன்ற பிரபுக்கள் பாராளுமன்றத்தின் சார்பிலும், எட்வர்டு ஹைடு (Edward Hyde), ஃபாக்லாந்து (Falkland) போன்ற பாமரர்கள் அரசருடனும் கலந்துகொண்டிருக்க அப் போர் வகுப்புப் போராட்டமாகவும் (class struggle) இல்லை. உணர்ச்சியினால் உந்தப்பட்டுத் தங்களின் நோக்கங்களை ஈடேற்றவே இரு தரப்பாரும் அவர்களின் ஆதரவாளர்களும் படைக்கலம் தாங்கி நின்றனர்.

இலண்டன் நகரம் பாராளுமன்றத்திற்கு அடைக்கலமளிக்கும் அரணுகவும், போரின் கேந்திரமாகவும் இருந்தது. பாதுகாப்பு அரண் எதுவுமில்லாத ஆக்ஸ்ஃபோர்டுநகரமே சார்லஸின் தலைமையிடமாக ஆக்கப்பட்டது. பாராளுமன்றம் பெற்றிருந்த இந்த முக்கிய நலனேவிட, வேறு பலவும் அதற்குப் பலமாக இருந்தன. செல்வம் கொழிக்கும் தொழிற் பகுதிகளையும் சுங்கவரி வருமானப் பகுதிகளையும் [ஹல், லீட்ஸ், (Hull, Leeds), மான்செஸ்டர் (Manchester), கிளொசெஸ்டர் (Claucester) பிளிமவுத் (Plymouth)] பாராளுமன்றம் தன்வசம் வைத்திருந்தது. பாராளுமன்றத்தினர் தங்களுடைய பகுதிகளான தெற்கு, கிழக்கு இங்கிலாந்தில் வரிகளை உயர்த்தியும் வருமானத்தைப் பெருக்கினர். தவறுமல் ஊதியம் அளிக்கப் போதுமான வருவாயைப் பாராளுமன்றம் பெற்றிருந்ததால் அதுவரை மன்னரிடம் பணி புரிந்தவர்களும், வெளிநாடுகளில் அனுபவம் பெற்றிருந்த அதிகாரிகளும், பாராளுமன்றப் பணியை ஏற்றுக்கொண்டனர். நாடெங்கிலும் இருந்த பியூரிட்டானியர்களின் ஆதரவும் பாராளுமன்றத்திற்கு இருந்தது.

நாட்டுப்புறக் கனவான்களும், ரோமன் கத்தோலிக்கர்களும், அரச விசுவாசிகளும் சார்லஸை ஆதரித்தும் அவருக்குப் பணமுடை யிருந்தது. நிரந்தர வருவாயற்ற சார்லஸ் தம் படைகளை வடக்கு, மேற்குப் பகுதிகளில் பல இடங்களில் பிரித்து வைத்திருந்தார். குதிரைப் படையின் உதவியைப் பெற்று இருந்த சார்லஸ், கடலாதிக்கத்தைப் பெற முடியாது போய்விட்டது. அதனால் வெளிநாட்டிலிருந்து படைக்கலங்களை இறக்குமதி செய்ய முடியாமல் சார்லஸ் திண்டாடினார். போர் மூள்வதற்கு முன்னரே ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலக்கிழார்கள் தலைமையில் இரு கட்சிகள் தோன்றிவிட்டன. அரசரை ஆதரித்தவர்கள் கேவிலியர் (Cavaliers) எனவும் பாராளுமன்றத்தை ஆதரித்தவர்கள் வட்டத் தலைமையினரென்றும் (Round heads) அழைக்கப் பட்டனர். நகரத்திலும் இரு கட்சிகளின் ஆதரவாளர்கள் இருந்தால் நாடே இரண்டு பிரிவுகளாகக் காணப்பட்டது.

இரு கட்சிகளிலும் தந்நலமற்ற விசுவாசிகளும் துணிச்சல் மிகுந்த வீரர்களும் இருந்தனர். பயனற்ற வீணர்களும், வெளி வேடதாரிகளும் இருந்தனர்.

நாடே இரண்டுபட்டிருக்க அதன் விளைவு உள்நாட்டுப் போராகத்தானே இருக்கும்? இனி, அதன் போக்கைக் கவனிப்போம்.

1642-ல் தம் படைகளுடன் சார்லஸ் பாராளுமன்றத்தினரின் தலைமையிடமான இலண்டனை நோக்கி முன்னேறினார்.

எஸ்ஸெக்ஸ் பிரபு தலைமையில் எட்ஜ்ஹில் (Edgehill) என்ற இடத்தில் பாராளுமன்றத்தினரின் படைகள் அரசரின் படைகளை வழிமறித்து வெற்றி கண்டன. பெற்ற வெற்றியைத் தொடர்ந்து எஸ்ஸெக்ஸ் பிரபு செயல்பட மறுத்ததால், அச் சண்டையில் எப் பலனும் ஏற்படவில்லை. மீண்டும் இன்னொரு முறை சார்லஸ் இலண்டனை நோக்கி முன்னேறியபோது டர்ன்ஹாம் கிரீன் (Turnham Green) என்னும் இடத்தில் எதிரிப் படைகளால் வழிமறிக்கப்பட்டார். அதனால் ஆக்ஸ்ஃபோர்டுக்குப் பின் வாங்கி, அந்த நகரையே சார்லஸ் தம் தலைமை இடமாக ஆக்கிக் கொண்டார்.

1643-ல் இலண்டனை நோக்கி மும்முனைத் தாக்குதல் நடத்த சார்லஸ் திட்டமிட்டார். நியூகாசில் பிரபு (Lord Newcastle) தம் படைகளுடன் தெற்கு நோக்கி வரவேண்டும்; ஹாப்டன் (Hapton) தம் வீரர்களுடன் கிழக்கு நோக்கி வரவேண்டும். அதற்கிடையே சார்லஸ் எஸ்ஸெக்ஸ் பிரபுவை முரியடித்து, இலண்டனுக்கு வழியைப் பெறவேண்டுமென்பதே ஏற்பாடு. ஏதர்டன் மூர் (Atherton Moor) என்னுமிடத்தில் நியூகாசில் பாராளுமன்றத்தினரை வென்றார். ஹாப்டன் எதிரிகளை ரவுண்டவே டவுன் (Roundaway down) என்னுமிடத்தில் தோற் கடித்தார். ஆயின், நியூகாசில் மேலும் முன்னேறமுடியாதபடி பிளிமவுத் பட்டணம் குறுக்காக நின்றது. ஹாப்டனின் முன் னேற்றத்திற்கு 'ஹல்' (Hull) துறைமுகம் இடையூறாக இருந்தது. அவற்றை அப் படைத் தலைவர்கள் முற்றுகையிட்டுக் கொண் டிருக்க, சார்லஸ் தம் படைகளுடன் எஸ்ஸெக்ஸ் பிரபுவுடன் நியூபரியில் (Newbury) சண்டையிட்டார். வெற்றி தோல்வி யின்றி முடிந்த அச் சண்டை சார்லஸின் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டை யிட்டது. அந்த ஆண்டில் பாராளுமன்றத்தினர் சார்பில் ஆலிவர் கிராம்வெலால் லின்ஸ்பி (Linceby) என்னு மிடத்தில் பெற்ற வெற்றியைத் தவிர, பிரடாக் டௌன் (Bradock down) ஸ்ட்ராட்டன் (Stratton), லான்ட்ஸ் டௌன் (Lands down) போன்ற இடங்களில் நேர்ந்த கைகலப்பில் கேவலியன் படைகளே வென்றிருந்தன.

போரின் அக் கட்டத்தில் இரு தரப்பினருக்கும் வெளி உதவி கிடைத்தது. சார்லசுக்கு அயர்லாந்திலிருந்து படை உதவி கிடைத்தது. உடனே பாராளுமன்றத்தினர் ஸ்காட்லாந்துடன் புனிதக் கூட்டுறவு ஒப்பந்தம் (Solemn League and Covenant) செய்து கொண்டு உதவி பெறலாயினர். அவ் வொப்பந்தத்தின்கீழ் ஸ்காட்லாந்தில் பிரஸ்பிடீரியன் மதத்தை நிறுவப் பாராளுமன்றம்

உடன்பட, மன்றத்தினருக்கு உதவியாக 20,000 வீரர்களை அனுப்ப ஸ்காட்லாந்து ஒப்புக்கொண்டது.

ஸ்காட்டியர்களின் உதவியைப் பெற்ற பாராளுமன்றத்தினர் மார்ஸ்டன் மூர் (Morston Moor) என்னுமிடத்தில் அரசரின் படைகளை 1644ஆம் ஆண்டில் சந்தித்தனர். கிராம்வெலின் படைத்திறமையை வெளிப்படுத்திய அச் சண்டை கேவலியர் களுக்குப் பெருந் தோல்வியாக முடிந்தது. போரில் புதுத் திருப்பம் உண்டாக்கிய அச் சண்டைக்குப் பிறகு சார்லஸ் வட இங்கிலாந்து முழுவதையும் இழந்தார்.

மார்ஸ்டன் மூர் வெற்றி பாராளுமன்றத்தினருக்குப் புதிய தென்பு கொடுத்திருந்தபோதும் லாஸ்ட்விதியல் (Lostwithiel) என்ற இடத்தில் எஸ்ஸெக்ஸ் தலைமையிலிருந்த எதிரிப் படைகளை யும், நியூபரியில் மான்செஸ்டர் தலைமை தாங்கிய மற்றொரு படையையும், அரசக் கட்சியினர் வென்றனர். அத் தோல்வி களின் விளைவாக இரு சட்டங்களைப் பாராளுமன்றம் கொண்டு வந்தது. பாராளுமன்ற உறுப்பினர் எவரும் படையில் பெரும் பதவி வகிக்கலாகாதென வற்புறுத்திய 'தன் மறுப்புச் சட்டம்' (Self denying ordinance) நிறைவேற்றப்பட்டது. அதன்படி எஸ்ஸெக்ஸ், மான்செஸ்டர் போன்றவர்கள் படைத் தலைமையி லிருந்து விலகினர். சிறந்த போர்த் தளபதிகளான ஃபேர்ஃபாக்சும் (Fairfox) ஆலிவர் கிராம்வெலும் (Oliver Cromwell) படைத் தலைவர்களாக அமர்த்தப்பட்டனர். 22,000 வீரர்களைக் கொண்ட புது மாதிரிச் சேனையும் (New Model Army) கூட்டப் பெற ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது தொழில் முறை சார்ந்த சேனையாக இருக்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

அதன்பின் கிழக்கு ஆங்கிலியாவுக்குத் திரும்பிய கிராம்வெல், கவசமணிந்த குதிரை வீரர் படையொன்றைத் திரட்டினர். சிறு நிலக்கிழார்கள், சிறு உரிமை மானியதார் வகுப்புகளிலிருந்து திரட்டப்பட்ட அப் படை இராணுவக் கட்டுப்பாடுடன் விளங் கியது (Ironside Army). பணத்தை நாடாமல் மக்களின் பொது நலத்தைத் தங்களது முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த அப் படையினர், கிராம்வெலால் நன்கு பயிற்சி அளிக்கப்பட்டனர். உணர்ச்சியும் உடல் உரமும் கொண்டிருந்த அப் படையினரே இரும்பு மனிதர்கள் (Ironsides) என்ற புகழ்ப்பெயர் கொண்டவ ராயினர்.

மார்ஸ்டன் மூர் சண்டையில் சார்லஸ் தோல்வியடைந்ததை ஓட்டி, மான்ட்ரோஸ் (Montrose) என்ற ஸ்காட்டியப் பிரபு

அரசருக்கு உதவியாகப் படை சேகரித்துத் தம் எதிர்ப்பாளர்களை இன்வர்லாக்கி (Inverlocky), ஏபர்டீன் (Aberdeen), கில்சித் (Kilsyth) என்னுமிடங்களில் தோற்கடித்து, இங்கிலாந்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தார். மான்ட்ரோஸுடன் சென்று இணைந்துகொள்ள வேண்டுமென்று சார்லஸ் நினைத்தார். ஆயினும், மன பேதலிப்பினல் அவதிப்பட்ட மன்னர் அத் திட்டத்தைக் கைவிடுத்து ஆக்ஸ்ஃபோர்டிலிருந்து தெற்கு நோக்கி வந்தபோது, புது மாதிரிப் படையினர்கள் 1645 ஜூன் 14ஆம் தேதியன்று நேஸ்பி (Naseby)யில் வழிமறித்தனர்.

அரசரின் மைத்துனரான இளவரசர் ரூபர்ட் (Rupert) பாராளுமன்றத்தின் படையைத் தோற்கடித்து, அவர்களை அழிப்பதற்காக வெகுதூரம் துரத்திச் சென்றார். அது அச் சண்டையின் போக்கையே மாற்றியது. ஆனல், அவர் திரும்பி வருவதற்குள் அரசரின் படைகளைக் கிராம்வெல் (Cromwell) முரியடித்தார். 5000 கைதிகளோடு மன்னரின் போர்த்தள வாடங்களும், இரகசியக் கடிதங்களும் கைப்பற்றப்பட்டன. நாஸ்பி தோல்வியைத் தொடர்ந்து மேற்குப் பகுதியிலும் சார்லஸின் ஆதிக்கம் சீர்குலைந்தது. கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிரான சட்டங்களை ரத்து செய்வதற்காகவும், அயர்லாந்து மற்ற அயல் நாட்டுக் கூலிப் படைகளைக் கொண்டு வருவதற்கான அரசரின் திட்டங்களைக் கைப்பற்றப்பட்ட அக் கடிதங்கள் அம்பலமாக்கின.

சார்லசின் உதவிக்கு வந்துகொண்டிருந்த மார்ட்ரோசின் படைகள் ஃபிலிப்ஃபாக் (Philiphaugh) என்னுமிடத்தில் டேவிட் லெஸ்லி (David Leslie) என்ற ஸ்காட்டியரால் சிதறியடிக்கப் பட்டன. சார்லசுக்கு உறுதுணையாக இருந்துவந்த ரூபர்ட் (Rupert) இளவரசரும் பிரிஸ்டல் நகரில் சரணடைந்தார். தமக்கு உதவியில்லாத நிலையில், ஆக்ஸ்ஃபோர்டு நகரை வளைத்துக் கொண்ட ஸ்காட்டியப் படைகளிடம் சார்லஸ் 1646-ல் சரண் அடைந்தார்.

தங்களிடம் கைதியாக இருந்த சார்லஸை நியூகாசில் ஆலோசனைகள் (Propositions of New Castle) என்ற நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும்படி ஸ்காட்டியர்கள் வற்புறுத்தினர். பிரஸ்பிடீரியத் திருச்சபையை அரசர் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்றும், குறைந்த அதிகாரங்களுடன் ஆட்சியை நடத்த வேண்டுமென்றும், இருபது ஆண்டுகளுக்கு நாட்டுப் படையை வைத்திருக்கலாகாது எனவும் யோசனைகள் கொடுக்கப்பட்டன. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையில்லாத சார்லஸ் அவற்றினை மறுத்துவிட்டார்.

ஆகவே, அடுத்த ஆண்டு 1647 ஜனவரி மாதத்தில் ஸ்காட் படையினர் 400,000 பவுன்களைப் பெற்றுக்கொண்டு அரசரைப் பாராளுமன்றத்தினிடம் ஒப்படைக்க, அத்துடன் உள்நாட்டுப் போரின் முதல் கட்டம் முடிந்தது.

போரின் இரண்டாவது கட்டம்

பாராளுமன்றத்தினரின்வசம் ஒப்படைக்கப்பட்ட சார்லஸ் லிங்கன்னஷயரிலிருந்த ஹால்ம்பி மாளிகையில் (Holmby House) காவலில் வைக்கப்பட்டார். அதற்கிடையே பாராளுமன்றத்தினருக்கும், புது மாதிரிப் படையினருக்கும் தகராறு ஏற்பட்டது.

பிரஸ்பிடீரிய திருச்சபையை உருவாக்கப் பாராளுமன்றம் நினைத்தபோது, நாட்டினருக்குச் சமயப் பொறையை வழங்க வேண்டுமெனப் படையினர் கூறினர். படையினரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட நினைத்த மன்றத்தினர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். ஃபேர்ஃபாக்ஸ் (Fairfox) தவிர மற்ற எல்லாத் தளபதிகளும் வேலையிலிருந்து நீக்கப்படவேண்டும். புது மாதிரிப் படையின் பெரும்பகுதி கலைக்கப்படவேண்டும்; எஞ்சியதில் ஒரு பகுதி கலகங்களை அடக்க அயர்லாந்துக்குச் செல்லவேண்டும். அத் திட்டங்களில், படையினர்மீது மன்றத்தினருக்குத் தோன்றியிருந்த சந்தேக மனப்பான்மை நன்கு புலப்பட்டது. படையினருக்குச் சம்பளப் பாக்கித் தொகை மிகுதியாக இருந்தும், ஆறுவாரச் சம்பளப் பாக்கியையே பாராளுமன்றம் கொடுக்க முன்வந்தது.

பாராளுமன்றத்தினருக்கும் படையினருக்கும் இவ்வாறு உறவு சீர்கெட்டுவந்த நேரத்தில் சார்லஸ் மன்றத்தினருக்குச் சமாதான அறிவிப்பை விடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட பாராளுமன்றத் தலைவர்கள் சார்லஸை ஹோல்டன் பிடியிலிருந்து இலண்டனுக்குக் கொண்டுசெல்வதெனத் தீர்மானித்தனர். அதைத் தொடர்ந்து படைக்கலைப்புக்கான உத்தரவைப் பிறப்பிக்கப் பாராளுமன்றம் முயன்றது. சேனைகளின் குறைகளைத் தீர்க்காது அதனைக் கலைக்கப் பாராளுமன்றம் முயன்றபோது லெஃப்டினன்ட் ஜெனரலாகிய கிராம்வெல் தமது எதிர்ப்பை உறுதியாகத் தெரிவித்துக்கொண்டார். ஸ்காட்டியர்களின் உதவியைப் பெற அரசர் இரகசியமாக முயன்று வருகிறார் என்பதையும் அதற்குப் பாராளுமன்றமும் உடந்தையாக இருக்கின்ற தென்பதையும் கிராம்வெலும் அவரின் படையினரும் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டார்கள். நிலவரம் கட்டுக்கடங்காத நிலையை அடைவதற்கு முன்னரே அரசரைக் கைப்

பற்றித் தங்களின் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளவேண்டுமென அவர்கள் கருதினர். ஆக, கார்னெட் ஜாய்ஸ் (Cornet Joyce) என்பவரின் தலைமையில் தம் படையானது ஹால்ம்பி மாளிகைக்கு அனுப்பப்பட, அது சார்லசை அங்கிருந்து தங்களின் தலைமையிடமான ஹேம்டன் கோர்ட்டுக்குக் (Hampton Court) கொண்டு வந்துவிட்டது.

இக் கட்டத்தில் அரசரைக் கொல்லவேண்டுமென்ற எண்ணம் எவருக்குமே இல்லை யென்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அரசருடன் சமாதானம் செய்துகொள்ளவே சேனைத் தலைவர்கள் அரும்பாடு பட்டனர். ஒளிவு, மறைவு இன்றிப் பேசுமாறு வேண்டினர். தங்களுக்காக எதையும் கேட்கவில்லை யென்றும் நாட்டின் நலனுக்காகவே கோரிக்கை விடுப்பதாகவும் சொல்லி முன்மொழித் தலைப்புகள் (Heads of Proposals) என்ற திட்டத்தை அரசருக்கு அனுப்பிவைத்தனர்.

நீண்ட பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படவேண்டு மென்றும் இரண்டாண்டுகளுக் கொருமுறை புதிய பாராளுமன் றங்கள் கூட்டப்பட வேண்டுமென்றும், படைகளின் பொறுப்பு பாராளுமன்றத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அரச ருக்கு ஆலோசனை சொல்ல மேல் அரசாங்க சபை ஒன்று (Council of State) நிறுவப்பட வேண்டுமென்றும், எல்லாவித பிராடஸ் டென்டுகளுக்கும் சமயப் பொறை வழங்கப்பட வேண்டுமென்றும் அரசர் அக் கோரிக்கைகளுக்குத் தம் சம்மதத்தைத் தரவேண்டு மென்றும் அத் தலைப்புகளில் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், அதைவிடச் சாதகமான ஒப்பந்தம் தமக்குக் கிடைக்குமெனவும் ஸ்காட்லாந்தியர்கள் தம் உதவிக்கு வருவார்கள் எனவும் நம்பிக்கையுடனிருந்த சார்லஸ் அத் திட்டங்களை நிராகரித்தார்.

படையின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டாயொழியத் தமக்கு விடிவு காலம் கிடைக்காதென எண்ணிய சார்லஸ், அவர் களின் காவலிலிருந்து (ஒயிட்தீவிலிருந்து) கேரிஸ்ப்ரூக் (Caris Brooke) கோட்டைக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்து கொண்டு ஸ்காட்டுகளுடன் ஓர் உடன்படிக்கையும் (engagement) செய்து கொண்டார். பதவிகள், போர்ச் செலவு, வாணிகம் ஆகிய வற்றில் ஸ்காட்லாந்துக்குச் சலுகைகள் அளிக்கவும் இங்கி லாந்தில் பிரஸ்பிடீரிய சமயத்தை மூன்று ஆண்டுகளில் நிலைநிறுத் தவும் மற்றச் சமயங்களைத் தடுக்கவும் சார்லஸ் ஒப்புக்கொண்ட தன்பேரில் புதுமாதிரிப் படைக் கெதிராக அரசருக்கும், பாராளு மன்றத்திற்கும் உதவி தர, ஸ்காட்டியர்கள் முன்வந்தனர்.

சார்லஸ் மீண்டும் படையினரால் பிடிபட்டாரெனினும் அவர் ஸ்காட்டியர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை, அவர்களிடையே ஸ்காட்டியப் படையெடுப்புப் பயத்தை உண்டாக்கியது.

எதிர்பார்த்தபடி ஸ்காட்டியர்கள் சார்லசுக்கு ஆதரவாகப் படை கொண்டுவர இரண்டாம் உள்நாட்டுப்போர் தொடங்கியது.

தங்களின் அதிகாரத்தைத் திருச்சபையின்மீதும் மன்னரின் மீதும் நிலைநிறுத்தப் படையெடுத்து வந்த ஸ்காட்டியர்களுக்கு ஹாமில்டன் பிரபு (Lord Hamilton) தலைமை தாங்கினர். போர்டர் (Porter), கெண்டால் (Kendal) போன்ற இடங்களைக் கைப்பற்றி லங்காஷையரை நோக்கி அப் படைகள் முன்னேறின. அதனை ஒட்டி அரசருக்கு ஆதரவாக வேல்ஸ், தென் கிழக்குப் பகுதிகளில் கலகங்கள் தோன்றின.

அந்த நிகழ்ச்சிகள் அரசரை வெறுக்கும் அளவுக்குப் பாராளுமன்றத்தில் பலரையும், படையினரையும் மாற்றியது. 1646-1648-ல் அரசருடன் சமரசம் பேசிச் சுமுகமான முடிவுக்கு வரத் துடித்த படையினர் சார்லசைத் தண்டிக்க வேண்டுமெனக் கூக்குரலிட்டனர். வரப்போகும் போரிலே கொட்டப்பட வேண்டிய குருதிக்கு அவரே பொறுப்பாளியாக வேண்டுமெனப் படையினர் ஏகோபித்த குரலில் முழக்கமிட்டனர். கொதிப்பான அந்தச் சூழ்நிலையிலே உள்நாட்டுப் போரின் (Civil War) இறுதிக்கட்டம் ஆரம்பித்தது.

தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட கலகத்தை ஃபேர்பாக்ஸ் அடக்கினர். வேல்ஸ் பகுதியில் உண்டான எதிர்ப்பை நசுக்கிய கிராம்வெல் 1648-ல் பிரஸ்டன் (Preston) என்னுமிடத்தில் ஸ்காட்டியர்களை வென்றார். எஞ்சிய மற்ற ஸ்காட்டியர்களையும் வாரிங்டனில் (Warington) சரணடையச் செய்தார். சிதறி ஓடிய ஹாமில்டன் பிரபுவையும், அவரது குதிரைப் படையையும் பின்னர்க் கிராம்வெல் கைப்பற்றியபோது போர் முடிந்தது. அரசருக்கு ஆதரவாக ஆயுதந் தாங்கிய கலகக்காரர்கள் பார்படோஸ் (Barbados) என்ற மேற்கிந்தியத் தீவுக்குக் கப்பல்களில் கடத்தப்பட்டனர்.

வெற்றிவீரர் கிராம்வெலும் அவரின் படைகளும் வாரிங்டன் சண்டைக்குப் பிறகு இங்கிலாந்தில் தனிச்சிறப்புப் பெற்றவர்களாக விளங்கினர். உள்நாட்டுப் போரின் இரண்டாவது கட்டத்திற்குப் பொறுப்பாளியான சார்லஸ், படையினர் வசம் காவலில் இருந்துவந்தார். உள்நாட்டுப்போரின் முதல் கட்டத்

திற்கு அவர் காரணமாக இருப்பினும் அதை வேண்டுமானால் மன்னிக்கத் தயாராக இருந்த கிராம்வெல், இரண்டாவது கட்டத்தில் அவரின் பொறுப்புக்குத் தண்டிக்க முடிவு கொண்டார். அரசர் உயிரோடு விட்டுவைக்கப்பட்டால் மீண்டும் ஸ்காட்டியர்களுடனே அல்லது வெளிநாட்டு அரசுகளுடனே சதிசெய்து, இன்னொரு போரை மூட்ட முயலலாம் எனவும் கருதப்பட்டது. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசிய சார்லஸ் வார்த்தைகளில் கிராம்வெலுக்கு நம்பிக்கையில்லை. ஆகவே, சார்லசை விசாரித்துத் தண்டிப்பதென்று முடிவாகியது.

அரசர்மீது விசாரணை நடத்த அனுமதிக்கும் மசோதாவைப் பாராளுமன்றத்தில் இருந்த பிரஸ்பிடீரியன் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்களெனக் கிராம்வெலுக்குத் தெரிந்த போது தம் தளபதிகளில் ஒருவரான கர்னல்பிரைடு (Col. Pride) என்பவரிடம் சிறுபடை கொடுத்துக் கிராம்வெல் காமன்ஸ் சபைக் கூட்டத்திற்கு அனுப்பினர். அரசரைக் குற்றம் சாட்டி விசாரிக்கும் மசோதாவை எதிர்த்த 100 பிரஸ்பிடீரிய அங்கத்தினர்கள் சபைக்கு வராமல் தடுக்கப்பட்டனர். 50 பிரஸ்பிடீரிய அங்கத்தினர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அந்த நிகழ்ச்சி பிரைடின் கழிப்பு (Pride's Purge) என அழைக்கப்படுகிறது.

காமன்ஸ் சபையில் எஞ்சியிருந்த நூற்றுக்குக் குறைவான அங்கத்தினர்கள் அரசரைத் தண்டிக்கும் மசோதாவை ஆமோதித்தனர். பாராளுமன்றத்துடன் போர் செய்தது நாட்டுத் துரோகமாகும் என்ற வாசகம் பெற்றிருந்த அம் மசோதா காமன்ஸ் சபையின் ஒப்புதலின்பின் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டது. அப்போது 15 அங்கத்தினர்களுக்கும் குறைவாகவே இருந்த பிரபுக்கள் சபை அம் மசோதாவை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து அச் சபை கலைக்கப்பட்டது. பிரபுக்களின் சம்மதம் தேவைஇல்லையென முழு அதிகாரங்களைக் காமன்ஸ்சபை பெற்றுக் கொண்டது. அச் சபை அரசரை விசாரிக்க 135 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமித்தது. ஜான் பிரேட்ஷா (John Bradshaw) என்பவரின் தலைமையில் விசாரணை தொடங்கியது.

'நாட்டின் புராதன அடிப்படைச் சட்டங்களையும் உரிமைகளையும் கவிழ்த்து எதேச்சாதிகாரக் கொடுங்கோல் ஆட்சியை நிறுவச் சதி செய்து கொடூரப் போர்களை நடத்தினர்' என்ற குற்றப் பத்திரிகை சார்லசின் மீது தாக்கல் செய்யப்பட்டது.

எந்த நீதி மன்றமும், சிறப்பாக பிரைடு கழிப்புக்குப் பின் கூடிய காமன்ஸ் சபையின் வற்புறுத்தலுக்குட்பட்டு இருந்த நீதி மன்றம் அரசரை விசாரணை செய்யமுடியாது எனச் சார்லஸ்

வாதம் செய்தார். எதிர்வாதம் செய்ய மேற்கொண்டு மறுத்த அரசருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

நீதிமண்டபத்தில் ஆண்டவர் அரசரைக் காக்கட்டும் என எழுந்த வேதனைக் குரல்களாலும், கொலை மேடைக்கருகே புலம் பிக்கொண்டிருந்த சிவந்த கண்களாலும், அரசரைக் காக்க முடிய வில்லை.

தம் ஒயிட் ஹால் அரண்மனைக் கெதிரே 1649-ல் ஜனவரி 30 ஆம் நாளில் சார்லசின் தலை துண்டிக்கப்பட்டது.

உணர்ச்சி நிறைந்த கம்மிய குரலில் அக் காட்சியைக் கண்டு 'கொடூரமான (அவசியம்) செய்கை' எனக் கிராம்வெல் குறிப் பிட்டார்.

மக்களுடைய சுதந்தரம் தம் ஆட்சியில் பங்குகொள்ளும் அளவிற்கு இல்லை என இறுதிவரை நம்பி, தம் வாளின் வலிமை யால் தாம் நினைத்ததைச் சாதிக்க நினைத்த சார்லசின் தலை துண் டிக்கப்பட்டதால், அவரின் ஆட்சிமட்டுமல்லாமல் மன்னரின் ஆட்சியும் தற்காலிகமாக இங்கிலாந்தில் முற்றுப்பெற்றது.

9. ஆலிவர் கிராம்வெலும் (1599 - 1658) பியூரிட்டானிய இங்கிலாந்தும்

ஆங்கில வரலாற்றிலே சர்வ அதிகாரங்களைப் பெற்றுத் தனி நபர் ஒருவர் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிருந்தாரெனின், அந் நபர் ஆலிவர் கிராம்வெலாகத்தானிருக்க முடியும்.

ஆரம்ப வாழ்க்கை

சிறு வேளாண்மைக் குடியைச் சார்ந்த கிராம்வெல், கேம் பிரிட்ஜ் சஸ்ஸக்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றவராகக் தம் 40-வது வயதுவரை மிட்லாந்து பகுதியில் சிறு நிலச் சொந்தக்காரராக அமைதியான வாழ்வு நடத்திவந்தார்.

1628-ல் ஹன்டிங்டன் (Huntingden) பகுதியிலிருந்து அங்கத் தினராகப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதி லிருந்து, அவரின் அரசியல் வரலாறு தொடங்குகின்ற தெனலாம். எலியட், பிம் போன்ற தலைவர்கள் பாராளுமன்றத்தில் அரசர் சார்லசின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தபோதெல்லாம் அவர்களின் வாதங்களையும் பிரதிவாதங்களையும் கருத்தில் கொண்டிருந்த கிராம்வெலுக்கு அரசரின் சர்வாதிகாரப்போக்கு சிறுகச் சிறுகக் கசப்புணர்ச்சியை வளர்த்துவந்தது.

மன்றத்தின் அங்கத்தினர்

சார்லசின் தன்னாட்சி முடிந்து, நீண்ட பாராளுமன்றம் கூட்டப்பட்டபோது. கிராம்வெலும் அங்கத்தினராக அதில் வீற்றிருந்தார். தலைவருக்கேற்ற திறமை அவருக்கு இல்லாத தால், அச் சமயத்தில் மன்றத் தலைவர் என்ற தகுதியை அவர் பெற்றிருக்கவில்லை. தாம் ஒரு பியூரிட்டானியர் ஆனதால் 1641-ல் பிஷப்புகளின் ஆட்சியை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட வேர் – கிளை அறுக்கும் மசோதாவை, மற்றத் தீவிர வாதிகளோடு சேர்ந்து கிராம்வெல் ஆதரித்தார். அரசரின்

அதிகாரங்களைக் கட்டுப்படுத்த, பெருங்கண்டனம் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது, அதை ஆதரித்து வாக்களித்தவர்களிலே கிராம்வெலும் ஒருவர். அக் காலத் திலேயே, பிம், ஹாம்டன் போன்றவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினையும் அவர் பெற்றார்.

தளபதி

1642-ல் உள்நாட்டுப் போர் மூண்டது. முறைப்படி இராணுவப்பயிற்சி எதையும் பெற்றிராத கிராம்வெல் அப் போரில் ஆற்றிய பங்கு மகத்தானது. தலைசிறந்த போர்த் தளபதியாகவும் வீரப் பெருமகனாகவும் உள்நாட்டுப் போரில் கிராம்வெல் விளங்கியது அப் போரின் போக்கைக் கவனித்தால் புலனாகும்.

1644-ல் உள்நாட்டுப் போரில் ஒரு புதுத் திருப்பம் கொடுத்த மார்ஸ்டன் மூர் சண்டையில் தம் படையினரைக் கொண்டு அரசரின் வலப்பகுதி அணியை முறியடித்துப் பாராளுமன்றத்தினருக்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்திருந்தார்.

லாங்ட்விதல், நியூபரி சண்டைகளில் பாராளுமன்றத்தினரின் படைகள் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாகப் போர்த்தலைமை சிவிலியன் தளபதிகள் வசமிருந்து ஃபேர்ஃபாக்ஸ், கிராம்வெல் போன்றோருக்குக் கொடுக்கப்பட்டதை நாம் அறிவோம். புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட கிராம்வெல் புதுமாதிரிப் படைகளைக் கூட்டத் தயாரானார்.

தமது நாட்டுப்புறப் பகுதிவாழ் மக்களின் இதயங்களிலே இடம்பெற்றிருந்த கிராம்வெல் கிழக்கு ஆங்கிலியாப் பகுதிக்குச் சென்றார். தமக்கு நன்கு பழக்கமானவர்களாக இருந்த சிறுநிலக் கிழார்கள், சிறு உரிமை மானியதார் ஆகிய வகுப்புகளிலிருந்து சமயப் பற்றும், இராணுவக் கட்டுப்பாடும் கொண்ட கவசமணிந்த குதிரைவீரர் படையொன்றைத் திரட்டினார். தம்முடைய வீரர்கள் துப்பாக்கிகளை அதிகம் பயன்படுத்தாது, வாளையே மிகுதியாக உபயோகிக்க வேண்டுமென்றும், பகைவர் திணறும்படி திடீர்த்தாக்குதல் நடத்தவேண்டுமெனவும் உத்தரவிட்டார். அவரின் கடும் முயற்சியால் தயாரிக்கப்பட்ட அப் படையினரே, பாராளுமன்றத்தின் பெரு வெற்றிகளுக்குப் பின்னர்க் காரணமாயினர். உடலில் உரமும் உள்ளத்தில் உறுதியும் கொண்டிருந்த கிராம்வெலினால் கூட்டப்பட்ட அவரின் படையினரும் இரும்பு மனிதர்களாகவே (Ironsides) இருந்தனர்.

1645-ல் நடந்த நேஸ்பி சண்டையில் தமது மூர்க்கம் நிறைந்த வீரர்களை ஒன்றுபடுத்தி, ஒருமுகத்தாக்குதல் நடத்தி

அரசரின் படைகளை வெற்றிகண்டது வரலாற்றுப் பிரசித்தமானது.

உள்நாட்டுப் போரின் இரு கட்டங்களுக்கும் இடைப்பட்ட அக் காலத்தில் கிராம்வெலுக்குச் சோதனைகள் சில வந்தன. பாராளுமன்றத்தினரின் தகராற்றையும், அரசரின் ஒத்துழையாமையையும், ஸ்காட்டியர்களின் எதிர்ப்பையும் அவர் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஹாம்டன் கோர்ட்டில் காவலில் வைக்கப்பட்டிருந்த அரசருடன் சமரசம் செய்துகொள்ளக் கிராம்வெல் முயன்றதற்கு முன்மொழித் தலைப்புகள் ஓர் எடுத்துக்காட்டு; ஆனால், ஸ்காட்டியர்களோடு சார்லஸ் 'ஒப்பந்தம்' செய்து கொண்டதையொட்டியே, கிராம்வெலின் மனப்போக்கு மாறியது. அப்போது தொடங்கிய இரண்டாவது உள்நாட்டுப் போரில் அரசருக்கும் பிரஸ்பிடீரியப் பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கும் உதவி கொடுக்கப் படைகொண்டுவந்த ஸ்காட்டியர்களைப் பிரேஸ்டன், வாரிங்டன் என்னுமிடங்களில் வென்று தம் இராணுவத் திறமையினை மேலும் நிலைநாட்டினர்.

வாரிங்டன் போர்க்களத்திலிருந்து, சார்லஸ் ஓயிட்ஹால் அரண்மனைக்கருகில் கொல்லப்பட்டதுவரை, கிராம்வெல் பல கடுமையான முடிவுகளை எடுக்கும்படி சந்தர்ப்பங்கள் அவரை வற்புறுத்தின.

நீதிமண்டபத்தில் சார்லசுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, ஒரு சீமாட்டி 'கிராம்வெல் ஒரு துரோகி' என்று ஓலமிட்டுக் கத்தினாள். அதற்குப் பதிலளிப்பதுபோல் 'ஆண்டவரின் செயல் தன்மையைக் கண்டு சீற்றங்கொள்ள வேண்டாவென்றும், அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழியில்லை' என்றும் கிராம்வெல் பின்னர்க் குறிப்பிட்டார். அரசரின் கொலைத் தண்டனை 'கொடூரமான அவசியம்' என்றால் அதற்குக் காரணகர்த்தராயிருந்த கிராம்வெல் 'சூழ்நிலையின் கைதி'யாக இருந்தாரெனச் சொல்லலாம்.

காப்பாளர்

1649-ஜனவரி *30*-ல் சார்லஸ் தண்டிக்கப்பட்டதையொட்டி, மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. அடுத்த மாதம் 'தேவையில்லாததும் அபாயகரமானதுமான' பிரபுக்கள் சபையும் கலைக்கப்பட்டது. தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்ட பொதுநல அரசு (Commonwealth) எஞ்சிய பார்லிமெண்டையும் (Rump Parliament) அரசுக் கவுன்சிலையும் (Council of State) மையமாகக்

கொண்டு இயங்கியது. அதற்கு உறுதுணையாகக் கிராம்வெலும் அவரின் இரும்புப் படையினரும் இருந்தனர்.

490 அங்கத்தினர்களைக் கொண்டிருந்த நீண்ட பாராளு மன்றம் 1649-ல் 56 அங்கத்தினர்களையே கொண்டிருந்தது. உள்நாட்டுப் போரில் கொல்லப்பட்டவர்கள் போக, எஞ்சியிருந்த கேவலியர்கள் மன்றத்தில் அமரவில்லை. பிரைடு கழிப்பினுல் பிரஸ்பிடீரிய அங்கத்தினர்கள் 1648-ல் வெளியேற்றப்பட்டிருந் தனர். பிரபுக்கள் சபையும் கலைக்கப்பட்டிருந்தது. ஆகவே, அப் பாராளுமன்றத்தை எஞ்சிய பாராளுமன்றம் என அழைத் தனர். அந்த 56 அங்கத்தினர்களில் 30 பேர் நிர்வாகச் சபை யான அரசுக் கவுன்சிலிலும் பொறுப்பேற்றிருந்தனர். இங்கி லாந்தின் ஆட்சிப் பொறுப்பு அந்த 30 அங்கத்தினர்களிடம் இருப்பினும் அவர்களைக் கண்காணிக்கும் சுமையான பொறுப்பு கிராம்வெலுக்கு இருந்தது.

ஆட்சியாளர்களைக் கண்காணிக்கும் பொறுப்புடன், நாட் டைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பும் அவருக்கு இருந்தது.

அரசரைக் கொன்ற பியூரிட்டானிய இங்கிலாந்துக் கெதிராக வெறுப்புணர்ச்சி வளர்ந்தது. ரஷ்யா தன் உறவுகளை அறுத்துக் கொண்டது. ஸ்பெயினிலும் ஹாலந்திலும் ஆரவாரங்கள் நடந்தன. அதை ஒரு பொருட்டாகக் கிராம்வெல் மதிக்கவில்லை யென்றாலும் அவரின் உள்ளத்தைக் கலக்கும்படியான வேறு சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அதனால், காமன்வெல்த் இங்கிலாந் துக்கு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டது.

எர்ல் ஆர்மாண்டோவின் (Earl Ormando) தூண்டுதலால் அயர்லாந்தில் இங்கிலாந்திற் கெதிராகப் பயங்கரக் கலகம் தோன்றியது. இளவரசர் சார்லஸ் சார்பில் ஸ்காட்லாந்து படைக் கோலம் பூண்டது. கொலை செய்யப்பட்ட அரசரின் மைத்துன ரான ரூபர்ட் இளவரசர் சில போர்க் கப்பல்களைக் கொண்டு, இங்கிலாந்தின் கரைகளைத் தாக்க ஆங்கிலக் கால்வாயில் காத் திருந்தார். கிராம்வெல் என்ன செய்து, எப்படி இங்கிலாந்தைக் காப்பாற்றப் போகிறாரெனச் சிலர் யூகித்துக்கொண்டிருக்க, சுறு சுறுப்புடன் ஆபத்துகளைச் சமாளிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார்.

1649 ஆகஸ்டு மாதம் அயர்லாந்தில் தம் படையுடன் கிராம்வெல் இறங்கினர். 9 மாதங்களில் ஐரிஷ்காரர்களின் எதிர்ப்பை ஒடுக்கினர். ட்ரோகிடா (Drogheda), வெக்ஸ்

ஃபோர்டு (Wexford) போன்ற ஐரிஷ் எதிர்ப்புக் கேந்திரங்கள் பிடிபட்டதும் அயர்லாந்தினர் அடியோடு பணிந்தனர்.

1650 செப்டம்பரில், டேவிட் லெஸ்லியின் தலைமையில் பொருதற்கு வந்த ஸ்காட்டியர்களை டன்பார் (Dunbar) சண்டையில் வென்றார்; கொல்லப்பட்டவர்கள் அன்றி 10,000த்திற்கும் மேற்பட்ட ஸ்காட்டியர்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள். லெஸ்லி தப்பி ஓடிவிட்டார். எடின்பர்க்கில், காமன்வெல்த் கொடியைப் பறக்க விட்டுவிட்டு, இங்கிலாந்தின் எல்லைக்குள் நுழைந்திருந்த இளவரசர் சார்லசை ஓர்லெஸ்டருக்கருகே (Worcester) துரத்திப் பிடித்து அச் சண்டையில் வென்றனர் (3-9-1651). இடத்திற்கு இடம் துரத்தியடிக்கப்பட்ட சார்லஸ் இங்கிலாந்தை விட்டே இறுதியில் ஓடிவிட்டார். ஸ்காட்டியர்களின் எதிர்ப்பும் அத்துடன் ஓய்ந்தது.

அயர்லாந்திலும், ஸ்காட்லாந்திலும் காமன்வெல்த் அரசாங்கத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திய பின்னர்க் கிராம்வெல் தம் கவனத்தை ரூபர்ட்டுக்கு எதிராகத் திருப்பினார். போதிய கப்பற் படை வசதியில்லாமல், ரூபர்ட்டின் கடல் ஆபத்தைச் சமாளிக்க முடியாதென, கிராம்வெல் நினைத்தார். பலம் பொருந்திய ஒரு கப்பற் படையைத் தயாரிக்கச் சர் ஹென்றி வான் (Sir Henry Vane) தலைமையில் ஒரு குழுவைக் கிராம்வெல் ஏற்பாடு செய்தார். இரண்டு ஆண்டுகளில் (1649-1651) ஆங்கிலக் கப்பற் படையின் பலம் இரண்டு மடங்கானது. 80 கப்பல்கள் கொண்ட ஆங்கில நாவாய்ப்படை தயாரானது.

புதிதாகத் தயாரிக்கப்பட்ட அக் கப்பற்படை ராபர்ட் பிளேக் (Robert Blake) என்பவரின் தலைமையில் ரூபர்ட்டுக்கு எதிராக ஏவப்பட்டது. ஆங்கிலக் கால்வாயிலிருந்து, போர்ச்சுகலுக்கும், அங்கிருந்து கார்த்தஜீனுவுக்கும் பின் அங்கிருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கும் ரூபர்ட்டை அட்மிரல் பிளேக் விரட்டியடித்தார். தம் கப்பல்கள் அத்தனையும் இழந்த இளவரசர் ரூபர்ட், கடற்போரிலிருந்து விலகிக்கொண்டார்.

அங்ஙனமாக, காமன்வெல்த் - இங்கிலாந்துக்குத் தோன்றிய ஆபத்துகளைக் கிராம்வெல் மறையச் செய்தார். வெளி ஆபத்துகளிலிருந்து இங்கிலாந்தை விடுவித்த கிராம்வெல் உள்நாட்டு விவகாரங்களிலே இருக்கிறார்.

லெவல்லெர்ஸ் (Levellers) என அழைக்கப்பட்ட சமநிலைவாதிகள், அடிக்கடி பாராளுமன்றங்களைக் கூட்டச் செய்து இங்கி

லாந்தில் ஜனநாயக ஆட்சியை அமைக்கவேண்டுமென்று கோரி 'மக்கள் உடன்பாடு' (Agreement of the People) என்ற மனுவைக் கிராம்வெலுக்குக் கொடுத்தார்கள். அவர்களின் கோரிக்கையைக் கிராம்வெல் நிராகரிக்கச் சமநிலைவாதிகள் கலகம் செய்தனர். அக் கலகத்தைக் கிராம்வெல் எளிதாக அடக்கிவிட்டாரெனினும் அவருக்குச் சமநிலைவாதிகளின் மனுவினுல் எஞ்சிய பாராளு மன்றத்தின் குறைகள் தெரியவந்தன. வாக்குரிமை, வாக்காளர் தொகுதிகள் ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியம் இருந்தும் எஞ்சிய பாராளுமன்றம் அக் கோரிக்கை களைப் புறக்கணித்துவந்ததைக் கிராம்வெல் கவனிக்கத் தொடங் கினர். நாட்டிற்குத் தேவையான நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டுவர மறுத்த எஞ்சிய பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமெனக் கிராம்வெல் எண்ணினர். முதலில் கலைய மறுத்த எஞ்சிய பாராளுமன்ற அங்கத்தினர்கள் தாங்கள் தொடர்ந்து ஆதிக்கம் பெற்றிருக்க ஒரு திட்டம் வகுத்தனர். எவரெவர் எஞ்சிய பாராளுமன்றத்தினுல் அனுமதிக்கப்படுகிறார்களோ அவர்களே அந்தப் புதுப்பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற வேண்டுமென்ற திட்டத்தைக் கிராம்வெல் கடுமையாக எதிர்த்தார். அவரின் எதிர்ப்பையும் மீறி அத் திட்டத்தைச் சட்டமாக்க எஞ்சிய பாராளுமன்றம் முயன்றபோது 1653-ல் தம் வீரர்கள் சிலருடன் கிராம்வெல் மன்றம் கூடியிருந்த கட்டிடத்தை அணுகி, உள்ளே நுழைந்தார்.

தம் ஆசனத்தில் அமர்ந்து மன்றத்தின் நடப்புகளைக் கவனித்து வந்த கிராம்வெல், அத் திட்டம் சட்டமாக்கப்பட்டதாக அறிவிக் கப்பட்டபோது 'உங்கள் கூட்டத்தில் இறுதிக் காலம் இதுவே. கடவுள் உங்களிடம் பொறுமை இழந்துவிட்டார்; நீங்கள் பாராளுமன்ற அங்கத்தினர்கள் அல்லர்; திருடர்கள். இருந்தது போதும், எழுந்து நடவுங்கள். கடைசிக் காலம்வரை இங்கேயே இருக்க நினைத்தீரோ?' என முழக்கமிட்டு அங்கத்தினர்களை விரட்டியடித்துக் கட்டிடத்தைக் காலி செய்தார். எஞ்சிய பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து நிர்வாகச் சபையும் கலைக்கப்பட்டது.

'எந்த ஒரு காரியத்திற்கு நான் காரணமாக இருக்கக் கூடாதென இரவும் பகலுமாக ஆண்டவனை வேண்டி வந்தேனே, அதைச் செய்ய நீங்களே என்னைக் கட்டாயப்படுத்தினீர்கள்,' என்று ஓடிக்கொண்டிருந்த எஞ்சிய பாராளுமன்ற அங்கத்தினர் களிடம் கிராம்வெல் சொன்னதிலிருந்து அவர் அதை விரும்பிச் செய்யவில்லை எனத் தெரிகிறது. 21 வருடங்களுக்கு முன்னர்

மன்றத்தின் உரிமைகளைக் காக்க ஆயுதம் ஏந்திய கிராம்வெல், கட்டாயப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் அதே ஆயுத பலத்தினால் பாராளுமன்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

மக்களின் ஆட்சியும், பிரபுக்களின் சபையும் ஏற்கெனவே கலைக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய பாராளுமன்றமும், நிர்வாக சபையும் தற்பொழுது கலைக்கப்பட்டிருந்தன. தம் படைகளுடன் எஞ்சியிருந்த கிராம்வெலுக்குச் சோதனைகள் எழுந்தன.

ஆள்வதற்கு மணிமகுடம் இல்லை; மன்றத் தலைவரின் கட்டியக் கோலும் (the Mace) இல்லை. வன்முறைச் சின்னமான வாளே இருந்தது. வாளினால் நாட்டை ஆள முடியுமா? முடியுமென்றால் எத்தனை நாள்களுக்கு அந்த ஆட்சி நீடிக்கும்? படைத்தலைவர் என்னும் அதிகாரத்தைத் தவிரச் சட்டமுறையான வேறெந்த அதிகாரத்தையும் கிராம்வெல் பெற்றிருக்கவில்லை. 'நாட்டை யார் ஆள்வது? எம் முறையில் ஆள்வது?' என்ற பிரச்சினை முளைத்தது.

'மக்களின் விருப்பம் பெற்ற ஆட்சியை' நிறுவவேண்டுமென அவரின் நண்பரான லுட்லோவ் (Ludlow) என்பவர் கேட்டுக்கொண்டபோது 'மற்றவர்களைப்போல் நானும் அதை ஆமோதிக்கின்றேன். ஆனால், அந்த விருப்பத்தை எங்கே தேடுவது?' எனக் கிராம்வெல் திருப்பிக் கேட்டதிலிருந்து பூரண ஜனநாயக ஆட்சியை அமைக்க அவர் விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. மொத்த மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் அப்போது சாத்தியப்படாத ஒன்றாகக் கருதப்பட்டதை, கிராம்வெல் அறிவார். பதவி ஆசை பிடித்தவர்களும், சமயவெறி கொண்டவர்களுமே மன்றத்தின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவரெனவும் கிராம்வெல் அறிந்திருந்தார். ஆகவே, முழுச் சுதந்தரம் பெற்ற பாராளுமன்ற ஆட்சிக்கு அவர் ஒப்புக்கொள்ளாதவராக இருந்தார். ஆனால், தம் வாளின் வலிமையால் ஆட்சி நடத்தப்படுமாயின், விரைவில் அந்த இராணுவ ஆட்சி மக்களின் வெறுப்புக்குக் காரணமாகும் என்பதையும் அவர் ஒப்புக் கொள்ளாதவராக இருந்தார். அந்த இக்கட்டான நிலையில் சிக்கித்தவித்த கிராம்வெலுக்குச் சில யோசனைகள் தரப்பட்டன.

அரசியல் சோதனைகள்

இங்கிலாந்தின் காவலராகத் தம்மைக் கருதிக் கொண்ட கிராம்வெலைத் 'திருத்தொண்டர்களின் ஆட்சிக்கு' (Rule of the Saints) ஒப்புக்கொள்ளும்படி, சேனையிலிருந்த பியூரிட்டானி

யத் தீவிரவாதிகள் கோரினர். அக் கோரிக்கையை ஒட்டித் திட்டமொன்றைக் கிராம்வெல் தீட்டினார். அதன்படி பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாவதற்குத் தகுதியுடைய பெயர்களைத் தமக்கு அனுப்பும்படி கவுண்டிகளிலிருந்த பியூரிட்டானியர்களைக் கிராம்வெல் கேட்டுக்கொண்டார். அனுப்பப்பட்ட பெயர்களில் இங்கிலாந்துக்கென்று 129 உறுப்பினர்களையும், ஸ்காட்லாந்து, அயர்லாந்திலிருந்து சில உறுப்பினர்களையும், கிராம்வெல் தேர்ந்தெடுத்தார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பார்போன் (Barebone) என்ற ஓர் ஆர்வம்கொண்ட அங்கத்தினரிருந்ததால் அம் மன்றத்திற்கு பார்போன் (Barebone) பாராளுமன்றம் எனப் பெயர் கொடுக்கப்பட்டது.

அங்ஙனம் நியமிக்கப்பட்ட பாராளுமன்றம் ஓராண்டிற்குப் பதவியிலிருக்க வேண்டுமென்றும், அதன்பின் அவர்களின் வாரிசினரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கிராம்வெல் சொல்லிவைத்தார். அதற்குள், ஆங்கில மக்கள் ஓர் உண்மையான பாராளுமன்றத்தைத் தெரிந்தெடுக்கும் தகுதி பெற்றுவிடுவார்களெனக் கிராம்வெல் நம்பினார். தம் இராணுவ ஆட்சியை வெளியே காட்டிக்கொள்ளாமல், தம் சொல்படி கேட்கும் அந்த நியமனப் பாராளுமன்றத்தின் மூலமாக ஆட்சியை நடத்தவும் கிராம்வெல் நினைத்திருக்கலாம்.

தணியாத ஆர்வம் கொண்டிருந்த பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் 1653 ஜூலையில் கூடினர். பெருந்திட்டங்களைத் தீட்டிப் பொருத்தமில்லாத சட்டங்களைக் கொண்டுவர அவர்கள் முயன்றனர்; குறிப்பாக மாற்று அமைப்பு எதையும் ஏற்படுத்தாமல் சான்சரி நீதிமன்றத்தைக் கலைத்தனர்; திருச்சபை மானியத்தைத் தடை செய்தனர்; பல வரிகளை நீக்க வேண்டுமெனக் கோரினர். சட்டத்திற்குப் பதில் மோசஸின் (Moses) விதிகளைக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறினர். அவர்களுடைய அந்தச் 'சீர்திருத்தவெறி' நாட்டினருக்கு அச்சமூட்டியது. அந்த நியமனப் பாராளுமன்றத்தை மேலும் கூடவிட்டால் அது குழப்பத்தில் முடியுமென்பதைக் கிராம்வெல் உணர்ந்தார். அவரது எண்ணத்தைப் புரிந்துகொண்ட அம் மன்றம் டிசம்பர் மாதத்தில் தன்னைத்தானே கலைத்துக்கொண்டது (1653).

நியமனப் பாராளுமன்றத்தை வைத்து நடத்தப்பட்ட அரசியல் சோதனை அங்ஙனம் தோல்வியில் முடிய அதே ஆண்டில் (1653) படைத்தலைவர்கள் அரசாங்க அமைப்புப் பத்திரத்தைக் (Instrument of Government) கிராம்வெலுக்குச் சமர்ப்பித்தனர்.

அதன்படி, அரசர் பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அப்பட்டத்தை ஏற்க மறுத்ததால் கிராம்வெல் காப்பாளராக நியமிக்கப்பட்டார். நிர்வாக அதிகாரங்களை 21 நபர்கள் கொண்ட கவுன்சிலுடன் பகிர்ந்துகொள்ளவேண்டு மென்றும் 200 பவுன் வரும்படி உள்ளவர்களே வாக்குரிமை பெற வேண்டு மென்றும் புதிதாகக் கூட்டப்படும் பாராளுமன்றத் திற்கு (காமன்ஸ் சபை) இங்கிலாந்திலிருந்து 375 அங்கத்தினர் களும் வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து பகுதிகளிலிருந்து முறையே 25, 30, 35 அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தைக் கூட்ட, காப்பாளருக்குத் தனி அதிகாரம் கொடுக்கப்பட் டிருந்தும் ஐந்து மாதத்திற்குள் மன்றத்தைக் கலைக்கக் கூடா தெனத் தடையும் விதிக்கப்பட்டது. அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கும் எந்த மசோதாவையும் தள்ளுபடி செய்யக் கூடிய அதிகாரம் காப்பாளருக்குக் கொடுக்கப்பட்டிருந்தும், ஆண்டொன்றிற்குக் கொடுக்கப்படும் குறிப்பிட்ட தொகையை விட அதிகமாகத் தேவைப்பட்டால் அதனைப் பாராளுமன்றத் திடம் கேட்டே பெறவேண்டுமெனக் கட்டுப்பாடும் விதிக்கப் பட்டது.

அரசாங்க அமைப்புப் பத்திரத்தைக் கிராம்வெல் ஒப்புக் கொண்டதன்பேரில் 1654 செப்டம்பரில் காப்பாளர் பாராளு மன்றம் (Protectorate Parliament) கூட்டப்பட்டது. மன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்த அங்கத்தினர்களில் 100 பேர் அரசாங்க அமைப்புப் பத்திரத்தை ஏற்றுக்கொள்வ தாக உறுதிப் பிரமாணம் எடுக்க மறுத்ததால் விரட்டப்பட்டு விட்டனர். கிராம்வெலின் அச் செய்கை ஜனநாயக முறைக்குப் புறம்பான தென்றாலும், தம் புதிய அரசியல் அமைப்பு செயல் பட வேண்டுமென்ற ஆர்வத்தில் அங்ஙனம் அவர் கண்டிப்புக் காட்டினார்.

எஞ்சியிருந்தவர்களைக் கொண்டு இயங்கிய அப் பாராளு மன்றமும் விரைவில் கிராம்வெலுடன் மோத ஆரம்பித்தது. கத்தோலிக்கர்களுக்கும், யூதர்களுக்கும் குவாக்கர்களுக்கும் (Quakers) கிராம்வெல் வழங்க விரும்பிய சமயப் பொறையை (Religious Toleration) பிரஸ்பிடீரியர் அடங்கிய அப் பாராளு மன்றம் எதிர்க்கவும் அடித்ததாகக் கிராம்வெலின் படைகளை எண்ணிக்கையில் பாதியாகக் குறைக்கவும் திட்டமிட்டது. தம் எண்ணங்களுக்கு எதிராகச் செயல்பட நினைத்த அம் மன் றத்தை 1655 டிசம்பரில் கிராம்வெல் கலைத்துவிட்டார்.

நியமனப் பாராளுமன்றமும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றமும் அவரின் கொள்கைக்கு முரணுகச் செயல்பட முனைந்ததில், கிராம்வெலுக்குப் பாராளுமன்ற ஆட்சியிலிருந்த குறைந்த பட்ச நம்பிக்கையும் மறைய ஆரம்பித்தது. ஆகவே, 1655-ல் இங்கிலாந்தைப் பத்து மாநிலங்களாகப் பிரித்து மேஜர் ஜெனரல்கள் (Major General) மூலமாக ஆள முற்பட்டார். அரசரின் சார்பிலே அவ்வப்போது தோன்றிய கலகங்களை அடக்குவதற்கும், மக்களின் பழக்க வழக்கங்களைக் கட்டுப்பாட்டில் வைக்கவும், பேருதவியாக அவ் வாட்சிமுறை இருந்தபோதும் எத்தனை காலம் மக்கள் இங்கிலாந்தின் ஆட்சியைச் சகித்திருப்பார்கள்? மக்களிடையே அதிருப்தி பரவி எதிர்ப்புத் தோன்றியபோது, கிராம்வெல் மேஜர் ஜெனரல் ஆட்சியினையும் நிராகரித்துவிட்டார்.

பாராளுமன்ற ஆட்சியில் தமக்கு ஏற்கெனவே சலிப்புத் தோன்றியிருப்பினும், இராணுவ ஆட்சியை மக்கள் நிரந்தரமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்களெனத் தெரிந்துகொண்ட கிராம்வெல் 1656 செப்டம்பரில் இரண்டாவது காப்பாளர் பாராளுமன்றத்தைக் கூட்டினார். முன்பு அவரால் விலக்கப்பட்ட அந்த 100 அங்கத்தினர்கள் மீண்டும் வர, கிராம்வெல் மறுபடியும் அவர்களை விரட்டினார். எஞ்சியிருந்தவர்கள் கிராம்வெலுக்கு வணக்க விண்ணப்ப ஆலோசனையைச் (Humble Petition and Advice) சமர்ப்பித்தனர்.

அதன்படி, கிராம்வெலுக்கு மீண்டும் அரசர் பட்டம் கொடுக்கப்பட்டது. அதை அவர் மீண்டும் மறுத்ததால் ஆயுள் காலக் காப்பாளராகக் கிராம்வெல் ஆக்கப்பட்டார். தம் வாரிசை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரமும் அவருக்குத் தரப்பட்டது.

ஆட்சிச் செலவுக்காகக் குறிப்பான தொகை ஆண்டொன்றுக்குக் கொடுக்கப்படு மென்றும், மேற்கொண்டு தேவை ஏற்படும்போது கிராம்வெல் பாராளுமன்றத்திடம் கேட்டே பெற வேண்டு மெனவும் அவ் விண்ணப்பத்தில் வற்புறுத்தப்பட்டது.

சமயப் பொறையை வழங்க ஒப்புக்கொண்ட அம் மன்றம் பிரபுக்கள் சபையையும் ஏற்படுத்தும்படி கிராம்வெலிடம் முறையிட்டுக் கொண்டது. அம் முறையீட்டுக்கு இணங்க, காமன்ஸ் சபையிலிருந்த தம் நண்பர்கள் சிலரை மேல் சபை அங்கத்தினர்களாக நியமித்து, பிரபுக்கள் சபையை உருவாக்கினார். அதன் விளைவாகக் காமன்ஸ் சபையில் வெற்றிடம் ஏற்பட்டது.

அவற்றை நிரப்பவேண்டிய அவசியம் அதனுல் ஏற்பட்டது. ஆக, முன்பு கிராம்வெலால் இருமுறை விரட்டியடிக்கப்பட்ட பிரஸ்பிடீரிய அங்கத்தினர்கள் திரும்பி வந்தனர். நண்பர்கள் நிரம்பிய மேல்சபையும் வேண்டாதோர் இருந்த காமன்ஸ் சபையும் தங்களுக்குள் சச்சரவு இட ஆரம்பித்துக்கொண்ட போது கிராம்வெல் மிகவும் அதிருப்தி அடைந்தார். அதனுல் நாளாக ஆகக் குழப்பம் மேலிட்டது. 'காலம் கடந்து விட்டது. இனி, உங்களை இங்கு அமர அனுமதிக்கமாட்டேன். நம் இருவரில் யார் குற்றவாளி என்பதை ஆண்டவனே தீர்மானிக்கட்டும்' எனக் கூறிக்கொண்டு, 1658, பிப்ரவரி மாதத்தில் அவ்விரு சபைகளையும் கிராம்வெல் கலைத்துவிட்டார்.

தம் காப்பாளர் ஆட்சிக் காலத்தில் அரசர் சார்லசை விடக் கிராம்வெல் எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டாரெனக் குறைபட்டோர் இருந்தனர். மன்றத்தின் அனுமதியில்லாமல் வரி விதித்ததும், தம் ஆட்சியை எதிர்த்தவர்களை விசாரணையின்றிச் சிறையிலடைத்ததும். அவரின் கொடுங்கோன்மைக்கு உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்டன. 'அவசியம்' என்ற அந்த ஒரு சொல் கிராம்வெலின் எதேச்சாதிகாரத்துக்குத் திரையாக அமைந்திருந்தது. அவருக்குப் பாதகமாகச் சில தவறுகள் சுட்டிக் காட்டப்படினும் கிராம்வெலுக்குச் சாதகமாக அவரால் செய்யப்பட்ட சில மாற்றங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. மகா பிரிட்டனின் ஒற்றுமையை உணர்த்துவதுபோல், ஸ்காட்லாந்து, அயர்லாந்துப் பகுதிகளிலிருந்து இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு அங்கத்தினர்களை அமைத்ததை முதற்கண் குறிப்பிடவேண்டும்.

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த 430 சிதைந்த பரோக்களின் எண்ணிக்கை 139 ஆகக் குறைக்கப்பட்டு அங்ஙனம் மீட்கப்பட்ட பிரதிநிதித்துவத்தை முக்கிய நகரங்களுக்குக் கிராம்வெல் கொடுத்ததும் ஒரு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற மாற்றமாகும்.

குடிப்பழக்கம், தனிச் சண்டை (duel) கோழிச்சண்டை, குதிரைப் பந்தயம் போன்றவைகளைச் சட்டங்களின்மூலம் தடை செய்து, நாட்டு மக்களின் நடத்தையையும் பழக்கவழக்கங்களையும் சீர்திருத்த எண்ணினர். அதன்மூலம் தாம் ஓர் உண்மையான பியூரிட்டானியர் என்பதைக் காட்டிக்கொண்டார். 'மிருகங்களிலிருந்து மனிதரைப் பிரித்துக் காட்டும் மனம் பரிசுத்தமாக இருக்கவேண்டும்' என வற்புறுத்திய கிராம்வெலின் ஆட்சி பிரிட்டனில் திருத்தொண்டர் ஆதிக்கத்தை

ஏற்படுத்தியது. குடிப்பழக்கத்திற்கும் மற்றும் பல கேடுகளுக்கும் 17ஆம் நூற்றாண்டில் அடிமைப்பட்டுக்கிடந்த மக்களைத் 'திருத்தொண்டர்களாகக்' கிராம்வெல் மாற்ற நினைத்ததை அக் காலத்தினர் வரவேற்கவில்லை யெனினும் அது அவரின் பரிசுத்த எண்ணத்தையே காட்டியது.

கிராம்வெலின் சமயக் கொள்கை

சமயத்தின் பெயரால் குருதி சிந்தப்பட்ட பதினேழாம் நூற்றாண்டில், சகிப்புத் தன்மை காட்டிச் சமயப்பொறை வழங்கிய பெருமையையும் சிறப்பையும் கிராம்வெல் பெற்றிருந்தார். அவர் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட சமயச் சகிப்புக் கொள்கை அதுவரையில் இங்கிலாந்தின் சமய வரலாற்றில் கேள்விப்படாததாக அமைந்தது. அவரின் காலத்தில் வாழ்ந்த மற்ற அரசியல் வாதிகளின் சமயக்கருத்துகளைவிடக் கிராம்வெல் முன்னேற்ற எண்ணங்களைக் கொண்டிருந்தார்.

ஆங்கிலிகன்கள் (Anglicans) இவரின் காலத்தில் அவர்களின் பிரார்த்தனைப் புத்தகங்களைப் பின்பற்றி வந்தபோதிலும் அதே காரணத்திற்காக நீண்ட பாராளுமன்றத்தினால் துன்புறுத்தப் பட்ட அளவிற்கு ஏய்க்கப்படவில்லை. மாறுபட்ட சமயக்கருத்துகளையும் கொண்டிருந்த கத்தோலிக்கர் பலரின் உயிரையும் உடைமையையும் தாம் காப்பாற்றியதாக ஃபிரெஞ்சு அமைச்சர் மாஜரினுக்கு (Mazarin) எழுதிய கடிதத்தில் கிராம்வெல் குறிப்பிட்டதிலிருந்தும், முதலாம் எட்வர்டு காலத்தில் விரட்டப்பட்ட யூதர்கள் மீண்டும் இவர் காலத்தில் இங்கிலாந்து வர ஆரம்பித்ததிலிருந்தும், அக் கால மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருந்த சமயச் சீர்திருத்தக்காரர்களான குவாக்கர்களைச் (Quakers) சிறையிலிருந்து விடுதலை செய்ததிலிருந்தும் சமயத்தில் இவருக்கு இருந்த பரந்த உள்ளத்தை நாம் அறிய முடிகிறது.

உள்நாட்டுக் கொள்கையில் காப்பாளர் கிராம்வெல் சாதித்தது கடுகளவு என்றால் தம் வெளிநாட்டுக் கொள்கையில் சாதித்தது குன்றளவு இருந்தது என வரலாற்றுப் பெருமக்கள் புகழுரை வழங்குகின்றனர்.

வெளிநாட்டுக்கொள்கை

நான்கு முக்கியக் கொள்கைகளை மையமாகக் கொண்டிருந்த கிராம்வெலின் வெளிநாட்டுக்கொள்கை அவரின் அந்தரங்க எண்ணத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

அயல் நாட்டுப்படைகளின் உதவியால் ஸ்டூவர்டுகள் இங்கிலாந்தில் மூன்னிலை மீட்சி பெற முடியாமல் தடுக்கவேண்டுமெனக் கிராம்வெல் எண்ணினர். தாம் பதவியில் தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற ஆசையில் உதித்த எண்ணம் அன்று அது. ஆங்கிலேயர்கள் பரிசுத்தமான வாழ்க்கை பெற்று ஆனந்திப்பதற்கு ஏற்பத் திருத்தொண்டர்களின் ஆட்சியைத் தம்மால்மட்டுமே அமைக்கமுடியும் என அவர் நம்பியதே அதற்குக் காரணம். எனவே, தம் ஆட்சியைக் காப்பாற்ற ஸ்டூவர்டுகளின் மறு ஆதிக்கம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டுமென அவர் விரும்பினர். அவரின் எண்ணத்திற்கேற்ப, கொலை செய்யப்பட்ட அரசரின் சார்பிலோ, தப்பி ஓடிவிட்ட இளவரசர்கள் சார்பிலோ படைகொண்டு கிராம்வெலை மிரட்டவோ தண்டிக்கவோ, மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குத் துணிவு இல்லை; திறமை இல்லை. 'முப்பதாண்டுப்போர்' முடிந்திருந்த அந்த வேளையில் (1648) இன்னொரு போரைத் தொடங்க எந்த அரசருக்கும் தெம்பு இல்லை. ஆகவே, தம் முதல் குறிக்கோளில் கிராம்வெல் சிரமமில்லாமல் வெற்றி கொண்டா ரெனலாம்.

மேற்கு ஐரோப்பிய பிராடஸ்டென்டு நாடுகளான ஹாலந்து, ஸ்வீடன், டென்மார்க்குடன் வர்த்தக சம்பந்தத்தைச் செய்து கொள்ள இங்கிலாந்து முயன்றது, அவரின் இரண்டாவது குறிக்கோளாக அமைந்தது. அதை நிறைவேற்றவே முதற்கண் ஹாலந்துக்கு எதிராக 1652-ல் பொதுநல அரசு தொடுத்திருந்த கடற்போரைக் கிராம்வெல் 1654-ல் உடன்படிக்கையின் மூலம் முடித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் அம் முதலாம் டச்சுப் போரைப்பற்றிச் சுருக்கமாகக் காண்போம். கிழக்கிந்தியத் தீவுகளில் இரு நாடுகளுக்கிடையே இருந்த வியாபாரப் போட்டியின் விளைவாகக் கி.பி. 1623-ல் அம்பாய்னு (Amboyna) என்ற இடத்தில் சில ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டிருந்த அந்த நிகழ்ச்சி பொதுநல அரசுக் காலத்தில் மறக்கப்படாமலேயே இருந்தது. தங்களின் கடலாதிக்கத்திற்குப் போட்டியாக இருந்த டச்சுக்காரர்களின் கொட்டத்தை ஆங்கிலேயர்கள் மட்டம் தட்ட நினைத்தனர். ஆகவே, எஞ்சிய பாராளுமன்றம் 1651-ல் நாவாய்ச் சட்டத்தைக் (Navigation act) கொண்டுவந்தது. அதன்படி, ஆசியா, ஆஃபிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இங்கிலாந்துப் பொருள்கள் ஆங்கிலக் கப்பல்களிலோ அல்லது ஆங்கிலக் குடியேற்றங்களின் கப்பல்களிலோ அல்லது பாதிக்குமேல் ஆங்கில மாலுமிகள் வேலை

பார்க்கும் கப்பல்களிலோதான் கொண்டு செல்லப்படவேண்டும்; ஐரோப்பாவின் எந்தப் பகுதியிலுள்ள இறக்குமதிப் பொருள்களும் ஆங்கிலக் கப்பல்களிலோ அல்லது எந்த நாட்டிலிருந்து அப்பொருள்கள் அனுப்பப்படுகின்றனவோ அந்த நாட்டுக் கப்பல்களிலோமட்டும்தான் வரவேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது. வாடகைக்கு வியாபாரப் பொருள்களை ஏற்றி உலகின் பல துறைமுகங்களில் இறக்குமதி, ஏற்றுமதி செய்துவந்த டச்சு வியாபாரிகள் அந்தக் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதற்கிடையே ஹாலந்தின் தலைநகரான ஹேக்கில் (Hague) இருந்த ஆங்கிலத் தூதுவர் சந்தேகச் சூழ் நிலையில் மரணமடைந்தார். அச் சட்டத்தின் எதிரொலியாக நடத்தப்பட்ட கொலையாக அது இருக்குமோ என ஆங்கிலேயர்கள் சந்தேகித்தனர். அதனால் கொதிப்படைந்திருந்த ஆங்கில அரசாங்கம் இன்னொரு கட்டுப்பாட்டை ஹாலந்துமீது திணிக்க நினைத்தது. ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் டச்சுக் கப்பல்கள் தங்களின் கொடியை இறக்கி வணக்கம் செலுத்த வேண்டுமென்பதே அது. அங்ஙனம், இங்கிலாந்திற்கும் ஹாலந்திற்கும் இடையே ஏற்பட்ட பரஸ்பர வியாபாரக் கடற்போட்டிப் பொறுமையே 1652-ல் தொடங்கிய ஆங்கிலோ-டச்சுப்போருக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

17ஆம் நூற்றாண்டில் இரு பெரிய கப்பற்படைகளைக் கொண்டிருந்த இங்கிலாந்தும் ஹாலந்தும் ஆங்கிலக் கால்வாயிலே டங்கனீஸ் (Dungeness) என்ற இடத்திற்கு அருகில் முதன்முதலில் மோதின. டச்சு அட்மிரலான ட்ராம்ப் (Tromp) ஆங்கிலக் கப்பற்படைத் தலைவரான பிளேக்கைத் தோற்கடித்து, தற்காலிகமாக டச்சு ஆதிக்கத்தை ஆங்கிலக் கால்வாயில் பெற்றார். ஆயின், பிளேக் 1653-ல் சஃபோக் (Suffolk) கரைக்கருகே டச்சுக் கப்பல்களை அழித்து, ஹாலந்தின் கரைகளை முற்றுகையிட்டார். முற்றுகையின் கடுமையால் டச்சுப் பட்டணங்கள் மிகவும் அவதிப்பட்டன. முற்றுகையை முறியடிக்க ட்ராம்ப் முயற்சி செய்தபோது, டெக்சல் (Texel) என்ற இடத்திற்கருகில் இன்னொரு கடல்போர் நடைபெற்றது. அதில், பிளேக் பெரும் வெற்றியடைந்தார்; ட்ராம்ப் கொல்லப்பட்டார். மேற்கொண்டு எதிர்க்கமுடியாத நிலையில் டச்சுக்காரர்கள் சமாதானத்தைக் கோரினர்கள்.

கிராம்வெலின் வற்புறுத்தலுக் கிணங்க 1654-ல் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி, அம்பாய்னா படுகொலைக்கு நஷ்டஈடு கொடுப்பதாக ஹாலந்து ஒப்புக்கொண்டது. 31 வருடங்

களுக்கு முன்பு நடந்த தேசிய அவமானத்தின் கறை இப்போது துடைக்கப்பட்டது. முதலாம் ஜேம்ஸ் செய்யத்தவறியது இப்போது செய்து முடிக்கப்பட்டது. நாவாய்ச் சட்டத்தையும், ஆங்கிலக் கால்வாயில் இங்கிலாந்தின் ஆதிக்கத்தையும் ஹாலந்து ஏற்றுக்கொள்ளவேண்டி யிருந்தது.

1654 ஆம் ஆண்டின் உடன்படிக்கை இங்கிலாந்தின் கடலாதிக்கத்தைச் சந்தேகத்திற் கிடமில்லாமல் நிலைப்படுத்த, அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளக் கிராம்வெல் முயன்றார்.

சமயப் பிளவுகளால் பாதிக்கப்பட்ட 17 ஆம் நூற்றாண்டின் தன்மைக்கேற்ப மேற்கு ஐரோப்பிய பிராடஸ்டென்டு நாடுகளுடன் இங்கிலாந்தின் தலைமையில் கூட்டணி அமைத்து, கத்தோலிக்க சக்தியை முறியடிக்க வேண்டுமெனவும் கிராம்வெல் விரும்பினார். அம் முயற்சியில் கிராம்வெல் வெற்றிபெறவில்லையெனினும், அயல்நாடுகளில் வாழ்ந்த பிராடஸ்டென்டுகளின் நலனைக் காப்பதில் அவர் கவனமாக இருந்தாரென்பதை, ஃபிரான்சின் பாதுகாப்புப் பெற்ற சாவாய் (Savoy) நாட்டுப் பிரபு (Duke) தம் நாட்டு பிராடஸ்டென்டுகளை மிகக் கடுமையாகத் துன்புறுத்திவர, அவரைக் கட்டுப்படுத்தும்படி ஃபிரெஞ்சு மந்திரி மாஜரினுக்குக் கட்டாயப்படுத்தியதி லிருந்து தெரியவருகிறது.

கிராம்வெலின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாக அவருடைய ஸ்பானிய எதிர்ப்புக் கொள்கை அமைந்தது.

'முப்பதாண்டுப்போர்' முடிந்திருந்தும் ஹாப்ஸ்பர்க் அரசான ஸ்பெயினும், போர்பன் அரசான ஃபிரான்சும் ஐரோப்பியத் தலைமை ஆதிக்கத்திற்காகப் போரைத் தொடர்ந்து நடத்தி வந்தன. அவ் விரு நாடுகளும் கிராம்வெலின் உதவியை நாடின வென்றால், காப்பாளரின் இங்கிலாந்து, ஐரோப்பிய அரசியலில் ஒரு முக்கிய அம்சமாக அச்சத்துடன் மதிக்கப்பட்ட தென்பது தெரிகிறது. உதவி கோரிய நாடுகள் இரண்டுமே கத்தோலிக்க அரசுகளாக இருந்தும், செய்யும் உதவியால் ஆங்கிலேயே வியாபாரத்திற்கோ, கடல் ஆதிக்கத்திற்கோ, மதத்திற்கோ பலன் கிடைக்குமெனில் கோரிய உதவியைக் கொடுக்கக் கிராம்வெல் தயாராகவே இருந்தார். உதாரணமாக, ஆங்கிலேயர்கள் ஸ்பானியக் குடியேற்றங்களுடன் வியாபாரம் செய்யவும் அந்த ஆங்கில வியாபாரிகளுக்குச் சமயச்

சுதந்தரம் வழங்கப்பட வேண்டுமெனவும் இரண்டு நிபந்தனை களை ஸ்பெயின் ஒப்புக்கொண்டால் அந்த நாட்டிற்கு உதவி செய்வதாகக் கிராம்வெல் கூறினர். 'எங்கள் அரசின் இரு கண்களையும் கேட்பதுபோல் அந்த நிபந்தனைகள் உள்ளன' என்று கூறி அதனை ஸ்பானியத் தூதர் மறுத்துவிடவே எலிசபத் மகாராணியாரை நினைவுபடுத்தும் வகையில் கிராம்வெல், ஸ்பெயினை இங்கிலாந்தின் இயற்கையான எதிரி என்றும், வெறுக் கத்தக்க வல்லரசு என்றும் கூறி, அதன்மீது போர் தொடுத் தார். அட்மிரல் பென் (Penn), ஜெனரல் வெனபிள்ஸ் (Venables) என்ற இருவரின் தலைமையில் ஸ்பானிய மேற்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றப் படை அனுப்பப்பட்டது. ஹிஸ்பானியோலாவை (Hispaniola) 1655-ல் கைப்பற்றச் செய்யப்பட்ட முயற்சி தோல்வி யடைந்த தென்றாலும், அவர்கள் ஜமைக்காவைக் (Jamaica) கைப்பற்றினர். கிராம்வெலின் புகழ்பெற்ற தளபதியான பிளேக், ஸ்பெயினுக்கு வந்த நிதிக்கப்பல்களை 1657-ல் சாண்டாகுருஸ் (Santa Cruz) என்னுமிடத்தில் அழித்துப் பெரும் வெற்றிபெற்றார்.

அடுத்து, ஸ்பானியர்களுக்கு எதிராக 1657-ல் ஃபிரான் சுடன் கிராம்வெல் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி டன்கிர்க்கையும் (Dunkirk) மார்டினிக்கையும் (Martinique) கிராம்வெலுக்கு அளிப்பதாகப் ஃபிரான்ஸ் ஒப்புக்கொண்டது. அவ் வுடன்பாட்டின்படி, கிராம்வெல் ஃபிரான்சுக்கு உதவியாக 6,000 வீரர்களை அனுப்பிவைத்தார். அக் கூட்டுப்படை ஸ்பானிய நெதர்லாந்திருந்த டன்கிர்க் என்ற நகரைத் தாக்கின. அப்போது நடந்த டன்ஸ் (Dunes) சண்டையில் ஃபிரெஞ்சுப் படைகள் பிரமித்து நிற்க, ஆங்கிலப் படைகள் ஸ்பானியர்களை ஓட ஓட விரட்டியடித்தன.

ஸ்பானிய ஆதிக்கத்திற்கு முடிவாகவும் ஃபிரெஞ்சு முடியர சின் வல்லமைக்கு ஆரம்பமாகவும் அமைந்த டன்ஸ் சண்டை பல பிற்கால அரசியல் விளைவுகளுக்குக் காரணமாக அமைந்தது. டன்ஸ் சண்டையில் கிராம்வெல் கொடுத்த உதவியே ஃபிரான்ஸ் வல்லரசு தகுதிபெற உதவியது. அங்ஙனம் வல்லமை பெற்ற ஃபிரான்சு நாடே அடுத்த 150 ஆண்டுகளில் பிரிட்டனுடன் ஆதிக்கப் போட்டி நடத்தி ஆறு பெரும் போர்களுக்குக் காரண மாக இருக்குமெனக் கிராம்வெல் நினைத்திருக்க முடியாது. இங்கி லாந்தின் பழைய எதிரியை ஒடுக்கிய கிராம்வெல் வருங்கால எதிரியை (ஃபிரான்சை) உருவாக்கினரென அவர்மீது குறை கூறப்படுகிறது. 1629 ஆம் ஆண்டிலிருந்து ஐரோப்பாவில் குறிப்பாக ரிச்சுலு (Richelieu) காலத்திலிருந்து ஃபிரான்சு

அரசியலில் ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கிராம்வெல் சற்றே கவனித்திருப்பாரானால், பதினான்காம் லூயியின் காலத்திய ஃபிரான்சு இரண்டாம் ஃபிலிப்பின் ஸ்பெயினைவிட ஆதிக்க வெறி பெற்றிருந்ததை அவர் உணர்ந்திருக்கலாம். ஆனால், எலிஸபத் காலத்திய வரலாற்றுக் கண்ணோட்டத்தைப் பெற்றிருந்த கிராம்வெலுக்கு ஐரோப்பிய அரசியலில் ஏற்பட்டிருந்த புதிய மாற்றங்கள் தெரியாமல் போய்விட்டன. அந்தப் பொதுக் குற்றச் சாட்டிற்குக் கிராம்வெல் ஆளாயினும் தம் துணிவான வெளி நாட்டுக் கொள்கையினால், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே இங்கிலாந்திற்குத் தனிப் பெருமையைத் தேடிக்கொடுத்தாரென் பதை எவரும் மறுக்கமுடியாது.

'அவர் உள்நாட்டில் பெற்ற பெருமை கிராம்வெல் அயல் நாடுகளில் பெற்றிருந்த உயர்ந்த பெருமையின் நிழலே' என அவரின் அரசியல் எதிரியான கிளாரண்டன் என்பவரே குறிப் பிடுவதிலிருந்து கிராம்வெலின் வெளிநாட்டுக் கொள்கையின் தரத்தை நாம் புரிந்துகொள்ளலாம்.

உள்நாட்டுப் போருக்குப்பின் இங்கிலாந்தின் அமைதியைக் காத்த ஆலிவர் கிராம்வெல் 1658-ல் தமக்கு வெற்றிகள் பல அளித்த செப்டம்பர் 3ஆம் நாளில் அமைதியாகக் காலமானார். தாம் இறந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே இங்கிலாந்தில் முன்னிலை மீட்சி (Restoration) தோன்றி, கிராம்வெல் காலத்திய ஏற்பாடுகளை அழிக்க முற்பட்டதெனினும், இங்கிலாந்தின் வரலாற்றில் அழியாப் புகழை அவர் பெற்றுவிட்டார். கிராம்வெல் மரணம் எய்தியதும், நாட்டில் ஏற்பட்ட பல குழப்பங்களைக் காணும்போது அவரது காலத்தில் நிலவிய உள்நாட்டு அமைதி அவரது நிர்வாகப் பெருமைக்குச் சான்றுகவும், முன்னிலை மீட்சியைத் தொடர்ந்து இங்கிலாந்து பின்பற்றிய ஸ்திரமற்ற வெளிவிவகாரக் கொள்கையைக் காணுங்கால் அவரின் காலத்தில் ஐரோப்பிய அரசுகளுக்கிடையே இங்கிலாந்து பெற்றிருந்த தனிச்சிறப்பு கிராம்வெலின் வெளிநாட்டுக் கொள்கையின் பெருமைக்குச் சான்றுகவும் விளங்கின வென்பதை நாம் அறியலாம்.

காப்பாளர் ஆட்சியின் வீழ்ச்சி (1658 - 1660)

இரும்பு மனிதரான ஆலிவர் கிராம்வெல் காலமானதும், வணக்க விண்ணப்ப ஆலோசனைப்படி அவரின் மகனான ரிச்சர்டு கிராம்வெல் (Richard Cromwell) இங்கிலாந்தின் காப்பாளராகச் சிறு முணுமுணுப்பும் முகச்சுளிப்பும் இல்லாமலே மற்றவர்களால்

ஏற்றுக்கொள்ளப்பட்டதி லிருந்து, ஆலிவர் தம் படைகளுக் கிடையே எத்தனை மதிப்புப் பெற்றிருந்தாரெனத் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஆனல் ரிச்சர்டு, புலிக்குப் பிறந்த பூனையாக இருந்தார். சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் சக்தியற்று, எடுப்பார் கைப்பிள்ளையாக ரிச்சர்டு இருந்ததே தொடர்ந்து நேர்ந்த சில குழப்பங்களுக்குக் காரணமாயின.

1659 ஆம் ஆண்டு ஜனவரியில் ரிச்சர்டு புதிய பாராளு மன்றத்தைக் கூட்டினர். அம் மன்றம், படை அதிகாரங்களைக் காப்பாளரிடமிருந்து பிடுங்க வேண்டுமென முயன்றதால், ஏப்பிரல் மாதம் அது கலைக்கப்பட்டுவிட்டது. அடுத்த மாதத்தில் முன்பு ஆலிவர் கிராம்வெலால் (1653-ல்) துரத்தப்பட்ட எஞ்சிய பாராளுமன்றத்தை ரிச்சர்டு கூட்டினர். முதற்காரியமாக அம் மன்றம் காப்பாளர் பதவியை ரத்து செய்தது. அதன் விளை வாக, ரிச்சர்டு அரசியலி லிருந்து விலகி ஒதுங்க வேண்டியவரா னர்.

ரிச்சர்டு ஒதுங்கிவிட்டதால் எஞ்சிய பாராளுமன்றமும் படை யினரும் நேருக்கு நேராக மோதிக் கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆறு வருடங்களுக்கு முன்பு நிலவிய அதே விரோத மனப்பான்மை அப்போதும் நீடித்ததால் எஞ்சிய பாரா ளுமன்றத்தைப் படையினர் கட்டாயப்படுத்திக் கலைந்து போகும் படி செய்தனர். அதைத் தொடர்ந்து படையினர் ஜெனரல் லாம்பர்ட் (Lambert) தலைமையில் காவற்குழுவை (Committee of Safety) நிறுவி அரசாங்கத்தை நடத்த முற்பட்டனர். ஆயின் அந்த ஆட்சிக்கு நாட்டிலே எதிர்ப்பு ஏற்பட்டது. நிலைமையைச் சமாளிக்க ஆலிவரின் இரும்புக் கரங்கள் இல்லை. ஸ்காட்லாந்தி லும், அயர்லாந்திலும், இருந்த படையினரும் அப் புது ஆட்சியை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். டவுன்சில் (Downs) இருந்த கப்பற்படை வீரர்களும் இராணுவ ஆட்சியை எதிர்க்க முன் வந்தனர். அந் நிலையில் இங்கிலாந்திலிருந்த படைத்தலைவர்கள் 1659 டிசம்பர் மாதம் மீண்டும் எஞ்சிய பாராளுமன்றத்தைக் கூடும்படி அழைத்தனர்.

அங்ஙனம் கூட்டப்பட்ட அம் மன்றம், கிராம்வெலின் விசுவாசத்தளபதியும் ஸ்காட்லாந்தில் படைத்தலைவராகவு மிருந்த ஜெனரல் மாங்க் (Monk) என்பவரைத் தமக்குப் பாது காப்புத் தரும்படி இங்கிலாந்திற்கு அழைத்தது. ஏற்கெனவே ஹாலந்தில் தஞ்சம் அடைந்திருந்த இளவரசர் சார்லசுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகளை நடத்தி, பிரிடா (Breda)

உடன்பாடு செய்துகொண்டிருந்த மாங்க் தம் படைகளுடன் 1660 பிப்பிரவரி மாதம் இலண்டனை அடைந்தார்.

1648-ல் கர்னல் பிரைட் என்பவரால் விரட்டப்பட்ட அங்கத்தினர்களையும் அழைத்து, எஞ்சிய பாராளுமன்ற அங்கத்தினர்களோடு இணைத்து நீண்ட பாராளுமன்றத்தைக் கூட்ட மாங்க் ஏற்பாடு செய்தார். அங்ஙனம் கூடிய அம் மன்றம் புதிய பாராளுமன்றத்திற்கு ஏக குரலில் தன் சம்மதத்தை அளித்து 1660 மார்ச்சில் தன்னைத் தானே கலைத்துக்கொண்டது.

1648-ற முன்னிருந்த பழைய நிலை மீட்கப்பட வேண்டும்; முடியரசு, பிரபுக்கள் சபை, காமன்ஸ் சபை உருவாக்கப்பட வேண்டும்; அவற்றினை உருவாக்கும் பொறுப்பு புதிய பாராளுமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது.

1660 ஏப்பிரலில் கூடிய புது மன்றமான பிரத்தியேகப் பாராளுமன்றம் (Convention Parliament) முடியரசு, பிரபுக்கள் சபை, காமன்ஸ் சபையோடு கூடிய பழைய நிலையைக் கொண்டு வரவேண்டுமென்று வாக்களித்தது.

ஆகவே, பியூரிட்டானிய ஆட்சிக்கு முடிவாகவும், முன்னிலை மீட்சிக்கு ஆரம்பமாகவும் அமைந்தது.

பியூரிட்டானிய இங்கிலாந்து (Puritan England)

சார்லஸ் மரண தண்டனை பெற்று 1649-ல் கொலை செய்யப்பட்ட காலம்முதல் அவரின் மகன் இங்கிலாந்து அரசனாக 1660-ல் அழைக்கப்பட்ட காலம்வரை, அந் நாடு பொதுநலக் குடியரசு, காப்பாளர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென்பதை நாம் முன் அத்தியாயத்தில் கண்டிருந்தோம். அக் காலத்திலேயே இங்கிலாந்தின் அரசியல், சமூகம், மதம் போன்ற துறைகளில் பியூரிட்டானியர்கள் தனி ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

அரசியலைப் பொறுத்தவரையில் எல்லாம் கிராம்வெலின் சாதனையாக இருந்தன. பொதுநலக் குடியரசுக்கு எதிராகக் கிளம்பிய எதிர்ப்புச் சக்திகளைக் கிராம்வெல் ஒன்றன்பின் ஒன்றாக ஒடுக்கினா ரென்பதை நாம் ஏற்கெனவே கண்டிருந்தோம். ஆர்ப்பரித்த அயர்லாந்தை அடக்கக் கடமைப்பட்டிருந்த பியூரிட்டானியர்களுக்குக் கிராம்வெலின் வாள் உதவியாக இருந்தது. தம் 12,000 வீரர்களோடு அயர்லாந்து சென்றிருந்த கிராம்வெல், எதிர்ப்புக் கேந்திரங்களான ட்ரோகிடா (Drogheda), வெக்ஸ்

ஃபோர்டு (Wexford) கோட்டைகளைத் தாக்கி (1649 - 1650) பியூரிட்டானியர்களின் ஆட்சியினை அயர்லாந்தினர்மீது திணித் தார். 'ஆண்டவர் தமது திருச்சபையின் பகைவரை அழிக்கத் தம்மை ஏவினர்' எனக் கிராம்வெல் கூறியது, அக் காலத்தில் கத்தோலிக்கர்மீது பியூரிட்டானியர்கள் கொண்டிருந்த வெறுப் பையே காட்டியது. கத்தோலிக்க அயர்லாந்தின்மீது திணிக்கப் பட்ட கட்டுத்திட்டங்களில் ஒருமுகமாகச் செயல்பட்ட பியூரிட்டா னியர்கள் தங்களின் கவனத்தைப் பிரஸ்பிடீரிய ஸ்காட்லாந்தின் மீது திரும்பும்படியாகத் தொடர் நிகழ்ச்சிகள் ஏற்பட்டன (1651). இளவரசர் சார்லஸ் ஸ்காட்லாந்தில் மன்னராக அறிவிப்புப் பெறவே தங்களின் எதிர்காலத்தைக் காத்துக்கொள்ள மீண்டும் பியூரிட்டானியர்கள் கிராம்வெலின் வாளை உதவிக்கு அமைத் தனர். டன்பார் (Dunbar), ஓர்செஸ்ட்டர் (Worcester) ஆகிய இடங்களில் ஏற்பட்ட சண்டைகளில் ஸ்காட்டியர் எதிர்ப்பு நசுக்கப் பட்டது. பிரஸ்பிடீரிய முறை ஸ்காட்லாந்தில் தொடர்ந்து அனு மதிக்கப்பட்டபோதும், அந்த நாடு பியூரிட்டானிய இங்கிலாந்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

கத்தோலிக்க அயர்லாந்தினையும் பிரஸ்பிடீரிய ஸ்காட்லாந் தையும் தன்னுடன் பிணைக்கும் முயற்சியில் பியூரிட்டானிய இங்கி லாந்து ஈடுபட்டது. பொதுப்பழக்க வழக்கங்கள், நாவாய்ச் சட்டங்கள் ஆகியவற்றில் அவைகளுக்குச் சம அந்தஸ்து கொடுக் கப்பட்டது. இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்குக் கிராம்வெலின் துரைத்தன அமைப்புப் பத்திரத்தின்படி, அயர்லாந்திலிருந்தும் ஸ்காட்லாந்திலிருந்தும் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். மகா பிரிட்டன் என்ற அந்தஸ்தை இங்கிலாந்து பெறுவதற்குப் பியூரிட்டானியர்களின் அரசியல் சிந்தனை காரணமாக விளங்கியது. இங்கிலாந்தின் வரலாற்றில் அதுவரை நடந்திராத புதுமையாக அயர்லாந்து பிராடஸ்டென்டு அங்கத்தினர்களும், ஸ்காட்டிய பிராடஸ்டென்டுகளும் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் வீற்றிருக்கக் கூடிய அவ் வரிய செயல், மகா பிரிட்டனின் ஒருமைப்பாட் டிற்குத் தூண்டுதலாக அமைந்த முதல் தொண்டாகும். அரச ரில்லாத ஆட்சியை அமைக்கவும் அப் பியூரிட்டானியர்கள் 1649-லிருந்து 1660-வரை பற்பல சோதனைகளை நடத்தினர் என்பதைச் சென்ற அத்தியாயத்தில் கண்டிருந்தோம். பொது நலத் துரைத்தன ஆட்சியைத் தொடர்ந்து காப்பாளரின் ஆட்சி இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டது. பழமை விரும்பிகளான ஆங்கில மக்களிடம் அந்தப் புதுமையான அரசியல் சட்டம் எதுவும் எடுபடவில்லை. சுயஆட்சி முறைக்குப் புறம்பாக அமைந் திருந்த பியூரிட்டானியர்களின் ஆட்சிமுறை 1659 - 1660-ல்

வெறுக்கப்பட்டதாலேயே, முன்னிலை மீட்சி இங்கிலாந்தில் தோன்றியது.

அங்ஙனமாக ஆங்கில அரசியல் மாற்றங்களையும் புதுமைகளையும் செய்த பியூரிட்டானியர்கள், இங்கிலாந்தில் பரிசுத்தமான சமூகத்தை உருவாக்க நினைத்தனர். மக்களின் சிற்றின்ப ஆசைகளை அழிக்க வேண்டுமென பியூரிட்டானியர்கள் உறுதிகொண்டிருந்தனர். மற்போர்கள் தடுக்கப்பட்டன. நாடக அரங்குகள் மூடப்பட்டன. ஞாயிற்றுக்கிழமைகளில் பிரயாணம் மேற்கொள்பவருக்கும், தூய்மையற்று இருப்போருக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன. தேசியப் பழக்க வழக்கங்களில் செலவான குதிரைப் பந்தயம், கோழிச் சண்டை போன்றவைகளும் தடைசெய்யப் பட்டன. மக்கள் மதுபானம் அருந்துவதைப் பியூரிட்டானிய ஆட்சியாளர்கள் விரும்பவில்லை யெனினும், அதைத் தடைசெய்யக் கூடிய சட்டம் எதையும் பிறப்பிக்கவில்லை. 'மது அருந்துவது மனிதரின் இயற்கை உரிமை' என்பதை ஒப்புக்கொண்ட பியூரிட்டானியர்கள், அங்ஙனம் அருந்துபவர்கள் ஆண்டவரால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் சொல்லிக்கொண்டனர். அங்ஙனமாக, மக்களின் அன்றாட வாழ்க்கையில் தலையிட்டு 'பரிசுத்தமான சமூகத்தை' நிறுவ முயன்ற பியூரிட்டானியர்களுக்கு 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களின் மனநிலை தெரியவில்லை. களிப்புகளிலும் கேளிக்கைகளிலும் காலம் கடத்திவந்த ஆங்கிலேய மக்களுக்கு அந்தக் கட்டுப்பாடுகள் அதிருப்தியையே கொடுத்தன. நடைமுறைக்கு அந்த நிபந்தனைகள் ஒத்து வராவெனினும், அவற்றை நாட்டுமக்கள் எல்லாரும் பின்பற்றவேண்டுமெனப் பியூரிட்டானியர்கள் நினைத்ததிலிருந்து அவர்களின் கொள்கைப் பற்றுதல் தெளிவாகத் தெரிகிறது. 'மனமே மனிதன். அது புனிதமாக அமைக்கப்படும்போது மனிதன் பெருவாழ்வு பெறுகிறான். இல்லையெனில், மனம் கெட்ட மனிதருக்கும், மனமில்லா மிருகத்திற்கும் வித்தியாசம் ஏதும் இல்லை' எனக் கிராம்வெல் கூறியதிலிருந்து, ஆங்கிலச் சமூகம் எங்ஙனம் அமையவேண்டுமெனப் பியூரிட்டானியர்கள் விரும்பியது தெரியவரும்.

சமயத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் எல்லாம் குழப்பமாக இருந்தன. சமயப்பொறை அளிக்க வேண்டுமென்ற கொள்கை பியூரிட்டானியர்களுக்கிடையே பெரும்பிளவை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும், திருச்சபைக்கு வராதவர்களுக்கு அளிக்கும் தண்டனைகளை எஞ்சிய பாராளுமன்றம் தடைசெய்தது. ஆயின், கத்தோலிக்கர்களுக்குமட்டும் அச் சலுகை காட்டப் படவில்லை. தீவிரவாதிகளைத் தண்டிக்கும்படியான தெய்வ

நிபந்தனைச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. கிருத்துவ அடிப்படைவாதிகளென (Fundamentalists) அழைக்கப்பட்டவர்களைக் கண்டிப்பவர்களுக்குத் தண்டனை தரவேண்டு மென்ற யோசனையும் இருந்தது.

எஞ்சிய பாராளுமன்றத்தைக் கலைத்துக் கிராம்வெல் 1653-ல் பார்போன் பாராளுமன்றத்தைக் கூட்டியபோது கிராம்வெல் 'ஆண்டவர், புதுமை வாய்ந்த நெளிவுகள், திருப்பங்கள் ஆகிய வற்றின் மூலமாகத் தெளிவு செய்யப்பெற்ற பற்றுறுதி கொண்டவரை அழைத்திருக்கிறார்; அவர்கள் செயின்ட் பாலினுடைய (Saint Paul) உணர்ச்சியோடு பியூரிட்டானியருக்காக மட்டுமன்றி மக்கள் அனைவருக்கும் நன்மை யளிப்பவராக இருக்கட்டும்' எனக் கூறியிருந்தார். அச் சொற்கள் பியூரிட்டானியர்களின் தகுதியை மட்டுமன்றிச் சேவை உணர்ச்சியையும் வெளிப்படுத்தின. அந்த நியமனப் பாராளுமன்றம் கொண்டு வந்த, கொண்டுவர முயன்ற சில மாறுதல்கள் பியூரிட்டன் சமயத் தத்துவத்தை மாற்றுவது போல அமைந்தது.

1654-ல் கிராம்வெல் பிறப்பித்த சில ஆணைகள் பியூரிட்டானியச் சமயத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்தன. ஜான் ஓவன் (John Oven) என்ற குருவின் யோசனைப்படி, நிலையான திருச்சபையை ஏற்படுத்தும் திட்டத்தைக் கிராம்வெல் மேற் கொண்டார். நல்ல திருச்சபை ஏற்பாடு தோன்றும்வரை, முக்கியமான சமயப் பிரிவினரைக் கொண்ட அமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டு மென்பதே அத் திட்டமாகும். அது கோவில் மகிமையால் ஆதரவு பெறுதல் வேண்டும். அதே சமயத்தில், பொதுநல அமைதிக்கும் பங்கம் நேராதவகையில் அதில் சேராதவர்களுக்குச் சமயப் பொறை அளிக்கப்படவேண்டும்; தனிப் பட்டோர் ஆதரவு திருச்சபையில் நீடித்ததெனினும், சோதகர்கள் (Triers) என்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். குருமார் பதவிக்கு எவர் தகுதியானவர்கள் எனச் சோதகர்கள் நிர்ணயிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. வெளித்தள்ளுவோர் (Ejectors) என்ற அதிகாரிகளும் ஒவ்வொரு கவுண்டியிலும் அமர்த்தப்பட்டார்கள். முறை தவறிய-ஒழுக்கங் கெட்ட-குருமார்களின்மீது அவ் வலுவலர்கள் நடவடிக்கை எடுத்தனர். சங்கங்களின் ஆதரவைப் பெற்றிருந்த அந்தச் சமய அமைப்பு இணங்காத் தன்மையை வளர்த்தது.

மாஸ் தொழுகைக் கூட்டமும் வழிபாட்டுத் தூதும் சட்டப்படி தடை செய்யப்பட்டபோதிலும், இங்கிலாந்தில் ஓரளவு சமய

பொறை இருந்துவந்தது. யூதர்கள் நாட்டுக்கு வரவழைக்கப் பட்டனர். குவாக்கர்கள் ஒதுக்கப்படுவதும் குறைக்கப்பட்டது. திருச்சபைக்குச் செல்லாத கத்தோலிக்கர் தண்டம் கட்டத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டது. இலண்டன் நகரக் கோயில்கள் பலவற்றிலும் பல தனிப்பட்டோர் சமயக் கூட்டங் களிலும் ஆங்கிலச் சமயமும் வாழ்ந்தே வந்தது.

பியூரிட்டானியர்கள், அரசியலிலும் சமூகத்திலும் பெற்றி ருந்த செல்வாக்கைச் சமயத்தில் பெற்றிருந்தவர்களாகக் காணப் படினும், எதிர்ப்புணர்ச்சியும் கசப்புணர்ச்சியும் பெரும்பாலோ ரிடையே இருந்து வந்தன. 1660-ல் ஏற்பட்ட முன்னிலை மீட்சி அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

10. ஸ்டூவர்டுகள் காலம் (தொடர்ச்சி) (1660—1685)

(அ) இரண்டாம் சார்லஸ் - முன்னிலை மீட்சி

முன்னிலை மீட்சி ஏற்பட்ட சூழ்நிலை

தம் வாளின் வலிமையால் ஆலிவர் கிராம்வெல் வணக்க விண்ணப்ப ஆலோசனைப்படி அரசராகி முடியாட்சியை மீட்டு, அரசியல் அமைப்புக்குட்பட்ட ஆட்சியை அமைத்து முன்னிலை மீட்சியைச் செய்திருக்கலாம். ஆலிவர் செய்ய விரும்பாததை அவரின் பின் வந்தவரான ரிச்சர்டு செய்ய நினைத்திருந்தாலும் முடியாது போயிருக்கும். ஆளும் திறமையும் படையினரிடம் செல்வாக்கும் இல்லாத ரிச்சர்டால் பாராளுமன்ற - படையினர் பூசலைத் தவிர்க்க முடியாமல் போயிருந்தது. தம் காப்பாளர் பதவி பறிக்கப்பட, அரசியலிலிருந்து ரிச்சர்டு ஒதுங்கிவிட்டார். பின்னர்ப் பாராளுமன்றமும் கலைக்கப்பட, அதைத் தொடர்ந்து ஜெனரல் லாம்பர்டு (Lambert) தலைமையில் இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டிருக்க, குழப்பம் மேலும் அதிகரித்தது. உள்நாட்டு நிலைமை மேலும் சீர்கெடாமல் இருக்கவேண்டுமாயின் ஸ்டூவர்டு அரச மரபின் வாரிசை இங்கிலாந்தின் அரியணையில் மீண்டும் அமர்த்துவதைத் தவிர வேறு வழியில்லையென, ஸ்காட்லாந்திலிருந்த ஜெனரல் மாங்க் (Monk) நினைத்து, அதற்கேற்பச் செயல்பட ஆரம்பித்ததே முன்னிலை மீட்சியின் முதல் கட்டமாக அமைந்தது. அதன் விவரங்களையும் நாம் ஏற்கெனவே கண்டிருந்தோம்.

ஜெனரல் மாங்குடன் நடத்தப்பட்ட இரகசிய உடன்பாட்டின் இறுதியில் 1660 ஏப்பிரல் 4ஆம் நாளில் சார்லஸால் வெளியிடப்பட்ட பிரிடா பிரகடனமே (Breda Declaration)

இங்கிலாந்தில் முன்னிலை மீட்சி ஏற்பட ஏதுவாக அமைந்தது. பாராளுமன்றத்துடன் இணைந்து அரசரை எதிர்த்த அனைவருக்கும் (சிலரைத்தவிர) மன்னிப்பு வழங்குவதாகவும், படையினருக்குச் சம்பளப் பாக்கி அளிப்பதாகவும், நிலப்பிரச்சினையைத் தீர்ப்பதாகவும், சமயப்பொறை வழங்குவதாகவும் இளவரசர் சார்லஸ் கொடுத்திருந்த வாக்குறுதிகள் அவருக்கு நாட்டிலே ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தன.

தம் 30-வது பிறந்த நாளான மே மாதம் 29ஆம் தேதி, நாட்டிலே உற்சாகம் கரைபுரண்டோட டோவர் (Dover) என்னுமிடத்தில் சார்லஸ் வந்திறங்கினார். ஆரவாரம் செய்து வரவேற்பளித்த மக்கள் சாலையின் இரு பக்கங்களிலும் குழுமியிருக்க, சார்லஸ் இலண்டனை அடைந்தார். 'ஆண்டவன் அரசரைக் காக்கட்டும்' என்ற கோஷம் வானதிரக் கேட்டது. பதினெரு வருடங்களுக்குமுன் முதலாம் சார்லஸ் கொலைக்களத்தில் நிறுத்தப்பட்டபோது துக்கக்கண்ணீர் வடித்த இலண்டன் மாநகர மக்களில் பெரும்பாலோர் தங்களின் புது அரசரைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

சார்லஸின் குண இயல்புகள்

முன்னிலை மீட்சிக்கு அங்ஙனம் மூலவராக இருந்த அரசர் இரண்டாம் சார்லஸ், பல ஆண்டுகள் ஃபிரான்ஸ், ஹாலந்து போன்ற நாடுகளில் அடைக்கல வாழ்வை நடத்தி வந்ததால் நடை உடை பாவனைகளில் ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களிலிருந்து மாறுபட்டிருந்தார்; இருப்பினும், இங்கிலாந்தைப் பெரிதும் விரும்பினர். இங்கிலாந்தை விட்டு என்றும் அகலுவதில்லை என்ற உறுதியிலேயே, தம் பாட்டனார் முதலாம் ஜேம்ஸ், தம் தந்தை முதலாம் சார்லஸ் கொலுவீற்றிருந்த அரியணையில், இரண்டாம் சார்லஸ் அமர்ந்தார்.

தம் பேச்சாலும் தோற்றத்தாலும் பிறரைக் கவரும் திறமை கொண்டிருந்த இரண்டாம் சார்லஸ் மனதிலும் எண்ணத்திலும் உள்ளாழம் கொண்டவராக இருந்தார். அவரை மற்றவர்கள் புரிந்து கொண்டார்க ளென்பதைவிட அவரே அடுத்தவர்களை அதிகமாகத் தெரிந்துகொண்டா ரென்பதே மிகப் பொருத்தமாகும். உதட்டில் ஒன்று பேசி, உள்ளத்தில் ஒன்று நினைத்து, நாடகமாடக்கூடிய கபட வேடதாரியாகச் சார்லஸ் இருந்தபோதும், விட்டுக்கொடுக்கும் நேரத்தில் பணிந்து, தம் அதிகாரத்தை வெளிக்காட்ட வேண்டிய நேரத்தில் ஆரவாரமிட்டு நினைத்ததைச் சாதிக்கும் தனித்திறமையைக் கொண்டிருந்தார்.

அத்தகைய குண இயல்புகளைப் பெற்றிருந்த அம் மன்னர் ஆரம்ப காலத்தில் ஊழிய வேலைகளைத் தம் அமைச்சரிடம் விட்டு விட்டு, இறுதி முடிவெடுக்கும் உரிமையைமட்டும் தம்மிடமே வைத்துக் கொண்டார். அவ் வியல்புகளைக் கொண்டவரும், ஸ்டூவர்டு அரசர்களிலே முக்கியமானவராகக் கருதப்படுபவருமான இரண்டாம் சார்லஸை மையமாக வைத்தே முன்னிலை மீட்சி நடத்தப்பட்டது.

முன்னிலை மீட்சித் தன்மைகள்

முன்னிலை மீட்சி என்பது உள்நாட்டுப் போரை அடுத்து ஏற்பட்ட புரட்சிக்கும் அதற்குக் காரணமாயிருந்த படையினருக்கும் எதிராகச் செய்துகொள்ளப்பட்ட ஏற்பாடாகும். அரசரின் முன்னிலை மீட்சி என்பதோடு, பாராளுமன்றத்தின் முன்னிலை மீட்சியாகவும் அது அமைந்தது. முடியாட்சி, பிரபுக்கள் சபை, காமன்ஸ் சபை போன்றவைகள் அமைந்த அரசியல் ஏற்பாட்டை மீட்ட அந்த ஏற்பாடு ஆங்கிலிகன் திருச்சபையினருக்கும் புத்துயிர் கொடுத்ததால், அதைச் சமய முன்னிலை மீட்சி என்றும் அழைக்கலாம். மக்கள்மீது பியூரிட்டானிய அரசியலர்களால் திணிக்கப்பட்டிருந்த அன்றாட வாழ்க்கைக் கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டதால், அது சமூக முன்னிலை மீட்சியாகவும் அமைந்தது.

அரசரின் தனியுரிமைகள் அல்லது இயல்பான முடியாட்சியின் வளர்ச்சியையும் பாராளுமன்றத்தினையும், ஆங்கிலிகன் திருச்சபையையும் சமூகக் களியாட்டங்களையும் மீட்ட முன்னிலை மீட்சியின் முக்கிய ஏற்பாட்டை (The Settlement of Restoration) இவர் காலத்தின் இரு பாராளுமன்றங்கள் நிறைவேற்றின.

முன்னிலை மீட்சியின் ஏற்பாடு

சார்லஸை அழைத்து மணிமகுடத்தைக் கொடுத்து அரசியலில் முன்னிலையை மீட்டியிருந்த பிரத்தியேகப் பாராளுமன்றம் (The Convention Parliament) முன்னிலை ஏற்பாட்டின் முதற் பகுதியை முடித்தது (1651).

உள்நாட்டுப் போருக்கு முன்னிருந்த இங்கிலாந்தையும் முன்னிலை மீட்சிக்கு முன்பிருந்த இங்கிலாந்தையும் ஒன்றுபடுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்திருந்த அமைச்சர் கிளாரண்டன் (Clarendon) பிரபு அரசருக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையே நடுவராக விளங்கினர்.

உருண்டைத் தலையர்களைப் (The Round Heads) பழிவாங்க மறுத்த கிளாரண்டன், பாராளுமன்றத்தின் வரம்பிற்குட்பட்ட மன்னராட்சியை ஆதரித்தார். பொதுநலத்துரைத்தனக் காலத்தில் கொண்டுவரப்பட்ட பல சட்டங்கள் அவரால் ரத்து செய்யப்பட்டன. ஆங்கில வர்த்தகத்தில் சம அந்தஸ்தை அனுபவித்து வந்த ஸ்காட்லாந்தும் அயர்லாந்தும் அவற்றின் இழுத்து, கயேச்சைப் பாராளுமன்றங்களைப் பெற்றுத் தனி நிலையை அடையவும் அவர் ஏற்பாடு செய்தார்.

அடுத்துச் சார்லஸ் முன்பு வெளியிட்டிருந்த பிரிடா பிரகடனத்தை யொட்டி, பிரத்தியேகப் பாராளுமன்றம் செயல்பட ஆரம்பித்தது.

மீட்கப்பட்ட முடியரசை எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய நிறுவனமாக விளங்கச் செய்யவேண்டுமென்றால் முதலாம் சார்லஸ் கொல்லப்படுவதற்குக் காரணமானவர்களை மன்னித்து மறப்பதன் மூலமாகவே முடியுமென்பதை அரசரும், கிளாரண்டனும் ஒப்புக்கொண்டார்கள். பாராளுமன்றத்தினரும் அதற்கேற்ப, பொதுமன்னிப்பு, மறப்புச் சட்டத்தை (The Act of Indemnity and Oblivion) 1661-ல் நிறைவேற்றினர். தம் எதிரிகளின் இரத்தத்தைச் சிந்தச் செய்தும் அவர்களின் பண்ணைகளைப் பறிமுதல் செய்தும் தங்களின் பழிவேட்கையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்த கேவலியர்களுக்கு அச் சட்டம் ஏமாற்றத்தையே கொடுத்தது. 'அரசரின் எதிரிகளுக்கு மன்னிப்பா?' என்று கோபப்பட்டனர். இறுதியில், முதலாம் சார்லஸின் விசாரணைக்கும் கொலைக்கும் காரணமாக இருந்த பத்துப் பேர் தூக்கிலிடப்பட்டனர்; மற்ற மூன்று பேர் நாடு கடத்தப்பட்டனர். அரசரைக் கொல்லாதவரெனினும் 'ஆபத்தானவர்' என்று இரண்டாம்சார்லஸால் அறிவிக்கப்பட்ட சர் ஹென்றி வேன் என்ற பொதுநல அரசரின் அத் தலைவரும் பிறரின் பழிக்காகத் தூக்கிலிடப்பட்டார். மற்றப் புரட்சிக்காலத் தலைவர்களான லாம்பர்ட்டும், ஹேசல்ரஜ்ஜும் (Haslereigh) ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையிலடைக்கப்பட்டனர். பழிவாங்கும் உணர்ச்சியில் பாவத்திற்கும் அஞ்சாமல் புதைக்கப்பட்ட சடலங்களையும் தோண்டியெடுத்துத் தூக்கிலிட்டனர். கிராம்வெல், அயர்ட்டன் (Ireton), பிராட்ஷா போன்றோரின் சடலங்கள் அக் கதிக்கு ஆளாயின.

உள்நாட்டுப் போர்க் காலத்திலிருந்து நாட்டில் நிரந்தர நடுக்கத்தைத் தந்துவந்த புகழ்பெற்ற புது மாதிரிப் படையினரைக் கலைப்பதையும், தன் முக்கியப் பொறுப்பாகப் பாராளு

மன்றம் நினைத்தது. அதனால், 35,000 படைவீரர்களுக்குச் சம்பளப் பாக்கி தீர்க்கப்பட்டு, படையிலிருந்து விலக்கப்பட்டனர். ஜெனரல் மாங்கின் கோல்டு ஸ்டிரீம் படையினரையும் (Cold Stream Guards), ஒரு சில வீரர்களையுமே அரசர் தம் காவற்படையாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். பாராளுமன்றம், அரச விசுவாசம் கொண்டிருந்தபோதும், அரசருக்கு நிலையான படையினை வைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பினைக் கொடுக்க மறுத்தது.

அடுத்து, நிலச்சிக்கலைத் தீர்க்கப் பாராளுமன்றம் விழைந்தது. எதிரிகளின் நிலத்தைப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமெனக் கேவலியர்கள் எழுப்பிவந்த கூச்சல் நாட்டில் பேரொலியாகக் கேட்டு வந்த மதச் சபைக்கும், முடியரசுக்கும், கேவலியர்களுக்கும் சொந்தமான நிலங்களைப் புரட்சி அரசாங்கம் பறித்து, தனக்கு வேண்டியவர்களுக்கு விற்றிருந்தது. அந்த நிலங்களை வாங்கியிருந்தவர்களுக்கு நஷ்ட ஈடு எதுவும் கொடுக்காமல் அவை மீட்கப்பட்டன. ஆனால், தங்கள்மீது விதிக்கப்பட்டிருந்த அபராதத்தைச் செலுத்துவதற்காகக் கேவலியர்கள் விற்றிருந்த நிலங்கள் மீட்கப்படாமல், அவற்றை வாங்கியவர்களிடமே விடப்பட்டன. மேற்கூறிய ஏற்பாடு பல கேவலியர்களுக்கு ஏமாற்றத்தை அளித்ததென்பது சொல்லித் தெரியவேண்டிய தில்லை.

பிரிடா பிரகடனத்தில் அளிக்கப்பட்ட கடைசி வாக்குறுதியை அப் பிரத்தியேகப் பாராளுமன்றம் காப்பாற்றத் தவறிவிட்டது. அரசர் இரண்டாம் சார்லஸ் சமயப் பொறைக்கு முக்கியத்துவம் அளித்தபோதிலும் பாராளுமன்ற அங்கத்தினர்களிடையே இருந்த பொறுமைப் பூசல்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருந்தன. சமயத்தைப் பொறுத்தவரையில் எவ்வித உடன்பாடும் ஏற்படா தென்ற நிலை உண்டாக அப் பிரச்சினையை முறையாகத் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றத்திடம் விட்டுவிட வேண்டுமென முடிவாகியது. ஆக, முன்னிலைச் சமய ஏற்பாடு அடுத்துக் கூடிய புதிய கேவலியர் பாராளுமன்றத்தாலேயே (Cavalier Parliament) செய்து முடிக்கப்பட்டது.

கேவலியர்களும், பிரஸ்பிடீரியர்களுமாகச் சேர்ந்து குழுமியிருந்த பிரத்தியேக மன்றம் 1660ஆம் ஆண்டு இறுதியில் கலைக்கப்பட்டுவிட்டது. முறைப்படி புதியதாகக் கூட்டப்பட்ட கேவலியர் பாராளுமன்றம் தீவிர அரசு விசுவாசிகளையும் தீவிர ஆங்கிலிகன் சமயத்தினரையும் கொண்டிருந்தது. உற்சாகம் கொண்ட இள வயதினரை அதிகமாகக் கொண்டிருந்த அம் மன்றத்தைக் கேவலியர் பாராளுமன்றம் என அழைத்தனர்.

அரசரிடம் தனக்கிருந்த விசுவாசத்தைக் காட்டிக்கொள்ள ஒரு சில சட்டங்களை (Monarchic Legislation) உடனுக்குடன் கொண்டுவந்தது. அதன்படி பாராளுமன்றம் அரசருடன் ஆயுதப் போர் நடத்துவது முறையாகா தெனவும், நாட்டுப்படை, கப்பற் படை, அரசரின் அதிகாரத்திற்கு அடங்கியிருக்க வேண்டியவை யெனவும் அறிவிக்கப்பட்டது. இந்நாதுக்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பங்களைத் தடை செய்யும் சட்டத் தையும் அச்சுத் தொழிலைத் தணிக்கை செய்ய உதவும் அனுமதிச் சீட்டுச் சட்டத்தையும் (Licensing Act) அப் பாராளுமன்றம் கொண்டுவந்தது. அதனால் அரசரைச் சார்ந்த எதனையும் கண்டிக்கும் வழக்கம் தடை செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது.

சமயச் சிக்கல்களைத் தீர்த்து ஓர் ஏற்பாடு செய்ய எண்ணிய கேவலியர் பாராளுமன்றம் ஆங்கிலிகத் திருச்சபைக்கு முன்னிலை மீட்சியினை அளித்து, சமயப் பொறை அளிக்கப்படும் என்று எதிர்பார்த்து அந்நேரத்தில் சில கொடுமையான சமயத் துன் புறுத்தல்களுக்குக் காரணமாகஇருந்த சில சட்டங்களை 'கிளா ரண்டன் சட்டங்களாக' (Clarendon Code, 1661 - 1665) அம்மன்றத்தால் கொணர்டுவரப்பட்டது. அவர் பெயரைத் தாங்கி அச் சட்டங்கள் வெளிக்கொணரப்பட்டபோதும் உண்மையில் அவருடைய எண்ணத்திற்கு எதிராகவே அவை நிறைவேற்றப் பட்டன. அரசருக்கும் அதில் சம்மத மில்லையென்றாலும், பாராளு மன்றத்தின் சமய வெறிக்கு அவர் பணிய வேண்டியிருந்தது. அச் சட்டத் தொகுப்பைக் கொண்டுவந்தது பிரபுக்களும் காமன்ஸ் சபையினருமே.

ஆங்கிலிகத் திருச்சபைச் சடங்குகளுக்கு இணங்குபவர்களே நகராட்சியில் பங்கு பெறவேண்டு மெனவும் அவர்கள் அரசருக்கு விசுவாசப் பிரமாணமசெய்து கொடுக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தவும் மாநகராட்சிச் சட்டம் (Corporation Act) 1661-ல் நிறைவேற்றப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட வழி பாட்டு நூலையே (Prayer Book) கோயில்களில் பின்பற்றவேண்டு மென 1662-ல் ஒருமை வழிபாட்டுச் சட்டமும் (Act of Uniformity) கொண்டுவரப்பட்டதால் அதை ஒப்புக்கொள்ளாத இரண்டாயிரம் மதக் குருமார்கள் வெளியேற்றப்பட்டனர். ஆங்கிலிகத் திருச்சபையின் மதக் கூட்டங்களேயன்றி வேறெந்தச் சமயக் கூட்டமும் நடைபெறக் கூடாதெனவும் அதில் பங்கெடுப் பவர்களுக்குக் கடும் தண்டனை அளிக்கக்கூடிய இரகசிய சமயக் கூட்டச் சட்டம் (Conventicle Act) 1664-ல் கொண்டுவரப் பட்டது. 1665-ல் நிறைவேறிய ஐந்து மைல் சட்டம் (Five Miles

Act) திருச்சபையினின்றும் நீக்கப்பட்ட குருமார்கள் எந்த நகருக்கும் ஐந்து மைல் எல்லைக்குள் வந்து குடியேறுவதைத் தடை செய்தது.

மேற்கூறிய சட்டங்கள் உடன்பாட்டு உணர்ச்சியின் அடிப்படையில் உருவாகவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆங்கிலிகத் திருச்சபையைச் சேராதவரை ஒறுக்கும் அளவுக்கு அச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பியூரிட்டானியர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனரெனின் மற்றக் கிளைச் சமயத்தினர்களான பிரஸ்பிடீரியர்கள் ஏமாற்றப்பட்டன ரெனலாம். இணங்காதவர்களும், குவாக்கர்களும் ஒதுக்கப்பட்டனர். தாங்கள் பொது நலத் துரைத்தன அரசின்கீழ் அடைந்த தீங்குகளுக்கும், இழப்புகளுக்கும், பழிதீர்த்துக்கொண்ட முறையாகக் கேவலியர்களின் மத உணர்ச்சி அச் சட்டத் தொகுப்பில் லெனியர்இன கிளாரண்டன் சட்டங்கள் கேவலியர்களின் வெறும் பழி தீர்ப்புத் தொகுப்பாக மட்டுமல்லாமல் - உருண்டைத் தலையர்கள் கட்சி மீட்கப்படுவதைத் தடுக்கும் ஒரு திட்டமாகவும் அமைந்தது. குறிப்பாக, பியூரிட்டானியர்களின் அரசியல் செல்வாக்கிற்குப் பெருந்தடையாக அமைந்தது.

சமய வெறுப்புணர்ச்சியை நாட்டில் பரவவிட்ட அச் சட்டங்களைப் பியூரிட்டானியர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தாங்கள் பணி செய்த கோயில்களிலிருந்தும் வசித்த வீடுகளிலிருந்தும் அவர்கள் நீங்க வேண்டியிருந்தது. ரிச்சர்டு பாக்ஸ்டர் (Richard Baxter), வில்லியம் பேட்ஸ் (William Bates) எட்மெண்ட் (Edmund), கேலமி (Calamy) ஜான் பன்யான் (John Bunyan) போன்ற பியூரிட்டானியப் பெருமக்கள் அச் சட்டங்களின் தண்டனைக்கு ஆளாகும் பழியைப் பெற்றனர். ஆங்கிலிகன் திருச்சபையால் சமயப் பொறை மறுக்கப்பட்ட அக் காலத்தில்தான் மில்டன் (Milton) தம் இரு அமரப் படைப்புகளான 'இழந்த சுவர்க்கம்' (Paradise Lost) 'மீண்ட சுவர்க்கம்' (Paradise Regained) என்ற காவியங்களை இயற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்ஙனமாக, இரண்டாம் சார்லஸ் காலத்தில் அவரின் இரு பாராளுமன்றங்கள் (1661 – 1665) முன்னிலை மீட்சியின் ஒப்பந்தத்தை அரசியலிலும், சமூகத்திலும், மதத் துறையிலும் ஏற்படுத்தியது.

சார்லஸும் அவரின் அமைச்சரவைகளும்

அரசியல், சமூக முன்னிலை மீட்சிக்குக் காரணமாக இருந்த பிரத்தியேகப் பாராளுமன்றம் அரசரின் செலவுக் கென்று ஆண்

டொன்றுக்கு 1,200,000 பவுன்கள் மொத்த வரும்படி வருவதற்கான ஏற்பாட்டினைச் செய்துவிட்டுக் கலைந்துபோயிருந்ததையொட்டியே, கேவலியர் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. முன்னிலை மீட்சியின் சமய ஏற்பாட்டைச் செய்திருந்த அப் பாராளுமன்றத்தை அரசர் 17 வருடங்கள் கலைக்கவில்லை. பியூரிட்டன்களை ஒடுக்குவதில் தீவிரம் காட்டிய அம் மன்றம், ஆரம்ப காலத்தில் சார்லஸுக்குப் பரிவாகச் சில விசுவாசச் சட்டங்களை இயற்றியதை நாம் ஏற்கெனவே கண்டோம். அப் பாராளுமன்றத்தின் காலத்தில் இரண்டாம் சார்லஸ் அமைத்திருந்த மூன்று அமைச்சரவைகள் அதனுடைய குற்றச்சாட்டுப் பயமுறுத்தலுக்குப் பணிந்து ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்தன.

கேவலியர் பாராளுமன்றம் [Cavalier Parliament, *1661 - 1679*]

↓

↓ | ↓

கிளாரண்டன் (Clarendon) அமைச்சரவை *(1661 - 1667)* | டேன்பி (Danby) அமைச்சரவை *(1673 - 1678)*

↓

கெபல் (Cabal)

அமைச்சரவை *(1667 - 1673)*

உயர்ந்த பண்புகளைப் பெற்றுப் பழிவாங்கும் உணர்ச்சி அற்றிருந்த எட்வர்டு ஹைடு என்ற கேவலியரான கிளாரண்டன் பிரபுவின் அமைச்சரவையின் காலத்திலேயே, கேவலியர் பாராளுமன்றம் அவர் பெயரில் 'கிளாரண்டன் சட்டத்தொகுப்பை' வெளியிட்டிருந்தது. பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட அச் சட்டங்களுக்குக் கிளாரண்டன் எவ்விதத்திலும் பொறுப்பாக இல்லையெனினும், அவரின் பெயரால் அவை அழைக்கப்பட்டது அவருக்கு வேதனை கலந்த விந்தையாக இருந்திருக்கலாம். அவர் பெயரைத் தாங்கிவந்த அச் சட்டங்கள் இணங்காதார்களிடையே (Non-Conformists) கிளாரண்டனுக்கு வெறுப்பைத் தேடிக் கொடுத்திருந்தன.

முடியரசையும் முன்னிலை மீட்சியையும் நாட்டில் எல்லாப் பிரிவினர்களும் வரவேற்கக்கூடியனவாக அமைக்கவேண்டுமென விரும்பிய அமைச்சரான கிளாரண்டன் பிரபு மன்னருக்கு நேர்மாறான குணங்களைப் பெற்றிருந்ததால், அரசரிடத்தும் அதிருப்தியைத் தேடிக்கொண்டார்; பணப் பற்றுக்குறையால் தடுமாறிவந்த சார்லஸ் கிளாரண்டனைக் கருவியாக்கி ஃபிரெஞ்சுப் பணத்திற்கு நாட்டை அடிமையாக்க நினைத்தபோதெல்லாம் அதற்கு

முட்டுக்கட்டையாக இருந்த அமைச்சரைப் பதவியிலிருந்து தள்ளி விட நேரம் பார்த்திருந்தார். கிராம்வெல் காலத்தில் இங்கிலாந்து பெற்றிருந்த டன்கிர்க்கைச் சார்லஸ் பதினான்காம் லூயிக்கு விற்ற விவகாரத்தில் அவ் வமைச்சரும் உடந்தையாக இருந்திருக்கலாமெனப் பாராளுமன்றம் நினைத்துவந்த நேரத்தில் இரண்டாம் டச்சுப் போர் மூண்டது (1664 - 1667). அதன் விவரங்களைச் சார்லஸின் வெளிநாட்டுக் கொள்கையில் பின் கவனிப்போம். அப் போரின் ஆரம்பத்தில் டச்சுக் கப்பற்படையினால் இங்கிலாந்திற்கு ஏற்பட்ட இழப்புக்கும் தோல்விக்கும் கிளாரண்டனின் திறமையின்மையே காரணமெனக் கருதிப் பாராளுமன்றம் அவர்மீது துரோகக் குற்ற விசாரணை நடத்த எண்ணியது.

போர்ச்செலவுக்காகப் பாராளுமன்றம் அரசருக்கு மூன்றாண்டுகளுக்குக் கொடுத்திருந்த இரண்டரை மில்லியன் பவுன்களை ஓராண்டிலேயே சார்லஸ் செலவழித்துவிட்டார். கணக்குகளைப் பாராளுமன்றத்திற்குக் காட்ட மறுத்த சார்லஸ் பாராளுமன்றத்தையும் தள்ளிவைக்கத் தயங்கவில்லை. மன்னர்தம் தனி ஆட்சியைக் காட்ட முற்பட்ட அந் நேரத்தில் டச்சுப் போர் முடியுந் தருவாயிலிருந்தது. அப் போரை முடித்த பிரிடா உடன்படிக்கை கையெழுத்தானதும், காமன்ஸ் சபைத் தலைவர்களின் தூண்டுதலால் அரசர் கிளாரண்டனை நாட்டைவிட்டு விரட்டினார். 'அப்படிக் கிளாரண்டனை விலக்க வில்லையென்றால், பாராளுமன்றத்தோடு சேர்ந்து செய்யவேண்டிய காரியங்களைச் செய்யமுடியாமலே போய்விடும்' எனக் கூறிய சார்லஸ் அவரின் வீழ்ச்சிக்குப் பின்னர்க் காமன்ஸ் சபையை நேருக்குநேர் சந்தித்தார். மன்னரின் தனி ஆட்சி அங்கிருந்தே ஆரம்பித்தது.

கிளாரண்டன் வீழ்ச்சியைத் தொடர்ந்து 1667-ல் கெபல் அமைச்சரவையைச் சார்லஸ் அமைத்தார். கிளிஃபோர்ட் (Clifford), ஆஷ்லி (Ashley), பக்கிங்காம் (Buckingham), ஆர்லிங்டன் (Arlington), லாடர்டேல் (Lauderdale) என்ற ஐந்து அமைச்சர்களடங்கிய அந்த அமைச்சரவை அவர்களின் ஆங்கிலப் பெயர்களின் முதல் எழுத்துகளிலிருந்து அப் பெயரைக் கொண்டிருந்தது. ஊழிய வேலைகளைத் தம் அமைச்சர்களிடம் விட்டுவிட்டு, இறுதி முடிவெடுக்கும் உரிமையை அரசர் தம்மிடம் வைத்திருந்தார். அந்த அமைச்சுக் குழுவில் உறுதியான ஆங்கிலிகரோ அல்லது உண்மையான தேச பக்தரோ யாரும் இருக்கவில்லை. கிளாரண்டன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்ட சார்லஸ் அந்த அமைச்சர்களை நம்பி, அரசர் என்ற முறையில் தனி ஆட்சியை நடத்த முயன்றார்.

பிரிடா உடன்படிக்கையினால் ஹாலந்து நாட்டுடன் செய்து கொள்ளப்பட்டிருந்த உடன்பாட்டை நிலைப்படுத்தி, ஃபிரான்சு நாட்டுக்கு எதிராக ஓர் அணியை அமைக்க வேண்டுமெனப் பாராளுமன்றம் நினைத்தது. அம் மன்றத்தை அப்போது திருப்திப்படுத்தி, பின் தமக்குச் சாதகமான சட்டங்களைப் பிறப்பித்துக் கொள்ளலாமென்ற எண்ணத்தில் அதற்கேற்ப 1668-ல் ஹாலந்து நாட்டுடன் இங்கிலாந்து உடன்பாடு செய்துகொள்ளச் சார்லஸ் இசைந்தார். அவ் வுடன்பாட்டில் ஸ்வீடன் நாடும் சேர்க்கப்பட்டது. அங்ஙனமாக ஃபிரான்சு நாட்டுக்கெதிராக, இங்கிலாந்து, நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகள் சேர்ந்த முக்கூட்டு உடன்படிக்கை (Triple Alliance) ஏற்படுத்தப்பட்டது.

இங்கிலாந்திற்குத் தாம் வந்த காலத்திலிருந்து அரசர் செய்த ஒரே நல்ல காரியம் அம் முக்கூட்டு உடன்படிக்கை என வேடிக்கையாகச் சொல்லப்பட்டது. அவ் வுடன்படிக்கை கையெழுத்திடும்போதே அதை மீறவும் சார்லஸ் எண்ணம் கொண்டிருந்தாரென்பது, அடுத்துப் பதினான்காம் லூயியுடன் செய்து கொண்ட இரகசிய டோவர் ஒப்பந்தத்தின் மூலமே (Secret Treaty of Dover) தெரியவந்தது.

நாடு பிடிக்கும் ஆசை கொண்டிருந்த பதினான்காம் லூயி தம் ஃபிரெஞ்சு நாட்டின் எல்லையை ரைன் நதிவரை பரவச் செய்தும் நெதர்லாந்தைக் கைப்பற்றவும் முயன்றுவர, அதற்கு ஹாலந்து இடையூறாக இருந்து வந்தது. 1668-ல் இங்கிலாந்துடன் செய்துகொண்ட உடன்பாட்டின் விளைவாக அதனுடைய எதிர்ப்புச் சக்தி இன்னும் அதிகமாக இருந்ததை லூயி உணர்ந்திருந்தார். ஆகவே, ஆங்கிலோ - டச்சு உறவை எப்படியும் முறிக்க வேண்டுமென விரும்பிய ஃபிரெஞ்சு அரசர் லூயி பண ஆசை காட்டி, சார்லஸைத் தம் வயப்படுத்தினர்.

டோவர் (Dover) என்னுமிடத்தில் 1670-ல் செய்து கொள்ளப்பட்ட அவ் வுடன்படிக்கையின்படி, 300,000 பவுன் களைச் சார்லஸ் பெற்றுக்கொண்டு ஃபிரான்சுடன் சேர்ந்து ஹாலந்தைத் தாக்கவேண்டும். அடுத்து, லூயியிடமிருந்து மேற்கொண்டு பணம் பெற்று, அவசியப்பட்டால் படை உதவியும் பெற்று இங்கிலாந்தில் ரோமன் கத்தோலிக்க மதத்தையும் சார்லஸ் நிறுவ வேண்டுமெனவும் ஏற்பாடாகியது. சுருக்கமாக, ஃபிரெஞ்சு கத்தோலிக்க முடியரசுக்கு இங்கிலாந்தை அடிமைப் படுத்தும் திட்டமாக, அந்த உடன்படிக்கை அமைந்திருந்தது. சார்லஸ் அந்த ஏற்பாட்டைத் தம் கத்தோலிக்கப் பற்றுக்கொண்ட கிளிஃபோர்டு, ஆர்லிங்டன் என்ற இரு அமைச்சர்களிடமும்

லூயியின் சகோதரர் ஆர்லியன்ஸ் (Orleans) பிரபுவை மணந்திருந்த தம் சகோதரி ஹென்றியாட்டா (Henriatta) விடமும் மட்டுமே சொல்லிவைத்திருந்தார். பாராளுமன்ற ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, கட்டுப்பாடற்ற வெளிநாட்டுக் கொள்கையைச் சார்லஸ் பின்பற்ற நினைத்தாரென்பதையும் அவ்வுடன்படிக்கை உறுதிப்படுத்தியது.

1672-ல் ஃபிரான்ஸ் இங்கிலாந்தின் துணைகொண்டு ஹாலந்தைத் தாக்க, மூன்றும் டச்சுப்போர் தொடங்கியது. அச்சமயத்தில் டோவர் ஒப்பந்தத்தின்படி நாட்டில் கத்தோலிக்க சமயத்தைத் தளிர்க்கச் செய்ய எண்ணிய சார்லஸ் பொறுத்தல் அறிக்கைகளை (Declaration of Indulgence) வெளியிட்டார். கத்தோலிக்கர்களுக்குச் சமயப் பொறையை வழங்க நினைத்த அரசர், பியூரிட்டானியர்களின் குறைகளையும் தீர்த்தாலன்றிக் கத்தோலிக்கரை ஆதரிப்பது ஆபத்தாகும் என்று உணர்ந்திருந்ததை முன்னிட்டே தமக்குத் திருச்சபையின்மீதிருந்த தனி அதிகாரத்தின் துணைகொண்டு பிராடஸ்டென்டு மாறுபாட்டுச் சமயத்தவருக்கு அளிக்கப்படும் தண்டனைகளைத் தள்ளிவைத்தார். தங்களுடைய வீடுகளில் தொழுகை நடத்தக் கத்தோலிக்கர்களுக்கு அனுமதி வழங்கினார். இங்ஙனம், சமயத்துறையிலும் பாராளுமன்றத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தன்னாட்சி நடத்த சார்லஸ் முயன்றார்.

பியூரிட்டானியர்கள் மிகவும் - குறிப்பாகக் கத்தோலிக்கர்களும் அரசரின் மன்னிப்பு அறிக்கைகளில் பலனடைகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட பாராளுமன்றம் அவர்களை மீண்டும் குற்றச்சட்டங்களுக்குக் (Penal Laws) கட்டுப்படுத்த நினைத்தது. அரசர் மன்னிப்புச் சட்டங்களைத் திரும்பப் பெற்றுலொழியப் புது மானியப் பணத்தைக் கொடுக்க முடியாதெனப் பாராளுமன்றம் மிரட்ட, அதற்குச் சார்லஸ் பணிய வேண்டியிருந்தது. தம் கை ஓங்கிய அந்த வேளையில் பாராளுமன்றம் 1673-ல் சோதனைச் சட்டத்தை (Test Act) நிறைவேற்றி, அரசரின் இசைவையும் பெற்றது. ஆங்கிலிகன் திருச்சபையின் சடங்குகளை ஒப்புக்கொள்ளாதோர் அரசாங்கப் பதவிகளைப் (State offices) பெறமுடியாதவாறு அச் சட்டம் தடை செய்ய, கத்தோலிக்கரான கிளிஃபோர்டும் ஆர்லிங்டனும் பதவியை இழந்தனர். டோவர் ஒப்பந்தத்தின்படி சார்லஸ் கத்தோலிக்க சமயத்தை நிறுவ எண்ணியிருந்தும், அதற்கான உதவியைப் பதினான்காம் லூயி கொடுக்கத் தயாராக இருந்தும், பாராளுமன்றத்திடம் சச்சரவை அதற்குமேல் வளர்த்துக்கொள்ளச்

சார்லஸ் தயாராக இல்லை. சோதனைச்சட்டப்படி கிளிஃபோர்டும் ஆர்லிங்டனும் விரட்டப்பட்டிருக்க, சான்ஸலராகப் பணியாற்றி வந்த ஆஷ்லியுடன் சச்சரவிட்டுச் சார்லஸ் அவரையும் நீக்கவே, கெபல் அமைச்சரவையும் வீழ்ந்தது.

தம் கத்தோலிக்கச் சார்புக் கொள்கைக்கு எதிராகப் பாராளு மன்றத்தில் வீசிய கிளர்ச்சிப் புயலிலிருந்து தம்மைப் பாதுகாத் துக்கொள்ள, காமன்ஸ் சபையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றி ருந்த தாமஸ் ஆஸ்போர்ன் என்ற டான்பி கோமானை (Earl of Danby) கேவலியர் பாராளுமன்றத்தின் ஆங்கிலிகன் தலைவரை வைத்துச் சார்லஸ் தம் அடுத்த அமைச்சரவையை அமைத்துக் கொண்டார்.

பாராளுமன்ற அங்கத்தினர்களின் நம்பிக்கைக்கு உகந்த வரையே மந்திரியாக்கவேண்டும் என்ற மரபைச் சார்லஸ் தற் செயலாக உண்டாக்கினர்.

மூன்றும் டச்சுப் போரை 1674-ல் வெஸ்ட்மின்ஸ்டர் உடன் பாட்டின்மூலம் முடித்ததே அவ் வமைச்சரின் முதல் காரியமாக இருந்தது.

அரசாங்கக் காரியங்களைச் சுமுகமாக முடித்துக்கொள்ளப் பாராளுமன்றத்தில் தம் ஆதரவாளர்களடங்கிய ஒரு கட்சியை டான்பி உருவாக்கினர். அரசுக்கும் திருச்சபைக்கும் விசுவாச மாக இருந்த அந்த அங்கத்தினர்களுக்கு டான்பி பல சலுகை கள் கொடுத்தார். 'திருச்சபை, அரசர் கட்சி' (Church and King's Party) என அமைக்கப்பட்ட அதுவே பிற்காலத்தில் டோரி கட்சியாக வளர்ந்தது. அதே சமயத்தில் 1673-ல் சான் ஸலர் பதவியிலிருந்து சார்லஸால் விரட்டப்பட்ட ஆஷ்லி என்ற ஷேவ்ட்ஸ்பரி கோமகன் (Earl of Shaftesbury) அரசரின் தனி ஆட்சியையும் அவரின் கத்தோலிக்க சமயப்பற்றையும் எதிர்க் கும் நோக்கத்தில் நாட்டுக் கட்சி (Country Party) என்ற எதிர்க்கட்சியை நிறுவினர். இதுவே எதிர்காலத்து 'விக்' (Whig) கட்சிக்கு வித்தாக அமைந்தது. எழுத்தாலும் பேச்சா லும் பாராளுமன்றத்திற்கு வெளியே ஷேவ்ட்ஸ்பரியும் அவரின் பழைய உருண்டைத் தலையர்களும் (Round Heads) நாட்டில் தீவிர பிரசாரம் செய்துவந்தனர். சான்சரி சாலையிலிருந்த கிரீன் ரிப்பன் கிளப் (Green Rippon Club) என்ற இடமே அக் கட்சி யினருக்குத் தலைமையிடமாக அமைந்தது.

இதற்கிடையே பதினான்காம் லூயி மீண்டும் சார்லஸைத் தம் வசப்படுத்த முயன்றார். இங்கிலாந்து தமக்கு நட்பு நாடாக

இல்லாவிட்டாலும், எதிர்ப்பு நாடாக இருக்கக் கூடாதென நினைத்த லூயி, சார்லஸை, தொடர்ந்து நடந்துவந்த ஃபிரெஞ்சு - டச்சுப் போரில் நடு நிலைமை வகிக்கச் சொல்ல எண்ணினார். கத்தோலிக்க எதிர்ப்புக் கொள்கையைக் கைவிட மறந்த கேவலியர் பாராளுமன்றம் அதற்கு நிச்சயம் ஒப்புக்கொள்ளாதென லூயிக்குத் தெரியும். ஆகவே, சார்லஸுக்குத் தாம் நிறையப் பணம் கொடுப்பதாகவும் அதற்குப் பதில் அரசர் பாராளுமன்றத்தைத் தள்ளிவைக்க வேண்டுமெனவும் லூயி யோசனை கொடுக்க, பணமுடையால் பாதிக்கப்பட்டிருந்த சார்லஸ் அதை ஏற்றுக்கொண்டார். அரசரின் அத் திட்டத்தை எதிர்க்க டான்பிக்குத் துணிவு இல்லை யென்றாலும், ஃபிரான்சுடன் நட்புக் கொண்டிருப்பதை அவர் விரும்பவில்லை. ஆகவே, இங்கிலாந்திற்கும் ஹாலந்திற்கும் உள்ள உடன்பாட்டை நிலைப்படுத்த எண்ணி 1677-ல் டான்பி, அரசரின் சம்மதத்தையும் பெற்று ஒரு திருமண ஏற்பாட்டைச் செய்தார். 1688-ல் ஆங்கில வரலாற்றின் போக்கை மாற்றிவிடக் கூடியதாக அமைந்த அத் திருமண ஏற்பாட்டின்படி சார்லஸின் தம்பியான (யார்க் கோமகன்) ஜேம்ஸின் மூத்த புதல்வியான மேரி, ஹாலந்து அரசர் ஆரஞ்சு வில்லியத்தை மணமுடித்துக் கொண்டார். ஜேம்ஸ் அந்த மண ஏற்பாட்டை விரும்பவில்லை யெனினும், அரசர் சார்லஸ் அதை ஆதரித்தார். அத் திருமணம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துமெனச் சார்லஸ் நம்பினார். வருங் காலத்தை நிர்ணயித்த அத் திருமண ஏற்பாடு டான்பியின் சாதனையாக அமைந்தது.

கேவலியர் பாராளுமன்றம் பதினேந்து ஆண்டுகள் பதவி வகித்து வந்தது. புதிய தேர்தல் நடத்தப்படுமாஞல், பிராடஸ்டென்டு இணங்காதாருக்குச் சாதகமாகவும். அரசவைக்கும் கத்தோலிக்கருக்கும் பாதகமாகவும் கூடிய புதிய மக்கள்சபை அமைக்கப்பட்டுவிடுமே என்ற பயத்தில் டான்பியும், சாலசும் கேவலியர் பாராளுமன்றத்தைக் கலைக்க அஞ்சிக் கொண்டிருந்தனர். அதுமட்டுமன்றி வன்முறைச் சட்டங்களைப் பயன்படுத்தி நாட்டுக் கட்சியினரையும், பிராடஸ்டென்டு இணங்காதார்களையும் ஒடுக்கிவிட்டு, அரசவையையும், கத்தோலிக்கர்களையும் பாராளுமன்றத்திற்கு அடங்கி இருக்கச் செய்யலாமென டான்பி திட்டமிட்டார். அதன் எதிரொலியாக ஷேவ்ட்ஸ்பரி மத வெறியைக் கிளப்பக் கூடிய விபரீத வழியைப் பின்பற்றினார்.

அந்தச் சூழ்நிலையில்தான் டைடஸ் ஓட்ஸ் (Titus Oates) என்ற பொய்யன், அரசரையும் மற்ற ஆங்கிலிகன் பாராளுமன்

றத்தினரையும் கொல்லக் கூடிய சதியை ஜெசூட்டுகள் செய்து வருகிறார்க ளென்றும், கத்தோலிக்கரான அரசரின் சகோதரர் ஜேம்ஸைச் சார்லஸின் அடுத்த வாரிசு ஆக்குவதே அச் சதிக் கூட்டத்தினரின் நோக்கமென்றும், சொல்லித் திரிந்து வந்தான். அதற்கிடையே, இலண்டன் நீதிபதி சர் எட்மண்டு காட்ஃபிரி (Godfry) என்ற கத்தோலிக்க எதிர்ப்பாளர் மர்மமாகக் கொலை செய்யப்பட, 'போப்பினர் சதி' (Popish Plot) என்ற டைடஸ் ஓட்சின் பொய்யை மக்கள் பெரிதும் நம்ப ஆரம்பித்தனர். ஜெசூட்டுகள் இலண்டன் நகரைக் கொளுத்த முயல்வதாகவும் அரசரைக் கொன்று, நாட்டை ஃபிரான்சுக்குப் பணயம் வைக்கப் போகிறார்கள் என்றும் வதந்திகள் நாட்டிலே பரவ ஆரம்பித்தன. அதன் விளைவாக, நாட்டிலே கத்தோலிக்க எதிர்ப்புத் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. செய்யாத குற்றங்களுக்கும் செய்ய நினைக்காத குற்றங்களுக்கும் பல கத்தோலிக் கர்கள் விசாரிக்கப்பட்டும் விசாரிக்கப்படாமலும் தண்டனை அடைந்தார்கள்.

'நெருப்பில்லாமல் புகையாது' என்பதுபோல் அச் சமயத்தில் ஓர் உண்மை தெரியவந்தது. யார்க் கோமானை ஜேம்ஸின் காரியதரிசி கோல்மன் (Colmen) என்பவர் பதினான்காம் லூயியின் மத ஆலோசகரோடு நடத்திவந்த இரகசியக் கடிதங்கள் பாராளுமன்றத்திற்குத் தெரியவந்தன. அதன்படி, இங்கிலாந்தில் வன்முறையில் மதமாற்றம் செய்ய ஏற்பாடு இரகசியமாகச் செய்யப்பட்டது. ஆகவே, கோல்மன்மீது இராசத்துரோகக் குற்றம் சாட்டி, பாராளுமன்றம் அவரைக் கொலை செய்தது. நாட்டிலே அங்ஙனம் கத்தோலிக்க எதிர்ப்புத் தீ பரவிவர ஃபிரெஞ்சு அரசர் பதினான்காம் லூயியின்மீதும் வெறுப்பு வளர்ந்துவந்தது. அந் நிலைமைக்கு டான்பியே பொறுப்பு என லூயி நினைத்து அவரைக் கவிழ்க்கத் திட்டமிட்டார். சார்ல ஸின் சார்பில் பணம் கேட்டு டான்பி ஃபிரெஞ்ச அரசருக்கு எழுதியிருந்த கடிதங்களை லூயி அம்பலப்படுத்தினர். அதனால், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கும்பலில் டான்பியும் ஒருவ ராக இருந்திருப்பாரோ என்ற ஐயம் பாராளுமன்ற அங்கத்தி னர்களுக்கிடையே எழுந்தது. அரசரின் ஆணைக்குட்பட்டே தாம் அக் கடிதங்களை லூயிக்கு எழுதியதாக டான்பி கூறியும், அதை ஏற்றுக்கொள்ள மறுத்த பாராளுமன்றம் அவரை விசா ரித்துத் தண்டிக்க நினைத்தது. தம்மிடம் விசுவாசமாகப் பணி யாற்றிய அமைச்சரைத் தண்டனையிலிருந்து காக்க வேண்டி சார்லஸ் 1679-ல் கேவலியர் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார்.

கடைசிக்காலம்

அடுத்த இரு ஆண்டுகளில் (1679 - 1681) சார்லஸ் மூன்று குறுகிய பாராளுமன்றங்களைக் கூட்டியிருந்தார். சார்லஸின் அடுத்த வாரிசாக ஜேம்ஸ் (James) பட்டத்திற்கு வருவதைத் தடுக்க எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த விலக்கு மசோதாவின் (Exclusion Bill) மேல் அம் மன்றங்கள் அரசருடன் சண்டையிட ஒன்றன்பின் ஒன்றாகக் கலைக்கப்பட்டன. இருப்பினும், அக் காலத்திலேயே அமைச்சர்களின் பொறுப்பை வற்புறுத்தும் மரபும், தனியார் சுதந்தரத்திற்கேற்ப ஆட்கொணர் சட்டமும் (Habeas Corpus Act) உருவாக்கப்பட்டது.

கேவலியர் பாராளுமன்றத்தைக் கலைத்து அப்போதைக்குத் தம் அமைச்சரான டான்பியை அரசர் காத்தபோதிலும் 1679 ஜனவரியில் கூடிய புதிய மன்றம் அமைச்சரைக் குற்ற விசாரணை செய்து ஐந்து ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டனை அளித்தது. தாங்கள் செய்யும் காரியங்களுக்கு அமைச்சர்கள் பாராளு மன்றத்திற்குப் பொறுப்பாளிகளாவ ரென்பது அதனால் உணர்த் தப்பட்டது. மந்திரிகளின் பொறுப்பு (Ministerial Responsibility) என்ற மரபு அம் மன்றத்தினால் அப்போது எடுத்துக் காட்டப்பட்டது. அடுத்ததாகத் தனி மனிதரின் சுதந்தரத் தைக் காக்க ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் (Habeas Corpus Act) கொண்டுவரப்பட்டிருந்தது (1679). குற்றம் சாட்டப்பட்ட எவரும் விசாரணை யில்லாமல் சிறையில் அடைத்து வைக்கப் படுவதை அச் சட்டம் தடைசெய்தது.

அடுத்து, அம் மன்றங்கள் அரசருடன் பூசலிட்டுக்கொண்ட தைக் கவனிப்போம். காக்தோலிக்க சமயத்தில் பற்றுக் கொண்டவராக இருந்த யார்க் கோமகனை ஜேம்ஸைப் பட்டத் திற்கு அருகதையற்றவராகச் செய்யவேண்டு மென்று ஷாவ்ட்ஸ் பரியும், அவரின் நாட்டுக்கட்சியினரும், முதலாம் பாராளுமன்றத் தில் விண்ணப்பித்துக்கொண்டனர்; அவர்களே விண்ணப்பதாரர் கள் (Petitioners) என அழைக்கப்பட்டனர். அவ் வேற்பாட்டுக்கு ஒப்புக்கொள்ளாத டான்பி கட்சியினர் எதிர்ப்பாளர்கள் (Abhorrers) எனவும் அழைக்கப்பட்டனர்.

தம்முடைய தம்பியான ஜேம்ஸின் மடமையைத் தூற்றிய போதிலும் அவரை மிகுதியாக விரும்பிய சார்லஸ் விண்ணப்ப தாரர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்தார். விண்ணப்ப தாரர்களால் கொண்டுவரப்பட்ட விலக்கு மசோதாவின்மீது காரசாரமான விவாதங்கள் நடத்தப்பட்டபோதே 'விக்' (Whig),

'டோரி' (Tory) என்ற இரு கட்சிப் பெயர்கள் தோன்றின. 'விக்' என்ற ஸ்காட்லாந்திய ஒப்பந்தக்காரரின் பெயரில் விண்ணப்பதாரர்கள் மற்றவர்களால் அழைக்கப்பட, 'டோரி' என்ற அயர்லாந்தின் குற்றவாளிகளின் பெயரில் எதிர்ப்பாளர்கள் அழைக்கப்பட்டனர்.

விலக்கு மசோதாவின்மீது பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்று வந்தபோது, சார்லஸ் தம் சிந்தனையைச் சிதற விடாமல், நிதானத்தை இழக்காமல் அமைதியாகவே இருந்தார். ஜேம்ஸை வாரிசிலிருந்து விலக்க விண்ணப்பித்துக் கொண்ட விக்குகள் தங்களின் செல்வாக்கை நாளாவட்டத்தில் இழந்து விடுவார்களெனச் சார்லஸ் திடமாக நம்பினார். அதற்கேற்ப விக்குகளின் தலைவரான ஷாவ்ட்ஸ்பரி பிரபு, சார்லஸ் இறந்த பிறகு இங்கிலாந்தின் வாரிசுரிமை அரசருக்கும் லூசிவால்ட்டர்ஸ் (Lucy Walters) என்ற சாதாரணப் பெண்ணுக்கும் பிறந்த மான்மவுத் பிரபுவிற்கே (Duke of Monmouth) கொடுக்கப்பட வேண்டுமென ஆர்ப்பரித்தார். முறைப்படி பிறக்காத (Illegitimate) மான்மவுத் பிரபுவை அரசராக்க முயன்ற விக் கட்சியினர் மக்களிடையே செல்வாக்கை இழக்க ஆரம்பித்தனர்.

விலக்கு மசோதாவின்மீது எழுந்த பிரச்சினையின் விளைவாக இரு குறுகிய பாராளுமன்றங்களைக் கலைத்திருந்த சார்லஸ், இலண்டன் நகர் மக்களின் ஆரவாரத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள, தம் அடுத்த பாராளுமன்றத்தை ஆக்ஸ்ஃபோர்டில் நடத்தத் திட்டமிட்டார். ஷாவ்ட்ஸ்பரியும் அவரின் நண்பர்களும் ஆக்ஸ்ஃபோர்டு தெருக்களைக் கடந்து செல்லும் போது, மாணவர்கள் எதிர்கோஷமிட்டு ஆரவாரித்தனர். அரசருக்கு அது புதுத் தென்பைக் கொடுத்திருக்கவேண்டும். கூட்டிய அதே வேகத்தில் தம் மூன்றுவது குறுகிய பாராளுமன்றத்தையும் 1681-ல் சார்லஸ் கலைத்துவிட்டார்.

விக்குகள், மக்களிடையே தங்களின் பொருத்தமில்லா வாதத்தினால் செல்வாக்கை இழந்துவர, அதுவே அவர்களை ஒடுக்கச் சரியான சந்தர்ப்பம் என உணர்ந்துகொண்ட சார்லஸ் அதற்கான காரியங்களில் இறங்கினார். விக்குக் கட்சியினர் செல்வாக்குப் பெற்றிருந்த இலண்டன் நகரைச் சார்லஸ் பழிவாங்க நினைத்து, குவா வாரண்டோ (Writ of Quo Warranto) கட்டளையின் மூலம், அதன் உரிமைப் பத்திரத்தைப் பறித்தார். அக் கட்சியினருக்குச் சாதகமாக இருந்த 66 பரோக்களையும் (bouroughs) அங்ஙனமே தண்டித்தார். விலக்கு மசோதாவின்

முக்கியப் புள்ளியான விக் கட்சித் தலைவர் ஷேவ்ட்ஸ்பரி ஹாலந்து நாட்டிற்கு ஓடி, அடுத்த ஆண்டில் (1683) காலமடைந்தார்.

விக்குகளின்மீது ஆத்திரப்பட்டிருந்த அரசரைக் கொல்லச் சில தீவிர விக்குகள் திட்டமிட்டனர். அரசரும், அவரின் சகோதரரான ஜேம்சும் நியூ மார்க்கட் (New Market) குதிரைப் பந்தயத்தி லிருந்து திரும்பும்போது, ரை ஹவுஸ் (Rye House) என்ற இடத்தில் வழிமறித்துக் கொல்வதாக ஏற்பாடு. ஆனால், அச் சதி வெளிப்பட்டுவிட்டதால் சினம்கொண்ட சார்லஸ் இன்னும் தீவிரமாக விக்குகளை ஒடுக்க முற்பட்டார். லார்டு ரஸ்ஸல் (Lord Russel), அட்மிரல் சிட்னி (Sydney) போன்ற முக்கிய விக் பிரமுகர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். அங்ஙன மாக அரசரின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமெனக் கூறி வந்த உருண்டைத் தலையர்களின் விக் கட்சி அப்போதைக்கு அடக்கப்பட்டிருந்தது.

1681-லிருந்து பதினான்காம் லூயியின் பணமுடிப்பில் திருப்தியடைந்திருந்த சார்லஸ் தாம் சாகும்வரையில் இன்னொரு பாராளுமன்றத்தைக் கூட்டவில்லை. பாராளுமன்றத்தின் ஆதிக் கத்திலிருந்து விடுபட்டுக் கடைசிக் காலத்தில் தம் ஆட்சியை நடத்திய சார்லஸ் 1685-ல் நோய்வாய்ப்பட்டார். முப்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், ஓர்செஸ்டர் சண்டைக்குப் பின் தம்மைக் காத்த ஹட்டல்லெஸ்டன் (Huddleston) என்ற ரோமன் கத்தோலிக்கப் பாதிரியாரிடம் இறுதிச் சடங்குகளைப் பெற்றுக் காலமடைந்தார்.

இரண்டாம் சார்லசின் வெளிநாட்டுக் கொள்கை

எந்த அயல் நாட்டினரின் உதவியு மில்லாமல் இங்கிலாந்தின் ஒருமித்த விருப்பத்தின்படி நடத்தப்பட்ட முன்னிலை மீட்சி யின் காரணமாக அரச பீடத்தில் அமர்ந்த இரண்டாம் சார் லஸ் எந்த அந்நிய அரசருக்கும நன்றிக்கடமைப்பட்டவராக இல்லை. இருப்பினும், ஆரம்பக் காலத்திலிருந்தே ஃபிரெஞ்சு அரசர் பதினான்காம் லூயியினால் சார்லஸ் கவரப்பட்டிருந்தார். தம் தாய் ஹென்ரியாட்டா மேரியாவின் வழியில் ஃபிரெஞ்சு அரசருக்குச் சார்லஸ் உறவினராக இருந்தது ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

அவர் ஆட்சியின் ஆரம்பம் அமைதியாக இருந்தது. போர்ச் சுகல் இளவரசியான ப்ரகான்சா காதரீன (Catherine of Braganza) மணந்து கொண்டதால், சார்லஸுக்குச் சீதனமாக டேஞ்சியரும் (Tangier) பம்பாயும் கிடைத்தன. அத்துடன்

800,000 பவுன்களும் வரதட்சணையாகக் கிடைத்தன. அவ்வுறவு, ஸ்பெயினிடமிருந்து பெற்றிருந்த சுதந்தரத்தைப் போர்ச்சுகல் காத்துக்கொள்ளும்படி இங்கிலாந்தின் உறவைத் தேடிக்கொடுத்தது. அரசியல் உறவு அல்லாமல், இங்கிலாந்தும் போர்ச்சுகலும் வாணிக உறவையும் வளர்த்தன.

பாராளுமன்றத்திலுல் கொடுக்கப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்ட மானியத் தொகை சார்லசுக்கு முழுவதும் கிடைக்காததால் தம் ஆடம்பர ஆட்சியின் காரணமாகச் சார்லசுக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்பட, கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பம்பாயையும் பதினான்காம் லூயிக்கு டன்கிர்க்கையும் விற்றுவிட்டார். சார்லஸ் வாழ்ந்த 17ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அரசர் தமக்குச் சொந்தமான பகுதிகளை விற்பது எங்ஙனம் சாதாரணமாக இருந்ததோ, அதேபோன்று எந்த ஒரு சிறிய காரணத்தாலும் நாடுகளுக்கிடையே பெரும்போர் மூள்வதும் அசாதாரணமாக இல்லை.

இரண்டாம் சார்லஸ் காலத்திலேயே இரண்டாம் டச்சுப் போர் மூண்டது (1664 - 1667). ஆலிவர் கிராம்வெல் காலத்தில் தொடங்கிய முதலாம் டச்சுப் போரை 1654 ஆம் ஆண்டு உடன்படிக்கை முடித்திருந்தபோதும், அவ் விரு நாடுகளுக்கிடையே இருந்த அடிப்படைப் பிரச்சினைகள் ஏதும் நீக்கப்படாமலிருந்தன. கிழக்காசியாவில் ஆங்கிலக் கம்பெனியும் டச்சுக் கம்பெனியும் ஆதிக்கப்போட்டியில் தொடர்ந்து ஈடுபட்டுவந்தன. அதல்லாமல், வட அமெரிக்காவின் கிழக்குக்கரையில் ஆங்கிலக் குடியேற்றங்களுக்கு இடையே டச்சுக்காரர்களால் அமைக்கப்பட்டிருந்த நியூ ஆம்சர்டாம் (New Amsterdam) என்ற குடியிருப்பு ஆங்கிலேயரின் கண்களை உறுத்திவந்தது. முன்னிலை மீட்சியைத் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்ட நாவாய்ச் சட்டத்திலுல் (Navigation Act) டச்சு வியாபாரிகள் அவதிக்குள்ளாகியிருந்தனர். இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்த பியூரிட்டானியர்கள் ஹாலந்தில் இருந்துகொண்டு சூழ்ச்சி செய்துவந்தனரென்ற வதந்தியும் பரவியிருந்தது. மேற்கு ஆஃப்ரிக்காவிலிருந்த கோல்டு கோஸ்ட் (Gold Coast) என்ற பகுதியிலும் அவ் விரு நாடுகளுக்கும் கடுமையான வாணிகப் போட்டியிருந்துவந்தது. ஆகவே, அந்த இரு நாடுகளுக்கும் போர் தவிர்க்கமுடியாததாக இருந்தது.

கடல் சார்ந்த ஆங்கில மக்களிடையே அப் போருக்கு நல்ல வரவேற்பு இருந்தது. வட அமெரிக்காவில் இருந்த டச்சுக் குடியேற்றமான நியூ ஆம்ஸ்டர்டாமை ஆங்கிலேயர்கள் யார்க்

கோமகன் ஜேம்ஸ் தலைமையில் சண்டையிட்டுக் கைப்பற்றி நியூ யார்க் (New York) எனப் பெயரையும் சூட்டிவிடவே, இரண்டாம் டச்சுப் போர் தொடங்கியது.

ஆங்கிலக் கப்பற்படைக்கு யார்க் கோமகனும் இளவரசர் ரூபர்ட்டும் தலைமை தாங்க, அட்மிரல் டி ரூய்ட்டர் (De Ruyter) என்பவர் டச்சுக் கப்பல்களுக்குத் தலைமை தாங்கினர். லோவஸ் டாஃப்ட் (Lowes Toft) என்னு மிடத்தருகில் யார்க் பிரபு டச்சுக் கடற்படையொன்றை முரியடித்திருந்தபோதும், மாங்க் தலைமையில் சண்டையிட்ட இன்னோர் ஆங்கிலக் கப்பற்படை டவுன்ஸ் (Downs) என்னு மிடத்தருகில் தோல்வியுற்றது.

போர் நடந்துகொண்டிருக்குங்கால் இங்கிலாந்தில் பெருங் கொள்ளைநோய் (Great Plague) தோன்றி ஏறக்குறைய 73,000 மக்களின் உயிரைக் குடித்தது. பாராளுமன்றம் ஆக்ஸ்ஃபோர்டு நகருக்கும் அரசவை சாலிஸ்பரிக்கும் அகற்றப்பட்டன. பெருங் கொள்ளை நோயினுல் போரின் நடப்பும் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் 1666 ஆம் ஆண்டில் பெருந்தீ (Great Fire) இலண்டன் மாநகரத்தை அழித்தது. நான்கு நாள்களுக்கு அத் தீ தொடர்ந்து எரிந்தது. ஏராளமான பொருள் நஷ்டத்தை அடைந்திருந்த இங்கிலாந்தினுல் போரில் அதிகக்கவனம் செலுத்த முடியவில்லை. போர்ச் செலவிற்காகப் பாராளுமன்றம் கொடுத்த பணத்தைச் சார்லஸ் வேறு வழியில் விரயமாக்க, அரசுக்கு அதனுல் பணமுடை ஏற்பட்டது. கடற்படை வீரர்களுக்கு ஊதியம் சரிவரக் கொடுக்காததால் அவர்கள் கலகம் செய்யக் கூடிய மனநிலையில் இருந்தனர். அங்ஙனம் இங்கிலாந்திற்குப் பாதகமாயிருந்த அச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு டி ரூய்ட்டர் தம் கப்பல்களைத் தேம்ஸ் நதியில் புகுத்தி மெட்வே (Medway) நதியை அடைந்து அங்கு நங்கூரம் பாய்ச்சிக்கிடந்த பதினறு ஆங்கிலக் கப்பல்களைக் கொளுத்தி நாசமாக்கினர். சாத்தம் (Chatham) கப்பற் கட்டும் தளத்தையும் குண்டுகள் வீசித் தகர்த்தார். தம் அபார வெற்றியின் அடையாளமாக ராயல் சார்லஸ் (Royal Charles) என்னும் ஆங்கிலக் கொடிக் கப்பலைப் பரிசுப் பொருளாக ஹாலந்திற்கு இழுத்துச் சென்று விட்டார்.

கிளாரண்டனின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த அக் கேவல நிகழ்ச்சிகளைக் கேட்ட ஆங்கில மக்கள் கிராம்வெலின் காலத்தை நினைத்துப் பெருமைப்பட்டிருக்கவேண்டும்.

போரின் நடப்பில் இரு நாடுகளும் அதிகக் கவனம் செலுத்த முடியாத நிலையில் சமரசம் ஏற்பட்டது. 1667-ல் கையெழுத்

தாகிய பிரிடா உடன்படிக்கையின்படி, அப் போர் முடிந்தது. நியூயார்க், நியூ ஜெர்ஸி ஆகிய இடங்களை இங்கிலாந்து தன்னிடமே வைத்துக் கொண்டு, தென் அமெரிக்காவிலிருந்த சரினும் (Surinam) என்ற இடத்தையும் பூலருன் (Poolarun) என்ற கிழக்கிந்தியத் தீவையும் ஹாலந்து திருப்பிப் பெற்றுக்கொண்டது. ஆங்கிலக் கால்வாயில் கொடி வணக்கம் செய்யவும் ஹாலந்து ஒப்புக்கொண்டது. ஹாலந்திற்குச் சில சலுகைகள் கிடைக்கும் படி, நாவாய்ச்சட்டம் திருத்தப்பட்டது.

பிரிடா உடன்படிக்கையை ஒட்டி, ஐரோப்பாவில் பேராதிக்கம் பெற முயன்றுவந்த ஃபிரெஞ்சு அரசர் பதினான்காம் லூயியை எதிர்த்து, ஹாலந்து நாட்டுடனும், பின்னர் ஸ்வீடனுடனும் 1669-ல் இங்கிலாந்து முக்கூட்டு உடன்பாட்டை அமைத்திருந்ததை நாம் ஏற்கெனவே கண்டிருந்தோம். இராச தந்திரியான பதினான்காம் லூயி ஆங்கிலோ - டச்சு உடன்பாட்டை முறிக்க, சார்லசுக்குப் பண ஆசை காட்டி டோவர் ஒப்பந்தத்தை இரகசியமாகத் தம் சகோதரரின் மனைவியும் சார்லசின் தங்கையுமான ஹென்ரியாட்டாவின் மூலமாக முடித்துக் கொண்டதையும், நாம் முன்னரே கண்டிருந்தோம். 1670-ல் செய்து கொள்ளப்பட்ட அவ் வொப்பந்தத்தின்படி, இங்கிலாந்தும் ஃபிரான்சும் ஹாலந்தைத் தாக்கி, அதன் குடியரசையும் குடியேற்றங்களையும் பங்குபோட்டுக்கொள்ளவேண்டுமென ஏற்பாடாகியது. ஒரு சிறு பகுதியை ஆரஞ்சு வில்லியம் ஃபிரான்சின் கீழாளாக ஆட்சி செய்யவேண்டு மென்பதும் திட்டமாகும்.

1672-ல் லூயி ஹாலந்தைத் தாக்கிப் போர் தொடுத்த போது, டோவர் ஒப்பந்தத்தின்படி இங்கிலாந்தும் போரிலே இறங்கியது. அதுவே மூன்றும் டச்சுப் போராக (1672-1674) அமைந்தது. லூயியின் படைகள் நிலச் சண்டைகளில் ஈடுபட்டிருக்க, ஆங்கிலக் கப்பற்படை கடற்போருக்குத் தயாரானது. எதிர்பாராதவிதமாக ஹாலந்து ஃபிரெஞ்சுக்காரர்களால் தாக்கப்பட்டபோதும் ஆரஞ்சு வில்லியத்தின் தலைமையில் டச்சுக்காரர்கள் விவேகத்துடனும் வீரத்துடனும் சண்டையிட்டு வந்ததால், நிலப்போர் நீடித்துவந்தது. கடற்போரிலும் டச்சுக்காரர்கள் சளைத்தவர்களாக இல்லை; ஃபிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் ஆங்கிலக் கப்பற்படை சவுத்ஹோல்டு விரிகுடா (Southhold Bay) என்ற விடத்தில் டச்சுக் கப்பல்களை வளைத்துத் தாக்க முயன்ற போது, அது எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. அரசாங்கத்தின் நிதி நிலைமை மோசமாகிக் கொண்டு வர, மேற்கொண்டு போரை நடத்த முடியாத நிலையில் சார்லஸ் இருந்தார். லூயியின் பணமுடிப்பும் சார்லசுக்குப் போதாமல் இருந்தது. நாட்டு

மக்களிடையே ஆரஞ்சு வில்லியத்தின்மீது அபிமானமும் ஆதரவும் நிலவின. சார்லசின் கத்தோலிக்கச் சதித் திட்டத்தை அதற்கிடையே தெரிந்துகொண்ட பாராளுமன்றம் டச்சுப்போரை முடிக்கும்படி அரசரை வற்புறுத்தியது. வேறு வழியில்லாமல் மன்றத்தின் வற்புறுத்தலுக் கிணங்கி அமைச்சர் டான்பியின் மூலமாக 1674 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் (Treaty of Westminister) ஒப்பந்தத்திற்கு இணங்கிச் சார்லஸ் மூன்றும் டச்சுப் போரை முடித்தார்.

டச்சுக்காரர்களோடு உடன்பாடு செய்துகொண்ட சார்லஸ் பதினான்காம் லூயியைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. தாம் சீதனமாகப் பெற்றிருந்த டேன்ஜியரைப் (Tangier) ஃபிரெஞ்சு அரசருக்குச் சார்லஸ் விற்றுப் பணம் பெற்றார். பதினான்காம் லூயியிட மிருந்து தவறுமல் உபகாரப் பணத்தை சார்லஸ் பெற்றுவந்ததால் ஆங்கில அரசர் ஃபிரெஞ்சு அரசர்க்கு அடங்கிய வராக நடந்துகொண்டார். லூயியைக் கலந்தாலோசிக்காமல் சுய விருப்பத்தில் சார்லஸ் செய்து முடித்த ஒரே காரியம் தம் சகோதரியின் மகனும் ஹாலந்தின் அரசருமான ஆரஞ்சு வில்லியத்திற்கும் தம் சகோதரனின் மகளான மேரிக்கும் செய்து வைத்த திருமண ஏற்பாடே. மேற்கூறிய திருமண உறவை முடித்து வைத்த சார்லஸ் ஒரு வளமான வருங்காலத்தை நிர்ணயித்தார் என்பது 1688-ல் தெரிய வந்தது.

தம் மூன்று குறுகிய பாராளுமன்றங்களைக் கலைத்த மன்னர் சார்லஸ் தம் கடைசிக் காலத்தில் (1681 – 1685) லூயியின் பணத்தைப் பெற்றுப் பாராளுமன்றத்தைக் கூட்டாமல் தம் ஆட்சி நடத்தினரென்பதையும் நாம் ஏற்கெனவே பார்த்திருந்தோம்.

ஹாலந்தைப் பொறுத்தவரையில் ஆலிவர் கிராம்வெலின் கொள்கையையே சார்லஸ் பின்பற்றினரென்றாலும் அவர் ஃபிரான்சுக்கு அடங்கிய வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றியதால் இங்கிலாந்துக்கு அது இழிவையே தேடிக் கொடுத்தது.

குடியேற்றங்கள்

கிராம்வெல் காலத்தில் இங்கிலாந்துக்குக் கிடைத்த பெயரும் புகழும் சார்லஸின் வெளி நாட்டுக் கொள்கையினால் கிடைக்கவில்லை யெனினும் அவருடைய காலத்தில் கடல் கடந்து குடியேற்றங்களை அமைப்பதிலும் அயல்நாட்டு வாணிகத்திலும் இங்கிலாந்து முன்னேறி இருந்தது.

17 ஆம் நூற்றாண்டில் வாணிகப் பேரரசை (Mercantile Empire) அமைக்கும் முயற்சியில் ஹாலந்தும் ஃபிரான்சும் தீவிர மாக ஈடுபட்டிருக்க, சார்லசின் இங்கிலாந்திலும் பரபரப்புக் காணப்பட்டது. அதையொட்டி உள்நாட்டுத் தொழிலை விருத்தி செய்தும் காத்தும், குடியேற்ற நாடுகளை (காலனிகள்) அமைத்து அவற்றுடன் நெருங்கிய வியாபாரத் தொடர்பைப் பெறவும் சார்லசின் காலத்தில் அரசினரும், வியாபாரிகளும் விரும்பினர். அதன் விளைவாக மெர்க்கென்டைல் முறை (Mercantile System) என்ற வாணிகத் திட்டம் அவருடைய காலத்தில் உருவாகியது. அம் முறையின்படி நிறையக் காலனிகளைப் பெற்றுத் தங்களின் தாய்நாட்டின் வளத்தைப் பெருக்க ஆங்கிலேயர்கள் விரும்பினர். அது நடைமுறையில் சாத்தியப்பட வேண்டுமென்பதற்காக 1660-ல் முன்னிலை மீட்சியைத் தொடர்ந்து நாவாய்ச் சட்டம் புதுப்பிக்கப்பட்டது. அதன்படி இங்கிலாந்துக்கும் அதன் காலனி நாடுகளுக்கும் இடையே நடந்த வியாபாரம் ஆங்கிலக் கப்பல் களின்மூலமாகவே நடைபெறவேண்டுமென வற்புறுத்தப்பட்ட தல்லாமல் சர்க்கரை, புகையிலை போன்ற அவசியப் பொருள் களை இங்கிலாந்திற்குமட்டும் காலனி நாடுகள் அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது.

17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து பெற்றிருந்த காலனிகளை அடுத்துக் கவனிப்போம். கன்னியரசி எலிஸபத் காலத்திலேயே வர்ஜினியா (Virginia) என்ற குடியேற்றம் வட அமெரிக்காவின் கீழ்க்கரையில் அமைக்கப்பட்டிருந்தும், 1607-ல் முதலாம் ஜேம்ஸ் காலத்திலேயே அக் காலனி முறைப்படி விருத்தி செய்யப்பட்டது. அரசரின் நினைவாக ஜேம்ஸ்டவுன் என்ற முதல் பட்டணம் அமைக்கப்பட்டது. புகையிலைப் பயிர்த் தொழிலில் விருத்தி யடைந்த வர்ஜினியா 1624-ல் அரசின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டது. ஜேம்ஸின் சமயக் கொள்கையில் வெறுப் படைந்து இங்கிலாந்தை விட்டகன்ற பியூரிட்டானியர்கள் 1620-ல் காட்முனைக்கு (Cape Cod) வடக்கே, ப்ளிமவுத் (Plymouth) என்ற புதுப்பட்டணத்தை நிறுவினர். முதலாம் சார்லஸ் காலத்தில் உரிமைப் பத்திரத்தைப் பெற்ற செல்வாக்கு மிகுந்த பியூரிட்டானி யர்கள் 1628-ல் மாசசூசெட் (Massachusette) என்ற காலனியை அமைத்து விருத்தி செய்தனர். சார்லசின் தனி ஆட்சிக் காலத் தில் கடல் கடந்து அமெரிக்காவிற்குச் சமய சுதந்தரத்தைத் தேடி வந்த மற்ற பியூரிட்டானியர்களும் வேறு சில குடியேற்றங்களை அமெரிக்காவில் அமைத்தனர். ஏற்கெனவே நிறுவப்பட்டி ருந்த மாசசூசெட் காலனியுடன், புதியதாக நிறுவப்பட்ட ரோட் தீவு (Rhode Island), கனிக்டிகட் (Connecticut), நியூ ஹாம்

ஷயர் (New Hampshire) காலனிகளையும் சேர்த்து அவற்றினை 'நியூ இங்கிலாந்து' (New England) என அழைத்தனர். தாய் நாட்டின் உறவை அறுத்துக்கொண்டு, சுதந்தரமாகவே நியூ இங்கிலாந்து இருந்துவந்தது.

பால்டிமோர் பிரபுவும் (Lord Baltimore) அவரின் மைந்தரு மான லியனார்டு கேல்வர்ட் (Leonord Calvert) போன்றோரின் முயற்சியால், 1634-ல் மேரிலாந்த் (Mary Land) என்ற காலனி யும் நிறுவப்பட்டது.

அங்ஙனமாக, ஸ்டுவர்டு காலத்தின் முன் பகுதியில் வடக்கே நியூ இங்கிலாந்தும் தெற்கே வர்ஜினியா மேரிலாந்து காலனி களும் அமைக்கப்பட்டிருந்தன. அவை இரண்டிற்கும் இடையே அமைக்கப்பட்டிருந்த டச்சுக் குடியேற்றமான நியூ ஆம்ஸ்டர் டாம் பகுதியையே இரண்டாம் டச்சுப்போர் தொடங்குவதற்கு முன்னர் யார்க் கோமகன் 1664-ல் கைப்பற்றி நியூயார்க் எனப் பெயர் சூட்டியிருந்தார். இரண்டாம் டச்சுப் போர் முடிந்ததும் இங்கிலாந்து நியூ ஜெர்ஸி, டேலாவேர் (Delavere) என்ற இரு பகுதிகளையும் பெற்றது.

வட அமெரிக்காவில் மட்டுமன்றி மேற்கிந்தியத் தீவுகளிலும் (West Indies) இங்கிலாந்து சில இடங்களைப் பெற்றிருந்தது. செயின்ட் கிட்ஸ் (Saint Kitts), அன்டிகுவா (Antiqua) போன் றவைகளோடு கரும்புப் பயிர் சிறப்புப் பெற்றிருந்த பார்படாசும் (Barbados, 1625) கிராம்வெல் காலத்தில் கைப்பற்றப்பட்ட ஜமெய்க்காவும் (Jamaica) ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாக இருந்தன.

1600-ல் நிறுவப்பட்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி (East India Company) 1623-ல் ஹூக்ளி முகத்துவாரத்தில் ஒரு வியா பாரத் தலத்தையும், 1679-ல் செயின்ட் ஜார்ஜ் கோட்டைப் பகுதியையும் பெற்று, இலாபகரமான வியாபாரத்தில் ஈடுபட்டி ருந்தது. அக் கம்பெனிக்கு இரண்டாம் சார்லஸ், தாம் சீதன மாகப் பெற்றிருந்த பம்பாயை விலைக்கு விற்றிருக்க, கிழக்கிந்தி யக் கம்பெனி இந்தியாவில் சிறப்பான நிலையை அடைய ஏது வானது.

தம் காலனிகளோடு புதிய உறவை மேற்கொண்டிருந்த இரண்டாம் சார்லசின் இங்கிலாந்து, குடியேற்ற நாடுகளின் உள் விவகாரத்தில் தலையிடாமலும், தம் வசதிக்காக அவைகள் மீது வரிகளைச் சுமத்தாமலும் நிதானமாக நடந்து கொண்டது.

மேற்கு ஆஃபிரிக்காவுடன் அடிமை வியாபாரத்தில் ஈடுபட 1662-ல் யார்க் கோமகன் தலைமையில் ஒரு வியாபாரக் கம்பெனி

(Company of the Royal Adventurers) நிறுவப்பட்டிருந்தது. அதுவே 1672-ல் ராயல் ஆஃபிரிக்கன் கம்பெனியாகப் புதுப்பிக்கப்பட்டது.

குடியேற்றங்களை அமைப்பதில் சார்லசின் அரசாங்கம் ஆர்வம் காட்டியதை முன்னிட்டே 1663-ல் வர்ஜினியாவிற்குத் தெற்கே கரோலினை (Carolina) என்ற குடியேற்றம் அமைக்கப்பட்டது. வடகரோலினை தென் கரோலினை என, இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த அக் குடியேற்றங்களில், அரசரின் நினைவாக உருவாக்கப்பட்ட சார்லஸ்டன் (Charleston) துறைமுகமே பின்னதின் தலை நகரமாக இருந்தது.

சார்லஸின் அத்தை மகனரான இளவரசர் ரூபர்ட்டின் தலைமையில் 1670-ல் ஹட்சன் வளைகுடா கம்பெனி (Hudson Bay Company) நிறுப்பட, அப் பகுதியிலும் ஆங்கிலேயரின் குடியேற்றம் வளர்ந்தது. சார்லஸின் காலத்தில் நிறுவப்பட்ட கடைசிக் காலனியாக பெனிசில்வேனியா (Pennsylvania) அமைந்தது (1681).

அங்ஙனமாக, பிற்காலத்தில் இங்கிலாந்து ஒரு வர்த்தகப் பேரரசாக விளங்கியதற்கு ஸ்டூவர்டுகளின் காலம், மிகவும் குறிப்பாக இரண்டாம் சார்லஸின் ஆட்சிக்காலம் அமைந்தது. வட அமெரிக்காவில் கீழ்க்கரையில் ஸ்டூவர்டுகளின் காலத்திலே இங்கிலாந்து தன் பன்னிரண்டு குடியேற்றங்களைப் பெற்றிருந்தது; அவற்றில் ஆறு குடியேற்றங்கள் இரண்டாம் சார்லஸின் ஆட்சிக் காலத்திலேயே அமைக்கப்பட்டன என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

(ஆ) இரண்டாம் ஜேம்ஸ் - மாண்புறு புரட்சி (1688)

(Glorious Revolution)

இரண்டாம் சார்லஸ் காலமடைந்ததையொட்டி 1683-ல் பட்டம் பெற்ற அவரின் இளைய சகோதரரும், யார்க் கோமகனுமான இரண்டாம் ஜேம்ஸ் மூன்றரை ஆண்டுகளுக்குள் ஒரு புரட்சி உருவாவதற்குக் காரணராக இருந்தார்.

இரண்டாம் ஜேம்ஸின் குணநலன்களும் குறிக்கோள்களும்

மாறுபட்டிருந்த இரண்டாம் ஜேம்ஸ் முன்னவரின் ஆற்றலையோ, திறமையையோ பெற்றிருக்கவில்லை. தம்மை

எதிர்ப்பவர் · எல்லாருமே கிளர்ச்சிக்காரர்கள் என எண்ணிய ஜேம்ஸ் நண்பர்களை மறந்தவராகவும் எதிரிகளை மறக்காதவராகவும் இருந்தார். வஞ்சக உள்ளமும் பிடிவாத மனப்பான்மையும் கொண்டிருந்த ஜேம்ஸ் தம் சகோதரனுல் 25 ஆண்டுகளாக ஆளப்பட்ட அரசை மூன்று ஆண்டுகளில் இழந்தார்.

தம்முடைய தந்தையின் கொடுமைக்கும் தம் தமையனுரின் தொல்லைகளுக்கும் அவர்கள் காட்டிய சலுகைகளே காரணமெனத் திடமாக நம்பிய ஜேம்ஸ் தம் ஆட்சியை 1685-ல் தொடங்கிய போது நாடு அமைதியாகவே இருந்தது. அரசரின் ஆதரவாளர்கள் நிறைந்திருந்த பாராளுமன்றத்தைக் கூட்டுவதன்மூலம் இரண்டாம் ஜேம்ஸ் தம் ஆட்சியை ஆரம்பித்தார். இரண்டாம் சார்லசுக்குக் கொடுக்கப்பட்டுவந்த மானியத்திற்கு மேலாகவே 400,000 பவுன்களைப் புது அரசருக்குக் கொடுக்க அப் புது மன்றம் முன்வந்ததிலிருந்து அரசருக்கும், மன்றத்திற்கும் தகராறு ஏற்பட வாய்ப்பே இல்லாமலிருந்தது. அரசரும் பாராளுமன்றமும் நெருங்கிச் செயல்படுவதற்கேற்ப ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அதுவே மான்மௌத் பிரபுவால் (Duk of Monmouth) ஏற்படுத்தப்பட்ட கலகமாகும்.

தம் தந்தை சார்லஸ் இறந்தபோது மான்மௌத் பிரபு ஹாலந்தில் இருந்து வந்தார். தம் சார்பிலே விக்குகள் கிளர்ச்சி செய்வார்களென நம்பியிருக்க, ஜேம்ஸ் பட்டத்தைப் பெற்றது அவருக்கு அதிர்ச்சியை அளித்தது. இருப்பினும் தாம் இங்கிலாந்துக்குத் திரும்பினுல், அந் நாட்டு பிராடஸ்டென்டு பிரஜைகள் தம் சார்பிலே அரசரை எதிர்த்துக் கலகம் செய்வார்களென நம்பி நாடு திரும்பினர். வில்ட் ஷையர் (Wiltshire), டோர்செட் (Dorset), சோமர்செட் (Somerset) பகுதிகளில் சில ஆதரவாளர்களே அவரை வரவேற்றனர். அவர்களின் உதவியினுல் அரசைக் கைப்பற்ற முடியுமென நம்பிய மான்மௌத் ஆயுதப் பரிட்சை நடத்த முயன்றபோது செட்ஜ்மூர் (Sedgemoor) சண்டையில் அரசரின் படைகளால் தோற்கடிக்கப்பட்டார். போர்க்களத்திலிருந்து தப்பிவிட்ட மான்மௌத் பின்னர்க் கைப்பற்றப்பட்டு டைபான் (Tyburn) என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார். தப்பிவிட்டிருந்த கலகக்காரர்களை ஜேம்ஸின் ஆணைப்படி கர்னல் கிர்க் (Kirke) என்பவர் மிருகத்தனமாக வேட்டையாடிக் கொன்ருர். எஞ்சியிருந்தவர்களை நீதிபதி ஜெஃப்ரி (Jeffrey) தம் கொடூர நீதிமன்றத்தால் (Bloody Assires) பயங்கரமாக, அரசரின் ஆணைக்கேற்பத் தண்டித்தார். மிக எளிதாக அடக்கப்பட்டுவிட்ட அக் கலகம் ஜேம்ஸைப் பொறுத்தவரையில் கொடுங்

கோல் ஆட்சியை ஆரம்பிக்க அவரைத் தூண்டிவிட்டது. கலகம் அடக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிக நம்பிக்கையைக் கொண்டு விட்ட ஜேம்ஸ் தமக்கு இனி எதிர்ப்பே இருக்காது என நினைத் தார். மான்மௌத் கலகத்திற்குப் பின்னரும் 30,000 பேர் கொண்ட படையை இலண்டனுக்கருகே ஹவன்ஸ்லோஹீத் (Hounslow Heath) என்ற இடத்தில் ஜேம்ஸ் முகாமடித்து வைத் திருந்தார். அமைதியான காலத்தில் அத்தனை பெரும்படைக்கு அவசியமில்லாமலிருந்தும் ஜேம்ஸ் அதனைக் கலைக்க மறுத்துவர அவரின் நோக்கத்தில் பாராளுமன்றத்திற்குச் சந்தேகம் ஏற் பட்டது. படையினரைக் கலைக்கவேண்டு மென்றும், அதுவரை முழு மானியத் தொகையைக் கொடுக்க மறுக்கப் போவதாகவும் பாராளுமன்றம் மிரட்டியது. தம் ஆணைகளை நிறைவேற்றப் படைகளும் தமக்குப் பணமுடிப்புக் கொடுக்கப் பதினைந்தாம் லூயியும் இருக்க, ஜேம்ஸ் பாராளுமன்றத்தின் தயவை நாட வேண்டிய அவசிய மில்லாம லிருந்தது. ஆகவே, தன்னாட்சி நடத்த விரும்பிய ஜேம்ஸ் அம் மன்றத்தை 1685 நவம்பரில் தள்ளி வைத்தார்.

தம்மிடம் வாக்குவாதம் செய்வதற்குப் பாராளுமன்றம் கூடி யில்லாத அந்த நேரத்தில் தாம் நினைத்ததைச் செய்ய முடியுமென இரண்டாம் ஜேம்ஸ் நம்பியதே அவரின் அழிவுக் காலத்திற்கு ஆரம்பமாக அமைந்தது. டோரிக் கட்சியினர் தம்மிடம் காட்டிய பரிவைத் தம் தெய்வீக உரிமைக் கொள்கைக்கு அவர்கள் காட்டிய ஆதரவாக ஜேம்ஸ் தவறுகப் புரிந்துகொண்டார். பதினைந்தாம் லூயியினுல் ஃபிரான்சில் அமைக்கப்பட்டிருந்த வரம்பற்ற முடியாட்சியைப்போல் (Absolute Monarchy) இங்கிலாந்திலும் அமைக்க இரண்டாம் ஜேம்ஸ் எண்ணியது அவரது பேதைமையை எடுத்துக் காட்டியது. இங்கிலாந்தின் அரசியல் நிலைமையை அவர் புரிந்துகொண் டிருப்பாரெனின், ஜேம்ஸுக்கு அந்த எண்ணம் வந்திருக்காது. ஃபிரெஞ்சு பிராடஸ்டென்டுகளுக்குச் சமயச் சுதந்தரம் அளித்த நான்டிஸ் ஆணைகளைப் (Edict of Nantes) பதினைந்தாம் லூயி 1685-ல் தள்ளுபடி செய்தபோது, பகிரங்கமாக ஜேம்ஸ் அதை ஆதரித்தார். அது கத்தோலிக்க சமயத்தில் அவருக்கிருந்த பற்றினை அப்பட்டமாகப் புலப்படுத்தியபோதிலும் அச் சமயத்தை இங்கிலாந்திலும் அவர் புகுத்த முயலுவார் என நாட்டினர் எண்ணும் அளவுக்கு ஜேம்ஸ் நடந்துகொண்டது அவரின் அறியாமையைக் காட்டியது. ஜேம்ஸின் குறிக்கோள்கள் அப்படி இருப்பினும், அவைகளை அவர் செயல்படுத்த முயன்ற முறைகளே அவரின் வீழ்ச்சிக்குக் காரணங்களாயின.

புரட்சிக்குச் சாதகமான சூழ்நிலைகள்

கத்தோலிக்கர்களுக்குச் சலுகைகள் காட்டவேண்டி ஜேம்ஸ் தம் சட்ட விலக்கு அதிகாரத்தைப் (Despensing Power) பிரயோகிக்க முன்வந்தார். குறிப்பிட்ட எந்தத் தடைச் சட்டத்திலிருந்தும் தம் அதிகாரத்தின்கீழ் எவருக்கும் விலக்கு அளிக்கத் தமக்கு உரிமை யுண்டு என ஜேம்ஸ் பறைசாற்றிக் கொண்டார். சிவில், இராணுவப் பதவிகள் கத்தோலிக்கர்களுக்குக் கிடைக்க முடியாதபடி தடையாக இருந்த இரண்டாம் சார்லஸ் காலத்தில் (1673) கொண்டுவரப்பட்ட சோதனைச் சட்டத்தை (Test Act) ஜேம்ஸ் விலக்கினார்.

விலக்கு மசோதாவைத் தோற்கடித்துத் தாம் பட்டத்திற்கு வர உதவியிருந்த பல டோரிகளின் பதவிகள் பறிக்கப்பட்டு அவ்விடங்களில் கத்தோலிக்கர்கள் அமர்த்தப்பட்டனர். கிளாரண்டன் என்பவர் நீக்கப்பட்டுக் கத்தோலிக்கரான ட்ரிகான்னல் என்பவர் அயர்லாந்தின் ஆளுநராக அமர்த்தப்பட்டார். ரோசெஸ்டர் (Rochester) என்பவர் நீக்கப்பட்டு எர்ல் சுண்டர்லந்த் (Earl of Sunderland) என்ற கத்தோலிக்கர் அமைச்சராக ஆக்கப்பட்டார். பாராளுமன்றத்திலும் போர்க்களத்திலும் அரசருக்காகப் போராடிய ஃபிஞ்ச் பெர்டீஸ் (Finch Berties), பெகாட் (Bagot) போன்ற குடும்பத்தினரும் இலண்டன் நகர்த்தலைவர்களும் ஷெரிப்புகளும் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, கத்தோலிக்கர்கள் அமர்த்தப்பட்டனர். கத்தோலிக்கர்கள் படையிலும், பிரிவிகவுன்சிலிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆக்ஸ்ஃபோர்டு கிருத்துவக் கல்லூரியின் தலைவராகக் (Dean) கத்தோலிக்கர் அமர்த்தப்பட்டார். கத்தோலிக்கரை அவமதித்ததற்காகக் கேம்பிரிட்ஜ் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாக்டலின் (Magdalen) கல்லூரி உறுப்பினர்கள் கத்தோலிக்கரைத் தங்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொள்ள மறுத்ததால், 25 உறுப்பினர்கள் ஜேம்ஸால் வெளியேற்றப்பட்டு அப் பதவிகள் கத்தோலிக்கருக்குத் தரப்பட்டன. பிராடஸ்டென்டு எதிர்ப்பாளர்களை அடக்க மறுத்த குற்றத்திற்காகக் காம்ப்டன் (Compton) என்ற இலண்டன் பிஷப் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். பல திருச்சபைக் கோயில் மானியங்களில் கத்தோலிக்கர்கள் நியமிக்கப்பட்டனர். அங்ஙனம் ஆங்கில மதகுருக்களின் உடைமைகளையும் உரிமைகளையும் தாக்கத் தொடங்கியதல்லாமல், திருச்சபையைப் பணியச் செய்யத் தமக்கு உதவும் படியாக உயர் ஆணை நீதிமன்றத்தையும் ஜேம்ஸ் கூட்டினர்.

தம் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுமென்ற வேகத்தில் 1687-ல் முதலாம் சலுகை அறிக்கையை (First Declaration of Indulgence) ஜேம்ஸ் அறிவித்தார். கத்தோலிக்கர்களுக்கும் இணங்காதார்களுக்கும் எதிரான சட்டங்களையெல்லாம் விலக்கி, அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் பதவிகளைக் கொடுக்கச் செய்யவே ஜேம்ஸ் அந்த அறிக்கையை வெளியிட்டார். இணங்காதாருக்கும் அந்த மன்னிப்பு அறிக்கையைச் சலுகை காட்டிய போதும் கத்தோலிக்கர்களும் அச் சலுகைகளைப் பெறும்வரை அவர்கள் விரும்பவில்லை யாதலால் அதை இணங்காதார் வரவேற்கத் தயாராக இல்லை. உண்மையில் கத்தோலிக்கருக்குச் சலுகை காட்டவேண்டிய ஜேம்ஸ் அவ் வறிக்கையை வெளியிட்டிருந்தார். ஆகவே, இணங்காதாரின் எதிர்ப்பை அவர் பொருட்படுத்தவில்லை.

தம் முதல் மன்னிப்பு அறிக்கை மூலமாகத் தடைச்சட்டங்களை நீக்கி, கத்தோலிக்கர்களுக்குச் சமயப் பொறையையும் குடியுரிமையையும் ஜேம்ஸ் கொடுத்ததால் தம் நாட்டு மக்கள் பலரின், குறிப்பாக டோரிகளின் ஆதரவை ஜேம்ஸ் இழக்க வேண்டியவராஞர். இரண்டாம் சார்லசை விசுவாசத்துடன் ஆதரித்த டோரிக் கட்சியின் தலைவர்கள் வெளிப்படையாகவே ஜேம்ஸை எதிர்க்கத் தயாராயினர். பல்கலைக்கழகங்கள்மீது ஜேம்ஸால் திணிக்கப்பட்ட கத்தோலிக்க ஆதிக்கம் ஆங்கிலத் திருச்சபையினரைக் கலங்கச் செய்திருந்தது. அங்ஙனமாகத் தமக்கு நண்பர்களாக இருந்தவர்களை-இருக்க வேண்டியவர்களை-ஜேம்ஸ் கண்மூடித்தனமான சமயக் கொள்கையினால் விரோதிகளாக்கிக்கொண்டார்.

அச் சந்தர்ப்பத்திலேயே, அவரைப் பட்டத்திலிருந்து விலக்கி, ஜேம்ஸின் மூத்த மனைவியின் முதல் மகளும், ஹாலந்தின் அரசர் ஆரஞ்சு வில்லியத்தின் மனைவியுமான மேரியை (Mary) அரசியாக்கக்கூடிய திட்டம் யோசிக்கப்பட்டது. மான்மௌத் பிரபு கொல்லப்பட்டபின் பிராடஸ்டென்டு தம்பதிகளான மேரியையும் வில்லியத்தையும் அடுத்த வாரிசுகளாக ஏற்றுக்கொள்ள விக்குகளும் (Whigs) தயாராக இருந்தனர்.

தமக்கெதிராக ஒரு கொந்தளிப்பு தயாராகிக் கொண்டிருக்கின்றதெனத் தெரிந்தும், புரிந்து கொள்ளாதவராக இருந்த இரண்டாம் ஜேம்ஸ் 1668-மே மாதத்தில் தம் இரண்டாவது சலுகை அறிக்கையை (Second Declaration of Indulgence) வெளியிட்டார். அதன்படி, ரோமக் கத்தோலிக்கர்களுக்கும் இணங்காதார்களுக்கும் எதிராக இருந்த தடைச் சட்டங்கள் விலக்கப்பட்டன.

அவர்களுக்குப் பதவிகளை வழங்க உரிமையளிக்கும் அரசரின் அந்த மன்னிப்பு அறிக்கை கோயில்களின் பிரசங்க மேடைகளிலிருந்து குருமார்கள் படிக்கவேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆங்கிலிகன் மத குருமார்களை இழிவுபடுத்தவேண்டுமென்ற எண்ணத்திலும் பிறப்பிக்கப்பட்ட அவ் வறிக்கை, சட்டத்திற்கு முரணானது என்று ஜேம்ஸுக்குத் தெரிந்திருந்தும் அவரின் எதேச்சாதிகார எண்ணம் அதை அவர் உணரத் தடையாக இருந்தது. பணிய மறுத்தவர்களின் பதவிகள் உயர் ஆணை நீதி மன்றத்தில் பறிக்கப்பட்டுவிடும் என்ற நிலை நிச்சயமாக இருக்க, கான்டர்பரியின் ஆர்ச்பிஷப்பான (Archibishop of Canterbury) சான்க்ரோஃப்ட்டின் (Sancroft) தலைமையில் ஏழு பிஷப்புகள் அந்த ஆணையை எதிர்த்து அரசருக்கு மனுச் செய்தனர். ஆனால், அரசாங்கத்தின்மீது அவதூறான பிரசுரம் வெளியிட்டதாக அந்தப் பிஷப்புகள் குற்றம் சாட்டப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். சிறைச்சாலையின் காவலர்களை அவர்களின் முன் மண்டியிட்டு ஆசி பெற்றனர் என்பதிலிருந்து அந்தப் பிஷப்புகளின் புகழ் எந்த அளவுக்கு மக்களிடையே அப்போது பரவியிருந்தது என்பது தெரியவரும். விசாரிக்கப்பட்ட அந்த ஏழு பிஷப்புகள் சான்றுண்மைத் தீர்ப்புக் குழுவினால் நிரபராதிகளாக 1688 ஜூன், 30-ல் விடுதலை செய்யப்பட்டனர்.

பிஷப்புகளின் வழக்கும் தீர்ப்பும் ஜேம்ஸின் கொடுங்கோல் ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. அரசரின் செல்வாக்குக்கு அது பாதகமாகவும் அமைந்தது. விடுவிக்கப்பட்ட பிஷப்புகள் சென்ற வழியில் மக்கள் மண்டியிட்டுத் தொழுதனர். இலண்டன் மாநகர் அவர்களின் விடுதலையை வாணவெடிகளோடு கொண்டாடியது. ஹவுன்ஸ்லோ பாசறையில் இருந்த வீரர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அந்தச் சூழ்நிலையில் 1-7-1688-ல் ஜேம்ஸின் இளைய மனைவியான மொடினா மேரிக்கு (Mary of Modena) ஆண்பிள்ளை பிறந்தது. இளவரசர் பிறந்துவிட்டதால் கொடுங்கோலாட்சி நடத்தும் இரண்டாம் ஜேம்ஸ் காலமடைந்தால் அடுத்து பிராடஸ்டென்டு மேரியோ (ஜேம்ஸின் மூத்த மகள்) அவளின் சகோதரியான இளவரசி ஆனே (Anne) பட்டத்திற்கு வரமுடியாதென்ற புதிய நிலை ஏற்பட்டது. கத்தோலிக்கராக வளர்க்கப்படப்போகும் வேல்ஸ் இளவரசரே, ஜேம்ஸின் அடுத்த வாரிசாக அரியணை ஏறுவார் என்பது எல்லாருக்கும் நிச்சயமாகத் தெரிந்தது. ஆகவே, இரண்டாம் ஜேம்ஸின் கத்தோலிக்க சார்பான கொள்கை அவரின் சந்ததியார் காலத்திலும் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசரை எதிர்க்கக் கூடாதெனக் கொள்கை கொண்டிருந்த டோரிக் கட்சியின் சில

முக்கியத் தலைவர்கள் அப்போது விக்குகளோடு (Whigs) சேர்ந்து ஆரஞ்சு இளவரசருக்கு (William of Orange) அழைப்பு அனுப்ப முன்வந்தனர்.

டோரி தலைவர்களான டேன்பி (Danby), பிஷப் காம்டன் (Bishop Compton) போன்றவர்களும் விக்குகளின் தலைவர்களான ஹென்றி சிட்னி (Henry Sidney), அட்மிரல் ரசல் (Russell) போன்றோர்களும் கையெழுத்திட்டு அட்மிரல் ஹெர்பர்ட் (Herbert) என்பவரிடம் அழைப்பிதழைக் கொடுத்து ஆரஞ்சு வில்லியத்திற்கு அனுப்பிவைத்தனர். ஆங்கிலேயர்களின் உரிமைகளையும் சமயத்தையும் காக்கும்பொருட்டுப் படைகொண்டு இங்கிலாந்திற்கு வரும்படி ஜேம்ஸின் மருமகனும், மேரியின் கணவருமான ஆரஞ்சு வில்லியம் அழைக்கப்பட்டிருந்தார்.

ஆரஞ்சு வில்லியம் அவ் வழைப்பை ஏற்று இங்கிலாந்திற்குப் படைகொண்டு செல்ல முயற்சிகள் செய்துவந்த நேரத்தில் ஜேம்சுக்கு உதவும் வழியில் ஹாலந்தைத் தாக்கி, ஆரஞ்சு வில்லியத்தின் படையெடுப்பைத் தவிர்க்கத் தாம் தயாராக இருப்பதாகப் பதினான்காம் லூயி அறிவித்தபோது ஜேம்ஸ் அதை மறுத்துவிட்டார். நாட்டு மக்களின் வெறுப்பிற்கு ஏற்கெனவே ஆளாகி இருந்த ஜேம்ஸ், பதினான்காம் லூயியின் உதவியைப் பெறுவதால் மேலும் அதிக வெறுப்பிற்கு ஆளாக வேண்டுமென்ற பயத்தில் லூயியின் (Louis) உதவி மிகத் தேவையாக இருந்த அந்த நேரத்தில் வெளிப்படையாக மறுத்துவிட்டார்.

சாதகமான கடல்காற்றின் உதவியால் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து தம் 15,000 வீரர்களுடன் ஆரஞ்சு வில்லியம் இங்கிலாந்தை அடைந்து டீவான்ஷையரில் (Devonshire) இருந்த டோர்பே (Torpay) என்ற இடத்தில் கரை இறங்கினார். 4000 ஆங்கிலேயர்களைத் தவிர வேறு ஐரோப்பிய இனத்தினர்களான டச்சு, ஸ்வீடிஷ், ஜெர்மானிய வீரர்களும் அப் படையிலிருந்தனர். வில்ட்ஷயர் (Wiltshire) என்னுமிடத்தை நோக்கி வில்லியத்தின் படைகள் நகர, வழி எல்லாம் அதற்கு வரவேற்புக் கிடைத்தது. சுதந்தரப் பாராளுமன்றத்தைக் கூட்டி நாட்டின் சிக்கல்களை அதன் முடிவிற்கு விடப்போவதாக ஆரஞ்சு வில்லியம் அறிவித்ததைத் தொடர்ந்து மேலும் அவருக்கு ஆதரவு அதிகரித்தது. பிராடஸ்டென்டுகளுக்கு எதிராகக் கத்தோலிக்கர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக அயர்லாந்தியரும் எனப் பிளவு பட்டுக்கிடந்த ஜேம்ஸின் படை, சேலிஸ்பரி (Salisbury) என்ற இடம்வரை அரசரால் அழைத்துச் செல்லப்பட்டது. ஆனால், ஜான் சர்ச்சில் (John Churchil) போன்ற ஜேம்ஸின் படைத்தலைவர்கள் வில்லியத்

துடன் சேர்ந்துகொண்டதால் வில்லியத்துடன் போர் செய்யத் துணியாத ஜேம்ஸ் இலண்டன் திரும்பிவிட்டார். அவருடைய பிரிய மகளான இளவரசி ஆனும், வில்லியத்தின் முகாமிற்குச் சென்றுவிட்டதை உணர்ந்த ஜேம்ஸ் 'ஆண்டவன் என்னைக் காக்க வேண்டும், என் பிள்ளைகளும் என்னைவிட்டு விலகுகிறார்களே' என உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார். நாள்தோறும் வில்லியத்திற்குப் பலம் அதிகரித்துக்கொண்டே வந்தது. நிலைமை மீறிவிட்டது என்பதை உணர்ந்த ஜேம்ஸ் தம் இளைய மனைவியையும் பிறந்திருந்த இளவரசனையும் ஃபிரான்சிற்கு அனுப்பிவிட்டுத் தாமும் தப்பிஓட முயன்றார். ஆனால், கென்ட் பகுதியிலுள்ள ஃபேவர்ஷேம் (Feversham) என்ற இடத்தில் ஜேம்ஸ் கண்டுகொள்ளப்பட்டுப் பிடிபட்டார். இருப்பினும், பெருந்தன்மை கொண்ட ஆரஞ்சு வில்லியம் டச்சு வீரர்களின் உதவியுடன் ஜேம்ஸை ரோசெஸ்டருக்கு (Rochester) அனுப்பிவைக்க, அங்கிருந்து 1688 டிசம்பரில் ஜேம்ஸ் ஃபிரான்சிற்குத் தப்பி ஓடிவிட்டார். பாரிஸ் நகரை அடைந்த ஜேம்ஸுக்கு லூயி, அரசருக்குரிய வரவேற்பைக் கொடுத்ததுமட்டுமல்லாமல், அவரும் குடும்பத்தினரும் தங்குவதற்குச் செயின்ட் ஜெர்மெயின்ஸ் (St. Germaine) அரண்மனையையும் ஆண்டுச் செலவுக்கு 40,000 பவுன்களையும் கொடுக்க ஏற்பாடு செய்தார். இங்கிலாந்தின் அரியாசனத்திலிருந்து அகன்றுவிட்ட இரண்டாம் ஜேம்ஸ் மறுபடியும் இங்கிலாந்திற்குத் திரும்பவில்லை. தம் கொடுங்கோலாட்சியாலும் குறுகிய சமயக் கொள்கையினாலும் நாட்டின் எதிர்ப்பைக் கிளப்பி இங்கிலாந்தை விட்டு ஜேம்ஸ் ஓடிவிட்டதால், நாட்டிலே அரசரில்லாத நிலை ஏற்பட்டது. தாம் இங்கிலாந்து நாட்டின் சிக்கலுக்குத் தீர்வு காணும் வழியைப் பாராளுமன்றத்தின் யோசனைக்கு விடப்போவதாகக் கொடுத்திருந்த உறுதியின்படி ஆரஞ்சு வில்லியம், சில முக்கியத் தலைவர்களைக் கலந்தாலோசித்துப் புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கென ஏற்பாடுகளைச் செய்தார்.

அடுத்து நடந்த பொதுத் தேர்தலை ஒட்டி 22-1-1689-ல் பிரத்தியேகப் பாராளுமன்றம் (Convention Parliament) என்ற புதிய மன்றம் கூடியது. நாட்டின் அப்போதைய முக்கியப் பிரச்சினையான அரச வாரிசுரிமைபற்றி ஒரு தீர்வு காண அம்மன்றம் செயல்பட ஆரம்பித்தது. விக்குகளும் டோரிகளும் தங்களின் கொள்கை வேறுபாடுகளை மறந்து அரசுரிமைபற்றிய ஏற்பாட்டைச் செய்வதில் ஒருமுகமாகச் செயல்பட ஆரம்பித்தனர்.

'ஜெசூட்டுகள் மற்றக் கயவர்களின் தூண்டுதலால் நாட்டின் அரசியலமைப்பையும், அடிப்படைச் சட்டங்களையும் நாசம்

செய்ய முனைந்த இரண்டாம் ஜேம்ஸ் தாமாகவே பட்டத்தைத் துறந்து, நாட்டைவிட்டு வெளியேறியதால் அரியணை வெற்றிட மாக இருக்கிறது' என்ற ஒரு தீர்மானத்தை அம் மன்றம் நிறை வேற்றிவிட்டு மேற்கொண்டு செய்யவேண்டிய ஏற்பாட்டைக் கவனிக்கத் தொடங்கியது.

தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்திருந்த சில டோரிக் தலைவர்கள், ஜேம்ஸைப் பட்டத்திலிருந்து விலக்கக் கூடாதென்றும் அவரையே மீண்டும் நாட்டுக்கு திரும்பி வரச் சொல்லி நல்லாட்சி செய்ய வற்புறுத்தவேண்டும் என்றும் கோரி னர்கள். திரும்பவும் ஆட்சியை ஜேம்ஸ் பெறுவாராயின் சட்டங் களுக்குக் கட்டுப்பட்டு ஆள்வார் என நிச்சயமாகச் சொல்லமுடி யாத காரணத்தினால் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. ஜேம்ஸின் சார்பிலே ஆரஞ்சு வில்லியம் ரீஜெண்டாக (Regent) இங்கிலாந்தில் ஆளலாம் என்ற இன்னொரு யோசனையும் தெரிவிக் கப்பட்டது. அங்ஙனம் செய்யப்பட்டால், எந்த நேரத்திலும், இங்கிலாந்தின் அரியாசனத்தின்மீது ஜேம்ஸ் உரிமை கொண் டாடக் கூடும் என்ற பயத்தில் அதுவும் தள்ளப்பட்டது.

'அடுத்த இங்கிலாந்து அரசன் யார்?' என்ற அந்த முக்கிய விவாதத்தில் பல வாரங்கள் உருண்டோடின. நாட்டிங்காம் பிரபுவின் (Lord Nottingham) யோசனைப்படி, ஜேம்ஸின் மூத்த மகளான மேரியை அடுத்த வாரிசாக ஆக்குவ தென்றும், ஆட்சி அதிகாரங்களை அவளின் கணவரான வில்லியத்திற்குக் கொடுப்ப தென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதுவரையில் வாரிசு பிரச் சினையில் கலந்து கொள்ளாம லிருந்த வில்லியம், அவ் வேளையில் பாராளுமன்றத்தின் சில முக்கியத் தலைவர்களைக் கூப்பிட்டனுப்பி, பாராளுமன்றம் ஜேம்ஸுக்கோ, மேரிக்கோ பட்டம் கொடுக்கப் படுவதைத் தாம் தடுக்கப் போவதில்லை யென்றும், ஆயின் அவ் விருவரில் எவரின் சார்பிலும் ரீஜண்டாகத் (regent) தாம் ஆட்சி நடத்த முடியாதென்றும் அந் நிலையில் ஹாலந்துக்குத் திரும்பு வதைத் தவிரத் தமக்கு வேறு வழி யில்லையென்றும் அப்பட்டமாக எடுத்துச் சொன்னார்.

வில்லியம் ஹாலந்துக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டால் மேரி இங்கிலாந்தில் தங்கியிருக்க மறுக்கலாம் என எதிர்பார்க்கப் பட்டது. ஜேம்ஸையும் திருப்பி அழைக்க முடியாது; மேரியையும் இங்கிலாந்தில் தங்கியிருக்க வற்புறுத்த முடியாது; வில்லியம் ஹாலந்துக்குப் போவதையும் தடுக்க முடியாது; அந் நிலையில் பிரத்தியேகப் பாராளுமன்றம் வில்லியம் மேரியை வைத்து இணை அரசை இங்கிலாந்தில் ஏற்படுத்த முடிவெடுத்தது.

சட்டவரம்பிற்குட்பட்ட ஆட்சியினை நாட்டில் அமைக்க விரும்பிய பாராளுமன்றம் அதற்கான நிபந்தனைகள் அடங்கிய பொது உரிமை அறிக்கையைத் (Declaration of Rights) தயாரித்து வில்லியத்திற்கும் மேரிக்கும் சமர்ப்பித்து அவர்களை ஒப்புக் கொள்ளச் செய்தது. தங்களின் ஒப்புதலை அப் பத்திரத்திற்கு அவர்கள் அளித்த பின்னர் இங்கிலாந்தின் அரசராக வில்லியமும் அரசியாக மேரியும் அறிவிக்கப்பட்டார்கள்.

ஜேம்ஸின் மூத்த மகளான மேரியை அரசியாக்கியதன்மூலம், வம்சவாரி உரிமையைப் (Hereditary Rights) பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டபோதும் வில்லியத்தை அரசராக்கியதன்மூலம் தெய்வீக வழி உரிமைக் கோட்பாட்டைப் பாராளுமன்றம் புறக் கணித்திருந்தது. ஜேம்ஸுக்குப் பிறந்திருந்த மகன் உயிரோ டிருந்தும்கூட, பாராளுமன்றம் மேரியையும், வில்லியத்தையும் இணை அரசினர்களாக அறிவித்தது அக் கால அரசியல் புதுமை யாக இருந்தது.

சமய அரசியல் பிளவுகள் இல்லாமல் விக், டோரி (Whig and Torry) என்ற இரு கட்சியினரும் அப் பாராளுமன்றத்தின் மூல மாகச் செய்த அந்த ஏற்பாடே மாண்புறு புரட்சியாக அழைக்கப் பட்டது.

அப் பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்பட்ட பொதுஉரிமை அறிக்கை மன்னரின் வரம்பற்ற ஆட்சியை ஒழித்துச் சட்டத்திற் குட்பட்ட மன்னராட்சியைக் (Constitutional Monarchy) கொண்டு வந்தது.

முதலாம் ஜேம்ஸ் தம் பியூரிட்டானிய அங்கத்தினர்களைச் சந்தித்த காலத்திலிருந்து (1603) தொடர்ந்துவந்த அரசப் பாராளுமன்றத்தின் போராட்டம் 1689-ல் பாராளுமன்றத்திற்கு வெற்றியாக முடிந்தது.

11. புரட்சிக்குப்பின் இங்கிலாந்து

(அ) மூன்றும் வில்லியம் (1689 - 1702)

உள்நாட்டுப் போரோ, படுகொலையோ, விலக்காணைகளோ, மற்ற அரசியல் பூசல்களோ இல்லாமல் இங்கிலாந்தின் அரசியல் அமைப்பிலே மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த 1688-ன் மாண்புறு புரட்சியினைத் தொடர்ந்து அந்த நாட்டின் இணை அரசினர்களாக (Joint Rulers) வில்லியமும் மேரியும் பிரத்தியேகப் பாராளுமன்றத்தின் மூலமாக முடி சூட்டப்பட்டனர். வில்லியமும் மேரியும் சட்ட வரம்பிற்குட்பட்ட ஆட்சியை நடத்த முற்பட்டதால் அவர்களே இங்கிலாந்தை ஆண்ட அரசியல் சட்ட வரம்பிற்குட்பட்ட (First Constitutional Monarch) முதல் மன்னர்களாக விளங்கினர்.

மேரியின் கணவரான வில்லியத்திடம் ஆட்சிப் பொறுப்புகள் இருந்தமையால் அவரைப்பற்றியே நாம் அதிகக் கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து அடங்கிய மகா பிரிட்டனுக்கு வில்லியம் அரசராக இருந்ததால் அவரது காலத்தில் அந் நாடுகளில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கவனிப்போம்.

வில்லியமும் இங்கிலாந்தும்

அரசியல் சட்ட வரம்புக்குட்பட்ட மன்னரின் ஆட்சியை வரையறுக்கும் வகையில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொது உரிமை அறிக்கையை (Declaration of Rights) வில்லியம் ஒப்புக்கொண்ட பின்னரே இங்கிலாந்தின் அரசராக அறிவிக்கப் பட்டிருந்தார். அந்த அறிக்கை 1689-ல் வில்லியத்தின் முதல்

பாராளுமன்றத்தினுல் உரிமைகள் மசோதாவாக (Bill of Rights) இயற்றப்பட்டது.

மிக முக்கியமான ஆங்கில அரசப் பத்திரங்களில் ஒன்றுகக் கருதப்படும் அம் மசோதாவே புரட்சி ஏற்பாட்டின் (The Revolution Settlement) முதல் அங்கமாக அமைந்தது. அப் புரட்சி ஏற்பாட்டின் விளைவாகவே இங்கிலாந்தில் அரசியல் அமைப்புக்குட்பட்ட முடியரசு ஏற்படுத்தப்பட்டது.

வில்லியத்தையும் மேரியையும் இணை அரசர்களாக அறிவித்த அம் மசோதா, அவர்களுக்குப்பின் அரச வாரிசையும் முடிவு செய்தது. பிள்ளைகள் இல்லாது அவ் விருவரும் காலமானுல் மேரியின் தங்கை இளவரசி ஆன் (Anne) என்பவளும் அவளின் பிள்ளைகளும் அடுத்த வாரிசுகளாக அறிவிக்கப்பட்டனர். கத்தோலிக்கரும், அச் சமயத்தினரை மணந்து கொள்பவரும் இங்கிலாந்தின் அரசுக்கு வாரிசு ஆக முடியாதென ஒரு கட்டுப்பாட்டையும் அம் மசோதா வலியுறுத்தியது. சட்ட விலக்கு அதிகாரத்தையும் (Dispensing Power) சட்ட நிறுத்து அதிகாரத்தையும் (Suspending Power) அரசர் கைவிடவேண்டு மென்றும், உயர் ஆணை நீதி மன்றத்தைக் கலைக்க வேண்டுமெனவும் அம் மசோதாவில் வற்புறுத்தப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தின் அனுமதி யின்றி அமைதிக் காலத்தில் அரசர் படையினரை வைத்திருக்கக்கூடா தென்றும் பாராளுமன்றத் தேர்தலிலும், அதன் பேச்சுரிமையிலும் அரசர் தலையிடக்கூடா தென்றும் அம் மசோதா கேட்டுக்கொண்டது.

எதேச்சை அரசாங்கத்துக்குத் (Arbitrary Government) தடையாக அமைந்த பொது உரிமை மசோதாவை வில்லியம் ஒப்புக் கொண்டுவிட்டதால் பிற்கால அரசர்கள் சட்ட வரம்பிற்குட்பட்ட ஆட்சியை அமைக்கவேண்டியவர்க ளாயினர். வில்லியத்திற்கும், பாராளுமன்றத்துக்கும் அரசு முறையினைப் பற்றி ஏற்பட்ட ஒப்பந்தமாக அமைந்த அந்த உரிமைகள் மசோதாவைத் தொடர்ந்து வேறு சில சட்டங்களும் கொண்டுவர, அவற்றிற் கெல்லாம் தம் ஒப்புதலைக் கொடுத்ததன்பேரில் இதன்மூலம் மூன்றும் வில்லியம் இங்கிலாந்தில் வரம்பற்ற முடியாட்சி ஏற்பட வழியில்லாமல் செய்துவிட்டார். 1689-ல் கொண்டுவரப்பட்ட முடி சூட்டு விழா உறுதி மொழிச் சட்டத்திற்குத் (The Coronation oath Act) தம் ஒப்புதலைக் கொடுத்து, சீர்திருத்தப்பட்ட பிராடஸ்டென்டு சமயத்தின் உண்மை உறுப்பினராக வில்லியம் இசைந்ததால், எதிர்கால அரசினரும் அக் கட்டுப்பாட்டுக்கு உடன்படவேண்டியவர்க ளாவார்கள். படையினரை ஒழுங்குபடுத்தக் கொண்டுவரப்பட்ட கலகச் சட்டத்திற்கு (Mutiny act)

வில்லியம் தம் இசைவைக் கொடுத்துப் படையினர்மீது பாராளு மன்றம் அதிகாரம் பெற வழிசெய்து கொடுத்தார்.

1689-ல் வில்லியத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கிப் பாராளு மன்றத்தினால் கொண்டுவரப்பட்ட சமயப் பொறுமைச் சட்டம் (Toleration Act) அவரின் காலத்திய தன்மையை எடுத்துக் காட்டுகிறது. சமயப் பூசல்களால் அலைக்கழிக்கப்பட்டு வந்த இங்கிலாந்தில் முதன் முதலாகக் கொள்கையளவில் சமயப் பொறையைக் கடைப்பிடித்த மூன்றும் வில்லியம் பாராட்டுக் குரியவ ராவர். கோவிலுக்குச் செல்ல மறுத்தவர்களான இணங் காதார்கள் (Non-Conformists) அதற்காகச் செலுத்திவந்த அபராதப் பணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர். சமய வெறுப்புணர்ச்சியினால் சிலர் அச் சட்டத்தை எதிர்த்தபோதும் வில்லியம் தம் முழு ஆதரவைக் கொடுத்துக் குறுகிய சமயப் பற்றிற்கு அப்பாற்பட்டவராகத் தம்மைக் காட்டிக்கொண்டார்.

1694-ல் இயற்றப்பட்ட மூவாண்டுச் சட்டம் (Triennial Act) பாராளுமன்றத்துத் தேர்தல்களை மூன்றாண்டுக் கொருமுறை நடத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள அதற்குத் தம் சம்ம தத்தை அளித்ததன்மூலம் புதுப்பாராளுமன்றங்களைக் கூட்டு வதற்குத் தமக்கிருந்த ஆர்வத்தை வில்லியம் வெளிப்படுத்திக் கொண்டார்.

எழுத்துரிமையைத் தடைசெய்திருந்த அனுமதிக் சீட்டுச் சட்டத்தை (Licensing Act) 1695-ல் புதுப்பிக்க மறுத்ததன் மூல மாக வில்லியம் பிரசுர சுதந்தரத்துக்கு (Freedom of Press) ஊன்று கோலாக இருந்தார்.

புரட்சி ஏற்பாட்டைச் செய்வதில் மனமொத்துச் செயல்பட்டு வந்த வில்லியத்திற்குப் பாராளுமன்றம் ஆண்டு ஒன்றுக்கு 700,000 பவுன்களை அரசரின் செலவுப் பணமாகக் (Civi List) கொடுக்க முன்வந்தது. மேற்கொண்டு செலவுக்கான பணம் தேவைப்பட்டால் பாராளுமன்றத்திடம் கேட்கக் கடமைப்பட்ட வில்லியம் அரசரின்மீது பாராளுமன்றம் நீதி அதிகாரம் பெற வழி செய்து கொடுத்தது.

ஆக்ஸ்பர்க் லீக் போர் (War of the League of Augsburg) நடந்துகொண்டிருக்க அதனால் ஏற்பட்ட போர்ச் செலவுகளால் நாட்டின் நிதி நிலைமை மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அச் சமயத்தில் நிலைமையைச் சமாளிக்கச் சர் ஜான் சோமர்ஸ் (Sir John Somers), சார்லஸ் மாண்டேகு (Charles Montagu) என்ற வீக்குகளின் யோசனையின்பேரில் தேசியக் கடன் முறை (National

debt) உருவாக்கப்பட்டது. பல தலைமுறைகளால் தீர்க்கப் படவேண்டிய அக் கடன்முறையை ஒட்டி வில்லியம் பேட் டர்ஸன் (William Paterson) என்ற பொருளாதார நிபுணரால் இங்கிலாந்தில் வங்கி முறையும் வழக்கத்திற்குக் கொண்டுவரப் பட்டது. 1694-ல் இங்கிலாந்து வங்கி (Bank of England) போர்ச்செலவுக்காக அரசருக்கு 1,200,000, பவுன்களைக் கடனாக அளித்தது. 2½% சதவிகித வட்டிக்குப் பொதுமக்களிடமிருந்து வாங்கப்பட்ட கடன் அரசினருக்கு 8 சதவிகித வட்டிக்குக் கொடுக் கப்பட்டது. தனியுரிமை அடைந்து ஸ்திரமாக அமைந்த அந்த வங்கியே வில்லியத்தின் ஆட்சிக் காலத்தில் முக்கிய சாதனையாக அமைந்தது.

அவரின் காலத்திலேயே கட்சிகளின் அடிப்படையில் மந்திரி சபை (Party Government) அமைக்கப்படும் முறை வழக்கத்திற் குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

விக்குகளும் டோரிகளும் சேர்ந்தே வில்லியத்தை 1685-ல் இங்கிலாந்துக்கு அழைத்திருந்ததால் அவ் விரு கட்சியினரைச் சேர்ந்த பெருமக்களைக் கொண்டு ஆரம்பத்தில் கலப்பு மந்திரி சபையினை வில்லியம் அமைத்திருந்தார். அவ் விரு கட்சியினருக் கும் இடையே இருந்த கொள்கை வேறுபாடுகளால் அவ் வமைச்சர் கள் அடிக்கடி சச்சரவு செய்துகொண்டு இருந்ததால் வில்லியம் அந்தக் கலப்பு மந்திரி சபையைக் கலைத்துவிட்டார். சுண்டர் லாந்து (Sunder land) என்ற விக் பெருமகனரின் தூண்டுதலின் பேரில் 1694-ல் வில்லியம் முழுக்க முழுக்க விக்குகள் கொண்ட மந்திரி சபையினை அமைத்தார். விக் ஜுன்டோ (Whig Junto) என்றழைக்கப்பட்ட அந்த அமைச்சரவையில் சுண்டர்லாந்து (Sunder land), சோமர்ஸ் பிரபு (Lord Somers), அட்மிரல் ரஸ்ஸல் (Admiral Russel), மான்டேக் (Montague), வார்ட்டன் (Wharton) என்ற விக்குகள் இடம் பெற்றனர். தற்கால காபினட் (cabinet) முறைக்கு முன்னோடியாக விளங்கிய விக் ஜுன்டோ வில்லியத் தின் காலத்தில் ஒரு வழக்காறு (convention) உண்டாகக் காரண மாகியது. அதன்படி காமன்ஸ் சபையின் ஆதரவு பெற்ற மந்திரி சபையின் ஆட்சியை ஒட்டியே நாட்டின் அரசியல் அமையவேண்டு மென்பதாயிற்று. 1700-ல் இன்னொரு வழக்காறு உருவாகவும் வில்லியம் காரணராக இருந்தார். காமன்ஸ் சபையின் வற்புறுத்த லுக்கிணங்கி நான்கு விக்கு அமைச்சர்கள் இராஜினாமாச் செய் திருக்கச் சோமர்ஸ் பிரபுமட்டும் சான்ஸ்லர் பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தார். அவரிடம் வெறுப்புக் கொண்டிருந்த காமன்ஸ் சபையினர் அரசரை வற்புறுத்திச் சோமர்ஸைப் பதவியிலிருந்து


முதலாம் ஜேம்ஸ் (Jamcs I)
முதலாம் சார்லஸும் (Charles I)
அவரின் வழித்தோன்றல்களும்
எலிஸபத் (Elizabath) = ஃபிரடெரிக்
(Frederick)
(பாலடினட் சிற்றரசர்)
சோஃபியா = ஹானேவர்
(Sophia) சிற்றரசர்
ஜார்ஜ் லியூஸ்
(George Lewis)
(அ)
முதலாம் ஜார்ஜ்
(1714 - 1727)

நீக்கினர்கள். பாராளுமன்றத்தின் ஆதரவு இல்லாத எந்த அமைச்சரும், அரசர் விரும்பினாலும்கூட, பதவியிலிருக்க முடியாதென்பது வில்லியத்தின் காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது.

புரட்சி ஏற்பாட்டின் கடைசிச் சட்டமாக 1701-ல் இவரின் காலத்தில் அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement) கொண்டுவரப்பட்டது.

இங்கிலாந்தின் வாரிசுரிமை வில்லியத்திற்குப்பின் ஆன் (Anne) இளவரசிக்கும் அவளின் பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்டது என்பதை நாம் முன்பே அறிந்தோம். ஆன் இளவரசியின் பிள்ளைகள் அனைவரும் காலமடைந்திருந்ததை ஒட்டி எழுந்த வாரிசுப் பிரச்சினையை அச் சட்டம் தீர்த்துவைத்தது. அதன்படி ஆன் இளவரசிக்குப் பின் இங்கிலாந்தின் வாரிசுரிமை ஜேம்ஸின் மகள் வழிப்பெயர்த்தியான சோஃபியாவுக்கும் (ஹானேவரின் சிற்றரசி) அவளின் சந்ததியாருக்கும் தரப்பட்டது. நீதிபதிகளைப் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்படுத்தியும் துணைச் சட்டங்கள் இயற்றப்பட்டதல்லாமல் வருங்கால ஹானேவரியர்கள் ஆங்கிலிகன் திருச்சபையை ஒப்புக்கொள்ளுபவராக இருக்க வேண்டுமென்றும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி நாட்டை விட்டு அகலக்கூடாதென்றும் மன்றத்தைக் கலந்தாலோசிக்காமல் ஹானேவரியர் சார்பாக ஐரோப்பியப் போர்களில் இங்கிலாந்தை ஈடுபடுத்தக் கூடாதென்றும் கட்டுப்படுத்திய சில துணைச் சட்டங்களும் கொண்டுவரப்பட்டிருந்தன.

சுருக்கமாக நாட்டின் சட்டமே அரசரைவிட உயர்ந்தது (Lex above the Rex) என்ற கருத்து வில்லியத்தின் காலத்திலேயே நிறுவப்பட்டது. பாராளுமன்றத்தின் விருப்பத்திற்குட்பட்ட முடியாட்சி என்ற மரபு வில்லியத்தின் காலத்திலேயே இங்கிலாந்தில் உருவாகியது.

வில்லியமும் ஸ்காட்லாந்தும்

இரண்டாம் ஜேம்ஸ் ஆங்கிலப் புரட்சியின் விளைவாக நாட்டை விட்டு 1685-ல் வெளியேறியதைத் தொடர்ந்து எடின்பர்க்கில் ஸ்காட்டிய மன்றம் தன் உரிமை அறிவிப்பை (Claim of Right) வெளியிட்டு வில்லியத்தையும் மேரியையும் தன் அரசர்களாக ஏற்றுக்கொள்ளும்படி செய்தது. இருப்பினும், ஸ்காட்டிய ஹைலாந்தியர்கள் (Highlanders) அவ் வேற்பாட்டை ஏற்க மறுத்ததுமல்லாமல் ஃபிரான்சுக்கு ஓடிவிட்ட இரண்டாம் ஜேம்ஸ் சார்பில் வைகௌண்ட் டன்டி (Viscount Dundee) என அழைக்கப்பட்ட ஜான் கிரஹம் (John Graham) தலைமையில் கலகம் செய்ய

முற்பட்டனர். வில்லியத்துக்கு விசுவாசமாக இருந்த ஸ்காட்டியர்களும், அவர்களுக்கு உதவியாக இருந்த ஆங்கிலப் படைகளும் 1689-ல் கில்லிகிரேங்கி சண்டையில் (Battle of Killiecrankia) வைகௌண்டியால் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால், கடைசித் தருணத்தில் போர்க்களத்தில் வைகௌண்ட் சுட்டுக் கொல்லப்பட்டதால் ஹைலாந்தியர் பெற்ற வெற்றி பலனில்லாமல்போனது. அதன்பின் ஏற்பட்ட சமரச ஏற்பாட்டின்படி கலகத்தில் பங்கெடுத்துக்கொண்ட எல்லா மேட்டுக் குடியினரும் (Highlanders) 31-12-1691-க்குள் வில்லியத்துக்கு விசுவாச வாக்குறுதி கொடுக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கிளென்கோவைச் சேர்ந்த மாக்டொனல்டு (Macdonald of Glencoe) தவிர, மற்றக் குடியினர் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். சந்தர்ப்பம் சதிசெய்துவிட்டது. இதனால் மாக்டொனல்டு குடியினர் தண்டிக்கப்பட வேண்டியவர்களானார்கள். அந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு மாக்டொனல்டு குடியினரைத் தீர்த்துக்கட்ட அவர்களின் பழைய விரோதிகளான கிளெனல்யானைச் சேர்ந்த கேம்பெல் (Campbells of Glanlyon) குடியினர் அதற்கான அனுமதியை வில்லியத்திடம் கேட்டனர்.

தம் நிலை தவறியிருந்த வேளையில் வில்லியம் அதற்கான அனுமதியைக் கொடுக்க ராபர்ட் கேம்பெல் (Robert Campbell) தலைமையில் அவரது குடியைச் சேர்ந்த 120 நபர்கள் கிளென்கோவுக்குச் சென்றனர். அவர்களின் வஞ்சக எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத மாக்டொனல்டு குடியினர் வந்தவர்களை இரண்டு வாரங்கள் விருந்தினர்களாகவே உபசரித்தனர். 1692-ல் ஒரு நாள் விடியற்காலையில் கேம்பெல்கள் தங்களை அதுவரை நண்பர்கள் என்று கருதியிருந்த மாக்டொனல்டு குடியினரை வஞ்சகமாகக் கொலை செய்தனர். தலைவர் உள்பட மாக்டொனல்டு குடியைச் சேர்ந்த 38 பேர் பரிதாபமாக மாண்டனர். கிளென்கோவில் நடத்தப்பட்ட அப் படுகொலைக்குக் காரணம் ஸ்காட்டிய ஹைலாந்தியர்களிடையே இருந்த குடும்பப் பூசலே எனினும் அதற்குத் தம் சம்மதத்தைக் கொடுத்திருந்ததால் வில்லியமும் தூற்றப்பட்டார். ஆங்கிலேயர்களின் ஆட்சிமீது ஸ்காட்டியர்களிடையே ஓரளவு அதிருப்தி தோன்றவும் அப் படுகொலை காரணமாக அமைந்துவிட்டது.

கிளென்கோ படுகொலையினால் ஸ்காட்லாந்தில் நிலவியிருந்த அதிருப்தி மேலும் வெறுப்பாக மாற இன்னொன்றும் காரணமாக அமைந்தது.

ஆங்கில வர்த்தகத்திலிருந்து விலக்கப்பட்டிருந்த ஸ்காட்டியர்களுக்கும் வர்த்தகக் கம்பெனிகளை நிறுவவேண்டுமென அவா

ஏற்பட்டது. அதன் விளைவாக அமெரிக்கக் கண்டங்களுக்கு இடையே பனமா பூசந்திக்கருகே (Isthmus of Panama) டேரியன் (Darien) என்ற இடத்தில் வர்த்தகக் கம்பெனியை நிறுவ, ஸ்காட்டியர்கள் விரும்பி அதற்கான ஆதரவையும் ஒத்துழைப்பையும் அரசர் வில்லியத்திடம் கேட்டனர். டேரியன் திட்டத்தினால் அப் பகுதியில் காலனிகளை ஏற்கெனவே அமைத்திருந்த ஸ்பானியர் களின் எதிர்ப்பு ஏற்படுமென்ற எண்ணத்தில் வில்லியம் அதற்கான முழு ஆதரவைக் கொடுக்கத் தயங்கிவந்தார். பொறுமை யிழந்த ஸ்காட்டிய வியாபாரிகள் 1698 - 1699-ல் டேரியன் பகுதியில் குடியேறி அப் பகுதியில் வியாபாரத் தலங்களை அமைக்க முயன் றனர். அப் பகுதியின் காலநிலையால் சிலர் இறக்க, இன்னும் சிலர் ஸ்பானியர்களால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட, அத் திட்டமே கைவிடப்பட்டது. டேரியன் திட்டத்துக்கு ஆதரவு கொடுக்கத் தயங்கிய வில்லியத்தின்மீதும் வர்த்தக சம உரிமை அளிக்க மறுத்த ஆங்கிலேயர்கள்மீதும் ஸ்காட்டியர்கள் அதன்பின் வெறுப்புக் காட்டத் தலைப்பட்டனர்.

அவ் விரு நிகழ்ச்சிகளால் ஆங்கில – ஸ்காட் உறவு ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தாலும் மொத்தத்தில் வில்லியத்தின் ஆட்சி நன்மை பயப்பதாகவே இருந்தது. இங்கிலாந்தின் தலையீடின்றித் தங்களின் சமயத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ள ஸ்காட்டியர்கள் வில்லியத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்தது மெச்சத் தகுந்த ஒன்றுகும்.

வில்லியமும் அயர்லாந்தும்

ஆங்கிலப் புரட்சியைத் தொடர்ந்து (1688) கத்தோலிக் கர்கள் நிரம்பிய அயர்லாந்தில் ஓர் எதிர்ப்புச் சூழ்நிலை உருவா கியது. அதன் விளைவாகப் புரட்சி ஏற்பாட்டைப் புறக்கணிக்கும் வகையில் இரண்டாம் ஜேம்ஸுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

ஆக்ஸ்பர்க் விக் போர் தொடங்கி யிருந்த அவ் வேளையில் ஃபிரான்சின் படையுதவி பெற்றுப் பழைய அரசரான இரண்டாம் ஜேம்ஸ் தம் ஆதரவாளர்களுடன் 1689-ல் கின்சேல் (Kinsale) என்ற இடத்தில் கரையிறங்கி ஐரிஷ் கத்தோலிக்கர்களை வில்லியத் துக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு ஊக்கினார். ஜேம்ஸும் அவரைப் பின்பற்றிய ஐரிஷ் கத்தோலிக்கர்களும் உல்ஸ்டர் (Ulster) பகுதியின்மீது போர் தொடுத்தனர். அங்கிருந்த பிரா டஸ்டென்டுகளையும் 'ஆரஞ்சு மக்கள்' என அழைக்கப்பட்ட ஆரஞ்சு வில்லியத்தின் ஆதரவாளர்களையும் ஜேம்ஸ் வளைத்து நெருக்கி வந்தார். இலண்டன் டெர்ரி (London derry) என்ற

இடத்தைத் தவிர மற்றப் பகுதிகளெல்லாம் ஜேம்ஸ் வசமாயின. அந்த நகரம் முற்றுகையிட்டபோது நீலமை மோசமடைய, வில்லியம் தம் படைகளோடு அயர்லாந்துக்கு விரைந்து வந்து பாய்னிச் சண்டையில் (Battle of Boyna, 1690) கத்தோலிக்க எதிர்ப்பாளர்களைத் தாக்கிப் பெரும் வெற்றி பெற்றார். அச் சண்டையின் தாக்குதலைச் சமாளிக்கமுடியாத ஜேம்ஸ் போர்க்களத்திலிருந்து தப்பி, முடிவு தெரிவதற்கு முன்னரே ஃபிரான்சுக்கு ஓட எத்தனித்து விட்டதால் ஐரிஷ் கத்தோலிக்கர்களின் எதிர்ப்பு பிசுபிசுக்க ஆரம்பித்தது. லிம்மிரிக் (Limerick) என்ற இடமே பேட்ரிக் சார்ஸ்பீல்ட் (Patric Charsfield) என்ற ஐரிஷ் வீரரால் எதிர்ப்புக் காட்டிவர, 1691-ல் அதுவும் வில்லியத்தின் படைகளால் கைப்பற்றப்பட்டபோது அயர்லாந்து பணிந்தது. அதைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களுக்கும் அயர்லாந்தினருக்கும் லிம்மிரிக் உடன்பாடு (Treaty of Limerick) கையெழுத்து ஆகியது. அவ் வுடன்பாட்டின் படி ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்குச் சில உரிமைகள் கொடுக்கப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால், குறுகிய சமய மனப்பான்மை கொண்டிருந்த ஆங்கிலப் பாராளுமன்றம் அதே ஆண்டில் லிம்மிரிக் உடன்பாட்டைப் புறக்கணிப்பதுபோல், சில தடைச்சட்டங்களை இயற்றியது. வில்லியத்தின் மனம் அதற்கு ஒப்பவில்லை யெனினும் அந்தச் சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு அவர் பாராளுமன்றத்தினால் கட்டாயப்படுத்தப்பட்டார். அச் சட்டங்களின்படி பாராளுமன்ற அங்கத்தினர்களாகவோ தீர்ப்புச் சான்றாளர்களாகவோ (juries) ஐரிஷ் கத்தோலிக்கர்கள் இருக்கத் தகுதியற்றவர்கள் ஆயினர். நகர மன்றத்திலும் இராணுவத்திலும் ஆசிரியத் தொழிலிலும் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் நுழைய இயலாதவர்களாயினர். அவர்களால் நிலங்களையும் வாங்க முடியாது. ஐரிஷ் நிலச் சொந்தக்காரர்கள் இறந்து போனால், அவரின் பண்ணைகள் தம் ஒரு வாரிசுக்குத் சொந்தமாகாமல் எல்லாப் பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுக்கும்படியான சட்டமும் கொண்டுவரப்பட்டது. கம்பளி போன்றவைகளை இங்கிலாந்துக்குமட்டுமே ஏற்றுமதி செய்யவேண்டுமென்ற வர்த்தகக் கட்டுப்பாடும் அயர்லாந்தின்மீது சுமத்தப்பட்டது. சுருக்கமாக அயர்லாந்தைப் பொறுத்தவரையில் வில்லியத்தின் ஆட்சிக் காலம் கடுமையாகவே இருந்துவந்தது.

வில்லியமும் அவரின் போர்களும்

நாடு பிடிக்கும் வெறி கொண்டிருந்த ஃபிரான்சு நாட்டின் அரசரான பதினான்காம் லூயியுடன் தொடர்ந்து போர் செய்

வதை வில்லியம் தம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இதற்கும் காரணம் மிருந்தது.

ஆங்கில வாரிசுரிமைப் போர்

ஃபிரான்சு நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தவேண்டுமெனப் பேரவாக் கொண்டிருந்த பதினான்காம் லூயி ஏற்கெனவே (1667-1668) ஸ்பானிய நெதர்லாந்தின் பல பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார். அம் முதல் தாக்குதலின் தொடர்ச்சியாக 1672-ல் டச்சுக் குடியரசையும் தாக்கிச் சேதப்படுத்தினர். அந் நிலையில் தான் ஆரஞ்சு வில்லியம் அக் குடியரசின் தலைவராக ஆக்கப்பட்டிருந்தார். ஃபிரான்சின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கும்படியாக ஹாலந்திலிருந்து கடல் மதில்களைத் (dykes) தகர்த்துக் கடல் நீரை உள்ளே புக வைத்துக் கரையோரப் பகுதிகளை வெள்ளக் காடாக்கி, முன்னேறிவந்த ஃபிரெஞ்சுப் படைகளைப் பின்வாங்கச் செய்திருந்தார். ஆக டச்சுக் குடியரசின் தலைவராக வில்லியம் ஏற்கப்பட்ட காலத்திலிருந்தே அவருக்குப் பதினான்காம் லூயியிடம் பகைமை இருந்துவந்தது.

ரைன் நதிக்கரைவரை தம் பேரரசின் எல்லையைப் பரப்ப வேண்டுமென விரும்பிய பதினான்காம் லூயி 1681-ல் அல்சேஸ் (Alsace), லொரைன் (Lorraine) என்ற ஜெர்மானியப் பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார். அதனால் கலவரமடைந்த மற்ற ஜெர்மானியச் சிற்றரசர்கள் 1686-ல் ஆக்ஸ்பர்க் லீக் (Augsberg League) என்ற எதிர்ப்பு அணியை அமைத்திருந்தனர். லூயியின் ஆதிக்க வெறிக்குத் தடைபோட விரும்பிய வில்லியம் ஹாலந்தின் சார்பில் அந்த அணியில் சேர்ந்திருந்தார். அதற்கிடையே 1688-ல் இங்கிலாந்தில் புரட்சி ஏற்பட்டது.

1688-ல் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சி ஐரோப்பிய அரசியல் நிலைமையை முற்றிலும் மாற்றியது. ஃபிரெஞ்சு அரசரின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டிருந்த இரண்டாம் ஜேம்ஸ் இங்கிலாந்தை விட்டு ஓடி வரவேண்டிய தாயிற்று. இரண்டாம் சார்லஸின் காலத்திலிருந்து ஃபிரான்சுடன் ஒத்துவந்த அடக்கமான ஆங்கில ஆட்சி 1688-ல் மறைந்தது. அதற்கு எதிராக லூயியின் பழைய எதிரியும் ஹாலந்தின் தலைவருமான ஆரஞ்சு வில்லியம் இங்கிலாந்தின் அரசராக அறிவிக்கப்பட்டுவிட்டார்.

பட்டம் இழந்து ஃபிரான்சுக்கு ஓடிவந்த இரண்டாம் ஜேம்ஸுக்குப் பதினான்காம் லூயி அடைக்கலம் கொடுத்தது மட்டுமல்லாமல் பாராளுமன்றத்தினால் பட்டம் சூட்டப்பட்ட வில்லியத்தை இங்கிலாந்தின் அரசராக ஒப்புக்கொள்ள மறுத்தார். அத்துடன்

நில்லாமல் இழந்த பதவியைப் பெறுவதற்காக ஜேம்ஸுக்குச் சகல உதவிகளையும் கொடுக்க லூயி முன்வந்தார். தவிர்க்க முடியாத அந்த நிலையில் ஆரம்பித்த அப் போரே ஆக்ஸ்பர்க் லீக் யுத்தம் (War of the league of Augsburg, *1689–1697*) என அழைக்கப் பட்டது.

முதல் இரண்டு ஆண்டுகளில் அப் போர் அயர்லாந்தைப் பெரிதும் சார்ந்திருந்தது. லூயியின் படை உதவியைப் பெற்ற இரண்டாம் ஜேம்ஸ் அயர்லாந்தில் கரையிறங்கி, இலண்டன்-டெர்ரி என்ற இடத்தைத் தவிர மற்றப் பகுதிகளைக் கைப்பற்றி இருந்தார். டெர்ரியும் கடுமையாக ஜேம்ஸின் படையினரால் முற்றுகையிடப்பட்டது. சரியான நேரத்தில் ஆங்கிலக் கப்பல் பொருள்களை ஏற்றிக்கொண்டு வராமலிருக்குமாயின் டெர்ரியும் சரண் அடைய வேண்டியிருக்கும். இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்து அயர்லாந்து விடுபட்டுவிடுமோ என்ற நிலைமை ஏற்பட்டதன்பேரில் வில்லியம் தம் படைகளோடு *1690*-ல் ஐரிஷ் கடலைக் கடந்து பெல்வாஸ்ட்டில் (Belfast) கரையிறங்கி டப்ளினை (Dublin) நோக்கி விரைந்தார். அந்த ஆண்டில் ஜூலை மாதத்தில் பாய்னி நதிக்கரையில் வில்லியத்தின் படையினருக்கும் அவரின் மாமனார் இரண்டாம் ஜேம்ஸின் ஆதரவாளர்களுக்கும் சண்டை நடந்தது. நாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சண்டையின் இடையிலேயே ஜேம்ஸ் தப்பி ஃபிரான்சுக்குக் கப்பல் ஏறி விட்டார். பாய்னி சண்டை வில்லியத்துக்கு வெற்றியாக அமைந்தது. இங்கிலாந்தைப் பணிய வைத்துத் தம்மை லூயியின் உதவியால் அரசராக்கிக் கொள்ளலாமென நினைத்த ஜேம்ஸுக்கு அது பெருத்த ஏமாற்றமாகவே அமைந்தது. அச் சண்டையில் இருமுறை காயமடைந்த வில்லியம் அப்போது கொல்லப்பட்டு இருப்பாராயின் இங்கிலாந்து உள்பட மேற்கு ஐரோப்பாவே லூயியின் ஆதிக்கத்திற்கு அடிமையாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

அப் போர் அடுத்தபடியாகக் கடலில் நேர்ந்தது. இங்கிலாந்தின்மீது படையெடுக்க நினைத்த ஜேம்ஸ் ஆங்கிலக் கால்வாயில் ஆதிக்கம் பெற நினைத்தார். அப் பகுதியில் ரோந்து வந்த ஆங்கில-டச்சுக் கப்பற் படைகளை *1690*-ல் பீச்சிஹெட் (Beachy Head) என்னுமிடத்தருகே ஃபிரெஞ்சுக் கப்பற்படை தோற்கடித்தது. இருப்பினும் அடுத்து நடந்த இன்னொரு கடல் சண்டையில் (லாஹோக்–La-Hogue) ஃபிரெஞ்சுக் கப்பல்கள் சிதறடிக்கப்பட்டன. *1692*-ல் இங்கிலாந்தைத் தாக்க லூயி ஏவிய கப்பற்படையும் பார்ஃவிலியுர் (Battle of Barfleur) சண்டையில் முரியடிக்கப் பட்டது. ஃபிரான்சின் படையெடுப்புப் பயம் நீங்கியது.

அப் போரின் அடுத்த கட்டம் ஐரோப்பாவில் அமைந்தது. ஸ்பானிய நெதர்லாந்தை லூயியின் ஆக்ரமிப்பிலிருந்து காக்கக் கடமைப்பட்ட வில்லியம் தாய்நாட்டில் பல சண்டைகளைச் செய்யவேண்டி யிருந்தது. மான்ஸ் (Mans), ஸ்டின் கிர்க் (Stein kirk) போன்ற இடங்களில் ஃபிரான்சுப் படைகள் வெற்றி பெற்ற போதும் 1695-ல் நாமூர் கோட்டையை (Fort Namur) வில் லியம் கைப்பற்றி ஸ்பானிய நெதர்லாந்தைக் காத்தார். ஃபிரான்சை வளைத்துப் பணியவைக்க வில்லியம் முயன்றபோது அந் நாட்டின் எல்லைகளில் அமைந்த வலுவான கோட்டைகள் தடுத்தன. வட அமெரிக்காவிலும் ஆங்கில-ஃபிரஞ்சுக் குடியேற் றங்களுக் கிடையே போர் மூண்டது. இரண்டாண்டுகள் மேலும் தொடர்ந்த அப் போரில் இரு தரப்பினரும் சலிப்புக் கொள்ள இறுதியில் 1697-ல் ரைஸ்விக் உடன் படிக்கை (Treaty of Ryswick) செய்து கொள்ளப்பட்டது.

அவ் வுடன்படிக்கையின்படிதான் இங்கிலாந்தில் பாராளு மன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட பிராடஸ்டென்டு வாரிசை ஏற்றுக் கொள்வதாக லூயி ஒப்புக்கொண்டார். நாமூர், எப் ரஸ் (Ypres), மெனின் (Menin) என்ற தடுப்புக் கோட்டைகளில் (Barrier Fortresses) டச்சுப் படைகளை நிறுத்திவைக்கப்பட லூயி யின் சம்மதமும் வாங்கப்பட்டது. அமெரிக்காவில் ஆங்கிலேயர் களால் கைப்பற்றப்பட் டிருந்த அகேடியை (Acadie) ஃபிரெஞ்சுக் காரர்கள் திரும்பப் பெற அதற்கு ஈடாக அவர்களால் கைப்பற் றப்பட்டிருந்த அல்பானிக் கோட்டை (Fort Albani) ஆங்கிலேயர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பதினான்காம் லூயியின் ஆதிக்க வெறிக்கு முட்டுக்கட்டை யாகவும், தம் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளும் சாதனை யாக வில்லியத்திற்கும், அவ் வுடன்பாடு அமைந்தது. ரைஸ்விக் உடன்பாட்டைத் தொடர்ந்து வில்லியத்திற்கும், பதினான்காம் லூயிக்கும் அதிக காலம் அமைதி நிலவுமென எதிர்பார்க்கப் பட்டிருந்தால், அது தவறான முடிவாக இருந்திருக்குமென்பதை, அடுத்து மூளப் போகும் பெரும் போர் உணர்த்தியது. அப் போர் ஸ்பானிய வாரிசுரிமைபற்றியதாக இருந்தது.

ஸ்பானிய வாரிசுரிமைப் போர்

ஹாப்ஸ்பர்க் (Hapsburg) அரச மரபின் கடைசி வாரிசான இரண்டாம் சார்லஸ் (1665–1700) ஸ்பெயினுக்கு அரசராவார். 1698-ல் முப்பத்தைந்து வயதே நிரம்பப் பெற்றிருந்த சார்லஸ் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மரணப் படுக்கையி லிருந்துவந்தார். மக்கள்பேறும் பெற்றிராத அவ் வரசர்

ஸ்பானிய வாரிசுரிமைச் சிக்கல்



காலமானால் ஸ்பானியப் பேரரசுக்கு எவரை வாரிசாக்குவது என்ற பிரச்சினை எழுந்தது.

17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்பெயின் வல்லமைமிக்க பேரரசாக இல்லாவிடினும் வளம் பொருந்திய ஸ்பானிய அமெரிக்காவையும் ஐரோப்பாவில் நெதர்லாந்தையும், இத்தாலியில் நேபிள்ஸ், சிசிலி, மிலான் போன்ற பகுதிகளைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டிருந்தது. இரண்டாம் சார்லஸ் இறந்துபடின் அப் பேரரசை எவருக்குச் சொந்தமாக்கப்படவேண்டும் என்ற பிரச்சினையின் அடிப்படையிலே ஸ்பானிய வாரிசுரிமைப் போருக்கான காரணங்களை நாம் ஆராயவேண்டும்.

இரண்டாம் சார்லஸின் மூத்த சகோதரியான மேரியா தெரிசாவை மணந்துகொண்டிருந்த ஃபிரான்சின் அரசர் பதினான்காம் லூயியும், சார்லஸின் இளைய சகோதரியான மார்க்ரெட் தெரிசாவை மணந்திருந்த ஆஸ்திரியப் பேரரசர் லியோபால்டும் ஸ்பெயினின் அடுத்த வாரிசாகத் தங்களின் உரிமைக் குரல்களை எழுப்பலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஸ்பானியப் பேரரசின் மொத்தப் பகுதிகள் ஃபிரான்சுடனே அல்லது ஆஸ்திரியாவுடனே இணைத்துக்கொள்ளப்படுமானால், ஐரோப்பிய வல்லரசு சமநிலை (Balance of Power) பாதிக்கப்படுமென்று கருதப்பட்டது. சொந்தம் கொண்டாடி ஸ்பானியப் பேரரசை இணைத்துக் கொள்ளும் அடுத்த வாரிசாகப் பதினான்காம் லூயியும் ஆஸ்திரியப் பேரரசரான லியோபால்டும் இருக்கும்பட்சத்தில், அவர்கள் இருவரில் ஒருவரின் பலம் அமோகமாக அதிகரிப்பதை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. ஆக, ஹாப்ஸ்பர்க் மரபின் இன்னொரு பிரிவினர் ஆளும் ஆஸ்திரியாவுடன் ஸ்பெயின் இணையக்கூடாது; ஸ்பெயினின் அடுத்த நாடான ஃபிரான்சுடனும் அது இணைக்கப் படக்கூடாது. அது, சிக்கலுக்கு ஆரம்பம்.

தங்களின் உறவின் அடிப்படையில் நேரிடையாக வாரிசுப் பூசலில் இறங்கப் பதினான்காம் லூயியும் பேரரசர் லியோபால்டும் தயங்கித் தங்களின் சார்பிலே தத்தம் உறவினர்களுக்கு ஸ்பானிய வாரிசுரிமையைக் கேட்டனர். பதினான்காம் லூயியின் அபேட்சகராக அவரின் இளைய பேரனை ஆன்ஜூ கோமகன் ஃபிலிப்பும் பேரரசர் லியோபால்டின் பிரதிநிதியாக அவரின் இரண்டாம் மனைவியின் இளைய மகனை ஆர்ச் டியூக் சார்லஸும் அறிவிக்கப் பட்டனர்.

இரண்டாம் சார்லஸின் அடுத்த வாரிசாக ஆன்ஜூ கோமகன் ஃபிலிப் வருவதில் ஓர் ஆபத்திருந்தது. பதினான்காம் லூயியின்

மகன் இளவரசர் லூயியும் அவரின் மகனை லூயியும் (பர்கண்டிக் கோமகன்) நோயாளிகள் ஆதலால், ஃபிரான்சின் அடுத்த வாரிசாக ஆன்ஜூ கோமகன் ஃபிலிப்பாகவும் இருக்கக்கூடுமென்ற நிலை அப்போதிருந்தது. தம் அடுத்த வாரிசைப் பற்றித் திட்ட வட்டமாகப் பதினான்காம் லூயியும் எதையும் அறிவித்துக் கொள்ளா திருந்தார். அவர் காலமானால் ஃபிலிப் அடுத்த ஃபிரெஞ்சு அரசராக வரக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டது. அந்த நிலையில், இரண்டாம் சார்லசின் அடுத்த வாரிசாக ஃபிலிப்பை அப்போதைக்கு ஏற்றுக்கொண்டால், பிற்காலத்தில் அவர் ஃபிரான்சுக்கும் அரசரானால் அதன் விளைவாக ஸ்பெயினும், ஃபிரான்சும், ஃபிலிப்பின் ஆட்சியில் இணைந்து ஐரோப்பிய வல்லரசு சமநிலையைப் பாதிக்கக்கூடும். ஆகவே, இரண்டாம் சார்லஸின் அடுத்த வாரிசாக ஆன்ஜூ கோமகனை ஃபிலிப் வருவது விரும்பப்படவில்லை.

பேரரசர் லியோபால்டின் இளைய மகனை ஆர்ச் டியூக் சார்லசும், ஸ்பெயினின் அடுத்த வாரிசாக வருவது விரும்பப்பட வில்லை. ஏனெனில், அவரின் மூத்த சகோதரர் ஜோசப் 1698-ல் நோய்வாய்ப்பட்டிருக்க லியோபால்டின் அடுத்த வாரிசாகச் சார்லஸ் வரக்கூடுமென்ற சூழ்நிலை இருந்தது. ஆர்ச் டியூக் சார்லஸுக்கு ஸ்பானிய வாரிசு கொடுக்கப்படுமாயின் பின் அவர் ஆஸ்திரியப் பேரரசராகப் பட்டம் பெற்றால் ஸ்பெயினும் ஆஸ்திரியவரசும் அவரின் ஆட்சியில் இணையக்கூடு மென்ற பயமும் அதனால் ஏற்பட்டது. அதுவும், ஐரோப்பிய வல்லரசு சம நிலையைப் பாதிக்கக்கூடும்.

பதினான்காம் லூயியின் பேரரான ஃபிலிப் பேரரசர், லியோ பால்டின் இளையமகனை ஆர்ச் டியூக் சார்லஸ் அல்லாமல் ஸ்பெயி னின் அடுத்த வாரிசாக இன்னொருவரின் பெயரும் பிரஸ்தாபிக்கப் பட்டது. பேரரசர் லியோபால்டின் முதல் மனைவியின் மகள்வழிப் பெயரரான பவேரியா இளவரசர் ஜோசப் ஃபெர்டினண்டு (Joseph Ferdinand) என்பவரே அந்த நபராகும். அக் காலத்திய ஐரோப்பிய வழக்கத்தின்படி பாட்டனாரின் வாரிசுரிமை பெற முடியாத மகள்வழிப் பெயரரான ஃபெர்டினண்டு எக்காலத்திலும் ஆஸ்திரியப் பேரரசை அடைய முடியாதென்பதால், அவருக்கு ஸ்பானிய வாரிசுரிமை கொடுக்கப்பட்டால் ஐரோப்பிய வல்லரசு சமநிலையைப் பாதுகாத்தது போலிருக்கும் என்ற நோக்கத்தில் ஃபெர்டினண்டை இரண்டாம் சார்லஸின் அடுத்த வாரிசாக்கத் திட்டமிட்டனர். அதற்கேற்ப மூன்றும் வில்லியத்தினால் முதலாம் பங்கீடு உடன்படிக்கை (First Partition Treaty) 1698-ல் செய்யப்

பட்டது. அதன்படி, ஜோசப் ஃபெர்டினண்டு ஸ்பெயினின் அடுத்த வாரிசாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். நஷ்ட ஈடாக ஃபிரான்சுக்கு நேபிள்ஸ் (Naples), சிசிலி (Sicily) பகுதிகள் கொடுக்கப்படவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பதினான்காம் லூயியும் அவ் வுடன்படிக்கைக்குத் தம் சம்மதத்தைக் கொடுத்திருந்தார். ஸ்பானிய வாரிசுரிமைப் பிரச்சினை இறுதியில் சுமுகமாகத் தீர்க்கப் பட்டதுபோல் காணப்பட்டது. ஐரோப்பியச் சமநிலையும் பாது காக்கப்பட்டதுபோல் தெரிந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக, ஜோசப் ஃபெர்டினண்டு காலமாகிவிட்டார் (1699). அதன் விளைவாக, ஸ்பானிய அரசுரிமைப் பிரச்சினை மீண்டும் தலை தூக்கியது.

ஐரோப்பியச் சமநிலையைக் காக்கக் கடமைப்பட்டிருந்த வில்லியம் ஸ்பானிய வாரிசுரிமையின் காரணமாகப் ஃபிரான்சும் ஆஸ்திரியாவும் மோதிக்கொள்ளாம லிருக்க வேண்டுமென நினைத்து, அவ் விரு அரசர்களையும் திருப்திப்படுத்த இரண்டாம் பங்கீட்டு உடன்படிக்கையை (Second Partition Treaty) 1699-ல் ஏற்பாடு செய்தார். நேபிள்ஸ், சிசிலி, மிலான் பகுதிகள் லூயிக்குத் தரப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டதால் அவ் வேற்பாட்டுக்கு லூயி தம் சம்மதத்தைத் தெரிவித்திருந்தார். பேரரசர் லியோபால்டின் இளைய மகனை ஆர்ச் டியூக் சார்லஸ்-இரண்டாம் சார்லஸ்-வாரிசாக அறிவிக்கப்பட்டார். அவரின் தமையனார் ஜோசப் உடல்நிலையில் குணம் பெற்றவராக இருந்தாலும், அவரே பேரரசின் வாரிசாகப் பட்டம் ஏற்க வாய்ப்பு இருந்தாலும் ஸ்பானிய அரசை ஆர்ச் டியூக்கிற்குக் கொடுக்க ஆட்சேபம் எதுவும் இல்லை. ஆனால், அந்த ஏற்பாட்டுக்கு இருவர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பேரரசர் லியோபால்டு, பங்கிடப்படாத மொத்தப் பகுதிகள் அடங்கிய ஸ்பானியப் பேரரசு தம் இளைய மகனை ஆர்ச் டியூக்குக்குக் கொடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டு இரண்டாம் பங்கீட்டு உடன்படிக்கையை ஏற்க மறுத்திருந்தார்.

எவருக்குப் பின் எவர் பட்டத்திற்கு வருவது என்ற பிரச் சினைக்கு உரியவரான இரண்டாம் சார்லஸ் மரணப்படுக்கையில் இன்னும் உயிரோடு இருந்துவந்தார்.

தமக்குப் பின் ஸ்பானியப் பேரரசு பங்கிடப்படுவதை விரும்பாமலும் ஆர்ச் டியூக் சார்லஸைத் தம் வாரிசாக ஏற்றுக் கொள்ள மறுத்தும் தம் அமைச்சர்களின் யோசனையில் 1700-ல் இரண்டாம் சார்லஸ் உயில் எழுதிவைத்துவிட்டுச் சில நாட்களுக் குள்ளாகவே காலமானார். இரண்டாம் சார்லசின் உயிலின்படி பங்

கிடைப்படாத ஸ்பானியப் பேரரசு பதினான்காம் லூயியின் பேரனை ஆன்ஜூ கோமகன் பிலிப்புக்குச் சேரவேண்டுமென அறிவிக்கப் பட்டது. இரண்டாம் பங்கீட்டு உடன்பாட்டை ஏற்கெனவே ஒப்புக்கொண்டு இருந்த பதினான்காம் லூயி ஸ்பானிய அரசரின் உயிலை ஏற்றுக்கொண்டு தம் பேரரான ஃபிலிப்பை ஸ்பானிய அரசர் ஐந்தாம் ஃபிலிப் என அறிவித்து, படை கொடுத்த ஸ்பானியத் தலைநகரான மாட்ரிடுக்கு (Madrid) அனுப்பி வைத்தார்.

இரண்டாம் சார்லஸின் உயிலும் பதினான்காம் லூயியின் செயலும் வியோபால்டுக்கு ஏமாற்றத்தையும் வில்லியத்திற்கு எரிச்சலையும் கொடுத்தன. அதனால் ஆஸ்திரியாவும், இங்கிலாந்தும் இணைந்து ஃபிரான்சுடன் போர் செய்யத் தயாராயின.

தமக்கெதிராகப் போர் செய்ய வில்லியம் ஏற்பாடு செய்வதைத் தெரிந்துகொண்ட பதினான்காம் லூயி 1697-ல் செய்து கொள்ளப்பட்டிருந்த ரைஸ்விக் (Ryswick) உடன்படிக்கையைக் கிழித்தெறிய முற்பட்டார். தடுப்புக் கோட்டைகளிலிருந்த டச்சுப் படையினரை விரட்டிவிட்டு, ஃபிரெஞ்சுப் படையினர் அதனைக் கைப்பற்றினர். போர் இனித் தப்பாது என்ற நிலை ஏற்பட ஃபிரான்சுக்கு எதிரான (Grand Alliance) கூட்டணியை வில்லியம் அமைக்கலானார். இதில் இங்கிலாந்து, ஹாலந்து, ஆஸ்திரியா, ஜெர்மனியச் சிற்றரசான பிராண்டன்பர்க்கும் பங்கு கொண்டன.

ஃபிரான்சுக் கெதிராகப் போர் உடன்பாடு (Grand Alliance) அமைக்கப்பட்டதற்குப் பதிலடி கொடுப்பதுபோல் ரைஸ்விக் உடன்பாட்டின் இன்னோர் அம்சத்தையும் லூயி மீறலானார். 1701-ல் இரண்டாம் ஜேம்ஸ் காலமடைந்துவிட்டதால் அவரின் மகனை மூத்த போலியை (James, the Old Pretender) இங்கிலாந்தின் அரசர் மூன்றும் ஜேம்சாகப் பதினான்காம் லூயி அறிவித்ததால் ஏற்கெனவே தவிர்க்கப்பட முடியாதிருந்த அப் போரில் இங்கிலாந்தின் வாரிசுரிமைப் பிரச்சினையும் இழுக்கப்பட்டது.

வில்லியம் தம் நம்பிக்கைக்குகந்த ஜான் சர்ச்சில் என்ற மார்ல்பரோ (Earl of Marlborough) எர்லைப் பேரணியின் படைகளுக்குத் தலைமைத் தளபதியாக்கினார். தாம் ஆயத்தம் செய்து வரும் போரை முன்னின்று நடத்த முடியாதென வில்லியத்திற்குத் தெரிந்திருந்தது. போர் தொடங்குவதற்கு முன் அதற்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களையும் வில்லியம் செய்து முடித்தார்.

தம் ஆட்சிக்காலத்தில் (1689-1702) வில்லியம் மக்களால் விரும்பப்படவில்லை. அது அவருக்கும் தெரிந்து இருந்தது. வில்லியத்தைப் பொருந்தாத அவசியமாகவே (Disagreeable necessity) இங்கிலாந்தில் ஆங்கிலேயர்கள் எண்ணினர். கண்டும் காணுதவராகக் கேட்டும் கேளாதவராக வில்லியம் தம் கடமையிலே கருத்தாக இருந்தார். அந்தக் கடமைவீரர் அந்நியராக இருந்தாலும் மற்றவர்களைக் கவரும் கலை கல்லாதவராக இருந்தாலும், மக்களால் விரும்பப்படாவிட்டாலும், அவர் எவராலும் வெறுக்கப்படவில்லை.

வில்லியம் 1702-ல் தற்செயலாகக் குதிரைமீதிருந்து விழுந்து ஏற்பட்ட காயத்தின் விளைவாகக் காய்ச்சல் கண்டு மரணமெய்தினர். அவர் விட்டுச் சென்ற பணியை மார்ல்பரோ பிரபு மேற்கொண்டு இங்கிலாந்தைப் பெரும் போருக்குத் தயாராக்கினர்.

(ஆ) ஆன் அரசி (Queen Anne, 1702—1714)

மூன்றும் வில்லியத்தின் மைத்துனியான ஆன் என்ற அரசியின் காலம் ஏறக்குறைய முன்னவரின் தொடர்ச்சிக் காலமாகவே இருந்ததெனலாம். குறிப்பாக வில்லியத்தின் வெளிநாட்டுப் போர் ஆன் அரசியார் காலத்திலேயே நடத்தி முடிக்கப்பட்டது.

டென்மார்க்கின் இளவரசராகிய ஜார்ஜ் என்பவருக்கு வாழ்க்கைப் பட்டுப் பல பிள்ளைகளைப் பெற்றிருந்தும், அத்தனை பேரையும் கால தேவனுக்குப் பறிகொடுத் திருந்த ஆன் அரசியின் சொந்த வாழ்க்கை இன்பகரமாக அமையாவிட்டாலும், அவரின் காலம் வரலாற்றில் சிறப்புப்பகுதியாக அமைந்திருக்கிறது.

இரண்டாம் ஜேம்ஸின் இளைய புதல்வியும், ஸ்டுவர்டு அரச மரபில் கடைசி ஆட்சியாளருமான ஆன் அரசியார் ஸ்பானிய வாரிசுரிமைப் போரில் இங்கிலாந்தை ஈடுபடுத்தினர். அதிருஷ்டவசமாக அவருக்கு உறுதுணையாகத் திறமையும் தகுதியும் கொண்டிருந்த மார்ல்பரோ பிரபு எனப் பின்னர்ப் பட்டம் பெற்ற ஜான் சர்ச்சில் என்பவரின் சேவை கிடைத்தது.

ஜான் சர்ச்சில்

1702-ல் ஐம்பது வயதைக் கடந்திருந்த ஜான் சர்ச்சில் இங்கிலாந்தின் மேற்குப் புறத்தில் சர் வின்ஸ்ட்டன் சர்ச்சில் என்ற சிறு பண்ணையாளருக்கு மகனாகப் பிறந்தார். இரண்டாம் சார்லஸ் காலத்தில் அரசரவையிலே நுழைந்திருந்த ஜான் சர்ச்சில் இரண்

டாம் ஜேம்ஸ் காலத்தில் படையின் தளபதியாக ஆக்கப்பட்டிருந்தார். 1685-ல் இரண்டாம் ஜேம்ஸின் ஆட்சிக் கெதிராக மான்மவுத் பிரபு தம் ஆதரவாளர்களுடன் கலகம் செய்தபோது செட்ஜ்மூர் சண்டையில் அரசரின் படைகளுக்குத் தலைமை தாங்கிய ஜான் சர்ச்சில் கலகக்காரர்களைத் தோற்கடித்து விரட்டினார்.

சாரா ஜென்னிங்ஸ் (Sarah Jennings) என்பவரை மணந்திருந்த ஜான் சர்ச்சில் இரண்டாம் ஜேம்ஸ் காலத்தில் ஒரு முக்கியப் பிரமுகராக மதிக்கப்பட்டிருந்தார். வாழ்க்கையில் முன்னேறி உன்னத நிலையை அடைய வேண்டுமென்ற அவாவினால் உந்தப்பட்ட ஜான் அரசியல் கட்சிகளையும் பூசலையும் பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல் அப்போதைக்கப்போது எழும் சந்தர்ப்பங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே நினைத்தார். 1688-ல் ஆரஞ்சு வில்லியம் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்ட நேரத்தில் அவருக்கு ஆதரவு கொடுப்பதாக ஜான் சர்ச்சில் ஒப்புக்கொண்டிருந்தார். ஜேம்ஸின் முக்கியப் படைத் தலைவரான ஜான் சர்ச்சிலின் ஆதரவும் தமக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையிலே துணிந்து, இங்கிலாந்துக்குப் படை கொண்டுவர ஆரஞ்சு வில்லியம் சம்மதித்தது குறிப்பிடத்தக்கது. வில்ட்ஷையரை நோக்கி, இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்துவிட்ட ஆரஞ்சு வில்லியம் முன்னேறிவந்தபோது அவரின் படைகளைத் தடுத்து நிறுத்த ஜேம்ஸ் தம் படைகளுடன் சாலிஸ்பரியில் காத்திருந்தபோது, ஜான் சர்ச்சில் வில்லியத்தின் பக்கம் சேர்ந்துகொண்டார். அது மட்டுமல்லாமல், தம் மனைவியின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டிருந்த ஆன் இளவரசியும் வில்லியத்தின் பக்கம் சேருவதற்குக் காரணமாக இருந்தார். அங்ஙனம், ஆங்கிலப் புரட்சியில் தம் ஆதரவை வில்லியத்திற்கு அளித்து நிலைமையை அவருக்கு ஜான் சாதகமாக்கிக் கொடுத்தார். ஆயின், நாளாவட்டத்தில் வில்லியம் தம் டச்சு நண்பர்களுக்கு உயர்பதவிகளை அளித்து வந்ததால், அரசரை வெறுத்த மற்ற ஆங்கிலப் பிரமுகர்களிலே தாமும் ஒருவராக இருந்தார். தம் தமக்கை மேரி அரசியார் காலமாகிவிட்ட பின்னர் ஆன் இளவரசியும் வில்லியத்தை வெறுத்ததால், அது ஜானின் மனப்போக்குக்கு ஒத்திருந்தது. ஆன் இளவரசியும், ஜான் சர்ச்சிலும் வில்லியத்தை 'மிஸ்டர் கேலிபான்' (Mr. Caliban) என நையாண்டிப் பெயரில் அழைத்துவந்தனர். தமக்கெதிரான நடவடிக்கைகளில் ஜான் சர்ச்சில் ஈடுபட்டிருந்தது மூன்றாம் வில்லியத்திற்குத் தெரிந்திருந்தது போன்று அவரின் தனிப் போர்த்திறமையும் அரசருக்குத் தெரிந்திருந்தது. ஆகவேதான், ஸ்பானிய வாரிசுரிமைப் போர் தவிர்க்க முடியாததாகக் காணப்பட்டபோது, தமக்குப்பின் அப்போரை நடத்தத் தகுதியுடையவ

ராக ஜான் சர்ச்சில் அரசரால் மதிக்கப்பட்டார். வில்லியத்தின் அமைச்சராக அமர்த்தப்பட்ட ஜான், அரசரின் பிரதிநிதியாக ஹாலந்துக்கும், ஆஸ்திரியாவுக்கும் சென்று, பதினான்காம் லூயியை எதிர்த்து 1701-ல் ஓர் உடன்பாட்டை (Grand-Alliance) உருவாக்கினர்.

ஃபிரான்சுக்கு எதிராக அமைக்கப்பட்ட பேரணியின் பிரதம தளபதியாக ஜான் சர்ச்சில் பதவி பெற்றார். 1702-ல் தொடங்கிய ஸ்பானிய வாரிசுரிமைப் போரில் இங்கிலாந்தின் வெற்றிகளுக்கு மூல காரணராக ஜான் சர்ச்சில் இருந்தாரென்பதை அப்போரின் போக்கைக் கவனிக்குங்கால் தெரியவரும்.

ஸ்பானிய வாரிசுப் போரின் போக்கு

ஸ்பெயின், பவேரியாவுடன் கூட்டுச் சேர்ந்த ஃபிரான்ஸ் ஒரு புறம், ஹாலந்து, ஆஸ்திரியா, ஜெர்மானியச் சிற்றரசான பிராண்டன் பர்க் ஆகிய நாடுகளுடன் உடன்பாட்டை அமைத்திருந்த இங்கிலாந்து இன்னொரு புறம் எதிர் அணிகளாகப் பிரிந்திருக்க, ஸ்பானிய வாரிசுரிமைப் போரை நாம் நான்கு பிரிவுகளாகப் பார்க்கவேண்டியுள்ளது.

முதல் கட்டம்

பதினான்காம் லூயியினால் தம் வசப்படுத்திக் கொள்ளப்பட்ட ஸ்பானிய நெதர்லாந்தில் அப் போரின் முதல் கட்டம் தொடங்கியது.

ஐந்தாம் ஃபிலிப்பை, பட்டத்திலிருந்து நீக்கி ஆர்ச்டியூக் சார்லசை ஸ்பெயினின் அரசராக்க வேண்டுமென்ற முக்கியக் குறிக்கோளை இங்கிலாந்து கொண்டிருந்த போதிலும், நேச நாடுகளான ஹாலந்து, ஆஸ்திரியாவை, ஃபிரான்சுப் படையெடுப்புப் பயத்திலிருந்து காக்கவேண்டிய கடமையும் இங்கிலாந்துக்கு இருந்தது. ஸ்பானிய நெதர்லாந்தை ஏற்கெனவே ஆக்கிரமித்திருந்த பதினான்காம் லூயியின் படைகள் எந்த நேரத்திலும் ஹாலந்தைத் தாக்கக் கூடுமென எதிர்பார்க்கப்பட்டது. ஹாலந்து தோற்கடிக்கப்பட்டுப் போரிலிருந்து விலக்கப்பட்டால் அது இங்கிலாந்துக்கு இழப்பாக இருக்கும். ஆகவே, ஜான் சர்ச்சில் தம் ஆங்கிலப் படைகளுடன் 1702-ல் ஹாலந்து வந்தடைந்தார். ஓராண்டுக்குள்ளாக ஆங்கில டச்சுப் படைகளின் உதவிகொண்டு ரைன் நதிக் கரையிலிருந்த போன் (Bonn), கெய்சேர்வெர்த் (Kaiserwerth) என்ற இடங்களையும் மியுங் நதிக்கரையிலிருந்த ரோயர் மோன்டி (Roer monde), லீக் (Liege) ஹய், (Huy) என்ற

இடங்களையும் ஜான் சர்ச்சில் கைப்பற்றினார். ஹாலந்தை ஃபிரெஞ்சு அபாயத்திலிருந்து காக்கப் படைகளைக் கொண்ட பாதுகாப்பு அரண் அமைத்தார். ஸ்பானிய நெதர்லாந்தைத் தாக்கிய ஃபிரெஞ்சுக்காரர்களை அங்கிருந்து விரட்டியடிக்க வேண்டுமென டச்சுத் தளபதிகள் கேட்டுக் கொண்டபோது, போரின் கண்ணோட்டத்தை முழுதும் கவனித்துவந்த ஜான் அதற்கு இசைய மறுத்துவிட்டார். ஆஸ்திரியப் பேரரசுக் கெதிராகப் பவேரியாவில் ஃபிரெஞ்சுக்காரர்கள் படை குவித்து வந்தது சர்ச்சிலுக்குத் தெரிந்திருந்ததால் தம் நேரத்தையும் படைகளையும் ஸ்பானிய நெதர்லாந்திடம் சண்டை செய்து வீணடிக்க அவர் விரும்பவில்லை.

இரண்டாம் கட்டம்

போரின் அடுத்த கட்டம் ஜெர்மனியில் தொடங்கியது. ஆஸ்திரியப் பேரரசின் தலைநகரான வியன்னாவைக் (Vienna) கைப்பற்றி லியோபால்டைப் பணிய வைக்க வேண்டி, பிரம்மாண்டமான படையெடுப்பு ஏற்பாடுகளை லூயியின் படைகள் மார்ஷல் தாலர்டு (Marshal Tallard) என்பவரின் தலைமையில் செய்து வந்தன. அதற்குத் துணையாகப் பவேரியாச் சிற்றரசும் தன் படைகளைக் கொடுத்திருந்தது. எந்தச் சமயத்திலும் வியன்னாவின்மீது படையெடுப்பு ஏற்படலாமென்ற நிலை இருந்தது. வியன்னா கைப்பற்றப்பட்டுவிட்டால், நிச்சயமாகப் போரிலிருந்து ஆஸ்திரியா விலக நேரிடும். அதன்பின் ஸ்பானிய அரசுரிமைப் போரைத் தொடர்ந்து நடத்துவதில் எவ்விதப் பயனுமிராது. இதையெல்லாம் நன்குணர்ந்த ஜான் சர்ச்சில் 1704-ல் 9000 வீரர்களுடன் ஜெர்மனியில் நுழைந்தார். அங்கு ஏற்கெனவே இளவரசன் யூஜென் (Eugene) என்ற ஆஸ்திரியப் படைத்தலைவரின் தலைமையில் காத்திருந்த 43,000 வீரர்களுடன் ஜான் தொடர்பு கொண்டு பிளென்ஹிம் (Blenhim) என்ற இடத்தருகே முகாமிட்டிருந்த ஃபிரெஞ்சுப் - பவேரியப் படைகளைத் திட்டமிட்டுத் திடீரெனத் தாக்கினார். தொடர்ந்து நடந்த கடுமையான சண்டையில் 14,000 ஃபிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டனர். மார்ஷல் தாலர்டு உள்பட 10,000 வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். 13-8-1704-ல் நடந்த அச் சண்டை போரின் போக்கைமட்டு மல்லாமல், ஜான் சர்ச்சிலின் வாழ்க்கைப் பாதையையும் மாற்றியதாக இருந்தது.

வியன்னாவைமட்டு மல்லாமல் ஜெர்மனியையும் ஃபிரெஞ்சு ஆக்கிரமிப்பிலிருந்து பிளென்ஹிம் (Blenhim) சண்டை காத்தது. தோற்கடிக்கப்பட முடியாதெனக் கருதப்பட்ட லூயியின் படை

களையும் தோல்வியுறச் செய்ய முடியுமென அச் சண்டை நிரூபித்தது. அப் பெரு வெற்றிக்குக் காரணமான ஜான் சர்ச்சிலுக்கு நன்றியறிதலைக் காண்பிப்பதுபோல், ஆங்கிலப் பாராளுமன்றம் பண முடிப்பைக் கொடுத்து அதில் அவர் அரண்மனையோடு கூடிய பெரிய பண்ணையை வாங்கச் செய்திருந்தது. அவரது போர்த் திறமையை மெச்சி, 'மார்ல் பரோ பிரபு' (Duke of Marlborough) என்ற பட்டப் பெயரும் ஜானுக்குக் கொடுக்கப்பட்டது.

மூன்றாவது கட்டம்

அடுத்த கட்டத்தில் போர் ஐபீரியன் தீபகற்பத்திலே தொடங்கியது. மிதுயன் ஒப்பந்தம் (Methuen Treaty) என்ற வணிக உடன்பாட்டைச் செய்துகொண்ட போர்ச்சுகல் நாடு 1703-ல் இங்கிலாந்தின் நட்பு நாடாக மாறி யிருந்ததால், அந் நாட்டை அடித்தளமாக வைத்து ஸ்பெயினைத் தாக்குவது நேச நாடுகளுக்குச் சுலபமாக இருந்தது. சர் ஜார்ஜ் ரூக் (Sir George Rooke) என்ற ஆங்கிலக் கப்பற் படைத்தலைவர் ஜிப்ரால்டர் (Gibralter) என்ற கேந்திரமான கோட்டையை 1704-ல் கைப் பற்றியிருந்தார். (அது இன்றுவரை இங்கிலாந்துக்குச் சொந்த மாக இருந்துவருகிறது.) பீட்டர்பரோ (Peterborough) பிரபு வின் தலைமையில் ஆர்ச் டியூக் சார்லஸை உடன்கொண்டிருந்த ஆங்கிலோ - ஆஸ்திரியப் படை யொன்று ஸ்பானியப் பகுதியான கேடலோனியாவை (Catalonia) மிக எளிதாக 1705-ல் கைப் பற்றியது. கால்வே (Galway) பிரபுவின் தலைமையில் போர்ச்சு கலிலிருந்து புறப்பட்ட ஆங்கிலோ - டச்சுப் படையினர் ஸ்பானி யத் தலைநகரமான மேட்ரிட் (Madrid) நகரைக் கைப்பற்றி, ஆர்க் டியூக்கை ஸ்பானிய அரசராக அறிவித்தனர். ஆயின், ஸ்பானியர் கள் கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றி நேச நாட்டுப் படைகளைத் தாக்கியதன் விளைவாக மேட்ரிட் கைவிடப்பட்டது. 1706-ல் மீண்டும் அத் தலைநகரைக் கைப்பற்ற முயன்றபோது நேச நாட்டுப் படையினரை 1707-ல் அல்மேன்ஜா (Almanza) என்னுமிடத்தில் பெர்விக் பிரபுவின் தலைமையில் ஃபிரெஞ்சுப் படைகள் தோற்கடித்து வெற்றி கண்டன. 1710-ல் மேட்ரிட் நகரை மீண்டும் நேச நாட்டுப் படைகள் தாக்க முயன்றபோதும் ஸ்பானியர்களால் எதிர்க்கப்பட்டன.

நான்காம் கட்டம்

ஸ்பெயின் பகுதியில் நேச நாட்டுப் படைகள் போரிட்டுக் கொண்டிருந்த காலத்தில், மார்ல்பரோ பிரபு நெதர்லாந்தில் தாக்குதல்களைத் தொடங்கி ஃபிரெஞ்சுப் படைகளைப் பின்னுக்குத்

தள்ளினர். 1706 - 1709 ஆண்டுகளில் முப்பெரும் வெற்றிகளை அவர் அடைந்திருந்தார். ராமீலீஸ் (Ramillies) என்ற இடத்தில் 1706-ல் நடந்த சண்டையில் பெரு வெற்றி பெற்று ஆன்ட்வெர்ப், புருசல்ஸ் என்னும் இடங்களை மீட்டார். 1708-ல் ஔடனர்டு (Oudenarde) என்ற இடத்தில் நடைபெற்ற சண்டையிலும் வெற்றிபெற்று ஃபிரான்சு நாட்டு எல்லைக்குள் எதிரிகளை விரட்டினர். மால்பிளாகுட் (Malplaquet) என்ற இடத்தில் மற்றொரு சண்டை 1709-ல் நடக்க அதிலும் வெற்றி கண்ட மார்ல்பரோ பிரபு ஃபிரான்சு நாட்டு எல்லைக் கோட்டைகளையும் தாக்க ஆரம்பித்தார். ஸ்பானிய நெதர்லாந்தை இழந்துவிட்ட ஃபிரெஞ்சுக்காரர்கள் தங்கள் நாட்டின் எல்லைப்புறத்தில் கடுமையாகப் போர் செய்து, எதிரிகளை உள்ளே நுழையாவண்ணம் தடுத்தனர்.

1708-ல் மத்திய தரைக்கடலிலிருந்த மைனர்க்கா (Minorca) தீவினைக் கைப்பற்றியிருந்த ஆங்கிலக் கப்பற்படை, ஃபிரெஞ்சுத் துறைமுகமான டளெலனைக் கைப்பற்ற முயன்றும் முடியவில்லை. மேட்ரிட் நகரை அடைந்திருந்த நேச நாட்டுப் படையினர் ஸ்பானியர்களால் தோற்கடிக்கப்பட்டுப் பிரிஜியுகா (1710) என்னுமிடத்தில் சரணடைந்திருந்தனர். மார்ல்பரோ பிரபுவின் கடுமையான முயற்சிகளும் ஃபிரான்சை ஊடுருவுவதில் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. ஏற்கெனவே இருமுறை பதினெண்காம் லூயி சமாதான உடன்படிக்கைகளைக் கோரியிருந்தும் அவை நிராகரிக்கப்பட்டுப் போரை இங்கிலாந்தில் தொடர்ந்து நடத்திவந்தது மார்ல்பரோவின் தூண்டுதலாலேயே என 1711-ல் பதவிபெற்ற டோரி மந்திரிகள் கருதினர். அச்சமயத்தில், அதுவரை அந்நியோன்யமாக இருந்துவந்த ஆன் அரசியும் மார்ல்பரோவின் மனைவியான சாராவும் சச்சரவிட்டுக்கொண்டதால், அரசியின் ஆதரவை அப் பிரபு இழக்க வேண்டியவரானர். தொடர்ந்து ஏற்பட்ட கட்சிப் பூசல்களில் மார்ல்பரோவின் பதவியும் பறிபோனது. போர்த் திறமை கொண்டிருந்த மார்ல்பரோ சந்தர்ப்பவாதியாக இருந்ததால் அரசியல் கட்சியினரிடையே நிரந்தரச் செல்வாக்கைப் பெற முடியவில்லை. ஆக, பதவியிலிருந்து விரட்டப்பட்டதும், மார்ல்பரோ, அரசியலிலிருந்து விலகிக்கொண்டார்.

அவருக்குப்பின் பிரதம தளபதியாக அமர்த்தப்பட்ட ஆர்மோன்டி (Ormonde) என்ற படைத்தலைவருக்குப் போரைத் தொடர்ந்து நடத்த இங்கிலாந்து அரசாங்கம் உற்சாகம் அளிக்கவில்லை. ஏனெனில், இங்கிலாந்தில் மந்திரி சபை அமைத்திருந்த டோரிக் கட்சியினருக்குப் போரைத் தொடர்ந்து நடத்துவது அர்த்த மில்லாததாக இருந்தது. அவர்களின் எண்ணத்திற்

கேற்ப, அதுவரை, எவரை ஸ்பெயினுக்கு அரசராக்க் இங்கிலாந்து போர் செய்துவந்ததோ, அந்த ஆர்ச் டியூக் சார்லஸ் தன் சகோதரன் ஜோசப் காலமானதை யொட்டி 1711-ல் ஆஸ்திரியப் பேரரசின் பட்டத்தைப் பெற்றிருக்கப் போரைத் தொடர டோரிகளுக்கு விருப்பமில்லை.

ஸ்பானிய நெதர்லாந்தையும், இத்தாலியில் டியூரின் (Turin) பகுதியையும் வட அமெரிக்காவில் அகேடியா (Agadia) வையும் இழந்திருந்த ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் போரில் சலிப்புத் தட்டி விட்டது.

அந்தச் சூழ்நிலையில் உட்ரெக்ட் உடன்படிக்கை (Treaty of Utrect) என்ற சமாதான ஒப்பந்தம் 1713-ல் கையெழுத்தாகியது.

ஸ்பானியப் பேரரசு பிரிக்கப்பட்டது; ஸ்பெயின், அமெரிக்கப் பகுதிகளுக்கு ஃபிலிப் அரசராக ஒப்புக்கொள்ளப்பட்டார்; நேபிள்ஸ், மிலான், நெதர்லாந்து ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவுக்குக் கொடுக்கப்பட்டன; தடுப்புக் கோட்டைகளை ஹாலந்திடம் ஒப்படைக்க ஃபிரான்ஸ் ஒப்புக்கொண்டது.

ஸ்பெயின், ஆஸ்திரியா, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு அவ் வுடன்படிக்கை திருப்தியைக் கொடுக்காவிடினும், இங்கிலாந்தைப் பொறுத்தவரையில், அது இலாபகரமாகவே இருந்தது.

ஜிப்ரால்ட்டர், மைனர்க்கா, நோவாகோசியா (Novocotia), நியூபவுண்ட்லாந்து, ஹட்சன் வளைகுடாவில் ஃபிரெஞ்சுக்குடியேற்றங்களையும், இங்கிலாந்து தன் பங்காகப் பெற்றது. அவையல்லாமல், அசியென்டோ உடன்பாடு (Asiento Treaty) என்ற தனி ஒப்பந்தத்தின்கீழ், ஸ்பெயினிடமிருந்து சில பிரத்தியேக வர்த்தகச் சலுகைகளையும் இங்கிலாந்து பெற்றிருந்தது. அதன்படி நீக்ரோ அடிமைகளை ஸ்பானியக் குடியேற்றங்களில் விற்பதற்கான உரிமையையும், ஆண்டொன்றுக்கு 600 டன்கள் பெறுமான வியாபாரப் பொருள்களை அக் குடியேற்றங்களில் இறக்குமதி செய்வதற்கான சலுகையினையும் இங்கிலாந்து பெற்றது.

உட்ரெக்ட் உடன்பாட்டினால் இங்கிலாந்து வர்த்தகப் பேரரசாகவும் கடலாதிக்கம் பெற்ற வெற்றி நாடாகவும் விளங்கியது. இங்கிலாந்தின் முக்கியப் பகைவரான பதினான்காம் லூயியின் கொட்டமும் அடக்கப்பட்டுவிட்டது.

முதல் சிறப்பைப் பொறுத்தவரையில் கன்னியரசியின் கனவும், அடுத்த சிறப்பைப் பொறுத்தவரையில் மூன்றும் வில்லியத்

தின் கனவும் 1713-ல் ஆன் அரசியார் காலத்தில் நனவாக்கப் பட்டன.

உள்நாட்டு விவகாரம்

அடுத்து, ஆன் அரசியாரின் காலத்தில் இங்கிலாந்தில் ஏற் பட்ட உள்நாட்டு நிகழ்ச்சிகளைக் கவனிப்போம். அவற்றில் மிக முக்கியமானதாக, இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் இணைத்த ஒற்றுமைச் சட்டம் (Union Act) கருதப்படுகிறது.

முதலாம் ஜேம்ஸ் காலத்திலிருந்தே இங்கிலாந்தும், ஸ்காட் லாந்தும் ஓர் அரசரால் ஆளப்பட்டுவந்தபோதிலும் பொதுநலத் துரைத்தன காலத்தைத் தவிரத் தனித் தனியாக இரு பாராளு மன்றங்கள் அந்நாடுகளில் இயங்கி வந்தன. 1688-ல் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சியினால் இங்கிலாந்துப் பாராளுமன்றம் முக்கிய அதிகாரங்கள் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்பதாக இருந்தது. ஸ்காட்லாந்தின் பிரதிநிதிகள் இல்லாத ஆங்கிலப் பாராளு மன்றத்தினால் ஸ்காட்லாந்தின் நலன்கள் கவனிக்கப்படுமா? என்ற ஐயமான நிலை ஏற்பட்டது. முன்பு வில்லியம் ஆண்ட காலத்தி லும் இரு நாடுகளின் பாராளுமன்றங்களை இணைக்கும் முயற்சி யோசிக்கப்பட்டபோதிலும், அது நிறைவேற வில்லை. மாறாக, அவரின் காலத்தில் ஏற்பட்டிருந்த கிளன்கோ படுகொலை, டேரி யன் திட்டத்தின் தோல்வி போன்ற நிகழ்ச்சிகள் இங்கிலாந்தின் கூட்டிலிருந்து ஸ்காட்லாந்து தனியாகப் பிரிய வேண்டுமென்ற ஓர் எண்ணத்தை ஒரு சில ஸ்காட்டியர்களிடையே ஏற்படுத்தி யிருந்தது. அதோடல்லாமல், தங்களின் பிரஸ்பிடீரிய சமயம் இங்கிலாந்தின் ஆட்சியாளர்களால் பாதிக்கப்படுமோ என்ற பயமும் அவர்களுக்கு எழுந்தது. குறிப்பாக, இங்கிலாந்தின் வர்த்தகக் கம்பெனிகளிலே ஸ்காட்டியர்களுக்குப் பங்கு கொடுக்கா தது பெரிய குறையாக இருந்தது. அந்தச் சூழ்நிலையிலே 'ஆன்' பிள்ளைகள் இல்லாமல் இறக்க நேரிட்டால் அடுத்த வாரிசாக ஹானோவரின் சிற்றரசியான சோபியாவுக்குப் பட்டம் தரப்பட வேண்டுமென, இங்கிலாந்தின் பாராளுமன்றத்தினால் அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement) கொண்டுவரப்பட்டபோது தங்கள் பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்க வில்லையே என்ற குறை ஸ்காட்டியர்களுக்கிடையே எழுந்தது. இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஒரே அரசரால் ஆளப்பட வேண்டியிருந்ததால், தங்களின் சம்மதத்தை ஆங்கிலப் பாராளுமன்றம் கேட்க வில்லையே என ஸ்காட்டியர்கள் குறைபட்டுக் கொண்டதில் நியாய மிருந்தது.

அங்ஙனமாக, ஸ்காட்டியர்களுக்கிடையே பயமும், குறையும், வெறுப்பும், நிலவி வந்த நேரத்திலேயே 'ஆன்' அரசி பட்டம் பெற்றிருந்தாள். ஸ்பானிய வாரிசுரிமைப் போரில் தன் கவனத்தை இங்கிலாந்து செலுத்திவந்த அந்த நேரத்தில், ஸ்காட்லாந்து பாராளுமன்றம் 1703-ல் பாதுகாப்புச்சட்டத்தை (Act of Security) இயற்றியது. அதன்படி, 'ஆன்' அரசிக்குப் பின்னர் ஸ்காட்லாந்து தனி பிராடஸ்டென்டு அரசால் ஆளப்படவேண்டுமென்றும், சமய விவகாரங்களில் சுதந்தரமும், கடல் கடந்த வர்த்தகத்தில் சம உரிமையும் கொடுக்கப்பட்டால் 'ஆன்' அரசிக்குப் பின்னரும் இங்கிலாந்தின் ஹானேவரிய அரசர்கள் ஸ்காட்லாந்தைத் தொடர்ந்து ஆளலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சுருக்கமாக, தனி அரசு என்ற நிலை, (அல்லது) சம உரிமை கொண்ட கூட்டாளி என்ற தகுதியை ஸ்காட்லாந்தியர்கள் கேட்டனர். பாதுகாப்புச் சட்டத்திற்குத் தன் சம்மதத்தை அளிக்க 'ஆன்' அரசி மறுத்ததில் வியப்பொன்று மில்லை. ஸ்பானிய வாரிசுரிமைப் போர் நடந்துவந்த அந்த நேரத்தில், இங்கிலாந்து ஸ்காட்லாந்துப் போர் மூண்டுவிடுமோ என்ற அச்சம் எழுந்தது. அச் சமயம் அவ் விரு நாடுகளுக்கும் போர் மூண்டால் பதினைன்காம் லூயிக்கு அது சாதகமாகவே முடியும். ஸ்டூவர்டுகளின் முன்னிலை மீட்சியும் சாத்தியமாகலாம். இரண்டாம் ஜேம்ஸின் மகன் இங்கிலாந்து - ஸ்காட்லாந்து நாட்டின் அரசராக வர வாய்ப்பு ஏற்படலாம். ஆகவே, ஆங்கிலேயர்களும், ஸ்காட்டியர்களும் தங்களின் விவகாரங்களைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள விரும்பினர். அதற்கேற்ப 'ஆன்' அரசி இரு நாட்டின் பிரமுகர்கள் சிலரைப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட குழுவில் அங்கத்தினர்களாக்கி நிலவரத்தைக் கவனித்துத் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்தாள். அவர்கள் கொடுத்திருந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து 1707-ல் ஐக்கியச் சட்டம் (Act of Union) கொண்டு வரப்பட்டது.

ஸ்காட்டியர்களுக்குச் சமய சுதந்தரமும், வர்த்தகச் சலுகைகளும் கொடுக்கப்பட்டன. ஸ்காட்லாந்திய தனிப்பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன் அங்கத்தினர்கள் இங்கிலாந்தின் மன்றத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அதுவரை, அரசரின் ஆட்சியிலே மட்டும் இணைக்கப்பட்டிருந்த இரு நாடுகள் 1707-க்குப் பின்னர்ப் பாராளுமன்றத்திலும், வர்த்தகத்திலும் ஐக்கியமாக்கப்பட்டன. 1-5-1707-ல் இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும் கூடிய கிரேட் பிரிட்டன் ஐக்கிய அரசு உதயமாகியது.

கட்சிகளின் அடிப்படையில் மந்திரி சபையினை அமைக்கும் வழக்கம் மூன்றும் வில்லியத்தின் காலத்தில் தொடங்கியிருந்த

போதிலும், அதன் தொடர்ச்சியாக 'ஆன்' அரசியாரின் காலம் அமைந்திருந்தது.

ஆன் அரசி பட்டத்திற்கு வந்தபோது 'டோரிக் கட்சி' காமன்ஸ் சபையில் பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்தது. கொடால்ஃபின் (Gudolphin) தலைமையில் மார்ல்பரோ பிரபுவை இராணுவ அமைச்சராகக் கொண்ட டோரி மந்திரிசபை, 'ஆன்' அரசியால் அமைக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையி லிருந்து டோரிகள் ஸ்பானிய வாரிசுரிமைப் போரில் அதிக ஆர்வம் காட்டாது போதிய ஒத்துழைப்பு கொடுக்க மறுத்ததால், 'விக்' கட்சியைச் சேர்ந்த சிலரை அமைச்சர்களாகச் சபையில் சேர்த்துக் கொள்ள 'ஆன் அரசி' மார்ல்பரோ பிரபுவினால் வற்புறுத்தப் பட்டாள். ஆக, 1705-ல் டோரிகள் - விக்குகள் அடங்கிய கலப்பு மந்திரிசபை அமைக்கப்பட்டது.

அந்த ஆண்டிலே நடந்த பொதுத் தேர்தலில் 'விக்'குகள் காமன்ஸ் சபைக்குப் பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தனர். கலப்பு மந்திரி சபையைக் கலைத்துவிட்டு முழுக்க முழுக்க விக்குகள் கொண்ட அமைச்சரவையை அரசி அமைக்க வேண்டுமெனக் கோரப்பட்டது. டோரிக் கட்சியின் அனுதாபி யான ஆன் அரசி அதற்கு மறுத்து, எவரையும் அமைச்சராக வைத்திருக்கக் தனக்கு உரிமை உண்டென்று வாதம் செய்தாள். ஆனால், இறுதியில் விக்குகளின், வற்புறுத்தலுக்கு அரசி இணங்க வேண்டியதாயிற்று. கோடால்ஃபினும், மார்ல்பரோவும் தங்களை விக்குகளாக அறிவித்துக்கொள்ள, விக்குகளடங்கிய மந்திரிசபை 1708-ல் அமைக்கப்பட்டது. எக் கட்சி காமன்ஸ் சபையில் பெரும் பான்மை பெற்றிருக்கிறதோ அக் கட்சியைச் சேர்ந்தவர்களையே அமைச்சர்களாக்க வேண்டுமென்னும் வழக்காறு அப்போது வலி யுறுத்தப்பட்டது.

ஆயின், விக் மந்திரிசபை அதிக காலம் பதவியிலிருக்க வில்லை. ஸ்பானியப் போரில் தொடர்ந்து தோல்விகளைப் பெற்றுவந்த பதினான்காம் லூயி சமரசத்திற்குத் தமது விருப்பத்தைத் தெரிவித் திருந்தும் இங்கிலாந்து அதை நிராகரித்து விக்குகளின் வற்புறுத் தலினால் போரைத் தொடர்ந்து நடத்திவந்தது. ஆனால், நேச நாட்டுப் படையினருக்கு அல்மேன்சா (Almanza) என்ற இடத்தில் பெருந்தோல்வி கிடைத்திருந்தது. 1709-ல் மால்பிளாகுட் (Malplaquet) சண்டையில் மார்ல்பரோ பிரபு வெற்றி பெற்றிருந்த போதிலும், 25,000 வீரர்களை இழந்திருந்தார். அரசிக்கும், டோரிக் கட்சியினருக்கும் போரிலே சலிப்புத் தட்டத் தொடங் கியது. விக்குகளின் பிடிவாதத்தினாலேயே போர் மேலும்

தொடர்ந்து வந்தது. அச் சமயத்தில் தம் கட்சியினருக்கு எதிராகப் போதனைக் கூட்டம் நடத்திய குற்றத்திற்காக, டாக்டர் சச்சிவரல் (Dr. Sacheverell) என்ற மத பிரசாரகரை விக் மந்திரிசபை தண்டிக்க முயன்றபோது, நாட்டிலே கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அவர் செய்த சிறு தவற்றைப் பிரபலப்படுத்திப் பழிவாங்க விக் அரசாங்கம் நடவடிக்கை யெடுக்க, டோரிக் கட்சியினர் அதைச் சுட்டிக் காட்டி விக்குகளுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்தனர். அதனால் மக்களிடையே விக் மந்திரிசபை செல்வாக்கை இழந்தது. அந்த நேரத்தில் 'ஆன்' அரசி அமைச்சரவையைக் கலைத்து டோரிகளடங்கிய புது மந்திரிசபையை அமைத்தார். அரசி செய்தது சரியென ஆமோதிப்பதுபோல் 1710–ல் நடந்த பொதுத் தேர்தலில் டோரிக் கட்சியினர் காமன்ஸ் சபையில் பெரும்பான்மை பெற்றிருந்தனர்.

மார்ல்பரோ பிரபு பதவியிலிருந்து நீக்கப்பட்டார். சமாதானத்தை விரும்பிய டோரிகள் 1713-ல் உட்ரெக்ட் உடன் பாட்டைச் செய்து, ஸ்பானிய வாரிசுப் போரை முடித்தனர்.

வெளிநாட்டுப் போர் முடிந்த நேரத்தில் உள்நாட்டில் கட்சிப் பூசல்கள் தொடங்கின. விக்குகளின் செல்வாக்கை நாட்டிலே நசுக்க வேண்டுமென டோரிக் கட்சியினர் திட்டமிட்டனர். அதற்கு ஆதரவாக அரசியாரும் இருந்தார். அதற்குக் காரணமும் இருந்தது. அரசுரிமை நிர்ணயச் சட்டத்தின்படி தமக்குப்பின் ஹானேவரியர்களே பட்டம்பெறவேண்டுமென ஏற்கெனவேஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. அதை நிறைவேற்றுவதில் விக்குகளே அதிக ஆர்வம் காட்டியவர்க ளென்பதை அரசி அறிந்திருந்தார். தமக்குப்பின் தம் சகோதரனை ஜேம்ஸ் ஸ்டூவர்ட்டைப்பட்டத்தில் அமர்த்தவேண்டுமென ஆன் அரசி விரும்பினாள். அவளின் எண்ணத்திற்கு டோரிகள் ஆட்சேபம் தெரிவிக்க மாட்டார்களென நம்பவும் இடமிருந்தது. டோரிக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் ஃபிரான்சில் அடைக்கல வாழ்வை நடத்திவந்த இரண்டாம் ஜேம்ஸின் மகனுடன் இரகசியத் தொடர்பு கொண்டு, அவர் தம் கத்தோலிக்க மதத்தை வெளித்தோற்றத்திற்கு மட்டுமாவது விட்டுவிட்டதாகப் பாவனை செய்தால் அவரை இங்கிலாந்தின் அரசராக்கத் தாங்கள் முயலுவதாகச் சொல்லிவந்தனர். ஆனால், சமயப் பற்றுக் கொண்ட ஜேம்ஸ் அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்து வந்தபோதிலும், அவரை எப்படியும் அரசராக்கிவிடலாமென டோரிகள் நம்பிவந்தனர். 'ஆன்' அரசியும் அதையே விரும்பினாள்; ஆனால், விக் கட்சியினர் ஒருபோதும் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்களென டோரிக் கட்சித் தலைவர்களுக்குத் தெரியும். டோரி

களின் எண்ணத்தைத் தெரிந்து வைத்திருந்த விக்குகள் முன்னேற் பாடாக ஹானேவெரியர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண் டனர்.

தொடக்கத்தில் 'விக்,' டோரிக் கட்சிகளிடையே ஏற்பட்ட பூசல், பின் டோரிக் கட்சியின் உள்ளேயே ஏற்பட்டுவிட்டது. அக் கட்சியின் இருபெரும் தலைவர்களான ஆக்ஸ்ஃபோர்டு பிரபுவும் (Earl of Oxford) பாலிங் புரூக்கும் (Boling Broke) பெருமையின் காரணமாகத் தங்களுக்குள் பூசலிட்டுக் கொண்டனர். முன்ன வரின் விக்குகளின் சார்பான கொள்கை பின்னவருக்குப் பிடிக்காம லிருந்தது. அரசியிடம் தம் செல்வாக்கைப் பயன்படுத்தி, பாலிங் புரூக் அவரின் சக அமைச்சரான ஆக்ஸ்ஃபோர்டு பிரபுவைப் பதவி யிலிருந்து விரட்டி விட்டார். அதைத் தொடர்ந்து தம் ஆதர வாளர்களை அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்புகளில் அமர்த்தி இங்கிலாந்தில் டோரிக் கட்சியின் பலத்தை வேரூன்றச் செய்ய பாலிங் புரூக் முனைந்திருந்தபோது 1-8-1714-ல் 'ஆன்' அரசி காலமாகிவிட்டார். இன்னும் சில வாரங்களுக்கு அரசியார் உயிர் வாழ்ந்திருப்பாரேயானால், பாலிங் புரூக் விக்குகளை ஒழித்து, ஜேம்ஸ் ஸ்டூவர்ட்டை இங்கிலாந்தின் அரசராக்க முனைந்திருப் பார். ஆனால், அத் திட்டம் நிறைவேறவில்லை.

ஆன் அரசி இறப்பதற்குச் சில நாள்களுக்கு முன்னரே இளவரசி சோபியா காலமடைந்ததால் அவரின் மகன் ஹானே வரின் தேர்வாளர் ஜார்ஜ் லியூஸ் (George Lewis) என்பவர் இங்கி லாந்தின் அரசராக அரசுரிமை நிர்ணயக் கூட்டத்தின்படி முதலாம் ஜார்ஜ் (George I) என விக்குகளால் அறிவிக்கப்பட்டார். எதிர்ப்பதில் பலனில்லை எனக் கருதிய பாலிங் புரூக்கும் மற்ற டோரிகளும் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாயினர். அத்துடன் ஸ்டூவர்டு அரச குடும்ப ஆட்சி முடிந்தது. ஹானேவர் களின் ஆட்சி உதயமாயிற்று.

12. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து

(அ) முதலாம் ஜார்ஜ் - சர் ராபர்ட் வால்போல் (1721 - 1742)

இங்கிலாந்தின் வரலாறு 18ஆம் நூற்றாண்டில் பொலிவு பெற்றுக் காண்பதற்குச் சில முக்கியத் தலைவர்கள் காரணராவர். அவர்களின் வரிசையிலே, காலப்படி வால்போல் முதன்மையாக விளங்குகிறார்.

ஆன் அரசியார் காலமானதையொட்டி 1714ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் ஐம்பத்துநான்கு வயது நிரம்பிய முதலாம் ஜார்ஜ் ஆங்கில அரசுரிமை நிர்ணயச் சட்டத்தின்படி இங்கிலாந்தின் மன்னராஞர். அரசுரிமையைத் தாம் பெற்றதற்கு விக்குக் கட்சியினரே காரணராவார்கள் என்பதை முதலாம் ஜார்ஜ் தெரிந்து வைத்திருந்தார். அதனால் விக்குக் கட்சியினரே முக்கிய அரசாங்கப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர். பாலின் புரூக் போன்ற டோரித் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டதைத் தொடர்ந்து டோரிக் கட்சி சிதைய ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து விக்குகளின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. அந்தச் சூழ்நிலையில் நாட்டின் தலைமையை விக் கட்சி பெற்றுப் பணக்காரச் சிறு குழு ஆட்சி (Oligarchy) அமைத்தது. இது இங்கிலாந்து வரலாற்றில் விக் சிறு குழு ஆட்சி (Whig Oligarchy) என அழைக்கப்படுகிறது. விக்குக் கட்சியின் தலைவராக விளங்கிய வால்போல் 21 ஆண்டுகள் பதவியி லிருந்து அந்த நாட்டின் மாபெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

வாழ்க்கை வரலாறு

1676ஆம் ஆண்டு நார்ஃபோக் மாகாணத்துப் பெருநிலக்கிழார் குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகளில் மூன்றாவது மகனாக வால்போல்

பிறந்திருந்தார். கேம்பிரிட்ஜின் ஈடன் (Eton) கல்லூரியில் நற் கல்வியைப் பெற்ற வால்போல் தம் மூத்த சகோதரர்களின் இறப் புக்குப் பின்னர்க் குடும்பத்தின் பூர்விகச் சொந்தங்களுக்கு உரியவரானார்.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக் கனவானுக்கிருந்த சில தீய குணங்களைக் கொண்டிருந்த வால்போல் மனித இயல் பைப்பற்றி மிக மட்டமான கருத்தைக் கொண்டிருந்தார். உயர்ந்த ஒழுக்கத்தில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. பணத் தினாலும், பதவியாலும், படாடோபத்தாலும் எதையும் சாதிக் கலாமென நினைத்தாரே தவிர இலட்சியங்களைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. ஆயின் கடமைப் பற்றுக் கொண்டிருந்த வால் போல் தம் அரசியல் பணிக்குத் தம்மைத் தம் வாழ்க்கையின் ஆரம்பக் காலத்திலேயே அர்ப்பணித்துக்கொண்டார்.

1700ஆம் ஆண்டு விக் கட்சியின் அங்கத்தினராகப் பாராளு மன்றத்தில் நுழைந்த வால்போல் 1708-ல் மார்ல்பரோ பிரபுவின் கீழ் அமைச்சராகப் பணியாற்றினார். அவரது ஆழ்ந்த கட்சிப் பற்றினைக் கண்டு பொருமிய டோரிகள் வால்போலை ஒழித்துக்கட்ட முயன்று வந்தனர். 1710-ல் விக் கட்சி பதவி யிழந்தபோது வால்போல்மீது பொய்க்குற்றம் சுமத்தி, அவரைச் சபையிலிருந்து விலக்கிச் சிறையில் தள்ளினர்.

முதலாம் ஜார்ஜ் பட்டம் பெற்றதும் விக் கட்சியினர் செல்வாக்குப் பெற்றபோது விடுதலை செய்யப்பட்ட வால்போல் செல்ஸா மருத்துவமனையின் (Chelsa Hospital) சம்பளப் பட்டு வாடா அதிகாரியாக (Pay Master) நியமிக்கப்பட்டார். தொடர்ந்து சம்பளப் பட்டுவாடா தலைமை யதிகாரியாகவும் (Pay Master General) கருவூல முதற் பிரபுவாகவும், (First Lord of the Treasury) கருவூலத் தலைவராகவும், (Chanceller of Exchequer) பதவிகளை அடுத்தடுத்துப் பெற்ற வால்போல் முதலாம் ஜார்ஜின் முதல் மந்திரி சபையான ஸ்டான்ஹோப் அமைச்சரவையில் இடம் பெற்றார். தென்கடல் கம்பெனி என்ற வர்த்தக நிறுவனம் ஸ்டான்ஹோப் அரசாங்கத்தை நம்பவைத்து, நாட்டுக் கடனைத் தான் தீர்ப்பதாகச் சொன்னபோது அக் கம்பெனியின் பொருளாதார நிலையைச் சரியாகக் கணக்கிட் டிருந்த வால்போல் அது சாத்தியப்படாதென எதிர்ப்புத் தெரிவித்து, அமைச்சர் அவையிலிருந்து 1719-ல் விலகினார். வால்போல் அச் சமயம் தெரிவித்திருந்ததைப்போலவே அக் கம் பெனி திவாலாகியது. கம்பெனியில் பங்குகளை வாங்கியிருந்த வர்கள் நட்டம் அடைந்தார்கள். நாட்டு மக்களின் நம்பிக்கையைப்

பெறுவதற்காகவே அக் கம்பெனி அரசுக்குக் கடன் கொடுக்க முன்வந்த மோசடி மக்களுக்குத் தெரியவந்தது. அவர்களின் வெறுப்பு அவ் வேற்பாட்டைச் செய்திருந்த அமைச்சரவையின் மீது திரும்ப அம் மந்திரி சபை கவிழ்ந்தது. முன்பு அத் திட்டத் திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த வால்போல் 1721-ல் அமைச்சர் அவையின் தலைவரானார்.

அடுத்த 21 ஆண்டுகள் பதவியிலிருந்த வால்போல் இங்கி லாந்தின் வரலாற்றில் ஆற்றிய பங்கை அடுத்துக் கவனிப்போம். இங்கிலாந்தின் அரசியல் வரலாற்றில் மறக்கமுடியாத ஓர் இடத்தை வால்போல் பெற்றிருந்தார். ஆங்கில அரசியல் அமைப்பை ஒரு தனிமனிதரோ, ஒரு தலைமுறையோ உருவாக் கினர் எனச் சொல்வது பொருந்தாதெனினும் அதன் வளர்ச்சியில் வால்போல் தம்மையு மறியாமல் பெரும் பங்கை ஏற்றிருந்தார்.

ஆங்கிலம் தெரிந்திராத முதலாம் ஜார்ஜ், காபினெட் மந்திரி சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாததால் வால்போ லிடமே எல்லா அதிகாரங்களையும் அளித்திருக்க, அதைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டு ஏறக்குறையப் பிரதம மந்திரியைப் போன்றே அவர் நடந்துகொண்டார்.

அவரது உள்நாட்டுக் கொள்கை

நாட்டின் பழைய நிறுவனங்களை முடிந்தவரை மாற்றக் கூடாதென நினைத்தபோதும், அவசியம் ஏற்படும்போது சீர்திருத்தங்களைக் கொண்டுவரவும் வால்போல் தயங்கிய தில்லை. ஆயின், 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்பதற்கேற்ப மக்களின் எதிர்ப்புகளுக்கு மதிப்புக் கொடுத்துத் தம் சொந்த விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்காமல் எந்த ஒரு காரி யத்தையும் வால்போல் செய்ய முன்வரவில்லை. இணங்கா தார்கள்மீது இரக்கம் கொண்டிருந்த வால்போல் அவர்கள்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்க நினைத்தார். அதற் காகச் சோதனைச் சட்டத்திலிருந்தும் மாநகராட்சிச் சட்டத்தி லிருந்தும் அவர்களுக்கு விலக்கு அளிக்க ஒவ்வோர் ஆண்டும் உத்தரவாதமளிப்புச் சட்டத்தை (Act of Indemnity) இயற்றி வைத்தார். இணங்காதார்களுக்குப் பதவிகளைக் கொடுத்து உத்தரவாதமளித்த அச் சட்டம் ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப் பட்டு வந்ததால் அதை எவரும் நிரந்தர ஏற்பாடு என எண்ணி எதிர்க்க முடியாதபடி வால்போல் சமாளித்தார்.

பொருளாதாரத் துறையில் வால்போல் கடைப்பிடித்த கொள்கை சிறப்புக்குரியது. 'தென்கடல் நீர்க்குமிழி' விபத்தை யொட்டிப் பல பங்குதாரர்கள் நட்டம் அடைந்தபோது கம்பெனியின் உரிமையாளர்களின் சொத்தைப் பறிமுதல் செய்து, முடிந்தவரை எல்லாருக்கும் நட்ட ஈட்டுத் தொகை கிடைக்க வால்போல் வழி செய்தார். ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அரசியல் வருமானத்திலிருந்து தனியாகப் பிரித்து அத் தொகையைக் குறிப்பிட்ட அளவுக்கு உயர்த்தி நாட்டுக் கடனைத் (National Debt) தீர்க்கக் கடன் கழிவு நிதியையும் (Sinking fund) வால்போல் ஏற்படுத்தினார்.

வியாபாரத் துறையிலும் வால்போல் நாட்டின் நன்மையை மனதில் கொண்டு பல பொருள்களின்மீது விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதி, இறக்குமதி வரிகளை நீக்கியும் குறைத்தும் வர்த்தக வளர்ச்சிக்கு வழிபுரிந்தார். 1733-ல் அவரால் கொண்டுவரப் பட்ட கலால்வரி (excise duty) மக்களால் எதிர்க்கப்பட்டது. வரி ஏய்ப்புக்காகப் புகையிலை, சாராயம் போன்ற பொருள்கள் கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்பட்டதைத் தடுக்க, அதற்கான கலால்வரியை, பொருள்கள் இறக்குமதியான துறைமுகங்களில் வசூலிப்பதற்குப் பதில், அவை விற்கப்படும் இடங்களில் வசூல் செய்யும்படியாக வால்போல் கொண்டுவந்த திட்டத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாத மக்கள் எதிர்க்கலாயினர். அத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் தனிப் பட்ட வியாபாரிகளின் கிடங்குகள் அரசாங்க அதிகாரிகளால் அவ்வப்போது சோதிக்கப்படவேண்டிய நிலைமை ஏற்படும். அது தனியாரின் சுதந்தரத்திற்குப் புறம்பானது எனக் கண்டனக் குரல் எழுந்தது. எதிர்ப்புக்கிடையில் எதையும் செய்ய விரும்பாத வால்போல் அத் திட்டத்தைக் கைவிட்டார். அதேபோல் இன்னொரு சந்தர்ப்பத்திலும் வால்போல் மக்களுக்குப் பணிய வேண்டியிருந்தது. நாட்டின் நாணயப் பற்றுக்குறையைத் தீர்க்கப் புதிய செப்பு அரைப்பென்னி (penny) நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டபோது, அந் நாணயங்கள் இலேசாக இருப்பதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. உடனே புதிய நாணய முறையை வால்போல் கைவிட்டார்.

தமது விட்டுக்கொடுக்கும் தன்மையினால் போர்ட்டியஸ் (Portious) கொலையை யொட்டி ஸ்காட்லாந்தில் ஏற்படவிருந்த கலகத்தைத் தடுத்திருந்தார். தாம் கடமையைச் செய்யும்போது இரு குற்றவாளிகளை போர்ட்டிஸ் என்ற காவலர் தலைவர் சுட்டுக் கொல்லவேண்டியிருந்தது. அதற்கு அவர் எடின்பர்க் நீதி

மன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தபோதிலும், அரசியாரின் கருணை பெற்று விடுதலை செய்யப்படும் தருவாயில் எடின்பர்க் நகர மக்கள் அவரைப் பிடித்துத் தூக்கிலிட்டுக் கொன்றனர். அந்த நகரமக்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனப் பாராளுமன்றத்தில் வற்புறுத்தப்பட்ட போதிலும், அதைச் செய்யாது 2000 பவுன்களை அம் மக்கள்மீது கூட்டு அபராதமாக விதித்து அத் தொகையை போர்ட்டிஸ் மனைவிக்கு நட்ட ஈடாக அளிக்க வால்போல் ஏற்பாடு செய்தார்.

குடியேற்ற நாட்டுக் கொள்கை

குடியேற்ற நாட்டுக் கொள்கையில் வால்போல் பத்தாம் பசலியாகவே இருந்தார். குடியேற்ற நாட்டுப் பண்டங்கள் இங்கிலாந்தைத் தவிர வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுவதை அவர் விரும்பவில்லை. தாய் நாட்டின் நன்மைக்காகக் குடியேற்றங்கள் சுரண்டப்படலாமென்ற தத்துவத்தை அவர் நம்பினார். ஆனால், கொள்கை அளவில் அந்தப் பழைய வாணிகத் திட்டத்தை அவர் ஆதரித்தாரெனினும் செய்முறையில் அதைக் கெடுபிடியாக்கவில்லை. நாவாய்ச் சட்டங்களைக் கண்டிப்பாக அமுல் நடத்தவில்லை. கள்ளக்கடத்தலைக் கண்டுகொள்ளவில்லை. அமெரிக்காவிலிருந்து நெல், சர்க்கரை ஐரோப்பாவுக்கு நேரிடையாகச் செல்லவும் அனுமதி யளித்திருந்தார். ஆயின், 1733-ல் தம் நாட்டு மக்களைத் திருப்தி செய்ய வெல்லப்பாகுச் சட்டத்தைக் (Molasses Act) கொண்டுவரவேண்டி யிருந்தது. அதன்படி ஃபிரெஞ்சு, மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து வெல்லம் இறக்குமதி செய்யாது பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து அமெரிக்கர்கள் அதைப் பெற வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டது. இவரது காலத்திலேயே அமெரிக்காவில் 13-வது குடியேற்றமாக 1733-ல் ஜியார்ஜியா (Georgia) என்ற காலனி அமைக்கப்பட்டது. அதை வால்போல் தடுக்கவில்லை என்றாலும், புதிய குடியேற்றங்களை அமைக்கும் ஆர்வம் அவருக்கு இல்லாமலிருந்தது.

வெளிநாட்டுக் கொள்கை

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் 'தூங்கும் நாய்கள் தூங்கட்டும்' என்ற கொள்கையையே (Let sleeping dogs lie) அவர் பின்பற்றினார். அதன்படி எந்தப் பூசலையும் கிளராமல் அமைதியாக வெளிநாட்டு உறவில் இங்கிலாந்தை ஈடுபடுத்தவே வால்போல் விரும்பினார். வெளிநாட்டுப் போர்களினின்றும் பிரிட்டனைத் தப்பவைக்க வேண்டுமென்பதே அவரின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. முக்கியமாக

ஃபிரெஞ்சு நாட்டுடன் நல்லுறவை வளர்க்க வால்போல் அரும் பாடு பட்டார். ஃபிரான்சின் அரசரான பதினைந்தாம் லூயியின் வயோதிக அமைச்சரான கார்டினல் ப்ளூரி (Fleury) என்பவரும் அதையே விரும்ப, இரு நாடுகளுக்கும் நட்பு நிலவியது. தமக்குப் பின் தம் மகளான மேரியா தெரிசா பட்டம் பெற வேண்டுமென ஆஸ்திரியப் பேரரசர் ஆரும் சார்லஸ் விரும்ப, அவ் வேற்பாட்டுக்கு 1731-ல் வால்போலின் இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. போலந்தின் மன்னர் 1733-ல் காலமானதைத் தொடர்ந்து, அங்கு ஏற்பட்ட வாரிசுப் போரில் மற்ற ஐரோப்பிய நாடுகள் கலந்துகொண்டிருந்தும், வால்போல் தம் நாட்டை அதில் ஈடுபடுத்த மறுத்தார். '50,000 வீரர்கள் இந்த ஆண்டில் ஐரோப்பாவில் கொல்லப்பட்டிருக்க, அதில் ஓர் ஆங்கில வீரரும் இல்லை' எனப் பெருமையாக வால்போல் தம் அரசியாரிடம் சொல்லிக்கொண்டார்.

ஏறக்குறைய 20 ஆண்டுகளாக அமைதியான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த வால்போலுக்கு 1739-ல் ஒரு சோதனை வந்தது. அதுவே ஜென்கின்ஸ் காது சண்டை (Jenkin's ear war) என அழைக்கப்பட்ட போர்.

அசியன்டோ உடன்படிக்கைக்குப் (1713) புறம்பாகப் பல ஆங்கிலக் கப்பல்கள் ஸ்பானிய அமெரிக்காவுடன் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. அங்ஙனம் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஜென்கின்ஸ் (Jenkins) என்ற ஓர் ஆங்கிலக் கப்பற் படைத் தலைவரை, ஸ்பானியர்கள் பிடித்துக் காதை அறுத்து விட்டனர். தமது அறுபட்ட காதுடன் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்த ஜென்கின்ஸ் ஸ்பெயின் நாட்டின்மீது போர் தொடுக்க வேண்டுமெனச் சொல்லிவந்தார். அவரது அறுபட்ட காது ஒரு பெட்டியில் போடப்பட்டுப் பாராளுமன்றத்தில் காட்டப் பட்டது. உணர்ச்சி வசப்பட்ட பாராளுமன்ற அங்கத்தினர்கள் ஸ்பெயின்மீது உடனடியாகப் போர் தொடுக்க வேண்டுமென வற்புறுத்தினர். சமாதான முறையிலே ஸ்பெயினிடம் இருந்து நஷ்டஈடு பெறலாம் என்று வால்போல் சொன்னது போர் வெறி கொண்ட அங்கத்தினர்களிடையே சிறிதும் எடுபடவில்லை. நாட்டிலும் ஸ்பானிய எதிர்ப்புணர்ச்சி வேகமாகப் பரவியது. போர் ஒன்று நேர்ந்தால் ஸ்பானியக் குடியேற்றங்களை எளிதாகத் தாக்கி வெற்றி பெறலாமென மற்றவர்கள் நினைத்து, போரைத் தொடங்கும்படி வால்போலைக் கட்டாயப்படுத்தினர். தம் சுய விருப்பம் போரிட இடம் தரவில்லை யென்றாலும் மற்றவர்களின் வற்புறுத்தலுக்குப் பணிந்து 1739-ல் ஸ்பெயின்மீது வால்போல் போரை அறிவித்தார்.

'போர் தொடங்கப்பட்டது' என இலண்டன் நகர மணிகள் ஒலித்து அறிவித்தபோது 'மணியடிக்கும் கைகளுக்கு விரைவில் நடுக்கம் ஏற்படும்' என்று வால்போல் வேதனையுடன் குறிப்பிட்டார். பிற்கால வரலாற்றைக் காணும்போது அவர் வாக்குப் பலித்தது எனலாம். அமைதியான காலத்திற்கு மந்திரியாக இருக்கக்கூடிய தகுதியை வால்போல் பெற்றிருந்தாரே தவிர, போர் நுணுக்கங்களை அவர் தெரிந்து வைத்திருக்கவில்லை. போர் சரிவர நடைபெறவில்லை. அட்மிரல் ஆன்ஸன் (Admiral Anson) என்ற ஆங்கிலக் கப்பற்படைத் தலைவர் ஸ்பானியப் பேரரசின் துறைமுகங்களைத் தாக்கி வெற்றிபெற்றபோதிலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. போரைச் சரிவர நடத்தவில்லை என்ற குறை வால்போல்மீது சுமத்தப்பட்டது. பாராளுமன்றத்தினரின் நம்பிக்கையை இழந்த நிலையில் வால்போல் தம் பதவியை 1742-ல் இராஜினாமாச் செய்தார்.

வால்போலும் காபினெட் வளர்ச்சியும்

காபினெட் ஆட்சிமுறைக்கான இன்றியமையாத சில வழக்காறுகள் வால்போல் காலத்திலேயே உருவாகியிருந்தன. மொழித் தகராற்றினால் இரண்டு ஜார்ஜ் மன்னர்களும் காபினெட் கூட்டங்களில் கலந்துகொள்ளமுடியாமலிருக்க, வால்போல் அக் கூட்டங்களில் தலைமை தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் தற்செயலாக ஏற்பட்டது. காபினெட் கூட்டங்களில் நடைபெறும் விஷயங்களை மன்னருக்குத் தெரிவித்தும் மன்னரின் விருப்பத்தை மற்ற அமைச்சர்களுக்குச் சொல்லியும் வால்போல் இணைப்புப் பாலமாகவும் இருந்தார். அவர் தம்மைப் பிரதம மந்திரியென அழைத்துக் கொள்ளவில்லை யெனினும் பிற்காலத்தில் பிரதம மந்திரிக்கே உரித்தான பல அதிகாரங்களை வால்போல் பெற்றிருந்தார். வால்போல் காபினெட் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கியிருந்ததால் மன்னர்கள் அக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பிற்காலத்தில், காபினெட் கூட்டங்களில் மன்னர் கலந்துகொள்ளக் கூடாதென்ற மரபு ஏற்படுவதற்கு வால்போல் தற்செயலாகக் காரணராஞர்.

மந்திரிகள் அனைவரும் ஒருமித்த கருத்துடையவர்களாய் இருக்கவேண்டும். கருத்து வேறுபாடுகள் கொண்ட அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக வேண்டுமென்ற மரபும் வால்போல் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. தம்முடன் கொள்கை வேறுபாடு கொண்ட டவுன்செண்டு (Tounshend) என்பவரை மந்திரி சபையினின்று வெளியேற்றி, பிரதம மந்திரியின் கொள்கையையே மற்ற

அமைச்சர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற கோட்பாட்டை வால்போல் நிலைநாட்டினர்.

காமன்ஸ் சபையில் பெரும்பான்மை பெற்றிருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்களாக மந்திரிகள் இருக்கவேண்டுமென்ற மரபும் இவரது காலத்தில் ஏற்பட்டது. தாம் பதவியில் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று பல பாராளுமன்ற அங்கத்தினர்களுக்குப் பட்டங்களையும், பதவிகளையும், பணத்தையும் அள்ளிக்கொடுத்துத் தமக்கு நிரந்தர ஆதரவைத் தேடிக்கொள்ள வால்போல் முற்பட்டார்.

காமன்ஸ் சபையின் விருப்பத்திற்குப் பணிந்து ஜென்கின்ஸ் காதுச் சண்டையில் குற்றம் சுமத்தப்பட்டுப் பதவி இழந்த வால்போல் பெரும்பான்மைக் கட்சியின் ஆதரவிழந்ததும் மந்திரிசபை இராஜினாமாச் செய்ய வேண்டுமென்ற மரபைச் செயலில் காட்டினர். அங்ஙனமாக, காபினெட் ஆட்சிமுறை இங்கிலாந்தில் வளர்ச்சியுற்றதற்கு வால்போல் ஒரு முக்கியக் காரணரானர். உள்நாட்டுப் பூசல்களிலிருந்தும் வெளிநாட்டுப் போர்களிலிருந்தும் சுமார் 20 ஆண்டுகளாக இங்கிலாந்துக்கு அமைதியான அரசாங்கத்தைக் கொடுத்திருந்த வால்போல், பிரபுக்கள் சபையில் மூன்றரை ஆண்டுக்காலம் ஆக்ஸ்ஃபோர்டு எர்ல் (Earl of Oxford) என்ற பட்டம் பெற்று அமர்ந்திருந்து 1745ஆம் ஆண்டில் காலமானர்.

(ஆ) இரண்டாம் ஜார்ஜ் - மூத்த பிட்
(Pitt, the Elder)

வாழ்க்கை வரலாறு

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலப் பெருமக்களில் முக்கியமானவர்களில் ஒருவராகக் கருதப்படும் வில்லியம் பிட், 1708-ல் வெஸ்ட்மின்ஸ்டர் நகரில் செல்வம் கொழித்த குடும்பத்தில் பிறந்தவர். ஈடன், டிரினிடி (ஆக்ஸ்ஃபோர்டு) இடங்களில் கல்வி பயின்று, சொற்பொழிவு ஆற்றும் கலையில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். குதிரைப்படையில் அதிகாரியாகச் சிலகாலம் பணியாற்றிவிட்டு 1735-ல் ஓல்டு சாரம் (Old Sarum) என்னும் பரோவிலிருந்து அதன் பிரதிநிதியாகக் காமன்ஸ் சபைக்கு அனுப்பப்பட்டார். வால்போலின் தலைமையில் விக்குகள் செல்வாக்குப் பெற்று அதிகாரத்திலிருந்த அந்த நேரத்தில், பிட் நினைத்திருந்தால் மற்றவர்களைப்போல் பட்டம், பதவி, பணம் பெற்று ஆளும் கட்சியினரின் கையாளாக இருந்

திருக்கலாம். அரசியலிலே நேர்மையையும் ஒழுக்கத்தையும் விரும்பிய பிட், வால்போலின் எதிர்வரிசையிலே அமர்ந்து அந்த அமைச்சரின் நேர்மையற்ற அரசியல் முறைகளைச் சாடினார். காமன்ஸ் சபையில் அவர் ஆற்றிய முதல் பேச்சிலேயே மற்றவர்கள் தங்களை மறந்த நிலையை அடைந்தனர். அதைப்பற்றி லார்டு லிட்டெல்டன் (Lord Lyttelton) என்பவர் குறிப்பிடும் போது, 'பிட்டின் உணர்ச்சிகரமான பேச்சு தம் இரத்தத்தையே உறையவைத்த'தெனப் பெருமைபடக் கூறினார். பேரரசு, அதன் மக்கள், அதன் தலைவர்கள் என்பதைப்பற்றியே பிட்டின் பேச்சுகள் அமைந்திருந்தன. வால்போலின் 'தூரங்கும் நாய்கள் தூங்கட்டும்' என்ற கொள்கையைக் கோழைகளின் கோட்பாடு எனப் பிட் நையாண்டி செய்தார். ஜென்கின்ஸின் காது பாராளு மன்றத்தில் காட்டப்பட்டபோது, அது தம் நாட்டுக்கு ஏற்பட்ட அவமானம் எனக் குமுறினார். அவரது சொற்பொழிவுகளாலேயே ஸ்பெயினோடு பிரிட்டன் போர் தொடுத்ததெனலாம்.

1742-ல் வால்போலின் இராஜினாமாவைத் தொடர்ந்து வில்மிங்டன் (Wilmington) பிரபுவினால் மற்றொரு விக் மந்திரி சபை அமைக்கப்பட்டபோதும், பிட் எதிர்க்கட்சியிலேயே இருந்தார். அவருக்கென்று தனிக்கட்சி எதுவுமில்லை யெனினும், அரசின் குறைகளைக் கண்டிப்பதில் பிட் சளைத்தவரல்லர். கார்ட்டரெட் (Carteret) பிரபு என்ற வெளி விவகார அமைச்சரால் தூண்டப்பட்டு, மன்னர் இரண்டாம் ஜார்ஜ் இங்கிலாந்தை ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் ஈடுபடுத்தியிருந்ததைக் காமன்ஸ் சபையில் பிட் எதிர்த்தார். அப் போரில் இங்கிலாந்து இறங்கியாகவேண்டிய அவசியமே யில்லை யெனவும், தம் குடும்பச் சொத்தான ஹானோவரைக் காக்கவே மன்னர் அச் சண்டையில் இங்கிலாந்தை ஈடுபடச் செய்தாரெனவும் பிட் எடுத்துக் காட்டியதால், பாராளுமன்றத்தில் கார்ட்டரெட்டுக்கு எதிராகக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. தொடர்ந்து, அந்த அமைச்சர் பதவியிலிருந்து விலகப் பிட் காரணரானார்.

1743-ல் ஹென்றி பெல்ஹாம் (Henry Belham) தலைமையில் மற்றோர் அமைச்சரவை அமைக்கப்பட்டது. அரசாங்கத்தை எதிர்ப்பதையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்த பிட்டைத் தம் வயப்படுத்த பெல்ஹாம் முயன்றார். அறிவும், திறமையும் கொண்ட பிட் தமக்கு எதிரியாக இருப்பதைவிட ஊழியராக இருப்பதே இலாபமென நினைத்த பெல்ஹாம், அரசர் ஜார்ஜிடம் வேண்டி, சம்பளப் பட்டுவாடா (Pay Master) அதிகாரியாகப் பிட்டை அமர்த்தும்படி கோரினார். ஆஸ்திரிய வாரிசுப் போரில் தாம் கலந்துகொண்டதைக் குறை சொல்லி வந்த பிட்டை

வேலையில் அமர்த்த அரசர் சிலகாலம் தயங்கியபோதிலும், இறுதியில் ஒப்புக்கொண்டார். பலவகைகளில் வரும்படி பெறுவ தற்குச் சந்தர்ப்பமிருந்தும் பிட் எதையும் வாங்காததோடு, தம் வேலைக்கான ஊதியத்தையும் பெற்றுக்கொள்ள மறுத்து, தம் கடமை யுணர்ச்சியால் இங்கிலாந்தில் பரபரப்பை உண்டாக்கினர். சீர்கேடுகள் நிறைந்தும் இலஞ்ச ஊழல்கள் நிரம்பியு மிருந்த அக் கால அரசியலில் பிட்டின் செய்கை பெரிதும் போற்றப் பட்டது. 'பொதுமக்கள் பெருமகன்' (The Great Commoner) எனவும் பிட் மக்களால் பெருமையோடு அழைக்கப்பட்டார். பதவி பெற்றுக்கொண்ட பிட் அதன் பின்னர் அரசாங்கத்தைக் கண்டிப்பதை நிறுத்திக்கொண்டார்.

1754-ல் பெல்ஹாம் காலமடைய, அவருடைய சகோதரரும் விக் கட்சியின் பெரும் புள்ளியுமான நியூகாசில் (Newcastle) பிரபு மந்திரி சபையை அமைத்தபோது தமக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்குமெனப் பிட் எதிர்பார்த்தார். ஆயின், அவரைத் தம் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள நியூகாசில் விரும்ப வில்லை. அதனால், பிட் அவர் அரசாங்கத்தைச் சமயங் கிடைத்த போதெல்லாம் கண்டிக்க முனைந்தார். அதனால் வெகுண்ட நியூ காசில் அரசரின் துணைகொண்டு பிட்டை 1755-ல் பதவியிலிருந்து விரட்டினர். அந்த நேரத்தில் ஐரோப்பாவில் போர் மேகங்கள் சூழ ஆரம்பித்தன. அடுத்து வரப்போகும் பெரும் போரைத் தவிர்க்கவும், அதைத் திறம்பட நடத்தவும் தகுதியில்லாதவராக நியூகாசில் இருக்க, அதுவே அமைச்சரவையில் பிட் நுழையக் காரணமாகியது.

1756-ல் தொடங்கிய ஏழாண்டுப் போரில் முதல் ஆண்டிலேயே இங்கிலாந்திற்குத் தோல்விகள் அடுக்கடுக்காக ஏற்பட்டன. போரைச் சரிவர நடத்தத் தெரிந்திராத நியூ காசில், கண்டனத்திற்குப் பணிந்து, பதவியைத் துறந்தார். அடுத்து டெவன்ஷயர் (Devonshire) கோமகனால் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் 1756 டிசம்பரில் பிட் சேர்த்துக்கொள்ளப் பட்டார். தம் திறமையை எடுத்துக்காட்ட அதை ஓர் அரிய சந்தர்ப்பமாகப் பிட் பயன்படுத்திக்கொள்ள முற்பட்டார். போரிலே ஈடுபட்டிருக்கும் தம் நாட்டிற்கு உதவும் வகையில் சில ஏற்பாடுகளைச் செய்யப் பிட் முயன்றபோது அதற்கு இடையூறுகள் ஏற்பட்டன. காமன்ஸ் சபையில் தமக்குப் போதிய செல்வாக்கு இல்லாததாலும், அங்கத்தினர்களில் பெரும்பாலோர் நியூ காசிலின் ஆட்களாக இருந்ததாலும் பிட் எண்ணியதை அவரால் செய்ய முடியவில்லை. நியூகாசில் மீண்டும் பதவியைப் பெற அனு கூலமாக இருக்க ஏப்ரல் 1757-ல் தம் பதவியைப் பிட் துறந்து,

தமக்குச் சுயவிருப்பு, வெறுப்புகளைவிடத் தேசத்தின் நலமே பெரிதெனக் காட்டிக்கொண்டார்.

1757 ஜூன் மாதத்தில் நியூகாசில் அமைச்சரவை அமைக்க அதில் பிட் சேர்த்துக்கொள்ளப்பட்டார். நியூகாசில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு ஆதரவு தேடிக் கொடுக்க, பிட் போரை வெற்றிகரமாக நடத்தினார். 'என்னைத் தவிர நாட்டை எவராலும் காக்க முடியாது' எனத் தற்பெருமை தொனிக்கப் பிட் குறிப்பிட்டது உண்மையாகவே இருந்தது. தம் போர்த் திறமையினால் போரின் போக்கை மாற்றி இறுதியில் இங்கிலாந்து பெருவெற்றி பெறப் பிட் காரணரானார்.

ஏழாண்டுப் போர்

வில்லியம் பிட்டினால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட ஏழாண்டுப் போரின் காரணங்களைக் காண்போம்:

1748-ல் ஏய்க்ஸ் லா சேப்பெல் (Aix-la-Chapalle) உடன் பாட்டினால் முடிந்திருந்த ஆஸ்திரிய வாரிசுப் போரின் தொடர்ச்சி யாகவே ஏழாண்டுப் போர் அமைந்தது. சைலீஷியாவை (Silesia) எப்படியும் மீட்டுத் தீரவேண்டுமென ஆஸ்திரிய அரசி மேரியா தெரிசா ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டிருந்த போதும், அவ் வுடன்படிக்கை அப் பகுதியைப் பிரஷ்யாவின் மன்ன ரான ஃபிரடரிக்கிடம் (Frederick, the Great) விட்டு வைத்திருந் தது. எப்படியும் முயன்று சைலீஷியாவைக் கைப்பற்றிவிட மேரியா நினைக்க, அதை எப்படியும் தடுக்க ஃபிரடரிக் முயல, அது இன்னொரு போரில் முடிந்தது. தம் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் மேரியா ஃபிரான்சுடன் கூட்டுச் சேர்ந்தார். பல ஆண்டுகளாகப் பகைமை நாடுகளாக இருந்த ஆஸ்திரியாவும், ஃபிரான்சும் இணைந்தபோது தம்மைக் காத்துக்கொள்ள ஃபிரடரிக் இங்கிலாந்தின் உதவியைக் கோரி வெஸ்ட்மின்ஸ்டர் உடன் பாட்டைச் செய்துகொண்டார் (1756). வர்த்தக, குடியேற்ற நாட்டுப் போட்டியில் தமக்கு எதிரியாக இருந்த ஃபிரான்சு நாட்டை ஒடுக்க, இங்கிலாந்து அவ் வுடன்படிக்கையின்படி ஃபிரடரிக்குக்கு உதவி செய்ய முன்வந்தது. ஆஸ்திரிய வாரிசுப் போரில் நட்பு நாடுகளாக இருந்தவைகள் அடுத்து நடக்கப் போகும் போரில் பகை நாடுகளாக மாறியதையே அரச தந்திரப் புரட்சி (Diplomatic Revolution) என அழைக்கிறார்கள்.

அங்ஙனமாக, சைலீஷியாவைப்பற்றி ஆஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்கும் இருந்த பகைமை ஏழாண்டுப் போருக்குக் காரணமாக இருப்பினும், பிரிட்டன் - ஃபிரான்சு நாடுகளுக்

கிடையே இருந்த கடுமையான குடியேற்ற நாட்டுப் போட்டியும், வர்த்தகப் பூசலும், ஏழாண்டுப் போருக்கு முக்கியக் காரணங்களாக அமைந்தன.

ஆங்கிலேயரும், ஃபிரெஞ்சுக்காரரும் இந்தியாவில் - கர்நாடகத்தில் - (Carnatic) இரு கட்சியினரை ஆதரித்து ஆதிக்கப் போர்களில் ஈடுபட்டிருந்தனர். வட அமெரிக்காவில் செயின்ட் லாரென்ஸ் (St. Lawrence) வளைகுடாவிலிருந்து மெக்ஸிகோ வளைகுடாவரை வளையங்களைப்போல் தொடர்ச்சியாகக் கோட்டைகளைக் கட்டி ஆங்கிலேயர்களை மேற்கே குடிபெயர விடாமல் ஃபிரெஞ்சுக்காரர்கள் தடுத்துவந்தனர். அதுமட்டுமல்லாமல் ஓஹியோ-மிஸிஸிபி (Ohio - Mississipi) சமவெளியை அடைய ஆங்கிலேயர்களும், ஃபிரெஞ்சுக்காரர்களும் போட்டியிட்டுக்கொண்டிருந்தனர். மேற்கு ஆஃபிரிக்காவில் ஆங்கிலேயரின் வியாபாரத் தலமான கேம்பியாவுக்கும் (Gambia) ஃபிரெஞ்சுக்காரர்களின் செனிகலுக்கும் (Senegal) அடிமை வியாபாரத்தில் கடுமையான போட்டி இருந்துவந்தது. ஜமெய்க்கா, பார்படாஸ் என்ற ஆங்கில மேற்கிந்தியத் தீவுகளுக்கும், மார்ட்டினி (Martinique), குடாலூப் (Guadeloupe) என்ற ஃபிரான்சு மேற்கிந்தியத் தீவுகளுக்கு மிடையேயும் வியாபாரப் போட்டி இருந்துவந்தது.

அங்ஙனமாக, அப் போட்டியில் எந்நாடு வெற்றி பெற வேண்டுமென்பதைத் தீர்மானிக்க ஒரு போர் அவசியமாக இருக்க, அச் சமயத்திலேயே அரச தந்திரப் புரட்சியும் (1756) ஏற்பட்டிருந்தது. பிரஷ்யாவின் எழுச்சியைக் கண்டு பொறுமை கொண்ட ருஷ்யாவும் ஸாக்சனியும் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து கொண்டன. ஆத்திரப்பட்ட ஃபிரடரிக் சாக்சனியைத் தாக்க, ஏழாண்டுப் போர் தொடர்ந்தது. ஐரோப்பாவின் வல்லரசு சமநிலையைக் காக்கவும் வெஸ்ட்மின்ஸ்டர் உடன்பாட்டின்கீழ் பிரஷ்யாவிற்கு உதவும் இங்கிலாந்து போரில் இறங்கியபோது, எங்கெங்கு ஆங்கில ஃபிரெஞ்சுக் குடியேற்றங்கள் இருந்தனவோ அங்கெல்லாம் அப் போர் மூண்டது.

போரின் போக்கும் பிட்டின் ஏற்பாடுகளும்

போரின் ஆரம்பத்தில், 1756-ல் ஆங்கிலேயர்களுக்கு அடுத்தடுத்துத் தோல்விகள் ஏற்பட்டன. மத்தியதரைக் கடலில் மைனர்க்கா (Minorca) தீவைப் ஃபிரெஞ்சுக் கப்பற்படை கைப்பற்றிக்கொண்டது. வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்களின் முக்கிய ஸ்தலமான ஆஸ்வேகோ (Oswego)க் கோட்டையை

மார்க்குவிஸ்-டி-மான்ட்காம் (Marquis-de-Montcalm) என்ற ஃபிரெஞ்சுத் தளகர்த்தர் கைப்பற்றியிருந்தார். கம்பர்லாந்து (Cumberland) கோமகனை இரண்டாம் ஜார்ஜின் மகனால் நடத்திச்செல்லப்பட்ட ஆங்கிலேயர்கள் ஹானேவரில் ஃபிரெஞ்சுக் காரர்களால் தோற்கடிக்கப்பட்டு அந்த நாட்டை விட்டு வெளியேறி விடுவதாகக் கிளாஸ்டர் செவன் (Gloster Seven) என்ற கேவலமான உடன்படிக்கையைச் செய்துகொண்டனர். வங்காள நவாப்பான சிராஜ் உத்தௌலா (Siraj Uddoulah) கல்கத்தாவைக் கைப்பற்றிச் சில ஆங்கிலேயர்களை இருட்டறையில் அடைத்துக் கொன்றார் (Black hole tragedy). இங்கிலாந்து அப்போது ஒரு பேராபத்தில் இருப்பதாகவே தோன்றியது. அச் சமயத்தில் தான் பிட்டின் சேவை இங்கிலாந்திற்குக் கிடைத்தது.

1757-ல் நியூகாசிலின் இரண்டாவது அமைச்சரவையில் போர் அமைச்சராக அமர்த்தப்பட்ட வில்லியம் பிட் தம் கடுமையான உழைப்பாலும், மெச்சத்தக்க திறமையினாலும் தோல்விகளையெல்லாம் வெற்றியாக மாற்றினார். அவரின் போர்க்காலத் திட்டங்கள் மெச்சத்தக்கனவாக இருந்தன.

ஸ்காட்டிய மலைநில மக்களின் முரட்டு வீரர்களை ஆங்கிலப் படையில் சேர்த்து அதன் எண்ணிக்கையை 150,000 ஆக உயர்த்தினர். இளமையும் திறமையும் கொண்டிருந்த சிறந்த தளகர்த்தர்களைப் பல போர்முனைகளுக்கு அனுப்பினர். பிரஷ்ய மன்னர் ஃபிரடரிக்குக்கு ஆண்டுதோறும் உதவிப் பணம் கொடுத்துப் ஃபிரெஞ்சுக்காரர்களை ஐரோப்பாவில் தாக்கிக் கொண்டிருக்கும்படி பணித்தார். அவரிடமிருந்து பெர்டினண்டு என்ற சிறந்த தளகர்த்தரைப் பெற்றுத் தம் ஆங்கிலப் படைக்குத் தலைவராக்கி ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு ஐரோப்பாவில் தீராத தொல்லை கொடுக்கும்படியும் பிட் ஏற்பாடு செய்திருந்தார். அதன் விளைவாகத் தங்களின் கவனமெல்லாம் ஐரோப்பாவில் இருக்க, ஃபிரெஞ்சுக்காரர்கள் தங்களின் குடியேற்றங்களைப் பாதுகாக்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. 50,000 மாலுமிகளையும், 400 போர்க்கப்பல்களையும் திரட்டி, பிட் கப்பற் படையைப் பலப்படுத்தினர். அப் படையினைக் கொண்டு ஃபிரான்சின் அட்லாண்டிக், மத்தியதரைக் கடல் துறைமுகங்களையும் கப்பல் தளங்களையும் முற்றுகையிட்டு ஃபிரெஞ்சுச் சேனைகளும், கடற்படையும் கடல்கடந்து செல்லாதபடி பிட் திணற அடித்தார். நிலப்படையால் ஐரோப்பாவில் ஃபிரெஞ்சுக் காரர்களை மடக்கியும், கடற்படையால் அவர்களின் குடியேற்றங்களைக் கைப்பற்றியும் போரில் இங்கிலாந்தை வெற்றி பெறச் செய்ய விரும்பிய பிட் 'நான் அமெரிக்காவை ஐரோப்பாவில்

வெல்லுவேன்' எனக் குறிப்பிட்டார். ஐரோப்பாவில் ஆங்கிலப் படைகளையும், அவர்களின் உதவி பெற்றிருக்கும் ஃபிரடரிக்கின் படைகளையும் எதிர்க்கவேண்டியிருந்த ஃபிரெஞ்சுக்காரர்கள் தம் படையினரை அமெரிக்காவுக்கு அனுப்ப முடியாதென் பதையே, பிட் அங்ஙனம் கூறியிருந்தார். வட அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், மேற்கு ஆஃபிரிக்கா, இந்தியா, ஐரோப்பா என்ற உலகின் பல பகுதிகளில் போர் நடந்த போதிலும், பரவலான திட்டங்களை அமைத்துப் பிட் போரை நடத்தினதால் வெற்றிகள் இங்கிலாந்தைத் தேடி வந்தன.

1757-ல் பிட்டின் உதவிபெற்றிருந்த ஃபிரடரிக் ஃபிரெஞ்சுப் படைகளை ராஸ்பெக்கில் (Rossback) தோற்கடித்துப் பெரும் வெற்றி பெற்றார். சிராஜ் உத்தௌலாவைப் பிளாசிச் (Plassey) சண்டையில் (1757) வென்று இராபர்ட் கிளைவ் என்ற ஆங்கிலத் தளகர்த்தர் வங்காளத்தை மீட்டிருந்தார். வட அமெரிக்காவில், 1758-ல் ஃபிரெஞ்சுக்காரர்களின் முக்கியத் தலமான டியுகிசன் கோட்டை (Fort Dequesne), ஃபார்பிஸ் (Forbes) என்ற ஆங்கிலத் தளகர்த்தரால் கைப்பற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து ஓஹியோ (Ohio) பள்ளத்தாக்கு முழுவதும் பிரிட்டிஷார் வச மானது. இங்கிலாந்தின்மீது படையெடுத்துவந்த ஃபிரெஞ்சுக் கப்பற்படை 1759-ல் ஹாக் (Hawke) என்ற ஆங்கிலக் கடல் தளகர்த்தரால் குவிபெரான் குடாவில் (Quiberon Bay) தோற்கடிக்கப்பட்டது. புரூன்ஸ்விக் பிரபு (Duke of Brunswick) என அழைக்கப்பட்ட பெர்டினண்டு தாம் தலைமை தாங்கிய ஆங்கில - ஹானேவரியன் படைகளைக் கொண்டு ஃபிரெஞ்சுக் காரர்களை 1759-ல் மிண்டன் (Minden) என்னுமிடத்தில் தோற்கடித்து ஹானேவரை மீட்டார். பிட்டினால் தளபதியாக அமர்த்தப்பட்டு, கானடாவுக்கு அனுப்பப்பட்ட ஜெனரல் ஜேம்ஸ் உல்ஃப் (Wolfe) லாரன்ஸ் நதிவழியே சென்று, செங்குத் தான ஆப்ரஹாம் குன்றுகளைக் கடந்து கியூபெக் (Queback) நகரைத் தாக்கிக் கைப்பற்றினார். அட்மிரல் சாண்டர்ஸ் (Saunders) என்பவர் தலைமையில் துணைக்குச் சென்ற கப்பல்படை உல்ஃப்புக்கு உதவி செய்தது. அடுத்த ஆண்டு மாண்ட்ரீல் (Montrel) நகரும் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட, கானடா முழுவதும் ஃபிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்து ஆங்கிலேயருக்குக் கைமாறின. 1760-ல் சர் அயர் கூட் (Sir Eyre Coute) என்ற பிரிட்டிஷ் தளபதி வந்தவாசி (Wandiwash) என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்துக் கர்நாடகத்தில் ஆங்கிலே யரின் ஆதிக்கத்தை வேரூன்றச் செய்தார்.

மேற்கு ஆஃபிரிக்காவில் இருந்த செனிகல் (Senegal), கோர்ரீ (Goree) என்ற வியாபாரத் தலங்களையும், மார்ட்டினி, குடாலூப் என்ற மேற்கிந்தியத் தீவுகளையும், ஃபிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரிடம் இழக்கவேண்டியிருந்தது.

பிட்டின் வீழ்ச்சி

அங்ஙனம் நான்கு ஆண்டுகளுக்குள் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை ஒழித்து, இங்கிலாந்தின் பேரரசை உருவாக்கிய பிட், 1760-ல் தம் புகழின் உச்சக்கட்டத்திலிருந்தார். அவரை ஆரம்பத்தில் வெறுத்த மன்னர் இரண்டாம் ஜார்ஜ் எண்ணிப் பார்க்காத அளவுக்குப் பிரிட்டிஷ் பேரரசின் எல்லைகளைப் பிட்விரிவாக்கியிருக்க அவரின் சேவைகளை மிகவும் மன்னர் பாராட்டினார். தம் ஒருவராலேயே இங்கிலாந்தைக் காக்க முடியுமென்று பிட் 1757-ல் குறிப்பிட்டிருந்ததை ஆங்கிலேயர் பெற்றிருந்த வெற்றிப் பட்டியல் ஊர்ஜிதப்படுத்தியது.

பிட்டின் போர்ச் சேவைகளினால் பெரும் வெற்றிகள் பெற்ற இங்கிலாந்தின் புகழ் ஓங்கி நின்றது. ஆனால், அதே ஆண்டில் அந்த நாட்டின் புகழுக்குக் காரணமாகவிருந்த பிட் பதவியிலிருந்து வீழ்ச்சி யுறுவதற்கான தொடக்க நிலை ஏற்பட்டது.

இரண்டாம் ஜார்ஜ் காலமடைந்த பின் அவரின் மகனை மூன்றும் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசராஞர். விக்குகளின் ஆட்சியை ஒழிக்கத் திட்டமிட்டுச் செயல்பட்ட அந்த அரசர், முதற்கண் பிட்டைப் பதவியிலிருந்து நீக்க விரும்பினர். அதற்கேற்ப 1761-ல் சந்தர்ப்பமும் சாதகமாக அமைந்தது.

உலகின் பல பாகங்களில் அடுக்கடுக்காகத் தோல்விகளைப் பெற்றுவந்த ஃபிரான்ஸ் போரில் ஸ்பானியர்களின் உதவியை நாடியது. 1733-ல் ஸ்பானிய அரசரான ஐந்தாம் ஃபிலிப்புக்கும், ஃபிரெஞ்சு மன்னரான பதினைந்தாம் லூயிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டிருந்த குடும்ப ஒப்பந்தத்தை (Family Compact) 1761-ல் ஃபிரான்சின் அமைச்சரான சொய்சியுல் (Choiseul) என்பவர் புதுப்பித்துத் தம் நாட்டிற்கு உதவி கொடுக்கும்படி ஸ்பானிய அரசர் மூன்றும் சார்லசைக் கேட்டிருந்தார். ஃபிரான்சுக்குத் துணையாக ஸ்பெயினும் போரில் குதிக்குமென எதிர்பார்த்த பிட், மூன்றும் ஜார்ஜை உடனடியாக ஸ்பெயின் மீது போர் தொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். பிட்டிற்கு இருந்த துணிவு மற்ற அமைச்சர்களுக்கு இல்லாததால், அந்த யோசனையை அவர்கள் எதிர்த்தனர். அதற்கேற்ப அரசரும் பிட்டின் கோரிக்கையை ஏற்க மறுத்தார். ஆகவே அக்டோபர், 1761-ல் பிட் தம் பதவியைத் துறந்தார்.

பிட் எச்சரிக்கை செய்திருந்தபடியே ஸ்பெயினும் இங்கிலாந்திற்கு எதிராகப் போரில் குதித்தது. இருப்பினும், அதுவும் கியுபா (Cuba), ஃபிலிப்பைன்ஸ் (Phillipines) தீவுகளை இழந்து தோல்விகளையே அடைந்தது. போரில் சலிப்புற்ற ஃபிரான்சும், ஸ்பெயினும் 1763-ல் இங்கிலாந்துடன் பாரிஸ் உடன்படிக்கை (Treaty of Paris) செய்துகொண்டன. கடல்கடந்த பேரரசை இங்கிலாந்துபெறுவதற்குப் பாரிஸ் உடன்படிக்கை காரணமானது. அவ் வுடன்படிக்கையை ஃபிரான்சு பணிந்து ஒப்புக்கொண்டதற்குக் காரணம், பிட் இங்கிலாந்திற்குக் கொடுத்திருந்த வெற்றிப் பட்டியலே என்பதை எவரும் மறுக்க முடியாது.

1761-ல் பிட் பதவியிலிருந்து விலகுவதற்குப் பொறுப்பாளியான அரசர் மூன்றும் ஜார்ஜ், அவரை மீண்டும் 1766-ல் அழைத்து அமைச்சரவையை அமைக்கச் சொல்லியிருந்தார். உடல்நலம் கெட்டிருந்ததால், பிட் இரண்டாண்டுகள் (1766 - 1768) பதவியிலிருந்தும் உற்சாகமாக எதிலும் ஈடுபட்டுப் பணி செய்ய முடியவில்லை. தம் சக அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் பூசலிட்டுக்கொண்டபொழுது, மனம் தளர்ந்து பதவியை இராஜினமாச் செய்தார். இருப்பினும், அவர் ஏற்கெனவே நாட்டிற்குச் செய்திருந்த உயர்ந்த சேவைகளைப் பாராட்டி, 'சாத்தாம் எர்ல்' (Earl of Chatham) என்ற பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

பதவியிலிருந்து ஒதுங்கியிருந்தபோதும் அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கைகளைப் பிட் கண்டிக்கத் தவறவில்லை. குடியேற்ற நாடுகள் தாய்நாட்டின் அடிமைகளாகக் கருதப்படக் கூடாதெனப் பிட் எடுத்துரைத்தார். அமெரிக்கக் குடியேற்ற நாடுகள்மீது இங்கிலாந்தின் அரசாங்கம் கடுமையாக நடந்து கொண்டபோது, தம் ஆதரவைக் குடியேற்ற மக்களுக்குத் தெரிவிக்கப் பிட் தவறவில்லை. பிட்டின் கொள்கையை இங்கிலாந்தின் அரசாங்கம் பின்பற்றி யிருக்குமானால், தாய்நாட்டிற்கும் அதன் அமெரிக்கக் குடியேற்றங்களுக்கும் போரே மூண்டிருக்காது. அப் போர் தொடங்கி, நடந்துகொண்டிருந்த நேரத்தில் தாம் கட்டிக்காத்த பேரரசு சிதைந்துகொண் டிருப்பதைக் காணுதவராக 1778-ல் பிட் காலமானார்.

சிறந்த பேச்சாளராகவும், ஒழுக்கசீலராகவும் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய பிட், தோல்விகளால் கவ்வப் பட்டிருந்த இங்கிலாந்தைத் தமது அரிய போர்ச் சேவைகளினால் வெற்றிப்பாதையில் வீரநடை போடச்செய்தது அவரின் பெரும் சாதனையாக இருந்தது.

(இ) ஜேகோபியர்களின் கலகம் (1715)

பதினெட்டாம் நூற்றாண்டில் ஹானேவரிய அரசக்குலத்துக் கெதிராக இங்கிலாந்தில் இரு கலகங்கள் ஏற்பட்டன. கி. பி. 1688ஆம் ஆண்டில் ஆட்சியைத் துறந்து, ஃபிரான்சு நாட்டுக்கு ஓடியிருந்த இரண்டாம் ஜேம்ஸின் மகன் ஜேம்ஸ் எட்வர்டு அல்லது மூத்த போலி (Old Pretender) என்பவரை ஆங்கில அரியணையில் அமர்த்தும் முயற்சியிலேயே அக் கலகங்கள் 1715ஆம் ஆண்டிலும், 1745ஆம் ஆண்டிலும் ஏற்பட்டன.

ஜேம்ஸ் என்ற பெயர் இலத்தீன் மொழியிலே ஜேகோப் என அழைக்கப்பட்டதால் ஜேம்சைப் பின்பற்றியவர்களும் ஜேகோபியர்களென அழைக்கப்பட்டனர்.

அரச வாரிசு நிர்ணயச் சட்டத்தின்படி ஆன் அரசி காலமானதைத் தொடர்ந்து ஹானேவரைச் சேர்ந்த ஜியார்ஜ் லியூஸ் இங்கிலாந்தின் அரசராக முதலாம் ஜியார்ஜ் என்ற பட்டத்துடன் ஆட்சி பீடமேறினார் (1714). அவர் ஒரு பிராடஸ்டென்டு மதத்தவர் என்பதைத் தவிர, ஆங்கில மக்களைக் கவரும் வகையில் எத்தகைய பண்பும் அவரிடம் இல்லை. ஆங்கில மொழியை அறியாத ஜார்ஜ் நடை உடை பழக்க வழக்கங்களிலும் மக்களிடமிருந்து வேறுபட்டவராக இருந்ததால் அவரை ஆட்சியில் அமர்த்துவதில் பெரும் அக்கறை காட்டிய லீக் கட்சியினரும் ஜார்ஜை உள்ளூர வெறுத்தனரென்றால், டோரிகளைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. டோரிக் கட்சித் தலைவர்களைத் தாம் ஆட்சி பெற்றதும் நாடு கடத்தியும், சிறையில் தள்ளியும் ஜார்ஜ் அடக்குமுறையில் ஈடுபட்டிருந்ததால் அக் கட்சியினர் அம் மன்னரை முற்றிலும் வெறுத்தனர். அதுமட்டுமன்றிப் பெரும் பாலோரான ஆங்கில மக்கள் இன்னும் ஹானேவர் ஆட்சியை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையை அடைந்திருக்கவில்லை. அச் சந்தர்ப்பத்திலேயே, முதல் ஜேகோபியர்களின் கலகம் நடைபெற்றது.

அக் கலகத்திற்கு, நாடு கடந்து சென்ற இரண்டாம் ஜேம்ஸின் மைந்தரான ஜேம்ஸ் எட்வர்டு மையமாக இருந்தார்.

மாண்புறு புரட்சிக்குச் சற்றுமுன் கி. பி. 1688ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் நாளில் அரசர் இரண்டாம் ஜேம்ஸின் இளைய மனைவி மொடினா மேரிக்குப் (Mary of Modena) பிறந்தவரே ஜேம்ஸ் எட்வர்டு. மாண்புறு புரட்சி உச்சக் கட்டத்தை அடைவதற்கு முன்பாகவே எதுவும் ஆபத்து ஏற்படாதிருக்கத் தம் மனைவியையும், பிள்ளையையும் இரண்டாம்

ஜேம்ஸ் ஃபிரான்சு நாட்டுக்குக் கப்பலேற்றிவிட்டார். இங்கிலாந்தில் நிலைமை மோசமாகிவிடவே, அதே ஆண்டு டிசம்பர் மாதம் அரசரும் ஃபிரான்சுக்குச் சென்று தஞ்சம் புகுந்தார். அப்போது ஃபிரெஞ்சு மன்னராக இருந்த பதினான்காம் லூயி (Louis XIV) தம் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த ஸ்டூவர்டு (Stuart) அரசக் குடும்பத்தினருக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுத்து, பராமரித்து வந்தார்.

இரண்டாம் ஜேம்ஸை மீண்டும் ஆங்கில அரியாசனத்தில் அமர்த்தப் பதினான்காம் லூயி எடுத்துக்கொண்ட போர் முயற்சியும், இழந்த அரசைப் பெற இரண்டாம் ஜேம்ஸ் செய்த பிரயத்தனமும் தோல்வியில் முடிந்தது.

ஆன் அரசியார் தாம் காலமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், பாலிங் பரோக் பிரபு (Boiling Broke) என்ற தம் டோரி அமைச்சரின் மூலமாக, எப்படியும் தமக்குப் பின்னர்த் தம் சகோதரன் (Half Brother) ஜேம்ஸ் எட்வர்டு ஸ்டூவர்டு, பட்டத்தைப் பெறுவதற்கான இரகசிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆங்கில மகுடத்தைப் பெறுவதற்கான தகுதியை ஜேம்ஸ் அடைய வேண்டுமென்றால், தம் கத்தோலிக்க மதத்தை அவர் புறக்கணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆயின், பிடிவாதம் கொண்ட ஜேம்ஸ் அக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்துவந்தார்.

அதற்கிடையே ஆன் அரசி காலமாகிவிடவே, இங்கிலாந்தில் ஹானோவரியர்களின் ஆட்சி தொடங்கியது. இரண்டாம் ஜேம்ஸும் அப்போது இறந்துவிட்டார். இங்கிலாந்திலிருந்து விரட்டப்பட்ட ஜேகோபியர்கள் ஃபிரான்ஸை அடைந்து, பதினான்காம் லூயியின் உதவியுடன் ஜேம்ஸின் மைந்தரான ஜேம்ஸ் எட்வர்டை ஆங்கில அரியணையில் அமர்த்தத் திட்டமிட்டனர். ஆனால், 1715ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஃபிரான்சு மன்னரும் இறந்துபோனார்.

பதினான்காம் லூயிக்குப் பின்னர் அவருடைய கொள்ளுப் பேரன் பதினைந்தாம் லூயி என்ற பட்டப்பெயருடன் ஃபிரான்சின் மன்னரானார். அவர் விவரம் அறியாத சிறுபிள்ளையாக இருந்ததால் அவருக்கு இடைக்காலப் பாதுகாப்பாளராக (Regent) ஆர்லியன்ஸ் கோமகன் என்பவர் அமர்த்தப்பட்டார். இங்கிலாந்துடன் சச்சரவு எதுவும் செய்துகொள்ள விரும்பாத ஆர்லியன்ஸ் கோமகன் ஜேகோபியர்களுக்கு உதவி எதுவும் கொடுக்க மறுத்துவிட்டார்.

ஜேகோபியர்களுக்கு அந்நிய உதவி கிடைக்காதென்ற அந்நிலையில் ஆங்கில மக்களை வசப்படுத்திக்கொள்ளவேண்டி ஜேம்ஸ் எட்வர்டைப் பிராடஸ்டென்டு மதத்தைத் தழுவும்படி, பாலிங்பரோக் மீண்டும் வலியுறுத்தினர். ஆயின், அரியாசனத்திற்காகத் தம் கத்தோலிக்க சமயத்தை ஜேம்ஸ் விட்டுக் கொடுப்பதாக இல்லை. இருப்பினும், ஜேகோபியர்களின் உதவியுடன் வெற்றிகரமான கலகம் நடத்தி எப்படியும் இங்கிலாந்தின் மணிமகுடத்தைப் பெற்றுவிடலாமென்ற ஆசைமட்டும் அவருக்கிருந்தது. ஆனால், கலகத்தை வெற்றிகரமாக நடத்தக்கூடிய திறமையோ, ஆங்கில மக்களைக் கலகத்திற்கு ஆதரவாகத் தட்டியெழுப்பக்கூடிய தகுதியோ அவருக்கு இல்லாமலிருந்தது. முதலாம் ஜார்ஜின் ஆட்சியை ஓர் அந்நியரின் ஆட்சியாகக் கருதிவந்த ஆங்கில டோரிக் கட்சியினருக்குச் சில உறுதிமொழிகள் கொடுத்து அவர்களின் உதவியையும், ஆதரவையும் பெறலாமென்று பாலிங்பரோக் பிரபு கொடுத்த அறிவுரையையும் ஜேம்ஸ் உதறினர்.

தமக்கும் தெரியாமல், தமக்குச் சொல்லப்பட்டதும் புரியாமல் மந்தபுத்தியைக் கொண்டிருந்த ஜேம்ஸுக்கு ஸ்காட்லாந்தில் ஓரளவு ஆதரவு இருந்தது தெரியும். எனவே, மூத்த போலி அவர்களின் உதவியை நாடினர்.

1707ஆம் ஆண்டு இணைப்புச் சட்டத்திலிருந்தே (Act of Union) ஸ்காட்லாந்தில் சில காரணங்களால் இங்கிலாந்தின்மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தது. தங்கள்மீது அந்நிய ஆதிக்கம் திணிக்கப்பட்டுவிட்டதாகப் பல ஸ்காட்டியர்கள் குமுறிவந்தனர். அந்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பிய ஜேம்ஸ் ஆங்கில அரசுக்கெதிராகக் கலகத்திலிறங்கும்படி ஸ்காட்லாந்தியருக்கு ஆணையிட்டார்.

இங்கிலாந்திற் கெதிராக நடத்தப்படும் கலகங்களில் எப்போதுமே முன்னணியில் இருந்த மேல்நிலத்தார் அல்லது மலை நாட்டு மக்கள் (Highlanders) மார் எர்ல் (Earl of Mar) என்பவரது தலைமையில் கலகத்திலிறங்கினர். சிறந்த வீரரெனினும், சஞ்சலப் புத்தியுடையவராக மார் எர்ல் இருந்ததால், சுறுசுறுப்புடன் அவர் செயல்படவில்லை.

ப்ரோமர் (Braemar) என்னுமிடத்தில் அவர் ஜேம்ஸ் எட்வர்டை இங்கிலாந்தின் அரசர் மூன்றும் ஜேம்ஸ் என அறிவித்ததைத் தொடர்ந்து, பெர்த் (Perthe) நகரிலேயே காலத்தை வீணுக்கிக்கொண்டிருந்தார். ஜேம்ஸ் மற்ற ஆதரவாளர்களுடன் தம்மோடு சேர்ந்துகொள்வாரென்று மார் எர்ல் எதிர்பார்த்து

வந்தபோது, ஹானேவரியர்களுக்கு விசுவாசம் காட்டிய ஆத்தோல் (Atholl) என்ற ஹைலாந்து பிரமுகர் மார் எர்ல்க்குப் பல இன்னல்களைக் கொடுத்துவந்தார். ஆனாலும், ஸ்காட்லாந்தின் எல்லைப்புறத்திலிருந்த நார்த்தம்பர்லாந்து, டெர்லெண்ட்வாடர் ஆகிய இரு பெருநிலக் கிழார்களின் தலைமையில் சில கலகக்காரர்கள் மார் எர்லுக்கு உதவி செய்ய முன்வந்தனர். கென்மியூர் (Kenmure), நித்ஸ்டேல் (Nithssdale) என்ற பிரபுக்களின் தலைமையில் சில தாழ்நிலை (low lands) ஸ்காட்டியக் கலகக்காரர்களும் கலகத்தில் பங்குகொள்ள முன்வந்தனர். இரண்டாயிரம் பேர்கொண்ட அக் கூட்டுப்படையினர் மார் பிரபுவுக்கு உதவி செய்ய வடக்கு நோக்கிப் புறப்பட்டபோது, பிரஸ்டன் (Preston) என்ற இடத்தில் ஆங்கிலப் படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டுச் சிதறியடிக்கப்பட்டனர்.

அதே நாளில் (நவம்பர் 13) மார் பிரபு பெர்த் நகரை விட்டு வெளியேறி டம்ப்ளேன் (Dumblane) என்ற நகரைக் கைப்பற்றச் சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு எதிராக ஸ்காட்லாந்தில் படை திரட்டி வந்த அரச விசுவாசியான ஆர்கைல் கோமகன் (Duke of Argyle) என்பவரால் ஷெரிஃப்மியூர் (Sheriffmuir) என்னுமிடத்தில் வழிமறிக்கப்பட்டார். தொடர்ந்து நடந்த சண்டையில் வெற்றி எக் கட்சியினருக்கும் கிடைக்கவில்லை. ஆகவே, மேற்கொண்டு முன்னேற முடியாத நிலையில் மார் பிரபு பெர்த் நகரை நோக்கிப் பின்வாங்கினர். அதுவரை அவரைப் பின்பற்றிவந்த மலைநாட்டினர், மனமுடைந்து தங்களின் இல்லங்களுக்குத் திரும்பிவிட்டனர்.

ஜேகோபியர்களின் உற்சாகம் குறைந்துகொண்டு வந்த அந்த நேரத்தில்தான், ஜேம்ஸ் எட்வர்டு பீடர் ஹெட் (Peter head) என்ற இடத்தில் வந்து இறங்கி, பெர்த் நகருக்குச் சென்று மார் எர்லோடு ஒன்று சேர்ந்தார்.

1716ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஸ்கோன் (Scone) என்னுமிடத்தில் ஜேம்ஸ் இங்கிலாந்து அரசராக முடிசூடப்பட்டார்.

ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய குணங்களைப் பெற்றிராத ஜேம்ஸ் எட்வர்ட் தம் சார்பில் ஸ்காட்லாந்தியரைத் தட்டி எழுப்ப முடியவில்லை. ஸ்காட்லாந்திலேயே தாம் எதிர் பார்த்த ஆதரவு தமக்கு இயலாத நிலையில், இங்கிலாந்தை நோக்கிப் படையெடுக்க அவருக்கு விருப்பமில்லை. ஒரு மாதம் அங்கு மிங்கும் சுற்றிப்பார்த்துவிட்டு, தமக்கு இனி வெற்றி கிடைப்பது அரிது என்று அவர் உணர ஆரம்பித்தார். இந் நிலையில் தம்மைச் சுற்றி வளைக்க இங்கிலாந்திலிருந்து உதவிப் படைகள்

வருகின்றன எனக் கேள்வியுற்ற ஜேம்ஸ் மனமுடைந்தவராக ஃபிரான்சு நாட்டுக்குத் திரும்பிவிட்டார். இதைத் தொடர்ந்து கலகத்திற்குத் தயாராக இருந்த எஞ்சியிருந்த ஒரு சில ஜேகோபியர்களும் சிதறிவிட்டனர். ஆங்கிலப் படைகள் பலரைத் துரத்திப் பிடித்துக் கொன்றன. இங்ஙனம் முதல் ஜேகோபியர்களின் கலகம் (1715) தோல்வியில் முடிந்தது.

கலகத்தில் பங்கெடுத்துக்கொண்ட டெர்லெண்ட் வாட்டர், கென்மியூர் என்ற இரு முக்கியத் தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களுடன் மற்றச் சாதாரணக் கலகக் காரர்கள் முப்பது பேர் கொல்லப்பட்டனர்; நூற்றுக் கணக்கானவர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கடத்தப்பட்டனர்.

ஜேகோபியர்களுக்கு ஆதரவாக இங்கிலாந்தில் கலகம் செய்ய முயன்றதாகச் சில டோரிக் கட்சித் தலைவர்களும் சந்தேகிக்கப் பட்டனர். அதில் ஓரளவு உண்மையிருந்த தெனினும், ஜேம்ஸ் எட்வர்டுக்கு ஆதரவாகப் பெருமளவில் இங்கிலாந்தில் கலகமெதுவும் ஏற்படவில்லை. இருப்பினும் ஃபார்ஸ்டர் (Forster) போன்ற ஆங்கிலேயர்கள் ஜேகோபியர்களுக்குத் தங்களின் ஆதரவைக் காட்டிக் கொண்டது, அரசர் முதலாம் ஜார்ஜுக்கும், அவரிடம் விசுவாசமாயிருந்த விக்குகளுக்கும் தெரிந்திருந்தது. டோரிக் கட்சியினரை ஏற்கெனவே சந்தேகித்த முதலாம் ஜார்ஜுக்கு அதனால், அவர்களிட மிருந்த வெறுப்பு இன்னும் அதிகரித்தது. தாம் அரசப் பதவியில் தொடர்ந்து இருக்கவேண்டுமென்றால் லீக் கட்சியினரின் ஒத்துழைப்புத் தேவை யென்பதை அவர் உணர ஆரம்பித்தார். அதே போன்று, ஹானேவரியர்களின் ஆட்சியைத் தாங்கள் பலப்படுத்தாவிட்டால், ஜேகோபியர்களின் உதவியால் இங்கிலாந்தில் மீண்டும் ஸ்டூவர்டுகளின் முன்னிலை மீட்சி ஏற்பட லாமென லீக்குகள் நினைக்க ஆரம்பித்தனர். அந்தச் சூழ்நிலையிலேயே லீக் கட்சியினரின் செல்வாக்கும், ஆட்சியும் தொடங்கின.

ஜேகோபியர்களென்றால் கத்தோலிக்கர்களென்றும், இராசத் துரோகிகளென்றும் அதன் பின்னர் இங்கிலாந்தில் ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஆதரவளித்த டோரிகளும் மக்களிடையே செல்வாக்கை இழந்தவர்களாயினர்.

ஜேகோபியர்களின் கலகம் (1745)

1716 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் எட்வர்டு ஃபிரான்சு நாட்டுக்கு ஓடிவந்து தஞ்சம் புகுந்ததை நாம் மேலே கண்டோம், ஆண்டுகள் பல கடந்தும் தாம் எப்படியும் இங்கிலாத்தின் அரசராகிவிடலா மென்ற நம்பிக்கையைமட்டும் அவர் இழக்கவில்லை;

ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் (War of Austrian Succession, 1742 – 1748) இங்கிலாந்தும், ஃபிரான்சும் எதிர்நாடுகளாகச் சண்டையிட்டு வந்த சமயத்தில், ஜேம்ஸ் எட்வர்டு மீண்டும் தம் நப்பாசையைச் செயலாக்க நினைத்தார். இம் முறையும் அவர் ஸ்காட்லாந்தியர்களையே நம்பினார்; தமக்கு ஆதரவாக அம் மக்கள் கலகக் கொடி உயர்த்துவர் என எதிர்பார்த்தார். அது மட்டுமன்றி, ஹானேவரியர்களின் ஆட்சியிலே வெறுப்புற்றுவரும் ஆங்கில மக்களும் அதில் கலந்து கொள்வாரென்றும், தமக்கு உதவியாக ஃபிரான்ஸ் தன் கப்பற்படையை இங்கிலாந்திற்கெதிராக ஏவிவிடக் கூடுமென்றும் ஜேம்ஸ் எட்வர்டு நினைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இம் முறை கலகத்தை முன்னின்று நடத்த வேண்டியதற்கான திறமையுள்ள ஒரு தலைவரையும் அவர் தயாராக்கி வைத்திருந்தார். சார்லஸ் எட்வர்டு என்ற தம் மைந்தரே அவர். இவரையே இளைய போலி (Young Pretender) என மக்கள் அழைத்தனர்.

இளைய போலி கவர்ச்சியான உருவமும் இளமைத் துடிப்பும் கொண்டவராக இருந்தார். மனைதிடமும், சுறுசுறுப்பும் தன்னம்பிக்கையும் கொண்டிருந்த சார்லஸ் 1745 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தம் ஒரு சில ஆதரவாளர்களுடன் ஸ்காட்லாந்தின் மேற்கு மலைப் பகுதியில் மோய்டார்ட் (Moidart) என்னுமிடத்திற்கு வந்து சேர்ந்தார். தம் தந்தையின் சார்பில் கலகக் கொடியை உயர்த்தி ஸ்காட்டியர்களின் உதவியுடன், ஆங்கில அரியாசனத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதே அவரின் குறிக்கோள்.

மற்றவர்களைக் கவரும் தன்மையையும், ஆற்றலையும் கொண்டிருந்த சார்லசுக்கு மலைநாட்டு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. ஆயிரக்கணக்கில் ஸ்காட்டிய மக்கள் அவரின் தலைமையில் குழும ஆரம்பித்தனர். ஸ்காட்லாந்து முழுவதுமே சார்லசுக்கு அடிபணிந்த தென்று சொல்லலாம். எடின்பர்க் (Edinburg) நகரில் சார்லசுக்கு அரசருக்குரிய வரவேற்புக் கொடுக்கப்பட்டது. சர் ஜான் கோப் (Sir John Cope) என்ற தளபதியின்கீழ் அனுப்பப்பட்ட ஆங்கிலப்படை பிரெஸ்டன் பேன்ஸ் (Preston pans) எனுமிடத்தில் சார்லசின் தலைமையில் இயங்கிய ஜேகோபியர்களால் படுதோல்வி அடைந்தது.

இம் முறை ஜேகோபியர்களின் கலகம் வெற்றியடையக் கூடுமென்று பலர் நம்பினர்.

வெற்றிநடை போட்டுவந்த சார்லஸ், நவம்பர் மாதத்தில் இங்கிலாந்திற்குள் நுழைந்தார். கேர்லிஸ்லி (Corlisle), மான்

செஸ்டர் (Manchester), டெர்பி (Derby) ஆகிய நகரங்கள் அவர் வசமாயின. தலைநகரான இலண்டன் மாநகரில் பீதியும், குழப்பமும் ஏற்பட்டுவிட்டன. அரசர் இரண்டாம் ஜார்ஜ் தலைநகரை விட்டுப் பாதுகாப்பான வேறு இடத்திற்குச் செல்ல வேண்டுமென்னும் யோசனையும் தெரிவிக்கப்பட்டது. டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே, ஜேகோபியர்களின் கலகம் வெற்றிபெற லாமென்று நம்பப்பட்டது. ஆனால், சார்லஸ் எதிர்பார்த்தபடி தம் தந்தைக்கும், தமக்கும் ஆதரவாக ஆங்கிலேய ஜேகோபியர் கள், கலகத்தில் கலந்துகொள்ள முன்வரவில்லை. அடுத்தபடி யாக, ஃபிரான்சிலிருந்தும் உதவி ஏதுவும் கிடைக்க வழியில்லா மல் போய்விட்டது. ஆகவே, மேற்கொண்டு முன்னேறினால் தங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடுமெனச் சார்லஸின் ஆதரவாளர் கள் நினைத்து ஸ்காட்லாந்துக்குத் திரும்ப வேண்டுமெனச் சார் லஸை வற்புறுத்தினர்.

இந் நிலையில் சார்லஸ் மனமுடைந்தவராக ஸ்காட்லாந்துக் குத் திரும்பும் வழியில் தங்களை வழிமறித்த ஆங்கிலப் படைகளை 1746 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஃபால்கிர்க் (Falkirk) எனு மிடத்தில் ஸ்காட்டிய ஜேகோபியர்கள் வெற்றி கண்டபோதும், ஆங்கில அரசைப் பணியவைக்க முடியுமென்ற நம்பிக்கை அவர் களுக்கு இல்லாததால் தங்கள் இல்லங்களை நோக்கியே செல்ல ஆரம்பித்தனர்.

இரண்டாம் ஜார்ஜின் மைந்தரும் கம்பர்லாந்து கோமகனு மான (Duke of Cumberland) வில்லியம் என்பவரின் தலைமையில் பெரிய ஆங்கிலப்படை யொன்றுஜேகோபியர்களை விரட்டிப்பிடிக்க வடக்கே அனுப்பப்பட்டது. 1746 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத் தில் கல்லோடன் மூர் (Calloden Moor) என்னுமிடத்தில் நடந்த சண்டையில் சார்லஸின் ஆதரவாளர்கள் சிதறியடிக்கப்பட்டனர். போர்க்களத்திலிருந்து தப்பிவிட்ட சார்லஸ் சில மாதங்கள் மலை நாட்டு மக்களிடையே பதுங்கி வாழ்ந்திருந்து, ஃபிரான்சு நாட் டுக்குத் தப்பிவிட்டார். அத்துடன் இரண்டாம் ஜேகோபியர் களின் கலகமும் தோல்வியில் முடிந்தது.

கலகத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்ட ஸ்காட்லாந் திய மலைச் சாதியினர் ஈவு இரக்கமின்றிக் கம்பர்லாந்து பிரபுவின் ஆங்கிலப் படைகளால் வேட்டையாடப்பட்டுக் கொல்லப்பட்ட னர். ஸ்காட்லாந்திய மலைப் பகுதியில் இனி ஆங்கில அரசுக் கெதிராகக் கலகங்கள் எக் காலத்திலும் ஏற்படாதவாறு பல கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதைத் தொடர்ந்து ஸ்காட்டிய மலைச் சாதியினர் சிலர் நாட்டைவிட்டு

அமெரிக்கா போன்ற குடியேற்ற நாடுகளுக்கு ஓடிவிட்டனர். எஞ்சியிருந்தவர்கள் இங்கிலாந்தின் விசுவாசக் குடிகளாகக் காலப் போக்கில் மாறிவிட்டனர்.

1745ஆம் ஆண்டு ஜேகோபியர்களின் கலகம் தோல்வியடைந்ததை ஒட்டி, டோரிக் கட்சியினருக்கு ஸ்டுவர்டுகளின் முன்னிலை மீட்சியிலிருந்த சிறிது நம்பிக்கையும் மறைந்துவிட்டது. இனி எக் காலத்திலும் இங்கிலாந்தின் அரசை ஜேம்ஸ் எட்வர்டோ அவருடைய பிள்ளை சார்லஸ் எட்வர்டோ அடைய முடியாதென்ற நிலை தெளிவாக ஏற்படவே, டோரிக் கட்சியினர் தங்களின் விசுவாசத்தையும், ஆதரவையும் ஹானோவரியர்களுக்குக் கொடுக்க முன்வந்தனர். அந்தப் பின்னணியிலேயே மூன்றும் ஜார்ஜின் தனியாட்சி பின்னர்த் தோன்றியது.

(ஈ) மெத்தடிஸ்ட் இயக்கம்

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில மக்களிடையே மத நம்பிக்கை குறைந்திருந்ததுமட்டு மன்றி, அவர்களின் ஒழுக்கமும் குறைந்திருந்தது.

திருத்துவச் சமயத்திலே நம்பிக்கையில்லாதவர்களின் எண்ணிக்கை திருச்சபைக்கு உள்ளும், வெளியிலும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. மதகுருமார்களின் வாழ்க்கையிலே பக்தியைவிட, போகங்களே அதிகமாகக் காணப்பட்டன; ஆண்டவனின் சேவகர்களாக இருக்கவேண்டியவர்கள் அரசியல் வாதிகளாகவும், அரண்மனைத் தாசர்களாகவும் இருந்து வந்தனர். கோயில்களில் வழிபாடு நிகழ்த்தியோரிடத்திலும், பிரார்த்தனை செய்ய வந்தோரிடத்தும் பக்தி காணப்படவில்லை. எல்லாரும் ஏதோ கடனுக்குத் தத்தம் கடமைகளைச் செய்து வந்தனர். சுருக்கமாகச் சொல்வதென்றால், மக்களிடையே நாத்திக மனப்பான்மையே மேலோங்கி யிருந்தது.

மதத்தில் இருந்த நம்பிக்கை மக்களிடையே குறைந்துவந்ததால், அதையொட்டி, நாட்டிலே ஒழுக்கமும் பாதிக்கப்பட்டது. 'இப்படித்தான் வாழவேண்டும்' என்ற கோட்பாட்டுக்கு முரணாக 'எப்படியும் வாழலாம்' என்ற முறையில் மக்கள் வாழ்ந்து வந்தனர். அரசியலிலே லஞ்ச ஊழல்கள் மலிந்திருந்தன. அதன் எதிரொலியாகச் சமூகம் சீர்கெட்டு வந்தது. பொய், ஏமாற்று தல் போன்ற தீய குணங்கள் மக்களின் வாழ்க்கைக் கோட்பாடுகளாக அமைந்தன. சில்லறை இன்பங்களிலேயே மக்களின் நாட்டம் சென்றது. மக்கள் பெருவாரியாகக் குடிப்பழக்கத்திற்கு

ஆளாகியிருந்தனர். ஆக அதனைச் சார்ந்த கொலை, கொள்ளை, சூது, விபசாரம் போன்ற மற்றக் கொடிய பழக்கங்கள் அருவருக்கத் தக்க முறையில் பெருகிக்கொண்டே வந்தன.

மதப்பற்று அற்றவர்களாகவும், நல்லொழுக்கக் குணங்களைத் துறந்தவர்களாகவும் ஆங்கில மக்கள் கேவலமான வாழ்வில் உழன்று கொண்டிருந்த வேளையில் அக் கேட்டினைப் போக்க நாட்டிலே ஒரு புதிய இயக்கம் தோன்றியது. அதுவே மெத்தாடிஸ்டுகளின் (Methodists) வரலாறுக அமைகிறது.

மெத்தாடிஸ்டுகள் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒழுங்கு முறை வாதிகள் என்பதே பொருளாகும். அதிலும் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாடு இருக்கவேண்டுமென விரும்பிய அவ் வியக்கத்தினர் தங்களின் வாழ்க்கையினைக் கடுமையான விதிகளுக்குக் கட்டுப் படுத்தி, தூய்மையாக்கிக் கொண்டனர். அவர்களின் வாழ்க்கை, போதனைக் கூட்டம், தந்நலமற்ற சமூக சேவை போன்றவை களில் முறையோடு இயங்கியது.

அவ் வியக்கத்திற்கு ஜான் வெஸ்லி (John Wesley) என்னும் பெரியாரும் அவரின் சகோதரரான சார்லஸ் வெஸ்லி என்ப வருமே காரணகர்த்தர்களாக விளங்கினர். லின்கால்ன்ஷை யரைச் (Lincolnshire) சேர்ந்த எப்வொர்த் (Epworth) எனு மிடத்தில் ரெக்டாரா (Rector) கப் பணியாற்றிய சாமுவேல் வெஸ்லி என்பவருக்குப் பிள்ளைகளான இந்த வெஸ்லி சகோத ரர்கள் ஆக்ஸ்ஃபோர்டுப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்களாவர். உலக இன்பங்களிலே மனதைப் பறிகொடுத்தவர்களாகப் பல நீய பழக்க வழக்கங்களிலே மற்ற மாணவர்கள் திளைத்திருக்க, வெஸ்லிச் சகோதரர்கள் தாங்கள் படிக்கும்போது ஒரு சிறு சங்கம் அமைத்துக்கொண்டு ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். அச் சங்கத்தில், அங்கே அவர்களுடன் கல்விபயின்று வந்த ஜார்ஜ் விட்ஃபீல்டு (George Whitefield) என்பவரும் சேர்ந்துகொண் டார். அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்திருக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்த இவ் விளைஞர்கள் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் அடிக்கடி நடத்தப்பட்ட சமயக் கூட்டங் களிலே பேராரவம் காட்டிக் கலந்துகொண்டனர். இவர்களு டைய செயல்கள் அனைத்தும் ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப் பட்டு, கண்ணியமான வகையில் வரையறைக் குட்பட்டிருந்த தால் மற்ற மாணவர்கள் அவர்களை 'மெத்தாடிஸ்டுகள்' அல்லது ஒழுங்குமுறை வாதிகளென நையாண்டி செய்தனர். தேலியாக அழைக்கப்பட்ட இப் பெயரே காலப்போக்கில் இந்தச் சீர்திருத்த வாதிகளுக்குப் பொருந்திவிட்டது.

தம் படிப்பு முடிந்ததும் ஜான் வெஸ்லி சமய போதனை செய்வதற்காக ஜியார்ஜியா என்ற அமெரிக்கக் குடியேற்ற மாகாணத்திற்குச் சென்றார் (1735). ஆனால், அதிக நாள்கள் அங்குத் தங்க இயலாதவராக ஜான் வெஸ்லி தாயகம் திரும்பி இலண்டனிலே தம் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். அப்போது சமயத்தில் பற்றும், ஆர்வமும் கொண்டிருந்த ஜெர்மன் மொழி பேசிய மொராவியர்கள் (Moravians) என்ற கூட்டத்தினருடன் ஜான் வெஸ்லி கலந்து பழகும் வாய்ப்பினைப் பெற்றார். 'மனிதனுடைய பாவங்கள் முழுமையாக மன்னிக்கப்பட்டாலொழிய, அவனுக்கு நரகம் நிச்சயம்' என்ற கொள்கையினை ஜான் அவர்களிடம் கற்று, தம் வாழ்க்கையை ஆன்மீக சேவைக்கு அர்ப்பணிக்கத் திட்டமிட்டார். அவருக்கு உறுதுணையாகச் சார்லஸ் வெஸ்லியும், ஜார்ஜ் விட்ஃபீல்டும் இருந்தனர். இம் மூவரும், மற்றச் சகாக்களும் இலண்டனிலிருந்தபோது சில இரவுகளில் தூங்கா விரதத்தை மேற்கொண்டு, ஆன்மீகக் கருத்தரங்கை நடத்தினர். அப்போது இலண்டனில் தொடங்கப்பட்டதே மெத்தாடிஸ்டுகளின் இயக்கமாகும்.

ஜான் வெஸ்லியின் ஆன்மீக போதனைக்குப் பேராதரவு கொடுத்த அவரின் சகோதரர் சார்லஸ் வெஸ்லி அவ் வியக்கத்தின் கவிபாடும் குயிலாக இருந்தார். அவர்தம் பக்திப்பாடல்கள் எளிமையான நடையிலே, கேட்பவர்களை ஆட்கொள்ளும் உணர்ச்சிக் கவிதைகளாக இருந்ததனால், மக்களின் உள்ளங்களைப் பரவசப்படுத்தின. அவ் விரு சகோதரர்களுடன் சேர்ந்து செயல்பட்ட ஜார்ஜ் விட்ஃபீல்ட் தம் சிறப்பான சொற்பொழிவுகளால் மக்களின் மனதைக் கவர்ந்தார். தம் நாவன்மையினால் கூட்டத்தினரை உணர்ச்சி வசப்படுத்தி, உள்ளத்தில் ஆணி அடித்தது போல், தம் போதனைகளைப் பரப்பும் லாவகமும், பேசுவனவற்றை அப்படியே நடத்திக்காட்டித் தம் பிரசார வன்மையினால் கூட்டத்தினரை மனமுருகச் செய்யும் ஆற்றலும் விட்ஃபீல்டுக்கு இருந்தன.

வெஸ்லி சகோதரர்களும், ஜார்ஜ் விட்ஃபீல்டும் தங்களைச் சமயச்சீரிய வாழ்க்கைக்கு அர்ப்பணித்துக் கொண்டவர்களாக, பிரசாரத் திருப்பணியில் இறங்கினர். சமயக் கொள்கையினை மக்களிடம் பரப்ப, நாட்டின் பல பாகங்களில் திறந்த வெளிக் (open air) கூட்டங்களை உற்சாகத்துடன் அவர்கள் நடத்தினர். நாட்டின் குறுக்கும், நெடுக்குமாகப் பல்லாயிரமைல்கள் ஜானும், அவர்தம் துணைவர்களும் நடந்தே சென்று தங்களது கொள்கையினைப் பரப்பினர். கிராமப்புறங்களிலும், நகரின் குடிசைப் பகுதிகளிலும், திருக்கோயில்களிலும், சிறைச்

சாலைகளிலும் அவர்களின் பிரசாரக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. விடியற்காலையில் தொடங்கப்பட்ட கூட்டம் சில சமயங்களில் பொழுது சாய்ந்தும் நீடித்தது; அவர்களின் பிரசாரக் கூட்டங்களைச் சில சமயங்களில் 40,000 மக்கள்வரை அயராது கேட்டனர். அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவுகளில் பக்தி, முக்தி போன்றவைகள் எங்ஙனம் வற்புறுத்தப்பட்டனவோ அதே போன்று பாடல், ஆடல் போன்ற மற்ற உலகியல் இன்பங்கள் கண்டிக்கப்பட்டன.

நாளடைவில் அவர்களின் இயக்கத்திற்கு ஆதரவாளர்கள் திரள ஆரம்பித்தனர். ஆதரவு பெருகப் பெருக, மெத்தாடிஸ்டுகளின் இயக்கம் வன்மைபெற ஆரம்பித்தது. உற்சாகத்துடனும் உணர்ச்சியுடனும் சமயக் கொள்கைகளுடன் நல்லொழுக்கத்தையும் மெத்தாடிஸ்டுகள் போதித்துவர, சோம்பித் திரிந்துவந்த ஆங்கிலிகன் (Anglican) மத குருமார்களுக்கு அது எரிச்சலைக் கொடுத்தது. தங்களாலியன்றவரை மெத்தாடிஸ்டுகளுக்குத் தொல்லைகள் கொடுக்க, ஆங்கிலிக மத குருமார்கள் முற்பட்டனர். பாமர மக்களை ஏவி, மெத்தாடிஸ்டுகள்மீது கல்லும் மண்ணும் வீசச் செய்தனர்; அவர்களின் பிரசாரக் கூட்டங்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன; அவர்களின் இல்லங்கள் சூறையாடப்பட்டன. சேவைக்கே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட மெத்தாடிஸ்டுகளுக்குக் கல்லடியும், சொல்லடியும், தடியடியும் ஒரு பொருட்டாகப் படவில்லை. இந்த எதிர்ப்புகளிடையேயும் அவ் வியக்கம் தொடர்ந்து வளர்ந்தது. கி.பி. 1745 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த எதிர்ப்பு தானாகவே மறைந்தது. ஜான் வெஸ்லியும், அவரைப் பின்பற்றினோரும் ஆங்கிலிகத் திருச்சபையினின்றும் வெளியேறவில்லை யென்றாலும் ஆங்கிலிகர்கள் அவர்களைத் தங்கள் திருச்சபையில் சேர்த்துக்கொள்ள மறுத்தனர். ஜான் வெஸ்லி கடைசிவரை தம்மை ஆங்கிலிக மத நிறுவனத்தைச் சேர்ந்தவரென்றே சொல்லிக்கொண்டபோதும் தம்மைப் பின்பற்றியவர்களை ஒருங்கு சேர்த்து, அவர்களை ஒரு தனி ஸ்தாபனமாக அமைத்தார். அதுவே நாளடைவில் மெத்தாடிஸம், கிருத்துவ மதத்தினின்று பிரிந்து ஒரு தனி மதமாக மாற ஏதுவாயிற்று. இலண்டன், பிரிஸ்டல் போன்ற நகரங்கள் அவ் வியக்கத்தின் கேந்திரங்களாக அமைந்தன.

வெஸ்லி இங்கிலாந்தைப் பல சுற்று வட்டாரங்களாகப் (circuits) பிரித்து, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சுற்றி வரும் குருமார்களை அனுப்பிவைத்தார். ஆண்டுக்கொரு முறை அவர் ஒரு மாநாட்டைக் கூட்டியது மட்டுமன்றி வாராவாரம் சாதகர்களுக்கு வகுப்புகள் நடத்தினர்.

'முடிந்தவரையில் உன்னுலியன்ற உதவியை எல்லா வழிகளி லும், எல்லா இடங்களிலும் கிடைக்கச் செய்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் வெஸ்லி செய்த போதனைகள் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் அவர்தம் குருமார்களால் கொண்டு செல்லப்பட்டன.

வெஸ்லி இயக்கத்தின் பலன்கள்

கடும் விரதங்களையும், ஆன்மீகச் சாதனைகளையும், பக்தி உணர்ச்சியையும், ஜீவகாருண்யத்தையும், சமயப்பற்றையும், நல்லொழுக்கத்தையும் ஜான் வெஸ்லியைப் பின்பற்றிய மெத்தா டிஸ்டுகள் மக்களுக்கு வழிகாட்டிகளாக இருந்ததால் நாட்டில் பொதுவாகச் சமயப்பற்றும், ஒழுக்க நிலையும் உயர்ந்தன.

திருப்பணியைப் புறக்கணித்து வந்த குருமார்களுக்கு அவ் வியக்கம் ஒரு விழிப்புணர்ச்சியைக் கொடுக்கவே சமயப் பிரசாரத் தில் சுறுசுறுப்பாக அவர்கள் ஈடுபடலானார்கள். குடி, கொள்ளை, கொலை போன்ற பாவ காரியங்கள் குறைய ஆரம்பித்தன. உயிர் கொல்லாமையைப் போதித்த ஜீவகாருண்ய சங்கங்களும், நற் செய்தி பரப்புவோர் சங்கங்களும் நாட்டிலே தோன்றலாயின.

மெத்தாடிஸ்டுகளின் பிரசாரப் பலனுகப் பல மனித இன நலப் பற்று (humanitarian) சீர்திருத்தங்கள் தனியார் முயற்சியாலும் அரசாங்கத்தின் சட்டத்தினுலும் கொண்டுவரப்பட்டன. ஏழை மாணவர்கட்கு இலவசக் கல்வி, அடிமை வியாபார ஒழிப்பு, கிரி மினல் சட்ட மறு தொகுப்பு, சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள் போன்றவைகள் 18 ஆம் நூற்றுண்டில் கொண்டுவரப்பட்டதற்கு அவ் வியக்கம் காரணமாக அமைகிறது. சுருக்கமாக, சமூகத்தில் பெரும்பான்மையினராகவும், கடைநிலையி லிருந்தவர்களுமான ஏழை, எளியோர்கள் அறிவு ஞானம் பெற்று, ஆங்கிலச் சமூகத் தில் பயனுள்ள மக்களாக மாறினர்.

பல நலன்களுக்குக் காரணமாக அமைந்திருந்த இவ் வியக்கம் சில தீமைகளுக்கும் வித்திட்டது.

வெஸ்லியின் தீவிரப் போதனைகளால் மக்களிடம் மலர்ந்திருந்த களியாட்டங்கள், கேளிக்கைகள் மறையலாயின. மகிழ்ச்சியில் திளைத்துக்கொண்டிருந்த 18 ஆம் நூற்றுண்டிய இங்கிலாந்து ஒருவித மோன நிலைகொண்ட நாடாக 19 ஆம் நூற்றுண்டில் மாறியது எனலாம். இசை, நாடகம், கலைகள், விளையாட்டுகளி லும் மந்தம் ஏற்பட்டுவிட்டது.

ஆயின், இவ் வியக்கத்தால் ஏற்பட்ட தீமையைவிட நன் மையே பெரிதெனப் பொதுவாக ஆராயுமிடத்துத் தெரியவரும்.

13. மூன்றும் ஜார்ஜ் - அமெரிக்க சுதந்தரப் போர் (1775 - 1783)

ஸ்டூவர்டுகள் காலத்திலிருந்தே வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் ஆங்கிலேயர்கள் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். மசாசூசெட்ஸ் (Massachusetts), ரோட் தீவு (Rhode), நியூ ஹாம்ப்ஷைர் (New Hampshire), கனெக்டிகட் (Connecticut), நியூயார்க் (New york) நியூ ஜெர்சி (New Jesry), டிலாவேர் (Delaware), பென்சில்வேனியா (Pennsylvania), வர்ஜினியா (Virginia), மேரிலாந்த் (Maryland), வட கரோலினு (North Corolina), தென் கரோலினு (South Corolina), ஜார்ஜியா (Georgia) என்ற 13 குடியேற்ற நாடுகளும் மூன்றும் ஜார்ஜின் காலத்தில் தங்கள் தாய் நாடான இங்கிலாந்தை எதிர்த்துச் சுதந்தரப் போர் செய்யப் பல காரணங்களிருந்தன.

பழைய குடியேற்றக் கொள்கை

தன் குடியேற்ற நாடுகளோடு இங்கிலாந்து கொண்டிருந்த பழைய காலனிக் கொள்கை (Old Colonial Policy) யின்படி தாய் நாடான பிரிட்டனின் நன்மைக்காகவே அமெரிக்கக் குடியேற்றங்கள் இருக்கின்றன எனக் கருதப்பட்டது. அந்தக் கொள்கையின் அடிப்படையில் பல பொருளாதாரக் கட்டுப்பாடுகள் அமெரிக்கர் மீது விதிக்கப்பட்டிருந்தன. அமெரிக்கர்கள் தங்கள் வியாபாரச் சரக்குகளை ஆங்கிலக் கப்பல்களில் தவிர வேற்று நாட்டுக் கப்பல்களில் அனுப்பக் கூடாதென்றும், ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு வரும் பண்டங்களும் இங்கிலாந்துமூலமாகவே அனுப்பப்பட வேண்டுமென்றும் சுட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இரும்பு, கம்பளி, செய்பொருள்கள் (manufactured goods) இங்கிலாந்திலிருந்தே இறக்குமதி செய்யவேண்டுமென்றும், சர்க்கரை, அரிசி, காப்பிக் கொட்டை, புகையிலை போன்ற பொருள்களை பிரிட்டனுக்கு மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றும்

அமெரிக்கக் குடியேற்றங்கள் வற்புறுத்தப்பட்டன. தொப்பி போன்ற சில பொருள்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்படக் கூடாதென்றும் தடை விதிக்கப்பட்டிருந்தது. கள்ளக் கடத்தலிலோ, கள்ளத் தயாரிப்பிலோ ஈடுபட்டிருந்த அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் அரசினரால் தண்டிக்கப்பட்டனர். தாய் நாட்டுக்குச் சாதகமாகவே குடியேற்ற நாடுகளின் வியாபாரம் இருக்க வேண்டுமென்றும் அமெரிக்கர்கள் வற்புறுத்தப்பட்டனர். மேற்கூறிய கொள்கை இங்கிலாந்தால் பின்பற்றப்பட்டதால் அத் தடைகள் அமெரிக்கர்களின் இலாபத்தைப் பெரிதும் பாதித்தது. எனவே, அந்த வியாபாரச் சட்டங்களை மாற்ற வேண்டுமென அமெரிக்கர்கள் கோரியதில் ஆச்சரியமில்லை. தாய்நாட்டின் தயவும் பாதுகாப்பும் தங்களுக்குத் தேவையாக இருந்த காலம் வரையில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இங்கிலாந்தின் வியாபாரக் கொள்கையை எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை. ஆனால், ஏழாண்டுப் போருக்குப் பின்னர் நிலைமை மாறியது.

ஏழாண்டுப் போர்

ஏழாண்டுப் போரின் இறுதியில் ஃபிரான்சும், ஸ்பெயினும் முரியடிக்கப்பட்டிருந்தன. அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு வடக்கேயும், மேற்கேயும் இருந்த ஃபிரெஞ்சுக்காரரின் அபாயமும், தெற்கே இருந்த ஸ்பானியர்களின் தொல்லைகளும், அப் போரின் இறுதியில் அகற்றப்பட்டிருந்தன. ஆகவே, தாய்நாடான இங்கிலாந்தின் உதவி அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு இனித் தேவையில்லாமலிருந்தது. 'வட அமெரிக்காவிலிருந்து ஃபிரெஞ்சுக் கொடி அகற்றப்பட்டபோதே முதலாம் பிரிட்டிஷ் பேரரசு குலைய ஆரம்பித்தது' என ஃபிரெஞ்சுத் தளபதி குறிப்பிட்டார். அதை உறுதிப்படுத்தும் வகையில், வட அமெரிக்காவில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் மறைந்ததும், தங்களின் தாய்நாட்டை எதிர்த்துப் போர் செய்யத் துணியும் அளவுக்கு அமெரிக்கக் குடியேற்றங்கள் தெம்பைப் பெற்றன. தங்களின் பாதுகாப்புக்கு இனி இங்கிலாந்தின் உதவி தேவையிருக்காதென்ற நிலை ஏற்பட்டதும், தாங்கள் அதுவரை அடக்கி வைத்திருந்த வெறுப்புணர்ச்சிகளை வெளிப்படையாக அமெரிக்கர்கள் காட்டத் தொடங்கினர்.

இன்னொரு வகையிலும், அப் போர் இங்கிலாந்திற்கும் அதன் அமெரிக்கக் குடியேற்றங்களுக்கும் இடையே இருந்த உறவைப் பாதித்தது எனச் சொல்லலாம். ஏழாண்டுப் போரினால் இங்கிலாந்து அரசாங்கத்திற்குப் பணவிரயம் ஏராளமாக ஆகி இருந்தது. அதைச் சரிக்கட்டுவதற்காக, அச் செலவின் சிறு பகுதியை அமெரிக்கர்கள்மீது திணிக்கப் பிரிட்டன் முடிவு செய்தது. அதற்

கேற்ப, பிரிட்டன் அமெரிக்கக் குடியேற்றங்கள்மீது வரி விதித்தது. ஆயின், அக் குடியேற்றங்கள் உரிமைக் குரலே எழுப்பி வரிகளைக் கட்ட மறுக்க, அதுவே போர் மூளக் காரணமாக அமைந்தது. ஏழாண்டுப் போரின் போது அமெரிக்காவின் பல குடியேற்றப் பிரிவினர் ஒன்று திரண்டு போரிட வாய்ப்புப் பெற்றிருந்தால், அதன் விளைவாக அவர்களிடையே ஒற்றுமையுணர்ச்சி பிறந்திருந்தது. குடியேற்றங்கள் பதின்மூன்று ஆனாலும் தாங்கள் வாழும் அமெரிக்கா ஒரே நாடு என்ற ஒருமைக் கருத்து அமெரிக்கர்களிடையே எழுந்து, அதன் அடிப்படையிலே அவர்களுக்குத் தங்களே அடிமையாக நடத்தும் தாய்நாட்டை எதிர்க்கவும், அதன் பேரரசைத் தகர்க்கவும் துணிவு வளர்ந்தது.

பேரரசின் அமைப்பு

இங்கிலாந்துப் பேரரசின் அமைப்பின்படி குடியேற்றங்கள் அதன் அரசியல் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டிருந்தன. குடியேற்ற நாட்டின் கவர்னரை ஆங்கில மன்னர் நியமித்தார்; குடியேற்றங்களின் மேல்சபையைக் (Council) கவர்னரே நியமனம் செய்தார். மக்கள் மன்றங்களில் (Assembly) கொண்டுவரும் மசோதாக்களை நிராகரிக்கும் அதிகாரம் மன்றத்திற்கும் கவர்னருக்கும், ஆங்கில அரசருக்கும் இருந்துவந்தது. மேலும், அமெரிக்கக் குடியேற்றங்களின் சார்பில் சட்டங்களை இயற்ற ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு (Sovereignty) இறைமை அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. குடியேற்ற நாட்டு வழக்குகளை இறுதியாகப் பரிசீலிக்கும் அதிகாரமும் இங்கிலாந்தின் பிரிவிக் கவுன்சிலுக்குத் தரப்பட்டிருந்தது. கூட்டரசு (Federation) அரசியல் அமைப்பில் கலந்து வாழ வேண்டுமென்று விரும்பிய அமெரிக்கர்களுக்கு, இங்கிலாந்தின் பேரரசு அமைப்பு (Empire) சற்றும் பிடிக்காததாக இருந்தது.

சிந்தனையாளர்களின் தொண்டு

அமெரிக்கர்களின் அரசியல் அறிவு விருத்திடைய பென்ஜமின் ஃபிராங்ளின் (Benjamin Franklin), தாமஸ் ஜெஃபர்சன் (Thomas Jefferson) போன்ற எழுத்தாளர்களின் ஜனநாயகக் கொள்கைகளும், சுதந்தரக் கருத்துகளும் பேருதவி புரிந்தன. குடி சமத்துவம் பெற விரும்பிய அமெரிக்கர்கள் தங்கள் நாட்டில் புரட்சிக் கருத்துகளைப் பரப்பும் குழுக்களையும் ஏற்படுத்தினர்.

அதிருப்தியான சட்டங்கள்

அமெரிக்கர்களிடையே சுதந்தர வேட்கை வளர்ந்து வந்த நேரத்தில் ஆங்கில அமைச்சர்களால் கொண்டுவரப்பட்ட சட்டங்

கள் சுதந்தரப் போருக்கு உடனடியான காரணங்களாய் அமைந்தன. அதன்படி முதலாவதாகப் பத்திர முத்திரைச் சட்டம் அமைந்தது.

இங்கிலாந்தின் பிரதமரான கிரென்வில் (Grenville) என்பவர் 1764-ல் பத்திர முத்திரைச் சட்டத்தை (Stamp Act) ஆங்கிலப் பாராளுமன்றத்தின்மூலமாகக் கொண்டுவந்தார். ஏற்கெனவே ஏழாண்டுப் போரினால் இங்கிலாந்து நாட்டுக் கடன் அதிகமாயிருந்தது. அந்த நிலையில், சிவப்பிந்தியர்களின் தாக்குதல்களிலிருந்து அமெரிக்கக் குடியேற்ற நாடுகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியமிருந்ததால், அங்கு ஒரு நிலையான படையை அமைக்க இங்கிலாந்து அரசாங்கம் முடிவு செய்தது. அப் படைகளின் முழுப்பராமரிப்புச் செலவுகளை ஏற்க முடியாத நிலையிலும் இங்கிலாந்து அரசாங்கம் இருந்தது. ஆகவே, அச் செலவின் $\frac{1}{3}$ பகுதியை அமெரிக்கக் குடியேற்றங்கள்மீது திணிக்க நினைத்தது. அதற்கான வருமானத்தை வசூலிக்கவே பத்திர முத்திரைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச் சட்டத்தின்படி பணம் செலுத்தி முத்திரைப் பத்திரங்களை (stamp papers) வாங்கும்படி அமெரிக்கர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்;:: ஆயின், அச் சட்டத்திற்கு அமெரிக்கக் குடியேற்றங்களிலே கடுமையான எதிர்ப்புத் தோன்றியது. தங்களின் பிரதிநிதிகள் இல்லாத இங்கிலாந்துப் பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட அவ் வரிச்சட்டத்தை ஏற்க அமெரிக்கர்கள் மறுத்து 'பிரதிநிதித்துவம் இல்லையெனில் வரியும் இல்லை' என உரிமைக்குரல் எழுப்பினர். அவர்களின் சம்மதமின்றிப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் கொண்டுவந்திருந்த அச் சட்டத்தை ரத்து செய்யும்படி. 1765-ல் நியூயார்க் நகரில் கூடிய ஒன்பது குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகள் கோரினர். நாளடைவில் எதிர்ப்பும் அதிகரிக்கவே 1766-ல் அச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

கிரென்வில்லை அடுத்துப் பதவி பெற்றிருந்த ராக்கிங்ஹாம் பிரபு (Lord Rockingham) முத்திரைச் சட்டத்தை நீக்கினாரென்றாலும், அடுத்த 1766-ல் அறிவிப்புச் சட்டத்தைக் (Declaration Act) கொண்டுவந்தார். அச் சட்டத்தின்படி, குடியேற்ற நாடுகள் மீது வரி விதிக்கும் உரிமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு உண்டென்று வலியுறுத்தப்பட்டது. ராக்கிங்ஹாம் சிறந்த அரசியல் நிர்வாகியாக இருந்திருப்பாரேயானால் பலாத்காரத்தைப் பின்பற்றி முத்திரைச் சட்டத்திற்கு அமெரிக்கர்களைப் பணியவைத்திருக்கலாம்; இல்லாதுபோயின் அமெரிக்கர்மீது வரி விதிக்கும் இறைமை அதிகாரம் பிரிட்டிஷ் பாராளு

மன்றத்திற்கு இல்லையென விட்டுக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால், இரண்டுமில்லாது சமரச முயற்சியாக முத்திரைச் சட்டத்தை ரத்து செய்ததும், அறிவிப்புச் சட்டத்தை (Declaration Act) ராக்கிங்ஹாம் கொண்டுவந்ததும் அமெரிக்கர்களுக்கு அதிருப்தியையே கொடுத்தது.

ராக்கிங்ஹாம் மந்திரி சபையை அடுத்து இங்கிலாந்தில் சாத்தம் பிரபுவின் (பிட்) தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் சார்லஸ் டவுன்ஷெண்டு (Charles Townshend) என்பவர் கருவூலத் தலைவராக இருந்தார். அமெரிக்கர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காதபடி புது முறையில் வரி விதிக்கப்போவதாகச் சொல்லி, அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் தேயிலை, காகிதம், கண்ணாடி, வண்ணங்கள் ஆகியவைமீது இருந்த வரிகளை டவுன்ஷெண்டு 1767-ல் அதிகமாக்கினார். மசாசூ செட்ஸின் தலைநகரான பாஸ்டன் (Boston) நகர் உள்பட, பல அமெரிக்க நகரங்களிலே அப் புது வரிகளை எதிர்த்துக் கலகங்கள் தோன்றின. பாஸ்டன் நகரில் ஏற்பட்டிருந்த கலகத்தில் பிரிட்டிஷ் துருப்புகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று அமெரிக்கர்கள் கொல்லப்பட அதற்கு 'பாஸ்டன் படுகொலை' எனக் கண்டனப் பெயர் கொடுத்து, பிரிட்டிஷார்மீது அமெரிக்கர்கள் வெறுப்பை வளர்த்தனர். மேற்கொண்டு, அப் 'படுகொலையைக்' கண்டித்துக் குடியேற்றங்களில் பயங்கரமான கலகங்கள் தோன்றின. அடுத்து வந்த நார்த் பிரபுவின் (Lord North) மந்திரி சபையானது 1773-ல் தேயிலையைத் தவிர மற்றப் பொருள்கள்மீதிருந்த வரிகளை நீக்கியது.

அமெரிக்கர்மீது வரிபோடும் உரிமை தாய்நாடான இங்கிலாந்திற்கு உள்ளதென்பதை வலியுறுத்தவே, தேயிலை மீதிருந்த வரி மட்டும் ரத்து செய்யப்படாமல் விருந்தது. அதைப் புரிந்து கொண்ட அமெரிக்கர்கள் அத் தேயிலைச் சட்டத்தை எதிர்த்துக் கண்டனக் கூட்டங்கள் நடத்தி ஆர்ப்பாட்டங்கள் செய்து வந்தனர். ஆயின், ஆங்கில அரசாங்கம் விட்டுக் கொடுக்க மறுத்தது.

வியாபாரத்தில் நட்டம் பெற்று வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் 1773-ல் அக் கம்பெனி தன் தேயிலையை நேராக அமெரிக்காவிற்கு வரியின்றி அனுப்ப, நார்த் பிரபு அனுமதி கொடுத்திருந்தார். கம்பெனிக் கப்பல்களில் தங்களின் துறைமுகங்களுக்கு வந்த தேயிலைக் கட்டுகளை இறக்க அமெரிக்கர்கள் மறுத்தனர்; கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டன. அந்தக் கொந்தளிப்பான

சூழ்நிலையில் பாஸ்டன் துறைமுகத்திற்குத் தேயிலைக் கட்டுகளை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் வந்து சேர்ந்தது. ஆவேசம் கொண்ட சில அமெரிக்கர்கள் சிவப்பிந்தியர் போன்று வேடம் பூண்டு அக் கப்பலுக்குள் நுழைந்து அதிலிருந்த 343 தேயிலைப் பெட்டிகளை உடைத்து, கடலில் விட்டெறிந்தனர். 'பாஸ்டன் தேநீர் விருந்து' என அழைக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி ஆங்கில அரசாங்கத்திற்குச் சவாலாக இருந்தது. ஆத்திரமடைந்த பிரிட்டிஷ் அரசு 1774-ல் பழிவாங்கும் உணர்ச்சியில், பாஸ்டன் துறைமுகச் சட்டத்தை (Boston Port Act) கொண்டுவந்து அத் துறைமுகத்தை மூடியது. அதன் சுங்கவரி நிலையத்தையும் வேறிடத்திற்கு மாற்றியது. மேலும், எதிர்ப்பான சூழ்நிலையை எதிர்பார்த்து அதைச் சமாளிப்பதற்காக ஜெனரல் கேஜ் (General Gage) என்பவரின் தலைமையில் பிரிட்டிஷ் படை யொன்றும் பாஸ்டன் நகருக்கு அனுப்பப்பட்டது. அமெரிக்க மக்களின் உரிமையை நசுக்குவதற்காகவே இங்கிலாந்து அரசாங்கம் முயலுகிறது என்ற ஓர் எண்ணம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் அப்போது பரவ ஆரம்பித்தது. பாஸ்டன் நகருக்கு நேர்ந்த கதியே தங்களுக்கும் ஏற்படுமென்று மற்ற அமெரிக்க நகரங்கள் பயப்பட, அந்தச் சமயத்தில், கியூபெக் சட்டத்தை (Quebeck Act) நார்த் அரசாங்கம் கொண்டுவந்தது.

1774-ல் கொண்டுவரப்பட்ட அச் சட்டம் கானடாவில் வாழ்ந்த ஃபிரெஞ்சு கானடியர்களுக்குச் சமய உரிமையையும் மற்றச் சில உரிமைகளையும் கொடுப்பதாக இருந்தது. ஃபிரெஞ்சு கானடியர்களைத் தம் வசப்படுத்தி அவர்களின் பகையைப் போக்கிக்கொண்டு, தங்கள்மீது போர் தொடுக்கவே இங்கி லாந்து அரசாங்கம் முயலுகிறது என்று அமெரிக்கர்கள் நினைக்கலாயினர்.

அங்ஙனம் கசப்புணர்ச்சி வளர்ந்துவர, ஃபிலடெல்ஃபியா (Philadelphia) என்னுமிடத்தில் 1774-ல் பன்னிரண்டு குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு காங்கிரஸ் (Congress) கூடியது. தங்களுடைய குறைகள் தீர்க்கப்படாதவரைக்கும் தாய் நாட்டுடன் வர்த்தகம் செய்யக்கூடாதென அம் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. சமீபத்தில் கொண்டுவரப்பட்டிருந்த சட்டங்களை ரத்து செய்ய வேண்டுமெனவும் அம் மாநாடு கேட்டுக்கொண்டு, தன் தீர்மானங்களை இங்கிலாந்து அரசாங்கத் திற்கு அனுப்பிவைத்தது. ஆயின், அரசர் மூன்றும் ஜார்ஜின் பிடிவாத குணத்தினால், அம் மாநாட்டின் தீர்மானங்கள் இங்கி லாந்தினால் நிராகரிக்கப்பட்டன.

இதற்கிடையே, லெக்சிங்டன் (Lexington) என்னுமிடத்தில் பிரிட்டிஷ் படைகளுக்கும், அமெரிக்கர்களுக்கும், சிறு கைகலப்பு ஏற்பட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகின்றதென் பதையே அந் நிகழ்ச்சி எடுத்துக்காட்டியது. அதே சூழ்நிலை யிலும், (1775) ஃபிலடெல்ஃபியாவில் ஜார்ஜியா உள்பட 13 குடியேற்ற நாடுகள் இறுதிச் சமரச முயற்சியாகக் காங்கிரஸ் மாநாட்டைக் கூட்டியிருந்தது. அமெரிக்கர்கள்மீது வரிவிதிக்கும் இறைமை அதிகாரத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் விட்டு விட்டால், தாங்கள் 1763-க்கு முன்னிருந்த உறவு நிலைக்குக் கட்டுப்படுவதாக அக் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் தீர்மானித்து, அதற்கேற்ப ஆலிவ் கிளை சமாதான விண்ணப் பத்தை (Olive Branch Petition) அரசர் மூன்றும் ஜார்ஜுக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், அதுவும் இங்கிலாந்து அரசினரால் மறுக்கப்பட, போர் தவிர்க்கப்பட முடியாததாகிவிட்டது. அதன் பின்னர், ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) என்ற வர்ஜினிய விவசாயியின் தலைமையில் படைகள் சேகரிக்கப் பட்டு, அமெரிக்கக் குடியேற்றங்கள் போருக்குத் தயாராயின.

போர் நிகழ்ச்சிகள்

பிரிட்டிஷ் பேரரசின் வரலாற்றில் ஒரு துக்ககரமான சம்பவ மாக அமைந்துவிட்ட அமெரிக்க சுதந்தரப் போர் 1775-ல் தொடங்கியபோது இங்கிலாந்தின் பெரும்பாலான மக்கள் அமெரிக்கர்களைக் கிளர்ச்சிக்காரர்களெனக் கண்டனம் செய்த போதிலும், சாத்தம் பிரபு (Earl of Chatham), பர்க் (Burke), ஃபாக்ஸ் (Fox) போன்ற தலைவர்கள் அமெரிக்கர்களை உரிமைக் காகப் போரிடும் சகோதர மக்களாகவே கருதினர். அதே போன்று, குடியேற்ற நாடுகளின் பெரும்பாலான மக்கள் போருக்குத் தங்களை ஆயத்தம் செய்துகொண்டிருக்க ஆயிரக் கணக்கான அரசரின் அபிமானிகள் (loyalists) தங்கள் தாய் நாடான இங்கிலாந்துடன் போர் செய்வதை விரும்பாம லிருந் தனர். இங்கிலாந்துக்கும் அதன் அமெரிக்கக் குடியேற்றங்களுக் மிடையே போர் தொடங்க, அதை ஏகாதிபத்திய வெறிக்கும் மக்களின் உரிமைக்கும் இடையே ஏற்பட்ட போராட்டமாகவே வெளி உலகம் நினைத்தது.

அமெரிக்கச் சுதந்தரப் போரை இரண்டு பிரிவுகளாகப் (1775-1777), (1778-1783) பிரிக்கலாம். முதலாம் கட்டத்தில் அப் போர் இங்கிலாந்துக்கும் அதன் குடியேற்றங்களுக்குமிடையே நடந்த போராட்டமாக இருப்பினும், அடுத்த கட்டத்திலே அது ஐரோப்பியப் போராக மாறியிருந்தது.

பாஸ்டன் நகருக்கருகே கேந்திர இடமாக அமைந்திருந்த பங்கர் குன்றை (Bunker Hill) அமெரிக்கப் படைகள் 17-6-1775-ல் கைப்பற்றிக்கொள்ள, போர் தொடங்கியது. இரு முறை முயன்றும் தோல்வியுற்றிருந்த ஜெனரல் கேஜ் என்ற பிரிட்டிஷ் தளபதி மூன்றும் முறையாகப் போரிட்டே அக் குன்றை மீட்கவேண்டி யிருந்தது. நல்ல பயிற்சி பெறுத தங்களின் படைகள் அத்தனை தீவிரமாகப் போர் செய்ததில், அமெரிக்கர்களுக்குத் தன்னம்பிக்கை பிறந்தது. அதே ஆண்டில் மான்ட்கோமரி (Montgomery) என்பவரின் தலைமையில் அமெரிக்கர்கள் கானடா வின்மீது படையெடுத்தனர். கியூபெக் நகரை நோக்கிவந்த அமெரிக்கப் படைகளை முன்னேற விடாமல் சர் கை கேரல்டன் (Sir Guy Carlton) என்ற பிரிட்டிஷ் தளபதி தடுத்து நிறுத்தி யிருக்க, கானடா தப்பியது.

1776-ல் ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் ஓர் அமெரிக்கப் படை பாஸ்டனுக்கு அருகிலிருந்த இன்னொரு கேந்திரமான டோர் செஸ்டர் (Dorechester) குன்றுகளைக் கைப்பற்றிக்கொள்ள ஹவ் (Howe)வின் தலைமையிலிருந்த பிரிட்டிஷ் படைகள் பாஸ்டன் நகரை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. பயிற்சியும், தளவாடங்களையும் பெற்றிருந்த பிரிட்டிஷ் படைகள் அங்ஙனம் வெளியேறியிருக்க, அது அமெரிக்கர்களுக்குப் புதுத் தெம்பை அளித்தது. அவ் வெற்றியினைத் தொடர்ந்து 7-4-1776-ல் அமெரிக்கக் காங்கிரஸ் ஃபிலடெல்ஃபியாவில் கூடியது. வர லாற்றுப் புகழ்பெற்ற சுதந்தரச் சாசனம் அப்போதுதான் வெளியிடப்பட்டது. சில உரிமைகளை அடைவதற்காகத் தொடக் கத்தில் போரைத் தொடங்கிய அமெரிக்கர்கள், தங்கள் நாட்டை பிரிட்டிஷ் பேரரசிலிருந்து விடுபட்ட சுதந்தரநாடாக அறிவித்துக் கொண்டு, மக்களின் உரிமைகளை ஆணித்தரமாக அப் பிரகட னத்தில் விளக்கியிருந்தனர். அமெரிக்கக் குடியேற்றங்கள், தங்களின் சுதந்தரப் பிரகடனத்தை யொட்டி அமெரிக்க ஐக்கிய நாடுகளாக அறிவிப்புப் பெற, இங்கிலாந்தின் போர் முயற்சிகள் அதிகரித்தன. ஆங்கிலத் தளபதி ஹவ், ப்ரூக்லின் (Brooklyn) என்னுமிடத்தில் போரிட்டு வாஷிங்டனைத் தோற்கடித்து லாங் தீவினை (Long Island) மீட்டிருந்தார்; வாஷிங்டனைப் பின் தொடர்ந்து விரட்டிச்சென்றிருப்பாராயின், ஃபிலடெல்ஃபியாவை ஹவ் எளிதில் கைப்பற்றியிருக்கலாம்: வாஷிங்டனையும் அவரின் படைகளையும் ஒடுக்கியிருக்கலாம். ஆயின், நியூயார்க்கில் ஹவ் சில நாள்கள் கழித்து வீணாக்கிவந்த நேரத்தில் டிரென்ட்டன் (Trenton), பிரின்ஸ்டன் (Princeton) என்ற இடங்களில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்து நியூஜெர்சியை வாஷிங்டன் மீட்டார்.

பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட அத் தோல்விகளை அடுத்து, இங்கிலாந்து அரசாங்கம் கானடாவிலிருந்த தன் படைகளை அமெரிக்காவுக்கு அனுப்ப முடிவு செய்தது. அதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. கானடாவிலிருந்த பிரிட்டிஷ் படைகளின் தளபதி பர்காயின் (Burgoyne) தலைமையில் தெற்கு நோக்கி வர வேண்டும்; நியூயார்க்கிலிருந்த பிரிட்டிஷ் படைகள் ஹவ் என்பவரின் தலைமையில் வடக்கு நோக்கிப் புறப்பட்டு ஹட்சன் சமவெளியில் பர்காயின் படைகளைச் சந்திக்கவேண்டும்; இரண்டு படைகளும் சேர்ந்து நியூ இங்கிலாந்தியக் குடியேற்றங்களைத் தாக்கி மற்ற அமெரிக்கக் குடியேற்றங்களிலிருந்து அதனைப் பிரிக்க வேண்டும்; தளபதி பர்காயின் (அத் திட்டத்தை விளக்கி) இங்கிலாந்திலிருந்த போர் அமைச்சரான லார்ட் ஜார்ஜ் ஜெர்மாயினுக்கு (Lord George Germaine) அனுப்பி அதற்கான முன் அனுமதியைக் கேட்டிருந்தார். பர்காயினின் திட்டத்தைப்பற்றி எதுவும் தெரிந்திராத ஜெனரல் ஹவ் அதே சமயத்தில்தான் ஃபிலடெல்ஃபியாவைத் தாக்க அனுமதி வேண்டுமென்று அமைச்சருக்குச் செய்தி அனுப்பியிருந்தார். விவரங்களைச் சரியாகப் பரிசீலனை செய்யாமல் அவ் விரு திட்டங்களையும் ஜார்ஜ் ஜெர்மாயின் ஒப்புக் கொண்டு தம் சம்மதச் செய்திகளை அனுப்பி இருந்தார்.

ஜெனரல் ஹவ் தமக்கிடப்பட்டிருந்த கட்டளையின்படி ஃபிலடெல்ஃபியாவைத் தாக்கிப் பிராண்டி வைன் (Brandy Wine) என்னுமிடத்தில் வாஷிங்டனைத் தோற்கடித்துப் பின் காலம் கடத்தி வந்தார். அவரின் உதவிப்படைகள் வந்து சேருமென்ற எண்ணத்தில் ஜெனரல் பர்காயின் தம் படையுடன் ஹட்சன் சம வெளியை நோக்கி முன்னேறி வந்தபோது அவரை மடக்க ஜெனரல் கேட்ஸ் (Gates) என்பவரின் தலைமையில் அமெரிக்கப் படைகள் காத்திருந்தன. போரிடுவதில் பயனில்லை என்பதை யுணர்ந்த ஜெனரல் பர்காயின் தம் 3,500 வீரர்களுடன் 17-10-1777-ல் சாரடோகா (Saratoga) என்னுமிடத்தில் அமெரிக்கர்களிடம் சரணடைந்தார். சாரடோகா வெற்றியானது, அதுவரை வாளாவிருந்த இங்கிலாந்தின் எதிரிகளான ஸ்பெயினையும், ஃபிரான்ஸையும் அமெரிக்கர்களின் சார்பாகப் போரில் நுழையச் செய்து ஒரு புதுத் திருப்பத்தை உண்டாக்கியது. அதைத் தொடர்ந்து, அமெரிக்கச் சுதந்தரப் போர் இரண்டாவது கட்டத்தை அடைந்தது.

போரின் இரண்டாவது கட்டம்

தான் ஏழாண்டுப் போரில் அடைந்த தோல்விக்குப் பரிகாரம் தேடும் வகையில் ஃபிரான்ஸ் அரசாங்கம் தரைப் படையையும், கப்பற் படையையும் அமெரிக்கர்களுக்கு உதவியாக அனுப்ப முன்

வந்தது (1778). ஃபிரான்ஸின் வழியை ஸ்பெயினும் பின்பற்றி இங்கிலாந்தின்மீது போர் தொடுத்தது. ஹாலந்து, ரஷ்யா, டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகள் தம்முள் 'படையேந்திய நடுநிலைக் கூட்டுறவு' (Armed Neutrality) என்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, தங்கள் கப்பல்கள் அமெரிக்காவிற்கு உதவியாகத் தளவாடங்களை ஏற்றிச் செல்கின்றனவா என்பதைச் சோதிக்கப் பிரிட்டனுக்கு உரிமையில்லை எனவும் அறிவித்தன. ஐரோப்பா முழுவதுமே இங்கிலாந்தின்மீது போர் தொடுப்பதான ஒரு நிலைமை காணப்பட்டது.

சாரடோகாவில் பிரிட்டிஷ் படைகள் சரணடைந்திருந்ததையொட்டி அமெரிக்காவின் வடபகுதியில் வெற்றிபெற இங்கிலாந்திற்கு இனி வாய்ப்பில்லை. ஆகவே, தென் மாகாணங்களில் தங்களின் பிடியைப் பலப்படுத்தப் பிரிட்டிஷ் படைகள் முயன்றன. அதற்கேற்ப, லார்டு கார்ன்வாலிஸ் (Lord Cornwallis) என்ற ஆங்கிலத் தளகத்தர் 1780-ல் ஜெனரல் கேட்ஸ் (Gates) என்ற அமெரிக்கத் தளபதியைக் கேம்டன் (Camden) என்னுமிடத்தில் தோற்கடித்துத் தென் கரோலினாவின் தலைநகரான சார்லஸ் டவுனைக் (Charles Town) கைப்பற்றினார். அரசரின் அபிமானிகளின் ஆதரவும், ஆங்கிலப்படைகளுக்குக் கிடைக்க, கார்ன்வாலிஸ் மேற்கொண்டு முன்னேறி கிரீன் (Green) என்ற மற்றோர் அமெரிக்கத் தளபதியைக் கில்ட் ஃபோர்டு (Guildford) என்னுமிடத்தில் தோற்கடித்து வட கரோலினாவையும் கைப்பற்றினார்.

அடுத்து, அமெரிக்கத் தளபதி வாஷிங்டனின் சொந்த மாகாணமான வர்ஜினியாமீது படையெடுக்கக் கார்ன்வாலிஸ் திட்டமிட்டார். அதன்படி 1781-ல் யார்க் டவுனை (York Town) அடைந்த கார்ன்வாலிஸ் தம் படைகளை முகாமிட்டு, மேல் உதவியும் எதிர்பார்த்துக் காத்திருந்தார். அத் தருணத்தில் தம் 7000 வீரர்களுடன் ஜார்ஜ் வாஷிங்டன் யார்க் டவுனை முற்றுகையிட்டார். அட்மிரல் டி கிரேஸ்ஸி (De Grasse) என்பவரின் தலைமையில் ஃபிரெஞ்சுக் கப்பற்படையும் அமெரிக்கர்களுக்கு உதவியாக வந்தது. கடல் மார்க்கமாகக் கார்ன்வாலிஸுக்கு எந்த உதவியும் கிடைக்கவொட்டாமல் தடுக்க அக் கப்பற்படை யார்க் டவுன் துறைமுகத்தை முற்றுகையிட்டது. தரையிலும், கடலிலும் தமக்கெதிராக முற்றுகை நடத்தப்பட்டிருக்க, தப்ப வழியில்லாமலும் போர் செய்ய மனமில்லாமலும் 19-10-1781-ல் கார்ன்வாலிஸ் சரணடைந்தார்.

போரின் நீடிப்பு

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் கார்ன்வாலிஸ் யார்க்டவுனில் சரணடைந்ததை யொட்டி, போர் முடிந்ததெனினும், இங்கிலாந்திற்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் போர் மேலும் நீடித்தது.

மத்திய தரைக்கடலில் மைனர்க்கா த் தீவை 1782-ல் ஃபிரெஞ்சுக்காரர்கள் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால், ஃபிரெஞ்சுக்காரர்களோடு அதே ஆண்டில் ஜிப்ரால்டரை ஸ்பானியர்கள் தாக்கியபோது, அம் முயற்சி சர் ஜார்ஜ் எலியட் (Sir George Elliot) என்ற பிரிட்டிஷ் தளகர்த்தரால் முரியடிக்கப் பட்டது. அதே ஆண்டில், பிரிட்டனின் மேற்கிந்தியத் தீவுகளைப் ஃபிரெஞ்சுக்காரர்கள் தாக்க முற்பட்டனர். ஆயின், ஆங்கிலக் கப்பற்படைத் தலைவர் அட்மிரல் ரோட்னி (Rodney) என்பவர் ஃபிரெஞ்சுக் கப்பல்களை செயின்ட் தீவுகள் போரில் (Battle of the Saints) முரியடித்தார்.

போரின் இறுதிக் காலத்தில் இங்கிலாந்து பெற்றிருந்த அவ் வெற்றிகள் அமெரிக்க நாடுகளை மீண்டும் கைப்பற்றுவதற்கு உதவுவதாக இல்லை. 1783-ல் இங்கிலாந்தின் அப்போதைய அமைச்சரான ஷெல் போர்னின் (Shelbourne) முயற்சியால் ஒரு சமாதான உடன்படிக்கை வெர்செயில்ஸில் (Versailles) ஏற்பாடாகியது. வெர்செயில்ஸ் உடன்படிக்கையின்படி அமெரிக்கச் சுதந்தரத்தை இங்கிலாந்து ஒப்புக்கொண்டதால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் (United States of America) என்ற கூட்டரசு 1783-ல் உதயமாயிற்று. ஸ்பெயினுக்குப் பிளாரிடாவும், மைனர்க்காவும் ஃபிரான்சுக்கு டொபேகோ (Tobago), செனிகல் (Senegal) செயின்ட் லூசியாவை (Saint Louisiana) கொடுக்கப்பட, போர் இறுதியாக முடிவடைந்தது.

போரின் விளைவுகள்

ஜனநாயகத்தின் இருப்பிடமாகவும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், இன்றைய உலகின் மிக முக்கிய வல்லரசாகவும் விளங்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தது.

சுதந்தரம், சமத்துவம் என்ற இரு அடிப்படை உரிமைகளின் கீழ் அமெரிக்கர்கள் பெற்ற வெற்றி ஃபிரான்சு போன்ற மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு படிப்பினையைக் கற்றுக் கொடுத்தது. அதன் எதிரொலியாகவே 1789-ல் ஃபிரான்சில் பெரும் புரட்சி

தோன்றியது. தாய்நாட்டின் ஏகாதிபத்திய வெறியை எதிர்த்து எங்ஙனம் அமெரிக்கர்கள் போரிட்டு வெற்றியடைந்தார்களோ அதேபோன்று முடியாட்சியின் வரம்பற்ற அதிகாரத்தையும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்து ஃபிரெஞ்சுக்காரர்கள் புரட்சி செய்ய அமெரிக்கச் சுதந்தரப் போர் ஓர் உதாரணமாய் அமைந்தது. மேலும், அப் போரின் இறுதியில் ஃபிரெஞ்சு நாடு கலந்துகொண்டு பணத்தை விரயம் செய்திருந்ததால், ஃபிரான்சில் நிதி நெருக்கடியும் ஏற்பட்டிருக்க, அதுவும் அப் பெரும் புரட்சிக்கு ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. அதுமட்டுமல்லாமல் அமெரிக்கச் சுதந்தரப் போரில் கலந்துகொண்டு நாடு திரும்பியிருந்த ஃபிரெஞ்சு வீரர்கள் தங்கள் நாட்டிலும் உரிமைக்குரல் எதிரொலிக்க வேண்டுமென்று விரும்ப, இறுதியில் வரலாற்றின் போக்கைத் திருப்பிய மாபெரும் அப் புரட்சி ஃபிரான்சில் தோன்றியது. ஆக ஃபிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமான அமெரிக்கச் சுதந்தரப் போர் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஒரு முன்னோடியாக விளங்கியது.

அப் போரினால் பிரிட்டிஷாரின் குடியேற்றக் கொள்கையிலும் குறிப்பிடத் தக்க மாறுதல் ஏற்பட்டது. குடியேற்ற நாடுகளைத் தன் அடிமை நாடுகளாக இங்கிலாந்து கருதியதால் அமெரிக்காவை இழக்க வேண்டியிருந்தது என்ற கசப்பான உண்மை ஆங்கிலேயர்களுக்குத் தெரியவந்தது. அமெரிக்கக் குடியேற்றங்களை இங்கிலாந்து இழந்ததால் அதன் முதல் பேரரசு குலைந்து போயிருக்க, தன் குடியேற்றக் கொள்கையில் புதிய கண்ணோட்டத்தைப் புகுத்தி இரண்டாம் பேரரசு அமைக்க இங்கிலாந்து முற்பட்டது. அதன்படி, குடியேற்ற நாடுகளின் நன்மையைக் கருதி அவற்றின் நலனுக்காக உழைக்கவேண்டுமென்ற உணர்வு பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டது. அப் புதுக் குடியேற்ற நாட்டுக் கொள்கையின் அடிப்படையில் அடுத்த நூற்றாண்டில் இங்கிலாந்து மற்றக் குடியேற்ற நாடுகளை விருத்தி செய்து மாபெரும் பேரரசை உருவாக்கியது. ஆக, அமெரிக்காவின் இழப்பிற்குப் பின்னர் இங்கிலாந்து தன் பழைய குடியேற்ற நாட்டுக் கொள்கையைக் கைவிட்டது. இரண்டாம் பேரரசைத் தான் அமைக்கக் காரணமாயிருந்த புதுக் குடியேற்ற நாட்டுக் கொள்கையை இங்கிலாந்து கைப்பற்றவேண்டிய மனமாற்றத்தை அமெரிக்கச் சுதந்தரப் போரே கட்டாயப்படுத்தியிருந்தது.

தம் பிடிவாதத்தாலும், ஆதிக்க வெறியாலும், விட்டுக் கொடுக்காத மனப் பான்மையினாலும் அப் போருக்குக் காரணமாக இருந்த இங்கிலாந்தின் அரசரான மூன்றாம் ஜார்ஜின் தனி ஆட்சி மக்களிடையே மதிப்பிழந்தது. அமெரிக்கச் சுதந்தரப்

போரில் ஆங்கிலேயர்கள் தோல்வியடைந்ததால் அன்றுட ஆட்சி முறையில் தலையிட்டு வந்த ஜார்ஜின் அரசியல் சோதனை பிசுபிசுத்தது.

அமெரிக்கச் சுதந்தரப் போரில் இங்கிலாந்தை எதிர்க்க மன மில்லாமல் அதற்கு ஆதரவாக இருந்த ஆயிரக்கணக்கான அரச விசுவாசிகள் (loyalists), போரில் தாய்நாடு தோல்வியடைந்ததை யொட்டி, தங்களின் பாதுகாப்பைக் கருதி அமெரிக்கப் பகுதிகளை விட்டு வெளியேறி, பிரிட்டிஷாருக்குச் சொந்தமான கானடாவில் (Canada) சென்று குடியேறினர். அங்ஙனம் மக்கள் வளம்பெற்ற கானடா விரைவில் மற்ற வளங்களைப் பெற்று முன்னேற ஆரம்பித்தது. ஆக, கானடா விருத்தியடைவதற்கும் அப் போர் மறைமுகக் காரணமாய் அமைந்தது.

ஆங்கிலேயர்களின் தோல்விக்குக் காரணங்கள்

போர்ப் பயிற்சியும், தளவாடங்களையும் பெற்றிருந்த பிரிட்டிஷ் பேரரசின் படைகள் அமெரிக்காவில் தோல்வியுற்றது ஒரு புதிராகவே இருந்தது. எல்லைத் தகராறுகளாலும், சமயப் பிரிவு உணர்ச்சிகளாலும் பாதிக்கப்பட்டிருந்த குடியேற்ற நாடுகள் பிரிட்டிஷ் பேரரசின் படைகளை வென்று தங்களின் சுதந்தரத்தைப் பெற்றிருந்தது ஒரு விந்தையாகவே இருந்தது. சம உரிமைகளை அடையவேண்டுமென்ற மனநிலையில் ஒருமுகமாகக் குடியேற்றங்கள் நடத்திய போராட்டம் ஏகாதிபத்திய வெறிக்கு எதிராக நடத்தப்பட்ட சண்டையாகவே கருதப்பட்டது.

தங்களின் மன வேற்றுமைகளை மறந்து அமெரிக்கர்கள் ஒற்றுமையுடன் போர் செய்ய முனைந்தபோது, அவர்களுக்குத் தலைவராக ஜார்ஜ் வாஷிங்டன் போன்ற பெரும் தலைவர்கள் அதிருஷ்ட வசமாய் இருந்தனர். வெற்றிகளால் மிகுந்த நம்பிக்கை பெறுமலும், தோல்விகளால் சோர்வு அடையாமலும், தெளிந்த மனதுடன் நிதானமாக நிலைமையை ஆராய்ந்து தம் படையினரை வாஷிடன் நடத்தியது அமெரிக்கர்களைப் பல நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றியிருந்தது.

ஆங்கிலேயர்களின் சார்பில் பிட் போன்ற திறமை மிக்க போர் அமைச்சர்களோ, உல்ஃப் போன்ற துணிவு மிக்க படைத் தலைவர்களோ இல்லாதது பெருங்குறையாக இருந்தது. திறமையற்ற லார்டு ஜார்ஜ் ஜெர்மாயின் போன்ற அமைச்சர்களும், ஹல் போன்ற இரண்டாந்தரப் போர்த் தளபதிகளும், போரின் போக்கை மாற்ற முடியாதவர்களாய் இருந்தனர். மேலும், தங்களின் பலத்தைப்பற்றி அபரிமிதமான நம்பிக்கை கொண்டி

ருந்த ஆங்கிலேயர்கள் நான்கு பட்டாளங்களை அனுப்பி, அமெரிக்கக் குடியேற்றங்களை மீண்டும் எளிதாகக் கைப்பற்றி விடலாமென்ற தப்புக் கணக்குப் போட்டனர். சுதந்தர தாகங்கொண்டு உயிரையே பணயம் வைத்து அமெரிக்கர்கள் வீராவேசத்துடன் போர் செய்வார்களென ஆங்கிலேயர்கள் எதிர்பார்க்காததால் அதற்கான ஏற்பாடுகளையும் செய்யவில்லை.

அமெரிக்காவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே இருந்த அட்லாண்டிக் பெருங்கடல் 3000 மைல்களுக்கு இரு நாடுகளையும் பிரித்திருக்க, தேவைப்பட்டபோது துரிதமாக மேல் உதவியை அமெரிக்காவில் போர் செய்த பிரிட்டிஷ் படையினருக்கு இங்கிலாந்தால் அனுப்ப முடியவில்லை. மேலும், அமெரிக்காவில் போரிட அனுப்பப்பட்ட ஆங்கில வீரர்களுக்கு நாட்டின் தல விவரம் சரியாகத் தெரிந்திராததால், விரைவாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அவர்களால் செல்ல முடியவில்லை. தங்கள் நாட்டுப் பகுதிகளை நன்கு தெரிந்து வைத்திருந்த அமெரிக்கர்கள் தங்களின் எதிரிகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அலைக் கழித்துக் களைப்புறச் செய்தனர். அதனால், ஆங்கிலேயர்கள் பெற்ற சில வெற்றிகளும் பலனளிக்காமல் போயின.

மேலும், பிரிட்டிஷ் படைகள் பரந்து விரிந்து கிடந்த அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகளைப் பிடிக்க வேண்டியிருந்ததால் எல்லா இடங்களிலும், ஏக காலத்தில் போரை நடத்தமுடியாமல் போயிற்று. ஓரிடத்தில் வெற்றி பெற்றதும் திரும்பிய பிரிட்டிஷ் படைகளை, இன்னோர் இடத்தில் அமெரிக்கர்கள் தோல்வியுறச் செய்யவும் ஏதுவாக இருந்தது.

இறுதியாக, போரின் நெருக்கடியான நேரத்தில் ஃபிரான்சும் ஸ்பெயினும் இங்கிலாந்துக்கு எதிராகப் போரில் கலந்துகொண்டமை, அமெரிக்கர்களின் வெற்றிக்குப் பெரும் காரணமாகியது.

14. இரட்டைப் புரட்சிகள் (Twin Revolutions)

(அ) தொழிற் புரட்சி (Industrial Revolution)

போரினாலும் அரசியலாலும் செய்யப்படும் மாற்றங்களை விட, இயந்திரங்களினால் நாட்டின் வரலாற்றை மாற்றிச் சிறப்பிக்க முடியுமென்ற உதாரணத்தை எடுத்துக்காட்டிய தொழிற் புரட்சி இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக விளங்குகிறது.

பிரிட்டிஷ் தொழில் துறையில் 1760-க்கும், 1830-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த வியக்கத்தக்க மாற்றங்களையே ஆர்னல்டு டாயின்பி (Arnold Toynbee) என்ற பேராசிரியர் தொழிற் புரட்சி எனக் குறிப்பிட்டார். இயந்திர முறைகளில் ஏற்பட்டிருந்த அப் பெரும் மாறுதல்கள் இங்கிலாந்தின் பொருளாதாரத் துறையை மட்டுமல்லாமல், அரசியல் சமூகத் துறைகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தன. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஏற்பட்டிருந்த அப் புரட்சி பழைய முறையினை அகற்றிப் புதிய முறைகளை மெல்ல மெல்லப் புகுத்தித் தொழில் முறையில் பெருத்த மாற்றங்களை உண்டாக்கியிருந்தது.

தொழிற் புரட்சிக்கு முந்திய நிலை

தொழிற் புரட்சிக்கு முன் இங்கிலாந்தின் நிலைமையைக் கவனிப்போம்.

விவசாயத்தை முக்கியத் தொழிலாகக்கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் மற்றத் தொழில்களை உப தொழில்களாகவே கொண்டிருந்தனர். அவற்றிலே நெசவுத் தொழில் முக்கிய உப தொழிலாக இருந்தது. அதிக மூலதனமில்லாமல் இல்லங்களிலேயே அமைக்கப்பட்டிருந்த அத் தொழில் பழைய முறையில்

இயக்கப்பட்ட நெசவுத் தறியை நம்பியிருந்ததால் துணிகள் சொற்பமாகவே தயாரிக்கப்பட்டுவந்தன. இரும்புத்தொழில் சொற்ப அளவில் தோன்றியிருந்தபோதும் அது அதிகம் வளர முடியாமல் இருந்தது. இரும்பை உருக்க, கட்டைக்கரியைப் பயன்படுத்தவேண்டி யிருந்ததால், காடுகளை அழிக்க மக்கள் முற்பட்டபோது, அதைத் தடுக்க அரசாங்கம் சட்டங்களைக் கொண்டுவர, இரும்புத் தொழிலும் நசிய ஆரம்பித்தது. இரும்பை உருக்கச் சிலர் நிலக்கரியை உபயோகிக்க அதனால் செய்யப்பட்ட இரும்பும் உறுதியற்றதாக இருந்தது. பொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விரைவாகவும் சுலப மாகவும் கொண்டுபோக முடியாதபடி சாலைகள் பழுதடைந்த நிலையிலும் எல்லாப் பருவகாலத்திற்கும் உபயோகப்படாதன வாகவும் இருந்தன. சுருக்கமாகத் தொழில் துறையில் இங்கி லாந்து பின்தங்கிய நிலையில் தன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் இருந்தது.

தொழிற் புரட்சிக்கான காரணங்கள்

18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து இருந்த நிலையைக் கவனிக் குங்கால் அப் புரட்சி அங்குத் தோன்றுவதற்கு ஏற்பச் சூழ்நிலை இருந்தது தெரியவரும். பெருகிவந்த மக்கள் தொகையின் தேவைகளை ஈடுகட்ட முடியாதபடி இங்கிலாந்தில் தொழில் உற்பத்தி மந்தமாக இருந்தது. பழைய முறைகளில் நடத்தப் பட்ட தொழில்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடிய வில்லை. மக்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டுவர அதற் கேற்பப் பொருள்களின் உற்பத்தி இல்லாததால், தொழில் துறையில் புதிய மாற்றங்களைப் புகுத்தவேண்டிய அவசிய மேற் பட்டது. அதுமட்டுமல்லாமல் 18ஆம் நூற்றாண்டின் இடையில் இங்கிலாந்து கடல்கடந்த குடியேற்றங்களைப் பெற்றிருந்தது. தொழில்களுக்குத் தேவையான மூலப்போருள்களைப் பெறுவ தற்கும் செய்பொருள்களை விற்கச் சந்தைகளாகவும் அக் குடி யேற்றங்கள் பயன்படுமாதலால் அப் புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட ஏதுவாக இருந்தது. மேற்கொண்டு, அயல்நாட்டு வியாபாரத் தில் மும்முரமாக ஈடுபட்டிருந்த இங்கிலாந்து நிறைய இலாபம் பெறவேண்டி அதிகப்படியான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது. தொழில் முறையில் புதிய முறைகளைப் பின்பற்றினாலொழிய அதிகப்படியான பொருள்களை நேர்த்தியாகக் குறைந்த காலத்தில் தயாரிக்க முடியாததை இங்கிலாந்து உணர ஆரம்பிக்க அது தொழிற் புரட்சியில் முடிந்தது.

நெசவுத்துணித் தொழில்

நெசவுத் தொழிலிலேயே அப் புரட்சி முதன் முதலாகத் தோன்றியது.

1733-ல் ஜான் கே (John Kay) என்பவர் எறி நாடா (flying shuttle) என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். மிகக் குறுகிய காலத்தில் வேகமாகத் துணியை நெய்ய அப் பொறி உதவியது. ஆனால், போதிய நூற்கண்டு கிடைக்காததால் நெசவாளிகள் அந்த இயந்திரத்தினுல் அதிகப் பலனைப் பெற முடியவில்லை. வேகமாகத் துணிகள் நெய்யப்படுவதற்கு அந்த இயந்திரம் இருந்த போதும் ஏராளமாக நூல்கண்டுகள் நூற்கப்படுவதற்கும் இயந்திரங்கள் தேவை என்ற அவசியம் ஏற்பட்டது. அதன் விளைவாக நூற்கும் ஜென்னி (spinning jenny) என்ற ஒரு நூல் நூற்பு இயந்திரம் ஹார்கிரீவ்ஸ் (Hargreaves) என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது. அவ் வியந்திரம் துரிதமாக நூற்கண்டுகளை உற்பத்தி செய்தபோதும் அந் நூல் உறுதியாக இல்லாததால் ஆர்க்ரைட் (Arkwright) என்பவரால் நீர்ச்சட்டம் (water frame) என்ற இன்னேர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. நீரோட்டத்தினுல் இயக்கப்பட்ட அந்தப் புது இயந்திரம் உறுதியான நூற்கண்டுகளைத் தயாரித்தது. கிராம்டன் (Crompton) என்ற மற்றொரு பொறியாளர் மஸ்லின் சக்கரம் (muslin wheel) என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்து மென்மையான - ஆனால் உறுதியான - நூற்கண்டுகளைத் தயாரிக்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். ஆக நூற்கண்டுகள் ஏராளமாக உற்பத்தி யாயின. 1785-ல் கார்ட்ரைட் (Cartwright) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த விசைத்தறி (power-loom) என்ற இயந்திரம் துணிகளைக் குறுகிய காலத்தில் நேர்த்தியாக நெய்து கொடுத்தது.

இயந்திரப் பொறிகள் பருத்தித்துணி நெசவுத் தொழிலிலேயே முதன் முதல் உபயோகிக்கப்பட்டது. குறிப்பாக லங்காஷயர் (Lancashire) அதனைச் சுற்றியிருந்த இடங்களிலேயே அதிகமாக நெசவாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அத் தொழில் விருத்தியடைவதற்கேற்ப அப் பகுதியின் ஈரமான சீதோஷ்ண நிலை உதவியது. 1760-ல் 8000 டன்கள் பெறுமான பருத்தியை இறக்குமதி செய்திருந்த லங்காஷயர் 1800-ல் 25,000 டன்கள் பருத்தியைத் தன் நெசவாலைகளுக்கு, இறக்குமதி செய்து கொடுத்ததிலிருந்து அந் நகரம் நெசவுத் தொழிலில் பெற்ற வளர்ச்சியை நாம் அறிய முடிகிறது. கம்பளி ஆடைகளுக்கு வெளிநாடுகளில் அதிகக் கிராக்கி இல்லாததால், ஆரம்பத்தில்

அத் தொழில் இயந்திரங்களால் விருத்தியடையாம லிருந்தது. மேலும், பருத்தி அதிகமாகக் கிடைத்ததுபோலக் கம்பளி கிடைக்கவில்லை. கம்பளித் தொழில் மிகப் பழமையானதால் புதிய முறைகளை அதில் புகுத்துவதிலும் சிரமமிருந்தது.

இரும்புத் தொழில்

நெசவுத்தொழிலில் கொண்டுவரப்பட் டிருந்த பல பொறிகள் இரும்பால் செய்யப்படவேண்டியிருந்ததால் இரும்புத் தொழிலில் அபிவிருத்தி ஏற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரும்புத் தயாரிப்பு இங்கிலாந்தின் பழைய தொழிலென்றாலும் சஸ்ஸெக்ஸ் (Sussex) பகுதியில் அத் தொழில் நடத்தப்பட்டு வந்ததென்றாலும், அதில் காலத்திற் கேற்ப அபிவிருத்தி ஏற்பட வில்லை. ஆண்டொன்றுக்குச் சில ஆயிரம் டன் எடை யுள்ள இரும்பே உற்பத்தியாக்கப்பட்டது. இரும்பை உருக்க நிலக்கரி பயன்படுத்தப்பட்டது. நிலக்கரியில் கந்தகம் கலந் திருந்ததால் அதனால் உருக்கப்பட்ட இரும்பு உறுதியற்றதாகவே இருந்தது. அரசின் தடையுத்தரவுப்படி கட்டைக்கரியையும் பயன்படுத்த முடியாத நிலையில் அத் தொழில் விருத்தியடையும் நிலையில் இல்லாத சந்தர்ப்பத்தில் ஆப்ரஹாம் டார்பி (Abraham Darby) என்பவர் இரும்பை உருக்குவதில் புதிய முறையைக் கண்டுபிடித்தார். சுட்ட நிலக்கரியைக் (coke) கொண்டு இரும்பை உருக்கினால் அவ் விரும்பு நொறுங்காத தன்மையைப் பெறுமென அவர் நிரூபணம் செய்ய அதன் விளைவாக அத் தொழிலில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்பட்டது. 1737-ல் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட இரும்பு 15,000 டன் பெறு மானதாக இருந்திருக்க 1806-ல் 250,000 டன் எடையுள்ள இரும்பு தயாரிக்கப்பட்டதிலிருந்து அத் தொழிலில் ஏற்பட்ட புரட்சி தெரியவரும். இரும்பை உருக்க, சுட்ட நிலக்கரி தேவைப் பட்டதால், நிலக்கரிக் கனிகளும் அதிகமாகத் தோண்டவேண்டிய அவசியம் ஏற்பட்டதென வேல்ஸ் தென் யார்க்ஷயர், தென் லங்காஷயர் டைன் - கிளைடு (The Tyne Clyde) பிராந்தியங் களிலும் ஏராளமாக நிலக்கரிச் சுரங்கங்கள் தோண்டப்பட்டு அருகருகே இரும்பாலைகள் அமைக்கப்பட்டன.

நீராவி இயந்திரம்

நிலக்கரி இரும்புச் சுரங்கங்களில் சொரிந்த நீரை வெளி யேற்றுவதற்கு நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை உபயோகப்படாதனவாக இருந்தன. 1776-ல் ஜான் வில்கின்சன் (John Wilkinson) என்பவர் இரும்பு உருக்

காலியில் நீராவி இயந்திரத்தைப் பயன்படுத்தியபோதிலும் 1782-ல் ஜேம்ஸ் வாட் (James Watt) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி இயந்திரம் பிரசித்திபெற்று விளங்கியது. மாத்யு பவுல்டன் (Matheu Boulton) என்பவருடன் கூட்டுச் சேர்ந்து ஜேம்ஸ் வாட் தம் கண்டுபிடிப்பை வைத்து இலாபகரமான வியாபாரத்தைச் செய்ய, விரைவில் அவ் வியந்திரம், நிலக்கரிச் சுரங்கங்களிலும், இரும்புக் கனிகளிலும் நெசவாலைகளிலும் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தண்ணீரைச் சுரங்கங்களில் இருந்து வெளியே இறைப்பதற்கும், பொறிகளை இயக்குவதற்கும் பயன்பட்ட அவ் வியந்திரம் தொழிற் புரட்சியின் முக்கிய அம்சமாக விளங்கியது.

போக்குவரவுச் சாதனங்களும் சாலை அபிவிருத்தியும்

தொழில்களில் ஏற்பட்டிருந்த மாறுதல்கள் இங்கிலாந்தின் போக்குவரத்துச் சாதனத்திலும் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது. மூலப்பொருள்களை ஆலைகளுக்கும் செய்பொருள்களைச் சந்தைக்கும் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லவும் குறிப்பாக நிலக்கரியை இரும்பாலைக்குக் கொண்டு செல்லவும் போக்குவரத்துச் சாதனங்கள் மிகமிகத் தேவையாக இருந்தன. போக்குவரத்துக்கு மிகவும் அவசியமான இங்கிலாந்தின் பாதைகளில் பல ரோமானியர்கள் காலத்தில் போடப்பட்டவைகளாதலால் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பலனற்றவைகளாகவே இருந்தன. இரண்டாம் சார்லஸ் காலத்தில் சில பாதைகள் செப்பனிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படாமலிருந்தது. குழிவிழுந்து சேறும், சகதியும் நிறைந்தனவாக அப் பாதைகள் போக்குவரத்திற்கு மிகவும் அசௌகரியமாகவே இருந்தன. மான்செஸ்டரிலிருந்து கிளம்பும் குதிரைகள் பூட்டிய கோச் வண்டி இலண்டனை அடைய ஏறக்குறைய ஐந்து நாட்கள் பிடித்ததென்றால் அப் பாதைகளின் சீர்கெட்ட நிலையைத் தெரிந்துகொள்ளலாம். பாதைகள் மோசமான நிலையிலிருந்ததால் அதிகப்படியான சரக்குகள் கடல் மார்க்கமாகவே இங்கிலாந்தின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப்பட்டன. உதாரணத்திற்கு இலண்டனுக்கு நிலக்கரி நியூகாசிலிலிருந்து கடல் வழியாக அனுப்பப்பட்டதைக் குறிப்பிடலாம். அந் நிலையில் புதுப் பாதைகளை இங்கிலாந்தில் அமைக்கவேண்டிய அவசியமேற்பட மெட்க்காவி (Metcalfe) என்பவர் அதற்கு முன்னோடியாக விளங்கினர். லங்காஷயர், யார்க்ஷயர், செஸ்ஷயர் போன்ற பகுதிகளில் பல பாதைகள் ஏற்படுவதற்கு அவர் காரணராக விளங்கினர். தாமஸ் டெல்ஃ

போர்டு (Thomas Telford) என்பவர் தம் உதவியாளர் ரென்னி (Rennie) என்பவருடன் சேர்ந்து நூற்றுக்கணக்கான மைல் களுக்குப் பாதைகளை அமைத்துத் தந்தார். ஆயிரத்துக்கு மேற்பட்ட பாலங்களும் ஆக்கித் தரப்பட்டன. 1826-ல் மெனாய் சந்திக்கு (Menai Straits) மேல் இரும்பாலான 1000 அடி நீளமான முடக்குப்பாலம் அவரின் தனித்திறமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. ஆயினும், பாதைகளை அமைக்கும் பணியில் புரட்சியைத் தோற்றுவித்தவர் ஜான் மெக்காடம் (John Macadam) என்பவரே. சிறு சிறு ஜல்லிகளைப் பயன் படுத்திக் குழிகளை மூடி, பாதைகளைச் சீராகச் செய்து உறுதி யாக்கிய முறையை அவர் கொண்டுவர, பாதைப் போக்குவரவு துரிதமாகவும் சௌகரியமாகவும் இருந்தது. மான்செஸ்டருக்கும் இலண்டனுக்கும் இடையே இருந்த தூரத்தை 24 மணி நேரத்தில் கோச் வண்டியில் கடக்க முடிந்தது.

பாதைகள் நன்கு அமைக்கப்பட்டதால் போக்குவரவுக்கு இன்றியமையாத ஊர்திகளின் நிலையம் விருத்தியடைந்தது. கோச் வண்டிகளும், சரக்குக் குதிரைகளின் சேவையும் குதிரைச் சவாரியும் சிறிது சிறிதாக மறையத் தொடங்கின. 1800-ல் அவுட்ராம் (Outram) என்பவர் தண்டவாளங்களின் மேல் ஓடும் டிராம் வண்டிகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். 1825-ல் ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் (George Stevenson) என்பவர் நீராவியால் இயக்கப்பட்ட இரயில் வண்டிகளைக் கண்டுபிடித்ததுமட்டு மல்லாமல் ஸ்டாக்டன் (Stockton), டார்லிங்டன் (Darlington) இடையே இருப்புப்பாதையை அமைத்துப் போக்குவரத்துச் சாதனங்களில் பெரும் புரட்சியை உண்டாக்கினர்.

ஊர்திகளின் நிலையிலே மாற்றங்கள் ஏற்பட்டுவர, கால்வாய் களின் உபயோகத்தையும் ஆங்கிலேயர்கள் உணர ஆரம்பித் திருந்தனர். பாதைகளில் நெரிசலைத் தவிர்க்கவும் பாதைகளின் மூலம் அனுப்பப்படும் செலவுகளையும் அதற்காகும் காலத்தையும் குறைக்கவும் கால்வாய்கள் இன்றியமையாதனவாக இருந்தன. கால்வாய்களைத் துரிதப் போக்குவரவுச் சாதனமாக உபயோகிக்க முடியுமெனக் கோமகன் பிரிட்ச் வாட்டர் (Duke of Bridge Water) என்பவரே முதலில் வெளிப்படுத்தினர். தம் பொறியியல் நிபுணரான ஜேம்ஸ் பிரிண்ட்லி (James Brindley) என்பவரின் உதவியால் 1761-ல் ஓர்ஸிலியிலிருந்து (Worsley) மான்செஸ்டர் (Manchester) வரை கால்வாய் வெட்டினர். நிலக்கரியை அதன் மார்க்கமாக அனுப்பிவைக்க மிகவும் துரிதமாக அது. மான்செஸ்டரை அடைய அதில் செலவு மிச்சப்பட்டது. தரை

மார்க்கமாகக் கொண்டு செல்ல ஒரு டன் நிலக்கரிக்குச் செலவு 12 ஷில்லிங் ஆனதென்றால் கால்வாய் மூலமாக அதே எடையை அனுப்ப 6 ஷில்லிங் பிடித்தது. ஆக அக் கால்வாயின் மூலம் பிரிட்ஜ் வாட்டருக்கு நிறைய இலாபம் கிடைத்தது. அதுவே மற்றவர்கள் மற்றக் கால்வாய்களை வெட்ட ஊக்கமளித்தது. மான்செஸ்டரை ஹல் (Hull), பர்மிங்காம், பிரிட்டல் போன்ற இடங்களோடு இணைக்கும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. டெல்ஃபோர்டு (Telford) என்ற பாதைப் பொறியியல் நிபுணர் வேல்ஸ், இங்கிலாந்தின் சில பகுதிகளிலும் கால்வாய்களை வெட்டியது மட்டுமல்லாமல் ஸ்காட்லாந்தில் கேலிடோனியன் (Caledonian) கால்வாயையும் அமைத்தார். சுருக்கமாக இங்கிலாந்து முழுவதும் கால்வாய்களால் இணைக்கப்பட்டது.

போக்குவரவுச் சாதனத்தில் ஏற்பட்டிருந்த மேற்சொல்லப்பட்ட மாற்றங்கள் இங்கிலாந்தின் தொழில் வளத்தைப் பெருக்கியது. நிலக்கரியையும் இரும்பையும் இடம் விட்டு இடம் துரிதமாக அனுப்புவதற்கும் மூலப்பொருள்களைத் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் செய்பொருள்களைச் சந்தைகளுக்கும் துறைமுகங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கும் அம்மாற்றங்கள் பெரிதும் உதவின.

தொழிற் புரட்சியின் விளைவுகள்

நெசவுத் தொழிலிலும் இரும்புத் தொழிலிலும் ஏற்பட்டிருந்த முன்னேற்றம் போக்குவரவுச் சாதனங்களின் வளர்ச்சியினால் மேலும் விருத்தியடைந்து, இங்கிலாந்தை ஒரு தொழிற் கூடமாக மாற்றியிருந்தது. இங்கிலாந்தில் தொழிற் புரட்சிக்கு முன் பிருந்த வீட்டுத் தொழில் முறை (domestic system) மறைந்து தொழிற்சாலை முறை (factory system) ஏற்பட்டிருந்தது. சிறு மூலதனத்தைக் கொண்டு இல்லங்களிலேயே செய்யப்பட்டுவந்த சிறுதொழில்கள் மறைந்து அதிகமூலதனம் போட்டு நடத்தப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் தோன்றியிருந்தன. பற்றாக்குறை நாடாக இருந்த இங்கிலாந்து உலகத்தின் தொழிற்சாலையாகவும் மற்ற நாடுகளுக்குத் தொழில் துறையில் வழிகாட்டியாகவும் அப் புரட்சியினால் விளங்கியது. தொழிற் புரட்சி இங்கிலாந்தைச் செய்பொருள் உற்பத்தி நாடாக மாற்றியதோடு அத்துடன் அதனின் பொருளாதார அரசியல், சமூக வரலாற்றையும் பெரிதும் பாதித்தது.

தொழிற் புரட்சி ஏற்பட்ட முதல் நாடாக இங்கிலாந்து விளங்கியதால் பெரும்பான்மையான பொருள்கள் குறுகிய காலத்

தில் நேர்த்தியாகக் குறைந்த விலைக்குத் தயாரிக்கப்பட்டன. தன் சுய தேவைகள் போக எஞ்சியிருந்தவைகளை உலகின் பல சந்தைகளுக்கு அனுப்பித் தன் வியாபாரத்தை அந்நாடு விருத்தி செய்து கொண்டது. இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட 1700 ஆம் ஆண்டிலிருந்து 1850 ஆம் ஆண்டுக்குள் இங்கிலாந்தின் ஏற்றுமதி ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருகியது. தன் செழிப்பான வியாபாரத்தினால் பெற்றிருந்த வருமானம் இங்கிலாந்தின் பொருளாதார நிலையை வளமாக்கி இருந்தது. அமெரிக்கக் குடியேற்றங்களின் இழப்பும் நெப்போலியன் போர்களும் இங்கிலாந்தின் பொருளாதாரத்தைச் சீர் குலைக்காதபடி அந்நாடு வளம் கொண்டிருந்ததென்றால் தொழிற் புரட்சியே அதற்குக் காரணமாகும்.

வீட்டுத் தொழில் முறையின் கீழ் விவசாயத்தை முக்கியத் தொழிலாகவும் நெசவு போன்ற மற்றப் பணிகளை உப தொழில்களாகவும் ஆங்கிலேயர் பின்பற்றி வந்த வழக்கம் முற்றிலும் மறைய ஆரம்பித்தது. விவசாயத்திலிருந்து தொழில்கள் பிரிக்கப்பட இரண்டு தொழிலுள் ஒன்றையே அவர்கள் முழுத் தொழிலாகச் செய்ய வேண்டியிருந்தது. மேலும், வீட்டுத் தொழில் முறையின்கீழ், ஒரு குறிப்பிட்ட பொருள்களைத் தயாரிக்கும் முழுப் பொறுப்பு தனிப்பட்டவரின் திறமையாக இருந்திருக்க, தொழிற் சாலை முறையின்படி பலரின் உழைப்பு ஒரு குறிப்பிட்ட பொருளைத் தயாரிக்கத் தேவைப்பட்டது. ஆக உழைப்பு பங்கிட்டுக்கொள்ளப் பட்டது. அந்தப் புதிய முறையும் அப் புரட்சியின் இன்னொரு விளைவாகும்.

அப் புரட்சி தொடக்க காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் காரணமாக அமைந்திருந்தது. தொழிற்சாலைகள் ஏற்படத் தொடங்கியதும் வீட்டுத் தொழில் நசிய ஆரம்பித்தது. தொழில்களில் ஈடுபட்டிருந்த அத்தனை பேரும் இயந்திரங்களை இயக்குவதிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இல்லை. மேலும் பல பேர் செய்யும் வேலையை ஓர் இயந்திரத்தினால் செய்ய முடிந்த தாலும் நாட்டில் பலர் வேலைகளை இழக்க வேண்டியிருந்தன. ஆத்திரம் அடைந்த வேலையில்லாத் தொழிலாளிகளில் பலர் இயந்திர முறைகளை எதிர்த்துக் கலகம் செய்தனர். லட்டைட் கலவரங்கள் (Luddite Riots) என அழைக்கப்பட்ட அக் கலவரங்கள் இங்கிலாந்தின் பல பகுதிகளில் தோன்றின. இருப்பினும் நாளடைவில் அப் புரட்சியினால் வேலை வாய்ப்புகள் அதிகமாயின. தொழிற் புரட்சியினால் பொருள்களின் தரம் உயர்ந்ததுமட்டு மின்றிச் சொற்ப விலைக்கும் அவை கிடைத்ததால், அதற்கான தேவை நாட்டில் பெருகியது. தேவையினைப் பூர்த்தி செய்ய

வேண்டிய அவசியமேற்பட்டது. அதனால் நிறையத் தொழிற் சாலைகள் ஏற்பட வேண்டிய நிலை கட்டாயமாக உண்டாக ஏராள மானவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உண்டாயின. இயந்திரங்களை உற்பத்தி செய்வதிலும் அவைகளை இயக்குவதிலும் பல தொழி லாளிகள் ஈடுபட வேலை இல்லாத் திண்டாட்டம் இரு தி யில் தீர்ந்தது.

வீட்டுத் தொழில் முறையின்கீழ் முதலாளி - தொழிலாளி என்ற வித்தியாச மனப்பான்மை இல்லாமலிருக்கத் தொழிற் புரட்சியால் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து அதிகமான தொழிற்சாலைகள் ஏற்பட ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் ஏராளமாக வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டனர். குறைந்த ஊதியத்திற்கு அதிகமணிநேரம் அவர்களுக்கு வேலையிடப்பட்டது. நாளடைவில் அக் குறை பொிதாக்கப்பட அவைகளை முதலாளிகள் முன்வந்து தீர்க்காததால் இரு சாராருக்குமிடையே கசப்பு உணர்ச்சி வளரத் தொடங்கியது. இதன் விளைவாக 19 ஆம் நூற்றாண்டில் பல தொழிற்சாலைச் சட்டங்கள் (Factory Acts) இங்கிலாந்தில் கொண்டுவரப் பட்டிருந்ததைப் பின்னர்க் காண் போம்.

தொழிற் புரட்சியின் விளைவாக வாழ்க்கை வசதிகள் நிறைந்த தாய் அமைந்திருக்க இறப்புக் குறைந்து பிறப்பு அதிகமாயிற்று. 100 ஆண்டுகளில் (1750 - 1850) இங்கிலாந்தின் மக்கள் தொகை இரு மடங்காக (பன்னிரண்டு மில்லியனாக) அதிகரித் திருந்தது.

இன்னொரு வகையிலும் அப் புரட்சி இங்கிலாந்தின் சமுதாய அமைப்பைப் பாதித்திருந்தது. கிராமப் புறங்களில் இருந்து நகர்ப் புறங்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடி மக்கள் ஏராள மாக வர, நகரங்களில் ஜன நெருக்கடி ஏற்பட்டது. சுகாதார வசதிகள் அதிகமில்லாத அக் காலத்தில் அந்த நெருக்கடி மக்களின் தேக ஆரோக்கியத்தை அதிகமாகப் பாதித்தது. ஆலைகளிலும் சுரங்கங்களிலும் வேலைசெய்த கஷ்டத்தைத் தீர்க்க மக்கள் மதுவருந் தும் பழக்கத்திற்கு மிகுதியாக அடிமையானார்கள். மேலும், ஜனத் தொகைச் செறிவிலும் அப் புரட்சி ஒரு மாற்றத்தை ஏற் படுத்தியிருந்தது. தொழிற் புரட்சிக்கு முன் இங்கிலாந்தின் தெற்கு, கிழக்குப் பகுதிகளே ஜன நெருக்கம் கொண்டவைகளாக இருந்தன. ஆயின், வடமேற்குப் பகுதிகளில் இரும்பு, நிலக்கரிக் கனிகள் அமைந்துவிடவே அங்குத் தொழிற்சாலைகள் உண்டா யின. வேலை வாய்ப்புத் தேடிவந்த மக்கள் அங்குக் குடிபுக அப் பகுதிகள் ஜனத் தொகை மிகுந்த இடங்களாக மாறின.

பொருளாதார சமூகத் துறைகளிலன்றித் தொழிற் புரட்சி அரசியல் துறையிலேயும் பாதித்திருந்தது. நிலக்கரி, இருப்புக் கனிகள் எங்கெங்கு இருந்தனவோ, அங்கெல்லாம் தொழிற்சாலைகள் அமைக்கப்பட, பல புதிய தொழிற்சாலை நகரங்கள் தோன்றின. பரோக்களிலிருந்த (boroughs) மக்கள் அந்த நகரங்களில் வந்து குடியேறினர். அதனால் பரோக்களில் மக்கள் தொகை வெகு வாகக் குறைய ஆரம்பித்தது. காமன்ஸ் சபையில், ஆளில்லா அவ் வூர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டிருக்க, புதிதாகத் தோன்றியி நந்த தொழிற்சாலைப் பட்டணங்கள் (Industrial Towns) ஆன பர்மிங்காம், லீட்ஸ், மான்செஸ்டர் போன்ற பட்டணங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்தது. அது மட்டுமன்றி நிலவுடைமை உள்ளவர்களே வாக்குரிமை பெற்றிருக்க, தொழிலாளிகளுக்கு அவ் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஆதலால் தேர்தல் தொகுதிகளிலும் மாற்றங்கள் அவசியமாயின. பிற்காலத்தில் (19 ஆம் நூற்றாண்டில்) பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்படுவதற்கும் அப் புரட்சி காரணமாக அமைந்தது.

(ஆ) விவசாயப் புரட்சி
(Agricultural Revolution)

18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்தில் விவசாயத் துறையிலும், கால் நடை வளர்ச்சியிலும் ஏற்படுத்தப்பட்ட முக்கிய மாறுதல்களே விவசாயப்புரட்சி என அழைக்கப்பட்டது. அந்த மாபெரும் மாறுதல்கள் ஏன்? எப்படி உண்டாக்கப்பட்டன? என்பதை நாம் அறிவதற்கு முன்னால், விவசாயப் புரட்சிக்கு முன்னால் இங்கிலாந்திலிருந்த நிலைமையைக் காண்போம்.

புரட்சிக்கு முந்திய நிலை

வேலியில்லா வேளாண்மை என்ற பண்டைய முறையிலே விவசாய நிலங்கள் இருக்க அவை மூன்று பெருவயல் வெளிகளாகப் (Three field system) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் ஆண்டிலும் இரண்டு பெருவயல்களாக விவசாயத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஒரு பெரு வயல் தரிசாகவே விடப்பட்டு வந்தது. தரிசாக ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு பெரு வயலே விட்டு வந்ததால், (விவசாயம் செய்வதால்) இழந்துபோன சத்தை அந் நிலங்கள் மீண்டும் பெற்று விடுமென நிலச் சொந்தக்காரர்கள் நம்பினர். மூன்றில் ஒரு பகுதி நிலங்கள் எப்பொழுதும் தரிசாகக் கிடக்க நேரிட்டதால் விளைச்சல் மிகவும் குறைவாகவே இருந்தது. ஒவ்வொரு பெரு வயல் வெளியும் சிறு சிறு வயல்களாகவும் பிரிக்

கப்பட்டிருந்தன. அந்த நிலங்களில் பழைய வழக்கப்படியே பார்லி, ஓட்ஸ் (oats), பீன்ஸ் போன்றவைகளே பெரும்பாலும் பயிர் செய்யப்பட்டன. கிழங்குவகைப்பயிர்களை விவசாயம் செய்வது வழக்கத்தில் இல்லாமலிருந்தது.

விதைகள் விதைக்கப்பட்ட முறையிலும் குறை காணப்பட்டது. குடியானவன் கைகளினால் விதைகளை நாற்புறமும் வீச, பல விதைகள் வெயிலிலும், மழையிலும் நாசமாக ஒரு சிலவே முளைக்கும். மேலும், கலப்பையின் முனை மரத்தினால் ஆனதாக இருந்ததால், நிலமும் ஆழமாக உழப்படவில்லை. ஆக, மொத்தத்தில் விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்தது.

வேலியில்லா வேளாண்மை முறையில் நிலங்களைச் சுற்றி வேலியில்லாத காரணத்தினால், கால்நடைகள் சில சமயங்களில் வயல்களுக்குள் நுழைந்து பயிர்களுக்குச் சேதம் விளைவித்தன.

ஒரு சொந்தக்காரரின் நிலத்திற்கும் இன்னொரு சொந்தக் காரரின் நிலத்திற்கும் இடையே இருந்த சிறு இடைவெளி நிலம் யாருக்குமே சொந்தமாக இல்லாதிருந்ததால் அங்குக் களை வளர்ந்து, சிற்சில சமயங்களில் மேய்ச்சல் நிலங்களிலும் பரவியிருந்தது.

ஒவ்வொருவருக்கும் சொந்தமான நிலங்கள் பற்பல இடங்களில் சிதறிக் கிடக்க, குடியானவர்களின் காலம் வீணவதோடு உழைப்பும் விரயமாயிற்று.

மேற்சொல்லப்பட்ட குறைகளால் இங்கிலாந்தில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததுமட்டுமல்லாமல், கால்நடை வளர்ப்பிலும் சில இடர்ப்பாடுகள் இருந்தன. குளிர்காலத்தில் கால்நடைகளுக்குத் தேவையான புல் கிடைக்க வழியில்லாததால் அவை தீனியின்றி வாடின. ஒவ்வொரு கிராமத்திலும் ஆடு மாடுகளை மேய்ப்பதற்காக ஒரு பொதுப் புல்வெளி இருக்க, அங்கு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த கால்நடைகளும் மேய்ச்சலுக்குச் செல்ல, அதனால் மற்ற ஆரோக்கியமான கால்நடைகளும் நோயினால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருந்தது. பராமரிப்பின்றிக் கால்நடைகள் உருக்குலைந்து எலும்பும் தோலுமாகவும் காட்சி அளித்தன.

18 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை அங்ஙனம் விவசாயத் துறையிலும், கால்நடை வளர்ப்பிலும் காணப்பட்ட குறைகளைப் போக்கவேண்டிய அவசியங்கள் ஏற்பட, அதுவே விவசாயப் புரட்சிக்குக் காரணமாக அமைந்தது.

புரட்சிக்கான காரணங்கள்

18 ஆம் நூற்றாண்டில் மக்கள் தொகை அதிகமாகப் பெருகி வர, அதற்கேற்ப உணவு உற்பத்தியில் முன்னேற்றம் இல்லை. பல இடர்ப்பாடுகளில் சிக்கி நசிந்துவந்த விவசாயமும் பால், இறைச்சி போன்றவற்றிற்குத் தேவைப்பட்ட கால்நடைகள் எடை குன்றியிருந்தது, பெருகிவந்த மக்கள் தொகையின் உணவுத் தேவையை ஈடு கட்டுவதாக இல்லை.

உணவுப் பொருள்களுக்குப் பற்றாக் குறை அதிகரிக்க அப் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டே வந்தது. இலாபம் அடைய வேண்டுமென்ற நோக்கம் ஒருபுறமிருக்கப் போதிய அளவிற்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்கிற அவசியமும் இங்கிலாந்திற்கு ஏற்பட்டது.

உணவுப் பற்றாக்குறை தீரவேண்டுமானால் விளைச்சல் பெருக வேண்டும்; விளைச்சல் அதிகரிக்க வேண்டுமாயின், புதிய முறைகள் பின்பற்றப்படவேண்டும்; ஆக, அது புரட்சிக்கு வித்திடுவதாக இருந்தது. மேலும், சொந்த நிலங்கள் பல இடங்களில் சிதறிக் கிடக்காமல் ஒரே இடத்தில் குவித்து இருந்தாலொழியக் குடியானவர்கள் நல்ல முறையில் வேளாண்மை செய்ய முடியாதென்பதையும், நிலங்கள் வேலியிடப்படா விட்டாலும் சீரான விளைச்சல் கிடைக்காது எனவும் அரசு அறிந்தது. ஆக, அரசும் அப் புரட்சியை வரவேற்றது. ஆர்தர் யங் (Arthur Young) என்ற விவசாயக் குழுச் செயலாளரும் நிலங்கள் வேலிகளால் அடைக்கப் படவேண்டிய அவசியத்தை அரசுக்கு உணர்த்தலானார்.

புரட்சியின் போக்கு

அதன் விளைவாக 1760–1800க்குள் பாராளுமன்றத்தினால் 1500 நில அடைப்புச் சட்டங்கள் (Enclosure Acts) கொண்டு வரப்பட்டன. மூன்று மில்லியன் ஏக்கர் அளவுள்ள நிலங்கள் அச் சட்டத்தினால் இங்கிலாந்தில் வேலியிடப்பட்டன. நில அடைப்புச் சட்டங்களைச் செயல்படுத்த ஆணையாளர்கள் கிராமப்புறங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஒவ்வொரு குடியானவர்க்கும் பற்பல இடங்களில் சொந்தமாக இருந்த நிலங்களின் அளவிற்கு ஈடாக அதே பரப்பளவு கொண்ட நிலங்கள் ஒரே இடத்தில் கொடுக்கப் பட்டிருக்க, அவற்றை வேலியிட்டு அடைத்துக் கொள்ளும்படி குடியானவர்கள் வற்புறுத்தப்பட்டனர். அங்ஙனம் அடைக்கப் பட்ட நிலங்களில் புதிய மாற்றங்கள் செய்யக் குடியானவர்கள் விழைந்தனர். கால்நடைகளின் பிரவேசத்தையும் அதனால் தடுக்க முடிந்தது; களைகள் பரவவொட்டாமல் தடுப்பு வழிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

நிலங்களைத் தரிசாகப் போட்டுவைக்கும் வழக்கத்தை நிறுத்த மாற்றுப் பயிர் வேளாண்மை முறை (rotation of crops) டவுண் ஷெண்ட் பிரபு என்பவரால் பிரபலமாக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு பெரு வயலைத் தரிசாக விடுவதற்குப் பதில், அந்நிலத்தில் கிழங்குப் பயிர்களைச் (root vegetables) சாகுபடி செய்தால் மண்ணின் சத்து அதிகமாகுமென அவர் நிரூபணம் செய்தார். மாற்றுப் பயிர் வேளாண்மை முறைப்படி, ஒவ்வொரு விளைச்சல் நிலத்திலும், முதல் ஆண்டில் கோதுமை போன்ற தானியங்களையும், இரண்டாவது ஆண்டில் மணப்புல்லையும் (clover), மூன்றுவது ஆண்டில் பார்லியும், நான்காம் ஆண்டில் டர்னிப் (turnip) போன்ற கிழங்குப் பயிரையும் விளைவித்தால், மண்ணின் வளம் அதிகமாகும் என்பதை டவுண்ஷெண்ட், நாள் போக்கில், தமக்கிருந்த ரெயின்ஹாம் (Rainham) பண்ணையில் மெய்ப்பித்துக் காட்டினார். அம் முறைப்படி, எந்த நிலமும் தரிசாகப் போடப்படவேண்டியிராததால், விளைச்சலில் அபிவிருத்தி காணப்பட்டது. மணப்புல், கிழங்குப் பயிர்களில் தழைகளும் மாரிக் காலத்தில் கால்நடைகளுக்குத் தீனியாகப் பயன்பட்டன.

டவுண்ஷெண்டின் மாற்றுப்பயிர் முறையைத் தொடர்ந்தாற்போல், வேறு சில நூதன முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

பெர்க்ஷயரைச் (Berkshire) சேர்ந்த ஜெத்ரோடல் (Jethro-tull) என்பவர் விதை விதைக்கும் புதிய இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். 'டிரில்' (drill) என அழைக்கப்பட்ட அவ் வியந்திரம் தானே துளையிட்டு விதைகளை விதைத்து, மண்ணை வாரி மூடும் வேலையைப் பக்குவமாகவும் நேர்த்தியாகவும் செய்தது. விதை விரயமாக்கப்பட்ட பழைய குறை அதனால் அகற்றப்பட்டது. விதைகள் ஆழமாக டிரில்லால் விதைக்கப்பட்டிருக்க, பறவைகளாலும், கொத்தப்பட முடியாது, கால நிலையில் விதைகள் பாதிக்கப்படுவதும் தடுக்கப்பட்டிருக்க, விதைக்கப்பட்ட ஒவ்வொரு விதையும் விளைச்சலைத் தருவதாக இருந்தது. நல்ல விதைகளை விதைக்கவேண்டிய அவசியத்தையும் நிலத்திற்கு எருப்போட வேண்டிய அவசியத்தையும் டல் வற்புறுத்தியிருந்தார்.

வழக்கமாகக் கைகளினால் வீசப்பட்டு விதைக்கப்பட்ட விதைகளில் ஒரு பங்கை 'டிரில்' இயந்திரத்தினால் டல் விதைத்து அதிகமான விளைச்சலை உற்பத்தி செய்து காட்டினார். அப் புரட்சிகரமான கண்டுபிடிப்பு மற்ற நில உரிமையாளர்களால் பின்பற்றப்பட அதனால் அமோக விளைச்சல் நாட்டில் ஏற்பட்டது.

மரத்தினுல் ஆன முனையைக் கொண்ட கலப்பைகளால் நிலத்தை ஆழமாக உழ முடியாததால் விளைச்சல் குறைவாக இருப்பதை உணர்ந்தார்கள். அதற்குப் பதிலாக இரும்பு நுனி கொண்ட கலப்பைகளை உபயோகித்தனர். அதன் விளைவாக, நிலங்கள் ஆழமாக உழப்பட்டன. நிலங்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக உழப்பட்டனவோ அந்த அளவிற்குச் செழிப்படைந்த அந்நிலங்களில் விளைச்சல் அமோகமாக இருந்தது.

விவசாயத் துறையில் கொண்டுவரப்பட்டிருந்த புதிய மாற்றங்களை மன்னர் மூன்றும் ஜார்ஜ் (1760-1820) தமக்குச் சொந்தமான விண்ட்சர் பண்ணையில் (Windsor Farm) பின்பற்றிப் புதுமைக்கு ஓர் உதாரணமாக விளங்கினர். மக்கள் அவரை 'உழவர் ஜார்ஜ்' என நன்றியுடன் அழைத்தனர். தாமஸ் குக் (Thomas Cook) என்ற ஒரு பெருநிலக்கிழாரும் அத்தகைய ஒரு பண்ணையை அமைத்து, அதில் மாற்றுப் பயிர் முறைச் சோதனையை நடத்தி அதில் வெற்றி கண்டு அதை மற்றவர்களையும் பின்பற்றச் செய்தார்.

விவசாயத் துறையில் ஏற்பட்டிருந்த அந்தப் புதுமைகள் விளைச்சலை அதிகரித்து இங்கிலாந்தில் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதாக இருந்தது.

பால், இறைச்சி இவை இரண்டும் முக்கிய உணவுப்பொருளாக இருந்த காரணத்தால் கால்நடை அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1645-ல் சர். ராபர்ட் வெஸ்டெர்ன் (Sir Robert Western) என்பவரால் கால் நடை அபிவிருத்திக்கான சில யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அவை 18 ஆம் நூற்றாண்டு வரை ஏற்றுக்கொள்ளப்படாமலேயே இருந்தன. கிழங்குப் பயிர்களை விவசாயம் செய்தால், அதன் தழைகள் மாரிக் காலத்தில் கால்நடைகளின் தீனியாகப் பயன்படுமென்ற அவரது அந்த யோசனை, டவுண்ஷெண்டால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருந்த மாற்றுப் பயிர் வேளாண்மை முறையால் புதுப்பிக்கப்பட்டிருந்தது. கால்நடைகளுக்கு மாரிக் காலத்தில் அதனுல் நல்ல தீனி கிடைத்துவந்தது. இராபர்ட் பேக்வெல் (Robert Backwell, 1725 - 1795) என்ற லீசெஸ்டர்ஷயர் (Leicestershire) உழவர் கால்நடைகளின் வளர்ப்பு முறையில் சில சோதனைகளை மேற்கொண்டார். சாஸ்திரிய முறையில் ஆடுகளை வளர்க்கும் முறையைக் கையாண்டு 'புது லீசெஸ்சர் (New Leicesters) என்ற புது இன ஆடுகள் விருத்தியடைய அவரின் சோதனை காரணமானது. உருவத்தில் குட்டையாக இருந்தாலும், எடையில் அதிகமாக அந்த ஆடுகளிருந்தன;

சராசரி 21 பவுண்டுகளே இருந்த ஆடுகள் 60 பவுண்டு எடை கொண்டனவாக ஆக்கப்பட்டன.

டர்ஹாம் (Durham) நகரைச் சார்ந்த சார்லஸ் காலிங் (Charles Colling) என்பவர் மாடுகள் வளர்ப்பு முறையில் புது வழி களைக் கண்டுபிடித்தார். டர்ஹாம் குட்டைக் கொம்புகள் (Durham short Horns) என அழைக்கப்பட்ட அப் புதிய இனப் பசு, காளை மாடுகள் எடையில் பெருகியிருந்தன. 370 பவுண் டாக இருந்த ஓர் எருதின் எடை அவரது பரிசோதனை முறையி னால் 800 பவுண்டாக இருந்தது.

ஆடு மாடுகளின் வளர்ப்பில் பின்பற்றப்பட்ட அம் முறை நாளாவட்டத்தில் பிரபல மடைந்தது. அதன் விளைவாக அதிக மான பால், இறைச்சி மக்களுக்குக் கிடைக்க வழி பிறந்தது.

விளைவுகள்

விவசாயத்தில் ஏற்பட்டிருந்த மாற்றுப்பயிர் முறையோடு, கால்நடை வளர்ச்சியிலும் பல புதிய சாஸ்திரிய முறைகள் புகுத்தப்பட்டதன் பயனாக உணவுப் பற்றாக்குறை இங்கிலாந்தில் சமாளிக்கப்பட்டது. பொருளாதாரத் துறையில், விவசாயப் புரட்சியின் விளைவு நன்மையாகவே இருந்தது. வெளிநாடுகளி லிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யவேண்டிய அவசி யம் இதனால் இங்கிலாந்திற்கு ஏற்படவில்லை. புதிய முறைகளால் உணவுத் தானியங்களும், பால், இறைச்சி போன்றவைகளும் முன்பு கிடைத்ததைவிட அதிகமாகவே கிடைக்க, பெருகி வந்த ஜனத் தொகையின் உணவுப் பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப் பட்டது.

ஆனால், சமூகத்துறையைப் பொறுத்தமட்டில், அப் புரட்சி யின் எதிரொலி பலருக்குத் தீமைகளையே விளைவித்திருந்தது. அடைப்புச் சட்டத்தினால் தங்களின் நிலங்களைச் சிறு நிலச்சொந்தக் காரர்கள் (yeoman class) விற்க வேண்டியிருக்க, அவற்றைப் பெரு நிலக் கிழார்கள் வாங்கி வேலியிட்டு அடைத்துக் கொண்டனர். விவசாயப் புரட்சியின் போக்கில் ஏற்பட்டிருந்த மாறுதல்களைப் பெரும் நிலப் பிரபுக்களே பின்பற்றமுடிந்தாலும், பல சிறு பண்ணை யினர்கள் தங்களின் நிலங்களை விற்க வேண்டியவர்களானார்கள். பரம்பரைவழியாக உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த அச் சிறு நிலக் கிழார்களில் பலர் நிலப்பிரபுக்களிடையே அடிமைகள்போல வேலை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இன்னும் சிலர் பிழைக்கும் வழிதேடி, நகர்ப்புறங்களுக்குச் சென்றுவிட்ட

னர். சுருக்கமாகச் சொன்னால் இங்கிலாந்தில் சிறு நிலக்கிழார் களின் வகுப்பு விவசாயப் புரட்சியினால் மறைந்தது.

ஒரு சில நிலப் பிரபுக்களிடம் செல்வம் சேர, பலரின் வாழ்க்கைவளம் விவசாயப் புரட்சியினால் பாழாக்கப்பட்டிருந்தது. ஒரு முறை அழிக்கப்பட்டால் மீண்டும் உருவாக்க முடியாத நாட்டின் பெருமைக்குகந்த அந்த உடல் உரம் கொண்ட விவசாய வகுப்பு, இறுதியில் மறைய ஆரம்பித்தது.

'இளவரசர்கள், பிரபுக்கள் ஆக்கப்படலாம்; மறையலாம்; ஆனால், அழிக்கப்படும் விவசாய வகுப்பு ஆக்கப்பட முடியாது' எனக் கோல்ட்ஸ்மித் (Goldsmith) என்ற ஆங்கில நூலாசிரியர் தம் பாட்டொன்றில் வேதனையோடு குறிப்பிடுவதிலிருந்து, அப் புரட்சி யினால் ஏற்பட்ட சமூகத் தீமைகள் புலப்படும்.

15. இங்கிலாந்தும் புரட்சியினால் பாதிக்கப்பட்ட ஃபிரான்சும்

(அ) இங்கிலாந்தும் ஃபிரெஞ்சுப் புரட்சியும்

ஆரம்பகால ஆதரவு

சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற முப்பெரும் கருத்துகளின் அடிப்படையில் 1789ஆம் ஆண்டு ஒரு மாபெரும் புரட்சி ஃபிரான்சு நாட்டில் தோன்றியது. சமுதாயத்திலிருந்த ஏற்றத்தாழ்வுகளையும், அரசரின் வரம்பற்ற ஆட்சியினையும் எதிர்த்து மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக நடத்தப்பட்ட அப் புரட்சி தொடக்கத்தில் இங்கிலாந்திலே பலதரப்பட்ட மக்களினால் வரவேற்கப்பட்டது.

ஃபிரெஞ்சு அரசரின் கொடுங்கோன்மைக்குச் சின்னமாக விளங்கிய பாஸ்டீல் (Bastille) சிறை மக்களால் தாக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டபோது உலக வரலாற்றின் அதிமுக்கிய நிகழ்ச்சி யென அதை ஃபாக்ஸ் (Fox) என்ற பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் போற்றினர். இங்கிலாந்தின் அப்போதைய பிரதமரான இளைய பிட், ஃபிரெஞ்சுப் புரட்சியை அதிமுக்கியச் சம்பவ மெனவும் குறிப்பிட்டார். போர்பன் (Bourbon) வம்சத்தின் கொடுங்கோலாட்சி மறைந்து ஃபிரான்சு நாட்டில் ஜனநாயகம் மலரப்போகிறதென்று மகிழ்ந்த ஆங்கிலேயர்கள் மிகுந்த அக்கறையுடன் புரட்சியின் போக்கைக் கவனிக்கலாயினர். ஃபிரான்சு நாட்டில் புரட்சியைத் தொடர்ந்து தேசியச் சபை (National Assembly) ஆற்றிய பணியை ஆங்கிலேயர்களில் பலர் போற்றினர்.

புத்துணர்ச்சிக் கவிதைகள் (Romantic Poems)

ஃபிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகள் ஆங்கிலக் கவிதை களிலும் இடம்பெற ஆரம்பித்தன. ராபர்ட் பர்ன்ஸ் (Rober t

Burns), வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் (Wordsworth), கோல்ரிட்ஜ் (Coleridge), பைரன் (Byron), ஷெல்லி (Shelley), கீட்ஸ் (Keats) போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் 'சுதந்தரம்' என்ற கருத்தை மையமாக வைத்துப் பல உணர்ச்சிமிக்க கவிதைகளை இயற்றினர். அவர்களால் வடிக்கப்பட்ட அக் கவிதைகள் இங்கிலாந்தின் புத்துணர்ச்சிக் கவிதைகள் (Romantic Poems) எனவும் அழைக்கப்பட்டன. ஆங்கிலக் கவிதைகளைச் சிறப்பிக்கும் அளவுக்கு ஃபிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகள் வழிசெய்திருந்தபோதிலும், அப் புரட்சியின் போக்கிலே பின்னல் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள் இங்கிலாந்தில் எதிர்ப்பைத் தோற்றுவித்தன.

பர்க்கின் எச்சரிக்கை

எதிர்ப்பு ஆரம்பத்தில் எழுத்திலேயே தொடங்கியது. பர்க் (Burke) என்ற அரசியலறிஞர் ஃபிரெஞ்சுப் புரட்சியின் அத்து மீறிய செயல்களால் கொதிப்படைந்து அதனைக் கண்டிக்கும் வகையில் 'ஃபிரெஞ்சுப் புரட்சியைப்பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள்' (Reflections of The French Revolution) என்ற நூலை வெளியிட்டார். ஃபிரான்சில் தோன்றியுள்ள அப் புரட்சி காலப்போக்கில் பயங்கர பலாத்காரத்தன்மையைப் பெறுமென்றும், அது இறுதியில் இராணுவ வல்லாட்சியிலேயே முடியுமென்றும் தம் வாசகர்களைப் பர்க் அந்த நூலில் எச்சரித்திருந்தார். ஃபிரான்சில் அடுத்து நேர்ந்த பயங்கர ஆட்சியும் (Reign of Terror), நெப்போலியனின் இராணுவ ஆட்சியும் பர்க்கின் வாதத்தை மெய்ப்பித்தனவென்றாலும் அப் புரட்சியினால் ஏற்படக்கூடிய எதிர்கால விளைவுகளைப் பர்க்கினால் எதிர்நோக்க முடியவில்லை. மாண்புறு புரட்சியினால் 1689-ல் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டிருந்த ஆட்சிமுறையே சிறந்ததெனப் பர்க் வற்புறுத்தியதோடல்லாமல், 1789ஆம் ஆண்டின் புரட்சியின் விளைவாகத் தனியார் சொத்துக்கு ஆபத்து வரலாமெனவும் கூறியிருந்தார். ஃபிரான்சில் தோன்றியிருக்கும் புரட்சியின் உதாரணத்தை ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டில் பின்பற்றுவார்களேயானால், அதன் விளைவு பயங்கரமாக இருக்குமெனவும் பர்க் எச்சரித்தார். தங்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாவதை ஆங்கிலச் செல்வக்குடியினர் விரும்பவில்லை. ஆகவே, பர்க்கின் கருத்திற்கேற்ப ஃபிரெஞ்சுப் புரட்சியை எதிர்க்க அவர்கள் முற்பட்டனர்.

ஸ்பெயினின் ஆதரவு

பர்க்குக்குப் பதில் தருவதைப் போன்று 1791-ல் டாம் பெய்ன் (Tom Paine) என்ற அறிஞரால் 'மனிதனின் உரிமைகள்'

(Rights of man) என்ற சிறு குறிப்பு நூல் வெளியிடப்பட்டது. மக்களின் விருப்பத்திற்கு மாறுக அரசாங்கம் நடக்குமாயின் அதைத் தேவைப்பட்டபோது மாற்றக்கூடிய அதிகாரம் மக்களுக்கு உண்டென்ற கருத்து அந் நூலில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஃபிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்து ஜனநாயகக் கொள்கையின் சார்பிலே எழுதப்பட்ட அந் நூல் இங்கிலாந்தில் ஏராளமாக விற்பனையாகி நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது.

அங்ஙனம் ஃபிரெஞ்சுப் புரட்சியைக் கண்டித்த கூட்டம் ஒருபுறமும், ஆதரித்த கூட்டம் இன்னொரு புறமுமாக இருக்க, மக்களின் மனப்பான்மை இருபிரிவுகளாக வேறுபட்டிருந்தன.

1792-ல் டாம் பெயினால் வெளியிடப்பட்ட அவர் நூலின் இரண்டாம் பதிப்பில் மன்னராட்சியைப்பற்றிப் பழித்ததோடல்லாமல் மக்களாட்சியைப்பற்றி மிகவும் உயர்வாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதுவரையில், அவர் கூற்றை ஆதரித்த ஆங்கில மக்களில் பலர், முடியரசை நேசிக்கும் மனப்பான்மை கொண்ட பழமை விரும்பிகளாதலால் குடியரசை வெறுத்து அதை வற்புறுத்திய ஃபிரெஞ்சுப் புரட்சியையும் கண்டிக்க முற்பட்டனர். அதற்கிடையே ஃபிரான்சில் நடைபெற்ற படுகொலைகளும், கொடூரச் செயல்களும் பெரும்பாலான ஆங்கிலேயர்களின் ஆரம்பகால அனுதாபத்தை மாற்றி ஃபிரெஞ்சுப் புரட்சியை வெறுக்கச் செய்திருந்தன. இருப்பினும், ஒரு சிலர் தொடர்ந்து அப் புரட்சியினை ஆதரிப்பவர்களாகவே இருக்க, கருத்து வேறுபாடுகள் தொடர்ந்து இருந்தே வந்தன.

மக்களிடம் நிலவியிருந்த மன வேறுபாடுகள் இங்கிலாந்தின் அரசியல் கட்சிகளிலும் எதிரொலித்தன. விக் கட்சியிலிருந்து போர்ட்லாந்து பிரபு (Duke of Portland), பர்க் போன்ற பலர் எதிர்க்கட்சியான டோரிகளுடன் சேர்ந்துகொண்டனர். புரட்சியைத் தொடர்ந்து ஆதரித்துவந்த ஃபாக்ஸ் (Fox) என்ற அரசியலறிஞர் தம் நண்பர் சார்லஸ் கிரே (Charles Grey) என்பவருடன் சேர்ந்து ஜனநாயகக் கொள்கைகளை அடிப்படைக் கருத்துகளாக ஒப்புக்கொண்ட புது விக் கட்சியை அமைத்தார். ஜனநாயகக் கொள்கைகளை நாட்டிலே பலர் அறியச் செய்ய வேண்டுமென ஃபாக்சும், கிரேயும் சேர்ந்து 'மக்களின் நண்பர்கள்' (Friends of the People) என்ற ஒரு கழகத்தையும் உண்டாக்கி, பிரசாரப் பணியில் ஈடுபட்டனர்.

அரசினரின் அடக்குமுறைச் சட்டங்கள்

அதற்கிடையே 1793-ல் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் போர் மூண்டது. அதற்கான காரணங்களை 'ஃபிரெஞ்சுப்

புரட்சிப் போர்கள்' என்ற தலைப்பிலே பின்னர்க் காணப் போகின்றோம். அப் போரைத் தொடர்ந்து இங்கிலாந்தில் ஒரு பீதி பரவ ஆரம்பித்தது. ஃபிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகளை வெளிப்படையாக ஆதரித்தவர்களெல்லாம், நாட்டின் விரோதி களாகப் பாவிக்கப்பட்டனர். ஃபிரான்சில் ஏற்பட்ட அப் புரட்சி இங்கிலாந்தில் ஏற்படாவண்ணம் சில அவசரத் தடுப்பு நடவடிக் கைகளைப் பிரதமர் இளைய பிட் எடுக்க முற்பட்டார். ஜனநாயகக் கொள்கைகளைப் புகழ்ந்து பேசியவர்களெல்லாம் தண்டிக்கப் பட்டனர். பிரதிநிதித்துவ அரசாங்கத்தைப்பற்றி வலியுறுத்திய மியுர் (Muir), பால்மர் (Palmer), பிரேக்ஸ் ஃபீல்டு (Braksfield) என்பவர்கள் உள்படச் சிலர் நாடு கடத்தப்பட்டனர். 1794-ல் 'தொடர்புகொள்ளும் சங்கம்' (Corresponding Society) என்ற ஒரு தொழிலாளர் சங்கத்தை நிறுவியதற்காகத் தாமஸ் ஹார்டி (Thomas Hardy) என்பவர் இராஜத்துரோகக் குற்றம் சாட்டப் பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டாரெனின், இங்கி லாந்தின் ஆட்சியாளர்களை எந்த அளவுக்குப் பயம் கவ்வியிருந்த தென்பது புலப்படும்.

ஹார்டிமீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவர் தண்டிக்கப்பட்டிருப் பாரானால் தம் உயிருக்கும் பாதுகாப்பு இராது எனச் சார்லஸ் கிரே குறிப்பிட்டிருந்தார். ஹார்டி வழக்கைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் நிலவியிருந்த பீதி நிறைந்த சூழ்நிலை ஓரளவு குறைந்ததென்றாலும், அந்த ஆண்டில் இன்னோர் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, காரணமின்றிக் கைது செய்து, விசாரணையின்றிச் சிறையில் வைக்கும் எதேச்சாதிகாரத்தைத் தடுக்கும் அதிகாரம் கொண்ட ஹேபியாஸ் கார்ப்பஸ் (Habeas Corpus Act) சட்டமானது அரசாங்கத்தினால் நிறுத்திவைக்கப்பட் டது. அதைத் தொடர்ந்து 'ஜேகோபின்கள்' எனச் சந்தேகிக்கப் பட்ட புரட்சியின் ஆதரவாளர்கள் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆங்கில மக்களின் அடிப்படை உரிமையின் அடித்தளமே, அச் சட்டம் ரத்து செய்யப்பட்டதால், தகர்க்கப் பட்டிருந்தது. இங்கிலாந்துக்கும், அதன் மக்களின் உரிமை களுக்கும் அக் காலம் ஓர் இருண்ட காலமாக இருந்ததெனலாம்.

பொருளாதாரச் சிக்கல்

அரசியலில் மட்டுமன்றிப் பொருளாதாரத் துறையிலும் ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகச் சில தீமைகள் நேர்ந் திருந்தன.

புரட்சிப் போர் நடந்துகொண்டிருந்தபோது, இங்கிலாந்தில் பண்டங்களின் விலைகள் உயர்ந்தன. இயற்கையின் சதியால் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைந்திருந்தது. ஏழ்மையும், பஞ்சமும் நாட்டில் ஏற்பட்டிருக்க இங்கிலாந்தில் பொருளாதார நெருக்கடி உண்டானது. ஏழை மக்களின் குறைகளைத் தீர்க்கக் கருணையுள்ளம் கொண்ட சிலர் யோசனைகளைத் தெரிவித்த போதும், போரில் கவனத்தைச் செலுத்தியிருந்த அரசு அதை ஏற்க முன்வரவில்லை. இருப்பினும், 1795-ல் பிச்சைக்காரர்களின் தொல்லைகளைத் தீர்க்க ஸ்பீன் ஹாம்லாந்துத் திட்டம் (The Speen Hamland Decision) கொண்டுவரப்பட்டது. அத் திட்டத் தின்படி நாளொன்றுக்குச் சொந்தக் கூலியாக ஒவ்வொரு தொழி லாளிக்கும் 3 ஷில்லிங் கொடுக்க ஏற்பாடாகியது; அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தினப்படியாக 1 ஷில்லிங் 6 பென்ஸ் கொடுக்கத் தீர்மானமானது. கூலி கொடுக்க அரசு தயாராக இருந்ததால், வேண்டுமென்றே தாங்கள் கொடுக்கவேண்டிய ஊதியத்தை முதலாளிகள் குறைத்துக் கொடுக்கத் தலைப்பட்டனர். வேலை செய்யாது போயினும், கூலி கொடுக்க அரசு இருக்கிறதென்ற காரணத்தினால், நாட்டில் சோம்பேறிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. ஏற்கெனவே போர்ச் செலவால் பாதிக்கப்பட்டிருந்த அரசுக்கு ஸ்பீன் ஹாம் லாந்து திட்டத்தினால் இன்னும் பணம் விரயமாக, அதைச் சரிக் கட்டப் பல புது வரிகள் மக்கள்மீது விதிக்கப்பட்டன.

தொழிற்சங்கத்தின் உரிமை பறிபோதல்

அரசாங்கம் தொழிலாளர்களுக்குக் கொடுத்த அச் சிறு உதவி யினால், அவர்களின் நிலைமையில் திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. அவர்களின் பல குறைகள் தீர்க்கப் படாமலேயே இருந்தன.

அரசுக்கெதிராகத் தொழிலாளர்கள் ஃபிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகளால் கவரப்பட்டு எங்குக் கிளர்ச்சி செய்வார்களோ என ஆட்சியாளர்கள் எண்ணித் தொழிற் சங்கங்களைக் கலைக்கும் படியான கூட்டம் கூடும் சட்டங்களை (Combination Acts) 1799-1800-ல் கொண்டுவந்திருந்தனர். கூலி உயர்வு கேட்டுத் தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டம் கூடுவதை அச் சட்டங்கள் தடைசெய்து அவர்களின் உரிமைகளைப் பறித் திருந்தன.

அங்ஙனமாக, ஆரம்பத்தில் ஃபிரெஞ்சுப் புரட்சி இங்கி லாந்தில் எல்லா வகுப்பு மக்களால் வரவேற்கப்பட்டிருந்தாலும்

நாளடைவில் அதன் பயங்கரத்தன்மைகளால் இங்கிலாந்தில் பீதி பரவியிருந்தது. அதன் விளைவாக, அரசினரால் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தன. சீர்திருத்தங்களையோ, மாற்றங்களையோ கொண்டுவர அரசு தயங்கியது. ஜனநாயகக் கொள்கையை அரசு சந்தேகித்தது.

அந்தச் சூழ்நிலையிலேயே இங்கிலாந்துக்கும், ஃபிரான்சுக்கும் போர் நடந்துகொண்டிருந்தது.

(ஆ) ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்

1792-ல் பிப்ரவரி மாதத்தில் இங்கிலாந்தின் முதலமைச்சரான இளைய பிட் என்பவர் பாராளுமன்றத்தில் பேசியபோது அடுத்த பதினைந்து ஆண்டுகள் இங்கிலாந்தில் அமைதியான காலமாக இருக்குமென உறுதி கூறியிருந்தார். ஆயின் அடுத்த ஆண்டிலேயே ஃபிரெஞ்சுப் புரட்சிப் போரிலே பிரிட்டன் சிக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற நாடுகள் 1792 ஏப்பிரலில் ஃபிரான்சு மன்னரின் அதிகாரங்களை மீட்டுத்தர அந்த நாட்டுப் புரட்சி அரசாங்கத்தின்மீது போர் தொடுத்திருந்தபோதிலும் இங்கிலாந்து அதில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியே இருந்தது. ஆயின், அந்த ஆண்டின் கடைசி ஐந்து மாதங்களில் ஏற்பட்டிருந்த நிகழ்ச்சிகளே இறுதியில் இங்கிலாந்தைப் போரில் ஈடுபடுத்தின.

காரணங்கள்

1792 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் குடியரசுக்கு விரோதிகளாகச் சந்தேகிக்கப்பட்ட பலர் ஃபிரான்சில் புரட்சி அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட, ஆங்கிலேயர்கள் அதனால் திடுக்கிட்டுப் புரட்சியின் போக்கைக் கண்டிக்க முற்பட்டனர். அதே ஆண்டில் நவம்பர் மாதத்தில் ஆஸ்திரியாவுக்குச் சொந்தமான நெதர்லாந்தை ஃபிரான்சின் புரட்சிப் படை தாக்கிக் கைப்பற்றிக்கொள்ள, அந்த ஆக்கிரமிப்புக் கொள்கையினால் இங்கிலாந்து ஆத்திரமடைந்தது. அதே மாதம் 19ஆம் நாளில் முடியாட்சியை மாற்றிக் குடியாட்சியை நிறுவ எந்த நாட்டு மக்கள் முயன்றாலும் அவர்களுக்கு உதவி கொடுக்கப்படுமென்று ஃபிரான்சின் புரட்சி அரசாங்கம் (தேசிய கன்வென்ஷன்) அறிவித்திருக்க, கோனட்சியைப் பெற்றிருந்த இங்கிலாந்துக்கு அது எரிச்சலை உண்டாக்கியது. மேற்கூறப்பட்ட காரணங்களால் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் உறவு மோசமாகிக்கொண்டு வர, ஒரு புதுத் தகராறு தோன்றியது.

ஷெல்ட் நதியின்மீது (Scheldt River) டச்சுக்காரர்களுக்கே உரிமை உண்டென பிரிட்டனும், ஹாலந்தும் ஒரு வியாபார ஒப்பந்தத்தை ஏற்கெனவே செய்துகொண்டிருந்தன. அந்த ஒப்பந்தத்தை மீறும்வகையில் அந்த நதியானது வியாபாரத் துறையில் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக இருக்கவேண்டு மென ஃபிரான்சின் அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது. அவ் வறிவுரையை ஒப்புக்கொள்வதாக இருந்தால் ஃபிரெஞ்சுக் காரர்கள் அந் நிலைமையைப் பயன்படுத்தி ஹாலந்தின் முக்கியத் துறைமுகமான ஆன்ட்வெர்ப் (Antwerp) நகரைக் கைப்பற்றிக் கொண்டு, இங்கிலாந்தின் துறைமுகங்களைத் தாக்கக்கூடுமென்ற அச்சம் ஆங்கிலேயருக்கு எழுந்தது. 'ஐரோப்பிய நாடுகளின் முயற்சியால் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகளை மாற்றும் அதிகாரம் ஃபிரான்சுக்கு இல்லை' என்று இளைய பிட் ஆணித்தர மாகச் சொல்லியிருந்ததுமட்டுமில்லாமல் டச்சுக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குறுதியைக் காக்கத் தமது நாடு கடமைப்பட்டிருக்கிறதெனவும் எச்சரித்தார். அந் நிலையில் 1739 ஜனவரி மாதத்தில் ஃபிரான்ஸ் அரசர் பதினைரும் லூயி ஃபிரெஞ்சுப் புரட்சியாளர்களால் கொல்லப்பட இங்கிலாந்துக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டது. புரட்சியின் போக்கை மேலும் வளர விட்டால் அது ஐரோப்பாவையே இரத்தக்களமாக்கி இங்கி லாந்தையும் பாதிக்குமெனப் பயந்த ஆங்கிலேயர் ஃபிரான்சு நாட்டின்மீது உடனடியாகப் போர் தொடுக்கும்படியாகக் கூக்குர லிட்டனர். அதற்கிடையே இங்கிலாந்தை ஒடுக்குவதன்மூல மாகவே தங்களின் புரட்சிப் பயன்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமென நினைத்த ஃபிரெஞ்சுக் கன்வென்ஷன் 1-2-1793-ல் ஹாலந்துமீதும், பிரிட்டன்மீதும் போர் தொடுத்தது. ஃபிரான்சின் புரட்சி அரசாங்கத்தை ஒழித்துக்கட்டத் தங்களுக்கு வாய்ப்புக் கிடைத்ததாக எண்ணி ஆங்கிலேயர்களும் அம் முடிவை வரவேற்றனர். 'நாகரிக நாடுகளின் அடித்தளத்தைத் தகர்க்க எண்ணும் ஒழுக்கமற்ற ஃபிரான்சு நாட்டுக்கு நற்புத்தி புகட்டப் போர் எனக்குச் சம்மதமே' என இங்கிலாந்தின் அரசர் மூன்றாம் ஜார்ஜ் அறிவிக்க, இங்கிலாந்துக்கும், ஃபிரான்சுக்கும் 1793-ல் போர் மூண்டது.

1793-ல் தொடங்கிய அப் போர் 1815-ல் வாட்டர்லு (Waterloo) சண்டையிலேயே முடிவதாக இருந்தது. நடுவில் சிறிது விட்டு விட்டு அடுத்த 22 ஆண்டுகள் அப் போர் நடக்க ஃபிரான்சுக்கு எதிராக இங்கிலாந்து நான்கு கூட்டணிகளை (Coalitions) ஐரோப்பிய அரசுகளுடன் அமைத்துப் போராடியது. அவற்றிலே முதல் மூன்று கூட்டணிகள் அமைக்கப்படுவதற்கு

இளைய பிட் காரணராஞர். தன்னந்தனியாக ஃபிரான்சை எதிர்ப் பதைக்காட்டிலும் அதன் மற்ற எதிரி நாடுகளிடம் சேர்ந்து கூட்டுப் போர் நடத்த எண்ணி 1793-ல் முதல் கூட்டணி (First Coalition) பிரிட்டனால் ஏற்படுத்தப்பட்டது.

முதல் கூட்டணி (1793 - 1797)

ஆஸ்திரியா, பிரஷ்யா, ஹாலந்து, ஸ்பெயின், சார்டினியா போன்ற ஐரோப்பிய நாடுகளை ஒன்று சேர்த்து ஃபிரான்சை எதிர்க்க இங்கிலாந்து முற்பட்டது. யார்க் கோமகனின் தலைமை யில் 10,000 வீரர்களுடைய ஒரு படை இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டிருந்தும் நேச நாடுகளுக்குச் சாதகமாக இல்லை. ஃபிரெஞ்சுக்காரர்கள் ஹாலந்தைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண் டனர். ஸ்பெயினும், சார்டினியாவும் தோற்கடிக்கப்பட்டன. பிரஷ்யா போரிலிருந்து விலகிக்கொண்டது. ஆஸ்திரியா பல சண்டைகளிலே தோல்வியடைந்து ஃபிரான்சுடன் காம்போ ஃபோர்மியோ (Campo Formio) உடன்பாட்டைச் செய்துகொண் டது. 1797ஆம் ஆண்டில் நட்பு நாடுகளின் உதவியின்றி இங்கி லாந்து தனித்து விடப்பட்டது. அதன் வேதனையை அதிக மாக்குவதுபோல், தொடக்கத்தில் நட்பு நாடுகளாக இருந்த ஹாலந்தும், ஸ்பெயினும் ஃபிரான்சினால் வற்புறுத்தப்பட்டு இங்கி லாந்தின்மீதே போர் தொடுத்திருந்தன.

தரைச் சண்டைகளில் இங்கிலாந்துக்கு இலாபம் எதுவும் இல்லையெனினும் தன் கடற்படையினால் சில வெற்றிகளை அந் நாடு அடைந்திருந்தது. ஃபிரெஞ்சு அரச விசுவாசிகளுக்கு உதவிபுரிய குவிபெரான் குடாவுக்கு (Quiberon bay) அனுப்பப்பட்டிருந்த ஆங்கிலக் கடற்படை எதையும் சாதிக்காமல் திரும்பியதெனினும் அந் நகர மக்களின் அழைப்பிற்கிணங்கி டுலோன் (Toulon) துறை முகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த மற்றோர் ஆங்கிலக் கப்பற்படை யும் ஃபிரெஞ்சு பீரங்கித் தாக்குதல்களினால் பின்வாங்கியிருந்த தென்றாலும் ஃபிரெஞ்சு உணவுக் கப்பல்களுக்குக் காவலாக வந்த ஒரு கப்பற்படையை ஹவ் (Howe) என்ற ஆங்கிலக் கடற்படைத் தலைவர் 1-6-1794-ல் தோற்கடித்தார். அவ் வெற்றிநாளை 'புகழ் பெற்ற முதல் ஜூன்' (Glorius First June) என ஆங்கிலேயர்கள் பெருமையோடு போற்றித் தாங்கள் அதுவரை போரில் அடைந் திருந்த ஏமாற்றங்களை மறக்க முயன்றனர். ஃபிரான்சுக்கு உதவி யாகப் போரிட்ட ஸ்பானியக் கடற்படையை 1797-ல் அட்மிரல் நெல்சன் (Nelson) என்ற ஆங்கிலத் தளபதி வின்சென்ட் முனைக் கருகில் (Cape Vincent) தோற்கடித்து, பிரிட்டிஷ் கடற்படை யின் பலத்தை வெளிப்படுத்தினர். ஃபிரான்சின் சார்பிலே

போரிட்ட தம் இன்னொரு பழைய நட்பு நாடான ஹாலந்து நாட்டின் கப்பற்படையை டன்ங்கன் (Duncan) என்ற ஆங்கிலக் கப்பற்படைத் தளகர்த்தர் 1797-ல் காம்பெர்டௌன் (Comperdown) என்னுமிடத்தில் சிதறடித்தார்.

ஃபிரான்சு, ஸ்பெயின், ஹாலந்து நாடுகளால் தங்களின் நாட்டுக்கோ, வியாபாரத்திற்கோ குடியேற்றங்களுக்கோ ஆபத்து எதுவும் வராமல் தந்த அக் கடல் வெற்றிகள் ஆங்கிலேயருக்குத் தெம்பை அளித்தன. அதுமட்டுமின்றித் தன் கடற்படை வன்மையைக் கொண்டு எதிரி நாடுகளின் குடியேற்றங்களைக் கைப்பற்றவும் இங்கிலாந்து முனைந்தது. டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான தென் ஆஃபிரிக்காவிலிருந்த நன்னம்பிக்கை முனையையும் (Cape of Good Hope) தென் அமெரிக்காவிலிருந்த டெமெராரா (Demerara) நாட்டையும் ஸ்பெயினுக்குச் சொந்தமான டிரினிடாடையும் (Trinidad) ஃபிரான்சுக்குச் சொந்தமான செண்ட் லூசியா (St. Lousia) என்ற இன்னொரு மேற்கிந்தியத் தீவையும் 1795 - 1797 காலத்தில் நடந்த கடல் சண்டைகளால் பிரிட்டன் கைப்பற்றியிருந்தது.

இங்கிலாந்தின் கடலாதிக்கத்துக்கெதிராக ஃபிரான்சும் அதன் நட்பு நாடுகளும் செயலாற்றியிருக்க நெப்போலியன் (Napoleon) என்ற ஃபிரெஞ்சுப் படைத் தளபதி எகிப்தின் வழியாகச் சென்று ஆங்கிலேயருக்குச் சொந்தமான இந்தியாவைத் தாக்குவதற்கான திட்டத்தை முன்வைக்க, ஃபிரான்சின் டைரக்டரி (Directory) அரசாங்கம் அதை ஒப்புக்கொண்டது. ஒரு நிலப் படையுடனும், கப்பற்படையுடனும் எகிப்தை அடைந்த நெப்போலியன் பிரமிடுகள் சண்டையில் (Battle of Pyramids) மெம்லுக்கள் என அழைக்கப்பட்ட எகிப்தியர்களைத் தோற்கடித்து மேலும் முன்னேற முயன்றுகொண்டிருந்தார். ஃபிரெஞ்சுப் படைகள் எகிப்தைக் கைப்பற்றிக்கொண்டால் இந்தியாவுக்கு ஆபத்து நேருமென உணர்ந்து இங்கிலாந்தின் அரசாங்கம் அட்மிரல் நெல்சன் தலைமையில் ஒரு கப்பற்படையை அனுப்பியது. அபுகீர்விரிகுடா (Aboukir Bay) தரைப்படையினருக்கு உதவி செய்யத் தங்கியிருந்த நெப்போலியன் கப்பற்படையை 1798-ல் நெல்சன் தாக்கினார். 13-ஃபிரெஞ்சுக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அந்த நைல் நதிச் சண்டையில் (Battle of Nile) நெல்சன் பெற்ற வெற்றி இந்தியாவைத் தாக்க வேண்டுமென்ற ஃபிரெஞ்சுக்காரர்களின் திட்டத்தை முறித்தது. இவ் வெற்றியால் இங்கிலாந்து பெரும் புகழ் பெற்றிருக்க அந்த நாட்டின் உதவியால் ஃபிரான்சை எதிர்க்கலாம் எனச் சில ஐரோப்பிய நாடுகளுக்கு

மீண்டும் துணிவு பிறந்தது. கப்பற்படை நெல்சனால் மூழ்கடிக்கப்பட்டிருந்தபோதிலும் நிலப் படையைக் கொண்டிருந்த நெப்போலியன் பாலஸ்தீனம் வழியாகத் துருக்கியப் பேரரசைத் தாக்கத் திட்டமிட்டு முன்னேறினார். ஆகர் (Acre) என்னுமிடத்தில் துருக்கியர்கள் எதிர்க்கச் சர் சிட்னி ஸ்மித் (Sir Sydney Smith) என்ற கடல் தளபதியின் தலைமையில் ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு உதவினர்கள். மேற்கொண்டு முன்னேற முடியாத நிலையில் நெப்போலியன் பின்வாங்க வேண்டியிருந்தது. ஃபிரெஞ்சுத் தரைப்படைகளையும் தடுத்து நிறுத்த முடியும் என்ற எண்ணம் ஏற்படவே ஆஸ்திரியா, ரஷ்யா, துருக்கி போன்ற முடியரசுகள் ஃபிரான்சை எதிர்க்கத் தயாராயின. அந்தச் சமயத்திலேயே இங்கிலாந்தில் இரண்டாவது கூட்டணி அமைக்கப்பட்டது.

இரண்டாவது கூட்டணி (1799 - 1800)

ஆஸ்திரியா, ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகளுடன் இங்கிலாந்து ஒரு கூட்டுறவு அமைத்துப் போரைத் தொடங்கியது. ஃபிரான்சுக்குச் சில இடங்களில் - குறிப்பாக வட இத்தாலியிலும் நேப்பிளிலும் - தோல்விகள் ஏற்பட்டன. போரைச் சரிவர நடத்த டைரக்டரி அரசுக்குத் திறமையில்லையென ஃபிரான்ஸ் மக்கள் கருதும் அளவுக்கு நிலைமை மாறிவர அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எகிப்திலிருந்து பாரிஸ் நகர் வந்தடைந்த நெப்போலியன் 1799-ல் டைரக்டரி அரசாங்கத்தைக் கலைத்து கான்சல் (Consulate) ஆட்சியை ஃபிரான்சில் ஏற்படுத்தினார். முதல் கான்சலாக முழு அதிகாரங்களையும் பெற்றிருந்த நெப்போலியன் போரின் போக்கை மாற்றும் திறமையைக் கொண்டிருந்தார். உணர்ச்சியும் உற்சாகமும் கொண்ட புதுப்படைகளைத் திரட்டி எதிர் அணியிலிருந்த ஆஸ்திரியப் படைகளை மாரெங்கோ (Marengo) என்னுமிடத்தில் நெப்போலியன் தோற்கடித்து 1801-ல் லூனிவில் (Lonewille) உடன்படிக்கையை ஆஸ்திரியாவின்மீது திணித்து, அந்த நாட்டைக் கூட்டணியினின்றும் விலக்கினர். துருக்கிக்கும், ரஷ்யாவுக்கும் மன வேறுபாடு ஏற்பட, கூட்டுறவிலிருந்து ரஷ்ய அரசர் முதலாம் பால் (Paul I) தம் நாட்டை விலக்கிக் கொண்டார். தனிநாடாக ஃபிரான்சை எதிர்ப்பதில் பலனில்லை எனக் கருதித் துருக்கியும் போரிலிருந்து பின்னர் விலகிக் கொள்ள, மீண்டும் பிரிட்டன் தனித்து நின்றது. இருப்பினும் அதன் கடற்படைகள் இங்கிலாந்துக்குச் சில முக்கிய வெற்றிகளைத் தேடிக் கொடுத்தன. மத்திய தரைக்கடலிலிருந்த மால்டா (Malta) தீவை ஆங்கிலக் கடற்படை தன்வசமாக்கிக் கொண்டது. எகிப்தில் 1799-ல் நெப்போலியனால் கைவிடப்பட்ட ஃபிரெஞ்சுப் படைகளை ஆங்கிலத்தளபதியான சர் ரால்ப்

ஆபெர்க்ரோம்பி (Sir Ralph Abercrombie) என்பவர் தோற்கடித்தார். ஃபிரெஞ்சுப் புரட்சிக்காரர்களை எதிர்த்து நேப்பிள்ஸ் அரசரான நான்காம் ஃபெர்டினண்டுக்கு (Ferdinand IV) ஆங்கிலக் கப்பல்படை உதவி செய்தது.

இரண்டாம் கூட்டணி கலைக்கப்பட்டிருந்தும் ஆங்கிலேயர்கள் தனியாகப் போரை நடத்திவர இங்கிலாந்துக்கு எதிராக ரஷ்யா, டென்மார்க், பிரஷ்யா, ஸ்வீடன் போன்ற நாடுகள் படை தரித்த நடுநிலைக் கூட்டணி (Armed Neutrality) அமைத்துக் கொண்டன.

நடு நிலைமை நாடுகளான தங்கள் நாட்டுக் கப்பல்களை இங்கிலாந்து சோதனை செய்ததை எதிர்த்தே அக் கூட்டணி அமைக்கப் பட்டிருந்தது. அப் புது எதிர்ப்புகளைக் கலைக்கவும் இங்கிலாந்து தன் கடற்படையை நம்ப வேண்டியிருந்தது. அட்மிரல் சர் ஹைடுபார்க்கர் (Sir Hyde Parker) என்பவரைத் தளகர்த்தராகவும் நெல்சனை உப தளபதியாகவும் கொண்ட ஒரு பிரிட்டிஷ் கப்பற்படை கோபன்ஹேகன் (Copenhagen) என்னுமிடத்தில் டேனியர்களின் கப்பற்படையை நாசமாக்கி ஃபிரான்சின் நேச நாடாகிய டென்மார்க்கைப் பணியவைத்தது. படைதரித்த நடு நிலைக் கூட்டணியைப் புதுப்பித்திருந்த ரஷ்ய அரசர் முதலாம் பால் அதற்கிடையே கொலை செய்யப்பட அடுத்துப் பட்டத்திற்கு வந்த ஜார் அலெக்சாண்டர் (Czar Alexander) பிரிட்டனுடன் சமாதானம் செய்துகொள்ளவே அந்த நாடுகளின் கூட்டுறவு கலைந்தது.

தனித்த நிலையிலும் இங்கிலாந்து போர் செய்துகொண்டிருக்க இளைய பிட் 1801-ல் அரசர் மூன்றாம் ஜார்ஜிடம் அயர்லாந்தைப் பற்றிக் கருத்துவேறுபாடு கொண்டு பதவியைத் துறந்தார். அதன் பின் ஆடிங்டன் (Addington) என்பவர் புதுப் பிரதமராகப் பதவி பெற்றார். போரை நடத்தப் போதிய திறமையில்லாத ஆடிங்டன் ஃபிரான்சுடன் சமரசப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கி 1802-ல் இரு நாடுகளுக்கும் ஆமியன்ஸ் சமாதானம் (Peace of Amiens) ஏற்படுத்தினர். அதன்படி தான் கைப்பற்றி இருந்த சில குடியேற்றப் பகுதிகளை உரியவர்களிடம் கொடுக்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. டச்சுப் பிரதேசத்தில் இருந்து ஃபிரான்ஸ் வெளியேற ஆமோதித்தது. இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் நடந்துவந்த புரட்சிப் போர் இறுதியில் ஆமியன்ஸ் சமாதானத்தில் முடிந்துவிட்டதுபோல் காணப் பட்டது. ஆனால், அவ் வுடன்படிக்கையின் அம்சங்களை இரு நாடுகளுமே மீறி நடக்க முற்பட்டதால் இன்னொரு போர் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் இடையே மூள்வது உறுதியாயிற்று;

மால்டா தீவினின்று பிரிட்டன் வெளியேற மறுத்திருக்க டச்சுப் பகுதிகளை ஃபிரான்ஸே மீண்டும் ஆக்கிரமித்தது. இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பர விரோத எண்ணம் வளர்ந்து வர ஃபிரான்சின் அரசியலிலேயே பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. 1802-ல் ஆயுள்வரைக்கும் கான்சலாக ஆக்கப் பட்டிருந்த நெப்போலியன் 1804-ல் ஃபிரான்சின் முடியரசராகத் தம்மை அறிவித்துக்கொண்டார். ஐரோப்பாவில் தனித்தலைமை பெற விரும்பிய நெப்போலியன் தமது எண்ணத்தை நிறைவேற்ற முதற்கண் இங்கிலாந்தின் கொட்டத்தை ஒடுக்க நினைத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்ய முனைந்தார். நெப்போலியனின் ஆக்கிரமிப்பு வெறியிலிருந்து தங்களின் சுதந்தரம் காக்கப்பட வேண்டுமென்றால் போர் செய்வதைத் தவிர ஆங்கிலேயர்களுக்கு வேறு வழியில்லை. 'வாழ்ந்தால் சுதந்தரமாக வாழவேண்டும்; வீழ்ந்தால் வீரமாக இறக்கவேண்டும்' என்ற கோட்பாட்டின்படி தற்காப்புப் போருக்கு இங்கிலாந்து தயாரானது. நெருக்கடியான இந் நிலையில் பிட் என்பவரே அமைச்சராக இருக்கவேண்டுமென ஆங்கிலேயர்கள் நினைத்ததற்கேற்ப மன்னர் ஜார்ஜும் அவரையே மீண்டும் பிரதமராக்கினர். நெப்போலியனின் போர் ஆதிக்க வெறியை ஒடுக்கத் தம் பழைய வழக்கப்படி கூட்டணியை பிட் 1805-ல் அமைத்தார்.

மூன்றும் கூட்டுறவு (1805)

ஃபிரான்சை எதிர்க்க பிட்டினால் அமைக்கப்பட்ட இக் கூட்டணியில் ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ரஷ்யாவும் சேர்ந்தன. ஃபிரான்சுக் கெதிராக ஓயாமல் கூட்டுச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த இங்கிலாந்தைத் தாக்கிப் பணியவைக்க வேண்டுமென்று நெப்போலியன் உறுதிகொண்டு அந் நாட்டின்மீதே படையெடுக்கத் திட்டமிட்டார்.

போர் முறையிலேயே நன்கு பழக்கப்பட்ட 1,50,000 வீரர்கள் கொண்ட ஒரு பெரும் படையை பூலோன் (Bouloane) நகரில் இங்கிலாந்தைத் தாக்குவதற்கென்று நெப்போலியன் திரட்டி வைத்திருந்தார். இங்கிலாந்தின் மாண்புறு படை (Grand Army of England) என அழைக்கப்பட்ட அந்தப் படையினருக்கும் அவர்கள் தாக்கிக் கைப்பற்ற நினைத்த இங்கிலாந்துக்கும் குறுக்கே முப்பது மைல் அகலமுள்ள ஆங்கிலக் கால்வாய் இருந்தது. ஆயிரக்கணக்கான தட்டைப்படகுகளில் அந்த வீரர்களை ஏற்றி இங்கிலாந்தின்மீது ஏவிவிடலாமென நெப்போலியன் நம்பினார். ஆங்கிலேயர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடிமைப்படுத்த பூலோன் நகரில் முகாமிட்டிருந்த

ஃபிரெஞ்சுப் படைகளைத் தொலைநோக்கிக் கண்ணுடியின்மூலம் ஆங்கிலேயர்களால் பார்க்க முடிந்தது. அதனல் ஓரளவு பீதி இங்கிலாந்தில் நிலவியது என்ருலும் ஆங்கிலக் கால்வாயில் ரோந்து புரிந்துவந்த கப்பற்படையின்மீது ஆங்கிலேயர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. 'ஃபிரெஞ்சுக்காரர்கள் இங்கிலாந் துக்கு வர முடியாதெனச் சொல்வதற்கில்லை. எனினும் நிச்சய மாகக் கடல் மார்க்கமாக அவர்கள் வருவதற்கில்லை' என அட்மிரல் ஜெர்விஸ் (Admiral Jervis) என்ற ஆங்கிலக் கப்பற் படைத் தளபதி தன்னம்பிக்கை தொனிக்கப் பேசியிருந்தார். ஆங்கிலக் கப்பற்படையின் பலத்தை நன்கு உணர்ந்திருந்து நெப்போலியன் அதற்கேற்பத் தம் படையெடுப்புத் திட்டத்தை மாற்றி யமைத்தார்.

'டூலோன் (Toulon) நகரிலிருந்த ஃபிரெஞ்சுக் கப்பற்படை ஆங்கிலேயர்களின் ரோந்துக் கப்பல்களுக்குத் தெரியாமல் காடிஸ் (Cadis) துறைமுகத்தை அடைந்து ஸ்பானியக் கப்பற்படையுடன் சேர்ந்துகொள்ள வேண்டும். அதற்குப் பின் மேற்கிந்தியத் தீவுகளுக்குப் போவதுபோல அக் கூட்டுக் கப்பல்படை பாசாங்கு செய்தால் ஆங்கிலக் கால்வாய்களில் ரோந்து புரிந்துவரும் பிரிட்டிஷ் கப்பல்கள் அதைப் பின்தொடர்ந்து அமெரிக்காவிற்குப் போகும். அச் சமயத்தில் அக் கூட்டுக் கப்பற்படை வேகமாகப் பாதிவழியில் திரும்பி வந்து ஆங்கிலக் கால்வாயிலேயே எஞ்சி யிருக்கும் பிரிட்டிஷ் கப்பற் படைகளை அழிக்கவேண்டும். பிரெஸ்ட் (Brest) துறைமுகத்திலிருந்த இன்னெரு ஃபிரெஞ்சுக் கப்பற்படை அதற்கிடையே தக்க பாதுகாப்புடன் டூலோன் நகரிலிருந்து ஃபிரெஞ்சுப் படைகளை இங்கிலாந்துக்கு அனுப்பி விடவேண்டும்.' அதுவே நெப்போலியனின் கப்பற்படைத் திட்ட மாக இருந்தது. அத் திட்டப்படியே வில்லநூவ் (Villeneuve) என்ற ஃபிரெஞ்சுத் தளபதியின் தலைமையில் டூலோன் துறை முகத்தை விட்டுக்கிளம்பிய கப்பற்படை, ஆங்கில ரோந்துக் கப்பல்களுக்குத் தெரியாதபடி, காடிஸ் துறைமுகத்தை அடைந்து ஸ்பானியக் கப்பற் படையுடன் இணைந்து மார்ட்டினிக் (Martinique) என்ற மேற்கிந்தியத் தீவை நோக்கிப் புறப்படுவது போலக் கிளம்பியது. பிரிட்டிஷ் கப்பற்படைத் தலைவர் நெல்சன் ஃபிரெஞ்சு - ஸ்பானியக் கப்பற்படையைப் பின்தொடர்ந்தபோது எதிரிகளின் தந்திரம் அவருக்குப் புரிந்தது. உடனே ஆங்கிலக் கால்வாயிலிருந்து பிரிட்டிஷ் கடற்படைக்கு விரைந்து செல்லக் கூடிய ஒரு கப்பலின்மூலம் தம் செய்தியை எட்டச்செய்தார். ஆங்கிலக் கால்வாயை அடைந்த வில்லநூவை பிரிட்டிஷ் கப்பற்படையை ஃபினிஸ்டெரி முனைக்கருகில் (Cape Finisterre)

வழிமறித்து, காடிஸ் துறைமுகத்திற்கு விரட்டியது. பிரெஸ்ட் துறைமுகத்திலிருந்த இன்னொரு ஃபிரெஞ்சுக் கடற்படையும் வெளிவர இயலாமல் ஆங்கிலேயரின் முற்றுகையால் முடங்கிக் கிடந்தது. இந்த நிலையில் கடல் மார்க்கமாக இங்கிலாந்தைத் தாக்க முனைந்த திட்டம் நிறைவேற்றப்பட முடியாததாக இருக்க ஆஸ்திரியாவின் படைக் குவிப்பைப்பற்றி நெப்போலியன் கேள்விப் பட்டார். டூலோன் நகரில் முகாமிட்டிருந்த படைகளை நெப்போலியன் அதனால் ஆஸ்திரியாவுக்கு எதிராக அனுப்பிவிட்டார்.

மூன்றும் கூட்டணியில் ஃபிரான்சுக்கு எதிராகச் சேர்ந்திருந்த ஆஸ்திரியா நாட்டின் படைகள் உல்ம் (Ulm) என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டன. இதற்கிடையே (காடிஸ் துறைமுகத்தில்) வில்லநூவ் தலைமையில் அடைபட்டுக் கிடந்த ஃபிரெஞ்சுக் கடற்படை மீண்டும் ஆங்கிலக் கால்வாயை நோக்கிப் புறப்பட முயன்றபோது நெல்சனால் ட்ரஃபால்கார் (Trafalgar) என்னுமிடத்தில் வழிமறிக்கப்பட்டது. ஆவேசமாக நடந்த அச் சண்டையில் (21-10-1805) நெல்சன் காயமடைந்தாரெனினும் ஆங்கிலேயர்கள் அடைந்த வெற்றியைக் கேட்ட பிறகே அவர் உயிர் பிரிந்தது. அத் தோல்வியைக் கேட்ட பிறகு இங்கிலாந்தின்மீது படையெடுக்கும் திட்டத்தையே நெப்போலியன் கைவிடவேண்டியிருந்தது.

ட்ரஃபால்கர் வெற்றியைக் கேள்வியுற்றதும் 'இங்கிலாந்து தன் முயற்சியினால் தன்னைத்தானே காத்துக்கொண்டது. ஐரோப்பாவையும் அது காக்கும்' என பிட் குறிப்பிட்டிருந்தபோதிலும் நெப்போலியன் ஆஸ்திரிய, ரஷ்யப் படைகளை டிசம்பர் 1805-ல் ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்னுமிடத்தில் படுதோல்வியடையச் செய்தார். அதனால், அடுத்த பத்தாண்டுகளுக்கு ஐரோப்பிய நாடுகள் நெப்போலியனுக்கு மண்டியிட்டுக் கிடக்கவேண்டியிருந்தது. ஆஸ்டர்லிட்ஸ் சண்டையின் முடிவு தமக்குத் தெரிவிக்கப்பட்டபோது ஓர் ஐரோப்பியப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பிட், 'அந்தப் படத்தைச் சுருட்டிவையுங்கள். இன்னும் 10 ஆண்டுகளுக்கு அது தேவைப்படாது' எனக் கூறியது தீர்க்கதரிசன வார்த்தையாகவே இருந்தது. ஆஸ்டர்லிட்ஸ் செய்தியினால் மனம் தளர்ந்துவிட்ட பிட் 1806-ல் காலமானார். ஆஸ்டர்லிட்ஸ் சண்டையில் படுதோல்வியடைந்த ஆஸ்திரியா பிரெஸ்பர்க் உடன்பாட்டை (Treaty of Pressburg) ஒப்புக்கொண்டு மூன்றும் கூட்டணியை விட்டு விலகியது. ஐரோப்பாவில் தனக்கு நட்பு நாடு எதுவுமில்லாத சூழ்நிலையில் ரஷ்யாவும் விலகிவிட அக் கூட்டணி முறிந்தது.

அடுத்தும் கடைசியுமாக நான்காம் கூட்டணி 1813-ல் அமைக்கப்பட்ட விவரத்தைப் பின்னர்க் காண்போம். மூன்றும் கூட்டணி முரிந்த 1805ஆம் ஆண்டிலிருந்து 1813 வரை ஐரோப்பிய வரலாறு நெப்போலியனின் சரிதையாகவே இருந்தது.

வட இத்தாலியில் ஃபிரான்சுக்குக் கட்டுப்பட்ட குடியரசுகளை நெப்போலியன் அமைத்திருந்தார். போப்பாண்டவரின் பகுதி களும் நெப்போலியனின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டிருந்தன. நேப்பிள்சுக்குத் தம் சகோதரரான ஜோசப் போனபார்ட் என்ப வரை நெப்போலியன் அரசராக்கி யிருந்தார். பெல்ஜியம் ஏற்கெனவே ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டிருக்க ஹாலந்துக்கு நெப்போலியனின் மற்றொரு சகோதரர் மன்னராக்கப்பட் டிருந்தார். புனித ரோமப் பேரரசு என்ற ஏற்பாடு கலைக்கப்பட்டு ஜெர்மனியிலிருந்து ஆஸ்திரியாவின் செல்வாக்கு அகற்றப்பட் டிருந்தது. ஜெர்மனியிலிருந்த முந்நூற்றுக்கும் அதிகமான சிற்றரசுகள் கலைக்கப்பட்டு ரைன் இணைக்கூட்டென்று (Confederation of the Rhine) அமைக்கப்பட்ட முப்பத்தொன்பது அரசுகளை நெப்போலியன் உருவாக்கித் தம் செல்வாக்கிற்குப் பணிய வைத்திருந்தார். தம்மை எதிர்க்கத் துணிந்த பிரஷ்யாவின் படைகளை ஜேனு (Jeno, 1806) என்னுமிடத்தில் நிர்மூலமாக் கினார். தம் விரோதியான ரஷ்ய மன்னர் முதலாம் அலெக் சாண்டரின் படைகளை ஃபீரிட்லாந்து Friedland) என்னு மிடத்தில் 1807-ல் தாக்கிப் பெரும் வெற்றியை நெப்போலியன் அடைந்திருந்தார். சுருக்கமாக நெப்போலியனுக்கு நட்பு நாடு களாகவோ அவரின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்ட அரசு களாகவோ, ஐரோப்பிய நாடுகள் இருந்தனவெனச் சொல்லலாம். மேற்கே போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனிலிருந்து (Lisbon) கிழக்கே ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவரையிலும், வடக்கே ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமிலிருந்து (Stockhom) தெற்கே ரோம் நகர்வரை பரவியிருந்த ஐரோப்பிய நாடுகள் நெப்போலியனின் ஆணைக்கு மண்டியிடுவதாக இருந்தன. தம் புகழ் ஏணியின் உச்சியிலிருந்த நெப்போலியனுக்கு இன்னும் ஒரு பெருத்த குறையிருந்தது. தமக்கும் ஃபிரான்சுக்கும் எதிராக எதிர் அணியை அமைத்திருந்த இங்கிலாந்தை ஒடுக்க அது வரையில் செய்யப்பட்டிருந்த முயற்சிகள் பலனளிக்காம லிருந்ததால் அந் நாட்டைப் பணியவைக்க இன்னொரு புதிய திட்டத்தை நெப்போலியன் உருவாக்கினர். அதுவே கண்டத் திட்டம் என்ற பொருளாதார முற்றுகையாகும்.

நெப்போலியனின் கண்டத் திட்டம் (Continental System)

ஐரோப்பா முழுவதுமே சமக்கு முன் மண்டியிட்டிருக்க இங்கிலாந்துமட்டும் பணியாதிருக்க, அதை ஒரு சவாலாகவே நெப்போலியன் கருதினார். கப்பற்படைப் பலம் கொண்டிருந்த ஆங்கிலேயர்களைத் தம் கடற் படையெடுப்புத் திட்டத்தால் பணியவைக்க முடியாதென்பதை நெப்போலியன் உணர்ந்திருக்க 'பாரிஸ் நகரிலிருந்து டில்லிக்கு எளிதாகப் படைகளை அனுப்ப முடியுமென்றாலும் டூலோன் நகரிலிருந்து பிரிட்டனிலிருந்த போக்ஸ்டோன் (ஃ Folkstone) பட்டணத்திற்குப் படைகளை அனுப்பவது சிரமம்' எனக் குறிப்பிட்டிருந்தார். ஆயின் எப்படியும் இங்கிலாந்தை அடிபணிய வைக்க வேண்டுமென்று நினைத்து அந் நாட்டின்மீது ஒரு பொருளாதார முற்றுகையைத் திணிக்க எண்ணினார்.

வர்த்தகத்தைப் பெரிதும் நம்பி வாழ்ந்துவந்த பிரிட்டனின் அயல்நாட்டு வியாபாரத்தைக் குலைப்பதன் மூலமாக அந் நாட்டைச் சரணடையச் செய்யலாமென்ற நினைப்பிலே 'பெர்லின் கட்டளைகள்' (Berlin Decree, 1806 - 1807) என்ற சில ஆணைகளைப் பிறப்பித்தார்.

அதன்படி எந்த ஐரோப்பிய நாடும் பிரிட்டனுடன் வியாபாரம் செய்யக்கூடாது; ஆங்கிலேயர்களின் விலாசங்களைத் தாங்கிச் செல்லும் கடிதங்கள், சாமான் கட்டுகள் பறிமுதல் செய்யப்படும்; ஐரோப்பாவிலிருந்த ஆங்கிலேயர்களின் வியாபாரக் கிடங்குகள் மூடப்படவேண்டும் என்ற கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு இங்கிலாந்துடன் ஐரோப்பிய நாடுகள் செய்து வந்த வியாபாரம் தடை செய்யப்பட்டது; பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் ஐரோப்பியத் துறைமுகங்களுக்குள் நுழையக் கூடாது; பிரிட்டிஷ் துறைமுகங்களுக்குச் சென்ற பின் ஐரோப்பாவுக்கு வருகின்ற நடுநிலைமை நாடுகளின் கப்பல்கள் ஃபிரெஞ்சுக் காரர்களால் பறிமுதல் செய்யப்படும்; பிரிட்டிஷ் வியாபாரப் பொருள்கள் எங்குக் காணப்படினும் அழிக்கப்படும் என்ற கட்டளைகளைத் தாங்கி மிலான் (Milan Decree) ஆணைகளும் நெப்போலியனால் பிறப்பிக்கப்பட்டன.

தனக்கெதிராக ஆணைகளைப் பிறப்பித்திருந்த நெப்போலியனின் கொட்டத்தை ஒடுக்க 1807-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் 'கவுன்ஸிலின் கட்டளைகள்' (Orders in Council) என்ற எதிர் ஆணைகளைப் பிறப்பித்தது. அதன்படி ஃபிரான்சு நாட்டுக்கும், அதன் நட்பு நாடுகளுக்கும் எந் நாட்டு வியாபாரக் கப்பல்களும் போகக்

கூடாதெனவும் நடுநிலைமை நாட்டுக் கப்பல்கள் பிரிட்டிஷ் துறை முகங்களை வந்தடைந்து சோதிக்கப்பட்ட பின்னரே ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

அங்ஙனமாக, பிரிட்டனும் ஃபிரான்சும் எதிருக்கெதிராகப் பொருளாதார முற்றுகையிட்டுக்கொண்டன. ஆயின், தன்னிட மிருந்த கடற்படை வலிமையினால் கவுன்சிலின் ஆணைகளை நடை முறைக்குக் கொண்டுவரக்கூடிய ஆற்றல் இங்கிலாந்துக்கு இருந்தது. கண்டத் திட்டத்தைத் தீவிரமாக அமுலாக்க டென் மார்க்நாட்டை நெப்போலியன் கைப்பற்றும்போது அந் நாட்டின் கப்பற்படை ஃபிரான்சுக்குச் சொந்தமாகிவிடக் கூடாதென எண்ணிய இங்கிலாந்து 1807-ல் தன் கடற்படைகளை அட்மிரல் கேம்பியர் (Campier) தலைமையில் கோபன்ஹேகன் நகருக்கு அனுப்பி டேனிஷ் கப்பல்களைத் தாக்கி நிர்மூலமாக்கியது. அத் தாக்குதலின் விளைவாக ஐரோப்பிய நாடுகளிடையே இங்கி லாந்தின்மீது வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. நில ஆதிக்கம் பெற்றிருந்த ஃபிரான்சுக்கும் கடலாதிக்கம் பெற்றிருந்த இங்கி லாந்துக்கும் இடையே நடந்த முற்றுகையில் ஐரோப்பிய நாடுகள் சிக்கிக்கொண்டு அவதிப்பட்டன. முற்றுகையினால் பிரிட்டனின் வியாபாரமும் மந்தப்பட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள் தலை தூக்கின என்றாலும் ஃபிரான்ஸ் உட்பட மற்ற ஐரோப்பிய நாடுகளே அக் கண்டத் திட்டத்தினால் அதிகமாக அவதிப்பட்டன. தொப்பிகள், கோட்டுகள், செருப்புகள் போன்றவைகளுக்கு இங்கிலாந்தின் இறக்குமதியை நம்பியிருந்த நெப்போலியனின் ஃபிரான்ஸ் நாடே பற்றாக்குறையினால் திண்டாடியதென்றால் மற்ற நாடுகளின் நிலைமையை நாம் ஊகித்துக்கொள்ளலாம். பிரிட்டனிலிருந்து வரவழைக்கப்பட்டுவந்த காப்பி, சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்கள் கிடைக்காமல் மற்ற ஐரோப்பிய நாடுகள் அல்லல்பட்டன. டேனிஷ் தாக்குதலினால் ஐரோப்பிய நாடுகளிடையே இங்கிலாந்து பெற்றிருந்த வெறுப்பைவிடக் கண்டத் திட்டத்தை அமுலாக்கத் தீவிரம் காட்டிய நெப் போலியன்மீதே ஐரோப்பிய நாடுகளுக்கு வெறுப்பு அதிகமாக இருந்தன. ஆகவே கண்டத் திட்டக் கட்டுப்பாடுகளை மீறிச் சில நாடுகள் பிரிட்டனோடு வியாபாரம் செய்ய முனைந்தன. தம் ஆணைகளை மீறிய அந் நாடுகளை நெப்போலியன் தாக்க முற்பட்ட போது ஐரோப்பாவிலேயே அவருக்கெதிராக எதிர்ப்புத் தோன் றியது. அதன் முதல் கட்டமாகத் தீபகற்பப் போர் அமைந்தது.

தீபகற்பப் போர் (Peninsular War, 1808 - 1814)

கண்டத் திட்டக் கட்டுப்பாடுகளை மீறிய போர்ச்சுகல் நாட்டைத் தாக்க நெப்போலியனால் அனுப்பப்பட்ட படை

ஸ்பானிய மக்களின் அனுமதியின்றி அந்த நாட்டில் நுழைந்து கடந்து சென்றது. மன்னரின் கோழைத்தனமே அதற்குக் காரணமெனத் தெரிந்துகொண்ட ஸ்பானிய மக்கள் அவருக்கெதிராகக் கலகங்கள் செய்ய இளவரசரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். ஸ்பானிய மன்னரான நான்காம் சார்லசும் அவரின் மகனான இளவரசரும் நெப்போலியனை அணுகி உதவி கேட்டனர். போர்பன் குல ஆட்சியை ஸ்பெயினிலிருந்து ஒழிக்க அதுவே தக்க தருணமென நினைத்த நெப்போலியன், தந்தையையும் தனையனையும் பட்டத்திற்கு உகந்தவர்களல்லர் என விலக்கிவிட்டுத் தம் சகோதரரான ஜோசப் போனபார்டி என்பவரை ஸ்பெயின் மன்னராக அறிவித்துப் படை கொடுத்து மாட்ரீடு நகருக்கு அனுப்பிவைத்தார். தேசிய உணர்வுகொண்ட ஸ்பானிய மக்கள் அந்நிய அரசரை எதிர்த்து ஆயுதந் தாங்கிக் கலகம் செய்ய, கடல் வழியாக அவர்களுக்கு இங்கிலாந்து உதவி செய்ய முன் வந்தது. ஜோசப் போனபார்ட்டியை எதிர்த்து ஸ்பெயினின் பல பாகங்களில் கலகங்கள் தோன்றின. கொரில்லா முறையைப் பின்பற்றிய ஸ்பானியர்கள் ஃபிரெஞ்சுத் துருப்புகளைப் பல தொல்லைகளுக்குள்ளாக்கினர். மலைப்பிரதேசமான ஸ்பெயினில் மறைந்திருந்து எதிரிகள் தாக்கி வந்ததால் அவர்களை வெல்வது ஃபிரெஞ்சுத் துருப்புகளுக்குக் கடினமான காரியமாக இருந்தது. தம் பேரரசின் மற்றப் பகுதிகளில் கவனம் செலுத்தவேண்டியிருந்ததால் ஸ்பானியப் போரைத் தம் தளபதிகளிடம் நெப்போலியன் ஒப்படைத்தார்.

விடுதலை உணர்ச்சி கொண்டு ஸ்பானியர்கள் போராடி வந்த போது நெப்போலியனின் கொட்டத்தை ஒடுக்க அதுவே தக்க தருணமென இங்கிலாந்து போரிலே நுழைந்தது. சர் ஆர்தர் வெல்லெஸ்லி (Sir Arther Wellesley) என்ற ஆங்கிலத் தளகர்த்தரின் தலைமையில் 30,000 வீரர்கள் போர்ச்சுகலுக்கு அனுப்பப்பட்டனர். அங்கிருந்த ஃபிரெஞ்சுப் படைகள் விமிரோ (Vimerio) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டன. மேற்கொண்டு வெல்லெஸ்லி செயல்படுவதற்குமுன் இங்கிலாந்துக்கு அவர் அழைத்துக்கொள்ளப்பட்டு, சர் ஜான் மூர் (Sir John Moore) என்பவர் தலைமைத் தளபதியாக அனுப்பப்பட்டார். சின்ட்ரா ஒப்பந்தம் (Convention of Cintra, 1808) என்ற உடன்பாட்டை மூர் ஃபிரெஞ்சுக்காரர்களுடன் செய்துகொண்டு கப்பல்மூலமாக அவர்கள் போர்ச்சுகலை விட்டு வெளியேறுவதற்குச் சம்மதித்தார்.

போர்ச்சுகலில் தம் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வியால் ஸ்பானிய எதிர்ப்பு கடுமையாகிவர நெப்போலியன் தாமே

நேரில் 2,50,000 வீரர்களுடன் ஸ்பெயினுக்குள் நுழைந்து தலை நகரான மாட்ரீட்டைக் கைப்பற்றினர். அடுத்து போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனை மீண்டும் தம் வசமாக்கிக்கொள்ள வேண்டு மென நெப்போலியன் முயன்றும் வேறு ஐரோப்பியப் போர் முனைகளுக்கு அவர் உடனடியாகச் செல்லவேண்டியிருந்ததால் ஸ்பானியப் போரை நடத்தும் பொறுப்பை மார்ஷல் சூல்ட் (Soult) என்ற தம் தளபதியிடம் ஒப்படைத்து ஸ்பெயினை விட்டு அகன்றார்.

சூல்ட் தம் பெரும் படைகளுடன் ஸ்பெயினுக்குள் நுழைந் திருந்த மூரின் படைகளை 1809-ல் கருன்ன (Corunna) என்ற இடத்தில் தோற்கடித்தார். மூர் அச் சண்டையில் கொல்லப் பட்டிருந்ததால் ஆங்கிலப் படைகள் கப்பலில் ஏறிப் போர்ச்சு கலுக்குத் தப்பிவிட்டன. ஃபிரெஞ்சுக்காரர்களின் கை ஓங்கி யிருந்ததுபோன்று காணப்பட்ட அந் நிலையில் மீண்டும் வெல் லெஸ்லி தலைமைத் தளபதியாக அமர்த்தப்பட்டுப் போர்ச்சு கலுக்கு அனுப்பப்பட்டார். டாகஸ் நதிப் பள்ளத்தாக்கின் வழியாக 1809-ல் ஸ்பெயினுக்குள் வெலிங்டன் நுழைந்து டலெவெரா (Talevera) என்னுமிடத்தில் மார்ஷல் விக்டர் என்ற ஃபிரெஞ்சுத் தளகர்த்தரைத் தோற்கடித்து மீண்டும் போர்ச்சு கலுக்குத் திரும்பியிருந்தார்.

எப்படியும் பிரிட்டிஷ் படைகளைப் போர்ச்சுகலிலிருந்து விரட்டியடிக்க வேண்டுமென மார்ஷல் மஸேனா (Messena) என்ற தளபதியின்கீழ் ஒரு பெரும்படை போர்ச்சுகலில் நுழைந்தது. அதை ஏற்கெனவே எதிர்பார்த்திருந்த ஆர்தர் வெல்லெஸ்லி டோரெஸ் வெட்ராஸ் (Lines of Torres Vedras) என்ற அரண் வரிசைகளை லிஸ்பனுக்கருகே எழுப்பி வைத்திருந்தார். மஸேனா வின் ஃபிரெஞ்சுப் படைகளால் அந்த அரண் வரிசைகளை ஊடுருவி லிஸ்பனை அடைய முடியவில்லை. மேலும் மஸேனாவின் படைகளுக்கு உணவு எதுவும் கிடைக்கவொட்டாமல் செய்ய லிஸ்பனைச் சுற்றியிருந்த வளமுள்ள பகுதிகளை வெலிங்டன் அழித்துப் பொசுக்கியிருந்தார். அதனால் உணவின்றித் தவித்த ஃபிரெஞ்சுப் படைகள் 1811-ல் போர்ச்சுகலை விட்டு வெளி யேறின. மீண்டும் ஃபிரெஞ்சுக்காரர்கள் அந் நாட்டில் நுழையவே இல்லை. போர்ச்சுகலின் சுதந்தரம் ஆங்கிலேயர்களால் அங்கனம் மீட்கப்பட்டது. ஆனால், ஸ்பெயினில் போர் நீடித்துக் கொண்டிருந்தது.

அந் நிலையில் கண்டத்திட்டத்தை மீறிய குற்றத்திற்காக ரஷ்யாவின்மீது நெப்போலியன் படையெடுத்தார். 600,000

வீரர்களுடன் அந் நாட்டில் நுழைந்த நெப்போலியன் மாஸ்கோ நகரை அடைந்து ஆசியாவின் பேரரசர் என முடிசூட்டிக் கொண்டபோதும் அப் படையெடுப்பால் பலனெதுவும் அவருக்கு ஏற்படவில்லை. பொசுக்கல் முறையை ரஷ்யர்கள் பின்பற்றியிருந்ததால் படையினருக்கு வேண்டிய உணவு, இருப்பிடம், எதுவுமில்லாதுபோக நெப்போலியன் நாடு திரும்ப வேண்டியதாயிற்று. கடுமையான குளிர்காலம் அதற்குள் தொடங்கிவிடவே ஏராளமான ஃபிரெஞ்சு வீரர்கள் அதைத் தாங்கமுடியாது வழியிலேயே மாண்டனர். காஸ்க்குகர் (Cossaks) என்று அழைக்கப்பட்ட முரட்டு ரஷ்ய இனமக்கள் அடிக்கடி நெப்போலியன் படையினர்மீது திடீர்த் தாக்குதல்களை நடத்தி மேலும் சேதப்படுத்தினர். ஏராளமான ஆள் சேதங்களுடன் நெப்போலியன் இறுதியில் ஃபிரான்சை வந்தடைந்தார்.

நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு (1812) தோல்வியில் முடிந்திருக்க அது அவரின் எதிரிகளுக்குப் புதுத் தெம்பைக் கொடுத்ததால் அவருக்கெதிராக ஓர் எதிர்ப்பு அணியை உருவாக்கும் திட்டத்தை இங்கிலாந்து ஆலோசித்துவந்தது.

அதற்கிடையே தீபகற்பப் போரில் பல வெற்றிகளை வெலிங்டன் பிரபு பெற்றுவந்தார். நெப்போலியன் ரஷ்யப்படை யெடுப்பில் ஈடுபட்டிருந்தபோது வெலிங்டன் ஸ்பெயினுக்குள் நுழைந்திருந்தார். சீயூட்டாட் ரோட்ரிகோ (Cuidad Rodrigo), படஜாப் (Badajob) என்ற இரு முக்கிய ஸ்பானிய நகரங்களை மீட்டு மேலும் முன்னேறி சாலமன்கா (Salamanca) என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுப்படைகளைப் படுதோல்வி அடையச் செய்தார். 1813-ல் மன்னர் ஜோசப் போனபார்ட்டியின் படைகளையும், விட்டோரியா (Vittoria) என்னுமிடத்தில் தோற்கடித்து ஃபிரெஞ்சுப் படைகளை பிரென்னீஸ் (Pyrenees) மலைகளுக்கு அப்பால் துரத்தித் தென் ஃபிரான்சுக்குள் நுழையத் தயாராகக் காத்திருந்தபோதுதான் ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா போன்ற ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்தின் தலைமையிலேயே நான்காம் கூட்டணியை அமைத்தன.

நான்காம் கூட்டணி

இங்கிலாந்தின் வெளி விவகார அமைச்சராக இருந்த காஸ்ல்ரே (Castlereagh) என்பவரின் பெரு முயற்சியால் அமைக்கப்பட்டிருந்த நான்காம் கூட்டணி (Fourth Coalition, 1813) நெப்போலியனின் வீழ்ச்சிக்கு மிக முக்கியக் காரணமாக இருந்தது. அக் கூட்டணி நெப்போலியனுக்கு எதிராக ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தையே தொடங்கியது. நெப்போலியன் இடை

விடாது கடந்த பல ஆண்டுகளாகச் செய்துவந்த போரினால் திறமை கொண்ட படைவீரர்களுக்கு ஃபிரான்சில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. தென் ஃபிரான்சில் நுழைய வெல்லெஸ்லியின் ஆங்கிலப் படைகள் காத்திருந்தன. ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா போன்ற நாடுகளின் படைகள் ஃபிரான்சு நாட்டைச் சூழ்ந்து நெருக்கிவந்தன. அவசரமாகக் கூட்டப் பட்ட புதுப்படையினரைக் கொண்டு நெப்போலியன் கூட்டணி நாடுகளின் படைகளை லட்ஸன் (Lutzen), பௌட்ஸன் (Boutzen), ட்ரெஸ்டன் (Dresdon) போன்ற இடங்களில் வென்றபோதிலும் லிப்ஸிக் (Leipzig, *1813*) சண்டையில் நெப்போலியன் தோற் கடிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா படைகள் ஃபிரான்சுக்குள் புகுந்தன. *1814*-ல் வெலிங்டன் தலைமையிலிருந்த ஆங்கிலப் படைகளும், ஃபிரான்சில் நுழைந்து சான் சபாஸ்டியன் (San Sebastian), ஆர்த்தெஸ் (Orthez), டூலோஸ் (Toulouse) போன்ற இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு பாரிஸ்நகரை நோக்கி முன்னேறின. எதிரிப்படைகளால் சூழ்ந்துகொள்ளப்பட்ட நெப்போலியன் வேறு வழியின்றி முடிதுறக்கச் சம்மதித்தார்.

ஐரோப்பிய வரலாற்றைக் கடந்த சில ஆண்டுகளில் தனி மனிதனின் சரிதையாக மாற்றியிருந்த நெப்போலியன் நான்காம் கூட்டணியினால் முற்றிலும் முரியடிக்கப்பட்டு மத்திய தரைக் கடலில் இருந்த எல்பா (Elba) என்ற தீவுக்குச் சிறைக் கைதியாக அனுப்பப்பட்டார்.

வெற்றி பெற்ற நாடுகள் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் கூடி ஐரோப்பாவில் ஒரு நிரந்தர அரசியல் ஏற்பாட்டை நிறுவக் கலந்துபேசி அதற்கான திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்த முற்பட்ட நேரத்தில் எல்பா தீவிலிருந்து தப்பிவிட்ட நெப்போலியன் ஃபிரான்ஸ் நாட்டை வந்தடைந்தார். ஃபிரெஞ்சுப்படையினரும் அவருடன் சேர்ந்துகொள்ளவே மீண்டும் போர் தவிர்க்க முடியாததாகியது.

நெப்போலியனை மீண்டும் எதிர்ப்பதற்காக ஐரோப்பிய நாடுகள் கூட்டுச் சேர்ந்தன. ஆனால், உடனடியாக வீரர்களைத் திரட்ட முடியாத நிலையில் ஆஸ்திரியாவும், ரஷ்யாவும் இருக்க, பிரிட்டிஷ் படைகளும் பிரஷ்யாவின் சேனையுமே போருக்குத் தயாராக இருந்தன. பிரிட்டிஷ், பிரஷ்யாப் படைகள் ஒன்று சேர்ந்து தம்மைத் தாக்குவதற்கு முன்பாக அவர்களைத் தோற்கடிக்க நெப்போலியன் நினைத்து ஒரு பெரும்படையுடன் புறப்பட்டுச்சென்று புளூச்சர் (Blucher) தலைமையில் வந்த பிரஷ்யப்

படைகளை லிக்னி (Ligny) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அவரை மேலும் ஒடுக்கி விரட்டியடிக்க கிரௌச்சி (Crouchie) என்ற தம் நளகர்த்தரைப் படையுடன் விட்டுவிட்டு வெலிங்டனின் ஆங்கிலப் படைகளை எதிர்க்க நெப்போலியன் பெல்ஜியத்தை நோக்கிப் புறப்பட்டார். அங்குள்ள வாடர்லு (Waterloo) என்னுமிடத்தில் இரு பெருவீரர்களும் முதன் முதலில் நேருக்கு நேராகச் சந்தித்தனர். வீராவேசமாகப் போரிட்ட ஃபிரெஞ்சுப் படைகள் ஆங்கிலப்படைகளை நெருக்கிக்கொண்டுவந்த நேரத்தில் கிரௌச்சியை ஏமாற்றிவிட்டுத் தம் படைகளுடன் புளூச்சர் போர்க்களத்திற்கு வந்துசேர்ந்தார். ஆங்கில - பிரஷ்யப்படைகள் சேர்ந்து தாக்கக் கடுமையான சண்டையினால் ஏற்கெனவே களைத்திருந்த ஃபிரெஞ்சுப் படைகள் முறியடிக்கப்பட்டன.

போர்க்களத்திலிருந்து தப்பிவிட்ட நெப்போலியன் 18-6-1815-ல் 'பெலர்போன் (Bellerbone) என்ற ஆங்கிலக் கப்பலின் தலைமை அதிகாரியான கேப்டன் மெயிட்லண்டு (Ct. Maitland) என்பவரிடம் சரணடைந்தார். எந்த ஒரு நாட்டைத் தம் பரம விரோதியாகக் கருதினரோ அந் நாடான பிரிட்டனுக்கே கப்பலில் நெப்போலியன் கொண்டுபோகப்பட்டார். கரை இறங்க அனுமதிக்கப்படாத அவர், தாம் அடிமைப்படுத்தமுயன்ற இங்கிலாந்தைக் கப்பலிலிருந்தபடியே நோக்கினர். அங்கிருந்து அவர் கைதியாகச் செயின்ட் ஹெலினு (St. Helena) என்ற தென் அட்லாண்டிக் தீவுக்கு அனுப்பப்பட, 1821-ல் நெப்போலியன் காலமானர். அங்ஙனமாகக் கட்டாயப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஃபிரெஞ்சுப் புரட்சிப்போர்களில் 1793-ல் இறங்கியிருந்த இங்கிலாந்து இறுதிவரை சளைக்காமல் போரிட்டுத் தன்னையும் ஐரோப்பிய நாடுகளையும் நெப்போலியனை முறியடித்த தன் மூலம் 1815-ல் காப்பாற்றிக்கொண்டது.

(இ) இளைய பிட் (Pitt The Younger) (1759 - 1806)

தற்கால காபினெட் முறையின் தந்தை யெனவும், தடையிலா வாணிகக் கொள்கையின் அனுதாபியாகவும், அயர்லாந்தின் ஐக்கியத்திற்கு அடிகோலியவராகவும், பிரிட்டிஷ் பேரரசின் கண்காணிப்பாளராகவும், ஃபிரெஞ்சுப் புரட்சிப்போர்களில் எதிர்ப்பு அணிகளை அமைத்து இறுதிவரை போராடியவருமான இளைய பிட் என்ற ஆங்கிலப் பெருமகனின் வரலாறு சரித்திர ஏடுகளிலே பாராட்டப்படுவதற்குரியதாக இருக்கிறது.

ஆரம்ப அரசியல் வாழ்க்கை

ஏழாண்டுப்போர்ப் புகழ் 'மூத்த பிட்'டின் இரண்டாவது மகனுக 1759-ல் பிறந்திருந்த இளைய பிட் சிறுவயதிலிருந்தே அரசியல் வாழ்க்கைக்குத் தம் தந்தையால் ஆயத்தப்படுத்தப் பட்டார். ஆழ்ந்த கல்வியறிவைப் பெற்றிருந்த இளைய பிட் இளவயதிலேயே நாட்டுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண் டார். 1780-ல் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்த்தெடுக்கப் பட்ட பிட் அப்போது பதவியிலிருந்த நார்த் பிரபுவின் (Lord North) அமைச்சரவையினுல் செய்யப்பட்ட தவறுகளைத் தம் வாதத்திறமையினுல் சுட்டிக்காட்டி, புகழ் பெற்றார். பொருளா தாரத் துறையில் அவருக்கிருந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டி அப்போது மந்திரிசபை அமைத்திருத்த ஷெல் போர்ன் (Shelbourne) 1782-ல் பிட்டுக்குக் கருவூலத் தலைவர் பதவியை அளித்தார். ஆயின் அதிக நாள்கள் பிட் அப் பதவி யில் நீடிக்கவில்லை. ஷெல்போர்னின் அமைச்சரவை கவிழ்க்கப் பட்டு நார்த், ஃபாக்ஸ் (Fox) என்பவர்களின் கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டதால் பிட் எதிர்க்கட்சியில் இருக்கவேண்டியவ ரானர். இருப்பினும் விரைவில் பதவி அவரைத் தேடிவந்தது.

பிட் பிரதமராதல்

ஃபாக்ஸின் இந்திய மசோதா (Fox's India Bill) பிரபுக்கள் சபையில் தோல்வியுற்றதை அடுத்து நார்த்-ஃபாக்ஸ் கூட்டு மந்திரி சபை அரசர் மூன்றும் ஜார்ஜால் கலைக்கப்பட்டது. 24 வயது நிரம்பப்பெற்றிருந்த இளைய பிட், மந்திரி சபை அமைக்கும்படி டிசம்பர் 1783-ல் அரசரால் கேட்டுக்கொள்ளப்பட்டார். பள்ளிச் சிறுவன் ஒருவனிடத்தே ஆட்சியின் பொறுப்பு கொடுக்கப் பட்டதாக பிட்டின் பதவியேற்றத்தை அவரின் அரசியல் விரோதிகள் எள்ளி நகையாடினர்கள். ஆயின், பிட் எல்லா அரசியல் வாதிகளுக்கும் ஆசானுக விளங்கித் தம் திறமையை எடுத்துக் காட்டினர். ஒரு தற்காலிக ஏற்பாடாகவே பிட்டுக்குப் பதவி கொடுக்கப்பட்டதாகவும் சிலர் நினைத்தனர். ஆயின், முதல் மந்திரியாக அடுத்த 17 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பணியாற்றித் தம் அரசியல் எதிரிகளின் கேலிப்பேச்சை, பிட் பொய்யாக்கிக் காட்டினர்.

பிட்டின் அரசியல் செல்வாக்கு

டோரிக் கட்சியைச் சேர்ந்தவராக பிட் இருந்தபோதும் முழுக்க முழுக்க அக் கட்சியின் கொள்கைகளை அவர் ஒப்புக் கொண்டவரல்லர். சில சந்தர்ப்பங்களில் அவர்களைக்காட்டிலும்

முற்போக்கு வாதியாகவும் பிட் திகழ்ந்தார். தாம் பதவியேற்ற அடுத்த ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தம் ஆதரவாளர்கள் காமன்ஸ் சபைக்குப் பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்படவே பிட் அவர்களுக்குத் தனித்தலைவராக விளங்கினர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையோருடைய ஆதரவு பெற்றிருந்த பிட் அரசரின் நம்பிக்கைக்கும் உகந்தவராக இருக்கவே ஏறக்குறைய தற்காலப் பிரதமரைப் போன்ற அதிகாரத்துடன் ஆட்சி செய்தார். அரசர் மூன்றும் ஜார்ஜ் அடிக்கடி சித்தப்பிரமை நோயினால் பாதிக்கப்பட ஆட்சி நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் பிட் பரிபாலிக்கவேண்டிய அவசியம் எழ, அதைத் தம் திறமையினால் நன்கு பயன்படுத்தி, பல அரசியல் வழக்குகளுக்கு அவர் வித்திட்டார்.

பிட்டின் சீர்திருத்த முயற்சிகள்

பிட் ஒரு சிறந்த அரசியல் நிர்வாகியாக விளங்கினர் என்பதற்கு அவரின் பதவிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பல இலாக்காக்களும், தனிப்பட்ட விசாரணை ஆணையாளர் குழுக்களும் எடுத்துக்காட்டாக விளங்கின. உதாரணமாக அவரால் ஏற்படுத்தப்பட்ட விவசாயக் குழு அத் துறையின் நிர்வாகத்தைச் சீராகச் செயல்படுத்தியது. கட்சிவேறுபாடின்றித் திறமையை மதித்து அனுபவமும் ஆற்றலும் கொண்டவர்களையே பிட் முக்கியப் பொறுப்புகளில் அமர்த்தினர்.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் காப்பதில் தீவிரம் காட்டிய பிட் அதைச் சீர்திருத்தவும் எண்ணினர். 1785-ல் அவரால் கொண்டுவரப்பட்ட மசோதாவின்படி நசித்துப்போன 36 பரோக்களின் வாக்குரிமைகளை ரத்து செய்துவிட வேண்டுமென்னும் சில அம்சங்கள் வற்புறுத்தப்பட்டிருக்க அவரது சீர்திருத்த எண்ணத்தைப் புரிந்துகொள்ள முடியாத பிட்டின் ஆதரவாளர்களே அம் மசோதாவை எதிர்த்தனர். எனவே, அது தள்ளப்பட்டது. அம் மசோதாவுக்குத் தம் ஆதரவாளர்கள் கட்டாயமாக ஒப்புதல் தரவேண்டுமென பிட் கட்சிக் கட்டுப்பாட்டை வலியுறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் நடைமுறையிலிருந்த அரசியல் கோட்பாடுகளை மதித்து நடந்தாரென்பதற்கு 1788-ல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மன்னர் மூன்றும் ஜார்ஜ் திடீரெனச் சித்தப்பிரமைக்கு இலக்கானதால் அவருக்குப் பதிலாக வேல்ஸ் இளவரசரே காப்பாளராக (Regent) வரவேண்டுமென்பதில் அவருக்குச்

சந்தேகமில்லை. ஆனால், அவர் அங்ஙனம் நியமிக்கப்படவேண்டு மென்பதில் பிட்டுக்கும், ஃபாக்ஸ், பர்க் (Fox, Burke) போன்ற விக் கட்சியினருக்கும் கருத்துவேறுபாடு இருந்தது. மன்னர், பிரபுக்கள் சபை, காமன்ஸ் சபையார் சேர்ந்த பாராளுமன்றமே காப்பாளரை நியமிக்கத் தகுதியுடையதென பிட் வாதாடினார். அதுதான் வழக்கத்திலிருந்த மரபு. ஆயின், விக் கட்சியின் தலைவர்கள், காப்பாளர் பதவியை வேல்ஸ் இளவரசர் எவருடைய அனுமதியுமின்றித் தம் பிறப்புரிமையினால் பெறலாமென வாதித் தார்கள். அந்த விசித்திரவாதத்தில் சுயநலம் இருந்தது. எப்படி யெனில் வேல்ஸ் இளவரசருக்குக் காப்பாளர் பதவி எட்டியதும் அவர் பிட்டைப் பதவியிலிருந்து விலக்கி, ஃபாக்ஸைப் பிரதம ராக்குவாரென விக் கட்சியினர் நினைத்தனர். முற்போக்குக் கொள்கையைக் கொண்டவர்களெனக் கருதப்பட்ட விக்குகள் இளவரசரின் பிறப்புரிமையைச் சுட்டிக்காட்டி மன்னர்களின் தெய்வீக உரிமைக் கொள்கையை ஆதரித்தபோது, பிற்போக்குக் கட்சியினராகக் கருதப்பட்ட டோரிகளின் தலைவரான பிட் அக் கொள்கையை எதிர்த்ததோடல்லாமல் பாராளுமன்றத்தின் அடிப்படை அதிகாரத்தைக் காத்து அரசியல் மரபை நிலை நிறுத்த உறுதி காட்டினார். முற்போக்கு வாதிகள் பிற்போக்கு வாதிகளாகவும் பிற்போக்கு வாதிகள் முற்போக்கு வாதிக ளாகவும் இருந்த அந்த விசித்திரச் சூழ்நிலை, ஜார்ஜ் மன்னர் சித்தத்தெளிவு பெற்றதும் தானாகவே மறைந்தது.

பிட்டின் பொருளாதாரக் கொள்கை

நாட்டில் நிலவிய பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளிப் பதில் பிட் தமது தனித்திறமையைக் காட்டினார். இங்கிலாந்திற் குற்ற நாட்டுக் கடனைத் (£ 250,000,000) தீர்க்க ஒரு கடன் அழிவு நிதியை (Sinking fund) ஏற்படுத்தி ஆண்டு ஒன்றுக்கு ஒரு மில்லியன் பவுன்களை ஒதுக்கினார். அத் தொகை இருப்பு நிதியாக வைக்கப்பட்டு வட்டிக்கு விடப்பட்டது. இருப்பும், வட்டியும் சேர்ந்த மொத்தத் தொகையைக் கொண்டு நாட்டுக் கடன் முழுவதையும் அடைக்க பிட் ஏற்பாடு செய்தார். மெர்க் கன்டிலிஸம் (Mercantalism) என்ற பத்தாம் பசலி வியாபாரக் கொள்கையை பிட் விரும்பவில்லை. நாடுகளிடையே தடை யில்லா வாணிகம் (Free Trade) நடைபெற வேண்டுமென்று விரும்பி வியாபாரத்தைக் கட்டுப்படுத்திய சுங்க வரிகளை ஒழிக்க பிட் ஏற்பாடு செய்தார். ஆனால், நாட்டின் வருவாய் குறையு மென எதிர்ப்புகள் கிளம்பியபோது அந்த நஷ்டத்தைச் சரிக்கட்ட சில நேர்முகவரிகளை விதித்தார். தலைத்தொப்பிகள், பவுடர்

ஆகியவைமீது அவ் வரிகள் விதிக்கப்பட்டன. பிட், வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து வெளியிட்டார். நாட்டின் வியாபார வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்திய பிட் 1786-ல் ஃபிரான்சுடன் வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். பல ஆண்டுகளாக இங்கிலாந்துடன் போர் புரிந்து ஒய்ந்திருந்த ஃபிரான்சு நாட்டை எதிரி நாடாகக் கருதிய பலர் பிட்டின் செயல்களைக் கண்டித்தபோது எந்த நாட்டையும் நிரந்தர எதிரி யாகக் கருதுவது பொருந்தாக் கொள்கையென வாதித்து மடக் கினர். அந்த ஒப்பந்தத்தின்படி ஃபிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வைன் (wine), ஆலிவ் எண்ணெய் (olive oil) முதலிய பொருள்கள்மீது சுங்கவரி குறைக்கப்பட அதே போன்று இங்கிலாந்திலிருந்து ஃபிரான்சுக்கு ஏற்றுமதியான இரும்புச் சாமான்கள், பருத்தியாடைகள்மீது விதிக்கப்பட்ட சுங்கவரிகளும் குறைக்கப்பட்டன. இரு நாடுகளுக்குமிடையே வியாபாரம் தழைப்பதற்கு பிட் அங்ஙனம் அடிகோலினார். 1794-ல் ஏற்பட்ட ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்களால் அந்த உடன் பாட்டின் நல்ல விளைவுகள் பின்னுல் தடைப்பட்டுப் போயின.

பிட்டின் பேரரசுக் கொள்கை

பேரரசின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் பிட் அதிக அக்கறை காட்டினார். ஆங்கிலேயர்களின் குடியேற்ற நாடான கானடாவில் வாழ்ந்துவந்த ஆங்கிலேயர்களும் ஃபிரெஞ்சுக்காரர்களும் சமயம், மொழி, பழக்க வழக்கங்களில் வேறுபட்டவராக இருந்ததால் அடிக்கடி தங்களுக்குள் பூசலிட்டுக்கொண்டனர். கானடாவில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட பிட் 1791-ல் கானடாச் சட்டத்தைக் (Canada Act) கொண்டுவந்தார். கானடா இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் அதிகமாக வாழ்ந்த பகுதி ஒனேடோரியா (Onotoria) என்னும் ஃபிரெஞ் சுக்காரர்கள் பெரும்பான்மையராக இருந்த மற்றொரு பகுதி கியூபெக் (Quebeck) எனவும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி ஆளுநர்கள், தனித்தனிச் சட்டசபைகள் அச் சட்டத் தின்படி கொடுக்கப்பட்டுக் கானடியர்களின் சச்சரவுகள் தீர்க்கப் பட்டன. ஒழுங்குமுறைச்சட்டத்தினுல் (Regulating Act) இந்தி யாவில் ஆட்சி புரிந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வா கத்தில் குழப்பங்கள் உண்டாகியிருந்தன. கவர்னர் ஜெனரலுக்கு எந்த விசேட அதிகாரமும் இல்லாததால் திறமையான ஆட்சியை அமைக்க முடியவில்லை. கவுன்சில் குழுவுக்குக் கட்டுப்பட்ட வராகக் கவர்னர் ஜெனரல் இருக்க அவரால் எந்தக் காரியத் தையும் சீராகச் செய்யமுடியவில்லை. அதன் விளைவாக நிர்வா

கத்திலே அதிகமான ஒழுங்கீனங்கள் காணப்பட்டன. அக் குறை களைப் போக்க 1784-ல் பிட் இந்தியச் சட்டத்தை (Pitt's India Act) நிறைவேற்றினார்: அச் சட்டத்தின்கீழ், கவர்னர் ஜெனர லுக்கு விசேட அதிகாரம் கொடுக்கப்பட்டது; கவுன்சில் வெறும் ஆலோசனைக் குழுவாக மாற்றப்பட்டது; கிழக்கிந்தியக் கம்பெனி யின் ஆட்சிப் பொறுப்பைக் கண்காணிக்க மேற்பார்வைக் குழு (Board of Control) இலண்டனில் அமைக்கப்பட்டு, கம்பெனியின் ஆட்சி பாராளுமன்றத்தின் நேர் கவனிப்புக்குக் கொண்டுவரப் பட்டது.

இங்கிலாந்தின் தீராப் பிரச்சினையாக இருந்த அயர்லாந்தின் சிக்கலையும் பிட் தீர்க்க எண்ணி 1801-ல் ஐரிஷ் ஐக்கியச் சட்டத்தை (Irish Union Act) கொண்டுவந்தார். ஒரே அரசு, பாராளுமன்றம், சட்டம், கொடியே இங்கிலாந்துக்கும், அயர் லாந்துக்கும் இருக்கவேண்டுமென அச் சட்டம் கூறியது. ஐரிஷ் கத்தோலிக்கர்மீது விதிக்கப்பட்டிருந்த தடைச் சட்டங்களை நீக்க வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. பலத்த எதிர்ப்புகளுக் கிடையே நிறைவேற்றப்பட்ட அச் சட்டத்தை மன்னர் ஜார்ஜ் பரவலாக ஒப்புக்கொண்டபோதிலும் கத்தோலிக்கர்களுக்குக் கொடுக்க இருந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் பதவியில் தொடர்ந்திருக்க விருப்பமின்றி பிட் பதவியை 1801ஆம் ஆண்டில் துறந்தபோதும் மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் பதவிக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

பிட்டின் வெளிநாட்டுக்கொள்கை

அமைதியைப் பெரிதும் விரும்பிய பிட் மற்ற நாடுகளுடன் சமரசமாக இருக்கவே எண்ணினார். இங்கிலாந்தின் விரோதி நாடாகப் பலரால் கருதப்பட்ட ஃபிரான்சுடன் 1784-ல் பிட் செய்துகொண்ட வர்த்தக உடன்பாடு அதற்கு ஓர் எடுத்துக் காட்டு. இருப்பினும் தம் நாட்டின் நலம் பாதிக்கப்பட்டபோது கொள்கையில் கண்டிப்புக் காட்ட பிட் தயங்கவில்லை. 1789-ல் அமெரிக்காவிலிருந்த ஸ்பானியர்கள் பசிபிக் கடலோரமாக கலிபோர்னியாவரையில் குறியேறிப் பின் வான்கூவர் (Vancouver) துறைமுகத்திலிருந்து நுட்கா சவுண்ட் (Nootka Sound) என்னுமிடத்தை அடைந்து அங்கு ஏற்கெனவே குடியேறியிருந்த ஆங்கிலேயர்களை விரட்டினார்கள். ஆங்கிலேயர்களின் குடியேற்ற உரிமைகளைப் பாதுகாக்கக் கடமைப்பட்ட பிட் அவ்விடத்தில் முதன் முதல் குடியேறினது தம் நாட்டு மக்களாதலால் அது அவர்களுக்கே உரிமையானது என்று கண்டிப்பாகக் கூறி ஸ்பானி

யர்களைப் பின்வாங்கச் செய்திருந்தார். அதுவே பிற்காலத்தில் பிரிட்டிஷ் கொலம்பியா (British Columbia) என உருவானது.

இரண்டாம் காதரின் அரசியார் காலத்தில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை அண்டை நாடுகளில் பரப்ப முயன்றபோது அதனால் விளையக்கூடிய அபாயத்தை பிட் உணர்ந்திருந்தார். ஸ்வீடன் நாட்டில் ரஷ்யா தன் செல்வாக்கை நிலைநிறுத்த முயன்றபோது, அதைத் தடுக்கும் வகையில் பிரஷ்யா, ஹாலந்து போன்ற நாடுகளுடன் இங்கிலாந்தைச் சேர்த்து ஒரு முக்கூட்டுறவை (Triple Alliance) பிட் அமைத்துக் காதரின் அரசியாரின் திட்டத்தை எதிர்த்தார். 1791-ல் ரஷ்ய அரசியார் துருக்கியைச் சேர்ந்த ஆக்ஸ்கோவ் (Oczakov) என்னுமிடத்தைக் கைப்பற்றிய போதும், அதைக் கண்டித்து பிட் ஓர் எச்சரிக்கையை விடுத்திருந்தார். ஆயின், பாராளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காமல் போக, எச்சரிக்கையைத் தொடர்ந்து துருக்கிக்கு ஆதரவாக பிட் படை எதுவும் அனுப்ப முடியவில்லை. அதே போன்று, ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா போன்ற நாடுகள் போலந்து நாட்டைப் பிடித்து, இரண்டாவது, மூன்றாவது பங்கீட்டு உடன் படிக்கையினால் தமக்குள் பங்கீடு செய்துகொண்டபோது, பிட் அந்த அநியாயச் செயல்களைக் கண்டிக்கத் தவறவில்லை. ஆனால், அப்போது தொடங்கியிருந்த ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர், அவரை அது விஷயத்தில் மேற்கொண்டு எதையும் செய்ய விடாமல் தடுத்தது. 1793ஆம் ஆண்டிலிருந்து தாம் இறக்கும் வரையில் ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்களில் பிட் கவனம் செலுத்த வேண்டியவராக இருந்தார். தம் தந்தை மூத்த பிட்டைப் போன்று போர்த் திறமையை இவர் பெற்றிருக்கா விட்டாலும், அப் போர்களை நடத்தும் பொறுப்பு அவரைச் சார்ந்ததாகவே இருந்தது. அதன் விவரத்தை நாம் ஏற்கெனவே 'ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்' என்ற தலைப்பில் கண்டோம்.

அமைதியை விரும்பி, ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடாமல் இருக்க நினைத்த பிட், ஒரு வற்புறுத்தப்பட்ட சூழ் நிலையிலே ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்களில் தம் நாட்டை ஈடுபடுத்தினார். ஐரோப்பிய நாடுகளைக் கூட்டு சேர்த்து ஃபிரான்சை எதிர்க்கத் திட்டமிட்ட பிட், அதற்கேற்ப முதல் கூட்டணியை 1793-லும், இரண்டாம் கூட்டணியை 1798-லும் அமைத்திருந்தார். தரைச்சண்டைகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதுவும் அக் காலங்களில் கிடைக்கவில்லை யெனினும், பல கடல் வெற்றிகளை இங்கிலாந்து பெற்றிருந்ததை நாம் முன்னரே பார்த்தோம்.

அயர்லாந்துப் பிரச்சினையில் அரசருடன் கருத்து வேற்றுமை கொண்டு 1801-ல் பிட் இராஜினாமாச் செய்திருந்தும், 1804-ல் அவரையே மீண்டும் அரசர் அழைத்து மந்திரி சபை அமைக்கச் சொல்லியிருந்தது அவரின் போர்த் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு. நெப்போலியனுக்கு எதிராகத் தம் வழக்கப்படி பிட் மூன்றும் கூட்டணியை ஏற்படுத்தினர். அக் கூட்டுறவைச் சேர்ந் திருந்த ஆஸ்திரியாவுக்கும், ரஷ்யாவுக்கும் போருக்கான செலவுத் தொகை தரவும் பிட் ஒப்புக்கொண்டு, நெப்போலியனின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்குப் பதிலடி கொடுக்க நினைத்தார்.

ஆனால், உடல்நலக் குறைவால் ஏற்கெனவே பாதிக்கப்பட் டிருந்த பிட், ஆஸ்டர்லிட்ஸ் சண்டையின் முடிவு கேட்டும், பிரஷ்யா நெப்போலியனோடு சேர்ந்துகொண்டது என்ற செய்தி கேட்டும் உள்ளச் சோர்வடைந்து 1806-ல் காலமானார்.

'என் தாய் நாடே! உன்னை இந் நிலையிலா விட்டுச் செல்வது' என்ற அவரின் கடைசி வார்த்தைகள் பிட்டின் நாட்டுப் பற்றை யும், எடுத்த காரியத்தை முடிக்காமல் போகிறோமே என்ற குறையையும் வெளிப்படுத்தின.

தாம் பதவியேற்றதிலிருந்து முதல் பத்து ஆண்டுகள் வரையில் இனைய பிட் செய்திருந்த அமைதிக்காலச் சேவைகள் எங்ஙனம் போற்றப்பட்டனவோ அதேபோன்று நெப்போலியப் போர்கள் காலத்தில் அவர் பிரிட்டனுக்கும், ஐரோப்பாவுக்கும் ஆற்றியிருந்த தொண்டும் பாராட்டுதற்குரியன. காலத்திற் கேற்றபடி மக்களின் நன்மையைக் கருதிச் சமூக சீர்திருத்தங்களை அவர் கொண்டுவர மறுத்திருப்பினும், உள்நாட்டு வெளிநாட்டுத் துறைகளில் அவர் நாட்டுக்கு ஆற்றியிருந்த பணி அக் குறையை மறைக்கச் செய்கிறது.

இங்கிலாந்தின் வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஒரு பெரு மனிதராக பிட் மதிக்கப்படுகிறார்.

16. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்து

(அ) 1814-க்குப் பின் இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை

மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் காலத்தில் பல அமைச்சரவைகள் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக, இளைய பிட் பதவி பெற்ற காலத்திலிருந்து டோரிக் கட்சியினரே தொடர்ந்து பதவியிலிருந்து வந்தனர். நெப்போலியனின் கொட்டத்தை ஒடுக்கி, ஐரோப்பியப்போர்களை முடித்த பெருமையும் அவர்களுடையதே. 1814-க்குப் பின் அடுத்த பதினைறு ஆண்டுகளுக்கு இங்கிலாந்து பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கை அக் கட்சியினரின் பொறுப்பாகவே இருந்தது.

காஸில்ரேயின் காலம் (1812 - 1822)

ரஷ்யப் படையெடுப்பில் படுதோல்வியடைந்து நெப்போலியன் ஃபிரான்சுக்குத் திரும்பியது அவரின் எதிரி நாடுகளுக்குப் புதுத் தெம்பைக் கொடுத்திருந்தது. அச் சமயத்தில் இங்கிலாந்தின் பிரதமராக லிவர்பூல் பிரபு இருக்க அவரின் வெளிநாட்டு விவகார அமைச்சராக காஸில்ரே (Castlereagh) பிரபு என்பவர் பதவியைப் பெற்றிருந்தார். நெப்போலியனைப் பணியவைக்க மற்ற நாடுகளின் ஒத்துழைப்புத் தேவையென உணர்ந்து, 1814-ல் அவர் ஐரோப்பாவுக்கு வருகை புரிந்தார். ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா போன்ற நாடுகளோடு சௌமான்ட் உடன் படிக்கையைச் (Treaty of Chaumont) செய்துகொண்டு இங்கிலாந்தின் தலைமையில் நான்காம் கூட்டுறவை அமைத்தார். அவ்வுடன்படிக்கையின்கீழ், நெப்போலியனை எதிர்த்து நடைபெற வேண்டிய போரில் மற்ற நாடுகளுக்கு உதவியாக ஆயுதங்களையும் ஆளுடொன்றுக்கு 5 மில்லியன் பவுன்களையும் யுத்தச் செலவுக்

காகத் தரவும் இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. ஒரு மாதத்திற் குள்ளாக நெப்போலியன் லிப்ஜிக் சண்டையில் தோற்கடிக்கப் பட்டு, எல்பா தீவுக்குக் கைதியாக அனுப்பப்பட்டிருந்தார்.

நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவில் ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி ஓர் ஐரோப்பிய உடன்பாட்டை ஏற்படுத்த முயன்றனர். இங்கிலாந் தின் சார்பிலே அம் மாநாட்டில் கலந்துகொண்ட அதன் வெளி விவகார அமைச்சரான காஸில்ரேபிரபு, தோல்வியடைந்திருந்த ஃபிரான்ஸ் நாட்டைக் கௌரவமாக நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினார். நாடுகளைத் தங்களுக்குள் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வதில் மற்றப் பேரரசுகள் அக்கறை காட்டியபோது 'வெற்றிப்பரிசுகளைப் பெறுவதற்கு நாம் இங்குக் கூடியிருக்க வில்லை; ஐரோப்பாவில் மீண்டும் அமைதியை நிலவச் செய்வதே நம் தலையாய கடமை' என்று காஸில்ரே நினைவூட்டினார். ஐரோப்பிய அமைதிக்கு ஆபத்து நேராவண்ணம் ஃபிரான்சின் பலம் குறைக்கப்பட வேண்டுமென்று காஸில்ரே உணர்ந்திருந்தும் பழிவாங்கும் உணர்ச்சியில் அந்த நாட்டைத் துன்புறுத்தக் கூடா தென வாதாடினார். கடந்த இருபது ஆண்டுகளாக ஐரோப்பிய அமைதி குலைக்கப்படுவதற்கு ஃபிரான்ஸ் தன் போர்களால் காரணமாக இருந்தும், வியன்னா உடன்பாட்டின்படி அந்த நாடு கௌரவமாக நடத்தப்பட்டதென்றால், அப் பெருமை காஸில்ரே யையே சாரும். ஃபிரான்சின் எல்லையானது 1791ஆம் ஆண்டு இருந்ததுபோன்றே வரையறுக்கப்பட்டது. போர் நஷ்டஈட்டுப் பணம் ஏதும் ஃபிரான்சின்மீது விதிக்கப்படவில்லை. அதன் குடி யேற்ற நாடுகள் அனைத்தும் அதனிடமே ஒப்படைக்கப்பட்டன. வாடர்லூ சண்டை (1815)க்குப் பின்னரும் ஃபிரான்சு நாடு போர்க் குற்றவாளியாகக் கருதப்படவில்லை. கடுமையான நிபந் தனைகளை ஃபிரான்சின்மீது விதித்தால், அதிலிருந்து மீறுவதற்குப் பிற்காலத்தில் அந்த நாடு முயன்று போரை மீண்டும் தொடங்கி ஐரோப்பிய அமைதிக்குப் பங்கம் ஏற்படுமென நினைத்தே பிரிட்டன் அதைத் தாராள புத்தியுடன் நடத்த விரும்பியது. போரின் நஷ்டஈடாக ஒரு சிறிய தொகையே விதிக்கப்பட்டது. சுருக்கமாக, தோல்வியடைந்த ஃபிரான்ஸ் வெற்றிகொண்ட நாடுகளால் பெருந்தன்மையாக நடத்தப்பட்டதென்றால், அதற்கு இங்கிலாந்தே முக்கியப் பொறுப்பு. நெப்போலியனை முறியடித்த நேரத்திலிருந்து வியன்னா காங்கிரஸ் கலைந்தவரை, மற்ற ஐரோப் பிய நாடுகளோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த இங்கி லாந்து மேற்கொண்டு அந்த உறவைப் பலப்படுத்திக்கொள்ளவே விரும்பியது. ஐரோப்பிய அமைதியைக் காக்கவும், தங்களுக்குள்

பரஸ்பர உதவியைச் செய்துகொள்வதற்கும் ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா போன்ற நாடுகளோடு ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தை முன்னிட்டு, ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் (Concert of Europe) இங்கிலாந்து சேர்ந்தது. அடிக்கடி தங்களின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளச்செய்து, மாநாடுகளைக் கூட்டி, பொதுப் பிரச்சினைகளைக் கூடி விவாதித்துத் தீர்வுக் காண வேண்டுமென்று அந்த ஏற்பாடு நான்கு நாடுகளைக் கட்டுப்படுத்தியது. அவ்வப்பொழுது எழும் ஐரோப்பிய சிக்கல்களைத் தீர்ப்பதற்காகக் கூட்டப்பெறும் மாநாட்டில் கலந்துகொண்டு தேவையான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இங்கிலாந்து, ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா ஆகியவைகள் நால்வர் உடன்பாட்டை (Quadruple Alliance) ஏற்படுத்திக்கொண்டன. ஆனால், ஐரோப்பிய அமைதியின்மைக்கு மக்கள் புரட்சிகளே காரணமென நம்பி, அவற்றை ஆரம்பத்திலேயே கிள்ளிஎறிந்து முடியாட்சியின் செல்வாக்கைப் பல நாடுகளில் பலப்படுத்தவேண்டுமெனக் கருதி, ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா ஆகிய நாடுகள் தங்களுக்குள் அமைத்திருந்த புனிதக் கூட்டுறவில் (Holy Alliance) இங்கிலாந்து சேர மறுத்துவிட்டது. மக்களின் இயக்கங்களை நசுக்கும் கொள்கைக்கு உடன்பட மறுத்த இங்கிலாந்து ஐரோப்பிய அமைதியைக் காக்கும்பொருட்டு ஐரோப்பியக் கூட்டுறவில்மட்டும் கலந்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

1818-ல் ஃபிரான்ஸ் நாடும் அக் கூட்டுறவில் அனுமதிக்கப்பட, நால்வர் கூட்டுறவு ஐவர் கூட்டுறவாக (Quintuple Alliance) மாறியிருந்தது. ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பைப்பெற்று அவ்வப்போது எழும் பிரச்சினைக்குத் தீர்வுகாண எண்ணியே ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தின் (Concert of Europe) கீழ்க் கூட்டப்பட்ட மாநாட்டில் இங்கிலாந்து கலந்துகொள்ள வேண்டியிருந்தது. ஆனால், புரட்சிகளை அடக்க, கூட்டுறவு நாடுகள் தங்கள் படைகளை அனுப்பி, மற்ற அரசுகளுக்கு உதவி செய்யலாமென்ற கொள்கையை 1820-ல் கூடிய ட்ரோப்பா (Troppau) காங்கிரஸ் முடிவு செய்தபோது, இங்கிலாந்து மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்க மறுத்தது. மக்களின் கிளர்ச்சிகளை அடக்குவதும், மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதும் தன் கொள்கைக்குப் புறம்பானதாக இங்கிலாந்து கருதியதில் ஆச்சரியமில்லை. 1821-ல் லெய்பாக் (Laiback) என்னுமிடத்தில் கூடிய மாநாடு நேப்பிள்ஸில் தோன்றிய மக்கள் புரட்சியை அடக்கும் பொறுப்பை, ஆஸ்திரியாவுக்குக் கொடுத்தபோதும், ஸ்பெயினில் எழுந்த மக்கள்கலகத்தை அடக்க அந்நாட்டு அரசருக்கு ஃபிரான்ஸ் உதவிகொடுக்க முன்வந்தபோதும்

இங்கிலாந்தின் பிரதிநிதியான காஸில்ரே பிரபு தம் கண்டனங்களைத் தெரிவித்துக்கொண்டார். ஆயின் அடக்கப்பட்ட மக்களின் சார்பில் மற்றக் கூட்டுறவு நாடுகளை எதிர்த்துப் போரைத் தொடங்க இங்கிலாந்து அப்போது தயாராக இல்லை.

தம் கொள்கைகள் சரியாகப் புரிந்துகொள்ளப்படமுடியாத காரணத்தினால் மக்களிடையே ஆதரவையும், அபிமானத்தையும் இழந்திருந்த காஸில்ரே பொதுவாழ்க்கையில் வெறுப்புற்று 1822-ல் தற்கொலை செய்துகொண்டார்.

ஏறக்குறைய கடந்த 10 ஆண்டுகளில் (1812 – 1822) இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை ஐரோப்பாவைச் சார்ந்த ஓர் ஒத்துழைப்புக் கொள்கையாக இருந்ததற்கு காஸில்ரே பிரபு காரணராவார்.

கானிங்கின் காலம் (1822 - 1827)

அவரை அடுத்து இங்கிலாந்தின் வெளி விவகார அமைச்சராகப் பதவியேற்ற ஜார்ஜ் கானிங் (George Canning) என்பவரின் காலத்தில் (1822 - 1827) இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை அமுல் நடத்தப்பட்டதில் மாற்றம் இருந்தது.

ஐரோப்பிய வல்லரசுகள் சிறுநாடுகளின் சுதந்தரத்தைப் பறிக்க நினைத்தபோதும் மக்களின் புரட்சிகளைத் தடுக்க முயன்றபோதும், காஸில்ரேயின் காலத்தில் இங்கிலாந்து பலமான கண்டனங்களைமட்டுமே தெரிவித்திருந்தது. ஆனால், கானிங் காலத்தில் வல்லரசுகளுக்கு எதிராக மக்களின் கிளர்ச்சிகளை ஆதரித்துப் படை உதவி கொடுக்க இங்கிலாந்து முன்வந்தது. கூட்டணியின் பெயரால் ஐரோப்பிய விவகாரங்களில் இங்கிலாந்தை அளவுசியமாகச் சிக்கவைப்பதில் கானிங்கிற்கு விருப்பமில்லையென்றாலும், அவசியமான சூழ்நிலைகளில் இங்கிலாந்து தலையிடுவதை அவர் ஆதரித்திருந்தார். அக் கொள்கையின் அடிப்படையிலே 1822-ல் வெரோனா (Verona) நகரில் கூடிய ஐரோப்பிய மாநாட்டிலிருந்து இங்கிலாந்து வெளியேறிவிட்டது. அத்துடன் ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டம் முடிந்ததாகக் கொள்ளலாம். மேற்கொண்டு, தென்அமெரிக்கச் சுதந்தரப் போரிலும் போர்ச்சுகல் பிரச்சினையிலும், கிரேக்க விவகாரங்களிலும் இங்கிலாந்து தலையிட்டதும் அக் கொள்கையின் தொடர்ச்சியே.

ஸ்பானிய மன்னரான ஏழாம் பெர்டினண்டின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து அந் நாட்டு மக்கள் உரிமைக் கிளர்ச்சி செய்தபோது, அவ் வரசரின் வேண்டுகோளுக்கிணங்கி ஃபிரான்ஸ் தன் படைகளை அனுப்ப, வெரோனா காங்கிரஸ் ஒப்புக்கொண்டதன்

பேரில், கானிங் கண்டனக் குரலே எழுப்பியிருந்தாரெனினும், அவ் விவகாரத்தில் தலையிட்டு ஐரோப்பியப் போரைத் தொடங்க விரும்பவில்லை. ஆயின், ஸ்பானிய தென்அமெரிக்கக் குடியேற்றங்களிலே சுதந்தரப் போர் தொடங்கியபோது கானிங் ஸ்பெயின் வல்லரசை எதிர்க்க முன்வந்தார்.

1823-ல் ஸ்பெயினுக்குச் சொந்தமாக இருந்த தென்அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் தங்களது சுதந்தரத்தை அறிவித்துக் கொண்டன. ஸ்பானிய அரசரான ஏழாம் ஃபெர்டினண்டு (Ferdinand) தென்அமெரிக்கக் குடியேற்றங்களை மீண்டும் அடைவதற்காக ஃபிரான்சின் உதவியை நாடினார். அச் சமயத்தில் கானிங் பிரபு தென்அமெரிக்க நாடுகளின் சுதந்தரத்தைக் காக்கத் துணிவு கொண்டு ஸ்பெயினைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் தென்அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் விவகாரத்தில் தலையிடக் கூடாதென ஓர் அறிவிப்பை வெளியிட்டார். மற்ற நாடுகளின் உதவியின்றி ஃபெர்டினண்டால் ஸ்பானிய தென்அமெரிக்கக் குடியேற்றங்களைக் கைப்பற்ற முடியாதெனக் கானிங் பிரபுவுக்கு நன்கு தெரியும். அங்ஙனம், ஃபிரான்சின் உதவியோடு, ஃபெர்டினண்டு படைகளை அனுப்பினால் அதைத் தடுத்து நிறுத்தத் தம் நாட்டுக் கப்பற்படையை கானிங் உஷார்ப்படுத்தினர். மேற்கொண்டு, தென்அமெரிக்க நாடுகளின் சுதந்தரத்தை இங்கிலாந்து அங்கீகரிப்பதாகவும் கானிங்பிரபு அறிவிக்க, ஃபெர்டினண்டின் உதவிக்குச் செல்ல ஃபிரான்ஸ் தயங்கியது. இங்கிலாந்தின் கொள்கையினால் ஊக்குவிக்கப்பட்டு 1823-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியான மன்ரோ (Munroe) புகழ்பெற்ற தம் கொள்கையை வெளியிட்டார். அமெரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதை ஐரோப்பிய நாடுகள் நிறுத்தவேண்டுமெனவும், அமெரிக்காவின் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்றும், அங்ஙனம் செய்யப்பட்டால் அதைப் படைகொண்டு தடுக்கத் தம் அரசுக்கு உரிமையுண்டு என்றும் மன்ரோ கொள்கை (Munroe Doctrine) திட்டவட்டமாக அறிவித்தது. கானிங்கின் மிரட்டல் ஒருபுறம்; மன்ரோவின் எச்சரிக்கை மறுபுறம்; ஸ்பெயினுக்கு எந்த நாட்டு உதவியும் கிடைக்கவில்லை. ஆக ஸ்பெயினால் தன் குடியேற்றங்களை மீண்டும் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது. அதன் விளைவாகத் தென்அமெரிக்க நாடுகள் ஸ்பெயினின் ஆதிக்கத்தினின்று விடுதலை அடைந்து, சுதந்தர நாடுகளாகத் திகழ்ந்தன. ஃபிரான்சும் ஸ்பெயினும் ஒன்று சேர்ந்ததால், பழைய உலகமான ஐரோப்பாவில் குலைந்துபோன சமநிலையைச் சரி செய்யவே, தாம் ஒரு புதிய உலகத்தைத் தென்அமெரிக்காவில் தோற்றுவித்ததாகக் கானிங் பெருமையுடன் சொல்லிக்கொள்ள, அவரின்

செய்கை இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கையின் சிறந்த வெற்றியாகக் கருதப்பட்டது. போர்ச்சுகல் பிரச்சினைகளிலும் கானிங் பிரபு இதைத் தலையிடச் செய்தார். போர்ச்சுகீசிய மன்னர் ஆறாம் ஜான் என்பவரைக் கட்டாயப்படுத்தி, பிரேசில் (Brazil) என்ற தென்அமெரிக்கப் போர்ச்சுகீசியக் குடியேற்றத்திற்கு, கானிங் பிரபு சுதந்தரம் பெற்றுத் தந்தார்: 1826-ல் ஜான் காலமாகிவிடவே மக்கள் அவரின் மகளான மேரி டி லா குளோரியா (Marie de-la Gloria) என்பவரை அரசியாக்கினர். ஆயின், அவரை எதிர்த்து அவர் சிற்றப்பனை டாம்மிகுவெல் என்பவர் வாரிசுப் போராட்டத்தைத் தொடங்கினார். அவரை ஸ்பானிய அரசர் ஃபெர்டினண்டும், ஃபிரெஞ்சு அரசர் பத்தாம் சார்லசும் ஆதரிக்க முன்வந்தனர். ஸ்பானிய - ஃபிரெஞ்சுப் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காக்கப் போர்ச்சுகல் அரசாங்கம் இங்கிலாந்தின் உதவியைக் கோரியது. போர்ச்சுகலின் கூட்டுறவால் ஸ்பெயின் - ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளின் பலம் பெருகலாம் எனப் பயந்த கானிங் பிரபு உடனடியாக அந்த நாட்டுக்கு உதவி அனுப்ப முன்வந்தார். 'போர்ச்சுகலுக்குச் செல்லும் நம் படைகள் அந்த நாட்டை ஆள்வதற்கோ, அந்த நாட்டின் அரசியல் சட்டத்தை நிர்ணயிப்பதற்கோ போகவில்லை; நட்பு நாடான போர்ச்சுகலின் சுதந்தரத்தைக் காக்கவே படைகள் அனுப்பப்பட்டன. லிஸ்பனில் இங்கிலாந்தின் கொடி பறந்தால் அந்நியப் படையெடுப்பு ஏற்படாது' என்று கானிங் பிரபு பாராளுமன்றத்தில் உணர்ச்சி மிக்க உரை ஆற்றி, போர்ச்சுகல் அரசியாருக்கு ஆதரவாக பிரிட்டிஷ் கப்பற்படையை அனுப்பினார். அதைத் தொடர்ந்து ஸ்பெயினும் ஃபிரான்சும் போர்ச்சுகல் விவகாரத்தில் தலையிட அஞ்சின. அங்ஙனமாக, தகுந்த சமயத்தில் உதவி செய்து போர்ச்சுகலின் சுதந்தரம் பறிபோகாமல் இங்கிலாந்து காத்தது.

கிரேக்க சுதந்தரப் போரிலும் இங்கிலாந்து தலையிடவேண்டிய நிர்ப்பந்தத்தைக் கானிங் பிரபு உண்டாக்கினார். 1821-லிருந்தே தங்களை ஆண்டுவந்த துருக்கியர்களுக்கு எதிராகக் கிரேக்கர்கள் கலகம் செய்து வந்தனர். 6 ஆண்டுகள் கழித்து, அக் கலகம் உக்கிரநிலையை அடைந்து சுதந்தரப் போராக மாறியிருந்தது. கிரேக்க விடுதலைப்போரை அடக்குவதில் துருக்கியச் சுல்தானுக்கு உதவிசெய்ய எகிப்திய சுல்தான் தம் மகன் இப்ராஹிம் பாஷா என்பவரின் தலைமையில் படை உதவி அனுப்பியிருந்தார். கிரேக்கர்கள் கடுமையாகத் துருக்கிய - எகிப்தியப் படைகளால் பல இடங்களில் படுகொலை செய்யப்பட்டுவர, கிரேக்கர்களின் சார்பிலே படைஉதவி கொடுக்க ரஷ்யா அப்போது முன்வந்தது; கிரேக்கர்களின் சுதந்தர விருப்பத்தை உள்ளூரப் போற்றிவந்த

கானிங் பிரபு அதே சமயத்தில் துருக்கிப் பேரரசு சிதைவதையும், அப் பகுதியில் ரஷ்யர்களின் செல்வாக்கு வளருவதையும் விரும்ப வில்லை.

அதற்கிடையே லிவர்பூல் காலமடைந்ததையொட்டி 1827 - ஏப்பிரலில் கானிங் பிரபு இங்கிலாந்தின் பிரதமராக ஆக்கப்பட் டார். கிரேக்க விவகாரத்தில் உடனடியாகத் தலையிடக் கானிங் விரும்பி 1827-ல் இலண்டனில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். ரஷ்யாவும், ஃபிரான்சும் அதில் கலந்துகொண்டன. தொடர்ந்து ஏற்பட்ட இலண்டன் உடன்படிக்கையில் (Treaty of London) கிரேக்கர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கும்படி துருக்கி வற்புறுத்தப் பட்டது. ஆயின், துருக்கியர்கள் அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்தனர். மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குள் கானிங் இறந்துபோனார்.

வெலிங்டன் பிரபுவின் காலம் (1827 - 1830)

கானிங் காலமானதைத் தொடர்ந்து 1827-ஆகஸ்ட்டில் பிரதமராகப் பதவியேற்ற காடுரிச் (Godrich) என்பவர் அடுத்த 4 மாதங்களிலேயே பதவியைத் துறந்தார். அதையடுத்து, வெலிங்டன் பிரபு, (1823-1830) என்பவர் இங்கிலாந்தின் பிரதமராக ஆக்கப்பட்டிருந்தார்.

வெலிங்டன் பிரபுவின் காலத்தில் இங்கிலாந்தின் வெளி நாட்டுக் கொள்கையில் மாற்றம் காணப்பட்டது. பிற்போக்கு எண்ணங்களைக் கொண்டிருந்த வெலிங்டன் பிரபு கிரேக்கச் சுதந்தரப் போரில், துருக்கிய வல்லரசை ஆதரித்தார். காடுரிச் அமைச்சரவையின் காலத்தில் ஆங்கில - ரஷ்ய ஃபிரெஞ்சுக் கப்பல்களால் நவாரினோ குடாச் (Navorino Bay) சண்டையில் துருக்கிய - எகிப்தியக் கப்பல்கள் தாக்கப்பட்டுச் சேதமாக்கப் பட்டதற்கு வெலிங்டன் வருத்தம் தெரிவித்து, போரிலிருந்து இங்கிலாந்தை விலக்கிக்கொண்டார். ஃபிரான்சும் இங்கிலாந்தின் வழியையே பின்பற்றியது. இருப்பினும், ரஷ்யாமட்டும் போரில் தீவிரம் காட்டித் துருக்கியர்களை நெருக்கிக்கொண்டிருக்க, வெலிங்டன் கிரேக்க நாட்டுப் பிரச்சினையை ஆராய இலண்டனில் மாநாட்டைக் கூட்டினார். வெலிங்டன் காலத்தில் கிரேக்கச் சுதந்தரத்தில் இங்கிலாந்திற்கு இருந்த அக்கறையைவிட பால்கன் பகுதியில் ரஷ்யர்களின் செல்வாக்குப் பரவக்கூடாதென்ற பயமே அதிகமிருந்தது.

கிரேக்க சுதந்தரப் போரில் அல்லாமல் போர்ச்சுகல் விவகாரத் திலும் கானிங் பிரபுவின் கொள்கையை வெலிங்டன் புறக்கணித்

தார். டாம் மிகுவெல் 1828-ல் பலவந்தமாகப் போர்ச்சுகல் அரசைக் கைப்பற்றி மேரியா அரசியை விரட்டியபோது, வெலிங்டன் வாளாவிருந்தார். ஃபிரான்சில் அடக்குமுறை ஆட்சி செய்த பத்தாம் சார்லசின் ஆட்சியை எதிர்த்து மக்கள் உரிமைக் குரல் எழுப்ப, 1830-ல் ஃபிரான்சின் அரசர் இங்கிலாந்துக்கு ஓடிவர, அவரை வரவேற்க வெலிங்டன் தவறவில்லை. சுருக்கமாக, பிற்போக்குச் சக்திகளுக்குச் சாதகமாக இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை வெலிங்டன் காலத்தில் இருந்தது.

நெப்போலியனின் வீழ்ச்சியிலிருந்து 1830ஆம் ஆண்டுவரை காஸில்ரே, கானிங், வெலிங்டன் போன்ற டோரிக் தலைவர்களால் இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை படிப்படியாக மாறுதலை அடைந்திருந்தது.

(ஆ) 19ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தின் சீர்திருத்தச் சட்டங்கள்

ஃபிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகளை ஐரோப்பாவில் பலாத்காரத்தினால் அடக்க முயன்றிருந்தும், இறுதியில் அக் கொள்கைகள் அரசியல், சமூக, சமயத்துறைகளில் ஒப்புக்கொள்ளப்பட்டனவாகவே யிருந்தன. ஆயின், வன்முறையினால் ஆங்கில மக்கள் மாற்றங்களைக் கோருவதற்கு முன்னரே, இங்கிலாந்தின் அரசினர் அவ்வப்போது தேவையான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, மக்களின் குறைகளைக் காலத்திற்கேற்றவாறு போக்க முற்பட்டனர்.

அரசியல் : பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள்

19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கொண்டுவரப்பட்டிருந்த பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் அரசியலில் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன. குறிப்பாக, 1832-ல் கொண்டுவரப்பட்ட முதலாம் (பாராளுமன்ற) சீர்திருத்தச் சட்டம் (First Reform Act) பிரதிநிதித்துவ முறையிலும், வாக்குரிமையிலும் இருந்த குறைபாடுகளை ஓரளவு குறைத்திருந்தது. மக்கள் தொகைக்கும், பிரதிநிதித்துவத்திற்கும், பொருத்தமில்லாத பழைய முறையின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். மக்கள் தொகை குறைந்திருந்த சிதைந்த பரோக்களும் (Rotten Boroughs) மிக மிகச் சொற்பமான வாக்காளர்களைப் பெற்றிருந்த பாக்கெட் பரோக்களும் (Pocket Boroughs) காமன்ஸ் சபைக்குத் தலா இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமைகளைப் பெற்றிருக்க, தொழிற்புரட்சி

யினால் புதிதாகத் தோன்றியிருந்த பல புதிய நகரங்களுக்குச் காமன்ஸ் சபையில் பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்தது. 1832-ல் இயற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டமானது 2000 க்குக் குறைந்த ஜனத்தொகையைக் கொண்டிருந்த 56 பரோக்களின் பிரதிநிதித்துவத்தை அறவே அகற்றியது. 4000-க்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட பரோக்களுக்கு ஒரே ஓர் உறுப்பினரை அனுப்ப அனுமதி யளிக்கப்பட்டது. மீட்கப்பட்ட 143 இடங்கள் புதிய ஆலைத் தொழிற் பட்டணங்களுக்குக் கொடுக்கப்பட்டன. வாக்குரிமையைப் பொறுத்தமட்டில், பழைய முறைப்படி ஆண்டொன்றுக்கு 40 ஷில்லிங்குகள் குத்தகை பெறத்தக்க நிலம் படைத்தவர்களுக்கே வாக்குரிமை யிருந்தது; 1832ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்டது. 46 ஷில்லிங் குத்தகை மதிப்புள்ள உரிமை மானியதாரர்களுக்கும், ஆண்டுக்குப் பத்துப் பவுன் மதிப்புள்ள பத்திர மானியதாரர்களுக்கும், 50பவுன் மதிப்புள்ள குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும், வாக்குரிமை கொடுக்கப்பட்டது.

நடுத்தர மக்களுக்கு அரசியல் உரிமையை அச் சட்டம் வழங்கியிருந்தது. அடுத்து 1867-ல் கொண்டுவரப்பட்டிருந்த இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் ஜனத்தொகை நிரம்பியிருந்த நகரங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்தது. கவுண்டிகளில் வாழ்ந்த வாக்காளர்களின் ஓட்டுரிமை அதிகரிக்கப்பட்டது; பரோக்களில் வாழ்ந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை வழங்கப்பட்டது. சுருக்கமாக, தொழிலாளர் வகுப்பிற்கு அச் சட்டத்தினால் வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. அதன் மேல் விவரங்களை டிஸ்ரேலியின் உள்நாட்டுக் கொள்கையில் கவனிப்போம்.

1872-ல் கிளாட்ஸ்டன் (Gladstone) அமைச்சரவையின் காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்த இரகசிய வாக்களிப்புச் சட்டம் (Ballot Act) தங்கள் எசமானர்களின் வற்புறுத்தலின்றிச் சுதந்தரமாக ஏழைகள் தங்கள் வாக்குகளை மறைவிடத்தில் நின்று வழங்க உதவி செய்தது.

1884ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டிருந்த மூன்றும் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் ஏழை விவசாயிகளுக்கு வாக்குரிமை கொடுத்திருந்தது. 1885ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டிருந்த புதிய வகையில் பகுத்தளிக்கும் சட்டம் (Redistribution Act) காமன்ஸ் சபையிலிருந்த மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு ஈடாக பிரிட்டிஷைப் பல தேர்தல் தொகுதிகளாகப் (Electoral Districts) பிரித்தது. காமன்ஸ்

சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 670 ஆக உயர்த்தப் பட்டது. அதில் 465 இங்கிலாந்துப் பகுதிக்கும், 30 வேல்சுக் கும், 72 ஸ்காட்லாந்துக்கும் 103 அயர்லாந்துக்கும் ஒதுக்கப் பட்டன. பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்திற்கு அச் சட்டம் வழிகோலியது.

சமூகம்

சமூகத் துறையில் மாற்றங்களைக் கொண்டுவந்திருந்த மனித இனநலப் பற்றுச் சட்டங்கள் (Humanitarian Legislation) அடுத்தடுத்துக் கொண்டுவரப்பட்டிருந்தன. அந்த வரிசையிலே தொழிற்சாலைச் சட்டங்கள் முன்னணியில் இருந்தன.

தொழிற்சாலைச் சீர்திருத்தச் சட்டங்கள்

ஆதாரமற்ற சூழ்நிலையில், ஆபத்தான இயந்திரங்களுக் கிடையே குறைந்த கூலிக்கு அதிக மணிநேரம் ஆண்களல்லாமல் பெண்களும் சிறுவயதினரும் வேலைசெய்துவந்தனர். ஷேவ்ட்ஸ் பரி பிரபு (Lord Shaftesbury) என்ற பெரியார் நாட்டின் பல பாகங்களில் சுற்றுப்பயணம் செய்து, சுரங்கங்களிலும், ஆலை களிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்த தொழிலாளர்களின் பரிதாப நிலையை நேரில் கண்டறிந்து, அவர்களின் குறைகளைப் போக்கி, தேவையான சட்டங்களைக் கொண்டுவரவேண்டியது அரசின் முக்கியக் கடமையாகுமெனப் பாராளுமன்றத்தில் அடிக்கடி வற்புறுத்திவந்தார். அதன் பயனாக அடுத்தடுத்துப் பல தொழிற்சாலைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

1802-ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தொழிலைக் கற்றுக் கொள்வோர் (apprentice) 12 மணிநேரத்திற்குமேல் (hours) எந்தப் பருத்தி, கம்பளி, ஆலைகளிலும் வேலை செய்யக்கூடாதென வற்புறுத்தப்பட்டது. இரவு வேலை தடுக்கப்பட்டது. ஆலைகளின் சுவர்கள் அடிக்கடி வெள்ளை அடிக்கப்படவேண்டுமென்றும், அங்குக் காற்று வசதிக்காகச் சன்னல்கள் அமைக்கப்படவேண்டு மென்றும் வலியுறுத்தப்பட்டது. 1819-ல் இயற்றப்பட்ட ஓவன் (Owen) சட்டமானது, 9 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் வேலைக்கு அமர்த்தப்படக் கூடாதென்றும், 16 வயதிற்குட்பட்ட வர்களுக்கு 12 மணிநேரத்திற்குமேல் வேலை தரக்கூடாதென்றும் அறிவித்தது. 1833-ல் கொண்டுவரப்பட்ட ஆல்தோர்ப் சட்டம் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பிள்ளைகளுக்குக் கல்வி அளித்ததோடு, சட்டங்கள் நடைமுறையில் பின்பற்றப்படு கின்றனவா எனக் கண்காணிக்கப் பிரத்தியேக அலுவலர்களையும் அமர்த்தியது. 1844-ல் சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel)

என்பவரால் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி, பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் வேலை நேரம் குறைக்கப்பட்டது. பெண்களுக்கு 10 மணிநேர வேலையும் பிள்ளைகளுக்கு 6½ மணி நேர வேலையும் கொடுக்கப்பட வேண்டுமெனவும், எல்லா ஆபத்தான இயந்திரங்களைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலி போட வேண்டுமென்றும் அச் சட்டம் வலியுறுத்தியது. மேற்கூறிய சட்டங்கள் அத்தனையும் நெசவாலைகளைமட்டும் கட்டுப்படுத்தியிருக்க, 1861-ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, மற்றத் தொழில்களும் அச் சட்டங்களின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. புகை போக்கிகளைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த சிறுவர்களின் எண்ணிக்கையைத் தெரிந்துகொள்ளவும், அவர்களின் நிலையை அறிந்துகொள்ளவும், அடையாளச்சீட்டு அப் பணியாளர்களுக்குக் கொடுக்கும் முறையை 1875ஆம் ஆண்டுச் சட்டமொன்று புகுத்தியது. நிலக்கரிச் சுரங்கங்களில் 12 வயதிற் குட்பட்டவர்கள் வேலை செய்வதைத் தடுக்கும் சட்டமொன்று 1887-ல் நிறைவேற்றப்பட்டது. வேலையில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு விபத்து நேருமாஞல் அதற்கு நஷ்டஈட்டை முதலாளி வழங்கவேண்டுமென்ற முறை 1897-ல் கொண்டு வரப்பட்டது.

19ஆம் நூற்றாண்டில் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டங்கள் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதாக அமைந்திருந்தன.

கிரிமினல் சட்டத்தொகுப்பில் மாற்றம்

அந்த நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் நடைமுறையிலிருந்த கிரிமினல் சட்டத்தொகுப்பு மிக்க கடுமையாக இருந்தது. சாதாரண சிறு கிரிமினல் குற்றங்களுக்கும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்தன. 5 ஷில்லிங் மதிப்புள்ள பொருள்களைத் திருடியதற்கும், வளர்ந்துவரும் மரங்களை வெட்டியதற்கும், அரசருக்குச் சொந்தமான காடுகளில் முயல், குருவி போன்றவைகளை வேட்டையாடியதற்கும், அடுத்தவன் குளத்திலிருந்து மீனைக் களவாடியதற்கும், வெஸ்ட் மின்ஸ்டர் பாலத்தின் மீது கீறலிட்டுப் பாழ்படுத்தியதற்கும், வழக்கத்திலிருந்த கிரிமினல் சட்டத்தின்படி கொலைத் தண்டனை விதிக்கப்பட வேண்டிய கட்டாயமிருந்தது. சுமார் 200 சாதாரண குற்றங்களுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்படலாமென்ற முறை அப்போதிருந்தது. ரோமில்லி (Romilly), மாக்கின்டோஷ் (Mackintosh), பென்தாம் (Bentham) போன்ற அறிஞர்கள் கிரிமினல் சட்டத் தொகுப்பை மாற்றி அதன் கடுமையைக்

குறைக்க வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லி வந்ததற்கேற்ப, 1823-ல் சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) என்ற இங்கிலாந்தின் உள்துறை அமைச்சரால் கிரிமினல் சட்டத் தொகுப்புச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, சுமார் 100 குற்றங்களுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. அதற்கு மாறாக, சிறைவாசமோ, நாடு கடத்தல் போன்ற தண்டனைகளோ கொடுக்கப்பட்டன. கொலை, கொள்ளை, ராஜத்துரோகம், கப்பல் தளத்திற்கு நெருப்பு வைத்து நாசவேலை செய்தல் போன்ற நான்கு குற்றங்களுக்கே கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும், கிரிமினல் குற்றங்களைச் செய்து தண்டனைகளிலிருந்து குருமார்கள் தப்பித்துக்கொள்ளும் வழக்கமும் நிறுத்தப்பட்டது.

சிறைச்சாலைச் சீர்திருத்தம்

சிறைச்சாலைகளின் நிலைமையும் மிகவும் மோசமாக இருந்தது. அசுத்தம் நிரம்பியதாக இருந்த சிறைச்சாலைகளில் குற்றவாளிகள் மந்தைகள்போல் அடைக்கப்பட்டிருந்தனர், சிறைக் கைதிகளுக்கு வேண்டிய வைத்திய வசதிகளும் இல்லை. போதிய உணவும் அளிக்கப்படவில்லை. அவைகளின் விளைவாகப் பல சிறைக் கைதிகள் பற்பல நோய்களால் பாதிக்கப்பட்டு இறக்கலாயினர். ஜான் ஹோவர்டு (John Howard), எலிஸபத் பிரை (Elizabeth Pry) போன்ற மனிதாபிமானிகள் சிறைச்சாலைகளின் நிலைமையைச் சீர்செய்யும்படி அரசாங்கத்தை வற்புறுத்தினர். சிறைக் கைதிகளுக்காக அல்லும் பகலும் பாடுபட்ட ஜான் ஹோவர்டு பல சிறைகளுக்குச் சென்று, கைதிகளின் நன்மைகளுக்காக உழைத்து அப் பணியிலேயே தம் உயிரை நீத்தார். எலிஸபத் பிரை என்ற அம்மையார் நியு கேட் (New Gate) சிறைச்சாலைக்குச் சென்று, பெண் குற்றவாளிகளுக்குக் கல்வி போதிக்கும் சேவையில் ஈடுபட்டிருந்தார். தனியார் செய்துவந்த நற் பணியைத் தொடர்ந்து அரசாங்கம் சிறைச்சாலைகளின் நிலையைச் சீர்செய்ய முன்வந்ததல்லாமல், குற்றவாளிகளைச் சீர்திருத்தும் முயற்சியிலும் இறங்கியது. விடுதலை பெறும்போது சமூகத்தின் நன்மக்களாக அவர்கள் வாழ்வதற்கேற்பக் கல்வியறிவு, தொழிற் பயிற்சி போன்றவைகள் கொடுக்கப்பட்டன. சிறைச்சாலைகளில் நெரிசலைத் தவிர்த்து, அவை சுத்தமாகவும் வைக்கப்பட்டிருந்தன.

அடிமை முறை ஒழிப்பு

19ஆம் நூற்றாண்டில் அடிமைமுறை ஒழிப்புக்கான சட்டமும் இங்கிலாந்தில் கொண்டுவரப்பட்டிருந்தது. மனிதனை மனிதன்

விலக்கு வாங்கி அடிமைத்தனத்தில் வைத்திருந்த கொடுமையை எதிர்த்துத் தாமஸ் கிளார்க்சன் (Thomas Clarkson), வில்லியம் வில்பர் ஃபோர்ஸ் (William Vilber Force) போன்ற அறிஞர்கள் இங்கிலாந்தில் பிரசாரம் செய்துவந்தனர். ஏற்கெனவே அடிமை வியாபாரத்தைமட்டும் ஒழித்திருந்த இங்கிலாந்து 1833-ல் தன் பேரரசில் அடிமை முறையையும் ஒழிக்க முடிவெடுத்தது. அவ் வாண்டு ஆகஸ்டு மாதத்தில் அடிமை முறை ஒழிப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. அதன்படி, 6 வயதிற்குட் பட்ட சிறுவர்களுக்கு அடிமைத்தளையிலிருந்து விடுதலை வழங்கப் பட்டது. ஏனையோர் 7 ஆண்டுகளுக்குத் தங்கள் எசமானர் களிடம் வேலை பார்த்த பின்னர் விடுதலை அளிக்கப்படுவர் எனவும் அச் சட்டம் அறிவித்தது. ஆயினும், 1838-ல் அந்த நிபந் தனையும் ஒழிக்கப்பட்டது. அடிமைகளை வைத்திருந்தோருக்கு இழப்பீடாகக் கொடுக்க 20 லட்சம் பவுன்களையும் அரசாங்கம் ஒதுக்கிவைத்து அச் சட்டத்தை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டியது.

கல்விச் சட்டங்கள்

19ஆம் நூற்றாண்டில் கல்வித் துறையிலும் அரசாங்கம் தன் கவனத்தைச் செலுத்தியது. 1833ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆரம்பக் கல்விக்கென ஆண்டொன்றுக்கு 20,000 பவுன்கள் ஒதுக்கப்பட, பல புதிய கல்விக்கூடங்கள் கட்டப் பட்டன. ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ், டர்ஹாம், இலண்டன், மான்செஸ்டர் பல்கலைக் கழகங்களுக்கு அரசாங்கம் மானியத்தை அளித்து, விஞ்ஞானக் கல்விக்கு ஊக்கமளிக்கும்படி கேட்டுக் கொண்டது.

பெரிய பள்ளிக்கூடங்களின் நிர்வாகச் சபைகளைத் திருத்தி அமைக்க 1868-ல் ஒரு சட்டமும், தருமத்தால் (Charity) நடை பெற்ற பள்ளிகளை மேற்பார்வையிட மூன்று ஆணையாளர்களை நியமித்த சட்டமும் (1869-ல்) கொண்டுவரப்பட்டிருந்தன.

1870-ல் கிளாட்ஸ்டன் அமைச்சரவையில் கல்வி அமைச் சராக இருந்த ஃபார்ஸ்டர் (Forster) என்பவர் கல்விச் சட்ட மொன்றைக் கொண்டுவந்திருந்தார். அதன்படி, பள்ளிகளில்லாத இடங்களில் கல்விக்கூடங்களை நிறுவ அரசாங்கம் முன்வந்தது; அவற்றை நடத்தும் பொறுப்பு அந்தந்த இடங்களிலே தேர்ந் தெடுக்கப்படும் பள்ளிக் குழுக்களிடம் (School Board) ஒப்படைக் கப்படுமென்றும் அதற்காக மக்கள்மீது வரிவிதிக்கும் அதிகா ரத்தை அக் குழுக்கள் பெறுமென்றும் அறிவிக்கப்பட்டது.

1871-ல் பல்கலைக் கழகத்தில் நுழைவதற்காக நடத்தப்பட்ட சமயச் சோதனைகள் யாவும் நீக்கப்பட்டன. மதக்கல்வி புரிவோர்க்குமட்டுமே அச் சமயச் சோதனைகள் கட்டாயமாக்கப் பட்டன.

சமயத்துறை

சமயத்துறையிலும் சில சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

ஆங்கில மத ஏற்பாட்டின்படி எல்லா உத்தியோகஸ்தர் களும் புனிதத் திருவிருந்தை (Sacrament) ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாடு, முன்னிலை மீட்சிக் காலத்திலிருந்து அமுல் நடத்தப்பட, அதற்கு இணங்காதார்களுக்கு அரசாங் கத்தில் உத்தியோக வாய்ப்பு இல்லாமலிருந்தது. 1828-ல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி அக் கட்டுப்பாடு நீக்கப்பட, இணங்காதாருக்குச் சலுகைகள் கிடைத்தன. இங்கிலாந்து, ஸ்காட்லாந்தில் இருந்த கத்தோலிக்கர்களுக்கு வாக்குரிமையும், தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையும் இல்லாமலிருந்தன. அயர்லாந்துக் கத்தோலிக்கர்களுக்கு வாக்களிக்கும் உரிமைமட்டும் இருந்து வந்தது. 1829-ல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி, கத்தோலிக்கர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும், தேர்தலில் போட்டியிட அனுமதியும், குறிப்பிட்ட மூன்று பதவிகளைத் தவிர மற்ற எல்லாப் பதவிகளுக்கும் கத்தோலிக்கருக்கு அருகதையும் கொடுக்கப்பட்டன. 1833ஆம் ஆண்டுச் சட்டமானது குவாக் கர்களையும் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்க அனுமதி யளித்தது. 1847-ல் யூதர்களும் பாராளுமன்றத்தில் அங்கத் தினர்களாக அனுமதிக்கப்பட்டனர். அச் சட்டங்களின்கீழ் பீயஸ் (Pease) என்ற குவாக்கர்களும் (Quakers) பாரண் டி ரோத் சைல்டு (Baron de Rothchild) என்ற யூதரும், முறையே பாராளு மன்றத்தில் முதன் முதல் அமர்ந்த சிறப்பைப் பெற்றனர்.

1854-ல் ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங் களில் கல்வி பயிலவும் இணங்காதார்கள் (Non-conformists) அனு மதிக்கப்பட்டனர். இணங்காதார்கள் ஒவ்வொரு பாரிஷ் கோயில்களின் (Parish church) பராமரிப்புக்குப் பணம் செலுத் தும்படி கட்டாயப்படுத்தப்பட்டுவந்தனர். 1868-ல் நிறை வேற்றப்பட்ட சட்டத்தின்படி அக் கட்டணம் அவர்கள் விரும்பி னால் செலுத்தக்கூடிய இனமாக மாற்றப்பட்டது.

அங்ஙனமாகச் சமய சகிப்புத் தன்மையை மையமாகக் கொண்டு 19ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

அரசியல், சமூக, சமயத்துறைகளில் அல்லாது பொருளாதாரத்துறையிலும் மாற்றங்கள் புகுத்தப்பட்டன. அம் மாற்றங்களில் தலைசிறந்ததாகத் தடையில்லா வியாபாரமுறை (Free Trade) விளங்கியது.

தடையில்லா வியாபாரம் (Free Trade)

16, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் மெர்க்கன்டைல் முறை (Mercantilism) என்ற பழைய பொருளாதாரக் கொள்கையையே இங்கிலாந்து பின்பற்றிவந்தது. உள்நாட்டுக்கப்பல் வியாபாரம், விவசாயம், தொழில்கள் போன்றவைகளை விருத்தி செய்வதற்காகவே, அம் முறை கையாளப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களுக்கு அதிகச் சுங்கவரிகளை விதித்து, உள் நாட்டுத் தயாரிப்புகளுக்கு இங்கிலாந்தின் அரசு பாதுகாப்புக் கொடுத்துவந்தது. உள்நாட்டுப் பொருள்களுக்கு அதிக ஏற்றுமதி வரிகளை விதித்தும், நாட்டில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நேராத வண்ணமும் அரசாங்கம் கண்காணித்துவந்தது. சுருக்கமாக, மெர்க்கன்டைல் முறையின்கீழ், இங்கிலாந்தின் அரசு நாட்டின் வியாபாரத்திலும் தொழிலிலும் தலையிட்டுவந்தது.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிற்புரட்சியின் விளைவாகப் புதிய சூழ்நிலை உருவாகியது. குறைந்த காலத்தில் அபரிமிதமான பொருள்கள் தயாரிக்கப்பட நாட்டிலே பற்றாக்குறை ஏற்பட வழியில்லை. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் பொருள்கள் ஏராளமாகத் தாயாரிக்கப்பட்டன. அந்நிலையில் ஆடம் ஸ்மித் (Adam Smith) என்ற கிளாஸ்கோப் பல்கலைக் கழகப் பேராசிரியர் தாம் எழுதிய 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்ற நூலில் மெர்க்கன்டைல் முறையைக் கண்டித்திருந்தார். அரசாங்கத்தின் தலையீடின்றித் தடையில்லாமல் நடக்கும் வாணிகமே நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்குமென்று அவர் வற்புறுத்தினர். ஆடம் ஸ்மித்தால் பிரபலப்படுத்தப்பட்ட தடையில்லா வாணிகக் கொள்கையை (Free Trade Policy) துணிவுடன் பின்பற்ற இளைய பிட் முன்வந்தார். நாட்டின் வியாபாரத்தைப் பெருக்க, கட்டுப்பாடுகள் அவசியமில்லையென பிட் உணர்ந்து புதிய கொள்கையைப் பின்பற்றலானார். அக் கொள்கையின்படி இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையே தடையிலா வியாபாரம் நடைபெற பிட் ஒரு திட்டம் வகுத்தார். ஆயின், தம் கட்சியிலேயே எதிர்ப்பு இருந்ததால் அத் திட்டம் கைவிடப்பட்டது. வியாபாரத்தைக் கட்டுப்படுத்திய பல சுங்க வரிகளையும் நீக்க பிட் எண்ணினார். இருப்பினும். எதிர்ப்புக்கு

அஞ்சி அதையும் செய்யவில்லை. ஆயின், 1786-ல் ஃபிரான்சுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்கீழ்த் தடையில்லா வியாபாரத் திற்கு ஆக்கம் தரப்பட்டது. அவ் வொப்பந்தத்தின்கீழ் ஃபிரான்சி லிருந்து இறக்குமதியான சாராயம், ஆலிவ் எண்ணெய் முதலிய பொருள்களுக்கு விதிக்கப்பட்டுவந்த சுங்கவரி குறைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஃபிரான்சில் இறக்குமதியான பிரிட்டிஷ் இரும்புச் சாமான்கள், பருத்திப் பொருள்கள் முதலியவற்றின் மீது சுங்கவரியும் குறைக்கப்பட்டது. 1793-ல் ஏற்பட்ட போரி னால் அந்த ஏற்பாடு பின்னர்த் தவிர்க்கப்பட்டது.

தயாரிப்பாளர்களிடையே தடையில்லா வாணிகம் பிரபல மடைய, 1796-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சாதகமாக நாவாய்ச் சட்டங்கள் (Navigation Acts) அகற்றப்பட்டன.

1813-ல் இந்தியாவுடன் வியாபாரம் தடையின்றி நடக்க அனுமதிக்கப்பட்டது. 1814-ல் கென்ட் (Ghent) உடன்பாடு என்ற ஓர் ஏற்பாடு பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஏற்பட்டது. அதன்படி பிரிட்டிஷ் பொருள்களுக்கு அமெரிக்கா வில் விதிக்கப்பட்ட காப்பு வரிகளும், அமெரிக்கப் பொருள்களுக்கு இங்கிலாந்தில் விதிக்கப்பட்ட காப்பு வரிகளும் நீக்கப்பட்டன. 1822-ல் வாணிகக் குழுவின் தலைவராகப் (President of the Board of Trade) பணியாற்றிய வில்லியம் ஹஸ்கிசன் என்பவர் (William Huskissan) என்பவர் வாணிகத்தின்மீது விதிக்கப்பட்டி ருந்த அவசியமற்ற கட்டுப்பாடுகளை யெல்லாம் நீக்கி நாட்டில் உற்பத்தியையும், வியாபாரத்தையும் பெருக்கிப் பொருளாதார வளத்தை அதிகரிக்கவேண்டுமென ஆர்வம் கொண்டிருந்தார்.

போர்ச்சுகல், நெதர்லாந்து, ரஷ்யா போன்ற நாடுகள் இறக்குமதியான பிரிட்டிஷ் பொருள்களுக்குக் காப்புவரிகளை விதித்துவந்ததால் இங்கிலாந்தின் வியாபாரம் பாதிக்கப்படலா மென அவர் நினைத்தார். அவரின் வற்புறுத்தலின்பேரில் பாராளுமன்றம் 1825-ல் பரஸ்பர வரிவிலக்குச் சட்டத்தைக் (Rcciprocity Act) கொண்டுவந்தது. அச் சட்டத்தின்படி இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள்மீது வரி விதிக்காத நாடு ஏதாயினும், அந் நாட்டிலிருந்து இங்கிலாந்திற்கு வரும் பொருள்கள்மீது காப்புவரி விதிக்கக் கூடாதென அறிவிக்கப் பட்டது. பல ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனுடன் பரஸ்பர வரி விலக்கு உடன்பாடு செய்துகொள்ள, தடையில்லா வியா பாரமுறை அங்ஙனம் ஊக்குவிக்கப்பட்டது.

வேறுபல வழிகளிலும் தடையில்லா வாணிகத்தை ஹஸ்கிசன் வளர்த்தார். 1873-ல் இங்கிலாந்தில் இறக்குமதியான கச்சாக்

கம்பளியின்மீது விதிக்கப்பட்ட வரியையும், இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியான கம்பளியின்மீது வசூலிக்கப்பட்ட வரியையும் குறைத்தார். 1824-ல் இங்கிலாந்திற்குள் இறக்குமதியான இந்தியக் கச்சாப்பட்டின்மீது வசூலிக்கப்பட்ட வரியை ஒரு பவுண்டுக்கு 4 ஷில்லிங்கிலிருந்து 3 பென்சாகக் குறைத்தார். மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான கச்சாப்பட்டின்மீது விதிக்கப்பட்ட வரியைப் பவுண்டுக்கு 5 ஷில்லிங் $7\frac{1}{2}$ பென்சிலிருந்து 4 பென்சாகக் குறைத்தார். கச்சாக் கம்பளியின்மீது விதிக்கப்பட்டிருந்த வரியைப் பவுண்டுக்கு 6 பென்சிலிருந்து 1 பென்சாகக் குறைத்தார். ஆங்கிலக் கம்பெனியின்மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரியையும் அதே முறையில் அவர் குறைத்தார். அது மட்டுமின்றி, இரும்பு, துத்தநாகம், தகரம், ஈயம், காகிதம், கண்ணாடி, மட்பாண்டங்கள், நூல்கள் போன்ற பல பொருள்களின்மீது விதிக்கப்பெற்ற இறக்குமதி வரிகளையும் அவர் குறைத்தார். ஹஸ்கிசன் இங்கிலாந்தில் இறக்குமதியான பல பொருள்களுக்குப் பெருமளவு சுங்கவரிகளைக் குறைத்திருந்ததால் நாட்டின் தொழில்கள் பாதிக்கப்படலாமென்ற சூழ்நிலை ஏற்பட, கச்சாப் பொருள்களுக்குக் குறைந்த வரி விதித்து உள்நாட்டுத் தொழில்களுக்கு அந்நியப் போட்டியால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்தார். பழைய மெர்க்கன்டைல் முறையின்கீழ் ஏற்றுமதிகளுக்குக் கொடுக்கப்பட்ட உதவித் தொகையும் (bounties) ஹஸ்கிசன் சிறுகச் சிறுக ஒழித்தார்.

மேற்கண்ட ஏற்பாடுகளால் தடையில்லா வியாபாரம் வளர்ந்துவர, 1841-ல் சர் ராபர்ட் பீல் என்பவர் இங்கிலாந்தின் பிரதமரானார். வியாபாரம் விருத்தியடைந்தாலொழிய நாட்டின் பொருளாதார நிலை சீர்படாதென உணர்ந்த பீல், வாணிகத்தைக் கட்டுப்படுத்திவந்த பல சுங்க வரிகளை ரத்து செய்தார். கச்சாப் பொருள்கள்மீது விதிக்கப்பட்டிருந்த வரியை 5 சதவீதம் வரையிலும் பொறி செய்பொருள்கள்மீது வரியை 20 சதவீதம் வரையிலும் பீல் குறைத்திருந்தார். சுமார் 750 பொருள்கள்மீது வசூலிக்கப்பட்ட சுங்கவரிகள் குறைக்கப்பட்டன. 1845-ல் இறக்குமதி வரிகள் பலவற்றை நீக்கியும், சிலவற்றைக் குறைத்தும், ஏற்றுமதி வரிகள் அனைத்தையும் நீக்கித் தடையில்லா வாணிகக் கொள்கையைப் பீல் ஆதரித்தார். அடுத்த ஆண்டில், தானியச் சட்டத்தை ஒழித்துத் தம் கொள்கையினை பீல் உறுதியுடன் செயல்படுத்தினார். இங்கிலாந்தின் விவசாயத்தைக் காக்க அயல்நாடுகளிலிருந்து தானிய இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வகையில் தானியச் சட்டங்கள் (Corn Laws) நடைமுறையி

லிருந்தன. 1846 ஜனவரி மாதத்தில் அத் தடைச் சட்டங்களைப் பீல் பல எதிர்ப்புகளுக்கிடையே துணிந்து ரத்து செய்தார்.

ராபர்ட் பீல் என்பாரின் தலையிடாக் கொள்கையை விக்டோரியன் காலத்துப் பேரமைச்சரான கிளாட்ஸ்டன் பின்பற்றினார். காப்டன் பிரைட் போன்ற பொருளியல் அறிஞர்களின் தலையிடாக் கொள்கை அந்த அமைச்சரை மிகவும் கவர்ந்திருந்தது. தடையில்லா வாணிகக் கொள்கையின் அடிப்படையிலேயே 1860-ல் தம் வரவு செலவுத் திட்டத்தைக் கிளாட்ஸ்டன் தயாரித்தார். ஃபிரான்ஸ் நாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட பரஸ்பர உடன்பாட்டின்கீழ் அந்த நாட்டில் இறக்குமதியான பிரிட்டிஷ் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட சுங்கவரிகள் 30% குறைக்கப்பட்டன. அதே போன்று பிரிட்டனில் இறக்குமதியான பல ஃபிரெஞ்சுப் பொருள்கள்மீதிருந்த சுங்கவரிகள் குறைக்கப்பட்டன. பொறிசெய் பொருள்கள்மீது விதிக்கப்பட்ட வரிகள் முற்றிலும் அகற்றப்பட்டன. சுங்கவரி விதிக்கப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கை 419-லிருந்து 48-க்குக் குறைக்கப்பட்டது. கிளாட்ஸ்டனின் அக் கொள்கை இங்கிலாந்தின் தடையில்லா வியாபாரக் கொள்கைக்கு இறுதிக் கட்டமாக அமைந்தது.

தொழிற்சங்க இயக்கம்

19ஆம் நூற்றாண்டில் தொழிற்சங்க இயக்கமும் (Trade Union Movement) வளர்ச்சியுற்றது. தொழிற் புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் இயந்திர யுகம் தொடங்கியிருந்ததை நாம் முன்னரே கண்டோம். ஆதாரமற்ற சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருந்த தொழிற்சாலைகளில் அபாயகரமான இயந்திரங்களுக்கிடையே குறைந்த கூலிக்கு அதிகமணி நேரம் தொழிலாளிகள் வேலைசெய்ய வேண்டியிருந்ததையும், நாம் முன்னரே கண்டோம்; தேவையான கூலி, குறைந்தமணி நேர வேலை, நல்ல தொழில் சூழ்நிலையைப் பெறத் தங்களுக்கிருந்த குறைகளை எடுத்துச் சொல்லத் தொழிலாளிகளுக்குச் சங்கங்கள் தேவைப்பட்டன. ஆயின், தொழிலாளர்கள் அங்ஙனம் ஒன்றுசேர்ந்து சங்கங்களை அமைக்கமுடியாதவர்களாக இருந்தனர். ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக இளைய பிட்டினால் கொண்டுவரப்பட்டிருந்த கூட்டம் கூட்டும் சட்டங்கள் (Combination Acts) தொழிற்சங்கங்களைச் சட்டவிரோதமாக்கியிருந்தன. தங்களின் நலன்களைக் காத்துக் கொள்ள மிகவும் இன்றியமையாததாக இருக்கவேண்டிய தொழிற்சங்கங்களைப் பெறவேண்டுமென்றால் கூட்டம் கூடும் சட்டங்கள் ரத்து செய்யப்படவேண்டும். ஆகவே, அத் தடைச் சட்டத்தை ரத்துசெய்யும்படி தொழிளாளர் தலைவர்கள் அரசாங்

கத்தை வற்புறுத்திவந்தனர். அதற்கேற்ப 1824-ல் இங்கிலாந்தின் அரசாங்கம் கூட்டம் கூடும் சட்டங்களை ரத்து செய்தது. அச் சட்டம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்தே தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் பாடுபட 1829-ல் சில தொழிற் சங்கங்கள் தோன்றின. பொறியாளர்களின் இணைப்புச் சங்கம் (Amalgamated Society of Engineers), சுரங்கத் தொழிலாளர்களின் சங்கம், நூல் சுற்றுவோர், கல் அடுக்குவோர் சங்கங்களும் தோன்றின. தங்களின் உரிமைகளைப் பாதுகாக்க அச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்து முதலாளிகளைப் பணிய வைக்க முயன்று தோல்வியடைந்தனர்.

ராபர்ட் ஓவன் (Robert Owen ,1771-1858) என்ற சமதர்மவாதி ஸ்காட்லாந்திலிருந்த நியூலெனர்க் என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலையை நடத்திவந்தார். அங்குப் பணிசெய்த தொழிலாளர்களுக்குக் குறைந்த மணிநேர வேலையும் அதிகக் கூலியும் கொடுக்கப்பட்டன. தொழிலாளர்களை எங்ஙனம் முதலாளிகள் நடத்தவேண்டுமென்பதில் ராபர்ட் ஓவன் ஒரு வழிகாட்டியாகவே இருந்தார். அப் பெரியார் 1834-ல் தொழிற்சங்க வளர்ச்சியில் அக்கறை காட்ட ஆரம்பித்தார். நாட்டிலிருந்த பல தொழிற்சங்கங்களை ஒன்றுசேர்த்துத் தேசிய மகா தொழிற்சங்கத்தை நிறுவினர். முதலாளிகளின் கொட்டத்தை ஒடுக்க வேலைநிறுத்த முறையைப் பயன்படுத்தவேண்டுமென்றும், முதலாளிகளின் உதவியின்றித் தயாரிப்புத் தொழில்கள் தேசிய மயமாக்கப்பட்ட கம்பெனிகளால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை ராபர்ட் ஓவனால் நிறுவப்பட்ட அம் மகாதொழிற்சங்கம் தன் கொள்கையாகக் கொண்டிருந்தது. ஆனால், நடைமுறையில் அம் மகாசங்கம் திறமையுடன் செயல்பட முடியவில்லை. துரிதமான செய்தி, போக்குவரத்து வசதிகள் இல்லாததால் அம் மகாசங்கத்தின் தலைமையகத்திலிருந்து குறித்த நேரத்தில் செய்திகளும், உத்தரவுகளும் கிளைத் தொழிற் சங்கங்களுக்கு அனுப்பப்பட முடியவில்லை. மேலும், ஒன்று சேர்க்கப்பட்ட தேசிய மகாதொழிற்சங்கத்தைக் குலைக்க அரசாங்கமும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டதால், ஓவனின் அந்த இயக்கம் எடுபடாமல் போனது.

1836-ல் தோற்றுவிக்கப்பட்ட சார்ட்டிஸ்ட் இயக்கம் நாட்டு அரசியலில் தொழிலாளர்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று கோரியது. அவ் வியக்கம் இங்கிலாந்து அரசினரால் அடக்கப்பட்டபோதும், 1867-ல் நிறைவேற்றப்பட்ட இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் பரோக்களில் வாழ்ந்த தொழிலாளர்களுக்குப் பாராளுமன்றத் தேர்தலில் உரிமை யளித்

திருந்தது. அரசியல் உரிமை பெற்ற தொழிலாளர்கள் அதிலிருந்து தொழிற்சங்க வளர்ச்சியில் அதிக ஊக்கம் காட்டினர். நாட்டில் பலதரப்பட்ட தொழில்களுக்குப் பல தொழிற் சங்கங்கள் ஏற்பட்டன. 1868-ல் மான்செஸ்டர் நகரில் கூட்டப் பட்ட தொழிற்சங்க மாநாட்டுக்கு 100,000 தொழிலாள அங்கத்தினர்களின் சார்பில் 34 பிரதிநிதிகள் கலந்துகொண் டனர். தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கத் தொழிற் சங்கங்களுக்குச் சில உரிமைகள் தேவையென அம் மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தொழிலாளர்களின் குறை களைப் போக்கக் கடமைப்பட்டிருந்த இங்கிலாந்தின் அரசாங்கம் 1871-ல் தொழிற்சங்கச் சட்டத்தைக் (Trade Union Act) கொண்டுவந்தது. அச் சட்டத்தின்படி, தொழிற்சங்கங்கள் சட்ட பூர்வமாக்கப்பட்டன; தனக்கென்று நிதி, நிலம், சொத்து போன்றவைகளை வைத்திருக்கவும் தொழிற்சங்கங்கள் அனுமதிக் கப்பட்டன. வேலைநிறுத்தக் காலங்களில் தொழிலுக்கு ஏற்படும் நஷ்டத்திற்குத் தொழிற்சங்கங்கள் பொறுப்பாகமாட்டா எனவும் அச் சட்டம் கூறி, அதன் உரிமைகளையும், நலன்களையும் பாது காத்தது. 1875-ல் கொண்டுவரப்பட்ட தொழிற்சங்கச் சட்ட மும், அதன் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கவை. இரண்டிற்கு மேற் பட்ட தொழிலாளிகள் ஒன்றுசேர்ந்து சங்கம் அமைத்துக்கொள்ள அச் சட்டம் அனுமதியளித்தது. அச் சங்கங்கள்மூலம் தங்களின் தகராறுகளைத் தொழிலாளிகளும், முதலாளிகளும் தீர்த்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள அமைதியான மறியல் நடத்தவும் தொழி லாளிகள் அனுமதிக்கப்பட்டனர். சுருக்கமாக, தொழிற்சங்கங்கள் சட்டரீதியான சங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

17. கி.பி. 1800ஆம் ஆண்டுக்கு முந்திய அயர்லாந்து

முன் வரலாறு

பிரிட்டிஷ் தீவுகளில் ஒன்றான அயர்லாந்தில் கெல்டுகளும் (Celts) சாக்சானியர்களும் (Saxons) பரவலாக வாழ்ந்து வந்தனர். செயின்ட் பேட்ரிக் (St. Patrick) என்ற மதப்பிரசாரகரின் சமயத் தொண்டினால் கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்தே அங்குக் கிருத்துவ மதம் பரவ ஆரம்பித்தது. மடாலயங்களை மையமாக வைத்து அயர்லாந்தில் மக்கள் தங்களின் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டு வாழ்ந்துவந்தனர்.

பிளான்டாஜெனட்டுகளின் காலம்

அயர்லாந்து ஐந்து பகுதிகளாகக் குடித்தலைவர்களால் ஆளப் பட்டுவந்தது. அல்ஸ்டர் (Ulster), மன்ஸ்டர் (Munster), லின்ஸ்டர் (Leinster), கோனக்ட் (Connaught), மீத் (Meath) என்ற அந்த ஐந்து பகுதிகளின் தலைவர்களும் தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டே இங்கிலாந்தின் அரசரான இரண்டாம் ஹென்றி அயர்லாந்துக்குப் படை கொண்டு வந்து, தம் ஆதிக்கத்தை ஓரளவு அங்கு நிலைநிறுத்த முயன்றார். அதற்கிடையே ஆங்கிலேயர்களின் பிரபுத்துவ முறையும் (Nobility) மற்றச் சில பழக்கங்களும் அயர்லாந்தில் புதுக் குடியேறிகளால் (New Settlers) புகுத்தப்பட்டிருந்தன.

முதலாம் எட்வர்டு காலத்தில் அயர்லாந்தில் மேலும் சில பகுதிகள் வெல்லப்பட்டிருந்தபோதிலும், ஆங்கில நாகரிகம் அத் தீவில் முழுக்கப் பரவாமலேயே இருந்தது. பேல் (Pale) என்ற பகுதியிலேயே ஆங்கிலேய ஆதிக்கம் சற்று வேரூன்றியிருந்ததெனலாம். அயர்லாந்தில் அப் பகுதியில் வாழ்ந்துவந்த ஆங்கிலக்

குடியேறிகளின் நாகரிகத்தைக் காக்கும் வகையில் மூன்றும் எட்வர்டு காலத்தில் கில் கென்னி சட்டம் (Statute of Kil Kenny, 1336) கொண்டுவரப்பட்டது. அதன்படி, ஐரிஷ் குடிகளுடன் திருமண உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியாதபடி, குடியேறிகள் தடுக்கப்பட்டனர். லங்காஸ்டிரியர்கள் (Lancastrians), யார்க்கியர்கள் (Yorkists) காலத்தில், ஒருவர்பின் ஒருவராகப் பல ஆளுநர்கள் இங்கிலாந்திலிருந்து, அயர்லாந்துக்கு அனுப்பப் பட்டிருந்தபோதிலும், அத் தீவின் பெரும் பகுதியில் இங்கிலாந்தின் ஆதிக்கம் முழுக்கப் பரவாமலேயே இருந்தது.

டியூடர்களின் காலம்

டியூடர்கள் ஆட்சியிலேயே அயர்லாந்து இங்கிலாந்தின் அதிகாரத்தின்கீழ்ப் பூரணமாகக் கொண்டுவரப்பட்டது.

கலகங்களாலும், உள்நாட்டுப் பூசல்களாலும் அமளிப்பட்டு வந்த அயர்லாந்தை அடக்கித் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வர நினைத்த ஏழாம் ஹென்றி தம் பிரிவிக் கவுன்சிலின் (Privy Council) அங்கத்தினரான சர் எட்வர்டு பாய்னிங்ஸ் (Sir Edward Poynings) என்பவரை அத் தீவுகளுக்கு அனுப்பினர்.

ட்ரொகீடா (Drogheda) என்னுமிடத்தில் கூடியிருந்த ஐரிஷ் பாராளுமன்றத்தைக் கட்டாயப்படுத்தி 1494ஆம் ஆண்டில் அவர் சில சட்டங்களை நிறைவேற்றச் செய்தார். 'பாய்னிங்ஸ் சட்டம்' (Poyning's Law) என அவை அழைக்கப்பட்டன. அதன்படி, அரசரின் அனுமதியில்லாமல் ஐரிஷ் பாராளுமன்றம் கூட்டப்படக் கூடாதெனவும், அரசரின் ஆலோசனையில்லாமல் அம் மன்றம் எந்த மசோதாவையும் கொண்டுவரக் கூடாதெனவும் அம் மன்றத்தினால் இயற்றப்படும் எந்தச் சட்டத்தையும் நிராகரிக்கும் உரிமை ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு உண்டு என்றும் அச் சட்டம் கூறியது.

எட்டாம் ஹென்றியின் காலத்தில் இங்கிலாந்தில் சமயப் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஐரிஷ் திருச்சபைக்குத் தம்மை அவ் வரசர் தலைவராக அறிவித்துக்கொண்டார். அடக்கு முறைகளால், ஐரிஷ் குலத்தலைவர்களை எட்டாம் ஹென்றி தம் சமயப்போக்கினை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியிருந்தும், அதில் அவர் எதிர்பார்த்த பலனைப் பெறமுடியாமல் போய் விட்டது. ஐரிஷ் மக்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்க மதத்தைத் துறக்க மறுத்தனர். அதுவே, அடுத்துவரும் நூற் றாண்டுகளிலே பெரும் பிரச்சினையாக அமைந்தது. கன்னியரசி எலிஸபத் ஆட்சிக்காலத்தில் டெஸ்மாண்டு எர்ல் (Earl of Des-

mond) என்பவரின் தலைமையில் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் சமய உரிமை கோரிக் கலகம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். அக் கலகம் கடுமையாக ஒடுக்கப்பட்டது.

ஸ்டுவர்டுகளின் காலம்

ஸ்டுவர்டு அரசர் முதலாம் ஜேம்ஸ் காலத்தில், அல்ஸ்டர் பகுதியில் ஆங்கில - ஸ்காட்டியக் குடியேற்றம் அமைக்கப் பட்டது. அப் பகுதியிலிருந்த ஐரிஷ்காரர்கள் விரட்டப்பட்டு, அவர்களின் நிலங்கள் குடியேறிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. பிராடஸ்டென்டுக் குடியேறிகளால் அமைக்கப்பட்டிருந்த அல்ஸ்டர் குடியேற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி 1611ஆம் ஐரிஷ் பாராளுமன்றம் வற்புறுத்தப்பட்டது. வெக்ஸ்ஃபோர்டு (Wexford), லாங்ஃபோர்டு (Longford) போன்ற மற்றப் பகுதி களிலும் அப் பிராடஸ்டென்டுக் குடியேறிகள் புகுந்தனர். அப் பிராடஸ்டென்டுக் குடியேறிகளுக்கும், ஐரிஷ் கத்தோலிக்கர் களுக்கும் நில விநியோகங்களைப்பற்றியும் அடுத்தடுத்துப் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

முதலாம் சார்லஸின் ஆட்சிக்காலத்தில் அயர்லாந்தில் மதப் பிரச்சினையாலும், நிலச் சிக்கல்களாலும் கலகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவானபோது, அதைச் சமாளிக்க வென்ட்வொர்த் (Wentworth) என்பவர் அனுப்பப்பட்டார். கி. பி. 1632 லிருந்து ஏழு ஆண்டுகள்வரையில் அப் பிரமுகர் தம் கடுமையான நடவடிக்கைகளால் அயர்லாந்தைப் பரிபூரணமாக இங்கிலாந்தின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். அதே சமயத்தில், லினன் தொழில் உள்படச் சில தொழில்களையும் ஊக்குவித்தார். அயர் லாந்தின் அமைதியைக் காக்க, ஒரு படையையும் வென்ட் வொர்த் உருவாக்கினார். ஐரிஷ் விவகாரம் தீர்க்கப்பட்டது போலிருந்த அந்தச் சூழ்நிலையில் வென்ட்வொர்த் கோனக்ட் என்ற பகுதியில் பிராடஸ்டென்டுகளுக்குப் புதிய ஒரு குடியேற் றத்தை அமைக்க முயன்றபோது, ஐரிஷ் கத்தோலிக்கர்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கலாயினர். இங்கிலாந்து அரசி யலில் 1639 - 1640-ல் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, வென்ட்வொர்த் அரசருக்குதவியாக நாடு திரும்பி யிருக்க, அயர்லாந்தில் பயங்கரமான கலகம் ஏற்பட்டது (1641). அதில் பல பிராடஸ்டென்டுகள் ஐரிஷ் கத்தோலிக்கர்களால் கொல்லப்பட்டனர். அயர்லாந்தின் ஐந்தின் மூன்று பகுதியைக் கத்தோலிக்கர்கள் மீட்டுவிட்டனர்.

அதற்கிடையே, இங்கிலாந்தில் அரசருக்கும் பாராளு மன்றத்தினருக்கும் உள்நாட்டுப்போர் மூண்டுவிட்டது. அச்

சந்தர்ப்பத்தில் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் அரசியல் சமய உரிமைகளைப் பெறத் தேசிய அமைப்பு ஒன்றை, கில் கென்னி என்னுமிடத்தில் ஏற்படுத்திக்கொண்டனர். அவ் வுரிமைகளைப் பெறும் முறையில் அவர்களுக்குள்ளாகவே இரு கட்சியினர் தோன்றினர்.

கத்தோலிக்கர்களுக்குச் சமய உரிமையையும் ஐரிஷ் பாராளு மன்றத்திற்குக் கட்டுப்பாடின்றிச் செயல்படும் உரிமையையும் கொடுத்தால் இங்கிலாந்துடன் இணைந்து வாழலாமென்றது ஒரு கட்சி; இங்கிலாந்தின் உறவே இல்லாமல் தனித்து வாழவேண்டு மென்றது இன்னொரு கட்சி. ஐரிஷ் கத்தோலிக்கர்களிடையே அப் பிரிவு ஏற்படாமலிருந்திருக்குமாயின், ஆங்கிலப் பிராடஸ் டென்டுக் குடியேறிகளுக்கு ஆதரவாக டப்ளின் (Dublin), லின்ஸ்டர் (Leinster) பகுதியில் படை திரட்டிக்கொண்டிருந்த மார்க்யூஸ் ஆர்மாண்டு (Marquis Ormond) என்பவரின் ஆதிக் கத்தையும், அல்ஸ்டர் பகுதியில் ஒன்றியிருந்த ஸ்காட்டிய பிராடஸ்டென்டுக் குடியேறிகளின் எதிர்ப்பையும் முரியடித்து, அயர்லாந்து முழுவதையும் ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுவித்திருக்கலாம்.

கிராம்வெலின் காலம்

அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கும், பிராடஸ்டென்டு களுக்கும் போராட்டம் நடந்துவந்தபோது, இங்கிலாந்தில் உள் நாட்டுப்போர் முடிவடைந்தது. பொதுநல அரசாங்கம் அமைக் கப்பட, அதை எதிர்த்து அரசரின் அனுதாபிகளும், ஐரிஷ் கத்தோலிக்கர்களும் கலகம் செய்தனர். நீலமை மோசமடைந்த போது, ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) பிரதம தளபதி என்ற முறையில் பெரும்படை கொண்டுசென்று அயர்லாந்தை அடைந்தார்.

ஆர்மாண்டுவின் தலைமையில் எதிர்த்த அரச விசுவாசிகளை ட்ரொகீடா (Drogheda, 1649) என்னுமிடத்தில் முரியடித்தார்; ஐரிஷ் கத்தோலிக்கர்களை வெக்ஸ்ஃபோர்டு (Wexford) என்ற இடத்தில் படுதோல்வியடையச் செய்தார். அந்த இரண்டு முக்கிய எதிர்ப்புக் கேந்திரங்கள் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து அயர்லாந்தில் எதிர்ப்பு பிசுபிசுத்தது. கிராம்வெல் 1650ஆம் ஆண்டு மே மாதத்திற்குள்ளாக அயர்லாந்தில் நான்கில் மூன்று பங்கைக் கைப்பற்றி மீட்டார். அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி யிருந்தபோதும் அப் பணியைக் கிராம்வெலின் தளபதிகள் நிறை வேற்றி, அயர்லாந்து முழுவதையும் இங்கிலாந்துக்குப் பணிய வைத்தனர். அயர்லாந்தில் பல இடங்களில் கிராம்வெலின்

படையினருக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன. அயர்லாந்தின்மேல் இங்கிலாந்தின் பிடியை வலுப்படுத்தவும், அங்குப் புதுக் கலவரங்கள் எதுவும் நடக்காதவாறு தடுக்கவுமே அந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

கிராம்வெல் காப்பாளராக (Protector) இங்கிலாந்தை ஆண்டபோது அவரால் கூட்டப்பட்டிருந்த முதல் காப்பாளர் பாராளுமன்றத்திற்கு அயர்லாந்திலிருந்து முப்பது அங்கத் தினர்கள் வரவழைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஐரிஷ் பாராளு மன்றம் கலைக்கப்பட்டது (1653). அவரது காலத்தில் இங்கி லாந்துக்கும் அயர்லாந்துக்கும் பாராளுமன்ற ஐக்கியம் ஏற்படுத் தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னிலை மீட்சிக்குப்பின்

ஆயின், முன்னிலை மீட்சியைத் (Restoration) தொடர்ந்து அந்த ஏற்பாடு கலைக்கப்பட்டு, ஐரிஷ் பாராளுமன்றம் மீட்கப் பட்டிருந்தது. அத்துடன் கிராம்வெல் காலத்தில் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளுடன் வாணிகம் செய்ய அயர்லாந்து பெற் றிருந்த உரிமையும் பறிபோனது. இருப்பினும், அல்ஸ்டரில் இருந்த ஆங்கில - ஸ்காட் பிராடஸ்டென்டுகள் இங்கிலாந்தின் நலன்களுக்குப் பேரூக்கம் அளிக்கும் வகையில் நடந்துகொண் டனர். ஆயின், ஐரிஷ் கத்தோலிக்கர்களின் நிலையில் எவ்வித மனமாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், இரண்டாம் ஜேம்ஸின் கத்தோலிக்கச் சார்பான கொள்கையினால், அயர்லாந்துக்கு விடிவுகாலம் வருமென ஐரிஷ் கத்தோலிக்கர்கள் நினைத்தனர். அதற்கேற்ப, அரசர் இரண்டாம் ஜேம்ஸ் தம் நண்பர் டிரிக் கோனலைத் (Tryconnel) தம் பிரதிநிதியாக அயர்லாந்துக்கு அனுப்பிவைத்தார். கத்தோலிக்கரான டிரிக்கோனல் கிராம் வெலின் நில ஏற்பாடுகளைக் களைந்துவிட்டு, பிராடஸ்டென்டு நிலக்கிழார்களிடமிருந்து நிலங்களை மீட்க எத்தனித்தார். அதற் கிடையே, இங்கிலாந்தில் ஏற்பட்ட மாண்புறு புரட்சியின் (Glorious Revolution) விளைவாக இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்தைத் துறக்கவேண்டி யிருந்ததால், ஐரிஷ் கத்தோலிக்கர்களின் நம்பிக் கையில் மண் வீழ்ந்தது.

மாண்புறு புரட்சிக்குப்பின்

1689ஆம் ஆண்டு ஐரிஷ் கத்தோலிக்கர்கள் முடிதுறந்திறந்த இரண்டாம் ஜேம்ஸுடன் சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து பாய்னி (Boyne) சண்டையில் இங்கிலாந்தின் அரசர் மூன்றாம் வில்லியத்தினால் தோற்கடிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர்,

ஐரிஷ் கத்தோலிக்கர்களின் நிலைமை மேலும் மோசமாகியது. அடிக்கடி ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகக் கலகத்தில் ஈடுபட்டு வந்த ஐரிஷ் கத்தோலிக்கர்களை ஒடுக்க இங்கிலாந்தின் அரசு தண்டனைச் சட்டத்தொகுதியைக் (Penal code) கொண்டுவந்தது.

அதன்படி, ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டன. அரசாங்க நிறுவனங்களிலே அவர்களுக்குப் பதவிகள் கொடுக்கப்படவில்லை. ஐரிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் தேர்தலில் நிற்கக்கூடிய தகுதியும் மறுக்கப்பட்டன.

சமூகத் துறையிலும் கத்தோலிக்கர்களுக்குப் பல தடைகள் விதிக்கப்பட்டன. பிராடஸ்டென்டுகளுடன் கலப்பு மணம் செய்து கொள்ளக்கூடாதென்றும், தம் பிள்ளைகளைக் கல்விபயில வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாதெனவும், அவர்கள் வக்கீல் தொழிலில் ஈடுபடக் கூடாதெனவும், சேனையில் பெரும் பதவிகளைப் பெறக்கூடாதென்றும், உடைவாள், நல்ல ஜாதிக் குதிரையை வைத்திருக்கக் கூடாதென்றும் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பல தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும், அத் தண்டனைச் சட்டத் தொகுதியின்படி, ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு நிலம் வாங்கும் உரிமையும் மறுக்கப்பட்டது. நீண்ட நாள்களுக்கு ஒரே நிலத்தை அவர்கள் குத்தகைக்கும் உழமுடியாதபடி சட்டம் தடுத்தது. ஏற்கெனவே பெரு நிலங்களைப் பெற்றிருந்த ஐரிஷ் கத்தோலிக்கர்கள் இறந்துவிட்டால் அவர்களின் நிலச் சொத்து பிள்ளைகள் அனைவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கவேண்டுமெனவும் அச் சட்டம் வற்புறுத்தியது.

ஐரிஷ் நிலங்களில் பெரும் பகுதி ஆங்கிலேய பிராடஸ்டென்டுகளுக்கே சொந்தமாக இருந்தன. அவர்களில் பலர் இங்கிலாந்தில் வாழ்ந்துவந்ததால் தங்களின் நிலங்களை உழுத ஐரிஷ் குடியானவர்களின் இன்னல்களைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதவர்களாக இருந்தனர். தந்தை இறந்த பின்னர் அவரது சொத்துக்கு மூத்த மகனே உரிமையாளன் என்ற கொள்கை பிராடஸ்டென்டுகளுக்கு உரித்தாக இருந்ததால், பல பெரும் பண்ணைகளும் பிராடஸ்டென்டுகளுக்குச் சொந்தமாக அயர்லாந்தில் ஏற்பட ஏதுவானது.

18ஆம் நூற்றாண்டில் அயர்லாந்தின் நிலை

ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு அரசியல் சமூகப் பொருளாதாரத்தடைகள் இருந்ததுமட்டுமன்றி, அயர்லாந்தில் வாழ்ந்த ஏனையோருக்கும் ஆங்கில அரசு இன்னல்களைக் கொடுத்தது.

அல்ஸ்டர் மகாணத்தில் வாழ்ந்த பிரஸ்பிடீயர்களுக்குச் (ஸ்காட்டியக் குடியேறிகள்) சோதனைச் சட்டத்தின்படி (Test Act) அரசாங்கத்தில் பதவிகள் மறுக்கப்பட்டன. ஆங்கிலப் பிராடஸ்டென்டுகளுக்கும் ஒரு சில குறைகள் இருந்தன. அப் பிராடஸ்டென்டுகள் அடங்கியிருந்த ஐரிஷ் பாராளுமன்ற மன்றம் சுதந்தரமாகச் செயல்படும் நிலையிலில்லாமல் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டிருந்தது. சில சமயங்களில் ஆங்கிலப் பாராளுமன்றமே அயர்லாந்துக்கும் சேர்த்துச் சட்டமியற்றியது. மேலும், ஐரிஷ் பாராளுமன்றத்தில் மக்களின் உண்மையான பிரதிநிதித்துவம் இல்லை. கத்தோலிக்கர்கள் அதிலிருந்து விலக்கப்பட்டிருந்த தோடல்லாமல், பிராடஸ்டென்டுகளுக்கும், அதில் போதிய இடங்கள் அளிக்கப்படவில்லை. பிரபுக்கள் சபையில் மதகுருமார்கள் செல்வாக்கைப் பெற்றிருந்ததுபோல, மக்கள் சபையில் ஆங்கிலேய நிலச்சுவான்தாரர்களின் கையாட்களே பெரும்பான்மையினராய் இருந்தனர்.

ஐரிஷ் பாராளுமன்றத்திற்குக் குறிப்பிட்ட காலவரை (tenure) ஏதுமில்லாததால் பல ஆண்டுகளுக்குத் தேர்தல் எதுவும் நடத்தப்படாமல் ஒரே பாராளுமன்றம் நீடிப்பது அங்கு வழக்கமாகிவிட்டது.

ஐரிஷ் அரசாங்கம் ஆங்கில அரசினரால் நியமிக்கப்பட்ட ஒரு சில பிரிவிக் கவுன்சிலர்களின் பொறுப்பில் இருந்தது. அக் கவுன்சிலின் தலைவரான லெப்ட்னென்ட் பிரபுவும் (Lord Lieutenant) இங்கிலாந்திலிருந்தே அனுப்பப்பட்டார். அரசாங்கத்தின் பல உயர்பதவிகள் ஆங்கில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் நண்பர்களுக்குமே கொடுக்கப்பட்டன.

ஐரிஷ் அரசியலில் அத்தனை குறைபாடுகளென்றால் பொருளாதாரத் துறையிலும், பிரிட்டிஷ் அரசாங்கம் அயர்லாந்தின்மீது சில கட்டுப்பாடுகளைத் திணித்தது. ஐரிஷ் ஆடு மாடுகள் விற்பனைக்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்படுவது தடுக்கப்பட்டது. ஐரிஷ் உரோமம் இங்கிலாந்துக்கும் அதன் குடியேற்ற நாடுகளுக்கும் அனுப்பக் கூடாதென்று தடைவிதிக்கப்பட்டது. ஏனெனில், அத் தடைகள் இல்லாவிட்டால் ஆங்கில விவசாயிகளும், கம்பளி வியாபாரிகளும் பாதிக்கப்படுவார்களென ஆங்கில அரசு பயந்தது. இங்கிலாந்தின் தொழிலதிபர்களின் வற்புறுத்தலுக்கிணங்க ஐரிஷ் லினன் (linen) தொழிலும் நசுக்கப்பட்டது

அங்ஙனமாகக் கத்தோலிக்கர்களல்லாமல் பிராடஸ்டென்டுகளும் அயர்லாந்தில் ஆங்கில அரசினரால் பல இன்னல்களுக்குட்படுத்தப்பட்டனர்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த அயர்லாந்தில் சற்றே விழிப்புணர்ச்சி தோன்றியது. அதற்குக் காரணமாக மூன்று தலைவர்கள் விளங்கினர்கள்.

ஹென்றிஃபீல்ட் (Henry Field) என்ற பிராடஸ்டென்டுத் தலைவர் அயர்லாந்தியர்க்கு அரசியலுரிமைகள் கோருவதற்காகத் தேசபக்தக்கட்சியை உருவாக்கிக் கிளர்ச்சியைத் தொடங்கிவைத்தார். அதன் விளைவாக மூன்றாம் ஜார்ஜ் காலத்தில் ஐரிஷ் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் எட்டாண்டுகளாக வரையறுக்கப்பட்டது. ஐரிஷ் பாராளுமன்றத்திற்கு பிரிட்டிஷாரின் தலையீடின்றிப் பண மசோதாக்களை (Money Bills) நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய அனுமதியும் தரப்பட்டது.

அமெரிக்கச் சுதந்தரப் போரின் விளைவாக அயர்லாந்தில் விழிப்புணர்ச்சி மேலும் அதிகரிக்கலாயிற்று. அச் சந்தர்ப்பத்தில் ஹென்றி கிராட்டன் (Henny Gratten) என்ற மிதிவாதப் பிராடஸ்டென்டுத் தலைவரின் கீழ் ஐரிஷ் மக்கள் தங்களின் உரிமைக் குரல்களை எழுப்பினர். பிராடஸ்டென்டுகளுக்கு மட்டுமின்றிக் கத்தோலிக்கர்களுக்கும் உரிமைகளைப் பெற்றுத்தர அவர் மேடை தோறும் முழங்கிவந்தார். கிராட்டனின் வற்புறுத்தலுக் கிணங்கி மூன்றாம் ஜார்ஜின் முதலமைச்சரான நார்த் பிரபு (Lord North) கத்தோலிக்க நிலப்பிரபுக்கள்மீது ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த சில நிபந்தனைகளை ரத்து செய்தார். மேலும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளோடும் அயர்லாந்து வியாபாரம் செய்யவும் அனுமதித்தார். அமெரிக்கச் சுதந்தரப் போர், மிக நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்த அத் தருணத்தில் கிராட்டன் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஐரிஷ் பாராளுமன்றத்தின் சுதந்தரத்திற்காகக் கிளர்ச்சியை முன்முரப்படுத்தினர். வேறு வழியின்றி பிரிட்டிஷ் அரசாங்கம் பாய்னிங்ஸ் சட்டத்தை ரத்து செய்தது. அது மட்டுமின்றி யாதொரு கட்டுப்பாடில்லாமல் சட்டமியற்றும் உரிமையையும் ஐரிஷ் பாராளுமன்றம் பெற்றது. அடுத்ததாகக் கத்தோலிக்கர்களின் உரிமைகளுக்குப் பரிந்து கிராட்டன் கிளர்ச்சி செய்தார். ஆயின், பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை.

அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கிடையே ஏமாற்றமும் வெறுப்பும் கலந்த ஓர் அதிருப்தியான நிலைமையிருந்தது. அச் சமயத்தில்தான் ஃபிரான்சில் புரட்சி தோன்றியிருந்தது. அதனுடைய கருத்துகள் ஐரிஷ் கத்தோலிக்கர்களைக் கவருவனவாக இருந்தன. அதன் விளைவாக 1791ஆம் ஆண்டில் உல்ஃப்டோன் (Wolfetone), எட்வர்டு ஃபிட்ஸ்கெரல்டு (Edward Fitzgerald)

என்ற தலைவர்கள் அயர்லாந்திற்குப் பூரண குடியாட்சியைக் கோரி ஒன்றுபட்ட அயர்லாந்திய சங்கம் (The United Irishman) என்ற ஒரு கட்சியைத் தோற்றுவித்தனர். இங்கிலாந்தின் ஆதிக் கத்திலிருந்து ஐரிஷ் மக்கள் பூரண விடுதலை பெறவேண்டுமென உல்ஃப்டோன் வற்புறுத்தினர். நிலைமை மேலும் மோசமடை வதற்கு முன்னர் ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு பிரிட்டிஷ் அர சாங்கம் சில சலுகைகளைக் காட்ட முன்வந்தது. அதற்கேற்ப முதலமைச்சர் இளைய பிட் 1793ஆம் ஆண்டில் ஐரிஷ் கத்தோலிக் கர்களுக்குத் தேர்தலில் வாக்குரிமை அளிக்கும் சட்டமொன்றை ஐரிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றச் செய்தார். ஐரிஷ் கத்தோலிக்கர்களை மேலும் திருப்திப்படுத்த 1794-ல் ஃபிட்ஸ் வில்லியம் (Fitz William) என்பவரை லெப்டினென்ட் பிரபுவாக அயர்லாந்திற்கு அனுப்பினர். அவர் ஒரு கத்தோலிக்கர்; தங்கள் குறைகளையெல்லாம் நீக்குவதற்காகவே ஒரு கத்தோலிக்கக் கவர்னர் அனுப்பப்படுகிறாரென ஐரிஷ் கத்தோலிக்கர்கள் எதிர் பார்த்தனர். அதற்கேற்பக் கத்தோலிக்கர்களுக்குப் பூரண விடு தலையளிக்கும் மசோதா ஒன்றை ஐரிஷ் பாராளுமன்றத்தில் கொண்டுவரவேண்டுமென்று ஃபிட்ஸ் வில்லியத்தை ஐரிஷ் கத் தோலிக்கர்கள் வற்புறுத்தினர். இங்கிலாந்தை அப்போது ஆண்டு வந்த அரசர் மூன்றாம் ஜார்ஜிற்கும் மற்ற டோரிக் அமைச்சர்களுக் கும், ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்குப் பூரண விடுதலை கொடுக்கக் கூடாதென்ற எண்ணமிருக்க, அதன் காரணமாக முதலமைச்சர் பிட், வில்லியத்தை இங்கிலாந்திற்குத் திருப்பி வரவழைத்துக் கொண்டார்.

ஃபிட்ஸ் வில்லியம் அயர்லாந்திலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது ஐரிஷ் கத்தோலிக்கர் களுக்குத் தாங்கொணா ஆத்திரம் ஏற்பட்டது. ஃபிரெஞ்சுப்புரட்சி அரசாங்கத்தின் உதவியுடன் இங்கிலாந்தை எதிர்த்து விடு தலைப் போராட்டம் தொடங்க ஐரிஷ் கத்தோலிக்கர்கள் முடிவு செய்தனர். தலைவர் உல்ஃப்டோன் ஐரிஷ் கத்தோலிக்கர்களை ஆதரித்ததால் அவர் கட்சியில் ஐரிஷ் பிராடஸ்டென்டுகள் சேர மறுத்தனர். அயர்லாந்தில் பெரும்பான்மையராய் இருந்த கத்தோலிக்கர்களுக்குப் பூரண விடுதலை கிடைத்துவிட்டால் தங்களின் உரிமைகளுக்குக் குந்தகம் ஏற்படலாமென ஐரிஷ் பிரா டஸ்டென்டுகள் நினைத்ததால் கத்தோலிக்கர்களுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கத்தை அவர்கள் ஆதரித்தனர். ஐரிஷ் கத்தோ லிக்கர்களுக்கும், பிராடஸ்டென்டுகளுக்கும் ஓர் உள்நாட்டுப் போர் தோன்றியது. அல்ஸ்டர் மாகாணத்தில் கத்தோலிக்கர்

களுக்கு எதிராக ஆரஞ்சு விடுதிகள் (Orange Lodges) என்ற சங்கங்களைப் பிராடஸ்டென்டுகள் ஆரம்பித்தனர். அச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ஸ்டர் பகுதியில் கத்தோலிக்கரைக் கொடுமைப்படுத்த முற்பட்டனர். அதன் எதிரொலியாக 1798-ல் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் ஒரு பெரும் கலகத்திலிறங்கினர்.

கலகக்காரர்களுக்கு உதவிசெய்ய ஃபிரெஞ்சுக் கப்பற்படையும் அயர்லாந்தை வந்தடைந்தது. ஆங்கில அரசாங்கம் ஐரிஷ் கலகக்காரர்களை நசுக்கும் பணியை மேற்கொண்டது. ஜெனரல் லேக் (General Lake) எனும் பிரிட்டிஷ் தளபதி ஐரிஷ் கத்தோலிக்கர்கள் வினிகர் குன்று (Vinegar Hills) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அச் சண்டையில் காயமடைந்த எட்வர்டு ஃபிட்ஸ் கெரல்ட் சில நாட்களில் இறந்துபோனார். ஃபிரெஞ்சுக் கப்பற்படை கடலிலேயே தோற்கடிக்கப்பட்டது. ஃபிரெஞ்சுக் கப்பலொன்றில் அடைக்கலம் புகுந்திருந்த உல்ஃப்டோனும் கைது செய்யப்பட்டார். ராஜத்துரோகக் குற்றத்தின்பேரில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அத் தண்டனை நிறைவேறு முன்பே அவர் தற்கொலை புரிந்துகொண்டார். ஆக 'மேய்ப்பாரில்லா ஆடுகள் போல' ஐரிஷ் கத்தோலிக்கர்கள் தலைவர்களின்றி வாடினர். அயர்லாந்து இங்கிலாந்திற்கு அடிபணிந்து இருக்க வேண்டியதாயிற்று.

ஐரிஷ் ஐக்கியச் சட்டம்

ஐரிஷ் கலகம் அடக்கப்பட்ட போதிலும் ஐரிஷ் கத்தோலிக்கர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதை பிட் உணர்ந்தார். அவர்களுக்குப் பூரண அரசியல் உரிமைகள் தரப்பட்டாலொழிய அயர்லாந்தின் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்பதும் அவருக்குத் தெரியும். ஆனால், பெரும்பான்மையினரான கத்தோலிக்கர்களுக்கு அரசியல் உரிமை கொடுக்கப்பட்டால் பிராடஸ்டென்ட் சிறுபான்மையினருக்கு அது அபாயமாக முடியுமென பிட் எண்ணினார். கத்தோலிக்கர்களின் உரிமை வேட்கையும் தீர்க்கப்படவேண்டும்; பிராடஸ்டென்டுகளின் நலனும் காக்கப்படவேண்டும். இங்கிலாந்து அயர்லாந்துப் பாராளுமன்றங்களை இணைத்து விடுவதாலேயே அப் பிரச்சினை தீர்க்கப்பட முடியும். எப்படியெனில் ஐரிஷ் பராளுமன்றம் தனித்திருந்தால் அதில் கத்தோலிக்கர்களே பெரும்பான்மையினராக இருப்பர். ஆனால், இங்கிலாந்தின் பாராளுமன்றத்தோடு சேர்ந்தால் அவர்கள் சிறுபான்மையராகி விடுவர்.

அதன் காரணமாக 1800ஆம் ஆண்டில் பிட் ஓர் ஐக்கியச் சட்டத்தை (Act of Union) ஐரிஷ் பாராளுமன்றத்தில் கொண்டு

வரச் செய்தார். அச் சட்டத்தை எதிர்த்த ஐரிஷ் பிராடஸ்டெண்ட்டு அங்கத்தினர்களையெல்லாம் பிட் லஞ்சம் கொடுத்து வாயடைத்தார். பின்னர் அச் சட்டம் இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டது.

ஐக்கியச் சட்டப்படி இங்கிலாந்தும் அயர்லாந்தும் ஒரே நாடென அறிவிக்கப்பட்டது. 28 ஐரிஷ் பிரபுக்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மேல்சபையிலும், 100 அங்கத்தினர்கள் காமன்ஸ் சபையிலும் இடம் பெற்றனர். இரு நாடுகளின் திருச் சபைகளும் ஒன்றுபட்டன. இரு நாடுகளுக்குமிடையே தடையில்லா வாணிகம் ஏற்பட்டது.

ஐக்கியச் சட்டத்தால் ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு நன்மை ஏதும் ஏற்படவில்லை. ஏனெனில் அவர்களுக்கு அச் சட்டத்தின்படி சமய சுதந்தரம் (religious freedom) எதுவும் கொடுக்கப்படவில்லை. மற்றும் நிலப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. ஆகவே, ஆரம்பத்திலிருந்தே ஐக்கியச் சட்டத்தை ஒரு கண் துடைப்பாகவே ஐரிஷ் கத்தோலிக்கர்கள் நினைத்தனர்.

எனவே, சில ஆண்டுகள் கழித்து மீண்டும் அயர்லாந்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. அதனைப் பின்னர் ஆராய்வோம்.

18. விக்டோரியா காலத்து இங்கிலாந்து-I

(அ) சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) (1788 - 1850)

பல சிறப்புகளைக் கொண்டு விளங்கிய விக்டோரியா மகாராணியாரின் (1837-1901) காலத்தில் நான்கு அமைச்சர்கள் தங்களின் சாதனைகளால் வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றிருந்தார்கள்; அந்த வரிசையிலே முதலாவதாக சர் ராபர்ட் பீல் என்ற பேரமைச்சரின் வாழ்க்கைக் குறிப்பையும், அவரால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களையும் காண்போம்.

அரசியல் வாழ்க்கை

1788பிப்ரவரி 5ஆம் நாளில் லங்காஷயரில் வாழ்ந்த ஒரு பெரும் பஞ்சாலை முதலாளியின் மகனுகப் பிறந்திருந்த பீல், ஹாரோ (Harrow), கிருத்துவக் கல்லூரி (Christ College), (ஆக்ஸ்ஃபோர்டு) ஆகிய இடங்களில் உயர்கல்வியைப் பெற்று 1809-ல் தம் தந்தையின் உதவியால் அயர்லாந்தைச் சேர்ந்த கேஷெல் (Cashel) என்ற நசிந்துபோன பரோவின் (rotten borough) பிரதிநிதியாகக் காமன்ஸ் சபையில் நுழைந்தார்.

டோரிக் கட்சியில் பற்று வைத்திருந்த பீல் தம் அரசியல் வாழ்க்கையின் ஆரம்பகாலத்திலேயே பல உத்தியோகங்களைப் பெற்றவரானர். ஸ்பென்சர், பெர்ஸிவல் அமைச்சரவையின் காலத்தில் போர், குடியேற்ற நாடுகளின் விவகாரத்தைக் கவனிக்கும் இலாகாவில் துணைக் காரியதரிசியாகப் பதவி பெற்றார். லிவர்பூல் அமைச்சரவையில் அயர்லாந்தின் மந்திரியாகப் பணியாற்றும் பொறுப்பு அவருக்குக் கிடைத்தது. 1817-ல்

ஆக்ஸ்ஃபோர்டின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தாம் அயர்லாந்தின் பிரதமக் காரியதரிசி வேலையை 1818-ல் துறந்தார். 1819-ல் பீல் நாணயச் சீர்திருத்தக் குழு ஒன்றுக்குத் தலைவராக ஆக்கப்பட்டார். தாம் பதவியேற்ற ஒவ்வொரு துறையிலும் திறமையை நன்கு வெளிப்படுத்தியிருந்த பீலுக்கு 1822-ல் உயர்பதவி தேடி வந்தது.

பதவி உயர்வும் அவரின் சீர்திருத்தச் சட்டங்களும்

லிவர்பூல் மந்திரி சபையில் உள்துறை அமைச்சராக அந்த ஆண்டிலே பீல் நியமிக்கப்பட்டார். அப்போது அவர் சாதித் தவைகளுள் மிகச்சிறப்பாகக் கருதப்படுவது அவரது கிரிமினல் சட்டத் தொகுப்பின் சீர்திருத்தமேயாகும். சிறிய குற்றங் களுக்கும் கடுமையான கொலைத் தண்டனைகள் வழங்க கிரிமினல் சட்டம் இடம் கொடுத்ததால், பல ஜூரிகள் குற்றவாளிகளை நிரபராதிகள் என விடுதலை செய்துவந்தனர். தண்டனை விதிக் கப்பட்டபோதும், பல சமயங்களில் அவை நிறைவேற்றப் படாமல் விடப்பட்டன. கடுமையான தண்டனை விதிப்பதை விட, விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுவதில் கண்டிப்புக் காட்ட வேண்டுமெனவே நினைத்தார். 1823-ல் அவரது முயற்சி யால் கொண்டுவரப்பட்ட கிரிமினல் சட்டத் தொகுப்பு சீர்திருத் தத்தின்படி, சுமார் 100 குற்றவாளிகளுக்குக் கொலைத் தண்டனை விதிப்பது நின்றது. அச் சட்டத்தின் தன்மையைச் சென்ற தலைப்பிலே கண்டிருந்தோம். ஊழல்கள் நிறைந்திருந்த திருமணச் சட்டங்களும் ஜூரி முறைபற்றிய பல சட்டங்களும் திருத்தப் பட்டன.

1827-ல் லிவர்பூல் காலமடைந்ததையொட்டி, கானிங் பிரபு இங்கிலாந்தின் பிரதமராகப் பதவி ஏற்றிருந்தார். கத்தோ லிக்கர்களின் விடுதலையைக் (Catholic Emancipation) கானிங் ஆதரித்த கொள்கையை எதிர்த்துப் பல டோரிகள் பதவியைத் துறந்தனர். அவர்களிலே வெலிங்டன் பிரபுவும், ராபர்ட் பீலும் முக்கியமானவர்களாக இருந்தனர். 1828-ல் கானிங் இறந்துபோக, வெலிங்டன் பிரபு பிரதமரானார். அவரின் அமைச் சரவையிலே பீல் உள்நாட்டு மந்திரியாக அமர்த்தப்பட்டார்.

அப்போது அவரால் இன்னொரு முக்கியச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. 1829-ல் இலண்டன் நகரப் போலீஸ் படையை (Metropolitan Police) உருவாக்கினார். சாதாரண உடை தரித்திருந்த அப் போலீசாருக்குக் குறுந்தடி (baton) ஒன்று கொடுக்கப்பட்டது. பீலின் சுருங்கிய பெயரான 'பாப்' என்னும்

பெயரை அடிப்படையாகக் கொண்டு அவரால் தோற்றுவிக்கப் பட்ட போலீஸ் படையினருக்கு 'பாபீஸ்' எனப் பெயர் அளிக்கப் பட்டது. இலண்டன் நகருக்குமட்டுமே முதன்முதலில் அப் போலீஸ் படை அமைக்கப்பட்டபோதிலும், பின்னர் ஏனைய நகரங்களும் அது போன்ற போலீஸ் படைகளை அமைத்துக் கொள்ளலாயின.

கத்தோலிக்க விடுதலைச் சட்டம் (Catholic Emancipation Act) வெலிங்டன் அமைச்சரவையினால் 1829-ல் கொண்டுவரப் பட்டதற்கும் பீல் பொறுப்பாக இருந்தார். அயர்லாந்தின் பெரும்பான்மையினராக இருந்த கத்தோலிக்கர்களுக்கு அரசியல் உரிமை கொடுக்கப்படவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றிருந்தும், சோதனைச் சட்டப்படி (Test Act) பாராளுமன்றத்தில் அமரத் தகுதியற்றவர்களாகவே ஐரிஷ் கத்தோலிக்கர்கள் இருந்தனர். கத்தோலிக்க சங்கத்தின் தலைவரான டேனியல் ஓ' கானல் (Daniel O' Connell) என்பவர் 1823-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் கிளேர் (Clare) என்ற கவுண்டியில் போட்டியிட்டு, செல்வாக்கு மிகுந்த வெஸே ஃபிட்செரால்டு (Vesey Fitzgerald) என்ற பிராடஸ்டென்டு நிலப்பிரபுவைத் தோற்கடித்திருந்தார். ஆயினும், ஓ' கானல் கத்தோலிக்கரானதால் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சோதனைச் சட்டப்படி அமரத் தகுதியற்றவராக இருந்தார். அவருக்குப் பாராளுமன்றத்தில் இடம் கொடுக்காதுபோனால், அவரிடம் கட்டுப்பட்டிருந்த ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பயங்கரப் புரட்சியில் இறங்கலாமென எதிர்பார்க்கப்பட்டது. அயர்லாந்தின் கத்தோ லிக்கர்களுக்கும் பிராடஸ்டென்டுகளுக்கும் ஓர் உள்நாட்டுப் போர் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டுமானால் ஐரிஷ் கத்தோலிக் கர்களுக்கு விடுதலை அளித்தே தீரவேண்டுமென்ற நிலைமை அப்போது ஏற்பட்டது. டோரிக் கட்சியினர்களில் சிலர் கத்தோ லிக்கர்களுக்கு விடுதலை கொடுப்பதை எதிர்த்தபோதிலும் பிரதமர் வெலிங்டன் பிரபுவுக்குத் தம் முழு ஆதரவைப் பீல் கொடுத்து, அதற்கான சட்டம் 1829-ல் கொண்டுவரப்படுவ தற்கு உதவினார். கத்தோலிக்கர்கள் விடுதலைப் பிரச்சினையைப் பீல் முழுமனதுடன் ஆதரித்தார். அவரைக் கட்சித் துரோகி எனவும் மற்ற டோரிகள் அழைத்தனர். அதே ஆண்டில் வெலிங்டன் அமைச்சரவை வீழ்ச்சியுற்றதால், பீல் பதவியை இழக்கவேண்டியவரானார்.

எதிர்க்கட்சியின் வரிசையில் பீல் அமர்ந்திருந்தபோதிலும் கிரேயின் (Grey) விக் அமைச்சரவை முதல் பாராளுமன்றச்

சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, பீல் தம் ஆதரவைக் காட்டினார். கட்சிக் கட்டுப்பாடுகளை மீறி, சுயமாகச் சிந்தித்துப் புதிய சீர்திருத்தக் கருத்துகளை ஏற்கப் பீல் தயாராக இருந்தார்.

வெலிங்டன் பிரபு இதற்கிடையே அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதால் டோரிக் கட்சியின் தலைவராகப் பீல் ஏற்றுக் கொள்ளப்பட்டார். பழைய பத்தாம் பசலிக் கொள்கைகளை விட்டுவிட்டு, புதிய சீர்திருத்தக் கொள்கைகளைத் தம் கட்சியினர் ஏற்கவேண்டுமென்று பீல் வற்புறுத்தினர். டோரிகளில் பலர் அவர் கருத்தை ஏற்க மறுத்தபோதிலும், தம் கொள்கையினைப் பின்பற்றி அவர்களைக் கொண்டு கன்சர்வேடிவ் கட்சி (Conservatives) என்ற புதிய டோரிக் கட்சியை நிறுவினர். சீர்திருத்தங்களைத் தாம் வெறுப்பவரல்லர் எனவும், மிதமான மாற்றங்களைப் படிப்படியாகக் கொண்டுவருவதையே தாம் விரும்புவதாகவும் 1834-ல் தாம் வெளியிட்ட டாம்வொர்த் தேர்தல் அறிக்கையில் (Tomworth Manifesto) பீல் குறிப்பிட்டிருந்தார்.

பீல் பிரதமராதல்

1839-ல் மெல்போர்ன் (Melbourne) என்பவரின் விக் அமைச்சரவை இராஜினமா செய்ததைத் தொடர்ந்து ராபர்ட் பீல் மந்திரி சபையினை அமைக்கும் வாய்ப்பினைப் பெற்றார். ஆயின், பீல் அதிக நாள்கள் பதவியிலில்லை. விக்டோரியா மகாராணியாரின் பள்ளியறைச் சீமாட்டிகளில் சிலர் விக் கட்சியினரின் அனுதாபிகளென்றும், அரசி அவர்களின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டிருக்கிறரென்றும், ஆகவே அவர்கள் நீக்கப்பட்டு டோரிக் கட்சியின் பெண்களை அரசி தம் சீமாட்டிகளாக அமர்த்திக் கொள்ளவேண்டு மென்றும் பீல் வற்புறுத்தி அரசியுடன் ஒரு பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டார். அந்தக் கட்டுப்பாட்டுக்கு மகாராணியார் இசைய மறுத்ததால், பீல் தம் மந்திரி சபையை அமைக்க மறுத்தார்.

1841-ல் நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி காமன்ஸ் (Commons) சபையில் பெரும்பான்மை இடங்களைப் பெற்றதால், அதன் தலைவரான ராபர்ட் பீலை அமைச்சரவை அமைக்கும்படி விக்டோரியா அழைக்க, பீல் தமது இரண்டாவது மந்திரி சபையை (1841 - 1846) அமைத்தார்.

விக்டோரியா மகாராணியாரின் காலத்தில் சிறப்புற்று விளங்கிய முதல் பிரதமர், சர் ராபர்ட் பீல் என்றால் அது மிகையாகாது. தாம் பிரதமராக இருந்த காலத்தில் பல பிரச்சினைகள்

அவரால் தீர்க்கவேண்டி யிருந்தன. அவைகளில் முதலாவது அயர்லாந்தினைப்பற்றியது.

ஐரிஷ் விவகாரம்

ஓ' கானல் என்ற ஐரிஷ் பெருந்தலைவர் கிளான்டார்ஃப் (Clantorf) என்னுமிடத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து மாபெரும் கூட்டமொன்றைக் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார். அக் கூட்டம் நடைபெற்றால் ஐரிஷ் அமைதிக்கு அதனால் ஆபத்து விளையுமெனக் கருதி, அதைத் தடுக்கப் பீல் சற்றுக் கடுமையாக நடந்துகொண்டார். அக் கூட்டம் நடைபெறாது தடுக்கும்படி அயர்லாந்து கவர்னருக்கு உத்தரவிட்டதன்றி, அதையும் மீறிக் கூட்டம் நடைபெற்றால் அதைக் கலைக்க ஒரு படையினையும் தயாரிக்கும்படி பீல் ஆணையிட்டிருந்தார். கூட்டம் நடத்தப்பட வில்லை யெனினும் அரசாங்கத்தை அவதூறு செய்த குற்றத் திற்காக ஓ' கானலைக் கைது செய்யும்படியும் பீல் உத்தர விட்டார். அயர்லாந்தின் அனுமதியின்றிப் படைக்கலன்களை வைத்திருப்பதைத் தடுக்க, படைக்கலச் சட்டத்தைப் (Arms Act) பீல் கொண்டுவந்தார். பலாத்காரக் கொள்கையைக் கடைப் பிடித்து அரசாங்கத்தை எதிர்க்க வில்லியம் ஸ்மித் ஓ' பிரியன் (Smith O' Brien) என்ற ஐரிஷ்காரர் 'இள அயர்லாந்து' (Young Ireland) என்ற புரட்சிக் கழகத்தையும், ஜான் மிட்சல் (John Mitchel) என்பவர் 'ஐக்கிய அயர்லாந்தியர்' (United Ireland) என்ற இன்னொரு புரட்சிக் கழகத்தையும் அமைத்தபோது, பீல் அவர்களை நாடு கடத்த உத்தரவிட்டு, புரட்சிக்கருத்துகளை ஒரளவு ஒயச்செய்தார். அடக்குமுறைக் கொள்கையைப் பீல் தொடர்ந்து கடைப்பிடிக்கவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக ஐரிஷ் நிலப் பிரச்சினையை ஆராய டெவன்பிரபுவின் (Lord Devon) தலைமையில் பீல் அமைத்த ஆராய்ச்சிக் குழு விளங்கியது. கத்தோலிக்கர்களின் ஆதரவைப் பெறுவதற்காகக் கத்தோலிக்கக் குருமார்கள் பயிற்சி பெற்றுவந்த மாய்னூத் கல்லூரிக்கு (Maynooth College) அதுவரை அளிக்கப்பட்டுவந்த உதவித் தொகையை 9,000 பவுனிலிருந்து 26,000 பவுன்களாகப் பீல் உயர்த்தினார். கத்தோலிக்கர்களும், பிராடஸ்டென்டுகளும் ஒருங்கே கல்வி கற்க மதச்சார்பற்ற கல்லூரிகளைப் பெல்ஃபாஸ்ட் (Belfast), கார்க் (Cork), கால்வே (Galway) என்ற நகரங்களில் ஏற்படுத்தினார்.

பொருளாதாரச் சீர்திருத்தம்

பொருளாதாரத் துறையில் பீல் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். 1844-ல் அவரால் கொண்டுவரப்பட்டிருந்த

பாங்குச் சாசனச் சட்டத்தின் (Bank Charter Act) படி, தாள் நாணயங்களை வெளியிடும் பாங்கு பல கட்டுப்பாடுகளுக்குட்படுத்தப்பட்டது. அரசாங்க மதிப்பான 14 மில்லியன் பவுன்களுக்கு மட்டுமே தாள் நாணயங்களைப் பாங்கு வெளியிடலாமென்றும், அதன்பின் வெளியிடப்பெறும் ஒவ்வொரு தாள் நாணயத்திற்கும் சமமான மதிப்புள்ள தங்கக்கட்டிகள் பாங்கிலிருக்க வேண்டுமெனவும், பற்பல பாங்குகள் தங்கள் விருப்பம்போல் நாணயங்களை வெளியிடக் கூடாதென்றும், அக் கட்டுப்பாடுகளையெல்லாம் கண்காணிக்க இங்கிலாந்து பாங்கிற்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டது. மேற்கண்ட முறையினால் நாட்டில் பணவீக்கம் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

வியாபாரம் உயர்ந்தாலொழிய நாட்டின் செல்வநிலை உயராதென உணர்ந்து பல சுங்கவரிகளைத் தள்ளுபடி செய்து, தடையில்லா வியாபாரத்தையும் அவர் ஆதரித்தார். அதே சமயத்தில், பல உள்நாட்டுக் கைத்தொழில்களை வெளிநாட்டுப் போட்டியினின்றும் காக்கவேண்டி, கச்சாப் பொருள்கள்மீது விதிக்கப்பட்டிருந்த வரியை 5% வரையிலும், பொறி செய்பொருள்களின்மீது விதிக்கப்பட்டிருந்த வரியை 20% வரையிலும் பீல் குறைத்திருந்தார். வரிக்குறைப்பால் நாட்டின் வருமானம் பாதிக்கப்பட்டபோது, அதை நிவர்த்திக்க ஒரு புதிய வரியை விதித்தார். ஆண்டுக்கு 150:: பவுன்களுக்குமேல் வருமானம் பெற்றவர்கள் 1 பவுனுக்கு 7 பென்ஸ் வருமான வரியை மூன்றாண்டுகளுக்கொரு முறை செலுத்தவேண்டியவர்களானார்கள். தடையில்லா வாணிகக் கொள்கையைப் பின்பற்றுவதில் மிக்க அக்கறை காட்டிய பீல் வருமான வரிப்பணத்தின் உதவிகொண்டு ஏராளமான சுங்கவரிகளை ஒழித்தார். எல்லா ஏற்றுமதி வரிகளும் நீக்கப்பட்டன. பல இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டன. தடையில்லா வாணிகக் கொள்கையை அவரது டோரிக் கட்சியினர் எதிர்த்தபோதிலும், அக் கொள்கையினால் நாட்டின் வாணிகம் வளருமெனப் பீல் திடமாக நம்பினார்.

மற்றச் சீர்திருத்தங்கள்

ஏழைகளின் நலனில் கவனம் காட்டிய பீல், போக்குவரத்து சாதனங்களைக் கட்டுப்படுத்தி மைலுக்கு 1 பென்ஸ் கட்டணத்தில் மக்கள் பிரயாணம் செய்வதற்கேற்ப, ரெயில் வண்டிகளை விடும்படி முதலாளிகளை வற்புறுத்தினார்.

பொதுப்பணித் துறையிலும் கவனம் செலுத்திய பீல் மின்சாரத் தந்தி முறைகளை நாட்டில் வளர்க்கும்படி தனிநபர்களை

ஊக்கினர். நகரங்களில் சுகாதார வசதிகளை ஆராய்ந்து சிபாரிசு செய்து கமிஷன் ஒன்றைப் பீல் ஏற்படுத்தினர்.

சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதிலும் பீல் சளைத்தவராக இல்லை. பெண்களும், 10 வயதிற்குட்பட்ட சிறுவரும் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுக்க, 1842-ல் சுரங்கச் சட்டத்தைக் (Mines Act) கொண்டுவந்தார். ஆலைகளில் பெண்கள் வேலை செய்யும் நேரத்தை 12 மணியாகக் குறைத்தும், சிறுவர்களின் நேரத்தை 6½ மணியாகக் குறைத்தும் வேலை செய்யும் சிறுவர்கள் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரமாவது கல்வி கற்கவும் வற்புறுத்திய தொழிற்சாலைச் சட்டமொன்றை (Factory Act) 1844-ல் பீல் கொண்டுவந்தார்.

விவசாயத் துறையில் தனிக்கவனம் செலுத்திய பீல், அது சம்பந்தமான எல்லா விவகாரங்களையும் சேகரிக்க இராயல் விவசாயச் சங்கமொன்றை (Royal Agricultural Society) நிறுவியிருந்தார். வேதியல், தாவர இயலின்படி விவசாயம் வளர்ச்சி பெறப் பீல் பாடுபட்டார்.

இவரது அமைச்சரவையின் காலத்தில் மிக முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுவது (1846-ல்) தானியச் சட்டத்தைப் பீல் ஒழித்ததே. தானியச் சட்டங்களின்படி, உணவுத் தானியங்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டு வந்தன. வெளிநாட்டுத் தானியங்களின்மீது கடுமையான வரிகள் விதிக்கப்பட்டதால் அவற்றை இறக்குமதி செய்யமுடியாத நிலையிருக்க, உள்நாட்டுத் தானியத்தையே மக்கள் நம்பி வாழவேண்டியிருந்தது. அவை குறைந்த விலைக்குக் கிடைக்கவில்லை. தானியங்களின் விலை குறையாமல் இருக்கவேண்டு மென்பதே இங்கிலாந்தில் வாழ்ந்த நிலப்பிரபுக்களின் அவா. அதற்காகவே தானியச் சட்டங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அவர்கள் அக்கறை காட்டினர். ஆனால், குறைந்த விலைக்குத் தானியத்தைப்பெற விரும்பிய ஏழை மக்களும், நடுத்தர வகுப்பினரும் தானியச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி வந்தபோதிலும், அரசாங்கம் அதற்குச் செவி சாய்க்கவில்லை. தானியச் சட்டங்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று 1838-ல் மான்செஸ்டர் நகரில் தானியச்சட்ட எதிர்ப்புச் சங்கமொன்று (Anti Corn Law League) ஏற்படுத்தப்பட்டது. அதைத் தோற்றுவித்த ரிச்சர்ட் கோப்டன் (Richard Gobden) என்பவர் 1841-ல் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தானியச் சட்டத்தை ரத்து செய்யும்படி வற்புறுத்திவந்தார். ஜான் பிரைட் (John Bright) என்ற மற்றொரு பேச்சாளரும் கோப்டனுக்குத் துணையாகப் பிரசாரம் செய்துவந்தார்.

தானியச் சட்டங்கள் நீக்கப்பட்டாலன்றி மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கா தென்ற நிலைமை உணர்ந்துவரப்பட்ட நேரத்தில் அயர்லாந்தில் கடுமையாக உருளைக்கிழங்கு நோய் ஏற்பட்டுவிட்டது. உருளைக் கிழங்கு அயர்லாந்தின் முக்கிய உணவுப் பொருள். அதுமட்டு மன்றி வெளிநாட்டிலிருந்து உருளைக்கிழங்கு அயர்லாந்திற்குள் நுழையாவண்ணம் தானியச் சட்டம் தடுத்தது. அயர்லாந்து மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து உடனடியாகக் காக்க வேண்டு மென்றால், தானியச் சட்டத்தை ரத்து செய்தே தீரவேண்டு மென்ற நிர்ப்பந்தம் 1845-ல் ஏற்பட்டது. நிலைமையை முற்றிலும் உணர்ந்த பீல், தானியச் சட்டத்தை ஒழித்தே தீரவேண்டுமென நினைத்தபோதிலும் அவரது கட்சியினரான டோரிகளில் பலர் எதிர்த்தனர். அவரின் சக மந்திரிகளும் அதை ஒப்புக்கொள்ள மறுக்க, 1845 டிசம்பரில் பீல், தம் பதவியை இராஜினாமாச் செய்தார். ரஸ்ஸல் (Russel) என்ற விக் கட்சித் தலைவர், அடுத்த மந்திரி சபை அமைக்க முயன்று தோற்க, பீல் மீண்டும் பிரதம ராஞர். தம்மை ஆதரித்த சில டோரிகளின் உதவியாலும் எதிர்க் கட்சியினரான விக்குகள் பலரின் ஆதரவினாலும், 1846ஆம் ஆண்டு ஜனவரிமாதம், தானிய ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அச் சட்டத்தைக் கொண்டு வருவதால், தம் கட்சியி லேயே பிளவு ஏற்படுமென்று தெரிந்திருந்தும் மக்களின் நன்மையைமட்டுமே மனதில்கொண்டு, அச் சட்டத்தை அவர் நிறைவேற்றியது பாராட்டுதற்குரியது. தானியச் சட்டத்தைப் பீல் ரத்து செய்தால் அவர் கட்சியைச் சேர்ந்த பலர் டிஸ்ரேலி என்பவரின் தலைமையில் பாதுகாப்பாளர்கள் (Protectionists) என்ற புதிய கட்சியை கன்சர்வேடிவ் கட்சியிலே தோற்றுவித்து, பீலைக் கவிழ்க்க நேரத்தை எதிர்நோக்கி இருந்தனர். அயர்லாந் தில் ஏற்பட்ட கொலை, கொள்ளைகளை நிறுத்தப் பல அடக்கு முறைச் சட்டங்களைப் பீல் 1846-ல் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது, பாதுகாப்பு வாதிகள் விக்குகளோடு சேர்ந்து எதிர்த்ததால், அச் சட்டங்கள் பாராளுமன்றத்தில் தோல்வி யுற்றன. எனவே அதே ஆண்டில் மார்ச் 29ஆம் நாளில் தம் பதவியைப் பீல் இராஜினாமாச் செய்தார். பதவியை இழந்திருந்த போதும், காமன்ஸ் சபையில் தொடர்ந்து அங்கத்தினராக இருந்து பீல் தமது அரசியல் பணியைச் செய்துவந்தார்.

வெளிநாட்டுக் கொள்கை

உள்நாட்டு விவகாரங்களில் தம் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்த பீல் வெளிநாட்டு விவகாரங்களில் அதிக அக்கறை

செலுத்தவில்லை. கூடியவரை போரைத் தடுக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்த பீல் தம் பதவிக்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஆஷ்பர்ட்டன் (Ashburten, *1842*), ஒரிகான் (Oregon, *1846*) உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார். ஆஷ்பர்ட்டன் உடன்படிக்கையின்படி, கானடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருந்த எல்லை நிர்ணயிக்கப் பட்டது. ஒரிகான் உடன்படிக்கையின்படி பசிபிக் கடற்கரையோரம் பிரிட்டிஷாரின் எல்லையும் நிர்ணயிக்கப்பட்டது. வான்கூவர் (Vancoover) தீவு இங்கிலாந்திற்குக் கிடைத்தது.

வெளிநாட்டில் அமைதியையும், உள்நாட்டில் பொருளாதார வளத்தையும் பெற அயராமல் உழைத்த பீல் டோரிக் கட்சியினராக இருப்பினும், அதன் பழைய கொள்கையில் நம்பிக்கையற்றவராய் இருந்தார். அவரின் அரசியல் எதிரிகள் பீல் மும்முறை தம் கட்சிக்குத் துரோகம் செய்ததாகக் குறை கூறினர். *1829*-ல் கத்தோலிக்க விடுதலைச் சட்டத்திற்குத் தம் உழைப்பைக் கொடுத்தும், *1832*-ல் முதலாம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தை விக் கட்சியினர் கொண்டுவந்தபோது தம் ஆதரவை அளித்தும், *1846*-ல் தானியச் சட்டத்தை ரத்து செய்தும், கட்சிக்கோட்பாடுகளை மறந்து நாட்டின் நலனையே பீல் பெரிதாகக் கருதினர். டோரிகளிலே ஒரு விக்ககாவும், விக்குகளிலே ஒரு டோரியாகவும் பீல் இருந்தாரென்பது, அவரின் நடுநிலைமையான கொள்கையைக் காட்டுகிறது. நாட்டின் நலனுக்காகத் தம் கட்சிக் கொள்கைகளையும் விட்டுக் கொடுத்து, தாம் செய்ய நினைத்ததை முடிக்க, எதிர்க் கட்சியினரின் உதவியையும் பெறப் பீல் தயங்கவில்லை. பிற்போக்குவாதிகளிலே ஒரு முற்போக்குவாதியாகவும், முற்போக்குவாதிகளிலே ஒரு பிற்போக்குவாதியாகவும் பீல் நடந்து கொண்டது அவரின் சேவை மனப்பான்மையை எடுத்துக் காட்டுகிறது.

விக்டோரியா மகாராணியாரால் மனமுவந்து பாராட்டப்பட்ட சர் ராபர்ட் பீல், *1850*-ல் குதிரை மீதிருந்து வீழ்ந்த விபத்தில் அடிபட்டுக் காலமானார். அவரது அரசியல் எதிரியான டிஸ்ரேலி என்பவர், 'மிகச் சாமர்த்தியமுள்ள மனிதர்' எனப் பீலைக் குறிப்பிட்டதே அவருக்குப் புகழ்மாலையாக அமைகிறது. 'நாணம் நிறைந்த ஒரு விசித்திரப் பேர்வழி' என விக்டோரியா மகாராணியாரால் ஆரம்பக் காலத்தில் நையாண்டி செய்யப்பட்ட பீல், அவரின் கடைசிக் காலத்தில் பிரதமராகப் பணிபுரிய மிகவும் தகுதியுள்ளவர் என அவ் வரசியால் போற்றப்பட்டதை நாம் நினைவுகூரவேண்டும்.

(ஆ) பேரமைச்சர் பாமர்ஸ்டன் (Palmerston) (1784-1865)

உள்நாட்டுத் துறையில் தம் சீர்திருத்தங்களால் எங்ஙனம் பீல் புகழ் கொண்டாரோ, அதேபோன்று வெளிநாட்டுத் துறையில் தமது விவேகத்தினால் பாமர்ஸ்டன் பிரபு பெரும் புகழ் பெற்றிருந்தார்.

அக்டோபர் 20ஆம் தேதி 1784-ல் பிறந்திருந்த ஹென்றி ஜான் டெம்பிள் விஸ்கவுன்ட் (Henry John Temple Viscount Palmerston) ஹேரோ, எடின்பரோ, கேம்பிரிட்ஜ் முதலிய இடங்களில் கல்வி பயின்று, 1807-ல் டோரிக் கட்சியினராக ஒரு நசித்துப் போன பரோவின் பிரதிநிதியாகக் காமன்ஸ் சபையில் நுழைந்தார். இவருடைய நெடுநாளைய அரசியல் வாழ்வில், பாமர்ஸ்டன் நான்கு ஆட்சியாளர்களின் காலத்தில், பதினைறு பாராளுமன்றங்களில் பத்துப் பிரதம மந்திரிகளிடம் அமைச்சராகச் சேவைசெய்து, இறுதியில் தாமே இங்கிலாந்தின் பிரதமராக இருந்து ஆட்சிபுரியும் வாய்ப்பினையும் பெற்றார்,

மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில் தொடங்கிய பாமர்ஸ்டனின் பொதுவாழ்வு, நான்காம் ஜார்ஜ் (1820-1830), நான்காம் வில்லியம் (1830–1840) காலத்தில் தொடர்ந்து, விக்டோரியா மகாராணியாரின் காலத்தில் முற்றுப்பெற்ற பெருமையைப் பெற்றது.

1807 முதல் 1828 வரையில் பாமர்ஸ்டன் போரமைச்சராக (Secretary of war) பெர்சிவல், லிவர்பூல், கானிங், காடரிச் லெவிஸ்டன் போன்ற டோரிக் தலைவர்களின் அமைச்சரவையிலே பணியாற்றினர். கிழக்கு ரெட்ஃபோர்டு (East Redford), பென்ரின் (Penryn) என்ற தொகுதிகளின் பிரதிநிதித்துவத்தை ஓழிக்கப் பாமர்ஸ்டன் தம் தலைவர் வெலிங்டன் பிரபுவைக் கேட்டிருக்க, அவர் அதற்கு ஒப்புக்கொள்ளாதபோது டோரிக் கட்சியை விட்டே பாமர்ஸ்டன் விலகினர். அன்றிலிருந்து விக் (Whig) கட்சியின் முக்கியப் புள்ளியாக விளங்கிய பாமர்ஸ்டன் தொடர்ந்து பல விக் அமைச்சரவைகளில் பதவி பெற்றிருந்தார். கிரே (Grey) பிரபுவின் மந்திரி சபையில் வெளிநாட்டு அமைச்சராக 1820–ல் பதவி பெற்ற பாமர்ஸ்டன் 1838-ல் பீல் பிரதமரானபோது, விலக நேரிட்டது. மீண்டும் மெல்போர்ன் மந்திரிசபை ஏற்பட்டபோது, வெளிவிவகார மந்திரியாகப் பாமர்ஸ்டன் பதவி பெற்று 1841 வரை இருக்க, பீல் இரண்டாவது முறையாகப் பிரதமராக வந்தபோது, பதவியை விட்டு விலகினர். அடுத்து அமைக்கப்பட்ட ரஸ்ஸல் மந்திரிசபையில் பாமர்ஸ்டன் மீண்டும் வெளிநாட்டு அமைச்சராகப் (1846-1851) பணியாற்றினர். கொள்

கையில் தமக்கும் பிரதமரான ரஸ்ஸல் பிரபுவுக்கும் கருத்து வேறு பாடு ஏற்பட, பாமர்ஸ்டன் பதவியை விட்டு விலகியிருந்தபோதி லும், டெர்பி பிரபுவின்கீழ் அடுத்து அமைக்கப்பட்டிருந்த கன் சர்வேடிவ் அமைச்சரவையில் சேர மறுத்தார். 1852-ல் அபெர் டீன் அமைச்சரவை ஏற்பட்டபோது பாமர்ஸ்டன் உள்நாட்டு அமைச்சரானார். 1855-ல் பிரதமராகவும் பாமர்ஸ்டன் பதவி பெற்றிருந்தார். அடுத்து அமைக்கப்பட்டிருந்த டெர்பியின் (Derby) இரண்டாம் அமைச்சரவை கவிழ, 1859-ல் மீண்டும் பாமர்ஸ்டன் பிரதமராகப் பதவி பெற்று 1865 வரையில் அதி காரம் செலுத்தினர்.

சுறுசுறுப்பும் இராசதந்திரமும் கொண்டிருந்த அவரது வெளி நாட்டுக் கொள்கையில் மூன்று முக்கிய அம்சங்களிருந்தன.

அவரின் கொள்கைகள்

தமது பலத்தை அந்நிய நாடுகளுக்கு உணர்த்தும்படியாக ஐரோப்பிய விவகாரங்களில் இங்கிலாந்து கலந்துகொண்டு தன் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளவேண்டும்; வல்லரசை எதிர்த்து நடத்தப்படும் தேசியப் போராட்டங்களுக்கு இங்கி லாந்து ஆதரவு தரவேண்டும்; கீழைப் பிரச்சினையில் ரஷ்யா வின் செல்வாக்கிற்குத் தடை போட்டுத் துருக்கி அரசுக்குப் பாதுகாப்பாக இருப்பதென்ற மூன்று முக்கிய அம்சங்களே அவ ரின் வெளிநாட்டுக்கொள்கையின் விசேஷமாக இருந்தன.

பாமர்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள்கையை நான்கு காலப் பகுதிகளாகப் பிரிக்கலாம்:

1833-42; 1846-52: 1855-58; 1859-65

முதல் பகுதி (1833-1842)

வியன்னா காங்கிரஸ் ஏற்பாட்டின்படி (1815), மதம், மொழி இனம், கலாசாரம் போன்றவற்றில் முற்றிலும் மாறுபட்டிருந்த பெல்ஜியமும், ஹாலந்தும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. ஃபிரான்சில் ஏற்பட்ட ஜூலைப் புரட்சியின் (1830) விளைவாக, ஊக்கம் பெற்ற பெல்ஜியத்தினர் தங்களை டச்சுக்காரர்கள் பிடியி லிருந்து விடுவித்துக்கொள்ளக் கலகம் செய்தனர். இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சரான பாமர்ஸ்டன் பெல்ஜிய சுதந்தரப் போரை ஆதரிக்க முன்வந்தார்; இலண்டன் நகரில், ஃபிரான்சு பிரஷ்யா, ரஷ்யா நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்து ஒரு மாநாட் டைக் கூட்டி, பெல்ஜியம் பிரச்சினையை ஆராயும்படி பாமர்ஸ்டன் கூறினர். அதன்படி ஹாலந்திடமிருந்து பெல்ஜியம் பிரிக்கப்பட

வேண்டுமென்றும், நாட்டுக்கடனில் பாதியைப் பெல்ஜியம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் அம் மாநாடு சிபாரிசு செய்தது. ஆனால், ஹாலந்து பெல்ஜியத்தைப் பிரித்துப் போகவிட மறுத்தது. அச் சமயத்தில் குழப்பத்தைப் பயன்படுத்திச் சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொள்ளும் எண்ணத்தில் ஃபிரான்சின் படைகள் பெல்ஜியத்திற்குள் நுழைந்தன. ஃபிரெஞ்சுக்காரர்கள் உடனே பெல்ஜியத்திலிருந்து வெளியேறவேண்டுமென்றும், இல்லாவிடின் இங்கிலாந்து போர்தொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுமெனவும் பாமர்ஸ்டன் எச்சரிக்க, பெல்ஜியத்திலிருந்து ஃபிரெஞ்சுக்காரர்கள் வெளியேறினர். அதுமட்டுமன்றி ஃபிரான்சின் உறுதியான ஆதரவைப் பெற்றுப் பாமர்ஸ்டன் இலண்டன் மாநாட்டுச் சிபாரிசை ஹாலந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினர். அதனைப் பெற்றுக்கொள்ள டச்சுக்காரர்கள் மறுக்க பிரிட்டனும் ஃபிரான்சும் சேர்ந்து படைகளை அனுப்பி, பெல்ஜியத்திலிருந்து டச்சுக்காரர்களை விரட்டினர். சாக்ஸி கோபர்க் இளவரசரான லியோபால்டு என்பாரைப் பிரிட்டன் பெல்ஜியத்தின் மன்னரென அறிவித்தது. இறுதியில் 1839-ல் பெல்ஜியத்தின் சுதந்தரத்தை ஹாலந்து ஒப்புக்கொண்டது. பெல்ஜியத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு அது நடு நிலைமை நாடாக இருக்கவும், பிரிட்டன் மற்ற நாடுகளின் ஒப்புதலைப் பெற்றது. அங்ஙனமாகச் சுதந்தர பெல்ஜியம் தோன்றியதற்குப்பாமர்ஸ்டனின் கண்டிப்பான வெளிநாட்டுக் கொள்கை உதவியது.

போர்ச்சுகல் விவகாரம்

1828-ல் டாம் மிகுவெல் (Dom Migvel) என்பவர் தம் அண்ணன் மகள் மேரியா டி லா குளோரியாவைப் (Maria de la Gloria) போர்ச்சுகல் அரச பீடத்திலிருந்து விலக்கி ஆட்சியைத் தாம் கைப்பற்றிக்கொண்டார். மேரியாவின் தந்தையான பெட்ரோ-(Pedro) தம் மகளுக்கு உதவிசெய்ய பிரேசிலிலிருந்து போர்ச்சுகலுக்கு வந்து உள்நாட்டுப் போரைத் தொடங்கினர். டாம் மிகுவெல் ஆதரவாளர்களுக்கும் பெட்ரோவின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த அப் போர் எதேச்சாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையே நடந்த உள்நாட்டு போராகவே கருதப்பட்டது. பாமர்ஸ்டன் தம் ஆதரவைப் பெட்ரோவின் சார்பிலே தெரிவித்ததுமட்டுமல்லாமல், அவருக்கு உதவி செய்யப் படைக்கலம் தரித்த தொண்டர்களையும் அனுப்பினர். 1833-ல் பெட்ரோ லிஸ்பனைக் கைப்பற்றியதும் டாம் மிகுவெல் பட்டம் துறந்து ஓடிவிட்டார். மேரியா மீண்டும் அரியணையில் அமர்த்தப்பட்டார்.

ஸ்பானியச் சிக்கல்

தமக்குப் பிறகு தம் மகள் இஸபெல்லாவே (Isabella) ஸ்பானிய அரசியாக வரவேண்டுமென்று அறிவித்திருந்த மன்னர் பெர்டினண்டு 1833-ல் காலமானார். ஆயின், ஸ்பானியக் குடி மக்கள் பெர்டினண்டின் சகோதரரான டான் கார்லோஸ் (Don (Carlos) என்பவரே பட்டத்திற்கு வரவேண்டுமென்று விரும்பினர். ஆகவே, இசபெல்லாவின் ஆதரவாளர்க்கும், டான் கார்லோஸின் அநுதாபிகளுக்குமிடையே உள்நாட்டுப்போர் மூண்டது. சட்டரீதி யான முடியரசை ஆதரிக்கக் கடமைப்பட்டவராகப் பாமர்ஸ்டன் தம் உதவியை இசபெல்லாவுக்குக் கொடுக்க முன்வந்தார். அவ் விரோதமானவர்களை ஒடுக்க ஃபிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் போன்ற நாடுகளுடன் பாமர்ஸ்டனின் யோசனையின்பேரில் இங்கி லாந்து ஒப்பந்தம் செய்துகொண்டது.

மெஹெமெட் அலி தகராறு

கிரேக்கச் சுதந்தரப் போரில் துருக்கியச் சுல்தானுக்கு உதவி செய்திருந்த எகிப்தின் சிற்றரசான மெஹெமெட் அலி (Mehmet Ali), அப் போரின் முடிவில் தமக்குப் போதிய இழப்பீடு கிடைக் காத குறையின் காரணமாக, 1835-ல் தம் தலைவனை துருக்கிய சுல்தானுக்கு எதிராகக் கலகக் கொடியை உயர்த்த அவரின் மகனை இப்ராஹிம் பெரும்படையுடன் ஆசியா மைனரைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டு, சுல்தானின் தலைநகரான கான்ஸ் டாண்டிநோபிளை நோக்கி விரைந்தார். உதவி கோரித் துருக்கி குரல் கொடுத்தபோது, ரஷ்யா முன்வந்தது. ரஷ்யாவின் படைகள் துருக்கியில் நுழைந்து இப்ராஹிமின் முன்னேற்றத் தைத் தடுத்தன. சமயத்தில் உதவிசெய்த ரஷ்யாவுடன் துருக்கிய சுல்தான் உன்கியர் ஸ்கெலெஸ்ஸி (Unkiar Skelessi) என்ற இடத் தில் உடன்படிக்கை செய்துகொண்டு ரஷ்யக் கப்பல்களைத் தவிர வேறு எந்த நாட்டுக் கப்பலையும் டார்டனல்ஸ் ஜலசந்தியில் (the Dardanelles Straits) உள்ளே விடுவதில்லையென ஒப்புக் கொண்டார். ரஷ்யாவின் செல்வாக்கைத் துருக்கியில் வளர விடக்கூடாதென்ற கொள்கையை இங்கிலாந்து கொண்டிருந்த தால், அந் நிலையில் துருக்கிய விவகாரத்தில் பாமர்ஸ்டன் தலையிட விரும்பினர். மெஹெமெட் அலியை மிரட்டி, அவரின் மகன் கைப்பற்றியிருந்த சிரியா மாகாணத்தைத் துருக்கிய சுல்தா னுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி கூறினர். அதன்மூலம் துருக் கிக்கு ரஷ்ய உதவியைத் தேவையற்றதாகச் செய்யவேண்டு மென்பதே பாமர்ஸ்டனின் எண்ணம். ஆனால், ஃபிரெஞ்சு மன்ன ரான லூயி பிலிப் (Louis Philip) பிரிட்டிஷாரின் செல்வாக்கு

மத்தியதரைக்கடல் பகுதியில் வளராமலிருக்க, மெஹெமெட் அலியின் செல்வாக்கிற்குப் பங்கம் வரக்கூடாதெனக் கருதி, அவரை ஊக்குவித்தார். 1839ஆம் ஆண்டு மீண்டும் மெஹெமெட் அலி துருக்கியின்மீது போர் தொடுத்தார். உன்கியர் ஸ்கெலெஸ்ஸி ஒப்பந்தப்படி, ரஷ்யா துருக்கிக்கு உதவி செய்ய முன் வந்தது. அச் சமயத்தில், துருக்கியப் பிரச்சினையை எல்லா வல்லரசுகளும் சேர்ந்தே தீர்க்கவேண்டுமென்றும், எந்த ஒரு தனிப்பட்ட வல்லரசும் துருக்கிய விவகாரத்தில் தலையிடக்கூடாதென்றும் பாமர்ஸ்டன் அறிக்கை வெளியிட்டு, ரஷ்யா தனி நாடாகத் துருக்கியப் பிரச்சினையில் தலையிடுவதைத் தடுத்துவிட்டார். இலண்டனில் பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடித் துருக்கிய சுல்தானுக்கு உதவி செய்யத் தீர்மானித்தனர். ஃபிரான்சின் அநுதாபம் பெற்றிருந்த மெஹெமெட் அலி துருக்கியைத் தாக்குவதில் ஈடுபட்டிருக்க, பாமர்ஸ்டன் ஆஸ்திரியா, துருக்கி, பிரிட்டன் படைகளைக் கூட்டுச் சேர்த்து, மெஹெமெட் அலியின் படைகளைத் தோற்கடித்து அவரைப் பணிய வைத்தார். அங்ஙனமாகத் துருக்கியில் ரஷ்யாவின் தனிப்பட்ட செல்வாக்குப் பரவாமல் பாமர்ஸ்டன் தம் விழிப்பான கொள்கையினால் தடுத்துவிட்டார். 1841-ல் செய்யப்பட்ட உடன்பாட்டின்படி மெஹெமெட் அலி சிரியாவைத் துருக்கிக்குத் திருப்பிக்கொடுக்கவும், சுல்தானின் பிரதிநிதியாக எகிப்தை ஆளவும் ஒப்புக்கொண்டார்.

முதல் சீனப் போர்

1833-ல் சீனாவுடன் வியாபாரம் செய்துவந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோக வியாபார உரிமை ரத்து செய்யப்பட்டிருந்தது. சீன மக்கள் பெரிதும் விரும்பிய அபினி (opium) என்னும் லாகிரிப் பொருளை ஆங்கில வியாபாரிகள் சீன அரசாங்கத்தின் தடையை மீறிக் கள்ளத்தனமாக இறக்கி வியாபாரம் செய்துவந்தனர். அதை ஒழிக்க எண்ணி, சீன அரசாங்கம் 1839-ல், 6,000,000 பவுன் பெறுமான அபினியைப் பறிமுதல் செய்து, ஆங்கில வியாபாரிகளையும் கைது செய்தது. அதை எதிர்த்தே சீனாவின்மீது இங்கிலாந்து போர்தொடுத்தது. அதுவே, முதலாம் அபினிப் போர் (Opium War) என அழைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் நடந்த அப் போர் 1842-ல் நான்கிங் (Nanking) உடன்பாட்டின்கீழ் நிறுத்தப்பட்டது. பெருந் தொகையை நஷ்டஈடாகக் கொடுக்கச் சீனா ஒப்புக் கொண்டதல்லாமல் கான்டன் (Canton) உள்பட ஐந்து துறைமுகங்களில் வியாபாரம் செய்யும் உரிமையையும் சீனா ஆங்கிலேயர்களுக்குக்

கொடுத்தது. கீழைநாட்டு வியாபாரத்திற்கு ஒரு கேந்திரமாக விளங்கிய ஹாங்காங் (Hongkong) என்ற தீவும் இங்கிலாந்துக்குக் கொடுக்கப்பட்டது.

அங்ஙனமாக, தம் தலையிடும் கொள்கையின் காரணமாகத் தூரக்கிழக்கிலும் பாமர்ஸ்டன் தன் செல்வாக்கை உணர்த்தி, அதன் பேரரசின் வளர்ச்சிக்கு உதவியிருந்தார்.

இரண்டாம் பகுதி (1846-1852)

1846-ல் வெளிநாட்டு அமைச்சராக மீண்டும் பதவி பெற்றிருந்த பாமர்ஸ்டன் பல சிக்கலில் இங்கிலாந்தை ஈடுபடுத்தினர்.

ஸ்பானியத் திருமண விவகாரம்

ஸ்பெயினை ஆண்டுவந்த அரசி இசபெல்லாவும், அவள் சகோதரியும் திருமணமாகாத கன்னிகளாக இருந்தனர். பல ஐரோப்பிய அரச குடும்பங்கள் அவர்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்பின. குறிப்பாக, ஃபிரான்சு நாட்டை ஆண்டுவந்த லூயி ஃபிலிப் தம் மகனை ஸ்பானிய அரசிக்கு மணமுடித்து வைத்து, ஸ்பெயினில் தம் செல்வாக்கை நிலைநிறுத்த எண்ணினர். அதே காரணத்திற்காக அத் திருமண ஏற்பாட்டை இங்கிலாந்து எதிர்த்தது. இங்கிலாந்தின் எதிர்ப்பினால் தயக்கம் கொண்டிருந்த லூயி, 1846-ல் திடீரென்று மீண்டும் திருமண விவகாரத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்தார். புதிதாகச் செய்து கொள்ளப்பட்ட திருமண ஏற்பாட்டின்படி, ஸ்பானிய அரசி தம் உறவினரையே மணந்துகொள்ள வேண்டுமென்றும், லூயியின் மகன் அரசியின் சகோதரியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்றும் முடிவாகியது. இரு திருமணங்களும் ஒரே நாளில் நடந்தன. லூயி, தாம் முன்பு கொடுத்திருந்த வாக்குறுதியை மீறி ஸ்பானிய அரச குடும்பத்தினருடன் திருமண உறவைச் செய்துகொண்டதில் பாமர்ஸ்டனுக்கு அதிக எரிச்சல் ஏற்பட்டது. மேலும், அரசி இசபெல்லா பிள்ளைப் பேறின்றி இறப்பாளானால் வாரிசுரிமை அவளின் சகோதரியையும் அவளின் வாரிசையும் வந்தடையலாமெனவும் பாமர்ஸ்டன் பயந்து லூயியுடன் விரோத மனப்பான்மை கொள்ள ஆரம்பித்தார். ஆகவே, ஸ்பானியத் திருமண விவகாரத்தின் விளைவாக, இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் இடையே அதுவரை இருந்த நட்பு முரியக்கூடிய நிலையில் முடிந்திருந்தது. அதற்குப் பாமர்ஸ்டனின் பயமும் சந்தேகமுமே காரணம்.

ஸ்விட்சர்லாந்து பிரச்சினை

22 கான்டன்களைக் (Contons) கொண்ட ஸ்விட்சர்லாந்து நாட்டை வியன்னா காங்கிரஸ் உருவாக்கியிருந்தது. ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடாமல் நடுநிலைமை நாடாக இருந்த ஸ்விட்சர்லாந்து ஓர் இணைப்பரசாக இருந்துவந்தது. இணைப்பரசிலிருந்த 7 கத்தோலிக்க கான்டன்கள் ஜெசூட்டுகளின் செல்வாக்கிற்குட்பட்டுத் தங்களுக்குள் 'சோன்டர்பன்டு' (Sonderbund) என்ற ஏற்பாட்டை அமைத்து, இணைப்பரசிலிருந்து விடுபட்டுப் போக முயன்றன. அதன் விளைவாக, ஸ்விட்சர்லாந்து பிராடஸ்டன்டு கான்டன்களுக்கும், கத்தோலிக்க கான்டன்களுக்குமிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. ஆஸ்திரியா, ஃபிரான்சு போன்ற நாடுகள் கத்தோலிக்க கான்டன்களுக்கு உதவி செய்யத் தயாராக இருந்தன. அச் சமயத்தில் பிராடஸ்டென்டு கான்டன்களுக்குப் பாமர்ஸ்டன் உதவி செய்ய முன்வந்ததல்லாமல் மற்ற நாடுகளை ஸ்விட்சர்லாந்து விவகாரத்தில் தலையிடாமலும் தடுத்தார்; சரியான நேரத்தில் பாமர்ஸ்டன் செய்திருந்த உதவியினால், கத்தோலிக்கர்களின் எதிர்ப்பு அடக்கப்பட்டு, தங்களின் ஒருமைப்பாட்டினை ஸ்விஸ் இணைப்பரசு காப்பாற்றிக் கொண்டது.

பிப்ரவரிப் புரட்சி

1848-ல் ஃபிரான்சில் ஏற்பட்ட அப் புரட்சி, மன்னர் லூயி ஃபிலிப்பை அரியணையிலிருந்து நீக்கி, அந் நாட்டை ஒரு குடியரசாக மாற்றியிருந்தது. அப் புரட்சி மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் எதிரொலித்தது. ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவிலிருந்து பேரமைச்சர் மெட்டர்னிக் (Metternick) மக்களால் விரட்டப்பட்டிருந்தார். ஹங்கேரியை ஆஸ்திரியாவின் பிடியிலிருந்து விடுவிக்க, அந் நாட்டில் கோசுத் (Kossuth) என்ற புரட்சிக்காரர் பெருங்கிளர்ச்சி செய்தார். ஆஸ்திரியாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த வெனிஸ் (Venice), லம்பார்டி (Lambardy) என்ற வட இத்தாலியப் பகுதிகளில், மக்கள் சுதந்தரக் கிளர்ச்சி செய்தனர். ஜெர்மனியிலும் மக்கள் கலகம் செய்தனர். அங்ஙனம் ஐரோப்பாவின் பல இடங்களிலே எதேச்சாதிகார ஆட்சியினை எதிர்த்து மக்கள் கலகங்கள் செய்ய, பாமர்ஸ்டன் தம் ஆதரவை வெளிப்படையாகக் கிளர்ச்சிக்காரர்களுக்கு காட்டியதோடன்றி இரகசியமாக ஆக்தங்களையும் அவர்களுக்கு அனுப்பச் செய்தார்.

டான் பஸிபிகோ நிகழ்ச்சி

டான் பஸிபிகோ (Don Pacifico) என்னும் யூதர் பிரிட்டிஷ் பிரஜையாகி, கிரேக்கத் தலைவரான ஏதன்ஸ் (Athens) தலைநகரில்

வியாபாரம் செய்துவந்தார். அவருடைய வீட்டைத் தாக்கி, சொத்துகளைச் சில கிரேக்கர்கள் சூறையாடிவிட்டார்கள். அதற்குரிய நஷ்டஈட்டை அவர் கிரேக்க அரசாங்கத்திடம் கோரிய போது, அது மறுக்கப்பட்டது. பிரிட்டிஷ் பிரஜையைக் காப்பது இங்கிலாந்தின் கடமையென நினைத்த பாமர்ஸ்டன் ஒரு கப்பற் படையைக் கிரீசுக்கு அனுப்பி, அதன் அரசாங்கத்தைப் பயமுறுத்தி டான் பஸிபிகோவுக்கு நஷ்டஈட்டுத் தொகையைப் பெறச் செய் தார். தமது செய்கையின்மூலம் பிரிட்டிஷ் பிரஜைகள் உலகின் எப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களைக் காப்பாற்றவேண்டிய கடமை பிரிட்டிஷ் அரசுக்கு உண்டென்று பாமர்ஸ்டன் விளம்பரப் படுத்தினர்.

பதவி இழப்பு

1852-ல் பாமர்ஸ்டன் தம் பதவியைச் சில காரணங்களால் இழக்கவேண்டியிருந்தது. ஓர் ஆண்டுக்கு முன்பாக, கோசுத் என்ற ஹங்கேரியப் புரட்சித் தலைவர் இலண்டனுக்கு விஜயம் செய்தபோது, அவரைத் தமது இல்லத்திற்கு அழைத்து ஒரு வரவேற்பளிக்க பாமர்ஸ்டன் விரும்புவதை, அப்போது நாட்டின் பிரதமரான ரஸ்ஸல் (Russell) தடுத்திருந்ததால் இருவருக்கும் மனவேற்றுமை ஏற்பட்டிருந்தது. அது தவிர, பாமர்ஸ்டனுக்கும் அரசியாருக்கும் வெளிநாட்டுக் கொள்கையில் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றிவந்தன. அயல்நாடுகளுக்கு அவர் எழுதும் கடிதங்கள் பலவற்றைப் பாமர்ஸ்டன் அரசியாரிடம் காட்ட மறுத்தார். அப்படியே, காண்பிக்கவேண்டிக் கட்டாயப் படுத்தப்பட்டாலும், காண்பித்தபின் அவற்றில் பல மாற்றங்களை அரசியின் அநுமதியின்றிப் பாமர்ஸ்டன் புகுத்திவந்ததால், விக்டோரியாவின் கோபத்திற்கு ஆளாகியிருந்தார். இவ்வாறுகத் தம் பிரதமரிடமும், மகாராணியாரிடமும் வெறுப்பைப் பெற் றிருந்த பாமர்ஸ்டன், 1851-ல் ஃபிரான்சில் லூயி நெப்போலியன் பலவந்தமாக அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு, தம்மைப் பேரரசராக அறிவித்துக்கொண்டபோது, பிரதமரையும், இராணி யாரையும் கலந்தாலோசிக்காமல் தம் ஆதரவைப் பாமர்ஸ்டன் கொடுக்க முன்வந்தார். அதைக் கேள்வியுற்ற பிரதமர் ரஸ்ஸல் பாமர்ஸ்டனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்.

பாமர்ஸ்டன் அமைச்சரவையிலிருந்து விலக்கப்பட்ட சில மாதங்களுக்குள்ளேயே ரஸ்ஸல் விக் (Whig) மந்திரி சபை வீழ்ந்தது. அதையடுத்து, டெர்பி பிரபுவின் தலைமையில் அமைக் கப்பட்ட டோரி மந்திரி சபையின் பாதுகாப்புக் (Protection)

கொள்கையை ஒப்புக்கொள்ளாததால், பாமர்ஸ்டன் அந்த அமைச்சரவையில் சேர மறுத்தார்.

மீண்டும் பதவி பெறுதல்

டெர்பி (டோரி) மந்திரி சபை கவிழ்ந்ததும், அபெர்டீன் தலைமையில் ஒரு கூட்டு அமைச்சரவை அமைக்கப்பட்டபோது பாமர்ஸ்டன் உள்நாட்டு அமைச்சராகப் பதவி பெற்றார். அப்போதுதான் கிரிமியப் போர் (1854) தொடங்கியது. அப் போரினைச் சரிவர நடத்த முடியாது, அபெர்டீன் தடுமாறிய போது, பொதுமக்கள் சபையில் நம்பிக்கையிழந்து 1855-ல் அம் மந்திரி சபை வீழ்ந்தது. கிரிமியப் போரை வெற்றிகரமாக நடத்தும் திறமை பல ஆண்டுகளாக வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றிய பாமர்ஸ்டனுக்கு இருக்கும் என்ற நம்பிக்கையில் அவரே நாட்டின் பிரதமராக்கப்பட்டார்.

மூன்றும் பகுதி (1855 - 1858)

பாமர்ஸ்டன் பிரதமராதல்: கிரிமியப் போர்

கிரிமியப் போரை வெற்றியுடன் நடத்தி முடிக்கக்கூடியவர் பாமர்ஸ்டன் ஒருவரே என பிரிட்டிஷார் எதிர்பார்த்ததில் தவறெ துவுமில்லை என்பதை அடுத்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின. நாட்டின் பிரதமரான பாமர்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள் கையின் பொறுப்பையும் ஏற்றுக் கிரிமியப் போரில் தம் முழுக் கவனத்தைச் செலுத்தினர். போர் இலாகாவைச் சீர்படுத்தி உடனுக்குடன் கிரிமியாவில் போர் புரிந்த ஆங்கில வீரர்களுக்குப் படைக்கலங்கள் போய்ச் சேர வழி செய்தார். அப்போதைக் கப்போது, உதவிப் படைகளையும் அனுப்பினர். ரஷ்யாவின் கேந்திரமான செபஸ்டபூல் (Sebastapool) வீழ்ந்ததும் போர் முடிவுற்றது. அடுத்து நடந்த பாரிஸ் மாநாட்டில் (1856) கலந்துகொண்ட இங்கிலாந்து, துருக்கியின் சுதந்தரத்தைக் காத்து, ரஷ்யாவின் ஆதிக்கம் பால்கன் தீபகற்பத்தில் பரவ வொட்டாமல் தடுத்தது என்றால், அது பாமர்ஸ்டனின் கொள் கைக்கு வெற்றி எனலாம்.

இரண்டாம் சீனப் போர் (1857 - 1858)

கான்டன் நகரில், பிரிட்டிஷ் கொடியைப் பறக்கவிட்டுச் சில பிரிட்டிஷ் அதிகாரிகளை ஏற்றிவந்த ஏரோ (Arrow) என்ற சீனக் கப்பலைச் சீன அரசாங்கத்தின் சார்பில் அதிகாரிகள் கைப்பற்றிக் கொண்டனர். பிரிட்டிஷ் தூதுவர், கப்பலை விடுவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, சீன அரசாங்கம் அதை நிரா

கரித்தது. அச் சமயத்தில் பாமர்ஸ்டன் பிரிட்டிஷ் கப்பல்களை அனுப்பி, கான்டன் துறைமுகத்தைத் தாக்கச் செய்தார். தாக்கு தலுக்குப் பயந்து சீன அரசாங்கம் பணிய முன்வந்தது. அதன்படி 1858-ல் டீயென்ஸ்டன் (Tientsin) என்ற இடத்தில் உடன் படிக்கை கையெழுத்தாகியது. அதன்படி, ஆங்கிலேயரின் வியா பார உரிமைகளை மதிக்க சீனம் ஒப்புக்கொண்டது.

பதவியை இழத்தல்

1858-ல் ஃபிரெஞ்சு அரசாங்கத்தைத் திருப்தி செய்யக் கொண்டுவரப்பட்ட ஒரு மசோதாவின் காரணமாக, பாமர்ஸ் டனின் மந்திரி சபை கவிழ்ந்தது.

மூன்றும் நெப்போலியன் பாரிஸ் தெருவொன்றில் கோச்சு வண்டியில் போய்க்கொண்டிருந்தபோது, ஆர்ஸினி (Orsini) என்ற ஓர் இத்தாலிய தேசியவாதி குண்டினை எறிந்தான். மன்னர் தப்பிவிட்டார். கைது செய்யப்பட்ட ஆர்ஸினி விசாரிக்கப்பட்ட போது, அவன் வீசிய குண்டு இங்கிலாந்தில் செய்யப்பட்டதை ஒப்புக் கொண்டான். உடனே, ஃபிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சர் இங்கிலாந்தைக் குறை கூற ஆரம்பித்தார்; ஈவிரக்க மற்ற கொலைகாரர்களுக்கு இங்கிலாந்து புகலிடமாக இருக்கிறது என்று ஃபிரெஞ்சு அரசாங்கம் வசைபொழிய ஆரம்பித்தது. ஃபிரெஞ்சு அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தும் வகையில், ஆர்ஸினி போன்ற கொலைகாரர்கள் இங்கிலாந்தில் புகுவதைத் தடுக்க பிரிட்டிஷ் அரசாங்கம் 'கொலை சூழ்ச்சி மசோதாவை' (Conspiracy Bill) கொண்டுவந்தது. பிரிட்டனைக் கேவலமாகத் தாக்கிய ஃபிரெஞ்சு அரசாங்கத்தைத் திருப்திப்படுத்த, பாமர்ஸ்டன் அரசாங்கம் அம் மசோதாவைக் கொண்டுவந்தது பலருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அம் மசோதா காமன்ஸ் சபையில் தோற்கடிக்கப்பட்டது. அதையொட்டியே, பாமர்ஸ் டன் தம் முதல் மந்திரி சபையினைக் கலைத்தார்.

நான்காம் பகுதி (1859 - 1865)

டெர்பி பிரபுவின் தலைமையில் அமைக்கப்பட்ட மந்திரி சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மீண்டும் பிரதமர் பதவி 1859ஆம் ஆண்டில் பாமர்ஸ்டனைத் தேடி வந்தது.

மூன்றும் சீனப் போர் (1859)

டீயென்ஸ்டன் உடன்பாட்டின் அம்சத்தை மீறி, சீன அரசு ஆங்கில வியாபாரிகளைத் துன்புறுத்தியதால், பாமர்ஸ்டனின்

ஆணைப்படி இங்கிலாந்து மீண்டும் சீனாவின்மீது போர் தொடுத்தது; உதவிக்கு ஃபிரான்சும் சேர்ந்துகொண்டது. தாக்கு கோட்டைகளைக் (Takuforts) கைப்பற்றி, பீகிங் நகரை ஆங்கிலோ-ஃபிரெஞ்சுத் துருப்புகள் நெருக்கியபோது, சீன அரசாங்கம் சமாதானம் பேச ஒப்புக்கொண்டது. அதன்படி, சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்த அனுப்பப்பட்ட நான்கு ஆங்கிலேயத் தூதுவர்கள் நயவஞ்சகமாகச் சீனர்களால் கடத்தப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர். அந்த அடாத செய்கையைக் கண்டிக்கும் வகையில் ஆங்கிலேயப் படைகள் சீனப் பேரரசின் கோடை அரண்மனையைத் தாக்கிச் சேதப்படுத்தின. அதற்குப் பின், சீன அரசாங்கம் பணிந்து, பீகிங் (Peking) உடன்படிக்கைக்கு (1860) ஒப்புக்கொண்டது. அதன்படி ஆங்கிலேயர்களுக்கு வியாபாரச் சலுகைகளைக் கொடுக்க ஒப்புக்கொண்டதுடன், பீகிங் நகரில் ஆங்கிலப் பிரதிநிதியை ஏற்றுக்கொள்ளவும் சீன அரசு இசைந்தது.

இத்தாலிய சுதந்தரப் போர்

ஃபிரான்சின் உதவி பெற்று, கவூர் (Cavoor) ஆஸ்திரியப் படைகளை லம்பார்டியிலிருந்து விரட்டியபோது, இங்கிலாந்து தன் மானசீக ஆதரவைத் தெரிவித்துக்கொண்டது. இத்தாலிய விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொண்டிருந்த பாமர்ஸ்டனுக்குத் தம் முழு ஆதரவைக் காட்டவேண்டிய சந்தர்ப்பம் விரைவில் கிடைத்தது. கரிபால்டி (Garibaldi) தம் செஞ்சட்டை வீரர்களுடன் சிசிலியைக் கைப்பற்றி 1860-ல் மெசானா ஜல சந்தியைக் (Straits of Messana) கடந்து நேப்பிள்சில் தம் 1000 வீரர்களுடன் நுழைந்தபோது, அவரைத் தடுத்து நிறுத்த பிரிட்டிஷ் - ஃபிரெஞ்சுக் கூட்டுக் கப்பற்படையை அனுப்ப வேண்டுமென்ற யோசனையை ஃபிரெஞ்சு அரசாங்கம் தெரிவித்த போது, அதை மறுத்ததோடன்றிப், ஃபிரான்சும் அதில் தலையிடாவண்ணம் தடை செய்தார். நேபிள்ஸ் விடுவிக்கப்பட்டது. தொடர்ந்து போப் ஆண்டவரின் பகுதிகளும் (ரோம் நீங்கலாக) கவூரினால் விடுவிக்கப்பட்டன. 1860-ல் ரோம், வெனிஸ் ஆகிய இரண்டைத் தவிர, மற்ற எல்லா இத்தாலியப் பகுதிகளும் சார்டினிய அரசர் விக்டர் இமானுவேல் தலைமையில் விடுதலை பெற்று, ஐக்கியமடைந்தன. ஒற்றுமையுற்ற இத்தாலியை பாமர்ஸ்டன் அங்கீகரித்து, அதன் விடுதலையிலும், ஒற்றுமையிலும் தமக்கு இருந்த அக்கறையைக் காட்டிக்கொண்டார்.

அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861 - 1865)

வடக்கு மாநிலங்களுக்கும் தெற்கு மாநிலங்களுக்கும் ஏற்பட்ட அப் பெரும் உள்நாட்டுப் போரில், பாமர்ஸ்டன் அரசாங்கம் நடுநிலைமையை வகித்தது. இருப்பினும், அக் காலத்தில் ஏற்பட்ட இரு நிகழ்ச்சிகளால் அமெரிக்கா – இங்கிலாந்து உறவு பழுதடைந்தது. ஐரோப்பாவுக்கு வந்துகொண்டிருந்த ட்ரென்ட் (Trent) என்ற ஆங்கிலக் கப்பலில் தென்னுட்டவரின் இரு ஏஜெண்டுகள் இருக்கக் கண்டு, வடநாட்டினர் அக் கப்பலை நிறுத்தி அவர்களிருவரையும் கைது செய்தனர். அதை அத்து மீறிய செய்கையாக இங்கிலாந்தின் அரசாங்கம் கண்டித்து, அதற்கென ஐக்கிய அரசாங்கத்திடம் மன்னிப்பைக் கோரியது. சில நாள்களில் லிவர்பூல் துறைமுகத்தில் கட்டப்பட்ட அலபாமா (Alabama) என்ற போர்க்கப்பல் தென்னவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்க, அக் கப்பல் வட அமெரிக்கர்களின் வியாபாரக் கப்பல்களைத் தாக்கிச் சேதம் விளைத்துவந்தது. தென்னவர்களுக் குக் கப்பலைக் கொடுத்து ஆதரவளித்ததன் மூலமாக, இங்கிலாந்து தன் நடுநிலைமைக் கொள்கையிலிருந்து விலகிவிட்டதாக, ஐக்கிய அமெரிக்க அரசு குறை கூறியது. அவ் விரு நிகழ்ச்சிகளைத் தவிர எக் கட்சியில் நியாயம் இருக்கிறதென்று தெரியாமல் வடவர் களுக்கும் தென்னவர்களுக்கும் நடந்த அந்த உள்நாட்டுப் போரில் இறுதிவரை பாமர்ஸ்டன் தலையிடாதது போற்றப்படத்தக்கதே.

ஜப்பான் விவகாரம் (1862)

அந்நியர்களை நுழையவிடாமல் ஜப்பானிய அரசாங்கம் தடுத்துவந்தபோதிலும், சில ஆங்கிலேயர்கள் பாமர்ஸ்டன் காலத்தில் ஜப்பானில் நுழைந்திருந்தனர். அத்துமீறி அங்ஙனம் நுழைந்திருந்த ஓர் ஆங்கிலேயரை ஜப்பானியர் கொன்றுவிட் டனர். பிரிட்டிஷ் பிரஜையின் கொலைக்குப் பழிவாங்க வேண்டு மென்று பாமர்ஸ்டன் உத்தரவுப்படி, ஆங்கிலப் படை ஜப்பா னுக்குள் நுழைந்து அரசாங்கத்தைப் பணியவைத்தது. கொலை செய்யப்பட்ட ஆங்கிலேயனுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை நஷ்டஈடாகக் கொடுக்க ஜப்பானிய சர்க்கார் உடன்பட்டது. அத்துடன், யோகொஹாமா (Yokohama) என்ற துறை முகத்தைத் தவிர, மற்ற எல்லா ஜப்பானியத் துறைமுகங்களுடன் வியாபாரம் செய்யவும் பிரிட்டிஷார் அநுமதி பெற்றனர்.

போலந்து விவகாரம்

ரஷ்யர்களின் அடக்குமுறைகளை எதிர்த்து அவர்களுக்கு அடிமைப்பட் டிருந்த போலந்து மக்கள் 1863-ல் புரட்சி செய்த.

போது, பாமர்ஸ்டன் தம் மனப்பூர்வமான ஆதரவை அவர் களுக்குத் தெரிவித்துக்கொண்டார். ஆயின், அப் புரட்சியை ரஷ்யா கடுமையாக அடக்க முற்பட்டபோது உதவியளிக்க பாமர்ஸ்டன் துடித்தபோதிலும், பாராளுமன்றத்தின் தயக் கத்தின் காரணமாக வாளாவிருக்கவேண்டியவரானர்.

டென்மார்க் - பிரஷ்யப் போர்

ஆஸ்திரியாவுடன் சேர்ந்து, பிரஷ்யாவின் சான்சலர் பிஸ் மார்க் (Bismark) நாடு பிடிக்கும் ஆசைகொண்டு, ஜெர்மனிய ஐக்கியத்தின் முதல் கட்டமாக ஸ்லெஸ்விக் (Schleswig), ஹோல்ஸ் டைன் (Holstein) பகுதிகளைப் பெற டென்மார்க்குடன் போர் செய்தபோதும், பாமர்ஸ்டன் பிஸ்மார்க்கை மிரட்டினரே தவிர, டென்மார்க்குக்கு உதவியாகப் போரில் இறங்கவில்லை.

போலந்து, டென்மார்க் விவகாரங்களில் பாமர்ஸ்டன் சற்று நிதானமாக நடந்துகொண்டாரென்றால், அதற்குக் காரணம், அவருக்குப் போதிய ஆதரவைக் கொடுக்க மறுத்திருந்த அரசி யாரும் மக்கள் மன்றத்தினருமே ஆவர். இருப்பினும், ஏறக் குறைய அரை நூற்றாண்டுக்கு மேலாக மற்ற ஐரோப்பிய உலக விவகாரங்களில் அவ்வப்போது தலையிட்டு, இங்கிலாந்தின் செல் வாக்கைப் பாமர்ஸ்டன் நிலைநிறுத்தியிருந்தார். மக்களும், பொதுவாக அவரின் கொள்கைகளைப் பாராட்டினர். பிரிட்டிஷ் பேரரசின் பெருமையைச் சிறக்கச் செய்ததில் அவரின் காலத்தில் அவருக்கு நிகராக பாமர்ஸ்டனே இருந்தார்.

வெளிநாட்டுக் கொள்கையில் பேரரசின் சிறப்பினைமட்டும் அவர் கருதவில்லை. அடக்குமுறைகளை எதிர்த்து எங்கெங்கு மக்கள் சுதந்தரக் கிளர்ச்சி செய்தனரோ, அவர்களுக்கெல்லாம் தமது உதவியையும், ஆதரவையும் கொடுக்கவும் பாமர்ஸ்டன் தயங்கவில்லை. வெளிநாட்டுக் கொள்கையில் தாராள நோக்கினைக் கொண்டிருந்த பாமர்ஸ்டன், உள்நாட்டுக் கொள்கையில், ஏனோ பரந்த மனப்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. 1832ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டத்திற்குப் பின் மேலும் பாராளு மன்றத்தைச் சீர்திருத்தினால் பொருத்தமாகாது எனத் திடமாக நம்பினர். வாக்குரிமையையும் விஸ்தரிக்க மறுத்தார். இணங் காதார்களுக்கு மேலும் உரிமைகள் கொடுக்க மறுத்தார். உள் நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் பாமர்ஸ்டன் ஒரு பழமைவாதியாக இருந்தபோதிலும், தமது வெளிநாட்டுக் கொள்கையினால், பிரிட்டிஷ் மக்களின் மதிப்புக்கு உரியவரானர்-

'பாம்' (Pam) என்று அன்போடு மக்களால் அழைக்கப்பட்ட பாமர்ஸ்டன் 18-10-1865-ல் காலமானார்.

ஃபிலிப் கியுடெல்லா என்னும் ஆசிரியர் குறிப்பிட்டதுபோல் பாமர்ஸ்டனின் வாழ்க்கை, 18ஆம் நூற்றாண்டுக்கும், 19ஆம் நூற்றாண்டுக்கும் இடையேயுள்ள ஆச்சரியகரமானதொரு பாலமாக விளங்குகின்றது.

கொள்கையில் ஆழ்ந்த உறுதி மனப்பான்மைபோன்ற 18ஆம் நூற்றாண்டின் குணத்தைப் பெற்றிருந்த பாமர்ஸ்டன் 19ஆம் நூற்றாண்டுக்குரிய தாராளக் கருத்துகளைக் கொண்டிருந்ததையே கியுடெல்லா (Guedalla) மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

(இ) பேரமைச்சர் டிஸ்ரேலி (Disraeli) (1804-1881)

அரசியல் வாழ்க்கை

19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் முக்கிய அரசியல் நிர்வாகியாக விளங்கிய பென்ஜமென் டிஸ்ரேலி (Benjamin Disraeli) 1804-ல் டிசம்பர் மாதம் ஐசன் டிஸ்ரேலி என்ற இத்தாலிய யூதருக்கு மகனாகப் பிறந்தவர். பல்கலைக்கழகப் படிப்பு இல்லாமலேயே, தம் சுய முயற்சியால் நல்லறிவு பெற்று, வழக்கறிஞராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். 1828 - 1831 ஆண்டுகளில் ஸ்பெயின், இத்தாலி, பாலஸ்தீனம் முதலிய நாடுகளுக்குச் சென்று மிகுந்த அனுபவங்களைப் பெற்றவராக நாடு திரும்பிவந்தார். 1832-ல் சுயேச்சை அபேட்சகராகக் காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்தே அவரது அரசியல் வாழ்க்கை தொடங்கியது. அச் சபையில் அவர் ஆற்றிய முதல் பேச்சு மற்றவர்கள் கேலிசெய்வதற்குரியதாக அமைந்துவிடவே, பேச்சைப் பாதியிலேயே முடித்து ஆசனத்தில் அமரும்படியாக டிஸ்ரேலி வற்புறுத்தப்பட்டார். 'எடுத்த காரியத்தை முடிக்காமல் நான் விட்டதில்லை. என்னை நீங்கள் எல்லாரும் விரும்பிக் கேட்கும் காலம் விரைவில் வரும்' என்று தன்னம்பிக்கை தெரிவிக்க, டிஸ்ரேலி சூளுரை பேசியிருந்தது பொய்யாகவில்லை என்பது பின்னர்த் தெரியவந்தது. ராபர்ட் பீலின் அரசியல் செல்வாக்கினால் கவரப்பட்டு, டோரிக் கட்சியில் சேர்ந்து, 1837 முதல் 1843 வரை, அவர் தம் முக்கியச் சீடராகவே டிஸ்ரேலி விளங்கினார். ஆயின், எதிர்பார்த்ததுபோல் தம் அமைச்சரவையில் பீல் அவரைச் சேர்த்துக் கொள்ளாததால், டிஸ்ரேலி மனக்கசப்படைந்து, 'இளைய இங்கிலாந்து' (Young England) என்ற

இளைய கட்சியினர்களுடன் சேர்ந்து பிரதமர் பீலைக் கண்மூடித் தனமாகத் தாக்கினர். 1846-ல் தானியச் சட்டங்களை பீல் ரத்து செய்தபோது, அவரைக் 'கட்சித் துரோகி' எனக் கண்டனம் செய்து, டோரிக் கட்சியிலிருந்து பிரிந்து, தம் நண்பர்களுடன் 'கன்சர்வேடிவ்' என்ற புதுக்கட்சியை டிஸ்ரேலி தொடங்கினர். 1848 வரையில் ஜார்ஜ் பென்டிங் (George Bentignk) பிரபுவின் தலைமையில் கட்டுப்பட்ட கன்சர்வேடிவாக டிஸ்ரேலி இருக்க, பெண்டிங் காலமான பின்னர்க் கட்சியின் தலைவரானார். 1852-ல் டெர்பி பிரபுவினால் அமைக்கப்பட்ட முதல் அமைச்சரவையில் டிஸ்ரேலி நிதி மந்திரியாக (Chancellor of the Exchequer) இடம் பெற்றார். கிரிமியப் போர் நடந்த காலத்தில் எதிர்க்கட்சியின் வரிசையிலே அமர்ந்திருந்த டிஸ்ரேலியை 1867-ல் நிதி மந்திரி பதவி மீண்டும் தேடிவந்தது. பிரதமர் டெர்பி பிரபு உடல்நலக் குறைவினால் அரசியலிலிருந்து விலகிவிடவே அதே ஆண்டில் நாட்டின் பிரதமராகும் வாய்ப்பினையும் டிஸ்ரேலி பெற்றார். ஆயின், அதே ஆண்டில் அவரின் கன்சர்வேடிவ் கட்சி பாராளு மன்றத் தேர்தலிலே தோல்வியுற்றதால், டிஸ்ரேலி பதவியை விட்டு விலக வேண்டியிருந்தது. இருப்பினும், 1874-ல் மீண்டும் பிரதமராகப் பதவி பெற்று 1880 வரை அதிகாரம் செலுத்தினர்.

டிஸ்ரேலியின் கொள்கைகள்

நாட்டின் பழைய நிறுவனங்களை அழியவிடாமல் அப்படியே காத்தல், நாட்டு மக்களின் நலன்களை வளமுறச்செய்தல், பேரரசைக் காத்து அதன் பெருமையை உயர்த்துதல் என்ற முப் பெருங் கொள்கையினைக் கொண்டவராகவே டிஸ்ரேலி விளங் கினர். அக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே டிஸ்ரேலி நிர்வாகம் நடத்தினர்.

அவரது உள்நாட்டுக் கொள்கை

டிஸ்ரேலி பதவியிலிருந்த காலத்தில் அரசியல், சமூகம், பொருளாதார சமயத் துறைகளில் பற்பல சீர்திருத்தச் சட்டங் கள் கொண்டுவரப்பட்டிருந்தன. பழைய வழக்கங்களை முற்றி லும் மாற்ற விரும்பாதுபோயினும், அவசியம் நேர்ந்தபோது, புதுமையைப் புகுத்த டிஸ்ரேலி தயங்கவில்லை.

1867-ல் இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தை டிஸ்ரேலி கொண்டுவந்தார்; சாதாரண பரோக் களின் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டு ஜனத்தொகை நிரம்பி யிருந்த நகரங்களுக்கு அச் சட்டம் பிரதிநிதித்துவம் வழங்கி யிருந்தது. நகரங்களில் சொந்த வீடுகளில் குடியிருந்த எல்லா

ஆண்களுக்கும், கவுண்டிகளில் ஆண்டொன்றுக்கு 1 பவுனுக்குக் குறையாமல் வாடகை செலுத்தியவர்களுக்கும் அச் சட்டத்தினால் வாக்குரிமை கிடைத்தது.

1874-ல் அனுமதிச் சீட்டுச் சட்டம் (Licensing Act) கொண்டு வரப்பட்டது. அதன்படி, தங்களின் விருப்பம்போல் நீதிமன்றங்களில் மாஜிஸ்ரேட்டுகள் பணியைத் தொடங்கும் வழக்கம் தடுக்கப்பட்டது. கவுண்டிகளிலிருந்த மன்றங்கள் காலை 10 மணிக்கும் பட்டணங்களிலிருந்த நீதிமன்றங்கள் காலை 11மணிக்கும் திறக்கப்பட வேண்டுமென, அச் சட்டத்தின்படி உத்தரவாகியது.

1873ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட நில புலன்களின் குத்தகை விற்பனைச் சட்டம் (Leases and Sales of Settled Estates Act) தேவையற்ற தடைகளை நீக்கி, நிலங்களை எளிதில் விற்கவும், குத்தகைக்கு விடவும் விவசாயிகளுக்கு உதவி புரிந்தது. மேலும், அந்த ஆண்டிலேயே, குடியானவர்கள் நிலத்தில் போட்ட முதலுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படியான 'விவசாய நில உரிமைச் சட்டம்' (Agricultural Holdings Act) கொண்டுவரப்பட்டது. 1875-ல் 'தொழிலாளர் குடியிருப்புகள் சட்டம்' (Artisans Dwelling Act) நிறைவேற்றப்பட்டது. அச் சட்டத்தின்படி, தொழிலாளர்கள் வாழ்ந்துவந்த சுகாதார வசதியற்ற சேரிகளைத் தல அரசாங்கம் விலைக்கு வாங்கி, அவற்றை ஒழித்து சுகாதார வசதிகள் பொருந்திய புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட ஏற்பாடாகியது. மேலும் 'பொது சுகாதாரச் சட்டம்' (Public Health Act) அதே ஆண்டில் கொண்டுவரப்பட்டது. அதன்படி, மக்களின் ஆரோக்கியத்திற்காகப் பல வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன. ஆங்காங்கே, தக்க மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, மக்களின் சுகாதார வசதிகள் மேற்பார்வை டப்பட்டன.

தொழிலாளர் சங்கங்களின் உரிமைகளைக் காக்க, 1876-ல் தொழிற் சங்கச் சட்டமும் (Trade Union Act) நிறைவேற்றப் பட்டது. அச் சட்டங்களின்படி, தொழிற் சங்கங்கள் சட்டரீதியான சங்கங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டன; தொழிலாளர்களும் முதலாளிகளும் தங்களின் பிரச்சினைகளை அச் சங்கங்கள் மூலமாகத் தீர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். 1876-ல் கொண்டு வரப்பட்டிருந்த 'பொது இடங்களில் வேலியிடல் சட்டம்' (Enclosure of Commons Act) பெருநிலப் பிரபுக்கள் தங்களுடைய நிலங்களோடு பொதுநிலங்களைச் சேர்த்துக் கொள்வதைத் தடுத்தது. 'மக்களுக்கு வேண்டியது உணவுமட்டுமன்று; நல்ல காற்றும் அவர்களுக்கும் தேவை' என்ற கூற்றி

விளையாட்டு நிலங்கள், மக்களின் பொழுது போக்கிற்காக ஒதுக்கப்பட்டன.

1876-ல் வியாபாரக் கப்பல் ஏற்றச் சட்டமொன்றை (Merchant Shipping Act) டிஸ்ரேலி கொண்டுவந்தார்: அதன்படி, கப்பல் ஒவ்வொன்றும் எவ்வளவு சுமையைத் தாங்கும் என்பதைக் குறிக்கும் சுமைக் கோடுகளைத் தங்கள் கப்பல்களின் வெளிப் பக்கத்தில் அதன் உரிமையாளர்கள் வரைந்து காட்டவேண்டு மென்று வற்புறுத்தப்பட்டது. அதனால், அளவுக்கு மீறிய பண்டங்களைக் கப்பலில் ஏற்ற முடியாதுபோயிற்று; பழுதடைந்த நைந்துபோன கப்பல்கள் எனத் தெரிந்தால், அவற்றைத் துறை முகத்திலேயே நிறுத்தவும் முடிந்தது.

1875-ல் நட்புரிமைக் கழகங்களின் சட்டமும் (Friendly Societies Act) கொண்டுவரப்பட்டது. அக் கழகங்களை நடத் தியவர்கள் பொதுப்பணத்தைத் தங்களின் சொந்தக் காரியங் களுக்குப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்க, அவற்றின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்ய, அச் சட்டத்தின்படி அரசாங்கம் அதிகாரம் பெற்றது.

1878-ல் பிராணிகளின் தொற்றுநோய் சட்டமொன்றும் (Contagious Diseases Animals Act) நிறைவேற்றப்பட்டது. இத் துடன் கால்நடைகளைக் காக்க, தொற்று நோய்கள் பரவியுள்ள நாடுகளிலிருந்து இங்கிலாந்திற்குள் இறக்குமதியாகும் ஆடு, மாடு கள் அனைத்தும் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட செய்தி சொல்லப்பட வேண்டும் என அச் சட்டம் அறிவித்தது.

அதே ஆண்டில் கொண்டுவரப்பட்ட மற்றொரு சட்டம் ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்கு வரிப்பணத் தில் சிறு பகுதியை ஒதுக்கியது; அப் பணத்தில், தாவர இயலில் ஆய்வுக்கூடங்களை அமைத்துப் போதனை நடத்தும்படி, அரசு கேட்டுக்கொண்டது.

1878-ல் 'முதலாளிகள் - தொழிலாளிகள்' சட்டமும் (Employers and Workmen Act) கொண்டு வரப்பட்டது. தொழி லாளர்கள் ஒன்றுசேர்ந்து தங்களின் கோரிக்கைகளை முதலாளி கட்கு எடுத்துரைத்தல் சட்டரீதியானது என அறிவித்தது. வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளிகள் அமைதியான முறையில் மற்றத் தொழிலாளிகளையும் வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டலாமெனவும் அச் சட்டம் கூறியது.

1878-ல் 'தொழிற்சாலை, தொழிற்கூடங்கள் சட்டம்' (Factory and Workshops Act) நிறைவேற்றப்பட்டது. 10 வயதிற்

குட்பட்ட சிறுவர்களைக் கண்டிப்பாக எந்தத் தொழிலிலும் ஈடுபடுத்தக் கூடாதென அச் சட்டம் தடை விதித்தது; நெசவு ஆலைகளில் வேலை பார்க்கும் பெண்களுக்கு வாரத்திற்கு 56½ மணிகளுக்குமேலும், மற்றத் தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கும் பெண்களுக்கு 60 மணிகளுக்குமேலும் வேலை கொடுக்கப்படக்கூடாதெனவும் அச் சட்டம் வலியுறுத்தியது. தொழிற்சாலையைக் கண்காணிக்க வேண்டிய 'இன்ஸ்பெக்டர்கள்' அரசாங்கத்திற்குப் பொறுப்புள்ளவர்கள் ஆனார்கள்.

இங்கிலாந்தின் திருச்சபையைச் சேர்ந்த பிஷப்புகளைத் திருப்திப்படுத்தும் வகையில், 'பொது வழிபாட்டு ஒழுங்குமுறைச் சட்டத்தையும்' (Public Worship Resolution Act) டிஸ்ரேலி கொண்டு வந்திருந்தார். திருச்சபைச் சடங்குகளை மதிக்காமல் புறக்கணித்திருந்த ஒருசில பாதிரிமார்களைப் பயமுறுத்தும் வகையில் அச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க, ஒரேவிதமான வழிபாட்டு முறை கண்டிப்பாக வற்புறுத்தப்பட்டது.

அங்ஙனமாக, பொதுமக்களுக்குக் குறிப்பாக விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கத்தக்க பல சட்டங்களை டிஸ்ரேலி கொண்டுவந்தார். இருப்பினும், அயர்லாந்து மக்களின் குறைகளைத் தீர்க்க டிஸ்ரேலி முன்வராதிருந்தது பெரும் குறையாகக் கருதப்பட்டது. பொருளாதாரத் துறையைப் பொறுத்தமட்டில், டிஸ்ரேலி நிலையான கொள்கையினைப் பின்பற்ற முடியாமலிருந்ததும் மற்றொரு குறையாகக் கருதப்பட்டது.

சுருக்கமாக நாட்டின் தேவைகளை உணர்ந்து டிஸ்ரேலி கொண்டுவந்திருந்த பல சட்டங்கள் அவரை ஒரு சீர்திருத்தவாதியாகவே நாட்டினருக்கு வெளிப்படுத்தின.

வெளிநாட்டுக் கொள்கை

பரந்து விரிந்து கிடக்கும் மாபெரும் பேரரசின் நடுநாயகமாக இங்கிலாந்து விளங்க வேண்டுமென்ற ஏகாதிபத்தியக் கொள்கையை டிஸ்ரேலி கொண்டிருந்தார். அத்தகைய இங்கிலாந்தின் பேரரசை உருவாக்கிக் காத்து, நிலைபெறச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அவரின் வெளிநாட்டுக் கொள்கை அமைக்கப்பட்டது. அப்பழுக்கற்ற நாட்டுப்பற்றுக் கொண்டிருந்த டிஸ்ரேலி பேரரசு மனப்பான்மையைக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. அதன் விளைவாக, டிஸ்ரேலி பல துணிச்சலான காரியங்களைச் செய்திருந்தார். பிரிட்டிஷ் பேரரசின் வலிமையைப் பொறுத்தே பிரிட்டனின் சீரும் சிறப்பும்

அமையுமென, டிஸ்ரேலி திடமாக நம்பினார். அவரின் வெளி நாட்டு விவகாரங்களை அடுத்துக் காண்போம்.

சூயஸ்கால்வாய்ப் பங்குகளை வாங்குதல்

1866 - 1869-இல் வெட்டப்பட்டு முடிக்கப்பட்டிருந்த சூயஸ் கால்வாயின் நிர்வாகத்தில் எகிப்திய கெடிவ் (Khedive) இஸ்மாயில் பாஷாவுக்குப் பங்கிருந்தது. தாம் பெற்றிருந்த கடனைத் திருப்பிக் கொடுக்காமல் அவதிப்பட்ட இஸ்மாயில் தம் சூயஸ் பங்குகளை விற்க முன்வந்தார். பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்காமலேயே தம் சுய பொறுப்பில் 1875-ல் அப் பங்குகளை வாங்க டிஸ்ரேலி முடிவெடுத்தார். ரோத் சைல்டு, எர்லேங்கர் என்ற செல்வக் குடும்பத்தினரின் உதவிகொண்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் 3,976,582 பவுன்களைக் கொடுத்து, சூயஸ் பங்குகளை இஸ்மாயில் பாஷாவிடமிருந்து வாங்கிவிட்டார். இந்தியா போன்ற கீழை நாடுகளோடு தொடர்பு கொண்டு, பிரிட்டிஷ் பேரரசின் பங்குகளை அங்கே பாதுகாக்க சூயஸ் கால்வாயில் பிரிட்டனுக்கு ஆதிக்கம் இருக்க வேண்டுமென்றே டிஸ்ரேலி கருதினார். பாராளு மன்றத்தின் ஆதரவுக்காகக் காத்திருந்தால், அதற்குள் அப் பங்குகளை ஃபிரெஞ் சுக்காரர்கள் வாங்கிவிடுவார்கள் என்பதை நன்கு உணர்ந்திருந்த டிஸ்ரேலி நினைத்ததை உடனே முடித்தார்; பின்னர், எகிப்தில் இங்கிலாந்தின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு, டிஸ்ரேலி சூயஸ் பங்குகளை வாங்கி, வழி வகுத்தார்.

விக்டோரியா பட்டமளிப்பு

பிரிட்டிஷாரின் ஆட்சியை இந்தியர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றால் விக்டோரியா மகாராணியாரை முன்வைத்து அதைச் சாத்தியப்படுத்த முடியுமென டிஸ்ரேலி நினைத்தார். பிரிட்டிஷாரின் நிறுவனமான பாராளு மன்றத்தைவிட, அரசியையே இந்திய மக்கள் மதித்து, விசுவாசமாக நடப்பார்களெனவும் டிஸ்ரேலி உணர்ந்தார். மன்னர்களின் ஆட்சியில் பழக்கப்பட்டிருந்த இந்திய மக்கள், விக்டோரியாவைத் தங்கள் மகாராணியாக ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டார்களென டிஸ்ரேலி எதிர்பார்த்தார். ஆகவே, விக்டோரியாவுக்கு 'இந்தியப் பேரரசி' எனப் பட்டம் கொடுத்து, அதற்கேற்ப 1876-ல் லிட்டன் பிரபுவை இந்தியாவுக்கு இராசப் பிரதிநிதியாக அனுப்பி, டில்லியில் பெரும் தர்பார் நடத்தச் சொன்னார். விக்டோரியா மகாராணி இந்தியப் பேரரசி என அறிவிக்கப்பட்ட அந்த டில்லி தர்பாருக்குப் பல இந்தியச் சிற்றரசர்கள் வந்து தங்களின் மரியாதை

களைச் செலுத்தினர். டிஸ்ரேலியின் பேரரசர் கொள்கைக்கு அந்த டில்லி தர்பார் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது.

கீழைச் சிக்கல்

பாரிஸ் உடன்பாட்டிற்கு *(1856)* விரோதமாகத் தன்னுட் சிக்குட்பட்டிருந்த கிருத்துவர்களைத் துருக்கி துன்புறுத்தியதால், பாஸ்னியாவிலும், ஹெர்சகோவினுவிலும் மக்கள் கலகங்கள் ஏற்பட்டன. *1876*-ல் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா போன்ற நாடுகள் குறிப்புகளை அனுப்பி, புரட்சி ஏற்பட்ட நாடுகளில் சீர்திருத்தங்களையும், சமயப் பொறையையும் வழங்கும்படி துருக்கியைக் கேட்டுக்கொண்டன. பிரிட்டனைக் கலக்காமல் அந்த ஐரோப்பிய அரசுகள் துருக்கியர் விவகாரத்தில் தலையிட்டதை டிஸ்ரேலி கண்டித்தார். பிரிட்டனின் அக் கண்டனத்தைத் தனக்குச் சாதகமானதாக நினைத்துக்கொண்ட துருக்கி, பல்கேரியாவில் நடந்த இன்னொரு கலகத்தை மிகக் கடுமையாக நசுக்க ஆரம்பித்தது. கிளாட்ஸ்டன் போன்ற ஆங்கிலப் பெருமக்கள் பல்கேரியப் படுகொலைகளைக் கண்டித்துத் துருக்கியின்மீது போர் தொடுக்கும்படி டிஸ்ரேலியை வற்புறுத்தினர். துருக்கியப் பேரரசின் ஆதிக்கத்திற்கெதிராகச் செய்யும் காரியம், ரஷ்யாவுக்குச் சாதகமாக முடியுமென நினைத்த டிஸ்ரேலி, துருக்கியர்மீது போர்தொடுக்க மறுத்ததோடு, பல்கேரிய மக்களின் படுகொலைக்கும் கண்டனம் தெரிவிக்கவில்லை. பிரிட்டன் அங்ஙனம் தயங்கிவந்த வேளையில், நசுக்கப்படும் கிருத்துவர்களின் சார்பில் ரஷ்யா *1877*-ல் துருக்கிமீது போர்தொடுத்தது.

ரஷ்யாவின் தாக்குதலைச் சமாளிக்க முடியாது சான்ஸ்டீஃபானே (Sanstefano) என்னுமிடத்தில் துருக்கியர் சமாதானம் செய்துகொண்டனர். அவ் வுடன்படிக்கைப்படி, பால்கன் பகுதியில் ரஷ்யா ஆதிக்கம் பெறுவதாக இருந்தது; அப்போதுதான் டிஸ்ரேலிக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. ஐரோப்பிய வல்லரசுகள் யாவும் சேர்ந்தே துருக்கிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்ற பாரிஸ் உடன்பாட்டை மீறி, ரஷ்யா தனியாகச் செய்துகொண்டிருந்த சான்ஸ்டீஃபானே உடன்படிக்கையை அந் நாடு ரத்து செய்ய வேண்டுமென டிஸ்ரேலி வற்புறுத்தினர். இல்லாது போயின், போர்தொடுக்க வேண்டியிருக்குமென டிஸ்ரேலி பயமுறுத்தினர். இறுதியில், டிஸ்ரேலியின் மிரட்டலுக்குப் பணிந்து, சான்ஸ்டீஃபானே உடன்பாட்டை ரத்து செய்ய ரஷ்யா ஒப்புக் கொண்டது. அதன்பின், கீழைச் சிக்கலைத் தீர்க்க பெர்லினில் *1878*-ல் ஓர் ஐரோப்பிய மாநாடு கூட, டிஸ்ரேலி அதில் கலந்து கொண்டார். 'கண்ணியத்துடன் சமாதானம்' (Peace with

Honour) தாம் பெற்று வந்ததாக டிஸ்ரேலி பெருமையடித்துக் கொண்டார். போரைத் தவிர்த்துச் சமாதானத்தை மட்டுமல் லாமல், ரஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சியையும் டிஸ்ரேலி தடுத்தா ரென்பது குறிப்பிடத்தக்கது. துருக்கியப் பேரரசில் ரஷ்யா ஆதிக்கம் பெற்றுவிட்டால், அது பிரிட்டிஷாரின் இந்தியப் பேரர சுக்கு ஆபத்தாக இருக்குமென்றே டிஸ்ரேலி கவனத்துடன் அங்ங னம் செயல்பட்டார்.

ஆஃப்கானியப் போர்

பால்கன் பகுதியில் ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதில் அக்கறை காட்டியிருந்த டிஸ்ரேலி கீழை நாடுகளிலும் அதன் செல்வாக்கை ஒடுக்க நினைத்தார். ஆஃப்கானிஸ்தானத்தில் பிரிட் டிஷாரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி ரஷ்யர்களின் செல்வாக்கு அங்குப் பரவவிடாமல் தடுக்கும்படி இந்தியாவில் இராசப் பிரதி நிதியாக இருந்த லிட்டன் பிரபுவை முயலும்படி டிஸ்ரேலி வற் புறுத்தினர். அதற்கேற்ப, லிட்டன் பிரபு ஆஃப்கானிஸ்தான் விவகாரத்தில் தலையிட ஆரம்பித்தார். ஆஃப்கானிய அமீர் ஒரு பிரிட்டிஷ் பிரதிநிதியைத் தம் தலைநகரான காபூலில் (Kabul) ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அந்த அதிகாரியின் ஆலோ சனைக் கேற்பவே தம் அயல்நாட்டு விவகாரங்களை நிர்ணயிக்க வேண்டுமென்றும், லிட்டன் வற்புறுத்தித் தமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டார். ஆயின், காபூலில் ஏற்பட்டிருந்த ஒரு கலகத்தில் பிரிட்டிஷ் ஏஜென்டும் அவர் தம் சகாக்களும் கொல் லப்படவே லிட்டன் இந்தியப் படையினரை அனுப்பிப் போரைத் தொடங்கினர். இறுதி வெற்றியை பிரிட்டிஷார் பெற்றபோதி லும், அவர்களின் படை அதிக சேதத்திற்குள்ளாகி யிருந்தது. நிரந்தரமாக ஆஃப்கானிஸ்தானத்தைத் தமது படை பலத்தால் அடக்கி வைத்திருக்க முடியாதெனவும் பிரிட்டிஷாருக்கு அனுப வத்தின்மூலம் புலப்பட்டது. ஆகவே, அமீரோடு இந்திய அர சாங்கம் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டது. அதன்படி, ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடைத் தடை நாடாக (Buffer State) ஆஃப்கானிஸ்தானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. டிஸ்ரேலி, ரஷ்யா இந்தியாமீது படையெடுக்காதவண்ணம் பாதுகாக்கின்ற இடைத்தடை நாடாக ஆஃப்கானிஸ்தானம் விளங்கட்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும், தம் தலையீட்டுக் கொள்கையினால் ஓர் அவசியமற்ற போருக்குத் தாம் காரண ரானதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

தென் ஆஃப்ரிக்கா

1852 - 1854-ல் தென் ஆஃப்ரிக்காவில் சுயேச்சை பெற் றிருந்த டிரான்ஸ்வால் (Transvaal), ஆரஞ்சு குடியரசு (Orange Free

State) என்ற இரு போயர் குடியரசுகள், டிஸ்ரேலியின் கண்களை உறுத்திக்கொண்டு வந்தன. அவற்றை எப்படியும், பிரிட்டிஷ் குடியேற்றங்களுடன் மீண்டும் இணைத்துவிட வேண்டுமென்றே டிஸ்ரேலி விரும்பினார். அதற்கேற்ப விரைவில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. டிரான்ஸ்வால் பகுதியில் அடிக்கடி சுதேசி மக்கள் கலகம் செய்துவந்தனர்; போயர்களின் ஆட்சித் திறமையின் மையே அதற்குக் காரணமென டிஸ்ரேலி நினைத்தார். அது சமயம், போர்வெறிகொண்ட ஜூலு இனத்தினர் (Julus) டிரான்ஸ்வாலைத் தாக்கிக் கைப்பற்றிக்கொள்ள முயற்சிகள் செய்துவந்தனர். பிரிட்டிஷ் பேரரசின் பகுதியாக டிரான்ஸ்வால் அறிவிக்கப்பட்டால் ஜூலுக்கள் அதைத் தாக்க அஞ்சுவார்கள் என நினைத்து, 1877-ல் அப் பிரதேசத்தை பிரிட்டிஷ் குடியேற்ற நாடான கேப் மாகாணத்தோடு இணைத்து, பிரிட்டிஷ் மகுடத்தின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். அச் செய்கையால், போயர் களின் வெறுப்புக்கு டிஸ்ரேலி பாத்திரரானார். அதுமட்டுமன்றி, ஜூலுக்களின் கோபத்திற்கும் அச் செய்கை காரணமாக அமைந் தது. தாங்கள் கைப்பற்ற நினைத்த டிரான்ஸ்வாலை பிரிட்டிஷார் இணைத்துக்கொண்டதில் ஆத்திரமடைந்து, ஜூலுக்கள் 1879-ல் போர் தொடுத்தனர்.

இசாண்டில்வானை (Isandhilwana) என்னுமிடத்தில் பிரிட்டிஷ் படைகளை ஜூலுக்கள் வெட்டிக் குவித்தனர். இருப்பினும், பின்னர் உலுண்டி (Ulundi) என்னுமிடத்தில் ஜூலுக்கள் தோற் கடிக்கப்பட்டு, அவர்களின் தலைவர்களான கெடவாயோ (Cate-wayo), செகுன்னி (Sequnni) என்போர் சிறைபிடிக்கப்பட்டனர். ஜூலு பிரதேசம் பிரிட்டிஷ் பகுதியுடன் இணைத்துக்கொள்ளப் பட்டது. ஜூலுக்களின் பலம் நசுக்கப்பட்டதும், டிரான்ஸ்வால் போயர்கள் சுயேச்சை நிலைகேட்டுபிரிட்டிஷாரை எதிர்த்துக்கலகம் செய்ய முற்பட்டனர். அதுவே, பின்னர் முதலாம் போயர் போராக (First Boer War) மாறியது. அங்ஙனம், தம் தலையீட்டுக் கொள்கையினால் டிஸ்ரேலி 1880-ல் பிரிட்டிஷாருக்கும், போயர் களுக்கும் தொடங்கப்போகும் போருக்குக் காரணராக விளங் கினார்.

ஆஃப்கானியப் போர், தென் ஆஃப்ரிக்காப் போர் இவைகளில் இங்கிலாந்தை அவசியமில்லாமல் ஈடுபடுத்தியதாக டிஸ்ரேலி மீது பொதுவாகக் குற்றம் சாட்டப்பட்டது. விக்டோரியா ராணியாரை இந்தியப் பேரரசியாக அறிவித்ததற்குப் பின்னர், பேரரசு நாடுகளை இங்கிலாந்துடன் பிணைத்து வைக்கும் பணி எதையும் டிஸ்ரேலி செய்யவில்லை யெனவும் சுட்டிக்காட்டப் பட்டது. அவரது பேரரசர் கொள்கையின் தவிர்க்கமுடியாத

நிகழ்ச்சியாகவே அச் சம்பவங்கள் நடைபெற்றிருந்தன. துருக்கியை அவர் காக்க முயன்றது தவறென்று கண்டிக்கப்பட்டாலும், பால்கன் பகுதிகளில் ரஷ்யாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதில் டிஸ்ரேலி வெற்றிபெற்றதை மறுக்கமுடியாது. சூயஸ் கால்வாய்ப் பங்குகளை அவர் வாங்கியதன் விளைவாகவே, எகிப்தில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் வளர்ந்தது என்பதையும் மறக்க முடியாது.

டிஸ்ரேலியின் வெளிநாட்டுக் கொள்கை துணிகரச் செயல்கள் நிரம்பிய தீரமான தொடர் சம்பவங்களாக இருந்தமை அவர் வாழ்ந்த காலத்தின் பிரதிபலிப்பாகவே இருந்தது.

நாட்டிற்குத் தாம் செய்த சேவைகளில் 'பீக்கன்ஸ் ஃபீல்டு பிரபு' (Beacans Field) எனப் பட்டப் பெயர் பெற்றிருந்த டிஸ்ரேலி தம் கன்சர்வேடிவ் கட்சி 1880-ல் நடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றதை அடுத்து, மனமுடைந்து 19-4-1881-ல் காலமானார்.

(ஈ) பேரமைச்சர் கிளாட்ஸ்டன்
(William Ewart Gladstone, 1809 - 1898)

அரசியல் வாழ்வு

விக்டோரியா ராணியாரின் பேரமைச்சர்களுள் சிறந்தவராக விளங்கிய வில்லியம் ஈவார்ட் கிளாட்ஸ்டன் 1809ஆம் ஆண்டில் வணிகக் குடும்பத்திலே லிவர்பூல் நகரில் பிறந்தார். ஈட்டன், ஆக்ஸ்ஃபோர்டு போன்ற கல்வி நிலையங்களில் கல்வி பயின்று சிறப்பாகத் தேறியிருந்தார். 1832-ல் நிவார்க் என்ற நசித்துப்போன பரோவின் உறுப்பினராகக் காமன்ஸ் சபையில் நுழைந்ததிலிருந்து அவரது அரசியல் வாழ்வு ஆரம்பித்தது. ஆரம்பத்தில் அவர் கன்சர்வேடிவ் கட்சியை ஆதரித்தவராக இருந்து, 1841-ல் ராபர்ட் பீல் என்ற அக் கட்சித் தலைவரால் அமைக்கப்பட்ட மந்திரிசபையில் இடம் பெற்றிருந்தார். தானியச் சட்டம் ரத்தானதைத் தொடர்ந்து அக் கட்சியில் பிளவு ஏற்பட்டபோது, தாராளக் கொள்கையினால் கவரப்பட்டு கிளாட்ஸ்டன் தம் ஆதரவைப் பீலுக்குக் கொடுத்தார். 1852-ல் பீலின் கொள்கையைப் பின்பற்றிய பீலட்டுகளும் (Peelites) தாராளக் கொள்கையினரும் (Liberals) அபெர்டீன் தலைமையில் அமைச்சரவை அமைத்தபோது கிளாட்ஸ்டன் அதில் கருவூலத் தலைவராக நியமனம் பெற்றார். அத் தருணத்தில் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் அவரின் பொருளாதார அறிவை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டியது;

1859-ல் பாமர்ஸ்டன் அமைச்சரவையிலும் கிளாட்ஸ்டன் அப் பதவியில் தொடர்ந்து பணியாற்றினார். லிபரல் கட்சியின் தாராளக் கொள்கையினால் மிகவும் கவரப்பட்டு, தம்மை முழுக்க முழுக்க லிபரல் கட்சி அரசியல் வாதியாக கிளாட்ஸ்டன் அர்ப் பணித்துக்கொண்டார். ரஸ்ஸல் பிரதமராக இருந்தபோது கிளாட்ஸ்டன் காமன்ஸ் சபையில் லிபரல் கட்சித் தலைவராக விளங்கினார். 1868-ல் டிஸ்ரேலியின் கன்சர்வேடிவ் கட்சித் தேர் தலில் தோற்க, லிபரல் கட்சி அமோக வெற்றி பெற்றபோது அதன் தலைவரான கிளாட்ஸ்டன் தம் முதல் அமைச்சரவையை 1868-ல் அமைத்தார்.

நான்கு முறை பிரதமராகும் வாய்ப்பினைக் கிளாட்ஸ்டன் பெற்றிருந்தார். அவரது முதல் மந்திரி சபை 1874-ல் முடிந்த போதும், 1880 - 1885ஆம் ஆண்டுகளில் தம் இரண்டாவது அமைச்சரவையையும், 1886 பிப்ரவரி முதல் ஆகஸ்டுவரை தம் மூன்றாவது அமைச்சரவையையும், 1892 - 1894-ல் தம் கடைசி அமைச்சரவையையும் கிளாட்ஸ்டன் அடுத்தடுத்து அமைத்துப் பெரும் பணி ஆற்றினார்.

உள்நாட்டுத் துறையில் கிளாட்ஸ்டனின் சாதனைகள்

19ஆம் நூற்றாண்டில் சிறந்த சீர்திருத்த அரசியல் நிபுணர் எனப் புகழ்பெறும் அளவுக்குக் கிளாட்ஸ்டன் பற்பல சட்டங் களைக் கொண்டுவந்திருந்தார். பொருளியல் துறையில் அவர் செய்திருந்த சாதனைகள் மிகவும் போற்றத்தக்கன. அபெர்டின், பாமர்ஸ்டன் அமைச்சரவைகளில் கருவூலத் தலைவராகப் பணி யாற்றியபோது கிளாட்ஸ்டனின் பொருளியல் நிபுணத்துவம் வெளிப்பட்டது. கடுமையான முறையில் சிக்கனத்தைப் பின் பற்றி இயன்றவரையில் போர்களைத் தவிர்த்து, வரிகளை முடிந்த வரையில் குறைத்து, வியாபாரக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்து, ஆக்கத் தொழிலில் அக்கறை காட்டவேண்டுமென்பதையே தம் பொருளாதாரக் கொள்கையாகக் கிளாட்ஸ்டன் கொண் டிருந்தார்.

1860-ல் ஃபிரான்சுடன் ஒரு பரஸ்பர உடன்பாட்டைக் கிளாட்ஸ்டன் செய்துகொண்டார். அதன்படி பிரிட்டனில் இறக்குமதியான பல ஃபிரெஞ்சுப் பண்டங்களின் மீதிருந்த சுங்க வரிகள் குறைக்கப்பட்டன; ஃபிரான்சில் இறக்குமதியான பிரிட் டனின் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட சுங்கவரிகளும் குறைக் கப்பட்டன. பின்னர் அக் கொள்கையைக் கிளாட்ஸ்டன் எல்லா நாடுகளிடத்தும் கடைப்பிடித்தார். பொறிசெய் பொருள்களின்

மீது விதிக்கப்பட்டிருந்த எல்லா வரிகளும் முற்றிலும் அகற்றப் பட்டன. சுங்கவரி விதிக்கப்பெற்ற பண்டங்களின் எண்ணிக்கை கிளாட்ஸ்டனின் தலையிடா வியாபாரக் கொள்கையினால் 419 லிருந்து 48 ஆகக் குறைந்தது. அதனால் நாட்டு வருமானம் குறைய ஆரம்பித்தபோது, அதைச் சரிக்கட்ட வருமான வரி யையும், சர்க்கரை, தேயிலை முதலிய பொருள்களின் மீதிருந்த வரி களையும் உயர்த்தினார். பின்னர், சிக்கன முறைகளால் அரசின் செலவு குறைக்கப்பட்டபோது வருமான வரியையும் கிளாட்ஸ் டன் குறைத்திருந்தார். காகிதத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த வரியை நீக்குவதற்காகவும் கிளாட்ஸ்டன், பாமர்ஸ்டன் அமைச்ச ரவையில் கருவூலத் தலைவராகப் பணியாற்றியபோது, ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருந்தார். காமன்ஸ் சபையில் அம் மசோதா நிறைவேற்றப்பட்டிருந்தும், பிரபுக்கள் சபை அதை நிராகரித்தது. தமது முற்போக்கான பொருளாதாரத் திட்டங் களைப் பிரபுக்கள் சபை முட்டுக்கட்டையிட்டுத் தடுப்பதைத் தவிர்க்க, கிளாட்ஸ்டன் ஓர் உபாயத்தைக் கையாண்டார். அதன்படி, எல்லாப் பண மசோதாக்களும் ஒன்று சேர்க்கப்பட்டு, பட்ஜெட் (budget) என்ற பெயரில் ஒரே மசோதாவாக 1861-ல் கிளாட்ஸ்டன் கொண்டுவந்தார். பட்ஜெட்டில் ஒரு சில அம்சங் களைப் பிரபுக்கள் சபை விரும்பாதபோதிலும் பிடித்தமான மற்ற அம்சங்களுக்காக, அதனை ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் அச் சபையினருக்கு ஏற்பட்டது.

பணத்தைச் சேமிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஊக்கு விக்க, கிளாட்ஸ்டன் ஆங்காங்கே தபால் நிலையச் சேமிப்புப் பாங்குகளை ஏற்படுத்தினார். அரசாங்க வரவு செலவுக் கணக்கு களைத் தணிக்கை செய்யக் கருவூலத் தணிக்கைச் சட்டத்தையும் (Exchequer and Audit Act) பொதுக் கணக்குத் தணிக்கைக் குழுவையும் (Committee of Public Accounts) கிளாட்ஸ்டன் உருவாக்கினார்.

கல்வித்துறை

நல்ல கல்வியறிவைத் தம் நாட்டினருக்குக் கிடைக்கச்செய்ய, அத் துறையில் சில அத்தியாவசியமான சட்டங்களைக் கிளாட்ஸ் டன் கொண்டுவந்தார். 1868-ல் நிறைவேற்றப்பட்ட பொதுப் பள்ளிகள் சட்டம் (Public Schools Act) ஏழு பெரிய பள்ளிகளின் நிர்வாக சபைகளைத் திருத்தியமைத்தது. 1869-ல் கொண்டுவரப் பட்ட மானியப் பள்ளிகள் சட்டம் (Endowed Schools Act) தர்மப் பள்ளிகளை மேற்பார்வையிட ஆணையாளர்களை நியமித்தது. 1870-ல் ஃபார்ஸ்டர் என்ற தம் கல்வியமைச்சரின் உதவியால்

கல்விச் சட்டமொன்றைக் கிளாட்ஸ்டன் கொண்டுவந்தார். அச் சட்டத்தின்படி, கல்விக் கழகங்கள் ஏற்படுத்தத் தவறிய பள்ளிகளை நிறுவும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொண்டது. பள்ளியில்லாத இடங்களிலும் அரசாங்கமே பள்ளிகளை நிறுவ முன்வந்தது. அங்ஙனம் நிறுவப்படும் பள்ளிகளை நடத்தும் பொறுப்பு ஆங்காங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர்க் குழுக்களிடம் (Local Boards) ஒப்புவிக்கப்பட்டு, கல்விக்காக அக் குழுக்கள் மக்கள்மீது வரி விதிக்கவும் அச் சட்டம் அனுமதித்தது. அங்ஙனம் கல்வித்துறையில் மாற்றத்தைக் கொண்டுவந்திருந்த அச் சட்டம் கட்டாயக்கல்வி வழங்கவும், உள்ளூர்க் குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் கல்வியைக் கொண்டுவரவும், வரிகள்மூலம் கல்வியைப் பரப்பவும் உதவியது.

சிவில் சர்வீஸ் சீர்திருத்தம்

நாட்டின் நிர்வாகத் திறமையைச் சரிப்படுத்த 1871-ல் சட்டமொன்று கொண்டுவரப்பட்டது. வெளிநாட்டு இலாகாவைத் தவிர, மற்ற இலாகாக்களில் பதவி பெற விரும்புகிறவர்களெல்லாம், பிரத்தியேகமாகப் போட்டித்தேர்தலில் வெற்றி பெற வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதுவரை அமைச்சர்களின் சிபாரிசைப் பெற்றவர்களே சிவில் உத்தியோகங்களைப் பெற்றுவந்த நிலை மாறிப் பொது அறிவு பெற்றவர்கள் அப் பதவிகளைப் பெற அச் சட்டம் உதவியது.

இராணுவச் சீர்திருத்தம்

திறமைகொண்ட தம் போர் அமைச்சரான கார்டுவெல் (Cardwell) என்பவரின் உதவிகொண்டு கிளாட்ஸ்டன் இராணுவச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்திருந்தார். குறுகிய கால இராணுவப் பயிற்சி முறை ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, உடல் வலிமைபெற்ற குடிமக்களனைவருக்கும் ஆறு ஆண்டுகள் போர்ப்பயிற்சி கொடுக்கப்பட்ட பின்னர் நடைமுறை வாழ்வில் மீண்டும் ஈடுபட அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அம் முறையால் தேவைப்படும்போது பயிற்சிபெற்ற இராணுவத்தைக் குறைந்த காலக்கெடுவில் திரட்ட முடிந்தது. அப் படைக்கு 'நிலைப்படை' (Reserve Force) எனப் பெயர் கொடுக்கப்பட்டது. நாட்டுப்படை (Regular Force) பல பிரதேசப் படைகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரதேசப் படையும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதி உள்நாட்டுச் சேவை புரியும் போது மற்றொரு பகுதி வெளிநாட்டுச் சேவை புரியவேண்டிய கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அம் முறை மாறி மாறி

வந்ததால். எல்லா வீரர்களும் வெளிநாட்டுச் சேவையை ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இராணுவத்தில் பதவியும் பட்டமும் பணம் கொடுத்துப் பெறும் வழக்கமும் தடை செய்யப்பட்டது. சேஞதிபதி அதற்கு முன் தம் விருப்பம்போல் பதவிகளை விற்றுவந்தார். விலைக்கு வாங்கப்பட்ட அப் பதவிகளை (கமிஷன்களை) அரசு திரும்பப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொண்டது. அதன் பின், அப் பதவிகள் திறமையும் தகுதியும் உடையவர்களுக்கே கொடுக்கப்பட்டன. காலாட்படையினருக்கு நவீனத் துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன. பீரங்கிப்படையின் பலம் பெருக்கப்பட்டது. 25 பகுதிகள் நிலைப்படையில் சேர்க்கப்பட்டன. கப்பற்படையை மேற்பார்வையிட்டுத் திறம்பட வைத்திருப்பதற்காகக் கப்பற் படையின் முதல் பிரபு (First Lord of the Admirality) என்ற பிரத்தியேக அமைச்சரும், அவருக்கு உதவியாகக் கடற்படைக் குழு (Board of Admirality) ஒன்றும் அமைக்கப்பட்டன.

அங்ஙனம் பிரிட்டனில் இராணுவம், கப்பற்படை ஆகியவை நவீன முறையில் அமைக்கப்பட்டன.

மற்றச் சீர்திருத்தங்கள்

1871-ல் பல்கலைக் கழகச் சோதனைச் சட்டம் (University Test Act) கொண்டுவரப்படவே, அதன்படி ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் சமயப்பாடத்தை அனுமதித் தேர்வில் சேர்க்கக்கூடாதெனத் தடை கொண்டுவரவும், ரோமன் கத்தோலிக்கர்களும் அங்குச் சேர்ந்து கல்வி பயில்வதற்கும், ஏதுவாயிருந்தது. அதே ஆண்டில் கொண்டுவரப்பட்ட தொழிற் சங்கச் சட்டம் (Trade Union Act) வேலை நிறுத்தத்தைச் சட்ட ரீதியாக்கி, தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தது. எவ்விதப் பயமுமின்றிச் சுதந்தரமாக ஒவ்வொருவரும் மறைவில் நின்று தங்களின் வாக்குகளை அளிப்பதற்கு ஏற்ப 1872-ல் இரகசிய வாக்களிப்புச்சட்டம் (Ballot Act) கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டில் அனுமதிக்கும் சட்டம் (Licensing Act) ஒன்றும் நிறை வேற்றப்பட்டது. அச் சட்டத்தின்படி, நீதிபதிகளிடம் அனுமதிச் சீட்டு பெற்றவர்களே மதுபானம் விற்க அனுமதிக்கப்பட்டனர். அதன்படி கலப்பு மதுபானம் விற்கப்படும் முறை தடுக்கப்பட்டது. மேலும், அசம்பாவிதங்களை நடக்கவொட்டாமல் தடுக்க, இலண்டனில் இருந்த மதுக்கடைகள் இரவு 12 மணிக்கும் மற்ற நகரங்களில் 11 மணிக்கும் மூடப்பட வேண்டுமென்றும் அச் சட்டம் வற்புறுத்தியது. 1873-ல் ஏற்பட்ட தலைமை நீதிமன்றச் சட்டம்

(The Supreme Court of Judicature Act) அதுவரை தனித்தனியே இயங்கிவந்த எக்ஸ்செக்கர், சான்சரி, பொது விண்ணப்ப நீதி மன்றங்களை ஒன்றுக இணைத்து, ஒரு தலைமை நீதிமன்றத்தை ஏற்படுத்தியது. அந் நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகவும் (High Court) மேல் முறையீட்டு மன்றமாகவும் (Court of Appeal) பிரிக்கப்பட்டது. 1876-ல் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின் படி பிரிவிக் கவுன்சிலிலிருந்த ஆர்ச் பிஷப்புகளும் பிஷப்புகளும் சமய விவகார வழக்குகளைப் பிரிவிக் கவுன்சிலின் நீதிக் குழு விசாரிக்கும்போது அதிலிருந்து விலகியிருக்க வேண்டுமெனக் கூறியது. 1880-ல், விபத்துகளில் பாதிக்கப்படும் தொழிலாளி களுக்கு முதலாளிகள் நஷ்டஈட்டுப் பணம் தரவேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டது. 1881-ல் கொண்டுவரப்பட்ட கல்விச் சட்டத்தின்படி பள்ளிக்கூடங்களில் ஆஜராகப் (Attendance) பிள்ளைகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். 1882-ல் நிறைவேற் றப்பட்ட திருமணமான பெண்டிரின் சொத்துச் சட்டம் (Married Women's Property Act) நிறைவேற்றப்பட்டது. அதன்படி, திருமணம் ஆன பின்னர், மனைவியரின் சொத்துகள் கணவனுக்கு உரிமையாக்கப்படும் முறை தடுக்கப்பட்டுப் பெண்களுக்கே சொத் துரிமை கொடுத்தது. 1883-ல் கொண்டுவரப்பட்ட விவசாய நில உடைமைச் சட்டமானது (Agricultural Holdings Act) நிலத்தில் நிரந்தர விருத்தியைச் செய்துவிட்டுக் குடியானவர் அவற்றை விட்டு வெளியேறும்போது, அவ் விருத்திக்கான நஷ்ட ஈட்டை அவர் பெறச் செய்தது. கிளாட்ஸ்டனால் 1884ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட மூன்றும் பாராளுமன்றச் சீர் திருத்தச் சட்டம் ஏழை விவசாயிகளுக்கு வாக்குரிமை அளித்தது. 1894-ல் நிறைவேற்றப்பட்ட பாரிஸ் கவுன்சில் சட்டப்படி இரவலர் சட்டத்தை நிர்வகிக்க மாவட்டக் கவுன்சில்கள் சுகாதாரப் பணிகளையும் மேற்பார்வையிட்டன. 300 பேர் மக்கள் தொகையைக் கொண்டிருந்த எல்லாக் கிராமங்களிலும் பாரிஸ் கவுன்சில்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. மத சம்பந்தமற்ற மற்றப் பொதுக்காரியங்களை அக் கவுன்சில்கள் கவனித்துக்கொண்டன.

கிளாட்ஸ்டனும் அயர்லாந்தும்

அயர்லாந்தின் பிரச்சினை இங்கிலாந்தின் தீராப்பிரச்சினையாக இருந்துவந்தது. 'அயர்லாந்தைச் சமாதானப்படுத்துவதே என் வாழ்க்கையின் குறிக்கோளாகும்' என்று கிளாட்ஸ்டன் தம் தேர்தல் பிரசாரத்தில் (1868) சொல்லிவந்தார். அயர்லாந்தை உபாஸ் (upas) என்ற ஒரு நச்சுமரத்திற்கு ஒப்பிட்டு, மத

நிறுவனம், நிலவுடைமை, கல்விமுறை என்ற மூன்றும் அதன் மூன்று நச்சுக் கிளைகளாகுமெனவும், அவற்றை வெட்டி வீழ்த்துவதே தமது கடமையாகும் எனவும் கிளாட்ஸ்டன் கூறினர். அச் சமயத்தில் ஃபெனியன்கள் (Fenians) என்ற புரட்சிக் கூட்டத்தினர் அயர்லாந்தில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து, ஐரிஷ் குடியரசை ஏற்படுத்த, பயங்கர சதித் திட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். அவ் வியக்கம் கடுமையான முறைகளால் அடக்கப்பட்டதெனினும், அயர்லாந்துப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டிய அவசியத்தை, ஆங்கிலேயர்களுக்கு ஃபெனியன்கள் தங்களின் பலாத்கார நடவடிக்கைகளினால் உணர்த்தியிருந்தனர்.

கிளாட்ஸ்டன் தாம் பதவியேற்றதும் மதத்துறையிலும், நிலப்பிரச்சினையிலும், கல்வி முறையிலும் தம் கவனத்தைச் செலுத்தினர்.

மதத்துறை

அயர்லாந்தில் வசித்தவர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் கத்தோலிக்கர்கள். சிறுபான்மை மக்களாக இருந்த ஆங்கிலிகன் (Anglicans) பிராடஸ்டென்டுகளின் திருச்சபையே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. அதில் சேர முடியாத ஐரிஷ் கத்தோலிக்கர்கள் 'டைத்' (Tithe) என்ற மதவரியை அந்தத் திருச்சபைக்குச் செலுத்தும்படி வற்புறுத்தப்பட்டு வந்தனர். நாட்டுச் செல்வத்தில் பெரும் பகுதி அத் திருச்சபைக்குச் சொந்தமாக இருந்ததைக் கத்தோலிக்கர்கள் சகிக்க முடியாமலிருந்தனர். மேலும் அயர்லாந்திலிருந்த அந்த ஆங்கிலிகன் திருச்சபையை ஆங்கிலேயரின் ஆதிக்கச் சின்னமாக ஐரிஷ் கத்தோலிக்கர்கள் எண்ணி மனம் வெதும்பினர். அயர்லாந்தில் அந்த ஸ்தாபனம் அனுபவித்த உரிமைகள் நியாயமற்றவைகளாகவே இருந்தன. அதன் ஆதிக்கத்தைக் குலைத்து, மற்ற மத ஸ்தாபனங்களோடு அதைச் சமமாக்க கிளாட்ஸ்டன் பாராளுமன்றத்தில் ஐரிஷ் திருச்சபைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி அயர்லாந்திலிருந்த ஆங்கிலிகன் திருச்சபையின் சிறப்புரிமை பாதிக்கப்பட்டதல்லாமல், பிரிட்டிஷ் அரசுக்கும் ஐரிஷ் மத நிலையத்திற்கும் இருந்த தொடர்பும் துண்டிக்கப்பட்டது. ஐரிஷ் மதநிலையமும் இங்கிலாந்திலிருந்த இணங்காதாரின் மதநிலையமும் சம அந்தஸ்துப் பெற்றன. ஐரிஷ் மத நிலையப் பிரபுக்கள் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இடம் பெறும் உரிமையை இழந்தனர். பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்ட ஐரிஷ் சமயக் கழகங்களும் சமயச் சட்டங்களும், சமய நீதிமன்றங்களும் அகற்றப்பட்டன. பிரிட்டிஷ் உதவியின்றித்

தன்னேத்தானே ஐரிஷ் திருச்சபை நிர்வகித்துக்கொள்ள வேண்டு மென்றும், நிர்வாக சபை உறுப்பினர்களே அது தானே தேர்ந் தெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது.

ஐரிஷ் மக்களேச் சுரண்டி அச் சபை சேர்த்துவைத்திருந்த பெருஞ்செல்வம் அனேத்தையும் அரசு வசப்படுத்திக்கொள்ள, கிளாட்ஸ்டன் மற்றெரு சட்டத்தையும் கொண்டுவந்தார். அங்ஙனம் கைப்பற்றப்பட்ட பெருந்தனத்தில் ஒரு பகுதி மத குருமார்களுக்கு ஊதியம் அளிக்கவும் இன்னெரு பகுதி தேவை யின்மையால் வேலேயிலிருந்து நீக்கப்பட்ட மதகுருமார்களுக்கு நஷ்டஈடு தரவும், மற்றெரு பகுதி ஏழை ஐரிஷ் மக்களின் துயர் போக்கவும் செலவிடப்பட்டன.

நிலச் சீர்திருத்தம்

அயர்லாந்து விவசாயத்தை நம்பி வாழ்ந்த நாடு. ஐரிஷ் மக்களில் பெரும்பாலானேர் விவசாயிகளே. நிலச் சொந்தக் காரர்களில் பலர் இங்கிலாந்தில் வாழ்ந்துவர, அவர்களின் ஏஜென்டுகள் (பதிலாட்கள்) விவசாயிகளேப் பல வகைகளில் துன்புறுத்தி வந்தனர். அது மட்டுமல்லாது, குடியானவனே நீனேத்த நேரத்தில் நிலத்தை விட்டு விரட்ட நிலக்கிழார்களுக்கு உரிமை யிருந்தது. நிலத்தின் செழுமைக்காக அக் குடியானவன் செய்திருந்த விருத்திக்கும் நஷ்டஈடு கொடுக்கப்படாமலேயே அவன் விரட்டப்பட்டான். நிலத்தில் அக் குடியானவர்கள் கட்டிய வீடுகளும் அபகரித்துக்கொள்ளப்பட்டன. விவசாயிகளின் நலன்களில் எவ்வித அக்கறையையும் அந் நிலப்பிரபுக்கள் காட்ட வில்லே. தங்களுக்கு அதிகமான குத்தகைப்பணம் தருவதாகக் கூறியவர்களுக்கு அடிக்கடி நிலங்கள் மாற்றப்பட்டு வந்தன.

விவசாயிகளின் அந்த அவலநிலேயைப் போக்க 1870–ல் நிலச் சட்டம் ஒன்றைக் கிளாட்ஸ்டன் கொண்டு வந்தார். தகுந்த காரணங்களின்றி எந்த உழவனேயும் சாகுபடி நிலத்திலிருந்து நில உரிமையாளர் வெளியேற்றக் கூடாதென்று அச் சட்டம் கூறியது. அங்ஙனம் வெளியேற்றப்படும்போது, அக் குடியானவன் அந் நிலத்தை வளப்படுத்தச் செய்திருந்த முயற்சிக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டுமென்றும் அச் சட்டம் வலியுறுத்தியது. குடியானவர்களுக்கு நீதி வழங்கவும், சரியான நஷ்டஈட்டைத் தீர்மானிக்கவும் சிறப்பு நீதிமன்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டன.

கல்விச் சீர்திருத்தம்

அயர்லாந்திலிருந்த கத்தோலிக்கர்களுக்குப் பிராடஸ்டென்டு கல்லூரிகளில் கல்வி கற்க அனுமதியில்லாமலிருந்தது. தனிப்

பட்ட ஒருவரால் நடத்தப்பட்ட ஒரே தனிக் கல்லூரியே கத்தோலிக்கர்களுக்கு இருந்துவந்தது. பீல் காலத்தில் ஏற்பட்டிருந்த சமயச் சார்பற்ற ட்ரினிடி, இராணியார் கல்லூரிகளில் கத்தோலிக்கர்கள் சேர மறுத்தனர். ஆகவே, தங்களுக்கென்று அரசாங்கம் தனிக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று கத்தோலிக்கர்கள் கேட்டுவந்தனர். ஆகவே, 1873-ல் ஐரிஷ் பல்கலைக் கழக மசோதாவைக் கிளாட்ஸ்டன் கொண்டுவந்தார். அதன்படி, டப்ளின் பல்கலைக் கழகமொன்று தனியே ஏற்பட வேண்டுமென்றும், சமயச் சார்பற்ற கல்வியே அங்குப் புகட்டப்பட வேண்டுமென்றும், அப் பல்கலைக் கழகத்தில் இணைந்த கல்லூரிகளில் (affiliated colleges) வேண்டுமானால் சமயக்கல்வி போதிக்கப்படலாமெனவும் அச் சட்டம் கூறியது. சமயச் சார்பற்ற கல்வி முறையைப் பலர் கேலி செய்தனர். கத்தோலிக்கர்கள் மற்றவர்களோடு சேர்ந்து கல்வி கற்கவும் விரும்பவில்லை. எவரையுமே திருப்தி செய்யாத அம் மசோதா தோல்வியுற்றது. இருப்பினும், கல்வித்துறையில் ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கிருந்த குறைகளைப் போக்கக் கிளாட்ஸ்டன் எடுத்துக்கொண்ட அம் முயற்சி மக்களால் பாராட்டப்படவில்லை யென்றாலும், அது அவரின் சீர்திருத்த எண்ணத்தைக் காட்டியது.

கிளாட்ஸ்டன் தம் முதல் அமைச்சரவையின் காலத்தில் செய்த அத்தனை முயற்சிகளும் வீணனவை என அடுத்து ஏற்பட்ட நிகழ்ச்சிகள் காட்டின. 1879 - 1880-ல் அயர்லாந்தில் கடுமையான பஞ்சம் தோன்றியது. குத்தகைப்பணம் கொடுக்க முடியாத பல ஐரிஷ் குடியானவர்கள் நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அங்ஙனம் விரட்டப்பட்ட உழவர்கள் பசி, பட்டினியால் வாடி வதங்கினர். அக் குடியானவர்களின் அவல நிலைக்குக் காரணமாக இருந்த நிலப்பிரபுக்களை எதிர்க்கப் பார்னெல் (Parnell) என்ற புரட்சித்தலைவர் நிலச்சங்கம் ஒன்றை நிறுவினர். அச் சங்கங்களில் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன்படி ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டு குத்தகையை ஏற்றுவதில்லை யென்றும், கொடுமை புரியும் நிலப்பிரபுக்களுக்குக் குத்தகைப் பணத்தைக் கொடுக்க மறுப்பதென்றும் முடிவாகியது. ஒரு குடியானவனை நிலத்திலிருந்து வெளியேற்றி, நிலப்பிரபு வேறொருவனுக்கு அந் நிலத்தைச் சாகுபடி செய்யக் கொடுத்தபோது, அப் புதுக் குத்தகைக்காரனை நிலச்சங்கத்தார் தள்ளிவைத்தனர்.

ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இருந்த ஐரிஷ் அங்கத்தினர்கள் தங்கள் குறைகளை ஆங்கிலேயர்களுக்கு எடுத்துக்காட்ட ஒரு

வினோத முறையைக் கையாண்டனர். அயர்லாந்துப் பிரச்சினையைத் தவிர வேறெதையும் கவனிக்கமுடியாதபடி அந்த அங்கத்தினர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பாராளுமன்றத்தில் உரையாற்றிக்கொண்டே இருந்தனர். அச் சமயத்தில்தான் அயர்லாந்துக் கலகக்காரர்களை ஒடுக்க அடக்குமுறைச் சட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருந்தது. அச் சட்டம் நிறைவேறுவதைத் தடுக்க ஐரிஷ் உறுப்பினர்கள் மூன்று நாள்கள் வரை பேசிக்கொண்டே இருந்தனர். இருப்பினும் அடக்குமுறைச் சட்டம் (1881) நிறைவேற்றப்பட்டுவிட்டது. கிளாட்ஸ்டன் அந்த நேரத்தில்தான் தொடர்ந்து பேசிக் கொண்டே போகும் சொற்பொழிவாளர்களின் பேச்சை ஒரே நிமிடத்தில் முடித்துவிடும் அதிகாரத்தைப் (to apply the closure) பொதுமக்கள் சபையின் தலைவருக்கு வழங்கினார்.

இருப்பினும் ஐரிஷ் அங்கத்தினர்களின் பேச்சில் நியாயம் இருந்ததைக் கிளாட்ஸ்டன் உணர்ந்தார். அதற்கேற்ப 1881-ல் இரண்டாம் நிலச் சட்டத்தைக் (Second Land Act) கொண்டு வந்தார். அதன்படி தனிப்பட்ட நீதிமன்றங்களே குத்தகைப் பணத்தைத் தீர்மானிக்கவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட குத்தகையைக் குடியானவன் செலுத்தும்வரை அவனை நிலத்திலிருந்து பிரபுக்கள் விரட்டக்கூடாது; குத்தகை உரிமைகளை விற்கக் குடியானவர்களுக்கு உரிமையுண்டு என வற்புறுத்தப்பட்டது. மேற்கண்ட சீர்திருத்தங்கள் பார்னலுக்கும் நிலச் சங்கத்திற்கும் பிடிக்கவில்லை. ஆகவே, நில நீதிமன்றங்களை அணுகுவதற்குச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மறுத்தனர். அதனால் கோபமுற்ற கிளாட்ஸ்டன் பார்னலையும் அவரின் சகாக்களையும் கைது செய்ய ஆணையிட்டார். அவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அயர்லாந்தில் கொலையும் கொள்ளையும் ஏற்பட்டன. கிளாட்ஸ்டன் ஓர் அமைதிப் பிரியர். அயர்லாந்தில் நடந்துவந்த கொலையை - கொள்ளையை - அவர் வரவேற்கத் தயாராக இல்லை. ஆகவே, சிறையிலிருந்த பார்னலோடு ஒரு சமரச உடன்பாட்டைச் செய்துகொள்ளக் கிளாட்ஸ்டன் முன் வந்தார். அதுவே கில்மேயின் ஹாம் உடன்படிக்கை (Kilmainham Treaty) எனப்பட்டது. அதன்படி குத்தகைப்பண பாக்கிகளைத் தரமுடியாத குடியானவர்களுக்குச் சலுகை கொடுப்பதாகக் கிளாட்ஸ்டன் ஒப்புக்கொண்டார். பதிலுக்கு அயர்லாந்தில் நடந்த கலகத்தை நிறுத்துவதாகப் பார்னல் ஒப்புக் கொண்டார். அவ் வுடன்படிக்கையைத் தொடர்ந்து பார்னல் விடுதலை செய்யப்பட்டார்.

அப்போதுதான் அயர்லாந்துக்கு லார்டு லெஃப்டினன்டாக அனுப்பப்பட்டிருந்த கவென்டிஷ் பிரபு என்ற ஆங்கிலேயரும் அவர் தம் செயலாளர் பர்க் என்பவரும் சில காலிகளால் தாக்கிக் கொல்லப்பட்டனர். அக் கோரக் கொலையைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை அயர்லாந்தின்மீது திணித்தது.

அயர்லாந்தின் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டும் என்ற குறிக்கோள் கொண்டிருந்த கிளாட்ஸ்டன் தம் மூன்றும் மந்திரி சபையை அமைத்திருந்தபோது ஐரிஷ் சுயாட்சி மசோதாவைக் (Irish Home Rule Bill, 1886) கொண்டுவந்தார். அதன் மூலம் அயர்லாந்துக்குச் சுயாட்சி வழங்கி அதன் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாமென்று கிளாட்ஸ்டன் கருதினார். அவருடைய சக மந்திரிகளில் சிலர் அம் மசோதாவை எதிர்த்துப் பதவிகளை இராஜினாமாச் செய்தபோதுகூடக் கிளாட்ஸ்டன் மனம் தளரவில்லை.

அம் மசோதாவின்படி அயர்லாந்துக்கு ஒரு தனிச் சட்டசபை கொடுக்கப்பட வேண்டுமென்றும், நிலப்படை, கடற்படை, சுங்க வரிகள், வெளிநாட்டு விவகாரங்கள் ஆகியவற்றைத் தவிர, மற்றவைகளை யெல்லாம் அச் சபையின் பொறுப்பிற்கு விட்டுவிட வேண்டுமென்றும் அம் மசோதா கூறியது. மசோதா ஓட்டுக்கு விடப்பட்டபோது வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன் மிக உணர்ச்சிகரமான சொற்பொழிவு ஒன்றை ஆற்றி, 'நம்பிக்கையுடன் நல்லதை எதிர்பார்க்கும் அயர்லாந்துக்கு உதவி செய்யும்படி' கிளாட்ஸ்டன் வற்புறுத்தியிருந்தும் அம் மசோதாவுக்கு ஆதரவாக 315 வாக்குகளும், எதிர்ப்பாக 343 வாக்குகளும் பதிவாயின. அதன் விளைவாக கிளாட்ஸ்டன் தம் பதவியை மூன்றும் முறையாக இராஜினாமாச் செய்தார்.

தம் கடைசி அமைச்சரவையின் காலத்தில் கிளாட்ஸ்டன் இரண்டாவது அயர்லாந்து சுயாட்சி மசோதாவைச் (Second Irish Home Rule Bill, 1893) கொணர்ந்தார். அதன்படி அயர்லாந்துக்குத் தனிச் சட்டசபை கொடுக்கப்பட்டதோடு பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் ஐரிஷ் அங்கத்தினர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. காமன்ஸ் சபையில் அம் மசோதா 34 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தும் பிரபுக்கள் சபையில் தோற்கடிக்கப் பட்டது. அதன்பின் கிளாட்ஸ்டன் மீண்டும் பதவியை இராஜினாமாச் செய்தார்.

வெளிநாட்டுக் கொள்கை

பேரரசுக் கொள்கையினை விரும்பாத கிளாட்ஸ்டன் தாம் பதவியிலிருந்த காலத்தில் அமைதிக் கொள்கையையே பின்பற்றினார். முடிந்தவரை மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடாமல் நட்பினை வளர்த்தார். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களிலேயே தம் நாட்டை அவர் போரிலே ஈடுபடுத்தினர். மற்ற நாடுகளைக் கைப்பற்றிப் பேரரசை வளர்ப்பதற்கு மாறுக, ஏற்கெனவே பேரரசில் இருந்த நாடுகளுக்கு சுயாட்சி கொடுக்கவும் கிளாட்ஸ்டன் முன்வந்தார்.

1870-ல் ஃபிரெஞ்சு - பிரஷ்யப் போரிலே இங்கிலாந்து கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. பெல்ஜியத்தின் நடுநிலைமையைப் போரில் ஈடுபட்டிருந்த இரு நாடுகளும் மதிக்க வேண்டுமென்று அறைகூவல் விடுத்தாரே தவிர, எந்த நாட்டின் சார்பிலும் அப் போரில் கிளாட்ஸ்டன் ஈடுபட மறுத்தார். ஃபிரான்சின் சார்பிலே ஆங்கிலேயருக்கு அனுதாபம் இருந்திருந்தும், போரில் கலந்துகொள்வதில் இங்கிலாந்துக்கு அவசியம் ஏதுமில்லை என்றே கிளாட்ஸ்டன் கருதினர். அதே சமயம் நடுநிலை நாடான பெல்ஜியத்தின் சுதந்தரத்திற்கு அப் போரினால் ஆபத்து வராமல் கண்டிப்புக் காட்டியிருந்தார்.

ஃபிரெஞ்சு - பிரஷ்யப் போரைச் சாதகமாக்கிக்கொண்டு இத்தாலிய அரசு, போப்பாண்டவரின் தலைமையிடமான ரோம் நகரைக் கைப்பற்றி அதன் தலைநகரமாக அறிவித்துக்கொண்ட போது, கிளாட்ஸ்டன் பெருமகிழ்ச்சி கொண்டார். இத்தாலி ஒருமைப்பாடு அடைவதை மனப்பூர்வமாக அவர் ஆதரித்தார் என்பதையே அது எடுத்துக்காட்டியது.

ஃபிரெஞ்சு - பிரஷ்யப் போரைச் சாதகமாக்கிக்கொண்டு, ரஷ்யா தன் கப்பற்படைப் பலத்தைக் கருங்கடல் பகுதியில் பெருக்கி வந்தது. 1856ஆம் ஆண்டின் உடன்படிக்கைக்கு முரணாக இருந்திருந்தும் கிளாட்ஸ்டன் அதைக் கண்டிக்க முன் வராமல் இங்கிலாந்தைவிடக் கருங்கடல் பகுதியில் ரஷ்யாவுக்கே அதிக அக்கறை யிருக்க வேண்டுமென்ற அவரது எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது இங்கிலாந்து கப்பல் தளத்தில் கட்டப்பட்ட 'அலபாமா' என்ற போர்க்கப்பல் தென்னவர்களுக்கு (Southerners) விற்கப்பட்டிருந்தது. அப் போர்க் கப்பல் வடவர்களின் (Northerners) பல வியாபாரக் கப்பல்களைத் தாக்கிச் சேதப்படுத்தியிருந்தது. தம் நடுநிலைமைக்

கொள்கையை மீறி இங்கிலாந்து தென்னவர்களுக்கு அக் கப்பலைக் கொடுத்து உதவி செய்திருந்த அச் செய்கை, வட அமெரிக்கர் களின் எரிச்சலைக் கிளப்பியிருந்தது. போர் முடிந்த பிறகு, ஐக்கிய அமெரிக்க அரசு 'அலபாமா' கப்பலினால் அடைந்திருந்த சேதத் திற்கு இங்கிலாந்து அரசினிடம் நஷ்டஈட்டுப் பணத்தைக் கேட் டிருந்தது. அவ் வழக்கினைக் கிளாட்ஸ்டன் சர்வதேச மத்தி யஸ்தக் குழுவிடம் தீர்ப்புக்கு விட்டிருந்தார். வழக்கு இங்கி லாந்துக்குப் பாதகமாகவே முடிந்தது. 3,000,000 பவுன்களை பிரிட்டன் ஐக்கிய அமெரிக்க அரசுக்குத் தரவேண்டுமென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்க, கிளாட்ஸ்டன் அதற்கு ஒப்புக் கொண்டார். கிளாட்ஸ்டனை ஒரு கோழையென்றும் அவரது செய்கையினால் பிரிட்டனின் கௌரவம் பாதிக்கப்பட்டதென்றும் மற்றவர்கள் தூற்றினார்கள்; இங்கிலாந்து நஷ்டஈட்டுப் பணத் தைக் கொடாமல் அமெரிக்காவின்மீது போர் தொடுத்திருந்தால் அதற்கு ஆகும் செலவு கொடுக்கப்பட்ட நஷ்டஈட்டுக்கு அதிக மாகவே இருக்குமென்றும், மேலும், போரினால் இரு நாடுகளுக் கிடையே இருக்கும் நல்லுறவு பாதிக்கப்படுமென்றும் கிளாட்ஸ் டன் விளக்கிக் கூறியது அவரது அமைதியான மனப் பான்மையை எடுத்துக்காட்டியது. இருப்பினும், 'அலபாமா' விவகாரத்தின் காரணமாக அவர் தம் முதலாவது அமைச்சரவை கவிழ்ந்தது (1874).

1880ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் மீண்டும் இங்கிலாந்தின் பிரதமராகி யிருந்தபோது தென்னாஃபிரிக்கப் பிரச்சினை அவரது கவனத்தைக் கவர்ந்தது. டிஸ்ரேலியின் காலத்தில் ட்ரான்ஸ் வால் (Transval) கைப்பற்றப்பட்டு பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. இருப்பினும் 16-12-1880-ல் போயர்கள் பால் குருகர் (Paul Kruger) தலைமையில் சுதந்தரப் போரைத் தொடங்கினர். நான்கு இடங்களில் பிரிட்டி ஷாரின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிப்ரவரி, 1881-ல் நடந்த கடைசிக் கைகலப்பு மஜபா குன்றுக் கருகே (Mujuba Hill) ஏற்பட்டிருந்தது. அதிலும், பிரிட்டிஷ் படைகள் முரி யடிக்கப்பட்டன. ஜெனரல் ராபர்ட்ஸ் என்பவரின் தலைமை யில் ஒரு பிட்டிஷ் படையைத் தென்னாஃபிரிக்காவிற்கு அனுப்பக் கிளாட்ஸ்டன் உத்தரவு பிறப்பித்தார். அப் படை இந்தி யாவிலிருந்து தென்னாஃபிரிக்காவை அடைவதற்கு முன்னரே கிளாட்ஸ்டன் மனப்போக்கில் மாறுதல் ஏற்பட்டது. விடுதலை பெற விரும்பித் துணிவுடன் போர் செய்யும் போயர்களை வரட்டுக் கௌரவத்திற்காக ஆயுதபலத்தினால் அடக்கிவைக்க முயல்வது பொருந்தாத ஒரு காரியமாகக் கிளாட்ஸ்டன் நினைத்

தார். ஆகவே, போயர்களுக்குச் சுயாட்சியை வழங்கக் கிளாட்ஸ்டன் தீர்மானித்தார். அதன்படி பிரிடோரியாவில் கூட்டப்பட்ட ஒரு சபை (Convention of Pretoria) போயர் களுக்குச் சுயாட்சியை வழங்கியது. போயர்களின் சுய நிர்ணய உரிமையைக் கிளாட்ஸ்டன் மதித்து நடந்து கொண்டது, பிரிட்டிஷ் பேரரசுக்கு இழுக்கைத் தேடிக் கொடுத்ததெனப் பலர் குறை கூறினர்.

எகிப்து விவகாரத்திலும் கிளாட்ஸ்டன் தலையிடவேண்டிய அவசியமேற்பட்டது.

டிஸ்ரேலியின் காலத்தில் சூயஸ் கால்வாய்ப் பங்குகளை பிரிட்டிஷாருக்குக் கெடுல் இஸ்மாயில் என்ற எகிப்திய மன்னர் விற்றிருந்தார். அதனால் பெற்றிருந்த பணமும் அவரின் ஊதாரிச் செலவுகட்குப் போதவில்லை. மேன்மேலும், இஸ்மாயில் பிரிட்டி ஷாரிடமிருந்தும் ஃபிரெஞ்சுக்காரர்களிடமிருந்தும் ஏராளமான கடனை வாங்கியிருந்தார். அங்ஙனம் வாங்கியிருந்த கடன் தொகையை இஸ்மாயில் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையை அடையக் கடன் கொடுத்திருந்த 'பிரிட்டிஷ், ஃபிரெஞ்சுப் பங்கு தாரர்கள் தங்கள் அரசுகளை எகிப்தில் தலையிடும்படி வற்புறுத் தினர். அதற்கேற்ப, பிரிட்டிஷ், ஃபிரெஞ்சு அரசாங்கங்கள் இரண்டும் சேர்ந்து எகிப்தின் பொருளாதாரத்தைத் தங்களது கண்காணிப்பில் கொண்டுவந்தன. அக் கட்டுப்பாட்டுக்கு இசைய மறுத்த இஸ்மாயில் கலகம் செய்ய, அவரின் பட்டம் பறிக்கப்பட்டு டிவிக் பாஷா (Tewik Pasha) என்ற அவரின் மகன் எகிப்தின் மன்னராக்கப்பட்டார். அந் நிலையில், எகிப்தில் ஏற்பட்டிருந்த ஆங்கிலோ – ஃபிரெஞ்சு ஆதிக்கத்திற்கெதிராக அராபி பாஷா (Arabi Pasha) என்ற படைத்தலைவரால் தூண்டப்பட்ட ஒரு புரட்சி தோன்றியது. அலெக்சாண்டிரியா நகரில் பல ஐரோப் பியர்கள் அப் புரட்சியின் போக்கில் செலுத்தப்பட்டனர். ஃபிரான் சின் துணைகொண்டு, எகிப்தியப் புரட்சியை அடக்கப் பிரிட்டன் அதன் ஒத்துழைப்பைக் கேட்டிருக்க, ஃபிரெஞ்சு அரசு அதற்கு மறுத்துவிட்டது. அதன் பின்னர்க் கிளாட்ஸ்டனின் அரசாங்கம் உல்ஸ்லி (Woolseley) என்னும் தளகர்த்தர் தலைமையில் படைகளை அனுப்பியது. 1882-ல் டெல்-எல்-கபீர் (Tel-el-Kabir) என்னு மிடத்தில் அராபி பாஷா தோற்கடிக்கப்பட்டுப் போர்க்கைதியாக இலங்கைக்குக் கடத்தப்பட்டார். டெல்-எல்-கபீர் சண்டைக்குப் பின்னர் மன்னர் டிவிக் பாஷா ஆங்கிலேயப் பிரதிநிதி குரோமர் பிரபுவின் (Lord Cromer) கைப்பொம்மையாக இருக்க, எகிப்தில் பிரிட்டிஷ் பேரரசின் செல்வாக்கு வளர்ந்தது. கட்டாயப் படுத்தப்பட்ட சூழ்நிலையில் கிளாட்ஸ்டன் எகிப்து பிரச்சினையில்

தலையிட்டபோதிலும், பிரிட்டிஷாரின் ஆதிக்கம் அங்குப் பரவ அவர் காரணராஞர்.

சூடான் விவகாரத்திலும் கிளாட்ஸ்டன் தலையிடவேண்டிய அவசியமேற்பட்டது.

எகிப்தின் தென் மாகாணமாக அப்போது இருந்துவந்த சூடானில் எகிப்திய அதிகாரிகள் அவல ஆட்சியை நடத்தி வந்தனர். 1882-ல் மஹ்தி (விடுவிப்பாளர்) என்று தம்மை அழைத்துக்கொண்ட ஒரு முகம்மதியத் தலைவரின்கீழ், சூடானியர்கள் புரட்சியில் ஈடுபட்டனர். எகிப்திய மன்னரால் அனுப்பப்பட்ட ஆங்கிலோ-எகிப்தியப்படை ஹிக்ஸ் (Hicks) என்பவரின் தலைமையில் சூடானை அடைந்தபோது, மஹ்தியின் ஆதரவாளர்களால் தோற்கடிக்கப்பட்டது. சூடானின் தலைநகரான கார்டூமில் (Khartum) சிதறடிக்கப்பட்ட ஆங்கிலோ-எகிப்திய வீரர்கள் தஞ்சம் புகுந்தனர். வெற்றி கொண்ட மஹ்தி தம் ஆயுதம் ஏந்திய ஆதரவாளர்களுடன் கார்டூமை முற்றுகையிட்டார். நிலைமை மோசமாகிக்கொண்டு போகவே, எகிப்திய அரசு கிளாட்ஸ்டன் அரசாங்கத்திடம் படை உதவி கேட்டது. கார்டூமில் முற்றுகையிடப்பட்டிருந்த பிரிட்டிஷ் படையினரைப் பத்திரமாகத் திருப்பி எகிப்துக்குக் கொண்டு சேர்க்க ஜெனரல் கார்டன் (General Gordon) என்ற சிறந்த போர் வீரரைக் கிளாட்ஸ்டன் அரசாங்கம் சூடானுக்கு அனுப்பியது. 1884-ல் நைல் நதி வழியே கார்டூமை அடைந்த கார்டன் தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளையை மீறிக் கார்டூமை விட்டுப் படைகளுடன் தாம் வெளியேற வேண்டியதற்குப் பதிலாக, அங்கேயே முகாமிட்டு மஹ்தியை எதிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். மஹ்தி தம் முற்றுகையை நெருக்க ஆரம்பித்தபோது, கார்டன், தமக்கு உதவிப் படைகளை உடனே சூடானுக்கு அனுப்பவேண்டுமென்று கிளாட்ஸ்டனுக்குச் செய்தி அனுப்பினர். சூடான் பிரச்சினையில் சிக்கிக்கொள்ள விருப்பமில்லாத கிளாட்ஸ்டன் போரைத் தவிர்க்க எண்ணி, உதவிப்படைகளை அனுப்பத் தயங்கிவந்தார். இருப்பினும், கார்டனின் வற்புறுத்தலைப் பொறுக்கமுடியாமல், அவரை விடுவிக்க உல்ஸ்லி என்ற படைத் தலைவரின்கீழ் உதவிப் படையைக் கார்டூமுக்குக் கிளாட்ஸ்டன் அனுப்பினர். ஆனால் அப் படை அந் நகரை அடைவதற்குச் சில நாள்களுக்கு முன்னரே 26-1-1885-ல் கார்டூம் கைப்பற்றப்பட்டுக் கார்டனும் மற்றப் படை வீரர்களும் கொல்லப்பட்டனர். காலம் தாழ்த்தி உதவிப் படைகளை அனுப்பியதாலேயே கார்டனின் உயிர் காக்கப்பட முடியாமல் போய்விட்டதெனக் கிளாட்ஸ்டனைக் குறை கூறினர். சூடானும், பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து நழுவியது.

அரசியலைப் பொழுது போக்காகவும் விளையாட்டாகவும் தொழிலாகவும் கருதாமல் மாபெரும் சேவையாகக் கருதிய கிளாட்ஸ்டனின் காலம் அவரது உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் சீர்திருத்த சகாப்தமாக அமைந்தது. 'இங்கிலாந்தின் குரல்' என்று தம்மை அழைத்துக்கொண்ட கிளாட்ஸ்டன் அவர் காலத்திய தாராளக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். காலத்திற்கேற்ற புதுக் கொள்கைகளைப் பின்பற்றித் தம் லிபரல் கட்சிக்குப் பெருமை தேடிக்கொடுத்து, அதன் தலைவராக விளங்கிய கிளாட்ஸ்டனின் உள்நாட்டுக் கொள்கை பல துறைகளில் போற்றத்தக்க மாற்றங்களைக் கொண்டிருந்தது. அவரால் கொண்டுவரப்பட்ட ஐரிஷ் சுயாட்சி மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், அவர் காலத்திலேயே ஐரிஷ் பிரச்சினை ஓரளவு சுமுகமாகத் தீர்ந்துபோயிருக்கும். ஆயின், அவரது நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளாத பல அரசியல்வாதிகள் அம்மசோதாவைத் தோற்கடித்போதும், ஐரிஷ் விவகாரத்தை நல்ல முறையில் தீர்க்கக் கிளாட்ஸ்டன் எடுத்துக்கொண்ட முயற்சி பிற்காலத்தில் போற்றப்பட வேண்டியதாகவே இருந்தது. பேரரசுக் கொள்கையினை ஏற்றுக்கொள்ள விரும்பாத கிளாட்ஸ்டன் கூடியவரை ஆக்ரமிப்புப் போர்களைத் தவிர்த்தார். அவருடைய நடுநிலைமைக் கொள்கை இங்கிலாந்தின் கௌரவத்தைப் பங்கப்படுத்தியதெனக் குறை சொல்லப்படினும், சம்பந்தமில்லாத அயல்நாட்டு விவகாரங்களில் தீர்மானமாகக் கிளாட்ஸ்டன் தலையிட மறுத்தது அவரின் ஆழ்ந்த கொள்கைப்பற்றைக் காட்டியது. இருப்பினும், பல்கேரியப் படுகொலைக்குக் காரணமான துருக்கியர்களை ஐரோப்பாவிலிருந்தே விரட்ட வேண்டுமென்று கிளாட்ஸ்டன் சொல்லியிருந்தது மக்களின் சுதந்தர உணர்ச்சியிலே அவருக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டியது.

முதுபெரும் கிழவரெனப் பெயர் பெற்றுத் தம் அரசியல் வாழ்வில் இங்கிலாந்துக்குப் பல வகையில் சேவை புரிந்த கிளாட்ஸ்டன் 1898ஆம் ஆண்டு காலமானார்.

19. விக்டோரியா காலத்து இங்கிலாந்து - II

(அ) விக்டோரியா காலப் பேரரசு

குடியேற்ற நாடுகள் அத்தனையும் தாய்நாட்டின் நன்மைக் காகவேயன்றி வேறில்லை என்ற பழைய மெர்கன்டலிசக்கொள்கை அமெரிக்கச் சுதந்தரப் போருக்குப் பின்னர் இங்கிலாந்தால் கை விடப்பட்டு வந்தது. குடியேற்ற நாடுகளைச் சுரண்டுவதையே முக் கிய நோக்கமாகக் கொண்டிருந்த இங்கிலாந்து தன் கொள்கையை மாற்றிக்கொண்டு, அந் நாடுகளின் நலனில் அக்கறை காட்ட ஆரம்பித்தது. குடியேற்ற நாடுகளின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி, தக்க நேரத்தில் அவற்றுக்குச் சுய நிர்ணய உரிமையைக் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே விக் டோரியா காலப் பேரரசு அமைந்தது. அப் புதிய கொள்கையின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட அப் பேரரசு வரலாற்று ஏடு களில் இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசு எனவும் அழைக்கப்படு கிறது. குடியேற்ற நாடுகளுக்குச் சுயாட்சி வழங்குவதோடன்றி, அவர்களின் உரிமைகளையும் அவற்றுடன் தன் பேரரசு நலன்களை யும் விக்டோரியா காலத்திலிருந்து இங்கிலாந்து பாதுகாத்துக் கொள்ள விழைந்தது.

கானடா, ஆஸ்திரேலியா, நியுஜிலாந்து, தென் ஆஃப்ரிக்கா முதலிய குடியேற்ற நாடுகள் அப் பேரரசில் எங்ஙனம் வளர்ச்சி யுற்றன என்பதை அடுத்துக் காண்போம்.

கானடா

ஏழாண்டுப் போரை முடித்த பாரிஸ் உடன்பாட்டின்படி (1763) வட அமெரிக்கக் கண்டத்தின் வட பகுதியான கானடா ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தது. ஆரம்பத்தில் ஃபிரெஞ்சுக்

காரர்கள்மட்டுமே கானடாவில் வாழ்ந்து வந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கம், 1774-ல் கானடாவைக் கியூபெக் சட்டத்தின்படி ஓர் அரசாள் குடியேற்ற நாடாக (Crown Colony) மாற்றியது. அதன்படி அதுவரை இருந்துவந்த இராணுவ ஆட்சி மாற்றப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னரையும் அவரது ஆலோசனைச் சபையையும் கொண்ட புதிய ஆட்சி முறை கானடாவில் புகுத்தப்பட்டது. அமெரிக்கச் சுதந்தரப் போர் நடந்துகொண்டிருக்கையில் ஏராளமான இராச விசுவாசிகள் (loyalists) கானடாவில் குடியேற ஆரம்பித்தனர். அங்ஙனம் அமைக்கப்பட்ட குடியேற்றமே நோவாஸ்கோசியோ (Novascotia, 1778) என்பதாகும். 1784-ல் நியூ ப்ரன்ஸ்விக் (New Brunswick) பிரதேசத்திலும் ஆங்கிலேயர்கள் தனிப்பட்ட குடியேற்றங்களை அமைத்தனர். 1788-ல் ஒன்டேரியோ (Ontario) எனப்பட்ட மேல் கானடாவில் மேலும் அமெரிக்காவிலிருந்து இராச விசுவாசிகள் குடியேறினர்.

கியூபெக்கைச் (Quebeck) சுற்றியிருந்த கீழ்க் கானடாவில் அதிகமாக ஃபிரெஞ்சுக்காரர்களும், ஒன்டேரியோ என்ற மேல் கானடாவிலிருந்து ஆங்கிலேயர்களும் வர, இனத்தாலும், மதத்தாலும், மொழியாலும், பழக்க வழக்கங்களாலும் வேறுபட்ட அவர்களுக்குள் அடிக்கடி சச்சரவு இருந்துவந்தது. ஃபிரெஞ்சுக்காரர்களும், பிரிட்டிஷ்காரர்களும் கானடாவில் ஒற்றுமையாக வாழமுடியாத ஒரு நிலை, அச் சச்சரவுகளால் ஏற்பட்டது. ஆகவே, 1791-ல் பிரதமர் இளைய பிட் கானடா சட்டத்தைக் கொண்டுவந்தார். அதன்படி கானடா இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. குவிபெக் அல்லது கீழ்க் கானடாவில் (Lower Canada) ஃபிரெஞ்சுக்காரருக்கும் ஒன்டேரியோ அல்லது மேல் கானடா (Upper Canada)வில் ஆங்கிலேயருக்கும் தனித்தனி அரசாங்கங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னரும், அக் கவர்னரால் நியமிக்கப்பட்ட சட்டமன்றமும் (Legistlative Council) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை (Assembly)யும், ஒவ்வொரு பிரிவிற்கும் அச் சட்டத்தால் கொடுக்கப்பட்டன. மேல் கானடாவில் வாழ்ந்த ஆங்கிலேயர்களுக்கும், கீழ்க் கானடாவில் வாழ்ந்த ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும், அச் சட்டம் திருப்தி அளிக்கவில்லை. மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்டசபைக்குப் போதிய அதிகாரங்கள் கொடுக்கப்படாததால் பிரிட்டிஷ் கானடியர்கள் அச் சட்டத்தை விரும்பவில்லை. அதேபோன்று கீழ்க் கானடாவில் இருந்த மக்கள் சபையைக் கவர்னரால் நியமிக்கப்பட்ட பிரிட்டிஷ் உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இருந்த மேல்சபை

அசட்டை செய்ததால் ஃபிரெஞ்சுக் கானடியர்களும் அச் சட்டத்தை விரும்பவில்லை. அச் சட்டத்தின் மீதிருந்த அதிருப்தி 1837-ல் ஒரு கலகமாக மாறியது. கீழ்க் கானடாவில் லூயி ஜோசப் பேப்பினு (Louis Joseph Papineau) தலைமையிலும் மேல் கானடாவில் வில்லியம் லையன் மெக்கன்சி (William Lyon Mackenzie) என்பவரின் தலைமையிலும் கலகங்கள் தோன்றின. கீழ்க் கானடாவில் இனப் பிரச்சினை அக் கலகத்திற்கு முக்கிய காரணமாக இருந்ததென்றால் மேல் கானடாவில் அரசியல் உரிமைப் பிரச்சினை முக்கிய காரணமாக இருந்தது.

கலகங்களை அடக்குவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் டர்ஹாம் (Durham) பிரபுவைக் கானடாவிற்கு அனுப்பியது. கானடாவை அடைந்த டர்ஹாம் பிரபு நிலைமையை நன்கு ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ் வறிக்கையின்படி இனவேற்றுமையும், கவுன்சிலுக்கும் சபைக்கும் இருந்த பூசலுமே கானடாவில் நிலவிய அதிருப்திக்குக் காரணங்களெனத் தெரிவிக்கப்பட்டது; இரு கானடாப் பகுதிகளை மீண்டும் ஒன்றுபடுத்தி அதற்குப் பொறுப்பாட்சி (Responsible Government) கொடுக்கப்படவேண்டுமென்றும் அவ் வறிக்கை வற்புறுத்தியது. சுருக்கமாக, வியாபாரம் வெளிநாட்டுக் கொள்கை நீங்கலாக மற்ற எல்லா விவகாரங்களிலும் கானடா அரசாங்கத்திற்குச் சுய ஆட்சி வழங்க வேண்டுமென்று டர்ஹாம் பிரபு தம் அறிக்கையில் வற்புறுத்தினர்.

இரு கானடாப் பகுதிகளையும் ஒன்றுபடுத்துவதால் சமய, இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்றும் ஒன்று சேர்க்கப்பட்ட கானடா அரசுக்குச் சுய ஆட்சி வழங்குவதால் அரசியல் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் டர்ஹாம் நம்பியதோடல்லாமல் தம் அறிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். அவரால் சமர்ப்பிக்கப்பட்ட புகழ்பெற்ற அவ் வறிக்கையின் (டர்ஹாம் அறிக்கையின்) சிபாரிசின்படி பிரிட்டிஷ் அரசாங்கம் தன் குடியேற்ற நாட்டுக் கொள்கையை அமைத்துக்கொள்ள முற்பட்டது.

டர்ஹாம் அறிக்கையின் அடிப்படையில் 1840-ல் மறு இணைப்புச் சட்டம் (Reunion Act) கொண்டுவரப்பட்டது. அதன்படி மேல் கானடாவும், கீழ்க் கானடாவும் ஒன்றுபட்டன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய கீழ்ச்சபையும், அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மேல் சபையும் அடங்கிய பாராளுமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கீழ்ச்சபையில் பெரும்பான்மை பெற்றிருந்த

கட்சியிலிருந்தே அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளதாக அமைக்கப்பட்ட மந்திரிசபை, அச் சபையின் நம்பிக்கையை இழந்தவுடன் இராஜினாமாச் செய்யவும் கட்டுப்படுத்தப்பட்டது. சுருக்கமாகக் கானடாவில் பொறுப்பாட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. 1854-ல் கானடாவுக்குக் கவர்னர் ஜெனரலாக அனுப்பப்பட்ட டர்ஹாம் பிரபுவின் மருகர் எல்ஜின் பிரபு (Lord Elgin) என்பவரின் காலத்தில் பொறுப்பாட்சி முறை கானடாவில் நன்கு வேரூன்றியது. ஆங்கிலமும், ஃபிரெஞ்சும் ஆட்சி மொழியாக்கப்பட்டன. கானடாவின் தலைநகராக ஒட்டாவா (Ottawa) அமைந்தது.

மறு இணைப்புச் சட்டம் பிரிட்டிஷ் கானடியர்களைத் திருப்திப்படுத்தியதென்றாலும் ஃபிரெஞ்சுக் கானடியர்களின் மனக்கசப்பைப் பூரணமாக மாற்ற இயலவில்லை. தங்கள் மொழி, மதம், பழக்கவழக்கங்களில் அதிகப் பற்றுக்கொண்டிருந்த ஃபிரெஞ்சுக் கானடியர்களுக்கு பிரிட்டிஷ் கானடியர்களுடன் இணைந்த அரசியல் முறை பிடிக்கவில்லை. மேலும், நோவாஸ்கோசியோ, நியூ பிரென்ஸ்விக் போன்ற மற்றக் குடியேற்றங்களும் பிரிட்டிஷ்காரரால் ஏற்படுத்தப்பட்டிருந்ததை நாம் அறிவோம். அந்த ஆங்கிலக் குடியேற்றங்களுடன் ஃபிரெஞ்சு கானடியர்கள் அரசியலில் இணைந்து இருப்பார்களென எதிர்பார்க்கப்படவில்லை. ஆகவே, 1867-ல் பிரிட்டிஷ் அமெரிக்கச் சட்டம் (British North America Act) நிறைவேற்றப்பட்டது. அச் சட்டத்தின்படி குவிபெக், ஒண்டேரியோ என்ற பகுதிகளுடன் நேவோஸ்கோசியோ, நியூ பிரென்ஸ்விக் போன்ற மற்றக் குடியேற்றங்களும் கூட்டரசில் இணைக்கப்பட்டன. மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார்களிடையேஅதிகாரங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. எஞ்சிய அதிகாரங்களை (residuary powers) மத்திய அரசே பெற்றது. இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் கானடாவில் அமைக்கப்பட்டது. இங்ஙனமாக, கானடாவில் பூரணப் பொறுப்பாட்சி ஏற்பட்டது. பிரிட்டிஷ் மகுடத்தின் பிரதிநிதியாகக் கானடாவில் கவர்னர் ஜெனரல் ஆண்டார்.

டொமினியனாகப் (dominion) பிரகடனம் செய்யப்பட்டிருந்த கானடாவின் கூட்டரசில் 1870-ல் மானிடோபா (Manitoba) என்ற மாகாணமும், 1873-ல் பிரின்ஸ் எட்வர்ட் தீவும் (Prince Edward Island), 1880-ல் ராக்கி மலைக்குக் கிழக்கிலிருந்த பிரதேசங்கள் அனைத்தும் கானடாக் கூட்டரசில் சேர்ந்தன. விவசாய வளமும், சுரங்கச் செல்வமும் கொண்டிருந்த பிரிட்டிஷ் கொலம்பியா (British Columbia) பசிபிக் கானடியா ரயில்பாதை மூல

மாகக் கிழக்குக் கானடாவுடன் இணைக்கப்பட 1885-ல் அப் பகுதி யும் கானடியக் கூட்டரசில் சேர்ந்தது.

கூட்டரசு அமைப்பின்படி கானடா பூரண உள்நாட்டுச் சுதந் தரத்தை அடைந்தது. தாய்நாடான இங்கிலாந்துடன் சுமுக மான உறவைக் கொண்டிருந்தது. தென் ஆஃபிரிக்கப் போரிலே கானடியர்கள் இங்கிலாந்திற்கு உதவி செய்தது இரு நாடுகளுக்கு மிடையே இருந்த நல்லுறவிற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

ஆஸ்திரேலியா

17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டி டோரிஸ் (De-Torres) என்ற ஸ்பானியக் கடற்படைத் தளபதியே ஆஸ்திரேலியாக் கண் டத்தைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் ஆவர். ஆனால், ஸ்பானியக் குடியேற்றம் அங்கே அமைக்கப்படவில்லை. 1642-ல் டச்சுக் கிழக்கிந்தியக் கவர்னர் ஜெனரல் அன்டோனி (Antony) வான் டீமென் (Von Diemen) என்பவரால் அனுப்பப்பட்ட டாஸ் மென் (Tasman) என்ற டச்சுக் கடல் ஆய்வாளர் ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு அருகே இருக்கும் தீவினைக் (டாஸ்மேனியா) கண்டு பிடித்திருந்தபோதிலும் ஆஸ்திரேலியாவில் குடியேற டச்சுக்காரர் களும் எவ்வித முயற்சியையும் எடுத்துக்கொள்ளவில்லை. 1699-ல் இங்கிலாந்து கேப்டன் வில்லியம் டாம்பியர் (Dampier) என்ற கடல் வீரர் மேற்கு ஆஸ்திரேலியாவின் கடலோரப் பகுதிகளை ஆய்ந்து தம் பிரயாணத்தைப்பற்றிய குறிப்புகளை எழுதியிருந் தார். பிற்காலத்தில் கேப்டன் குக் (Cook) என்ற புகழ் பெற்ற கடல் ஆய்வாளருக்கு அக் குறிப்பு மிகவும் பயன்பட்டது. தற் போது நியூ சௌத்வேல்ஸ் என்று அழைக்கப்படும் பகுதியை ஊடுருவிப் பார்த்த பெருமையை அவரே பெற்றார். 1770-ல் அப் பகுதியைக் கண்டுபிடித்ததோ டல்லாமல் பாட்டனி குடா (Botany Bay) என்ற உள்நாட்டு நீர்ப் பரப்பையும் அவர் கண்டு பிடித்திருந்தார். பிரிட்டிஷாரின் கொடியை ஆஸ்திரேலியாவில் நாட்டிய பெருமையைக் குக் பெற்றார் என்றாலும் அவர் காலத் திலும் அங்குக் குடியேற்றங்கள் அமைக்கப்படவில்லை.

அமெரிக்கக் குடியேற்றங்களை இழந்த பின்னர்த் தன் குற்ற வாளிகளை அனுப்ப இடமில்லாமல் இங்கிலாந்து திண்டாடி வர, அத்தகைய குற்றவாளிகளை அனுப்ப ஆஸ்திரேலியாவே தகுந்த இடமென இளைய பிட் நினைத்ததற்கு ஏற்ப, 1787-ல் கேப்டன் ஃபிலிப்ஸ் (Philips) என்பவரின் தலைமையில் ஆயுள் தண்டனை பெற்ற 700 குற்றவாளிகள் ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட் டனர். அதுவே ஆஸ்திரேலியாவை நோக்கி வந்த முதல் கூட்ட மாக இருந்தது. பாட்டனி குடாவில் இறங்கிய அக் குற்றவாளிகள்

எவ்வித ஆக்க வேலைகளிலும் அக்கறை காட்டாமல் இருந்தனர். அங்குக் கவர்னராக இருந்த மெக்வாரி (Macwari *1809-1821*) என்பார் அக் குற்றவாளிகளைச் சீர்திருத்திச் சமுக ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தார். அதன் விளைவாகக் குற்றவாளிகளின் குடியேறிய இடமாக இருந்த ஆஸ்திரேலியாவின் அப் பகுதி, மக்கள் வாழ்வதற்கேற்ற வளத்தைப் பெற்றது. தண்டனை தீர்ந்த பல குற்றவாளிகள் இனும் நிலங்களைப் பெற்று அங்கேயே நிரந்தரமாக வாழ முற்பட, ஆஸ்திரேலியாவில் குடியிருப்பு ஆரம்பித்தது. ஜான் மக் ஆர்தர் (John Mack Arthur) என்ற இன்னொரு கவர்னர் ஆஸ்திரேலியாவில் மெரினே (Merino) என்ற உயர்ந்த ரக ஆடுகளை நிறைய இறக்குமதி செய்திருந்தார். அதன் விளைவாக ஆடு மேய்க்கும் தொழில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆடுகளுக்கு வேண்டிய புல்வெளிகளைத் தேடிக்கொண்டு மக்கள் ஆஸ்திரேலியாவின் உட்பகுதிகளில் ஊடுருவ ஆரம்பித்தனர். அதன் விளைவாக விக்டோரியா, மத்திய மேற்கு ஆஸ்திரேலியா போன்ற இதர பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அப் பகுதிகளில் குடியேறிய மக்கள் தங்களுக்கு வேண்டிய அளவு நிலங்களை எடுத்துக் கொண்டு ஆடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடலாயினர். அதுவரை கண்டத்தின் உட்பகுதிகளில் எவரும் சென்று குடியேறக் கூடாது என்று தடைவிதித்திருந்த அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக்கொண்டு குற்றவாளிகளின் புதிய குடியேற்றங்களை அனுமதித்தது. அதுமட்டுமல்லாமல் அப் பகுதிகளில் சுயேச்சை மக்களும் குடியேறலாமென அரசாங்கம் அறிவித்தது. குடியேறிகள் ஏராளமாக வந்ததோடல்லாமல் நிலங்களையும் வாங்கிக் கொண்டனர். அங்ஙனம் அமைக்கப்பட்ட குடியேற்றமே மேற்கு ஆஸ்திரேலியா எனப் பின்னர்ப் பெயர் பெற்றது. அங்கு வேலை செய்யக் கூலியாட்கள் இல்லாததால் அரசாங்கம் குற்றவாளிகளை அனுப்ப ஆரம்பித்தது.

தென் ஆஸ்திரேலியா என்ற மற்றொரு பகுதியிலும் கிப்பன் வேக் ஃபீல்டின் (Gibbon Wakke field) திட்டப்படி குடியேறிகளுக்கு நிலங்கள் விற்கப்பட அங்கும் குடியேற்றம் தோன்றியது. சர் ஜார்ஜ் கிரே (Sir George Grey) என்பவரால் அக் குடியேற்றப் பகுதி பின்னர் மிகவும் விருத்தி செய்யப்பட்டது.

1823-ல் அரசாள் குடியேற்ற (Crown Colony) நாடாக அறிவிக்கப்பட்டிருந்த நியூ சௌத் வேல்ஸ் என்ற குடியேற்றம் குவின்ஸ்லாந்து, விக்டோரியா என்ற இரு மாகாணங்களையும் உட்கொண்டிருந்தது. *1850*-ல் நியூ சௌத் வேல்ஸிலிருந்து விக்

டோரியாவும், 1859-ல் குவின்ஸ்லாந்தும் பிரிக்கப்பட்டுவிட்டன. அப் பகுதிகளுக்கிடையே போதிய போக்குவரத்துச் சாதனங்களில் லாததாலேயே அப் பிரிவினை தவிர்க்க முடியாததா யிருந்தது.

1850-ல் தங்கக் கனிகள் நியூ சௌத்வேல்ஸ், விக்டோரியா பகுதிகளிலே கண்டுபிடிக்கப்பட்டதை யொட்டிக் குடியேற்றங்கள் அதிகரித்தன.

ஆஸ்திரேலியா என்ற அந்தக் கண்டத்தில் நியூ சௌத்வேல்ஸ், விக்டோரியா, குவின்ஸ்லாந்து, டாஸ்மேனியா (1803) மேற்கு ஆஸ்திரேலியா (1829) தெற்கு ஆஸ்திரேலியா என்ற ஆறு குடியேற்றப் பகுதிகள் 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் உருவாக்கப் பட்டிருந்தன. நாளடைவில் குற்றவாளிகளை அனுப்பும் பழக்கம் நிறுத்தப்பட்டிருந்ததால் சுயேச்சைக் குடிமக்களின் எண்ணிக்கை அப் பகுதிகளில் அதிகமாயிருந்தது. குடியேற்ற நாட்டுக் கொள்கையில் புதிய கண்ணோட்டத்தைச் செலுத்திய பிரிட்டிஷ் அரசாங்கம் ஆஸ்திரேலியா மாகாணங்களுக்குச் சுயாட்சி கொடுக்க முன்வந்தது. 1850-1860 ஆண்டுக் காலத்தில் மேற்கு ஆஸ்திரேலியாவைத் தவிர மற்ற மாகாணங்கள் சுயாட்சி அடைந்தன. 1890-ல் மேற்கு ஆஸ்திரேலியாவிற்கும் சுயாட்சி கொடுக்கப் பட்டது. உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை அம் மாகாணங்களுக்குத் தங்களின் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் மூலமாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. ஆரம்பத்தில் தனியாகவே இயங்க விரும்பிய அம் மாகாணங்கள் நாளடைவில் ஒன்றுபட இசைந்தன. சர் ஹென்றி ஃபாக்ஸ் (Fox), பர்ட்டன் (Burton) போன்றோர் ஆஸ்திரேலியாவில் கூட்டரசு அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினர். அவர்களின் யோசனையை 1879-ல் தென் ஆஸ்திரேலியா மாகாணத்தின் தலை நகரான அடிலேய்டு என்னுமிடத்தில் கூடிய மாநாடு ஒப்புக் கொண்டது. அதனையொட்டி 1900-ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் ஆஸ்திரேலியக் கூட்டரசுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அச் சட்டத்தின்படி ஆஸ்திரேலியா ஒரு கூட்டரசாக அறிவிக்கப்பட்டது. இரு சபைகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. பொறுப்புள்ள ஆட்சி ஆஸ்திரேலியாவின் மாகாணங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் அமைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் குற்றவாளிகளின் குடியேற்ற இடமாகப் பயன்படுத்தப்பட்ட ஆஸ்திரேலியா 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்

பிரிட்டிஷ் பேரரசில் ஒரு சுயாட்சி பெற்ற கூட்டரசாக விளங்கியது.

நியூஸிலாந்து

ஆஸ்திரேலியாக் கண்டத்திற்குத் தென் கிழக்கே மூன்று தீவுகள் அடங்கிய சிறு கூட்டமே நியூஸிலாந்து எனப்படுவது. 1642-ல் டாஸ்மன் என்ற டச்சுக்காரரால் அப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டிருந்தும் 127 ஆண்டுகளுக்குப் பின்னர்க் கேப்டன் குக் என்ற கடல் வீரரே அப் பகுதிகளின் கரையை ஆய்ந்து, பிரிட்டிஷ் முடியாட்சியின்கீழ் அத் தீவுகள் கொண்டுவரப்பட்டு விட்டன என்று பிரகடனப்படுத்தினர். ஆனால், இங்கிலாந்து அரசாங்கம் அப் பகுதியில் குடியேற்றங்களை அமைக்க அக்கறை காட்டவில்லை. 1835-ல் எட்வர்ட் கிப்பன் வேக் பீல்ட் என்பவரின் வற்புறுத்தலுக் கிணங்கி பிரிட்டிஷ் அரசாங்கம் நியூஸிலாந்தைத் தன் பேரரசின்கீழ்க் கொண்டுவந்தது.

நியூஸிலாந்தில் சுறுசுறுப்பும், துணிச்சலும் பெற்றிருந்த மயோரிகள் (Maoris) என்ற சுதேசிக் குடியினர் வாழ்ந்துவந்தனர். 1840-ல் நியூஸிலாந்தின் கவர்னராக பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அமர்த்தப்பட்டிருந்த கேப்டன் ஹாப்சன் (Hobson) என்பவர் மயோரிகளுடன் வைடாங்கி (Waitangi) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அவ் வுடன்படிக்கையின்படி மயோரிகளின் நிலவுரிமை பிரிட்டிஷாரால் பாதுகாக்கப்படவேண்டுமென்றும் பதிலுக்கு மயோரிகள் பிரிட்டிஷ் இறைமையை (Sovereignty) ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் முடிவாகியது. நியூஸிலாந்து அரசாள் குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

சர் ஜார்ஜ் கிரே (1845 - 1852) நியூஸிலாந்தின் கவர்னராக அனுப்பப்பட்டார். அவர் காலத்தில்தான் கால்நடை வளர்ப்பு நியூஸிலாந்தில் ஊக்குவிக்கப்பட்டது. சுதேசி மக்களின் நில உரிமைகள் குடியேறிய பிரிட்டிஷாரால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டது. சுதேசி மக்களிடையே இருந்த ஒழுங்கீனங்களை அடக்க அவர்களையே கொண்ட ஒரு போலீஸ் படையும் கிரேயால் உருவாக்கப்பட்டது. சுருக்கமாக, அவரது காலத்தில் நியூஸிலாந்து முன்னேற்றமடைந்த ஒரு குடியேற்ற நாடாக விளங்கியது.

1852-ல் கூட்டாட்சி அரசு முறை நியூஸிலாந்தில் அமைக்கப்பட்டிருந்த ஐந்து குடியேற்றப் பகுதிகளுக்கும் அமைக்கப்பட்டது. மாகாணத்தின் உள் விவகாரங்கள் கவுன்சிலுக்குக் கொடுக்கப்

பட்டிருந்தபோதிலும் மற்ற அதிகாரங்கள் கவர்னருக்கும், கூட்டாட்சிப் பாராளுமன்றத்திற்கும், பொறுப்பாட்சியும் 1852-ல் நியூஸிலாந்திற்கு வழங்கப்பட்டது.

வைட்டாங்கி உடன்படிக்கையை மீறி, மயோரிகளின் நிலங்களை வெள்ளைக் குடியேறிகள் அபகரித்துவந்ததால் 1860-ல் இருசாராருக்குமிடையே போர் மூண்டது. 10 ஆண்டுகள் அப் போர் நடைபெற்று இறுதியில் மயோரிகளின் தோல்வியுடன் முடிந்தது. அதன் பின் மயோரிகளும், குடியேறிகளும் நியூஸிலாந்து முன்னேற்றத்திற்கு இணைந்து உழைக்க ஆரம்பித்தனர்.

ஜார்ஜ் கிரே இரண்டாவது முறையாக (1877-1879) நியூஸிலாந்தின் கவர்னராக அனுப்பப்பட்டபோது கல்வி உள்படப் பல வகைகளில் அதன் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். அக் காலத்திலிருந்தே நியூஸிலாந்து படிப்படியாக வசதிபெற்ற குடியேற்றமாக வளரத் தொடங்கியது.

பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்ட டொமினியனாக 1907-ல் நியூஸிலாந்து அறிவிக்கப்பட்டது.

தென் ஆஃபிரிக்கா

1486-ல் போர்ச்சுகீசிய மாலுமி பார்த்தலோமியா டயஸ் (Bartholomew Dias) என்பவரால் கேப் பகுதி கண்டுபிடிக்கப் பட்டிருந்தும் அங்குக் குடியேற்றம் அமைத்தது என்னவோ டச்சுக் காரர்களே. 1652-ல் நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) என்ற அப் பகுதியை டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி, கீழ்த் திசைக்குச் செல்லும் டச்சுக் கப்பல்களுக்கு ஒரு தங்குமிடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. பதினான்காம் லூயி காலத்தில் ஃபிரான்சிலிருந்து விரட்டப்பட்ட ஹ்யூக்னேக்கள் (ஃபிரெஞ்சு பிராடஸ்டென்டுகள்) பலரும் அங்கே வந்து குடியேறி, ஏற் கெனவே அப் பகுதியில் வாழ்ந்துவந்த டச்சுக்காரர்களுடன் இனக்கலப்புச் செய்துகொண்டனர். அந்த இனக் கலப்பில் தோன்றியவர்களே போயர்கள் (Boers) என அழைக்கப் பட்டனர்.

அப் போயர்கள் கடுமையான உழைப்பாளிகள். ஆங்காங்கே பெரும் பண்ணைகளைத் தோற்றுவித்து அவற்றில் வேலை செய்ய நீக்ரோக்களை அடிமைகளாக வைத்திருந்தனர்.

ஃபிரெஞ்சுப் புரட்சிப்போர் நடைபெற்றபோது டச்சுக் குடியேற்றமான கேப் பகுதியை இங்கிலாந்து கைப்பற்றிக்கொண் டிருந்தும் அமீன்ஸ் (Amiens) உடன்படிக்கையின்படி (1802) அது

மீண்டும் டச்சுக்காரர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டது. தொடர்ந்து நடைபெற்ற நெப்போலியப் போர்களின் காலத்தில் பிரிட்டிஷார் மீண்டும் கேப் பகுதியை 1806-ல் கைப்பற்றிக் கொண்டனர். 1814-ல் ஒரு குறிப்பிட்ட தொகையை டச்சுக் காரர்களுக்கு நஷ்டஈடாகக் கொடுத்துவிட்டு நன்னம்பிக்கை முனை நாட்டை (கேப் பகுதி) ஆங்கிலேயர்கள் நிரந்தரமாகப் பெற்றனர். அப்பொழுதிலிருந்துதான் தென் ஆஃபிரிக்காவில் ஆங்கிலேயர்களின் வரலாறு தொடங்கியது.

நெப்போலியப் போர்கள் முடிந்த பின்னர்ப் பல ஆங்கி லேயர்கள் தென்ஞஃபிரிக்காவில் வந்து குடியேறலாயினர். ஆங்கிலேயர்கள் அதிகமாகக் குடியேற அங்கு வாழ்ந்துவந்த போயர்களுக்கு அதிருப்தி அதிகமாயிற்று. தங்களுடைய மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றவை புதிய குடியேறி களான ஆங்கிலேயர்களால் அழிக்கப்பட்டுவிடுமெனப் போயர்கள் எண்ணலாயினர். 1833-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் அடிமை முறையை ஒழித்தது போயர்களுக்குப் பேரிடியாக இருந்தது. தங்களின் நிலங்களைப் பயிரிடுவதற்கு நீக்ரோ அடிமைகளையே போயர்கள் பெரிதும் நம்பியிருந்தனர். அடிமை முறை ஒழிப்புச் சட்டத்தினால் தங்களின் பொருளாதார முன்னேற்றம் பாதிக்கப் படக்கூடும் எனப் போயர்கள் அஞ்சலாயினர். அடிமைகளை வைத்திருந்த போயர்களுக்கு பிரிட்டிஷ் அரசு ஓரளவு நஷ்டஈடு கொடுத்திருந்தும் அவர்களுக்கு அது திருப்தி அளிக்கவில்லை. எனவே, பிரிட்டிஷாருக்கு எதிராகப் போயர்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது.

ஏற்கெனவே டச்சு மொழிக்குப் பதிலாக ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் ஆக்கப்பட்டிருந்தது போயர்களால் பொறுக்க முடியாததாக இருந்தது. அந் நிலையில் 1834-ல் காஃபிர்கள் (Kaffirs) என்னும் சுதேசி இனத்தினர் கேப் குடியேற்ற நாட்டின்மீது படையெடுத்தனர். காஃபிர்களின் படையெடுப்பு முறியடிக்கப்பட்ட பின்னர் அவர்களின் படை யெடுப்பிற்கான காரணங்களை ஆராய பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு பாராளுமன்றக் குழுவைத் தென்ஞஃபிரிக்காவிற்கு அனுப் பியது. போயர்கள் நீக்ரோ அடிமைகளை நடத்திவந்த மோச மான முறையே காஃபிர்களின் படையெடுப்பிற்குக் காரணமென அப் பாராளுமன்றக் குழு அறிக்கை வெளியிட்டது. ஏற்கெனவே கசப்புணர்ச்சி கொண்டிருந்த போயர்களுக்கு அவ் வறிக்கை இன்னும் எரிச்சலைக் கொடுத்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்த் தொடர்ந்து வாழப்பிடிக்காமல் கேப் குடியேற்ற நாட்டை விட்டுப் போயர்கள் வெளியேறத் திட்டமிட்டனர். 1836-ல்

தங்களின் பிரியப்படி அடிமைகளை வைத்துக்கொண்டு நல்வாழ்வு வாழத் திட்டமிட்டுச் சுமார் 10,000 போயர்கள் தங்களின் ஆடு, மாடு, மூட்டை முடிச்சுகளுடன் வண்டிகளிலேறிக் கேப் பகுதியை விட்டு வெளியேறினர். அந்தப் பெரும் வெளியேற்றம் (Great Treck) தென்னாஃபிரிக்க வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

கேப் மாகாணத்தை விட்டு வெளியேறிய போயர்கள் முதலில் ஆரஞ்சு நதியைக் கடந்து, ஆரஞ்சு சுயேச்சை நாடு (Orange Free State) என்ற புதிய நாட்டை ஏற்படுத்தினர். சில போயர்கள் மேற்கொண்டு சென்று வால் (Vaal) நதியைக் கடந்து டிரான்ஸ் வால் (Transval) என்ற இன்னொரு புதிய நாட்டையும் அமைத் தனர். வேறு சிலர் நேட்டால் (Natal) என்ற இன்னொரு பிர தேசத்தையும் தோற்றுவித்தனர். பிரிட்டிஷ் குடியேறிகள் போயர்களைப் பின்தொடர்ந்து நேட்டால் மாகாணத்தில் குடியேறி 1843-ல் அப் பகுதியை பிரிட்டிஷ் அரசாங்கம் கேப் மாகாணத்துடன் இணைத்தது. அதன் விளைவாக அங்கு முதலில் குடியேறியிருந்த போயர்களில் பலர் நேட்டாலை விட்டு அகன்று ஆரஞ்சு சுதந்தர நாட்டிற்கும், டிரான்ஸ்வாலுக்கும் போய் விட்டார்கள்.

1852-ல் டிரான்ஸ்வாலின் சுதந்தரத்தையும் 1854-ல் ஆரஞ்சு போயர் குடியேற்றத்தின் சுதந்தரத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக்கொண்டதன்பேரில் சிலகாலம் பிரிட்டிஷா ருக்கும் போயர்களுக்கும் மனக்கசப்பு நீங்கியிருந்த நிலை தொடர்ந் தது. ஆனால், அந்த அமைதி அதிககாலம் நீடிக்கவில்லை.

1868-ல் ஆரஞ்சு சுதந்தர நாட்டில் வாழ்ந்த போயர் களுக்கும் பாசூடோ நாட்டில் (Basuto land) வசித்த சுதேசி இனத்தினருக்கும் சச்சரவு ஏற்பட்டபோது, பிரிட்டிஷ் அர சாங்கம் பாசூடோக்களைத் தன் பாதுகாப்புக்குட்பட்ட ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தது. தாங்கள் கைப்பற்றித் தங்களின் ஆளுகையின்கீழ்க் கொண்டுவர எண்ணியிருந்த பாசூடோலாந்தை பிரிட்டிஷ் அரசாங்கம் தங்களின் பாதுகாப்பின்கீழ் வைத்திருக்க ஆரஞ்சு சுதந்தர நாட்டில் வாழ்ந்த போயர்களுக்கு அது பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. அச் சமயத்தில் கிம்பர்லி (Kim-berley) பகுதியில் வைரக்கனிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அப் பகுதியை அவ் விருடச்சுக் குடியரசுகள் சொந்தம் கொண் டாடுவதற்கு முன்பாகவே பிரிட்டிஷ் அரசாங்கம் அதைக் கைப் பற்றிக்கொண்டது. அதனால் போயர்களுக்கும் பிரிட்டிஷாருக் கும்மேலும் மனக்கசப்பு வளர்ந்தது.

தென்ஞஃபிரிக்காவில் ஜூலூக்கள் (Zulus) என்ற போர் வெறிகொண்ட இனத்தினர் தம் ஆதிக்கத்தைப் பரப்ப எண்ணி, போயர்களின் குடியரசுகளான டிரான்ஸ்வால் ஆரஞ்சு நாட்டை அடிக்கடி தாக்கி வந்தனர். போயர்களின் குடியரசுகள் வீழ்ச்சியுற்றுல் குறிப்பாக டிரான்ஸ்வால் கைப்பற்றப்பட்டால் அடுத்தாற்போல் ஜூலூக்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டில் படையெடுக்கக்கூடும் என டிஸ்ரேலியின் அரசாங்கம் நினைத்தது. ஆகவே, 1877-ல் டிரான்ஸ்வால் பிரதேசம் கைப்பற்றப்பட்டு பிரிட்டிஷ் மகுடத்தின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது போயர்களுக்கு விரைவில் உள்நாட்டுச் சுயஆட்சி கொடுக்கப்படுமென்று வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் டிரான்ஸ்வால் டச்சுக்குடியரசைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்ததை மற்றொரு டச்சுக் குடியரசான ஆரஞ்சு சுதந்தர நாடு வெறுத்தது. ஜூலூக்கள் எதிர்த்தனர். தாங்கள் கைப்பற்ற எண்ணியிருந்த டிரான்ஸ்வாலை பிரிட்டிஷ் அரசாங்கம் தன் பேரரசில் சேர்த்துக்கொண்டதை ஜூலூக்கள் ஒரு பெருத்த நஷ்டமாகக் கருதினர். அதன் விளைவாக 1879-ல் பிரிட்டிஷாருக்கும் ஜூலூக்களுக்கும் போர் மூண்டது. இசாண்டில்வானை (Isandhlwana) என்னுமிடத்தில் ஜூலூக்கள் 1300 பிரிட்டிஷ் வீரர்களைக் கொன்று குவித்தனர். இருப்பினும் உலூண்டி (Ulundi) என்னுமிடத்தில் ஜூலூக்கள் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டு அவர்களின் தலைவனான செடவாயோ (Cetewayo) என்பவனும் சிறைபிடிக்கப்பட்டான். இறுதியாக ஆங்கிலேயர்களுக்கு வெற்றி கிடைத்திருந்தும் ஜூலூ போரின் ஆரம்பத்தில் அவர்கள் படுதோல்வியுற்றிருந்ததைக் கண்ட போயர்கள் அவர்களை எதிர்க்கத் துணிவு கொண்டனர். டிரான்ஸ்வாலில் வாழ்ந்த போயர்கள் தங்களுக்கு அதுவரை உள்நாட்டுச் சுயாட்சி கொடுக்கப்படாத காரணத்தினால் ஆங்கிலேயர்களை எதிர்க்க முடிவு செய்தனர். அதற்குள் டிஸ்ரேலி பதவி இழந்து கிளாட்ஸ்டன் 1880-ல் இங்கிலாந்தின் பிரதமரானார். புதிய அரசாங்கம் தங்களுக்குச் சுய ஆட்சியை வழங்குமென்று டிரான்ஸ்வால் போயர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், இங்கிலாந்தின் அரசாங்கம் வாளாவிருந்ததால் போயர்கள் கோபமுற்று மும்முரமாகக் கலகத்தில் இறங்கினர். அதுவே முதலாம் போயர் சண்டையில் முடிந்தது. மஜூபா குன்று (Majuba Hill) என்ற இடத்திற்கு அருகே சர் ஜார்ஜ் கோலே (Sir George Colley) என்பவரின் தலைமையில் போர் செய்யவந்த பிரிட்டிஷ் படைகளைப் போயர்கள் முரியடித்தனர். கோலே அச் சண்டையில் மாண்டார். அதைத் தொடர்ந்து கிளாட்ஸ்டனின் அரசாங்கம் இன்னொரு படையைச் சர் பிரடரிக் ராபர்ட்ஸ் என்பவரின் தலைமையில் தென்ஞஃபிரிக்காவிற்கு

அனுப்ப எண்ணினர். ஆனால், அதற்குள் கிளாட்ஸ்டன் தமது கருத்தை மாற்றிக் கொண்டு டிரான்ஸ்வால் போயர்களுக்குச் சுயாட்சி வழங்கப் பெருந்தன்மையுடன் தீர்மானித்துவிட்டார்: அதன்படி முதலாம் போயர் போர் 1884-ல் முடிந்தது. பிரிடோரியாவில் கூட்டப்பட்ட ஒரு சபையானது (Convention of Pretoria) போயர்களுக்குச் சுயாட்சி வழங்கத் தீர்மானித்தது. டிரான்ஸ்வால், தென்ஞஃபிரிக்கக் குடியரசு என்ற புதுப் பெயரைப் பெற்றது. பால் குருகர் (Paul Kuruger) என்பவர் அதன் குடியரசுத் தலைவரானார். தென்ஞஃபிரிக்கக் குடியரசு இங்கிலாந்து தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளோடு தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் தங்கள் நாட்டில் வந்து குடியேறும் எல்லா ஐரோப்பியர்களுக்கும் சமஉரிமை வழங்க வேண்டுமென்றும் பிரிட்டனால் வற்புறுத்தப்பட்டது.

தென்ஞஃபிரிக்காவின் (டிரான்ஸ்வால்) குடியரசுத் தலைவராகப் பால் குருகர் மிகுந்த ஆர்வம் கொண்ட ஒரு தேசியத் தலைவராக இருந்தார். போயர்களின் ஆதிக்கத்தைத் தென்ஞஃபிரிக்கா முழுவதிலும் உருவாக்க வேண்டுமென்று அவர் நினைத்ததில் வியப்பெதுவும் இல்லை. ஆயின், பிரிட்டிஷாரின் பேராதிக்கம் தென்ஞஃபிரிக்காவில் தொடரும்வரை தம் கனவை நனவாக்க முடியாதெனக் குருகருக்குத் தெரியும்; அப்போது கேப் மாகாணத்தில் பிரிட்டிஷ் கவர்னராக இருந்த செஸில் ரோட்ஸ் (Cecil Rhodes) என்பவர் அப் பகுதியில் மேற்கொண்டு பிரிட்டிஷ் பேரரசை விரிவடையச் செய்யவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தார். அதற்கேற்ப 1885-ல் பெசுவானலாந்து (Bechunaland), 1887-ல் ஜுலுலாந்து (ZuluLand), 1895-ல் ரொடிஷியா நாட்டையும் பிரிட்டிஷாரின் ஆளுகையின் கீழ் ரோட்ஸ் கொண்டுவந்திருந்தார். வடக்கே எகிப்து முதல் தெற்கே கேப் வரையில் ஆங்கிலேயரது நாடுகள் தொடர்ச்சியாக இருக்கவேண்டுமென்று செஸில் ரோட்ஸ் (Cecil Rhodes) பேராசை கொண்டிருந்தார். ஆயின், அவருடைய அந்த எண்ணத்திற்குப் போயர் குடியரசுகள் தடையாக இருந்தன. ஆக, பால் குருகரின் தேசிய வெறியும் செஸில் ரோட்ஸின் ஏகாதிபத்திய வெறியும் ஒன்றுக்கொன்று முரணுக இருக்க அது இன்னொரு போரிலேயே முடிய வேண்டியிருந்தது.

ட்ரான்ஸ்வால் (தென்ஞஃபிரிக்கக் குடியரசு) நாட்டில் ஜோஹன்ஸ்பர்க் நகருக்கருகே தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப் படவே ஏராளமான ஆங்கிலேயர்கள் அங்குச் சென்று குடியேறலாயினர். அந்தக் குடியேறிகளைப் போயர்கள் வெளிநாட்டினர் என்ற பொருள்பட உயிட்லாந்தியர் (Uitlanders) என அழைத்

தனர். போயர்களின் அரசாங்கம் உயிட்லாந்தியருக்கு வாக் குரிமையைக் கொடுக்க மறுத்ததோடு பல வழிகளிலும் துன்புறுத் தினது. பதினைந்து ஆண்டுகள் ட்ரான்ஸ்வாலில் தொடர்ந்து உயிட்லாந்தியர் வாழ்ந்ததாலேயே அவர்களுக்குப் பிரஜா உரிமை கொடுக்கப்படுமென்று போயர்களின் அரசாங்கம் ஒரு சட்டமும் கொண்டுவந்தது. அவர்கள்மீது அதிக வரிச் சுமையை ஏற்றிய தல்லாமல் கட்டாய இராணுவப் பணிக்கும் அவர்கள் பணிக்கப் பட்டனர். அதனால் மனம் நொந்திருந்த உயிட்லாந்தியர்கள் போயர் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சூழ்ச்சியில் இறங்கியபோது அதை ஒரு வாய்ப்பாக செஸில் ரோட்ஸ் பயன்படுத்திக்கொள்ள எண்ணினார். உயிட்லாந்திய சூழ்ச்சிக்காரர்களுக்குச் செஸில் ரோட்ஸ் போர்க் கருவிகளை இரகசியமாகக் கொடுத்துக் கலகத்தை ஊக்குவித்ததோடு, தேவைப்பட்டபோது படையுதவி கொடுக் கவும் வாக்களித்தார். அதன்படி உயிட்லாந்தின் போயர் அரசை எதிர்த்துக் கலகம் செய்யும் ஏற்பாடுகளில் இறங்கினர்; ஆயின் அக் கலகப் படைகள் தயாராவதற்கு முன்னரே செஸில் ரோட்சி னால் தயாராக வைக்கப்பட்டிருந்த 1500 வீரர்கள் கொண்ட படை ஒன்று ஜேம்சன்(Dr. Jameson) தலைமையில் 1895-ல்போயர் நாட்டுக்குள் நுழைந்தது. ஆனால், அப் படை போயர்களால் எளிதில் தோற்கடிக்கப்பட்டது. ஜேம்ஸனும் அவர்தம் வீரர்களும் சிறைபிடிக்கப்பட்டனர். போயர்களின் அவ் வெற்றியைப் பாராட்டி ஜெர்மனியின் கெய்சர் இரண்டாம் வில்லியம் டிரான்ஸ் வாலின் குடியரசுக்குத் தலைவரான பால் குருகருக்குப் பாராட்டுத் தந்தி கொடுத்தார்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளும் ஃபிரான்ஸைப் போன்ற நாடு களும் போயர்களிடம் அனுதாபம் காட்டின. அதனால் பெரிதும் ஊக்கமடைந்திருந்த பால் குருகர் தென்னாஃபிரிக்கா முழுவதை ரும் தம் குடியரசின்கீழ்க் கொண்டுவர பிரிட்டிஷாரை எதிர்க்கும் முயற்சியில் இறங்கிப் படைபலத்தைப் பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தார். அதே சமயத்தில் தென்னாஃபிரிக்கா முழுவதை யும் தம் தனித் தலைமையின்கீழ்க் கொண்டுவர பிரிட்டிஷார் திட்டமிட்டிருக்க, போயர்களுக்கும் இங்கிலாந்திற்கும் போர் தவிர்க்க முடியாததாக இருந்தது. அங்ஙனம் தொடங்கப்பட்ட அப் போரே இரண்டாம் போயர் போர் (1899 - 1903) எனப் படுவதாகும்.

ட்ரான்ஸ்வால் (தென்னாஃபிரிக்கக் குடியரசு) போயர் குடி யரசுடன், ஆரஞ்சு சுதந்தர நாடும் சேர்ந்து பிரிட்டிஷார்மீது போர் தொடுத்தன.

அப் போரை மூன்று கட்டங்களாகப் பார்க்க வேண்டியிருக் கிறது. 1899 அக்டோபர் முதல் 1900ஆம் ஆண்டு பிப்ரவரி வரையிலான முதற்கட்டத்தில் போயர்கள் பெரு வெற்றிகளைப் பெற்றனர். நேட்டாலின்மீது படையெடுத்து லேடி ஸ்மித் (Lady Smith) என்னும் நகரைக் கைப்பற்றி அதைச் சர் ஜார்ஜ் வொயிட் (Sir George White) என்ற பிரிட்டிஷ் தளகர்த்தரின் தலைமையில் காத்துவந்த பிரிட்டிஷ் படைகளை விரட்டியடித்தனர். கிம்பர்லி பகுதியையும் பீசௌஞலாந்திலிருந்த மெஃபிகிங் (Mefeking) என்ற இடத்தையும் போயர்கள் முற்றுகையிட்டனர். ஸ்டாம் பெர்க் (Storm Perg) என்னுமிடத்தில் ஜெனரல் கேட்டேகர் (General Catacre) என்பவரின் தலைமையில் சண்டை யிட்ட பிரிட்டிஷ் படைகளையும் 10-12-1899-ல் போயர்கள் வென்றனர். கிம்பர்லியை மீட்க எத்தனித்த மியுதன் (Meuthun) என்ற மற்றொரு பிரிட்டிஷ் தளபதியை மேசர்ஸ் ஃபான்டீன் (Magers fantein) என்னுமிடத்தில் போயர்கள் 11-12-1899-ல் படுதோல்வியடையச் செய்தனர். லேடி ஸ்மித் நகரை மீண்டும் கைப்பற்ற ஜெனரல் புல்லர் (General Buller) என்பவரின் தலைமை யில் ஒரு பிரிட்டிஷ் படை முயன்றபோது அது 15-12-1899-ல் காலென்சோ (Colenso) என்னுமிடத்தில் போயர்களால் தோற்கடிக்கப்பட்டது.

போயர்கள் எதிர்பார்த்ததுபோல அயல்நாடுகளின் உதவி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கேப் மாகாணத்தில் வாழ்ந்த டச்சுக்காரர்களுக்கும் போயர்களுக்கும் சாதகமாகக் கலகத்தில் இறங்கவில்லை. அதே சமயத்தில் ஜெனரல் ராபர்ட் தலைமையில் பெரும் பிரிட்டிஷ் படை தென்ஞஃபிரிக்காவுக்கு அனுப்பப் பட்டது. கானடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்தும் பிரிட்டிஷாருக்கு உதவிப் படைகள் தென்ஞஃபிரிக்காவில் வந்து குவிந்தன. அந்தச் சூழ்நிலையிலேயே போரின் இரண்டாவது கட் டம் (பிப்ரவரி-நவம்பர் 1900,) தொடங்கியது. இக் கட்டத்தில் ஆங்கிலேயர்கள் பெரும் வெற்றிகளை அடைந்தனர். ஜெனரல் ஃபிராங்கின் தலைமையில் பிப்ரவரி 15ஆம் நாளில் கிம்பர்லி மீட்கப் பட்டது. அதே மாதம் 29ஆம் தேதி 4,000 போயர்கள் ராபர்ட்ஸ் பிரபுவிடம் சரண் அடைந்தனர். அதே நாளில் ஜெனரல் புல்லரின் தலைமையில் பிரிட்டிஷ் படை பீட்டர்ஸ் குன்றுக் கருகே (Peters Hill) போயர்களை வென்று லேடி ஸ்மித் நகரை விடுவித்தது. ஆரஞ்சு மாகாணத்தின் தலைநகரான புளூம் ஃபான் டீன் (Bloomfontein) நகரை ஜெனரல் ராபர்ட் 13-3-1900-ல் கைப்பற்றினர். 28-3-1900-ல் ஆரஞ்சு சுதந்தர நாட்டை ராபர்ட்ஸ் பிரிட்டிஷ் பகுதிகளோடு இணைத்தார். 18-5-1900-ல்

மெஃபிகிங் நகரையும் பிரிட்டிஷார் முற்றுகையிட்டு மீட்டனர். 5-6-1900-ல் டிரான்ஸ்வாலின் தலைநகரான பிரிடோரியா நகரம் ஜெனரல் ராபர்ட்ஷ் பிரபுவினுல் கைப்பற்றப்பட்டது. 11-6-1900-ல் ஜெனரல் போத்தாவின் (General Botha) தலைமையில் போயர்கள் ராபர்ட்ஷ்டிடம் சரண் அடைந்தனர். 1-9-1900-ல் டிரான்ஷ்வாலும் பிரிட்டிஷ் பகுதிகளோடு இணைக்கப் பட்டது. வெற்றிவீரர் ராபர்ட்ஷ் பெருமிதத்துடன் இங்கிலாந் துக்குத் திரும்பினர்.

இரு போயர் குடியரசுகளும் பிரிட்டிஷ் பகுதிகளோடு இணைக் கப்பட்டிருந்தும் போயர்கள் கொரில்லாப் போர் முறையில் இறங் கினர். அதுவே போரின் மூன்றுவது கட்டமாக (1800 நவம்பர்-1902 மே) அமைந்தது. அச் சமயத்தில் பிரிட்டிஷ் படைத் தலைமை லார்டு கிச்சனர் (Lord Kitchener) என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. போரிட்ட போயர் கொரில்லாக் களுக்குப் பண்ணைகளிலிருந்தே விவசாயப் போயர்கள் சகல உதவி களையும் கொடுத்துவரவே, அப் பண்ணைகளிலிருந்த மக்களை எல்லாம் கிச்சனர் பிரபு ஒன்று சேர்த்துப் பாசறைகளில் வைத்துக் கண்காணித்தார். பதினுன்கு மாதங்களில் சுமார் 20,000 போயர்கள் பாசறைகளில் கடுமையான முறையிலும் சண்டை யிலும் கொல்லப்பட்டனர். ஆகவே, எதிர்ப்பைத் தொடருவதில் பயனில்லை என உணர்ந்த போயர்களின் தலைவர்கள் பிரிட்டி ஷாருடன் சமாதானம் செய்துகொள்ள முன்வந்தனர்.

1902-ல் வெரினிகிங் (Vereeniging) என்னுமிடத்தில் சமா தான உடன்பாடு ஏற்பட்டது. பள்ளிகளில் போதனு மொழி யாகவும் நீதிமன்றங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட மொழியாகவும் ஆங்கிலத்துடன் டச்சு மொழிக்கும் சம அந்தஸ்து கொடுத்த போதிலும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. போயர் குடியரசுகளின் மக்கள் பிரிட்டிஷ் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். போர்க் காலத்தில் அழிக்கப்பட்டிருந்த பண்ணைகளை மீண்டும் உருவாக்க மூன்று மில்லியன் பவுன்களைப் போயர்களுக்குக் கொடுக்க பிரிட்டன் ஒப்புக்கொண்டது. அத் துடன் விரைவில் போயர்களுக்குச் சுயாட்சி வழங்கும் வாக் குறுதியும் பிரிட்டனுல் கொடுக்கப்பட்டது. அதன்படி 1906-ல் போயர்களுக்குச் சுயாட்சி கொடுக்கப்பட்டது. 1909-ல் கேப் மாகாணம் நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு நாடு ஆகியவை ஒன்றுக இணைக்கப்பட்டுத் தென் ஆஃபிரிக்கா யூனியன் என்ற பெயரைப் பெற்றது. தென்னஃபிரிக்க யூனியனுக்கு இங்கி லாந்து 1910-ல் டொமினியன் (Dominion) அந்தஸ்து வழங்

கியது. ஜெனரல் போத்தா (General Botha) அதன் முதல் பிரதமரானார்.

(ஆ) விக்டோரியா இங்கிலாந்து (1837 - 1901) (மதிப்பீடு)

மிக நீண்ட ஆட்சிக்காலத்தைப் பெற்றிருந்த விக்டோரியா மகாராணியாரின் காலம் இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தமட்டில் அரசியல், சமூக, பொருளாதார, சமயத்துறைகளிலும், கலை, விஞ்ஞான வளர்ச்சியிலும் அக் காலம் போற்றுதற்குரியதாக இருந்தது. வெளிநாட்டுக் கொள்கையில் அக் கால ஆங்கிலேயர் அதிக கவனம் செலுத்தி இங்கிலாந்தை முதல்தர வல்லரசாக ஆக்கியதுமட்டுமல்லாமல் ஒரு பேரரசையும் உருவாக்கியிருந்தனர். சுருக்கமாக, அக் காலத்தில் இங்கிலாந்து ஒரு நவீன நாடாகவும் வல்லமை பெற்ற பேரரசாகவும் விளங்கியது.

அரசியல்

கோனுட்சியைப் பெரிதும் மதித்து நடக்க முற்பட்ட மகாராணியார் சில பிரத்தியேக அதிகாரங்களைத் தம்மிடத்தே வைத்திருந்து அரச பீடத்தின் மாட்சியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார். பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற சிறப்புரிமைகாரத்தைத் தம்மிடத்தே வைத்துக்கொள்ள முயன்றதோடல்லாமல் அரசின் வெளிநாட்டுக் கொள்கையிலும் மிகுந்த அக்கறை காட்டினார். அவ்வப்போது தம் அமைச்சர்களுக்கு எச்சரிக்கை செய்யும் அதிகாரத்தையும், ஆலோசனை கூறும் அதிகாரத்தையும், உற்சாகமளிக்கும் அதிகாரத்தையும் அரசியார் பயன்படுத்தத் தயங்கியதில்லை. அதன் பயனாக, பல சிக்கலான பிரச்சினைகளை அமைச்சர்கள் திருப்திகரமாகத் தீர்க்க ஏதுவாக இருந்தது.

தொழிலாளர்களுக்கும் வாக்குரிமையளித்த இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டமும் (1867) தேர்தல் ஊழலைத் தடுத்த இரகசிய வாக்களிப்புச் சட்டமும் (1872) வயல்களில் வேலை செய்த ஏழைகளுக்கு வாக்குரிமையை விஸ்தரித்த மூன்றாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டமும் (1884) ரபரேசியாரின் காலத்தில் கொண்டுவரப்பட்டிருக்க, பாராளு

மன்றம் பொதுமக்களின் உண்மைப் பிரதிநிதித்துவ மன்றமாக விளங்கியது. பரோ (boroughs), ஷயர் (shire), பாரிஷ் (parish) போன்ற தல நிர்வாகப் பிரிவுகளிலும் 1895, 1898ஆம் ஆண்டு களில் கொண்டுவரப்பட்டிருந்த சட்டங்கள் ஜனநாயக முறையில் பொதுமக்களின் பிரதிநிதித்துவத்தைப் பெருக்கியிருந்தன. ஆக, அரசியாரின் காலத்தை ஜனநாயகக் கொள்கையின் வளர்ச்சிக் காலமெனவும் அழைக்கலாம்.

பழைய டோரி, விக் கட்சிகள் மறைந்து அதன் கிளைகளாக முறையே கன்சர்வேடிவ் (Conservative), லிபரல் (Liberal) கட்சிகள் அக் காலத்தில் தோன்றின. பழமைக் கொள்கை களை விடுத்துப் புதிய சீர்திருத்தக் குறிக்கோள்களைக் கொண்ட கன்சர்வேடிவ் கட்சியை டிஸ்ரேலியும், காலத்திற்கேற்ற புதிய மாற்றங்களைச் செய்வதில் ஆர்வம் காட்டிய கிளாட்ஸ்டன் லிபரல் கட்சியையும் உருவாக்கியிருந்தார் என்பதை நாம் இங்கு நினைவு கூரவேண்டும். காமன்ஸ் சபையில் நன்கு உருப்பெற்ற அக் கட்சி களின் அடிப்படையிலேயே பாராளுமன்ற ஆட்சி முறை இயங் கியது. காமன்ஸ் சபையில் பெரும்பான்மை பெற்ற கட்சியே அதிகாரத்தையும் பெற்றது. அவ் விரு கட்சி முறையினால் காபி னெட் (cabinet) ஆட்சி நன்கு வன்மை பெற்றது. அமைச்சர்கள் பெரும்பான்மை பெற்ற ஒரே கட்சியிலிருந்தே பொறுக்கப்பட்ட தால் நாட்டின் நிர்வாகம் சீராக நடந்தது.

சுருக்கமாக, விக்டோரியாவின் காலத்தில் முடியரசின் மேன்மை காக்கப்பட்டதல்லாமல் கட்சியாட்சியும் காபினெட் ஆட்சியும் வேரூன்றின.

சமூகம்

மக்களுக்கு அத்தியாவசியமாக இருந்த பல சலுகைகளைக் கொடுக்கவேண்டி, அம் மகாராணியாரின் காலத்தில் பற்பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

1840-ல் மெல்போர்ன் பிரபுவின் இரண்டாம் அமைச்ச ரவையின் காலத்தில் கொண்டுவரப்பட்ட பென்னித் தபால் (Penny Postage) செய்தி, போக்குவரத்து முறையிலே ஒரு புதுமையை உண்டுபண்ணியிருந்தது. பிரதமர் ராபர்ட் பீலின் காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்த சுரங்கச் சட்டம் (1842), தொழிற்சாலைச் சட்டம், பாங்கு சாசனச் சட்டம் (1844), தானியச் சட்டத்தின் ரத்து (1846) போன்றவைகளை நாம் முன்னரே கண்டோம். அச் சட்டங்கள் குறிப்பிட்ட துறைகளிலே போற்றத்தக்க நல்ல விளைவுகளைக் கொடுத்திருந்தன. ஜான்

ரஸ்ஸல் பிரபுவின் அமைச்சரவையின் காலத்தில் கொண்டுவரப் பட்டிருந்த தொழிற்சாலைச் சட்டம் (1847) பத்து மணி நேர வேலையை வற்புறுத்தியது. 1848-ல் கொண்டுவரப்பட்ட பொது ஆரோக்கியச் சட்டம் நாட்டில் சுகாதாரச் சூழ்நிலையை உரு வாக்க உதவியது. பாமர்ஸ்டனின் இரண்டாவது மந்திரி சபை காலத்தில் நிறைவேற்றப்பட்ட தபால் நிலையச் சேமிப்பு பாங்கு முறை (1862) மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற் றிருந்தது. பேரமைச்சர்கள் டிஸ்ரேலி, கிளாட்ஸ்டன் போன் றோர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்த சட்டங்களின் நீளப் பட்டியல் பொதுமக்களுக்குப் பற்பல வகைகளிலே நன்மை பயப்பதாக அமைந்திருந்ததை நாம் முன்னரே பார்த்தோம். விக்டோரியாவின் காலத்தில் கல்வித்துறையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. பொதுப் பள்ளிகளையே நம்பியிருந்த மக்களுக்கு அரசாங்கம் கல்விக்கூடங்களைக் கட்டித்தர முன்வந்தது. கல்வி கட்டாயமாக்கப்பட்டதல்லாமல் (1880) எல்லாக் குழந்தைகளும் ஆரம்பக் கல்வி பெற ஏதுவாகக் கல்வி இலவசமாக்கப்பட்டது (1881). சுருக்கமாக, விக்டோரியாவின் காலத்திலேயே கல்விச் சீர்திருத்தம் தொடங்கியதெனலாம்.

பொருளாதாரம்

பழைய மெர்க்கன்டலிஸக் கொள்கை புறக்கணிக்கப்பட்டு விக்டோரியா காலத்தில் அரசினர் தலையிடாக் கொள்கையைக் (Free Trade) கடைப்பிடித்தனர். தனி மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடக் கூடாதென்ற அக் கொள் கையின் அடிப்படையிலேயே தானியச் சட்டங்கள் ரத்து செய்யப் பட்டிருந்தன. பொருளாதாரத் துறையில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டபோதும், சிற்சில சந்தர்ப்பங்களிலே மக் களின் நலன்கருதி, டிஸ்ரேலி, கிளாட்ஸ்டன் போன்ற அமைச் சர்கள் கல்வியைப் பரப்பவும், வியாபாரத் தனியுரிமைகளைக் கட்டுப்படுத்தவும், தொழிலாளர்களின் குறைகளைப் போக்கவும் நாட்டின் பொருளாதார வாழ்வில் தலையிட்டனர். இருப்பினும், அரசாங்கத்தின் தலையீடும் கட்டுப்பாடும் ஒரு குறிப்பிட்ட அளவை மீறவில்லை என்பதே பொருத்தமாகும்.

தொழிற்சங்கத்தின் வளர்ச்சியிலும், விக்டோரியாவின் இங்கிலாந்தில் முன்னேற்றம் காணப்பட்டது. தொழிலாளிகள் தங்களின் குறைகளை முதலாளிகளிடம் முறையிட்டுக்கொள்வ தற்கும் அவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கும் பேருதவியாக இருந்த தொழிற்சங்கங்களை விக்டோரியா கால அமைச்சர்கள் சில சட்டங்களின்மூலம் சட்டரீதியாக்கி யிருந்தனர். குறிப்பாகத்

தொழிற்சங்கங்களின் நிதிகளை அதன் நிர்வாகிகள் கையாளு வதைத் தடுக்க 1867-ல் சட்டமொன்று கொண்டுவரப்பட்டது. தொழிற்சங்கம் தங்கள் வழக்குகளைத் தீர்க்க மேற்கொள்ளும் பயமுறுத்தல்கள் கிரிமினல் குற்றங்களெனக் கருதப்படக் கூடாது என்று 1875-ல் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம் வற்புறுத்தியது.

பிரிட்டிஷ் வியாபாரத் துறையிலும் பல புதிய முறைகள் தோன்றியிருந்தன. குறிப்பாக ஆங்காங்கே கூட்டாகச் சேர்ந்து வியாபாரம் செய்யும் முயற்சி நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது. அதன் விளைவாக ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் (Joint Stock Company) தோன்றின். சாதாரண மக்களும்கூட அக் கூட்டு முயற்சியில் பங்குகளைப் (shares) பெற ஆரம்பித் தனர். பங்குதாரர்களுக்கு அவர்களிட்ட முதலுக்கேற்ப இலாபம் பிரித்துத் தரப்பட்டது. கம்பெனியை நடத்துவதில் பங்கு தாரர்கள் பொறுப்பெதையும் ஏற்காமல் அவர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட இயக்குநர்களைக் கொண்டு கம்பெனியை நடத் தினர். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டாலும் பங்குதாரர்கள் அவர்கள் போட்ட முதலைமட்டும் இழப்பர். மற்றப்படி அவர் களது ஏனைய சொத்துகளைக் கம்பெனிக்குக் கடன் கொடுத்த வர்கள் பறிமுதல் செய்யாதபடி வரையறுக்கப்பட்ட பொறுப்பு கொண்டுவரப்பட்டது. அம் முறையினால் பிரிட்டிஷ் வியாபாரம் பெரிதளவு வளர்ந்தது. பெரும் வியாபாரங்களில் பங்குதாரர் களாகச் சேர மக்கள் துணிந்து முன்வந்தனர். ஆரம்பத்தில் வியாபாரத்தில் மட்டும் கையாளப்பட்ட ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி முறை பின்னர் பாங்குகளின் அமைப்பிலும் கையாளப் பட்டது.

விக்டோரியா கால இங்கிலாந்தில் தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணப்பட்டது. யார்க்ஷயரின் கம்பெனித் தொழிலும், லீசெஸ்டர்ஷயரில் காலுறைகள் செய்யும் தொழிலும், நாட்டிங்ஹாமில் (Nottingham), பின்னும் (lace) தொழிலும், ஷெஃபீல்டு (Sheffield), பர்மிங்ஹாம் போன்ற இடங்களில் இரும்புத் தொழிலும், பெருவளர்ச்சி பெற்றிருந்தன. நீராவி, மின்சாரம், நிலக்கரி வாயு முதலான சக்திகளைக்கொண்டு இயக்கப்பட்ட இயந்திரங்களால், இங்கிலாந்து இயந்திரத் தொழிலில் முன்னேற்றம் பெற்றிருந்தது. மோட்டார்கார்கள், நீராவிக்கப்பல் கட்டும் தொழில்களும் வளர்ந்தன. டியூப் (Tube) என்னும் பாதாள இரயில் வண்டிகளும் (1900) விடப்பட்டன. தந்தி, தொலைபேசி சம்பந்தப்பட்ட தொழில்களும் நன்கு வளர்ச்சி யுற்றன. சுருக்கமாக இங்கிலாந்து ஓர் இயந்திர யுகத்தில்

இருந்தது. 1851-ல் இலண்டன் மாநகரில் நடத்தப்பெற்ற ஒரு பெரிய கண்காட்சி இங்கிலாந்தின் தொழில் முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

சமயம்

விக்டோரியா இங்கிலாந்தில் குறுகிய சமய மனப்பான்மை மறைந்து தாராள மனப்பான்மை வளர்ந்திருந்தது. இணங்காதவர்களுக்கும் சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, தங்களது கோயில்களிலேயே திருமணம் செய்துகொள்ள 1836-ல் இணங்காதார் அனுமதிக்கப்பட்டனர். விக்டோரியாவின் காலத்தில் ரோமன் கத்தோலிக்கர்கள் மீதிருந்த பல தடைகளும் நீக்கப்பட்டன. பிஷப்புகள், ஆர்ச்பிஷப்புகள் ஆகியோரைக் கொண்ட கத்தோலிக்க திருச்சபை 1850-ல் நிறுவப்பட்டது. 1858-ல் கொண்டுவரப்பட்டிருந்த ஒரு சட்டத்தின்படி யூதர்கள் பாராளுமன்றத்தில் முதன் முறையாக இடம் பெற்றிருந்ததும் 1871-ல் கொண்டுவரப்பட்ட மற்றொரு சட்டத்தின் கீழ் ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் இணங்காதாரும், கத்தோலிக்கர்களும் சேர்க்கப்பட்டிருந்ததும், சமயத்தில் மக்களுக்கிருந்த சகிப்புத்தன்மையை எடுத்துக்காட்டியது. ஒரே மதந்தான் நாட்டில் இருக்கவேண்டுமென்ற நிலைமை மறைந்து பல மதப் பிரிவுகளும், உரிமைகளுடன் இங்கிலாந்தில் தழைக்கும் படியான நல்ல நிலை உருவாகியது.

இங்கிலாந்தில் ஏற்பட்டிருந்த சமய சகிப்புத்தன்மையைத் தொடர்ந்து சில புதிய மத இயக்கங்கள் தோன்றியிருந்தன. அவற்றிலே சுவிசேஷ நற்செய்தி பரப்புவோர் இயக்கமும் (Evangelical Movement), ஆக்ஸ்ஃபோர்டு இயக்கமும் (Oxford Movement) குறிப்பிடத்தக்கவை. சுவிசேஷ மதத்தைச் சேர்ந்தவர்கள் விவிலிய நூலின் போதனைகளை முழுக்க முழுக்கப் பின்பற்ற வேண்டு மென்ற கொள்கையுடையவர்களாக இருந்தனர். ஞாயிற்றுக்கிழமைகளில் எவ்விதக் கேளிக்கைகளிலும் ஈடுபடாது கோவிலுக்குப் போவதையும் விவிலியத்தைப் பாராயணம் செய்வதையும் மிக முக்கியக் கடமையாகக் கொண்டிருந்தனர். அவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் சமயத்தில் பல கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்ததோடல்லாமல் சமூகத்திலும் பல பரோபகார காரியங்களைச் செய்தனர். வில்லியம் பூத் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட அறப்படை பல சமூகத் தொண்டுகளைப் புரிந்தது. கத்தோலிக்க மதமும் ஆங்கில மதமும் ஒன்றே என வாதித்த ஜான் கெபில் (John Keple), ஜான் நியூமென் (John Newman), எட்வர்டு பியூசி (Edward Pusey) போன்ற ஆக்ஸ்

ஃபோர்டு மத குருமார்களால் தொடங்கப்பட்ட மற்றோர் இயக்கம், முடைச்சேரிகளிலும், பட்டி தொட்டிகளிலும் ஏழை மக்களுக்குச் சமய உணர்வை ஊட்டியதோடல்லாமல் சமூகத் தொண்டினையும் செய்தது. கிருத்துவக் கொள்கைகளைப் பேச்சளவோடு நிறுத்திக்கொள்ளாமல் நடைமுறையிலும் கொண்டு வர வேண்டுமென்று சார்லஸ் கிங்ஸ்லி (Charles Kingsley), மௌரீஸ் (Maurice), தாமஸ் ஹியூக்ஸ் (Thomes Hughes) போன்றவர்களால் கிருத்துவ சமதர்மிகள் (Chiristian Socialists) என்ற மற்றோர் இயக்கமும் தொடங்கப்பட்டிருந்தது.

கலையும் விஞ்ஞானமும்

விக்டோரியாவின் காலம் கலைகளின் வளர்ச்சியில் மிகவும் போற்றத்தக்கதாக அமைந்திருந்தது. உலகப் புகழ் பெற்ற இலக்கிய கர்த்தாக்கள் தங்களின் எழுத்துப் படைப்புகளில் விக்டோரியா இங்கிலாந்தைப் பிரதிபலித்துக் காட்டினர். சார்லஸ் டிக்கன்ஸ் (1812-1870) என்ற நாவலாசிரியர் ஆலிவர் ட்விஸ்ட் (Oliver Twist), டேவிட் காப்பர்ஃபீல்ட் (David Copperfield), பிக்விக் பேப்பர்ஸ் (Pickwick Papers) போன்ற புகழ்பெற்ற இலக்கியங்களை எழுதியிருந்தார். அந்த நாவல்கள், ஏழைகளின் துன்பநிலையை வடித்துக் காட்டுவனவாகவும், ஊழல்களை அம்பலப் படுத்துவனவாகவும், சமூகத்தை நையாண்டி செய்வனவாகவும் எழுதப்பட்டிருந்தன; கார்லில் (Carlyle, 1795-1881) என்னும் அறிஞர் சமுதாயத்தைக் கண்டித்து மக்களின் ஆன்மீக உணர்வைத் தூண்டும்படியான நூல்களை எழுதினர். மேத்யூ ஆர்னல்டு (Mathew Arnold) என்ற இன்னோர் ஆசிரியரும், புற நாகரிகத்தைப் பழித்து அகநாகரிகத்தை வற்புறுத்தினர். விக்டோரியாவின் காலத்தில் டென்னிசன் (Tennyson), ராபர்ட் ப்ரௌனிங் (Robert Browning), கிப்லிங் (Kipling), மேஸ் பீல்டு, ஈட்ஸ் (Yeats) ஜார்ஜ் எலியட் (George Elliot), பிரான்டே சகோதரிகள் (Bronte Sisters) போன்ற பெரும் கவிஞர்களும் தங்கள் எழுத்துப் படைப்புகளால் விக்டோரியா இங்கிலாந்தைப் படம் பிடித்துக் காட்டினர். புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்களான ஸ்டப்ஸ் (இங்கிலாந்தின் அரசியல் அமைப்பு), மெக்காலே (இங்கிலாந்து வரலாறு), சீலி (ஆங்கிலப் பேரரசின் வரலாறு) போன்றோரும் விக்டோரியா இங்கிலாந்தில் வாழ்ந்தனர்.

கான்ஸ்டஃபிள் (Constable), டர்னர் (Turner), விஸ்லர் (Weistler), சார்ஜன்ட் (Sargeant) போன்ற நல்ல ஓவியர்களும் அக் காலத்தில் வாழ்ந்தனர். சர் ஹென்றி (Sir Henry), இர்விங்

(Irwing), சர் பீர்பாம்ட்ரீ (Sir Beerbormtree) போன்ற நாடகக் கலைஞர்கள் அக் காலத்தில் வாழ்ந்து கலைச்சேவை புரிந்தனர்.

விஞ்ஞானத்திலும் விக்டோரியாவின் காலம் சிறப்புப் பெற்றிருந்தது. டால்ட்டன் (Dalton) என்ற வேதியல் நிபுணர் அணுக் கோட்பாட்டைப்பற்றி ஆராய்ச்சி நூல் வெளியிட்டிருந்தார். ஃபாரடே (Faraday), கெல்வின் பிரபு (Lord Kelvin) போன்றோர் மின்சார சக்தியைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தியிருந்தனர். லயஸ் (Lyos) என்பார் நில அமைப்பைப்பற்றி ஆராய்ச்சி செய்து பல புதிய உண்மைகளை வெளியிட்டார்.

விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் தந்தி, தொலை பேசி, பாதையமைப்பு, இரயில் போக்குவரத்து, பாலம் கட்டுதல், நீராவிக்கப்பல் முறை போன்றவைகளிலே பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

மருத்துவத்துறையிலும் அக் காலம் சிறப்புற்று விளங்கியது. நோயாளிகளுக்கு வேதனையின்றி இரணசிகிச்சை செய்ய உதவியாக இருந்த மயக்க மருந்தைக் (குளோரஃபாம் - Chloroform) டாக்டர் ஜேம்ஸ் சிம்சன் என்பார் கண்டுபிடித்தார். லிஸ்டர் (Lister) என்ற அறுவை நிபுணர், காயத்தில் புரையேறுமல் தடுக்கக் கிருமி நாசினி மருந்தைக் (கார்பாலிக் அமிலம்) கண்டுபிடித்தார். நோய்களைத் தடுக்க ஊசிபோடும் இன்னுகுலேஷன் (Inaculation) முறையை பாஸ்டர் (Pasteur) என்ற அறிஞர் கண்டுபிடித்தார். சர் ரொனல்டு ராஸ் என்பவர் மலேரியா வியாதியின் காரணத்தை வெளியிட்டார்.

மகாராணியார் காலத்தில் சில புதிய கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. மோட்டார்களைக் கொண்ட கப்பல்கள், சைக்கிள், கேமிரா போன்றவை அவற்றில் சில.

பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சி

விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக் காலத்திற்குப் பெருமை தேடித்தரும் வகையில் பிரிட்டிஷ் பேரரசின் கொள்கை புதிய அடிப்படையில் உருவாக்கப்பட அதுவே இரண்டாவது பிரிட்டிஷ் பேரரசின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவியது

கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென் ஆஃபிரிக்கா போன்ற குடியேற்ற நாடுகளிலே பிரிட்டிஷாரின் தனி அதிக்கம் வளர்ச்சி பெற்றிருந்த அக் காலத்தில் டர்ஹாம் அறிக்கையின் கீழ்ச் சுயாட்சியும் வழங்கப்பட்டிருந்தது. அயர்லாந்துக்குமட்டும் அவ் வுரிமை வழங்கப்படவில்லை. பொறுப்பாட்சி பெற்ற அக்

குடியேற்ற நாடுகள் வெளிநாட்டுக் கொள்கையிலும், வியாபாரம் முதலியவற்றிலேயே தாய் நாடான இங்கிலாந்திஞல் கட்டுப் படுத்தப்பட்டுவந்தன.

சீனப் போர்களின் விளைவாக விக்டோரியாவின் காலத்தில் பிரிட்டிஷார் சீன தேசத்தில் பல வியாபாரச் சலுகைகளை அடைந்ததோடல்லாமல் 1842-ல் ஹாங்காங் (Hongkong) தீவினையும் பெற்றனர்.

இந்தியப் பெருங்கலகத்திற்குப் பின்னர்க் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரம் இந்தியாவிலிருந்து நீக்கப்பட்டு, மகா ராணியாரின் தனியாணைப் பேரறிவிப்பின்படி, இந்தியப் பேரரசு, பிரிட்டிஷ் கோளுட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தது (1858).

ஆஃபிரிக்கப் பெருங்கண்டத்தில் நைஜிரியா (Nigeria), காம்பியா, (Gambia), சீயராலியன் (Sierraleone), கோல்ட் கோஸ்ட் (Gold coast), சோமாலிலாந் (Somaliland), உகண்டா (Ugauda), கிழக்கு ஆஃபிரிக்கா, கென்யா (Kenya), ரொடீஷியா, பெக்குவானுலாந்து (Bcchuanaland) போன்ற பகுதிகளோடு எகிப்திலும், சூடானிலும் பிரிட்டிஷார் ஆதிக்கம் பெற்றனர். டெல் - எல் - கபீர் (Tel-el-Kabir) சண்டைக்குப் பின்னர் (1882) ஆங்கிலேய உயர் ஆணையாளராக எகிப்தில் குரோமர் பிரபு நியமிக்கப்பட்டிருக்க, பல சீர்திருத்தங்களை அவர் அங்குக் கொண்டுவந்தார். கசையடி, கட்டாயக் கூலி வேலை, லஞ்ச ஊழல் போன்றவைகளை ஒழித்து, இரயில்பாதைகள், விவசாயப் பாசனக் கால்வாய்கள் போன்ற நவீன முறைகளைப் புகுத்தியதோ டல்லாமல், எகிப்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நிறுத்தி பிரிட்டிஷ் பேரரசின் பெருமையை உயர்த்தியிருந்தார். ஜெனரல் கார்டன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மஹ்தி யினுல் சூடான் கைப்பற்றப்பட்டிருந்தும் (1885) பதின்மூன்று ஆண்டுகள் கழித்துக் கர்னல் கிச்னர் தலைமையில் பிரிட்டிஷார் 1898-ல் ஆம் டூர்மன் (Om durman) என்ற இடத்தில் மஹ்தியின் படைகளை வென்று சூடானை மீட்டிருந்தார். சூடானை ஆள, சர் ஃபிரான்சிஸ் விங்கேட் (Sir Francis Wingate) என்ற உயர் ஆணையாளரை பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்திருக்க, பல துறைகளில் அந் நாடு முன்னேற்றமடைந்தது. ஜமாய்க்கா, டிரினிடாட், பார்படாக்ஸ் போன்ற மேற்கிந்தியத் தீவுகளைத் தம் பேரரசில் ஏற்கெனவே கொண்டிருந்த பிரிட்டிஷார் அக் காலத்தில் கிழக்கிந்தியத் தீவுகளான போர்னியோ (Borneo), நியூகினியா

(New Guinea) போன்றவைகளையும், மலேயா (Malaya) தீபகற்பத்தையும், பர்மா நாட்டையும் கைப்பற்றி யிருந்தனர்.

அங்ஙனமாக, உலகின் பல பாகங்களில் தம் ஆதிக்கத்தைச் செலுத்திய பிரிட்டிஷார் விக்டோரியாவின் காலத்தில், மூன்றும் பேரரசையும் தோற்றுவித்தனர். இங்கிலாந்து ஒரு வல்லரசாக மட்டுமன்றி ஏகாதிபத்திய நாடாகவும் விளங்கியது.

1897-ல் வைரவிழாக் கொண்டாடிய விக்டோரியா மகாராணியாரின் காலம் பல துறைகளிலே காலத்திற்கேற்ற மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் கொண்டு பெருமையுற்றிருந்ததால் இங்கிலாந்தின் வரலாற்றின் பொற்காலமாகப் போற்றப்படுகிறது.

1901ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் நாளில் அம் மகாராணியார் காலமடைய, ஒரு சகாப்தமே முடிந்ததுபோலிருந்தது.

(இ) இங்கிலாந்தும் கீழைச் சிக்கலும் (19ஆம் நூற்றாண்டு)

கீழைப் பிரச்சினை

சிறிது சிறிதாகத் துருக்கியப் பேரரசு சீரழிந்து சிதைவுற்று வந்த 19ஆம் நூற்றாண்டில் அதன் ஆதிக்கத்தில் அதுவரை கட்டுண்டிருந்த பால்கன் (Balkan) கிருத்துவ நாடுகள் விடுதலைப் போரைத் தொடங்க, அதைப் பயன்படுத்திக்கொண்டு கிருத்துவர்களைத் துருக்கியக் கொடுங்கோன்மையினின்று விடுவிக்க ரஷ்யா முன்வர, இங்கிலாந்து போன்ற மற்ற ஐரோப்பிய நாடுகள் சந்தேக மனப்பான்மையைக் கொண்டு ரஷ்யாவின் தலையீட்டை நோக்க, அதனால் ஏற்பட்ட பெரும் ஐரோப்பியச் சிக்கல்களே கீழைப் பிரச்சினை என்பதாகும்.

துருக்கியப் பேரரசில் ஒடுங்கிக் கிடந்த கிருத்துவ நாடுகளுக்கு வாழ்வளிக்க ரஷ்யா ஆர்வம் காட்டியதென்பதைவிட அப் பரோபகாரப் போர்வையில் தன் செல்வாக்கைப் பால்கன் பகுதியில் நிலைநிறுத்துவதிலேயே ரஷ்யா அக்கறை காட்டிய தென்பதே பொருத்தமாகும். ரஷ்யாவின் செல்வாக்கை அப் பகுதியில் வளர விடாமல் தடுக்கவேண்டு மென்பதே பிரிட்டன் கொள்கையாக இருந்தது.

கீழைப் பிரச்சினையை நான்கு கட்டங்களிலே பரிசீலிக்க வேண்டியிருக்கிறது: கிரேக்க சுதந்தரப்போர் (1821-1829); மெஹமத்

அலி விவகாரம் (1833-1841); கிரிமியாப் போர் (1854–1856); ரஷ்ய - துருக்கிப் போர் (1876-1878)

கான்ஸ்டான்டி நோபிளைத் தலைநகராகக் கொண்டிருந்த துருக்கியப் பேரரசில் கிரேக்கர்கள், செர்பியர்கள், பல்கேரியர்கள் கட்டுண்டு கிடந்தனர். துருக்கியரின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து முதன் முதலில் 1820–ல் செர்பியர்கள் கலகம் செய்து ஓரளவு சுய ஆட்சி பெற்றிருந்தனர். ஆயின், கீழைப் பிரச்சினை முதல் சிக்கல் கிரேக்க நாட்டிலேயே தொடங்கியது. செர்பியர்களின் கலகத்தால் ஊக்கம் கொண்ட கிரேக்கர்கள் தங்கள் நாட்டையும் துருக்கியப் பேரரசிலிருந்து விடுதலை பெறச்செய்யக் கலகத்தில் இறங்கினர்.

கிரேக்க சுதந்தரப் போர் (கானிங் பிரபு காலம்)

மொரியா (Morea) என்ற கிரேக்க மாகாணத்தில் கலகம் உச்ச நிலையை யடைந்து, கிரேக்க சுதந்தர வீரர்களைத் துருக்கி பல கடுமையான அடக்குமுறை வழிகளால் ஒடுக்கி வந்தது. துருக்கியப் பேரரசில் வாழ்ந்த கிரேக்க வைதீகக் கிருத்துவர்களை யெல்லாம் (Greek Orthodox Church) காப்பற்றுகின்ற பொறுப்பை ரஷ்யா 1774-ல் ஏற்பட்ட குட்ச்சுக் கெல்ஞர்ட்சி (Kutchuk Kainardje) உடன்படிக்கையின்மூலம் பெற்றிருந்தது. அந்த ஒப்பந்தத்தின்கீழ் கிரேக்க கிருத்துவர்களின் சுதந்தரப் போரை ரஷ்யா முழுமனதுடன் ஆதரித்தது. கிரேக்கர்களின் சுதந்தரத்தில் இங்கிலாந்து அக்கறை கொண்டிருந்தபோதிலும் துருக்கியப் பேரரசு சிதைந்து போவதை அப்போதைய வெளிவிவகார மந்திரியான (Lord Canning) கானிங் பிரபு விரும்பவில்லை. துருக்கியப் பேரரசு குலைய ஆரம்பித்தால் பால்கன் பகுதியில் (தென் கிழக்கு ஐரோப்பா) ரஷ்யாவின் செல்வாக்குப் பரவிவிடும் என்ற பீதி கானிங் பிரபுவுக்கு இருந்துவந்தது. கிரேக்கர்களின் சுதந்தரத்தை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு ரஷ்யா தன் செல்வாக்கை அவர்களின்மீது திணித்து மத்திய தரைக்கடல் பகுதியில் ஆதிக்கம் பெறலாமென்ற பயமும் அவருக்கு இருந்தது. எனவே, கிரேக்க சுதந்தரப் போரை ஆதரிக்க இங்கிலாந்து ஆரம்பத்தில் தயங்கியது. 1825-ல் துருக்கிய சுல்தானின் வேண்டுகோளுக்கிணங்கி எகிப்தியச் சிற்றரசன் மெஹமத் அலி (Mehemet Ali) தன் மகனை இப்ராஹிம் (Ibrahim) தலைமையில் கிரேக்கக் கலகத்தை ஒடுக்க ஒரு கப்பற்படையையும், தரைப்படையையும் அனுப்பி இருந்தார். கிரேக்கத்தை வந்தடைந்த இப்ராஹிமின் எகிப்தியப் படை பல அட்டூழியங்களைப் புரிந்தது. அந்த நிலையில் கிரேக்கர்கள் சார்பிலே போரில் நுழைய ரஷ்யா தீர்மானித்தது. ரஷ்யாவின்

தனித் தலையீட்டை இங்கிலாந்து விரும்பவில்லை. ஆகவே, ரஷ்யாவுடன் சேர்ந்து கிரேக்க - துருக்கித் தகராற்றைத் தீர்த்துவைக்க கானிங் பிரபு முன்வந்தார். இங்கிலாந்தின் கொள்கையில் ஏற்பட்ட அம் மாறுதலைத் தொடர்ந்து 1827-ல் இலண்டன் மாநகரில் கானிங் பிரபு ஒரு மாநாட்டைக் கூட்டினார். இங்கிலாந்து, ரஷ்யா, ஃபிரான்சு ஆகிய மூன்று நாடுகள் இலண்டன் உடன்படிக்கையில் (Treaty of London) கையெழுத்திட்டன. அதன்படி கிரேக்கர்களுக்குச் சுயாட்சி கொடுக்கும்படி துருக்கியர்கள் வற்புறுத்தப்பட்டனர். அதற்கிடையே கானிங் பிரபு காலமாகிவிட்டதால் காடுரிச் (Gadrich) என்பவரின் தலைமையில் 1827 ஆகஸ்டு மாதத்தில் ஓர் அமைச்சரவை அமைக்கப்பட்டிருந்தது. இலண்டன் உடன்படிக்கையைத் துருக்கியின்மீது திணிக்க அம் மூன்று நாடுகளும் சேர்ந்து ஒரு கப்பற்படையைக் கருங்கடலுக்கு அனுப்பின. கிரேக்கர்களுக்குச் சுயாட்சிகொடுக்கத் துருக்கி தயங்கி வந்ததோடல்லாமல் நேச நாடுகளின் கப்பற்படையை நவாரினோ குடாவில் (Navarino Bay) எகிப்தியக் கப்பற்படைகளோடு சேர்ந்து தாக்க ஆரம்பித்தது. தொடர்ந்து நடந்த கடல் சண்டையில் துருக்கிய – எகிப்திய கப்பற்படை சின்னபின்னமாக்கப்பட்டது. கிரேக்க சுதந்தரத்தைத் துருக்கி ஒப்புக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்க, வெலிங்டன் பிரபு (1828) இங்கிலாந்தின் பிரதமரானார். பால்கன் நாடுகளில் தலையிடாமல் இங்கிலாந்து ஒதுங்கி இருக்க வேண்டுமென்ற கொள்கையை அவர் பின்பற்றியதால் இங்கிலாந்தின் படைகள் திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், ரஷ்யா தனித்துப் போர் செய்ய முற்பட்டது. துருக்கியர்கள் வீரத்துடன் எதிர்த்தபோதிலும் அவர்கள் தலைநகரான கான்ஸ்டான்டி நோபிளை ரஷ்யப் படைகள் நெருக்க ஆரம்பித்தன. அதனால் பயந்த துருக்கிய சுல்தான் ரஷ்யாவுடன் அட்ரியநோபிள் உடன்படிக்கையைச் (Treaty of Adrianople) செய்துகொண்டார். அவ் வுடன்படிக்கையின்மூலம் ரஷ்யா தன் செல்வாக்கைப் பால்கன் தீபகற்பத்தில் நிலைநிறுத்திக்கொள்ள முயன்றது. துருக்கிய வல்லரசை ஆதரித்துக் கிரேக்கரின் விடுதலைப் போரைக் கைவிட்ட வெலிங்டன் பிரபுவுக்கு அவ் வுடன்படிக்கை ஓர் இடியாக இருந்தது. எது நடைபெறக்கூடாதென்று கானிங் பிரபுவின் காலத்தில் இங்கிலாந்து நினைத்ததோ அது தம் காலத்தில் நடத்தப்பட்டதை வெலிங்டன் பிரபு உணர ஆரம்பித்தார். ஆகவே, ரஷ்யாவின் தனிச் செல்வாக்கை அப் பகுதியில் பரவவொட்டாமல் தடுக்கத் தம் பிற்போக்குக் கொள்கையை மாற்றிக்கொண்டு 1829-ல் இலண்டனில் மாநாட்டைக் கூட்டினார். அம் மாநாட்டில் ரஷ்யா, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் ஆதரவு பெற்றுக் கிரேக்க சுதந்தரத்தைத் துருக்கியர் ஒப்புக்

கொள்ளும்படி இங்கிலாந்து அந்த நாட்டை வற்புறுத்தியது. கிரேக்க சுதந்தரப் போரில் ரஷ்யா தனிப் புகழ் பெறவிடாமல் தடுக்கவே இங்கிலாந்து கடைசிக் கட்டத்தில் நடுவராக வரத் தீர்மானித்திருந்தது.

மெஹமத் அலி விவகாரம் (பாமர்ஸ்டன் காலம்)

கிரேக்க சுதந்தரப் போரில் எகிப்திய சிற்றரசர் மெஹமத் அலி துருக்கிக்கு ஆதரவாகப் படையுதவி செய்திருந்ததை நாம் அறிவோம். அந்த உதவிக்காகக் கிரிட் (Crete) என்ற தீவை எகிப்திய சுல்தானுக்குத் துருக்கி கொடுத்திருந்தது. அதில் திருப்தியடையாத மெஹமத் அலி துருக்கியப் பேரரசின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு இன்னும் சில பகுதிகள் தமக்கு வேண்டுமென்று கேட்க, அதற்குத் துருக்கிய சுல்தான் மறுப்பளித்தபோது போர் தொடங்கியது. அதுவரை துருக்கிய சுல்தானின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு எகிப்தை ஆண்டுவந்த மெஹமத் அலி பெரும் படை திரட்டித் தம் மகன் இப்ராஹிம் தலைமையில் துருக்கியப் பேரரசின்மீது ஏவினார். 1832-ல் இப்ராஹிம் ஆசியா மைனரைக் (Asia Minor) கைப்பற்றிப் பேரரசினை நோக்கி விரைந்தார். நிலைமை அங்ஙனம் மோசமாகி விடத் துருக்கிய சுல்தான், உதவி கோரி மற்ற ஐரோப்பிய நாடுகளை வேண்டினார். தம்மை அந்த ஆபத்தான நிலையிலிருந்து காப்பவர்க்குத் தம் பேரரசின் பாதிப்பகுதியையும் கொடுக்கத் தயாரென அவர் அறிவித்தார். மற்ற ஐரோப்பிய நாடுகள் துருக்கி விவகாரத்தில் தலையிடத் தயங்கிவந்தபோது ரஷ்யா தன் படைகளை அனுப்பி இப்ராஹிமின் முன்னேற்றத்தைத் தடுத்தது. தக்க சமயத்தில் தமக்குதவி செய்த ரஷ்யாவுடன் துருக்கிய சுல்தான் உன்கியார் ஸ்கெலெஸ்ஸி (Unkiar Skelessi) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி டார்டனல்ஸ் (Dardanells) ஜலசந்தியில் ரஷ்யர்களின் கப்பல்களைத் தவிர வேறு எந்த நாட்டுக் கப்பலையும் உள்ளே விடுவதில்லையெனச் சுல்தான் ஒப்புக்கொண்டார். அவ் வுடன்படிக்கையின் மூலம் மத்திய தரைக்கடல் பகுதியிலும் ரஷ்யா செல்வாக்குப் பெறக்கூடிய நிலையில் இருந்ததால் அதை இங்கிலாந்து வரவேற்கத் தயாராக இல்லை. தன் கீழைப்பேரரசுக்கு ரஷ்யா விஞ்ஞ குந்தகம் விளையுமென இங்கிலாந்து பயந்ததில் ஓரளவு உண்மையும் இருந்தது. மெஹமத் அலியை மிரட்டி அவர் மகன் இப்ராஹிம் கைப்பற்றியிருந்த சிரியா மாகாணத்தைத் துருக்கிய சுல்தானுக்குத் திருப்பிக் கொடுத்துவிடச் செய்வதன் மூலமாக ரஷ்யாவின் உதவியைத் துருக்கிய சுல்தானுக்குத் தேவையற்றதாகச் செய்ய வேண்டுமென இங்கிலாந்தின் வெளி

நாட்டு அமைச்சரான பாமர்ஸ்டன் விரும்பினார். ஆனால், பிரிட்டிஷாரின் செல்வாக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் வளர விடாமல் தடுக்க, ஃபிரான்சு நாடு மெஹமத் அலியின் வெற்றிக்குப் பங்கம் வரக்கூடாதெனக் கருதி அவரை ஊக்குவித்தது. அங்ஙனமாக, துருக்கிக்கு ஆதரவாக ரஷ்யா, மெஹமத் அலியை வற்புறுத்திய பிரிட்டன், பிரிட்டனின் ஆதிக்கத்தை வெறுத்த ஃபிரான்சு ஆகிய மூன்று நாடுகள் துருக்கிய - எகிப்துப் போரில் பெரும் சிக்கலை உண்டாக்கி வந்தன.

1839-ல் மெஹமத் அலி மீண்டும் துருக்கியின்மீது படையெடுத்தார். உன்கியார் ஸ்கெலெஸ்ஸி உடன்படிக்கையின்படி துருக்கிக்கு உதவி செய்ய ரஷ்யா முன்வந்தது. பாமர்ஸ்டன் ரஷ்யாவின் தனித்தலையீட்டை விரும்பவில்லை. எல்லா வல்லரசுகளும் சேர்ந்தே துருக்கிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென அவர் கூறினார். ரஷ்யாமட்டும் அவ் விவகாரத்தில் தலையிடுவதாக இருந்தால் இங்கிலாந்தின் பகைக்கு ஆளாக நேருமென பாமர்ஸ்டன் மறைமுகமாக எச்சரித்திருந்ததைத் தொடர்ந்து ரஷ்யா துருக்கிய பிரச்சினையில் தனியாகத் தலையிடத் தயங்கியது. உன்கியார் ஸ்கெலெஸ்ஸி ஒப்பந்தத்தை ரஷ்யா பிரிட்டனின் வற்புறுத்தலுக்கிணங்கிக் கைவிட வேண்டியிருந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா நாட்டின் பிரதிநிதிகளை இலண்டனுக்கு வரவழைத்துக் கூடிப் பேசி, நான்கு நாடுகளும் சேர்ந்து துருக்கிக்கு உதவி செய்யலாமெனப் பாமர்ஸ்டன் யோசனை கூறினார். தம் ராஜதந்திரத்தினால் இங்கிலாந்து இரண்டாவது முறையாகத் துருக்கிய விவகாரத்தில் ரஷ்யா தனியாகத் தலையிடுவதைத் தடுத்து நிறுத்தியிருந்தது. ஃபிரான்சின் மானசீக ஆதரவைப் பெற்றிருந்த மெஹமத் அலி துருக்கியை மீண்டும் தாக்கியபோது நேச நாட்டுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டார். 1841-ல் கூட்டப்பெற்ற இலண்டன் மாநாட்டில் மெஹமத் அலி மீண்டும் எகிப்தின் பாஷாவாகத் துருக்கியினால் ஒப்புக்கொள்ளப்பட்டார்.

அங்ஙனம் துருக்கிய - எகிப்துப் போரில் மத்தியஸ்தம் செய்து இங்கிலாந்து புகழ் பெற்றதோடல்லாமல் உன்கியர் ஸ்கெலெஸ்ஸி ஒப்பந்தத்தின் பலன்களை ரஷ்யா அனுபவிக்க முடியாதபடி இங்கிலாந்து தடுத்திருந்தது.

மெஹமத் அலி ஒடுக்கப்பட்ட காலத்திலிருந்து (1841) கிரிமியாப் போர் தொடங்கிய காலம்வரையில் (1854) பிரிட்டனுக்கும் ரஷ்யாவிற்கும் இருந்த உறவைச் சுருக்கமாக நாம் காணலாம். 1844-ல் இங்கிலாந்திற்கும் விஜயம் செய்திருந்த ரஷ்ய ஸார் முதலாம் நிக்கலோஸ் (Czar Nicholas) துருக்கியப்

பேரரசைத் தாமும் இங்கிலாந்தும் கைப்பற்றிப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்ற யோசனையைத் தெரிவித்திருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. துருக்கியப் பேரரசைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆர்வத்தை விட ரஷ்யாவின் செல்வாக்கு துருக்கியப் பேரரசில் வேரூன்றுமல் தடுப்பதிலேயே இங்கிலாந்து அக்கறை கொண்டிருந்தது. துருக்கியப் பேரரசு சிதைக்கப்படுமானால் அப் பகுதியில் நிச்சயம் ரஷ்யாவின் செல்வாக்கு வளருமென்பதை இங்கிலாந்து உணர்ந்திருந்தது. அங்ஙனம் ரஷ்யாவின் செல்வாக்கை வளரவிட்டால் அதனால் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஆபத்து ஏற்படலாமென இங்கிலாந்து நினைத்தது. ஆனால், இங்கிலாந்தின் உள்ளெண்ணத்தை அறியாத ஸார் நிக்கலோஸ் இன்னொரு புது யோசனையை பிரிட்டனின் பிரதமர் அபெர்டீனிடம் (Aberdeen) கூறினார். அதன்படி எகிப்து, சைப்ரஸ் (Cyprus) தீவு ஆகியவற்றை இங்கிலாந்து கைப்பற்றிக்கொள்ளலாமெனவும் பேரரசின் மீதிப் பகுதிகளை ரஷ்யா எடுத்துக்கொள்ளலாமெனவும் ஸார் சொல்லி வைத்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ள மறுத்துவர அதற்கிடையே 1854-ல் கிரிமியாப் போர் தொடங்கியது.

கிரிமியாப் போர் (பாமர்ஸ்டன் காலம், 1854-1856)

துருக்கியப் பேரரசில் இருந்த பாலஸ்தீனத்தில் (Palestine) புனித இடமான பெத்லஹேம் (Bethlehem) நகரத்திலிருந்த திருக்கோயிற் கதவுகளின் சாவிகளை எவர் வைத்திருப்ப தென்ற தகராறு ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் கிரேக்க வைதிகக் கத்தோலிக்கர்களுக்குமிடையே (Greek Orthodox Monks) ஏற்பட்டது. அப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு துருக்கிய சுல்தானுக்கே இருந்தது. ரோமன் கத்தோலிக்கர் கட்சியை ஃபிரான்சு நாட்டுத் தூதுவர் ஆதரிக்க, கிரேக்க வைதீக கத்தோலிக்கரின் கட்சியை ரஷ்யத் தூதுவர் ஆதரித்தார். அது மட்டுமல்லாமல் குட்ச்சுக் கெனர்ட்சி (1774) உடன்பாட்டின்படி துருக்கியப் பேரரசில் வாழும் கிரேக்க வைதீக கிருத்துவர்களின் நலனைக் காப்பது ரஷ்யாவின் கடமை யெனவும் அதன் தூதுவர் மென்ஷிகாவ் (Menschikoff) வாதாடினர். துருக்கியப் பேரரசின் உள் விவகாரங்களில் ரஷ்யாவின் தலையீட்டை விரும்பாத துருக்கிய சுல்தான் சாவிப் பிரச்சினையில் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார். துருக்கியப் பேரரசில் வாழும் கிரேக்கக் கிருத்துவர்களைக் காப்பாற்றுவது தமது பொறுப்பு என்ற குறிக்கோளை நிலைநாட்ட ஸார் நிக்கோலாஸ் துருக்கியின்மீது போர் தொடுத்தார்.

டான்யூப் நதியின் இரு பக்கங்களிலுமிருந்த மால்டேவியா (Moldavia), வாலாச்சியா (Wallachia) என்ற இரு துருக்கிய மாகாணங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின. துருக்கியப் கப்பற்படை:யொன்று சினேப் (Sinope) என்னுமிடத்தில் ரஷ்யர் களால் அழிக்கப்பட்டது. அந் நிலையில் துருக்கிக்கு ஆதரவாக ஃபிரான்சு போரில் குதித்தது. ஆரம்பத்தில் தயங்கிவந்த பிரதமர் அபெர்டீன் டான்யூப் மாகாணங்களிலிருந்து ரஷ்யா வைப் பின்வாங்குமாறு கேட்க, அதற்கு ரஷ்யா மறுத்துவிடவே 1854-ல் பிரிட்டனும் போரில் இறங்கியது. பிரிட்டிஷ்-ஃபிரெஞ்சுப் படைகள் ஒன்று திரண்டு வார்னு (Varna) என்னுமிடத்தில் ரஷ்யரின் முன்னேற்றத்தைத் தடுத்தன. பின்னர் ரஷ்யாவின் கப்பற்படைக் கேந்திரமான ஸெபாஸ்டபோல் (Sebastapol) துறைமுகத்தை நோக்கி இரு நாட்டுப் படைகளும் முன்னேறின. ஆனல், ஸெபாஸ்டபோல் முற்றுகை சீக்கிரம் முடிந்தபாடில்லை. போதிய தளவாடங்களில்லாததாலும் உணவு, உடை, மருத்துவ வசதிகள் இல்லாததாலும் ஆங்கிலப் படைகள், ஸெபாஸ்ட போல் முற்றுகையில் திணறிப் பல அவதிகளுக்கு உள்ளாயின. அபெர்டீன் என்பாரின் திறமையின்மையே பல ஊழல்களுக்குக் காரணமாயிருக்க, அவர் மந்திரிசபை கலைக்கப்பட்டு பாமர்ஸ்டன் 1855-ல் பிரதமர் பதவியேற்றார், பாமர்ஸ்டனின் மேற் பார்வையில் உதவிப்படைகள், தளவாடங்கள், உணவு, உடை, மருந்து வசதிகள் பிரிட்டிஷ் படையினருக்கு அனுப்பப்பட இறுதியில் ஸெஸ்பாஸ்டபோல் வீழ்ந்தது; கிரிமியாப் போரும் முடிந்தது.

அப் போரைத் தொடர்ந்து 1856-ல் பாரிசில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி கருங்கடலில் ரஷ்யா தன் கப்பற்படையை வைத்துக்கொள்ளக் கூடாதெனத் தடுக்கப் பட்டது; டார்டினல்ஸ் ஜலசந்தியுள் சகல நாட்டு வியாபாரக் கப்பல்கள் நுழையத் துருக்கி அனுமதியளித்தது. மால்டேவியா, வாலாச்சியா ஆகிய டான்யூப் மாகாணங்களுக்குச் சுயாட்சி வழங்கும்படி துருக்கி கட்டாயப்படுத்தப்பட்டது. மேலும், தனது ஆட்சிக்குப்பட்ட கிருத்துவர்களை நல்ல முறையில் நடத் தும்படி துருக்கிய சுல்தான் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

கிரிமியாப்போரில் இங்கிலாந்து தலையிடாமல் இருந்திருக்கு மானல் ரஷ்யா தன் செல்வாக்கைப் பால்கன் பகுதியில் பெற்றி ருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தக்க சமயத்தில் ஃபிரான்சுடன் சேர்ந்து போரில் கலந்துகொண்ட இங்கிலாந்து ரஷ்யாவின் செல்வாக்கைத் துருக்கியப் பேரரசில் வளரவிடாமல் தடுத்தது.

அதே சமயத்தில் மால்டேவியா, வாலாச்சியா என்ற இரு கிருத்துவ நாடுகளையும் துருக்கிய ஆட்சியிலிருந்து விடுவித்த பெருமையைப் பெற்றது. அன்றியும் ரஷ்யாவின் செல்வாக்கு அந்த நாடுகளில் ஏற்படாமலும் பிரிட்டன் தடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

துருக்கிய ரஷ்யப்போர் (டிஸ்ரேலியின் காலம், 1876 - 1878)

பாரிஸ் உடன்படிக்கையை மீறி 1871க்குப் பிறகு கருங்கடல் பகுதியில் ரஷ்யா தன் கடற்படையை வைத்துக்கொள்ள முயன்ற போது இங்கிலாந்து வாளாவிருந்தது. கருங்கடல் பகுதியில் இங்கிலாந்து அக்கறை எதுவும் காட்டத் தேவையில்லை யென்றும் அதன் காரணமாக ரஷ்யாவுடன் போர் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்றும் அமைதிப் பிரியரான கிளாட்ஸ்டன் (Gladstone) நினைத்திருக்க, கருங்கடலில் ஒரு வலிமையான கப்பற்படையை ரஷ்யா அமைத்துக்கொண்டது.

பாரிஸ் உடன்பாட்டின்படி கிருத்துவ மக்களுக்கு நன்மை பயக்கும்படியான சீர்திருத்தங்கள் எதையும் துருக்கிய சுல்தான் கொண்டுவராததால் பாஸ்னியா (Basnia) ஹெர்ஸெகோவினு (Herzegovina) என்ற இரு பிரதேசங்களில் சுல்தானுக்கு எதிராகக் கலகங்கள் கிளம்பின, துருக்கி, கலகக்காரர்களை இரக்கமில்லாமல் நசுக்கியது. தொடர்ந்து பல்கேரியா (Bulgaria) என்ற பிரதேசத்திலும் கலகம் பரவியது. ஆயிரக்கணக்கான பல்கேரிய மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். எதிர்க்கட்சித் தலைவராகக் காமன்ஸ் சபையில் விளங்கிய கிளாட்ஸ்டன் 'அருவருக்கத்தக்க துருக்கியர்களை மூட்டை முடிச்சுகளுடன் ஐரோப்பாவிலிருந்து வெளியேற்றவேண்டும்' எனக் கூறிவந்தபோதிலும் பிரதமர் டிஸ்ரேலி கீழைப் பிரச்சினையில் தலையிடாமல் ஒதுங்கியிருந்தார். இங்கிலாந்தின் அசட்டைக் கொள்கையினால் ஊக்கம்பெற்ற ரஷ்யா, பல்கேரிய மக்களின் சார்பிலே துருக்கியின்மீது போர்தொடுத்தது. பிலிவ்வனு (Plevna), டாடில்பென் (Todleben) போன்ற இடங்களில் துருக்கியப்படைகள் தோல்வியுற, ரஷ்யப் படைகள் கான்ஸ்டான்டிநோபிளை நோக்கி முன்னேறின. உதவியற்ற துருக்கி ரஷ்யாவுடன் 1878-ல் சான்ஸ்டிஃபேனே உடன்படிக்கையைச் (Treaty of Sanstefano) செய்துகொண்டது. ரஷ்யாவின் ஆதிக்கம் துருக்கியப் பேரரசில் வளருவதற்கேற்ப அவ் வுடன்படிக்கை எழுதப்பட்டது. அச் சமயத்தில் இங்கிலாந்து விழித்துக்கொண்டது. கீழைச்சிக்கல் ஓர் ஐரோப்பிய விவகாரமெனவும் அதை ரஷ்யாமட்டும் தனிப்பட்ட முறையில் தீர்த்துக் கொள்வது முறையாகாது எனவும், ஐரோப்பிய நாடுகளடங்கிய ஒரு மாநாடே அப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டு மெனவும்

இங்கிலாந்து கேட்டுக்கொண்டது. ரஷ்யா அவ் வுடன்படிக்கை யைத் தள்ளிவைக்கத் தயங்கியபோது இங்கிலாந்து போர் தொடுக்கப்போவதாகப் பயமுறுத்தியது. அதைக் கண்ட ரஷ்யா கீழைப் பிரச்சினையைத் தீர்க்க ஐரோப்பிய மாநாட்டிற்கு ஒப்புக் கொண்டது.

1878-ல் பெர்லின் நகரில் ஐரோப்பிய மாநாடு (Congress of Berlin) கூடியது. சான்ஸ்டிஃபேனே உடன்படிக்கை ரத்து செய்யப் பட்டது. பல்கேரியா பிரிக்கப்பட்டு அதன் வடபகுத்திக்குச் சுதந் தரம் கொடுக்கப்பட்டது. பாஸ்னியா, ஹெர்ஸகோவினு என்ற சிறு நாடுகள் ஆஸ்திரியாவின் மேல்ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஸெர்பியா, மான்டி நீக்ரோ (Monte necro), ருமேனியா (மால்டேவியா, வாலாச்சியா)ஆகிய நாடுகள் துருக்கிப் பேரரசிட மிருந்து விடுதலே பெற்றன. இங்கிலாந்திற்கு ஸைப் பிரஸ் தீவு கிடைத்தது.

இங்கிலாந்து, போர் எதுவும் செய்யாமலேயே தன் மிரட்டலி னலும், அரச தந்திரத்தாலும் ரஷ்யாவை வற்புறுத்தி, சான்ஸ்டி ஃபேனே உடன்படிக்கையை ரத்து செய்து, பால்கன் பகுதியில் ரஷ்யாவின் செல்வாக்கை வளரவிடாமல் தடுத்தது. அதேசமயம் பல கிருத்துவ நாடுகளுக்கும் சுதந்தரம் கிடைக்கும்படியாக இங்கிலாந்து வழிவகுத்தது. கௌரவத்தோடு கூடிய சமாதா னத்தை பெர்லின் காங்கிரஸ்மூலம் இங்கிலாந்து பெறமுடிந்தது.

அங்ஙனம் 19ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவின் செல்வாக்கு பால்கன் பகுதியில் பரவவிடாமல் இங்கிலாந்து ஒவ்வொரு கட்டத் திலும் தலையிட்டுத் தன் கொள்கையில் வெற்றி பெற்றது.

20. முதலாம் உலகப்போருக்கு முந்திய இங்கிலாந்து

(அ) உள்நாட்டு விவகாரங்கள்

இருபதாம் நூற்றாண்டில் அடிவைத்த இங்கிலாந்து, உள்நாட்டுத் துறையைப் பொறுத்தமட்டில் புதிய கொள்கைகள், மாற்றங்கள், சட்டங்கள், முயற்சிகள் சீர்திருத்தங்களைக் காணும் வாய்ப்பினைப் பெற்றது. வரலாற்று ஏடுகளிலே ஒரு முக்கிய இடம் பெறும் அக் காலமே இங்கிலாந்தின் மூன்றும் பெரிய சீர்திருத்த காலமாகப் போற்றப்படுகிறது.

தனிப்பட்டோரின் உடைமைகளைக் கைப்பற்றிச் சட்டரீதியான அரசாங்கத்தின்மூலம் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நீக்கிச் சமதர்மத்தை நிலைக்கச் செய்ய ஃபேபியன் சோஷியலிஸ்டுகள் (Fabian Socialists) என்ற ஆங்கில சமதர்மவாதிகள் தங்களின் பிரசாரத்தைத் தொடங்கியிருந்த காலம் அது. சமதர்மத்தை நாட்டில் ஏற்படுத்த அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாகையால் அதற்கான ஒரு புதுக் கட்சி தோற்றுவிக்கப் பட்டது. அதில் இன்றைய இங்கிலாந்தின் முக்கிய இரு கட்சிகளில் ஒன்றுக விளங்குவது தொழிற்கட்சி (Labour Party) யாகும். சமதர்மக் கொள்கையின் அடிப்படையிலே தொடங்கப்பட்ட அக் கட்சி தொழிலாளிகளின் பிரத்தியேக நலன்களுக்காக மிகவும் பாடுபட்டுப் போற்றத்தக்க வளர்ச்சியைக் குறுகிய காலத்தில் பெறப்போவதாக இருந்தது.

பால்ஃபரின் காலம்

பால்ஃபரின் (Balfour) அமைச்சரவைக் காலத்தில் கொண்டு வரப்பட்டிருந்த கல்விச்சட்டம் (1902) பள்ளிக் குழுக்களை (School

Boards) ஒழித்துவிட்டு உயர்தரக் கல்வியைத் தல ஆட்சிச் சபைகளான கவுன்டி, பரோ கவுன்சில்களிடம் ஒப்படைத்தது. அரசாங்க உதவி பெற்ற பள்ளிகள் எல்லாம் தல ஆட்சிச் சபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. கல்வித் துறையில் ஓர் ஒழுங்கு முறையைக் கொண்டுவந்த அச் சட்டம் ஒரு சிலரால் எதிர்க்கப்பட்டபோதும், நன்மை பயக்கும்படியாக இருந்தது. பிரதமர் பால்ஃபரின் முயற்சியால் இலண்டன், மான்செஸ்டர், லிவர்பூல் ஆகிய இடங்களில் கல்வி புகட்டும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இராணுவத் துறையில் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டி பால்ஃபர் 1903-ல் ஓர் ஆய்வுக் குழுவை நியமித்தார். அதன் சிபாரிசின் பேரில் சேனையை நிர்வகிக்கும் பொறுப்பு தனிச் சேனாதிபதியின் கட்டுப்பாட்டிலிருந்து நிபுணர் குழு ஒன்றுக்கு மாற்றப்பட்டது. நாட்டின் கப்பற்படையைப் பெருக்க 3·1 மில்லியன் பவுன்கள் ஒதுக்கப்பட, பிரிட்டிஷ் கடற்படைக்குப் புதிய போர்க் கப்பல்கள் கட்டப்பட்டு அது வலிமையுடையதாக மாற்றப்பட்டது.

பானர்மேனின் காலம்

கேம்பல் பானர்மேனின் (Campbell Banerman, 1905-1908) அமைச்சரவையின் காலமே, மக்களின் பொதுநலத்தை வளர்க்கும் பல அரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவந்த மூன்றும் பெரிய சீர்திருத்த காலத்திற்குத் தொடக்க கட்டமாக அமைந்தது. ஆக முக்கியச் சீர்திருத்தச் சட்டங்கள் பல 1906ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப்பட்டன.

தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் சில சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றிலே, 1906ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தொழில் தகராறுகள் சட்டம் (Trade Disputes Act) முதலாவதாகும்.

டாஃப் வேல் இரயில்வே வேலை நிறுத்த வழக்கில் (Taff Vale Railway Case, 1901) வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட எல்லாச் சேதங்களுக்கும் இரயில்வேத் தொழிலாளர்களே ஈடு கட்ட வேண்டுமெனத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வேலை நிறுத்தத்தை ஆதரிக்க மறுத்திருந்த இரயில்வேத் தொழிற் சங்கம் வழக்கில் கொடுக்கப்பட்டிருந்த தீர்ப்பை அநீதி எனக் கருதியது. அந்தத் தகராற்றைத் தீர்க்கும் வகையில் பானர்மேன் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது. தொழிற் சங்கங்களைச் சதிக் குற்றங்களுக்கும் அவற்றிற்குரிய தண்டனைகளுக்கும் நீதி

மன்றங்கள் உட்படுத்தக் கூடாதென்றும், வேலை நிறுத்தங்களால் ஏற்படும் சேதங்களுக்குத் தொழிற்சங்க நிதியிலிருந்து நஷ்டஈடு கேட்கக் கூடாதென்றும் அச் சட்டம் கூறியது. அதே ஆண்டில் கொண்டுவரப்பட்டிருந்த தொழிலாளிகளின் நஷ்டஈட்டுச் சட்டம் (Workmen's Compensation Act) தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளி தற்செயலாக விபத்தில் சிக்கி அதனால் அடையும் நஷ்டத்திற்கு முதலாளிகள் நஷ்டஈடு தரவேண்டுமெனக் கூறியது.

பானர்மேனின் அமைச்சரவையில் போர் மந்திரியாக இருந்த ஹால்டேன் (Haldane) என்பவரால் சில இராணுவச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. சேனைக்கு என்று பொதுச் சிப்பந்திகளின் நிறுவனம் (general staff) நிரந்தரமாக ஏற்பட்டது. ஒரு குதிரைப்படைப் பிரிவும், ஆறு தரைப்படைப் பிரிவுகளும் அடங்கிய ஒரு படையெடுப்புச் சேனையானது (expeditionary force) அமைக்கப்பட்டது. தொண்டர்களையும், சிறு நிலக்கிழார்களையும் கொண்டு ஆங்காங்கே பிராந்தியப் படையும் (Territorial Army) ஏற்படுத்தப்பட்டது. இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிப்படையினரையும் (Officer Training Corps) கல்விக்கூடங்களிலே ஹால்டேன் தொடங்கிவைத்தார். திடீரென ஏற்படக்கூடிய அபாயங்களைச் சமாளிப்பதற்கான வழிகளையும் முறைகளையும் ஆராய்வதற்காகப் பேரரசு தற்காப்புக் குழுவையும் (The Committee of Imperial Defence) தோற்றுவித்திருந்தது. படைக் கவுன்சில் (Army Council) ஒன்றையும் நிறுவி இராணுவ நிபுணர்களின் ஆலோசனை பெற்று ஹால்டேன் பிரிட்டன் இராணுவத்தைச் சீர்படுத்தி வைத்திருந்தார்.

பானர்மேன் அமைச்சரவையினர் மேற்கொண்டு வேறு சில சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர முயன்றபோது பிரபுக்கள் சபையின் எதிர்ப்பால் கைவிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவற்றில், மத நிறுவனங்களால் நடத்தப்பெற்ற பள்ளிகளையும் தல அரசாங்கத்தின் கண்காணிப்பிற்குள் கொண்டுவர நிறைவேற்றப்பட்டிருந்த கல்வி மசோதாவும் (1906), ஸ்காட்லாந்து நிலச்சட்ட மசோதாவும் (1907), பன்மைவாக்களிப்புஒழிப்பு மசோதாவும் (1908) குறிப்பிடத்தக்கவை. அதை ஒட்டியே பிரபுக்கள் சபைக்கு இருக்கும் அதிகாரங்களை ஒடுக்கவேண்டும் என லிபரல் கட்சியினர் விரும்பினர். சட்டங்களை நிறுத்தி வைக்கும் அதிகாரம் மட்டுமே (Suspensory Vote) பிரபுக்கள் சபைக்கு இருக்கவேண்டும் என வற்புறுத்திய பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவைக் கேம்பல் பானர்மேன் கொண்டுவர, அது நிறைவேறுமல் போயிற்று.

ஆஸ்க்வித் காலம் (1908-1915)

பானர்மேன் மரணம் அடைந்தவுடன் ஆஸ்க்வித் (Asquith, 1908-1915) என்பவரின் தலைமையில் லிபரல் கட்சியினர் அமைச் சரவையை அமைத்துத் தங்களின் சீர்திருத்தப் பணியை மேற் கொண்டு தொடர்ந்தனர்.

முதியோருக்கு உதவிப்பணம் (old age pension) கொடுக்கப் படவேண்டிய ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி எழுபது வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு வாரம் ஒன்றுக்கு ஐந்து ஷில்லிங்குகள் உதவிப்பணமாகக் கொடுக்கப்பட்டன. வயது முதிர்ந்த கணவன்–மனைவி இருவருக்கும் சேர்த்து ஏழு ஷில்லிங் ஆறு பென்ஸ்களே உதவிப்பணமாக வழக்கப்பட்டன. 1908-ல் கொண்டுவரப்பட்ட குழந்தைகள் சட்டத்தின்படி (Children's Act) 14 வயதிற்குட்பட்ட இளம் குற்றவாளிகளைச் சிறையில் அடைக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது. அதற்கெனப் பிரத்தியேகமாக நடத்தப்பட்ட சீர்திருத்தப் பள்ளிகளில் அக் குற்றவாளிகள் சேர்க்கப்படவேண்டும் என அச் சட்டம் கூறியது.

1909-ல் இயற்றப்பட்ட நகரமைப்புத் திட்டச் சட்டத் தின்படி (Town Planning Act) சுகாதார வசதியின்றிக் கட்டப் பட்டிருந்த வீடுகளை இடித்துத் தள்ளக்கூடிய அதிகாரத்தை அரசாங்கம் பெற்றது.

நாட்டிலே இருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 1909-ல் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்தரும் நிலையங்கள் (Labour Exchanges) ஏற்படுத்தப்பட்டன. இங்கிலாந்து பத்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு வேலை பரிமாற்று நிலையம் ஏற்படுத்தப்பட்டது. அப் பத்துப் பரிமாற்று நிலையங் களைப் பரிபாலிக்க ஒரு மத்திய நிலையமும் ஏற்படுத்தப்பட்டது. அப் பரிமாற்று நிலையங்களிலே தொழிலாளிகளும், முதலாளி களும் தங்கள் தேவைகளைப் பதிவு செய்துகொண்டனர். அதன் மூலம் தொழிலகங்களுக்குத் தேவையான வேலையாட்களும், தொழிலாளிகளுக்குத் தேவைப்பட்ட வேலை வாய்ப்பும் கிடைக்க வழி உண்டாகியது.

1911-ல் கொண்டுவரப்பட்டிருந்த காப்புறுதிச் சட்டம் (Insurance Act) குறிப்பிடத்தக்கது. 16 வயது முதல் 70 வயதிற் குட்பட்டவர்களும், ஆண்டொன்றுக்குக் குறைந்த வருவாய் பெற்றவர்களும் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். தொழி லாளர்கள் உடல்நலம் குன்றியிருந்தபோதும் அல்லது வேலையை

இழந்துவிட்ட சமயத்திலும் அவர்களுக்கு உதவியளிப்பதையே அத் திட்டம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. நோய் வாய்ப்பட்ட தொழிலாளிக்கு அத் திட்டத்தின்கீழ் இலவச மருத்துவ உதவி கொடுக்கப்பட்டது. தொழிலாளிகள் வேலை யின்றியிருக்க நேரிட்டபோதெல்லாம் உதவிப்பணமும் கொடுக்கப் பட்டது. அவற்றிற்கெல்லாம் ஆகும் செலவை மேற்கொள்ள உதவிநிதியொன்றை அரசாங்கம் திரட்டியது. அந் நிதிக்கு இன்சூர் செய்துகொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் மாதம் ஒன்றுக்கு நான்கு பென்னிகளைச் சந்தாவாக வழங்கினன். முதலாளிகளும், அரசாங்கமும் சேர்ந்து மாதம் ஒன்றுக்கு அந்த நிதிக்கு ஐந்து பென்னிகளைத் தானமாக வழங்கினர். இரண்டையும் சேர்த்துத் திரட்டப்பட்ட நிதியே தொழிலாளிகளுக்கு ஆபத்துக்காலத்தில் அவசிய உதவியாகக் கிடைத்தது.

பாராளுமன்ற உறுப்பினர்க்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஊதியமாகக் கொடுப்பதை அனுமதித்து 1911-ல் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. தொழில் கட்சியைப் பராமரிப்பதற் காகவும், தேர்தல்களில் செலவிடுவதற்காகவும், அக் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் தொழிற்சங்கங்கள் கட்டிய அரசியல் கட்டணங்களை வசூலித்து வந்தது. ஆனல், ஆஸ்பர்ன் வழக்கில் (1909) அக் கட்டணங்களை வசூலிக்கக்கூடாதெனத் தீர்ப்பாகியிருந்தது. எனவே, மாதச் சம்பளம் இல்லாமலேயே சில ஏழை அங்கத்தினர்கள் பாராளு மன்றத்தில் தொழிற் கட்சியின் சார்பில் இருக்க அவர்களுக்கு உதவிசெய்யும் நோக்கத்தில் ஆஸ்க்வித் மேற்சொன்ன சட்டத்தை நிறைவேற்றினர். அதன்படி, காமன்ஸ் சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 400 பவுன்கள் சம்பளமாக ஆண்டொன் றுக்குக் கொடுக்கப்பட்டது.

1911-ல் கொண்டுவரப்பட்ட கடைகள் சட்டத்தின்படி (Shops Act) கடைகளில் வேலை செய்வோர்க்கு வாரத்திற்கு அரை நாள் விடுமுறை கொடுக்கப்பட்டது; தினசரி வேலை நேரமும் குறைக்கப்பட்டது.

ஆஸ்க்வித் காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்த சட்டங் களிலே மிக முக்கியமானதாக விளங்குவது 1911-ல் நிறை வேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டமே. அந்தச் சட்டம் எந்தச் சூழ்நிலையிலே கொண்டுவரப்பட்டது என்பதை நாம் அடுத்துப் படிப்போம்.

ஏழைகளின் வறுமையைப் போக்கவும், தொழிலாளிகளின் இன்னல்களைக் களையவும் ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட பல

சீர்திருத்தங்களையும் கொண்டுவரவேண்டிய சீர்திருத்தங்களையும் மனதில் கொண்டு ஆஸ்க்வித் அரசாங்கம் 200 மில்லியன் பவுனை எப்படியும் வருமானமாகப் பெற நினைத்தது. அதையொட்டிக் கருவூலத் தலைவரான லாயிட் ஜார்ஜ் சாதாரண மக்களின் வசதிகளை அதிகரிக்கும்வகையில் ஒரு வரவுசெலவுத் திட்டத்தைக் காமன்ஸ் சபையில் தாக்கல் செய்தார். அந்தப் பட்ஜெட்டில் புகையிலை, மதுபான வகைகள்மீது அதிகமான வரிகள் போடப் பட்டன. 5000 பவுன்களுக்கும் மேலாகப் பெறுமானமுள்ள சொத்துகளை இறந்துபோன பெற்றோர்களிடமிருந்து பெறுகின்ற வாரிசுகள் செலுத்தவேண்டிய மரணவரியின் விகிதம் உயர்த்தப் பட்டது. ஆண்டொன்றுக்கு 5000 பவுன்களுக்கு மேற்பட்ட வருமானத்தைப் பெற்றவர்கள் ஒரு பவுனுக்கு ஒரு ஷில்லிங் இரண்டு பென்னியை வருமான வரியாகவும் அத்துடன் மேல்வரி ஒன்றையும் செலுத்தவேண்டியதாக இருந்தது. நிலச் சொந்தக் காரர்கள் பெற்றுவந்த உழைப்பில்லா வருமானத்தில் அரசாங்கம் இருபது சதவிகிதத்தை அப் பட்ஜெட்டின்படி பங்கு பெற்றது. சுருக்கமாக அப் பட்ஜெட் செல்வர்கள்மீது அதிக வரியைச் சுமத்தி இருந்தது. பொதுமக்கள் சபையிலே பெரும்பான்மை யினரின் ஆதரவைப் பெற்று அப் பட்ஜெட் நிறைவேறியது.

பட்ஜெட், பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டது. பொது வாகப் பண மசோதாக்களில் தலையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்த அச் சபை பெரும்பான்மையான வாக்குகளால் பட்ஜெட்டை நிராகரித்தது. அதைக் கண்ட ஆஸ்க்வித் காமன்ஸ் சபையைக் கலைத்துப் பிரபுக்கள் சபையின் செய்கையை மக்களின் முன் தேர்தல் பிரச்சினையாக வைத்தார். 1910-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆஸ்க்வித் கட்சியினர் (லிபரல்) பெரும் பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதை ஒட்டி மந்திரி சபை அமைத்திருந்த ஆஸ்க்வித் இரண்டாம் முறையாகத் தமது பட்ஜெட்டைப் பொதுமக்கள் சபையிலே நிறைவேற்றினர். பட்ஜெட்டைப் பிரபுக்கள் சபைக்கு அனுப்புவதற்கு முன்அச் சபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய மசோதா ஒன்றையும் ஆஸ்க்வித் கொண்டுவந்தார். அதற்கிடையே மன்னர் ஏழாம் எட்வர்டு இறந்துபோக, ஐந்தாம் ஜார்ஜ் பட்டத் திற்கு வந்தார். புது அரசரின் யோசனைப்படி இரு சபைகளின் பிரதிநிதிகளும் பலமுறை கலந்து பிரச்சினைக்கு முடிவுகாண முயன்றனர். ஆனால், அம் முயற்சி தோல்வியுற்றது. அதன் பின்னர் ஆஸ்க்வித் இரண்டாவது முறையாகப் பாராளு மன்றத்தைக் கலைத்தார். காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ரத்து செய்யும் உரிமை பிரபுக்கள் சபைக்கு

உண்டா? இல்லையா? என்ற பிரச்சினையை அடிப்படையாக வைத்து 1911-ல் ஒரு பொதுத் தேர்தல் நடந்தது. வழக்கம் போல் அம் மசோதா பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட அச் சபையினர் பல சீர்திருத்தங்களைச் செய்து மீண்டும் காமன்ஸ் சபைக்குத் திருப்பி அனுப்பினர். காமன்ஸ் சபையினர் அத் திருத்தங்களை எல்லாம் தள்ளிவிட்டுப் பழைய வடிவத்திலேயே அம் மசோதாவைப் பிரபுக்கள் சபைக்கு அனுப்பினர். அம் மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்படவேண்டுமானால் லிபரல் கட்சியைச் சேர்ந்த பிரபுக்களைப் பெரும்பான்மையான எண்ணிக்கையில் அரசர் ஐந்தாம் ஜார்ஜ் பிரபுக்கள் சபையில் புதிதாக நியமிக்க வேண்டுமென்று ஆஸ்க்வித் கேட்டுக் கொண்டார். அரசரும் அதற்கு இசைந்தார். அதைக் கேள்வியுற்ற பல கன்சர்வேடிவ் பிரபுக்கள் மசோதாவை ஆதரிக்கவும் மனமில்லாமல் எதிர்க்கவும் துணிவில்லாமல் சபைக் கூட்டத்திற்கு வரவில்லை. அந் நிலையில் அப் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா மேல்சபையில் நிறைவேறியது.

1911-ல் ஏற்பட்ட அப் பாராளுமன்றச் சட்டம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைப் பெரிதும் குறைத்தது. பண மசோதாக்களைக் (Money Bills) கட்டுப்படுத்தும் உரிமையைப் பிரபுக்கள் சபை இழந்தது. பொதுமக்கள் சபையில் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களில் (three successive sessions) நிறைவேற்றப்படும் சாதாரண மசோதா (ordinary bills) பிரபுக்கள் சபையின் ஒப்புதல் இல்லாமலேயே சட்டம் ஆகிவிடும் எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தின் காலக்கெடு (life) ஏழாண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குக் குறைக்கப்பட்டது.

1911-ல் கொண்டுவரப்பட்ட அப் பாராளுமன்றச் சட்டம் முற்போக்கு எண்ணத்திற்கு ஒரு பெரும்வெற்றியாக அமைந்தது.

ஐரிஷ் பிரச்சினையிலும் கவனம் செலுத்த உந்தப்பட்டிருந்த ஆஸ்க்வித் சர்க்கார் 1911-ல் சுயாட்சி மசோதாவைக் கொண்டு வந்தது நினைவிருக்கலாம். அயர்லாந்தைப்பற்றிய ஓர் இடைக்கால ஏற்பாடாகவே அம் மசோதா அமைந்திருப்பினும் தீர்க்கப்படாமலிருந்த ஐரிஷ் விவகாரத்திற்கு முடிவு காண வேண்டிய அவசியத்தை ஆங்கில சர்க்கார் உணர்ந்திருந்தமை நல்ல அறிகுறியாக இருந்தது.

1912-ல் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் (Minimum Wage Act) கொண்டுவரப்பட்டது. அதன்படி ஒவ்வொரு தொழிலாளிக்கும் குறைந்தபட்ச ஊதியத்தையேனும் கொடுக்கும்படி

முதலாளிகளே அரசு வற்புறுத்தியது. முதலாளிகள், தொழிலாளிகள் ஆகிய இரு சாராரின் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களுக்கே கொடுக்கப்படவேண்டிய குறைந்தபட்சக் கூலி எவ்வளவு என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு விடப்பட்டது.

ஆஸ்பர்ன் தீர்ப்பு (Osborne Judgement) வழக்கில் தங்களது நிதியைத் (funds) தேர்தல் போன்ற காரியங்களுக்குத் தொழிற் சங்கங்கள் பயன்படுத்தக்கூடாது எனத் தீர்ப்பாகியிருந்தது. அத் தீர்ப்பை மாற்ற 1913-ல் ஒரு தொழிற் சங்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச் சட்டப்படி, தங்களது நிதியை விருப்பம்போல் செலவழித்துக்கொள்ளக்கூடிய உரிமை தொழிற் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், கட்டாய அரசியல் கட்டணங்கள் (cumpulsory poletical levy) செலுத்துவதும், செலுத்த மறுப்பதும் தொழிற் சங்க உறுப்பினரின் சொந்த விருப்பத்திற்கு விடப்பட்டது.

நாட்டின் வருங்கால பிரஜைகளான பள்ளிச் சிறுவர்களின் நலன்களைப் பாதுகாக்கப் பல பள்ளி நலன்காப்புக் கழகங்கள் (School Care Committtees) ஏற்படுத்தப்பட்டன. பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு, மருத்துவ சோதனை போன்ற வசதிகள் செய்துதரப்பட்டன.

அடுத்து, அக் குறிப்பிட்ட காலத்தில் இங்கிலாந்தின் வெளி நாட்டுக் கொள்கையினைக் கவனிப்போம்.

(ஆ) முதலாம் உலகப்போர்வரையிலான இங்கிலாந்தின் வெளி நாட்டுக் கொள்கை

வாடர்லு சண்டைக்குப் பிறகு (1815) ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி நிற்கவே இங்கிலாந்து பெரிதும் விரும்பியது. ஐரோப்பிய வல்லரசுகள் சிறு நாடுகளின் சுதந்தரத்தையும், மக்கள் உரிமைப் போராட்டத்தையும் நசுக்க முயன்ற போதெல்லாம், காஸில்ரேயின் காலத்தில் (1815-1822) இங்கிலாந்து தன் பலமான கண்டனத்தைத் தெரிவித்துவந்தது. கானிங் பிரபு காலத்தில் கிரேக்க சுதந்தரப் போரிலும் (1827), பாமர்ஸ்டன் காலத்தில் பெல்ஜியத்தின் சுதந்தரப் போரிலும் (1830) எகிப்து விவகாரத்திலும் (1833), கிரிமியாப் போரிலும் (1855) இங்கிலாந்து தலையிட்டிருந்தபோதும், எந்த ஐரோப்பிய சிக்கல்களிலும் ஈடுபாடு கொள்ளாமல் 1877 ஆம் ஆண்டுவரை அந் நாடு தனித்தே இருந்தது. சான்ஸ்டிஃபேனே உடன்பாட்டை மறுபரிசீலனை செய்ய பெர்லின் நகரில் கூட்டப்பட்ட ஐரோப்பிய

மாநாட்டில் 'கௌரவத்தோடுகூடிய சமாதானத்தைப் பெறவே' (Peace with Honour) இங்கிலாந்து கலந்துகொண்டது. அம் மாநாட்டிற்குப் பின்னர், இங்கிலாந்து எந் நாட்டுடனும் கூட்டுசேராக் கொள்கையினைக் கடுமையாகக் கடைப்பிடித்து, ஐரோப்பிய விவகாரங்களில் கலந்து கொள்ளாமல் தனித்து ஒதுங்கிய நிலையிலிருந்தது.

இங்கிலாந்தின் கூட்டுசேராக் கொள்கை

அதே நேரத்தில், ஒருமைப்பாடு அடைந்து, வல்லமை பெற்ற நாடாக ஜெர்மனி, பிஸ்மார்க்கின் (Bismarck) கடும் முயற்சியினால் ஐரோப்பிய அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. தம்மால் தோற்கடிக்கப்பட்ட ஃபிரான்ஸ் (1871) எங்கு மற்ற நாடுகளோடு கூட்டு சேர்ந்து ஜெர்மனிக்கு எதிராகப் பழிவாங்கும் போரில் இறங்கிவிடுமோ என்ற அச்சத்தினால் சான்ஸ்லர் பிஸ்மார்க் 1879-ல் ஜெர்மனியையும், ஆஸ்திரியா ஹங்கேரியையும், இரட்டைக் கூட்டுறவு (Dual Alliance) என்ற தற்காப்பு உடன்படிக்கையில் சேர்த்திருந்தார். 1882-ல், இத் தாலி நாடும் அதில் சேர, முக்கூட்டு உடன்பாடு (Triple-Alliance) ஏற்பட்டிருந்தது. இங்கிலாந்தின் நட்பையும் பெற விரும்பிய பிஸ்மார்க் 1889-ல் இரு நாடுகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டுமென விரும்பி, தமது விருப்பத்தைத் தெரிவித்த போது இங்கிலாந்தின் பிரதமர் ஸாலிஸ்பரி (Salisbury) அந்த யோசனையை நிராகரித்தார். எந்த நாட்டுடனும் கூட்டுசேரா திருத்தல் என்ற கொள்கையை இங்கிலாந்து பின்பற்றி வந்ததே அதற்குக் காரணமாகும்.

பிஸ்மார்க் தம் மகனை ஹெர்பார்ட் (Herbert) என்பவரை ஜெர்மனியின் தூதுவராக இங்கிலாந்துக்கு அனுப்பி, அந் நாட்டுடன் நட்புக் கொள்கையை வளர்த்து வந்தார். அச் சந்தர்ப்பத்திலும் அவ் விரு நாடுகளுக்கும் இடையே போர் ஏற்படாது எனவும் அடிக்கடி சொல்லிவந்தார்.

பிஸ்மார்க் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னரும், இரு நாடுகளுக்குமிடையே சுமுகமான உறவே நிலவி வந்தது. 1890-ல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி இங்கிலாந்து தன் ஆதிக்கத்தின் கீழ் வடகடலிலிருந்த (North Sea) ஹெலிகோலாந்து (Heligoland) தீவினை ஜெர்மனிக்குக் கொடுத்திருந்தது. அதற்கு ஈடாக, பிரிட்டிஷாரின் ஆதிக்கம் கிழக்கு ஆஃபிரிக்காவை அடுத்து இருந்த ஜான்ஜிபார் (Zanzibar) தீவில் ஏற்பட, ஜெர்மனி ஒப்புக்கொண்டிருந்தது. 'சண்டை இல்லாமலும், கண்ணீர்

சிந்தாமலும், உடன்பாட்டின்மூலம் ஹெலிகோலாந்து தீவினை அடைந்ததற்கு இங்கிலாந்துக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்,' என்று ஜெர்மனியின் கெய்சர் (The Kaiser) இரண்டாம் வில்லியம் தமது ஆனந்தத்தை வெளிப்படுத்தும் அளவுக்கு, இரு நாடுகளுக்கு மிடையே நட்பு வளர்ந்திருந்தது.

1890-ல் இங்கிலாந்தின் வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் நகருக்கு விஜயம் செய்திருந்தபோது, கெய்சர் இரண்டாம் வில்லியம் தங்களின் இரு நாடுகளும் இணைந்து உலக அமைதியைப் பாதுகாக்க வேண்டு மென அறிவுரை கொடுத்திருந்தார். 1891-ல் கெய்சர் வில்லியம் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோதும், இரு நாடுகளுக் கிடையே இருந்துவந்த நட்புறவைப் பெருமையோடு குறிப்பிட் டிருந்தார். அதிக காலம் அந்த நல்ல உறவு நீடிக்க முடியாதென அடுத்து நேர்ந்த இரு சம்பவங்கள் இடித்துக் காட்டின.

ஜெர்மனியோடு செய்துகொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை யினை (1884) மீறி, காங்கோ சுயேச்சை நாடு (Congo Free State) இங்கிலாந்தின் வற்புறுத்தலினால் பாஹர் - எல் - காஜல் (Bahar-el-Ghazel) என்ற மாவட்டத்தைப் பெல்ஜிய மன்ன ரான லிபோல்ட்டுக்கு ஆயுள் காலச் சொத்தாகக் கொடுத்திருந் தது; அதற்கு ஈடாக டாங்கனிக்காவுக்கு (Tanganika) மேற்கே ஒரு சிறு நிலப்பரப்பை, கேப் கெய்ரோ இரயில் பாதை இணைப் பிற்காக பிரிட்டன் பெற்றிருந்தது. அந்த ஏற்பாட்டினால் தன் ஆஃபிரிக்கப் பகுதிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுமென நினைத்த ஜெர்மனி, அத் திட்டத்தை எதிர்த்தது; பிரிட்டனும் அவ் வேற்பாட்டைத் தள்ளிவிட்டது. இருப்பினும், இரு நாடு களுக்கிடையே கசப்புணர்ச்சி ஏற்பட, அச் சம்பவம் காரண மாகியது.

1895-ல் ஜேம்ஸன் தம் வீரர்களோடு போயர்களின் நாட்டைத் தாக்கிப் படுதோல்வி அடைந்திருந்தபோது, போயர்களின் வெற்றியைப் பாராட்டி கெய்சர் இரண்டாம் வில்லியம் டிரான்ஸ்வாலின் குடியரசுத் தலைவரான குருகருக்கு ஒரு பாராட்டுத் தந்தி அனுப்பி யிருந்ததும், பிரிட்டிஷாரின் மனதை அரித்தது. சாலிஸ்பரி பிரபு அதைப் பற்றி 'ஜேம்சனின் தாக்குதல் முட்டாள்தன மென்றால், கெய்சரின் தந்தி படு முட்டாள்தன மாகும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் மேற்கண்ட இரு நிகழ்ச்சிகள் கசப்புணர்ச்சியை ஓரளவு உண்டாக்கி இருப்பினும் இங்கிலாந்து-ஜெர்மனி உறவை மோசமடையச் செய்யவில்லை. அதற்குக் காரணம் ஃபிரான்ஸ்

நாடோ: ஆஃப்ரிக்காப் பெருங்கண்டத்தில் இங்கிலாந்தும் ஃபிரான்சும் ஆதிக்கப் போட்டியில் இறங்கி இருந்தன. அதற்கோர் உதாரணமாக ஃபஷோடா (Fashoda) நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். நைல் நதிக் கரையில் ஃபஷோடா என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுத் தளக்கர்த்தர் மேஜர் மார்ச்சந்த்(Major Marchand) தம் நாட்டுக் கொடியைப் பறக்க விட்டார். சூடானை வெற்றி கொண்ட ஆங்கிலத் தளபதி கிச்சனர் பிரபு ஃபிரெஞ்சுக்காரர்களை அங்கிருந்து வெளியேறும்படி மிரட்டினார். இரு நாடுகளுக்கிடையே போர் மூண்டுவிடும் போலிருந்தது. ஃபிரான்சைப் பரம விரோதியாகக் கருதிய ஜெர்மனி, அப் பிரச்சினையில் பிரிட்டிஷாரையே ஆதரித்தது. ஃபிரெஞ்சுக்காரர்கள் இறுதியாக ஃபஷோடாவிலிருந்து வெளியேறிவிட்டதால், பிரிட்டிஷ் - ஃபிரெஞ்சுப் போர் தவிர்க்கப்பட்டிருந்தது.

ஏற்கெனவே, முக்கூட்டு உடன்படிக்கைக் கெதிராக ஃபிரான்சும், ரஷ்யாவும் இரட்டைக் கூட்டுறவு (Dual Alliance) என்ற ஒரு தற்காப்பு உடன்பாட்டை 1894-ல் செய்துகொண்டிருந்தன. ஆஃபிரிக்காக் கண்டத்தில் ஃபிரான்சு நாட்டிடம் இருந்த போட்டியையும், தூர கிழக்கு (Far East) ரஷ்யாவின் ஆதிக்கத் தலையீட்டையும், விரும்பாத இங்கிலாந்து அந்த உடன்பாட்டிலும் சேராமல் ஒதுங்கியே இருந்தது.

இரண்டாம் போயர் போர் (1899) தொடங்கிய போது, இங்கிலாந்துக்கு எதிராக ஃபிரான்சும், ரஷ்யாவும் தலையிட விரும்பியபோதும், கெய்சர் நடுநிலைமை வகித்தார். அதே ஆண்டில், கெய்சர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது பிரம்மாண்டமான வரவேற்புக் கொடுக்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேம்பெர்லெய்ன் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இரு நாடுகளுக்குமிடையே இருந்த நட்புறவை மேலும் பலப்படுத்த முயற்சிகளை எடுத்துக்கொண்டார். எந்தப் பக்கத்திலும் கூட்டுச் சேராதிருத்தலென்ற கொள்கையைப் பின்பற்றுவது கடினமென இங்கிலாந்துக்கு அப்போது புலப்பட ஆரம்பித்தது.

ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகள் செய்துகொண்டிருந்த முக்கூட்டு உடன்படிக்கை (1882) ஒரு புறம்; ஃபிரான்சும், ரஷ்யாவும் அமைத்துக்கொண்டிருந்த இரட்டை உடன்பாடு (1894) இன்னொரு புறம். அப்போதிருந்த நிலையில் தன் உலகப் பேரரசைக் காத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருந்த இங்கிலாந்து தன் கூட்டு சேராக் கொள்கையினை விடவேண்டிய அவசியத்தில் இருந்தது. ஃபிரான்சுடன் இருந்த

வேறுபாடுகளாலும், ரஷ்யாவின் மீதிருந்த சந்தேகமும், இங்கிலாந்தை ஜெர்மனியின் பக்கமே ஈர்த்தது. ஆகவே, கெய்சரின் ஜெர்மனியோடு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டு, ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து இங்கிலாந்து விடுபட நினைத்தது. விக்டோரியா மகாராணியாரின் சவ ஊர்வலத்தில் கலந்துகொள்ள இங்கிலாந்துக்கு வருகை புரிந்திருந்த கெய்சரிடம் இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சர் சேம்பெர்லெய்ன், ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தபோது, ஜெர்மனிய அரசர் அதற்குச் சில நிபந்தனைகளிட்டதோடு, மேற்கொண்டு அக்கறையும் காட்டாமல் அலட்சியப் படுத்தினர்.

ஃபிரெஞ்சு - ரஷ்யக் கூட்டில் சேரமுடியாத நிலைமை; ஜெர்மனியோடு உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளச் செய்யப்பட்ட முயற்சியிலும் தோல்வி. அந்த நிலையில் இங்கிலாந்து தன் கவனத்தைத் தூரக் கிழக்கிற்குத் (Far East) திருப்பியது. அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்டதே ஆங்கிலோ-ஜப்பானிய உடன்பாடு (1902).

ஆங்கிலோ-ஜப்பானிய உடன்பாடு (Anglo-Japanese Alliance)

தனித்து, ஒதுங்கி, அதுவரையில் கூட்டு சேராக் கொள்கையினைப் பின்பற்றிவந்த இங்கிலாந்து 1902-ல் ஜப்பான் நாட்டுடன் செய்துகொண்ட உடன்பாட்டினையொட்டி, 'நட்பு நாடுகள்' இல்லாத நிலையில் இருந்து மீண்டிருந்தது. பரஸ்பர உதவியை இருநாடுகளுக்கிடையே வற்புறுத்தியிருந்த அவ் வுடன்பாடு, குறிப்பாக இங்கிலாந்துக்குப் பலன்களைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. ஐந்து ஆண்டுக் காலத்திற்கே அந்த உடன்பாடு நீடிக்க வேண்டியதாக இருப்பினும், உடனடியாக இங்கிலாந்துக்கு நன்மை பயக்கும்படியாக அது உதவியிருந்தது. இனிச் சீன நாட்டில் ரஷ்யர்களின் ஆதிக்க ஊடுருவலைப்பற்றி இங்கிலாந்து கவலைப்படவேண்டிய அவசிய மேற்படாது. அப் பொறுப்பு ஜப்பானுக்கு விடப்பட்டது. தன் கீழைப் பேரரசைக் காக்க, பசிபிக் மாகடலில் வைத்திருந்த கப்பற்படையை இங்கிலாந்து அட்லாண்டிக் கடலுக்கும், வட கடலுக்கும், மத்திய தரைக் கடலுக்கும் மாற்றிக் கொள்ளவும் முடியும். பசிபிக் கடலைக் காவல்காக்கும் பொறுப்பும் நட்பு நாடான ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்டது,

தனக் கெதிராகவே அவ் வுடன்படிக்கை செய்துகொள்ளப் பட்டிருந்த தென உணர்ந்திருந்த ரஷ்யாவும், அதனின் கூட்டு நாடும் ஆஃபிரிக்காவில் இங்கிலாந்தின் போட்டி நாடுமான

ஃபிரான்சும், ஆங்கிலோ - ஜப்பானிய உடன்படிக்கையை வரவேற்கத் தயாராகவில்லை யெனினும் கெய்சர் வில்லியம் தம் திருப்தியைத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளக் கெய்சர் விருப்பம் காட்டாவிடினும், 1903ஆம் ஆண்டுவரை அந் நாட்டுடன் நட்பு பாராட்டியே வந்தார். நிதி வசூல் செய்யத் தம் நாட்டுக்கு வந்திருந்த போயர் தளபதிகளைக் கெய்சர் சந்தித்துப் பேச மறுத்திருந்தார். தென் அமெரிக்க நாடான வெனிஜூலா, பெற்ற கடனைத் திருப்பித்தர மறுத்தபோது, பிரிட்டனுடன் சேர்ந்து தம் நாட்டுக் கப்பற் படையினையும் அனுப்பி, ஒத்து ழைக்கக் கெய்சர் முன்வந்திருந்தார்.

1904ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே இரு நாடுகளுக்கும் அதுவரை இருந்துவந்த நட்பு சிறிது சிறிதாக முரிய ஆரம்பித்தது. கெய்சர் தம் ஆணவப்பேச்சினால் ஆங்கிலேயர்களின் வெறுப்பைப் பெற்றார். ஜெர்மானியர்களே உலகத்தை ஆளப் பிறந்தவர்களென்றும், ஜெர்மனிக்கு ஒரு குடியேற்ற நாட்டுப் பேரரசு தேவை எனவும், பலாத்காரத்தினாலேயே ஜெர்மனி எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளுமென்றும் சொல்லி வந்ததல்லாமல், அதற்கான காரியங்களில் மும்முரமாக இறங்கினார். துருக்கி நாட்டை நட்பாக்கிக் கொண்டு, பெர்லின் - பாக்தாத் (Berlin - Bagdad) இருப்புப்பாதைத் திட்டத்திலும் ஜெர்மனி இறங்க ஆரம்பித்தது. கெய்சரின் அச் செயலால் தன் பேரரசுக்கு ஆபத்து ஏற்படுமென இங்கிலாந்து அச்சம் கொண்டது. ஜெர்மனியர் உலகில் பேராதிக்கம் பெறவேண்டுமானால், பிரிட்டிஷ் பேரரசு அழிக்கப்பட வேண்டுமெனக் கெய்சர் நினைத்திருந்ததால் தம் கப்பற்படையைப் பெருக்கி ஏராளமான போர்க் கப்பல்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தார். ஜெர்மனியின் கடற் படை பலம் பெருகுவதைக் கண்ட இங்கிலாந்து துணுக்குற்றது. மேலும், ஆங்கிலேயர்களை இழிவாகவும், மன்னர் ஏழாம் எட்வர்டை ஏளனமாகவும், அவரின் அமைச்சர்களைத் தாழ்வாகவும் கெய்சர் தாக்கி வந்ததால் ஜெர்மனிக் கெதிரான உணர்வு இங்கிலாந்தில் பரவலாயிற்று.

கெய்சரின் ஜெர்மனியால் தனக்கும், தன்பேரரசுக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை அதிகரிக்க அதிகரிக்கப் புதிய நட்பு நாடுகளின் தேவையும் இங்கிலாந்துக்கு அதிகரித்தது. ஜெர்மனியோடு ஒரு போர் ஏற்படுமாயின் ஐரோப்பாவில் தனக்கு ஒரு நட்பு நாடு இருக்கவேண்டிய அவசியத்தை இங்கிலாந்து உணர ஆரம்பிக்க, அதுவே 1904-ல் இங்கிலாந்துக்கும், ஃபிரான்

சுக்கும் இடையே நேச உடன்பாடு (Entente Condiale) ஏற்பட உதவியது.

பிரிட்டிஷ் - ஃபிரான்ஸ் உடன்பாடு

ஜெர்மனியிடத்து ஃபிரான்சுக்கிருந்த பகையும் பிரிட்டனுக்கிருந்த அச்சமும், 1903ஆம் ஆண்டிலிருந்தே இரு நாடுகளையும் நெருங்க வைத்தது. கெய்சர் வில்லியத்தை மனதார வெறுத்த இங்கிலாந்தின் மன்னர் ஏழாம் எட்வர்டு ஃபிரான்ஸ் நாட்டுக்கு விஜயம் செய்து (1903) இரு நாடுகளுக்கிடையே சுமுகமான உறவு ஏற்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருந்தார். அதை யொட்டி, ஃபிரெஞ்சு ஜனாதிபதியாக லூபெட் (Loubet) என்பவர் இங்கிலாந்துக்குச் சென்றிருக்க, இரு நாடுகளுக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவு ஏற்பட வழி உண்டாயிற்று. ரஷ்யா 1904-ல் ஜப்பானுல் தோற்கடிக்கப்பட்டிருந்த அச் சந்தர்ப்பத்தில் அந் நாட்டினுல் ஜெர்மனிக்கு எதிரான பாதுகாப்பு தனக்குக் கிடைக்காதென்ற எண்ணம் கொண்டு இங்கிலாந்துடன் நட்பை ஃபிரான்ஸ் கோரியது. அதே போன்று ஜெர்மனியோடு போர் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் ஃபிரான்ஸ் நாட்டின் உதவி தனக்குத் தேவைப்படுமென இங்கிலாந்தும் நினைத்தது. அதன் விளைவாகவே அவ் விரு நாடுகளுக்குமிடையே ஒரு நேச உடன்பாடு ஏற்பட்டிருந்தது.

அதன்படி எகிப்தில் பிரிட்டிஷாரின் தனி ஆதிக்கத்தை ஃபிரான்சும், மொராக்கோவில் ஃபிரெஞ்சுக்காரர்களின் பிரத்தியேக உரிமையை இங்கிலாந்தும் ஒப்புக்கொண்டன. நியூபவுண்ட்லாந்து கரையோரப்பகுதிகளுக்குத் தான் கோரிவந்த உரிமையை விட்டுவிட ஃபிரான்சும், அப் பகுதியில் மீன் பிடிக்க ஃபிரெஞ்சுக்காரர்களை அனுமதிக்க இங்கிலாந்தும் ஒப்புக்கொண்டன. மற்றப் பிரச்சினைகளும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளப் படுவதற்கும் அந்த உடன்படிக்கை உதவியது.

ஜெர்மனியின் கப்பற்படை அதிகரிப்பால் ஆபத்து எதுவும் வருவதைத் தடுக்க மத்திய தரைக் கடலிலிருந்த தன் கப்பற் படையை இங்கிலாந்து வட கடல் பகுதிக்கு அனுப்பவும், ஃபிரெஞ்சுக் கப்பற்படையை மத்திய தரைக்கடலில் ரோந்து வேலையில் ஈடுபடுத்தவும் அவ் வுடன்பாடு உதவுவதாக இருந்தது. அங்ஙனமாக ஒன்றுக்கொன்று உதவும் வகையில் ஒத்துழைத்த அவ் விரு நாடுகளின் நட்பு மொராக்கோ பிரச்சினையில் (1906) இன்னும் பலமடைந்திருந்தது.

மொராக்கோ (Morooco) என்ற வட ஆஃபிரிக்க முஸ்லீம் நாடு தகுதியற்ற சுல்தானுல் ஆளப்பட்டு வந்தது. ஜிப்ரால்டர் சந்திக்

கருகே அந்த நாடு இருந்தமையால் அதன் ஒரு பகுதியை அபகரித்துக் கொள்ளவேண்டுமென ஃபிரான்ஸ் விரும்பியது. இங்கிலாந்தும், நேச உடன்படிக்கையில் அதற்கு ஒப்புக் கொண்டிருந்தது. இங்கிலாந்தின் ஆதரவும் தனக்கிருக்கிறதென்ற எண்ணத்தில் ஃபிரான்ஸ் தன் அதிகாரிகளை மொராக்கோவுக்கு அனுப்பிச் சுல்தானைக் கைப்பாவையாக்கியது. அந்த இழிநிலையில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும், ஃபிரெஞ்சுக்காரர் ஆதிக்கத்தை மொராக்கோவிலிருந்து அகற்றவும் சுல்தான் ஜெர்மனியின் கெய்சருக்கு முறையிட்டுக்கொண்டார். ஃபிரெஞ்சுக்காரர் மொராக்கோவில் ஆதிக்கம் பெறுவதை வெறுத்த கெய்சர், சுல்தானைக் காப்பது தம் கடமையென அறிவித்ததோடு டான்ஜியர் (Tangier) துறைமுகத்திற்கு ஒரு கப்பற்படையுடன் தாமும் சென்றார். மொராக்கோ நெருக்கடியைத் தீர்க்க ஒரு மாநாடு கூட்டப்பட வேண்டுமெனக் கெய்சர் வற்புறுத்தியதன் பேரில் அல்ஜிஸிராஸ் மாநாடு (Algeciras Conference) 1906-ல் கூடியது. ஃபிரான்சுக்குச் சாதகமாகவே பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருக்க அதனால் எரிச்சல் கொண்ட கெய்சர் ஃபிரான்சின் மீது போர் தொடுக்கலாமென்ற அபாய நிலைமை ஏற்பட்டபோது ஃபிரான்சுக்கு உறுதுணையாக இங்கிலாந்து நின்றது.

மொராக்கோ விவகாரம் இங்கிலாந்துக்கும், ஃபிரான்சுக்கும் இருந்த உறவைப் பலப்படுத்தியதென்றால் அவ் விரு நாடுகள்மீது ஜெர்மனிக்கு இருந்த வெறுப்பை இன்னும் அதிகரித்தது. 1906-ல் ஜெர்மனியில் கொண்டுவரப்பட்டிருந்த கடற்படைச் சட்டத்தின் படி, கெய்சர் மேற்கொண்டு தம் கப்பற்படையைப் பெருக்கியது நேச நாடுகளின் – குறிப்பாக இங்கிலாந்தின் சந்தேகத்தை அதிகரித்தது. ஜெர்மனியால் அபாயமான ஒரு சூழ்நிலை எந்த நேரத்திலும் ஏற்படலாம் என்றும், அந்த இக்கட்டான சமயத்தில் ரஷ்யாவின் உதவியும் தமக்குத் தேவைப்படும் எனவும் பிரிட்டிஷார் நினைக்க ஆரம்பித்தனர்.

ஆங்கிலோ-ரஷ்ய உடன்பாடு

வெளிவிவகார அமைச்சர் சர் எட்வர்டு கிரேயும் (Sir Edward Grey) இங்கிலாந்துக்கும், ரஷ்யாவுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டுமென்று வலியுறுத்தினர். ரஷ்யாவில் பிரிட்டிஷ் தூதுவராகப் பணியாற்றிய சர் சார்லஸ் ஹார்டிங்ஸ் என்பவரும், அவரை அடுத்து ரஷ்யாவுக்குச் சென்றிருந்த தூதுவரான சர் ஆர்தர் நிக்கல்சனும், அத்தகைய ஓர் உடன்பாடு ஏற்படுவதற்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்தனர். ரஷ்ய வெளிநாட்டு அமைச்சரான இஜ்வோல்ஸ்கி (Izvolski) என்பவரும், இரு நாடு

களுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டியதை வரவேற்றார். அதன் விளைவாக, 1907-ல் ஆங்கிலோ ரஷ்ய உடன்பாடு (கன்வென்ஷன்) கையெழுத்தாகியது.

அதில் இராணுவ அம்சம் எதுவும் இல்லையென்றாலும், இரு நாடுகளுக்கிடையே இருந்த சில பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க அவ் வுடன்பாடு வழிசெய்தது. திபேத்தின் (Tibet) உள் விவகாரங்களிலே இரு நாடுகளும் தலையிடுவதில்லையெனவும், அங்குச் சீனாவின் இறைமையை ஒப்புக் கொள்ளுவதென்றும் பிரிட்டனும், ரஷ்யாவும் முடிவுசெய்தன. ஆப்கானிஸ்தானத்தைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைத்துக் கொள்வதில்லை என இங்கிலாந்து உறுதிமொழி கொடுக்க, அந் நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என ரஷ்யாவும் ஒப்புக் கொண்டது. பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும், இடைப்படு ராஜ்யமாக (buffer state) ஆப்கானிஸ்தான் அமைய வேண்டியதன் அவசியத்தை இரு நாடுகளும் உணர்ந்தன. பாரசீகம் (Persia) மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டுமெனவும், வடபகுதியில் ரஷ்யாவும் தென்பகுதியில் பிரிட்டனும் தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தலாமெனவும், மத்தியப் பகுதியைப் பாரசீக அரசருக்குக் கொடுப்பதெனவும் அப் பகுதியின் விவகாரங்களில் இரு நாடுகளுமே தலையிடக் கூடாதெனவும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

அங்ஙனமாக இரு நாடுகளுக்கிடையே யிருந்த முக்கியப் பிரச்சினைகள் ஆங்கிலோ-ரஷ்ய கன்வென்ஷனால் தீர்க்கப்பட்டிருக்க இங்கிலாந்திற்கும், ரஷ்யாவிற்குமிடையே சந்தேக மனப்பான்மை நீங்கி நல்லுறவு ஏற்பட்டிருந்தது.

1894-ல் ஃபிரான்சும், ரஷ்யாவும் இருவர் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருந்ததை நாம் அறிவோம். 1904-ல் பிரிட்டனுக்கும், ஃபிரான்சுக்கு மிடையே நேச உடன்பாடு அமைக்கப் பட்டிருந்தது. 1907-ல் ஆங்கிலோ - ரஷ்ய கன்வென்ஷன் கையெழுத்தாகியிருந்தது. ஆக இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கூட்டு நேச உடன் பாட்டில் (Triple Entente) சேர்ந்திருந்தன.

ஆங்கில – ஜெர்மனிய உறவு முறிவு

முக்கூட்டு நேச உடன்பாட்டில் இங்கிலாந்து சேர்ந்திருந்த போதிலும் ஜெர்மனியுடன் கப்பற்படை அதிகரிப்புப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளவே பிரிட்டன் விரும்பியது. அமைச்சர் கிரே ஜெர்மனியரின் சந்தேகத்தைப் போக்க இரு நாடுகளின் கப்பற்படைகளும் கணிசமான அளவிற்குக் குறைக்கப்

படலாமென்ற யோசனையைத் தெரிவித்தபோது கெய்சர் வில்லியமும், அவரின் அமைச்சர் டர்பிட்ஜ்(Tirpitz) என்பாரும் அதை நிராகரித்தனர். மாறுக, கப்பற்படைப் பெருக்கத்தில் ஜெர்மனி அக்கறை காட்டியது.

பெர்லின் காங்கிரசால் (1878) தனது பாதுகாப்புக்குட்பட்டிருந்த பாஸ்னியா (Basnia), ஹெர்செகோவினு என்ற இரு நாடுகளை (1908-ல்) ஆஸ்திரியா தன்னுடன் இணைத்துக்கொண்டபோது கிழைப் பிரச்சினை சிக்கல் மீண்டும் தலையெடுத்தது. அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்தவர்களாதலால் செர்பியா என்ற ஒரு ஸ்லாவ் நாடு அப் பகுதிகள் தனக்கே சேர வேண்டுமென எதிர்ப்புத் தெரிவித்தது. செர்பியாவின் விருப்பத்தைப் பெரிய ஸ்லாவ் நாடான ரஷ்யா ஆதரித்தது. ஆனால், ஆஸ்திரியாவுக்கு ஜெர்மனியர் ஆதரவு இருந்ததால் ரஷ்யா போர் தொடுக்கத் தயங்கியது. இங்கிலாந்தும் அந்தப் பால்னிய நெருக்கடியில் தலையிட விரும்பவில்லை. ஆனால், முக்கூட்டு உடன்படிக்கை நாடுகளான ஆஸ்திரியாவும், ஜெர்மனியும் பாஸ்னிய விவகாரத்தில் தலையிட்டிருந்த முறை நேச நாடுகளான இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகளை இன்னும் நெருக்கமாகப் பிணைத்தது.

இருப்பினும் இங்கிலாந்து அதுவரை அமைதிக் கொள்கையையே விரும்பியது. 1911-ல் இங்கிலாந்தின் கடற்படை இலாகாவின் முதற் பிரபுவாக இருந்த (First Lord of the Admirality) வின்ஸ்டன் சர்ச்சில் என்பார் கப்பற்படைப் பெருக்கத்தைப் பரஸ்பரம் நிறுத்திவிடலாமென (Declare a Naval Holiday) வில்லியம் கெய்சருக்கு எழுதியிருந்தபோதும், ஜெர்மனியின் கப்பற்படைக் குவிப்பு நிறுத்தப்படவில்லை. அதையொட்டி பிரிட்டனும் தன் கப்பற்படையைப் பெருக்கிக் கொள்ள முனைந்தது. இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே அங்ஙனம் ஆயுத உற்பத்திப் போட்டி ஏற்பட்டிருக்க 1911-ல் அகெடிர் நெருக்கடி (Agadir Crisis) தோன்றியது.

மொராக்கோவில் ஃபிரெஞ்சுக்காரர் தங்களின் ஆதிக்கத்தைப் பலப்படுத்திவந்தது ஜெர்மனிக்கு எரிச்சலைக் கொடுத்துவந்தது. அந் நாட்டில் 1911-ல் ஒரு குழப்பமான நிலை ஏற்படத் தன் நலன்களைப் பாதுகாக்க ஃபிரெஞ்சு அரசாங்கம் ஒரு படையை அனுப்பி இருந்தது. ஃபிரான்சின் அச் செய்கையை விரும்பாத கெய்சர் வில்லியம் ஃபிரெஞ்சுக்காரர்களை விரட்டி அங்கிருந்து வெளியேற்றப் பெர்லின் (Berlin), பேந்தர் (Panther)

என்ற இரண்டு போர்க் கப்பல்களை அகெடிர் (Agadir) போர்த் துறைமுகத்துக்கு அனுப்பினர். ஃபிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே அகெடிர் நெருக்கடியைத் தொடர்ந்து போர் மூளும் போல் இருந்தது. ஃபிரான்ஸ் ஜெர்மனியால் தாக்கப்பட்டால் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு உதவி செய்ய இங்கிலாந்து முன் வரும் என்று லாயிட் ஜார்ஜ் எச்சரிக்கை விடுத்திருந்தார். இங்கிலாந்தின் மிரட்டலைத் தொடர்ந்து ஜெர்மனி தன் போர்க் கோலத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அகெடிர் நெருக்கடியால் இங்கிலாந்திற்கும், ஃபிரான்சிற்கும் இருந்த உறவு, நெருக்கம் அடைந்ததனால் அவ் விரு நாடுகளின் மீதும் கெய்சருக்குப் பகைமை மேலும் வளர்ந்தது.

இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையே கப்பற்படை அதிகரிப்புப் போட்டி மும்முரமாகவே வளர்ந்து வந்தது. ஜெர்மனி ஒரு வருடத்திற்கு நான்கு பெரிய நாசகாரிக் கப்பல் களைக் (டிரெட் நாட்) கட்டியதென்றால், இங்கிலாந்தில் ஆறு டிரெட் நாட்டுகள் (dread nought) கட்டப்பட்டன. இங்கி லாந்தில் ஜெர்மனியின் தூதுவராக இருந்த கவுண்ட் மெட்டர்னிக் என்பார் இரு நாடுகளின் கப்பற்படைக் குவிப்பைக் குறித்து அச்சம் கொண்டு ஜெர்மனி தன் கப்பற்படையைப் பெருக்கு வதைக் குறைத்துக்கொண்டால், பிரிட்டிஷாரின் சந்தேகம் தெளியுமென்றும், அதன்பின் சீர்கெட்டுவரும் உறவு சுமுக நிலையைப் பெறுமெனவும் தம் நாட்டு அரசுக்கு அடிக்கடி தெரி வித்துவந்தார்.

பிரிட்டிஷ் அரசாங்கமும் ஜெர்மனியுடன் மோதுவதைத் தவிர்க்கவே விரும்பியது. கப்பற்படை, காலனிகள் உள்பட இரு நாடுகளுக்கிடையே தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளைப்பற்றிப் பேச 1912-ல், பிரிட்டிஷ் போரமைச்சர் ஹால்டேன் பிரபு (Lord Holdane) ஜெர்மனியத் தலைநகரான பெர்லினுக்குச் சென்றார். ஜெர்மனி தயாரிக்கும் ஒவ்வொரு போர்க்கப்பலுக்கு ஈடாக, இங்கிலாந்து இரண்டு கப்பல்களைக் கட்டுமெனத் தெரி வித்திருந்ததோடு, கப்பற்படை அதிகரிப்பை நிறுத்திக்கொள் ளும்படி ஜெர்மனியர்களை ஹால்டேன் கேட்டுக்கொண்டார். ஆனால், ஃபிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடையே ஒரு போர் ஏற்படுமாயின் அதில் இங்கிலாந்து நடுநிலைமை வகிப்பதாக ஒப்புக்கொள்ளுமானால், தன் கப்பற்படைப் பலத்தைக் குறைப்ப தாகக் கெய்சர் பதிலளிக்க, அதற்கு பிரிட்டிஷார் ஒப்புக் கொள்ளாத நிலையில் ஹால்டேனின் தூது தோல்வியில் முடிந்தது; ஜெர்மனியக் கடற்படை அமைச்சர் அட்மிரல்

டர்பிட்ஜ் என்பவரின் வற்புறுத்தலின்பேரில், ஜெர்மனிய ரீச்ஸ் டாக்சில் (பாராளுமன்றத்தில்) 14-12-1912-ல் கடற்படைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஜெர்மனியக் கப்பற்படையை மேலும் அதிகரிக்கக் கொண்டுவரப்பட்ட அச் சட்டம், ஆங்கிலோ-ஜெர்மனிய உறவை மிகவும் பாதித்தது. எந்தச் சூழ்நிலையிலும் தம் கப்பற்படையின் பலத்தைக் குறைக்கக்கூடாது என்பதில் சர்விரும்பாமலிருந்தது, இங்கிலாந்தையும் கப்பற்படைத் தயாரிப்புப் போட்டியில் உந்தித் தள்ளியது.

பிரிட்டனைப் பொறுத்தமட்டில், அதிகரிக்கப்பட்டுவந்த ஜெர்மனியின் கப்பற்படையைத்தான் அது அளவு கோலாகக் கவனித்துவந்தது. ஜெர்மனியின் கப்பற்படை வளர்ச்சி நின்றுலொழிய, இங்கிலாந்தின் அச்சம் தீராத நிலையிலிருந்தது. கடற்படை பலப்படுத்துவதைத் தளர்த்தவேண்டுமென பிரிட்டன் கூறியதை (ஹால்டேனின் தூது) ஜெர்மனி பொருட்படுத்தாததால் அவர்களின் கடற்படையைப் பலமிக்கதாகச் செய்யும் முயற்சியில் ஆங்கிலேயர்கள் தீவிரமாக இறங்கினர்கள். ஆங்கிலேய ஜெர்மனி நட்புறவு சிறிது சிறிதாக மோசமடைந்து வர, பால்கன் போர்கள் (Balkan Wars, 1912-1913) மூண்டன.

பால்கன் தீபகற்பக் கிருத்துவ நாடுகள் ஒன்றுசேர்ந்து துருக்கியுடன் போரிட்டு மாசிடோனியாவைக் கைப்பற்றிக்கொண்டன. வெற்றி பெற்ற இடங்களைப் பிரித்துக்கொள்வதில் அவர்களுக்குள்ளாகவே சச்சரவு மூண்டிருக்க, பல்கேரியா நாடு மற்ற பால்கன் நாடுகளுடன் (செர்பியா உட்பட) போர் செய்தது. அப் போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டிருந்ததால், செர்பியா நாடு ஈஜியன் (Aegean) கடலோரமாயிருந்த சலோனிக்கா துறைமுகத்தைப் பெற்றிருந்தது. செர்பியாவின் விரோதி நாடான ஆஸ்திரியா அதற்குத் தன் கண்டனத்தைத் தெரிவித்திருந்தது. ஆஸ்திரியாவின் கூட்டு நாடான ஜெர்மனி அக் கண்டனத்திற்குத் தன் முழு ஆதரவையும் கொடுத்திருந்தது. ஸ்லாவ் நாடான செர்பியாவுக்குத் தன் ஆதரவைக் கொடுக்க ரஷ்யா தயாராக இருந்த அந்த நிலையில், பெரும்போர் மூளக் கூடிய அபாயம் இருந்தது. ஆயினும், எந்த வல்லரசும் போரில் குதிக்க விரும்பவில்லை. அதைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிலாந்தின் வெளி விவகார அமைச்சரான சர் எட்வர்டு கிரே இலண்டனில் ஒரு மாநாட்டைக் (1913) கூட்டிப் போர் அபாயத்தைத் தவிர்த்திருந்தார். ஆக, முக்கூட்டு நேச உடன்படிக்கையில் இங்கிலாந்து சேர்ந்திருந்தபோதிலும், ஜெர்மனியின் கடற்படை அதிகரிப்பினால் ஆத்திரமடைந்திருந்தபோதிலும்,

தன் நட்பு நாடுகளின் சார்பிலோ, ஜெர்மனி நாட்டுக்கெதிராகவோ போரைத் தொடங்க பிரிட்டிஷார் விரும்பவில்லை.

ஆஸ்திரியப் பட்டத்து இளவரசர் ஆர்ச் டியூக் ஃபெர்டினண்டும், அவர் மனைவியும், செராஜிவோவில் (பாஸ்னியாவின் தலைநகர்) ஒரு செர்பிய வெறியனால் சுட்டுக்கொல்லப்பட்டபோது (28-7-1914), ஆஸ்திரியா செர்பியாவின்மீது போர் தொடுத்தது. அதுவே முதலாம் உலகப் போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. செர்பியாவின் உதவிக்கு ரஷ்யாவும் ஆஸ்திரியாவின் உதவிக்கு ஜெர்மனியும் போரில் குதிக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோதும், செராஜிபோ நெருக்கடியால் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை ஒரு மாநாட்டைக் கூட்டி அமைதியாகத் தீர்க்கலாமென்றே கிரே யோசனை தெரிவித்திருந்தார். ஆயின், கெய்சரின் ஒத்துழையாமையினால், ஐரோப்பாவில் போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது. செர்பியாவுக்குத் துணைசெய்த ரஷ்யாவின்மீதும், ரஷ்யாவின் நட்பு நாடான ஃபிரான்ஸ்மீதும் ஜெர்மனி போர் தொடுத்தது.

ஐரோப்பாவில் போர் மூண்டிருந்தபோதிலும் 3-8-1914-ல் காமன்ஸ் சபையில் அமைச்சர் கிரே (Grey) 'நான் போரை வெறுக்கிறேன்; வெறுக்கிறேன்; வெறுக்கிறேன்' என்று சொல்லியிருந்தது, இங்கிலாந்தின் அமைதிக் கொள்கையையே எடுத்துக் காட்டியது. ஆயின், ஃபிரான்ஸ் நாட்டின்மீது படையெடுத்திருந்த ஜெர்மனியப் படைகள் நடுநிலைமை நாடான பெல்ஜியத்தின் வழியாகச் சென்றபோது, அதன் நடுநிலைமையைக் காக்கக் கடமைப்பட்டிருந்த இங்கிலாந்து இறுதியில் ஜெர்மனியின்மீது போர் தொடுத்தது.

முதல் உலகப்போர் மும்முரமாகத் தொடங்கியது.

21. இங்கிலாந்தும் முதல் உலகப் போரும் (1914 - 1918)

(அ) முதல் உலகப்போரில் இங்கிலாந்து

எது ஒன்றை இறுதிவரை தவிர்க்க நினைத்து, சூழ்நிலை காரணமாக 4-8-1914-ல் அதில் இங்கிலாந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோ, அப் பெரும் போர், மனித வரலாற்றில் அது வரை கண்டிருந்த போர்களிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. சிற்றரசுகளும் பேரரசுகளுமாகப் பல உலக நாடுகள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கலந்து கொண்டன. அப் போர், நிலத்திலும், கடலிலும், ஆகாயத்திலும் நவீன ஆயுதங்களுடனும் போர்த்தளவாளங்களுடனும் ஐரோப்பா மட்டுமின்றி உலகின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்றது. அப் பெரும் போர் ஒரு குறிப்பிட்ட சம்பவத்திலேயோ, ஒரு குறிப்பிட்ட நாட்டிலேயோ, ஒரு குறிப்பிட்ட நாளில் செய்யப்பட்ட திடீர் முடிவிலேயோ ஏற்பட்டதில்லை. ஐரோப்பிய அரங்கில் அடுத்தடுத்து நேர்ந்த பல சம்பவங்கள் கோவையாக அமைந்து, அப் பெரும் போர் மூள்வதற்கு முக்கியக் காரணங்களாக விளங்கின. அவைகளில் சிலவற்றை அடுத்து ஆராய்வோம்.

போருக்கான காரணங்களின் சுருக்கம்

எந்த நாட்டுடனும் கூட்டு சேராக் கொள்கையைப் பின் பற்றிவந்த இங்கிலாந்து 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முக்கூட்டு நேச உடன்படிக்கையில் ஃபிரான்சு, ரஷ்யாவுடன் சேர்ந்திருந்தை நாம் ஏற்கெனவே கண்டறிந்தோம். ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகள் ஏற்கெனவே முக்கூட்டு உடன்படிக்கையைத் தங்களுக்குள் செய்துகொண்டிருந்தன. சுருக்கமாக ஐரோப்பா படைக்கலம் தரித்த இரு

பிரிவுகளாக வேறுபட்டிருந்தது. நேச நாடுகளுக்கும், ஜெர்மனி, ஆஸ்திரியா நாடுகளுக்கும் இடையே இருந்துவந்த பகைமை போட்டி, கசப்புணர்ச்சி, பொறுமை ஆகியவையே முதலாம் உலகப்போருக்கான அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நிலவிவந்த இராணுவ வெறியும் (Militarism) ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. உலகப் பேரரசை அடைய வேண்டுமென்ற ஆசையில் ஜெர்மனி தன் படைக்கலங்களையும், இராணுவத்தையும் கப்பற்படையையும் அதிகரித்துவந்தது.

ஜெர்மனியின் அபரிமிதமான ஆயுத உற்பத்தியைக் கண்ணுற்ற நேச நாடுகள் தங்களின் போர்த்தளவாடங்களையும், இராணுவத்தையும் பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தன. குறிப்பாக ஜெர்மனியும் இங்கிலாந்தும் கப்பற்படையைப் பெருக்கும் போட்டியில் ஈடுபட்டிருந்தன. ஜெர்மனியில் செய்யப்படும் ஒவ்வொரு போர்க் கப்பலுக்கும் ஈடாக, இங்கிலாந்து இரண்டு கப்பல்களைக் கட்ட ஆரம்பித்தது. அத்தகைய போட்டி இறுதியில் போரில் தான் முடியவேண்டியிருந்தது.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருந்த பொருளாதாரப் போட்டியும் ஒரு முக்கியக் காரணமாக விளங்கியது. தொழிற்புரட்சியினால் ஃபிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகள் ஆக்கத் தொழிலில் அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்திருந்தன. பொருள் செய் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் அதிகரித்திருந்ததால் அவற்றை விற்பதற்கான சந்தைகள் அந்நாடுகளுக்குத் தேவைப்பட்டன. பிரிட்டனும் ஃபிரான்சும் ஏற்கெனவே உலகின் பல பாகங்களில் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்திக்கொண்டு ஆஃபிரிக்காவிலும், புதுக் குடியேற்றங்களைப் பெறுவதில் போட்டியிட்டுவந்தன. இருபதாம் நூற்றாண்டில் ஜெர்மனியும், தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் குடியேற்ற நாடுகளைத் தோற்றுவிக்கும் முயற்சியில் இறங்கியது. குறிப்பாக இங்கிலாந்து, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த குடியேற்றங்களைக் கண்டு பொறுமையடைந்திருந்த ஜெர்மனி தன் செல்வாக்கையும் அப் பகுதிகளில் நிலைநிறுத்த முயன்றது. உதாரணமாக, ஆஃபிரிக்காவில் அப் போட்டி பலமாக இருந்தது. மூலப் பொருள்களைப் பெறுவதற்கும், தன் பொருள்களை விற்பனை செய்யவும் எப்படியும் உலகச் சந்தைகளைக் கைப்பற்றவேண்டுமென ஜெர்மனியும், ஜெர்மனியின் தலையீட்டால் தங்களின் பொருளாதாரத்துறை பாதிக்கப்படக்கூடாதென்று பிரிட்டனும் ஃபிரான்சும் என்ன, அந்நிலை ஒரு பொருளாதாரப் போட்டிக்குக் காரண

மாகியிருந்தது. மேலும், உலகின் பல வளங்கொண்ட பாகங்களை இங்கிலாந்தும் ஃபிரான்சும் ஏற்கெனவே ஆக்கிரமித்துக்கொண்டிருக்க, அவற்றை எப்படியும் பறித்தே தீர வேண்டுமென ஜெர்மனி நினைக்க, அந்நிலை போரைத் தவிர்க்க முடியாததாக்கி விட்டது.

விக்டோரியாப் பேரரசியின் மகள் வழிப் பேரனை ஜெர்மனிய அதிபர் கெய்சர் இரண்டாம் வில்லியம் ஓர் ஏகாதிபத்திய வெறியராக இருந்ததும் அப் போருக்கு முக்கியக் காரணமாக அமைந்தது. 'உலகத்தை ஆளப் பிறந்தவர்கள் ஜெர்மனியர்கள். ஜெர்மனியின் நாகரிகம் உலகம் முழுதும் பரப்பப்பட வேண்டும்' எனக் கெய்சர் அடிக்கடி சொல்லி வந்தது இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு அச்சத்தைக் கொடுத்து வந்தது. கெய்சரின் ஏகாதிபத்தியவெறியால் தங்களின் பேரரசுகளுக்கு ஆபத்து வரலாமென இங்கிலாந்தும், ஃபிரான்சும் நினைத்ததில் வியப்பெதுவுமில்லை. கெய்சர் போர்வெறி கொண்டவராகவும் இருந்தார். எந்த ஒரு பிரச்சினையையும் ஆயுத பலத்தின் மூலமாகவே தீர்த்துவிடமுடியுமென ஜெர்மனியின் அதிபர் நினைத்துவந்தமை போருக்கு வித்திடுவதாக இருந்தது. தம் கொள்கையின்படி ஒவ்வொரு சிக்கலையும் பலாத்காரத்தின் மூலமாகக் கெய்சர் தீர்க்க முன்வர அது இறுதியில் பெரும் போரில் கொண்டுபோய்விட்டது.

ஐரோப்பிய நாடுகளிடையே அபரிமித தேசிய உணர்ச்சி (extreme nationalism) பரவியிருந்த 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், அதன் விளைவாக ஓர் அரசியல் போட்டியும் ஏற்பட்டிருந்தது. உதாரணமாக ஃபிரான்சு - பிரஷ்யப் போரில் (1871) தான் இழந்திருந்த அல்ஸாஸ் - லோரேய்ன் (Alsace-Lorraine) பகுதிகளை எப்படியும் மீட்க வேண்டுமென ஃபிரான்சு நினைத்துக் கொண்டிருக்க அதை எப்படியும் தவிர்க்க வேண்டுமென ஜெர்மனி நினைத்துக்கொண்டிருக்க அவ் விரு நாடுகளிடையே வெறுப்பும் பீதியும் கலந்து காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டிருந்தது. அந்தத் தேசிய உணர்ச்சியே பால்கன் விவகாரத்திலே ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்கும் விரோதத்தை வளர்த்திருந்தது. உதாரணமாக ஸ்லாவ் மக்களைக் கொண்டிருந்த பாஸ்னியா, ஹெர்செகோவினு என்ற இரு நாடுகளை ஆஸ்திரியா தன்னுடன் இணைத்துக்கொண்டபோது, ஸ்லாவ் நாடான செர்பியா அவற்றை ஆஸ்திரியாவிடமிருந்து பிடுங்கிக்கொள்ள நேரம் பார்த்திருந்தது. செர்பியாவை ஆதரித்து ரஷ்யாவும், ஆஸ்திரியாவை ஆதரித்து ஜெர்மனியும் இரு கட்சிகளாகப் பிரிந்திருக்க அந்த நெருக்கடி போரில் கொண்டுவிட்டது.

சுருக்கமாக, ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே பல பிரச்சினைகளின் காரணமாக உறவு முரிந்திருந்தது. காலனிப் போட்டி, கெய்சரால் கொண்டுவரப்பட்டிருந்த பெர்லின் – பாக்தாத் இரயில்வே இணைப்புத் திட்டம், கப்பல் படை அதிகரிப்புப் போட்டி போன்றவைகளின் காரணமாக இங்கிலாந்திற்கும், ஜெர்மனிக்கும் பகை வளர்ந்துவந்தது. அல்ஸேஸ், அகாடிர் நெருக்கடி காரணமாக ஃபிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் விரோதம் அதிகரித்துவந்தது. பால்கன் நெருக்கடியில் ஆஸ்திரியாவும், செர்பியாவும் பகைத்துக் கொண்டிருக்க ஜெர்மனியும், ரஷ்யாவும் முறையே அவற்றை ஆதரித்ததால் அவற்றினுக்குள்ளும் கசப்புணர்ச்சி ஏற்பட்டிருந்தது.

முக்கூட்டு நாடுகளென ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி (இத்தாலி) ஒரு புறமும், இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கூட்டு நேச நாடுகளாக எதிர்ப்புறமும், 1914-ல் பிரிந்திருக்க ஐரோப்பா ஓர் ஆயுதக்கிடங்காக இருந்துவந்தது. ஐரோப்பா என்ற அந்த ஆயுதக்கிடங்கு போராக வெடிப்பதற்கு ஒரு சிறு நெருப்புப் பொறியே தேவையாக இருந்தது. அப் பொறி 1914ஆம் ஆண்டு ஜூலை 28ஆம் நாள் செராஜிவோவில் தோன்றியது.

பாஸ்னியாவின் தலைநகரான அந்நகரில் ஒரு தேசிய விழாவில் கலந்துகொள்ளச் சென்றிருந்த ஆஸ்திரிய இளவரசர் ஆர்ச்டியூக் ஃபெர்டினண்டும் அவர் தம் மனைவியும்செர்பிய வெறியனொருவனால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பால்கன் விவகாரத்தில் ஏற்கெனவே பகைமை கொண்டிருந்த ஆஸ்திரியாவுக்கும், செர்பியாவுக்கும் திட்டமிட்டுச் செய்த கொலை அது என நினைத்த ஆஸ்திரியா கடுமையான நிபந்தனைகளைச் செர்பியாவின்மீது திணித்து, குறித்த கெடுவுக்குள் அதை நிறைவேற்றும்படி எச்சரிக்கை விடுத்தது. ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றிருந்த செர்பியர்கள் ஆஸ்திரியாவுக்குப் பணிந்துபோக எண்ணினார்களே தவிர, முற்றிலும் சரணடையத் தயாராக இல்லை. செர்பியாவை ஒடுக்க நேரம் பார்த்திருந்த ஆஸ்திரியர்கள் அதைக் காரணமாகக் கொண்டு, அந் நாட்டின்மீது போர் தொடுத்தனர். ஸ்லாவ் நாடான செர்பியா, பெரிய ஸ்லாவ் நாடான ரஷ்யாவின் உதவியைக் கோரியது. செர்பியர்களுக்கு ரஷ்யா உதவக் கூடாதென ஜெர்மனி மிரட்டியிருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் ரஷ்யா போரில் குதிக்க, ஜெர்மனி தன் கூட்டு நாடான ஆஸ்திரியாவுக்கு உதவியாகப் போரில் இறங்கியது. ஃபிரான்சு ரஷ்யாவின் நட்பு நாடாக இருந்ததால் கெய்சர், அந் நாட்டின்மீதும் போர்தொடுத்தார். அங்ஙனமாக, பால்கன் பகுதியில் தோன்றிய

சிறுபோர் வல்லரசுகளுக்கிடையே பெரும்போராக மாறியது. பெல்ஜியத்தின் நடுநிலைமையை மீறி ஜெர்மன் படையினர் அந்நாட்டினுள் நுழைந்தபோது, அந்நாட்டின் நடுநிலைமையைக் காக்க வேண்டி, ஜெர்மனியின்மீது போர்தொடுக்க வேண்டியதாயிற்று.

அங்ஙனமாக, பல காரணங்களின் திரட்டலே முதல் உலகப் போராக வெடித்தது.

போரில் இங்கிலாந்தின் பங்கு

செராஜிவோ நெருக்கடியைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் தங்களைப் போருக்கு ஆயத்தம் செய்துவந்த சமயத்தில் இங்கிலாந்து அதில் தலையிட விரும்பவில்லை. ஆயினும், அந்நாடு தன்னையறியாமல் அப் பெரும் போர் மூள்வதற்குக் காரணமாக இருந்தது. 'எந்தச் சூழ்நிலையிலும் செர்பியாவின்மீது ஆஸ்திரியர்களின் தாக்குதலை அனுமதிக்க முடியாது' என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சரான சாஜனேவ் (Sazonov) சொன்னபோது, செர்பியாவின் சார்பில் ரஷ்யா போரில் குதிக்குமென்ற நிலைமை நிச்சயமாகத் தெரிந்தது. 'செர்பியர்களுக்கு ரஷ்யர்கள் நண்பர்களென்றால் ரஷ்யர்களுக்கு நட்பு நாடு ஃபிரான்சு என ஃபிரெஞ்சு ஜனாதிபதி பாயின் கேர்(Poincare) கூறியிருந்தது, அந்நாடும் போரில் ரஷ்யாவின் சார்பில் இறங்கக் கூடுமென்ற நிலைமையைத் தெளிவுபடுத்தியிருந்தது. ஆக, பால்கன் விவகாரத்தில் தலையிட்டுப் பெரும் போரில் குதிக்க ரஷ்யாவும் ஃபிரான்சும் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்தபோது, அந்நாடுகள் போரில் இறங்குமானால், தான் எந்த உதவியும் தாராது, நடுநிலைமை வகிக்க வேண்டி இருக்கும் என்ற ஓர் எச்சரிக்கையை இங்கிலாந்து விடுத்திருக்குமானால், ஜெர்மனியை எதிர்த்து ரஷ்யாவும் ஃபிரான்சும் (பிரிட்டிஷாரின் உதவியின்றிப்) போரில் ஈடுபடத் தயங்கியிருக்கும்; அந்நிலையில் போர் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

பால்கன் நெருக்கடியின் காரணமாக ஏற்படும் போரில் இங்கிலாந்து கலந்துகொள்வதை ஆங்கில மக்களும் விரும்பவில்லை.

ரஷ்யாவும், ஃபிரான்சும் ஜெர்மனியால் தாக்கப்படுமானால் தானும் போரில் கலந்துகொள்ள வேண்டியிருக்குமென ஓர் எச்சரிக்கையை கெய்சருக்கு இங்கிலாந்து விடுத்திருக்குமானால் 24-7-1914-ல் ஜெர்மனி அந்நாடுகள்மீது போர் தொடுக்க அச்சப்பட்டிருக்கும். அந்நிலையிலும், போர் தவிர்க்கப்பட்டிக்கலாம்.

தன் முழு ஆதரவை ரஷ்யா, ஃபிரான்சு போன்ற நேச நாடுகளுக்குக் கொடுக்க இங்கிலாந்து தயங்கிவந்தபோதிலும்

போர் ஒன்று வருமாயின், அந் நாடுகளுடனேயே சேரவேண்டிய நிர்ப்பந்தம் பிரிட்டிஷாருக்கு இருந்தது. அதற்கேற்றாற்போல் பெல்ஜியத்தின் நடுநிலைமை கெய்சரின் படைகளால் குலைக்கப் பட்டபோது, ஜெர்மனிக்கு எதிராக 1914-ல் ஆகஸ்டு 4ஆம் தேதி இங்கிலாந்து போரில் குதித்தது. ஆகஸ்டு மாதத்தில், தான் கலந்துகொண்ட போரை பிரிட்டன் ரஷ்யருக்கும், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும், ஜெர்மனியர்களுக்கும் தகுந்த எச்சரிக்கையைக் கொடுக்கவேண்டிய நேரத்தில் கொடுத்திருந்தால் ஜூலை மாதத்திலேயே தவிர்த்திருக்கலாம். ஆக, இங்கிலாந்தின் உறுதியற்ற கொள்கையால் போரும் மூண்டுவிட்டது. தானும் அதில் கலந்துகொள்ளவேண்டியதாயிற்று.

போரை முதலில் தொடங்கிய ஆஸ்திரியாவும் அதன் உதவிக்கு வந்த ஜெர்மனியும் அச்சு நாடுகளெனவும் (Axis Powers) அவற்றை எதிர்த்துச் சண்டையிட்ட பிரிட்டன், ஃபிரான்சு, ரஷ்யா ஆகியவை நேச நாடுகளெனவும் (Allies) அழைக்கப்பட்டன. அச்சு நாடுகளோடு துருக்கி, பல்கேரியா போன்ற நாடுகளும், நேச நாடுகளோடு, செர்பியா, இத்தாலி, பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளும் சேர்ந்துகொண்டன. ஆஸ்திரியாவுக்கும், செர்பியாவுக்கும் தொடங்கியிருந்த சிறு போர் பெரும் உலகப்போராக மாறிவிட்டது. டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ஸ்பெயின், போர்ச்சுகல், கிரீஸ், ருமேனியா போன்ற நாடுகளும் நாளடைவில் இரு கட்சியினரின் சார்பில் தனித்தனியாகப் போரில் இறங்கலாயின.

மேற்குப் போர்முனை (1914)

ஃபிரான்சைத் தாக்கவேண்டி பெல்ஜியத்தில் நுழைந்திருந்த ஜெர்மனியப் படையினர் 1914ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் லீஜ் (Liege)' பிரசெல்ஸ் (Brussals) என்ற நகர்களைக் கைப்பற்றி வேகமாக முன்னேறினர். பெல்ஜியத்தின் உதவிக்கு வந்திருந்த பிரிட்டிஷ் படைகள் நாமூர் (Namur) சண்டையில் ஜெர்மனியர் களால் முரியடிக்கப்பட்டன. இப்ரஸ் (Ipres) என்ற இடத்தில் பிரிட்டிஷார் மிக உறுதியாகச் சண்டையிட்டிருந்தும், பெல்ஜி யத்தை அவர்களால் காக்கமுடியாமல் போயிற்று.

பெல்ஜியம் முழுவதையும் கைப்பற்றி ஃபிரான்சின் வட கிழக்குப் பகுதியில் ஊடுருவியிருந்த ஜெர்மனியர்கள் தலைநகர் பாரிசை நெருங்கிக்கொண்டிருந்தபோது, மாரின் (Marne) நதிக் கரையில் ஃபிரெஞ்சுக்காரர்களினால் நிறுத்தப்பட்டனர். ஆழ மான பள்ளங்களில் பதுங்கிக்கொண்டு, திடீரெனத் தாக்கிச்

சண்டையிட 'அகழிப் போர் முறை' (Trench war - fare) முதன் முதலில் அங்கே தொடங்கியது.

சிறிது சிறிதாக ஃபிரான்சில் முன்னேறிவந்த ஜெர்மனியர்களை முரியடிக்க இங்கிலாந்து ஃபிரெஞ்சுக்காரர்களுக்குக் கப்பல்களின்மூலம் உதவி அளித்துவந்ததால், அதைத் தடை செய்ய டன்கிர்க் (Dunkirk), கலேர் (Clair) போன்ற கால்வாய்த் துறைமுகங்களை ஜெர்மனியர் தாக்கினர்கள்.

கிழக்குப் போர்முனை (1914-1915)

கிழக்குப் பிரஷ்யாவில் டேனன்பர்க் (Tannenburg) என்னுமிடத்தில் ரஷ்யர்களைத் தோல்வியடையச்செய்து, ஜெர்மனியப் படையினர் முன்னேறிக்கொண்டிருந்தபோது, துருக்கியர்கள் கேலிபோலி (Gallipolli) தீபகற்பத்தையும், சூயஸ் கால்வாயையும் பிடிக்க முயன்றனர். ஆயின், பிரிட்டிஷாரின் கடுமையான எதிர்ப்பினால் அம் முயற்சி தோல்வியில் முடிந்தது. ரஷ்யர்களை மேலும் மேலும் விரட்டிப் போலந்து, லிதுவேனியா, கேலிஸியா (Gellicia) போன்ற நாடுகளை ஜெர்மனியர்கள் பிடித்துக்கொண்டபோது பல்கேரியா (Bulgaria) என்ற நாடு ஜெர்மனியோடு சேர்ந்து செர்பியாவைத் தாக்கி, தான் பால்கன் போரில் அடைந்திருந்த தோல்விக்கு வஞ்சம் தீர்த்துக்கொண்டது.

அச்சு நாடுகளுக்குப் பல்கேரியாவின் உதவி கிடைத்திருந்த அச் சமயத்தில், இங்கிலாந்து தன் ராஜதந்திரத்தினால் அதுவரை நடுநிலைமை வகித்துவந்த இத்தாலியை நேச நாடுகள் பக்கம் சேர்த்தது.

இஸ்ட்ரியா (Istria) தீபகற்பம், பிரென்னர் (Brenner) கணவாய், டால்மேஷியன் கடற்கரை (Dalmation Coast) போன்ற இடங்கள் இத்தாலிக்குப் போர் முடிந்த பின்னர்க் கொடுக்கப்படும் எனக் கூறி 1915-ல் அந்த நாட்டுடன் இங்கிலாந்து ஓர் இரகசிய உடன்பாட்டைச் செய்துகொண்டு, இத்தாலியின் உதவி அச்சு நாடுகளுக்குக் கிடைக்காமல் செய்துவிட்டது.

மேற்கு - கிழக்குப் போர்முனைகள் (1916-1917)

ஃபிரெஞ்சுக்காரர்களை எப்படியும் முரியடித்து அந்த நாடு முழுவதையும் கைப்பற்ற வேண்டுமென்று தங்களின் முழுப்பலத்துடன் ஜெர்மனியர்கள் வெர்டுன் (Verdun) என்ற இடத்தில் கடுமையாகச் சண்டையிட்டனர். ஜெர்மனியர்களின் கவனத்தைத் திருப்பி ஃபிரான்சைக் காக்கவேண்டி சோம் (Somme) நதிக்கரையில் பிரிட்டிஷார் சண்டையைத் தொடங்கினர். கடுமை

யான சேதங்களுடன் மிகத் தீவிரமாகச் சண்டையிட்டிருந்தும், ஜெர்மனியர்களைப் பின்னுக்குத் தள்ள முடியவில்லை:

குட் (Kut) என்னுமிடத்தில் பிரிட்டிஷ் படைகளைத் துருக்கியர் தோற்கடித்து மெஸபடோமியா (Mesopotomia), பாலஸ்தீனம் (Palestine) ஆகிய இடங்களில் அவர்களின் முன்னேற்றத்தைத் தடை செய்திருந்தனர். ஆயின், லாரன்ஸ் (Lawrence of Arabia) என்ற ஆங்கில வீரர் அரேபியர்களைத் துருக்கிக்கெதிராகக் கலகம் செய்யத் தூண்டிவிட்டு, துருக்கிப் பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்டார். இருப்பினும், டொமினியன் நாட்டு உதவிப்படைகளுடன் டார்டனெல்ஸைக் கடந்து கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்ற பிரிட்டிஷார் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை.

நேச நாடுகளோடு சேர்ந்திருந்த ருமேனியாவைக் கைப்பற்றி ஜெர்மனியர்கள் ரஷ்யர்களை நெருங்கிக்கொண்டிருந்தபோது வீழ்ச்சியுறும் நிலையிலிருந்த ரஷ்யாவுக்கு மேலுதவி கொடுக்க பிரிட்டிஷார் முயன்றும் அச்சு நாடுகளின் தடுப்பு நடவடிக்கைகளால் பயனில்லாமல் போனது. அதற்கிடையில் ரஷ்யாவில் மாபெரும் புரட்சி (1917) தோன்றி முடியரசு ஒழிக்கப்பட்டது. புரட்சியின் போக்கில் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த லெனின் ரஷ்யாவைப் போரிலிருந்து விடுவித்துவிட்டார். ரஷ்யா, ஒரு சமாதான உடன்படிக்கையை ஜெர்மனியுடன் பிரெஸ்ட்லி டோவஸ்ங்க் (Brast Litovaske) என்னுமிடத்தில் செய்துகொண்டது, நேச நாடுகளுக்கு ஒரு பெரும் இழப்பாக இருந்தது. ரஷ்யா போரிலிருந்து விலகிவிட்டதால், கிழக்கு முனையில் போரின் சூடு சற்றுத் தணிந்திருந்தது. பிரிட்டிஷார் தங்களின் கவனத்தை மேற்குப் போர்முனையில் மீண்டும் காட்டத் தொடங்கினர்.

படுதோல்விகளைப் பெற்றுவந்த ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு உதவியாக இப்ர்ஸ் (Ipres) என்னுமிடத்திற்கே பிரிட்டிஷார் ஜெர்மனியர்களை எதிர்த்து அகழிப்போரை நடத்தினர். அச் சண்டையில் பிரிட்டிஷார் வெற்றி பெற்றிருந்தபோதிலும் ஏராளமான வீரர்களை அவர்கள் இழக்கவேண்டியிருந்தது. அடுத்தாற்போல், டாங்கிகளைக் (tanks) கொண்டு காம்பிராய் (Cambrai) என்னுமிடத்திலிருந்த ஜெர்மன் அகழிகளை நோக்கிப் பிரிட்டிஷ் படைகள் முன்னேறியபோது ஜெர்மனியர் அதைத் தடுத்து நிறுத்தினர்.

கிழக்குப் போர் முனையில் துருக்கியர்களைத் தோற்கடித்து, பிரிட்டிஷார் சில வெற்றிகளை 1917-ல் பெற்றிருந்தது குறிப்

பிடத்தக்கது. குட் (Kut), பாக்தாத் (Bagdad), ஜெருசலேம் (Jerusalem) போன்ற நகரங்களுடன், மெஸபடோமியா, பாலஸ்தீனம் ஆகிய பகுதிகள் பிரிட்டிஷார் வசமாக இருந்தன.

கடற்போர் (1914-1917)

நிலப்போரைவிடக் கடற்போரிலேயே சிறந்த கப்பற்படையினைக் கொண்டிருந்த இங்கிலாந்து அதில் தன் கவனத்தை அதிகம் செலுத்தியிருந்தது. ஜெர்மனியர் தங்களது குடியேற்ற நாடுகளுக்கு ராணுவ உதவி எதையும் அனுப்பாமல் செய்ய, ஆங்கிலேயர்கள் கடல் முற்றுகையிட்டு, ஜெர்மனியின் கப்பற் படையைக் கீல் கால்வாய், பால்டிக் கடல் ஹெலிகோலாந்து ஆகிய இடங்களில் அடைபட்டிருக்கச் செய்தனர். அட்லான்டிக், பால்டிக் கடற்கரையோரங்களில் பிரிட்டிஷார் ஏராளமான கடற் கண்ணிகளைத் (sea mines) தூவி, துறைமுகங்களிலிருந்து ஜெர்மனியின் சரக்குக் கப்பல்கள் வெளிக் கிளம்பாவண்ணம் தடுத்தனர்.

ஜெர்மனியர்கள் நீர்மூழ்கிக் கப்பல்களை (submarines) ஏராளமாகப் பயன்படுத்தி ஆங்கிலக் கப்பல்களைத் தாக்க லாயினர்.

1916-ல் ஜட்லாந்துக்கு (Jutland) அருகே இரு நாட்டுக் கடற்படைகளுக்கு இடையே கடுமையான சண்டை நடந்தது. ஜெர்மனி 11 கப்பல்களையும், 2545 வீரர்களையும் அச் சண்டையில் இழந்தது. பிரிட்டிஷ் தரப்பிலும் ஏராளமான சேதங்கள் ஏற்பட்டிருப்பினும் சண்டை தொடர்ந்தது. சண்டை தொடர்ந்து நடந்திருக்குமானால் ஜெர்மன் கப்பற்படை முழுவதையுமே பிரிட்டிஷாரால் அழித்திருக்க முடியும். அதற்குள் பொழுது முடிந்துவிட்டதால், இருளைப் பயன்படுத்திக்கொண்டு, ஜெர்மன் கப்பற்படை தப்பியோடிவிட்டது. ஆக, அச் சண்டையில் எவருக்கும் வெற்றி கிட்டவில்லை. இருப்பினும், அச் சண்டைக்குப் பின்னர் பிரிட்டிஷாரைத் தம் கடற்படையைக் கொண்டு எதிர்க்கும் துணிவை ஜெர்மனியர்கள் இழந்தனர்.

ஆயின், கட்டுப்பாடற்ற முறையில் ஜெர்மனி 1917-ல் நீர் மூழ்கிக் கப்பற்போரில் (Submarine warfare) இறங்கியது. பிரிட்டனை நோக்கிச் செல்லும் எல்லாக் கப்பல்களையும் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் தாக்கிப் பெருத்த சேதம் விளைவித்தன. நேச நாடுகளின் கப்பல்களையும் ஜெர்மனியர் விட்டுவைக்கவில்லை, எம்டன் (Emden) என்ற புகழ்பெற்ற ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பலானது ஐக்கியப் பெருங்கடலிலும், பசிபிக் பெருங்கடலிலும்,

அட்லாண்டிக் பெருங்கடலிலும் பல கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தது.

ஃபிரான்சின் உதவியுடன் பிரிட்டிஷ் கப்பற்படை ஜெர்மனியக் குடியேற்றங்களான டோகோலாந்து (Togoland), காமரூன் (Camaroon) ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றியது. ஆங்கிலேயரின் சார்பில், தென்ஃபிரிக்கத் தளகர்த்தர்களான போத்தா, ஸ்மட்ஸ் என்பார் ஜெர்மனிக்குச் சொந்தமான தென் மேற்கு ஆஃபிரிக்காவைக் கைப்பற்றிக்கொண்டனர்.

தூரக்கிழக்கிலும், (far east) ஜெர்மனிக்கு உடைமையான பசிபிக் தீவுகளையும், கியாசௌ என்ற துறைமுகத்தையும், ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டதால், ஜெர்மனி பொறுமையை இழந்து நீர்மூழ்கிக்கப்பல் தாக்குதல்களை இன்னும் அதிகமாக்கியது.

இங்கிலாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளைச் சுற்றியுள்ள கடற்பிரதேசத்தை இராணுவ மண்டலமென (military zone) அறிவித்து, அம் மண்டலத்துள் புகுந்த கப்பல்களைத் தாக்க ஜெர்மனி முற்பட்டது. அதன் விளைவாகத்தான் லூசிடானியா (Lousidania) என்ற பெரும் பிரிட்டிஷ் கப்பல் ஐரிஷ் கடற்கரை ஓரத்தில் மூழ்கடிக்கப்பட்டது. அக் கப்பலில் இருந்த 100 அமெரிக்கர்கள் இறந்ததனாலேயே அந்த நாடும் ஜெர்மனிக்கு எதிராகப் போரில் இறங்க முடிவு செய்தது. நீர்மூழ்கிப் போரில் 'யு' படகுகளையும் (U boats) உபயோகித்த ஜெர்மனி 1917 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பல பிரிட்டிஷ், அமெரிக்கக் கப்பல்களை மூழ்கடித்தது. அதனால், பிரிட்டனுக்கு உணவுப் பொருள் கொண்டுவருவதும் தடைப்படலாயிற்று. உணவுப்பொருள்களை பிரிட்டனுக்கு ஏற்றிவரும் சரக்குக்கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் போர்க்கப்பல்களை ஆங்கிலேயர்கள் துணைக்கு ஏவினர். அதனால், பிரிட்டிஷ் கப்பற்படையின் பாதுகாப்புடன் வியாபாரக் கப்பல்கள் இங்கிலாந்தை யடைய முடிந்தது. ஒரு சில வியாபாரக் கப்பல்கள் ஜெர்மனியர்களால் அழிக்கப்பட்டபோதும், பிரிட்டிஷ் தீவுகள்மீது ஜெர்மனியர் இட்டிருந்த முற்றுகை எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. ஆனால், பிரிட்டிஷார் வெற்றிகரமாகக் கடல் முற்றுகையிட்டு ஜெர்மனிக்குள் எந்தப் பொருளும் செல்ல விடாமல் தடுத்தனர்.

போரின் இறுதிக்கட்டம் (1918)

நேச நாடுகளின் சார்பில் போரில் இறங்கியிருந்த அமெரிக்கர் தம் வீரர்களை ஐரோப்பாவுக்கு அனுப்புவதற்கு முன்னரே,

அதற்கேற்பச் செயல்பட ஆரம்பித்தனர். ரஷ்யாவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை யொட்டி, கிழக்குப் போர் முனையி லிருந்த படையினர் மேற்கு முனைக்கு ஜெர்மனியால் அனுப்பப் பட்டனர். தம் முழுப்பலத்துடன் ஜெர்மனியர் தாக்குதல் களைத் தொடங்கினர்.

மார்ச் மாதத்தில் (1918) பிரிட்டிஷ் படைகளை ஊடுருவி ஜெர்மனியர் ஆமியன்ஸ் (Amiens) நகரை நெருங்கினர்; ஏப்ரல் மாதத்தில் இப்ரஸ் நகரையும் நெருங்கினர். மே மாதத்தில், மாரின் நதியைக் கடந்து, பாரிஸை நோக்கி முன்னேறலாயினர். ஆயின், அதற்குப் பின்னர் ஜெர்மனியரின் தோல்விப் படலம் ஆரம்பமாயிற்று. ஏராளமான தளவாடங்களுடன் அமெரிக்கத் துருப்புகள் வந்து குவிந்தன. அதுமட்டுமன்றி பிரிட்டிஷ் முற்றுகையினால் ஜெர்மன் படையினருக்கு அவசியமான எப் பொருளும் கிடைக்க முடியாமல் போயிற்று. ஜெர்மனிய வீரர் களின் உறுதி குலைந்திருந்த அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஆங்கில-அமெரிக்கப் படையினர் மற்ற நேச நாட்டுத் துருப்புகளோடு சேர்ந்து, ஃபிரான்சிலிருந்தும், பெல்ஜியத்தி லிருந்தும் ஜெர்மனியர்களை விரட்டியடித்தனர். இறுதிக்கட் டத்திலே தோல்விகளை அடுத்தடுத்துப் பெற்றுவந்த ஜெர்மனியில் அதற்கிடையே ஒரு கலகம் தோன்றி, கெய்சர் வில்லியத்தை முடிதுறக்கச் செய்தது. 1918ஆம் ஆண்டு அக்டோபரில் ஜெர்மனியில் ஏற்பட்டிருந்த குடியரசு நேச நாடுகளோடு சமாதானம் செய்துகொண்டது.

தன் வெற்றிகரமான கடல் முற்றுகையாலும் கடைசிக் கட்டத்தில் நடந்திருந்த மும்முரமான தரைச்சண்டைகளாலும், நேச நாடுகளோடு சேர்ந்து இறுதியில், ஜெர்மனியைப் பணிய வைத்த பெருமையை இங்கிலாந்து பெற்றது.

இத்தாலியர்களுடன் சேர்ந்து பிரிட்டிஷ் படையினர் பியாவ் (Piave) என்னுமிடத்தில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்துப் பணியவைத்தனர். அதைத் தொடர்ந்து, ஆஸ்திரியா-ஹங் கேரியும் சமாதானத்திற்கு இணங்கின.

கிழக்குப் போர்முனையில் துருக்கியர்களைத் தோற்கடித்து, பிரிட்டிஷார், டமாஸ்கஸ் நகரையும், கான்ஸ்டாண்டிநோபிள் பட்டணத்தையும் கைப்பற்றித் துருக்கிய சுல்தானையும் பணிய வைத்தனர். ஒரு மில்லியனுக்குமேல் தன் போர் வீரர்களைக் களத்திலே பலிகொடுத்து, இன்னொரு மில்லியன் வீரர்களின் அங்கங்களை இழக்க உலகப் போரில் அச்சு நாடுகள் தோற்கடிக்கப் பட்டதில் பிரிட்டன் பெரும் பங்கு பெற்றிருந்தது.

(ஆ) டேவிட் லாயிட் ஜார்ஜ்
(David Lloyd George)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க வரலாற்றில் தனி இடம் பெற்றிருக்கும் பேரமைச்சர் லாயிட் ஜார்ஜ் ஆங்கில மக்களின் போற்றுதலுக்குரியவர்.

ஆரம்ப வாழ்க்கை

வெல்ஷை (Welsh)ச் சேர்ந்த ஓர் ஏழைப்பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்த லாயிட் ஜார்ஜ், தம் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவரானதால் அவர்தம் தாய்க் குடும்பத்தினரால் சீர்நார்வன் (Caernarvon) என்ற கிராமத்தில் வளர்க்கப்பட்டார். ஏழ்மையான சூழ்நிலையில் வளர்ந்துவந்தபோதும் தம் கடுமையான உழைப்பினால் கல்வி பயின்று, சட்ட ஆலோசகராக (Solicitior) ஆகக்கூடிய தகுதியினைப் பெற்றிருந்தார். மற்றவர்களை உணர்ச்சி வசப்படுத்தும்வகையில் பேசும் தனித்திறமையினைப் பெற்றிருந்த லாயிட் ஜார்ஜுக்கு மதப்பிரசங்கியாகச் சேவை செய்யவேண்டுமென்ற ஆசை ஆரம்பத்தில் இருந்தது. அவருக்கிருந்த சொல்வாற்றலுக்கு, லாயிட் மதப்பிரசங்கியாகமட்டும் மாறியிருப்பாரானால் ஒரு தனி மதப்பிரிவை (sect) அவர் தொடங்கியிருக்கக் கூடும். ஆனால், தம்மை அரசியல் வாழ்க்கைக்கு லாயிட் அர்ப்பணித்துக்கொண்டார். முற்போக்குக் கருத்துகளை அவர் கொண்டிருந்தபோதிலும், நாட்டுக் கனவான்களின் ஆதிக்கத்தை வெறுத்தவராயினும், தீவிர சோஷலிசக் கொள்கையை லாயிட் வெறுப்பவராக இருந்தார்.

அரசியல் வாழ்க்கை

1906ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் விபரல் கட்சியினர் அமோகவெற்றியைப் பெற்றிருந்தனர். அவர்களில் லாயிட்டும் ஒருவராவர். கேம்பல் பானர்மேனின் தலைமையில் அக்கட்சியினர் மந்திரிசபை அமைத்தபோது லாயிட்டுக்கும் வாணிகக் குழுவின் தலைவர் பதவி (President of the Board of Trade) கொடுக்கப்பட்டிருந்தது. வாணிகக் குழுவின் தலைவரான லாயிட் ஜார்ஜ் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றில் இலண்டன் துறைமுக அதிகாரத்தைப் பற்றி (Port of London Authority) அமுலாக்கப்பட்டிருந்த சட்டம் குறிப்பிடத்தக்கது.

கேம்பல் பானர்மேனின் திடீர்மரணத்தைத் தொடர்ந்து 1908-ல் ஆஸ்க்வித் என்பார் புது அமைச்சரவையை அமைத்தார்;

தம் கடும் உழைப்பால் உயர்ந்திருந்த லாயிட் ஜார்ஜுக்குக் கருவூலத் தலைவர் பதவி கொடுக்கப்பட்டது. நாட்டு மக்களின் நன்மைக்கு உகந்ததாகக் கொண்டுவரவேண்டிய சீர்திருத்தச் சட்டங்களால் அரசுக்கு நிறைய செலவாகுமென எதிர்பார்க்கப் பட்டது. அதுமட்டுமன்றி, ஜெர்மனியால் கட்டப்பட்டுவந்த ஒவ்வொரு 'டிரெட் நாட்' கப்பலுக்கும், இங்கிலாந்தில் இரண்டு தயாரிக்கப்பட வேண்டுமென மக்கள் கேட்டுவந்தனர். ஆக, அரசாங்கத்திற்கு அச் செலவுகளைச் சரிக்கட்ட 200 மில்லியன் பவுன்கள் தேவைப்பட்டன. லாயிட் ஜார்ஜ் அப் பொறுப்பை ஏற்று அதற்கேற்பத் தம் புகழ்பெற்ற வர்வுசெலவுத் திட்டத்தைக் (1909) காமன்ஸ் சபையில் தாக்கல் செய்தார்.

அந்தப் பட்ஜெட்டில், புகையிலை, மதுபான வகைகள்மீது அதிக வரிகள் போடப்பட்டன. மதுபான அனுமதிச்சீட்டுகளின் கட்டணமும் (Licencing fee) உயர்த்தப்பட்டது. மரணவரி, வருமானவரி, அதற்கு மேல்வரி போன்றவைகளும் அப் பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்தன. இத்தகைய வரிகளால் அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப் பட்டது. அதில் ஒரு பகுதியை முதியோர் உதவிப்பணத் திட்டத்திற்கும் (Old Age Pension Scheme), வேலைவாய்ப்பு தேடித் தரும் நிலையங்களை ஏற்படுத்துவதற்கும், மோட்டார்ப் போக்குவரத்துக்கு உதவியாகப் பாதைகளைச் செப்பனிடுவதற்கும் (பாதை நிதி) லாயிட் ஜார்ஜ் செலவிட நினைத்தார்.

பாமர மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட அத் திட்டத்தை லாயிட் 'மக்களின் பட்ஜெட்' (Peoples' Budget) எனப் பெருமையுடன் அழைத்தார்.

கனி வளங்களாலும், மக்கள் குடியேற்றத்தாலும், போக்குவரத்து வசதியாலும் சில இடங்களிலே நிலங்களின் மதிப்பும், (விலை) பன்மடங்காகப் பெருகியிருந்தது. 15 ஷில்லிங் 6 பென்ஸ் பெறுமான ஓர் ஏக்கர் நிலத்தில் 10 பவுன்கள் குத்தகை கேட்கப் பட்டதை லாயிட் ஜார்ஜ் ஒரு மேற்கோளாகக் காமன்ஸ் சபையில் எடுத்துக்காட்டியிருந்தார். சில இடங்களிலே இருந்த நிலங்களின் விலை முப்பது, நாற்பது மடங்காகப் பெருகியிருந்தது. அதற்கேற்ப, நிலச் சொந்தக்காரர்களின் வருமானமும் கூடியிருந்தது. உழைப்பு ஏதுமின்றித் தாமாக அவர்கள் பெற்ற வருமானத்தில் 20 சதவிகிதத்தை அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டுமென லாயிட் ஜார்ஜ் ஒரு திட்டத்தையும் அப் பட்ஜெட்டில் சேர்த்திருந்தார்.

மக்களின் நன்மையைக் கருதி, கொண்டுவரப்படவேண்டிய சீர்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்த அரசுக்கு, அதிக வருமானம் தேவைப்படுகிறதென்றும் அதற்காகவே பல புதிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், லாயிட் காமன்ஸ் சபையில் எடுத்துரைத்தார். கன்சர்வேடிவ் கட்சியாளர் தங்களுக்குள் 'பட்ஜெட் எதிர்ப்புச் சங்கத்தை' (Budget Protest League) அமைத்துக்கொண்டு, லாயிட் ஜார்ஜின் வரவு-செலவுத் திட்டம் காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்படாமலிருக்கத் தீவிர முயற்சிகள் செய்தனர். ஏப்ரல் மாதத்தில் (1909) நிறை வேற்றப்பட்டிருக்கவேண்டிய அந்தப் பட்ஜெட்டானது ஜூன் மாதத்தில்தான் நிறைவேறியிருந்தது. லாயிட் ஜார்ஜ் தம் வாதத்திறமையால் காமன்ஸ் சபையில் அப் பட்ஜெட்டுக்குப் பெரும்பான்மையான ஆதரவைத் தேடிக் கொடுத்தார்.

பொதுமக்கள் சபையில் நிறைவேறிய பட்ஜெட் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டபோது, பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. லாயிட் ஜார்ஜை ஒரு பேராசை பிடித்த கொள்ளைக்காரனுக்கு ஒப்பிட்டு, லான்ஸ் டௌவுன் பிரபு (Lord Lansdown) சாடினார். மக்களின் சொத்துரிமை பாதிக்கும் அப் பட்ஜெட்டை ஏற்றுக் கொள்வதில்லையென அச்சபையினர் முடிவு செய்தனர்.

தம் பட்ஜெட்டை நிராகரிப்பதன்மூலம் ஒரு புரட்சிக்குப் பிரபுக்கள் சபையினர் வித்திடுவதாகவும் மேல்சபையில் குழுமி யிருக்கும் 500 பிரபுக்கள் காலப் போக்கினை உணராது லட்சக்கணக் கான மக்களின் விருப்பத்தை நிராகரிப்பது பேராபத்தில் அவர் களைச் சிக்கவைத்து விடுமெனவும் லாயிட் எச்சரித்தார். இருப் பினும் கன்சர்வேடிவ் கட்சியினர் பெரும்பான்மை பெற்றிருந்த பிரபுக்கள் சபை பெரும்பான்மையான வாக்குகளால் பட் ஜெட்டை நிராகரித்தது.

அதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் ஏற்பட்டிருந்த நிகழ்ச் சிகள் வரலாற்றுச் சிறப்புப் பெற்றவைகளாயின. பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியத் தைத் தேர்தல் பிரச்சினையாக வைத்து நாட்டின் இரு பொதுத் தேர்தல்கள் (1910-1911) நடத்தப்பட்டன. அதில் பெருவாரி யாக வெற்றி பெற்ற லிபரல் கட்சியினர் இறுதியில் பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் குறைக்கும்வகையில் ஒரு பாராளு மன்றச் சட்டத்தை (1911) நிறைவேற்றியிருந்ததை நாம் ஏற் கெனவே படித்தோம்.

நாட்டிலே காணப்பட்ட இன்னல்களை எதிர்த்துப் போராட லாயிட் ஜார்ஜினால் கொண்டுவரப்பட்டிருந்த பட்ஜெட், பிரபுக்கள்

சபையின் அதிகாரங்களை எதிர்த்துப் போராடவும் உதவியிருந்தது.

பாராளுமன்றச் சட்டப்படி (1911) லாயிட் ஜார்ஜின் பட்ஜெட் காமன்ஸ் சபையில் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களில் நிறைவேறிவிட்டதால், அது பிரபுக்கள் சபைக்குப் போகாமலேயே அமலுக்கு வந்தது.

ஆஸ்க்வித் அமைச்சரவையின் கருவூலத் தலைவரென்ற பொறுப்பில் 1911-ல் லாயிட் ஜார்ஜ் தேசியக் காப்புறுதிச் சட்டத்தைக் (National Insurance Act) கொண்டுவந்தார். அச் சட்டத்தின் முதல் பகுதி ஆரோக்கியத்தைப் (health) பற்றியதாக இருந்தது. ஆண்டொன்றுக்கு 160 பவுன்களுக்குக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் அக் காப்புறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். இன்சூர் செய்துகொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் மாதச் சந்தாவாக நான்கு பென்னிகளை வழங்கவேண்டும்; முதலாளிகளும், அரசும் சேர்ந்து ஐந்துபென்னிகளை வழங்குவர். தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டபோது, அந் நிதியிலிருந்து அவர்களுக்கு உதவி கொடுக்கப்பட்டது. தொழிலாளிக்கு இலவச மருத்துவ வசதியும் கொடுக்கப்பட்டது. அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட தொகையை ஊதியமாக ஒரு நோயாளிக்கு இவ்வளவென்று, அத் திட்டத்தில் பணிபுரிந்த மருத்துவர்களுக்கு வழங்கியது. 14 மில்லியன் தொழிலாளிகள் மேற்சொல்லப்பட்ட திட்டத்தினால் பயன் பெற்றனர். அச் சட்டத்தின் அடுத்த பகுதி வேலையின்றியிருந்த (unemployed) தொழிலாளர்களுக்குக் காப்பளித்தது. 2½ மில்லியன் தொழிலாளிகள், ஆரம்பத்தில் காப்புறுதிச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டனர். அத் திட்டத்தில் சேர்ந்திருந்த தொழிலாளிகள் நான்கு பென்னிகளை மாதச் சந்தாவாக வழங்க, முதலாளிகளும் அரசும் தானமாக ஐந்து பென்னிகளைக் கொடுத்தனர். இரண்டையும் சேர்த்து இன்சூரன்ஸ் நிதி திரட்டப்பட்டது. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களும், அத் திட்டத்தில் சேர்ந்திருந்தவர்களும் ஏதோ காரணத்தினால் வேலையை இழக்க நேரிட்டபோது, அந் நிதியிலிருந்து வாரமொன்றுக்கு ஏழு ஷில்லிங் உதவிப் பணமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

தொழிலாளர்கள் பொது நன்மைக்காகக் கொண்டுவரப்பட்ட அக் காப்புச் சட்டம் லாயிட் ஜார்ஜை ஓர் ஏழைபங்காளர் என்பதை எடுத்துக் காட்டியது.

லாயிட் ஜார்ஜ் ஓர் அமைதிப்பிரியர். பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் உறவுநிலை சீர்கெட்டு வந்த அச் சமயத்திலும் லாயிட்

அமைதியைக் கோருகின்ற குழுவின் தலைவராக விளங்கினார். இருப்பினும் மொராக்கோ நெருக்கடியின்போது (1911), ஜெர்மனி தன் இரு பீரங்கிக் கப்பல்களை அகெடிர் துறைமுகத்திற்கு அனுப்பியிருந்தபோது, மேன்ஷன் மாளிகையில் (Mansion House) லாயிட் ஆற்றிய சொற்பொழிவு கெய்சரையும் திகைக்கவைத்தது.

'பிரிட்டனை ஒரு பொருட்டாக நினைக்காது மற்ற நாடுகள் (ஜெர்மனி) புறக்கணித்ததால், மானத்தை அடகு வைத்து நாட்டிற்கு அமைதியைத் தேடிக் கொடுக்கவேண்டிய அவசியமே இல்லை' என்றும், 'அவ்வித அவமானத்தை நமது நாட்டைப் போன்ற ஒரு பெரிய நாடு சகித்துக் கொள்ளமுடியாது. அமைதிக்காக எவ்வித தியாகங்களையும் செய்யத் தாம் தாயாரென்றாலும், இங்கிலாந்தின் நலன்கள் பாதிக்கப்படும் அமைதி அது என்றால், அந்த அமைதி தம் நாட்டுக்குத் தேவையில்லாதது' எனவும் லாயிட் ஜார்ஜ் சொல்லியிருந்தது இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கையை பிரதிபலிப்பதாக இருந்தது.

1914ஆம் ஆண்டு முதல் உலகப் போர் தொடங்கியது. நேச நாடுகளோடு சேர்ந்து இங்கிலாந்தும், போரில் கலந்து கொண்டது. பிரிட்டன் தன் கவனத்தைக் கிழக்குப் போர் முனையில் (Eastern Front) செலுத்தி டார்டனல்ஸ், கான்ஸ்டான்டிநோபிள் பட்டணங்களைக் கைப்பற்றித் துருக்கியைப் பணிய வைக்க வேண்டுமென்று லாயிட் ஜார்ஜ் கூறிவந்ததால், அவரை மற்ற காபினெட் அமைச்சர்கள், 'கிழக்கித்தியர்' (Easterner) எனக் கிண்டல் செய்தனர். ஆயின், அவர்தம் யோசனையை அப்போது கடற்படை இலாகாவின் முதற்பிரபுவாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் (புகழ்பெற்ற பிற்காலப் பிரதமர்) ஆதரித்ததைத் தொடர்ந்து 1915-ல் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் துருக்கியப் பேரரசு தாக்கப்பட்டது.

லாயிட்டும் முதலாம் உலகப்போரும்

போரைத் திறம்பட நடத்த நாட்டிலிருந்த பலதிறப்பட்டவர்களின் ஆதரவு தேவையென்ற கொள்கையின் அடிப்படையில் 1915-மே மாதத்தில் ஆஸ்க்வித் தம் லிபரல் அமைச்சரவையினை ஒரு கூட்டு மந்திரிசபையாக (Coalition Ministry) மாற்றினார். மெக்கன்னா என்ற கன்சர்வேடிவ் கட்சிக்காரர் கருவூலத் தலைவராக அமர்த்தப்பட்டதால், அப் பொறுப்பை அதுவரை வகித்துவந்த லாயிட் ஜார்ஜுக்கு யுத்த தளவாடங்களையும், வெடி மருந்துகளையும் (munitions) தயாரிக்கும் இலாகாவைக் கட்டுப்படுத்தக் கூடிய புதிய அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது.

யுத்த தளவாட அமைச்சராக லாயிட் சிறந்த போர்ச் சேவையைச் செய்திருந்தார். அவர் பதவி ஏற்றிருந்த நேரத்தில் போர் மும்முரமாக நடைபெற்றுவந்தது. ஆயின், போர் முனைகளிலே பிரிட்டிஷ் துருப்புகளுக்கு ஆயுதங்களும், வெடி மருந்தும், குண்டுகளும் பெரிய பீரங்கிகளும் அதிகமான அளவுக்குத் தேவைப் பட்டன. குறையினைப் போக்க, லாயிட் தீவிரமாகச் செயல்பட ஆரம்பித்தார். பிரபல தொழிலதிபர்களையும், தேர்ச்சி பெற்ற நிபுணர்களையும் கலந்தாலோசித்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தளவாடத் தயாரிப்புத் தொழிலைப் பெருக்கினர். அத் தொழிற்சாலைகளை அடிக்கடி நேரில் சென்று பார்வையிட்டு, அதி கமான அளவுக்கு ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதற்கு ஊக்கமளித் தார். வேலை மந்தப்படும் காரியங்களில் இறங்காதபடி தொழிற் சங்கங்களைத் தம் குறிக்கோளுக்கு இசைய வைத்தார். வேலைக்குப் போதிய ஆட்கள் இல்லாத குறையைப் போக்க, பெண்களைத் தொழிலில் அமர்த்திக்கொள்ளும்படி செய்தார். அங்ஙனமாக மிகக்குறுகிய காலத்தில் தம் கடும் முயற்சியால் தளவாடப் பற்றுக் குறையை லாயிட் போக்கினர். தேவைக்கு அதிகமாகவே போர் முனைகளுக்குத் தளவாடங்களைத் தம் படையினருக்கும் நேச நாட்டு வீரர்களுக்கும் இங்கிலாந்திலுல் அனுப்பமுடிந்தது.

கிச்சனர் பிரபு 1916ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இறந்து விடவே, லாயிட் போர் அமைச்சர் பதவியை ஏற்றார். போர்க் காலப்பணிக்குப் பெண்களை அதிகமாகப் பயன்படுத்திக்கொள் ளும்படி லாயிட் யோசனை தெரிவித்ததைத் தொடர்ந்து, பல துணை வேலைகளுக்கும், மீட்புச் சேவைகளுக்கும் பயன்படும்படியாகப் பெண்கள் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டனர், அலுவல கங்களிலே, எழுத்தாளர்களாகவும், தட்டெழுத்தர்களாகவும் சேர்க்கப்பட்டனர். காவற்படையிலும் (Police Force), நர்ஸ் வேலையிலும் பெண்கள் அமர்த்தப்பட்டனர். பின்னர், தரைப் படை, கடற்படை, விமானப்படைப் பிரிவுகளிலும் இன்னும் பல சில்லறைப் பணிகளிலும் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட் டனர்; லாயிட் ஜார்ஜின் முயற்சியால் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்ததோடு, சில்லறை வேலைகளிலிருந்து விடுபட்ட ஆண்கள் போர்க்காலப்பணியில் தீவிர கவனம் காட்ட முடிந்தது.

லாயிட் பிரதமராதல்

போரை நடத்தும் பணியில், அடிக்கடி, பிரதமரான ஆஸ்க் வித்துக்கும், லாயிட் ஜார்ஜுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு வந்தது. மேற்குப் போர் முனையில் சோமி (Somme) என்னு மிடத்தில் ஜெர்மனியர்களோடு (1916, ஜூலை-நவம்பர்) நடந்த

அகழிச் சண்டையில் 400,000 பிரிட்டிஷ் வீரர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு ஹெய்க் (Haig) என்ற பிரிட்டிஷ் தளபதியின் பிடிவாதமே காரணமெனப் பல ஆங்கிலேயர்கள் நினைத்தனர். அத்தனை உயிர்ப்பலிக்குப் பின்னர் எஞ்சிய பிரிட்டிஷ் படையினர் கைப்பற்றியிருந்த சிறு நிலப்பகுதி, ஒன்றுக்கும் உதவாததாக இருந்தது. ஆங்கிலப் போரை நடத்த அருகதையற்றவரென்பதற்குச் சோமி சண்டையே ஒரு சிறந்த உதாரணமென லாயிட் சாடினர். போரைச் சிறந்த முறையில் நடத்த வேண்டுமெனின் அமைச்சரவையின் தலைமையை மாற்றி, புதுப்பிரதமரை ஏற்க வேண்டுமென லாயிட் தம் யோசனையைத் தெரிவிக்க, மற்ற காபினெட் அமைச்சர்களும் அதை ஆமோதித்தனர். ஆனால், ஆஸ்க்வித் இராஜினாமாச் செய்யத் தயங்கிவந்தார். லாயிட் ஜார்ஜ் தம் செல்வாக்கினால் லிபரல் கட்சியினரையும் தொழிற் கட்சியினரையும் கன்சர்வேடிவ் கட்சியினரையும் அவர்தம் கருத்துக்கு ஆதரவாக மாற்றியிருக்க, இறுதியில் ஆஸ்க்வித் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து 1916 (டிசம்பர்) லாயிட் ஜார்ஜ் பிரதமரானார். அவருடைய அமைச்சரவையில் போனர்லா (Bonarlaw) பால்ஃபர் (Balfeour) போன்ற கன்சர்வேடிவ் கட்சியினரும், தொழிற்கட்சியைச் சேர்ந்த ஹெண்டர்சன் (Henderson) என்பவரும், லிபரல் கட்சியினரான வின்ஸ்டன் சர்ச்சில் என்பவரும் இடம் பெற்றிருந்ததால், அது ஒரு கூட்டு மந்திரி சபையாக இருந்தது. லாயிட் ஜார்ஜின் தலைமையில் அது போர்க்காலக் காபினெட்டாகப் பணியாற்றியது. முதலாம் உலகப் போரை இங்கிலாந்தின் சார்பில் தொடர்ந்து நடத்தவேண்டிய பொறுப்பை லாயிட் ஜார்ஜும், அவர்தம் சகமந்திரிகளும் ஏற்றனர்.

லாயிட் ஜார்ஜ் தம் கூட்டு அமைச்சரவையை அமைத்ததைத் தொடர்ந்து லிபரல் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது. பதவி இழந்த ஆஸ்க்வித்தும் அவர்தம் செல்வாக்கு மிகுந்த சகாக்களும் (சர் எட்வர்ட் கிரே உள்பட) லாயிட் ஜார்ஜைத் தங்களின் அரசியல் எதிரியாகக் கருத ஆரம்பித்ததால் தம் கூட்டு அமைச்சரவைக்கு கன்சர்வேடிவ், தொழிற்கட்சியினரின் ஆதரவை லாயிட் பெறவேண்டியிருந்தது. லிபரல் கட்சியில் குறைந்த எண்ணிக்கையினரே பிரதமரை ஆதரித்தவர்களாக இருந்தனர். மூன்று கட்சியினரின் அபிமானத்தைப் பெற்றிருந்த லாயிட் ஜார்ஜ் நாட்டின் தேசியத்தலைவராக விளங்கினர்.

போர்க்காலப் பிரதமராக லாயிட் பதவி ஏற்பதற்குச் சில நாள்களுக்கு முன்னர் ஓர் அமெரிக்கம் பத்திரிகையாளர்க்குப் பேட்டி கொடுத்திருந்தார்.

'எத்தனை காலத்திற்கு இப் போர் நீடிக்கும்?' என்று கேட்கப் பட்ட கேள்விக்கு, காலத்தைக் கணக்கிடக் கடியாரமும் காலண் டரும் பிரிட்டிஷ் படையினரிடம் இல்லை' என்றும், 'என் அக்கறை போரின் வெற்றிகரமான முடிவிலேதவிர, காலக்கணக்கில் இல்லை' என்றும் பதில் கொடுத்திருந்தார். தொடர்ந்து, நெப்போலி யனைத் தோற்கடிக்க ஆங்கிலேயருக்கு 20 ஆண்டுகள் பிடித்திருந்த போதும், இப் போரை முடிக்க அத்தனை காலம் தேவையில்லை எனவும் சொல்லியிருந்தார். எத்தனை காலமானாலும் இப் போரில் வெற்றி கொள்வோம் என்று தம் பேட்டியை லாயிட் முடித் திருந்தார். லாயிட் ஜார்ஜின் மேற்கண்ட பதில், போரை வெற்றிகரமாக முடிக்கவேண்டுமென்ற அவரது திட நம்பிக்கை யைக் காட்டுவதாக இருந்தது.

போர்க்காலப் பிரதமராக லாயிட் ஆற்றிய பணி இங்கிலாந் தைப் பல சிக்கல்களிலிருந்து விடுவித்தது. பிரதமர் லாயிட் ஜார்ஜின் கவனத்தை முதலில் கவர்ந்தது நாட்டு உணவுப் பிரச்சினையே. 1917ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஜெர்மனி தன் நீர்மூழ்கிக்கப்பல் போரில் தீவிரம் காட்டத் தொடங்கியி ருந்தது. பிரிட்டனை நோக்கிச் சென்ற எல்லாக் கப்பல்களையும் ஜெர்மன் சப்மெரின்களும், படகுகளும் தாக்க ஆரம்பித்திருந்த தால் இங்கிலாந்துக்குள் உணவுப் பொருள் வருவதுகூடத் தடைப் பட்டது. அக்டோபர் மாதத்தில் (1917) ஆறு வாரத்திற்குப் போதுமான தானியங்களே பிரிட்டனின் இருப்பில் இருந்தன. உணவுப் பொருள்களை அமெரிக்காவிலிருந்தும், மற்ற அயல் நாடு களிலிருந்தும் உடனடியாக இறக்குமதி செய்யவில்லை யெனின் நவம்பரில் கடுமையான உணவுப்பஞ்சம் ஏற்படக்கூடிய நிலைமை யிருந்தது. சரக்குக்கப்பல்களை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் களிடமிருந்து பாதுகாக்கவேண்டி, லாயிட் ஒரு துணிகரமான புதிய திட்டத்தைக் கொண்டுவந்தார். அதன்படி பண்டங்களைப் பிரிட்டனுக்கு ஏற்றி வரும் சரக்குக் கப்பல்களுக்கு பிரிட்டிஷ் கடற்படை பாதுகாப்பு அளிக்கவேண்டுமென உத்தரவிடப்பட் டது. அந்தக் கன்வாய் (Convoy) முறை சாத்தியப்படாதென பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகள் முணுமுணுத்தபோதும் லாயிட் தளராமல் அவர்களை ஊக்குவித்து அத் திட்டத்தைச் செயற் படுத்தினர். 1917ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அக் கன்வாய் முறையினால் 88,000 நாவாய்கள் இங்கிலாந்தை அடைய முடிந்தது.

உணவுப் பொருள்களுக்கும், மற்ற அத்தியாவசியமான பொருள்களுக்கும் தட்டுப்பாடின்றி ஆங்கிலேயர்களுக்கு அப் பொருள்கள் கிடைத்தன. இருப்பினும், சில உணவுப் பொருள்

களில்-குறிப்பாக-உருளைக் கிழங்கில் பற்றாக்குறை தொடர்ந்து இருந்துவந்ததால் லாயிட் உணவுக் கட்டுப்பாட்டு முறையைக் (food ration) கொண்டுவந்தார். போர்க்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமென நினைத்து அவரால் கொண்டுவரப்பட்டிருந்த அக் கட்டுப்பாட்டு முறை, ஆங்கிலேயர்களைப் பஞ்சத்திலிருந்தும், பசியிலிருந்தும் காத்தது.

போரில் மிகுந்த அக்கறை காட்டிவந்த லாயிட் சில தோல்விகளைக் கண்டு அயராமல், இறுதி வெற்றியிலேயே குறியாக இருந்தார். அதிர்ஷ்டவசமாக நேச நாடுகளின் சார்பில் அமெரிக்காவும் போரில் இறங்கியது (1917 ஏப்ரல்). இறுதிப் போரை நேச நாடுகள் வெற்றியுடன் முடித்ததில் லாயிட் பெரும் பங்கு கொண்டிருந்தார். மேற்கு முனையில் ஜெர்மானியரின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டதல்லாமல், தாங்கள் கைப் பற்றியிருந்த ஃபிரான்சு, பெல்ஜியத்திலிருந்தும் ஜெர்மானியர் விரட்டப்பட்டனர்.

ஏற்கெனவே கண்டிருந்தபடி, அச்சு நாடுகளில் ஒன்றான பல்கேரியா லார்தார் களத்தில் (1919, செப்டெம்பர்) படுதோல்வியடைந்து, சமாதானம் கோரியது. கிழக்குப் போர் முனையில் துருக்கியும் அதே மாதத்தில் பணிந்தது. ஆஸ்திரியாவும் தோல்வியடைந்து (1919 அக்டோபரில்) சரணடைந்தது. கெய்சர் முடிதுறந்ததும் ஜெர்மனியும், போர் நிறுத்தத்திற்கு இசைந்தது. முதலாம் உலகப்போர் நேச நாடுகளுக்கு வெற்றியாக முடிந்தது.

போர்க்காலச் சேவைக்கு இராணுவத்தினரை உற்சாகப் படுத்தி, திறம்பட நடத்தியும், போர்க்காலத் தியாகத்திற்கு மக்களை உடன்படுத்தியும் லாயிட் தாம் ஒரு சிறந்த போரமைச்சரெனக் காட்டிக்கொண்டார்.

போரில் ஆர்வம் காட்டிவந்த அதே நேரத்தில் உள்நாட்டு விவகாரத்திலும் லாயிட் அக்கறை கொண்டிருந்தாரென்பதற்கு 1918-ல் கொண்டுவரப்பட்டிருந்த பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் சான்றாகும்.

பால்ஃபரின் காலத்தில் (1903) அரசியல் உரிமைகளைக் கோரி, பெண்கள் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தனர். பாங்கர்ஸ்டு (Mrs. Pankaurst.) என்ற பெண்மணியும், அவர் தம் மகள் கிறிஸ்டாபெல் (Christable) என்பவரும் சேர்ந்து, அந்த ஆண்டில் பெண்களின் அரசியல் சமுதாய ஐக்கிய சங்க மொன்றை (Women's Political and Social Union) ஏற்படுத்தியிருந்தனர். அச் சங்கத்தைச் சேர்ந்த சில பெண்கள் தங்களை சஃபரஜெட் (Suffragette)

என அழைத்துக்கொண்டு, அரசியல் உரிமைகளைக் கோரிப் பல பலாத்கார முறைகளில் இறங்கியிருந்தனர். அப்போதைக்கு அவர்களின் கிளர்ச்சி அடக்கப்பட்டிருந்தும், பெண்களின் போராட்டத்தில் நியாயமிருந்ததைப் பின்னர்ப் பலர் அறியலா யினர். அவர்களில் பிரதமர் லாயிட் ஜார்ஜும் ஒருவர். போர்க் காலத்தில் பெண்கள் பல துறைகளில் ஆற்றிய பணியை மெச்சி, 30 வயதுக்கு மேற்பட்ட பெண்டிர் அனைவருக்கும் முதல் முறை யாக வாக்குரிமை வழங்கப்பட்டது. அதே சட்டத்தின்படி இருபத் தொரு வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டது. அச் சட்டத்தின்படி, ஒன்பது மில்லியன் பெண்வாக்காளர்கள் உள்பட, பதின்மூன்று மில்லியன் புது வாக் காளர்கள் நாட்டிலே உருவாக்கப்பட்டனர். ஜனநாயக முறை யில் பிரிட்டன் பூரணத்துவம் பெறுகின்றதென்பதை அச் சட்டம் எடுத்துக் காட்டியது.

பேரரசின் வளர்ச்சியிலும் லாயிட் ஆர்வம் காட்டலானார். இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கவேண்டுமென வலியுறுத் தியிருந்த மான்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையை (Montagu-Chelmsford Report, India) ஏற்றுக்கொண்டு 1919-ல் கொண்டு வரப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டத்திற்கும் (Government of India Act) லாயிட் ஜார்ஜ் கர்ரணராக இருந்தார். அண்ணல் காந்தியாரின் தலைமையில் செயல்பட்டுவந்த இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளை அச் சட்டம் திருப்திப்படுத்த வில்லை என்றாலும், அரசாங்கப் பொறுப்புகளையும் ஒரு சில அரசியல் உரிமைகளையும், பாராளுமன்ற ஆட்சி முறையினையும், இந்தியர் களுக்குப் படிப்படியாக அளிப்பதாக அச் சட்டம் அமைந்தது.

போரை வெற்றியுடன் நடத்தியிருந்த லாயிட் ஜார்ஜ் 1918-ல் நடைபெறவேண்டிய தேர்தலுக்குத் தம்மைத் தயா ராக்கிக்கொண்டார். போர்க்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த கட்சிகளின் கூட்டைத் தொடர்ந்திருக்கச் செய்யவேண்டுமென்றே லாயிட் நினைத்தார். ஆயின், தொழிற்கட்சிக் கூட்டிலிருந்து விலகி, தனியாகத் தேர்தல் களத்தில் குதித்தது. ஆஸ்க்வித் தலைமையை ஏற்றுக்கொண்டிருந்த லிபரல் கட்சியினரும் கூட்டுக் கெதிராகத் தேர்தலில் இறங்கினர். கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரான போனர்லாவும், லிபரல் கட்சியின் தலைவரான லாயிட் ஜார்ஜும் தங்களுக்குள் ஓர் உடன்பாடு செய்துகொண்டு கூட்டுக் கட்சியினரின் சார்பிலே போட்டியிட்ட அபேட்சகர் களுக்குத் தாங்கள் இருவரும் கையெழுத்திட்ட அடையாளச் சீட்டுகளைக் கொடுத்திருந்தனர். அதையே 'சீட்டுத் தேர்தல்'

(Coupon Election) என ஆஸ்க்வித்தின் தலைமையில் பிரிந்து போயிருந்த லிபரல் கட்சியினர் கிண்டலாக அழைத்தனர்.

கூட்டணியின் அமைச்சரவை

அடுத்து நடைபெற்ற தேர்தலில் தம் குறிக்கோள்களாக லாயிட் அறிவித்திருந்தது உணர்ச்சியால் உந்தப்பட்ட ஆங்கிலேயரின் வாக்காக இருந்தது. கெய்சரைத் தூக்கிலிடவேண்டுமென்றும், போர்ச் செலவின் பெரும் பகுதியை ஜெர்மனியிடமிருந்து வசூலிக்கவேண்டுமென்றும், பிரிட்டனை வீரர்கள் வாழ்வதற்கேற்ப வளமிக்க நாடாக மாற்றியமைக்க வேண்டுமென்றும் கூட்டுக் கட்சியினரின் தேர்தல் பிரகடனமாக லாயிட் மேடைகளில் முழங்கினர். பழிவாங்கும் உணர்ச்சியின் வசப்பட்டிருந்த ஆங்கிலேய வாக்காளர்கள் லாயிட் ஜார்ஜின் கூட்டணிக்கு ஆதரவாக வாக்களித்தனர். கூட்டுக் கட்சியினர் (காமன்ஸ் சபையில்) 484 இடங்களைக் கைப்பற்றியிருந்ததால் லாயிட் ஜார்ஜ் மீண்டும் நாட்டின் பிரதமரானார் (1919).

லாயிட் ஜார்ஜும் பாரிஸ் மாநாடும்

முதல் உலகப் போரின் இறுதியில், ஐரோப்பாவில் சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டப் பாரிஸ் நகரில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம் மாநாட்டின் முக்கியத் தீர்மானங்களை யெல்லாம் பிரிட்டன், ஃபிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளான லாயிட் ஜார்ஜ், க்ளெமென்ஷோ, ஜனாதிபதி வில்ஸன் ஆகிய முப்பெரும் தலைவர்களே நிறைவேற்றினர். அம் மாநாட்டின் முக்கியப் பிரமுகராக லாயிட் ஜார்ஜே விளங்கியிருந்தார். ஏனெனில், வில்சனின் தாராளக் கொள்கைக்கும், க்ளெமென்ஷோவின் கெடுபிடிக் கொள்கைக்கும் இடையே சீர்தூக்கும் கோலாகத் தம் மிதமான கொள்கையினால் விளங்கினர். ஜனாதிபதி வில்ஸன் போர்களே இல்லாத ஒரு புதிய உலக அமைப்பைப்பற்றி இலட்சியக் கனவு கண்டுவந்தார். க்ளமென்ஷோ ஜெர்மனியின்மீது வஞ்சம் தீர்ப்பதிலேயே குறியாக இருந்தார். அவ் விருவரின் கருத்துகளையும் சமன் செய்யும் பெரிய பொறுப்பு லாயிட் ஜார்ஜுக்கு இருந்தது.

அம் மாநாட்டின் முடிவில் அச்சு நாடுகளின்மீது தனித் தனியாகச் சமாதான ஒப்பந்தங்கள் திணிக்கப்பட்டன. ஜெர்மனிக்கும், நேச நாடுகளுக்கும் ஏற்பட்ட வெர்சேல்ஸ் உடன்படிக்கையே மிக முக்கியமானது. அவ் வுடன்படிக்கையின்படி ஜெர்மனியின்மீது பல கடுமையான நிபந்தனைகள் திணிக்கப்

பட்டன. அல்சேஸ், லொரென் பகுதிகள் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கப்பட்டு ஃபிரான்சுக்குக் கொடுக்கப்பட்டன. யூபென், மால்மெடி பகுதிகளை பெல்ஜியத்திற்கும், மேற்குப் பிரஷ்யாவை போலந்திற்கும் தரவேண்டுமென்றும் ஜெர்மனி வற்புறுத்தப்பட்டிருந்தது. நிலக்கரிச் சுரங்கங்கள் நிறைந்திருந்த சார் (Saar) பள்ளத்தாக்கு ஜெர்மனியிடமிருந்து பறிக்கப்பட்டு, 15 ஆண்டுகள் அதை அனுபவிக்க ஃபிரான்சு அனுமதிக்கப்பட்டிருந்தது; ரைன்லாந்து பகுதியில் ஜெர்மனியப் படை வைத்திருந்தது தடுக்கப்பட்டது. டான்சிக் என்ற துறைமுகம் சர்வதேசக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளும் பிடுங்கப்பட்டிருந்தன. கிழக்கு ஆஃபிரிக்காவை பிரிட்டனும், பெல்ஜியமும், தென்மேற்கு ஆஃபிரிக்காவைத் தென்மேற்கு ஆஃபிரிக்க யூனியனும் (South Africa), டோகலாந்து, காமரோன் பிரதேசங்களை பிரிட்டனும், ஃபிரான்சும், கியாசௌ துறைமுகத்தை ஜப்பானும், நியூ கினியாவை ஆஸ்திரேலியாவும் தங்களின் பாதுகாப்புக்குட்பட்ட நாடுகளாகப் பெற்றிருந்தன. சீனு, தாய்லாந்து, எகிப்து, மொராக்கோ, லீபீரியா போன்ற பகுதிகளில் ஜெர்மனிக்கு இருந்த பிரத்தியேக உரிமைகள் ரத்து செய்யப்பட்டிருந்தன. ஜெர்மனியின் தரைப்படை 1,00,000க்கு மேற்பட்டு இருக்கக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டது. அதன் கடற்படைகள் முழுவதும் பறிமுதல் செய்யப்பட்டன. 660 கோடி பவுன்களை நஷ்ட ஈடாக ஜெர்மனி செலுத்தவேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட்டது. சுருக்கமாக ஜெர்மனி நாடானது கொடூரமாகப் பழிவாங்கப்பட்டது.

ஜெர்மனி, போரைத் தொடங்கியதில் நியாயமிருந்தது என நினைப்பவர்களே வெர்சேல்ஸ் உடன்பாடு, ஜெர்மனிமீது கடுமையான நிபந்தனைகளைத் திணித்தது என்று கூறுவர் எனவும், உடன்படிக்கையின் அம்சங்கள் கொடூரமானவை என்றும், ஜெர்மனி செய்த காரியங்களும் கொடூரமானவை எனவும், போரைத் தொடங்கிய ஜெர்மனியர்களுக்கு ஒரு படிப்பினையாகவும், மீண்டும் ஒரு போரை ஜெர்மனியர்கள் தொடங்காதிருக்க முன்னெச்சரிக்கையாகவும் அவ் வுடன்பாடு திணிக்கப்பட்டதே தவிர வெறும் பழிவாங்கும் எண்ணத்தில் அன்று என்றும் வெர்சேல்ஸ் உடன்பாட்டைப்பற்றி காமன்ஸ் சபையில் (1919) லாயிட் ஜார்ஜ் குறிப்பிட்டிருந்தார்.

ஐரோப்பிய சமாதான மாநாட்டில் கலந்துகொண்டு நாடு திரும்பியிருந்த லாயிட் ஜார்ஜின் கவனம் அயர்லாந்துப் பிரச்சினையில் திரும்பியிருந்தது.

லாயிட்டும் அயர்லாந்தும்

முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து ஐரிஷ் பிரச்சினையில் மீண்டும் சிக்கல் தோன்றியிருந்ததை ஏற்கெனவே படித்தோம். சின்ஃபெயின் கட்சியினர் 1918-ல் நடந்த பொதுத்தேர்தலில் பெருவெற்றி பெற்றுத் தனிப்பட்ட குடியரசு அரசாங்கத்தை நிறுவியிருந்தனர். பிரிட்டிஷ் பேரரசுக்கு அது ஒரு சவாலாக அமைந்திருந்ததால், இங்கிலாந்தின் அரசாங்கம் சில எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை நாம் பார்த்தோம். அதன் விளைவாக, அயர்லாந்தில் அமைதி கெட்டிருந்தது. அதைக் கண்ட லாயிட் ஜார்ஜ் 1921ஆம் ஆண்டில் சின்ஃபெயின் கட்சித் தலைவர்களுடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டார்.

அதன்படி, அயர்லாந்து இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தென் அயர்லாந்து தனிப்பட்ட சுயேச்சை நாடாகவும், வட அயர்லாந்து (அல்ஸ்டர்) தனி நாடாகவும் பிரிந்து டொமினியன் தகுதியில் பிரிட்டிஷ் பேரரசில் இருக்கலாமென லாயிட் அறிவித்திருந்தார். டி வாலரா என்ற ஐரிஷ் பெருந்தலைவர் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்திருந்தும் அவ் வேற்பாட்டை அப்போதைக்கு மற்ற ஐரிஷ் தலைவர்கள் ஒப்புக்கொண்டதன்பேரில் ஐரிஷ் பிரச்சினையில் தீர்வு காணப்பட்டது.

லாயிட் ஜார்ஜின் வீழ்ச்சி

லாயிட் ஜார்ஜ் தலைமையில் இங்கிலாந்து கூட்டு மந்திரி சபை, போரினால் ஏற்பட்ட பல பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாததாக இருந்தது. தமது தேர்தல் கால வாக்குறுதிகளின் படி, போர்க்களத்திலிருந்து நாடு திரும்பியிருந்த வீரர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியாமலும் வேலை கிடைத்த ஒரு சிலருக்கும் குடியிருக்க வீடுகள் கொடுக்க இயலாமலும் லாயிட் திணறினர். தல அரசாங்கத்திற்கும் வீட்டுச் சொந்தக்காரர் களுக்கும் சிறு சிறு வீடுகள் கட்டித்தர, வீட்டு நகரச் சீமைப்புச் சட்டத்தின்படி (Housing A Town Planning Act, 1919) அரசாங்கம் உதவிப்பணம் கொடுத்து வீட்டுப்பிரச்சினையைத் தீர்க்க முயன்றது. வேலை இல்லாதோருக்கு உதவிப்பணம் கிடைக்கும் படியாக ஒரு காப்புறுதிச் சட்டமும் (Unemployment Insurance Act, 1920) கொண்டுவரப்பட்டிருந்தது. இருப்பினும், அக் குறைகள் தீர்ந்தபாடில்லை.

போருக்கு முன் பிரிட்டிஷ் பொருள்களை வாங்கிவந்த நாடுகள், போர் முடிந்தவுடன் தத்தம் நாட்டுத் தொழிலை வளர்ப்பதில் அக்கறை கொண்டிருந்ததால் இங்கிலாந்திலிருந்து

வந்த பொருள்களின்மீது அதிக சுங்கவரிகளை விதிக்கலாயின. அதனால், விற்பனைப் பொருள்களில் சேதம் ஏற்பட்டு நாட்டின் வியாபார நிலைமை மந்தமடைந்திருந்தது.

போரின் முடிவில், அதுவரையில் தாம் நிலக்கரிச் சுரங்கங்களின்மீது வைத்திருந்த கட்டுப்பாட்டை அரசாங்கம் தளர்த்திவிட்டதால், சுரங்கச் சொந்தக்காரர்கள் வேலையாட்களின் கூலியைப் பெரிதும் குறைக்க முயன்றனர். அதனால், சுரங்கத் தொழிலாளர்கள் அதிருப்தியுற்று நாட்டின் சுரங்கங்களை அரசு தேசிய உடைமையாக்க வேண்டுமென வற்புறுத்த ஆரம்பித்தனர். அக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், பொது வேலைநிறுத்தம் செய்யப்போவதாகவும் மிரட்டினர். சுரங்கத் தொழிலாளர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் ஒரு கமிஷனை அமர்த்தியிருந்தபோது அரசினரால் குறைக்கப்பட்டிருந்த கூலியை எதிர்த்து இரயில்வேத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து நாட்டின் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தனர். அதிக அதிகாரங்களைப் பெற்றிருந்த தொழிலாளர்கள், ரஷ்யப் புரட்சியின் தத்துவங்களால் உந்தப்பட்டு, தொழிலாளர்களிடையே வேலையின்மையினாலும், கூலிக் குறைப்பினாலும் நிலவியிருந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு, அடிக்கடி வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருந்த அந்த நேரத்தில் லாயிட் ஜார்ஜின் கூட்டு அரசாங்கம் செய்வதறியாது திகைத்தது. நிலைமை மேலும் மோசமடையும் வகையில், சிக்கனக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியத்திலிருந்த அரசாங்கம் சிவில், இராணுவத் துறைகளில் வேலை வாய்ப்பினைக் குறைத்திருந்தது. கல்வி, சுகாதாரம், பொதுப் பணிகளுக்கு இடப்பட்டுவந்த செலவும் குறைக்கப்பட்டிருந்ததால் நிலைமை மேலும் சீர்கெட்டது.

போரை வெற்றிகரமாக நடத்தி முடித்திருந்த லாயிட் ஜார்ஜுக்கு நாட்டில் போரை அடுத்து ஏற்பட்டிருந்த பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை.

வெளிநாட்டு விவகாரத்திலும் (1920-1922) அவரது கூட்டு அரசாங்கம் நாட்டுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் தன் கொள்கையை அமைத்துக்கொள்ளத் தவறியிருந்தது. சமாதான உடன்படிக்கையால் தீர்க்கப்படாமலிருந்த பல ஐரோப்பியச் சிக்கல்களைத் தீர்க்க லாயிட் 1920-1922 ஆண்டுகளுக்கிடையே 23 சர்வதேச மாநாடுகளிலே தம் நாட்டின் சார்பிலே கலந்துகொண்டிருந்தும் சோவியத் ரஷ்யா, ஜெர்மனி, ஃபிரான்சு போன்ற நாடுகளின் ஒத்துழையாமையால் எதையும் உருப்படியாகச் சாதிக்க முடியாதவராக இருந்தார்.

1922ஆம் ஆண்டில் லாயிட் ஜார்ஜின் கூட்டு அமைச்சரவை ஆட்டம் காண ஆரம்பித்தது.

அமைச்சரவையில் அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்த கன்சர்வேடிவ் கட்சியினரின் ஆதரவிலேயே, தம்மைப் பின்பற்றிய லிபரல்களுடன் லாயிட் கூட்டு அரசாங்கம் அமைத்திருந்தாரென்பதை நாம் முன்னரே கண்டோம். தம் கட்சிக்குப் பணம் சேர்க்க, பலருக்கும் பட்டங்களைக் கொடுத்து, நிதியை வசூலித்தாரென்று லாயிட்டின்மீது புகார் செய்யப்பட்டது. அதனால், அப் பேரமைச்சரின் புகழ் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் கன்சர்வேடிவ் கட்சியினர் கூட்டணியிலிருந்து விலக எண்ணினர். கார்ல்டன் கிளப்பில் (Carlton Club) கூட்டம் நடத்திய கன்சர்வேடிவ் கட்சியினர் ஸ்டான்லி பால்டுவின், கர்சன் பிரபு போன்றவர்களின் தலைமையில் போர்க்காலத்தில் ஏற்பட்ட கூட்டு மந்திரி சபை போர் முடிந்துவிட்டதால் கலைக்கப்பட வேண்டுமென்றும் நாட்டின் உடைமைப் பிரச்சினைகளைத் தீர்க்க மீண்டும் ஒரு கட்சியினுட்சி ஏற்பட வேண்டுமென்றும் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினர். கன்சர்வேடிவ் கட்சியினரின் ஆதரவின்றிப் பதவியில் நீடிக்க முடியாமலிருந்த லாயிட் ஜார்ஜ் பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்று அரசர் ஐந்தாம் ஜார்ஜிடம் தம் இராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

'லாயிட் ஜார்ஜ் மீண்டும் பிரதமராவார்' என அரசர் கூறியிருந்தது, நாட்டில் அவருக்கிருந்த தனி மதிப்பைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது. ஆயினும், லிபரல் கட்சி பிளவுபடக் காரணமாகவிருந்த லாயிட் ஜார்ஜுக்குக் கட்சியின் பேராதரவு இல்லாததால் பலமற்று, அதிகாரமற்றுத் தம் இறுதிக்காலம் வரையில் அவர் காமன்ஸ் சபையில் வீற்றிருக்கவேண்டியவரானார்.

இரண்டாம் உலகப் போரின் காலத்தில் பிரிட்டிஷ் அரசினரால் 'எர்ல்' (Earl) பட்டம் கொடுக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட லாயிட் ஜார்ஜ் 1945ஆம் ஆண்டில் காலமானார்.

'லாயிட் ஜார்ஜுக்கு இருந்த தகுதியில் பாதிகூட என் காலத்தைச் சார்ந்த பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்கு இல்லை' என வின்ஸ்டன் சர்ச்சில் கூறிய புகழுரை, லாயிட் ஜார்ஜின் பெருமையைப் பறைசாற்றியது.

22. முதல் உலகப்போருக்குப் பிந்திய இங்கிலாந்து

(அ) இரு பெரும் போர்களுக்கு இடைப்பட்ட கால இங்கிலாந்து (1918-1939)

முதல் உலகப் போர் முடிவுற்றிருந்ததெனினும் அதன் விளைவுகளால் பாதிக்கப்பட்ட இங்கிலாந்து பல சிக்கல்களால் அலைக் கழிக்கப்பட்டு வந்தது. குறிப்பாகப் பொருளாதாரத் துறையில் மிக்க நெருக்கடி இருந்தது. 1914ஆம் ஆண்டில் 706 மில்லியனுக (பவுனுக) இருந்த தேசியக் கடன் 748 மில்லியனுக 1918-ல் அதிகரித்தது. வேலையில்லாதார் எண்ணிக்கை நாட்டில் 30 இலட்சத்திற்கு மேலாக இருந்தது. கூலி உயர்வு கேட்டுத் தொழிலாளர்கள் அடிக்கடி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். நாட்டில் ஏற்றுமதி குறைந்தது; உற்பத்தியும் குறைந்தது. லாயிட் ஜார்ஜின் கூட்டு மந்திரி சபை (1918-1922) நாட்டில் மலிந்திருந்த நலிவான நிலையை திருப்திகரமாகச் சீர்செய்ய இயலாது, இறுதியில் அவரின் இராஜினாமாவுடன் கலைக்கப்பட்டிருந்தது.

போர் முடிந்தபின் ஐரோப்பாவிலும் பயங்கரப் பொருளாதார நெருக்கடி தோன்றியது. 1917ஆம் ஆண்டின் புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் சோவியத் (சோசலிசக்) குடியரசு ஏற்பட்டது. ஜெர்மனியிலும், இத்தாலியிலும் சர்வாதிகாரிகளின் ஆட்சி தோன்றுவதற்கு அறிகுறிகள் காணப்பட்டன.

ங்கிலாந்தில் உருவாகிவந்த பிரச்சினைகள், ஐரோப்பாவில் தோன்றியிருந்த புதிய நிலைமை ஆகியவற்றின் பின்னணியிலே நாம் இத் தலைப்பை ஆராயவேண்டும்.

தொழிற் கட்சியின் வளர்ச்சி

தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதற்கென்றே 1900ஆம் ஆண்டில் கேர் ஹோர்டி (Gare Hardy), ஃபிலிப் ஸ்னோடென் (Philip Snowden), ராம்சே மாக்டனல்ட் (Ramsay Macdonald) என்பவர்களால் தொடங்கப்பட்டிருந்த தொழிற்கட்சி (Labour Party) சிறிது சிறிதாக 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வளர்ச்சியுற்றிருந்தது.

1906ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலில் 29 இடங்களையும், 1910ஆம் ஆண்டு ஜனவரி இடைத்தேர்தலில் 40 இடங்களையும், 1910 டிசம்பர்த் தேர்தலில் 42 இடங்களையும், 1918ஆம் ஆண்டுத் தேர்தலில் 59 இடங்களையும், காமன்ஸ் சபையில் அக்கட்சி பெற்று வளர்ந்து வந்தது, ஆங்கில மக்களின் மனப்பாங்கை எடுத்துக்காட்டுவதாக இருந்தது. போரினால் ஏற்பட்டிருந்த பல பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமதர்மத்தின் வழியில் பாராளுமன்ற முறைப்படி அக் கட்சி தீர்க்கும் என ஆங்கிலேயர்கள் நம்பினர். ஆஸ்க்வித்-லாயிட் ஜார்ஜ் போட்டிச் சச்சரவினால் லிபரல் கட்சி பிளவுண்டு, பலமற்று இருக்க, அக் கட்சியின் தாராளக் கொள்கைகளையும் தன்னுள் கொண்டு தொழிற் கட்சி அமோகமாக வளர்ச்சியுற்றது. லாயிட் ஜார்ஜின் இராஜினாமாவைத் தொடர்ந்து நாட்டிலே நடைபெற்றிருந்த தேர்தலில் (1922) அக் கட்சியின் சார்பில் 142 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அங்ஙனம் சிறிது சிறிதாக வலுவடைந்திருந்த தொழிற் கட்சி, இரு பெரும் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் அமைச்சரவைகள் அமைக்கும் பொறுப்பினையும் பெற்றுவிட்டது.

லாயிட் ஜார்ஜின் கூட்டு மந்திரி சபை 1922-ல் கவிழ்ந்திருந்ததை முந்திய அத்தியாயத்தில் கண்டறிந்தோம். அதைத் தொடர்ந்து, இங்கிலாந்து அரசியல் வரலாற்றில் ஒரு குழப்பமான நிலை ஆரம்பித்தது. மூன்று ஆண்டுக்காலத்துக்குள்ளாக (1922-1924) மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டு, நான்கு அமைச்சரவைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றிலே முதலாவது கன்சர்வேடிவ் மந்திரி சபையே.

போனர்லா (Bonar Law) மந்திரி சபை (1922-1923)

வயது முதிர்ந்த போனர்லா, கூட்டு மந்திரி சபையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஒரு கட்சியின் ஆட்சியை மீண்டும் நாட்டில் உருவாக்கியிருந்தார். நாட்டில் நடத்தப்பட்டிருந்த தேர்தலிலும் அவர்தம் கன்சர்வேடிவ் கட்சியினர் பெருவாரியான

இடங்களைப் பெற்றிருந்தனர். அம் மந்திரி சபை அடுத்த பொதுத் தேர்தல்வரை பதவியில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 1923ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே நோய் காரணமாகப் போனர்லா பதவியிலிருந்து விலக நேரிட்டதால், அடுத்த புதிய தலைவரின்கீழ் மற்றொரு கன்சர்வேடிவ் மந்திரி சபை அமைக்கப்பட்டது.

பால்டுவினின் (Baldwin) முதல் அமைச்சரவை (1923-1924)

1867ஆம் ஆண்டில் இரும்பாலைச் செல்வரின் குடும்பத்தில் பிறந்திருந்த ஸ்டான்லி பால்டுவின், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பட்டதாரியாகத் தம் நாற்பதாம் வயதில் காமன்ஸ் சபையில் நுழைந்தார். தம் 55ஆம் வயதில் காபினெட் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த பால்டுவின் அரசியல் தந்திரம் தெரிந்தவராகவும், கொள்கைப்பற்று உடையவராகவும் இருந்தார். போனர்லா பதவியைத் துறந்ததும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைமைக்கு மார்க்விஸ் கர்சனுக்கும் (Curzon) பால்டுவினுக்கும் போட்டி ஏற்பட்டிருந்ததும், தம் உயர்ந்த ஒழுக்கத்தாலும் பொது அறிவின் திறத்தாலும் கட்சியினரின் பெரும் மதிப்பைப் பெற்றிருந்ததால் 1923-ல் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் என்ற முறையில் பால்டுவினே நாட்டின் பிரதமரானார்.

பிரிட்டனின் (போருக்குப் பிந்திய) பொருளாதார நிலையைச் சீர்படுத்த காப்புவரிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென பால்டுவின் நம்பினார். இறக்குமதிப் பொருள்களின்மீது சுங்கவரி விதித்து அதன்மூலம் இங்கிலாந்து தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய முடியுமென அவர் நினைத்திருந்ததால் மக்களின் மனப் போக்கை அறிய, பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தினார். தடையில்லா வாணிகத்தை விரும்பிய ஆங்கில வாக்காளர்கள் கன்சர்வேடிவ் கட்சியினருக்கு அதிக வாக்குகளைத் தரவில்லை.

தொழிற் கட்சியினருக்கு 291 இடங்களும், கன்சர்வேடிவ் கட்சியினருக்கு 261 இடங்களும், லிபரல்களுக்கு 155 இடங்களும் கிடைத்தன. ஆகவே, அமைச்சரவை அமைக்கும் பொறுப்பு தொழிற் கட்சிக்குக் கிடைத்தது.

முதல் தொழிற் கட்சி: மாக்டனல்டு (Macdonald, மந்திரி சபை 1924)

1886ஆம் ஆண்டில் ஸ்காட்டிஷ் குடும்பத்தில் பிறந்திருந்த ராம்சே மாக்டனல்டு தம் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு

குமாஸ்தாவாகவும், பத்திரிகை எழுத்தாளராகவும் இலண்டனில் வாழ்ந்துவந்தபோது, சோசலிசக் கொள்கையினால் கவரப்பட்டுத் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவக் கமிட்டியில் அங்கத்தினராகவும், அதன்பின் தொழிற் கட்சியின் தலைவராகவும் விளங்கினார்.

மூன்று பொதுத்தேர்தல்களில் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மாக்டனால்டு 1924ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தம் தொழிற் கட்சியின் அமைச்சரவையை அமைத்தார்.

முதன் முறையாக மந்திரி சபை அமைத்திருந்த தொழிற் கட்சியினர், புரட்சிகரமான திட்டங்களில் இறங்காமல் நாட்டு மக்களின் நம்பிக்கையினைப் பெறும்வகையில் மிதமான சில காரியங்களைச் செய்ய முற்பட்டனர்.

சில பொருள்கள்மீது இன்னும் விதிக்கப்பட்டிருந்த காப்பு வரிகளை அந்த அமைச்சரவை நீக்கியது. குறைந்த வாடகைக்குக் குடியிருப்பு வீடுகளை மக்கள் பெறுவதற்கேற்பச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு வீடுகளைக் கட்டித்தர அதுவரை கொடுக்கப்படாத பணஉதவியும் அதிகரிக்கப்பட்டது.

சர்வதேச சங்கத்திற்குத் தம் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்த மாக்டனால்டு சோவியத் ரஷ்யாவுடன் சில வர்த்தக ஒப்பந்தங்களையும் செய்து முடித்திருந்தார்.

காமன்ஸ் சபையில் போதிய பெரும்பான்மை ஆதரவில்லாத தால் லிபரல் கட்சியினரின் தயவை நம்பியிருந்த தொழிற் கட்சியின் மந்திரி சபை சில மாதங்களே பதவியிலிருந்தது. தொழிற் கட்சியின் ரஷ்ய ஆதரவுக் கொள்கையினை விரும்பாத லிபரல் கட்சியினர் தங்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து கொடுக்க மறுத்ததால் அம் மந்திரி சபை 1924 அக்டோபரில் வீழ்ச்சியுற்றது.

அடுத்து நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினர் அமோக வெற்றியடைந்தனர். தொழிற் கட்சி, லிபரல் கட்சியினர் கைப்பற்றியிருந்த இடங்களுக்கு இரண்டு மடங்கு அதிகமாகவே கன்சர்வேடிவ் கட்சி பெருவெற்றி பெற்றிருந்ததற்குச் சில முக்கியக் காரணங்களிருந்தன.

பொதுக்காப்புவரிக் கொள்கையைக் கைவிட்டு அவசியமான ஒரு சில பாதுகாப்பு வரிகளையே தம் கட்சி ஆட்சிக்கு வந்தால் விதிக்குமென்று பால்டுவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலே

சொல்லியிருந்தார். அதுமட்டுமன்றி வாக்காளர்களைக் கவரும் வண்ணம் காலத்திற்கேற்ற கொள்கையினை லிபரல் கட்சி கடைப் பிடிக்கத் தவறியதால் 42 இடங்களை அத் தேர்தலில் அது பெற்றிருந்தது. மேலும், தொழிற் கட்சியின் ரஷ்யக் கொள்கை யினால் நாட்டிலே சிறு சலசலப்பு ஏற்கெனவே ஏற்பட்டிருந்த அச் சமயத்தில் சோவியத் ரஷ்ய அயல்நாட்டு இலாகாவிலிருந்து நாட்டிலே கலகம் செய்யத் தூண்டி, இங்கிலாந்து கம்யூனிஸ்டு கட்சித் தலைமை அலுவலகத்திற்கு எழுதப்பட்டதாகச் சொல்லப் பட்ட கடிதத்தின் மொழிபெயர்ப்புகள் பிரபல இங்கிலாந்து செய்தித்தாள்களில் பிரசுரமாகியிருந்தன. இத் திடீர் மாற்றத்தை விரும்பாத இங்கிலாந்து வாக்காளர்களின் மன இயல்பு, பழைமை விரும்பிகளான கன்சர்வேடிவ் கட்சியினரை வரவேற்றதில் ஆச்சரியமெதுவு மில்லை. ஆக, மூன்றும் கன்சர்வேடிவ் கட்சியின் அமைச்சரவை ஏற்பட்டது.

பால்டுவினின் இரண்டாம் மந்திரி சபை (1924-1929)

அந்நிய நாட்டுப் போட்டிகளிலிருந்து சில முக்கியத் தொழில் களைக் காப்பாற்றவேண்டி ஒரு சில பாதுகாப்பு வரிகள் (safeguarding duties) விதிக்கப்பட்டன. பொருள்களின் விலையேற்றத்தைத் தடுக்கப் பவுன் விலையைப் போருக்கு முந்திய அளவுக்கு நிர்ணயிக்கும்படியாகத் தங்க நாணயத் திட்டம் (Gold Standard) கொண்டுவரப்பட்டிருந்தது. விதவைகளுக்கும், அனுதைகளுக்கும் உதவிப்பணம் கொடுக்கும்படியாக ஒரு புதுச்சட்டமும் நிறை வேற்றப்பட்டது. நாட்டின் மின்வாரியமும் (Electricity Board), இங்கிலாந்தின் ஒலிபரப்பு நிலையமும் (British Broadcasting Corporation) அரசினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. ஒரு சில முக்கியச் சீர்திருத்தங்களைப் பால்டுவின் அமைச்சரவை கொண்டுவந்தபோதிலும் அவற்றின் விளைவாகத் தொழிலாளர் களுக்கு எவ்வித நன்மையும் கிடைத்தபாடில்லை. குறிப்பாக, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் குறைகள் தீர்க்கப் படாமல் இருந்தன.

அதுவரை, இங்கிலாந்திலிருந்து நிலக்கரி வாங்கிவந்த பல அந்நிய நாடுகள் அதை நிறுத்திக்கொண்டதால், நிலக்கரி எடுக்கும் தொழிலில் மந்தம் ஏற்பட்டிருந்தது. கூலிகளும் அதற் கேற்பக் குறைந்து இருந்தன. தங்களுக்குக் கூலி உயர்வு கிடைக்க அரசு எவ் வழியும் செய்யவில்லை என்ற குறை அத் தொழிலாளர் களுக்கிருந்தது. 1926ஆம் ஆண்டு மே முதல் வாரத்தில் சுரங்கத் தொழிலாளர்கள் அனைவரும் ஒரு பெரும் வேலைநிறுத் தத்தில் ஈடுபட்டனர். அதையொட்டி அரசு புதிய தொழிற்

கட்டுப்பாட்டுச் சட்டம் ஒன்றைக் (Trade Disputes Acts) கொண்டு வந்தது. அதன்படி ஒரு வேலைநிறுத்தம் ஏற்படும்போது அதற்குப் பரிவு காட்டும் வகையில் வேலைநிறுத்தங்கள் செய்வது சட்ட விரோதமாக்கப்பட்டது. வேலைநிறுத்தம் ஒரு வாரத் திற்குள் பிசுபிசுத்துவிட்டதெனினும் தொழிலாளிகட்கு அரசின் மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தது.

பால்டுவினால் கொண்டுவரப்பட்டிருந்த மற்ற இரு சட்டங்கள் அவரின் பதவிக்காலத்திற்குப் பெருமை கொடுப்பதாக இருந்தது.

1928ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் 21 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனை வருக்கும் வாக்குரிமை வழங்கியது. அச் சட்டத்தினால் இங்கிலாந்து பாராளுமன்ற ஜனநாயகம் முழுமை அடைந்தது. 1929ஆம் ஆண்டில் தல அரசாங்கச் சட்டமும் (Local Government Act) கொண்டுவரப்பட்டது. அச் சட்டத்தின்படி, கவுண்டி பரோக் களுக்குச் சாலைகள், பொதுச் சுகாதாரம், நகரச் சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றின்மீது, புதிய அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருந்தன.

1929ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் தொழிற் கட்சியினர் 288 இடங்களைக் கைப்பற்றி, பெரும்பான்மை யினராக இருக்க, மாக்டனல்டு இரண்டாம் முறையாகப் பிரதம ராஞர்.

மாக்டனல்டின் இரண்டாவது அமைச்சரவை (1929-1931)

தொழிற் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றி யிருப்பினும், நாட்டில் நிலவியிருந்த வியாபார மந்தம், பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகியது. 1929-ல் ஒரு மில்லி யனாக இருந்த வேலையில்லாதோர் தொகை 1930-ல் இரண்டரை மில்லியனாகவும், 1931-ல் மூன்று மில்லியனாகவும், அதிகரித் தது. அமெரிக்காவில் ஏற்பட்டிருந்த பொருளாதாரச்சிக்கல் இங்கிலாந்தையும் பாதிக்கலாயிற்று. பல பாங்குகள் மூரிந்தன. அரசாங்கத்திற்குப் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. அதைப் போக்க ஆலைத் தொழில்களின்மீது வரி விதிக்கப்பட, தொழி லதிபர்கள் முணுமுணுக்கலாயினர். பொருளாதார நெருக் கடியைச் சீராக்க, செலவை அரசு குறைக்க முற்பட்டது. வேலை யில்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த உதவிப் பணம் நிறுத்தப்பட்டதால் அரசின்மீது பொதுமக்களுக்கு வெறுப்புத் தட்டியது.

நாட்டிலே ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் தொழிற் கட்சித் தலைவர்களிடையே வேற்றுமை உண்டாகியது. குறிப்பாக, எர்னஸ்ட் பெவின் (Ernest Bevin) போன்ற தொழிற் சங்கத் தலைவர்கள் வேலையில்லாதோருக்குக் கொடுக்கப்படும் உதவிப்பணத்தை நிறுத்தக்கூடாது என வற்புறுத்தினர். நாளுக்குநாள் தொழிற் கட்சியில் பிளவுகள் அதிகரித்துவந்ததால் மாக்டனல்டின் நிலைமை சங்கடத்திற் குள்ளாகியிருந்தது. தங்களின் அமைச்சரவை கலைக்கப்படவேண்டு மென்று தொழிற் கட்சியினர் நினைத்தனர். ஆனல், மாக்டனல்டு தம் கட்சியின் விருப்பத்திற்கு மாறுக சர்வகட்சியினரைக் கொண்ட தேசிய அரசாங்கத்தை அமைத்தார். அதைத் தொடர்ந்து அவரை ஆதரித்த மூன்று அமைச்சர்களும், 12 தொழிற் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தினர்களும் மாக்ட னல்டும் சேர்ந்து, கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். கட்சி யிலிருந்து நீக்கப்பட அவர்கள் தேசியத் தொழிற் கட்சியை (National Labour Party) அமைத்திருந்தனர்.

தேசிய அரசாங்கம் (National Government, ***1931-1940***)

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க எல்லாக் கட்சியினரின் ஒத்துழைப்பும் தேவை என்ற கொள்கையின் அடிப்படையிலேதான் ஒரு கூட்டுச்சபை அமைத்த தாக மாக்டனல்டு சொல்லிக்கொண்டார். கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்த பால்டுவின், நெவில் சேம்பர்லேன் போன் றோரும், லிபரல் கட்சியினரான சர் ஹெர்பட் சாமுவேல், ரீடிங் பிரபு ஆகியோரும் தேசிய அரசாங்கத்தில் 'காபினெட்' அமைச் சர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர். மாக்டனல்டு பிரதமராகத் தொடர்ந்து பதவி வகித்தார்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பல அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசிய மிருந்ததால் தேசிய அரசாங்கத்திற்குப் பொதுமக்களிடம் வரவேற்பு இருந்ததா என்று அறிய 1931ஆம் ஆண்டு அக்டோபரில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. ஆனல், தனித்தனித் தேர்தல் காரியத்திட்டங் களோடு (programme) தோழமைக்கட்சிகளாக, தேசியத் தொழிற் கட்சி, கன்சர்வேடிவ், லிபரல் கட்சியினர் தேர்தலில் கலந்து கொண்டு மொத்தத்தில் 556 இடங்களைப் பெற்றிருந்தனர். அதில், பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்ற கட்சியாகக் கன்சர்வேடிவ்கள் இருந்தனர். கூட்டணிக்கட்சிகளை எதிர்த்துப் போட்டியிட்டிருந்த தொழிற்கட்சிக்கு 46 இடங்களே கிடைத்

திருந்தன. கூட்டணிக் கட்சிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்திற்கு மாக்டனல்டு மீண்டும் பிரதமராக்கப் பட்டார்.

தேசிய அரசாங்கத்தினர் பதவியேற்றதைத் தொடர்ந்து நாட்டுக்குத் தேவையான சில உடனடி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அரசாங்கம் சிக்கனத்தைக் கடைப்பிடித்துப் பொதுச் செலவைக் குறைத்தது. எல்லா வரிகளும் தேவைக் கேற்றபடி அதிகரிக்கப்பட்டன. தங்க நாணயத்திட்டத்திலிருந்து இங்கிலாந்து விலக்கப்பட்டது. குடியேற்ற நாடுகள் உட்பட வெளிநாடுகளி லிருந்து இறக்குமதியான பல பொருள்மீது வரிகள் விதிக்கப்பட்டன. ஆனல், ஒட்டாவா (Ottawa) நகரில் கூட்டப்பட்ட பேரரசு பொருளாதார மாநாட்டில் (Imperial Economic Conference) டொமினியன்கள், குடியேற்றநாடுகள் இவற்றிலிருந்து இங்கிலாந்துக்குள் வந்த பொருள்கள்மீது சில வரிச் சலுகைகள் காட்டப்பட்டன, தேசியக் கடனுக்காக அளிக் கப்பட்ட வட்டி விகிதம் 5 லிருந்து $3\frac{1}{2}$ யாகக் குறைக்கப்பட்டது. மேற்கண்ட முறைகளால் சீர்குலைந்திருந்த நாட்டின் பொருளா தாரம் சற்று மேம்பாடு அடைந்திருந்தது. தொழில் துறையில் அக் கறை காட்டிய மாக்டனல்டின் கூட்டாட்சி, நிலக்கரிச்சுரங்கங்களை யும் இலண்டன் போக்குவரத்து வாரியத்தையும் தேசியமயமாக்கி யது. இம்பீரியில், இங்கிலாந்து விமானக்கம்பெனிகளை இணைத்துத் தேசிய மயமாக்கி இங்கிலாந்து ஓவர்சீஸ் விமானக் கழகம் (British Overseas Airways Corporation) ஏற்படுத்தப்பட்டது. குடியிருப்பு வீடுகள் கட்டப்படுவற்கும், விவசாய மேம்பாட்டிற் கும், கப்பல்கட்டும் தொழிலுக்கும் அரசு பண உதவி செய்தது. மேரி ராணி (Queen Mary) என்ற பெரிய பிரயாணக் கப்பல் கட்டப்படுவதற்கு அரசு ஏராளமான கடனைக் கொடுத்திருந்தது. சீர்குலையும் நிலையில் இருந்த தொழில்கள் அனைத்தும் அரசி னர் கொடுத்த ஊக்கத்தினல் மேம்பாடடைய ஆரம்பித்தன.

தேசிய அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இந்திய அரசாங்கச் சட்டமும் (Government of India Act, 1935) நிறைவேற்றப் பட்டி ருந்தது. அச் சட்டத்தின்படி, இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி கொடுக்கப்பட்டிருந்தது.

இந்திய சட்டத்தைக் கொண்டுவந்த பின்னர், உடல் நலம் குன்றியிருந்த மாக்டனல்டு தம் பிரதமர் பதவியை இராஜினமாச் செய்துவிட்டார். அதைத் தொடர்ந்து, ஸ்டான்லி பால்டுவின் தேசிய அரசுக்குப் புதுப் பிரதமரானர் (1935-1937). நாட்டில்

நடத்தப்பட்ட தேர்தலிலும், கூட்டணிக் கட்சிகளுக்குப் பெரு வாரியான வாக்குகள் கிடைத்தன.

புதுத்தலைவரின்கீழ்த் தொடர்ந்த தேசிய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரச் சீரமைப்பில் அக்கறை காட்ட மறக்கவில்லை. கடந்து ஆறு ஆண்டுகளாகத் தேசிய சர்க்கார் மேற்கொண்ட பல நடவடிக்கைகளால் 1931-ல் 2,800,000 ஆக இருந்த வேலையற் றோரின் எண்ணிக்கை 1937-ல் 16,70,000 ஆகக் குறைந்திருந் தது. இங்கிலாந்தின் ஆக்கத்தொழில் 20 சத விகிதத்திற்கு உயர்ந் தது. தனிப்பட்டோரின் சராசரி வருமானமும் 18 சத விகிதம் உயர்ந்தது.

பால்டுவின் பதவிக் காலத்தில் எல்லாரின் கவனத்தையும் ஈர்க்கும்படியாக எட்வர்டின் முடிதுறப்பு விவகாரம் அமைந் திருந்தது.

தமது ஆட்சியின் 25-வது நிறைவு விழாவை 1935-இல் கொண்டாடிய மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் 1936ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இறக்கவே அவர் தம் மூத்த மகன் எட்டாம் எட்வர்டு (Edward VIII) இங்கிலாந்து மன்னரானார்.

கம்பீரத் தோற்றமும், கருணை உள்ளமும் கொண்டிருந்த எட்வர்டு ஆங்கில மக்களிடையே தாம் அரசராவதற்கு முன் பாகவே நன்மதிப்பைப் பெற்றிருந்தார். பொதுமக்களின் நலனுக் காகச் - சிறப்பாக ஏழை எளியவர்களின் குறைகளைத் தீர்ப்பதற் காகத் - தம் அரச காலத்தைக் கழிக்கப் போவதாக எட்வர்டு சொல்லியது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

மக்களின் நம்பிக்கையைப் பொய்யாக்காமல் எட்வர்டு தம் அன்றுடக் கடமைகளைச் செய்ததோடன்றி அடிக்கடி தேநீர் விருந்துகளை ஏற்பாடு செய்து பல தரப்பட்ட மக்களை அதற்கு வரவழைத்து அவர்கள் குறைகளை நேரில் கண்டறிய முனைந் தார். வறியவர்களின் இல்லங்களுக்கு வலியச் சென்றும் அவர் தம் குறைகளை நேரில் கேட்டறிந்தார். பாண்டா பள்ளத்தாக்கில் வறுமையில் வாடிக் கொண்டிருந்த மக்களைச் சந்தித்து அவர்களின் நிலைமையை எட்வர்டு விசாரித்தறிந்ததை ஒரு மேற்கோளாகக் காட்டலாம்.

ஆங்கில மக்களன்றிப் பேரரசு நாடுகளில் வாழ்ந்த மக்கள் யாவரும் எட்வர்டை அன்புடன் நேசித்துவந்த நேரத்திலும், மன்னரிடமிருந்து பெறும் சாதனைகளை எதிர்பார்த்துவந்த வேளை யில் பரபரப்பை உண்டாக்கும் ஒரு செய்தி, வெளிக்கிளம்பியது.

ஏற்கெனவே இரு முறை விவாக ரத்து செய்துகொண்டிருந்த வாலிஸ் சிம்ஸன் (wallis Simpson) என்ற அமெரிக்க மாது ஒருத்தியை அரசர் எட்வர்டு காதல் திருமணம் செய்துகொள்ளப் போவதாக ஒரு செய்தி பரவியது. பிரதமர் பால்டுவினும் அவர் தம் சக அமைச்சர்களும் அச் செய்தியை இரகசியமாகக் காப்பாற்ற முயன்றும்கூட அதைப்பற்றி மக்களுக்குத் தெரிந்துவிட்டது. அரசருக்கு ஆதரவாகவும், பாதகமாகவும் ஆங்காங்கே குரல்கள் கிளம்பின. செய்தித்தாள்களும் அரசரைத் தாக்கியும், ஆதரித்தும் எழுத ஆரம்பித்தன. நாள்கள் செல்லச் செல்ல எதிர்ப்பு அதிகமாய்க்கொண்டே சென்றது. சாதாரண மங்கை ஒருத்தியை - அதுவும் இருமுறை விவாகக ரத்து செய்துகொண்ட ஒருத்தியை - மேலும் அந்நிய நாட்டைச் சார்ந்த ஒருத்தியை- மன்னர் திருமணம் செய்துகொள்வதால் அரச பீடத்தின் மதிப்பு வெகுவாகப் பாதிக்கப்படுமெனப் பலர் அஞ்சினர். வாலிஸ் சிம்சன் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாலோ அல்லது அந்நிய நாட்டைச் சார்ந்தவர் என்பதாலோ மக்கள் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால், சிம்சன் என்ற அந்த அமெரிக்க மாது திருமணம் ஆன பின் இருவரை ஒருவர் பின் ஒருவராக விவாக ரத்து செய்திருந்ததை மக்களிடம் மறைக்க முடியவில்லை. மக்களும் அதை மறக்கவில்லை. ஆங்கிலச் சட்டம் விவாக ரத்தை அனுமதித்தாலும் ஆங்கிலத்திருச்சபை அதை ஒப்புக் கொள்ளாமலேயே இருந்தது. நாட்டின் திருச்சபையின் தலைவர் என்ற நிலையில் மன்னர் எட்வர்டு அத் திருச்சபைக்கு உடன்பாடு இல்லாத ஒரு காரியத்தைச் செய்வாரேயானால் அதனால் பல சிக்கல்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. எட்வர்டும் அதை உணர்ந்தார்.

பிரதமர் பால்டுவினுக்கு ஒரு தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டிருந்தது. தம் அமைச்சரவையைக் கூட்டி அதன் கருத்தைக் கேட்டறிந்ததல்லாமல், டொமினியன் நாடுகளின் பிரதமர்களுக்கும் எழுதி, அவர்களின் கருத்தையும் கோரியிருந்தார். மன்னர் லேடி சிம்சனை மணக்கக்கூடாது என்பதே அவர்களின் முடிவாக இருந்தது. சிம்சன் சீமாட்டியைத் தங்கள் இராணியாக ஆங்கிலேயர்களும் டொமினியன் மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களெனத் திட்ட வட்டமாகத் தெரிந்த பின்னர், பால்டுவின் தனிப்பட்ட முறையில் அரசரைச் சந்தித்துப் பேசி, சிம்சன் சீமாட்டியை மணக்காமல் இருப்பதே சாலச் சிறந்ததென அறிவுரை கொடுத்தார். ஆனால், காதலில் கட்டுண்டு கிடந்த மன்னர் எட்வர்டுக்கு அரசமுடி ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. இருப்பினும், மன்னர் ஒரு யோசனையைத் தெரிவித்தார். அதன்படி

சிம்சன் சீமாட்டியை மணந்துகொள்ளத் தமக்கு அனுமதி கொடுக்கப்படவேண்டுமென்பதும் அவரை இங்கிலாந்தின் இராணியாக வாராமல் தடுக்கப் பாராளுமன்றத்தின்மூலம் ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாம் என்பதும் அந்த யோசனை யாகும். ஆனால், அந்த யோசனையை பால்டுவினின் அமைச்சரவை ஏற்றுக் கொள்ளவில்லை. மன்னரை ஆதரித்தும், கண்டித்தும் கூக்குரல்கள் நாடெங்கும் கிளம்பின. டெய்லி ஹெரால்டு என்ற பத்திரிகையில் காபினெட் ஆலோசனையின்படி மன்னர் நடக்க வேண்டுமென்று லாஸ்கி என்ற அறிஞர் எழுதினர். அரசர் சிம்சன் சீமாட்டியை மணந்துகொண்டால் காமன்வெல்த் கூட்டுறவிலிருந்து பிரிந்து விடுவதாகச் சில டொமினியின் பிரதமர்கள் அச்சுறுத்தினர். அதே சமயத்தில் மன்னர் மாளிகைக்கு முன் பல மாணவர்கள் கூடி 'முடியரசு வாழ்க! எட்வர்டு மன்னர் வாழ்க!' எனக் கூக்குரலிட்டனர்.

தாம் முடி துறக்கப்போவதாயும் அதன்பின் சாதாரணக் குடிமகன் என்ற நிலையில் சிம்சனை மணந்து கொள்ள விரும்புவதாகவும் எட்வர்டு உறுதியாக அறிவித்தார். தம் மூத்த சகோதரர் முடி துறந்தால் தாம் அரச பதவியை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை யென எட்வர்டின் இளைய சகோதரர் யார்க் கோமகன் கூறி விட்டதாகவும், எனவே, யார்க் கோமகனின் மகள் இளவரசி எலிசபெத்தை இராணியாக அறிவிக்கப் போவதாகவும், நாட்டை ஆள ஒரு பாதுகாப்புச் சபையை ஏற்படுத்தப் போவதாகவும் பல வதந்திகள் கிளம்பின. காமன்ஸ் சபையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்த கன்சர்வேடிவ் கட்சியினர் சிம்சனைக் கைவிட்டுவிடும்படி மன்னரைக் கேட்டுக்கொண்டனர். ஆனால், அரசர் மௌனம் சாதித்தார். அதற்கிடையில் சிம்சன் சீமாட்டி கேன்னஸ் நகரிலிருந்து (France) 'மன்னருக்கோ அல்லது அவரது பதவிக்கோ ஏதாவது இழுக்கு நேருமானால் தாம் தமது காதலுக்தியாகம் செய்யத் தயார்' என ஓர் அறிக்கையை வெளியிட்டார், அவ் வறிக்கையின்பின் பிரதமர் பால்டுவின், மன்னரோடு மீண்டும் தொடர்பு கொண்டு அவரது கருத்தை அறிய முனைந்தார்.

சிக்கலிலிருந்து விடுபட மன்னருக்கு இரண்டு யோசனைகள் தரப்பட்டன. ஒன்று முடிதுறந்துவிட்டுப் பின்னர் சிம்சனை மணக்கவேண்டும்; அல்லது சிம்சனை மணக்கும் எண்ணத்தையே விட்டுவிட வேண்டும். சிம்சனை இராணி என்ற நிலையில் திருமணம் செய்துகொண்டால் இங்கிலாந்துமட்டுமன்றி டொமினியன்களில் வாழ்ந்த மக்களும் மறுப்புத் தெரிவிப்பார்களென எட்வர்டு உணர்ந்திருந்தார். ஆகவே, சிம்சனை மணப்பதில் உறுதி

யாக இருந்த எட்வர்டு தாம் ஆங்கில அரியணையைத் துறந்து விடுவதாக 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் தேதி அறிவித்துவிட்டார். அதே நாளில் இங்கிலாந்துப் பாராளு மன்றத்து 'முடிதுறப்பு அறிவிப்புச் சட்டம்' அவசரமாக நிறை வேற்றப்பட்டது. யார்க் கோமகன் இங்கிலாந்தின் புது மன்ன ராக ஆரும் ஜார்ஜ் என்ற பட்டப்பெயருடன் அரியணை யேறினார். அன்றிரவு வானொலியில் ஓர் உருக்கமான சொற்பொழிவை நடத்திவிட்டு மக்களிடம் மன்னர் விடை பெற்றுக்கொண்டார். அடுத்த நாள் ஒரு கப்பலில் ஏறி ஃபிரான்சுக்குச் சென்று எட்வர்டு, சிம்சனை மணந்துகொண்டார். அவருக்கு வின்ஸ்ட்டர் கோமகன் என்ற பட்டம் இங்கிலாந்தின் மன்னரால் கொடுக்கப்பட்டது.

எட்வர்டின் முடிதுறப்பு நெருக்கடி ஒரு சிறந்த காதல் காவி யத்திற்கு ஒப்பான நிகழ்ச்சியானதுமட்டு மல்லாமல் ஆங்கில அரசியல் அமைப்பு வரலாற்றிலும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. (மந்திரிசபையின் விருப்பப்படியே அரசர் தமது சொந்த விஷயங்களில்கூட நடந்துகொள்ள வேண்டுமென்ற மரபு 1936-ல் ஏற்படுத்தப்பட்டது. சிம்சனை மணந்துகொள்ளக் கூடாதெனக் 'கேபினெட்' எடுத்திருந்த முடிவை மன்னரால் மறுக்க முடியவில்லை, தாம் முடிதுறக்கும்வரை மன்னர், பிரதமர் பால்டுவின் ஒருவரிடமே மனம்விட்டுப் பேசி வந்தாரேயொழிய அதைப்பற்றி எந்த ஓர் அறிக்கையையும் வெளியிடவில்லை. முடி துறந்தபின் வானொலியில் எட்வர்டு ஆற்றியிருந்த அந்த உருக்க மான சொற்பொழிவிலேயே அவர் சுதந்தரமாகப் பேசியிருந்தார். ஆக அரசரின் நாக்கைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரத்தையும் காபினெட் பெற்றிருந்தது எனலாம்.

முடிதுறப்பு விவகாரம் காபினெட்டுக்கு இருந்த சர்வாதி காரத்தை எடுத்துக்காட்டியது. அரசரின் திருமணவிவகாரத்தைப் பால்டுவினும் அவர்தம் அமைச்சர்களும் அதிகாரபூர்வமாக 1936 டிசம்பர் 11ஆம் நாள்வரை பாராளுமன்றத்திற்குத் தெரிவிக் காததை ஒரு மேற்கோளாக எடுத்துக்காட்டலாம்.

காமன்வெல்த்தின் வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருந்த வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்துக்கும் அவ் விவகாரம் ஓர் உரை கல்லாக இருந்தது. எட்டாம் எட்வர்டு முடிதுறக்க முன்வந்த போது அதற்குரிய சட்டத்தை டொமினியன் பாராளுமன்றங்களே கோரி ஒப்புக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும், அரசரின் முடிதுறப்புச் சட்டத்தை டொமினியன் பாராளுமன் றங்கள் கோரி ஒப்புக்கொண்ட பின்னரே அது அமலுக்கு வந்தது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதா ஒவ்வொன்றுக்கும் மன்னரின் ஒப்பம் தேவை. அரசர் எட்வர்டின் முடிதுறப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் தர மன்னர் இல்லாததால் அதைக் கௌன்சில் கொடுத்திருந்தது. இறுதியாக எட்வர்டின் முடிதுறப்பு விவகாரம் ஆங்கிலத் திருச்சபையின் விருப்பத்திற்கு எதிராக நடந்துகொள்ள அரசருக்கும், பேரரசர்களுக்கும் துணி வில்லை என்பதை எடுத்துக்காட்டியது.

1937ஆம் ஆண்டு மே மாதத்தில் வயதின் காரணமாகப் பால்டுவின் பதவியிலிருந்து விலகிக்கொண்டதைத் தொடர்ந்து நெவில் சேம்பர்லேன் (Neville Chamberlain) நாட்டின் பிரதம ராஞர். தொழிலாளர்களின் நலனைப் பெருக்கும் வகையில் ஒரு சட்டம் இவர்தம் பதவிக் கால ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டிருந்தும் அயர்லாந்துடன் ஒரு சமரச உடன்பாட்டை ஏற்படுத்தியிருந்த நிகழ்ச்சியே இவர்தம் உள்நாட்டு விவகாரத்தில் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. எட்டாம் எட்வர்டு முடி துறந்ததையொட்டி ஐரிஷ் தலைவர் டி வேலரா அயர் பாராளு மன்றத்தில் ஒரு சட்டம் கொண்டுவந்திருந்தார். வெளிநாட்டு விவகாரங்களில் இங்கிலாந்து அரசர் இனித் தலையிடக் கூடாதென்றும் அரசரால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரல் பதவி அயர்லாந்தில் ஒழிக்கப் பட்டுவிட்டதாகவும் அச் சட்டம் கூறியது. ஒரு தனி அரசியல் திட்டத்தை வகுத்தளித்துக்கொண்ட அயர்லாந்து தன்னை அயர் (Eire) என்ற 'பூரண இறைமை பெற்ற சுதந்தர ஜனநாயகக் குடியரசு' என அறிவித்துக்கொண்டது. சேம்பர்லேனின் அரசாங்கம் அதற்கு ஒப்புக்கொண்டது. ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருடன் மியூனிச் நகரில் சேம்பர்லேன் நடத்திய பேச்சு வார்த்தையிலிருந்து இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலம்வரை இவரின் காலத்தில் வெளிநாட்டு விவகாரங்களே மக்களின் மனதை அதிகமாகக் கவர்ந்தது.

இரண்டாம் உலகப் போர் மூண்டது. அதைச் சேம்பர்லேன் எதிர்பார்க்கவில்லை யெனினும் போரைச் சாமளிக்கத் தம்மால் இயன்றதைச் செய்தார். நாட்டில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க விலைக் கட்டுப்பாட்டு முறையினைக் கொண்டு வந்தார். உணவுத் தட்டுப்பாட்டைப் போக்க, பங்கீட்டு முறையும் புகுத்தப்பட்டது. 21 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கெல்லாம் கட்டாய இராணுவப் பயிற்சி கொடுக்கப்பட்டு நாட்டுப் படை ஒன்று தயாரிக்கப்பட்டது. போரின் ஆரம்பக் கட்டத்தில் இங்கிலாந்திற்குத் தோல்விகள் பல ஏற்பட, சேம்பர்லேன்மீது மக்களுக்கு நம்பிக்கை குறைய ஆரம்பித்ததால் 1940 மே மாதத்

தில் அவர்தம் பதவியை இராஜினாமாச் செய்தார். வின்ஸ்டன் சர்ச்சில் இங்கிலாந்து நாட்டின் அடுத்த பிரதமராகப் பதவி ஏற்றார்.

இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை (1919 - 1939)

பாரிஸ் மாநாட்டில் இங்கிலாந்து

முதல் உலகப்போரின் இறுதியில், அச்சுநாடுகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் போரினால் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்ட பாரிஸ் நகரில் வல்லரசுகள் ஒரு சமாதான மாநாட்டைக் கூட்டியிருந்தன (1919). அம் மாநாட்டின் முக்கியத் தீர்மானங்களையெல்லாம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U. S. A.) ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளோடு இங்கிலாந்தின் பிரதமர் லாயிட் ஜார்ஜ் நிறைவேற்றியிருந்தார். ஆக, பாரிஸ் மாநாட்டை நடத்தி முடித்திருந்த முப் பெரும் நாடுகளிலே பிரிட்டனும் ஒன்றாகும்.

மாநாட்டைத் தொடர்ந்து நேசநாடுகள் பல சமாதான ஒப்பந்தங்களைத் தோற்கடிக்கப்பட்டிருந்த அச்சு நாடுகளுடன் செய்துகொண்டன. வெர்சேல்ஸ் (Versailles) உடன்படிக்கை ஜெர்மனியின்மீதும், செயின்ட் ஜேர்மேன் (St. Germaine) ஒப்பந்தம் ஆஸ்திரியாவின்மீதும், ட்ரையனன் (Trianon) ஒப்பந்தம் பல்கேரியாமீதும், செவ்ரஸ் (Sevres) உடன்படிக்கை துருக்கியின் மீதும் திணிக்கப்பட்டிருந்தன. வெற்றி பெற்றிருந்த நேசநாடுகளில் ஒன்றான இங்கிலாந்துக்கு அவ் வுடன்படிக்கையால் நல்ல பலன் கிடைத்திருந்தது. குறிப்பாக, ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளான கிழக்கு ஆஃபிரிக்கா, டோகாலாந்து போன்றவைகளைப் பெற்றதோடல்லாமல் துருக்கியிடமிருந்து பிடுங்கப்பட்ட ஈராக், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளைத் தன் பாதுகாப்பின்கீழ்ப் பரிபாலிக்கும் உரிமையை இங்கிலாந்து பெற்றது.

சமாதான மாநாட்டில் பெரும் பங்காற்றி உடன்படிக்கைகளால் வல்லரசு என்ற நிலையைப் பெற்றிருந்த இங்கிலாந்து நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளைச் சமாதான முறையில் தீர்த்து வைக்கத் தொடங்கப்பட்டிருந்த சர்வதேச சங்கத்தில் (League of Nations) சேர்ந்திருந்தது. அச் சங்கத்தின் கேந்திரமாக விளங்கிய ஆலோசனை சபையில் (Council) இங்கிலாந்து நிரந்தர உறுப்பினராக இடம் பெற்றிருந்தது, சர்வதேச அரசியலில் அந் நாடு அடைந்திருந்த பெருமையையும் அகில உலக சமாதானத்தில்

அந் நாட்டுக்கு இருந்த பற்றினையும் எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

அச்சு நாடுகளோடு செய்துகொள்ளப்பட்டிருந்த உடன்பாடு களால் தீர்க்கப்படாமலிருந்த பல பிரச்சினைகளுக்கு முடிவு காணவும், போரினால் ஏற்பட்டிருந்த சில சிக்கல்களை விடுவிக்கவும் இங்கிலாந்து 1920-1922 ஆண்டுகளிடையே இருபத்து மூன்று சர்வதேச மாநாடுகளிலே கலந்துகொண்டிருந்தது. மேற்கோள் களாக இரண்டைச் சுட்டிக் காட்டலாம். பிற நாடுகளிலிருந்து வாங்கியிருந்த கடனைப் புரட்சிக்குப் பின்னர் (கம்யூனிஸ்டு) ரஷ்யா கொடுக்கத் தயங்கியபோது ஜெனிவா (Geneva) நகரில் கூட்டப் பட்டிருந்த மாநாட்டிலும் (1922) வாஷிங்டனில் (Washington) தடைத்தப்பட்ட கடற்படை (குறைப்பு) மாநாட்டிலும் (1922) இங்கிலாந்து கலந்துகொண்டது.

இங்கிலாந்தும் துருக்கியும்

உடன்படிக்கையின்படி (1919) அதுவரை துருக்கியருக்குச் சொந்தமாயிருந்த திரேஸ் (Thrace) பகுதியையும், ஸ்மிர்னை (Smyrna) நகரத்தையும் ஆசியா மைனரையும் கிரீசுக்கு நேசநாடு கள் கொடுக்க முடிவு செய்திருந்ததும், போரை அடுத்துத் துருக்கி யில் சர்வாதிகாரம் பெற்றிருந்த கமால் பாஷா (Kamal Pasha) அந்த ஏற்பாட்டைப் புறக்கணித்து ஸ்மிர்னை நகரைக் கைப்பற்றிய போது கிரீசுக்கும் துருக்கிக்கும் போர் ஏற்படும் போலிருந்தது. அச் சமயத்தில் பிரிட்டன் குறுக்கிட்டுப் போரைத் தடுத்ததோ டன்றித் துருக்கியுடன் ஒரு புதிய உடன்படிக்கையை நேசநாடுகள் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியது. அதுவே லாசென் உடன் படிக்கையாகும் (Treaty of Lawsane, 1922). அதன்படி கான்ஸ் டான்டிநோபிள், ஸ்மிர்னை, ஆசியா மைனர் ஆகிய இடங்கள் துருக்கிக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. போரை அடுத்து பிரிட்டிஷாரின் பாதுகாப்புக்குட்பட்டிருந்த ஈராக் நாட்டின் எல்லை களை பிரிட்டனும் துருக்கியும் நிர்ணயித்துக் கொண்டன. பிரிட்டி ஷார் பொறுப்பாளராட்சி அடைந்திருந்த எகிப்துக்கு முழுச் சுதந் தரம் கொடுக்கவும் துருக்கி ஒப்புக்கொண்டது. முதலாம் உலகப் போரில் பகைநாடுகளாக இருந்த பிரிட்டனும், துருக்கியும் அங்ஙனமாகத் தங்களுக்குள்ளிருந்த சிக்கல்களை யெல்லாம் சுமுக மாகத் தீர்த்துக்கொண்டு நட்பு நாடுகளாக மாறியிருந்தன.

இங்கிலாந்தும் ஃபிரான்சும்

முதலாம் உலகப் போரில் இணைந்து போரிட்ட அவ் விரு நாடுகளுக்கிடையே, பாரிஸ் சமாதான ஒப்பந்த காலத்திலிருந்தே

வேறுபாடுகள் தோன்றின. போருக்குக் காரணமான ஜெர்மனியைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டு மென்ற ஃபிரெஞ்சுக் கொள்கையை இங்கிலாந்து முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டியது. வெர்சேல்ஸ் உடன்படிக்கையால் ஜெர்மனி மீது ஃபிரான்சின் வற்புறுத்தலினுல் சுமத்தப்பட்டிருந்த கடுமையான நிபந்தனைகளைப்பற்றி இங்கிலாந்தின் பிரதமர் லாயிட் ஜார்ஜ் ஒரு சமயம் 'ஜெர்மனி என்ற பசுவிடமிருந்து ஒரு காலத்தில் பாலையும், இறைச்சியையும் பெற முடியா'தெனச் சொல்லியது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனப் போக்கைக் காட்டுவதாகவே இருந்தது. ஆனல், பழிவாங்கும் உணர்ச்சியால் உந்தப்பட்டிருந்த ஃபிரான்ஸ் ஜெர்மனிக்கு இரக்கம் காட்டத் தயாராக இல்லை. சுயேச்சையான திருப்தி கொண்ட வளமுள்ள ஜெர்மனி நாகரிகத்திற்கு அவசியமானது என இங்கிலாந்து கருதியபோதிலும், ஃபிரான்சின் வற்புறுத்தலுக்கு பிரிட்டிஷார் இணங்க வேண்டியிருந்தது. தான் கொடுக்க வேண்டியிருந்த போர் நஷ்ட ஈட்டுப் பணத்தை ஜெர்மனி கொடுக்க இயலாதிருந்தபோது ஜெர்மனியின் தொழில் வளம் நிரம்பியிருந்த ரூர் (Ruhr) பகுதியை ஃபிரான்ஸ் தன் படையைக் கொண்டு கைப்பற்றிக்கொண்டபோது (1923) இங்கிலாந்து அதை வெளிப்படையாகக் கண்டித்ததோடுமட்டுமன்றி அப் பகுதியை விட்டு ஃபிரெஞ்சுப் படைகள் அடுத்த ஆண்டில் வெளியேற்றப்படும்வரையில் அந்த நாட்டு அரசாங்கத்தை வற்புறுத்திக்கொண்டே இருந்தது. ஜெர்மனியால் மீண்டும் ஃபிரான்சுக்குப் படையெடுப்பு அபாயம் ஏற்படுவதைத் தடுக்கவும் ஜெர்மனி ஃபிரான்ஸ் எல்லைகளைத் திட்டவட்டமாக வரையறுக்கவும் 1925-ல் ஸ்விட்சர்லாந்திலிருக்கும் லொகார்னே (Locarno) என்ற இடத்தில் ஃபிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடிப் பேசிச்செய்துகொண்டிருந்த உடன்பாட்டில் இங்கிலாந்தும் கலந்துகொண்டிருந்தது. வெர்சேல்ஸ் உடன்பாட்டின்கீழ் ஜெர்மனியைச் சேர்ந்த ரைன் (Rhine) பகுதியில் வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் ஃபிரெஞ்சுப் படைகளோடு சேர்ந்து திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டன. 1925 லிருந்து 1930 ஆம் ஆண்டுவரை இங்கிலாந்தும் ஃபிரான்சும், வருங்கால அமைதியைக் காக்க ஒத்துழைத்தன.

இங்கிலாந்தும் அமெரிக்காவும்

இங்கிலாந்து ஏராளமான போர்க்கடனை அமெரிக்காவுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இங்கிலாந்துக்கு மற்ற ஐரோப்பிய நாடுகள் போர்க்கடனைத் தரவேண்டியிருந்தன. போர்க்காலத்தில் கொடுக்கப்பட்டிருந்த கடனையெல்லாம் தள்ளிவிட வேண்டு

மென்றும், பொது நன்மைக்காகப் பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்குக் கொடுத்த அன்பளிப்பாக அக் கடன்கள் கருதப் படவேண்டு மென்றும் இங்கிலாந்து சொன்னதை அமெரிக்கா ஏற்க மறுத்தது. அதன் பின்னர், அமெரிக்காவுக்குத் தான் கொடுக்கவேண்டிய கடன் தீர்க்கப்படுமளவுக்கு ஃபிரான்ஸ் - இத் தாலி ஆகிய இரு நாடுகளிடமிருந்துமட்டும் தான் கொடுத் திருந்த போர்க்கடனை வசூலிப்பதென இங்கிலாந்து முடிவு செய்தது. ஆகவே, 1923-ல் அமெரிக்காவுடன் செய்துகொள்ளப் பட்டிருந்த உடன்பாட்டின்படி தன் போர்க்கடனை 62 வருடங் களில் படிப்படியாகத் தீர்க்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. 1931 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த பொருளா தார நெருக்கடியின் விளைவாக ஜெர்மனியாலும் போர் நட்ட ஈட்டுப்பணத்தைக் கொடுக்க முடியவில்லை. நேச நாடுகளாலும் பிரிட்டனுக்குப் போர்க்கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அந் நிலையில் தன் கடனைச் சிறு கட்டணங்களால் இங்கிலாந்து தீர்க்க முனைந்தபோது அமெரிக்கா அதற்கு ஒப்புக்கொள்ளாத தால் 1934-ல் போர்க்கடனைத் திருப்பிக் கொடுக்க இங்கிலாந்து மறுத்து விட்டது.

அந்தப் பொருளாதாரச் சிக்கலால் ஆங்கிலோ-அமெரிக்க உறவு எவ்வகையிலும் பாதிக்கப்பட வில்லை. இரண்டாம் உலகப் போர் ஆரம்பிக்கப்பட்ட காலம்வரையில் அமைதிக்காக அவ் விரு நாடுகளும் இணைந்து செயலாற்றின.

கிலாந்தும் ரஷ்யாவும்

புரட்சியைத் தொடர்ந்து போரிலிருந்து விலகியிருந்த ரஷ்யா வில் கம்யூனிஸ்டு அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்க, அது தன் நாடு கொடுக்க வேண்டியிருந்த போர்க்கடனை பிரிட்டனுக்குக் கொடுக்க மறுத்ததோடன்றி பிரிட்டிஷாரை எதிர்த்துக் கொள்கைப் பிர சாரம் செய்துவந்தது. இருப்பினும் 1921 ஆம் ஆண்டில் ரஷ்யா வுடன் வியாபார உடன்பாட்டை இங்கிலாந்து ஏற்படுத்திக் கொண்டதோடன்றி 1924-ல் பெயரளவுக்குச் சோவியத் ரஷ்யா வுக்கு அங்கீகாரமும் கொடுத்திருந்தது. இங்கிலாந்தில் தொழிற் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியிருந்தபோது (1929) ரஷ்யாவுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றும் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் இரு நாடுகளுக்கிடையே சந்தேக மனப்பான்மை தொடர்ந் திருந்துவந்தது. ஆனால், ஜப்பானின் ஆதிக்க வெறியும் நாஜி (Nazi) ஜெர்மனியின் போர்க்கோலமும் ரஷ்யாவை பிரிட்ஷாரிடம் நெருங்கி வரச் செய்தது. இடையிலே நிலவிய அந்த நல்லுறவு

1938ஆம் ஆண்டு வரையில் நீடித்தது. செக்கோஸ்லோவேகியா நாட்டை ஹிட்லர் ஆக்ரமிக்க முயன்றபோது பிரிட்டனுடன் சேர்ந்து அதைத் தடுக்கத் தயாராக இருப்பதாக ரஷ்யா சொல்லியிருந்தும் ஜெர்மனியின் வற்புறுத்தலுக்கிணங்கி மியூனிச்(Munich) நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் ரஷ்யா அழைக்கப்படாததால் ஆங்கிலோ-ரஷ்ய உறவு அதன் பின்னர்ச் சற்று முரிய ஆரம்பித்தது.

இங்கிலாந்தும் அச்சு நாடுகளும்

தான் மற்ற நாடுகளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிகளை மீறி ஜப்பான் 1932 ஆம் ஆண்டில் சீனாவின் வளமிக்க பகுதியான மஞ்சூரியாவைக் (Manchuria) கைப்பற்றியிருந்தபோது அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகள் பலத்த கண்டனங்களை எழுப்பியதைத் தொடர்ந்து பிரிட்டனும் வாயளவில் தன் கண்டனத்தைத் தெரிவித்திருந்ததே தவிர ஜப்பானியர்களின் ஆக்ரமிப்பைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி வடகிழக்கு ஆஃபிரிக்க நாடான அபிசீனியாவை (Abyssinia) ஆக்ரமித்தபோது அதன் அரசர் பிரிட்டனில் சரண்புகுந்து தம் நாட்டைக் காக்குமாறு வேண்டியபோதும் பிரிட்டன் வாளாவிருந்தது இத்தாலியைப் பொருளாதார நிர்பந்தங்களுக்கு (economic sanction) உட்படுத்த வேண்டுமென சர்வதேச சங்கம் அறிவித்திருந்தபோதும் பிரிட்டன் தன் பூரண ஒத்துழைப்பை அதற்குக் கொடுக்கவில்லை.

ஜப்பானின் மஞ்சூரிய ஆக்ரமிப்பும் இத்தாலியின் அபிசீனியப் படையெடுப்பும் சர்வதேச சங்கத்தை மிகவும் பலவீனமடையச் செய்தன. வல்லரசு என்ற நிலைபெற்று சர்வதேச சங்கத்தின் நிரந்தர உறுப்பினர்களிலே ஒரு நாடாக இருந்த இங்கிலாந்து அவ்விரு நாடுகளின் வலுத்தாக்குதல்களைத் தடுக்கத் தக்க உதவி புரிந்திருந்தால் இரண்டாம் உலகப்போரைத் (1939) தொடங்கப் போகும்ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்திருக்கும். ஆயின், இங்கிலாந்து அவ்விரு நாடுகளைப் பொறுத்தவரையில் சற்றுப் பொறுப்பற்ற முறையில் ஆரம்பித்தில் நடந்துகொண்டது.

இங்கிலாந்தும் ஹிட்லரும்

அடுத்து ஆங்கிலோ ஜெர்மனிய விவகாரத்தைக் கவனிப்போம்:

பாரிஸ் சமாதான மாநாட்டைத் தொடர்ந்து ஜெர்மனியின் மீது வெர்சேல்ஸ் உடன்பாடு (1919) திணிக்கப்பட்டிருந்ததை நாம் முன்னரே கண்டோம். அதன் கடுமையான நிபந்தனைகளால் கெய்சரின் முடியுறப்பை ஒட்டி ஜெர்மனியில் அமைக்கப்பட்டிருந்த குடியரசின் எதிர்காலம் பாதிக்கப்படலாமெனவும் அதன் விளைவாக அந்நாட்டில் எதிர்க் கிளர்ச்சிகள் ஏற்படலாமெனவும் பிரிட்டன் அஞ்சியது. ஆகவே, ஜனநாயகக் குடியரசு ஜெர்மனியில் தழைக்க வேண்டுமென்றுல் போரினுல் அந்நாட்டுக்கு ஏற்பட்டிருந்த பிரச்சினைகளைத் திருப்திகரமாகத் தீர்க்கவேண்டுமென்றே இங்கிலாந்து நினைத்தது. ஃபிரான்சு போன்ற நேசநாடுகள் அதற்கு ஒத்துவர மறுத்தபோதிலும் இங்கிலாந்து தயக்கம் காட்டவில்லை. பிரிட்டிஷாருக்கு ஜெர்மனி கொடுக்க வேண்டியிருந்த போர் நஷ்ட ஈடும் சில காலத்துக்குப் பின் தள்ளப்பட்டிருந்தது. ஜெர்மனியின் வளமான ரூர் (Rhur) பகுதியைப் போர் நஷ்ட ஈட்டைப் பெற முடியாமல் போன ஆத்திரத்தில் ஃபிரான்சு கைப்பற்றிக் கொண்டபோது (1923) இங்கிலாந்து அதைக் கண்டித்த தோடன்றி அங்கிருந்து ஃபிரான்சுக்காரர்களை வெளியேற்றும்வரை வற்புறுத்திக் கொண்டே வந்தது. மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஜெர்மனிக்குச் சம அந்தஸ்து கொடுக்க லொகார்னே உடன்பாடு (1925) ஏற்படுவதற்கு இங்கிலாந்து முயற்சி எடுத்திருந்தது. பிரிட்டன், ஜெர்மனி, ஃபிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் போன்ற நாடுகள் கையெழுத்திட்டிருந்த அவ் வுடன்பாடு அந் நாடுகளுக்குள் வலுத்தாக்குதல் ஏற்படுவதைத் தடைசெய்தது. இப் பெருமுயற்சியால் ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேர்க்கப்பட்டதன்றி (1926) அதன் கவன்சிலிலும் நிரந்தர ஸ்தாபனத்தைப் பெற்றது. வெர்சேல்ஸ் உடன்பாட்டின்படி ஜெர்மானியர்களுக்குச் சொந்தமான ரைன் நதிப் பிரதேசத்திலிருந்து பிரிட்டிஷ் படையினர் 1931-ல் திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டனர். 1933 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் சர்வாதிகாரம் பெற்றிருந்த நாஜிக் கட்சித் தலைவர் ஹிட்லர் (Hitler) தம் போர்த்தளவாடங்களை அதிகரித்தும் கட்டாய ராணுவ சேவையைப் புகுத்தியும் படைப் பலத்தை அதிகரித்தும் வெர்சேல்ஸ் உடன்பாட்டை ஏற்க முடியாதென மறுப்பும் தெரிவித்தபோதுதான் ஜெர்மனியைச் சந்தேகக் கண்கொண்டு பிரிட்டன் நோக்கியது. இருப்பினும் பிரிட்டன் 1935 ஆம் ஆண்டில் ஹிட்லருடன் ஒரு கப்பற்படை ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது; அதன்படி பிரிட்டிஷ் கடற்படையின் எண்ணிக்கைக்கு முப்பத்தைந்து சதவீதத்திற்கு மிகாமல் தன் கடற்படையைப் பெருக்கிக்கொள்ள ஜெர்மனி அனுமதிக்கப்பட்டது. ஹிட்லரின் இராணுவப் பேராசைக்கு முட்டுக்

கட்டையிட்டு பிரிட்டன் நினைத்த அந் நேரத்தில் அச் சர்வாதி காரி வெர்சேல்ஸ் உடன்பாட்டை மீறி ரைன் நதிப் பிரதேசத் தைக் கைப்பற்றிக்கொண்டார் (1936). அடுத்து, 10 மில்லி யன் ஜெர்மன் சிறுபான்மையினரைக் காப்பதே தன் குறிக்கோள் எனச் சொல்லிக்கொண்டு 1938 ஆம் ஆண்டில் ஆஸ்திரியா வையும் ஹிட்லர் கைப்பற்றிக் கொண்டபோது பிரிட்டன் சற்றே விழித்தெழுந்தது. ஸ்பெயினில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் ஐரோப்பிய நாடுகள் நடுநிலைமை வகிக்கவேண்டுமென பிரிட்டன் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தும் ஹிட்லர் அதில் தலையிட்டு ஃபிராங்கோ (Franco) கட்சியினருக்கு உதவி செய்தது ஜெர்மனி யின்மீது பிரிட்டனுக்குக் கசப்புணர்ச்சியை உண்டாக்கியிருந்தது.

நாட்டாசை பிடித்த ஹிட்லரின் கவனம் அடுத்து செக்கோஸ் லோவேகியா (Czehoslovakia) மீது திரும்பியது. அதனைச் சேர்ந்த சுடெட்டென்லாந்து (Sudetenland) என்ற பகுதியில் ஜெர்மானிய சிறுபான்மையினர் வாழ்ந்தனர். ஆகவே, சுடெட்டென்லாந்தை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும்படி ஹிட்லர் செக்கோஸ்லோ வேகியாவை மிரட்ட ஆரம்பித்தார். ஃபிரான்சின் உதவியை எதிர்பார்த்து ஏமாந்து, இறுதியில் ஹிட்லரின் இராணுவ அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி செக்கோஸ்லோ வேகியா பிரிட்டனிடம் முறையிட்டுக்கொண்டது.

அமைதியில் நாட்டம் கொண்டவரான பிரிட்டிஷ் பிரதமர் நெவில் சேம்பர்லேன் என்பவர் 29-9-1938-ல் மியூனிச் (Munich) நகரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். அதில் இங்கி லாந்து உட்பட ஃபிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் கலந்துகொண்டன. சுடெட்டென்லாந்தில் வாழும் ஜெர்மன் மக்கள் சுயநிர்ணய உரிமை பெறுவது நியாயமே என்ற முடிவின் படி அப் பகுதியை ஹிட்லருக்குக் கொடுத்துவிடும்படி செக்கோஸ் லோவேகியாவுக்கு பிரிட்டன் யோசனை கூறி, அதன்படி ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. சுடெட்டென்லாந்தைக் கொடுப்பதன்மூலம் ஹிட்லரின் நிலப்பசி அடங்கிவிடுமென பிரிட்டன் தப்புக்கணக்கிட்டது. செக்-ஜெர்மனித் தகராறு ஒரு போரில் முடியக்கூடாதெனவும் பிரிட்டன் விரும்பியது. அத் தகராற்றின் காரணமாகப் போர் ஒன்று மூளுமானால் ஆயுதக் குறைப்பு செய்துவந்த இங்கிலாந்து மீண்டும் போரில் தலையிடக் கூடிய தர்மசங்கடமான நிலை ஏற்படுமென சேம்பர்லேன் உணர்ந்திருக்கவும்தான் மியூனிச் மாநாடு நடத்தப்பட்டிருந்தது. ஆயின், அவை அத்தனையும் பிரிட்டனைப் பொறுத்தவரையில் தப்புக்கணக்காகவே இருந்தன. சுடெட்டென்லாந்தை ஹிட்ல

ரிடம் சரண் செய்துவிட்டு, தாம் கௌரவத்தோடு கூடிய அமைதியைப் பெற்றுவிட்டதாக சேம்பர்லேன் பெருமையடித்துக் கொண்டார்.

சேம்பர்லேனின் சாந்தப்படுத்தும் கொள்கை (Appeasement policy) ஹிட்லரின் மிரட்டல் கொள்கைக்கு ஊக்கமளிப்பதாக இருக்க இங்கிலாந்தில் பல கண்டனக் குரல்கள் எழும்பின. 'முதல்தரமான அழிவு' என மியூனிச் தீர்மானத்தை வின்ஸ்டன் சர்ச்சிலும் 'பலாத்காரக் கொள்கைக்கு மாபெரும் வெற்றி' என அம்ரி (Amrey) என்பவரும் தாக்கலாயினர். ஹிட்லரைத் திருப்திப் படுத்துவது எவ்வளவு கடினமானதென்பதை சேம்பர்லேன் அடுத்த ஆண்டே உணர்ந்துகொண்டார். தம் இராணுவ பலத்தைக்கொண்டு ஹிட்லர் லிதுவேனியாவிடமிருந்து (Lithuvania) ஜெர்மானியர் வாழ்ந்துவந்த மெமல்நாட்டையும் (Memelland) செக்கோஸ்லோவேகியாவின் ஏனைய பகுதிகளையும் கைப்பற்றிக்கொண்டபோது ஹிட்லரைச் சாந்தப்படுத்தும் கொள்கை எவ்வளவு தவறுன தென்பதை சேம்பர்லேன் உணரலானார்.

ஆக்ரமிப்பு வெறிகொண்டிருந்த ஹிட்லர் தம் கவனத்தை அடுத்து போலந்தின்மீது திருப்பினர். டான்ஜிக் (Danzig) துறைமுகத்தை ஜெர்மனிக்குத் தரவேண்டுமென்றும் 'போலந்தின் வழி' (Polish Corridor) எனப்படும் பகுதியில் இரயில்பாதை அமைக்க ஜெர்மனிக்கு அனுமதி தரப்பட வேண்டுமென்றும் ஹிட்லர் அறிவித்திருக்க, போலந்து அரசு அதை மறுத்தது. ஆகவே, போலந்தின்மீது படையெடுக்கப்போவதாக ஹிட்லர் மிரட்ட ஆரம்பித்தார். ஹிட்லரால் போலந்து தாக்கப்பட்டால் பிரிட்டன் அந் நாட்டுக்கு உதவியாகப் போரில் இறங்க நேரிடுமென சேம்பர்லேன் எச்சரிக்கை விடுத்திருந்தார். அதற்கேற்ப 1939ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரிட்டன் போலந்துடன் ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டது. ஃபிரான்ஸ் நாடும் பிரிட்டனின் வழியைப் பின்பற்றிப் போலந்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. அங்ஙனம் செய்துகொள்ளப்பட்டிருந்த அவ்வுடன்படிக்கை போலந்தை மற்றொரு செக்கோஸ்லோவேகியாவாக ஹிட்லர் எண்ணிவிடக்கூடாதென ஓர் எச்சரிக்கை விடுவதாகவே இருந்தது. அதனால் ஹிட்லர் சற்றுத் தயங்கலானார். தாம் போலந்தைத் தாக்கினால், பிரிட்டனும் ஃபிரான்சும் போரில் இறங்கலாமெனவும் அதற்கு ரஷ்யா உதவிக்கு வரலாமெனவும் ஹிட்லர் அச்சம் கொண்டார். அவ்வாறு ஒரு போர் ஏற்பட்டால் மேற்கிலும் கிழக்கிலும் ஜெர்மனி போர் செய்ய வேண்டியிருக்குமென ஹிட்லர் நினைத்தார். ஆகவே, நேசநாடு

களிடமிருந்து ரஷ்யாவைப் பிரிக்க ஹிட்லர் திட்டமிட்டு 1939ஆம் ஆண்டில் அந்த நாட்டுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆக, 11-8-1939-ல் போலந்தின் உரிமையைக் காக்க ரஷ்யா பிரிட்டனுடு ஒத்துழைக்க வேண்டுமென சேம்பர்லேன் கேட்டுக்கொண்டபோது ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின் (Stalin) அதற்கு மறுத்துவிட்டதோடன்றித் தம் நாடு பிரிட்டனுடு முன்பு ஏற்படுத்திக்கொண்டிருந்த உடன்பாட்டை உதறிவிடுவதாகவும் அறிவித்தார்.

ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்ட ஹிட்லர் ஆங்கிலோ - ஃபிரெஞ்சு எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் 1-9-1939-ல் போலந்தின்மீது படையெடுத்தார். போலந்திலிருந்து உடனே அகலும்படி பிரிட்டன் ஜெர்மனிக்கு ஓர் இறுதி எச்சரிக்கை விடுத்திருந்தும், ஹிட்லர் அதைப் பொருட்படுத்தாத்தால் செப்டம்பர் 3ஆம் தேதி (1939) ஜெர்மனியின்மீது போர் தொடுப்பதாக இங்கிலாந்து அறிவித்தது.

இங்கிலாந்தும் ஆயுதக் குறைப்பும் (Disarmament)

போர்ப் பயத்தைத் தீர்க்க ஒவ்வொரு நாடும் போர்த் தளவாடங்களைக் குவிக்காமல் அதன் உற்பத்தியைக் குறைத்து ஆயுதக் கட்டுப்பாட்டை (Disarmament) அனுசரிக்க வேண்டுமென்ற கோட்பாட்டில் பிரிட்டன் மிகுந்த நம்பிக்கைகொண்டு அதைத் தன் கொள்கையாகப் பின்பற்றியதல்லாமல் ஆயுதக் குறைப்பு மாநாடுகளில் அவ்வப்போது கலந்துகொண்டு அதை வெற்றிகரமாக அமலாக்கவும் முயன்றது. அங்ஙனம் கூட்டப்பட்டிருந்த மாநாடுகளில் 1922ஆம் ஆண்டில் வாஷிங்டன் நகரில் நடத்தப்பட்ட ஒன்றினை மேற்கோளாகக் காட்டலாம். பிரிட்டன் அதில் முக்கியப் பங்கேற்றது. அதில் அமெரிக்கா, ஜப்பான், ஃபிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளும் கலந்துகொண்டன. அங்கு பிரிட்டனும் மற்ற நான்கு நாடுகளும் செய்துகொண்டிருந்த கப்பற்படை உடன்பாட்டின்படி (Naval Agreement) அடுத்த பத்து ஆண்டுக் காலத்திற்கு அந்த நாடுகள் புதிய போர்க்கப்பல்களைக் கட்டக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி 5, 5, 3, 1·75, 1·75 ஆகிய சதவீதத்திற்கு மேற்படாமல் தங்கள் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி வைக்க முறையே பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், ஃபிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் அம் மாநாட்டின்படி ஒப்புக்கொண்டன. எந்த நாடும் போரின்மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயலக் கூடாதென அமெரிக்க அமைச்சர் கெல்லாக் என்பவரும்

ஃபிரெஞ்சு அமைச்சர் பிரியாண்ட் என்பவரும் செய்துகொண்டிருந்த கெல்லாக்-பிரியாண்டு உடன்பாட்டினை (Kellog-Briand Pact, 1928) இங்கிலாந்தும் ஒப்புக்கொண்டிருந்தது. ஆயுதக் குறைப்பை அமல் நடத்த 1929-ல் நடைபெற்ற ஆயுதக் குறைப்பு மாநாட்டில் நச்சுப்புகையைப் போரில் எந்த நாடும் பயன்படுத்தக் கூடாதெனக் கொண்டுவரப்பட்டிருந்த ஒரு தீர்மானத்தை பிரிட்டன் ஏற்றுகொண்டிருந்தது. இலண்டன் மாநகரில் கூட்டப் பட்ட ஒரு நாவாய் மாநாட்டில் (Naval Conference, 1930) தன் கப்பற்படைப் பலத்தைக் குறைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டு, அதற்கேற்பத் தன் ஐந்து போர்க்கப்பல்களை பிரிட்டன் வலிய உடைத்தெறிந்தது. சர்வதேசப் பிரச்சினைகளை ஆயுத பலத்தா லன்றிப் பரஸ்பரப் பேச்சு வார்த்தைகளால் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானத்தையும் 1935ஆம் ஆண்டில் பிரிட்டன் கொண்டுவந்திருந்தது. ஆயின், உதட்டளவில் ஆயுதக் குறைப்புச் செய்வதாக ஏனைய நாடுகள் சொல்லிவந்ததை நம்பி, பிரிட்டன் தன் படைபலத்தையும், போர்த் தளவாடங்களின் தயாரிப்பையும் குறைத்து வந்ததாலேயே, ஜப்பானின் மஞ்சூரியத் தாக்குதலையும், இத்தாலியின் அபிசீனிய ஆக்ரமிப்பையும் எதிர்த்துச் செயல்பட அந் நாட்டால் முடியவில்லை. சர்வதிகாரி ஹிட்லரின் போர் ஆயுதங்களைக் கண்ட பிறகே, பிரிட்டன் தன் படையையும், போர்த்தளவாடங்களையும் பெருக்கிக்கொள்ள முனைந்தது.

இரண்டாம் உலகப்போர் தொடங்கிய நேரத்தில் பிரிட்டன் போருக்கு ஆயத்தமாக இல்லை யென்பதற்கு, அந் நாடு நேர்மை யுடன் அதுவரை ஆயுதக் குறைப்பைச் செய்து வந்ததென்பதே எடுத்துக்காட்டாக இருந்தது.

(ஆ) இங்கிலாந்தும் இரண்டாம் உலகப்போரும் (1939-1945)

போலந்து நாட்டின் சுதந்தரத்தைக் காக்க பிரிட்டன் ஜெர்மனியோடு மோதியதால் தொடங்கப்பட்டிருந்த இரண்டாம் உலகப்போருக்குப் பல அடிப்படைக் காரணங்கள் இருக்கத்தான் செய்தன.

போருக்கான காரணங்கள்

வில்சனின் பதினான்கு கோட்பாடுகளை அடிப்படையாக் வைத்து 1918ஆம் ஆண்டில் போர் நிறுத்தப்பட்டபோதிலும்;

அடுத்து நடத்தப்பட்ட பாரிஸ் மாநாட்டில் (1919) அக் குறிப்புகளில் பல காற்றிலே விடப்பட்டிருந்தன. நேச நாடுகள் பழி வாங்கும் உணர்ச்சியால் உந்தப்பட்டு எதிரி நாடுகளைக் கடுமையாகத் தண்டித்தன. அதற்கு, வெர்சேல்ஸ் உடன்படிக்கையை ஒரு மேற்கோளாகக் காட்டலாம். ஜெர்மனியிடமிருந்து பல பிரதேசங்கள் பிடுங்கப்பட்டதன்றி அதன் குடியேற்றங்களும் அபகரித்துக் கொள்ளப்பட்டன. போர் நஷ்ட ஈட்டுத் தொகையும் அந்த நாட்டின்மீது திணிக்கப்பட்டிருந்தது. பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம் போன்ற பிரச்சினைகள் ஜெர்மனியில் ஏற்பட்டதற்கு அவ் வுடன்படிக்கையே காரணமென்றும், அதைத் தன் நாட்டின்மீது திணித்த பிரிட்டன் போன்ற நேச நாடுகளைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்றும் ஜெர்மனியர்கள் நினைக்கலாயினர். அதைப் பயன்படுத்திக்கொண்டே ஹிட்லர், தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு ஜெர்மனியின் சர்வாதிகாரியானார். நேச நாடுகளின் சார்பில் முதல் உலகப்போரில் கலந்துகொண்டிருந்த இத்தாலிக்கும் பாரிஸ் மாநாட்டு உடன்பாட்டினால் ஏமாற்றம் ஏற்பட்டிருந்தது. நேச நாடுகளுக்கு உதவி செய்தால் இத்தாலியர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லப்பட்ட திரிபோலி (Tripoli), டால்மேஷியக் கடற்கரை (Dalmation Coast) முதலியன அவர்களுக்குக் கொடுக்கப்படாததால், இத்தாலிக்கு பிரிட்டன் போன்ற நேச நாடுகள்மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தது.

அவ் வெறுப்பைப் பயன்படுத்திக்கொண்டு முசோலினி செல்வாக்கைப் பெற்று இத்தாலியின் சர்வாதிகாரியாக அதிகாரம் பெற்றார். அங்ஙனமாக, வெர்சேல்ஸ் உடன்படிக்கையினாலேற்பட்ட வெறுப்பும் அதிருப்தியும் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் சர்வாதிகாரிகளைத் தோற்றுவித்தது. ஆக்ரமிப்பு வெறிகொண்ட அந்தச் சர்வாதிகாரிகளே போருக்கு மூலகாரண கர்த்தாக்களாயினர்.

நேச நாடுகளின் சார்பில் முதல் போரில் கலந்துகொண்டிருந்த ஜப்பானுக்கும், உலகப்போர் முடிந்த பிறகு எதிர்பார்த்த இலாபங்கள் கிடைக்காமல் போக, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின்மீது வெறுப்புக்கொண்டு ஆக்கிரமிப்புச் செயலில் இறங்குவதற்காக இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டது. அதுவே, 'பெர்லின்-ரோம்-டோக்கியோ உடன்பாடு' (Berlin-Rome-Tokyo Axis) என்பதாகும். உலக அமைதியைக் குலைக்கும்வண்ணம், அம் மூன்று நாடுகளும் பல ஆக்ரமிப்புச் செயல்களில் இறங்கியிருந்ததே இரண்டாம் உலகப்போருக்குத் தலையாய காரணமாக இருந்தது.

குடியேற்ற நாடுகளுக்கான போட்டியும் அப் போருக்கு முக்கியக் காரணமாக அமைந்திருந்தது. தொழில் துறையில் முன்னேற்றமடைந்துவந்த ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு மூலப்பொருள்களைப் பெறுவதற்கும், பொறிசெய் பொருள்களை விற்பதற்கும் குடியேற்ற நாடுகள் தேவைப்பட்டன. பெருகிவரும் மக்கள் கூட்டத்தைக் குடியேற்றவும் அந் நாடு களுக்குக் - குறிப்பாக ஜப்பானுக்குக் - குடியேற்றங்கள் தேவைப் பட்டன. பிரிட்டன், ஃபிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் உலகின் பல பாகங்களில் குடியேற்றங்களைப் பெற்றிருந்ததால், அவைகளுக்குப் போட்டியாக அல்லது அவைகளிடமிருந்து பலவந்தமாகக் குடியேற்றங்களைப் பிடுங்க, அச்சு நாடுகள் முடிவுக்கு வர, அது போரில் கொண்டுவிட்டது.

நாடுகளிடையே நிலவியிருந்த கொள்கை வித்தியாசமும் அப் பெரும்போருக்குக் காரணமானது.

பிரிட்டன், ஃபிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஜனநாயகக் கொள்கையும் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளின் சர்வாதிகாரப் போக்கும் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தன. 'நாங்களாவது வாழவேண்டும்; அவர்க ளாவது வாழவேண்டும். கொள்கை மாறுபட்ட இரு உலகங் களுக்கிடையே சமரசத்திற்கு வழியே இல்லை, என முசோலினி குறிப்பிட்டிருந்ததை ஒரு மேற்கோளாகக் காட்டலாம். ஜன நாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடந்த கொள்கைப் போராட்டமே இரண்டாம் உலகப் போராகும்.

போரைத் தடுக்க நிறுவப்பட்டிருந்த சர்வதேச சங்கமும், ஜப்பான் 1931-ல் மஞ்சூரியாவைத் தாக்கியபோதும், இத்தாலி 1936-ல் அபிசீனியாவைக் கைப்பற்றியபோதும் ஜெர்மனி 1938-ல் ஆஸ்திரியாவை ஆக்ரமித்து இணைத்துக்கொண்ட போதும், செயலற்று இருக்க, மேன்மேலும் வலுத்தாக்குதல்களில் இறங்க அச்சு நாடுகள் தெம்பு பெற்றன. அதன் விளைவாகப் போர் தவிர்க்கப்படாததாயிற்று.

சுயநலத் தீவிர தேசிய உணர்ச்சியால் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருந்த ஜெர்மனி மற்ற நாடுகளை ஆக்கிரமிக்க ஹிட்லரின் தலைமையில் தயாரானது. 'ஜெர்மானியர்கள் உலகை ஆளப் பிறந்தவர்கள்' என ஹிட்லர் சொல்லிவந்தது அவரது போர் வெறியைக் காட்டுவதாக இருந்தது. உலகப் பேரரசை அமைக்க வேண்டும் என்று அவர் கனவு கண்டுவந்தது உலக அமைதியைக் குலைப்பதாக இருந்தது. ஹிட்லருக்குத் தாம் சளைத்தவரல்லர்

எனக் காட்டுவதுபோல் இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினியும் பழங்கால ரோமப் பேரரசைப் போன்று மத்திய தரைக்கடல் பகுதியில் ஓர் இத்தாலியப் பேரரசை நிறுவ ஆசை கொண்டு, அதற்கான வலுத்தாக்குதல்களில் இறங்க ஹிட்லரைக் கூட்டாளியாக்கிக் கொண்டிருந்தார். 1939ஆம் ஆண்டு மே மாதம் ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும் இடையே ஏற்பட்டிருந்த ஓர் உடன்பாடு இரு போர் வெறியர்களுக்கிடையே செய்து கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தமாகவே இருந்தது. அவ் விரு சர்வாதிகாரிகளின் வெறித் திட்டங்களே போருக்குக் காரணமாக அமைந்தன. அத்துடன் பசிபிக் பிராந்தியத்தில் ஆங்கிலோ-அமெரிக்கச் செல்வாக்கை அழித்து ஒரு பேரரசை நிறுவ ஜப்பானியர்களும் போருக்கு ஆயத்தமாகி வந்தனர். ஆக, இராணுவ வெறியால் உந்தப்பட்டு ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய அச்சு நாடுகளின் (Axis Powers) பலாத்காரக் கொள்கையும் (Aggressive Policy) அப் பெரும் போருக்குக் காரணமாக அமைந்தது.

அங்ஙனமாகப் போருக்குப் பல அடிப்படைக் காரணங்கள் இருந்தன. அதுவுமின்றி ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேகியா, மெமல் போன்றவற்றை ஆக்ரமித்துக்கொண்டிருந்த ஹிட்லர் 1939ஆம் ஆண்டில் போலந்தைத் தாக்கியது போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

போலந்தின் சுதந்தரத்தைக் காக்க பிரிட்டனும், ஃபிரான்சும் ஜெர்மனியோடு போர் தொடுக்க அதுவே இரண்டாம் உலகப் போரின் ஆரம்பமாக அமைந்தது. ஹிட்லரோடு 1939-ல் செய்துகொண்ட உடன்பாட்டின்படி ரஷ்யா நேச நாடுகளுக்கு உதவ மறுத்தது. ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன், ஃபிரான்ஸ் போன்ற நேச நாடுகளுக்கு அஃது ஓர் இழப்பாகவே இருந்தது. அத்துடன் நாட்டாசை கொண்ட இத்தாலிய சர்வாதிகாரி ஜெர்மனியுடன் சேர்ந்து நேச நாடுகள்மீது போர் தொடுத்தது, நிலைமையை மேலும் மோசமாக்கியது.

டொமினியன்களின் ஆதரவு பெற்ற இங்கிலாந்தும், ஃபிரான்சும் ஒருபுறம்; நாஜி ஜெர்மனியும், பாசிச இத்தாலியும் மறுபுறம்; பலப்பரிட்சைக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு போரில் 1939ஆம் ஆண்டில் இறங்கின.

போரின் போக்கு

போலந்தின்மீது தொடுத்தப்பட்ட ஜெர்மானியத் தாக்குதலைத் தொடர்ந்திருந்த இரண்டாம் உலகப்போர் இரண்

டாண்டுகளில் ஐரோப்பா முழுவதும் பரவிவிட்டது. தன் கப்பல் தளமான பெர்ல் துறைமுகத்தை (Pearl Harbour) ஜப்பானிய விமானங்கள் குண்டுவீசிச் சேதப்படுத்தியதைத் தொடர்ந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் மற்றும் அச்சு நாடுகள்மீது போர் தொடுத்திருக்க, போரின் கடுமை அதிகரித்தது. வானிலும், நீரிலும், தரையிலும் நடந்த அப் போரில் பயங்கர மான அழிவுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆர்ட்டிக் பனிப் பிரதேசத்திலிருந்து வட ஆஃபிரிக்கப் பாலைவனம்வரையிலும், அட்லாண்டிக் கடலிலிருந்து நியுகினியா காடுகள்வரையிலும் ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் கொடூரமாக நடத்தப்பட்ட அப் போரை இரு கட்டங்களாகப் பிரிக்கவேண்டி யிருக்கிறது.

1939 முதல் 1942ஆம் ஆண்டு வரை நடைபெற்றிருந்த போரில் அச்சு நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெற்றன. ஆயின், 1942 முதல் 1945 வரையிலான இரண்டாம் கட்டத்தில், அந் நாடுகள் ஒன்றன்பின் ஒன்றுகத் தோல்வியுற்றுச் சரணடைந்தன.

போலந்தை ஹிட்லரின் ஆக்ரமிப்பிலிருந்து காப்பதற்காக பிரிட்டன், ஃபிரான்ஸ் ஜெர்மனிமீது போர் தொடுத்திருந்தும் அந் நாட்டைக் காக்க முடியவில்லை. மின்னல் தாக்கு முறையைப் (Blitz Kseig)) பின்பற்றிய ஜெர்மானியர்கள் 1939ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள்ளாக, தலைநகர் வார்சா (Warsaw) உள்படப் போலந்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொண் டனர். ஹிட்லருடன் சமரச உடன்பாடு செய்துகொண்டிருந்த ரஷ்யா அதே சமயத்தில் கிழக்குப் போலந்து, லாத்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா ஆகிய பால்டிக் நாடுகளைப் கைப்பற்றிக்கொண்டது. போலந்தைக் கபளீகரம் செய்திருந்த ஹிட்லர் தம் அடுத்த ஆக்ரமிப்புத் திட்டத்திற்குத் தம்மைத் தயார்படுத்திக்கொண்டிருக்க, ரஷ்யா தன் அண்டைய நாடான பின்லாந்தைத் தாக்கியது. மூன்று மாதங்கள் பின்லாந்தினர் வீராவேசமாகப் போர் செய்துவந்தபோது, அவர்களுக்கு உதவி யாகப் படைகளை அனுப்ப பிரிட்டனும், ஃபிரான்சும் தயாராகிக் கொண்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாகப் பின்லாந்தியர் சரண டைந்துவிட்டனர். இல்லாதுபோயின் ரஷ்யாவை எதிர்த்துப் போர் செய்திருக்கவேண்டிய சங்கடமான நிலைமை பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய நேச நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும்.

1940 ஆம் ஆண்டு ஏப்ரல்வரையில் போர் நிகழ்ச்சிகள் எதுவுமில்லா மலிருந்தன. தம் அடுத்த தாக்குதலுக்கு ஹிட்லர் ஆயத்தமாகிக் கொண்டிருக்க, பிரிட்டன் தன் போர்த் தேவைகளை அதிகரித்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டிருந்தது. தம் படை

பலத்தின் வலிமையைக் கண்டு நேச நாடுகள் சமாதானத்திற்கு விழையும் என்று ஹிட்லர் நினைத்த அந்த நேரத்தில், ஸ்காண்டி நேவியா நாடுகளிலிருந்து ஜெர்மானியர்களுக்கு அனுப்பப்பட்டு வந்த கனிப்பொருள்களைத் தடுத்து நிறுத்தி ஒரு பொருளாதார முற்றுகையைத் தொடங்க நேச நாடுகள் நினைத்தன. அதை முன்கூட்டியே தெரிந்துகொண்ட ஹிட்லர் மின்னல் வேகத்தில் டென்மார்க்கைத் தாக்கிக் கைப்பற்றி கொண்டார். அதைத் தளமாகப் பயன்படுத்தி இரும்புக்கனிவளம் நிரம்பிய நார்வேயை ஆக்ரமிக்க ஹிட்லர் முற்பட்டார். நார்வேக்கு உதவியாக பிரிட்டிஷ் படைகள் அனுப்பப்பட்டிருந்தும் ஜெர்மானியர்களின் முன்னேற்றம் தடைப்படவில்லை. நார்விக் (Narvik) என்னு மிடத்தருகே நடந்த கடற்சண்டையில் ஜெர்மானியக் கப்பல்கள் பலத்த சேதத்திற்குள்ளாக்கப் பட்டிருந்தன. ஆயின் தரைச் சண்டையில் ஜெர்மானியர்களுக்குஈடுகொடுக்க முடியாத நார்வே, பிரீட்டிஷ் உதவி பெற்றிருந்தும், இறுதியில் சரணடைந்தது. பட்ட மிழந்த நார்வே மன்னர் தம் ஒரு சில அமைச்சர்களுடனும், வீரர்களுடனும் இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தார்.

1940-ல் மே மாதம் நடுநிலைமை நாடுகளான ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பெர்க் போன்றவைமீது ஏக காலத்தில் ஜெர்மனி தன் படையெடுப்பைத் தொடங்கியது. அதைத் தடுக்க ஃபிரெஞ்சுப் படைகளோடு சேர்ந்து எதிர்த்தாக்குதல் நடத்த பிரிட்டிஷ் படைகள் விரைவாக அனுப்பப்பட்டிருந்தும் ஒன்றன்பின் ஒன்றுக அந்த நாடுகள் சரணடைந்தன. டச்சு அரசியும், பெல்ஜிய மன்னரும் பிரிட்டனுக்குத் தப்பி ஓடி விட் டார்கள்.

பெல்ஜியத்தைப் பணியச்செய்த பின்னர் ஹிட்லர் மேகினுட் அரணைத் (Maginot line) தகர்த்து ஃபிரான்சுக்குள் ஊடுருவினர். பெல்ஜியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் உட னடியாக ஃபிரான்சை அடைந்தபோதும் ஜெர்மானியர்களின் முன்னேற்ற வேகத்தைத் தடுக்க முடியவில்லை. ஜெர்மானியர் களால் நெருக்கப்பட்டு முன்னேற முடியாது திணறிய பிரிட்டிஷ் படையினர் டன்கிர்க் என்ற கடலோரப்பட்டினத்திற்கு விரட் டப்பட்டனர். ஜெர்மானியர்களின் ஆதிக்க வெறியை எதிர்த்துப் போரிட ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டிருந்த 220,000 பிரிட் டிஷ் படையினர் டன்கிர்க்கில் தவித்து நிற்க, அவர்களுடன் 100,000க்கு மேற்பட்ட மற்ற நேச நாட்டு வீரர்களும் சேர்ந்தனர். அத்தனை வீரர்களையும் படுவேகமாக முன் னேறிவரும் ஜெர்மானியப் படையினரிடமிருந்து காத்து, பத்திர

மாகக் கொண்டுசெல்லவேண்டிய நிர்ப்பந்தம் இங்கிலாந்துக்கு ஏற்பட்டது. டன்கிர்க்கில் குழுமியிருந்த படைவீரர்களை இங்கிலாந்துக்கு ஏற்றிச் செல்லும் பொறுப்பை பிரிட்டிஷ் கப்பல்கள், மே மாதம் 20ஆம் தேதியில் ஆரம்பித்து ஒன்பது நாட்களில் முடித்தன. டன்கிர்க் வெளியேற்றம் வெற்றிகரமாக நடந்திருக்காவிட்டால், அத்தனைப் படையினரும் ஜெர்மானியர்களால் அழிக்கப்பட்டிருப்பார்க ளென்பதை நினைத்துப்பார்க்கும் பொழுது அத்தனைக் குறுகிய காலத்தில் அவ்வளவு வீரர்களையும் டன்கிர்க்கிலிருந்து இங்கிலாந்து வெளியேற்றியிருந்தது பெருமைப்படத்தக்க சாதனையாகும். ஜெர்மானியர்களின் பிடியில் இக்காமல் தப்புவிக்கப்பட்ட அப் படையினரில் பலர் இரண்டாண்டுகள் கழித்து மீண்டும் ஐரோப்பாவுக்குப் போர் செய்ய வர வேண்டியவர்களாக இருந்தனர்.

வடகிழக்கு ஃபிரான்சைக் கைப்பற்றியிருந்த ஜெர்மானியர் ஜூன் மாதத்தில் (1940) தங்களின் முழுப்பலத்தைப் பிரயோகித்து ஃபிரான்சின் ஏனைய பகுதிகளைத் தாக்கினர். ஹிட்லரின் கூட்டாளியான இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி, அச் சமயத்தில் தென்கிழக்காக ஃபிரான்சைத் தாக்கலானார். ஃபிரான்ஸ் பணிந்தது. பாரிஸ் நகரம் ஜெர்மானியர் வசமானது.

1940ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் நாளில் ஜெர்மானியரின் ஸ்வஸ்திக் (Swastic) கொடி ஃபிரெஞ்சுத் தலைநகரான பாரிஸ் நகரில் ஏற்றப்பட்டிருக்க, ஹிட்லரின் புகழ் உச்ச நிலையை எட்டியிருந்தது.

மேற்கு ஐரோப்பா முழுவதையும் தம் வசப்படுத்திக் கொண்டிருந்த ஹிட்லருடன் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும் சேர்ந்திருக்க, அவர்களின் எதேச்சாதிகாரத்தை யொழிக்கப் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டிய பெரும் பொறுப்பு இங்கிலாந்துக்கு ஏற்பட்டுவிட்டது. உலகின் பல பாகங்களில் சிதறிக்கிடந்த டொமினியன்களின் உதவியன்றி அச் சமயத்தில் பிரிட்டிஷாருக்கு ஐரோப்பாவில் போர் நடத்தத் துணை நாடு எதுவும் இல்லை. இருப்பினும், தளரா மனதுடன், தனித்து எதிர்த்து நிற்க பிரிட்டன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. தன்னிடம் தஞ்சம் புகுந்த அயல் நாட்டு (நாடோடி) அரசர்களுக்குப் புதுத் தெம்பை ஊட்டி, எப்படியும் ஐரோப்பாவை விடுதலை செய்து விடலாமென்ற நம்பிக்கையை வளர்த்து வந்தது. தனக்கு உதவியற்ற நிலையில், இங்கிலாந்து சமாதானம் பேச முன்வரும் என ஹிட்லர் நினைத்தது நிறைவேறவில்லை.

ஃபிரான்சின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஓராண்டுவரை ஜெர்மனியோடு தனித்து பிரிட்டன் போர் செய்ய வேண்டியதாயிற்று. அச்சமயத்தில் டொமினியன்களின் உதவியும் பலமிக்க விமானப்படையும், வலுவான கப்பற்படையும், மக்களின் ஒத்துழைப்பும், சக்தி வாய்ந்த தொழில் முறையும், அமெரிக்காவின் மறைமுக ஒத்தாசையும் இங்கிலாந்துக்குப் பேருதவியாக இருந்தன. எல்லாவற்றிக்கும் மேலாக, திறமையுடன் போரை நடத்தக்கூடிய தகுதியைப் பெற்றிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் இங்கிலாந்தின் பிரதமராகப் பதவி பெற்றிருந்தார்.

ஃபிரான்ஸ் உள்பட மேற்கு ஐரோப்பாவைப் பணியச் செய்திருந்த ஹிட்லர் பிரிட்டன்மீது நேரிடைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார். செப்டம்பர் (1940) மாதத்திற்குள் பிரிட்டனை ஹிட்லர் வெல்ல எண்ணினார். தம் படைகள் இங்கிலாந்தை அடைவதற்கு ஆங்கிலக் கால்வாயிலிருந்த பிரிட்டிஷ் கப்பற்படை பெரும் தடையாக இருப்பதை உணர்ந்து, அதை அழிக்க, தம் விமானப் படையை ஏவிவிட எண்ணினார். ஆயின், அதற்கு முன் பிரிட்டிஷ் விமானப் படையை நாசமாக்க வேண்டுமென்ற அவசியம் ஹிட்லருக்கு ஏற்பட்டது. ஆக, பிரிட்டனைப் படை கொண்டு தாக்க வேண்டுமென்றால் அதற்குமுன் அதன் கப்பற் படையையும், பிரிட்டிஷ் கப்பற்படையை அழிக்க வேண்டுமென்றால் அதற்குமுன், அப் படைக்குக் காவலாக வரக்கூடிய பிரிட்டிஷ் விமானப்படையையும் ஒடுக்கவேண்டிய நிலையில் ஹிட்லர் இருந்தார். ஆகவே, 1940 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாளில் பிரிட்டன் போர் தொடங்கியது.

ஏறக்குறைய 1,800 குண்டு வீசிப் போர் விமானங்களை பிரிட்டன்மீது ஹிட்லர் அந்நாளில் வீசினர். இங்கிலாந்தின் கடலோரப் பகுதிகளும் டோர்செட், நார்த்தும்பர்லாந்து போன்ற உள்நாட்டுப் பகுதிகளும் தாக்கப்பட்டன. ஆயின், சேதம் எதுவும் அதிகமாக ஏற்படவில்லை. இங்கிலாந்தின் கரையோரப் பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த ராடார் (Radar) நிலையங்களின் உதவியால், எதிரி விமானங்கள் வரும் திக்கையும், அவற்றின் எண்ணிக்கையையும் பிரிட்டிஷார் அறிய முடிந்தது. தங்களின் விமானப்படையினை உஷார்ப்படுத்தி ஜெர்மானிய விமானங்களைத் தாக்கலாயினர். தயாராக வைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் (Anti Aircraft Guns) எதிரி விமானங்களைச் சுட்டுத் தள்ளின. அந்த ஒரு நாள் சண்டையில் 76 விமானங்களை ஜெர்மானியர் இழந்தனர். இருப்பினும், தினம் தினம் கட்டம் கட்டமாக 1,000 க்கு மேற்பட்ட ஜெர்மானிய விமானங்கள் பிரிட்டனைத்

தாக்கலாயின. பிரிட்டிஷ் விமானங்களும் சளைக்காமல் நடுவானிலே எதிரிகளோடு சண்டையிட்டுவந்தன. பிரிட்டிஷ் விமானத்தளங்களும், தொழிற் பட்டணங்களும், தாக்கப்பட்டபோதிலும், ஆங்கிலேயர்கள் உறுதி இழக்கவில்லை. தினந்தோறும் நடந்த விமானச் சண்டைகளால் பிரிட்டிஷ் விமானப்படையும் அதிக சேதத்திற்கு உள்ளாகியிருந்தது. இன்னும் சில வாரங்களுக்கு ஹிட்லர் அந்த விமானப் போரைத் தொடர்ந்து நடத்தியிருப்பாரேயானால் பிரிட்டிஷ் விமானப்படை அழியக்கூடிய நிலையிலிருந்தது. ஆயின், ஏற்கெனவே அதிக சேதத்திற்கு உள்ளாகியிருந்த தம் விமானப் படைமேலும் நாசமடைவதை விரும்பாது தம் போர்த்திட்டத்தை ஹிட்லர் மாற்றிக்கொண்டார். பிரிட்டிஷ் விமானதளங்களைத் தாக்குவதற்குப் பதிலாக, இலண்டன் மாநகர்மீது தம் விமானங்களை ஹிட்லர் ஏவினர். 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆந் தேதி 500 குண்டு வீசி விமானங்கள் இலண்டனைத் தாக்கின. 26 விமானங்களைத் தங்கள் தரப்பில் இழந்தாலும் 56 எதிரி விமானங்களை பிரிட்டிஷார் நாசமாக்கினர்.

ஐம்பத்தேழு இரவுகள் இலண்டன், பிளைமவுத், பிரிஸ்டல், லிவர்பூல் ஆகிய நகரங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. தினம் தினம் அத் தாக்குதல்கள் தொடரப்பட்டபோதிலும், ஹிட்லர் எதிர்பார்த்ததுபோல் பிரிட்டிஷார் பணியவில்லை. ஜெர்மானிய விமானங்கள் இலண்டன் நகரைத் தாக்கிவந்ததால், பிரிட்டிஷ் விமானத்தயாரிப்புக் கேந்திரங்கள் எதிரித் தாக்குதல்களிலிருந்து தப்பியிருந்தன. ஆகவே, துரிதமாகப் பழுதடைந்த விமானங்களைச் சரிபார்க்கவும், புதுப்போர்விமானங்களைத் தயாரிக்கவும் பிரிட்டிஷாரால் முடிந்தது. ஆகவே, செப்டம்பர் மாதம் முடிந்திருந்தும் பிரிட்டிஷ் விமானப்படையை ஹிட்லரால் அழிக்கமுடியவில்லை. பிரிட்டிஷ் விமானப்படையின் பலம் ஒடுக்கப்படும்வரையில், ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பிரிட்டனை அடையமுடியாதென உணர்ந்திருந்த ஹிட்லர், இங்கிலாந்தைத் தாக்கும் தம் திட்டத்தை அடுத்த இளவேனிற் காலத்திற்கு ஒத்திவைத்தார். ஆயினும், இரவு வேளைகளில் 1941ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இலண்டன் மாநகர் ஜெர்மானிய விமானங்களால் தாக்கப்பட்டுவந்தபோதிலும், 44,000 பேர் கொல்லப்பட்டிருந்தபோதிலும், பிரிட்டிஷார் மனம் தளராமல் ஹிட்லருக்குச் சவால் விட்டுவந்தனர் என்பது போற்றத்தக்கது.

பிரிட்டன் போர் ஒரு முக்கியத் திருப்பத்தை உண்டாக்கியிருந்தது. மேற்கு ஐரோப்பா முழுவதையும் பணிய வைத்திருந்த

ஹிட்லருக்கு இங்கிலாந்தைச் சரணடையச் செய்யாமல் போனது ஒரு பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

ஃபிரான்சைத் தாக்குவதில் ஹிட்லருக்குத் துணைவந்ததன் மூலம் இரண்டாம் உலகப்போரில் குதித்திருந்த முசோலினி, மத்திய தரைக்கடலைச் சுற்றிலும் தமக்கென்று ஒரு பேரரசைத் தோற்றுவிக்க முயன்று, கிரீஸ் நாட்டை (Greece) 1940ஆம் ஆண்டு நவம்பரில் தாக்கலானார். ஹிட்லரின் படையெடுப்புப் பயத்திலிருந்து தப்பியிருந்த பிரிட்டன் தன் படைகளைக் கிரீசுக்கு அனுப்பியது. சர் ஆண்ட்ரூ கன்னிங்காம் (Sir Andrew Cunningham) என்ற பிரிட்டிஷ் கப்பற்படைத்தலைவர் தம் கப்பற்படையைக்கொண்டு இத்தாலியர்களை டேரென்டோ (Taranto) துறைமுகத்தில் தாக்கினர். 'இல்லஸ்டிரியஸ்' (Illustriong) என்ற விமானம் தாங்கிக் கப்பலிலிருந்து (Air Craft Carriers) கிளம்பிய விமானங்கள் பல இத்தாலியக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தன. கிரீசைத் தாக்கிய அதே சமயத்தில் முசோலினி தம் படைகளைப் பிரிட்டிஷ் பாதுகாப்பிலிருந்த எகிப்தைத் தாக்க அனுப்பியிருந்தார். ஜெனரல் வேவல் (Wavell) தலைமையில் எகிப்திலிருந்த பிரிட்டிஷ் படைகள் எதிர்த்தாக்குதலை மும்முரமாக நடத்தின. 1940ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாக இத்தாலியர்கள் எகிப்திலிருந்தும், லிபியாவிலிருந்தும் (Libiya) விரட்டப்பட்டு விட்டனர். பிரிட்டிஷாருக்கு மிகச் சொற்ப ஆள் சேதமே ஏற்பட்டிருந்தது. ஆயின், இத்தாலியர்களின் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருந்ததல்லாமல், 120,000 வீரர்கள் பிரிட்டிஷாரால் சிறைபிடிக்கப்பட்டனர். தங்களின் எதிர்த்தாக்குதலால் எகிப்தையும், லிபியாவையும் இத்தாலியர்களின் ஆக்ரமிப்பிலிருந்து காப்பாற்றிய பிரிட்டிஷ் படையினர் அடுத்து இத்தாலியர்கள் காலனிகள் அமைத்திருந்த கிழக்கு ஆஃபிரிக்காவின் மீது பாய்ந்தனர். தம் டொமினியனான தென் ஆஃபிரிக்காக் குடியரசின் உதவிகொண்டு பிரிட்டிஷார், வேவல் தலைமையில் இத்தாலியர்களை எரிட்ரியா (Eritrea), சோமாலிலாந்து (Somaliland) ஆகிய பகுதிகளிலிருந்து விரட்டினர். அபிசீனியாவும் மீட்கப்பட்டு அதன் அரசர் ஹெயிலி செலாசி (Haile Selassie)க்குக் கொடுக்கப்பட்டது. ஆக, 1941ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள்ளாக ஆஃபிரிக்காவிலிருந்து இத்தாலியர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அப் பெருமை பிரிட்டிஷாரைச் சார்ந்தது.

1941ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போரில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருந்தது. அந்த வருடத்தில் நேசநாடுகளுக்கு

உதவியாக சோவியத் ரஷ்யாவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் போரில் இறங்கின. அச்சு நாடுகளின் சார்பிலே ஜப்பான் போரிலே குதித்திருந்ததால், தென்கிழக்கு ஆசியாவிலும் போர் பரவியிருந்தது.

பிரிட்டனைப் பணிய வைக்கும் முயற்சியில் வெற்றி பெறுத ஹிட்லர் தம் கவனத்தைக் கிழக்கு ஐரோப்பாமீது திருப்பினர். ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி போன்ற பால்கன் நாடுகளில் ஜெர்மானியரின் ஆதிக்கத்தைத் திணிக்க முற்பட்டபோது, சோவியத் ரஷ்யா உஷார் அடைந்தது. எந்த நேரத்திலும், ஜெர்மானியர்கள் ரஷ்யாமீது படையெடுக்கக்கூடிய நிலைமை ஏற் பட்டது. பால்கன் பகுதியில் ஆதிக்கம் பெற விரும்பிய ஹிட்லர் 1941ஆம் ஆண்டு ஏப்ரல் ஆரும் நாளில் கிரீஸ் நாட்டையும் யுகோஸ்லோவியாவையும் ஏக காலத்தில் தாக்கினர். ஐந்து நாள்களுக்குள்ளாக யுகோஸ்லோவியர்கள் பணிந்து விட்டபோதி லும் பிரிட்டிஷாரின் உதவி பெற்றிருந்த கிரேக்கர்கள் துணிவுடன் ஹிட்லரின் படைகளை எதிர்த்துப் போராடினர். இரண்டு வாரங் களில் கிரீசும் பிடிபட்டது. பிரிட்டிஷ் கப்பற்படையின் உதவி யால் கிரீசிலிருந்து பிரிட்டிஷ் படைகள் பத்திரமாகக் கிரீட் (Crete) தீவுக்கு அப்புறப்படுத்தப்பட்டன. ஆயின், விமானத்திலிருந்து படைகளை இறக்கி அத் தீவினையும் ஹிட்லரின் படைகள் கைப் பற்றின. கிரீட், கிரீஸ் இழப்பினைத் தொடர்ந்து பிரிட்டி ஷாருக்கு ஆஃபிரிக்காவிலும் அதிர்ச்சி காத்திருந்தது. ஹிட்ல ரால் ஆஃபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருந்த சிறந்த தளபதியான ரோமல் (Rommel) என்பவர் பிரிட்டிஷ் படைகளைத் தாக்கிப் பின்னுக்குத் தள்ளிவந்தார். லிபியாவை ரோமலின் படைகள் கைப்பற்றிக்கொண்டு எகிப்தை நோக்கி முன்னேறியவண்ணம் இருந்தன. ஆஃபிரிக்காவில் நிலைமை மோசமாகிக்கொண்டு வந்தபோதிலும் பிரிட்டிஷார் ஈராக், சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளை ஹிட்லரின் படைகளிலிருந்து காத்தனர்.

அதற்கிடையே 22-6-1941-ல் எதிர்பார்க்கப்பட்டதுபோல் ஹிட்லர் தம் 3,30,000 வீரர்கள் அடங்கிய பெரும் படையை சோவியத் ரஷ்யாவின்மீது ஏவினர். ஏற்கெனவே ஏறக்குறைய ஐரோப்பா முழுவதையும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந் திருந்த ஹிட்லர் மாரிக்காலத்திற்குள் வென்று அதன் ஏராள மான மூலப் பொருள்களைக் கொண்டு அடுத்து வரும் வேனிற் காலத்தில் பிரிட்டனைத் தாக்கத் திட்டமிட்டார். அத் திட்டத் தின் முதல் கட்டமான ரஷ்யப்படையெடுப்பில் ஜெர்மானியர்கள் பெருவெற்றிகளை யடைந்து ரஷ்யாவுக்குள் 600 மைல்கள்வரை

ஊடுருவிவிட்டனர். ரஷ்யா செய்வதறியாமல் திகைத்து நின்ற அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு பழைய விரோதத்தை மறந்து பிரிட்டன் அந்த நாட்டுடன் - ஓர் உடன்பாடு செய்து கொண்டது. அவ் வுடன்படிக்கையினால் பிரிட்டனுக்கு ஐரோப்பாவில் பலம்பொருந்திய ஒரு நாட்டின் நட்பு ஜெர்மனிக்கெதிராகக் கிடைத்தது.

1941ஆம் ஆண்டு டிசம்பர் ஏழாம் நாளில் எந்தவிதப் போர் அறிவிப்புமின்றி பெர்ல் துறைமுகத்திலிருந்த அமெரிக்கக் கப்பல்கள் ஜப்பானிய விமானங்கள் தாக்கிச் சேதப்படுத்தின. அதைத் தொடர்ந்து அமெரிக்காவும், போரில் இறங்கியதால் பலம் பொருந்திய இன்னொரு நாட்டின் உதவியும் பிரிட்டனுக்குக் கிடைத்தது.

அமெரிக்கா நேசநாடுகளின் சார்பில் போரில் இறங்கினால் தான் ஜெர்மனி - இத்தாலி ஆகிய அச்சு நாடுகளுக்கு உதவுவதாக 1940ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்டிருந்த உடன்பாட்டின் கீழ் ஜப்பான், தென்கிழக்கு ஆசியாவிலிருந்த ஐரோப்பியக் குடியேற்றங்களைத் தாக்கியது.

பிரிட்டனுக்குச் சொந்தமான மலேயா ஜப்பானியர்களால் வெல்லப்பட்டிருக்க, பிரிட்டிஷ் படைகள் சிங்கப்பூர்த் தீவில் தஞ்சமடைந்திருந்தன. அத் தீவையும் 1942, பிப்ரவரியில் ஜப்பானியர்கள் வசமாக்கிக்கொண்டனர். சயாம் வளைகுடாவில் பிரிட்டிஷாரின் ப்ரின்ஸ் ஆஃப் வேல்ஸ் (Prince of Wales), ரிபல்ஸ் (Repulse) என்ற இரு போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. தென்கிழக்கு ஆசியப் பகுதியிலே இருந்த பிரிட்டிஷ் கப்பற் படைக்கு அது பெரும் இழப்பாக இருந்தது. கப்பற்படையின் உதவியில்லாது பிரிட்டிஷார் தவித்த அச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு ஜப்பானியர்கள் பர்மாவையும் தாக்கி வென்றனர். ஏற்கெனவே, சீனாவில் பிரிட்டிஷாருக்குச் சொந்தமாக இருந்த ஹாங்காங்கும் (Hongkong) ஜப்பானியர்களால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. தென்கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான அத்தனை பகுதிகளும் ஜப்பானியர்களால் வெல்லப்பட்டதோடன்றி டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான கிழக்கிந்தியத் தீவுகளும், அமெரிக்காவுக்குச் சொந்தமான ஃபிலிப்பைன்சும் ஜப்பானியர்களால் பிடிபட்டிருந்தன.

ஐரோப்பாவை அடிபணியச் செய்து ரஷ்ய நாட்டில் ஹிட்லர் முன்னேறி வர, தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானியர்கள் வெற்றி

முரசு கொட்டிவர, 1942 ஆம் ஆண்டு மத்தியில் பிரிட்டனுக்கும் அதன் நேச நாடுகளான அமெரிக்கா, ரஷ்யாவுக்குமிடையே நெருங்கிய போர்க்கால உறவு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

6,15,000 சதுர மைல் பரப்பளவுள்ள சோவியத் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு ஸ்டாலின்கிராடு (Stalingrad) நகர் வரையில் முன்னேறியிருந்த ஜெர்மானியர்களை ரஷ்யா எதிர்த்து நிற்க, அந் நாட்டுக்குத் தேவையான போர்த்தளவாடங்களையும் மற்றத் தேவைகளையும் ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் கொடுத்துதவின. அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்குத் தினம் தினம் அனுப்பப்பட்ட சரக்குக் கப்பல்களைத் தங்களின் 'U' படகுகள் மூலம் ஜெர்மானியர்கள் தாக்க ஆரம்பித்ததால், ஆங்கிலோ-அமெரிக்கக் கப்பற்படை அட்லாண்டிக் கடலில் கடுமையான போந்து வேலையில் ஈடுபட்டு எதிரிக்கப்பல்களை அழித்தது. கிரேவ் ஸ்பீ (Graf Spee) என்ற ஜெர்மானியச்சிறு போர்க்கப்பல் பிரிட்டிஷ் நாசகாரிகளால் (Cruisers) ஏற்கெனவே மூழ்கடிக்கப்பட்டிருந்தது. 'பிஸ்மார்க்' என்ற இன்னொ பெரிய போர்க் கப்பலும் அட்லான்டிக் கடலில் பிரிட்டிஷ் கப்பல்களால் வளைக்கப்பட்டு அழிக்கப்பட்டது. எஞ்சியிருந்த ஜெர்மானியப் போர்க் கப்பல்கள் துறைமுகங்களை விட்டு வெளிவர முடியாமல் திணறிக்கொண்டிருந்தன.

அவர்களின் 'U' படகுகளே நேச நாட்டுக் கப்பல்களைத் தாக்கி வந்தன. ஆயினும், 1943 ஆம் ஆண்டு மே மாதம்வரையில் ஜெர்மானியர்களின் 785 'U' படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. அவற்றில் 514 படகுகளைப் பிரிட்டிஷ் கப்பற்படையும் விமானப்படையும் சேர்ந்து அழித்தன.

'U' படகுகள் ஆபத்து நீடிக்கப்பட்டிருந்த அந் நிலையில் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பியப் படையெடுப்புகளுக்குத் தேவையான தளவாடங்களும் வீரர்களும் பிரிட்டனில் இறங்குவது சாத்தியமாயிற்று. 'U' படகுகளின் கொட்டத்தை அடக்கியதன் மூலமாக நேச நாடுகளின் வருங்கால வெற்றிக்கு இங்ஙனம் பிரிட்டன் பேருதவி செய்தது.

1942 ஆம் ஆண்டு மத்தியில் தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானியர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் முயற்சியில் ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் ஈடுபட்டன. ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்ற ஜப்பானியக் கடற்படை பவளக்கடல் சண்டையில் (Battle of Coral Sea) நாசமாக்கப்பட்டது.

இலங்கைமீது நடத்தப்பட்ட ஜப்பானிய விமானத் தாக்குதலும் பிரிட்டிஷ் போர் விமானங்களால் முறியடிக்கப்பட்டிருந்தது.

ஜெர்மனியின் 'U' படகுத் தாக்குதல்களையும் ஜப்பானியரின் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்தியிருந்த அச் சமயத்தில், பிரிட்டிஷாரின் கவனம் எகிப்தைப் பயமுறுத்திவந்த ஜெர்மானியத் தளபதி ரோமலின்மீது திரும்பியது. அலெக்ஸாண்டிரியா நகருக்கு மேற்கே 60 மைல்வரை முன்னேறி வந்துவிட்ட ரோமல் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால், பிரிட்டிஷார் எகிப்தைக் கைவிடவேண்டியதே. ஆகவே, பிரிட்டிஷ் படைகளும் அதற்குதவியாக இருந்த காமன்வெல்த் துருப்புகளும் மான்ட்கோமரி (Montgomery), அலெக்ஸாண்டர் என்ற இரு தளகர்த்தர்களின் தலைமையில் எல்-அலமெய்ன் (El-Alamein) என்னுமிடத்தில் ரோமலை முறியடித்து, சகாராப் பாலைவனத்தை நோக்கித் துரத்தினர் (23-10-1942). எகிப்துக்கு வந்த அபாயம் நீங்கியது. ரோமலின் படைகள் ஆஃபிரிக்காவிலிருந்து விரட்டப்பட்டதும், பிரிட்டிஷார் இத்தாலியைக் கைப்பற்றி அது தன்னிடம் வைத்திருந்த லிபியாவையும் மீட்டனர்.

1942 அக்டோபரில் அமெரிக்கத் தளபதி ஐசன்ஹோவரின் (Eisenhover) தலைமையில் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் வடஆஃபிரிக்காவில் இறங்கின. ஜெர்மானியர்களுக்கு அடங்கியிருந்த மொராக்கோ, அல்ஜீரியா நாடுகள் நேச நாட்டுப் படைகளால் ஆக்ரமிக்கப்பட்டன. ஜெர்மானியர்களால் ஆக்ரமிக்கப்பட்டிருந்த டூனிசியா (Tunisia) நாடும் விடுவிக்கப்பட்டது. ஆங்கிலோ-அமெரிக்க வெற்றிகரமான ஆஃபிரிக்கப் படையெடுப்பினால், மத்திய கிழக்குப் பகுதிகளுக்கு (Middle East) அச்சு நாடுகளால் ஏற்படவிருந்த ஆக்ரமிப்பு அபாயம் தவிர்க்கப்பட்டது. 1943 மே மாதத்திற்குள்ளாக அச்சு நாடுகளின் 250,000 வீரர்கள் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகளால் சிறைபிடிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து, ஆஃபிரிக்காவில் அச்சு நாடுகளின் ஆதிக்கம் அழிந்தது.

ரஷ்யர்கள் ஹிட்லரின் படைகளால் விரட்டப்பட்டு, பின்வாங்கிச் செல்லும்போது, பாழாக்கும் கொள்கையைப் (Scorched Earth Policy) பின்பற்றி ஆங்காங்கே இருந்த உணவுப் பொருள்களை அழித்தும், பயிர்களை நாசமாக்கியும், ஆலைகளைக் கொளுத்தியும், சாலைகளைத் தகர்த்தும், பாலங்களை இடித்தும், ஜெர்மானியர்களின் முன்னேற்றத்தைப் பெரிதும் தடைப்படச்

செய்தனர். அதற்கிடையே மாரிக்காலம் ஆரம்பித்து விடவே, பயங்கர ரஷ்யக்குளிருக்குப் பழக்கப்பட்டிராத ஜெர்மானியப் படைகள் மிகவும் அல்லல்பட்டனர். கப்பல்கள், விமானங்கள் மூலமாக ரஷ்யர்களுக்குப் படைக்கலங்களை ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் கொடுத்துதவின. ஸ்டாலின்கிராடு நகரில் ஜெர்மானியர்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தனர். ரஷ்யரின் பாழாக்கும் கொள்கையால் வந்த உணவுத்தட்டுப்பாட்டினால் அவதிப் பட்ட ஜெர்மானியப் படைகள் ரஷ்ய வீரர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஸ்டாலின்கிராடு தெருக்களில் நடந்த சண்டைகளில் தினம் தினம் 2,000-க்கும் மேற்பட்ட ஜெர்மானிய வீரர்கள் கொல்லப்பட்டனர். 1943 (ஜனவரியில்) எஞ்சியிருந்த 137,000 ஜெர்மன் வீரர்கள் ஸ்டாலின்கிராடில் சரணடைந்தனர். ரஷ்யாவின் வேறு பகுதிகளிலிருந்த ஜெர்மானியர்களும் கடுமையான சேதங்களுடன் துரத்தியடிக்கப்பட்டனர். ரஷ்யப் படைகள் மெல்ல மெல்ல பால்கன் பகுதிகளை நோக்கி முன்னேறின.

ரஷ்யப் படையெடுப்புத் தோல்வியினால் மனம் தளர்ந்திருந்த ஜெர்மனியின் முக்கியத் தொழில் நகரங்களான ரூர் பட்டணங்களான கோலோக்னி, ஹாம்பர்க், பெர்லின் ஆகியவற்றை ஆங்கிலோ-அமெரிக்க விமானங்கள் கடுமையாகத் தாக்கி, அதன் தொழிற்சாலைகளையும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களையும் பாழாக்கின. ஜெர்மன் துறைமுகங்களும் தாக்கப்பட்டன. ஐரோப்பாவின் பல முனைகளிலிருந்த சிதறிக்கிடந்த வீரர்களுக்குத் தேவையான தளவாடங்களைத் தயாரிக்க முடியாமலும் ஜெர்மனி அவதிப்பட்டது. போர்முனைகளிலே இருந்த ஹிட்லரின் வீரர்களுக்கு ஆயுதப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு, ஜெர்மனியின்மீது தாக்குதல் நடத்திய ஆங்கிலோ-அமெரிக்க விமானங்கள் முக்கியக் காரணமாயின.

1943 ஜூலை மாதம் ஐசன்ஹோவர் தலைமையில் ஆங்கிலோ-அமெரிக்கத் துருப்புகள் சிசிலியில் (Sicily) இறங்கி, அதைக் கைப்பற்றிக் கடல்வழியாகத் தென் இத்தாலியைத் தாக்கின. முசோலினியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டிருந்தும் இத்தாலியிலிருந்த ஜெர்மானிய வீரர்கள் நேச நாட்டுப் படைகளைக் கடுமையாக எதிர்த்துச் சண்டையிட்டனர். இருப்பினும், 1943 செப்டம்பரில் தென் இத்தாலி முழுவதையும் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலோ-அமெரிக்கப் படையினர் 1944-ல் மே மாதத்தில் தலைநகர் ரோமையும் பிடித்தனர். பதவியிழந்து தப்பி ஓடிய முசோலினி தம் நாட்டு மக்களாலேயே பிடிபட்டுக் கொல்லப்பட்டார்.

அங்ஙனமாக, அச்சு நாடுகளில் ஒன்றான இத்தாலி இறுதியில் பணிந்தது.

இத்தாலியைப் பணியவைத்த நேச நாடுகள் தங்கள் பலத்தை ஜெர்மனியின்மீது பிரயோகிக்கத் தயாராயின. ஆங்கிலோ-அமெரிக்க நாடுகளின் உதவியைப் பெற்றுவந்த ரஷ்யா ஹிட்லரின் படைகளைச் சின்னபின்னப்படுத்தி பால்கன் நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக விடுவித்து, எஞ்சியிருந்த வீரர்களை ஜெர்மனியை நோக்கி விரட்டிவந்தது. அதற்கிடையே 6-6-1944-ல் ஆங்கிலோ-அமெரிக்க நேச நாட்டுப் படைகள் ஐசன்ஹோவர் தலைமையில் ஐரோப்பியப் படையெடுப்பைத் தொடங்கின.

கடந்த சில மாதங்களாகவே நேச நாட்டுப் பிரதம படைத் தலைவரான ஐசன்ஹோவர் ஐரோப்பியப் படையெடுப்புக்கான ஆயுத்தங்களைச் செய்துவந்தார். ஆங்கிலேயக் கால்வாயின் குறுக்கே மல்பரி (Mulberry) என்ற செயற்கைத் துறைமுகங்கள் பல கட்டப்பட்டன. துருப்புகளும், போர்த் தளவாடங்களும் அவற்றில் சேர்க்கப்பட்டன. ஃபிரெஞ்சுக் கடற்கரையில் இச் செயற்கைத் துறைமுகங்கள் கட்டப்பட்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. ஃபிரான்சில் இறங்கும் படைகளுக்குப் பெட்ரோல் எண்ணெய் வழங்கக் கடலினூடே 'புளூடோ' (Pluto) என்னும் எண்ணெய்க் குழாய்கள் அமைக்கப்பட்டன. படையெடுப்புக்கான தகுந்த ஏற்பாடுகள் செய்துவிட்டு, நேச நாடுகள் தங்களின் 130,000 வீரர்களையும், 20,000 போர் வாகனங்களையும், டாங்கிகளையும், 4,000 கப்பல்கள் மூலமாக நார்மண்டியில் (Normandy) இறக்கியதைத் தொடர்ந்து, ஜெர்மனியின் இறுதி வீழ்ச்சி ஆரம்பித்தது. நார்மண்டியில் கரை இறக்கப்பட்டிருந்த நேச நாட்டுப் படைகள் ஜெர்மானியர்களின் எதிர்ப்பை முரியடித்து முன்னேறின. பெல்ஜியம், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளை ஹிட்லரின் பிடியிலிருந்து விடுவித்து, ஃபிரான்சை நோக்கி முன்னேறி, பாரிஸ் நகரையும் மீட்டன. கடும் எதிர்ப்புகளுக்கிடையே ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் மேற்குப் புறமாக ஜெர்மனியை நோக்கி முன்னேற, பால்டிக் நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக விடுவித்துக்கொண்டு ஜெர்மனியின் கிழக்கு எல்லையை நோக்கி, ரஷ்யப் படைகள் முன்னேறிவர ஜெர்மனியின் நிலை சங்கடத்திற்குள்ளாகி யிருந்தது.

ஆத்திரம்கொண்ட ஹிட்லர் V-1, V-2 என்னும் ஏவுகணைகளை பிரிட்டன்மீது வீசினார். 14,000-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் விடப்பட்டிருந்தும், 5,000க்கு மேற்பட்டவை தாம் பிரிட்டனைத்

தாக்கின. ஏறக்குறைய 60,000 மக்கள் கொல்லப்பட்டும், பல வீடுகள் அழிக்கப்பட்டும் பிரிட்டிஷாரின் போர் ஊக்கம் குன்றவில்லை.

1944ஆம் ஆண்டு இறுதியில் தம் டாங்குப் படைகளைக் கொண்டு சில நாள்கள் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகளின் முன்னேற்றத்தை ஹிட்லர் தடுத்திருந்தும் (பல்ஜ் சண்டை: Battle of Bulge) 1945ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் ரைன் நதியைக் கடந்து, ஜெர்மனிக்குள் நுழைந்தன. அச் சமயத்தில் போலந்தின் வழியாக ரஷ்யர்கள் ஜெர்மனிக்குள் நுழைந்து பெர்லின் நகரை நெருங்கினர்.

நிலைமை மோசமாகிவிடவே சர்வாதிகார ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டார். அவரது கடைசி ஆணைப்படி, அதிகாரம் பெற்றிருந்த அட்மிரல் டோனிட்ஜ் (Dontiz) நேச நாடுகளுடன் போர் நிறுத்தம் செய்துகொண்டு ரஷ்யர்களுடன் சண்டையைத் தொடர முயன்றார். ஆனால், நேச நாடுகள் அவரின் வேண்டுகோளை நிராகரித்தன. பெர்லின் நகரம் ரஷ்யர்களால் கைப்பற்றப்பட்டுவிட்டது. ஆங்கிலோ-அமெரிக்கப் படையினரும் ஜெர்மனியின் மேற்குப் பகுதிகளைக் கைப்பற்றியிருந்தனர். அத் நிலையில் 7-5-1945-ல் ஜெர்மனி எவ்வித நிபந்தனையுமின்றிச் சரணடைந்தது. பிரிட்டனும், ஃபிரான்சும், அமெரிக்காவும், ரஷ்யாவும் தங்களுக்குள் ஜெர்மனியைப் பங்கிட்டுக்கொண்டன. ஜெர்மனியின் வடமேற்குப் பகுதி பிரிட்டனுக்குக் கிடைத்தது.

ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டபின் பிரிட்டனும் அமெரிக்காவும் ஜப்பானைத் தோற்கடிப்பதில் முழுக்கவனத்தைச் செலுத்தலாயின. ஜப்பானியர் வசமிருந்த பிலிப்பைன்ஸ் தீவுகள் மீட்கப்பட்டன. ஜெனரல் மக் ஆர்தர் (Mac Arthur) தலைமையில் அமெரிக்கப் படைகள் ஜப்பானுக்கு அருகே இருந்த தீவுகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றின. லார்டு மௌண்ட் பேட்டன் (Mount Battan) தலைமையில் பிரிட்டிஷாரும் ஜப்பானியரின் ஆதிக்கத்திலிருந்த சில பகுதிகளை மீட்டனர்.

1945ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டிஷ் இந்தியக் கூட்டுப் படையொன்று ரங்கூனுக்கருகில் (Rangoon) கரையிறங்கி ஜப்பானியர்களைப் பர்மாவிலிருந்து விரட்டியது. தொடர்ந்து தோல்விகள் பல பெற்றிருந்தும், ஜப்பானியர்கள் சரணடைய மறுத்தனர். ஆகவே, பிரிட்டிஷ் - அமெரிக்கா - கானடாவின் கூட்டுறவு முயற்சியால் தயாரிக்கப்பட்டிருந்த அணுகுண்டை

1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் தேதியன்று அமெரிக்க விமானம் ஹிரோஷிமா (Hiroshimo) என்னும் ஜப்பானிய நகர்மீது வீசியது. அக் குண்டுவீச்சினல் 78,000 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டதன்றி இலட்சக்கணக்கானவர் அங்கங்களை இழந்தனர். அப்படியும் ஜப்பான் சரணடைய மறுத்தது. மூன்று நாள்கள் கழித்து இன்னொரு அணுகுண்டு நாகசாகி (Nagasaki) என்ற துறை முகத்தின்மீது போடப்பட்டது. கணக்கிட முடியாத அளவுக்கு அதன் மக்கள் தொகையே அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜப்பானியர் ஆகஸ்டு 14ஆம் தேதியன்று நேச நாடுகளிடம் நிபந்தனையின்றிச் சரணடைந்தனர்.

இரண்டாம் உலகப் போர் அத்துடன் முடிந்தது.

அச்சு நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை இறுதியாக வெல்லப்பட்டதில் பிரிட்டன் பெரும் பங்கு ஆற்றி, சர்வாதிகாரத்தையும், இராணுவ வெறியையும், வீழ்த்திச் சிறு நாடுகளின் சுதந்தரத்தையும், ஜனநாயகத்தையும் காத்தது.

23. வின்ஸ்டன் சர்ச்சில் (1874-1965)

பிறப்பு

இங்கிலாந்தின் போர்க்காலப் பிரதமர்களிலே சிறந்தவ ரெனப் போற்றப்படும் வின்ஸ்டன் சர்ச்சில் 1874ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் தேதியன்று, டோரி ஜனநாயக வாதிகளின் தலைவராக விளங்கிய லார்டு ரண்டால்ஃப் சர்ச்சில் (Randalph) என்பவருக்கும், 'நியூயார்க் டைம்ஸ்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் லியோனார்டு என்ற அமெரிக்கரின் மகளான ஜெரோமி (Jerome) என்பவருக்கும் பிளென்ஹீம் மாளிகையில் பிறந்தார்.

இளம்பிராயம்

ஸ்பானிய வாரிசுரிமைப் போர்ப் புகழ் மார்ல்பரோ பிரபுவின் வீர பரம்பரையைச் சேர்ந்த வின்ஸ்டனுக்குத் துணிவு குடும்பச் சொத்தாக அமைந்திருந்தது. ஆயின், தம் இளம்வயதில் சர்ச்சில் கல்வியில் அத்தனை ஈடுபாடு உடையவராக விளங்க வில்லை. ஹேரோ (Harrow) பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்த சர்ச்சில் படிப்பில் மந்தமுடையவராக இருந்ததால், இரு முறை ஆரம்ப வகுப்புகளிலேயே தவறியிருந்தார். பிற்காலத்தில், பேச்சிலும் எழுத்திலும் தன்னிகரற்று விளங்கிய சர்ச்சிலின் ஆரம்பக்கல்வி குறிப்பிடத்தக்கதாக அமையவில்லை.

இராணுவ அறிவு

பள்ளிப்படிப்பில் கவனம் செலுத்தத் தவறிய சர்ச்சிலுக்கு இராணுவக் கல்வியில் ஆர்வமிருப்பதை உணர்ந்த அவர்தம் தந்தை சாண்டர்ஸ்ட் (Sandurst) வின்ஸ்டனை இராணுவப் பள்ளி யில் சேர்த்திருந்தார். மெச்சத்தகுந்த வகையில், சர்ச்சிலின் போக்கில் முன்னேற்றம் காணப்பட்டது. மற்ற மாணக்கர்களை

விட வின்ஸ்டன் தம் திறமையை வெளிப்படுத்தி, அடுத்தவர் களின் கவனத்தைக் கவர்ந்தார். இராணுவப் பள்ளியில் பயிற்சிபெற்று வந்தபோதிலும், தந்தை ரண்டால்ஃப் சர்ச்சிலின் அரசியலிலும் வின்ஸ்டன் அக்கறை காட்டிவந்தார். டோரிக் கட்சியைக் காலத்திற்கேற்ற ஒரு முற்போக்குக் கட்சியாக மாற்றிச் செயல்படுத்த வேண்டுமென்று தந்தையும், மகனும் திட்டமிட்டிருந்தனர். ஆயின், துரதிர்ஷ்டவசமாக ரண்டால்ஃப் காலமாகிவிடவே, உடனுக்குடன் அரசியலில் வின்ஸ்டன் நுழைய முடியவில்லை.

சர்ச்சிலின் போர் அனுபவங்கள்

1894ஆம் ஆண்டில் தம் இராணுவக் கல்வியை முடித்துக் கொண்டு சாண்டர்ஸ்டை விட்டு வெளியேறிய வின்ஸ்டனுக்குப் போரில் அனுபவம் பெறவேண்டுமென்ற அவா தோன்றியது. கியு பாவில் (Cuba) ஸ்பானிய அரசுப் படைகளுக்கும், கலகக்காரர் களுக்கும் சண்டை மூள, போர் அனுபவம் பெறத் துடித்த வின்ஸ்டன் அங்குப் போய்ச் சேர்ந்தார் (1895). தம் போர் அனுபவங்களை 'டெய்லி கிரேஃபிக்' (Daily Graphic) என்ற பத்திரி கைக்கு எழுதி, வின்ஸ்டன் கியுபாவிலிருந்துகொண்டே தம் செலவுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்துக்கொண்டார். 1896ஆம் ஆண்டு, இந்தியாவுக்கு ஒரு பிரிட்டிஷ் படை அனுப்பப் பட்டபோது, அதில் சேர்ந்துபோவதற்கு வின்ஸ்டன் கடும் முயற்சி செய்திருந்தும் பலனில்லாமல் போய்விட்டது. ஆயின், போர்க்களங்களை நேரில் காண வேண்டுமென்ற ஆசைகொண் டிருந்த வின்ஸ்டன் 'டெய்லி டெலிகிராப்' (Daily Telegraph) என்ற பத்திரிகையின் போர்ச் செய்தி நிருபராக இந்தியாவுக்குப் பயணமானார். மாலக் ஹண்ட் கணவாய்க்கருகே (Malakand Pass) நடந்த சிறு கைகலப்பில் பிரிட்டிஷ் தளபதிகள் செய்த தவறுகளையெல்லாம் சுட்டிக்காட்டி, தாம் இங்கிலாந்துக்குத் திரும்பியதும் வின்ஸ்டன் புத்தகமாக வெளியிட்டார். அதில் அவருக்கு நிறைய வருவாய் கிடைத்ததுமட்டு மல்லாமல் வின்ஸ் டனின் இராணுவ அறிவும் மற்றவர்களுக்குப் புலனாகியது.

1898ஆம் ஆண்டில் கிச்சனர் பிரபுவின் தலைமையில் சூடா னுக்கு ஒரு பிரிட்டிஷ் படை அனுப்பப்பட இருக்கும்போது, தாமும் அதில் சேர, வின்ஸ்டன் அனுமதி கோரினார். பிரிட்டிஷ் படைத் தளபதிகளைத் தாக்கி வின்ஸ்டன் அடிக்கடி, பத்திரிகைகளில் எழுதிவந்ததால், கிச்சனர் பிரபுவின் வெறுப் புக்கு ஆளாகியிருந்த சர்ச்சிலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஆயின், சர் எவிலின் உட் (Sir Evelyn Wood) என்பவரின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தம் செலவுகளைத் தாமே கவனித் துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் சர்ச்சில் சூடானை நோக்கிப் புறப்பட்டார்.

தம் செலவுக்கான வருவாயைத் தேடிக்கொள்ள, 'மார்னிங் போஸ்ட்' (Morning Post) என்ற பத்திரிகைக்குப் போர் நிருப ராகப் (War Correspondent) பணியாற்ற ஒப்புக்கொண்ட வின்ஸ் டன் எகிப்தை அடைந்து, அங்கு முகாமிட்டிருந்த கிச்சனரின் படைகளோடு சேர்ந்துகொண்டார். சூடானை நோக்கிப் புறப் பட்ட அப் படையினரோடு வின்ஸ்டனும் ஒரு வீரராகக் கலந்து கொண்டு ஆம்டூர்மன் (Omdurman) என்ற இடத்தை அடைந் தார். 1898ஆம் ஆண்டு செப்டம்பர் இரண்டாம் தேதி சூடானை ஆண்டுவந்த மஹ்தியின் (Mahdi) படைகளுடன் ஆம்டூர்மன் களத்தில் பிரிட்டிஷ் படைகள் சண்டையிட்டபோது, வின்ஸ்டன் தம் வீரத்தைக் காட்ட ஒரு சந்தர்ப்பமாக அதைப் பயன்படுத்திக் கொண்டு, மற்ற வீரர்களின் புகழுரைக்குப் பாத்திரரானார்.

சூடான், பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டிருக்க, வின்ஸ்டன் இங்கிலாந்து திரும்பினார். தம் போர்க்கால அனுபவங்களை 'நதிப் போர்' (River War) என்ற தலைப்பில் இரு பகுதிகளடங்கிய புத்தகமாக வெளியிட்டு வின்ஸ்டன் பணமும் புகழும் தேடிக் கொண்டார்.

தம் எழுத்தாற்றலை மூலதனமாக வைத்து, மேன்மேலும் செல்வத்தையும், செல்வாக்கினையும் பெறலாமென வின்ஸ்டன் எண்ணியதால், இராணுவப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். அச் சமயத்தில், அரசியலில் நுழைய வேண்டு மென்று வின்ஸ்டனுக்குச் சபலம் தட்டியது. ஆகவே, 1899ஆம் ஆண்டில் ஓல்டுஹாம் (Oldham) என்ற தொகுதிக்கு நடைபெற்ற ஓர் இடைத்தேர்தலில் வின்ஸ்டன் போட்டியிட்டார். ஆயின் அவரது முதல் முயற்சி வெற்றிகரமாக அமையவில்லை, அரசி யலிலே நுழைய வேண்டுமென்று மேற்கொண்ட முயற்சியில் தோல்வியுற்றிருந்த வின்ஸ்டன் 'மார்னிங் போஸ்ட்' என்ற பத்திரிகையின் பிரதம நிருபராக வேலையைத் தேடிக்கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில், தென் ஆஃபிரிக்காவில் போயர் போர் மூண்டது. அப் பத்திரிகையின் போர் நிருபராகப் பொறுப் பேற்று, போயர்களின் நாட்டை அடைந்த வின்ஸ்டன் பிரிட்டிஷ் படைகளோடு சேர்ந்து இராணுவ முகாமிற்குச் சென்று கொண்டிருந்தபோது போயர்களால் திடீரெனத் தாக்கப்பட்டுப்

படையினரோடு தாமும் சிறைபிடிக்கப்பட்டார். பிரிடோரியா (Pretoria) என்ற இடத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த வின்ஸ்டன் சில நாள்களுக்குள்ளாகத் தந்திரமாகத் தப்பிவிட்டார். வின்ஸ்டனைப் பிணமாகவோ, உயிரோடோ பிடித்துத் தருபவர்களுக்கு 25 பவுன்கள் வெகுமதி கொடுப்பதாகப் போயர்கள் அறிவித்தனர். ஆயின், எவரிடமும் பிடிபடாமல் வின்ஸ்டன் போயர்களின் கண்களில் மண்ணைத் தூவி, பிரிட்டிஷாருக்குச் சொந்தமாக இருந்த டர்பன் (Durban) அடைந்துவிட்டார். உயிருக்குப் பயந்த கோழையாக இருந்திருந்தால் வின்ஸ்டன் அப்போதே தம் நாடு திரும்பி யிருப்பார். ஆயின், துணிவும், ஆற்றலும் கொண்ட சர்ச்சில் போயர்களின் நாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகளோடு சேர்ந்து 'லேடி ஸ்மித்' (Lady Smith) என்ற நகரை அடைந்தார். பின், அங்கிருந்து போயர்கள் வசமிருந்த ஜோஹன்ஸ்பர்க் (Johansburg) என்னுமிடத்திற்குத் தன்னந்தனியாக, மிதிவண்டியிலேயே (Cycle) சென்று எதிரிகளின் பலத்தை வேவு பார்த்தார். தாம் சிறைபடுத்தப்பட்டிருந்த பிரிடோரியா நகரத்தை பிரிட்டிஷ் படையினர் தாக்குவதற்கேற்ப வின்ஸ்டன் வழிகாட்டியாகவும் இருந்தார். ஆக, அத்தகைய வீரச்செயல்களைப் புரிந்து 1900ஆம் ஆண்டில் சர்ச்சில் இங்கிலாந்து திரும்பிவிட்டார்.

சர்ச்சிலின் பாராளுமன்ற நுழைவு

தென்னாப்பிரிக்காவிலிருந்து நாடு திரும்பிய சர்ச்சில் அரசியல் மீண்டும் ஈர்த்தது. கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கையில் ஆழ்ந்த பற்றுக்கொண்டிருத்த வின்ஸ்டன் 1900ஆம் ஆண்டில், ஒல்ட்ஹாம் என்ற தொகுதியிலிருந்து அக் கட்சியின் சார்பிலே காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தம் முடைய நாவன்மையினால் அச் சபையின் கவனத்தை வெகு விரைவில் வின்ஸ்டன் கவர்ந்துவிட்டார். கன்சர்வேடிவ் கட்சியில் ஒரு முக்கியப் புள்ளியாகவே அக் காலத்தில் சர்ச்சில் மதிக்கப் பட்டார். ஆயின், 1905ஆம் ஆண்டில் வின்ஸ்டன் அக் கட்சியை விட்டு விலக நேர்ந்தது.

வின்ஸ்டன் தடையில்லா வியாபாரத்தில் பற்றுக்கொண்டவராக இருந்தார். கன்சர்வேடிவ் கட்சியினரால் அமைக்கப்பட்டிருந்த அரசாங்கம் 1905-ல் சுங்கவரிச் சீர்திருத்தம் செய்யக் காப்புவரிகளைப் போட முயன்றபோது, அதை எதிர்த்துக் காமன்ஸ் சபையில் வின்ஸ்டன் வாதாடினார். அவரது எதிர்ப்பைக் கன்சர்வேடிவ் கட்சி பொருட்படுத்தாததனால், இறுதியில், அக்

கட்சியை விட்டு வெளியேறிவிட்டார். கொள்கை காரணமாக கன்சர்வேடிவ் கட்சியிலிருந்து விலகியிருந்த வின்ஸ்டனுக்கு லிபரல் கட்சியினர் நேசக்கரம் நீட்டவே, அவர் அக் கட்சியில் சேர்ந்துகொண்டார்.

சர்ச்சிலின் பதவிகள்

1906 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியினர் அமோக வெற்றியைப் பெற்றனர். அக் கட்சியின் சார்பில் வடமேற்கு மான்செஸ்டர் (North-West Manchester) தொகுதியிலிருந்து வின்ஸ்டன் தேர்ந்தெடுக்கப் பட்டார். பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அமைக்கப்பட்டிருந்த காம்பல் பானர்மேனின் (Campbell Banerman) அமைச்ச ரவையில் குடியேற்ற நாடுகளின் துணைச் செயலாளராக சர்ச்சில் அமர்த்தப்பட்டார். அப் பதவியை அவர் வகித்த காலத்திலேயே டிரான்ஸ்வால் (Transval) போயர் நாட்டுக்குச் சுயாட்சி கொடுப்ப தற்கான மசோதா காமன்ஸ் சபையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

1908 ஆம் ஆண்டில் வின்ஸ்டன் வாணிகக்குழுவின் (Board of Trade) தலைவராக நியமிக்கப்பட்டிருந்தது, அவரின் உழைப் புக்கு நற்சாட்சிப் பத்திரமாக அமைந்திருந்தது.

1910 ஆம் ஆண்டில் ஆஸ்க்வித் (Asquwith) அமைச்சரவையில் உள்நாட்டு அமைச்சராக (Home Secretary) வின்ஸ்டன் பதவி பெற்றார். அப் பதவியில் அவர் பணியாற்றி வந்தபோதே வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிலையங்கள் (Labour Exchanges) இங்கிலாந்தில் நிறுவப்பட்டன. சுரங்கத் தொழிலாளர்கட்குப் பாதுகாப்பு வசதிகள் செய்துகொடுத்த நிலக்கரிச் சுரங்கச் சட்டமும் (Coal Mines Act) அவரால் கொண்டுவரப்பட்டது. பீட்டர் (Peter) என்ற வெறியனைத் தலைவனாகக் கொண்ட ஒரு கொலைகாரக்கும்பல் இலண்டனில் அராஜகச் செயல்களில் ஈடுபட் டிருக்க உள்நாட்டு அமைச்சரான வின்ஸ்டன் உடனுக்குடன் கல கம் நடந்த அப் பதவிக்கு இராணுவத்தினரை அனுப்பித் தம் மேற் பார்வையில் அச் சதிக்காரக் கும்பலைத் தீர்த்துக் கட்டித் தலைநகரில் அமைதியைக் காத்தார்.

உள்நாட்டுத் துறையைத் திறம்பட நிர்வகித்த வின்ஸ் டனுக்கு 1911 ஆம் ஆண்டில் கடற்படை இலாகாவின் முதற்பிரபு (First Lord of the Admirality) என்ற முக்கியப் பதவி கொடுக்கப் பட்டது. ஜெர்மனியின் கப்பற்படைப் பெருக்கத்தால் இங்கிலாந்

துக்கும் அதன் பேரரசின் பகுதிகளுக்கும் ஆபத்து வரக்கூடுமென் றிருந்த அந் நிலையில், விவேகத்துடன் வின்ஸ்டன் பிரிட்டிஷ் கப்பற் படையினைப் பலப்படுத்தும் திட்டத்தில் இறங்கினர். அவரது கடும் முயற்சியால் பிரிட்டிஷ் கடற்படை எந்த ஒரு நெருக்கடியை யும் சமாளிக்கும் நிலைக்குத் தயாராக்கப்பட்டது. போரை எதிர் பார்த்துத் தக்க நடவடிக்கைகளை சர்ச்சில் மேற்கொண்டிருந்தும் முடிந்தவரையில் அதைத் தடுக்கவும் முயன்றாரென்பது அவர் தங்கள் நாடுகளின் கப்பற் படைப்பெருக்கத்தை இரு சாராரும் நிறுத்திவிடலாமென கெய்சருக்கு (Kaiser) எழுதிய கடிதங்கள் மூலம் தெரியவருகிறது. ஜெர்மனி அந்த யோசனையை நிராகரித் திருந்ததால், தம் நாட்டுப் பாதுகாப்புக்குத் தேவையான போர்க் கப்பல்களை ஏராளமாக உற்பத்தி செய்ய வின்ஸ்டன் விழைந்தார். ஜெர்மனியோடு இனிப் போர் தவிர்க்க முடியாதென்ற நிலைமை ஏற்பட்டபோது ஒரு பிரம்மாண்டமான கப்பற்படை அணி வகுப்பை 1914 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17, 18, ஆம் நாள் களில் நடத்தி, பிரிட்டிஷ் கப்பற்படையைப் போருக்குத் தயா ராக்கி வைத்திருந்தார்.

சர்ச்சிலும் முதல் உலகப்போரும்

சர்ச்சிலின் முன்னெச்சரிக்கையின் விளைவாகத் தாக்கு தலுக்குத் தயாராக இருந்த பிரிட்டிஷ் கடற்படை முதல் உலகப் போர் தொடங்கிய சில மாதங்களுக்குள்ளாகவே ஜெர்மானியக் கப்பல்களைக் கடலிலிருந்து விரட்டி கீல் கால்வாய் ஹெலி கோலாந்து, பால்டிக் கடல் ஆகிய இடங்களில் அடைபடச் செய்தன. சர்ச்சில் மற்ற பிரிட்டிஷ் அரசியல்வாதிகளைப்போல் அசந்திருப்பாராயின், போரின் தொடக்க காலத்தில் பிரிட்டி ஷார் கடலாதிக்கத்தை அவ்வளவு எளிதாகப் பெற்றிருந்திருக்க முடியாது. தன் கப்பற்படைப் பலத்தினால் பிரிட்டன் பெற் றிருந்த பெருமை சர்ச்சிலுக்கே உரித்தானது. தம் திறமையை வெளிப்படுத்த மேன்மேலும் அப் போரில் வாய்ப்புகள் கிடைக்கு மென சர்ச்சில் எண்ணியது வீண்போகவில்லை.

1915 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் துருக்கி முதலாம் உலகப் போரில் அச்சு நாடுகளுக்கு உதவியாகக் கலந்துகொண்டிருந்த தால் பிரிட்டனுக்கு அந் நாட்டின்மீது போர் தொடுக்கவேண்டிய அவசியமேற்பட்டது. ஆயின், மேற்குப்போர் முனையில் ஜெர்மானி யர்களுக்கு எதிராக நடந்த சண்டையில் அக்கறை காட்டி வந்த பிரிட்டிஷ் அரசாங்கம், தென் கிழக்கு ஐரோப்பாவில் துருக்கிக் கெதிராக மும்முரமாகப் போரில் ஈடுபடத் தயங்கி வந்தது.

அத் தருணத்திலேயே, கிழக்குப் போர் முனையிலும் (Eastern War Front) பிரிட்டன் தாக்குதல் நடத்தவேண்டுமென்று சர்ச்சில் கூறினார். தேசநாடுகளில் ஒன்றான ரஷ்யா அவருக்குப் போருக்கான போதிய உதவியைக் கொடுப்பதற்கும், செர்பியாவை ஆஸ்திரியா, ஜெர்மானிய ஆக்ரமிப்பிலிருந்து விடுவிப்பதற்கும், சூயஸ் கால்வாயைத் துருக்கியர்களின் தாக்குதல்களிலிருந்து காக்கவும், பிரிட்டன் உடனடியாகத் துருக்கியர்களைப் பணிய வைக்க வேண்டிய அவசியத்தைச் சர்ச்சில் மற்றவர்களுக்கு உணர்த்தினார். அரைகுறை மனதோடு அரசு அதற்கு ஒப்புக்கொண்டபோதிலும் போர் அமைச்சரான கிச்சனர் பிரபு போதிய படைவீரர்களைக் கிழக்குப் போர் முனைக்கு அனுப்பத் தயக்கம் காட்டினார். அந்நிலையில், துருக்கியைத் தாக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் கப்பற் படைக்கு விடப்பட்டது. துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த டார்டனல்ஸ் ஜலசந்தியை (Dardanells Straits) கைப்பற்றிக் கான்ஸ்டான்டிநோபிளைப் பணிய வைக்க வேண்டு மென்பதே சர்ச்சிலின் திட்டம். அதற்கேற்ப, பிரிட்டிஷ் கடற்படையினர் கேலிபோலி (Gallipoli) தீபகற்பத்தில் தாக்குதலைத் தொடங்கினர் 1915 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட அத் தாக்குதல் ஆரம்பத்தில் வெற்றிகரமாக அமைந்திருந்தபோதிலும் மாதங்கள் செல்லச் செல்லத் துருக்கியர்களின் கடுமையான எதிர்ப்பினால் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. டிசம்பர் மாதத்தில் அப் படையெடுப்புத் திட்டம் கைவிடப்பட்டு பிரிட்டிஷ் படையினர் திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டனர். அத் திட்டம் தோல்வியுற்றதற்குத் தாக்குதலைச் சரிவர நடத்தத் தெரிந்திராத தளகர்த்தர்களே காரணமாயினும், அப் படையெடுப்பு யோசனையை வற்புறுத்திய சர்ச்சில் மற்றவர்களால் குறை சொல்லப்பட்டார்.

சர்ச்சிலின் வீழ்ச்சி

1915 ஆம் ஆண்டு மே மாதத்தில் தம் தனி லிபரல் அமைச்சரவையினைக் கலைத்துவிட்டு, கன்சர்வேடிவ்களுமடங்கிய ஒரு கூட்டு அமைச்சரவையை ஆஸ்க்வித் அமைத்திருந்தார். கேலிபோலி தாக்குதலில் ஏற்பட்ட தோல்வியைச் சமக்கவேண்டியிருந்த சர்ச்சிலுக்கு அக் கூட்டு மந்திரி சபையில் இடம் கொடுக்கப்படவில்லை. அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த சர்ச்சிலுக்கு லங்காஸ்டர் குடும்பத்தினரின் நிதிப் பொறுப்பான ஒன்ற ஒரு சிறுபதவி கொடுக்கப்பட்டது. ஆயின், அப் பொறுப்பில் நாட்டமில்லாத சர்ச்சில் அப் பதவியைச் சில நாள்களுக்குள்ளாக இராஜினாமாச் செய்துவிட்டார்.

சர்ச்சிலுக்கு வசதியாக வாழ வாய்ப்பிருந்தபோதிலும் பொறுப்பற்றுச் சோம்பித் திரிய அவர் விரும்பவில்லை. ஆகவே, போர்ச் சேவைக்கு மனு செய்து கொண்டு ஃபிரான்சில் சண்டையிட்டு வந்த பிரிட்டிஷ் படையினருடன் சேர்ந்து கொண்டார். ஒரு படைப் பிரிவினரின் உயர் அதிகாரியாக (Colonel) போர் முனையில் சர்ச்சில் சண்டையிட்டுத் தம் சமயோசித அறிவையும் வீரத்தையும் மற்றவர்கள் உணரச் செய்தார். தாம் தலைமை தாங்கிவந்த அச் சிறு படைப் பிரிவினர் வேறு இன்னொரு படைப் பிரிவினருடன் இணைக்கப்பட்டுவிட்டபோது, அப் பதவியும் சர்ச்சிலுக்குப் பறிபோனது. ஆகவே, அவர் நாடு திரும்ப வேண்டியவரானார்.

சர்ச்சிலின் பதவி மீட்சி

அச் சந்தர்ப்பத்தில் பிரதமர் ஆஸ்க்வித் பதவியிலிருந்து விலகிக்கொள்ள, பிரிட்டனின் புதுப் பிரதமராக லாயிட் ஜார்ஜ் பதவியை ஏற்றார். தம் பழைய நண்பரான சர்ச்சிலை மறக்காத அப் புதுப் பிரதமர் அவரை 1917 ஆம் ஆண்டில் ஆயுத இலாகாவின் அமைச்சராக்கினார். முதல் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் பல முனைகளில் போரிட்ட பிரிட்டிஷ் படையினருக்குத் தேவையான ஆயுதங்கள் சர்ச்சிலின் மேற்பார்வையில் இங்கிலாந்து தொழிற்கூடங்களில் தயாராயின. போரை இங்கிலாந்து வெற்றிகரமாக முடித்திருந்ததில் சர்ச்சிலுக்கு முக்கியப் பங்கிருந்ததை எவரும் மறுக்கமுடியாது. போர் முடிந்திருந்த காலத்தில் ஆயுதக் குறைப்பைக் கவனிக்கவேண்டிய இலாகாவிற்கு சர்ச்சில் மாற்றப்பட்டிருந்தார். அப் பணியிலும் சர்ச்சில் தீவிர சிரத்தை காட்டியே வந்தாரென்பது, 1919 ஆம் ஆண்டில் பிரிட்டன் மேற்கொண்ட படை பலக்குறைப்பிலிருந்து தெரியவரும்.

சர்ச்சில் மீண்டும் கன்சர்வேடிவ் கட்சியில் சேருதல்

1922 ஆம் ஆண்டில் லாயிட் ஜார்ஜின் அமைச்சரவை கவிழ்ந்ததால் சர்ச்சிலுக்கும் பதவி பறிபோனது. தொடர்ந்து இங்கிலாந்தில் நடத்தப்பெற்ற பொதுத் தேர்தலில் சர்ச்சில் தோற்கடிக்கப்பட்டுவிட்டதால் காமன்ஸ் சபையின் அங்கத்தினர் பதவியையும் அவர் இழக்கவேண்டியவரானார். சர்ச்சில் பாராளுமன்றச் சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டவராக இருந்தபோது அவரது கட்சிக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. லிபரல் கட்சியைச் சேர்ந்தவராக அவர் இருந்தபோதும் அக் கட்சியினர் தொழிற்கட்சியினரோடு உறவாடிவந்ததைச் சர்ச்சில் விரும்பவில்லை. அதனால்

லிபரல் கட்சியை விட்டு விலகவேண்டிய நிர்ப்பந்தம் சர்ச்சிலுக்கு ஏற்பட்டது. 1924 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற இடைக் கால்ப் பொதுத் தேர்தலில் கட்சிச் சார்பின்றி வெஸ்ட்மின்ஸ்டர் தொகுதியில் சர்ச்சில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். தொடர்ந்து இரு முறை தேர்தலில் தோல்வியுற்ற சர்ச்சிலின் வாழ்வு அஸ்தமித்துவிட்டதென்றே அவர்தம் அரசியல் எதிரிகள் நினைத்தனர். ஆயின், அக் கூற்றைப் பொய்யாக்கும் விதத்தில் அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற இடைத்தேர் தலில் எப்பிங் (Epping) என்ற தொகுதியிலிருந்து சர்ச்சில் காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தடையில்லா வியாபாரக் கொள்கையைக் கன்சர்வேடிவ் கட்சியினர் ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அதிலிருந்து சர்ச்சில் வெளியேறியிருந்ததை முன்னரே கண்டோம். ஆயின், 1924ஆம் ஆண்டு அக்டோபரில் நடந்த அந்த இடைக்காலப் பொதுத் தேர்தலில் காப்புவரிக் கொள்கையைக் கைவிடப் போவதாகக் கன்சர்வேடிவ் கட்சியினர் சொல்லிக்கொண்டு போட்டியிட்ட போது சர்ச்சில் அக் கட்சியில் மீண்டும் சேர்ந்துவிட்டார். ஆகவே, கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் பால்டுவினால் அமைக்கப் பட்டிருந்த அவரது இரண்டாம் மந்திரிசபையில் (1924 - 1929) சர்ச்சில் நிதி அமைச்சராகப் பதவி ஏற்றார். அக் காலத்தில் தான் தங்க நாணயத் திட்டம் (Gold Standard) மீண்டும் அமலாக்கப்பட்டது. அதனால் நாட்டில் பல பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டுத் தொழிலாளர்களின் நிலைமை மேலும் அவலமாகிவிட்டது. அதன் இறுதி விளைவாக 1926-ல் ஒரு மாபெரும் வேலைநிறுத்தம் ஏற்பட்டிருந்ததையும் முன் தலைப்பில் பார்த்தோம். அதே சமயத்தில் நாட்டின் நிதி அமைச்சரென்ற முறையில் சர்ச்சில் ஒரு சில சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்திருந்தார். விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் உதவிப்பணம் கொடுக்கும் திட்டமும், வீட்டு வாரியத் திட்டமும் அவரால் கொண்டுவரப்பட்ட நன்முயற்சிகளாகும்.

கட்சியிலிருந்து மீண்டும் வெளிநடப்பு

1929ஆம் ஆண்டில் பால்டுவின் அமைச்சரவை வீழ்ந்ததால், சர்ச்சில் தம் பதவியை இழக்கவேண்டி யிருந்தது. ராம்சே மாக்டனல்டின் தலைமையில் தொழிற் கட்சியின் மந்திரி சபை அமைக்கப்பட்டிருந்தபோது (1929-1931) சர்ச்சில் கன்சர் வேடிவ்களுடன் எதிர்க்கட்சியில் இருந்தார். அச் சமயத்தில் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையைத் தம் கட்சியின்

சார்பில் அடிக்கடி, காமன்ஸ் சபையில் கண்டித்து, நாட்டு மக்களின் கவனத்தை சர்ச்சில் தம்பால் ஈர்த்தார். ஆயின், மீண்டும் அவர் கன்சர்வேடிவ் கட்சியைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தியர்க்குச் சுயாட்சி கொடுக்கும் மசோதாவை டோரிக் கட்சியினர் அரசாங்கத்துடன் சேர்ந்து ஆதரிக்க முன்வந்தபோது, பேரரசுக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்த சர்ச்சிலுக்குத் தம் கட்சியின் போக்கு பிடிக்காததே அதற்குக் காரணமாகும். எக் கட்சியிலும் சேர மனமில்லாதவராகச் சர்ச்சில் ஒதுங்கியிருக்க, மாக்டனல்டின் தலைமையில் சர்வகட்சியினரடங்கிய ஒரு தேசிய அரசாங்கம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதுபோல், சர்ச்சிலுக்கு அந்தக் கலப்பு மந்திரி சபையில் இடம் அளிக்கப் படவில்லை.

கட்சியிலிருந்து ஒதுங்கியவராகவும் அமைச்சரவையிலே சேர்க்கப்படாதவராகவு மிருந்த சர்ச்சில் அத் தருணத்தில் தம் காலத்தை வரலாற்று நூல்கள் எழுதுவதிலே கழிக்க ஆரம் பித்தார். முதல் உலகப்போரைப்பற்றியும், தம் முன்னோரான மார்ல்பரோ பிரபுவைப்பற்றியும் சர்ச்சிலால் எழுதப்பட்ட சரி தைகள் இலக்கிய உலகத்திற்கு அரும்பெரும் கருவூலங்களாக அமைத்தன.

சர்ச்சிலும் இரண்டாம் உலகப்போரும்

பாராளுமன்ற அங்கத்தினராகச் சர்ச்சில் தொடர்ந்திருந்து வந்ததால் நாட்டின் அரசியலிலும் அவரது கவனம் இருக்கத் தான் செய்தது.

ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் தம் பேச்சுகளாலும், செயல்களாலும் உலக சமாதானத்தைக் குலைக்கும் வகையில் ஆக்ரமிப்புக் கொள்கையினால் மற்ற நாடுகளை அச்சுறுத்தி வந்த போது, சேம்பர்லேன் (Chamberlain) தலைமையிலிருந்த இங்கி லாந்தின் அரசாங்கம் ஹிட்லரைச் சாந்தப்படுத்தும் கொள் கையைப் (Appeasement Policy) பின்பற்றி வந்தபோது, காமன்ஸ் சபையில் அக் கொள்கையை எவ்வளவு தவறுனதென்று சர்ச்சில் அடிக்கடி கண்டித்துவந்தார். விட்டுக் கொடுக்கக் கொடுக்க, ஹிட்லரின் பேராசை அதிகரிக்குமே தவிர அடங்காதென்ற உண்மையை ஆணித்தரமாக சர்ச்சில் எடுத்துரைத்தார். ஹிட்லரின் வலுத்தாக்குதல்களிலிருந்து மற்ற நாடுகளைக் காக்க வேண்டுமென்றால், சர்வதேச சங்கத்தை வலுப்படுத்த வேண்டு

மெனவும் சர்ச்சில் எச்சரித்தார். மியூனிச் மாநாட்டில் சுடெட் டென்லாந்தை (Sudettenland) ஹிட்லருக்குக் கொடுக்க இங்கி லாந்து சிபார்சு செய்தபோது, சர்ச்சில், அந்த ஏற்பாட்டைப் பலமாகக் கண்டித்ததோடன்றி, அதன் விளைவாக ஹிட்லரின் நாடு பிடிக்கும் ஆசை மேன்மேலும் அதிகரிக்குமெனவும் சுட்டிக் காட்டினார். ஆயின், சர்ச்சிலின் எச்சரிக்கைகளெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தன. ஹிட்லரின் ஆக்ரமிப்புக் கொள்கையால் பெரும் போரொன்று ஏற்படலாமென்றும் அதைச் சமாளிக்க பிரிட்டன் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டு மென்றும் சர்ச்சில் கூறிவந்ததை அரசு புறக்கணித்தது.

ஆயின், 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி யன்று ஹிட்லர் போலந்தைத் தாக்கியபோதே, சர்ச்சிலின் எச்சரிக்கையிலிருந்த உண்மையைச் சேம்பர்லேனின் அரசு உணர ஆரம்பித்தது. போலந்திலிருந்து அகன்றுவிடும்படி ஜெர் மனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த இறுதி எச்சரிக்கையை ஹிட்லர் மறுத்துவிட்டதைத் தொடர்ந்து செப்டம்பர் மூன்றும் தேதி யன்று பிரிட்டன் போரில் இறங்கியது.

பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய சர்ச்சிலின் வரலாறு அங்கிருந்தே தொடங்குகின்றது.

சர்ச்சிலின் போர்க்காலச் சேவைகள்

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டன் கலந்துகொண்டிருந்த அந்த நெருக்கடியான நிலையைச் சமாளிக்க சேம்பர்லேன் தம் அமைச்சரவையில் சர்ச்சிலைச் சேர்த்துக்கொண்டு, கடற்படை இலாகாவை அவரிடம் ஒப்படைத்திருந்தார். தம் திறமையைக் காட்டவேண்டிய சந்தர்ப்பம் அங்ஙனம் தேடிவந்தது. சர்ச்சிலின் மேற்பார்வையில் இயங்கிய பிரிட்டிஷ் கப்பற்படை, போரின் ஆரம்பகாலத்தில் மும்முரமாகச் சண்டையிட்டு, ஜெர்மானியரின் கடல் ஆதிக்கத்தைப் பகற்கனவாக்கியது. ஜெர்மானியரின் 'யு' படகுகள் பல மூழ்சடிக்கப்பட்டன. கிரேஃப் ஸ்பீ (Graf Spee) என்ற ஜெர்மானியப் போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. போர்க் கைதிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த 'ஆல்ட்மார்க்' (Alt-mark) என்ற இன்னொரு ஜெர்மானியக் கப்பலும் தாக்கிச் சேதப் படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் கப்பற்படை அச் சமயத்தில் செய் திருந்த சாதனையே பிரிட்டனுக்குப் பெருமை தேடித்தருவதாக இருந்தது.

மற்றபடி, ஜெர்மானியர்களே எதிர்த்து ஐரோப்பாவில் போர் செய்துவந்த ஆங்கிலேயர்களுக்கு அடுக்கடுக்காகத் தோல்விகளாக ஏற்பட்டிருந்தன. டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளே ஹிட்லர் ஆக்ரமித்துக்கொண்டபோது பிரதமர் சேம்பர்லேன் செய்வதறியாது திகைத்தார். அவருடைய திறமையின்மையை சேம்பர்லேனின் நண்பர்களே காமன்ஸ் சபையில் காரசாரமாகத் தாக்க ஆரம்பித்தனர். அமைதிப் பிரியரான சேம்பர்லேன் போரை வெற்றிகரமாகத் தம்மால் நடத்த முடியாதென்பதை உணர்ந்தவராகத் தம் பதவியை 1940ஆம் ஆண்டு மே 11ஆம் தேதி இராஜிநாமாச் செய்தார். அதைத் தொடர்ந்து, வின்ஸ்டன் சர்ச்சில் இங்கிலாந்தின் பிரதமரானார்.

சர்ச்சில் பிரதமராதல்

போரின் மிக நெருக்கடியான கட்டத்தில் சர்ச்சில் பதவியை ஏற்றிருந்தார். தாம் பிரதமராகியிருந்த நான்கு நாள்களுக் குள்ளாக ஹாலந்து ஜெர்மானியரால் கைப்பற்றப்பட்டுவிட்டது. இரண்டு வாரங்களுக்குள்ளாகப் பெல்ஜியம் சரணடைந்து விட்டது. ஃபிரான்சைக் காப்பாற்ற அனுப்பப்பட்டிருந்த பிரிட்டிஷ் படையினர் டன்கிர்க்கை நோக்கி விரட்டப்பட்டிருந் தனர். ஆயின், சர்ச்சில் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. நாட்டு மக்களையும் இழக்கவிடவில்லை.

பிரதமர் சர்ச்சில் பாராளுமன்றத்தில் ஆற்றியிருந்த முதல் உரையில் தாம் நாட்டு மக்களுக்குக் குருதி, கண்ணீர், உழைப்பு, வியர்வையைத் தவிரக் கொடுப்பதற்கு எதுவுமில்லையெனக் குறிப்பிட்டார். தமக்கிருந்த முழுப்பலத்தைப் பிரயோகித்து எதிரியுடன் கடலிலும், நிலத்திலும், ஆகாயத்திலும் போரிட வேண்டுமென்றும், எத்தனை இடர்வரினும் எவ்வளவு காலமா யினும், இறுதியான வெற்றியைப் பெறும்வரையில் போராடியே தீரவேண்டுமெனவும் சர்ச்சில் வீர உணர்ச்சியுடன் பேசியிருந்தது நாட்டு மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுவதாக இருந்தது. மேற்கு ஐரோப்பா முழுவதும் ஹிட்லரின் காலடியிலே வீழ்ந்து கிடக்க, முசோலினியும் ஜெர்மனிக்கு ஆதரவாகப் போரில் இறங்கி யிருக்க, அந்த அச்சு நாடுகளைத் தனித்து எதிர்த்து நிற்கவேண்டி யிருந்த நிலையில் பிரிட்டன் இருந்த அந்த நேரத்தில், சர்ச்சில் எதிர்ப்பைக் கண்டு மலைத்துப்போகாமல் உற்சாகத்துடன் போரை நடத்த முற்பட்டார். வானொலியில் அவர் ஆற்றிய உரைகள் மக்களுக்கு மன உறுதியையும், புதுத்தெம்பையும் கொடுத்தன.

ஜெர்மன் விமானங்கள் பிரிட்டன்மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது (Battle of Britain) பிரிட்டிஷ் விமானங்களை அவற்றுக்கெதிராக ஏவி, எதிரிகளையும், பலத்த சேதத்திற்குள் ளாக்கிய பெருமையும் சர்ச்சிலைச் சேரும். கூட்டங் கூட்டமாக வந்த ஜெர்மன் விமானப் பட்டாளத்தைத் தொகுதி தொகுதி யாக பிரிட்டிஷ் விமானங்கள் அழித்ததையே 'மனிதப் போர் வரலாற்றிலேயே எண்ணற்ற மக்கள் மிகச் சிலருக்கு இத்தகைய பெருமளவு நன்றிக் கடன்பட்டது என்றுமில்லை' என சர்ச்சில் பெருமையுடன் குறிப்பிட்டார்.

('Never before in the history of human conflict so many owe so much to so few')

டன்கிர்க் (Dunkirk) கடலோரப் பட்டினத்துக்கு விரட்டப் பட்டிருந்த பிரிட்டிஷ் படை மற்ற நேச நாட்டுப் படையினரைப் பத்திரமாக 1940ஆம் ஆண்டு மே 26ஆம் தேதியிலிருந்து ஜூன் 3ஆம் தேதிக்குள்ளாக இங்கிலாந்துக்குக் கப்பல்களின்மூலம் அப்புறப்படுத்தி யிருந்தது சர்ச்சிலின் தனித் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

தாம் பதவியேற்ற குறுகிய காலத்திற்குள்ளாக பிரிட்டனின் உள்நாட்டுப் பாதுகாப்புக்காக 250,000 பேர் அடங்கிய ஒரு தொண்டர் படை உண்டாக்கப்பட்டது. அதிலிருந்தே, நாட் டின் கரையோரப் பகுதிகளை ஜெர்மானியப் படையெடுப்பி லிருந்து கண்காணிக்க நாட்டுப்படை (Home Guards) என்ற பிரிவினர் அமர்த்தப்பட்டனர்.

விமானத் தாக்குதல்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற 'ஆர்போ' (Air Raid Precaution Organisations) என்ற ஓர் அமைப் பும் சர்ச்சிலால் உருவாக்கப்பட்டது.

போரினால் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த அக் காலத் தில், அதற்கான பங்கீட்டு முறையைக் கொண்டு வந்து உணவுப் பிரச்சினையைச் சர்ச்சில் திறம்படச் சமாளித்தார். ஆயின், உணவுப் பங்கீட்டு முறையினால் சத்துள்ள உணவு தேவையான வர்களுக்குக் கிடைக்காமல் போகக் கூடாதென எண்ணி, பிரத்தியேக முறையில் தாய்மார்களுக்கும், குழந்தைகட்கும் பால், பழரசம், மீன் எண்ணெய் போன்றவை கிடைக்கவும் வழிசெய்தார்.

போர் மும்முரமாக நடந்துவந்த வேளையில் சூயஸ் கால்வாயை ஹிட்லர் தாக்குவாரென ஒரு நிலைமை ஏற்பட்டது. சூயஸ், ஜெர்மானியர் வசமாகிவிட்டால் கிழக்கத்தியப் பேரரசுக்குப் பேராபத்து ஏற்படுமென சர்ச்சில் எண்ணியதில் நியாய மிருந்தது. எப்படியும், எகிப்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தி, சூயஸ் கால்வாயைக் காப்பாற்ற எண்ணி அப் பகுதியில் இருந்த பிரிட்டிஷ் படையினருக்குத் தேவையான படைக்கலன்களையும், ஆயுதங்களையும் விரைவாக சர்ச்சில் அனுப்பிவைத்தார். எந்நேரத்திலும், பிரிட்டன்மீது ஹிட்லர் படையெடுப்பாரென எதிர்பார்க்கப்பட்ட அச் சமயத்தில், துணிந்து, கிழக்குப் போர் முனைக்குப் படைத்தளவாடங்களை சர்ச்சில் அனுப்பியிருக்க, அது ஒரு புதிராகச் சிலரால் கருதப்பட்டிருந்தும், பிரிட்டிஷ் பேரரசின் பகுதிகளையும் ஆக்ரமிப்பிலிருந்து காக்கவேண்டு மென்ற சர்ச்சிலின் எண்ணத்தையே அது காட்டியது.

1941ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஹிட்லர் ரஷ்யாவின்மீது படையெடுப்பைத் தொடங்கியபோது, எந்த விதத் தயக்கமுமின்றி, தாம் அதுவரை வெறுத்துவந்த ரஷ்யக் கம்யூனிஸ்டு ஆட்சியாளர்களுக்கு சர்ச்சில் நேசக்கரம் நீட்டியிருந்தது குறிப்பிடத் தக்கதாகும். ரஷ்யர்களுக்குத் தம் நாடு வேண்டிய உதவிகளை அளிக்குமென சர்ச்சில் கூறியிருந்ததை யொட்டியே, ஆங்கிலோ - சோவியத் ரஷ்ய உறவில் சற்று நெருக்கம் ஏற்பட்டிருந்தது. ரஷ்யாவுடன் நட்புக் கொள்கையை வளரவிட்ட அந் நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும் சர்ச்சில் ஒரு பிணைப்பை ஏற்படுத்தினார். அச்சு நாடுகளின் ஆக்ரமிப்பை அடியோடு முறியடிக்கவேண்டுமென்று நினைத்த சர்ச்சில் அங்ஙனமாக மற்ற இரு வல்லரசுகளின் நட்பையும், ஆதரவையும் பிரிட்டனுக்குத் தேடிக் கொடுத்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டை (Roosevelt) அட்லான்டிக் பெருங்கடலில் ஒரு கப்பலில் சந்தித்துப் பேசி, உலக சமாதானத்தை வற்புறுத்தியும், பற்ருக்குறையைப் போக்கவும், கொள்கைச் சுதந்தரத்தை வலியுறுத்தவும் 'அட்லான்டிக் சாசனத்தை' (Atlantic Charter) சர்ச்சில் வெளியிட்டிருந்தது அவரின் ஜனநாயகப்பற்றைப் பறை சாற்றியது. பெர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதை யொட்டி, அமெரிக்காவும் போரில் கலந்துகொண்டிருந்ததால், அப் போரை வெற்றிகரமாக முடிக்கவேண்டிய பெருந்திட்டங்களை சர்ச்சில் அவ்வப்போது ரூஸ்வெல்டுடன் கலந்து ஆலோசித்துத் தங்களிருவருக்குள்

நெருக்கமான ஒரு நட்பை வளர்த்துக்கொண்டது மல்லாமல் ஆங்கிலோ - அமெரிக்க உறவையும் பலமாக அமைத்தார்.

வட ஆஃபிரிக்காவில் ரோமல் என்ற தளகர்த்தரின் தலைமையில் ஜெர்மானியர்கள் எகிப்தை நெருக்கிக் கொண்டிருந்தபோது, சர்ச்சில் எந்த விதப் பதற்றமுமின்றி அமைதியாகவே எதிர் நடவடிக்கையில் இறங்கினர். மான்ட் கோமரி (Montgomery), அலெக்ஸாந்தர் (Alexander) என்ற இரு பிரிட்டிஷ் தளபதிகளை வட ஆஃபிரிக்காவுக்கு சர்ச்சில் அனுப்பி, ஜெர்மானியர்களை எல் அல்மெய்ன் என்னுமிடத்தில் தடுத்து நிறுத்தி முரியடிக்கும்படி செய்தார். பிரிட்டிஷ் படையினருக்குக் கிடைத்த அந்த முதல் பெருவெற்றியைத் தொடர்ந்தே இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகளுக்குச் சாதகமான திருப்பம் ஏற்பட்டது. 1942-1943 ஆண்டுகளில் நேச நாட்டுப் படையினர் ஆஃபிரிக்காவை எதிரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுவிட்டனர்.

ஜெர்மனி - இத்தாலிய நாடுகளின் பிடியிலிருந்து ஐரோப்பாவை மீட்க உடனடியாக, நேச நாடுகள் விடுதலைப்போரைத் தொடங்க வேண்டுமென வற்புறுத்தி வந்தபோது சற்றும் நிதானமிழக்காமல் அப் படையெடுப்பிற்கான தகுந்த காலத்தை சர்ச்சில் எதிர்நோக்கியிருந்தார். போதிய ஏற்பாடுகளைச் செய்து முடித்துக்கொண்டு சர்ச்சிலின் யோசனைப்படி 1944ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் தேதியில், நார்மாண்டிக்கரையில் நேச நாட்டுப்படைகள் இறங்கி, ஐரோப்பிய விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கின. அங்கிருந்தே ஹிட்லரின் வீழ்ச்சிப் படலம் ஆரம்பித்தது. சில மாதங்கள் கழித்து, மார்செயில்ஸ் (Marseilles) என்னுமிடத்தருகே இன்னொரு நேச நாட்டுப்படை கரையில் இறக்கப்பட்டபோது, சர்ச்சிலே அதை முன்னின்று கண்காணித்தார். அடுக்கடுக்காகத் தோல்விகளை அடைந்த ஜெர்மானியர் இறுதியில் சரணடைந்ததை நாம் முன்னரே கண்டோம்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் இரண்டாம் உலகப் போர் முடிந்துவிட்டது. இத்தாலியும், ஜெர்மனியும் சரணடைந்தன. 1945ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் தேதி ஜெர்மானியர் தோல்வியை ஒப்புக்கொண்டு போரை முடித்துக் கொண்ட நேரத்தில் நேச நாடுகளின் வெற்றியில் பெரும்பங்கு ஆற்றியிருந்த சர்ச்சிலின் புகழ் உச்ச நிலையை அடைந்தது.

சர்ச்சிலின் பதவி இழப்பு

இத்தாலியும் ஜெர்மனியும் சரணடைந்த போதிலும், ஜப்பான்மட்டும் போரைத் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தொடர்ந்து நடத்திவந்தது. அதற்கிடையே, இங்கிலாந்தில் தேர்தல் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1935ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த நாட்டில் பொதுத்தேர்தல் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சர்வகட்சியின ரடங்கிய தேசிய அரசாங்கமே போர்க்காலத்திய நெருக்கடி யைச் சமாளித்து வந்தது. ஐரோப்பாவைப் பொறுத்த வரை யில் போர் 1945ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிந்திருக்க, புகழேணியின் உச்சியில் இருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு புதுத்தேர்தல் ஒன்று நடத்தினால் பெரு வெற்றி பெறலாம் என டோரிக் கட்சியினர் நினைத்து, பொதுத்தேர்தலை நடத்தும்படி சர்ச்சிலை வற்புறுத்தினர்.

1945ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பொதுத் தேர்தல் நடந்தது. தொழிற்கட்சியின் சமதர்மக் கொள்கையினால் நாட்டுக்கு நல்லதொன்றும் ஏற்படாதென்று சர்ச்சில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து பல தேர்தல் கூட்டங்களில் பேசியிருந் தும் எதிர்பார்க்காத அதிசயமாக, அவரது கட்சி அத் தேர்தலில் தோல்வியடைந்தது. ஆகவே, சர்ச்சில் தம் பதவியை, இராஜி நாமாச் செய்தார். கிளமெண்ட் அட்லியின் (Clement Attlee) தலைமையில் தொழிற்கட்சி அமைச்சரவையை அமைத்திருக்க சர்ச்சில் எதிர்க்கட்சித் தலைவராக அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு காமன்ஸ் சபையில் வீற்றிருக்க வேண்டியவரானார்.

அவரது போர்க்காலச் சேவையை மெச்சி, அரசர் ஆறாம் ஜார்ஜ் 'சர்' (Sir) பட்டம் கொடுக்க அச் சமயத்தில் முன்வந்த போது, சர்ச்சில் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்தார். பட் டத்தைப் பெற்றுக்கொள்வதால் தாம் அரசியலிலிருந்து நிரந்தர மாக ஓய்வு பெற்றதாகப் பொருள்படுமென்ற எண்ணத்தினால் அவர் அதை மறுத்திருக்கலாம்.

சர்ச்சில் மீண்டும் பிரதமராதல்

1951ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் டோரிகள் பெருவெற்றி பெற்றிருந்ததால், சர்ச்சில் மீண்டும் இங்கிலாந்தின் பிரதமரானார். ஆறாம் ஜார்ஜ் இறந்ததைத் தொடர்ந்து அவர்தம் மகளும் இன்றைய அரசியுமான இரண்டாம்

எலிசபெத் 1952ஆம் ஆண்டில் பட்டத்திற்கு வந்திருந்தார். தம் தந்தையால் கொடுக்க விருந்த 'சர்' பட்டத்தை எலிசபெத் அரசி சர்ச்சிலுக்கு அடுத்த ஆண்டில் அளித்து அவரைப் பெருமைப்படுத்தினர்.

சர்ச்சிலின் மறைவு

உடல் நலக்குறைவினால் 1955ஆம் ஆண்டு பதவியை இராஜினாமாச் செய்த சர்ச்சில், தம் கடைசிக்காலத்தை இலக்கிய ரசனையில் கழித்தார். பத்தாண்டுகள் ஓய்வான வாழ்க்கையை நடத்திய சர்ச்சில் நோய்வாய்ப்பட்டு 1965ஆம் ஆண்டு காலமானார். அரசக் குடும்பத்தினருக்கு உரித்தான மரியாதையுடன் அவர் வெஸ்ட்மின்ஸ்டரில் அடக்கம் செய்யப்பட்டார்.

24. அயர்லாந்து (1800 - 1949)

19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை எதிர்நோக்கி யிருந்த முக்கியப் பிரச்சினைகளில் அயர்லாந்து விவகாரம் குறிப்பிடத் தக்கது.

1800-ல் இவ்வாறு பிட்டினால் கொண்டுவரப்பட்டிருந்த ஐக்கியச் சட்டப்படி (Union Act) அயர்லாந்தும் இங்கிலாந்தும் ஒரே நாடென அறிவிக்கப்பட்டது. அதன்படி இரு நாடுகளுக்கும் ஒரே அரசர், ஒரே பாராளுமன்றம், ஒரே கொடி, ஒரே சேனை என ஏற்பட்டது. காமன்ஸ் சபையில் 100 ஐரிஷ் பிரதிநிதிகளும் பிரபுக்கள் சபையில் 28 ஐரிஷ் பிரபுக்களும் இடம் பெற்றனர். இரு நாடுகளுக்குமிடையே தடையிலா வாணிகம் ஏற்பட்டது. இரு நாடுகளின் திருச்சபையும் ஒன்றுபட்டன.

அந்த ஐக்கியச் சட்டத்தினால் ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. அவர்களின் அரசியல், சமய, பொருளாதார நிலைமையில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படாமலேயே இருந்தது.

அரசியல் குறை

ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தும் அவர்கள் பாராளுமன்றத்திற்கு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்க முடியாதபடி தடைச்சட்டம் இருந்தது. அயர்லாந்தின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக இருந்த கத்தோலிக்கர்களுக்கு எவ்வித அரசியல் உரிமையும் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. ஐரிஷ் பிராடஸ்டென்டுகளே வெஸ்ட்மின்ஸ்டர் (பிரிட்டிஷ்) பாராளுமன்றத்தில் அமர்ந்

திருக்கும் தகுதியைப் பெற்றவர்களாய் இருந்தனர். தங்கள் பிரதிநிதித்துவம் இல்லாத அப் பாராளுமன்றத்தினால் இயற்றப் பட்ட சட்டங்களை ஐரிஷ் கத்தோலிக்கர்கள் விரும்பி வரவேற் காததில் ஆச்சரியமில்லை.

சமய வெறுப்பு

அயர்லாந்தில் வசித்த மக்களில் ஐந்தில் நான்கு பங்கினர் கத்தோலிக்கர்கள். ஆனால், அங்கு ஆங்கிலிகக் கத்தோலிக்கத் திருச் சபையே (Angligan Churhc) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சபையாக விளங்கியது. தாங்கள் உறுப்பினராக இருக்கமுடியாத அப் பிராடஸ்டென்டு திருச்சபையின் பராமரிப்புக்கு மதவரி செலுத்தவேண்டி யிருந்ததை எண்ணிக் கத்தோலிக்கர் புழுங் கினர். பெரும்பான்மையினரின் சமயமான கத்தோலிக்க மதத் திற்கு அயர்லாந்தில் சம அந்தஸ்து கொடுக்கப்படாமல் சிறு பான்மையினரின் பிராடஸ்டென்டு மதத்திற்கு, அரசு அங்கீ காரம் கொடுத்திருந்ததை ஐரிஷ் கத்தோலிக்கர்கள் வெறுத்ததில் வியப்பில்லை.

நிலச்சிக்கல்

ஆலிவர் கிராம்வெல் காலத்திலிருந்தே அயர்லாந்தில் பெரும் பாலான நிலங்களை ஆங்கில நிலப்பிரபுக்களே உரிமையாகக் கொண்டிருந்தனர். விவசாயத்தைப் பெரிதும் நம்பியிருந்த ஐரிஷ் குடியானவர்கள் அந் நிலங்களில் மிக இழிவான நிலையிலே வேலை செய்தனர். நிலச் சொந்தக்காரர்கள் விவசாயிகளைப் பலவகை களில் சுரண்டித் துன்புறுத்தினர். எந்த நேரத்திலும் நஷ்டஈடு கொடுக்காமல் குடியானவர்களை நிலத்திலிருந்து விரட்டும் உரிமையை அந் நிலக்கிழார்கள் பெற்றிருந்தனர். அதிகக் குத்தகை கொடுக்க ஒப்புக்கொள்ளும் குடியானவர்களுக்கே நிலங்களை உரிமையாளர் கொடுத்துவந்தனர். முக்கியமாகப் பல நிலச் சொந்தக்காரர்கள் இங்கிலாந்திலேயே வாழ்ந்துவந்ததால் ஐரிஷ் குடியானவர்களின் பரிதாப நிலைமையை அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. அவர்களின் சார்பிலே பகராட்கள் (agents) நிலத்தைக் கண்காணிக்க ஐரிஷ் குடியானவர்கள் தங்கள் குறைகளை முறையிட வழியில்லாமல் போயிற்று.

சுருக்கமாக, ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பாராளுமன்றத்திலும் மற்ற அரசாங்க அலுவல்களிலும் இடம்பெற முடியாமல் தவித் தனர். மதத்துறையில் ஐரிஷ் பிராடஸ்டென்டு திருச்சபைக்குக்

கட்டுப்பட்டு வரி செலுத்தினர். விவசாயத் துறையிலும் ஆங்கில நிலப்பிரபுக்களால் கசக்கிப் பிழியப்பட்டனர்.

ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு ஓரளவு உரிமைகளைக் கொடுக்க இளைய பிட் (Pitt, the younger) முயன்றபோது அரசர் மூன்றும் ஜார்ஜ் அதற்குத் தடையாக இருக்க, பிட் பதவியை 1801-ல் இராஜினாமாச் செய்தார். 1804-ல் அவர் மீண்டும் பதவியைப் பெற்றபோதிலும் அயர்லாந்து விவகாரத்தில் அக்கறை காட்ட முடியாதபடி ஃபிரெஞ்சுப் போர்கள் தடுத்தன. 1807-ல் பிரபுக்கள் சபையில் பிரதமர் கிரென்வில் (Grenville) கத்தோலிக்கர்களுக்கு விடுதலை கொடுக்க ஒரு மசோதாவைக் கொண்டு வந்தபோதிலும் அரசர் அதை எதிர்த்தார். 1812-ல் கானிங் பிரபு பொதுமக்கள் சபையில் கத்தோலிக்க பிரச்சினையைப் பரிசீலிக்க ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருந்தும் மேற் கொண்டு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. 1821, 22, 23ஆம் ஆண்டுகளில் கத்தோலிக்கர்களுக்குச் சிறிதளவு நிவாரணம் அளிக்கும் மசோதாக்கள் காமன்ஸ் சபையில் நிறை வேற்றப்பட்டிருந்தும் பிரபுக்கள் சபையில் அவை தோற்கடிக்கப் பட்டிருந்தன. அங்ஙனம் கத்தோலிக்கப் பிரச்சினை இங்கிலாந் திலுள் தீர்க்கப்படாமலிருந்தது. இருப்பினும், சில ஐரிஷ் தலைவர் களின் வற்புறுத்தலின்பேரில், அடுத்தடுத்து, ஐரிஷ் பிரச்சினை தீர வழிகள் வகுக்கப்பட்டன.

முதல் கட்டம்

டேனியல் ஓ' கானல் (Daniel O' Connell) என்ற ஐரிஷ் தலைவரால் முதல் கட்டம் தொடங்கப்பட்டது. அறிஞரும் சிறந்த சொற்பொழிவாளருமான ஓ' கானல் 1823-ல் கத்தோ லிக்க சங்கம் (Catholic Association) ஒன்றை நிறுவினார். ஐரிஷ் கத்தோலிக்கர்களின் உரிமைக்குரலாக அச் சங்கம் அமைந் திருந்தது. அயர்லாந்து முழுவதும் அச் சங்கத்தின் சார்பிலே பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன என்பதிலிருந்து அதன் செல்வாக்கை நாம் அறியலாம். அச் சங்கத்திலுள் ஐரிஷ் கத்தோலிக்கர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்க 1828-ல் கிளேர் (Clare) என்ற கவுன்டியில் பாராளுமன்ற இடைத்தேர்தல் நடந்தது. கத்தோலிக்க சங்கத்தின் சார்பில் ஓ' கானல் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். ஓ' கானலின் வெற்றி ஒரு பெரும் சிக்கலை உண்டாக்கியது. அவர் கத்தோலிக் கரானதால் சோதனைச் சட்டப்படி (Test Act) ஆங்கிலப் பாராளு மன்றத்தில் அமருவதற்குத் தகுதியில்லாதவராக இருந்தார்.

அவரைப் பாராளுமன்றத்தில் அனுமதிக்கவில்லை யென்றால் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பெரும் கலகத்தில் ஈடுபடுவார்களென எதிர் பார்க்கப்பட்டது. அச் சமயத்தில் அயர்லாந்தில் லெப்டினட் பிரபுவாக இருந்த ஆங்கில்சே பிரபு (Lord Anglesey) ஓ' கான லுக்குப் பாராளுமன்றத்தில் இடம் அளிக்கப்படவில்லை யென்றால் அயர்லாந்தில் பெரும் கலகம் ஏற்படுமென இங்கிலாந்து அர சாங்கத்தை எச்சரித்தார். அதன் விளைவாக இங்கிலாந்தின் பிரதமர் வெலிங்டன் பிரபு 1829-ல் கத்தோலிக்க விடுதலைச் சட்டத்தைக் (Catholic Emancipation Act) கொண்டுவந்தார்.

அதன்படி அயர்லாந்தின் பாதுகாப்பாளர், லெப்டினட் பிரபு, சான்ஸலர் பிரபு ஆகிய மூன்று பதவிகளைத் தவிர மற்ற எல்லாப் பதவிகளுக்கும் கத்தோலிக்கர் அருகதையுள்ளவர் என அச் சட்டம் அறிவித்தது. கத்தோலிக்கர்கள் பாராளுமன்றத்தில் அமருவதற்கும் அச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டனர்.

தம் குறிக்கோளில் ஓரளவு வெற்றி பெற்ற ஓ' கானல் தம் கவனத்தை ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பிராடஸ்டென்டு திருச்சபைக்குக் கட்டாயமாகச் செலுத்தவேண்டிய மதவரிக்கு (டைத்) எதிராகத் திருப்பினர். அவ் வரியைக் கொடுத்தவர் களும் வசூலித்தவர்களும் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அயர் லாந்தில் ஒரு பயங்கர நிலைமை உருவாகியது. 1833-ல் அக் கலகக்காரர்களை அடக்க அடக்குமுறைச் சட்டமொன்று கொண்டு வரப்பட்டிருந்தும் நிலைமையில் அபிவிருத்தி ஏற்படவில்லை. அதன் பின்னர் 1835-ல் இங்கிலாந்தின் பிரதமரான மெல்போர்ன் பிரபு (Lord Melbourne) ஐரிஷ் தலைவரான டேனியல் ஓ' கான லோடு ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டார். அதன்படி ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கு 'டைத்' வரியிலிருந்து விலக்களிக் கப்பட்டிருந்தது. வருங்காலத்தில் நிலச் சொந்தக்காரர்களே அவ் வரியைக் குத்தகைக்காரர்களின் சார்பாகச் செலுத்த வேண்டுமென்று ஏற்பாடாகியது. மேலும், அவ் வுடன்பாட்டின் படி ஐரிஷ் ஊராட்சி முறையும் இரவலர் சட்டமும் (Poor Law) மக்களுக்குச் சாதகமாகத் திருத்தியமைக்கப்பட்டன. இருப்பினும் ஐரிஷ் மக்களின் சில முக்கியப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப் படாமலேயே இருந்தன. ஓ' கானல் இங்கிலாந்திலிருந்து அயர் லாந்தைப் பிரிப்பதன்மூலமாகத்தான் ஐரிஷ் மக்களின் குறை களைப் போக்க முடியுமென நம்பினர். சாத்வீகப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட அப் பெரும் தலைவர் கிளான்டார்ஃப் (Clantorf) என்னுமிடத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இங்கி

லாந்தின் பிரதமரான சர் ராபர்ட் பீல் அக் கூட்டம் நடைபெற விடாமல் தடுக்கும்படி அயர்லாந்து கவர்னருக்கு உத்தர விட்டார். அவ் வுத்தரவின்படி அயர்லாந்தின் கவர்னர் கூட்டத் திற்குத் தடை விதித்ததோடல்லாமல் மீறிக் கூட்டம் நடை பெற்றால் அதைக் கலைப்பதற்கென்று ஒரு படையையும் தயாரித் தார். பலாத்காரத்தை விரும்பாத ஓ' கானல் தம் கூட்டத்தைக் கலைத்துவிட்டார். இருப்பினும், அரசாங்கத்தை அவதூறு செய்த குற்றத்திற்காக ஓ' கானல் சிறையிலிடப்பட்டார். கத்தோலிக்க சங்கம் அவர் சிறையில் அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1843-ல் கலைக்கப்பட்டது. ஓ' கானலின் சாத்வீக முறையில் சலிப்புற்ற வில்லியம் ஸ்மித் ஓ பிரியன் (William Smith O' Brien), தாமஸ் டேவிஸ் (Thomas Davis) என்ற இரு புரட்சியாளர்கள் இள அயர்லாந்து (Young Ireland) என்ற ஒரு சங்கத்தை உரு வாக்கிப் பலாத்காரக் கொள்கையைப் பரப்பினர். டேனியல் ஓ' கானல் விடுதலை செய்யப்பட்டிருந்தும் 1847-ல் மனமுடைந்து காலமானார்.

இரண்டாம் கட்டம்

அவர் இறந்ததைத் தொடர்ந்து ஐரிஷ் பலாத்கார முறை வலுப்பெற்றது. 'நேஷன்' (Nation) என்ற பத்திரிகை இள அயர்லாந்துக் கட்சியினரின் கருத்துகளைப் பரப்பியது. அயர் லாந்து ஒரு கொந்தளிப்பான நிலையில் இருக்க ஜான் மிட்சல் (John Mitchell) என்பவர் 'ஐக்கிய அயர்லாந்தியர்' (United Irish Men) என்ற இன்னொரு புதிய புரட்சிக் கழகத்தை அமைத் தார். 1848-ல் அப் புரட்சிக் கழகங்கள் பலாத்காரத்தில் மும்முரமாக இறங்கிக் கலகங்களில் ஈடுபட்டன. அதையொட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் அடக்குமுறைக் கொள்கையைப் பின் பற்றிக் கலகத்தை அடக்கி ஐரிஷ் தலைவர்களை நாடு கடத்தியது.

ஐரிஷ் பிரச்சினையை அடக்குமுறைக் கொள்கையால்மட்டும் தீர்க்க முடியாதென நம்பி பிரதமர் ராபர்ட் பீல் அவர்களின் குறையை ஆராய டெவன் பிரபுவின் (Lord Devon) தலைமையில் ஒரு குழுவை (Devon Commission) அமைத்தார். நிலப் பிரச் சினையை ஆராய்ந்த அக் குழு, நிலத்தை விட்டு வெளியேற்றப் படும் குடியானவர்களுக்கு நஷ்டஈடு அளிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்திருந்தது. ஆனால், அதையொட்டிப் பாராளு மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருந்த மசோதா தோற்கடிக்கப் பட்டுவிட்டது. ஆனால், கல்வித் துறையில் அக் கமிஷன் செய்த சிபாரிசுகளை பீல் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. கத்தோலிக்கக்

குருமார்கள் பயிற்சி பெற்றுவந்த மாய்னூத் கல்லூரிக்குக் (Maynooth College) கொடுக்கப்பட்டுவந்த உதவித் தொகையை 9,000 பவுனிலிருந்து பீல் 26,000 பவுன்களாக உயர்த்தினர். கத்தோலிக்கர்களுக்குக் கல்வி வசதி அளிக்க மதச்சார்பற்ற கல்லூரிகளைப் பெல்ஃபாஸ்ட் (Belfast), கார்க் (Cork), கால்வே (Galway) என்ற நகரங்களில் இராணியின் கல்லூரிகள் (Queen's Colleges) என்ற பெயரில் பீல் ஏற்படுத்தினர். ஆனால், பிராடஸ்டென்டுகளோடு சேர்ந்து மதச்சார்பற்ற அக் கல்லூரிகளில் கத்தோலிக்கர்கள் சேர மறுத்தனர்.

பீலின் காலத்தில் அயர்லாந்தில் கடுமையான பஞ்சம் தோன்றியிருந்தது. 1946-லிருந்தே உருளைக் கிழங்குப் பயிர் நோயினால் பாதிக்கப்பட்டிருக்க அயர்லாந்தில் விவசாயம் குலைந்திருந்தது. நிலச் சொந்தக்காரர்கள் விவசாயிகளைப்பற்றி எவ்வித அக்கறையும் காட்டாமலிருந்தனர். தானியச்சட்டம் ரத்து செய்யப்பட்டிருந்தும் அயர்லாந்தின் பஞ்சம் போக்கப்பட வில்லை. அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஸ்மித் ஓ' பிரியன் தலைமையில் 1848-ல் ஒரு கலகம் தோன்றியது. அக் கலகம் அடக்கப்பட்டபோதிலும் அது ஐரிஷ் மக்களின் கொந்தளிப்பை எடுத்துக் காட்டியது. பஞ்சத்தினாலும் அரசாங்கத்தின் அடக்குமுறைகளினாலும் அவதிப்பட்ட பல ஐரிஷ்காரர்கள் அமெரிக்காவில் சென்று குடியேறினர்கள். அங்ஙனம் குடியேறிய ஐரிஷ் மக்கள் பிரிட்டிஷாரைத் தங்களது கொடிய விரோதிகளாகக் கருதினர்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்தை அயர்லாந்திலிருந்து நீக்கி அங்கு ஒரு குடியரசை அமைக்கவேண்டுமென அவர்கள் விரும்பினர்கள். ஆகவே, ஃபெனியன் (Fenian) என்ற ஒரு புரட்சிக் கழகத்தை நியூயார்க்கில் அந்த ஐரிஷ் குடியேறிகள் நிறுவினர். தொடர்ந்து அக் கழகத்தின் கிளை ஸ்தாபனங்கள் அயர்லாந்தின் முக்கிய நகர்களில் தோன்றலாயின. பலாத்கார வழிகளிலே அயர்லாந்தில் குடியரசை ஏற்படுத்துவதே ஃபெனியன்களின் நோக்கமாக இருந்தது. அக் கழகத்தினர் இரகசியமாக ஆயுதங்களைத் தயாரித்துப் பல ஆங்கில அதிகாரிகளைக் கொல்லத் திட்டமிட்டிருந்தனர். அயர்லாந்தில் நிலப் பிரபுக்களிடையே ஃபெனியன்களால் பீதி நிலவியது. ஃபெனியன்களின் இரகசிய நடவடிக்கைகளைத் தெரிந்துகொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான அடக்குமுறையில் இறங்கியது. சுமார் 300 ஃபெனியன்கள் அவற்றின் தலைவருட்படக் கைது செய்யப்பட்டனர். எஞ்சிய பலர் மலைப்பிரதேசங்களுக்கு ஓடி அங்குக் கடும் குளிரில் சிக்கிக் கொண்டு மாண்டனர். ஃபெனியன் இயக்கம் ஒடுக்கப்பட்டதெனினும் அது அயர்லாந்துப் பிரச்சினையை இங்கிலாந்திற்கு

நினைவுபடுத்தியது. அச் சமயத்தில்தான் 'அயர்லாந்தைச் சமாதானப்படுத்துவதே எனது வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோள்' எனக் கூறிக்கொண்டு கிளாட்ஸ்டன் 1868-ல் தம் லிபரல் கட்சியின் சார்பிலே தேர்தல் பிரசாரம் அமைத்தார்.

மூன்றும் கட்டம்

அயர்லாந்தை உபாஸ் என்ற ஒரு நச்சு மரத்திற்கு ஒப்பிட்டு, சமய நிறுவனம், நிலவுரிமை, கல்விமுறை என்ற அதன் மூன்று நச்சுக்கிளைகளை வெட்டி வீழ்த்துவதே தமது கடமையெனப் பேரமைச்சர் கிளாட்ஸ்டன் சூளுரைத்தார். அதற்கேற்பத் தம் முதல் மந்திரிசபை காலத்தில் (1868 - 1874) மதத்துறை, நிலவிவகாரம், கல்விமுறை போன்றவற்றில் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அயர்லாந்தில் இருந்த ஆங்கிலத் திருச்சபை நாட்டின் பெரும் பகுதிச் செல்வத்தைத் தன்னிடத்தே கொண்டிருந்து ஆங்கிலேயரின் ஆதிக்கச் சின்னமாக விளங்கியது. அப் பிராடஸ்டென்டு திருச்சபை அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரே சபையாக அயர்லாந்திலிருக்க ஐரிஷ் கத்தோலிக் கர்கள் அதை வெறுத்ததில் நியாயம் இருந்ததை கிளாட்ஸ்டன் கண்டறிந்தார். பெரும்பான்மை மக்களான ஐரிஷ் கத்தோலிக் கர்களை ஓரளவாவது சமயத்துறையில் திருப்திப்படுத்த கிளாட்ஸ்டன் நினைத்து அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்தார். அச் சட்டத்தின்படி ஐரிஷ் ஆங்கிலத் திருச்சபையின் சிறப்புரிமைகள் பறிக்கப்பட்டன. அத் திருச்சபைக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் அதுவரை இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதுவரை ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அமரும் உரிமையைப் பெற்றிருந்த ஐரிஷ் மத நிலையப் பிரபுக்கள் அங்கிருந்து விலக்கப்பட்டனர். பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்ட சமய நீதி மன்றங்களும் சமயச்சட்டங்களும் சமயக்கழகங்களும் அயர்லாந்தில் ஒழிக்கப்பட்டன. ஐரிஷ் திருச்சபை பிரிட்டிஷ் உதவியின்றித் தன்னைத் தானே தன்னுல் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகித்துக்கொள்ள வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. சுருக்கமாக ஐரிஷ் பிராடஸ்டென்டு திருச்சபை மற்ற மத ஸ்தாபனங்களோடு சமமான நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆக கிளாட்ஸ்டன் தம் சட்டத்தினுல் ஐரிஷ் மத ஸ்தாபனத்தின் ஆதிக்கத்தை ஒழித்தார். பின்னர், அத் திருச்சபை சேர்த்துவைத்திருந்த பெரும் நிதியைக் கைப்பற்றிக்கொள்வதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து அதன் பெரும் தனத்தைப் பறிமுதல் செய்தார். அங்ஙனம் கைப்பற்றப்பட்ட செல்வத்தின் ஒரு பகுதி வறுமையில் வாடிய ஐரிஷ் மக்களின் துன்பங்களைப் போக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஐரிஷ் விவசாயிகள் அனுபவித்து வந்த துன்பங்களைப் போக்கவும் ஒரு சட்டம் கொண்டுவந்தார். ஐரிஷ்மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளே; அவர்கள் எவ்வித உரிமைகளுமின்றிக் கேவலமான வாழ்க்கையை நடத்திவந்ததை இத் தலைப்பின் ஆரம்பத்திலேயே கண்டோம். அவர்களின் அந்த நிலையைப் போக்க கிளாட்ஸ்டன் முதல் நிலச்சட்டத்தைக் (1870) கொண்டு வந்தார். அச் சட்டத்தின்படி ஒரு குடியானவனை அவன் சாகுபடி செய்துவரும் நிலத்திலிருந்து தகுந்த காரணங்களின்றி நில முதலாளி வெளியேற்றக் கூடாதென்றும், அப்படி அவன் வெளியேற்றப்பட நேர்ந்தால், அக் குடியானவன் நிலத்தை வளப்படுத்தச் செய்த செலவுகளுக்கு நிலமுதலாளி நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது.

அடுத்ததாகக் கல்வித்துறையிலும் கிளாட்ஸ்டன் தம் கவனத்தைச் செலுத்தினார். ஐரிஷ் கத்தோலிக்கர்களுக்கென்று தனிக்கல்லூரி ஒன்று மட்டுந்தான் இருந்தது. அதுவும் அரசாங்கத்தாரால் நடத்தப்பெறவில்லை. அரசாங்கத்தால் நடத்தப்பட்ட மதச் சார்பற்ற இராணி கல்லூரிகளில் கத்தோலிக்கர்கள் சேர்ந்து படிக்க மறுத்தனரென்பதை நாம் முன்னரே பார்த்தோம். ஆகவே, தங்களுக்கென்று ஒரு தனிக் கல்லூரியை அரசாங்கம் நிறுவவேண்டுமென்று ஐரிஷ் கத்தோலிக்கர் விரும்பினர். அதன்படி 1873-ல் கிளாட்ஸ்டன் ஐரிஷ் பல்கலைக் கழக மசோதாவைக் (Irish University Bill) கொண்டு வந்தார். அம் மசோதாவின்படி, டப்ளினில் (Dublin) தனிப் பல்கலைக் கழகமொன்று ஏற்பட வேண்டுமெனவும் அதில் எவர் வேண்டுமானலும் அனுமதிக்கப்படலாமெனவும் அங்குச் சமயச்சார்பற்ற கல்வி புகட்டவேண்டுமெனவும் அச் சட்டம் கூறியது. அப் பல்கலைக் கழகத்தில் இணைந்த மற்றக் கல்லூரிகள் வேண்டுமானல் சமயக் கல்வியைப் போதிக்கலாமென அம் மசோதா கூறியது. துரதிர்ஷ்டவசமாக அம் மசோதா பாராளுமன்றத்தில் தோல்வியுற்றது.

கிளாட்ஸ்டன் முதலமைச்சரவைக் காலத்தில் ஐரிஷ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கச் சில முயற்சிகள் செய்யப்பட்டிருந்தும் அவர்களுக்குப் பூரண திருப்தி ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

1879 - 1880-ல் அயர்லாந்தில் கடுமையான உருளைக் கிழங்குப் பஞ்சம் ஏற்பட்டது. குத்தகைப் பணத்தைக் கொடுக்க முடியாமல் ஏராளமான குடியானவர்கள் அவதிப்பட்டனர். அந் நிலையில் அக் குடியானவர்கள் நிலங்களிலிருந்து விரட்டப்பட

வேண்டியவர்களானார்கள். அங்ஙனம் விரட்டப்பட்ட குடியானவர் பசி, பஞ்சத்தினால் பாதிக்கப்பட, கொலை, கொள்ளை போன்ற செயல்களிலே ஈடுபடலாயினர். அயர்லாந்து முழுவதும் ஒரு பலாத்தார வெறி பரவியது. அச் சமயத்தில் பார்னெல் (Parnel), டேவிட் (Davitt) என்ற இரு புரட்சித்தலைவர்கள் நிலச்சங்கம் ஒன்றை (Land League) நிறுவினர். ஆங்கிலேயர் ஆதிக்கத்தை அறவே வெறுத்த அத் தலைவர்கள் அயர்லாந்தில் ஓர் எதிர்ப்பு இயக்கத்தை வளர்க்கலாயினர். அச் சங்கத்தில் சேர்ந்தவர்கள் குத்தகையை ஏற்க மறுத்ததோடு, இரக்கமற்ற நிலப் பிரபுக்களுக்குக் குத்தகைப் பணத்தைக் கொடுக்க மறுப்பதென்றும் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஒரு குடியானவன் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டபோது அந்நிலத்தைச் சாகுபடி செய்ய ஒப்புக்கொண்ட மற்றக் குத்தகைக்காரனை அச் சங்கத்தினர் தள்ளி வைத்தனர். நிலச் சங்கத்தின் ஒத்துழையாமைப் போராட்டத்தினால் நிலப்பிரபுக்கள் பல அவதிகளுக்கு உள்ளாயினர். பார்னலின் தூண்டுதலின்படி ஆங்கிலப் பாராளுமன்றத்திலிருந்த ஐரிஷ் உறுப்பினர்களும் ஒரு விசித்திர முறையை ஏற்படுத்தினர். பிக்கர் (Bigger), ஓ' கோர்மென் (O' Gorman) போன்ற தலைவர்களின்கீழ் ஐரிஷ் அங்கத்தினர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தில் ஒருவர்பின் ஒருவராகப் பாராளுமன்றத்தில் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தனர். அயர்லாந்தின் பிரச்சினையைத் தவிர வேறொன்றையும் இங்கிலாந்துப் பாராளுமன்றம் கவனிக்கமுடியாமல் இருந்தது. அந் நிலையிலேயே கிளாட்ஸ்டன் தம் இரண்டாம் மந்திரி சபையை அமைத்தார் (1880).

நிலச்சங்கத்தின் ஒத்துழையாமை இயக்கத்தை வெறும் அடக்குமுறைகளால் நசுக்கமுடியாது என உணர்ந்த பேரமைச்சர் கிளாட்ஸ்டன் ஐரிஷ் நிலச்சிக்கலைப் போக்க 1881-ல் இரண்டாம் நிலச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். தனிப்பட்ட நிலநீதிமன்றங்களே குத்தகைப் பணத்தைத் தீர்மானிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்ட குத்தகையைச் செலுத்தும்வரையில் எந்தக் குடியானவனையும் சொந்தக்காரர்கள் நிலத்தைவிட்டு விலக்கக் கூடாதென்றும் அச் சட்டம் வற்புறுத்தியது. அந்தநிலச் சீர்திருத்தங்கள் பார்னலுக்குத் திருப்தியளிக்க வில்லை. அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஆட்களும் நில நீதிமன்றங்களின் உதவியை நாட மறுத்தனர். இதனால் வெகுண்ட இங்கிலாந்து அரசாங்கம் பார்னலையும் அவர்தம் சகாக்களையும் சிறைப்படுத்தியது. அதைத் தொடர்ந்து நாடெங்கிலும் கொலையும், கொள்ளையும் கோரத் தாண்டவமாடின. அடக்குமுறைக் கொள்கையை விரும்பாத

கிளாட்ஸ்டன் பார்னலோடு ஒரு சமரச உடன்பாட்டைச் (கில் மெயின்ஹாம் உடன்படிக்கை) செய்துகொண்டார். அதன்படி குத்தகைப்பண பாக்கிகளைத் தரமுடியாத குடியானவர்களுக்கு ஆதரவளிக்கும் சட்டமொன்றைக் கொண்டுவர கிளாட்ஸ்டன் ஒப்புக்கொண்டார். பதிலுக்கு அயர்லாந்தில் நடைபெற்ற கல கத்தை நிறுத்துவதாக பார்னலும் ஒப்புக்கொண்டார். பார்னல் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து அதுவரை ஐரிஷ் கவர்னராக இருந்த ஃபார்ஸ்டர் பிரபு தம் பதவியை இராஜினாமாச் செய்தார். அவருக்குப் பதிலாக காவண்டிஸ் பிரபு என்பவர் அயர்லாந்திற்கு அனுப்பப்பட்டார். அவரும் அவர்தம் செயலாளர் பர்க் என்ப வரும் போன்க்ஸ் பூங்காவில் உலவச்சென்றபோது சில ஐரிஷ் காலி களால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அந்தக் கொலை கிளாட்ஸ்டனுக்கும் பார்னலுக்கும் ஏற்படுத்தியிருந்த ஒப்பந் தத்தை அர்த்தமில்லாமல் செய்துவிட்டது. இதனால் வெகுண்ட பிரிட்டிஷ் சர்க்கார் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது.

டேவிட்டின் தலைமையிலிருந்த நிலச்சங்கமும் பார்னலின் தேசிய ஐரிஷ் கட்சியும் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான நடவடிக் கைகளை மேற்கொண்டன. அயர்லாந்திற்கு சுய ஆட்சியை வழங் கியே தீரவேண்டுமென்று அத் தலைவர்கள் பெரும் குரலிட்டனர்.

கிளாட்ஸ்டன் தாம் மூன்றும் முறையாக பிரதமர் பதவியைப் பெற்றபோது ஐரிஷ் பிரச்சினையில் தனிக்கவனம் செலுத்தினர். அயர்லாந்திற்கு சுய ஆட்சியை வழங்குவதன்மூலம் ஐரிஷ் பிரச் சினையைச் சுமுகமாகத் தீர்க்க முடியுமென நம்பி 1886-ல் ஐரிஷ் சுயாட்சி மசோதாவைக் (Irish Home Rule Bill) கொண்டு வந்தார். அயர்லாந்திற்கு ஒரு தனிப் பாராளுமன்றம் கொடுக்கப் பட வேண்டுமென்றும்; படை, சுங்கவரி, அயல்நாட்டு விவகா ரங்கள் நீங்கலாக மற்றப் பொறுப்புகளை அப் பாராளுமன் றத்தின் அதிகாரத்திற்கு விடவேண்டுமென்றும் அம் மசோதா கூறியது. அயர்லாந்தில் இருந்த பிராடஸ்டென்டுகள் தங்களின் உரிமைகள் ஐரிஷ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்த கத்தோலிக்கர்களால் பாதிக்கப்படு மெனப் பயந்து அம் மசோதாவை எதிர்த்தனர். அயர்லாந் திற்கு சுயாட்சி வழங்கினால் பேரரசின் மற்றப் பகுதிகளும் அச் சலுகையைக் கேட்க ஆரம்பிக்குமென இங்கிலாந்தில் பல அரசியல் வாதிகள் பயந்தனர். அதனால் பிரிட்டிஷ் பேரரசு குலைந்து போகு மெனவும் அச்சப்பட்டனர். கிளாட்ஸ்டனின் லிபரல் கட்சியிலேயே

அம் மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் மசோதா ஓட்டுக்கு விடப்பட்டபோது ஆதரவாக 318 வாக்குகளும் எதிராக 343 வாக்குகளும் பதிவாயின மசோதா தோல்வியுற்றது. கிளாட்ஸ்டன் பதவியை இராஜினாமாச் செய்தார்.

1892-ல் நான்காம் முறையாகப் பதவிபெற்ற கிளாட்ஸ்டன் அயர்லாந்தின் சிக்கலைத் தீர்க்கவேண்டி அடுத்த ஆண்டில் இரண்டாவது சுயாட்சி மசோதாவைக் கொண்டுவந்தார். அம் மசோதா ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டிருந்தது. அதன்படி இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் அயர்லாந்தினருக்குப் பிரதி நிதித்துவம் வழங்கப்பட்டது. 80 ஐரிஷ் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் இங்கிலாந்து நாட்டின் தனிப்பிரச்சினைகளைத் தவிர மற்ற விவகாரங்களில் அவர்கள் கலந்து கொள்ளலாமென்றும் அம் மசோதா கூறியது. காமன்ஸ் சபையில் அம் மசோதாவிற்கு ஆதரவாக 301 வாக்குகளும் எதிராக 263 வாக்குகளும் பதிவாயின. ஆனால், அம் மசோதா பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டபோது ஆதரவாக 41 வாக்குகளும் எதிராக 418 வாக்குகளும் பதிவானதால் அது தோல்வியுற்றது. அதன் விளைவாக ஐரிஷ் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்திய கிளாட்ஸ்டன் பதவியை இராஜினாமாச் செய்

நான்காம் கட்டம்

1895-ல் கன்ஸர்வேடிவ் கட்சியினர் இங்கிலாந்தில் பதவியைப் பெற்றனர். அயர்லாந்தினருக்கு சுயாட்சியை வழங்காமலேயே வேறு சில சீர்த்திருத்தங்களைக் கொண்டுவந்து ஐரிஷ் பிரச்சினையைத் தீர்க்கலாமென அவர்கள் நினைத்தனர் அதன் விளைவாகச் சில சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. நிலச் சொந்தக்காரரிடமிருந்து குடியானவர்கள் நிலங்களை வாங்கிக் கொள்வதற்கு உதவியாக ஆஷ்பர்ன் சட்டம் கொண்டுவரப்பட்டது. இன்னொரு சட்டம் கவுன்டிகளிலும் மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தல ஆட்சி சபைகளை ஏற்படுத்தியது. 1903-ல் விண்ட்ஹாம் என்னும் ஐரிஷ் கவர்னர் நிலம் வாங்கும் சட்டம் (Land Purchase Act) ஒன்றைக் கொண்டு வந்தார். அச் சட்டத்தின்படி ஐரிஷ் குடியானவர்கள் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களைத் தவணை முறையில் வாங்க அனுமதிக்கப்பட்டனர். அதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் ஐரிஷ் குடியானவர்களுக்குக் கடனுதவி கொடுக்க 100,000,000 பவுன்களை ஒதுக்கியது. வாங்கிய கடனை 68½ ஆண்டுகளில் சிறிது சிறிதாகத் திருப்பித்தர ஐரிஷ்

குடியானவர்கள் நிலப் பிரபுக்களிடமிருந்து அரசாங்கம் பெரும் பண்ணைகளை வாங்கி ஐரிஷ் குடியானவர்களுக்குத் தவணை முறையில் விற்றது. இச் சட்டத்தினால் ஐரிஷ் நிலப்பிரச்சினை ஓரளவு தீர்ந்ததுபோல் காணப்பட்டது. சர் ஹொரேஸ் புளுங்க்கட் (Sir Horace Plunkett) என்பார் ஐரிஷ் குடியானவர்களுக்கு உதவி புரியும் வகையில் ஒரு கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கினர். ஒவ்வோர் ஐரிஷ் நகரத்திலும் குடியானவர்களுக்கு உதவியாகக் கடன் வழங்கும் சங்கங்களும் கூட்டுறவு வங்கிகளும் ஏற்படுத்தப்பட்டன. தங்களுக்குத் தேவையான விதை, குதிரை, பசு போன்றவற்றை வாங்குவதற்கான முன் பணத்தை அரசாங்கம் கடனாகக் கொடுத்தது. தங்கள் உற்பத்திப் பொருள்களை அவ் வங்கி ஏற்றுக்கொண்டு குடியானவர்களுக்குப் பணத்தைக் கொடுத்தது. அங்ஙனம் அயர்லாந்தில் ஒரு சில நல்ல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அயர்லாந்தின் சில பகுதிகளில் இருப்புப்பாதைகளும் போடப்பட்டன. அதனால், பிரயாண சௌகரியங்களுடன் பொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விரைவாக அனுப்புவதற்கு சாத்தியப் பட்டது.

அச் சமயத்தில் ஜான் ரெட்மாண்ட் (John Redmond என்பவர் ஐரிஷ் தேசியக் கட்சியாருக்குத் தலைவராக இருந்தார். அயர்லாந்திற்கு சுயாட்சியை வழங்குவதால் ஐரிஷ் பிராடஸ்டென்டுகளுக்கும் இங்கிலாந்துப் பேரரசுக்கும் எவ்விதக் குந்தகமும் விளையாது என்று இங்கிலாந்து அரசினருக்கு அவ்வப்போது எடுத்துரைத்துவந்தார். ஆனால், கன்சர்வேடிவ் கட்சியினர் ஐரிஷ் சுயாட்சி விவகாரத்தில் அக்கறை காட்டவில்லை.

1905-ல் லிபரல் கட்சியினர் பதவிக்கு வந்தனர். அதே ஆண்டில் சின்ஃபீன் அல்லது 'நாம் நமக்கே' (Sinnfein) என்ற ஒரு புதுக் கட்சியும் அயர்லாந்தில் தோற்றுவிக்கப்பட்டது. ஆர்தர் கிரிஃபித் (Arthur Griffith) என்பவரால் தொடங்கப் பட்டிருந்த சின்ஃபீன் கட்சி வெறும் சுயாட்சியை விரும்பாமல் அயர்லாந்திற்குப் பூரண சுதந்தரத்தைக் கேட்டது. சிறிது சிறிதாக அக் கட்சி அயர்லாந்திலே செல்வாக்குப் பெற்று வளர ஆரம்பித்தது. சர் ஹென்றி கேம்பெல் பானர்மென் (Sir Henry Campbell Bannerman) என்ற லிபரல் பிரதமர் ஐரிஷ் விவகாரத்தில் ஆர்வம் காட்டி அதற்கான காரியங்களில் ஈடுபட்டார். 1908-ல் முதியோர் ஓய்வுப் பணச் சட்டம் (Old Age Pension Act) அயர்லாந்திலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டில் ஐரிஷ் பல்கலைக் கழகச் சட்டமொன்று கொண்டுவரப்

பட்டு டப்ளின் நகரிலும் பெல்ஃபாஸ்ட் நகரிலும் இரு பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. 1909-ல் நிலங்களைக் குடியானவர்கள் கட்டாயமாகப் பெறுவதற்காக ஒரு நிலச் சட்டமும் கொண்டு வரப்பட்டது. இருப்பினும், ஐரிஷ் சுயாட்சியைப்பற்றி லிபரல் அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. 1909,1910-ல் இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தல்கள் லிபரல் கட்சியினரை ஐரிஷ் பிரச்சினையில் கவனம் செலுத்தும்படி ஒரு கட்டாயச் சூழ்நிலையை ஏற்படுத்தியது. பாராளுமன்றத்தில் லிபரல் கட்சியினரும், கன்ஸர்வேடிவ் கட்சியினரும் பெரும்பான்மை பெற்றிருந்த நிலையில் ஐரிஷ் அங்கத்தினரின் தயவு இரு கட்சியினருக்குமே தேவைப்பட்டது. அயர்லாந்திற்கு சுயாட்சியை வழங்குவதற்கு லிபரல் கட்சி ஒப்புக்கொண்டால் தங்களாதரவைக் கொடுக்க ஐரிஷ் அங்கத்தினர்கள் தயாராக இருப்பதாக ஐரிஷ் தேசியக் கட்சியின் தலைவரான ரெட்மாண்டு அறிவித்திருந்தார். அதற்கு லிபரல் கட்சியினர் ஒப்புக்கொள்ளவே 1909-ல் ஆஸ்க்வித் என்ற லிபரல் பிரதமரால் கொண்டுவரப்பட்டிருந்த புகழ் பெற்ற பண மசோதாவை ஐரிஷ் கட்சியினர் ஆதரித்தனர். அதற்கு ஈடாக அயர்லாந்திற்கு சுயாட்சி வழங்க ஆஸ்க்வித் சர்க்கார் ஏற்பாடு செய்தது.

1911-ல் சுயாட்சி மசோதா கொண்டுவரப்பட்டது. அம் மசோதாவைப் பிரபுக்கள் சபை மூன்று முறை நிராகரித்த போதிலும் பாராளுமன்றச் சட்டப்படி (1911) அது சட்டமாகியது. ஐரிஷ் பாராளுமன்றத்திற்குப் படை, கப்பற்படை, வெளி நாட்டு விவகாரம், சுங்கவரி போன்றவை நீங்கலாக மற்ற விஷயங்களில் பூரண சுதந்தரம் கொடுக்கப்பட்டது. வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தில் 32 ஐரிஷ் உறுப்பினர்கள் அமர்ந்து எல்லாப் பிரச்சினைகள்மீதும் எடுக்கப்படும் வாக்களிப்பில் கலந்துகொள்ளலாமெனவும் அச் சட்டம் கூறியது. துரதிர்ஷ்டவசமாக அச் சட்டத்தை அயர்லாந்தின் வட பகுதியான அல்ஸ்டர் மாகாணத்தில் நிறைந்திருந்த ஐரிஷ் பிராடஸ்டென்டுகள் எதிர்த்தனர். தங்களைக் கத்தோலிக்கர் பெரும்பான்மையாக உள்ள ஐரிஷ் பாராளுமன்றம் ஆளப்போவதை நினைத்து வெருண்டனர். ஆகவே சர் எட்வர்ட் கார்சன் (Sir Edward Carson) என்பவர் தலைமையில் அல்ஸ்டர் பிராடஸ்டென்டுகள் ஒரு படையை அமைத்து உள் நாட்டுப் போருக்குத் தயாராயினர். அவர்களைத் திருப்திப்படுத்த ஆஸ்க்வித் அரசு ஓர் இடைக்கால ஏற்பாட்டைச் செய்தது. அதன்படி ஆறு மாதத்திற்கு வேண்டுமானால் அல்ஸ்டர் மாகாணம் ஐக்கிய அயர்லாந்திலிருந்து பிரிந்திருக்கலாமெனவும், ஆனால், அதன்பின் அயர்லாந்துடன் சேர்ந்தே தீரவேண்டுமென்றும்

தீர்மானிக்கப்பட்டது. இதை அல்ஸ்டர் பிராடஸ்டென்டுகள் ஏற்கமறுத்து நிரந்தரமாக அயர்லாந்திலிருந்து பிரிந்தே வாழ்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். அல்ஸ்டர் பிராடஸ்டென்டு களின் பிடிவாதத்தைக் கண்ட தென் அயர்லாந்தினர் சின்ஃபீன் கட்சியினரால் தூண்டப்பட்டுப் பெரும் புரட்சியில் இறங்கத் தயா ராக இருந்தனர். அயர்லாந்தில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற் கான சூழ்நிலை உருவாகியது. நல்ல வேளையாக அச் சமயத்தில் முதலாம் உலகப்போர் தொடங்கியதால் மக்களின் கவனம் வேறு பக்கம் திரும்பியது.

முதல் உலகப்போர் சிறிது காலத்திற்கே நீடிக்கும் என நினைத்து ஐரிஷ் சுயாட்சி மசோதாவை இங்கிலாந்து அமுலுக்குக் கொண்டுவராமல் நிறுத்திவைத்தது. அயர்லாந்தினரும் தங்கள் பகைமையை மறந்து இங்கிலாந்துடன் போரில் ஒத்துழைக்க முன் வந்தனர். ஆனால், அப்பொழுது போர் இலாகாவின் தலைவராக இருந்த கிச்சனர் பிரபுவுக்கு அயர்லாந்தினர்மீது ஐயப்பாடு எழுந்தது. அடுத்துக் கெடுக்கும் வேலையில் ஐரிஷ்காரர்கள் ஈடு பட்டுவிடுவார்களெனப் பயந்து பிரிட்டிஷ் அரசாங்கம் ஐரிஷ் வீரர்களை ஏனைய வீரர்களோடு கலந்தே பிற நாடுகளுக்குப் போர் செய்ய அனுப்பியது. தங்களைத் தனித்தனிப் படைப் பகுதிகளாக அமைக்க வேண்டுமென அயர்லாந்தினர் கோரிக்கொண்ட போதும் பிரிட்டிஷார் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதன் விளைவாக மீண்டும் ஐரிஷ்காரர்களுக்கு ஆங்கிலேயர்களின் நம்பிக் கையின்மையால் வெறுப்பு ஏற்பட்டது. சின்ஃபீன் கட்சியினர் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மானியர் களோடு இரகசியப் பேச்சுவார்த்தைகளில் இறங்கினர். போர்க் காலத்திலேயே அயர்லாந்தில் ஒரு குடியரசை நிறுவ சின்ஃபீன் கட்சியினர் சதித்திட்டம் தீட்டினர். ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலின்மூலம் அயர்லாந்துக்குள் நுழைந்த ஒரு புரட்சித் தலை வரை ஆங்கிலேயர் கைது செய்து சிரச்சேதம் செய்து விட்டனர். அதைத் தொடர்ந்து 1916-ல் டப்ளின் நகரில் கலவரங்கள் தோன்றின. பிரிட்டிஷ் அரசாங்கம் அக் கலகத்தைக் கடுமையாக அடக்கி அதில் பங்கு கொண்டவர்களைக் கடுமையாகத் தண்டித் தது. இங்கிலாந்தின் அடக்குமுறைகளால் பொறுமையிழந்து விட்ட ஐரிஷ்காரர்கள் சின்ஃபீன் கட்சியின் செல்வாக்குக்குக் கட்டுபட்டவர்களாயினர். 1918-ல் நடந்த பொதுத் தேர்தலில் ஐரிஷ் தேசியக்கட்சி படுதோல்வி அடைந்தது; சின்ஃபீன் கட்சி யினர் பெரும்பான்மையினராக வெற்றி பெற்றனர். ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் செல்லாமல் டப்ளின் நகரிலேயே சின்ஃபீன் கட்சியினர் தனிப்பட்ட குடியரசை நிறுவினர். அக் குடியரசுக்கு

ஆர்தர் கிரிஃபித் மைக்கேல், காலின்ஸ் உபஜனதிபதியாகவும் அறிவிக்கப்பட்டனர். ஆங்கிலேயர்மீது விசுவாசம் காட்டிய அனேகரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த எதிர்பாராத திருப்பத்தைத் தொடர்ந்து அல்ஸ்டர் மாகாண பிராடஸ்டென்டுகள் தங்களைக் காத்துக்கொள்ள ஆயுதம் தாங்கி உள்நாட்டுப் போருக்குத் தயாராயினர். ஐரிஷ் சுதந்தரக் குடியரசை ஒடுக்க பிரிட்டிஷ் அரசாங்கமும் தன் படைகளை அயர்லாந்தின்மீது ஏவியது. அயர்லாந்து ஒரு ரணகளமாகக் காட்சியளித்தது. இறுதியில் அயர்லாந்திற்குப் பூரண சுதந்தரம் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என இங்கிலாந்து அரசாங்கம் உணர்ந்தது.

1920-ல் லாயிட் ஜார்ஜ் அரசாங்கம் ஐரிஷ் தலைவர்களை அழைத்து ஒரு சமாதானத்தைச் செய்து கொண்டது. அதன்படி இன்னொரு சுயாட்சிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தென் அயர்லாந்து பிரிட்டிஷ் காமன்வெல்த்திற்குட்பட்ட சுயேச்சை நாடாகவும், வட அயர்லாந்து (அல்ஸ்டர்), டொமினியன் அந்தஸ்த்தைப் பெற்ற தனி நாடாகவும், இருக்க வேண்டுமென அச் சட்டம் கூறியது. சின்ஃபீன் கட்சியினர் அந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டபோதிலும் எமன் டி வாலரா (Eamon De Valera) என்பவரின் தலைமையில் தென் அயர்லாந்தில் ஏற்பட்டிருந்த தீவிரக்கட்சி பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட சுதந்தரமே அயர்லாந்திற்குத் தரப்பட வேண்டுமென்று முழக்கமிட்டார். சின்ஃபீன் கட்சியினருக்கும் டி வாலரா கட்சியினருக்கும் தகராறு ஏற்பட்டபோதிலும் டி வாலரா கட்சியே வெற்றி பெற்றது.

லாயிட் ஜார்ஜின் காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்த அச் சட்டம் அயர்லாந்தை ஐரிஷ் சுதந்தர நாடு, அல்ஸ்டர் என்னும் இரு பிரிவுகளாகப் பிரித்தது. தென் அயர்லாந்தின் பெரும் தலைவரான டி வாலரா டொமினியன் அந்தஸ்தை ஏற்றுக்கொள்ள மறுத்து இங்கிலாந்திற்கும் ஐரிஷ் சுதந்தர நாட்டிற்கும் இருந்த உறவைத் துண்டித்துவிட்டார். அயர்லாந்திற்கு ஒரு தனி அரசியல் திட்டத்தை வகுத்தளித்து, அந்த நாட்டைப் பூரண உரிமை பெற்ற சுதந்தர ஜனநாயகக் குடியரசு, என டி வாலரா அறிவித்தார் (1937). இரண்டாம் உலகப் போரின்போது அயர்லாந்து நடுநிலைமை நாடாகத் தனித்து ஒதுங்கியிருந்தது. 1949 ஆம் ஆண்டில் அயர்லாந்து பிரிட்டிஷ் காமன்வெல்த்தை (British Commonwealth) விட்டே அகன்றது.

25. பிரிட்டிஷ் காமன்வெல்த்
(British Commonwealth)

உலக வரலாற்றிலே எத்தனையோ பேரரசுகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், அந்தப் பேரரசுகளுக்குட்பட்டிருந்த பல நாடுகளுக்கு எந்தவித சுதந்தரமும் கொடுக்கப்படாமலேயே அவை அடக்கியாளப்பட்டன. அந்த வகையில் பிரிட்டிஷ் பேரரசு அதற்கு ஒரு விதி விலக்காகவே இருந்தது. ஆரம்பத்தில் தன் ஆதிக்கத்திற்கு உட்படுத்திவைத்து, தக்கவேளையில் தன் கட்டுப்பாட்டின் கீழிருந்த அந் நாடுகளுக்குச் சுயராட்சி வழங்கி, பின் தனக்குச் சமமாக அந் நாடுகளை பிரிட்டன் பாவித்தது. அங்ஙனமாக, பிரிட்டனும் அதனால் சுயாட்சி கொடுக்கப்பட்டுச் சரிசமமாகப் பாவிக்கப்பட்ட அதன் பழைய குடியேற்ற நாடு களும் பொதுப் பிரச்சினைகளைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் ஓர் அமைப்பே பிரிட்டிஷ் காமன்வெல்த் (பொதுநலக் கூட்டுறவு) என்றழைக்கப்படுகிறது.

டர்ஹாம் அறிக்கை (Durham Report)

குடியேற்ற நாடுகள் (Colonies) தங்கள் தாய்நாட்டின் நன்மைக்காகவே இருக்கின்றன என்ற பழைய கொள்கையை இங்கிலாந்து 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே விட்டுவிட்டது. குடியேற்ற நாடுகளை அடிமை நாடுகள்போல் நடத்தாமல், அவற் றின் நலன்களில் அக்கறை காட்டி, உரிய காலத்தில் சுயாட்சியை அவற்றுக்குக் கொடுக்க வேண்டுமென்ற உணர்வு பிரிட்டிஷா ருக்கு ஏற்பட்டது. அதன் விளைவாகவே, டர்ஹாம் பிரபுவின் அறிக்கையின் (Durham Report) சிபாரிசுகளின்படி தன் குடி யேற்ற நாடுகளுக்குப் பொறுப்பாட்சியை (Responsible Govern-ment) இங்கிலாந்து வழங்கியது.



காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்கள்

குடியேற்றங்கள் சுயாட்சி பெறுதல்

குடியேற்ற நாடுகளின் நலனையே குறிக்கோளாகக் கொண்ட அப் புதிய பேரரசுக் கொள்கையின் அடிப்படையில் கானடாவுக்கு 1867ஆம் ஆண்டில் அரசியல் பொறுப்பாட்சியுடன் டொமினியன் (Dominion) அந்தஸ்து அளிக்கப்பட்டது; ஆஸ்திரேலியாவுக்கும் (1890), தென்னாஃபிரிக்காவுக்கும் (1906) நியூஜிலாந்துக்கும் (1907) டொமினியன் தகுதி கொடுக்கப்பட்டது.

காமன்வெல்த் தோற்றம்

டொமினியன் அந்தஸ்து பெற்றிருந்த அந்த நாடுகளில் பொறுப்பாட்சி இருந்துவந்ததால், அந்த நாடுகளின் பிரதமர்கள் (Colonial Premiers) தங்கள் நாடுகளின் பிரதிநிதிகளாகவே கருதப்பட்டனர். தங்கள் நாடுகளின் சார்பிலே விவாதிப்பதற்கும், ஆலோசனை கேட்பதற்கும், கோரிக்கை விடுப்பதற்கும் தகுதி பெற்றிருந்த அப் பிரதமர்கள் அடிக்கடி பேரரசின் தலை நகரமான இலண்டன் மாநகருக்கு (London) வரவேண்டியவர் களாக இருந்தனர். 1887ஆம் ஆண்டில் இலண்டனில் நடை பெற்ற விக்டோரியா இராணியாரின் தங்க விழாவுக்கும் 1897ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட வைர விழாவுக்கும், (Diamond Jubilee Celebrations), 1902ஆம் ஆண்டில் நடந்த ஏழாம் எட்வர்டின் முடிசூட்டு விழாவுக்கும், டொமினியனின் பிரதமர்கள் இங்கிலாந்துக்கு வருகை புரிந்தபோது பிரிட்டிஷ் அமைச்சர்களுடன் சில பொதுப்பிரச்சினைகளைக் கூடிப் பேசும் வாய்ப்பினைப் பெற்றனர். பொதுநலனை முன்னிட்டுத் தாங் களாகவே வலிய (voluntary) ஓர் அமைப்பினை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தலைமையில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அச் சந்தர்ப்பங்களிலேயே அப் பிரதமர்களுக்கு ஏற் பட்டது. டொமினியன் பிரதமர்கள் இலண்டன் மாநகருக்கு வந்திருந்த நேரத்தில் பிரிட்டனுக்கும், டொமினியன் நாடு களுக்கும் இருந்த பிணைப்பை இன்னும் உறுதிப்படுத்த, பிரிட்டிஷ் அரசாங்கமும் முன்வந்தது. அதன் விளைவாகப் பொதுநலக் கூட்டுறவு என்ற அமைப்பு பின்னர்த் தோன்றியது.

காமன்வெல்த் வளர்ச்சி

காமன்வெல்த்தின் வளர்ச்சியிலே 1907ஆம் ஆண்டு முக்கிய இடம் பெறுகின்றது. அந்த ஆண்டில் டொமினியன் பிரதமர்கள் பிரத்தியேகமாக இலண்டன் மாநகருக்குப் பேரரசு மாநாட்டில் (Imperial Conference) கலந்துகொள்ள அழைக்கப்பட்டனர். அம்

மாநாட்டிற்கு பிரிட்டிஷ் பிரதமரே தலைமை வகித்தார். 1907ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட அம் மாநாடு, பேரரசின் (Empire) பொதுப் பாதுகாப்பைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு பொதுப்படைக் குழுவை (Imperial General Staff) நிறுவ முடிவெடுத்தது. நான்கு ஆண்டுகளுக் கொருமுறை கூடிப் பேசவும் ஏற்பாடாகியது. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், டொமினியன்களுக்குமுள்ள கூட்டுறவைப் பலப்படுத்த ஒரு நிரந்தரமான நிறுவனத்தையும் (organisation) செயலகத்தையும் (secretariat) அம் மாநாடு ஏற்படுத்தியது.

நான்கு ஆண்டுகள் கழித்து 1911ஆம் ஆண்டில் இரண்டாம் பேரரசு மாநாடு இலண்டன் மாநகரில் கூட்டப்பட்டபோது' இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றி டொமினியன்களின் பிரதமர்களுக்கு விளக்கம் தரப்பட்டது.

முதல் உலகப்போர் நடந்த காலத்தின்போது (1914-1918) கானடா, ஆஸ்திரேலியா, தென்ஞஃபிரிக்கா, நியூஜிலாந்து ஆகிய டொமினியன் நாடுகள் பிரிட்டனுக்குப் படை கொடுத்துப் பேருதவி செய்தன. ஆஸ்திரேலியா - நியூஜிலாந்துப் படைகள் கிழக்குப் போர் முனையில் துருக்கியை எதிர்த்து டார்டனல்ஸ் (Dardanelles) படையெடுப்பில் முக்கியப் பங்கு ஏற்றிருந்ததையும், ஜெனரல் போத்தா (Botha), ஸ்மட்ஸ் (Smuts) தலைமையில் தென்ஞஃபிரிக்காவின் படைகள் ஜெர்மனியின் மேற்கு, கிழக்கு, ஆஃபிரிக்காப் பகுதிகளைச் சண்டையிட்டு மீட்டதையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். தென்கிழக்கு ஆசியாவில் நியூகினி (New Guinea) என்ற இடத்தையும் ஜெர்மனியரின் ஆதிக்கத்திலிருந்து ஆஸ்திரேலியப் படைகள் விடுவித்தன. படையுதவி அல்லாமல் படைக்கலன்களையும், பணத்தையும் அவ்வப்போது பிரிட்டனுக்குக் கொடுத்துத் தங்களின் விசுவாசத்தை டொமினியன்கள் காட்டிக்கொண்டன.

போர் நடந்துகொண்டிருக்கும் காலத்தில் காமன்வெல்த்தின் வளர்ச்சியிலே இன்னொரு முன்னேற்றம் ஏற்பட்டது. 1916ஆம் ஆண்டில் பேரரசின் போர்க்கால அமைச்சரவை (Imperial War Cabinet) அமைக்கப்பட்டது. அதில் பிரிட்டிஷ் அமைச்சர்களோடு குடியேற்ற நாடுகளின் பிரதமர்களும் பங்கு பெற்றிருந்தனர். பல இராணுவ முஸ்தீபுகளும், போர்த் திட்டங்களும் அப் பேரரசின் அமைச்சரவையிலே கலந்தாலோசிக்கப்பட்டன; அங்ஙனம் பிரிட்டிஷ் அமைச்சர்களுடன் சரிநிகராக காபினெட் கூட்டங்களிலே கலந்துகொள்ளும் தகுதியினைப் போர்க்காலத்தில்

குடியேற்ற நாடுகளின் பிரதமர்கள் பெற்றிருந்தது, பிரிட்டனுக்கும், டொமினியன்களுக்கும் ஏற்பட்டுவந்த நெருங்கிய உறவினை எடுத்துக்காட்டியது.

போர் முடிந்து, பாரிஸ் நகரில் சமாதான மாநாடு கூட்டப் பட்டபோது டொமினியன் நாடுகளும் அதற்கு வரவழைக்கப் பட்டதிலிருந்து, பிரிட்டன் அவற்றைச் சரிசமமாக நடத்த முற்பட்டது என்பது புலனாகிறது. சர்வதேச சங்கத்திலும் அவை உறுப்பு நாடுகளாயின. ஜெர்மனியிடமிருந்து பிடுங்கப் பட்ட பகுதிகளில் சில டொமினியன் நாடுகளின் பாதுகாப்புக் குட்பட்ட நாடுகளாக (Mandated Territories) அறிவிக்கப்பட்டன. ஜெர்மன், தென்மேற்கு ஆஃபிரிக்கா 'மாண்டேட்' (Mandate) முறைப்படி தென்னாஃபிரிக்காவுக்கும், நியூகினி (New Guinea), சாலமான் தீவுகள் (Solomon Islands) ஆஸ்திரேலியாவுக்கும் ஜெர்மன் சாமோவா (German Samoa) என்ற பசிபிக் தீவுகள் நியூஜிலாந்துக்கும் கொடுக்கப்பட்டன. உலக அரசியல் அரங்கிலே அந்த டொமினியன் நாடுகள் அங்கம் வகிக்கும் தகுதியைப் பெற்றுவிட்டன என்பதையே அந்த ஏற்பாடு எடுத்துக் காட்டியது.

பால்ஃபர் அறிக்கை

1926ஆம் ஆண்டில் பால்ஃபர் (Balfour) தலைமையில் கூட்டப் பட்டிருந்த பேரரசு மாநாடு காமன்வெல்த் வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகிறது. அம் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பால்ஃபர் அறிக்கையின்படி, டொமினியன்கள் கட்டற்ற, சுதந்தரமுள்ள, இறைமை (Free, Independent, Sovereign) வாய்ந்த நாடுகளாக அறிவிக்கப்பட்டன. பிரிட்டிஷ் மகுடத்திற்கு விசுவாசமாக இருக்கவேண்டியதைத் தவிர, வேறு எந்த வகையிலும் டொமினியன்கள் பிரிட்டனுக்குக் கட்டுப்பட்டவையல்ல எனவும் அந்த அறிக்கை கூறியது. டொமினியன் அமைச்சரவையின் ஒப்புதலின்பேரிலேயே, அதன் ஆட்சித் தலைவரான கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் மகுடத்தால் அமர்த்தப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கை கூறியது.

வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம்

பால்ஃபரின் அறிக்கையின் அடிப்படையில் டொமினியன்களுக்குப் பூரண சுயாட்சியை வழங்கிய வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் (Statute of Westminster, 1931) பிரிட்டனால் கொண்டுவரப் பட்டது. பிரிட்டனுக்கும் டொமினியன் அரசுகளுக்குமுள்ள

தொடர்பை அச் சட்டம் நன்கு வரையறுத்தது. உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் டொமினியன்களுக்குப் பூரண சுதந்தரம் கொடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு எவ்வகையினும் கட்டுப்படவேண்டிய அவசியமில்லாமல் டொமினியன்கள் தங்களுக்கு வேண்டிய சட்டங்களைச் சொந்தப் பாராளுமன்றத்திலே இயற்றிக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டன. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் இனி டொமினியன்களைப் பாதிக்காதெனவும், தங்களைப் பாதிக்கின்ற பிரிட்டிஷ் சட்டங்களைத் திருத்தவோ, ரத்து செய்யவோ டொமினியன் பாராளுமன்றங்களுக்கு உரிமையுண்டெனவும் அச் சட்டம் கூறியது. டொமினியன்களின் அனுமதியுடன் அவை சம்பந்தமாக பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றக்கூடிய சட்டங்களே டொமினியன்களைக் கட்டுப்படுத்துமென்றும், டொமினியன் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் ஒப்புதலைப் பெற பிரிட்டிஷ் அரசருக்கு அனுப்பத் தேவையில்லை யென்றும் அச் சட்டம் தெளிவுபடுத்தியது. டொமினியனின் கவர்னர் - ஜெனரலின் ஒப்புதலே அச் சட்டங்களுக்குப் போதுமான தென்றும், டொமினியன்களின் நீதிமன்றங்களின் சிபாரிசின் பேரிலேயே வழக்குகள் மேல்விசாரணைக்கு (appeal) இங்கிலாந்தின் பிரிவிக் கவுன்சிலுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. மேற்கொண்டு பிரிட்டிஷ் வாரிசுரிமையில் மாற்றம் ஏதாயினும் ஏற்படவேண்டிய அவசியமேற்பட்டால் டொமினியன்களின் ஒப்புதல்கள் அதற்குத் தேவை யென்றும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் வலியுறுத்தியது. ஆக, 1931ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்துக்கும் டொமினியன்களுக்குமிடையே இருந்த உறவு நிலையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டிருந்தது. அதுவே 'பிரிட்டிஷ் காமன்வெல்த்' என்ற அமைப்பிற்கு அடித்தளமாக அமைந்தது.

வெஸ்ட்மின்ஸ்டர் நிலவரச் சட்டத்தை பிரிட்டன் பெரிதும் போற்றியதென்பதற்கு, 1936ஆம் ஆண்டில் எட்டாம் எட்வர்டு முடிதுறந்தபோது, இங்கிலாந்தின் வாரிசுரிமையில் ஏற்பட்ட மாற்றத்திற்குக் காமன்வெல்த் நாடுகளின் ஒப்புதலையும் பிரிட்டன் பெற்றிருந்ததை மேற்கோளாகக் காட்டலாம். இரண்டாம் உலகப்போர் தொடங்கியிருந்த வேளையில் டொமினியன் தகுதியைப் பெற்றிருந்த அயர்லாந்து நடுநிலைமை வகித்து வந்த போதிலும், அதை பிரிட்டன் தன்னுடன் சேரும்படி கட்டாயப் படுத்தவில்லை யென்பதிலிருந்து, டொமினியன்களில் வெளிநாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாதென்ற அச் சட்டத்தின் இன்னோர் அம்சத்தையும் பிரிட்டன் போற்றிக் காத்தமை குறிப்பிடத்தக்க

தாகும். தொடக்கத்தில், கானடா, தென்ஞஃபிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளே அக் கூட்டுறவு அமைப்பில் இருந்தன. நாளடைவில் அயர்லாந்து, நியூஃபவுண்ட்லாந்து (Newfoundland) போன்ற நாடுகளும் டொமினியன் தகுதிபெற்று, காமன்வெல்த் கூட்டுறவில் சேர்ந்தன. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் அந்த எல்லா நாடுகளுக்கும் பொருந்துவதாக இருப்பினும், அப் பட்டியலிலிருந்து அயர்லாந்தும், (1949) தென்ஞஃபிரிக்காவும் (1961) நியூ ஃபவுண்ட்லாந்தும் தங்களே சுயேச்சை நாடுகளென அறிவித்துக்கொண்டு காமன்வெல்த் கூட்டுறவிலிருந்து விலகிக்கொண்டன. பின்னர் நியூ ஃபவுண்ட்லாந்து கானடாவுடன் இணைந்துவிட்டதால் (1949) அச் சட்டம் கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய மூன்று நாடுகளுக்குமட்டுமே பொருந்துவதாயிற்று.

பிரிட்டிஷ் பேரரசுக் கொள்கையில் மேலும் மாற்றம்

இரண்டாம் உலகப்போரின் காலத்தில் பிரிட்டனுக்கு அந்த காமன்வெல்த் நாடுகளும், அதன் பேரரசுக்குட்பட்டிருந்த ஏனைய நாடுகளும் வேண்டிய உதவியைச் செய்திருந்தன. அப் பெரும் போர் முடிந்ததும், பிரிட்டனின் பேரரசுக் கொள்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. தன் ஆதிக்கத்தின்கீழ் அதுவரை அடக்கி யாளப்பட்ட வேறு பல நாடுகளுக்கு பிரிட்டன் சுதந்தரம் கொடுத்து, காமன்வெல்த் அமைப்பில் அங்கத்தினர்களாக்கிக் கொண்டது.

1947ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா ஆகிய நாடுகள் சுதந்தரம் அடைந்தன. பர்மா காமன்வெல்த்தில் சேர மறுத்துவிட மற்ற மூன்று நாடுகளும் அதில் சேர்ந்திருந்தன. நாளடைவில் இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களைக் குடியரசுகளாக அறிவித்துக் கொண்டபோது, பிரிட்டிஷார் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தைத் திருத்தி அமைத்தனர். அதன்படி காமன்வெல்த்திலுள்ள குடியரசு நாடுகள் பிரிட்டிஷ் அரசியைத் தங்கள் அரசியாகக் கருதத் தேவையில்லையெனவும், காமன்வெல்த் கூட்டுறவின் தலைவியென அரசியாரை அக் குடியரசுகள் கருதினால் போதுமெனவும் அத் திருத்தம் கூறியது. அத் திருத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு சுதந்தரம் பெற்ற பல நாடுகள் தங்களைக் குடியரசுகளாக அறிவித்துக் கொண்டிருந்தும், காமன்வெல்த்தில் சேர்ந்தன. பங்காளா சுதந்தர நாட்டை,

இங்கிலாந்து அங்கீகாரத்தின் விளைவாக பாகிஸ்தான், காமன் வெல்த்திலிருந்து சமீபத்தில் வெளியேறிவிட்டது.

மற்ற காமன்வெல்த் நாடுகள்

பேரரசுக்கு அடங்கியிருந்த பல நாடுகள் 1955ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டனால் சுதந்தரம் கொடுக்கப்பட, அவற்றில் பல காமன்வெல்த்தில் அங்கத்தினர் நாடுகளாயின.

கானா (Ghana, 1957)
நைஜீரியா (Nigeria, 1960)
சியராலியோன் (Sierraleone, 1961)
சைப்ரஸ் (Cyprus, 1961)
ஜமாய்க்கா (Jamaica, 1962)
டிரினிடாட் (Trinidad, 1962)
டொபாகோ (Tobago, 1962)
உகாண்டா (Uganda, 1962)
சராவக் (Sarawak)
மலேயா (Malaya)
வட போர்னியோ (North Borneo)
ஆகிய நாடுகள் இணைந்த மலேசியா (1963)
கென்யா (Kenya, 1963)
மால்டா (Malta, 1964)
ஜாம்பியா (Zambia, 1964)
மாளவி (Malavi, 1964)
தங்கனிகாவும் (Tanganyika) ஜான்ஜிபாரும் (Zanzibar) இணைந்த
டான்ஜானியா (Tanzania, 1964)
காம்பியா (Gambia, 1965)
சிங்கப்பூர் (Singapore, 1965)
கயானா (Guyana, 1966)
பாட்ஸ்வானா (Botswana, 1966)

லெசாத்தோ (Lesotho, 1966)
பார்படாஸ் (Barbados, 1966)
மொரிஷஸ் (Mauritius, 1966)
நவெளரு (Nauru-விசேஷ உறுப்பினர்)
ஸ்வாஸிலாந்து (Swasiland, 1968)
பிஜி (Fiji 1970).

ஆகிய நாடுகள் இன்று பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இடம் பெற்றிருக்கின்றன. கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, இந்தியா (1947), பாகிஸ்தான் (1947), இலங்கை (1948) போன்ற நாடுகளையும் சேர்த்து பிரிட்டன் உள்பட இன்றைக்கு 32 நாடுகள் அப் பொதுக் கூட்டுறவில் அடங்கியிருக்கின்றன.

காமன்வெல்த் உறவுத்தன்மை

காமன்வெல்த் நாடுகள் அவ்வப்போது இலண்டனிலோ அல்லது வேறிடங்களிலோ ஒன்று கூடிப் பொதுப்பிரச்சினைகளைப் பரிசீலிக்கின்றன.

1944ஆம் ஆண்டிலிருந்து இந் நாள்வரையில் 17 காமன் வெல்த் மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன.

1966ஆம் ஆண்டில் முதன் முறையாகக் காமன்வெல்த் மாநாடு இலண்டனில் கூட்டப்படாமல், நைஜீரியாவின் தலைநக ரான லாகோஸில் (Lagos) கூட்டப்பட்டது. சமீபத்தில் நடந்த காமன்வெல்த் மாநாடு சிங்கப்பூரில் (Singapore) கூட்டப்பட்டது (1971). பிரிட்டிஷ் பிரதமர் தலைமைதாங்கும் அக் கூட்டத்தில் காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்களோ அல்லது முக்கிய அமைச் சர்களோ கலந்து கொள்வர். பொருளாதாரம், பொதுப்பாது காப்பு, சர்வதேசச் சிக்கல், வியாபார உறவு போன்ற விவகாரங் களுடன் பேரரசில் இன்னும் அடங்கியுள்ள ஏதேனும் ஒரு நாட் டுக்குச் சுதந்தரம் வழங்குவது போன்ற முடிவைப்பற்றியும் அம் மாநாடு ஒரு கருத்தரங்கமாக அமைகிறது. அடிக்கடி பல்வேறு நாடு களின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வதால், அந் நாடு களிடையே நட்பு வளரவும், சிக்கல்கள் சுமுகமாகத் தீர்க்கப் படவும் காமன்வெல்த் உதவுகிறது.

பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக் கிடையே சட்டதிட்டங்களால் திட்டவட்டமாக வரையறுக்கப்

படாத உறவு முறை இருந்துவருகிறது. ஆயின் சில வழக்காறுகள் (conventions) நாளாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக, எந்த காமன்வெல்த் நாட்டின் உள்விவகாரத்தைப் பற்றியும் அம் மாநாடு பரிசீலனை செய்யக்கூடாதென்ற வழக்கம் நடைமுறையில் இருந்துவருகிறது.

பிரிட்டன் அவ்வப்போது ஏனைய காமன்வெல்த் நாடுகளின் பொருளாதார நிலையைச் சீராக்கப் பல மில்லியன் பவுன்களை உதவி நிதியாகவும் கடனுகவும் அளித்து வருகிறது. 1969ஆம் ஆண்டு முடிய சுமார் 1,697 மில்லியன் பவுன்களை பிரிட்டன் உதவி நிதியாகவும், கடனுகவும் பல காமன்வெல்த் நாடுகளுக்குக் கொடுத்திருக்கிறது. அந்த ஆண்டுவரையில் இந்தியாவுக்குமட்டும் 355·8 மில்லியன் பவுன்கள் கிடைத்திருக்கின்றன. பிரிட்டன் அந் நாடுகளுக்கு உதவுவதுபோல், காமன்வெல்த் நாடுகளும் ஒன்றுக்கொன்று பஸ்பரம் உதவி செய்து கொள்கின்றன. தென் ஆசிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கொழும்புத் திட்டத்தை (Colombo Plan) அதற்கோர் உதாரணமாகக் காட்டலாம். கொழும்புத் திட்டத்தின்கீழ்ப் பொருளாதார உதவியும், தொழில் நுணுக்க உதவியும் பின்தங்கிய காமன்வெல்த் நாடுகளுக்கு வளர்ச்சியுள்ள மற்ற காமன்வெல்த் நாடுகள் தருகின்றன. பிரிட்டன், கானடா ஆகிய நாடுகள் அத் திட்டத்தின்கீழ் இந்தியாவின் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத் திற்கு உதவிபுரிந்தன.

எந்தச் சமயத்திலும் எந்த நாடும் காமன்வெல்த்திலிருந்து விலகலாம்; மேலும், அந் நாடுகள் மற்ற மண்டல நிறுவனங்களிலும் (Regional Organisations) உறுப்பினராக இருக்கலாம். மேலும் காமன்வெல்த் நாட்டினர் எந்தத் தடையுமின்றி காமன்வெல்த் குடியுரிமை (Commonwealth Citizenship) பெற்று ஒரு காமன்வெல்த் நாட்டிலிருந்து இன்னெரு காமன்வெல்த் நாட்டுக்குச் செல்லலாம். பிரிட்டன் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், கச்சாப் பொருள்களையும் (காமன்வெல்த்) நாடுகளிலிருந்து பெறுதலும், பிரிட்டனில் ஆக்கப்படும் பொறிசெய் பொருள்கள் காமன்வெல்த் நாடுகளின் சந்தைகளுக்கு அனுப்பப்படும் வழக்கமும் நடைமுறையில் சமீப காலம்வரை இருந்துவந்தன. அதனுல், பரஸ்பர வியாபாரம் வளர்ந்துவந்தது.

காமன்வெல்த் நாடுகளிடையே இருக்கின்ற பிணைப்பை மேலும் நெருக்கமாக அமைத்து, பரஸ்பர உதவியைப் பெருக்கிக்கொள்ள பிரிட்டன் காமன்வெல்த் அலுவலகத்தைத் (Common wealth office

ஊதாற்றுவித்துள்ளது. ஆர்னல்டு ஸ்மித் (Arnold Smith) என்பவர் காமன்வெல்த் காரியாலயத்திற்குச் செயலாளர் - தலைவராக (Secretary-General) அமர்த்தப்பட்டிருக்கிறார். பொருளாதாரத் துறையில் காமன்வெல்த் நாடுகள் பரஸ்பர உதவிசெய்து கொள்ள அக் காரியாலயம் உதவுகிறது. அடிக்கடி சர்வதேசச் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் காமன்வெல்த் நாடுகளுக்குத் தெரிவித்து, அந்த நாடுகள் எங்ஙனம் தங்கள் நலன்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்ற யோசனையையும் காமன்வெல்த் காரியாலயம் தருகிறது.

சமாதான காலத்திலும் இராணுவத் துறையில் காமன்வெல்த் நாடுகள் ஒன்றுக்கொன்று தங்களுக்குள் உதவி செய்து கொள்ளுகின்றன. பிரிட்டன், கானடா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவப் பயற்சிக் கல்லூரிகளிலே பின்தங்கிய மற்ற காமன்வெல்த் நாடுகளின் இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி தரப்படுகிறது. 1968ஆம் ஆண்டில் காஞ (Ghana) நாட்டுப் படையினர் இங்கிலாந்துக்குச் சென்று, பிரிட்டிஷ் படைகளுடன் சேர்ந்து கூட்டுப் பயிற்சியில் (Joint Training Exercise) கலந்து கொண்டனர். ஃபிஜி (Fiji) நாட்டின் படையினருக்குத் தேவையான இராணுவ நிபுணர்களையும், அதிகாரிகளையும், ஆயுதங்களையும் நியூஜிலாந்து கொடுத்துதவியதும் குறிப்பிடத் தக்கது.

நெருக்கடியான காலங்களில் காமன்வெல்த் நாடுகள் ஒன்றுக் கொன்று உதவி செய்துகொள்கின்றன. 1962ஆம் ஆண்டில் சீனர்கள் இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் ஆக்கிரமிப்பு நடத்தியபோது, காமன்வெல்த் நாடுகளிலிருந்து இந்தியாவுக்குப் படைக்கலன்கள் அனுப்பப்பட்டிருந்தன.

ஐக்கிய நாட்டுச் சபை நிறுவனத்தின் தலைமையில் காமன்வெல்த் படைகள் சர்வதேச அமைதியைக் காக்கும் பணியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றன. காங்கோ (Congo), சைப்ரஸ் (Cyprus), சினை (Sinai) ஆகிய பகுதிகளில் காமன்வெல்த் படைகள் அமைதியைக் காத்திருக்கின்றன.

காமன்வெல்த் நாடுகள் கல்வித் துறையிலும் ஒன்றுக்கொன்று உதவி செய்துகொள்கின்றன. ஆண்டொன்றுக்குப் பல காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவ மாணவிகளுக்குத் தங்கள் நாடுகளிலிருந்து வேறு காமன்வெல்த் நாடுகளில் உயர் கல்வி பெறவும் 1959 ஆம் ஆண்டிலிருந்து ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த 4,000

மாணவ, மாணவிகளுக்கு 1960-1969 ஆம் ஆண்டுகளில் அத் திட்டத்தின்படி வேண்டிய சலுகை கிடைத்தது. அதில் 2,000க்கு மேற்பட்டவர்களுக்கு பிரிட்டனிலேயே உயர்கல்வி வசதி தரப் பட்டது.

பின்தங்கிய காமன்வெல்த் நாடுகளின் கல்வித்தரத்தை உயர்த்த பிரிட்டன் மற்ற காமன்வெல்த் நாடுகளிலிருந்து ஆசிரி யர்களை ஆண்டுதோறும் வரவழைத்துத் தன் கல்வி நிபுணர்களைக் கொண்டு பயிற்சி தருகிறது. தற்போது, பின்தங்கிய மற்ற காமன்வெல்த் நாடுகளின் ஆசிரியர்களுக்கு பிரிட்டன் வழியைப் பின்பற்றி ஆஸ்திரேலியா, கானடா, இந்தியா ஆகிய நாடுகளும் பயிற்சி தர முன்வந்திருக்கின்றன.

சட்டத்துறையிலும் மருத்துவத்துறையிலும் காமன்வெல்த் நாடுகள் தங்களின் ஆலோசனைகளையும் கண்டுபிடிப்புகளையும் ஒன்றுக் கொன்று பரிமாறிக் கொள்கின்றன. செய்தி ஒலிபரப்புத் துறையிலும், சிவில் விமானப் போக்குவரத்திலும் காமன்வெல்த் நாடுகள் ஒன்றுக் கொன்று ஒத்துழைத்துக் கொள்கின்றன. இருப்பினும், சில சமயங்களிலே அந் நாடுகளுக் கிடையே ஒரு சில பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. கறுப்பர் களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் ரொடீஷி யாவில் (Rhodesia) ஐயன் ஸ்மித் (Ian Smith) என்பவரின் தலை மையில் வெள்ளைக்காரச் சிறுபான்மையினர் நடத்திவரும் நிற வெறி அரசாங்கத்தை பிரிட்டன் பலமாகக் கண்டிக்க இதுவரை முன்வராததாலும் காமன்வெல்த் நாடுகளின் வியாபாரத்தைப் பாதிக்கும் வகையில் பிரிட்டன் சமீப காலத்தில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவில் (European Common Market) சேர்ந் திருப்பதாலும், பல காமன்வெல்த் நாடுகளுக்கிடையே அதிருப்தி நிலவுகிறது.

இருப்பினும், இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும், கலாசாரத்தாலும் வேறுபட்டிருக்கும் உலகின் பல சுதந்தர நாடுகள் தங்களின் இறைமைக்குப் பங்கம் வராதபடி ஒன்றுக் கொன்று உதவியாக, சமமான நிலைபெற்று, ஒரே அமைப்பில் அங்கத்தினர்களாக இருக்க முடியுமென்பதற்கு பிரிட்டிஷ் காமன் வெல்த் சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

———

அரசர், அரசியர்களின் பட்டியல்

ஆங்கிலோ சாக்சானியர்கள்

எக்பர்டு	—	கி.பி. 802 - 839
எத்தல் உல்ஃப்	—	கி.பி. 839 - 858
எத்தல்பால்டு	—	கி.பி. 858 - 860
எத்தல் பர்டு	—	கி.பி. 860 - 866
எத்தல்ரெடு	—	கி.பி. 866 - 871
ஆல்ஃபிரடு	—	கி.பி. 871 - 901
மூத்த எட்வர்டு	—	கி.பி. 901 - 925
ஏத்தல்ஸ்டன்	—	கி.பி. 925 - 940
எட்மண்டு	—	கி.பி. 940 - 946
எட்ரெடு	—	கி.பி. 946 - 955
எட்வின்	—	கி.பி. 955 - 959
எட்க்கர்	—	கி.பி. 959 - 975
தியாகி எட்வர்டு	—	கி.பி. 975 - 978
ஏத்தல்ரெடு	—	கி.பி. 978 - 1016
எட்மன்ட் அய்ரன்சைட்	—	கி.பி. 1016 –

டேனியர்கள்

கான்யூட்	—	கி.பி. 1016 - 1035
ஹெரால்டு	—	கி.பி. 1035 - 1040
ஹார்டி கான்யூட்	—	கி.பி. 1040 - 1042

நார்மண்டியர்கள்

முதலாம் வில்லியம்	—	கி.பி. 1066 - 1087
இரண்டாம் வில்லியம்	—	கி.பி. 1087 - 1100
முதலாம் ஹென்றி	—	கி.பி. 1100 - 1135
ஸ்டீஃபன்	—	கி.பி. 1135 - 1154

ஃபிளான்டாஜெனட்டுகள்

இரண்டாம் ஹென்றி	—	கி.பி.	1154 - 1189
முதலாம் ரிச்சர்ட்	—	கி.பி.	1189 - 1199
ஜான்	—	கி.பி.	1199 - 1216
மூன்றும் ஹென்றி	—	கி.பி.	1216 - 1272
முதலாம் எட்வர்டு	—	கி.பி.	1272 - 1307
இரண்டாம் எட்வர்டு	—	கி.பி.	1307 - 1327
மூன்றும் எட்வர்டு	—	கி.பி.	1327 - 1377
இரண்டாம் ரிச்சர்டு	—	கி.பி.	1377 - 1399

லங்காஸ்ட்ரியர்கள்

நான்காம் ஹென்றி	—	கி.பி.	1399 - 1413
ஐந்தாம் ஹென்றி	—	கி.பி.	1413 - 1422
ஆறும் ஹென்றி	—	கி.பி.	1422 - 1461

யார்க்கியர்கள்

நான்காம் எட்வர்டு	—	கி.பி.	1461 - 1483
மூன்றும் ரிச்சார்டு	—	கி.பி.	1483 - 1485
ஐந்தாம் எட்வர்டு	—	கி.பி.	1483 —

டியூடர்கள்

ஏழாம் ஹென்றி	—	கி.பி.	1485 - 1509
எட்டாம் ஹென்றி	—	கி.பி.	1509 - 1547
ஆறும் எட்வர்டு	—	கி.பி.	1547 - 1553
மேரி	—	கி.பி.	1553 - 1558
எலிஸபெத்	—	கி.பி.	1558 - 1603

ஸ்டுவர்டுகள்

முதலாம் ஜேம்ஸ்	—	கி.பி.	1603 - 1625
முதலாம் சார்லஸ்	—	கி.பி.	1625 - 1649
இரண்டாம் சார்லஸ்	—	கி.பி.	1660 - 1685
இரண்டாம் ஜேம்ஸ்	—	கி.பி.	1685 - 1688
மூன்றும் வில்லியம்	—	கி.பி.	1689 - 1702
மேரி	—	கி.பி.	1689 - 1694
ஆன்	—	கி.பி.	1702 - 1714

ஹானேவரியர்கள்

முதலாம் ஜார்ஜ்	—	கி.பி.	1714 - 1727
இரண்டாம் ஜார்ஜ்	—	கி.பி.	1727 - 1760
மூன்றும் ஜார்ஜ்	—	கி.பி.	1760 - 1820
நான்காம் ஜார்ஜ்	—	கி.பி.	1820 - 1830
ஆறும் வில்லியம்	—	கி.பி.	1830 - 1837

வின்ஸ்டர்

விக்டோரியா	—	கி.பி.	1837 - 1901
ஏழாம் எட்வர்டு	—	கி.பி.	1901 - 1910
ஐந்தாம் ஜார்ஜ்	—	கி.பி.	1910 - 1936
எட்டாம் எட்வர்டு	—	கி.பி.	1936 —
ஆறும் ஜார்ஜ்	—	கி.பி.	1936 - 1952
எலிஸபெத்	—	கி.பி.	1952 —

அமைச்சரவைகளின் பட்டியல்

ஹானோவெரியர்களின் காலத்திலிருந்து

ஸ்டான்ஹோப்-டவுன்செண்டு அமைச்சரவை	—	கி.பி. 1714 - 1717
ஸ்டான்கோப்	—	கி.பி. 1717 - 1721
வால்போல்	—	கி.பி. 1721 - 1742
கார்ட்டரெட்	—	கி.பி. 1742 - 1744
பெல்ஹாம்	—	கி.பி. 1744 - 1754
நியூகாசில்	—	கி.பி. 1754 - 1756
டெவன்ஷயர்-பிட்	—	கி.பி. 1756 – 1757
நியூகாசில்-பிட்	—	கி.பி. 1757 - 1761
பூட்	—	கி.பி. 1761 - 1763
கிரென்வெல்	—	கி.பி. 1763 - 1765
ராக்கிங்ஹாமின் முதல் அமைச்சரவை	—	கி.பி. 1765 - 1766
சாத்தம்	—	கி.பி. 1766 - 1768
கிரர்ஃப்டன்	—	கி.பி. 1768 - 1770
நார்த் பிரபு	—	கி.பி. 1770 - 1782
ராக்கிங்ஹாமின் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி. 1782 - —
ஷெல்பர்ன்	—	கி.பி. 1782 - 1783
ஃபாக்ஸ் நார்த்	—	கி.பி. 1783 - —
இளைய பிட்	—	கி.பி. 1783 - 1801
ஆடிங்டன்	—	கி.பி. 1801 - 1804
இளைய பிட் (இரண்டாம் முறை)	—	கி.பி. 1804 - 1806
கிரென்வில் ஃபாக்ஸ்	—	கி.பி. 1806 - 1807
போர்ட்லந்து	—	கி.பி. 1807 - 1809
பெர்சிவல்	—	கி.பி. 1809 - 1812

லிவர்பூல்	—	கி.பி.	1812 - 1827
கானிங்	—	கி.பி.	1827 - —
காடரிச்	—	கி.பி.	1827 - 1828
வெலிங்டன்	—	கி.பி.	1828 - 1830
கிரே	—	கி.பி.	1830 - 1834
முதல் மெல்போர்ன்	—	கி.பி.	1834 - —
பீலின் முதலமைச்சரவை	—	கி.பி.	1834 - 1835
மெல்போர்னின் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1835 - 1841
பீலின் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1841 - 1846
ராஸ்ஸெல் முதலமைச்சரவை	—	கி.பி.	1846 - 1852
டெர்பி	—	கி.பி.	1852 - —
அபெர்டீன்	—	கி.பி.	1852 - 1855
பாமர்ஸ்டன் முதலமைச்சரவை	—	கி.பி.	1855 - 1858
டெர்பி இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1858 - 1859
பாமர்ஸ்டன் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1859 - 1865
ராஸ்ஸெல் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1865 - 1866
டெர்பி மூன்றும் அமைச்சரவை	—	கி.பி.	1866 - 1868
டிஸ்ரேலி முதலமைச்சரவை	—	கி.பி.	1868 - —
கிளாட்ஸ்டன் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1868 - 1874
டிஸ்ரேலி இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1874 - 1880
கிளாட்ஸ்டன் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1880 - 1885
சாலிஸ்பரி முதலமைச்சரவை	—	கி.பி.	1885 - 1886
கிளாட்ஸ்டன் மூன்றும் அமைச்சரவை	—	கி.பி.	1886 - —
சாலிஸ்பரி இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி.	1886 - 1892
கிளாட்ஸ்டன் நான்காம் அமைச்சரவை	—	கி.பி.	1892 - 1894
ரோஸ்பரி	—	கி.பி.	1894 - 1895
சாலிஸ்பரி மூன்றும் அமைச்சரவை	—	கி.பி.	1895 - 1902

பால்ஃபர்	—	கி.பி. 1902 - 1905
காம்ப்பெல் பானர்மேன்	—	கி.பி. 1905 - 1908
ஆஸ்க்வித் முதலமைச்சரவை	—	கி.பி. 1908 - 1915
ஆஸ்க்வித் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி. 1915 - 1916
லாயிட் ஜார்ஜ்	—	கி.பி. 1916 - 1922
போனர்லா	—	கி.பி. 1922 - 1923
பால்டுவின் முதலமைச்சரவை	—	கி.பி. 1923 - 1925
மாக்டனல்டு முதலமைச்சரவை	—	கி.பி. 1924 - —
பால்டுவின் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி. 1924 - 1929
மாக்டனல்டு இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி. 1929 - 1931
மாக்டனல்டு பால்டுவின் தேசிய அரசு	—	கி.பி. 1931 - 1935
பால்டுவின் மூன்றும் அமைச்சரவை	—	கி.பி. 1935 - 1937
சேம்பர்லேன்	—	கி.பி. 1937 - 1940
சர்ச்சில் முதலமைச்சரவை	—	கி.பி. 1940 - 1945
அட்லி	—	கி.பி. 1945 - 1951
சர்ச்சில் இரண்டாம் அமைச்சரவை	—	கி.பி. 1951 - 1955
ஈடன்	—	கி.பி. 1955 - 1957
மாக்மில்லன்	—	கி.பி. 1957 - 1964
ஹியூம்	—	கி.பி. 1964 - —
வில்ஸன்	—	கி.பி. 1964 - 1969
எட்வர்டு ஹீத்	—	கி.பி. 1969 —


ஹானேவரியர்கள் (1714 லிருந்து)
முதலாம் ஜார்ஜ் (1714 – 1727)
இரண்டாம் ஜார்ஜ் (1727 – 1760)
ஃபிரடெரிக்
மூன்றும் ஜார்ஜ் (1760 – 1820)
நான்காம் ஜார்ஜ்
(1820 – 1830)
நான்காம் வில்லியம்
(1830 - 1840)
எட்வர்டு
விக்டோரியா அரசி (1837 – 1901)


வின்ஸ்டர்
விக்டோரியா = ஆல்ஃபிரட்
(1837 – 1901)
ஏழாம் எட்வர்டு (1901 – 1910)
ஐந்தாம் ஜார்ஜ் (1910 – 1936)
எட்டாம் எட்வர்டு (1936)
ஆரும் ஜார்ஜ் (1936 – 1952)
இரண்டாம் எலிஸபெத் (1952)

முக்கிய கால விவரப் பட்டியல்

55 - 54	(கி.மு.)	— சீசரின் படையெடுப்பு
78 - 85	(கி.பி.)	— பிரிட்டனில் அக்ரிகோலா
122	,,	— ஹாட்ராய்ன் மதில்
410	,,	— பிரிட்டனிலிருந்து ரோமானியர் விலகுதல்
613 - 685	,,	— நார்தம்பிரியாவின் பேராதிக்கம்
685 - 825	,,	— மெர்சியாவின் பேராதிக்கம்
871	,,	— ஆல்ஃபிரடு பட்டமேறுதல்
1018	,,	— ஹார்ஹாம் சண்டை
1066	,,	— ஹேஸ்டிங்ஸ் சண்டை
1153	,,	— வாலிங்போர்டு உடன்பாடு
1164	,,	— கிளாரென்டன் சட்டங்கள்
1170	,,	— தாமஸ் பெக்கட் கொலை
1215	,,	— மகாசாசனம்
1265	,,	— சைமனின் பாராளுமன்றம்
1282 - 1284	,,	— வேல்ஸ் இணைக்கப்படல்
1295	,,	— மாதிரிப் பாராளுமன்றம்
1338	,,	— நூற்றாண்டுப் போர் ஆரம்பம்
1346	,,	— கிரெஸி சண்டை
1356	,,	— பாய்ட்டியர்ஸ் சண்டை
1360	,,	— பிரிக்டெக்னி உடன்பாடு
1376	,,	— நல்ல பாராளுமன்றம் கூட்டப்படல்
1382	,,	— விக்லிஃபின் விவிலியம்
1415	,,	— அஜின்கோர்ட் சண்டை
1420	,,	— டிராய்ஸ் உடன்படிக்கை
1431	,,	— வீர ஜோனின் மரணம்
1476	,,	— காக்ஸ்டனின் அச்சு இயந்திரம்

1516	கி.பி.	—	'உதோபியா' வெளியிடப்படல்
1529 - 1536	,,	—	சமயப்புரட்சியின் நீண்ட பாராளுமன்றம்
1554	,,	—	மேரி - ஃபிலிப் திருமணம்
1584 - 1586	,,	—	மன்ஸ்டரில் (அயர்லாந்து) ஆங்கிலேயரின் குடியேற்றம்
1587	,,	—	ஸ்காட் மேரியின் கொலைத் தண்டனை
1588	,,	—	ஸ்பானிஷ் ஆர்மடா
1604	,,	—	ஹாம்டன் கோர்ட் மாநாடு
1605	,,	—	வெடிமருந்துச் சதி
1608	,,	—	அல்ஸ்டரில் (அயர்லாந்து) குடியேற்றம்
1623	,,	—	அம்பாய்னு படுகொலை
1628	,,	—	உரிமை விண்ணப்பம்
1637	,,	—	கப்பற் பண விலக்கு
1640	,,	—	நீண்ட பாராளுமன்றம் கூடுதல்
1644	,,	—	மார்ஸ்டன் மூர் சண்டை
1645	,,	—	நாஸ்பி சண்டை
1649	,,	—	முதலாம் சார்லஸ் மரண தண்டனை
1651	,,	—	டன்பார், ஓர்செஸ்டர் சண்டைகள்
1653	,,	—	எஞ்சிய பாராளுமன்றம் கலைப்பு
1658	,,	—	டூன்ஸ் சண்டை
1660	,,	—	முன்னிலை மீட்சி
1666	,,	—	இலண்டனில் பெரும் தீ
1670	,,	—	டோவர் ரகசிய உடன்பாடு
1673	,,	—	சோதனைச் சட்டம்
1677	,,	—	வில்லியம் - மேரி திருமணம்
1679	,,	—	விலக்கு மசோதா
1685	,,	—	ஜெட்ஜ் மூர் சண்டை
1688	,,	—	ஏழு பிஷப்புகளின் வழக்கு
1694	,,	—	இங்கிலாந்து வங்கி
1695	,,	—	ஸ்காட்லாந்திய வங்கி
1697	,,	—	ரைஸ்விக் உடன்பாடு
1698 - 1699	,,	—	பங்கீட்டு உடன்பாடுகள்
1701	,,	—	அரசுரிமை நிர்ணயச் சட்டம்
1703	,,	—	பிளென்ஹீம் சண்டை
1706	,,	—	ரமேலீஸ் சண்டை
1707	,,	—	ஐக்கியச் சட்டம்
1713	,,	—	உட்ரெக்ட் உடன்பாடு

1720	கி.பி.	—	தென்கடல் நீர்க்குமிழி
1742	,,	—	வால்போல் வீழ்ச்சி
1756	,,	—	இராசதந்திரப் புரட்சி
1757	,,	—	பிளாசிச் சண்டை
1759	,,	—	கியூபக் கைப்பற்றப்படல்
1763	,,	—	பாரிஸ் சமாதானம்
1765	,,	—	முத்திரைச் சட்டம்
1770	,,	—	பாஸ்டன் படுகொலை
1776	,,	—	அமெரிக்க சுதந்தர சாசனப் பிரகடனம்
1789	,,	—	ஃபிரெஞ்சுப் புரட்சி
1791	,,	—	கானடா சட்டம்
1798	,,	—	நைல் நதிச் சண்டை
1800	,,	—	ஐரிஷ் ஐக்கியச் சட்டம்
1805	,,	—	ட்ரஃபால்கார் சண்டை
1812	,,	—	நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு
1815	,,	—	வாட்டர்லூ சண்டை
8151	,,	—	வியன்னா காங்கிரஸ்
1815	,,	—	கென்ட் உடன்பாடு (U.S.A.)
1823	,,	—	மன்ரோ கொள்கை வெளியீடு
1826	,,	—	கிரிமினல் சட்டச் சீர்திருத்தம்
1827	,,	—	நெவரினோ கடல் சண்டை
1832	,,	—	முதலாம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்
1833	,,	—	அடிமை முறை ஒழிப்பு
1836	,,	—	ட்ரெக் வெளியேற்றம் (தென்னாஃபிரிக்கா)
1840	,,	—	கானடா சட்டம்
1840	,,	—	முதலாம் சீனப் போர்
1842	,,	—	ஹாங்ஹாங் கைப்பற்றப்படல்
1856	,,	—	கிரிமியப் போரின் முடிவு
1857	,,	—	இரண்டாம் சீனப் போர்
1867	,,	—	இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்
1874	,,	—	பிஜி கைப்பற்றப்படல்
1878	,,	—	பெர்லின் காங்கிரஸ்
1884	,,	—	மூன்றும் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்

1885	கி.பி.	—	கார்டூம் வீழ்ச்சி
1898	,,	—	சூடான் மீண்டும் கைப்பற்றப்படல்
1900	,,	—	தொழிற் கட்சியின் தோற்றம்
1902	,,	—	ஆங்கிலோ - ஜப்பானிய உடன்பாடு
1904	,,	—	ஆங்கிலோ - ஃபிரெஞ்சு உடன்பாடு
1907	,,	—	ஆங்கிலோ - ரஷ்ய உடன்பாடு
1909	,,	—	லாயிட் ஜார்ஜின் பட்ஜெட்
1911	,,	—	பாராளுமன்றச் சட்டம்
1912	,,	—	ஹால்டேன் பிரபுவின் ஜெர்மன் வருகை
1914	,,	—	முதலாம் உலகப் போர்
1916	,,	—	கப்பல் லூசியானு மூழ்கடிக்கப்படல்
1916	,,	—	அயர்லாந்தில் சின்ஃபீன் கழகம்
1917	,,	—	ரஷ்யப் புரட்சி
1918	,,	—	அச்சு நாடுகள் சரணடைதல்
1918	,,	—	நான்காம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்
1919	,,	—	இந்தியச் சட்டம்
1924	,,	—	முதல் தொழில் கட்சியின் அமைச்சரவை
1928	,,	—	ஐந்தாம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்
1934	,,	—	ஹிட்லர் அதிகாரம் பெறல்
1939	,,	—	இரண்டாம் உலகப் போர்
1940	,,	—	சர்ச்சிலின் முதல் மந்திரி சபை
1945	,,	—	இரண்டாம் உலகப் போர் நிறுத்தம்
1952	,,	—	இரண்டாம் எலிஸபெத் பட்டமெய்தல்
1957	,,	—	சூயஸ் படையெடுப்பு
1964	,,	—	ரொடீசியப் பிரச்சினை
1971	,,	—	ஐரோப்பியப் பொதுச்சந்தையில் பிரிட்டன் சேரல்
1972	,,	—	காமன்வெல்த்திலிருந்து பாகிஸ்தான் விலகுதல்
		—	அல்ஸ்டரில் (அயர்லாந்து)
		—	பிரிட்டிஷ் நேரடி ஆட்சி

நாட்டுப் படங்கள்



படம் 1

(ஆ) ரோமானியரின் பிரிட்டன் (பக்கம் 7)

1. கோல்செஸ்டர்
2. இலண்டன்
3. வெருலாமியம்
4. ஆல்செஸ்டர்
5. பாத்
6. கிளவுசெஸ்டர்.
7. இஸ்கா
8. விராகோனியம்
9. செஸ்டர்
10. லிங்கன்
11. யார்க்



படம் 2

(இ) ஆங்கிலோ - சாக்சானிய இங்கிலாந்து (பக்கம் 13)

1. தென் சாக்சானியர்
2. மத்திய சாக்சானியர்
3. கிழக்கு சாக்சானியர்
4. மேற்கு சாக்சானியர்
5. கிழக்கு ஆங்கிலேயர்கள்
6. மத்திய ஆங்கிலேயர்கள்
7. மெர்ஸியா
8. ஸ்காட்லாந்து



படம் 3

(ஈ) ஆல்ஃபிரட் காலத்திய இங்கிலாந்து (பக்கம் 23)

E. எக்ஸ்டர்
A. ஆதெல்னி
W. வெட்மோர்
E. ஏதன்டுயுன்
C. சிப்பன்ஹாம்
M. மால்டன்



படம் 4 (பக்கம் 30)



படம் 5

(அ) இரண்டாம் ஹென்றியின் பேரரசு (பக்கம் 49)

I. அயர்லாந்து
S. ஸ்காட்லாந்து
E. இங்கிலாந்து
W. வேல்ஸ்
N. நார்மண்டி
M. மெயின்
AN. அன்ஜூ
P. பாயிட்டோ
A. அக்விட்டேன்
G. காஸ்கனி



படம் 6

(அ) நூற்றாண்டுப் போர் (பக்கம் 75)

1. பிளாண்டர்ஸ்
2. கலே
3. கயினி
4. கஸ்கனி
5. பிரிட்டானி
6. பர்யிட்டியர்ஸ்
7. பான்தியு
8. பிரெக்டிக்னி
9. பாரிஸ்
10. கிரெஸி
11. காஸ்டைல்
12. அஜன் கோர்ட்



படம் 7

கடல்வழிப் பிராயணங்கள் (பக்கம் 131)

P—போர்ச்சுகல் S—ஸ்பெயின் E—இங்கிலாந்து

1. நன்னம்பிக்கை முனை
2. மெகல்லன் சந்தி
3. கள்ளிக்கோட்டை
4. பிலிப்பைன் தீவுகள்
5. லாப்ரடார்
6. நியூபவுண்ட்லாந்து
7. மேற்கிந்தியத் தீவுகள்



படம் 8

ஸ்பானிஷ் ஆர்மடா (கி.பி. 1588) (பக்கம் 172)

S. ஸ்பானியப் பேரசு
E. இங்கிலாந்து
F. ஃபிரான்ஸ்
I. அயர்லாந்து
1. லிஸ்பன்
2. பெர்ரால்
3. ஆர்க்னி தீவுகள்



படம் 9

(இ) உள்நாட்டுப் போர்கள் (1642 - 1649) (பக்கம் 200)

L—லண்டன் OX—ஆக்ஸ்போர்டு DUN—டன்பார்
E—எடின்பர்க் DR—டிரொகீடா DU—டப்ளின்
K—கில்லி கிராங்கி

1. லாஸ்ட்விதல்
2. நியுபரி
3. சார்ல் குரோவ்
4. எட்ஜ்ஹில்
5. நேஸ்பி
6. மார்ஸ்டன் மூர்
7. பிரெஸ்டன்
8. பிலிப்ஹாக்
9. வாரிங்டன்
10. டர்ன்ஹாம் கிரின்



படம் 10

கடற்சண்டைகள் (1649 - 1667) (பக்கம் 218 - 245)



படம் 11

அமெரிக்க சுதந்தரப் போர் (பக்கம் 327)

A. பங்கர் குன்று B. சாரடோகா C. ப்ரூக்ளின்

D. யார்க்டவுன் E. சார்லஸ்டன்

1. மாச்சுசெட்ஸ்
2. நியூஹாம்ஷையர்
3. ரோட்ஸ்
4. கனெக்டிகட்
5. நியூயார்க்
6. பென்சில்வேனியா
7. நியூ ஜெர்சி
8. டிலாவேர்
9. மேரிலாந்து
10. வர்ஜீனியா
11. வட கரோலினு
12. தென் கரோலினு
13. ஜார்ஜியா



படம் 12

அயர்லாந்து (பக்கம் 406)

LD.	லண்டன் டெர்ரி	M.	மன்ஸ்டர்
U.	அல்ஸ்டர்	W.	வெக்ஸ்போர்டு
L.	லின்ஸ்டர்	LI.	லிம்மரிக்
D.	டப்ளின்	DR.	டிரொகீடா



படம் 13

எகிப்து - சூடான் (பக்கம் 462)

1. பஷோடா
2. ஆம்டுர்மன்
3. கார்டும்
4. கெய்ரோ
5. அலெக்ஸாந்திரியா
6. சூயெஸ்
7. டெல்-எல்-கபீர்



படம் 14

போயர் யுத்தம் (தென்ஞாபிரிக்கா) (பக்கம் 472)

1. மசூபா ஹில்
2. லேடிஸ்மித்
3. வெரினிகிங்
4. ஜோஹன்னஸ்பர்க்
5. பிரிட்டோரியா
7. மெஃபிகிங்
8. கிம்பர்லி
9. மேகர்ஸ்பான்டீன்
10. ப்ளூம்பான்டீன்
11. பசூட்டோலாந்து



படம் 15. **பிரிட்டிஷ் காமன்வெல்த்** (பக்கம் 615)

1. கிரேட் பிரிட்டன், 2. கானடா, 3. ஆஸ்திரேலியா, 4. நியூஜிலாந்து, 5. இந்தியா, 6. பாகிஸ்தான், 7. இலங்கை 8. டிரினிடாட், 9. டொபாகோ, 10. பார்படாஸ், 11. ஜமாய்க்கா, 12. குயானு, 13. காம்பியா, 14. சியராலியோன், 15. நைஜிரியா, 16. கானு, 17. உகண்டா, 18. கென்யா, 19. டான்ஜானியா, 20. ஜாம்பியா, 21. லெசாத்தோ, 22. மால்டா, 23. சைப்ரஸ், 24. மலேசியா, 25. சிங்கப்பூர், 26. மாளவி, 27. மொரிஷியஸ், 28. ஸ்வாஜிலாந்து, 29. பாட்ஸ்லானு, 30. நௌரு.

BIBLIOGRAPHY

1. Carter and Mears — A History of Britain
2. Keith Feiling — History of England (also Tamil Translations)
3. Ramsay Muir — A History of Britain
4. Rayner, R. M. — A Concise History of Britain
5. Southgate, G.W. — A Text-Book of Modern English History (2Vols.)
6. Trevelyan — History of England (also Tamil Translations)
7. Denis Richards a nd J. W. Hunt — Modern Britain
8. Denis Richards and Anthony Quick — Britain, 1815–1945
9. R. J. White — A Short History of England
10. George Southgate — The British Empire and Commonwealth.

கலைச்சொற்கள்

A

Annates	—	முதலாண்டு வரும்படி
Assises	—	அசைசஸ் நீதி மன்றங்கள்
Act of Supremacy	—	ஆதிக்கச் சட்டம்
Act of Indemnity and oblivion	—	பொது மன்னிப்பு, மறப்புச் சட்டம்
Act of Security	—	பாதுகாப்புச் சட்டம்
Armed Neutrality	—	படையேந்திய நடுநிலைக் கூட்டுறவு
Agricultural Holdings Act	—	விவசாய நில உடைமைச் சட்டம்
Axis Powers	—	அச்சு நாடுகள்
Allies	—	நேச நாடுகள்

B

Bill of Rights	—	உரிமைகள் மசோதா
Balance of Power	—	வல்லரசு சம நிலை
Berlin Decrees	—	பெர்லின் கட்டளைகள்
Black Hole Tragedy	—	இருட்டறைக் கொலை

C

Chancellor of Exchequer	—	கருவூலத் தலைவர்
Cannons of Royal Supremacy	—	அரசு மேலாதிக்கத் திருச் சபைச் சட்டம்

Court of High Commission — உயர் நீதி ஆணை மன்றம்
Court of Request — வேண்டுகோள் மன்றம்
Cavailier Parliament — கேவலியர் பாராளுமன்றம்
Council of Wales — வேல்ஸ் நீதி மன்றம்
Council of State — அரசாங்க சபை
Council of North — வட நீதி மன்றம்
Coronation Oath Act — முடிசூட்டுவிழா உறுதிமொழிச் சட்டம்
Corresponding Society — தொடர்பு கொள்ளும் கழகம்
Combination Acts — கூட்டம் கூடும் சட்டங்கள்
Coalition — கூட்டணி
Consulate — கான்சல் ஆட்சி
Continental System — கண்டத் திட்டம்
Catholic Emancipation — கத்தோலிக்கர்களின் விடுதலை
Contagious Diseases Animals Act — பிராணிகளின் தொற்று நோய்ச் சட்டம்
Committee of Imperial Defence — பேரரசு தற்காப்புக் குழு
Compulsory Political Levy — கட்டாய அரசியல் கட்டணம்

D

Dedomis Conditionalibus — கட்டுப்பாட்டிற்குட்பட்ட சொத்து மாற்றம்
Diplomatic Revolution — அரச தந்திரப் புரட்சி
Declaration of Breda — பிரிடா பிரகடனம்
Dispensing Power — சட்டவிலக்கு அதிகாரம்
Dual Alliance — இரட்டைக் கூட்டுறவு
Disarmament — ஆயுதக் குறைப்பு

E

Enclosure Acts — நில அடைப்புச் சட்டங்கள்
Evangelical Movement — சுவிசேச நற்செய்தி பரப்புவோர் சட்டம்
Employers and Workmen Act — முதலாளிகள்-தொழிலாளிகள் சட்டம்
Excise Duty — கலால் வரி

F

Factory Acts — தொழிற்சாலைச் சட்டங்கள்
Fox's India Bill — ஃபாக்சின் இந்திய மசோதா
First Lord of the Admirality — கப்பற்படையின் முதற்பிரபு
Friendly Societies Act — நட்புரிமைக் கழகங்களின் சட்டம்

G

Gun Powder Plot — வெடி மருந்துச் சதி
Grand Contract — பெரும் ஒப்பந்தம்

H

Habeas Corpus Act — ஆட்கொணர் சட்டம்
Hereditary Rights — வம்சவாரி வழி உரிமை
Humble Petition and Advice — வணக்க விண்ணப்ப ஆலோசனை
Humanitarian Legislation — மனித இன நலப்பற்றுச் சட்டம்

I

Interdict — தடை ஆணை
Imposition — இடுவரி
Investiture Contest — பதவிச் சின்ன வாதம்
Instrument of Government — அரசாங்க அமைப்புப் பத்திரம்
Imperial Defence — பேரரசுத் தற்காப்பு
Insurance Act — காப்புறுதிச் சட்டம்
Imperial Economic Conference — பேரரசுப் பொருளாதார மாநாடு

L

Lyric — இசைச் செய்யுள்
Licensing Act — அநுமதிச் சட்டம்

M

Model Parliament — மாதிரிப் பாராளுமன்றம்
Milienary Petition — ஆயிரவர் விண்ணப்பம்

Methodists — ஒழுங்கு முறை வாதிகள்
Mercantalism — மெர்க்கண்டலிசம் (பழைய வியாபார முறை)
Metropolitan Police Force — நகர போலீஸ் படை
Merchant Shipping Act — வியாபாரக் கப்பல் ஏற்றச் சட்டம்
Monopoly — முற்றுரிமை
Mace — கட்டியக் கோல்

N

Navigation Acts — நாவாய்ச் சட்டங்கள்

O

Old Age Pension — முதியோர் உதவிப் பணம்

P

Pallium — பதவிச் சின்னங்கள்
Poor Law — இரவலர் சட்டம்
Pay Master General — சம்பளப் பட்டுவாடா அதிகாரி
Prerogative Courts — தனிச் சிறப்புரிமை நீதி மன்றங்கள்
Popish plot — போப்பினர் சதி
Protectorate Parliament — காப்பாளர் பாராளுமன்றம்
Public Health Act — பொது சுகாதாரச் சட்டம்

Q

QuaWarranto — குவா வாரன்டோ

R

Rump Parliament — எஞ்சிய பாராளுமன்றம்
Reciprocity Act — பரஸ்பர வரிவிலக்குச் சட்டம்
Residuary Powers — எஞ்சிய அதிகாரங்கள்

S

Shire Courts — கோட்ட முறை மன்றங்கள்
Star Chamber — விண்மீன் நீதி மன்றம்

Synod — திருக் கூட்டம்
Statute of Labour — தொழிலாளர்கள் சட்டம்
Short Parliament — குறுகிய பாராளுமன்றம்
Solemn League and Covenant — புனிதக் கூட்டு ஒப்பந்தம்
Self-denying Ordinance — தன் மறுப்புச் சட்டம்
Suspending Power — சட்ட நிறுத்து அதிகாரம்
Sacrament — புனிதத் திருவிருந்து
Safeguarding Duties — பாதுகாப்பு வரிகள்
Statute of Westminster — வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம்

T

Transubstantiation — புனிதப் பொருள் மாறுபாடு
Tenants-in-Chief — பிரதான மானியதாரர்கள்
Tenant Farming — குத்தகை விவசாய முறை
Test Act — சோதனைச் சட்டம்
Trade Disputes Act — தொழில் தகராறுகள் சட்டம்
Territorial Army — பிராந்தியப் படை
Town Planning Act — நகரமைப்புத் திட்டச் சட்டம்
Triple Alliance — முக்கூட்டு ஒப்பந்தம்
Triple Entente — முக்கூட்டு நேச உடன் படிக்கை

V

Villeins — உட்குடிகள்

W

Whig Oligarchy — விக் சிறுகுழு ஆட்சி
Workmen Compensation Act — தொழிலாளர்களின் நட்ட ஈட்டுச் சட்டம்